
Koviloor Digital Library


சித்தர்களின் சாகாக்கலை இரகசியங்கள்





ல		சனி	குரு
	5.10.1823 மாலை 5.54 P.M இராசி சக்கரம்		செவ் கேது
ராகு			
		புத சந்	சூரி சுக்

Acc.No. 45040
R689





சித்தர் அடியார், முருக உபாசகர்

டாக்டர் ஏ. கே. சந்தன ராஜா



Koviloor Digital Library

Koviloor Digital Library

791

சித்தர்களின்

சாகாக்கலை இரகசியங்கள்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 45040



சித்தர் அடியார் - முருக உபாசகர்

டாக்டர் **A.K.சந்தனராஜா** RIMP

அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்

நெ.18/67, பிரசன்ன விநாயகர் கோவில் முதல் தெரு,
புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன்: 044- 2811 6770, செல்: 88386 38900
Email: apsarapublications@gmail.com

Koviloor Digital Library



நூலின் பெயர் : சித்தர்களின் சாகாக்கலை இரகசியங்கள்

ஆசிரியர் : டாக்டர் A.K. சந்தனராஜா RIMP

முதற்பதிப்பு : ஜனவரி, 2018

உரிமை : © அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்

பக்கம் : 16+368 = 384

எழுத்து : 11 புள்ளிகள்

நூல் அளவு : கிரவுன் 1/4

கணினி அச்சு : டாட் ஸ்டுடியோஸ், அம்பத்தூர், சென்னை – 53, செல்: 97910 77154.

காகிதம் : 70 gsm Map Litho

அச்சிட்டோர் : கிருஷ்ணா பிரிண்டர்ஸ், மைலாப்பூர், சென்னை– 600 004.
செல்: 90940 03679

வெளியீடு : அப்ஸரா பப்ளிகேஷன்ஸ், நெ.18/67, பிரசன்ன விநாயகர் கோவில் முதல் தெரு, புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.
போன்: 044– 2811 6770, செல்: 88386 38900
Email: apsarapublications@gmail.com


விலை : ரூ.500/–

இந்நூலில் இடம் பெற்றுள்ளவற்றை பதிப்பகத்தாரின் முன் அனுமதியின்றி யாரும், மொழிமாற்றம் செய்வதோ வேறு எந்த விதத்திலும் பயன்படுத்தி பிரசுரிக்கக் கூடாது.

WARNING: This Book should not be reproduced by any means or translated into any language in whole or part. All Rights reserved only by the Publishers.

Koviloor Digital Library

79/1



Koviloor Digital Library

உ

வேலுண்டு வினையில்லை | மயிலுண்டு பயமில்லை

திருவருள் சக்தி

Guruvarul Jothida Training Centre

ASTROLOGY IS A LIFE MAP
Guiding People - Our Motto

குருவருள் ஜோதிடம்

இணைந்து நடத்திய

முடிசூடிடும் முப்பெரும் விழா!

கடந்த ஹேவிளம்பி ஆண்டு தைத்திங்கள் 14ஆம் நாள் (27.01.2018) சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு மேல் 9.30 மணிக்குள் குருஹோரையும், உத்தியோக கௌரியும் சாத்வீக வேளையும் கூடிய சுபயோக சுபவேளையில் அப்ஸரா பப்ளிகேஷன்ஸ் அலுவலகத்தில் (நெ.18/67, பிரசன்ன விநாயகர் கோவில் முதல் தெரு, புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை - 600 014) நடைபெற்ற பயிற்சி வகுப்பு (ஜோதிடம், ஆன்மிகம், மருத்துவம்) கூடம் திறப்பு விழா, முப்பெரும் நூல்கள் வெளியீட்டு விழா மற்றும் முதல் வகுப்பு தொடக்க விழா எனும் முப்பெரும் விழா முருகப் பெருமானின் கருணையினாலும், சித்தர்களின் சீர்மிகு ஆசிர்வாதத்தாலும், நல்லோர்களின் நல்வாழ்த்துக்களுடன் சீரும் சிறப்புமாக இனிதே நடைபெற்ற விழாவில், இந்நூல் வெளியிடப்பட்டது






பரமஹம்ச ஸ்ரீ பரத்வாஜ் சுவாமிகள்

குருவருள் ஸ்ரீ நடராஜன்

சர்வமத ஜோதிட மகரிஷி


SRJ "ராஜயோகம்" Lion Dr. K. ராம் Ph.D., (USA)

பண்டிட் ஸ்ரீ காழியூர் நாராயணன்

ஆகியோரால் வெளியிடப்பட்டு வாழ்த்துரை வழங்கப்பட்டது

Koviloor Digital Library

79/1



Koviloor Digital Library



பண்டிட் காழியூர் நாராயணன்

ப.எண்: 37கி, பு.எண்: 52, மோதிலால் தெரு, தி.நகர்,

சென்னை- 600 017. செல்: 98405 76302.

Email:astrokaliyur@yahoo.com

வாழ்த்துரை

அன்பான வாசக நேயர்களுக்கு வணக்கம்,

முருக உபாசகர் டாக்டர் ஏ.கே.சந்தனராஜா ஐயா அவர்கள் ஏற்கெனவே எழுதிய மகத்துவம் தரும் மந்திர விஞ்ஞைகள் எனும் நூலை அப்ஸரா பப்ளிகேஷன்ஸ் சித்தர் அடிமை திரு.ஸ்ரீ சி. இராஜூ அவர்கள் வெளியிடுட்டு வாசகர்களிடையே அமோக வரவேற்பை பெற்றது.

மந்திரம் என்பதற்கு மன்னும் திறம்— நிலை பெற்றிருக்கும் திறன் என்று பொருள் கொள்ளலாம். யந்திரம் என்பது மந்திர சக்தி நிலைத்திருந்து இயங்கச் செய்யும் கருவி. புலனடக்கத்தோடு இறைவனை மனதில் இருத்தி உள்ளும் புறமும் நிலை நிறுத்திப் பூஜிப்பது யந்திரமுறை. யந்திரங்கள் இறைவனின் மறுவடிவாகவே போற்றப்படுகின்றன. யந்திரங்கள் எனப்படும் சக்கரங்கள் காகிதத்தில் வரையப்பட்டு கண்ணாடிச் சட்டத்திற்குள் வைக்கப்பட்டோ, மரம் அல்லது உலோகத்தில் கீறல்களாகச் செதுக்கியோ பயன்படுத்தப்படுகிறது. இச்சக்கரங்கள் தியானத்தின்போது மனதை ஒரு நிலைப்படுத்தப் பயன்படுகிறது.

யந்திரங்கள் எண்களையும் எழுத்துக்களையும் கொண்டவை. எழுத்துக்களைப் போலவே எண்களுக்கும் சக்தி உள்ளது என்றும், எழுத்துக்களையும் எண்களையும் ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் சக்கரமாக அமைத்து அதற்கு உண்டான



Koviloor Digital Library



குறிப்பிட்ட மந்திரத்தை குறிப்பிட்ட அளவில் ஜெபித்தால் அவை தொழிற்பட தொடங்கும் என்று கூறப்படுகிறது. நவக்கிரகங்களின் கிரக சாரங்களில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளவும், தங்கள் தெய்வங்களின் அருளைப் பெற்றுக் கொள்ளவும், பில்லி சூனியம், ஏவல் போன்றவற்றிலிருந்து தம்மைச் சூழ்ந்து உள்ளவர்களைக் காக்கவும் சித்தர்கள் எண்களையும் எழுத்துக்களையும் மாறி மாறி இட்டு சக்கரங்களை உருவாக்கினர். அவற்றின் மூலம் தாங்கள் அடைந்த பலனையும் சக்கரங்கள் தயாரிக்கும் முறையையும் என்ன சக்கரத்திற்கு என்ன மந்திரம் எத்தனை தடவை சொல்லவேண்டு என்பதையும் அது என்ன என்ன வேலைகளைச் செய்யும் என்பதையும் தங்களின் பாடல்களில் தெளிவாகவே சொல்லிச் சென்றுள்ளனர்.

வசியத்திற்கு வில்வ மரத்திலும், ஆகர்ஷணத்திற்கு வெண் நாவல் மரத்திலும், மோகனத்திற்கு அலரி மரத்திலும், தம்பனத்திற்கு ஆல மரத்திலும், உச்சாடனத்திற்கு பலா மரத்திலும், மாரணத்திற்கு வில்வ மரத்திலும் எழுதுவதே பலனளிக்கக் கூடியதாம். சில மந்திரங்களை பீஜத்தோடும் சிலவற்றை கோசத்தோடும் உச்சரிக்க வேண்டும். தேவையான பீஜ கோசங்களை சேர்த்து மந்திரங்களை உச்சரிப்பதே பலன் தரும். மனனம் செய்பவனை இரட்சிப்பது மந்திரமாகும். மெய்ஞ்ஞானிகள் மந்திர ஜபத்தால் செயற்கரிய செயல்கள் பலவற்றைச் செய்திருக்கிறார்கள். மந்திரங்களை முறையாக உச்சரிப்பதால் அதற்குரிய தேவதையின் திருவுருவம் சூட்சும வடிவில் உபாசகனின் முன் தோன்றுகிறது. மந்திர உச்சாடனம் செய்வதன் மூலம் சூட்சும சலனங்கள் ஏற்படுத்தி விரும்பிவற்றை அடைவதோடு இறைவன் திருவுருளையும் பெற முடியும்.

இப்பொழுது வெளியிட்டுள்ள "சித்தர்களின் சாகாக்கலை இரகசியங்கள்" வாசர்களிடையே மிகுந்த வரவேற்பை பெறும் என்பதில் எள்ளவும் ஐயமில்லை.

இது போன்ற எண்ணற்ற இரகசியங்கள் கணக்கற்று அடங்கிய இந்த நூல் உபாசகர்களுக்கு மட்டுமல்லாமல் ஜோதிட தொழில் புரிபவர்களுக்கு வாக்குப்பலிதம் வகைபடும் வழிகளுக்கு சூட்சும இரகசியங்களை தெளிவுபட எடுத்தியம்பியுள்ளார் பாமர மக்களுக்கும் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. எல்லாம் வல்ல அந்த பரம் பொருள் அனைவரையும் ஆசிர்வதிக்கட்டும். நன்றி!

அன்புடன்

பண்டித காழியூர் நாராயணன்

Koviloor Digital Library



குருவருள் நடராஜன்

1, பாபு இராஜேந்திர பிரசாத் ரோடு,
மேற்கு மாம்பலம், சென்னை 600 033.
செல்: 98401 05302.

வாழ்த்துரை

அன்பான வாசகர்களுக்கு வணக்கம்,

திரு ஏ.கே.சந்தனராஜா ஐயா அவர்கள் ஏற்கெனவே எழுதிய மகத்துவம் தந்திடும் மந்திர வித்தைகள் எனும் நூல் மனித சமுதாயம் நலனுறத் தேவையான மிக முக்கியமான நூலாகும். பல்வேறு யந்திரங்களயும், மந்திரங்களையும் கொடுத்து ஓர் ஆற்புத நூலை உருவாக்கி இருக்கிறார். மனிதன் ஒரு காந்தம். அவன் உடல் உறுப்புகளில் காந்த சக்தி உள்ளது என்பதைப் பகுத்தறிவாளர்கள் கூட மறுக்க முடியாது. ஏனென்றால், அது விஞ் ஞானிகளால் நிரூபிக்கப்பட்ட உண்மை. யந்திரம் என்பது நமது உடலில் உள்ள ஆறு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டது. மாந்திரீக கலையில் யந்திரத்தின் பங்கு மிக முக்கியமானது. பஞ்சபூத அடிப்படையில் இயங்கும் இறைவனை தத்துவரீதியான வரிவடிவில், எழுத்து வடிவில், செம்பு, வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்களில் வடிவமைத்து வணங்குகிறோம். நாம் உச்சரிக்கும் மந்திர ஒலியின் சக்திக்கு இணங்க யந்திரங்கள் ஆற்றலை வெளிப்படுத்துகின்றன. இந்த யந்திரங்களை பயன்படுத்தி பல நன்மைகள் செய்ய முடியும்.

யந்திரங்கள் வரைவதற்கான சில பொது விதிமுறைகள் இருக்கிறது

1. யந்திரம் எழுதுவது செம்புத்தகடாக இருக்க வேண்டும்
2. அளவு குறைந்த பட்சம் 5'' X 5'' அங்குலமாக இருக்கவேண்டும்.
3. செம்பு ஆணியினால் வரைவது நல்லது
4. யந்திரத் தகட்டில் பிசிறு, காயம் போன்றவைகள் வரக்கூடாது
5. எழுதும்போது சிறு தவறு ஏற்பட்டாலும் திருத்தம் செய்யக்கூடாது. மீண்டும் புதிய தகட்டில் எழுத வேண்டும்.
6. வரிகள், வட்டங்கள் மற்றும் கோடுகள் தெளிவாக இருக்கவேண்டும்
7. எழுத்துக்கள் சற்று தெளிவாக அழுத்தமாக இருக்க வேண்டும்.
8. அளவுகள் சமச்சீராக சரியாக இருக்க வேண்டும்
9. மிக முக்கியமாகக் கோணங்கள் சரியாக இருக்க வேண்டும்
10. பூபுரம் மற்றும் கோணங்கள் நேராக வர வேண்டும்
11. பிந்து என்னும் வட்டம் மையத்தில் நன்றாகஅமைய வேண்டும்
12. ஓங்காரம் எழுதும் போது சரியாக எழுத்துக்கள் அதனுல் அமையவேண்டும்.

இந்த விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடித்தால் சரியான பலன் கிடைக்கும் என்பதில் ஐயம் இல்லை. யந்திரத்தை தகடுக்கு பதிலாக மரப்பலகையோ பயன்படுத்தலாம் குறிப்பிடப்படும் அளவு மாறாமல் இந்த விதிமுறைக்கு ஏற்ப செய்யின் நிச்சயம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இப்பொழுது வெளியிட்டுள்ள "சித்தர்களின் சாகாக்கலை இரகசியங்கள்" வாசர்களிடையே மிகுந்த வரவேற்பை பெறும் என்பதில் எள்ளவும் ஐயமில்லை. இந்த புத்தகம் நிச்சயம் அனைவருக்கும் பயன்படும். அந்த இறைவனின் அருளால் அகிலம் சிறக்கட்டும். வாழ்க வளமுடன்.

Koviloor Digital Library



சித்தர் அடிமை ஸ்ரீ சி. இராஜு

ஆசிரியர்: திருவருள் சக்தி, குருவருள் ஜோதிடம்.

பதிப்பாசிரியர்: அப்ஸரா நாவல், திருவருள் சக்தி சுத்த திருகணித பஞ்சங்கம்.

செல்: 88386 38900.

பதிப்பாசிரியரின் பரிந்துரை

இந்த மண்ணுலகில் மந்திர, தந்திர, தாந்திரீக யந்திர, சூட்சும, ஸ்தூல மாய கூட்டுக்குள் ஒளிந்திருந்து ஒளிரும் ஒலியே ஆன்மாவாகும். ரிஷிகள், சித்தர்கள், முனிவர்கள், ஞானிகள், யோகிகள், மகான்கள் தங்களது ஸ்தூல உடல் ஒரு மாயை எனும் இரகசியத்தை கண்டுணர்ந்து, தெளிந்து, சூட்சும சரீரமான ஆன்மாவை பற்றற்ற நிலையில் சுய பரிசோதனை மூலம் ஆனந்த மயமாய் ஆராதித்து மகிழ்வர். இவர்கள் பிறவி பெற்றதன் காரணம் பிரபஞ்ச இரகசிய அதிசயங்களை மாயையில் சுழன்று நிலையில்லாமல் உழன்று கர்ம பலனால் மீண்டும் மீண்டும் கரையேற முடியாமல் திண்டாடும் மக்களை காக்கும் விதமாய், கர்மம் கழிந்து நற்கதி அடைய வீடு பேற்றை பெறுதல் ஒன்றையே தூய ஆன்மாவின் பிறவி இரகசியமாகும்.

புலனடக்கத்துடன் வாழும் எந்தவொரு ஸ்தூல சரீரமும் சித்தர் நிலையை எட்டமுடியும். உண்மையான சித்தர்கள் என்றும் விளம்பர யுக்தியோ, வியாபார புத்தியோ கொள்வதில்லை. அப்படியொரு அரிய இறைநிலையோடு பெரும் தவத்தோடு கலந்து இதுவரை யாரும் செய்ய முடியாத சாதனையாக. டாக்டர் A.K.சந்தனராஜா அவர்கள் உலக மக்கள் நலம் பெற படைத்த அற்புதம் தான் "சித்தர்களின் சாகாக்கலை இரசியங்கள்" எனும் அரிய நூலாகும். இவர் பிரபஞ்ச இயக்கத்தை விஞ்ஞையில் மந்திர எழுத்துக்களால் அடக்கி, பூஜைகள் மூலம் உருவேற்றி தெய்வ கவசங்கள், மூல மந்திரங்கள் கொண்டும் கடவுளை வசியப்படுத்தும் சூத்திரங்கள், தந்திரங்கள் மற்றும் சித்தர்கள் கையாண்ட சாகாக்கலையை விபரமாக இந்நூலில் வெளிப்படுத்தி உள்ளார். அஷ்ட கர்மம் முதற்கொண்டு பல தெய்வ வழிபாடுகள் செய்யும் விதம், உபாசகர்கள் உபாசனை தெய்வத்தை அணுக வேண்டிய வழிமுறைகள் என யாவையும் மிக அருமையாய் இனிய இன்பத் தமிழால் விளக்கியுள்ளார்.

இந்நூலில் வெளியிடப்பட்டுள்ள இரகசியங்கள் இதுவரை உலகுக்கு அறிமுகமில்லாதவை. சித்தர் பெருமக்கள் கையாண்ட தந்திரப் பிரயோகங்கள் அஷ்டமா சித்தி அடைய கடைப்பிடிக்க வேண்டிய அனுஷ்டானங்கள் என அனைத்தையும் அற்புதமாய் தந்துள்ளார். பொதுவாக சித்தர்களின் பரிபாஷைகள் எளிதில் புரியாவண்ணம் எழுதப்பட்டு இருக்கும் ஆயினும் டாக்டர் A.K.சந்தனராஜா அவர்கள் பல வருட காலம் பல நூல்களில் உள்ளவற்றை எல்லாம் ஆராய்ச்சி செய்து அவற்றை பரிசோதித்து பலனை உணர்ந்த பின்னரே

Koviloor Digital Library

பறைசாற்றியுள்ளார். இந்நூலில் கூறப்பட்டுள்ளபடி, உபாசகர்கள், ஜோதிடர்கள், கோயில் அர்ச்சகர்கள், புரோகிதர்கள், ஆன்மிகவாதிகள் என அனைத்து தரப்பினரும் மெய்ஞான முறையில் சாகாக்கலை விதிமுறைகளை ஆகம முறைப்படி கடைப்பிடித்தால் இறைவனை அடைவது அறுதியான இறுதிநிலை. நவக்கிரகங்களையும் சாந்திப்படுத்தி அவைகளின் உக்கிரத்தைக் குறைத்து நம் வசப்படுத்தும் தந்திரங்களின் சூட்சும வடிவத்தை உணர்ந்து மோட்ச நிலையை முன்னிறுத்தி உள்ளார். உபாசனை தெய்வ அருளைப் பெறாமல் யாரும் நூறு சதவீதம் ஜோதிடத்தில் நிலைத்திட முடியாது என்பது உலகறிந்த உண்மை.

மந்திரம் என்பது வேத மொழி. தந்திரம் என்பது அவற்றை செயல்படுத்த கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள். யந்திரம் என்பது பிரபஞ்ச சக்தியை உள்ளிறுத்துவது. ஆகவே தான் ஆலயங்கள் பிரபஞ்ச சக்தியை உள்வாங்கி மக்களுக்கு கர்மபலன்கள் களையும் இடமாய், ஆண்டவன் அருள்ஜோதியாய் சூட்சும யந்திரங்களின் சாட்சியாய் விளங்குகிறது. இதன் பொருட்டே இந்நூலில் திருமூலர் முதல் பல சித்தர்கள் அருளிய சாகாக்கலை இரகசியத்தின் அரியதொரு பயனை எடுத்து உரைத்துள்ளார். இதில் கூறப்பட்டுள்ள பூஜை முறைகளைக் கொண்டு நினைத்தவற்றை நிறைவேற்றிக் கொள்ளலாம். நல்லவற்றை நாடி பிறர் நலம் அடைய இறைவனைத் தேடி நல்லொழுக்கத்துடன் இந்த இரகசியங்களைப் பயன்படுத்துவோர் நிச்சயம் கடவுள் அருளைப் பெறுவார் என்பது திண்ணம். எதிர்மறையில் பயன்படுத்துவோர் பாவத்தின் விளிம்பில் பரிதவிப்பர்.

சித்தர்களின் வாழ்வின் மொத்த சூட்சும தொகுப்பு தான் "சித்தர்களின் சாகாக்கலை இரகசியங்கள்" ஆகும். ஆலயங்களில் அனுஷ்டிக்கப்படும் இறைவழிபாட்டை தனி ஒரு மனிதனே, திருமூலர் கூற்றுப்படி உடலையே ஆலயமாக்கி நிலைநிறுத்தி, உள்ளே இறைவனைப் புகுத்தி மந்திர வழிபாடு முறைகளை குருமூலம் நாள்தோறும் கடைப்பிடிக்கும் விதங்களை மிக நேர்த்தியாக விளக்கி உள்ளார். சித்தர்களின் வரலாற்றை வகைப்படுத்திக் கூறுகையில் மறைபொருளாய் மந்திரப் பிரயோகங்களை சூட்சுமப் பொருளாய் இயற்றியதின் காரணங்கள், அவற்றை யாரும் தவறாக பயன்படுத்தக் கூடாது எனும் நல்லெண்ணமே என்பதை தெளிவுபட விளக்கியுள்ளார். கர்மாவே பிறப்புக்கு காரணமாகிறது. கர்மாவின் சூட்சுமத்தைக் கண்டுணர்ந்து, நவக்கிரக நர்த்தனங்களை வெளிப்படுத்திக் காட்டுபவர்களே ஜோதிடர்கள், செய்த வினைக்கேற்ற பரிகாரங்களைக் கூறுகையில் அவ்வினைகளில் ஜோதிடர்களுக்கும் பங்கு உண்டு என்றாகிறது. பிறர் கர்ம வினைகள் ஜோதிடர்களை அனுகாமல் இருக்க இந்நூலில் உள்ள சில சூட்சுமவிதிகள் மிகவும் உதவும். ஒவ்வொரு ஜோதிடரும் கட்டாயம் பரிகார பூஜை விதிகளை அறிந்து கடைப்பிடித்தால் அவர்களது தொழில்கள் சிறப்புற ஏற்றதாகும். அவர்கள் வாக்கு பலிதம் பெற்று செல்வாக்கும் உயர்ந்தோங்கும். அவ்வாறு செய்யும் பொழுது நவக்கிரகங்களின் கோபம் தணிந்து நவக்கிரகங்களின் அருள் பெற்றிட திருவருள் துணை புரிந்திடும்.

சித்தர்களின் சாகாக்கலை இரகசியங்களை எல்லோருக்கும் உயிரூட்டும் உள்ளொளி உலகமயமாகும். அது பரவொளிப் பெற்று வெட்டவெளி நட்ட நடுவீதி சென்றுவிடும். குருவின்றி இரகசியங்களை உணர முடியாது என்பர் பெரியோர். இருப்பினும் பரம்பொருளான சிவ சொரூபமான தென்முகக் கடவுளைக் குருவாகக் கொண்டு திருவாய் மலர்ந்து அருள்மிகு ஆதி சிவகுரு

Koviloor Digital Library

தட்சிணாமூர்த்தியின் அருளால் குறிப்பிட்டுள்ள முறைப்படி இறைவனை வழிபட்டால் மந்திர சித்திகள் சிந்திப்பது நிச்சயமாகும். அதேபோல் பதினெண் சித்தர்களும் பூஜித்து போற்றி திருவருள் பெற்ற அருள்மிகு வாலையம்மன் மகா மந்திர விஞ்ஞை இறைவழிபாட்டிற்கு மட்டுமின்றி சகல சித்திகளையும் தரவல்ல சிறந்த மந்திரப் பிரயோக முறையாகும்.

இதில் கூறப்பட்டுள்ள மந்திரங்கள் யாவும் யந்திரமாய் செய்து பின் உருவேற்றி பூஜைகள் செய்து பரிசோதித்து செயல்தன்மையை ஆராய்ந்த பின்னரே கட்டுரையாக "திருவருள் சக்தி" இதழில் வெளிவந்தது. பொதுவாக அஷ்ட கர்மம் என்றவுடன் மந்திரவாதிகள் மாந்திரீக பிரயோகத்திற்கு பயன்படுத்தப்படுகிறது எனும் கூற்றை ஏற்பதற்கில்லை. அஷ்டகர்ம தர்மநெறிகளை அறியாது பயன்படுத்துவோர் யாராக இருந்தாலும் வினைப்பயனை அனுபவிக்காமல் தப்பிக்க இயலாது. எந்த ஒரு மந்திரமும் குருமூலம் அல்லது கட்டுக்குள் வைத்துக் கொண்டால் மட்டுமே அது கை வந்தக் கலையாக சித்திக்கும்.

சித்தர்களின் சாகாக்கலை இரசியங்கள் வேத ஆன்மிக உலகிற்கு ஒரு சரித்திரம் படைத்திடும் ஒரு சகாப்தம். இனி இது போன்று இத்தனைக் கருத்துக்களையும் முழுவிளக்க உரையுடன் சித்தர்களின் சாகாக்கலையை பற்றி வெளிவருவது என்பது இயலாத ஒன்று. இவரைப் போல் இன்னொருவர் பிறந்து உலகிற்கு உய்ய வேண்டும் என்பது நினைத்துப் பார்க்க நெஞ்சுருக வைத்துவிடும். அறிவுக்கு எட்டாதப் பொருள் ஆன்மிக அருளால் கிட்டும் என்பதை மனமெனும் மாயத்திரையை விலக்கி புலன்களின் புழுதிகளை அகத்தில் அகற்றி, புறத்தேக் கழுவி அனுதினமும் ஆண்டவனை அணுகும் விதிமுறைகளே சித்தர்களின் சாகாக்கலை இரசியங்களாகும். அதில் சித்தர்களின் வரலாறு, மந்திரப் பிரயோக விதிமுறைகள் என பல சூட்சுமங்கள் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக வெளியிடப்பட்டு உள்ளது. தரமானவற்றை தரணியில் தந்து தன்னகத்தே தக்கத் திறனைப் பெற்றுக் கொள்வதை இலட்சியமாகக் கொண்டு ஆன்மிகப் பேரொளியை அண்டத்திலிருக்கும் அற்புதங்களை பிண்டத்திலுள்ள உயிரினம் யாவும் நற்கதி அடைந்து நன்னிலைப் பெற்று நல்வண்ணம் வாழ நல்லோர் கைகளில் மஹா மந்திர விஞ்ஞை தவழ்ந்து எல்லோர்க்கும் நலம் சேர்க்க இறைவனை இறைஞ்சுகின்றோம்.

சிவ உருவான ஸ்ரீ ஆதிசங்கரர் பாரதம் முழுவதும் பயணம் செய்து ஆலயங்களில் யந்திரப் பிரதிஷ்டை செய்து இறைவனைச் சாந்தி செய்து இந்த உலகில் திருவருளை நிலைக்கச் செய்தார். டாக்டர் AKசந்தனராஜா சித்தர்களின் சாகாக்கலை இரசியங்கள் மூலம் உலகெலாம் "திருவருள் சக்தி" நிலைநிறுத்தி ஆன்மிக உலகம் தழைத்தோங்க ஆதாரமாக தன்னை இணைத்து தரணி புகழ் ஓங்கச் செய்துள்ளார். "திருவருள் சக்தி" உதயம் முதல் இன்று வரை இவரது கட்டுரைகள் இடம்பெற்று மக்கள் இதயத்தில் நீங்கா நிலை நிறுத்தி வைத்துள்ளார். அவர்களுடைய ஆன்மிகப் பயணம் மேலும் தொடர்ந்து பல்லாண்டு வாழ்ந்து எமக்கு பரிசாக வாழ்த்துரை வழங்கிக் கொண்டிருக்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்புடன்

சித்தர் அடிமை ஸ்ரீ சி. இராஜூ

Koviloor Digital Library



சித்தர் அடியார் – முருக உபாசகர்

டாக்டர் **A.K.சந்தனராஜா** RIMP

செல்: 94426 70917.

நூல் ஆசிரியரின் அணிந்துரை

பெயர் : A.K. சந்தன ராஜா. RIMP

தந்தை : A.V. கிருஷ்ணய்ய பாகவதர்

தாயார் : தாயார் அம்மாள்

தொழில் படிப்பு : சுகாதார ஆய்வாளர்.

தொழில் : சுகாதார ஆய்வாளர் (அரசு பணி)

பரம்பரை தொழில் : சித்த மருத்துவம்

பதிவு : 1970இல் எண் 574 (சித்த மருத்து மன்றம் சென்னை)

அடியேன் மேற்கண்ட தாய் தந்தைக்கு மூத்த மகனாக 25.8.1936 ஆம்பூரில் பிறந்தேன். எமது ஏழாவது வயதில் ஆம்பூரில் சிவன் கோவிலில் மகா அஷ்ட பந்தனம் குட முழுக்கு 52 நாள் பூஜை நடைபெற்ற காலக்கட்டத்தில் நாள்தோறும் அங்கு சென்று வழிபாடு செய்து இறையருளை வேண்டி மனமுருகி நிற்பேன். அப்பொழுது பல சந்நியாசிகள் வழியில் வந்து ஆசி கூறி வாழ்த்தியது உண்டு.

ஆம்பூர் கோவில் அருகில் உள்ள பள்ளியில் படித்ததும், அடுத்து உயர்நிலைப் பள்ளியில் 9ஆம் வகுப்பு வரை படித்து, தடங்கள் ஏற்படவே அவ்வூர் விட்டு வாலாஜாவில் பள்ளி இறுதி முடித்தேன். பிறகு மேற்கண்டபடி கல்வி முடித்து அரசு பணியில் சேர்ந்து பல சித்தர் வடிவிலுள்ள மனிதர்கள் தொடர்பு ஏற்பட்டது.

எமது ஆசான் (குரு) பல ஆதினத்தில் பாடம் கேட்டு தேர்ச்சி பெற்ற திரு. த. பச்சையப்ப சுவாமிகள் சந்திப்பு ஏற்பட்டு அவரிடம் ஆகம விதிப்படி முருக உபதேசம் பெற்றபின் மானசீகமாக பல சித்தர்களின் தொடர்பு ஏற்பட்டு அவர்களின் நூல்கள் கிடைக்க வழிகள் ஏற்பட்டது. அதில் முக்கியமாக திருமூலர், அகத்தியர், சட்டைமுனி, உரோமாமுனி, திருவள்ளுவர், கொங்கணர் போன்ற சித்தர்களின் அருளால் பல செய்திகள் அறிய வந்தது. இடையில் மூலிகை ஆராய்ச்சி மருந்து ஆராய்ச்சி, குரு மருந்து ஆராய்ச்சி மேற்கொண்டு நானே ஆய்வுகள் மேற்கொண்டேன். இடையில் மந்திர பயிற்சிகள் பெற்று அதில் தேர்ந்து மந்திர சக்கர அமைப்புகள் ஆய்வுகள் நடந்து, அதில் பயனடைந்து


Koviloor Digital Library

மக்கள் தங்கள் அனுபவங்களை கைபேசி மூலம், கடிதக் தொடர்புக் கொண்டு வாழ்த்தினார்கள். மக்கள் மூலம் பெற்ற அனுபவப் பட்டங்கள் பாராட்டுகள் தொடர்ந்து வந்த வண்ணம் இருந்தது.

இதன் இடையில் வள்ளல் இராமலிங்க அடிகளார் வடலூர் சென்று அவரின் ஆசிகள் பெற்று நூல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு மரணமில்லா பெருவாழ்வு பெற அவரின் நூல்கள் மூலம் கூறும் வழிமுறை ஏறக்குறைய ஒத்துச் செல்கிறது. அதனைப் பற்றி சில செய்திகள், கட்டுரை வடிவமாக எழுதியுள்ளேன். சித்தர்களின் மறைபொருள் உணர்ந்து அதற்கு மறைபொருள் எழுதியுள்ளேன். பல்வேறு ஊர்களிலும் முருகப் பெருமான் கோவில்கள், சிவன் கோவில்கள், காட்சி கண்டு அவர்களின் அருளை வேண்டி நின்று எனக்கு கட்டுரை வடிவமாக தர அருள் புரிந்துள்ளார்கள்.

அன்புடன்

Dr.A.K.சந்தன இராஜா RIMP



Koviloor Digital Library

வேலுண்டு வினையில்லை

உ

மயிலுண்டு பயமில்லை

குருவருள் ஜோதிட பயிற்சி மையம்

GURUVARUL JOTHIDA TRAINING CENTRE

18/67, P.V. Koil I Street, Pudupet, Royapettah, Chennai-.600 014.
(Near Music Academy - MRF Tyredrome) Ph: 044 - 2811 6770.

ASTROLOGY IS A LIFE MAP
Guiding People - Our Motto

முக்காலப் பலனுக்கு எக்காலமும் உத்திரவாதம் தரும் ஜோதிட சூட்சும பலன் கூறும் பயிற்சிகள்

தமிழகத்தில் முதன் முறையாக ஜோதிடத்தில் பலன் கூறும் சூட்சுமங்களை பாடத்திட்டமாக வகுத்து இளநிலை (6 மாதம்) மற்றும் முதுநிலை (6 மாதம்) என இரு பிரிவின் கீழ் அப்ஸரா பப்ளிகேஷன்ஸ் நிர்வாகத்தின் கீழ், வரும் கல்வி ஆண்டுக்கான 2018-2019 (April 2018 - March 2019) நேரடி பயிற்சி மற்றும் அஞ்சல் வழி வகுப்புகள் ஆரம்பமாக உள்ளது. ஜோதிடத்தில் மறைந்துள்ள சூட்சும இரகசியங்களை, எளிமையான முறையில் அனுபவ ஜாதகங்களைக் கொண்டு, கைதேர்ந்த சிறந்த வல்லுநர்கள் மூலம் பாடம் கற்றுத்தரப்படும். இது ஏட்டுக் கல்வி மட்டும் அல்லாமல் அனுபவப் பாடம் என்பதால் உங்கள் எதிர்காலத்தை வளமையாக்கிக் கொள்ள அரியதொரு வாய்ப்பு. ஒரே வருடத்தில் மிகத் துல்லியமாக பலன் கூறும் ஜோதிடராக வலம் வரலாம். இதற்கு 'குருவருள் ஜோதிட பயிற்சி மையம்' உறுதுணையாக இருக்கும். மேலும் 'குருவருள் ஜோதிடம்' இதழும் என்றும் துணை நிற்கும்.

ஜோதிடத்தில் உள்ள அனைத்து உட்பிரிவுகளும் மிக எளிதாகவும் விரிவாகவும் கற்றுத் தரப்படும்

ஜோதிடத்தில் ஆர்வம் உள்ள அனைவரும் இதில் சேரலாம். உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்துக் கொள்ளலாம்

இளநிலை - கட்டணம் ரூ.6,000/-
பிரதி மாதம், முதல் மற்றும் மூன்றாவது சனிக்கிழமைகளில் நேரடிப் பயற்சி

முதுநிலை - கட்டணம் ரூ.7,000/-
பிரதி மாதம், முதல் மற்றும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமைகளில் நேரடிப் பயற்சி

சென்னை, அப்ஸரா பப்ளிகேஷன்ஸ் பயிற்சிக் கூடத்தில் நடைபெறும்

பயிற்றுவிக்கப்படும் பாடத்திட்டங்கள்

1. பஞ்சாங்கத்தின் சூட்சுமங்கள்
2. அனுபவ ஜாதக ஆய்வுப் பலன்கள்
3. நாடி ஜோதிடம்
4. பஞ்சபட்சி சாஸ்திரம்
5. சப்தரிஷி நாடி இரகசியம்
6. புலிப்பாணி ஜோதிடம்
7. எண் கணிதம்
8. ஜாமக்கோள் ஆருடம்
9. அஷ்டமங்கல பிரசன்னம்
10. பரிகார சூட்சும இரகசியங்கள்
11. கர்மாவைக் கண்டறியும் சூட்சுமங்கள்
12. சுபமுகூர்த்தம் கண்டறிந்து விதியை நிர்ணயித்தல்
13. ஆருடம், நிமித்தம், சகுன சாஸ்திரம்
14. சந்திர காவியம்
15. தியாக இராஜசேகரம் மற்றும் பல மூல நூல் சுருதி கொண்டு பலன் கூறும் அற்புதங்கள்
16. வாஸ்து சாஸ்திரம்
17. குழந்தைகளுக்கு பெயர் சூட்டும் இரகசியம்
18. வாசி யோகம்
19. உபாசனை சித்திகள்
20. வாக்கு பலிதம் தரும் மந்திர தந்திர பிரயோகங்கள்

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கி, சிறந்த ஜோதிடர்களுக்கு பட்டமளித்து கௌரவிக்கப்படும்

2018-19 ஆண்டுக்கான சேர்க்கைக்கு உடனே பதிவு செய்துக் கொள்ளுங்கள்

செல்: 866 8088 735

Koviloor Digital Library

பொருளடக்கம்...

1. சாகாக்கலை என்னும் சாகாக்கல்வி 3
2. சற்குரு நாதன் சாகாக்கலை 9
3. சித்தர்கள் நிலை அடையும் சீரான மார்க்கம் 18
4. ஊன் உடல் ஒரு மண் பாண்டம் 28
5. மானிடனுக்கு மரணம் வருவது ஏன்? 31
6. பிறப்பும் இறப்பும் நிகழ்த்தும் புரியட்டகம் 39
7. ஞானத்திற்கு தடையாக உள்ள மும்மலம் 44
8. கற்ப மூலிகைகளுக்கு கருப்பேற்றல் 53
9. சரியை - கிரியை - யோகம் - ஞானம் 59
10. ஐந்தெழுத்து (அ) பஞ்சாக்கரம் 67
11. ஆதி மகா மூலம் (அ) ஓங்காரம் 89
12. எட்டும் இரண்டும் 102
13. அகாரம் - உகாரம் - மகாரம் 115
14. ஆமையும் ஊமையும் 124
15. முத்தி தரும் ஊமை 129
16. மவுனத்தின் சிறப்பு 136
17. குண்டலினி 144
18. பரிசுழி அல்லது சுழிமுனை 149
19. திருவருள் சக்தி வாலை 160
20. திருவருள் சாம்பவி - கேசரி 164
21. மும் மூலம் 167
22. புருவ மத்தி 170
23. ஆயிரத்தெண்ணிதழ் கமலமலர் 173


Koviloor Digital Library

24. மதி மண்டலம் 177
25. சோதித் தம்பம் (அ) ஓங்கார கம்பம் 180
26. உள்ளக தீபம் 185
27. தலையும் காலும் 189
28. மூன்று நாடிகள் அல்லது மூன்று கலைகள் 195
29. சிவராச யோகம் 199
30. சிவசக்தி தீட்சா விதிகள் 228
31. கரு ஊர் 244
32. சீவாத்மாவும் பரமாத்மாவும் 249
33. சாகாக்கால் வேகாத் தலை போகாப் புனல் 255
34. சாகாக்கல்வி அருளிய சாதகம் 260
35. தீட்சைகளும் தியானங்களும் 285
36. பூட்டிய வாசலும் அதன் திறவுக்கோலும் 297
37. அழியாமை நல்கும் ஆற்றொனா திருவமுது 306
38. அகக் கற்பம் 320
39. சித்தர்கள் கூறும் ஐவகை தேகங்கள் 326
40. கற்பூரத் தேகம் 337
41. கற்பூர மணம் வீசும் தேகம் 343
42. யாருக்கு மறுபிறவி இல்லை 348
43. ஞானம் (சாகாக் கலை) 351
44. முத்தியும் சித்தியும் 358
45. பூரணம் 363
46. நீண்ட ஆயுளுக்கு வள்ளலார் காட்டிய வழிகள் 367

Koviloor Digital Library



Koviloor Digital Library



Koviloor Digital Library



1. சாகாக்கலை என்னும் சாகாக்கல்வி

உயர்ந்த பிறவி மானிடப்பிறவியாகும். அதில் ஊனமில்லாமல் பிறப்பது நல்வினையின் பயனேயாகும். "அரிது அரிது மானிடராய்ப்பிறத்தல் அரிது அதிலும் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கி பிறத்தலரிது" என்று முன்னோர்கள் கூறிச் சென்றுள்ளனர்.

மானிட பிறவி நமக்கு கிட்டும் வாய்ப்பு பெறுவது இறையருளின் கருணையேயாம். ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை உள்ள உயிர்கள் பல யுகங்களில் உடல்பெற்று அதில் செய்த நல்வினையின் காரணமாகவே இறைவனின் மேன்மை மிகுந்த அருளால் அவ்வுயிர்களுக்கு இறைவனின் திருவடியை பெறும் பொருட்டு உயிர் பயிர்களுக்கு மாயையால் மானிட உடல் அளிக்கிறார். அந்த மானிட உடலை பெற்ற உயிர்கள் நல்வினையை நாடி நலம் செய்ய வேண்டும். தீவினை புரிந்தால் மானிடஉடல் இழந்து மீண்டும் தாழ்நிலைக்கு தள்ளப்படுவார்கள்.

மானிட பிறவி இழக்காமல் இருக்க வேண்டுமானால் உலகிலுள்ள உயிர்பயிர்கள் மீது இரக்கம் தயவு, கருணை, அன்பு செலுத்தி அவைகளுக்கு நன்மைகள் பல செய்ய வேண்டும். மானிடன் உயிர்களின் மீது கருணைக்காட்டி பசியாற்றல் — கல்விப்பசி தீர்த்தல் — உடல்பிணிக்கு மருத்துவம் உதவி செய்தல் — உளப்பிணிக்கு உகந்து இறையருள் கல்விநலம் வழங்கல் — போன்ற பல நன்மைகள் நாமே நாடிச் சென்று வழங்க வேண்டும்.

எல்லா உயிரினங்கள் அனைத்தும் தன்னுயிர் போல் கருதி நலம் நாடல் வேண்டும். இப்படி பல நன்மைகள் நாளும் செய்து வர இறையருளை நாம் எளிதில் பெற்றுவிடலாம். மானிடர்கள் மேற்கண்டவாறு செய் இயலாதவர்கள் மற்றவர்களுக்கு தீங்கு செய்யாமல் விலகி நிற்க வேண்டும்.

Koviloor Digital Library

தீவினைகள் தொடர்ந்து செய்பவர்கள் இறைவனின் வங்கி கணக்கில் தீவினைகள் சேமிப்பில் பெருகி மானிடவுடல் இழந்து "மாவின்" உடல் பெற்று அதிலிருந்து எளிதில் மீளமுடியாத நிலை ஏற்படும். ஆகவே மானிட உடல் பெற்ற மனிதர்கள் நல்வினை செய்ய வேண்டும். அதனால் உயிர் — உள்ளம் — மனம் — புத்தி — சித்தம் — நலமடையும். இந்த மானிடப் பிறவி வருவது ஞானவா சிட்டம் என்ன கூறுகிறது என்பதை கூர்ந்து ஊன்றி பார்க்க.

"எறியும் கடலி னுகத்து ளையில் யாமைக் கழுத்து
புகுவதுபோற் பொறிவெம் பிறவிய னேகத்தார்
புருடன் விவேக யென பிறந்து" என்று

ஞானவாசிட்டம் கூறுகிறது. அதாவது கடலின் மீது மிதக்கும் நுகத்தடியின்துளையில் ஆமையின் கழுத்து புகுமானால் எவ்வளவு வியப்போ, அதுபோல் உயிர்களுக்கு மனிதப் பிறவி வருவது மிகக்கடினமாகும் என்பதாம்.

மேலும், "எண்ணரிய பிறவிதனில் மானிட பிறவிதான் யாதினும் அரிது அது" என்று தாயிக்கு ஒப்பான தாயுமானவர் கூற்றாலும், மானிட தேக மெடுப்பது அதி துர்லபம்" என்று வராகோப நிடந்தால் அறிவதாலும்,

"பல்லுயிர் கருமத்தின் பகுதிக் கேற்ற புறச்
சொல் பல யோனி கடேறுந் தோற்றமுற
றல்லலுஞ் சுகமுழிக் கடையும் பல்லுாயிர்
புல்லு மானிடபவம் பொந்த வற்றுலும்" என்று சூத

சங்கிதையாலும்,

"மக்களாக் கையிற் பிறந்தலே யறிது மற்றதிலுந்
துக்கசுன் கெடுமையைத் துறத்தது மறிது
நற்குலத்திடை வருதலு ஞானத்தால்
முக்கணீசனுக் காட்படல் முற்றிமிரிதே என்று

சிவஞான வள்ளலார் வாக்காலும்,

"மடல் விரிந்தா மரை மலர் வைகுவோன்
கட மனைத்தை யுந்தந்துவந்தில
ணிடறு மென்றெண்ணி நன்மானிட
வுடல் படைத்தி னோரை யுற்னேரோ" என்று

பாகவதத்தாலும் அறியலாம்.

இறப்பு என்பது உறுதியானதா:

தோன்றிய அனைத்து உயிர்பயிர்கள் உலகியலில் வாழ்ந்து உழன்று மெலிந்து நலிந்து கெட்டு இறப்பு உறுதியாகப்பட்டுள்ளது. இதனை உறுதிப்படுத்த அனுபூதிமான்களின் மெய்மொழிகளை நோக்குவோம்.

"கூகா என என்கிளை கூடி அழ
போகாவகை" என்று அருணகிரி பெருமான் கந்தரானுபூதியால் ஓலமிடுவதாலும்

"கணங் கொண்டு சுற்றத்தார்கள் என்றலறப்
பிணங் கொண்டு காட்டுய்ப்பார்" என்று

நாலடியார் நவில்வதாலும்,

"கூகா என்று குறைப்பதல் லால் சமன்
வாவா என்னில் வரேம் என வல்வீரே" என்று

சிதம்பர செய்யுட் கோவை செப்புவதாலும்,
இறப்பெனும் மெய்ம்மையை இம்மையாவர்க்கும்
மறப்பெனும் அதனின் மேல் கேடுமற்றுண்டோ?"
என்று கம்பரின் அவலக் கூற்றாலும் அறியலாம்.

வடலூர் வள்ளல்பெருமான் மனிதனின் பிறவியைப் பற்றி என்ன தெரிவிக்கிறார் என்பதை அறிதல் நலமாகும்.

1. இவ்வுலகில் மனிதப் பிறவிப் பெற்றவர்கள். இந்த பிறவியினால் பெறத்தக்க ஆன்மாவூதியம், காலம், உள்ளபோதே அறிந்து அடைதல் வேண்டும்.

2. தம்முடைய உயிரைப் போல் மற்ற பிற உயிர்களையும் பேணிக் பாதுகாத்து அவைகள் மகிழ்வுடன் இருக்க வாழ உதவ வேண்டும். பிற உயிர்களுக்கு உண்டாக்கக் கூடிய தொல்லைகள் இடையூறுகள் வராமல் தடுத்து பயத்தை நீக்கி எப்பொழுதும் உதவியாக இருக்க வேண்டும். மனிதப் பிறவி எடுத்தவன் விரும்பத்தக்கவை இவையே.

3. இறைவனின் பூரண இயற்கை இன்பத்தைப் பெற்று எக்காலத்துக்கும், எவ்விடத்துக்கும், எவ்வகையிலும், எவ்விதத்திலும் தடைப்படாமல் வாழும் சிறந்த வாழ்வே, இந்த மனிதப்பிறப்பினால் பெறத்தக்க ஆன்ம ஊதியமாகும்.

4. உலகில் அனைத்துப் பிறப்புகளுள் உயர்ந்த பிறப்பாகிய மானிடப் பிறப்பைப்

Koviloor Digital Library

பெற்றுக் கொண்ட நாம் எல்லோரும் அறம் — பொருள் — இன்பம் — வீடு என்றும் நால்வகைப் பொருள்களின் அனுபவங்களைக் காலமுள்ளபோதே அறிந்து தெரிந்து புரிந்து அதனை அனுபவித்தல் வேண்டும்.

5. நாம் பல பிறவிகளையும் தப்பி மேலான பெருமைபாடுடைய இந்த மானிடப் பிறவியை எடுத்தது சிவபொருளின் திருவருளைப் பெற வேண்டுமென்பதேயாகும். அந்த இறையருளைப் பெற மாபெரும் முயற்சியைக் கைவிடாது சிவனருளை அடைய வேண்டும்.

தேகம் எங்கிருந்து வருகிறது:

1. நமக்கு (உயிருக்கு) உடம்பு என்கின்ற தேகம் எவ்வாறு வருகிறது. உயிர்கள் எத்தகையது என்பது அறிந்துக் கொள்ள உங்களுக்கு விருப்பம் இருப்பதாகத் தெரியவில்லை. வயிறு புடைக்க உடல்பெருக்க உண்டு நாளும் நன்றாக நிம்மதியாக தூங்குகிறீர்கள். மனமும் வாயுவும் கட்டுக்குள் கொண்டு பொய் வாழ்க்கையிலேயே இன்பமும் துன்பமும் அடுத்தடுத்து வருவதை எண்ணி எண்ணி மெலிந்து நலிந்து விடுகிறீர்கள்! என்னவே உங்களின் செயல் ஏழை உலகீர்?

2. அரசு பணிகள் மனிதனுக்குத் தடையாக இருந்தால் அதை விடுத்து தேகத்தைச் செம்மையாக்கிக் கொள்ளுங்கள், உடல் செம்மையான பின் சிவனருளால் மீண்டும் உத்தியோகம் சம்பாதித்துக் கொள்ளலாம்.

3. இறந்தவர்கள் மீண்டும் உயிர் பெற்று வரும்போது, அது ஞானக்கண் நோக்கமாகும். ஆதலால் உயிர்கள் தேகம் எடுத்து ஞானத்தோடு வருவார்களா அல்லது முன்பிருந்த அறிவோடுதான் வருவார்களா? என்றால் இந்த மானிட தேகம் ஆண்டவனது படைப்பல்லவா. மாயயின் படைப்பாகும். முன்பிருந்த ஞான அஞ்ஞானத்தோடு தான் வருவார்கள். ஆனால் எள்ளளவு ஞானச் சிறப்புப் பெற்று வருவர். எனவே மீள "அருள்" தரிசன சிறப்பால் மந்தம் நீங்கி ஞானம் விளங்கும்.

4. சுக்கிலம் மூன்று பிரிவு உண்டு. அது இரண்டரை வராகன் எடை இருக்கும். நச்சுத்தன்மை ஒரு பாகம். சாதாரணம் ஒரு பாகம். அமுதம் அரை பங்கு. ஆக இந்த பாகம் இரண்டரை ஆகும்.

மேற்படி முறையே பெண்களுக்கும் சுரோணிதம் இருக்கும். சுக்கில சுரோணிதத்தின் மேல்கடவுள் ஆவி உருவாய் இருப்பார்.

உடலுறவு காலத்தில் நச்சுத்தன்மைப் பாகம் வெளிப்பட்டால் தேகத்திற்கு இழப்பு உண்டாகும். சாதாரண பாகம் வெளிப்பட்டால் பிணியாம். அமுத பாகம் வெளிப்பட்டால் பிள்ளைப்பேறு உண்டாகும். இந்த முறையால் அடிக்கடி உடலுறவு கொண்டால் பிள்ளைப் பேறு அடைவது என்பது இயலாது.

5. இந்த உலகத்தில் மனிதர்களுக்கு உடல் விரைவில் இழப்பு நிகழ்வதற்கு இரண்டு காரணம் உண்டு. அவைகளில் ஆகாரம் மைதுனம் (உணவு, உடலுறவு) ஆகாரத்தால் ஒன்பது பங்கு இழப்பு. மைதுனத்தால் ஒரு பங்கு இழப்பு ஏற்படுகிறது. எவ்வாறெனில் பிண்ட உற்பத்தி காலம் தொடங்கி, இறந்து போகிற பரியந்தம் வரை ஆகாரம் உண்டு. இது இயற்கையாகும். சேய வாலிபம்,மூப்பு ஆக இந்த பருவ காலங்களில் மைதுனம் கிடையாது. கவுமாரம், யௌனம் ஆக இரு பருவங்களில் மைதுனம் உள்ளது. இந்த பருவங்களில் பிணியாலும், உறக்கத்தாலும், வறுமையாலும், பசியாலும், பல்வேறு வகையாலும், மைதுனம் தடைப்படும், இந்தக் காலத்திலும் உணவு எடுப்பதிலும் சிரமமாகும். இந்நிலையில் சுத்த சத்துவ உணவுகள் எளிதாக உண்டு, ஆயுள் விருத்தி செய்வது சுத்த சன்மார்க்க ஏற்பாடாகும்.

6. மனித தேகமே சொர்க்கமாகவும் நரகமாகவும் உள்ளது. அவ்விடங்கள் பிரமபதம் — விஷ்ணுபதம் — ருத்திரபதம், மகேச பதம், சதாசிவபதம் ஆக இவைகளாகும். இந்த மனித தேகத்தில்

Koviloor Digital Library

"கண்டம் முதல் உச்சிவரையில் உள்ள பதங்களுக்கு சொர்க்கம் என்று பெயர்—. நரகம் என்ற தீமைகளுக்கு இடம் "உந்தி முதல் குதம்" வரையாகும். இயமன் இருக்கும் இடம் குதத்திற்கு இடது பாகமாகும்.

7. இந்த தேகத்தை அலட்சியம் செய்யாமல் மிகவும் விழிப்புடன் பொன்போல் அவசியம் பாதுகாக்க வேண்டும்.

8. மனித உடலாகிய இதனை அழியாமல் மெய்யுடலாக்கினால் சிவானந்தத்தில் இறையருளில் திளைக்க வைக்கும்.

9. தோலுடம்பாலான இந்த தேகம் "ஒளி வடிவமாக்கிக் கொள்வதே மரணமில்லா பெருவாழ்வாகும்"

10. செம்மண் கல்லினால் வாழ்வதற்கு வீடு கட்டுவது போல் இந்த தேக வாழ்க்கை மனம் முதலான கரண இந்திரியங்கலால், சிவ வாழ்க்கைக்கு கடவுளால் கட்டிக் கொடுக்கப்பட்ட தேகம் ஒரு சிறிய வீடாகும்.

11. இறைவனின் அருளைப்பெற விரும்புவோர் தோலுடம்பால் செய்த ஈன உடல் மீது இச்சை வைக்கலாகாது.

12. எம்குலம் எம் இனம் என்பது எல்லாம் தொண்ணூற்றாறு அங்குலமுள்ள உடலுக்குள் அடங்கி விடுகின்றன.

13. பணத்தை புதைக்கும் நீங்கள் பிணத்தைப் புதைக்க மறுப்பதற்குரிய காரணம் எனக்குப் புரியவில்லை.

14. பரன் வழங்கிய இந்த உடலை நெருப்பிலிடக்கூடாது. புதைத்தல் வேண்டும்.

15. இந்த உயிர் குடியுள்ள தேகத்திற்கு "ஞான அமுதம் கிட்டும் போது ஊன் உடல் ஒளி உடலாக ஓங்கி விளங்கும்.

தமிழ் மொழி சாகாக் கல்வி கற்பிக்குமா?

1. இறைவனின் அருளைப் பெற வேண்டி தமிழில் பாமாலையாக செய்து இசையோடு துதி செய்யுங்கள். உள்ளம் கசிந்து கசிந்து மனமுருக கண்ணீர் பெருக அருளில் ஒன்றி உருகுங்கள்.

2. செந்தமிழால் அன்பு பெருக்குடன் உள்ளம் கசிந்து பாடும் பக்தர்களின் பெருங்குற்றங்களையும் குணமாகக் கொள்ளும் தயா உள்ளம் படைத்தவன் இறைவன்.

3. பேராசை, பெருங்கோபம், பெருமோகம், பெருமிதம், பெருலோபம், பேரழுக்காறு, பேரங்காரம், பெருவயிரம், பெருமடம், பெருமயக்கம் முதலிய பெருங்குற்றங்கள் அதிகம் இல்லாத நாடு தமிழ்நாடாகும்.

4. பயிலுவதற்கும், அறிவதற்கும் மிகவும் எளிதாயும், பாடுவதற்கும், துதிப்பதற்கும் மிகவும் இனிமையுடையதாய், "சாகாக்கல்வியை" இலகுவில் அறிவிப்பதாகிய மொழி திருஅருள் தயவால் கிடைத்தது தென்மொழியான தமிழ்மொழியாம்.

5. தமிழ்மொழி சங்கம் ஓங்கி வளர்ந்திடவும் தமிழ் மொழி பெற்றுத் தந்த கலைமகளை தொழுது போற்றுதல் கடமையாகும். இது முத்தி வழங்கும் மொழியாகும்.

காகபுசண்டர் பெருமகனார் தாம் எழுதிய ஞானசூரியன் பெருநூல் 1000இல் 436ஆம் பாடலில் வடமொழி என்று கூறும் படுமொழி முத்தி தராது என்றும் பரிசுழி என்னும் சுழிமுனையை காட்ட இயலாது என்று கூறுகிறார்கள். அந்த மொழியில் கையேந்தும் நிலை உண்டு செய்யும் என்று கூறுகிறார். அவரின் பாடலை நோக்குக.

"பாசையென்ன சமஸ்கிருத வடமாம் பாசை
பரிசுழியைக் காட்டிடுமா முத்தி யீமா
ஆசையென்ன தமிழருத்தம் அதுவும் ரெண்டோ
ஆஊவும் வேறலவே வார்த்தை பேதம்" 436இல்

"வாளேதான் வெளிமறையு மகுதோர் காலம்
வசனிப்பா ரெல்லோருந் தமிழைத்தானும்
தேனே போல் வான்மொழி தித்தித்தோரே
சிவந்திருப்பா ரெல்லாரும் ஒன்றுபோலே 442

Koviloor Digital Library

சாகாக்கல்வியை தமிழ்மொழியால் மட்டும் எளிதாக அறிந்து புரிந்து தெரிந்து உணர்ந்து அறிய வைக்கும் என்பது சித்தர்கள் கூறுகிறார்கள். சாகாக் கல்வியின் நோக்கம் மனிதன் தன் மரணத்திலிருந்து விடுபட்டு வெற்றி பெற்று முத்தி பெறுவதேயாகும். இந்த கல்வி யாராலும் கற்பிக்க இயலாது. தனிஒரு மனிதன் தன் அறிவைக் கொண்டு தானே அறிந்து அதன்வழி நடந்து பயிலக்கூடிய கல்வியாகும். இந்தக் கல்வியைப் பற்றி சித்தர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை அறியவும். இடைக்காட்டு சித்தர் என்பவர் கல்மனம் கொண்ட மானிடர்களே இதனைப் பற்றியறியாது உழலும் கல்வியை படிக்கிறீர்கள். மெய்க்கல்வி என்பது சாகாக் கல்வியாகும். இக்கல்வியைக் கற்றால் மரணம் நீக்கிக் கொள்ளலாம் என்பதை,

"சாகாதிருப்பதற்குத் தான் கற்கும் கல்வியன்றோ
வாகான மெய்க்கல்வி வகுத்தறீ நீ கன்மனமே 66

என்று ஓதுகிறார். மேலும் காக புசண்டர் தம்பெரு நூலில் 1000த்தில் 238ஆம் பாடலில்,

"சாகாமல் இருப்பதற்குக் கல்வியுண்டு
சாக்காடு கொள்வதற்கு விபரமுண்டு 238 என்று ஓதுகிறார்.

இராம ரிஷ் சிவயோக ஞானம் என்னும் நூலில் 7ஆம் பாடலில்,

போடப்பா கசடற்றாற் சுத்தமாகும்
பூமி தனிற் பயிர்கருகும்ஞ் செயலைக் கண்டு
நாடப்பா "சாகாத கல்வி" தன்னை
நலமாக கற்பதற்கு வுன்னைத் தேற்று 7 என்று கூறுவதை உணர்ந்து அறிவது நலமாகும்.

அகத்தியர் பூரண சூத்தரம் 216இல் 56ஆம் பாடலில் மனிதனாகப் பிறந்தவர்கள் "சாகாக்கல்வி" கற்று சிவவாழ்க்கையில் இணைவான் என்றும், சண்டாள பிறவி என்பவர்கள் இறந்து இறந்து பிறந்து பிறந்து உலகில் பிறந்து உழல்வார்கள் என்று கூறுகிறார்கள்.

மனிதனாய் பிறந்தக்கால் "சாகாக்கல்வி"
வாசிக்கும் சிவமோடு வாழ்க்கை சேர்வான்
செனித்தாஞ் சண்டாளப் பிறவிலோர்கள்
செகத் திறந்து செனிப்பார்கள் செகத்திற் றானே 56

என்று கூறுகிறார். மேலும் காகபுசண்டர்,

"சாகாது மார்க்கம் விட்டால் நோகாதப்பா
தன்னுடனே பிறந்த குலம் பொல்லாப் பேகும்
பூரணமாம் சாத்திரத்தை முழுதும் பாரே 265

என்று பெருநூல் 1000இல் ஓதுகிறார்.

நமது வடலூர் வள்ளல் பெருமான் அவர்கள் தம் அருட்பாவில், சாகாத கல்வியின் நிலையை அறிய வேண்டும் என்னும், வோகாத கால் எது என்று அறிந்து உணர்ந்தல் வேண்டும். அத்தோடு சாகாத தலையைப் பற்றியும் அறிதல் வேண்டும். இதன் உண்மை நிலை இறைவனின் சிறப்பு அருளால் அறிந்து அதில் உறுதியாக நிற்க வேண்டுமென்று,

சாகாத கல்வித் தரமறிதல் வேண்டுமென்றும்
வோகாத காலுணர்தல் வேண்டுமுடன் சாகாத்
தலையறிதல் வேண்டுந் தனியருளால் உண்மை.
நிலையடைதல் வேண்டு நிலைத்து - அருட்பாவால்அறியலாம். மேலும் வடலூர் பெருமான் "தேவர் குறளில் முதல் அதிகாரத்தில் சாகா கல்வியை குறித்துச் சொல்லியிருக்கிறது. அதைத் தக்க ஆசிரியர் மூலம் தெரிந்துக் கொள்ளலாம்". (வள்ளலார் உபதேசம் 64) என்கிறார்.

மேலும் பட்டினத்தார் பெருமான் சாகாக்கல்வியை கீழ்வரும் பாடலால் உணர்த்துகிறார்.

"பிறவா திருக்க வரம் பெறல் வேண்டும் பிறந்துவிட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காண் இதுவெப்படியோ?
அறமார் புகழ்ந்தில்லை அம்பலவானர் அடிக்கமலம்
மறவாதிரு மனமே! அதுகாண் நன்மருந்துனக்கே.

திருவள்ளுவர் தம் திருக்குறளில் தவத்தின் ஆற்றல் அடைந்தவர்கள் இயமனை வெல்லும் திறன் கைகூடும் என்பதை

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்டவருக்கு என்று ஓதுகிறார்.

மரணமில்லா பெருவாழ்வு என்பது என்ன?

1. மரணமிலா பெருவாழ்வு என்பது ஒருவன் தன்னுடைய சொந்த முயற்சியால்

Koviloor Digital Library

இறையருள் தன்மையுடையது.

2. உலகில் பிறப்பு நிகழ்கிறது. இறப்பு நிகழ்கிறது. இறைவனின் அருளின் துணை மூலம் ஒருவன் தன்னுடைய முயற்சிக் கொண்டு இறைவனின் நிலைத் தானே பெறுதலுக்கு மரணமிலா பெருவாழ்வு என்பர்.

3. மரணமில்லா பெருவாழ்வை இந்த தோலுடம்பு பெற்றவர்கள் எல்லோராலும் அதன் இலக்கு அடைய முடியாது. அது அந்த தனி மனிதனின் சுய அனுபவத்தின் மூலமே பெற முடியுமேயல்லாது, மற்ற ஒருவராலும் தான் பெற்ற அனுபவத்தின் மூலம் பிறர் அடைய முடியாது.

4. இந்த ஊனான உடலே ஒளி உடலாக மாறும்.

5. இந்த ஊனான உடலே அழியாத நித்திய தேகம் பெற்று, உத்தமமான சித்தி நிலை அடையப் பெறுவர்.

6. யார் ஒருவர் பிறர் உயிர்களிடம் தயா விசாரத்தோடு ஒருவன் ஒழுக்கத்துடன் இருந்துவானாகில் அம்மானிடனுக்கு சுத்த தேகம் பெறலாம். பிரணவ தேகம் பெறலாம். ஞான தேகம் அடையலாம்.

7. சுத்த தேகம் என்பது உருவத்தோடு கூடியதாகவும் இறைவனின் நல்லருள் செயல்படுவதாகவும் அமையும்.

8. பிரணவதேகம் என்பது ஒலி (ஓசை) வடிவாயும் அருவுருவத்தில் காணப்படும். அத்தேகத்திற்குக் காரண இயல்பு காரிய இயல்பு ஆகிய இரண்டும் உண்டு.

9. ஞான தேகம் என்பது அருவநிலையில் இருக்கும் தேகம் தோன்றாது. அனைத்திற்கும் காரணமாக அமையும். எங்கும் ஊடுருவிப் பாயும்.

வடலூர் வள்ளர் பெருமானுக்கு இறைவன் வந்து தனக்கு அகத்தில் வந்து "சாகாக்கல்வியைப்" பற்றிய நெறிமுறைகள் தந்துயருளியதினால் தேன் போன்ற அமுதம் பெற்று அதனை உண்டு. "சித்தம் சிவமயமாக்கியது" என்று ஓதும் அருட்பாவை நோக்குக.

"தானந்தம் இல்லாத தன்மையைக் காட்டும்
"சாகாத கல்வியை"த் தந்தெனக்குள்ளே
தேனந்தத் தெள்ள தூற்றிப் பெருக்கித்
தித்தித்துச் சித்தம் சிவமயமாக்கி 4657

ஓதியுள்ளதையும் கூர்ந்து ஊன்றி வாசிக்கவும். தாம் சாகாக்கல்வி தனக்குள் உணர்ந்ததால் பெற்ற பலனை கீழ்வரும் வள்ளல் பெருமானின் அருட்பாவில் உணர்க.

"கடல் கடந்தேன் கறை அடைந்தேன் கோயில்
கதவு திறந்திடப் பெற்றேன் காட்சி எலாம் கண்டேன்
அடர் கடந்த திருவமுது உண்டு அருள் ஒளியால்
அனைத்தும் அறிந்து தெளிந்து அருஉரு ஆகி
"அழியாமை" அடைந்தேன்" என்று அருட்பாவில்
தெள்ளென தெரிவிக்கிறார்.

சாகாக்கல்வி என்கின்ற கலை தமிழ்நாட்டிற்கே உரியது. இதனை தமிழில் தான் கற்க வேண்டும் தமிழ் மொழி ஒன்று மட்டும் சாகாக் கலையை எளிதில் கற்பிக்கும் மொழியாகும். தமிழ்மொழி ஒன்றே முத்திக்கு வழிகாட்டும் தெய்வத் தமிழாகும்.

தமிழ்சித்த வேதாகமங்களில் மட்டும்தான் ஏமசித்தி ஞான சித்தி போன்ற அற்புத சித்திகளைக் கூறியுள்ளது. மற்ற எந்த மத சமயங்களிலும் மேற்கூறிய சித்திகளும் சாகாத கல்வியையும் கூறப்படவில்லை என்பதை அறிந்த, தமிழ் பயின்ற தமிழ்நாட்டு மக்கள் "சாகாக்கல்வியை" தன் அறிவைக கொண்டு தானறிந்து அதனை பயின்றால் முத்தி பெறலாம். இதற்கு கடினமாக உழைத்தால் பலன் பெறலாம் என்று சுப்பிரமணியர் ஞானயோகம் 500இல் & 15ஆம் பாடலில்

"ஏப்பா வுமுதால வெள்ளாமை யாகும்
ஏரில்லான் அறுத்தடித்த தன்மை தானே" 15

என்று ஓதுவதால் அறிவதோடு நிற்காமல் உழைப்பிருந்தால் ஊதியம் பெறலாம் என்பதை நினைவுப்படுததி இதனை நிறைவு செய்கிறேன்.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

உ. சற்குரு நாதன் சாகாக்கலை


அரிஓம் குரு வாழ்க குருவே துணை என்பது வணக்கத்திற்குரியவருக் குத்தான் குரு என்று கூறுவர். குரு என்றால் மனத்தின் இருளைப் போக்கி அறியாமை அறிய வைத்து அறிவுக்கு தெளிவு கொடுக்கும். நிலையுடையவரை குரு என்று கூறுவர். "கு" என்றால் இருள். "ரு" என்றால் ஒளியாகும். அறியாமையை அகற்றி அறிவின் தெளிவைத் தந்து உயர்நிலை அடைய உதவி செய்பவரை "குரு" என்று கூறலாம்.

குரு இல்லாத விதையில்லை, கருவில்லாத ஆட்டமில்லை என்று கூறுவது குருவின் உயர்நிலையும் உன்னதத் தன்மையும் எடுத்துக் காட்டு வரிகளாகும். மிருகண்ட மெய்ஞ்ஞானம் என்னும் நூலில் "குருவின்" மேன்மையை எடுத்துக்காட்டும் நிலையை அறிய வேண்டும். அதாவது

"வெருளாம லறிபவனே முத்தனாவான்
விதமுறைத் தோன் குரு வென்னுமா சரணாகும்" - 13

தன் அறிவு கொண்டு தன்னை அறிய வேண்டும். அதில் மலைப்பும் மருளும் அடையாமல் தன்னறிவால் நுட்பமான அகச்செய்திகள் அறிந்தால் சீவன் முத்தனாவான். இன்னயின்ன என்று ஞானம் தரும் செய்திகள் பிரித்து விளக்கம் வழங்குபவர் தான் குரு என்ற ஆசானாவார் என்று கூறுகிறார்.

அகத்தியர் சௌமிய சாகரம் என்னும் நூலில், தாய் என்பவள் தான் பூரணமாகும். அந்த பூரணமே எப்பொழுதும் ஞானம் மிகுந்தயிடமாகும். தன்னறிவின் துணைக் கொண்டு தன்னை அறியும் வாய்ப்பைப் பெற்றவன் தெரிசனம் காண்பான். மாயா உலகம் சிவமயமானது என்று நினைப்பவன் வழிமுறையானது என்று பகுத்து அறியும் உணர்வானது அறிவானந்தமாகும். ஊனுடல் சொரூப சித்திபெறுவதே சிவயோகமாகும். அதனால் அகில



உலக அணுஉயிர்களில் புகுந்து பரவி அருள்புரிபவனே "சற்குருநாதனாகும்" தேய்வும் தொய்வும் இல்லாத சூரியனைக் கண்டு சிவயோக யோகமதில் உறுதி செய்துக் கொள்க என்று கூறுகிறார். தாய் என்றால் பரைஞான கேசரி என்பர். அந்த தாயே பூரணத்தில் விளங்கும் பூரணியாவாள். அவர் ஞானம்தரும போதமாவர். போதம் என்றால் ஞானப்பரிபூரணி என்று பொருள். தெரிசனம் என்பது ஆன்ம காட்சியாகும். சற்குரு என்றால் எல்லா உயிர்களில் ஊடுருவி நின்று அருள் புரிபவர் என்பது பொருளாகும். அகத்தியரின் பாடலைக் கண்டு மகிழ்க.

"தாயான பூரணமே சாதா போதமாகும்.
தன்னைத் தானறிதல் தெரிசனமாகும்
மாயான பிரபஞ்ச சிவமய மென்றெண்ணு
மார்க்க பகுத்தறிவே அறிவானந்தம்ஞ்
சாயாத நிலையதுவே சிவயோக மாகுஞ்
சகல உயிர் தானானால் சற்குருவே ஆகும்
தேயாத ரவியதனெல் இதனைக் கண்டு

Koviloor Digital Library

சிவயோக யோகமதில் திரம் செய்வாயே.

அகத்தியர் சௌமியசாகாரம் — 1200

திருமூலர் எழுதிய திருமந்திரம் என்னும் நூலில் குரு என்பவன் யார். அவன் என்ன செவியருளுரை கூறுவார் என்பதை எடுத்துக்காட்டும் பாடல் காண்க.

"குருவென் பவனே வேதாகமங் கூறும்
பரவின் னாகிச் சிவயோகம் பாவித்
தொரு சிந்தை யின்றி உயிர்பாச நீங்கி
வருநல் குரவன் பால் வைக்கலுமாமே - 2057.

குரு என்பவர் நான்மறையின் உண்மைப் பொருளையும், அதில் மறைக்கப்பட்டுள்ள ஞானப் பொருள்கள் பற்றியும், அதனால் உயிர்கள் பெறும் உயிர் அனுபவத்தையும் தெளிவாகக் கூறி சிக்கலை தீர்த்து உணர்த்துவரே குருவாவார். பரம்பொருளைக் கண்டு களித்து நுகர்ந்து சிவயோக என்ன என்பதையும் தெளிவாகக் காட்டியும் அதனால் ஆன்மா பரமான்மாவுடன் இணைவும் வகையும் கூறியும், எவ்வித சிந்தனையின்றி உயிர்கள் மாயா பாசங்கள் நீக்க அருள்புரியும் குருவே நற்குருவாகும் என்று ஓதுகிறார்.

வசிட்டர் தாம் எழுதிய ஞானோதயம் என்னும் நூலில் சிவராச யோகம் அறியும் போது விடுதல் நிறுத்தல் இழுத்தல் செய்யும் போது ஒரே நினைவாய் மனதின் உறவுக் கொண்டு செபித்தால் மகனே வடிவேலன் ஒளியுடன் காட்சி தருவான். அவரின் திருவடியை வணங்கி வாழ்த்தி "சிவாய குரு நாத சிவமே" என்று கூறியப் போதே பூட்டிய வாசலில் திறவு கோல் திறக்க அருள்வாய் என்று வேண்டிய நின்றால் திறவுகோல் கொடுத்து உதவி செய்வார் என்பதை கீழ்வரும் பாடலில் அறிக.

"யோக மதில் ரேசக பூரகம் பண்ணி
யுண்மையுடன் கும்பத்தில் நின்றுக் கொண்டு
ஏகமென்ற மனதுறவாய்ச் செபித்தாயானால்
என் மகனே"வடிவேலன்" பிரகாசிப்பான்
தாகமா யவர் பதமே பணிந்து போற்றித்
தன்மையுள்ள "சிவாய குருசிவமே" என்று
வேகமுடன் பூட்டு முனை திறகக் வென்று
வேண்டினால் திறவுகோல் தருவார்தானே - 10.

வசிட்டர் அருளிய ஞானோதயம் — 16

அகத்தியர் எழுதிய அமுதகலை ஞானம் என்னும் நூலில் வசிட்டர் கூறும் கருத்தை ஏற்று அகத்தியரும் கூறும் பாடல் காண்க.

"போட்டவுடன் ரேசக பூரகம் பண்ணிப்
புனிதமுடன் கும்பத்தில் நின்று கொண்டு
காட்டமுடன் மனதுரைத்துச் செபித்தாயானால்
நலமான "முருகனுமே" பிரகாசிப்பான்.
தேட்டமுடன் அவர்பதமே பணிந்து போற்று
"சிவாயகுரு தேசிகனே சிவமே ஐயா"
பூட்டு முனைத்திறவு கோல் திறக்கவென்று
புனிதமுடன் தாவெனவே தருவார் பாரே - 37

அகத்தியர் அமுதகலை ஞானம் — 1200.

ரேசகம் என்றால் விடுதலையாகும். பூரகம் என்றால் இழுத்தலாகும். கும்பகம் என்றால் நிறுத்தல் என்பதாகும். கும்பத்திலிருந்து மானதமாக இறையருளை எண்ணி தீவிரமாக தியானம் செய்தால் நலங்கள் பல அருளும் "முருகனே" சோதி வடிவமாக ஒளிர்வான். அப்பொழுது தெளிவாக அவரின் திருவடியான பாத மலரைப் பற்றி விழுந்து பணிந்து வாழ்த்தி "ஐயா, சிவாயகுரு தேசிகனே, சிவமே" என்று பணிந்து ஞானம் பெற வேண்டும். பூட்டப்பட்டுள்ள அண்ணாக்கின் முனையை திறக்க திறவுகோல் தருகவென்று சுத்த மனதுடன் வேண்டினால் அந்த பெருமான் தருவார் என்று ஓதப்படுகிறது என்பதை யாரும் அறியலாம்.

சற்குருவிடம் கேட்டு பெற வேண்டியது எது:

சரியையும் கிரியையும் ஆக இரண்டும் சக்தி மார்க்கமாகும். சிவயோகமும் ஞானமும் சிவமார்கமாகும். முதலிலிருப்பது முக்தியை தராது. இரண்டாவது முத்தியைத் தரக்கூடியது. வழிபாட்டு முறையில் சரியையும் கிரியையும் செய்தவர்கள் எல்லோரும் மரணம் தழுவி உயிரிழந்து பயனற்று மறைகிறார்கள். இது நூறுக்கு நூறு சதம் மாள்கிறார்கள்.

Koviloor Digital Library

சிவமார்க்கமான யோக ஞானம் மார்க்கம் செய்வதால் இறப்பு தடுக்கப்டுகின்றது. ஆனால சிவமார்க்கம் செய்ய மக்கள் முன்வருவதில்லை. அப்படி முன்வர நினைப்பவர்களை மாயையில் உழலும் மக்கள் அவனை விடுவதில்லை. இதுபோல் ஆயிரக்கணக்கில் யோகஞானத்தில் தோல்விக் கண்டுள்ளனர். அதற்கு திடமான மனது வேண்டும். மனம் இருந்தால் மட்டும் போதாது. அதில் வீரம் வேண்டும். வீரம் இருந்து உறுதியான மனமிருந்து, நல்ல ஒரு சற்குரு கிடைக்கப் பெற்று அவர் கூறும் யோக ஞான மறையகங்கள் (இரகசியம்) அறிந்து, புரிந்து, தெளிந்து பின்பற்றினால் அவன் இறப்பை தடுத்துக் கொள்ளலாம். சமீபக் காலத்திலிருந்த நமது வடலூர் வள்ளல்பெருமான்,

"கரண மெல்லாம் கலக்க வரும்
மரணமும் சம்மதமோ
இற்றி தனைத் தடுத்திடலாம்
என்னோடு சேர்ந்திடு மின்
என் மார்க்கம் இறப் பொழிக்கும்
சன் மார்க்கந் தானே - திருவருட்பா.

அறைகூவி அழைத்தார்கள். ஆனால் மக்கள் மாயா உலகில் உழல்வதால் அவர்ககள் அவரை பின்பற்றாமல் மாண்டு வருகின்றார்கள். இதற்கு காராணமாக செயல்பட்டவனே வேதவியாசன் வகுத்த பொய்யான குப்பை செய்திகளான வேதங்கள் இதிகாசங்கள், புராணங்கள், அதனைப் பின்பற்றி கூறு பிரசாரக் குண்டுகள் பாய்வதால் மக்கள் மடிந்து வருகிறார்கள். உலகியலில் வாழும் மக்கள் இனம் சாகாக்கல்வியைக் கற்று மரணத்தை வென்று விடுவார்கள் என்ற கேடுகெட்ட எண்ணத்தால் வேதவியாசனால் செய்த குப்பைச் செய்திகளை அகற்றி சுத்தம் செய்து சித்தர்கள் கூறும் நல்வழிகள் ஊன்று கோலாகக் கொண்டு கடைப்பிடித்தால் யாவரும் மரணத்திலிருந்து விடுப்பட்டு விடலாம் என்பதை காகபுசண்டர்,

"சாகாமல் இருக்க கல்வியுண்டு
சாக்காடு கொள்வதற்கு விவரம் உண்டு" என்று ஓதுவதால் அறியலாம். சித்தர்கள் சாகாமல் இருக்கு யோகமும் ஞானமும் கூறும் நூல்கள் இயற்றினார்கள். ஆனால் வேத வியாசன் மனித இனத்தை மரணத்துக்குள்ளாக்கும் விவரங்களான வேத மொழிகள், இதிகாக விவரங்கள், புராணங்கள் என்று இன்றைய தொலைக்காட்சி தொடர்கள போல் அன்றே எழுதிவைத்த குப்பைகள் படித்து மாண்டு வருகின்றார்கள்.

அடுத்து இடைக்காட்டு சித்தர் மெய்க்கல்வி பொய்க் கல்விப் பற்றி கூறும்போது,

"சாகாதிருப்பதற்கு தான் கற்குங் கல்வியன்றோ
வாகான மெய்க்கல்வி வகுத்தறி நீ கன்மனமே"

இடைக்காட்டு சித்தர் ஞானம் — 130.

உலகியல் கல்வி வயிற்று பிழைப்பதற்கு கற்கும் கல்வியாகும். இக்கல்விகள் மரணத்தை வெல்லும் வழிகள் கூறாது. அருளியல் கல்விதான் மெய்க்கல்வி. அதுவே மரணத்தை வெல்லும் சாகாக் கல்வியாகும். கல் மனம் படைத்த மனிதா நீ அறிக என்று பசுமரத்தில் அடித்த ஆணியைப் போல் உறுதியாகக் கூறுகிறார்.

பொய்க் கல்வி விபரம் கொடுத்த வேதவியாசனின் குப்பைகளைத் தள்ளி சுத்தம் செய்து மெய்க்கல்வி தந்த தரமான சாகாக்கல்வி கற்று இறப்பொழித்து ஞானஅறிவு நல்கும் சற்குருவைத் தேடி மெய்க்கல்வி கற்று உய்ய வேண்டும் என்பது அன்புறையாகும்.

சற்குருவைத் தேடி மெய்க்கல்வி கற்றால் மக்கள் பெரும் பயன்கள் என்ன என்பதைக் அகத்தியர் கூறும் அற்புதப் பாடலைக் காண்க.

"குருவான பதிஅறிந்து குருவைக் காரு
குருவறிந்து பூரணத்தைக் குணமாயக் கொள்ளு
திருவிருந்த பூரணத்தைத் தினமும் கொண்டால்
சிவசிவ கைலாச தேகமாகும் - 201.

சற்குருவை அணுகி அவர் கூறும் பதியான பூரணத்தை அறிய அவரின் திருவடி நிழலில் காத்திருப்பாயாக. குருகூறும் சாகாக்கல்வியான மெய்க்கல்வி பூரண பதியான பரைஞான கேசரியை

Koviloor Digital Library

குணமாக் கொண்டு உண்டு வந்தால் ஊனுடல் மறைந்து சொருப சித்தியான ஞான தேகம் பெற்று மரணமின்றி பரத்தில் தனித்த சிவனாக வாழலாம் என்று மெய்க்கல்வி கூறும் நற்குருவை தேடி பயனடைதல் வேண்டும்.


உரோமமாமுனி சித்தர் தாம் எழுதிய வராகம் என்ற வேதியியல் நூலில்,

"சாகாமலிருக்க வென்றாற் தாயைப் போற்று
சரணமென்று நந்தியடி தெண்டம் பண்ணு
வேகாமல் நின்ற தொரு தலையை கேளு
விதமாகச் சாகாத காலைக் கேளு
வாகான விரண்டையுந் தானாருஞ் சொல்லார்
மகத்தான நந்திகுரு வுப தேசிப்பார்
போகாமற் பரிவாசி "யம்" மென்றேற்றிப்
பொறி வழியே "லாடத்திற்" புகுந்து பாரே - 11

உரோமமாமுனி சித்தர் வராகம் — 25

மனிதன் சாகாமல் இருக்க வேண்டுமென்றால் பூரணி என்று போற்றப்படும் பரைஞான திருவடியை வாழ்த்த வேண்டும். நந்தி குருவின் திருவடியை வணங்கவேண்டும். வேகாத்தலையான செய்தியின் விளக்கத்தைக் கேட்டு அறிக. அதேப் போல் சாகாதக் கலையைப் பற்றி கேட்டு அறிக. இந்த இரண்டையும் யாரும் கூறுமாட்டார்கள். இந்த இருச் செய்திகளும் உயர்ந்த மேடையில் அமர்ந்துள்ள குரு நந்தியானவர் செவியருள் உரை கூறுவார். போகா புனால் என்று கூறப்படும் சுழினை "அம்" என்று வாசி மூலம் ஏற்றி பொறிவழியே லலாடத்திற் புகுந்து சுழன்று நிற்கும். அப்பொழுது சிவகுரு வெளிப்பட்டு சாகாக்கல்வி செவியருள் உறை செய்வார். அவரே சற்குரு நாதன் என்பார்.

மேலும் குரு என்பவர் ஏற்ற தரும் சிவயோக நெறியை நினைத்தபோது குருபரன் நம்மிடத்தில் மகிழ்ச்சியுடன் வந்து ஆற்றல் மிகுந்த சிவயோக நெறி மார்க்கத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டி அன்பு கொண்டு பூசை வழி வகை தெரிவிப்பவரே சற்குருநாதன் என்பதை



சுகப்பிரம மாமுனி சுத்த ஞானம் என்ற விளக்குமுறைக் கூறும் பாடலைக் காண்க.

"ஏற்றமுள்ள சிவயோகம் நினைத்த போது
இன்பமாய்த் குருபரனும் பதிவாய் வந்து
ஆற்றலுடன் சிவராசயோகங் காட்டி
அன்புடனே பூசை வகை நல்கு வாரே - 27

சுக பிரம மாமுனி ஞானம் — 32.

கண்ணானந்தர் எழுதிய சிவராஜ யோகம் என்னும் நூலில் குருக்களின் நிலையை முதலில் நாம் அறிவது நல்லது. காரிய குரு — காரண குரு — ஞானகுரு என்ற வகைகள் யறிந்து தேடிக் கண்டு அறிய வேண்டும். சற்குருவாக உள்ள ஞான குருவைத் தேடி அவருடைய அருளால் சிவனை வணங்க அகார தீட்சையும், சக்தியை வணங்க உகார தீட்சையும், மகார தீட்சை அறிய மௌன தீட்சையும் செவியருளுரை கூறும் குருவறிந்து தீட்சை பெற்றால் நல்லது என்று கூறும் பாடல் காண்க.

"வல்லதொரு குருவருளால் அகார தீட்சை

Koviloor Digital Library

வந்த பின்பு உகார மடா சக்தி தீட்சை
நல்லதொரு மவுனமடா மகார தீட்சை
நலமாக குருவறிந்து தீட்சை பெற்று" - 9

கன்னானந்தர் சிவராச யோகம் — 14.

வல்லதொரு என்றால் சாகாக்கல்வியில் திறமை பெற்றவர் என்பதாம். அவரே குரு என்பர்.

அகத்தியர் சித்த ஞானம் எனும் சிறுநூலில் சற்குரு எங்கு இருக்கிறார். அவர் இருக்கும் இடம் புருவமையமாகும். சூரிய கலைக்கூடுமிடம் வலக்கண்ணே சிவசாட்சியாகும். சிவசாட்சி என்றால் ஆத்ம தரிசனம் என்று கூறுவர். இறைவன் இருக்கும் இடம் மூல என்பர். அதுவே ஞான சித்தி என்பர். சிங் — வங் — என்று வாசியுடன் ஏற்றினால் பிரணவ தேகம் பெற்றுசிலன் முத்தி என்பர். கருவூர் என்று கூறப்படும் பரைஞான கேசரி வாலையை மவுன தீட்சை மார்க்கத்தால் அறியும் அறிவே குருயென்னும் ஆசானாகும் என்று கூறும் பாடல் காண்க.

"குருவிருக்கு மிடந்தானே புருவ மையம்
கூடும் வலக் கண்தானே ஞானசித்தி
திருவிருக்கு மூல மல்லோ ஞானசித்தி
சிங்கு வங்கு மென்றானாற் பேறா முத்தி
கருவிருக்கு மவுனத்தி லிந்த மார்க்கம்
கைக் காட்டிச் சொல்வதற்கும் அறிவேயாசான்".

அக சுத்த ஞானம் — 7.

மச்ச முனி சித்தர் தீட்சை ஞானம் என்னும் நூலில் குருவே வந்து மானுட ஆன்மாவுடன் இறையின் பேரான்மா என்று கலக்கும் முறை அறிவிக்கும் முறையுடையவர் குருநந்தியாவார். மேல்நிலை முறையுடையவர் குருநந்தியாவார். மேல்நிலை ஆதார மூலத்தில் முளைத்து எழும் குண்டலியைப் பற்றி முறையாக ஞானத்தை செவியருளுரை செப்பி ஆன்மாவை உயர்த்தி பேரான்மாவுடன் சேர்ப்பிக்கும் சாகாக்கல்வி அருள்பவனே குருபரன் ஆவான். அவனே கேட்டதையருளும் நந்தி நாமம் பெற்ற குரு என்ற தருவாவான் என்று கூறும் மச்சமுனி பாடல் காண்க.

"குருவேது ஆத்துமா கோனென்ற றிந்தபின்
குருவேது நந்திக் குண்டலிக் குள்ளாய்த்
திரமாயும் தேசஞ் செப்புங் குருபரன்
தருவான நந்தி தாமவ ரென்னே - 46

மச்சமுனி சித்தர் தீட்சுஞானம் — 55.

சுப்பிரமணியர் சுத்த ஞானம் என்னும் நூலில் குரு என்ற சொல் யாருக்கு பொருந்தும் என்றால் குருபரனைப் பற்றி அறிந்து தெளிந்தவனுக்கு குரு என்பர். திரு என்ற சொல் யாருக்கு பொருந்தும் என்றால் சிந்தைதனை அறிந்தவருக்கு திரு என்பர். தரு என்று கூறப்படும் சொல் யாருக்கு சிறப்பு தரும் என்றால் தயாபரியான வாலையை அறிந்தவருக்கு தரு வென்ற சொல்லாகும். கரு என்று சொல் யாருக்குப் பொருந்தும் என்று கேட்டால் கர்த்தர் என்று கூறப்படும் சதாசிவனான அருளோனுக்குப் பொருந்தும். இக்கருத்தைக் கூறும் பாடல் காண்க.

"குரு வென்ற சொன்ன சொல் லாருக்க் காச்சு
குருபரனை யறிந்தவர்க்குச் சொல்லலாச்சு
திருவென்று சொன்ன சொல் லாருக் காச்சு
தரு வென்று சொன்ன சொல் லாருக் காச்சு
தயா பரியாம் வாலைதனை யறிந்தோர்க்காச்சு
கரு வென்று சொன்ன சொல் லாருக்காச்சு
கர்த்த னென்று சதாசிவனுக் காகுந் தானே - 78.

சுப்பிரமணிய சிவ சுத்த ஞானம் — 100.

குருவிருக்கும் கருவைக் கேள். அதனை கண்டுக் கொள். இறுதி எழுத்தும், தலையெழுத்தும் அரிஓம் என்பர். ஊன்று கோலாக குருவுக்கு தீ மூட்டு. உடலின் நடுவில் உள்ளது வாசி வீடு. ஆண் என்ற இரண்டும் ஒன்றாகில் அடங்கி நிற்கும் இடமே தங்கமாகும். வீணாக சொல்லவில்லை. இந்த ஞானம் வேதாந்த கொம்புசுழி வெளிவிட்டேன்.

வெளிவிட்ட முப்பாழ் சென்று அப்பால் சென்று விண்ணில் பயிர் செய்து விளைவுக்கண்டால் அமுதம் பொழியும். அதனால் ஒளிச்சுடர் பெருகி ஓமென்ற எழுத்தினாலாகும். அவ்விடத்தில் உறுத்துணை யாருமில்லை. உண்மையான

Koviloor Digital Library

நிலையென்னவெனில் நாலாவது என்று கூறப்படும் நிற்குணப்பாழில் ஒடுங்கும். அதுவே கண்ணாடி போன்ற பரத்தில் (பிர்மத்தில்) கலந்து விடும். சுழிவிட்ட எழுத்து என்று கூறும் மௌனஎழுத்தால் முத்தி கூடும். சொரூப நிலை யில்லாத யிடமில்லாத இடத்தில் குடியமரலாம் என்று கூறும் பாடல் கண்டு இன்புறுக.

"காணுவது குருவினுட கருவைக் கேளு
கடையெழுத்துந் தலையெழுத்தும் அரிஓம்ப்பா
ஊணுவது குருவுக்கு அங்கி யூட்டு
உடலில் நடு மையமடா வாசி வீடு
ஆணுவது பெண்ணுமது ரெண்டு மொன்றாய்
அடங்கி நின்ற இடமல்லோ தங்கமாகும்.
வீணுமது சொல்ல விலை யிந்தஞானம்
வேதாந்தக் கொம்பு சுழி வெளி விட்டேனே" - 8
வெளிவிட்டு முப்பாழ் சென்றப்பா லேறி
விண்ணான பயிர்செய்து விளைய வைத்தால்
ஒளிவிட்ட ஓமென்ற எழுத்தினால்
உற்றந் துணை யொருவரில்லை உண்மையாகக்
கழிவிட்ட நாலதனில் ஒடுங்கு மாகிற்
கண்ணாடிப் பிர்மத்திற் கலந்து போகும்
சுழி விட்ட வெழுத்தினால் முக்தியேறும்
சொரூப நிலை யிலாத விடங்குடிய தாம் - 9

சுப்பிரமணியர் ஞானம் — 30.

சற்குருவின் நட்பு பெற்றால் அவரின் திருவருள் காட்சி கண்டு ஆசி பெறலாம். ஆயிரத்தெட்டிதழின் கமலமலரில் வடியும் அமுதம் உண்டு பசி தீரலாம். இறையருள் பெற்ற நீ தான் என்று குருவிருக்கும் சன்னதி வாசல் அடைந்து வாழ்த்தி துதித்து மோனநிலையுள்ள பரதத்தை அடைந்து ஆனந்தம் அடையலாம். அதனால் முத்தி பெற்று நீண்ட நாள் வாழலாம் என்பதை சித்தர் பாடல் கண்டு களியுங்கள்.

"தானவனாய் நின்று தவந் செய்ய வேணும்
சற்குருவின் தெரிசனத்தைக் காணவேணும்
பானமுத முண்டு பசி தீர வேணும்
பசியாமல் ஆயிரத் தெட் டிதழைப் பற்றிக்
கோனருளால் நின்றவனே நீதா னென்று
குருவிருக்கும் சன்னதியைக் குவிந்து போற்றி
மோன பர மானந்தந் தன்னில் நிற்கு
முத்தி யெனுந் தலத்தினிலே வாழலாமே" என்று கூறுகிறார்.

குருதரிசனம் மற்றும் குரு பதத்தின் தன்மையை கைலாய சட்டை முனிநாதர் வாத சூத்திர நூலில் பின்கண்டவாறு ஓதுவது அறியலாம்.

"தாளாமல் மதிகடந்தப் புறமே கேளு
சாற்றுகிறேன் குருபதத்தின் தன்மைதானே - 11
தன்மையென்ற குருபதந்தா மரைப் பூப் போலே
சகஸ்திரத் திரேட்டி தாய்நிற்கும் பாரு
வன்மை யென்ற நடுவே தான் வட்டமாக
வாகான ஐங்கோணம் நிற்கும் பாரு
உண்மை யென்ற நடுவே சிவசக்தி யொன்றாய்
உருவமற்று அருவமற்று ஒளியாய் நிற்கும்
கண்மை யென்ற ரவி கோடி காந்தியாகும்
கண்கூசுங் கண்கூசுங் காணுகாலே" - 12

"காணப்பா தத்துவங்கள் சூழ நிற்குங்
கைமுறையாய்த் தத்துவ தெரிசனையைப் பாரு
பூணப்பா ஞானத்துக்கு காதிபீடம்
போகுதடா அண்டமெல்லா முருவித்தாண்டி - 93.

கைலாய சட்டை முனிநாத சித்தர் வாத சூத்திரம் — 200.

முதல் இருவரிகளில் மதி மண்டலம் கடந்து அதற்கு மேல் என்னவென்று கேள். குரு பதத்தின் தன்னியல் பண்பினை கூறுகிறேன் கேட்பாயாக.

அடுத்துள்ள பாடலில் குருபதம் என்பது தாமரைப் பூப்போல் சகஸ்திரத்தில் பதினாறு இதழாக நிற்கும் உறுதியான நடுவேதான் வட்டவடிவமாகும். அதில் ஐங்கோணம் நிற்கும். அதன் நடுவே சிவனும் சத்தியும் உருமின்றியும், அருவமின்றியும் "ஒளிச்சுடராய் நிற்பர். கண்ணால் காண கோடி சூரியனை இணைய காந்த ஒளி வீசும். அதனைக்காண கண் கூசும். அது காண்பதற்கு கண்ணுக்கு வலிமை போறாது. அதனால் கண்கூசும்.

இடைக்காட்டு சித்தர் ஞான கக்கிசம் என்ற நூலில் குருவானவரே பூரணமான பிரமநிலை என்று கூறும் அற்புதப் பாடல் காண்க.

Koviloor Digital Library

"தானாகி யுள்ளமதே சோதியாகித்
தன்னொளிவாய் நின்ற பொருள்தான் தானாகி
வானாகி யுள்வொளிவாய் வாசியாகி
யுற்றகலை ரவி மதியாஞ் சுழினையாகி
நானாகி நானவனு மவன் றானாகி
நந்தி கொலு வாகி நின்ற நடுவுமாகிக்
கோனாகித் தானவனாய் நின்ற தீபம்
குருவான பூரணமாய் பிரம மாச்சே - 40.

இடைக்காட்டு சித்தர் ஞானகக்கிசம் — *80.*

இறையருளே தானாகி உள்ளத்தில் சோதி வடிவமாகி தன்னொளியாய் நின்று சுடர் விடும் பொருளாகி தானே தானாகி, விண்ணாகி, உள்ளொளியாய் வாசியாகி உகந்த கலையான சூரியனும் சந்திரனும் வன்னி சுழினையாகி, நானாகி நானும் அவனாகி நின்ற நடுவமாகி உயர்ந்த கோபுரமாய் தனியாகி நின்ற தீபம் அதுவே "குருவான பூரணமே" பரம்பொருளாய் நின்றது என்பதாம்.

கௌசிக முனிவர் எழுதிய ஞான சூத்திரம் என்னும் நூலில் பூரணமான இடம் சக்தி வடிவமாகும். நிலையான பூரணம் என்பது முப்பாழுக்கு அப்பால் கடந்து நீ நின்றால் விளங்கும் என்பதை எடுத்துக் காட்டி உண்மைக் கூறும் அகப்பாடலைக் காண்க.

"நீமப்பா பிரகாசிக்குஞ் சக்திரூபம்
நிலையான முப்பாழுக் கப்பால் நீயே - 29

நீ யறிந்து நிற்குணத்தின் குறியைக் காண
நிரா மயமே குருவாய் முன் பாகத் தோன்றித்
தூய வெளி நிர்த்தனத்தைத் தோனச் செய்வார்
சுத்த பிர்ம சற்குணமும் நீயே யாவாய்
தாயகமா யட்ட சித்தி மெய்யிற் காணும்
தானவே நீயாகிச் சுகிர்தனாவாய் - 30.

கௌசிக முனிவர் ஞான சூத்திரம் — *30.*

புரிய்டட நிலையில் முப்பாழ் என்ற நிலையுண்டு அது வெளிப்பாழ், வெளிஒளிப்பாழ், ஒளிப்பாழ் என்பர். இவைகளில் சக்தியின் வடிவம் பிரகாசிக்கும். நீ இந்த நிலைகள் நன்றாக அறிந்து நிற்குணத்தின் குறியை அறிய காண்க. அப்பொழுது எவ்வித மாயா சம்பந்தமிலாது சுத்த வெளியில் குருவாய் நம்முன்பாக தோன்றுவார். சுத்த வெளியின் நிர்த்தனத்தை தோன்றுமாறு செய்த போது நீயும் சுத்த பிர்ம சற்குணம் பெற்றவனாய். தாயகமாக விளங்கும் அட்டசித்திகள் தன் உள்ளத்தில் பதியும். தானவே அதுவாகி சுகமுடன் வாழ்வாயாக என்பதாம்.

அகத்தியர் எழுதிய பூசாவிதி என்ற நூலில் குருநிலையைப் பற்றியும் அதற்குரிய வழிபடும் மந்திரமும் கூறப்படும் பாடல் காண்க.

"போற்றியவர் தன்னிருகா லிடை பின்னாகப்
பூரணமாம் நந்திகுரு வொளியாய்க் காணும்
தேற்றியே "ஓம் - அங் - உங் - சிவாயநம வென்று
செப்பியே குருமூர்த்திதேவாய நம" வென்று மாறி
சாற்றியே பூசை செய்வா யுபசாரங்கள்
சதுராக மானதமா மவுனத் தூணி
சோற்றியமே வாராமல் தொண்டு பண்ணி
சொற்குருவா மவுனத்தைச் சொல் வோங்காணே
- 100.

"சொல்லாத மவுனத்தைச் சொல்வோ னாசான்
தொல் புவியிற் காரியகுரு ஆசானல்ல
யெல்லாத புரியட்டங் கண்டந் தன்னில்
இதமாக யிருத்தியே யூறும்போது
சொல்லாத பூரணந்தா "னாலு"மேலாய்ச்
சென்றேறும் பரமட்டுங் கொண்டு தாக்கி
மல்லாத ராசகுரு சற்குருவாய் வந்து
மவுனத்தை வைத்திட்டால் மனமொன்றாமே" 101

"ஒன்றான மனமல்லோ சற்குருவின் பூசை
ஒருகோடி தவஞ் செய்வோர் தமக்கு வாய்க்கும்
நன்றான ஆத்தும தத்துவமிருபத்து நாலும்
நலமான குருவுக்குத் தோற்றப் பண்ணும்
சென்றாடும் வாசியிலே சின்மயத்தில்
தேவியாய் மனங் குளிரப் பூசை பண்ணு
கன்றானமற் பின்கலையிற் பிதிர் சூட்சஞ்செய்வாய்
காரணமாம் நந்திகரு வாகுங்காணே" - 102.

அகத்தியர் பூசாவிதி — *200*

பாடல் எண் நூறில் பூரணம் என்னும் ஞான நிறைவு கொண்டது. அந்தயிடத்தில்

Koviloor Digital Library

நந்தி குரு ஒளிவடிவாய்க் காட்சி தருவார். அவரின் திருவடியைப் பற்றி போற்ற கலையான இடையும் பின்னயும் கொண்டு தேற்றி "ஓம் — அங் — உங் — சிவாயநம குரு மூர்த்தி தேவாய நம" என்று ஓதிவழிபாடு செய்யும்போது அவருக்குரிய உபசார அம்ஸ பொருள் வைத்து மானதமாக மவுனத்தில் இருந்து வணங்கினால், ஒரே மனதாயிருந்து தொண்டு செய்து சொல்லும் குருவாயிருந்து மவுன மென்ற மூலத்தை சொல்வார் என்பதாம்.

பாடல் என் 101இல் சற்குருநாதன் சொல்லாத மவுனத்தைச் சொல்வோன் ஆசானாவான். இவ்வுலகில் காரியகுரு ஆசானல்ல. புரியட்டம் என்ற தொடரில் இதமாக செல்லும் போது சொல்லப்படாத பூரணத்திலுள்ள நான்கு அடுக்கு நிலையின் மேல் சென்று பரம் என்ற மட்டும் கொண்டு ஏறினால் அரச குருவாக வீற்றிருக்கும் சற்குருவாய் வந்து சின்முத்திரையை மவுனத்தின் மூலம் அருளுரை எடுத்துக்காட்டி மவுனத்தைப் பெற்றால் மனமொன்றிப் போகும்.

பாடல் என் 102இல் ஒன்றுபட்ட மனமே சற்குருவின் வழிபாடாகும். அவ்வழிபாட்டால் ஒருகோடி தவஞ் செய்வேர் தமக்கு வாய்க்கும் ஒன்றாக உள்ள ஆத்மா தத்துவம் இருபத்தி நாலும் நலமாக குருவும் தோற்றசெய்து தெரி— விப்பார். வாசிமூலம் செல்லும் போது சின்மயத்தில் தேவியான பூரணியை மனகுளிரும்படி வழிபடுக. வெறுக்கமால் பின்கலையைக் கொண்டு சூட்சமத்தை அறிந்து காரணமாம் நந்திகரு தோன்றி அருளுரை பெறுவது காண்க என்ற ஓதப்படுகிறது.

ஈசனே குருவாய் வருதல்

அகத்தியர் பூசா விதி யென்னும் நூலில் ஈசனே குருவாக வந்து மேல்நிலைக்கல்வி வழங்குவார் என்று கூறுப்படுகிறது. அகத்தியர் கூறும் பாடல் காண்க.

"வாறாக அருபமே சொருபமாக
மவுனநந்தி பிரகாச மொளிக் குள்ளாகக்
கூறாகக் குருமவுனங் குருநாதன் தான்
கூத்தான அம்பலத்தில் மாறியாடி
வேறாக உபதேசகுரு போல் வந்து
வெளி வொளிக்குள் வார்த்தை சொல்வார் - வேண சித்தி
ஆறாக பெருகுமடா அட்டகர்மம்
அப்பனே வாய்ப் பேச்சா லறையலாமே - 130

ஆமப்பா குருவுக்குத் திரி நேத்திரங்கள்
அப்பனே காளகண்ட மான் மழுவினோடு
தாமப்பா புலித்தோலா லாடை சாத்தி
தந்தியுட தோல் போத்திக் கண்டந்தன்னில்
வாமப்பா அரவணிந்து விபூதி சாத்தி
மாது சிவகாமியொரு பாகராகி
ஓமப்பா ரிஷபவா கனத்திலேறி
இச்சை பெறச் சொரூப சித்தி கொடுத்தாழ்வாரே - 131

அகத்தியர் பூசாவிதி — 200.

இந்தப் பிறவியில் எடுத்த தேகம் ஐந்தாகக் கூறப்படுகிறது. இருள் தேகம், மருள்தேகம், சுத்த தேகம், பிரணவ தேகம், ஞானதேகம் என்பர். இருள் தேகமும், அருள்தேகமும், விலக்கி சுத்த தேகம் பெற வேண்டும். இந்த தேகம் வடிவம் அதாவது உருவம் தெரியும். இந்த தேகத்திலிருந்து மேனிலை பெற்றால் அருஉருவதேகம் வரும். இந்த தேகம் கண்ணுக்கு தோன்றியும் தோற்றாமலும் இருக்கும். இந்த தேகம் மேன்நிலைக்குச் செல்ல ஞானதேகம் பெறுவார்கள். இந்த நிலையை குறிக்கும் பாடல் 130இல் அருவ உடல் சொரூபமாகும் என்று கூறுவது மவுனநந்தியின் பிரகாசம் அருப உடல் பெற்றால் சொரூப சித்தி பெற்று பயன்பெறுவார்கள். இப்படி கூறப்படும் மவுனகுருவான குருநாதன் தான் அம்பலத்தில் கூத்தாடி வேறுவிதமாக செவியுரை செப்பும் ஆசானாக வந்து வெளிவொளி என்ற இடத்தில் அருளுரை செய்வார். வேண்டிய சித்தியும் வழங்குவார். அட்டகருமம் என்னும் வாய்ப்பு ஆறாக பெருகி தம்மிடத்தில் சேரும். இதுவாய்ப் பேசாமல் தொழிற்படும்.

குருவாக வரும் வடித்திற்கு முக்கண்கள், கறுத்த கண்டம், மான், மழுவு, பெற்று தேகத்திற்கு புலித்தோலாடை சாத்தி,


Koviloor Digital Library

யானையின் தோல் போத்திக் கொண்டு, கழுத்தில் பாம்பணிந்து உடல்முழுவதும் விபூதி சாம்பல் பூசி மாது சிவகாமியுடன் மாடு வாகனத்தில் அமர்ந்து சிவயோகியின் விருப்பத்தை நிறைவேற்ற சொரூப சித்தி கொடுத்து அருள்வார் என்பதாம். சொரூப சித்தி என்பது வான்வடிவமாகும்.

திருமூலர் திருமந்திரத்தில் சிவமே குருவாக வந்து செவியுரை செப்பி அருளுவார் என்பதை ஓதும் திருமந்திரம் காண்க.

"குருவே சிவ மெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாயக் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்ற தோர் கோவே - 4581

நந்தி என்பவர் ஸ்ரீகண்ட உருத்திரர் ஆவார். அவருக்கு நந்தி என்பர். அவரின் அருளுரையின்படி சிவபெருமானே குருவாக வந்து அருள்கிறார். சிவமே குருவென்பது அறியார். குருசிவமே சிவனுமாய் கோனுமாய் தோன்றுவார். குருவின் அருளுரை மௌனம் உணர்த்தி சின்முத்திரையின் மூலம் அறிவிக்கும் அருள் மிகுந்த உயர்ந்த இறைவனாவான் என்பதாம்.



சாகாத கல்வி அருள் உலகில் மரணத்தை வெல்ல முடியும். இருள் உலக கல்வி கற்கும் அனைவரும் மரணத்தை தடுத்துக் கொள்ள முடியாது. இருள் உலகக்கல்வி முக்தி தராது. ஒளி உலகக் கல்வி கர்ம சித்தி, யோக சித்தி, ஞான சித்தி தரவல்லது. இருள் உலக கல்வியாளர்கள் குருவின் நிலையற்றவர்கள். ஒளி உலக குருவின் நிலை மேன்மையும் பெருமையும் உடையது.

"அறிவை நீ அறிந்தாலே பிறவி போச்சி
அடுத்தாப் போல் பரமபதம் நிலையாச்சு"

- கொங்கண சித்தர்

"மனிதானாய் பிறந்தாக்கால் சாகாக்கல்வி
வாசிக்கும் சிவமோடு வாழ்க்கை சேர்வான்"

- அகத்தியர்

சாகாக் கல்வியில் வேகாதலையும் சாகாக்காலையும் போகபுனலையும் எடுத்துக்காட்டி செவியருளுரையும் உரைப்பவனே சற்குரு நாதனாவான். அவனே ஞானகுரு சிவமேயாம்.

சிவகுருவின் அருளே சிவ யோகம்
சிவ குருவின் கல்வி நிற்குண போதம்
சிவ குருவின் பூரணமே சாகாக்கல்வி
சிவகுருவின் பீடமே மான ஞானம்
சிவ குருவே சிவாய குரு பரமகுரு
சிவமே சிவாய குரு தேசிகனாம்

சிவகுரு என்பவர் சகல உயிர்களில் தான் தானாய் யும் பரவி நின்று அருள்பவரே சற்குருநாதன் என்பார். அநத குரு மனிதர்களை ஒழுக்கத்தில் நெறிப்படுத்தி உன்னத நிலைக்கு வழிநடத்தி, மரணத்தை வெல்லும் மார்க்கத்தை தெரி—வித்து அருள்புரிபவனே சற்குருநாதன் என்பதை மக்கள் உணர்ந்து சாகாமல் இருக்கும் கல்வியைக் கற்று அதில் பூரண ஞானம் பெற்று ஒளி தேகம் பெற்று திகழும் உன்னத கலையே சாகாதகல்வி என்ற நல்ல செய்தியை அன்பு கொண்டு தனிமனிதன் நற்குருவைத் தேடி பயின்று நன்நிலை பெற்று இறையருளில் கலக்க இறைவன் துணையை வேண்டி அருளி வணங்கி இந்த அருமையும் பெருமையும் மிக்க நற்செய்தியை நலமோடும் வளமோடும் வாழ்க என்று கூறி இனிதாக முடிவடைகிறது.

அன்பே சிவம்! சிவமே குரு சிவம்!

திருச்சிற்றம்பலம்!

Koviloor Digital Library

3. சித்தர்கள் நிலை அடையும் சீரான மார்க்கம்

சித்தன் போக்கு சிவன் போக்கு என்று கூறுவர். சிவனும் சித்தனும் ஒரே நிலையில் உள்ளவர்கள் என்பதால் அவ்வாறு அவர்களை அழைக்கப்படுகிறார்கள். சித்தர்களை சிவசித்தர்கள் என்றும் கூறுவர். இதனை திருமூலர் தமது திருமந்திரத்தில்,

"பத முத்தி மூன்றும் பழுதென்று கைவிட்
டித முற்ற பாச இருளைத் துறந்து
மத மற்றெனதயான் மாற்றிவிட் டாங்கே
திதி முற் றவர்கள் சிவ சித்தர் தாமே" - 2525

"சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்
சுத்தாசுத் தத்துடன் தோய்ந்துந்தோ யாதவர்
முத்தா முத்திக்கு மூலத்தர் மூலத்துச்
சத்தர் சதாசிவத் தன்மையா தாமே" = 2526

என்று திருமூலர் தமது திருமந்திரம் — 3000த்தின் கண்டு இன்புறுங்கள்

இனி சித்தர்கள் எப்படி இருந்தவர்கள் என்பதையும், எவ்வாறு சித்தர்களாக உருவானார்கள் என்பதைப் பற்றியும், அவர்கள் எந்த நிலையில் இருந்தால் சித்தர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள் என்பதையும், மேலும் அவர்களின் கடினமாக உழைத்தார்கள் என்பதையும் ஆராய்வோம்.

சித்தனாவதற்கு வழி என்ன:

தனிமனிதன் ஆண் அல்லது பெண் சித்தனாகத் திகழ வேண்டுமென்றால் சாகாத கல்வியை தன் அறிவு கொண்டு கடின உழைப்பால் முயற்சி செய்யவேண்டும். தன்னறிவு பயன்படுத்தி, தன்னை அறிந்து சாகாத கல்வி நிலையை முழுமையாக அறிதல் வேண்டும். அதன் கல்வி வழிமுறைகள் தெரிந்துக் கொள்ளவேண்டும். அதற்கு தீவிர முயற்சியும் கடின உழைப்பும் தேவை. இதில் சோம்பல் கூடாது என்றும் இயற்கையாகிய சுத்த அருளான முன்னிலையில் தீவிர தியானம் வேண்டும். நாள்படி நாள்பட்ட அதனைப் பழக்கப்படுத்தல் வேண்டும். இதிகாச புராணங்கள் வேதங்கள் முழுமையாகத் தள்ளிவிட்டு சித்தர்கள் நூல்களில் மறைந்துக் காணப்படும் சாகாத கல்வி செய்திகள் முழுமையாக அறிதல் வேண்டும். அப்பொழுது தான் சித்தனாவதற்கு வழிகள் தன்னறிவில் தோன்றும். அதற்கு உறுதியான மனம் வேண்டும். சிதறா சிந்தனை வேண்டும். புறவியல் கல்வியைத் தள்ளி விட்டு அகவியல் கல்வியான சாகாத கல்வியை ஓத வேண்டும். அதற்கு சித்தர்களின் அருளை நோக்கியும், இயற்கையின் அருளை நோக்கியும் என்றும் மௌன நிலையில் விழிப்புணர்வுடன் இருந்தால் ஒவ்வொரு தனி மனிதனான ஆண்,பெண் வித்தியாசமின்றி சித்தர் நிலை பெற அருளின் உதவிகள் தமக்கு கிட்டும். இனி இந்த செய்திகளுக்கு உதவியாக இருக்கும் சித்தநூல்களை நாடி ஓத வழிஅறிய முயற்சிப்போம்.

ஆண் அல்லது பெண் சித்தர் நிலை அடைய பஞ்சகணம் என்ற செய்தி ஐந்து உண்டு. அகாரம் என்ற செய்தியை அறிந்து ஓர் ஆண்டு கற்க வேண்டும் உகாரம் என்ற செய்தியையும் ஓர் ஆண்டு கற்க வேண்டும். மேற்கண்டபடி படியாகக் கூறிய சக்தியும் சிவத்தையும் முடிந்த பிறகு மோனம் என்ற மௌன செய்தியை மகாரம் என்ற செய்தியில் தீவிரமாக முனைந்து கற்க வேண்டும. அதன் பின் சிகாரம் என்ற செய்தியை தீவரமாக கற்க வேண்டும். அதன்பின் பூரணம் என்ற செய்தியை அறிந்து ஓர் ஆண்டு அதன் கல்வியைக் கற்க வேண்டும்.

அப்படி கற்றுக் கொண்ட ஆண் அல்லது பெண் இவர்களின் குடிலம் என்ற

Koviloor Digital Library

ஊனுடல் அழிவதிலிருந்து தடுக்கப்படுகிறது. அதன்பின் சிவராஜயோகம் என்ற செய்தியை கற்க வேண்டும். அது 'வங்' என்ற மந்திரத்துடன் வாசியை உள்ளுக்கு வாங்க வேண்டும். பின் அதனை 'சிங்' என்ற மந்திரத்துடன் மேல்வாசலுக்கு உயர்த்தல் வேண்டும். அவ்வாசியை கண்டத்தில் 'அங்' என்ற மந்திரத்துடன் ஒட்ட வேண்டும். அதனால் ஈறாறு என்று கூறும் ஆதாரங்கள் அடங்கிவிடும். அவ்வாறு செய்யும் நபர்களுக்கு வில் வளைத்து கரம் வலுவடைந்தால் மெய்ஞ் ஞானம் என்ற தீபத்தின் திருவடியைப் பார்ப்பார்கள் என்னும் பெண்சித்தர் திலேத்தமை ஞான சுருக்கம் என்னும் சிறு நூலில் கூறுகிறார் அதனை இங்கு தருகிறோம்.

"சித்ததனா யாவதற்கு வகையைக் கேளு
சிவசிவ பஞ்சகண மென்றஞ்சுண்டு
அத்ததனடா அகார மதை ஆண்டு சேவி
அரகரா உகார சக்தி அன்பாய்ச் சேவி
முக்தி பெறச் சக்தி சிவம் முடித்த பின்பு
மோனமுடன் மகார மதை முனைந்து சேவி
வெத்தி பெற வேணுமென்றாற் சிகாரந் தன்னை
விரும்பி மன பூரணத்தைத் தினமுங் கொள்ளே"

- 10.

"கொள்ளவே பூரணமே ஆண்டு சென்றாற்
குடிலமென்ற சடத்திற்கு அழிவே யில்லை
மெள்ளவே வங்கென்று வாசி வாங்கி
மேல்வாசல் தனக்குள்ளே சிங் கென்றேத்து
அள்ளவே கண்டத்தில் அங் கென்றோட்ட
அரகரா யீராறும் அடங்கும் வீட்டில்
விள்ளவே வில்வளைந்த கரம் பெலத்தால்
மெய்ஞ்ஞான தீபத்தடி தான் பாரே - 11

திலோத்மை ஞானச் சுருக்கம் — 27.

ஒருவன் சித்தனாவதற்குரிய வழியை பெண் சித்தர் திலோத்தமை அம்மையார் வழி கூறியுள்ளார்கள். அவர்களைப் பின்பற்றி ஒழுகினால் மேன்மையுறலாம்.

ஆதியில் சித்தர்களின் எண்ணிக்கை:

ஆதி என்பது முதல் முதலாம் காலக்கட்டத்தில் ஒருவர் இருந்தார். அவர் சிவகுரு தட்சணாமூர்த்தி என்பர். அவர் தான் முருகன் என்பர். மும்மூலம் முதல் முதலில் கண்டு அதில் நுழைந்து மறுபிறப்பு எடுத்து மரணமில்லா பெருவாழ்வு பெற்றவர். அவருக்கு கந்தன் என்ற பெயரும். சாவிலிருந்து மீண்டதால் சாமி என்ற பெயரும் ஏற்பட்டது. இதற்கு உதாரணம் காட்ட வேண்டுமென்றால் தண்டாயுதபாணி சாமி எனலாம். இவருக்கு குருபரன் என்ற பெயரும் உண்டு. சிவாய குரு என்ற பெயரும் உண்டு. இவருக்கு நாதாந்தக் கடவுள் என்ற திருப்பெயர் என்றும் கூறுவார்கள். தென்பகுதியில் எப்பொழுதும் குடிக்கொண்டதால் இவருக்கு தட்சணாமூர்த்தி என்ற திருநாமம் உண்டு. இப்பொழுதுள்ள கன்னியாகுமரியின் தென்பகுதியில் இருந்தவர் என்பதை குறிக்க இவருக்கு அப்பெயர் உண்டு.

தட்சணாமூர்த்தி என்ற பெயரில் அகத்தியரும் இடம் பெறுகிறார். இவருக்கு தட்சணாமூர்த்தி இரண்டாவது என்று கூறுவர். அதே பெயரில் இவருக்கு பின் இயற்பெயர் கொண்டவரும் உண்டு. அவருக்கு தட்சணாமூர்த்தி மூன்று என்றும் கூறுவர்.

ஆதிகுரு தட்சாணமூர்த்தி தான் சித்தர் கணம் (அ) வர்க்கம் உண்டாக்கக் காரணமாய் இருந்தவர். இவர் தான் முதன்முதலில் சாகாக் கல்வியை தனது முதன் மாணவனான குருமுனி அகத்தியருக்கு கற்பித்த பின் அடுத்து நால்வரான ஜனகாதி மாணவர் நால்வருக்கு சாகாத கல்வியைக் கற்பித்தார். அதன்பின் மற்ற நால்வரான திருமூலர் மன்றுதொழுத பதஞ்சலி சிவயோக மாமுனி வியாக்ரமர் ஆக நால்வருக்கு சாகாத கல்வியைக் கற்பித்தார் என்பது சித்தர் நூல்களில் காணப்படும் செய்தியாகும் இந்த ஒன்பது பேரும் சாகாத கல்வி முதலில் பெற்றபின் இவர்கள் மூலகோடியாக பெருகி நவகோடி சித்தராச்சு என்று சட்டைமுனி கற்பம் என்ற நூலில் காணப்படுகிறது. இதனைக் காண்க.

Koviloor Digital Library

"கோனென்ற ஆதிமுத லொன்பது பேர்சித்தர்
கோடியாய் நவகோடி சித்த ராச்சே
கயலாய சட்டை முனிநாதர் கற்பம் — 100

காணப்பா போகருட மரபை கேளு
கலந்த யெம கூடமென்ற மலையில் வாசம்
பூணப்பா மூலவர்க்கம் கோடி கோடி
பொற் சிலை போற் சித்தர்களும் கோடி கோடி
ஊணப்பா வருண நிறம் கோடா கோடி
யுத்தமனே சங்கு நிறம் கோடா கோடி
தோனப்பா மலை தோறுஞ் சித்தர் கோடி
துகையில்லை பூரணத்திற் சொக்கினாரே - 208

கைலாயநாத சட்டைமுனி ஞானம் — 100

மேலும் அகத்தியர் தம் நூலான தத்துவம் என்பதில் கூறும் செய்தியும் காண்க.

"ஆச்சப்பா யிருபத்தி அஞ்சு சித்தி
ஆச் சென்ற தெட்சணா மூர்த்திதானும்
பேச்சப்பா யென்னுடனே நால்வரும்
பேராகுமா தியிலே யுபதேசித்தார்
நீச்சப்பா நல்வரும் மொன்பது பேராச்சு
நிலையான ஒன்பதிலும் நவகோடியாச்சு
வாச்சப்பா சித்தியெல்லா மடைந்தபேர்கள்
மனிதனல்ல தெய்வமா மக்காள் பாரே - 13.

அகத்தியர் தத்துவம் — 300.

சித்தர்களின் நூல்களிலிருந்து தெரிய வந்த செய்திகள் தெரிவித்துள்ளோம். மேலும் கூடுதல் செய்தியை சில சித்தர்களின் பாடல்கள் மூலம் அறிக.

"ஆகமாய் பாடு முன்னே நவசித்தாதி
அதன்பிறகு நவகோடி கோடா கோடி"

புலிப்பாணி பூஜாவிதி — 50.

"ஆச்சப்பா திருமூலர் வர்க்கம் மெத்த
அங்கங்கே மூலகுரு வர்க்கங் கோடி" - 49

என்று தேரையர் பூஜா விதி 75இல் ஓதப்படுகிறது.

யுகந்தோறும் பெருகி வரும் சித்தர் கூட்டம்:

கடந்த கிரத யுகஞ் சித்தர்களின் கூட்டம் இரண்டு இலட்சம் கோடியாம். அடுத்து வந்த தேரேதா யுகத்தில் ஒரு இலட்சம் கோடியாகும். அதற்குப் பின் துவா பரத்தில் ஐம்பதாயிரம் இலட்சம் கோடியாம். இந்த கலியுகத்தில் இருபத்தைந்தாயிரம் இலட்சம் கோடியாம் என்று தேரையர் என்ற சித்தர் தமது பூஜா விதி 75இல் ஓதும் பாடல் காண்க.

"பாரப்பா கிரேத யுகஞ் சித்தர்ப்பா
பலமான பெருகினுட கணக்கைக் கேளு
நேரப்பா கோடியடா ரண்டு லட்சம்
நிலையான தேரேதயுகம் லட்சம் கோடி
தூரப்பா துவா பரத்திற் கோடி கேளு
தூக்கா தைம்ப தென்ற ஆயிரந்தான்
காரப்பா கலியுகத்தில் கோடி கேளு
கணக்கிருப்பத்தைய்யாயிரம் தான் பாரே - 70.

தேரையர் பூஜா விதி — 75.

சித்தர்கள் பெற்ற சித்திகள் யாது:

சித்தர்கள் பெற்ற சித்திகள் மொத்தம் இருபத்தைந்தாகும் என்று அகத்தியர் தத்துவம் என்னும் நூலில் காணப்படுகிறது. அதனை இங்கு காணலாம்.

1. சிவ தீட்சை சித்தி
2. சக்தி தீட்சை சித்தி
3. மந்திர சித்தி
4. மோன சித்தி
5. வேதாந்த சித்தி
6. சித்தாந்த சித்தி
7. காயத்திரி சித்தி
8. எட்டெழுத்து சித்தி
9. ஐந்தெழுத்து சித்தி
10., ஆதார சித்தி
11. பிரசாத சித்தி
12. யத்வாத சித்தி
13. தத்துவ சித்தி
14. தத்துவ பிரசாத சித்தி
15. சர்வதயாபர சித்தி
16. காய சித்தி
17. சொரூப சித்தி

Koviloor Digital Library

18. குளிகை சித்தி
19. வாத சித்தி
20. யோக சித்தி
21. ஞான சித்தி
22. போத சித்தி
23. பிரசாத சித்தி
24. சாம்பவி சித்தி
25. பரப்பிரம சித்தி என இருப்பத்தைந்து சித்திகள் என்று கூறும் பாடல் காண்க.

"சித்தி செய்த சித்தருக்குச சித்த ரென்ற நாமம்
செப்பு வதேன் சிவதீட்சை பத்தும் சித்தி
முத்தி சக்தி தீட்சை பத்துஞ் சித்திமந்திரம்
மோன சித்தி வேதாந்தஞ் சித்தாந்தஞ் சித்தி
சத்தி காயத்திரி யெட்டஞ் செழுத்துஞ் சித்தி
தார சித்தி பிரசாத சித்தி யத்வாத சித்தி
தத்துவத்தின் சித்தியொடு தத்துவம் பிரசித்தி
சர்வதயா பரசித்தி காய சித்தி தானே - 11
தானென்ற சொரூப சித்தி குளிகை சித்தி
தனிவாத சித்தியுடன் யோக சித்தி
கோனென்ற ஞான சித்தி போத சித்தி
கொடிய பிரசாத சித்தி சாம்பவத்தின் சித்தி
தேனென்ற பரப்பிரம சுத சித்தி
செப்பாதே இருபத்தி அஞ்சு சித்தி
வானென்ற சித்தியெல்லாம் வந்த பேர்க்கு
மகத்தான சித்தரென நாம மாச்சே - 12

அகத்தியர் தத்துவ ஞானம் — 300.

சித்தர்களின் காப்புப் பாடல்

நந்திய கத்தியர் மூலர் புண்ணாக்கீசர்
நற்றவத்துப் புலத்தியரும் பூனைக் கண்ணர்
கந்திடைக் காடரும் போகர் புலிக்கையீசர்
கருவூரார் கொங்கணர் காலாங்கி யன்பிற்
சிந்தி லமு கண்ண ரகப்பையர் பாம்பாட்டி
தேரையருங் குதம்பையருஞ் சட்டை நாதர்
செந்தமிழ்ச் சீர் சித்தர்பதி ணென்பேர் பாதம்
சிந்தையில் உண்ணி சிரந்தாழ்த்தி துதிப்போம்

அகத்தியர் பரிபூரணம் — 1200.

இதில் குருநந்தி — அகத்தியர் — மூலர் — புண்ணாக்கீசர் — புலத்தியர் — பூனைக் கண்ணர் — இடைக்காடர் — போகர் புலிக்கையீசர் — கருவூரார் — கொங்கணர் — காலாங்கி அழுக்கண்ணர் — அகப்பையர் — பாம்பாட்டி — தேரையர் குதம்பை — சட்டை நாதர் — இவர்களை நாம் வணக்கம் என்று கூறுவோர்.

திருமூலர் காலாங்கி போகர் நாதர்
தென்பொதிகை குருமுனி தன்வந்திரி
கருவூராரிடைக் காடர் அத்திரி
கலைக் கோடர் மச்சமுனி புலத்தியரே - 2
சுந்தரானந்தர் கபிலர் கொங்கணர்
சூதமுனி கௌசிகர் வேதமுனி
நந்தீசர் சட்டைமுனி தன்னை
நான் தொழுதே னடித்தான் பணிந்தேன் - 3

மச்சேந்திர நாதர் பாடல் — 33

திருமூலர், காலாங்கி, போகர், குருமுனி, தன்வந்திரி, கருவூரார், இடைக்காடர், அத்திரி, கலைக்கோடர், மச்சமுனி, புலத்தியர், சுந்தரானந்தர், கபிலர், கொங்கணர், சூதமுனி, கௌசிகர், வேதமுனி, நந்தீசர், சட்டைமுனி ஆக இவர்களைப் பணிந்து வணங்குகிறேன்.

காப்பான கருவூரார் போகநாதர்
கருணையுள்ள அகத்தீசர் சட்டைநாதர்
மூப்பான கொங்கணர் பிரம சித்தீர்
முக்கியமாம் மச்சமுனி நந்தி தேவர்
கோப்பான கோரக்கர் பதஞ்சலி யார்
கூர்மையுள்ள இடைக்காடர் சண்டிகேசர்
வாபபான வாதத்திற்கு காதியான
வாசமுனி கமலமுனி காப்புதானே - 2

உரோம மாமுனி பூஜாவிதி — 7

கருவூரார், போகநாதர், கொங்கணர், பிரமசித்தர், மச்சமுனி, நந்தி தேவர், கோரக்கர், பதஞ்சலியார், இடைக்காடர், சண்டி கேசர், வாசமுனி, கமலமுனி ஆக இவர்கள் எம்மை காக்க வேண்டுமென்று வணங்கி தொழுது கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆனந்தமான சிவம் நந்தி மூலர்
அருள் பெருகுங் குருமுனி கோரக்கர்
தானந்த மாமச்சர் கொங்கணற்குத்
தயா போக ரிடைக் காடரோடு
வாந்த மாகும் புண்ணாக்கு சித்தர்

Koviloor Digital Library

வாசமுனி கமலமுனி சண்டி கேசர்
கானந்த சுந்தரனந்தர் பிரமர்
கயிலாசச் சட்டைமுனி பாதங்காணே - 1

தானென்ற கருவூரார் கொங்கணற்கும்
சமர்த்தான உரோமருட பாதந்தானே - 2

கடைப்பிள்ளை ஞானம் — 16

சிவம், நந்தி, மூலர், குருமுனி, கோரக்கர், மச்சர், கொங்கணர், போகர், இடைக்காடர், புண்ணாக்கு சித்தர், வாசமுனி, கமலமுனி, சண்டிகேசர், சுந்தரானந்தர், பிரமசித்தர், கைலாயச் சித்தர், சட்டைமுனிநாதர் இவர்களுடன் கருவூரார் உரோமருடன் திருவடிகள் எம்மை காப்பாக காத்தருளும்படி வேண்டுகிறேன்

பார்த்திடவே நந்தீசர் மூல மூர்த்தி
பண்பான அகத்தீசர் சட்டை நாதர்
கோர்த்திடவே பதஞ்சலியுங் கூணர் கண்ணர்
கோரக்கர் கமலமுனி சண்டிகேசர்
கூர்த்திடவே இடைக்காடர் சிவாய சித்தர்
கொங்கணரவர் தந்தை போக நாதர்
கார்த்திடவே மச்சமுனி புணாக்கீசர்
காலங்கி சுந்தரரும் காப்புதானே

அகத்தியர் தீட்சா விதி — 26.

நந்தீசர், மூலமூர்த்தி, அகத்தீசர், சட்டைநாதர், பதஞ்சலி, கூன்கண்ணர், கோரக்கர், கமலமுனி, சண்டிகேசர், இடைக்காடர், சிவாய சித்தர், கொங்கணர் அவர் தந்தை போகர், மச்சமுனி, புண்ணாக்கீசர், காலாங்கி, சுந்தரரும், ஆக இவர்கள் காக்க பணிகிறேன்.

சித்தர்கள் சாகாவரம் பெற்றவர்கள்:

சச்சிதானந்த சித்தர் சுழிமுனை ஞானமென்னும் சிறுநூலில் சித்தர் சாகாத கல்வி கற்று சாகா வரம் பெற்று முத்தியும் சித்தியும் பெற்றவர்கள் என்று செப்புகிறார். அதுபோல் பலகோடி சித்தர் சாகாமல் பூரணத்தில் வாழ்கிறார்கள் என்றும் கூறுகிறார்.

கருவூர ரென்னைப் பெற்ற போக நாதர்
காட்சியாம் பதினெட்டுச் சித்தர் கண்டாம்
ஒரு கோடி சித்தருண்டு அவர்கள் பேரை
ஒகோ கோ எழுதிடவே யடங் காதையா
தருவான சிவயோகந் தன்னைப் பார்த்துத்
தவத்திலே மிகுந்து மகத்துடை யோராகித்
திருவான பூரணத்தைத் தெரிசித்தே தான்
சித்தி முத்தி பெற்றிரு வாதிருக்கின்றாரே - 20

சச்சிதானந்தர் சுழிமுனை ஞானம் — 31.

கருவூராரை பெற்றவர் போகநாதர் போன்ற சித்தர்கள் பதினெட்டுச் சித்தர்க்ள உட்பட ஒருகோடி சித்தர்கள் உண்டு. அவர்களின் திருப்பெயர்கள் கணக்கிட்டு அறியமுடியாது. இவர்கள் அனைவரும் சிவயோகம் அக அனுபவத்தில் செய்து தவத்திலே மிகுந்து மகத்துவம் பெற்றவர்கள். அவர்கள் அனைவரும் திருவான பூரண நிலைப் பெற்று அதனை அறிவால் காட்சி பெற்று முத்தியும் சித்தியும் பெற்று சாகாமல் இன்னும் வாழ்ந்து வருகிறார்கள் என்று ஓதுகிறார்.

சித்தர்கள் எதை நீக்கி எதை தள்ளிச் சித்தராகிறார்கள்:

அகத்தியர் தாம் எழுதிய சௌமிய சாகரம் என்னும் நூலில் ஞானியென்றும் சித்தர்கள் என்றும் கருதப்படுகிறார்கள் என்பதை கூறுவதைக் காண்க.

"கேளப்பா அயன் மாலின் திரையறுத்து
கிருபை யுள்ள ருத்திரன்தன் திரையை நீக்கி
ஆளப்பா மயேஸ்வரன்தான் திரையை தள்ளி
அதன்மேலே சதாசிவன் தன் திரையை கட்டி
சூளப்பா ஐம்புலனைச் சுட்டுத் தள்ளிச்
சுக சீவ பிராண மயத்தோடிருந்து
காலப்பர் செவி விழியுங் கடந்தப் பாலே
கருணையுடன் தானிருப்பார் ஞானிதானே - 101.

அகத்தியர் சௌமிய சாகரம் — 1200

சித்த ஞானிகள் புருவநடுவிலிருந்து திரைகள் இருப்பதாகக் கூறுகிறார்கள். முதல் திரையான அயனின் திரையை விலக்க வேண்டும். அதன் பின் மாலின் திரை விலக்க வேண்டும். அதன்பின் ருத்திரன் திரையை விலக்க வேண்டும். அடுத்து சதாசிவன் திரை கடக்க வேண்டும். ஐந்து புலன்களையும் சுட்டுத் தள்ள

Koviloor Digital Library

வேண்டும். சுகசீவ பிராணாயம் என்று கூறப்படும் சிவராசயோகத்தோடுருந்து காலத்தால் செவியும் விழியும் கடந்து நின்று கருணையோடும் அருளோடும் இருப்பவர்களே சித்த ஞானியாவார்கள்.

மேலும் அகத்தயர் பரிபூரணம் என்னும் நூலில் சித்தர் நிலைபெற வேண்டுமென்றால் விந்து என்ற பொருளின் மூலத்தை வேகாத சிந்தனையால் கட்டி நிறுத்தியவன்தான் சித்தனாவான் என்கிறார்.

"சித்தி பெற விந்து நிலை மூலந் தன்னை
சிதறாமல் கட்டினவன் சித்தன் சித்தன்" - 92

அகத்தியர் பரிபூரணம் — *1200.*

மேலும் பாம்பாட்டி சித்தர் தம் பாடலில் ஆயிரட்டிதழ் மலர் கொண்ட வீடு தன்னில் அமர்பவனே சித்தன் என்றும், அண்டங்கள் தோரும் பரவிநிறையுடன் நிற்பவனே சித்தர் என்றும், காயமற்ற சோதியாக வளர்ந்தோங்கி நிற்பவன் காரணசித்தன் என்றும், கண்ணொளி போல் ஒளிர்பவன் என் நீ ஆடும் பாம்பே என்று ஓதுகிறார். அப்பாடல்

"ஆயிரத் தெட்டிதழ் வீட்டி லமர்ந்த சித்தன்
அண்டமெல்லாம் நிறைந்திடு மற்புத சித்தன்
காயமில்லா தோங்கி வளர் காரண சித்தன்
கண்ணுள் வொளியானனென்றாடாய் பாம்பே
- 103

பாம்பாட்டி சித்தர் பாடல் — *129.*

கருவூரார் தச தீட்சை என்னும் நூலில் 'மா' என்னும் எழுத்தை மகிழ்ந்து ஓதினார். இதுவாய் பேசா மந்திரம் இதுவேயாகும் என்றார். சதாசிவனும் இம்மந்திரத்தைக் கூறுகிறார், என கூறினார். இதனை கண்டாக்கால் சித்தர்கள் ஆவார்கள் என்று கூறும் பாடலைக் காண்க.

"மாப் பென்ற கொங்கணவர் மகிழ்ந்து கூற
வாய் பேசா மந்திரமு மிதுவே யென்றார்
ஏப்பென்ற சதாசிவன்தா னெக்குச் சொன்னார்
எல்லோருங் கண்டாக்கால் சித்தராவார் - 2

கருவூரார் தச தீட்சை — *39.*

வால்மீகர் என்னும் சித்தர் தாம் எழுதிய சுத்தஞான என்னும் சிறுநூலில் சிந்தையை தெளிவாக வைத்திருப்பவன் சித்தனாவான். உலகெல்லாம் இது வடிவமென்று அறிந்தவனே சித்தனாவான் என்று கூறும் அற்புத வரிகள் காண்க.

"சிந்தை தெளிந்திருப்பவனே சித்தன் சித்தன்
செகமெல்லாஞ் சிவமென்று அறிந்தோன்சித்தன்
- 2

வால்மீகர் சுத்த ஞானம் — *16.*

மேலும் யூகிமுனி என்பவர் தமது நூலான வாதவேதை நூலில் காண்பதற்கரி தான் மூல சூட்சுமத்தை கண் உறிபவனே சித்தன் என்று ஓதுகிறார். அவருடைய வரிகள் கற்று பயனடைய வேண்டும்.

"காணரிது யெவராலும் மூல சூட்சம்
காண்பவனே சிவசித்தனவனே யாகும் - 13

யூகிமுனிவர் வாத வேதை நூல் — *1000*

மேலும் அகத்தியர் யாரொருவர் சாகாமல் இருந்து வருவனானால் அவனே சத்து சித்து ஆனந்தம் பெற்று சற்குருபுத்திரனாகி சித்தன் என்று கூறுவர்.

"சாகாமலிருந்தால் அவனே சித்தன்
சச்சிதானந்த குரு புத்திரனாகும் - 127

அகத்தியர் பூஜாவிதி — *216.*

சட்டை முனி சித்தர் தமது ஞான நூலில் சாகும் இந்த தேகம் சாகாமல் காத்துக் கொள்பவன் சித்தனாவான். ராசயோகத்தில் வாசிநிலை தெளிவாகக் கண்டவன் யோகியாவான். குழப்பத்தில் மனம் சிக்காமல் தெளிவாக சிந்திப்பவன் ஞானியாவான். இவைகளின் நுட்பத்தை அறிந்தவன் கெவுனியாம் என்பதாகும் என்று கூறும் அவருடைய பாடலைக் காண்க.

"உழன்ற செடம் போகாமல் காண்பவன் சித்தன்
உண்மை யென்ற வாசி கண்ட வனேயோகி
குழன்று மனபோகாமல் காப்பவனே ஞானி
குறிப்பறிந்து கொண்டவன் கெவுனி" - 12

சட்டைமுனி ஞானம் — *30.*

போகர் பெருநூலான ஏழாயிரம்

Koviloor Digital Library

என்னும் நூலில் முதல் பகுதியில் ஒருவன் தன்னை அறிந்து தன் அறிவைக் கொண்டு இந்த தேகத்தை அழியாமல் இருக்க வழியைக் கண்டு கற்பம் செய்ய வேண்டும். சுக்கிலம் என்று கூறப்படும் விந்துவை தன் கட்டுக்குள் கொண்டுவர வேண்டும். சிதாபாசம் என்னும் உலக தேகம் புனிதமாக மாற்ற வேண்டும். பராபரியைக் கண்டு அங்கு இருந்து வாழ்ந்து வந்தால் அவனே சித்தனாவான். அப்பாடலைக் காண்க.

"தானான காயத்தை நிறுத்த வேண்டும்.
சதாகாலம் சுக்கிலத்தை கட்ட வேண்டும்.
வேளான மும்மலத்தை யறுக்க வேண்டும்
வெளியான சிதா பாசம் நீக்க வேண்டும்.
பானான முட்சுடரை யறுக்க வேண்டும்.
பாழான தூலத்தை வெறுக்க வேண்டும்.
மானான பராபரியை நிர்த்தன செய்து
மானிலத்தில் வாழ்பவனே சித்தனாமே - 711/1

போக நாதர் — 7000

அகத்தியர் தமது நூலான சௌமிய சாகரத்தில் பூரணம் என்பது அண்டமாகும். காரணம் என்பது பிண்டமாச்சு. அண்டபிண்டங்கள் நேராக தெளிவாக அறிந்தவனே சித்தனாவான் என்று ஓதும் பாடலைக் கண்டு போற்ற வேண்டும்.

"பராப்பா பூரணமே அண்ட மாச்சுப்
பதிவான காரணமே பிண்டமாச்சு
நேரப்பா அண்டமொரு பிண்டம் ரெண்டு
நேரறிந்துக் கொண்டவனே சித்தன் சித்தன் - 205

அக — சௌ — சாக — 1200

வியாக்கிரம பாதர் என்னும் சித்தர் சமாதி என்னும் சிறுநூலில் பதி என்று சொல்லப்படும் இடத்தை அடையவேண்டும். சதி செய்யக்கூடிய சந்திரனும் சூரியனும் சார்ந்த இரண்டும் விதியைக் காட்டக் கூடியது. சந்திரனின் எமன் வாழுமிடமாகும். சூரியன் சிதபாசம் மிகுந்தது. இதனால் விதி என்ற சனிசன் ஆயுளை முடிப்பவன். இவைகள் நாழிகையில் வெளிப்பட்டால் விதிமுடியும். மதி என்ற பூரண அறிவை பயன்படுத்தி இவைகளை மறிக்கச் செய்யும் திறன் பெற்றவரே சித்தர் என்பர். இக்கருத்தைக் குறிக்கும் பாடல் காண்க

"பதியதில் நின்று பாங்குட னேறிச்
சதிபெரும் ரவிமதி சார்ந்தது ரெண்டாம்
விதி முக்கடியுள்ளிட்டு வெளிபடும்
மதி யெக் கண்டு மறிப்பவர் சித்தரே - 6

வியாக்கிரம பாதர் சமாதி — 8.

இராமதேவர் தம்முடைய நூலான தண்டக பட்சினியில் யோக மார்க்கம் என்னும் வழியில் மௌன நாட்டம் செலுத்த வேண்டும். நினைவுடன் முக்காலின் தன்மை யறிந்து தன் அறிவுடன் தானே அறிந்து அறிவில் அறிய வேண்டும். சிவதீட்சையும் சக்தி தீட்சையும் தேர்வு செய்து அதில் திறம் பெற்றவர்கள் மெய்ஞ்ஞான சித்தர் என்று கூறப்படும் அவருடைய பாடலைக் காண்க.

"நேர்ந்து பார் நிட்டை விதி யோக மார்க்கம்
நினைவறிந்து காலறிந்து அறிவில் நில்லு
தேர்ந்து பார் சிவதீட்சை சக்தி தீட்சை
திறம் பெற்றார் மெய்ஞ்ஞானச் சித்தாரமே - 102

இராமதேவர் தண்டகப் பட்சின் — 109.

மேலும் கடைப்பிள்ளை ஞானம் என்னும் நூலில் உறுதியான தெளிவான வலிவான முடிவுகளை அறிபவனே சித்தனாகலாம். அதற்கு திறமையான வலுவான அறிவுத் தெளிவு வேண்டும். மனத்தில் உறுதியும் முடிவான முடிவுகள் தெளிவாக எடுக்க கூடியவனே சித்தன் என்பர். அதனை அவர் வரிப் பாடலால் அறிந்து தெளிக.

"தீர்க்க மிதை யறிபவனே சித்ததன் சித்தன்
திறம் வேணும் மனதுறத்தாற் றிறமுமாமே -

கடைப் பிள்ளை ஞானம் — 100.

மேலும் அஸ்வினி தேவர் சிவயோகம் என்னும் நூலில் அறிவும் மனமும்ஆக இரண்டையும் கட்டினவன் சித்தனாவான். மனதாலே அறிவைக் கட்டியவன் ஞானி என்று கூறுவார்கள் என்று கூறும் பாடல்,

கூரப்பா அறிவுடனே மனதை யுந்தான்

Koviloor Digital Library

குறிப்பாகக் கட்டினவன் சித்தனாம்
வேரப்பா மனத்தாலே அறிவைக் கட்டி
விட்டவனே ஞானியென்று மேவுவாரே - 6

அசுவனி தேவர் சிவயோகம் — 16.

மேலும் கோரக்கர் என்ற சித்தர் பிர்மஞானக் காட்சி என்ற நூலில், பெருமை பெற்ற பிர்ம என்னுமிடத்தில் ஆனந்த நிலை அடைந்தவன் தான் சித்தன். பிர்ம வுப்பை அறிந்து கண்டவனே தவ சீலன். கூர்மையுள்ள வாசி நிலையறிந்து அதனை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வருபவனே சித்தனாவன். மாயையயின் குறியறிந்து அதனை வென்றவனே முத்தன் என்பர். நேர்மையுள்ள சிவசக்தி தீட்சைகளைப் பெற்றவனே சிவமுத்தன். நிறைவாக சிவயோக செய்தவனே ஞானி என்று கூறும் அற்புதப் பாடலைக் காண்க.

"பேராம்பிர் மானந்த மடைந் தோன் சித்தன்
பிர்ம வுப்பைக் கண்டவனே தவ சீரேட்டன்
கூரான வாசி மறித்தவனே சித்தன்
குறி கண்டு மாயை வென்றவனே முத்தன்
நேரான தீட்சை பெற்றோன் சீவமுத்தன்
நிறை சிவயோகம் புரிந்தோன் ஞானியாமே - 2

கோரக்கர் பிர்ம ஞானக் காட்சி — 17.

மேலும் கோரக்கர் என்னும் சித்தர் சந்திர ரேகை என்னும் நூலில் முலைப்பால் உண்பவனுக்கு இந்த தேகம் பிழைக்கும். அதனால் யோக சித்தி — ஞான சித்தி சேரும். மேல்நிலையில் சொட்டும் பால் அதனை விரும்பி உண்டால் அருட்சித்தனாகி என்றும் எப்பொழுதும் இப்பேர் உலகில் நிலையாக அழியாமை பெற்று கோடி கோடி யுகமாக வாழ்வார்கள் என்பதை,

"முலையின் பால் உண்டாலல்லோ நிலைக்கும் தேகம்
நிலவரமாய யோக சித்தி ஞானஞ்சித்தி
தலை காமப் பாலுண்டோ ரருட் சித்தனாகி
வாழ்ந்திருப்பார் கோடானது கோடி காலம் - 127

கோரக்கர் சந்திர ரேகை — 200.

திருமூலர் ஞானம் என்னும் நூலில் தமது மாணவர் எல்லோருக்கும் திருமூலருக்கு பிள்ளை போன்று உடையவர்கள். அதனால் விரும்பத்தக்க அமுத பால் ஊட்டி, கடுங்கனலாதில் சென்று கமலமென்ற ஆயிரத்தெட்டிதழின் உச்சியின் மீது சென்று சோமப்பால் உண்ணும்படி கூறினோம். அதன் சூட்சுமநிலை புரிந்து அறிந்து அங்குள்ள மதிப்பால் கால்தலையாகக் கொண்டு தன்னை அறிந்து சித்தன் என்று பேர் எடுத்து இருந்தார்கள் என்று கூறும் பாடல்,

"ஆமப்பா காலாங்கி சகல பேர்க்கும்
ஆதியடா நமது பிள்ளை யான தாலே
காமப்பாலூட்டி கடுங்கனலேகி
கமலமென்ற ஆயிரத் தெண்ணுச்சி மீதிற்
சோமப்பா லுண்பதற்குச் சொன்னோம் சூட்சம்
சொல்லறிந்து சூட்ச நிலை உத்திக் கொண்டு
தாமப்பா மதிப்பால் கால் தலையாய்க் கொண்டு
தன்னை யறிந்து சித்தனென்று இருந்தார் பாரே - 71

அந்த அமுத பாலை உண்டவர்களுக்கு பிறப்பும் இறப்பு மறுபிறவி இல்லை என தெரிந்து சித்தனாக திகழ்வார் என்று திருமூலர் ஓதும் பாடல்வரி காண்க.

தீருமது செனன மறுபிறவி யில்லை
தீர்க்கமடா மெய்யறிந்த சித்தன் சித்தன் - 73.

திருமூலர் ஞானம் — 84.

காகபுசண்டர் தமது பெருநூல் காவியத்தில் பத்தாம் வாசலில் பூடையுடைத்து நுழைந்தவர்கள் மெத்த உள்ளார்கள். புத்தியுள்ளோர் அவர்களே சித்தர் ஆவார்கள். அவ்விடத்தில் கண்டுகளிக்கும் காட்சிகள் அனேகம் உண்டு அவர்களே சுத்தவீர சித்தர் ஆவார்கள் என்பதை,

"பூட்டுடைத்துக் கண்டவர்கள் மெத்த வுண்டு
புத்தியுள்ளோ ரவர்கள் சித்தர் சித்தர்
ஆட்ட மிதற் காண்பார்கள் அனேங் காட்சி
அம்மம்மா வென்றார்கள் சுத்த வீரர் - 33

காகபுசண்டா பெருநூல் காவியம் — 1000

அகத்தியர் அமுத கலைஞானம் என்ற நூலில் அகாரம் என்ற சிவ தீட்சையும், உகாரமென்ற சக்தி தீட்சையும் ஆக

Koviloor Digital Library

இரண்டையும் நாள்தவறாமல் செபித்தவன் சித்தர்நிலை அடைவான் என்பதை

"சேர்க்கையுடன் அகாரம் உகாரம் ரெண்டும்
தினதோறும் செபித்தவனே சித்தனாம் - 31.

அகத்தியர் அமுதகலை ஞானம் — 1200.

போகர் சாரம் சம் என்னும் நூலில், தேனமுதம் உண்டவன்தான் சித்தன் — சிவயோகி — சிவஞானி— சிவபத்தன் என்று கூறும் பாடல் வரிகள் காண்க.

"தேனமுத முண்டவனே சித்தன் சித்தன்
சிவயோகி சிவஞானி சிவபத்தன் றான் - 7

போகசித்தர் சாரம்சம் — 100.

மேலும் கல்லொளி சித்தர் தாம் எழுதிய பாடலில் பந்தம் கடந்து சென்றவன் சித்தன். உலகிலுள்ள பஞ்சமா பாதகத்தை விட்டோன் பத்தன். இவ்விதமாக அறிந்தவன் தான் சித்தனாவான் அதிலிருந்து உண்மைநிலை உணர்ந்தவன் சீவன் முத்தன் என்று கூறுகிறார்.

அடுத்து வரும் பாடலில் தன்னைப் பற்றி தனித்தன்மை அறிவினால் அறிந்தவன் சித்தனாம். வாசியை தனியான இடத்தில் பழக்கம் செய்பவன் முத்தன் — உன்னையும் உன்னால் அறிபவனே சித்தன். ஞான யோகநிலையும் தன்மை யறிந்தோன் முத்தன் என்று ஓதும் அற்புதப் பாடலை இங்கு காண்க.

"பந்தங் கடந்தவனே சித்தன் பாரிற்
பஞ்சமா பாதகத்தை விட்டோன் பத்தன்
இந்த விதந் தெரிந்தவனே சித்தன் அதி
லென் நிலமை கண்டவனே சீவமுத்தன்" - 21.

"தன்னையே தானறிந்தோன் சித்தன் வாசி
தனித்திருந்தே பழக்க முற்றோன் முத்தன்
உன்னை யுன்னால றிவோன் சித்தன் ஞான
யோக நிலை தன்னையு மறிந்தோன் முத்தன்"
- 22

கல்லொளி சித்தர் பாடல் — 66.

சித்தர் வாழும் இடம்

சித்தர்கள் வாழுமிடமும் அவர்களின் முறைப்படுத்தப்பட்ட சித்தர்களின் வகையும் கூறப்படுகிறது. மேருமலையில் வாழுஞ் சித்தர்கள் கோடியாகும். அதில் நாத வடிவில் வாழும் சித்தர்கள் கோடியாகும். திறமையான ஞானநிலையில் உள்ள சித்தர்கள் கோடாகோடியாகும். அதில் ரிஷிகள் வகையினர் கோடாகோடியாகும். கற்பமுண்ணும் சித்தர்கள் கோடா கோடியாகும். ஓங்காரமாக உள்ள உத்தமர்கள் பிராணாயாமம் உச்சரிக்கும் சிவயோகிதான் கோடியாகும் என்னும் இரசவாத நூல் சித்தர் மயம் என்னும் நூலில் கூறப்படுகிறது.

"ஆமப்பா வம் மலையில் பின்னும் கேளு
அப்பனே நாதாக்கள் கோடா கோடி
தேமப்பா யோகிகள் தான் கோடாகோடி
திறமான ஞானிகள் தான் கோடா கோடி
காமப்பா ரிஷிகளவர் கோடா கோடி
கற்ப முண்ணும் சித்தரவர் கோடி கோடி
ஓமப்பா யுத்தமர்கள் பிராணயாமம்
உச்சரிக்கும் சிவயோகிதாங் கோடி - 9

இரசவாத நூல் சித்தர் மயம் — காலாங்கிநாத சித்தர் இந்திர சால ஞான நூலில், பதினெட்டு சித்தர்களும் ஒரு பேரேயாகும். பக்கமொரு இருபக்கமாக அறிந்தாலும், அவர்கள் அனைவரும் ஓர்நிலையில் என்று ஓதும் பாடல் வரிகள் காண்க.

"பதினெட்டுப் பேருமொரு பேராயாகும்
பக்கமொரு பக்கயிரு பக்கமாகும்

காலாங்கிநாதர் இந்திர சாலம் ஞானம் — 48.

மேலும் யூகிமுனிவர் சித்தர்கள் வாழுமிடம் புலியூராகிய தில்லை சிதம்பரமாகும். அந்த தில்லை சபையே இருப்பிடமாகும். விரும்பக்கூடிய இடமும் ஆதாரமாகும். கனகசபையில் நாதர் ஈசன் தான் காண்க என்றும் ஓதுகிறார். அப்பாடலைக் காண்க.

"தாமென்ற சித்தருறை தலமே தில்லைத்
தலமாகும் சபைதமக் கோரிருப்பிடந்தான்
காமென்ற தராதலமு மதுதானப்பா
கனகசபை நாதரீச சுரர் தான் காணே - 250

Koviloor Digital Library

யூகிமுனி சித்தர் வாத காவியம் — 1000.

மேற்கண்ட செய்தியை யார் கூறினார்கள் என்று நாம் கேட்டால் சிதம்பரத்தைக் கண்ட சித்தர்கள் தான் கூறினார்கள் என்பதை சங்கிலி சித்தர் ஞானம் என்ற நூலில் கூறும் பாடல் வரிகள் காண்க.

"தெரியாம லலைய வில்லை சிதம்பரத்தை
தெரிசித்த சித்தர்கள் தான் செப்பினார்கள்" - 16.

சங்கிலி சித்தர் ஞான நூல் — 16.

மேலும் சமதக்கனி முனி சித்தர் தாம் எழுதிய சிறுநூலில் சித்தர்கள் ஞானம் நிறைந்த போத கிரி என்ற மலையின் உச்சியில் தான் சித்திகள் ஒளியுடன் தீபம் போல் இருப்பார்கள். அங்கு சதாசிவமும் தெரிவார். அவ்விடத்தில் சித்தர்களும் அங்கு இருப்பார்கள் என்று கூறும், அற்புதமான பாடலைக் கண்டு இன்புறுக.

"தாங்கிய தோர் போத கிரியுச்சி தன்னில்
தன்மையடன் கற்பூர தீபம் போலே
பாங்குடனே சதாசிவமுஞ் தெரியுமப்பா
பதிவாகச் சித்தருமங் கிருப்பார் பாரே" - 23

சமதக்கனி மாமுனி பரம்பொருள் காட்சி நூல் — 37.

சித்தர்கள் அவர்களின் நிலையயை யடைய வேண்டுமென்றால் பல மையில் கல் செல்ல வேண்டும். பலயுகத்தில் செய்த நல்வினை பயனால், தான் பெறமுடையும் என்பது சித்தர்களின் அருள்வாக்காகும். மானிடர்கள் முதலில் பிறஉயிர்களின் மீது உயிரிரக்கம் வேண்டும். எல்லா உயிர்கள் தம்முடைய உயிர்போன்று நினைக்க வேண்டும். உயிர்களுக்கு முதலில் பசியை நீக்கத்தக்க உணவு வகைகள் கொடுக்க வேண்டும். பசியாற்றல் இல்லாத மனம் பயன்படாது. அடுத்து இறைநிலை அறிய உகந்த உலகியல் மற்றும் அருளியல் கல்வி அளிக்க முன் வரவேண்டும். இந்த இரண்டும் முதல் நிலையுடையது. உயிர்களின் மீது கருணை காட்ட வேண்டும். உயிர்களள பலியிடுதல் மற்றும் துன்புறுத்தல் செய்யாமல் இருத்தல் வேண்டும். எப்பொழுதும் இறையருளை நோக்கி தவம் மேற்கொள்ள வேண்டும். சாதி — சமய் — மதம் இவைகளை தவிர்த்தல் வேண்டும். பொய்யான வேதகங்கள் — புராண கதைகள் இதிகாசங்கள் தள்ளிவிட்டு சித்தர்களின் நூலை ஆய்ந்து தன்னறிவால் சாகாத கல்வி கற்க வேண்டும். அதன்படி நடத்தல் வேண்டும். இல்லறம் என்ற ஆழி சூழியில் சிக்கினால் சித்தர் நிலை பெறமுடியாது. இந்த இருள் தேகம் மருள் தேகங்களை புனிதப்படுத்தப்படுமானால் சுத்ததேகம் பெறலாம். இத்தேகத்தில் தத்துவங்கள் அனைத்தும் ஒழிந்து தூய்மைபட்டு நிற்கும். இந்த தேகத்திலிருந்து படிகளை கடக்க தெரிந்தால் அடுத்து வருவது மந்திர தேகமாகும். இத்தேகம் கண்ணுக்கு தெரிந்தும் தெரியாமல் இருக்கும். இதனைப் பெற்ற பின் ஒளி தேகம்பெற முயற்சித்து அதனை பெற்றால் சோதி வடிவம் அல்லது தீபம் போல் ஒளிரும் தேகம் பெறும். இந்த மூன்று தேகத்திற்கு சுத்த தேகம் — பிரணவ தேகம் — ஞான தேகம் பெற்றவரே சித்தர் நிலை அடைவார்கள் அவர்களுக்கே சித்தன் என்றெல்லாம் கூறுவார்கள். ஞான தேகம் கண்ணுக்கு புலனாகாது. அறிவிற்கு மட்டும் துலங்கும்.

இதனைப் படிக்கும் அன்னவரும் முயற்சி செய்தால் தாமும் சித்தனாக மரணமில்லா வாழ்வு பெற்று மகிழலாம். முயற்சியுடையோர் இகழ்ச்சி அடையார். முயற்சி திருவினையாக்கும். சாகாத கல்வி நீங்கள் கற்க வேண்டுமானால் இறையருள் கொண்டு இளகச் செய்ய வேண்டும். வேகாத சிந்தனை வேண்டும். மனம் எதிலும் பற்றுதல் இல்லாமல் இருக்கச் செய்யவேண்டும். இந்த உலகமே சிவ வடிவானது என்று அழுத்தமான சிந்தனை வேண்டும். இல்லறத்தை தள்ள வேண்டும். சிவராச யோகம் செய்தல் வேண்டும். பஞ் சகண தீட்சை முடிக்க வேண்டும் அல்லது தசதீட்சையான சிவசக்தியை அறிந்து ஓதல் வேண்டும். மும்மலம் பற்றாமல் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். மும்மூலம் அல்லது முச்சுடர் அறிய வேண்டும்.

Koviloor Digital Library

சாம்பவி நிலையும் கேசரி நிலையும அறிதல் வேண்டும். புறத்தாய்மை போற்றுவது போல் அகத்தாய்மையை போற்றி வணங்க வேண்டும். சத்துவ குண உணவுகள் எடுத்துக் கொள்ள வேண்டும். இதுபோல் நிறைய செய்திகள் கல்விமூலம் அறிந்து தெரிந்து புரிந்து அறிவின் துணைக் கொண்டு அறிதல் வேண்டும். மதிமண்டல அமுதம் உண்ண அறிய வேண்டும். அதனை உண்ண என்ன வழிகள் உண்டு என்பதை ஆராய வேண்டும். அப்படி உண்டு தேறியவர்கள் தான் நமது சித்தர்கள். அவர்களே முத்தியும் சித்தியும் பெற்று சித்தனாக திகழ்வார்கள்.

"பாரு நீ விழி யிரண்டும் பகர்ந்த தோர் நாசிங்னி
சேருநீ யொன்றாயச் சினத்துட நோக்கியே
தாருநீ சிவாவென்று தாக்கியே போற்றினால்
வாரிநீர் போல வருடிக்கும் மமுதமே" - 8

அமுதமே காய மடங்காத பானுவாந்
தியிர்த சஞ்சிவி செகமறி வேதையாம்
குமிர்தவே தேகம் கோடியோர் நாளாம்
நிமிர்தவே யீச னீழ்சடையொக்கும் - 9

சட்டை முனி சித்தர் தீட்சை கற்பம் — 9.

மக்கள் அனைவரும் அமுதுண்டு சித்தர்கள் நிலையடை இறையருள் வேண்டி செய்தியை மகிழ்வுடன் நிறைவு பெறுகிறது.

திருச்சிற்றம்பலம்.

4. ஊன் உடல் ஒரு மண் பாண்டம்

"சாகாமல் இருப்பதற்குக் கல்வியுண்டு
சாக்காடு கொள்வதற்கு விபரம் உண்டு" - 238.

மாபெரும் சித்தர் பெருமான் காகபுசண்டர் — 1000

ஊன் உடல் சுக்கில சுரோதனியினால் எடுத்த தேகமாகும். அந்த தேகம் தன்னறிவே தன்னறியாப் பிண்டமாகும். இது ஒரு மண்பாண்டமாகும். வன்னியால் சுடப்படாத நீர்குமிழுக்கு ஈடான தேகமாகும். தேகத்தின் மீதுள்ள பற்றினால் சூரியன் என்ற வலது பக்க வாசியான காற்று கரைந்து தேய்ப்பிறைப் போல் தேய்ந்து கெட்டு வரும். பூவென்று நினைத்த தேகம் வரவு செலவு அறியாமல் மதிகெட்டு தேகமானதை காப்பாற்ற முடியாது என்று ஒரு சித்தர் பாடல் கேட்டுள்ளதைக் கண்டு தேற வேண்டும்.

"தானென்ற நாத விந்தாலே எடுத்த தேகம்
தன்னறிவே தன்னறியாப் பிண்டந் தான்
ஏனென்ற பாண்டமடா நிலையான அக்கினி
விசையில்லா நீர்க்குமிழியான தேகம்
ஊனென்ற ஆசையிலே ரவியே தேய்ந்து
ஊன்றா மதிபோலாகி உருகி கெட்டு
பூனென்ற போக்கு வரத்து அறியாமல்
புத்தி கெட்ட மதனைப் போற்றுவிரோ - 78

ஓர் சித்தர் பாடல்

திருமூலர் திருமந்திரம் 3000த்தில் இந்த தேகத்தை பச்சை மண்ணுக்கு சமமாகக் கருதுகிறார். இந்த தேகம் தீயினைச் (நெருப்புக்கு) சாராத மட்கலமாகும். பசும் மண்ணாய்யிருக்கும். நீரால் கரைந்து அழியும். தீவினைச் சேர்ந்தது. 2. தீயினைச சேர்ந்த (நெருப்புக்கு) மட்கலம் வன்மை பெறும். தீயினைச் சார்ந்து வன்மைப் பெற்று மட்கலம் நீரால் அழியாது. அநத மட்கலம் நிலைப் பெற்று நிற்கும். அது தீவினை நீக்கமாகும். 3. திருவருள் வழி நில்லாத உடல் அழியும். திருவருள் வழி நின்றால் உடல் அழியாது. மேற்கண்ட நிலை உணர்த்தும் திருமந்திரம் காண்க.

"மண்ணொன்று கண்டீர் இருவகைப் பாத்திரந்
திண்ணென் றிருந்து தீவினை சேர்ந்து
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண்
எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாரே - 187.

Koviloor Digital Library

மேலும் திருமூலர் இருவித காயம் உள்ளதாக கூறுகிறார். ஒன்று பருஉடல். மற்றொன்று அரு உடல். இவைகள் இரண்டும் ஒன்றில் ஒன்றாக கலந்திருப்பினும் அதன் மணம் கத்தூரி மணம் வருதல் போல் மணம் வெளிப்படும்.

காயம் என்பது உடல். இவை இரண்டு ஆருயிர்கட்கு உண்டு. ஒன்று விரும்பத் தகுந்த காயம் மாயையினின்றும் தரப்படும் சிவவுலக அருஉடம்பு. இது வெங்காயம்.

மற்றொன்று தூவா மாயையின்றும் தரப்படும். உருஉடம்பு. இது பெருங்காயம் எனப்படும்.

இவ்விரு வேறு மாறுபட்ட உடல்களும் கலந்திருப்பினும் கூட்டுப் பொருளோடாகிய கத்தூரி மணம் மிகுதல் போலத் தூமாயை (சுத்த மாயை) யின்று தரப்படும் அருவுடம் பின் குணமாகிய மணம்மிக்கு தோன்றும் என்று திருமூலர் கூறுகிறார். திருமந்திரம் காண்க.

"காயம் இரண்டுங் கலந்து கொதிக்கினும்
ஆயுங் கத்தூரி யதுமிகும் அவ்வழி
தேசங் கலந்தோரு தேவனென் றெண்ணினும்
ஈசன் உறவுக் கெதிரில்லை - திருமந்திரம் - 16.

கடைபிள்ளை சித்தர் பஞ்சாட்சர சுருக்கம் தேகத்தில் கசடுகள் உள்ளது என்றும், அதனை மூலாக்கினியால் சுட்டு தள்ளினால் திரோதாயின் கசடு நீங்கும் என்றும் அப்பொழுது தான் ஞானம் என்ற தனிவழி உண்டாகி தேகம் சுத்தமாகும் என்று கூறும் பாடலைக் காண்க.

"காசப்பா மூல மென்ற நெருப்பினாலே
காய்ச்சினால் திரோதாயின் கசடு நீங்கும்
போசப்பா கசடதுதான் நீங்கிப் போனாற்
போமென்ற ஞான நெறி புனிதமாமே - 20

கடைப்பிள்ளை சித்தர் பஞ்சாட்ச சுருக்கம் — *30.*

மேலும் அகத்தியர் தாம் இயற்றிய அந்தரங்க தீட்சா விதி 400இல் இந்த தேகம் ஊறலுள்ள தேகம் என்று தன் குருநாதர் தனக்கு செவியுரை அருளினார் என்று தமது மாணவனான புலத்தியர்க்கு உபதேசிக்கும் அற்புதப் பாடல் படித்து அறிக.

"உல்லாச தன் தேகம் ஊறலத்து விட்டால்
உறுதியாய் தாம்பூரம் மூறல் போமென்று
எல்லைதனில் என்குருவும் எனக்கு உரைத்தார்
ஆதலால் புலத்தியனே உனக்காயச் சொன்னேன்
- 152.

தீட்சா விதி *400.*

உரோம மாமுனி சித்தர் தாம் இயற்றிய நுட்ப ஞானம் 16இல் இந்த தேகம் குற்றங்கள் உள்ளது என்று கூறுகிறாா. கீழ் மூலத்தில் மலக்குற்றம். நாடியில் குற்றம். கண்டத்தில் கபக் குற்றம் மேல்மூலமான புருவ மத்தியில் திரைகள் குற்றம். மனத்தில் ஆணவக்குற்றம் என்றும் இதனை போக்கி விட்டால் ஞானம் பெறலாம் என்றும் அமுதச்சாறு பருகலாம் என்று ஓதுவதைக் காண்க.

"பிசகாது அபானத்தில் மலமே குற்றம்
பேசுகின்ற வுதானத்தில் நாடி குற்றம்
விசையில்லா கண்டத்திற் கபமே குற்றம்
மேல்மூல வளையிலே தரை ஏறா குற்றம்
மசையான மனத்துக்கு கியான குற்றம்
மிவையைந்து போக்கி விட்டாலாமே ஞானம்
பசியாது ஞானத்திற் பிரகாசித்தாற்
பானமல்லோ பதினாறு பானங்கொள்ளே - 1

உரோம மாமுனி சித்தர் நுட்பஞானம் — *16.*

ஈஸ்வரர் மெய்ஞ்ஞான நாடி 29இல் இந்த தேகத்தில் மலக்கட்டு, சிறுநீர் கட்டு, உமிழ்நீர் கட்டு ஆக இந்த மூன்றும் முறித்துவிட்டால் தேகத்திலுள்ள பகைவர்கள் என்று கருதப்படும் *96* தத்துவக் கூட்டங்கள் குலைக்கச் செய்து இந்த தேகத்திலுள்ள களங்கள் போக்கினால் தன்னைக் கொல்ல வந்த எமனைக் கூட வெல்லலாம் என்று கூறும் பாடலைக் காண்க.

"ஓமென்ற மலக் கட்டைக் கழிய வைத்தால்
உடலிலுள்ள வாதை யெல்லாம் மோடிப் போச்சு
தாமெனற சிறுநீரைத் தெளிய வைத்தால்
சடத்திலுள்ள ரோக மெல்லாஞ் தணிந்து போச்சு
கூமென்ற உமிழ்நீரை முறிய வைத்தால்
கூட்டிலுள்ள பகை யெல்லாம் குலைந்து போச்சு
கோமென்ற யிவைமூன்றுங் களங்க மற்றால்
கொள்ளவந்த காலனையும் வெல்லலாமே" - 27.

ஈஸ்வரன் மெய்ஞ்ஞானநாடி — *29.*

Koviloor Digital Library

மாபெருஞ் சித்தர் காகபுசண்டர் காவியம் — 1000 என்னும் நூல் எளிய நடையில் எழுதியது. அப்பெருமகனார் அவர் இந்த தேகம் மாயை என்னும் சக்தி வழங்கியது. அதில் தொண்டை நீர், இடுப்பின் நீர், சலநீர், மலநீர் ஆக மூன்றும் கேசரம் என்னும் உச்சிமேரை முதல் பாத வரையிலும், நடுநாடியிலும் மலக்கட்டான ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, மாயையாக்கம் என்னும் மலங்கள் உண்டு. இவைகள் தேகத்தில் பகையாவுள்ள சத்துருக்கள். வாசி வலுவாக்கி அதனை முறியடித்தவன் தான் வெல்லமுடியும் என்பதைக் கூறும் பாடல்,

"சொல்லுவேன் தொண்டை நீர்இடுப்பின் நீர்
தொங்குகின்ற சலநீர் மலநீரு மூன்று
கெல்லுவேன் கெல்லிங்கள் உடலே சக்தி
கேசரத்திற் தொடங்கிடலாம் உச்சிமேரை
நல்லவனே உச்சிமுதல் பாதம் மட்டும்
நடுநாடி மூலம் வரை மலத்தை போக்கும்
வல்லவனே மும்மலம் தான் தடையே சத்துரு
வாசி வலுவாக்கினவன் போக்குவானே - 134.

சித்தர் ஞானி காகபுசண்டர் காவியம் — 1000.

அகத்தியர் பூரண சூத்திரம் என்னும் நூலில் மனிதனை ஏன் படைத்தான். மனைவி மக்கள் என்று எண்ணி எண்ணி மரணம் பெறுவதற்கும், பிறப்பு பெறுவதற்குமா இத்தேகம் படைத்து உயிர் கொடுத்தனர். இல்லையே! தேகத்தின் பகையாக உள்ள தத்துவக் கூட்டும். மலங்கள் வென்றாலொழிய மீளலாம். இல்லையே இந்த உடல் மண்ணில் விழும். அப்பொழுது ஞானம் பெற முடியாது போகும். தத்துவக் கூட்டங்கள் மலங்கள் வென்றால் ஞானம் வாய்க்கும். தேகமிருந்தால் தான் சகல கலைஞானம் வாய்க்கும். தேகமிருந்தால் தான் சகல கலை ஞானம் உண்டாகும். அவரின் பாடலைக் காண்க.

"மாது மக்களென்று தாமெண்ணி யெண்ணி
மாள் வதற்கும் பிறப்பதற்கும் வைத்தானீசன்
தீது வென்ற தீயினிலே விழுந்தாயானால்
செடம் விழுந்து போகுமடா ஞானமேது
தாது வென்ற சடமிருந்தால் ஞானம் வாய்க்கும்
சகல கலைக் கியானம் மெல்லாந் தருகுமே பாரே - 145.

அகத்தியர் பூரண சூத்திரம் — 216.

இறுதியாக திருமூலர் தேகத்தின் அவசியத்தை வலியுறுத்தும் மந்திரத்தை ஊன்றி படித்து உணரவேண்டும். தேகம் அழிந்தால் உயிர் நீங்கும். திறமான ஞானங்கள் சேர்க்க் இயலாது போகும். தேகத்தை பாதுகாத்தலின் அவசியத்தை உணர்ந்தேன். அதனால் தேகம் நிலைத்தது. உயிரும் நிலைத்தது என்னும் மந்திரப் பாடலைக் காண்க.

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே - 704.

திருமூலர் திருமந்திரம் — 3000

நமது ஊன் உடலில் பல குற்றங்கள் — கசடுகள் — மலங்கள் — ஊறல்கள் — நீக்காத வரையில் இந்த தேகத்திற்கு மண்பாணட தேகம் என்று ஞானிகள் கூறுகிறார்கள். இது பச்சை மண்ணுக்கு ஒப்பிட்டு எழுதியுள்ளார்கள். தேகத்திலுள்ள களங்கங்கள், அழுக்குகள் வன்னி என்ற தீயினால் சுட்டு ஒழிய வைத்தால் தவிர வன்மை பெறாது இந்த தேகம். எனவே தனிமனிதன் முத்தி பெற வேண்டுமென்றால் சித்தர்களால் கூறப்படும் குருநெறியைக் கற்க வேண்டும். மனிதன் தன்னறிவை அறிந்து மலங்கள் விலக பாடுபட வேண்டும். உலகில் நிலையாதப் பொருள்களில் ஒன்று பச்சை மண்ணால் படைக்கப்பட்டது. தான் இந்த மண்பாண்ட தேகமாகும். இதனை உணர்ந்து மானிடர்கள் சித்தர்களின் நெறிமுறைகள் நடைப்படுத்தி முத்தியும் சித்தியும் ஞானமும் பெற வேண்டும் என்பதை அறிவுறுத்தி இந்த செய்தியை இனிதாக முடிவு பெறுகிறது.

"மனிதனாய் பிறந்தாக்கால் சாகாக் கல்வி
வாசிக்கும் சிவமோடு வாழ்க்கை சேர்வான்
செனிதமாஞ் சண்டாள பிறவிலோர்கள்
செத்திறந்து செனிப்பார்கள் செத்தீற்றானே - 56

அகத்தியர் பூரண சூத்திரம் — 216

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

5. மானிடனுக்கு மரணம் வருவது ஏன்?

சாகாமல் இருப்பதற்குக் கல்வியுண்டு
சாக்காடு கொள்வதற்கு விபரம் உண்டு - 238.

காகபுசண்டர் சித்தர் — 1000.

காக புசண்டர் மாபெருஞ் சித்தர் ஆவார். இவர் ஒவ்வொரு யுக முடிவில் அழிவில்லாமல் காக வடிவில் இருந்து வருபவராவார். இவர் மல பிர்மாக்கள் — பல விஷ்ணுக்கள் பல உருத்திரர்கள் போன்ற தேவர்களும் தெய்வங்களும் கண்டவர். இவர் சாகாக்கல்வியை கற்றுணர்ந்து என்றும் அழியாமல் இருப்பவர். அம்மாபெரும் சித்த யோகி சிவ மெய்ஞ் ஞானம் நிறைந்தவர். அப்பெருமான் தான் மேற்கண்ட அறிவுரை வழங்கியுள்ளார்.

ஒருவன் சாகாமல் இருக்க வேண்டுமென்றால் சித்தர்கள் கூறும் சாகாக்கல்வி கற்று மரணமில்லா பெருவாழ்வு பெறலாம். மற்றவர்கள் அனைவரும சாகா பெரு வாழ்வு பெறலாம். மற்றவர்கள் அனைவரும் சாக வேண்டுமென்றால் வேத வியாசன் கூறிய வழியில் செல்வதால் பல கோடி மக்கள் மரணத்தின் பிடியிலிருந்து விடுபட முடியாமல் மாண்டு வருகிறார்கள். கோடியில் ஒருவன் சாகாக்கல்வி தனது கடின உழைப்பால் அக்கல்வியை கற்று உணர்ந்து அம்முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். அதில் பல கோடியில் ஒருவன் அழியாமை பெற்று தெய்வநிலை அடைந்து திகழ்கின்றான். அப்படி நமது வள்ளல் பெருமானும் சாகாத கல்வி கற்று அழியாமை பெற்ற தெய்வ நிலை அடைந்தார் என்பது வெளிடைச் செய்தியாகும். அதனால் தான்,

"நாடப்பா சாகாத கல்வி தனை
நலமாகக் கற்பதற்கு உன்னை தேற்று" - 7

என்று இராம ரிஷி சிவயோகம் என்னும் நூலில் உணர்த்துகிறார்.

வேத வியாசனால் செய்யப்பட்ட இதிகாச புராணங்களால் உண்டாக்கப் பட்ட கதாபாத்திரங்கள் இன்று தொலைக்காட்சிகளில் வரும் மெகா தொடர்கள் போன்றதானது அதுபோன்ற பொய்யான செய்தியால் பரவவிடட வியாசனை கண்டிக்காத சித்தர்கள் இல்லை. பொய்யை மெய்ப்போல் கூறும இந்த நபர் மற்றவர்களை மரணத்தின் பிடியில் சிக்க வைத்தது தான் பெருமைக்குரிய செய்தியாகும். இந்த நபரைப் பற்றி எழுதினால் செய்திகள் மாளாது. அவ்வளவு செய்திகள் உண்டு.

சித்தர்களின் வருத்தம்

வேத வியாசன் செய்த இதிகாச புராணங்கள் வேதங்கள் அனைத்தும் பொய்யுரையில் மெய்ப்போல் தோன்றுமாறு மக்களின் மனதை மாற்றம் செய்து அதனால் ஏற்படும மரணங்கள் கண்டு சித்தர்கள் வருத்தமடைந்து இரக்கம் கொண்டு சாகாத கல்வியின் நோக்கமும் அதன் கதவையும் உணர்த்த வேண்டி பல்லாயிரம் நூல்கள் சித்தர்கள் வழங்கியுள்ளனர். ஆனால் அந்நூலை படிக்காமல் வேத வியாசன் செய்த நூல்கள் படித்து மாண்டு வருகிறார்கள். அதனை பிரசாரம் செய்வதற்கு ஒரு சமூகமே உருவாகி அவனுடைய பெயரை பயன்படுத்தி வயிறு வளர்க்கும் நிலை உண்டாக்கி விட்டது என்பது வெள்ளிடை செய்தியாகும். மக்கள் மரணத்தில் சிக்கி மாள்வதைக் கண்டு சித்தர்கள் வருத்தப்படும் செய்தியை இங்கு உங்களுக்கு தந்து உதவுகிறோம்.

"மனிதரெல்லாம் மரணமடைந்தார்கள் என்று
மனதிரங்கி ஐந்நூற்றில் வழியாய்ச் சொன்னேன்
சனியனைப் போன்றுஞ் சித்தரெல்லாங்
கூடிக் கொண்டு
சமாதிக்கு ளடங்கி விட்டார் சட்டைநாதர்
கனிவு வந்து சொன்னதையுங் கிழித்தாரையோ
அனிதமாய்ப் போகுதையோ மனிதர் வாழ்க்கை

Koviloor Digital Library

ஆனாலும் புத்தியில்லா சண்டாளிருக்கே - 46

ரோமமாமுனி சித்தர் ஞானம் — 50.

சித்தர்கள் மரணத்தை வெல்லக்கூடிய சாகாத கல்வி எடுத்தோதினார்கள். ஆனால் வேதவியாசன் என்ற நபர் மரணம் அடைவதற்குண்டான இதிகாச புராணங்கள் வேதங்கள் போன்ற பொய்யான செய்திகள் உலகில் பரப்பினான். அதனால் மக்கள் மரணக்குழியில வீழ்ந்து மடிகிறார்கள்.

மரணம் வருவது எதனால்

அகத்தியர் ஞான சைதன்யம் என்னும் நூலில் மனிதர் மரணத்தை எப்படி சந்திக்கிறார்கள் என்ற விவரமான செய்தியை கூறுவது அறியலாம். மக்களின் மனம் நிலைக்காத குற்றம். மனிதன் உருவாவதும் அழிவதும் விந்து என்ற பொருளாகும். பெண்களின் பாழ் குழியில் மனம் கொள்ளுவதால் தன் என்றும், இந்த தேகம் என்ற கட்டான உடல் வலிமை இழப்பதாலும், மெய்யென்ற உடல் பொய்யாய் போனதைக் கண்டு பார் என்று கீழ்வரும் பாடல் மூலம் அறிக.

"சாவதுதா னெதினாலே வந்த தென்றால்
சண்டாள மனம் நிலைக்கா தோசத்தால்
ஆவதும்வு மழிவதுவும் விந்தாலப்பா
ஆச்சரியம் பாழ்குழியி னாசையாலே
காவலது கட்டழிந்து போனதாலே
காட்சி யெல்லாம் பொய்யாச்சு கண்டுபாரு - 17

அகத்தியர் ஞான சைத்தினியம் 50.

தேகத்தின் உண்மை நிலை என்ன:

இந்த தேகம் நாதவிந்து இணைந்ததால் உருவானது. தன்னறிவை தான் அறியாது எடுத்த தேகப்பிண்டம். இந்த தேகம் ஒரு பச்சை மண்பாண்டம். அக்கினியால் வேகாத பாண்டம். நீர்க்குமிழியான தேகம். தோல் உடலால் ஆன இத்தேகம் ஆசை மிகுதியால் சூரியகலை தேய்யுற்று சந்திரக்கலை உருகிக் கெட்டது. பூக்கும் மலரின் போக்குவரத்து அறியாமல் அறிவு இழந்து நின்ற செடத்தை எப்படி மதிப்பது என்று சட்டை முனி சித்தர் ஞான விளக்கம் என்னும் நூல் காண்க.

"தானென்ற நாத விந்தாலே எடுத்த தேகம்
தன்னறிவே தன்னறியா பிண்டந்தான்
ஏனென்று பாண்டமடா நிலையான அக்கினி
விசையில்லா நீர்க்குமிழியான தேகம்
ஊனென்ற ஆசையாலே ரவியே தேய்ந்து
ஊன்றா மதி போலாகி உருகிக் கெட்டு
பூவென்ற போக்குவரத்து அறியாமல் தான்
புத்தி கெட்ட செடம்தனைப் போற்றுவீரே - 8

சட்டைமுனி ஞான விளக்கம் — 50.



தேகம் ஒரு மாய வடிவம்:

இந்த தேகம் ஓர் மாயா வடிவம். கவலைகள் நிறைந்த மாய வீடாகும். மாயையினால் உயிர்நிலை பெறாத வீடு. மதி என்ற கலை மிகுந்து இரவி கலை தேய்வதால் மாண்டுவிடும் வீடு. நேயநியமமில்லாத வீடு. நேர்மையில்லாது அறியாமை மிகுந்த வீடு.

மேலும் இத்தேகம் நிலைத்து நிற்கா தேகம். புழுக்கள் கிருமிகள் உள்ள தேகம். செத்த சவம்போல் திரியும் இந்த தேகம். மதம் பிடித்த மனித தேகம். வீண்வாய்ப் பேசி சாகா வழி தெரியாமல் மாண்டவர்கள் கோடியாம் என்று காலாங்கி சித்தர் கூறும் பாடல்கள் காண்க.

"காயமென்ற தேகமது மாயாரூபம்
கவலை குடி கொண்ட தோரு காமவீடு
மாயமென்ற ஜீவ நிலையாத வீடு
மதி பெருகி ரவிதேய்ந்து மாளும் வீடு

Koviloor Digital Library

நேயமென்ற நேமமது இல்லா வீடு
நேர்நிலைகள் அறியாமல் நின்ற வீடு - 36

நில்லென்று நிலை யறியா மாயா வீடு
நிட்டுரமான தொரு நிலையாத தேகம்
சொல்லென்ற புழுகிருமி சேர்ந்த பாண்டம்
செத்த சவம் போலவே தான் திரியுமஞ்சனம்
மல்லென்று மதம் பிடித்த வாய் வீண்பேசி
மார்க்க நிலை அறியாமல் மாண்டார்கோடி - 37.

காலாங்கி நாதர் பூசா விதி — 85.

குற்றங்கள் உள்ளடங்கியது இந்த தேகம்:

இந்த தேகத்தினிடத்தில் அபானம் என்னும் பாதையில் மலர் குற்றம் உள்ளது. உதானத்தல் நாடி குற்றம் உள்ளது. கண்டத்தில் கபக்குற்றம் உள்ளது. மேல்மூலத்தில் திரைக் குற்றம் உள்ளது. மனத்தில் ஆணவக் குற்றம் உள்ளது. இந்த இடத்து குற்றங்கள் போக்க வேண்டும். இல்லையென்றால் மரணம் நிகழும் என்பதை உரோமமா முனி சித்தர் கூறுவது கூர்ந்து நோக்குக.

"பிசகாது அபானத்தில் மலமே குற்றம்
பேசுகின்ற வுதானத்தில் நாடி குற்றம்
விசையான கண்டத்திற்கு கபமே குற்றம்
மேல்மூல வளையிலே ஏறாக்குற்றம்
மசையான மனத்துக்குக் கியானக் குற்றம்
மையைந்து போக்கி விட்டால் ஞானம் - 16

உரோமமாமுனி சித்தர் நுட்ப ஞானம் — 16.

இந்த தேகம் உலகில் நிலைபெறாது போவதற்குக் காரணம் என்ன?

பெண்ணின் யோனிகுழியின் சிற்றின்பத்தைக் கண்டவர்களின் உடல் நிலைத்து நிற்காது என்பதை கடுவெளி சித்தரின் பாடல் காண்க.

"நீக்கியே பெண்ணரவந் தீண்டிற்றால்
நில்லாது சடலமப்பா நிசமே சொன்னேன் - 8

கடுவெளி சித்தர் சிவராஜயோகம் — 8

அகத்தியர் அந்தரங்க தீட்சைவிதியில் பெண்யோனி மோகத்தால் உழல்வதை மறந்துவிடு உறுதியான மனத்தால் என்பதை,

"உழலாதே யோனியுட ஆசைத் தீயில்
விழுவதை நீ மறந்துவிடு உறுதியாக - 331.

அ.அ.தீட்சாவிதி — 400

மேலும் அகத்தியர் மாது மக்கள் என்று எண்ணி எண்ணி சாவதற்கும் பிறப்பதற்கும் உம்மை படைத்தானா அந்த ஈசன். அப்படியானால் இந்த தேகம் அழியும், ஞானம் பெற முடியாது என்பதை,

"மாது மக்களென்று தாமெண்ணி யெண்ணி
மாள்வதற்குப் பிறப்பதற்கும் வைத்தானீசன்
தீது வென்ற தீயினிலே விழுந்தாயானால்
செடம் விழுந்து போகுமடா ஞானமேது - 112

அகத்தியர் பூரணநுட்பம் — 216.

மிகுந்த ஆசையால் மரணம் நிகழும்:

அகத்தியர் ஞான என்னும் நூலில் ஆசைமிகுவதால் மரணம் நேரும் என்றும் கூறுகிறார். மனிதப் பிறவி எடுத்தவர்கள் மண் மீது மிகுந்த ஆசைப்படுவதால் அறுசுவையின் தீனிபோல் உண்பது. பொன் மீது பேராசைப்படுவது. மோகத்தின் மீது ஆசைப்படுவது. சுகபோகம் அனுபவிக்கும் ஆசைமிகுவதால், பாச பந்தத்தால் மயக்கம் கொள்வது. இதுபோன்று ஆசைகள் வளர்த்துக் கொண்டு அதுவே வாய்பேச்சு ஞானம் என்று கருதுவதால் மரணம் உண்டாம் என்பதை,

"கோடி யென்ற நர செனனம் மண்மேலாசை
குண்மான் தீனி யறுசுவையினாசை
மோடியென் பலபணதி பொன்மேலாசை
மோகத்தைப் பூட்டுகிற பெண்களாசை
சூடி யென்ற சுகபோக சுகியினாசை
துணையான பாசத்தினாசையிலும்
வாடியென்ற வுலகமெல்லாம் மயக்கமாச்சு
மக்களே வாய்ஞானம் பேச்சு மாச்சு - 6

அகத்தியர் ஞானம் — 30.

மேற்கண்ட கருத்தை உணர்த்தும் போகர் என்ற சித்தரின் பாடல் காண்க.

கோடி என்ற நர சென்மம் மண் ஆசையாலும்
குணமான தீனியிதின் ஆசையாலும்

Koviloor Digital Library

மோடி யென்ற மோகப் பெண் ஆசையாலும்
மோகத்தால் பூட்டும் பொன் ஆசையாலும்
சூடியென்ற சுகபோகச் சுகியினாலும்
துணையான பாசத்தின் மயக்கத்தாலும்
வாடியென்ற உலகமெல்லாம் மயக்கமாச்சு
மக்களே வாய் ஞானம் பேச்சு மாச்சு - 24

போக சித்தரின் — 7000த்தில் கூறப்படும்.

செய்தி என்னவென்றால் மனித பிறவி கணக்கிலாது எடுத்து மண்ணாசையாலும், சுவையான உணவு உண்ணும் ஆசையாலும், பெண் மீது மோகம் கொண்ட ஆசையாலும், மோக மிகுதியால் பொன் பொருள்கள் மீது ஏற்படும் மிகுஆசையாலும், என்றும்தாம் சுகபோகங்களில் முழுகுவதின் மிகு ஆசையாலும், பந்த் பாசத்தின் மீது பற்று மிகுந்து ஏற்படும் மயக்கத்தாலும் உலகப் பற்றினாலும் வாடிய மக்கள் வாய்ஞானம் பேசுவதே பேச்சாகக் கொண்டு இருப்பதனாலும் மரணங்கள் நிகழ்கின்றன.

தேரையர் என்னும் சித்தர் தம்முடைய பூஜா விதி நூலில் குடும்ப வாழ்க்கையில் நுழைந்தவர் அனைவரும் மாண்டு போனார்கள். பெண் மயக்கத்தால் ஏற்படும் நாட்டத்தாலும் வயது குறைந்து போய் மாணம் ஏற்படுகிறது. அதனால் மானிடரின் வயது குறைந்து விடுகிறது. நாளும் மக்கள் நலிந்து அலைந்து நரகத்தைத் தேடி மரணத்தால் மடிகின்றனர். நல்ல யோக மார்க்க் காண மனமில்ல்ாது போகவே மரணம் ஏற்படும் என்பதை,

பாழப்பா சமுசார வாழ்க்கையாலே
பாங்காக மனிதரெல்லா மாளுவாரே - 60.

மாளுவாரிப்படியே கோடா கோடி
மனிதருக்குஞ் சமுசார வாழ்க்கைமெத்த
ஆளுவார் பெண்மயக்க நாட்டத்தாலே
அப்பனே வயது மெத்தக் கொஞ்சமப்பா
நாளுவார் நாள்தோறும் அலைந்து நன்றாய்
நரகத்துக்கு கேதுவாய் நாடிப் யோறார்
தாளுவார் தவமெல்லா மட்டையாகத்
தாக்கான சிவயோக காணா பாரே - 61.

தேரைய சித்தர் பூசா விதி — 75.

நாற்றமிகும் தேகம் என்பது உடலாகும்.

சகோதநாதர் என்னும் யோக சித்தர் பாடிய பாடலில் இந்த தேகம் துற்கந்த வீசும் உடலாகும். இந்த தேகம் என்று அறிந்து நற்கந்தம் பெற சுகஞானம் தேடும் மார்க்க நெறி கண்டு அறிக என்று கூறும் பாடல் காண்க.

"துற்கந்தத் தாலெடுத்த தூலமிது பொய்யெனநீ
நற்கந்த மானசுக ஞானமயிமாங்குயிலே" - 33

சதோக நாத சித்தர் பாடல் — 142

மேலும் அகத்தியர் அந்தரங்க திட்சாவிதியில் இந்த தேகம் உல்லாசம் காண விழையும் தேகமாகும். மாசு என்று கூறப்படும். அழுக்கு மிகுந்து ஊறல் உள்ள தேகமாகும். அந்த தேகத்தின் ஊறல் என்ற களிம்பு என்ற களங்கம் நீக்கிவிட்டால் செம்பு போன்ற கனிமத்தின் ஊறல் அகற்றும் தன்மையும் பெறலாம் என்பதை தனக்கு தன் குருவான முருகர் தனக்கு அறிவுறுத்தினார் என்று தம் சீடனாகிய புலத்தியருக்கு ஓதும்பாடல் காண்க.

"உல்லாச தேகம் ஊறலற்று விட்டால்
உறுதியாய் தாம்பூர மூறல் போமென்று
எல்லைதனில் என்குருவும் எனக்கு உரைத்தார்
ஆதலால் புலத்தியனே உனக்காயச் சொன்னேனே - 152.

அகத்தியர் அந்தரங்க தீட்சாவிதி — 400.

சுந்தரானந்தர் என்னும் சித்தர் சூத்திர ஞானம் என்னும் நூலில் மனிதர்கள் மறைப்பது என்னவென்றால் தலையழுக்கான இந்த தேகம் சீசீ என்று கூறி மனதளவில் மாயையில் முழுகி வாழ்வார்கள். அதுவே ஞானம் என்றும் கூறி வருவார்கள். இவ்வாறு கூறும் இவர்கள் சுத்த மட்டை மாடு என்று சித்தர் கூறுகிறார்.

"மறைப்பதுதென்ன தலையழுக்கை சீச்சீ யென்று
மனந்தன்னில் மாயையாய் வாழ்வோமென்று
துறை முறையாயம் போதறத்தத்திற் போத மென்று
சொல்லுவார் மனமுறையார் சுத்த மாடு - 52.

சுந்தரானந்த சூத்திர ஞானம் — 80

Koviloor Digital Library



ஆணவத்தால் மரணம் உண்டாகும்:

நான் என்று கூறும் ஆணவத் தன்மை முழுதுமாக விலக்க வேண்டும். நல்ல பல நன்மைகள் செய்ய வேண்டும் என்பது கருவூராரின் வேண்டுகோளாகும். பாடல் காண்க.

"நானென்ற ஆணவத்தை நீக்க வேண்டும்.
நன்மை யென்ற காரியங்கள் செய்ய வேண்டும் - 7

கருவூரார் மெய்ஞ்ஞான சுருக்கம் — 51.

மேலும் உரோம மாமுனி சித்தர் அமுதகலை ஞானம் என்னும் நூலில் தான் என்ற ஆணவத்தை விலக்க மாட்டார். பிறருக்கு தரும் துன்பம், கோபம், தள்ளாதவர்கள் விரைவில் மரணம் என்ற பெரும் பதவியடைவர் என்பதை அவர் பாடல் மூலம் அறியலாம்.

"தானென்ற வாணத்தைப் போக்க மாட்டார்
தருதுன்பங் கோபத்தைத் தள்ள மாட்டார் - 41

உரோம மாமுனி சித்தர் அமுதகலை ஞானம் — 57.

சித்தர்கள் சாடி கண்டிக்கும் மனித இனங்கள் யார்?

காகபுசண்டர் என்பவர் மாபெருஞ் சித்தர். இவர் யுகம் தோறும் அழிவில் சிக்காதவர். யுகமுடிவில் காகவடிவம் கொண்டு எப்பொழுதும் அழியாமைப் பெற்றவர். அப்பெருஞ்சித்தர் யாரை கண்டிக்கிறார் என்பதை காணுங்கள்.

"நில்லென்றால் லோகத்தின் மனிதர் தாமும்
நிட்டையுடன் சமாதியுமே பொருந்தா மற்றான்
வல்லவர் போல் வேதகாவிய புராணம்
மந்திரங்கள் கோடா கோடியென்று
சொல்லவார் கோவிலென்றும தீர்த்த மென்று
திருடர்கள் போலலைந்த தலைந்து
திரிவான் மட்டை
வெல்தொரு மரம் போலலே வீழ்வான் பாரே - 22

பாரப்பா மலரெத்து லிங்கம் வைத்துப்
பார்த்தீப லிங்க மதைப் பணியா மற்றான்
வீரப்பா மணியாட்டிப் பூசை செய்து
வீணர்களுங் கத்தபம் போற் கதறுவார்கள்
தேரப்பா மலர்தனையே கிள்ளும்போது
செத்த சவம் போலாச்சு தெளிந்து பாரு
காரப்பா மனங் கொண்டு பரத்தினூடே
கண்டவர்கள் கயிலாசத் தேகந் தானே - 23.

தானென்ற பிரமமதை யடுத்திடாமற்
றாரணியி லனந்தமடா தெய்வமென்று
ஊனென்ற குருவென்றுந் சீடனென்றும்
உதயகிரி பாராதவுலுத்த மாடு
வேனென்ற பொய்களவு கொலைகள் செய்து
வேசியர் மேலாசை யுந்தான் விருப்பமாகக்
கோனென்ற குருபாத மடுக்கா மற்றான்
கூடுவான் நரக மதில் விழுவான் பாரே - 24

குறியென்ற வுலகத்திற் குருகள் தானும்
கோடி மறைவேத மெல்லாங் கூர்ந்துபார்த்து
அறியாமற் பிரமமதைப் பாராமற்றான்
அகந்தையாய்ப் பெரியோரை யழிம்புபேசி
விரிவான வேடமிட்டுக் காவிபூண்டு
வெறும் பிலுக்கா யலைந்தீவார் நாயைப் யோலே
பரியாச மாகவுந்தான் தெண்டுமேந்திப்
பார்தனிலே குறட்டு நடப்பான் பாரே - 34

பாரப்பா சீர்களை யழைப்பான் பாவி

Koviloor Digital Library

பணம் பறிக்க வுபதேசம் பகர்வோ மென்பான்
சூரப்பா பிரமநிலை காட்டாமற்றான்
ஆகாசப்பொய் களையுமவன்றான் சொல்வான்
நேரப்பா சீடனுக்குப் பாவமாச்சு
நிட்டை சொல்லுங் குருக்களுக்குத் தோஷமாச்சு
வீரப்பா அடங்கிநின்ற விடத்தைப் பாரான்
விதிபோலே முடிந்த தென்று விளம்புவானே - 35

காகபுசண்டர் மெய்ஞ்ஞான விளக்கம் — 80.

மாபெருஞ்சித்தர் காகபுசண்டர் உலகத்தில் பொய்யானவர் களையும், பொய்யுரை செய்து வேதங்கள் காவியங்கள் — புராணஙகள் அனைத்திலும் உழலும் மானிட இனங்களுக்கும், அதனை படித்து அதுவே மக்கள் மனதில் கிலேசம் உண்டாகுமாறும் கற்பித்து ம்க்களை திசை திருப்பி மாணத்தின் மடியில் உறங்க வைத்த சதிகாரர்களையும் கண்டித்து சாடுகிறார் என்பதை பாடலின் அமைந்த கருத்தாகும். அந்த பாடலில் பொருள்கள் காணலாம்.

இப்பொழுது அவர் கூறும் பாடலின் கருத்தைக் காணலாம். உலக மக்கள் புருவ நாட்டித்தில் நோட்டம் பார்கக் வேண்டும். சமாதி நிலையடைய முயற்சி எடுக்க வேண்டும். இதில் நாட்டம் செலுத்தாமல் இருப்பது வல்லவர் போல் வாய் ஞானம் பேசுவது. பொய்யுரை செய்த வேதங்ளை கூறி பிழைப்பது. காவிய புராணங்களைக் கொண்டு சொற்பொழிவு செய்து பிழைப்பிற்கு காசாக்குவது. மந்திரங்கள் கோடி கோடியானது என்று விளக்குவது. கோவில் குளம் — தீர்த்தமென்று அலைவது. திருடர்கள் போன்று அலைந்து அலைந்து திரியும் மட்டை மடையர்கள் இறுதியில் வேரோடு மரம் சாய்வது போன்று மண்டையை போட்டு மாள்வது என்பதாம்.

அடுத்து வரும் பாடலில் இலிங்கம் போன்று செய்து அதற்கு மலரெடுத்து போற்றி இந்த லிங்கம் பார்த்திப லிங்கம் என்று வீராப்பாக மணியினை ஆட்டி பூசை செய்து வீணா போனவர் கழுதைப் போல் கத்துவது.. மலர் கிள்ளியபோது அந்த மலர் செத்த சவம் மானது அறிந்து தெளிக.

அடுத்து வரும் பாடலில் பிரமம் என்ற பூரணத்தை அடுத்து நிற்காமல் உலகில் மிகுந்து காணப்படும் தெய்வமென்று கூறுவது, தோலுடம்பு என்னும் சீடரென்றும் கூறிக் கொண்டு, உதயகிரி என்ற பூரணததை காணாதுபோகும் உலுத்தமாடாகும். வேண்டுமென்று பொய்களவு கொலைகள் செய்வார். தாசிகளின் மேல் பெரும் ஆசையும் விருப்பம் கொள்வார். இறைவன் என்று கூறும் குருபாதம் அடுத்திருக்காமல் நரகத்தில் வீழ்ந்து மாண்டிவான் பாரே.

உலக குருக்கள் என்று தம்மை அறிமுகம் செய்துக் கொண்டு கோடி மறைகள் வேதங்கள் கூர்ந்து பார்த்து அதன் உட்பொருள் அறியாமலும் பூரணத்தின் மேல் நாட்டம் கொள்ளாமலும் மனத்தில் அகந்தைக் கொண்டு பெரியோர்களை (சித்தர்களை) அழிம்பு பேசுவார்கள். பொய் வேடம் புனைந்து காவி உடுத்தி வெதும்பு உலுத்தர்போல் பேசி நாயைப் போல் திரிவார்கள். பிரியமாக காலில் குறியீடிட்டு கையில் தண்டுகோல் பிடித்து நடப்பார்கள் என்பதர்ம.

மேலும் அடுத்த பாடலில் இதுபோல் போலியான நபர்கள் தங்களை சாமியார் என்று அறிமுகம் செய்து சீடர்களை அழைப்பான் பாவி சாமியார் பயல்கள். பணம் பறிக்க உபதேசம் செய்வோம் என்று கூறுவான். ஆனால் பூரணம் என்று கூறப்படும பிரமநிலை காட்டமாட்டான். ஆகாசமளவு பொய்களை அளப்பான். இந்த செயல் சீடனுக்கு பாவம் சேரும். நிட்டை சொல்லும் குருக்களுக்கு களங்கம் ஏற்படும். மானிடம் அடங்குநிலை அறியான். விதியை நொந்து முடிந்தது என்று கூறுவான். இவ்வாறாக உலக பொய்களில் உழன்று வாழும் மக்களுக்கு சித்தர் காகபுசண்டர் எடுத்துக் கூறுகிறார்.

ரோமதேவர் என்னும் சித்தர் தமது மருத்துவ நூலில் தேகத்தின் அறிவியல் அறியாத சண்டிமாடுகள், சிவவோடம் பற்றி தெரியாத திருட்டு மானிடர்கள்.

Koviloor Digital Library

அறுசுவை நீக்கா மக்கள். வாசி ஊறும் முறைய தெரியாத மக்கள் — பூரணம் என்ற தெய்வநிலை வணங்காத மக்கள் — அமுதம் பற்றி தெரியாது போன சவங்கள் — சமய மதம் பேசும் சில்லரை சாமியார்கள் பின் செல்லாது வாசியின் ஓட்டத்தின் நாட்டத்தில் மனமுன்றி பார்ப்பாயாக என்று ஓதும் உண்மை நிலை பாடலைக் காண்க.

"தேகமென்ற மறியார் சண்டிமான்பர்
சிவவேடந் தன்னை யறியார் திருட்டு மாண்பர்
ஆகமென்ற அறுசுவையை யறியா மாண்பர்
அறிந்தூதத் தெரியாத அசட்டு மாண்பர்
பாகமென்ற பூரணத்தைப் பணியா மாண்பர்
பாலறியாப் பால் பொசித்துப் பதைக்கு மாண்பர்
வாகுடனே சமயமதம் பேசும் மாண்பர்
வஞ்சருடன் செல்லாதே வாசி பாரே - 36

இராமதேவ வித்தர் மருத்துவநுட்பம் — 80.

போகர் என்ற மிகச் சிறந்த சித்தர் காவியம் 7000ஆம் என்னும் நூலில் நற்செயலில் ஈடுகொடுக்க முடியாது போய் மாண்டவர்கள் அனேகங்கோடியாம் என்பதை,

"ஏறவே ஐம்புலனும் உலக்கையாக
இடும்பான ஆங்காரம் உரலுமாக
ஆறவே ஆசை அஃது உருவமாக
அழும்பான மனதை உள்ளே மாட்டிக் கொண்டு
மூறவே அசையாதே இடித்துச் சண்ணி
முழுமோச மாக்கி யல்லோ மிரளப்பண்ணும்
தேறவேயோக மொருஞானம் ரெண்டும்
தெரியாதே இறந்தவர்கள் கோடி தானே - 23

போகர் காவிலயம் — 7000.

புலன் ஐந்தும் உலக்கையாக நிறுத்திட — தீமை உண்டாகும் ஆங்கார குணம் உரலுமாகவும் — ஆசை என்னும் குணம் வடிவமெடுத்து தீமை தரும் மனதை உள்ளே சிக்கிக் கொண்டதை உறுதியான உள்ளத்தோடு இடித்துத் தள்ள முடியாமல் மிகுந்த ஏமாற்றம் தந்து மிரண்டுபோய், யோக நெறி ஒன்று ஞான நெறி ஆக இரண்டும் தெரியாது போன மானிடர்கள் இறந்து போனது கோடிக்கணக்கானது என்று கூறுகிறார்.

மாயையை வெல்வது மிகக் கடினம்:

மச்சமுனி சித்தர்கள் தூல ஞானம் என்னும் நூலில் உலகம் முழுதும் பரவியுள்ளது மாயயாகும். அதிலிருந்து வெளியேறுவது கடினமாகும் என்பது சித்தர்களின் கருத்தாக உள்ளது. அதனை வென்றவன்தான் முத்தி பெறுவான்.

"மோச மென்ன ஜெக மெல்லாம் மால்மாயம்
முத்திவாசலடைத்து பெண் மயம்
வாசமென் சமுசாரப் பொன் மயம்
மயக்க மென்ன திரோபவ மாயந்தானே - 6

மச்சமுனி தூலஞானம் — 10.

உலகம் முழுதும் மால் என்ற மாயையால் சூழப்பட்டுள்ளது. முத்திக்கு தடையாய் அமைந்தது பெண் என்ற மாயை. குடும்பமென்ற வாசனையின் பொன் அணி மாயை. திரோபவ மாயையால் மயக்கம் தந்தது என்று ஓதுகிறார்.

மேலும் சட்டைமுனி ஞான விளக்கம் என்னும் நூல் இந்த பரவிய உலகம் முழுதும் உள்ள மாயை அகற்றுவது என்பது முடியாது. அது மெத்த கடினமானது என்று கீழ்வரும் அவரின் பாடலால் அறியலாம்.

"உலகமதிற் பிரபஞ்ச மாயை தள்ள
ஒருவரால் முடியாது கடினமெத்தா - 22

சட்டை முனி ஞானவிளக்கம் — 50

உலகில் யாரை நம்மிலிருந்து நீக்க வேண்டும்;

கடைப்பிள்ளை சித்தர் பஞ்சாட்சு சுருக்கம் என்னும் நூலில் உலகில் யாரை எல்லாம் தள்ளிவைக்க வேண்டுமென்று கூறுவது அறியலாம்.

தன்னறிவு இல்லாத சமயத்தோர்கள், உள்ளுணர்வு இல்லாத உறுப்பினர்கள், உறுதியுள்ள வாசிநிலை அறியாதவர்கள், கள் — அபின் — அருந்தும் மோகக்காரர்கள், கால்பதறி வாய் புலம்பும் கசடர்கள், மேற்கண்டவர்களைப் பற்றி நினைவு கூறுவது வேண்டத்தக்கதல்ல. மீள் —

Koviloor Digital Library

இறைச்சி எடுத்துக் கொள்ளும் மனிதர்கள் ஆக இவர்களை ஒதுக்கி வைக்க வேண்டும்.

தமக்கு பகையாக உள்ள பொருள்கள் தன் மனசாட்சிக்கு விரோதமானதை தள்ளி வைக்க வேண்டுமென்று கூறுகிறார்கள்.

"தள்ளுவது யென்னவென்று யென்ன வேண்டாம்
தன்னறிவு ல்லாத சமயத்தோரே
உள்ளணர்வு யில்லாத உருப்பேதன்னை
உறுதியுள்ள வாசிநிலை அறியா மற்றான்
கள்ளுடனே அபினருந்தி மோகங்க கொண்டு
கால் பதறி வாய்புலம்புங் கசடர் தம்மை
எள்ளளவு மனந்தனிலே நினைக்க வேண்டாம்
என்றுடனே மீனிறைச்சி சுண்ணந் தள்ளே - 23
தள்ளடா சத்துருவாய் நின்ற தெல்லாம்
தன்மனளே சாட்சியதாய்த் தள்ளுதள்ளு - 24

கடைப்பிள்ளை பஞ்சாட்சரசுருக்கம் — 30.

செத்தால் முத்தி இல்லை:

காகபுசண்டர் தாம் ஆக்கிய பெருநூல் காவியத்தில் மனிதன் இறந்தால் அது முத்தியில்லை என்று கூறுவதை அறிக.

"சொல்லுவார் சாத்திரத்திற் செத்த பின்னே
சோம்பேறி முத்தி யென்ன சத்திற் கூடா
வில்லுவார் தெய்வபதம் முத்தியென்றும்
மேன்மேலும் செத்த பின்னே சொர்க்கமென்பார்
தள்ளுவார் சடலத்தை நாற்றமென்றே
தன்னுயிரின் சத்துருவே தோசியோர்கள் - 390.

காகபுசண்டர் பெருங்காவியம் — 1000

சாத்திரங்கள் கற்றவர்கள் செத்தால் முத்தியென்று சொல்லும் சோம்பேறிகள் அது முத்தியல்ல என்று பேசுவார்கள். அவர் தெய்வ பதமடைந்து முத்தி பெற்றார் என்றும் மேன்மேலும் கூறி சொர்க்கம் என்பார்கள். சடலம் துற்நாற்றம் எடுக்கும்போது அதனை அகற்றும்படி கூறுவார்கள். உயிருக்கு உலை வைக்கும் குற்றமுள்ள பகைவராவார்கள் என்பதை அறிக.

குதம்பை சித்தரும் தமது பாடலில் செத்தவர்களுக்கு முத்தி ஏற்படாது என்று கூறும் பாடல் காண்க.

"செத்துப் பிறக்கின்ற தேவைத்துதிப் போர்க்கு
முத்தி தானில்லையடி குதம்பாய்
முத்திதா னில்லையடி - பாடல் 3

குதம்பை சித்தர் பாடல் — 246.

உலக மக்கள் சாவதை தடுக்க சித்தர்கள் சாகாத கல்வியைக் கூறினார்கள். ஆனால் வேதவியாசன் சாவதற்குரிய பொய்யான வேதங்கள் — இதிகாசங்கள் — புராணங்கள் ஆக இவைகள் தொலைகாட்சியில் காட்டப்படும் மெகா தொடர்கள் போல் எழுதி உலக மக்களை திசை திருப்பி சாவதே சிறந்த முத்தியாகும் என்ற செய்தியை எழுதியது மக்களை திசை திரும்பிய செய்தியைத்தான் காகபுசண்டர்,

"சாகாமல் இருப்பதற்கு கல்வி யுண்டு
சாக்காடு கொள்வதற்கும் விவரம் உண்டு"

- என்று ஓதியதின் உண்மையறியலாம். மக்கள் அனைவரும் சாகாத கல்வயை சித்தர்களின் வழியே கற்று உணர வேண்டும். வேதங்களும், இதிகாச புராணங்களும் தள்ளிவிட்டு மனவுறுதி கொண்டு சாகாமல் இருக்கும் வழியை தேட வேண்டும் என்பதே இந்த செய்தியின் உட்கருத்தாகும். மக்கள் அனைவரும் சாவதை விரும்புவதில்லை. திருமூர்த்திகளும் முத்தி தர முடியாது. மனிதன் தன்னறிவு கொண்டு தன்னை யறிந்தால் முத்தி மூலமாக அமையும் என்பது இனிய செய்தியாகும்.

"அறிவை நீ அறிந்தாலே பிறவி போச்சு
அடுத்தாப் போற் பரமபதம் நிலையுமாச்சு - 13

கொங்கணர் மெய்ஞ்ஞானம் — 13.

என்னும் நற்சொல்பாடல் மூலமறிக.

சாவிலிருந்து மீள சாகாத கல்வி கற்று முத்தி நிலைபெற்று திகழ இறைவனின் திருவருள் முன்னின்று ஆசிகள் வழங்க வேண்டுமென்று வேண்டி இந்த நற்செய்தியை முடிக்கப் படுகிறது.

"ஊனென்ற வுடம் பெடுத்தாற் "சாகாக்கல்வி"
யுடையவனாயாக வென்றாலு ன்னைப் பாரு" - 7

நொண்டி சித்தர் சிவயோகம் — 16

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

6. பிறப்பும் இறப்பும் நிகழ்த்தும் புரியட்டகம்

"சாகாமல் இருக்க கல்வி உண்டு
சாகாடு கொள்வதற்கும் விவரம் உண்டு" -
காகபுசண்டர் பெருநூல் - 1000
"நாடப்பா சாகாத கல்வி தன்னை
நலமாகக் கற்பதற்கு வுன்னை தேற்று" - 7
இராமமாமுனிவர் சிவயோக ஞானம்
— 18

உலக மக்கள் மரணத்தின் விளிம்பிற்கு வழிகாட்டியன் வேதவியாசன். இந்த வியாசன் செய்த வேதங்கள் — இதிகாசங்கள் — புராணங்கள் — உபநிடதங்கள் அவனால் எழுதப்பட்டு உலக மக்களிடையே பரவவிட்டு அவர்களை மாள்வதற்கு பல விவரங்கள் தொகுத்து பொய்யான விவரங்கள் மெய்ப்போல் எழுதி உலகிடையே இன்றைய தொலைக்காட்சி தொடர்களைப் போல் தொகுத்து விட்டதால் மக்கள் அதனை நம்பிப் படித்து மாண்டு விடுகிறார்கள். ஈசனுக்கு இரண்டு மனைவியர், விஷ்ணுக்கு எட்டு மனைவியர், பிரமனுக்கு மூன்று மனைவியர் என்று எழுதி, அவர்கள் தான் முத்திக் கொடுக்கும் தெய்வங்கள் என்று அடுக்கடுக்கான பொய்கள் மெய்ப்போல் தோன்றுமாறு எழுதி மக்களை தவறான பாதைக்குக் கொண்டு சென்று திசைதிருப்பியவன் வேதவியாசனாவான். செத்தாலும் முத்திதான் என்று பொய்யைக் கூறி மக்களை இறப்புக்கு காரணமாய் இருந்து வழி வகுத்தவன் என்பதை சித்தர் நூல் ஆய்வாளர்கள் மட்டும் தான் அறிவார்கள்.

சித்தர்கள் வேதவியாசன் எழுதிய பொய்யான விவரங்கள் தந்தமையால் "அவனை உண்மை கூறும் குழுவிலிருந்து நீக்கப்பட்டான். அதன்பின் சித்தர்கள் மக்களுக்கு சாகாத கல்வி வழங்கும் வழிமுறைகள் குருமூலம் அறிந்துக் கொள்ள வேண்டிய நெறிமுறைகள் நூல்களாகத் தொகுத்து ஓலை சுவடியில் எழுதி வைத்தனர். இதில் பெரும்பாலான நூல்கள் தென்திசைக்குகையில் பாதுகாப்பாக மக்களுக்கு பயன்படுமாறு இருப்பு செய்து சேமித்து வைத்தனர்.

பெரும்பாலான நூல்கள் மேலை நாட்டினர் எடுத்து சென்று விட்டதால் மீதமுள்ள சில நூல்கள் அச்சுக்கு கொண்டு வந்து இன்று நடமாடிக் கொண்டிருக்கின்றன. இன்னும் பல சிறந்த நூல்கள் தமிழிலுள்ளதை வடமொழியில் எழுதி வைத்து, அந்த தமிழ்நூல் சுவடிகள் எரித்து வருகின்றனர். இன்று பெரும்பாலான தமிழ் ஏட்டு ஓலைச் சுவடிகள் தஞ்சை கும்பகோணம் பகுதிகளில் ஞாயிறு சந்தைகளில் காணலாம். இதுபோல் நூலகத்திலுள்ளவர்கள் மொழிவெறியினால் இதுபோன்ற நிகழ்வு நடைபெற்று வருவதாகச் சொல்லுகிறார்கள்.

உலக மக்கள் மரணப்படியிலிருந்து விடுபட வேண்டி போகநாத மகாசித்தர் தாம் எழுதிய செவியருளுரை ஞானம் என்னும் நூலில் புரியட்டம் கடந்து நின்றால் மக்கள் மரணப்பிடியிலிருந்து மீண்டு பூரணத்தில் நிலைத்து முத்தி பெறுவார்கள் என்றும் புரிட்டம் கடக்காத மக்கள் மாண்டு போவார்கள் என்றும் போகநாதர் செவியருள் உரை ஓதுகிறார். மக்கள் இறப்புக்கும் பிறப்புக்கும் காரணமாக இருப்பது புரியட்டம் என்ற தொடர் நிலையாகும். இனி இதனைப் பற்றி அறிய முற்படுவோம்.

புரியட்டம் என்றால் என்ன. அது எங்கேயிருந்து தொடர்கிறது. எங்கு நிலைப்பெறுகிறது. எப்படி இருந்தால் மரணம் ஏற்படும். எதை கடந்து நின்றால் மரணம் நிகழாது என்று அறிய ஓர் தெளிவான ஆய்வு மேற்கொள்வோம்.

Koviloor Digital Library

புரியட்டத் தொடக்கம் ஏறுநிலையி லிருந்து பார்க்கும் போது ஈசன் (உருத்திரன்) சிகாரம் என்று ஓதுகிறார். அதன் மேல் வகாரம் மாஈசன். (மகேஸ்வரன்) இதற்குமேல் யகாரம் சதாசிவம். சதாசிவத்தின் மேல் விந்துநிலை. விந்து நிலை மேல் நாத நிலை. நாதநிலை மேல் சத்தி நிலை. அதன் மேல் சிவன் நிலை சக்தி சிவநிலைக்கு மேல் வராட்டியன். வராட்டியனின் மேல்நிலை வரை என்ற கேசரிநிலையாகும். சிகார ஈசன் நிலையிலிருந்து வராட்டியான் நிலை வரை புரியட்டம் என்பார்கள். புரியட்டமாக விளங்கும் மாயாநிலை என்னும் மால் வடிவ நிலையிலிருந்து இறப்பும் பிறப்பும் நிகழ்த்துகின்றன. இதற்கு புரியட்ட மார்க்கம் என்பர். மேற்கண்ட கருத்தை வலியுறுத்தும் போகரின் செவியருள் ஞான உரையைக் காண்க.

"போ வென்று துதிக்குள்ளே புரியட்டந்தான்
புகழான சூட்ச மென்ற தேகங் கேளு
சேவென்ற சிகாரந்தான் சிவன்றானென்று
சேர்ந்து மேல் வகார மயேஸ் வரந்தா னென்று
தாவென்ற அகாரம் சதாசிவன் தானொன்று
சார்ந்து நின்ற விந்து வதன் மலே மாமே" – 117

"மேலான விந்துவின் மேல் நாத மொன்று
மிக்கவதின் மேற்சக்தி யொன்று கேளு
சாலான யிதன் மேலே சிவன் தானொன்று
சக்தி சிவனா ரென்னில் வராட்டியந்தான்
பாலான வதின் மேலே பரைதா னொன்று
பாருமிந்த எட்டிலோர் புரியட்டந்தான்
மாலான எட்டில் பிறப்புமாச்சு
வாறா புரியட்ட மார்க்கந்தானே — 118

அடுத்து வரும் பாடலில் இந்த புரியட்ட முறையான வழிகள் அனைத்தும் ஓர் நாடகமாகும். கூத்தாகும். மாபெரும் கோடிக்கணக்கான பிறவிகள் தோன்றி விளையாடுமிடமாகும். புரியட்டக் கூத்து நால்வகை யோனியிலும் ஏழ்வகை தோற்றத்திலும் எல்லாயிடத்தும் விரிந்து நின்று கூத்தாகும். அது உலகமாக விரியும். இந்த புரியட்டக் கூத்து வழிவகை அறிந்து அதனை கூர்ந்து ஆய்ந்து பார்க்காதவர்கள், இதன் முடிவை சிந்தை செய்து புரிந்துக் கொள்ளாதவர்கள் பிறவி எடுப்பார்கள். புரியட்டக் கூத்தையின் நிலை ஆய்ந்து அறிந்தவர்கள் அதற்கு மேல் நிலையான இடங்கள் கடந்து நிற்கும் வழிமுறைகள் கண்டு நிற்பார்கள் என்பதை கீழ்வரும் பாடலால் காண்க.

"மார்க்கந்தான் புரியட்டக் கூத்தே கூத்தே
மகத்தான கோடி சென்ன மெடுத்தே யாடும்
ஏர்க்கபுரி யாட்டத் தேழ்வரை யாந் தோற்றம்.
யெங்கும் விரிந்தாடப்பிர பஞ்சமாச்சு
மார்க்கந்தான் புரியட்டப் பரவர் கூத்துப்
பண்பாக விதையறிந்து கூர்ந்து பாரார்
தீர்க்கந்தான் பார்த்தறிந்து பெரியோர் தாமும்
திறத்தோடே தள்ளியதின் மேல் நிற்பாரோ – 119

இந்த பாடலில் புரியட்டத் தேழ்வரை யாந் தோற்றம் என்று கூறப்பட்டுள்ளது. சிலர் ஏழ்வகை தோற்றம் என்றும் பொருள் கூறுவர். அது கூறுவது பொருத்தமில்லை. இருந்தாலும் மேல்கண்ட முறையே யாமும் அதனை யொட்டி பொருள்கூறியுள்ளேன். அடுத்து ஏழுவரை என்றால் 1. ஈசன், 2. மாஈசன், 3. சதாசிவன், 4. விந்து, 5. நாதம், 6. சத்தி, 7. சிவன், இந்த வகைகள் வரை பிறவித் தோற்றமும் மறைவும் உண்டாகும் என்பதாம் மேற்கண்ட வரைகள் ஞானிகள் கடந்து பரைஞான சேகரியை அடைந்தால் இறப்பு உண்டாவதை தடுத்துக் கொள்ளமுடியும் என்று சித்தர்கள் உணர்ந்து அறிந்து அனுபவித்து கூறியுள்ளனர் என்பதை சாகாக்கல்வி கற்க முயல்வோர் உணரவேண்டும்.

அடுத்துவரும் பாடலில் பரை என்று கூறப்படும் கேசரியின் மேல்வரை முப்பாழாகும். அதில் ஒன்று வெளி பாழாகும். அதற்கு மேல் வரை ஒளிபாழாகும். இதனைக் கடந்து சென்றுப் பார்த்தால் வெளிவொளிப்பாழாக நிற்கும். இந்த மூன்று வரைகள் கடந்து அனைத்துக்கு பரையானவள் நிற்பாள். தனித்தன்மை பெற்ற நல்ல தமிழ் கூறும் மொழியுடையவள் தமரின் வாசல் வரை தனி பரந்தன்னில் போதமாய் (ஞானமாய்) ஒன்றாகவே பார்க்க வேண்டும். இந்த

Koviloor Digital Library

வரை நிலையை கூறும் பாடல் காண்க.

"நிற்பான பரை மேலலே முப்பாழ் கேளு
நீங்கியொன்று வெளிப்பாழா மதுக்கு மேலே
உற்பான வொளிபாழாய் நிற்கும் பாரு
உயர்ந்து மேலதைத் தாண்டி யுரைக்கக்கேளு
விற்பான வெளியொளிப் பாழ்விரைந்து பாரு
மிகுமூன்று வரை தாண்ட அனைத்தாய்நிற்பான்
தற்பான மொழியுடையாள் தமரின் வாசல்
தனிப்பரந்தான் போதமது வொன்றாய்ப் பாரே"
- 120.

மேலும் ஓர் பாடலில் ஞானம் என்பது அவருக்கே உரியது. முழுமைபெற்ற தண்டம் என்று அவனுக்கு உரியது. சேதம் என்று கூறப்படும் அவனுடைய அடுக்கு நிலை அவனுடைய மிகுஞானமாகும். அதனை அறிந்தால் தமர்வரை சேர்க்கையுண்டு. ஆதம் என்று ஓர் ஆதரவான நெருக்கம் கண்டவர்களுக்கு அது ஓர் அகண்ட வீதியாகும். அங்கு ஆதியந்தம் ஒன்றுமில்லை. அறிய முடியாத நேதமும் போதமும் என்று கூறுவது மறையும். மனதை உறுதிப்படுத்த (குரங்கு மனம்) குணத்தைக் கட்டுப்படுத்தி நிற்க வேண்டும். மனதை சிதறாமல் நிற்க வேண்டும் என்று கூறப்படுகிறது பாடல் காண்க.

"போதமது தானென்று மவர்கே பாகு
பூரான தண்டமென்ற தவட்கே பேரு
சேதமென்ற தவளடுக்க அவளே போதம்
சேர்ந்தணுகில் தமர்க்குள்ளே சேரலாகும்
ஆதமது கண்டவர்க ளகண்ட வீதி
ஆதியிலை யந்த மில்லை யறியப் போகா
நேதமது போதமது வென்ன சாகும்
நேரறிந்து மனக்குரங்கு நேரொட்டாதே - 121

அடுத்து வரும் பாடலில் பரையின் அடுக்குநிலை வரை ஓர் சிவயோகி சென்று அப்பொழுது மரணம் நிகழ்ந்தால் மீண்டும் கருவில் வந்து பிறவி எடுப்பான். அப்படி பிறந்தாலும் அந்த சிவயோக நிலையில் எப்படி இருந்தானே அதே போல் தான் இருப்பான். அந்தப் பிறவியில் மீண்டும் முயற்சி எடுத்து பரை அடுக்கு நிலைக் கடந்து வெளிப்பாழ் என்று கூறப்படும் அகண்ட பகுதியின் கண்ணுள்ள சிவசத்தியை வாழ்த்தி வணங்கினால் பிறவி வருவதைத் தடுக்கும் என்ற கருத்தை வலியுறுத்தும் பாடல் காண்க.

"நேரா தென் றிசைத்த சிவயோகி தானும்
நிலைத்துன்னிப் பரையளவு மோடினாலும்
காரான பிறவிவந்து யெய்து மெய்தும்
கருவில் வந்து பிறந்தாலும் யோகியாவான்
பாரான யளவு புரியட்டமாச்சு
பண்பான வரை கடந்து வெளிப்பாழுற்றால்
ஆரான வெளிப்பாழை யகண்ட மென்று
அர்ச்சித்துப் பார்த்தாக்காற் மிறக் கொட்டாதா - 122

அடுத்து வரும் பாடலில் ஒருசிவயோகியானவன் வெளிப்பாழ் யென்று கூறப்படும் நிலையில் நின்று அதை மீண்டும் ஓர் மேல்நிலை வரையைக் கடந்து அதனில் மயங்கியும் ஏங்கியும் நின்று மீண்டும் அதன்மேல் நிலையும் கடந்து இதுவென்று கூறும்நிலை அதுவல்லயென்று உணர்ந்து அதற்கும் மேல்வரை கடந்து நின்று இருக்க அந்த வரையை "உன்மனை" என்ற சக்தியின் நிலை என்று நினைப்பான். அந்த நிலையை கோடி சூரியர்கள், ஒளியும் கோடி வன்னியென்ற தீயின் சுடர் நிலையும், மதியென்ற சந்திரனின் ஒளியன் காந்தி நிலையும், ஆக மூன்றும் இணைந்து பெரும்சோதியின் காந்தி நிலையை பரிந்து பார் என்றும் ஓதப்படும் அற்புத அடுக்கு நிலையைக் காண்க.

"ஏதென்று யிறக்காமலதுக்குள் நின்று
இன்னமொரு வரையேற விதுவே யென்பான்
வாதென்று அதுக்குள்ளே மயங்கி யேங்கி
மற்று மொரு வரையேறி விததா னென்பான்
தீதென்று வரை திறந்து அதன் மேலேறச்
சேர்ந்து நின்று "வுன்மனை"யையிதுதானென்பான்
யாதென்று ரவிகோடி வன்னி கோடி
யறிவான் மதிகோடி பரிந்து பாரே - 123

அடுத்துவரும் பாடலில் முப்பாழ் யடைந்தபின் உமக்கு மலர்ச்சியாகும். பூதம் என்பது பூ + தம் என்று பிரித்து பார்க்க வேண்டும். பூவென்றால் மலர்தல் என்று பொருள். தம் என்றால் தகராகாசம் என்று பொருள். தகரம் என்றால் நுட்பம் என்று கூறப்படும். இதனை அறியாயிடம்

Koviloor Digital Library

என்றும் கூறுவார்கள். முப்பாழ் கடந்து நின்ற ஒருவனுக்கு ஏமசித்தி உண்டாகும். இரண்டாவது பாழைக் கடந்தால் எட்டெட்டு அறுபத்து நாலு சித்திகள் உண்டாகும். சித்தன் என்பான். மூன்றாம் பாழைக் கடந்து வந்தால் மூச்சு என்று சொல்லப்படும் வாசியானது பிறந்தயிடம் நரிந்து (நலிந்து) நால் (நான்கு) நின்ற போகுமிடம் கண்டால் நமன் என்று கூறப்படும் எமன் நடுகுவான். அங்க மேல் நோக்கிய கோணம் நாட்டி வைக்கவும் என்று கூறும் பாடல் காண்க.

"பரிந்து பார் முதற்பாழிற் பூதம் பூதம்
பரிவாகச் சித்தித்தால் வாதியாவான்
எரிந்து பாரிரண்டாம்பா ழுடுத்திட்டாக்கால்
எட்டெட்டு மறுபது நாலான சித்தன்
முரிந்து பார் மூன்றாம்பாழ் புக்கினாக்கால்
மூச்சான வாசியது பிறந்த தானம்
நரிந்து நால் பரிந்துபோ மிடமுங் கண்டால்
நமனடுங்கும் கோணலிடம் நாட்டிடாயே - 124

அடுத்து வரும் பாடலில் முப்பாழான வெளிப்பாழ், ஒளிப்பாழ், வெளியொளிப் பான இவைகள் கடந்து நிர்குணப்பாழ் என்று கூறப்படும் நிராதாரந் தன்னில் சொக்கி நலமாக குழைந்து உட்சென்று நிலைப்பானால் தான் என்ற பெயர் பெருவர். சாத்திரங்கள் என்று சொல்லப்படும் செய்திகள் யாவும் பொளிழந்து போகும். சூட்டிப்பார் சுழித்தியைப் போல் உறக்கமாச்சு. துலங்குவார் மாடுபோல் ஒன்றும் காணார். தட்டிப் பார்த்தால் சடம் போகா படல் புகுந்தால் தனித்த சிவன் போல் இன்பமுற்று வாழ்வாய் நீ என்றும் சிவயோகி சிவனாவாய் என்றும் கூறும் பாடல் காண்க.

"நாட்டிப்பார் நிராதாரந் தன்னிற் சொக்கி
நலமாகக் குழைந்துள்ளே புகுந்தாயானால்
தாட்டிப் பார் தானென்ற நாமம் போச்சு
சாஸ்திரத்தி லாராய்ந்த நாமம் போச்சு
சூட்டிப்பார் சாழுத்தியைப் போ லுலறக்கமாச்சு
தூங்கவார் மாடுபோ லொன்றுங் காணார்
தாட்டிப்பார் சடம் போகாபடல் புகுந்தால்
தனித்த சிவன் போல் வாழ்வாய் நீயுங்காயே"
- 125.

அடுத்துவரும் பாடலில் நிகழ்த்திய நாடகத்தைக் கண்டு கருத்துரைத்த பின்புதான் வாதம் பார். பாணம் கொள்ள ஆதாரங்கள் நோக்கியேறு. பரத்தால் ஆடியக் கூத்துத் தானும் நீங்கள் வாசியுட நட்பு கொண்டு அதனைக் கண்டால் நடனக் கூத்தானது நம் கண்முன் காட்சிக்கு வரும். தகராகாசத்தின நடனத்தின் கூத்ததுவும் கண்டால் தடிந்ததோர் மானம் நேர்வது பொய்யாகும். தனித்த சிவன் போல் என்றும் வாழலாம் என்றுக் கூறப்படுகிறது.

இக்கருத்தை வலியுறுத்தும் பாடல் காண்க.

"காணவே ஆடியதோர் கூத்தைப் பார்த்துக்
கருத்துரைத்த பின்புதான் வாதம் பாரு
பாணவே ஆதாரம் நோக்கி யேறு
பரத்தாலாடியதோர் கூத்தைத் தானும்
நாணவே வாசியுட நடப்பைக் கண்டால்
நடனமாங் கூத்ததுவுங் கண்முன்காணும்
தாணவே நடனத்தின் கூத்துக் கண்டால்
தடிந்ததோர் சாவதுவும் பொய்யாயப்போம் - 126

என்று சித்தர்கள் கூறும் பாடலால் அறியலாம். புரியட்ட நிலை என்று கூறப்படும் அடுக்குநிலைகள் அதாவது ஈசன்(உருத்திரன்), மாஈசன் (மகேசன்), சதாசிவன், விந்து, நாதம், சக்தி, சிவன், வராட்டியான், பரை ஆக இவைகள் கடந்த ஒருவன் தான் மரணத்தை சந்திக்க வேண்டியிருக்கும் என்று கூறப்படுகிறது. ஒரு சிவயோகி பரையென்னும் அடுக்கு நிலைவரை வந்து மரணம் நிகழ்ந்தால், அச்சிவயோகி மீண்டும் கருவில் பிறந்து அதே நிலையில் சிவயோகியாகவே இருந்து முப்பாழ் கடந்து நிற்குணப்பாழில் நின்றால் மரணம் பொய்யாகும் என்று கூறுகிறது. மறுபிறவியில்லை அதுவே அவனுக்கு கடைசி பிறவியாகும்.

மேற்கண்ட உண்மைகள் எல்லாம் மறைத்து வேதவியாசன் என்ற நபர் பொய்யான செய்திகள் திரட்டி மெய்ப்போல் தோன்றுமாறு தனக்கென்று தனி வேதங்கள் — புராணங்கள் — இதிகாசங்கள், உபநிடதங்கள் எழுதித்

Koviloor Digital Library

தள்ளினான். இன்றைய தொலைக்காட்சி தொடர்கள் போல் அன்று சொன்ன பொய்கள் இன்று உண்மையென்று நம்பி ஏமாந்து மரணத்தின் பிடியில் சிக்கி மாண்டு வருகிறார்கள். அவன் செய்த நூலை நம்பி படித்து மரணத்தின் கிடுக்கிப் பிடி மாட்டிக் கொண்டு மாய்ந்து மடிகிறார்கள். இன்றைய மடங்களின் அலுவலகர்களும் அதன்பிடியிலிருந்து விலகிச் செல்ல வழி தெரியாமல் மாண்டு வருகின்றனர். செத்தாலும் முத்தித் தான் என்று கூறும் வரட்டு கவுரவ வார்த்தை சித்தகளிடையே எடுப்படாது. அதனால் தான் காகபுசண்டர் என்னும் மாபெருஞ்சித்தர்

"சாகாமல் இருக்கக் கல்வி யண்டு

சாக்காடு கொள்வதற்கும் விவரமுண்டு" – என்று கூறுகிறார். சாகாத கல்வி சொன்ன சித்தர்கள் சிறந்தவர்கள், சாகாட்டிற்கு வழிகாட்டிய வியாசன் சொன்ன பொய்யான வேதங்கள் — புராணங்கள் — இதிகாசங்கள் உபநிடதங்கள் மெய்ப்போல் தோன்றுமாறு விபரங்களானச் செய்திகள் தந்த சிறந்ததா? என்று சிந்தை செய்து ஆய்ந்து சீர்த்தூக்கிப் பார்த்தால் அறியலாம். எந்த தெய்வங்களும் யாருக்கும் முத்திதரும் தகுதியில்லை. தருவதாகக் கூறுவது எல்லாம் பொய்யான செயதியாகும்.

எனவே ஒவ்வொரு தனிமனிதன் சாகாத கல்வி பயின்று தானாகவே முன்வந்து தன்னறிவு பயன்படுத்தினால் சித்தர்கள் வழிகாட்டுதல் கிடைக்கும். அவர்களின் வழிகாட்டுதல் படி நடந்தால் சாகாமல் என்றும் பெருவாழ்வுப் பெற்று பயனடைந்து முத்திப் பெற்று, முத்தியின் அனுபவத்தால் சித்தியும் அடைந்து சித்தன் என்று பெயர் பெற்று வாழலாம்.

வடலூர் வள்ளல் பெருமான், தாம் பெற்ற முத்தியும் சித்தியும் பற்றிக்கூறும் பாடல் காண்க.

"முத்தியைப் பெற்றேன் அம்முத்தியினால் ஞான

சித்தியை உற்றேன் என்று உந்தீபற

சித்தனும் ஆனேன் என்று உந்தீபற – அருட்பா

– 4904.



நமது வடலூர் வள்ளல் பெருமான் முதலில் முத்தி பெற்றார். முத்தியின் அனுபவப் பயனால் ஞானசித்திகள் அடைந்தார். அடைந்ததால் சித்தன் என்று பெயரும் பெற்றார். இஃது முடிவான நிலை. அவர் பெற்ற அரும்பெரும் சித்திகள் அடுத்து வரும் அருட்பாவில் காண்க.

வள்ளல் பெருமான் பெற்ற சித்திகளை, கரும சித்தி, யோக சித்தி, ஞான சித்தி என்று மூன்றுப் பிரிவாக ஓதுகிறார்.

மூவகைச் சித்தியின் முடிவுகள் முழுதும்
ஆவகை எனக்கருள் அருட்பெருஞ்சோதி
கருமசித்திகளின் கலைபல கோடியும்
அரசு எனக்கருள் அருட்பெருஞ்சோதி
யோகசித் திகள்வகை உறுபல கோடியும்
ஆகஎன் றெனக்கருள் அருட்பெருஞ் சோதி
ஞானிசித் தியின் வகை நல்விரி வனைத்தும்
ஆனியின் றெனக்கருள் அருட்பெருஞ்சோதி –
அருட்பா அகவல் அடிகள் 234-46

மூன்று பிரிவாகக் கூறப்படும் சித்திகளில் முடிவானது ஞான சித்தியாகும் வள்ளற்பெருமான் முடிவான ஞானசித்தி பேறறை "ஞான சித்தி பெற்றார்." என்று குறிப்பிட வேண்டும். இதனை வள்ளர் பெருமான் "சித்திவளாத் திருமாளிகையில் திருக்காப்பிட்டுக் கொண்டு ஞானசித்தி பெற்றார்" என்று சன்மார்க்கம் சார்ந்தோர். ஓதுகிறார்கள்.

ஆகவே சாகாத கல்வியின் நோக்கம் தனி மனிதன் ஒவ்வொருவரும் அக்கல்வி கற்று மரணத்தை வென்று முவ்வகை சித்திகளையும் பெற்று முடிவான ஞான சித்தியும் பெற்று அருட்பெருஞ் சோதியாகவே திகழ்வதே சாகாத கல்வியின் முடிவான நோக்கமாகும் என்ற செயதி அருளால் உணர்ந்த எடுத்துக்காட்டிய இனியச் செய்தி நிறைவடைகிறது.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

7. ஞானத்திற்கு தடையாக உள்ள மும்மலம்

உலகில் பிறக்கும் அனைத்து உயிர்கள் அதன் வினைக்கு ஏற்றபடி மலத்துடன் சேர்ந்து பிறக்கிறது. மலத்தில் தோய்ந்த உயிர்களில் ஒன்று மானிடப் பிறவியாகும். மானிடப் பிறவி எடுத்தவர்கள் மலத்தின் உந்துதலால் தாம் என்ன செய்கிறோம் என்று அறியாமல் நிறைய பாவங்கள் செய்து சங்கடத்தில் உழல்கிறார்கள். இதற்கு காரணம் மலமாகும்.

மானிடப்பிறவி மீண்டும் மீண்டும் தொடர்வதற்கு காரணம் மும்மலமாகும். உயிர்களுக்கு மாயையால் உடல்தரப்பட்டு பிறக்கிறான். பிறவி வருவதற்கு முக்கிய நோக்கமென்னவெனில் அவன் செய்த கேடுகெட்ட வினையினால்தான். மானிட பிறவி வருவதற்கு மும்மலமான ஆணவ மலம் — மாயா மலாம் — கன்ம மலம் என்பார்கள். இதற்கு முறையே மலம் — மாயை — வினைகள் என்பர். மலத்தால் இருளும் — மாயையால் மருளும் — வினையால் இன்ப துன்பங்கள் அனுபவிக்கின்றனர்.

நலம் தரும் நன்மைகள் பிறருக்கு செய்யாமல் தீமைத் தரும் கேடுகள் செய்தால் பிறவிதோறும் துன்ப வாழ்க்கை அமைந்து விடுகிறது. இரக்கம் — தயவு — கருணை — உயிரிரக்கம் — அன்பு இவைகளுடன் பசியாற்றல் கல்வி வழங்கல் — மருத்துவ நலத்திற்கு உதவி புரிதல் — எப்பொழுதும் நற்சிந்தனையுடன் இருத்தல் போன்ற நற்செயலில் ஈடுபட்டால் இன்ப வாழ்க்கை அமைந்து விடுகிறது. மானிடனின் நற்செயலுக்கும் தீய செயலுக்கும் உகந்தவாறு மானிடப் பிறவிக்கு மலத்தின் போக்கு மென்மையாகவும் வன்மையாகவும் பொருந்தி நிற்கும். இதில் "சேர்ந்த வினை சேரும் வினை — நிகழ்வினை" என்று கூறுவார்கள். இந்த வினைகளின் வலிமைப் பொறுத்தே மலம் பெருக்கம் அமையும். இதில் தேகத்தில் உள்ள மலங்கள், தேகத்தின் உள்ளகத்தில் உள்ளமலங்கள் என இருவகையாக இருக்கிறது. இந்த மும்மலங்கள் நீக்கும் முறைகள் சித்தர்கள் வாயிலாக நாம் அறியலாம்.

சாகாத கல்வி அறிய பெருந்தடையாக உள்ள மும்மலங்கள் நீக்கும் வழிகள் என்னவென்று அறிவது அறிவுள்ள தெளிவுள்ள மானிடப்பிறவிகளின் முக்கியக் கடமையாகும்.

தேகம் மலசுத்திப் பெற்றால் உடல் அழியாது சுகாதீத நிலை வெகு விரைவில் தேர்வாகும் என்பதை புலஸ்தியர் கற்பம் — 300இல் 7ஆம் பாடலில்,

சுத்தியாந் தேகம் அழிவதுமில்லையே
சுகாதீத வெகுவதி சயமாம் - 7 என்று கூறுவது அறியலாம்.

தேகத்தில் எங்கெல்லாம் மலசம்பந்த் உள்ளது என்று சித்தர்கள் மூலம் அறியலாம். ஈஸ்வரன் செய்த மெய்ஞ்ஞான நாடி என்னும் நூலில் கீழ்வருமாறு மலங்கள் பொருந்தியுள்ள இடங்கள் ஓதுவதை அறிக.

"ஓமென்ற மலக்கட்டைக் கழிய வைத்தால்
உடலிலுள்ள வாதை யெல்லாம் ஓடிப்போச்சு

தாமென்ற "சிறுநீரைத்" தெளிய வைத்தால்
சடலத்திலுள்ள ரோகமெல்லாம் தணிந்துபோச்சு

கூமென்ற "உமிழ்நீரை" முறிய வைத்தால்
கூட்டிலுள்ள பகையெல்லாம் குலைந்து போச்சு

கோலமென்ற யிவை மூன்றுங்களங்க மற்றால்
கொல்லவந்த "காலனையும்" வெல்லாமே - 27
என்று ஈஸ்வரன் மெய்ஞ்ஞான நாடி 29இல் கூறுகிறார்.

மரணமில்லா பெருவாழ்வு பெற முதலில் தேகத்தில் அடைப்பட்டுள்ள மலத்தை விடுவிக்க வேண்டும். மலத்தை நீக்கினால் உடலிலுள்ள வாதைகள் (மலச்சிக்கல்)

Koviloor Digital Library

அனைத்தும் ஒழிந்து போகும். சிறுநீரைத் தெளிய வைத்தால் சடலத்திலுள்ள (நீர்ச்சிக்கல) ரோகங்கள் எல்லாம் கழியும். வாயிலுள்ள உமிழ்நீர் முறிய வைத்தால் தேகக் கூட்டிலுள்ள பகையெல்லாம் குலைந்து போகும். இந்த மூன்று குற்றங்கள் நீங்கினால் காலனின் மரணப் பிடியிலிருந்து மீண்டுப்பெரு வாழ்வு பெறலாம் என்பதாம்.

காகபுசண்டர் என்னும் பழம்பெருஞ் சித்தர் தாம் எழுதிய நூல் 1000த்தில் மும்மலத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளதை இங்கு நாம் அறியலாம்.

"சொல்லுவேன் "தொண்டைநீர்" இருப்பின் நீரும்
தொங்குகின்ற "சலநீர்" - மலநீரு" மூன்று
கொல்லுவேன் கெல்லிடுங்கள் "உடலே சக்தி"
கேசரத்திற் தொடங்கிடலாம் "உச்சிமேடை"
நல்லவனே "உச்சிமுதல் பாதம் மட்டும்"
"நடுநாடி மூலம் வரை "மலத்தைப்" போக்கும்
வல்லவனே "மும்மலந்தான்" தடையே சத்துரு
வாசிவலுவாகினவன் போக்குவானே - 134 என்று

ஓதுகிறார்.

மும்மலம் என்பது முத்தியடையும் உச்சி பீடத்திலிருந்து கீழ்மூலம் வரை மலம் போக்க வேண்டும். இந்த தேகம் என்னும் உடல் மாயையால் தரப்பட்டது. இருளானது. மலப்பொருள் தொண்டை, இருப்பினிடம், குடலில் குடிக்கொண்டுள்ளது. இதனை போக்கக் கூடியவன் யாரென்றால் வாசியின் நேர்மை உணர்ந்தவன் போக்கிக் கொள்வான். இந்த மூன்று மலங்கள் மனிதனுக்கு பயையாகவும் தடையாகவும் உள்ளது என்று கூறுகிறார்.

மேலும் உரோமமாமுனி என்னும் சித்தர் தாம் எழுதிய நுட்ப சூத்திரம் 16இல் மலக்குற்றங்கள் எங்கெங்கு உள்ளது என்பதை மிகத் தெளிவாக கூறுவது காண்க.

"பிசகாது அபானத்தில் மலமே குற்றம்
பேசுகின்ற வுதானத்தில் நாடி குற்றம்
விசையான கண்டத்தில் கபமே குற்றம்
மேல்மூல வளையிலே திரைஏறா குற்றம்
மசையான மனத்துக்குக் கியானங் குற்றம்
மையைந்து போக்கிவிட்டாலமே ஞானம்
பசியாது ஞானத்தில் பிரகாசித்தாற்
பான மல்லோடதினாறு பாணங் கொள்ளே - 3 என்று

ஓதுகிறார். இதன் பொருள் என்னவென்றால் அபானம் என்றும் சொல்லப்படுமிடமான கீழ்மூலத்தில் மலமாகும். பேசுகின்ற நாவின் கண் நாடிகளின் குற்றமாகும். கண்டமென்னும் இடத்தில் கபக் குற்றம் மேல்மூலம் என்று சொல்லப்படுகின்ற மேல் வாசலில் திரை நீங்காக் குற்றம். மனதை கட்டுப்பாடு அற்று ஆணவத்தால் தடைப்படுதல்.

இந்த ஐந்து இடங்களிலுள்ள மலங்கள் என்று கூறப்படும் களங்கங்கள் அகற்றப்பட்டால் ஞானம் உண்டாகும். அந்த ஞானத்தின் ஒளியால் சந்திரனின் பதினாறு கலைகளில் உண்டாகும் அமுதபானம் பருகலாம் என்பதாம்.

நமது அகத்தியர் நமது அந்தரங்க தீட்சா நூலில், தேகத்தில் மலம் என்னும் ஊறல் தன்னறிவால் அறிந்து இறையருளின் துணைக் கொண்டு நீங்கிவிட்டால் தாம் பரத்தின் ஊறல் போக்கும் தன்மை உண்டாகும்.

செம்பிலுள்ள களிம்பு தன்மை எப்படி நீக்கவேண்டுமென்று அறிவால் உணர்ந்து நீக்கினால் இந்த தேகத்தன் மலம் என்னும் களிம்பு நீங்கும் என்பதாம். உல்லாச தேகம் = செம்பு; ஊறல் = மலம். இது உச்சி முதல் அடிவரை உண்டு. இதனை அறிவின் துணையோடு அருளின்முன் வேண்டி நீக்கித் தொழ வேண்டுமென்று கூறி தனக்கு தன் குரு செவிஉரை செப்பினார் என்று தன் மாணவனான புலத்தியருக்கு அறிவுரை கூறும்பாடலை நோக்குக.

"உல்லாச தன் "தேகம் ஊறலத்து" விட்டால்
உறுதியாய் "தாம்பூரம் ஊறல்" போமென்று
எல்லை தனில் "என்குருவும்" எனக்கு உரைத்தார்.

ஆதலால் புலத்தியனே உனக்காய்ச் சொன்னேன் என்று 152ஆம் பாடலில் அறிவுறுத்துகிறார்.

மேலும் திருமூலர் திருமந்திரம் 3000த்தின் கண் 883ஆம் பாடலில் "செம்புபொன் னாருஞ் சிவாயநம வென்னிற" என்று

Koviloor Digital Library

கூறுவதாலும் அறியலாம். சிவாய நம என்னும் மந்திரம் அருளை வழங்கும் நுட்ப மந்திரமகும். அகத்தின் மலத்தைப் போக்கும். அதே போல் செம்பில் களிம்பு என்ற ஊதல் இருக்கின்றன. இது மனிதனின் உடலைக் குறிக்கும். இந்த உடலில் அடி முதல் முடிவரை நீக்க வேண்டுமென்றால் இறைவனின் அருளின் துணைத் தேவைப்படுகிறது. துணையாக நிற்பது நுட்ப மந்திரமான சிவாயநம என்னும் மந்திரமாகும்.

சித்தர் கடைப்பிள்ளை எழுதிய பஞ் சாட்சரம் சுருக்கும் என்னும் நூலில் 20ஆம் பாடலில் மூலத்தில் காணப்படும் "வன்னி என்னும் குண்டலியின்" துணைக் கொண்டு உடலிலுள்ள "மாயா மலத்தை" சுட்டுத் தள்ள வேண்டும். அப்படி செய்தால் தேகத்தின் கசடு என்கின்ற களங்கங்கள் போக்கும். அப்படி கசடு நீங்கினால் ஞான நெறி தனக்கு சுத்தப்படுத்தும் என்பதாம். இதனை அவர் பாடலால் அறிக.

"காச்சரா மூலமென்ற நெருப்பினாலே
காய்ச்சினால் "திரோதாயின்" கசடு நீங்கும்
போச்சப்ப "கசடது தான்" நீங்கிப் போனால்
போமென்ற ஞான நெறி புனிதமாமே" - 20

என்று மானிட மக்களைப் பார்த்து கூறுகிறார்.

இனி ஞானத்திற்கு தடையாக உள்ள மும்மலம் போக்கும் முறைகளை ஆராய்வோம்.

மும்மலம் போக்கும் மூலிகைகள்

நமது தேகத்தில் அடிமுதல் முடி வரையிலும் பிறப்பு முதல் இறப்பு வரையிலும் அகலாத மலங்கள் உண்டு. அதற்கு மும்மலங்கள் என்று மெய்ஞ் ஞானம் உணர்ந்தோர் கூறுகிறார்கள். அந்த மலங்கள் அகற்ற சில மூலிகைகள் உண்டு என்று சித்தர் தங்கள் நூல்களில் கூறியுள்ளனர். இனி அதனைப் பார்ப்போம்.

"ஆணவமாம் மும்மலத்தை யறுக்கு மூலி"
யான திந்த நூல் பாரு மைம்பத் தொன்றே"
— 37 என்று சட்டமுனி ஞான விளக்கம் — 51இல் கூறுகிறார்.

உடலில் காணப்படும் கபங்கள் நீக்க:

நமது தேகத்தில் கபங்கள் மேல் மூலத்திலும், கண்டத்திலும் சேரும். அந்த கபமே மானிட உயிருக்கு எமனாக உள்ளான் என்ற செயதியை சித்தர் நூலில் சொல்லப்பட்டுள்ளது என்பதை கீழ்வரும் பாடலால் அறிக.

"ஆமப்பா அகாரமுடன் உகாரம் ரெண்டு
அறிந்து மனதுறுதி யினாற் கொண்டாயானாந்
போமப்பா "கபமான" சுஉற்றவன் தான்
பொருந்தி நின்ற "மூல அனல்" தன்னால் மைந்தா
ஓமப்பா முடிந்து அகன்று போகும்
உத்தமனனே "மறுபிறவி இல்லை" - 36 -
என்று கடைப்பிள்ளை ஞான மந்திரம் — 80இல் ஓதுகிறார்.

மேல் மூலத்தில் உள்ள வழலை என்னும் கபமும் கணடத்திலுள்ள கபமும் நீக்கிக் கொள்ள மூலிகள் சொல்லப்படுகிறது. மண்டையிலிருந்த இறங்கிவரும் மண்டை சளிகள, தொண்டையிலிருந்து வரும் கோழைகள் நீக்க வேண்டும். இதற்கு ஆழாக்கு ஆவின் நெய்யும், கையாந்த கரை என்னும் மூலிகை எடுத்துவந்து சுத்தம் செய்து மசிய அரைத்து ஓர் உருண்டையளவு எடுத்துக் கொண்டு மேற்கண்ட இருபொருளையும் நன்றாக கலந்து கரைத்து ஓர் பாத்திரத்தில் எடுத்து அடுப்பின் மீது காய்ச்சி மூலிகையிலுள்ள சாறு நெய்யில் சேரும். அதனை எடுத்து வைத்துக் கொண்டு உதயத்தில் நாள்தோறும் பெருவிரலில் தடவி மேல் அண்ணாக்கில் சுழல விட்டால் மண்டையில் தங்கியுள்ள பங்கள் கழன்று கீழநோக்கும். இதுபோல் நான்குமுறை செய்யவும. அதேபோல் தொண்டையிலுள்ள கபங்கள் கழல சுட்டுவிரலும் நடுவிரலும் மருந்தைத் தடவி தொண்டையில் நன்றாக மேலும் கீழுமாக தேய்க்க வேண்டும். அதே போல் நான்கு முறை செய்ய வேண்டும் இப்படி செய்தால் தொண்டையிலிருந்து வாய்வழியாக வரும்போது வெளியே உமிழ்ந்திட வேண்டும். இவற்றை செய்த ஒரு மணிக்கு பிறகுதான் எளிதான காரமில்லா உணவு எடுத்துக் கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

பால் — மோர் — இனிப்பு — பொங்கல் போன்றவவை எடுத்துக் கொள்ள வேண்டும். குறைந்தளவே எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த செய்தியை சட்டமுனி என்ன அறிவுரை கூறியுள்ளார் என்பதை அறிக.

"கோளப்பா முந்தி முந்தி வழலை மார்க்கம்
கொடியாக வாங்கிறதோர் வரிசை சொல்வேன்

நீளப்பா பெருவிரலிற் கரிசலாஞ்சாறு
நெய்யோடே மதித்துப் பூசிக் கொண்டு

சூளப்பா அண்ணாக்கில் விரலை யோட்டி
சுழட்டையிலே கபாலத்ற் கபமெல்லாம் வீழும்

நாளப்பா நாளு உதயத்திற செய்வாயாகில்"
நலமான குணத்தையினிச் சொல்கிறேன் - 2

சோதிக் கிலண்ணாக்கிற் குறியை கேளு
வெல்கிறேன் "சுழிமுனையின் ராகுகேது"

மைந்தனே சங்கோடு சக்கரம் போல் நிற்கும்
அல்லுகிறே னிதன் பேரு ரவிமதி தானெப்பார்

ஆச்சரிய மிடை பின்னா யமர்ந்து நாக்கு
சொல்லுகிறே னென்ற சொல் ஜனங்களைத் தான்

கூட்டி யல்லோ கபத்தை யுள்ளே வளர்க்குந் தானே - 3

மறைந்திட்ட - - - - - - - - - - - - - -
மைந்தனே "விஷமதுதான் கண்டத்தில்" நிற்கும்

நிறைந்திட்ட "தட்சனையு மத்திமையுங்" கூட்டி
நேராகக் "கண்டத்தே அமைந்து ஆட்டு"

உறைத்திட்ட "விஷங்களெல்லாங் கக்கி வீழு
முத்தமனே பித்த மென்பார் உலகத்தோரே - 5

சட்டைமுனி கற்பம் - 100.

தேகத்தின் உந்தியின் கீழ் உள் மலங்கள் அகல வேண்டுமென்றால் அதற்கும் மூலி உண்டு என்றும் அபானத்தில் மலம் இறுகி கருகி வெளிவர முடியாமல் அடைப்புக் கொண்டு விடும். அதனை நாம் கீழ் நோக்க செய்ய வேண்டும். களங்கமுள்ள அழுக்கு படிந்த கேடுதரும் மலங்களை விலக்க வழி சொல்லப்பட்டுள்ளது. சோற்று கற்றாழை சோறு எடுத்து நன்றாக இடித்து பிழிந்த சாறும் ஆமணக்கின்நெய்யும் கலந்து காய்ச்சி எடுத்து வைத்துக் கொண்டு இடது கையிலுள்ள நெடுவிரலில் தேய்த்துக் கொண்டு அபானவாயில் உட்செலுத்தி நன்றாக தேய்க்கவும். பின்சிறிது நேரம் பாவைப் போல் உட்கார்ந்து இருந்தால் குதத்தில் தங்கியுள்ள கெட்ட மலங்கள் கீழ்நோக்கும். (இக்காலத்தில் எனிமா கொடுப்பது போலாகும்) என்பதை கீழ்வரும் சித்தர் பாடலால் அறியலாம்.

"கேளப்பா ஆமண்க்கி ணெண்ணெய்யோடு
கெடியான குமரிசார் கூடக் கூட்டி

நாளப்பா தட்சணையிற் தேய்த்துக் கொண்டு
நலமான பாவையைப் போலிருநது கொண்டு

நீளப்பா அபானத்திற் சுத்தியாட்டே
நேரான துர்மலங்கள் எல்லாம் போகும் - 6

சட்டைமுனி கற்பம் - 100.

சிறுநீரில் பச்சை உப்பு இறங்காமல் வடிக்கட்ட:

மானிடன் அன்றாடம் தூய்மையில்லாத பச்சை உப்பை உண்டு வருகின்றான். அந்த உப்பு சிறுநீரில் கலந்து வெளியேறுகிறது. அதனை கட்டுப்படுத்தி தெளிவான சிறுநீர் வர வேண்டும். அப்படி வந்தால் மானிடதேகம் நீண்டநாள் வாழும் என்பது சித்தர்களின் கொள்கையாகும்.

நாட்டுக்கோழியின் முட்டை வெண்கரு எடுத்துக் கொள்க. அதில் கல்லுப்பு 350 கிராம் சேர்க்கவும். வெடியுப்பு 150 கிராம் சேர்க்கவும். நவாச்சாரம் 150 கிராம் கூட்டவும். சீனாக்காரம் 105 கிராம் போடவும். இவைகள் அனைத்தும் மசிய அரைத்து, அதனையெடுத்து பாறையுப்பு சிறிதாக நறுக்கிய பின் அதன்மேல் தடவி பூநீறு ஓர் சட்டியில் போட்டு அதன் மேல் மெழுகு தடவி உலர்த்தியதை வைத்து பின் அதன்மேல பூநீறு போட்டு மேல் முடி நன்றாக இணைத்து அதனைச் சுற்றி செம்மாண் சுற்றிலும் தடவி செம்மண்ணில் துணியை அதன்வாய்ப் புறத்தில் இறுக சுற்றி உலர்ந்த பின் புடம் போடவும். அதில் வைக்கப் பட்டுள்ள பாறையுப்பு கூட்டினால் உருகிக் கட்டும் அதனை எடுத்து உணவில் சேர்த்தால் சிறுநீர் உப்பு இறங்காது. தெளிவாகக் க்ாணும். தேகம் சட்டை தள்ளும். இறுகும் என்பதை சித்தர்கள் கூறுவதை இங்கு வாசிக்கவும்.

Koviloor Digital Library

பண்ணப்பா யன்னத்தி லுப்பொடுங்கப்
பாடுகிறேன் நாதாக்கள் பாடா தெல்லாம்

தணப்பா அண்டமைந்து கல்வத்திட்டுக
கல்லுப்புப் பலம் பத்து மதிலே போடு

விண்ணப்பா வெடியுப்புப் பலந்தா னைந்து
மேவியதோர் நவாச்சாரம் பலந்தானைந்து

ஒண்ணப்பா சீனமது பலந்தான் மூன்று மாமே
ஒக்க நன்றா யரைத்துலர்த்தி மெழுகாகும் - 37

மெழுகெடுத்துப் பாறையுப்பை யுடைத்துப் பூசி
வெயிலிலே யுலர வைத்துக் காய்ந்தபின்பு

உழகெடுத்து ஊஷரத்தைக் கீழ மேலிட்டு
ஓட்டிலே மூடி நன்றாயப் புடத்தைப் போடு

நழுகெடுத்து போகாது உப்புக் கட்டும்
நலமாக வுடைத்தாலே வயிரமின்னும்

தழுகெடுத்த வுப்பைலோ சோத்திலிட்டுச்
சாப்பிடவே மிக நன்று சாப்பிடாயே - 38 சட்ட
முனி கற்பம் - 100.

மேலும் யாகோல் என்னுன் இராமதேவர் என்னும் சித்தர் உப்புக்கட்டி உண்ணும் முறை கூறுகிறார். இவர் தமிழ்நாட்டை சேர்ந்தவர். சித்தர்களின் வீணான பிடிவாதத்தால் மெக்காச் சென்று மதமாறி அங்கேயே தங்கி பின் தமிழ் மண்ணுக்கு வந்து பல நூல் செய்தார். அவைகளில் ஒன்று மருத்துவ சிந்தாமணி — 700 என்பதாம். அந்நூலில், உப்புக் கட்டி உண்ணும் முறையை கூறியுள்ளார்.

கடைகளில் விற்கும் உப்புக்களை வாங்கி செய்யக் கூடாது. நல்ல வெயில் காலாமக இருந்து கடல் நீர் கொண்டு வந்து அகலமாக பிங்கான் தட்டிலோ அல்லது எனாமல் பூசிய அகலமான பாத்திரத்திலே ஊற்றி கடும்வெயிலில் வைத்து உப்பு எடுத்து அதனைக் கட்டி உண்ணவேண்டும். அப்பொழுது தான் சிறுநீர் தெளிந்து அந்நீரில் உப்பு இறங்காது. மலத்தில் கலந்து வெளியாகும்.

உப்பு கட்டும் முறை:

கடல் நீரிலிருந்து எடுத்த உப்பு எடுத்து வந்து நல்வத்திலிட்டு குப்பைமேனிச் சாறு விட்டு அரைத்து வரவும். அதுபோல் சாறுவற்ற வற்ற குப்பைமேனிச் சாறு விட்டு அரைத்து மெழுகு போலான பிறகு வில்லை தட்டி உலர்த்தி புடம்போட்டு எடுத்துக் கொள்ளவேண்டும். இதுபோல் ஐந்துமுறை செய்தால் உப்புக் கட்டிவிடும். தவறினால் மேலும் ஐந்து முறை செய்ய உப்பு கட்டிவிடும். அந்த கட்டிய உப்பு ஒரு எடை 35 கிராம், சக்தி என்ற சாரம் ஒரு எடை 35 கிராம், இரச பதங்கம் 70 கிராம் ஆக இவைகள் மூன்றும் ஒன்றாயச் சேர்த்து மேனிச்சாற்றால் 10 மணி நேரம் நன்றாக மெழுகாகும்படி அரைத்தெடுத்து சிறுவில்லையாக தட்டி காயவைத்து புடம்போட்டு எடுக்க உப்பு கட்டிவிடும். இதனை எடுத்து உணவுடன் கூட்டி உண்டால் சிறுநீரில் உப்பு இறங்காது நல்ல தெளிவு பெறும். அதனால் உடல் நலம் உண்டாகும் என்பதேயாம். இனி அவர் கூறும் பாடலை நோக்குக.

"உருசை தரும் பூவதனைக் கல்வத்திட்டு
உத்தரைமேனிச் சாறு தன்னாற்சாமம்

வருசையாய் வில்லைத்தட்டிக் கதிரில் வைத்து
வண்மைபெற மூன்று புடம்போடக் கட்டும்

துரிதமுடன் பலமொன்று சக்தியொன்று
சூழமுன்னிடை பதங்க ரசமுஞ் சேர்த்து

பிரியமுடன் னிரு சாமம் மேனிச் சாற்றால்

பேசாதே யறையென்றார் பெரியோர்தானே - 127

யாகோப்பு மருத்துவ சிந்தாமணி — 700

மலக்களங்கமுள்ள சிறுநீர் சுத்தமாகி உடல் நலம் பெறும்.

இனி நாம் நமது உடலின் கண்ணுள்ள நாடியின் குற்றங்களையும், மலங்களை விலக்கி தூய்மைப்படுத்தும் முறையை கவனிப்போம். சுப்பிரமணியர் சிவம் என்பவர் மூன்று நாடிகளின் இயல்புகள் என்னவென்று கூறியுள்ளார். இடைபலை நாடி என்பது மரணத்தை உண்டாக்கும் என்றும், பிங்கலைநாடி பாச மலமுடையது என்றும், சுழிமுனை நாடி முத்தி தரும் நாடி என்று அகத்தியருக்கு செவிவுரை கூறியது மானிட இனங்களுக்குப் பொருந்தும்.

Koviloor Digital Library

இதனை அவருடைய யோக ஞானம் என்னும் நூல் 500இல் 370ஆம் பாடலாக அமைந்துள்ளது என்பது வியக்கத்தக்கது.

"கூரான இடைக்கலையே காலனாகும்"

குறிப்பான பிங்கலையே பாசமாச்சு

பேரான சுழிமுனையே முத்தி

பேசாத குலதெய்வம் தன்னை பாரே - 370இல் கூறுவது புரிந்திருக்கும்

இடைகலை— இடது நாசியில் ஓடும் மூச்சாகும்

பிங்கலை — வலதுநாசியில் ஓடும் மூச்சாகும்

சுழிமுனை —செயல்படாத மூச்சாகும். இதனை இயக்கினால் மானிடன் முத்தி பெறுவது உறுதி.

1. இடைகலையில் இடது நாசியில் மூச்சு ஒருமாத்திரையளவு இழுத்து நான்கு மாத்திரை கணக்காகும் வரை நிறுத்தி பின்மூச்சு வாங்கியதை இடைகலை இடது நாசியில் இரண்டு மாத்திரையளவு விட வேண்டும்.

2. பிங்கலையில் வலது நாசியில் நச்சு ஒரு மாத்திரையளவு இழுத்து, நான்கு மாத்திரை அளவு நிறுத்திய பின், மூச்சு நிறுத்தியதை பிங்கலையான வலது நாசியில் இரண்டு மாத்திரை அளவு விடவேண்டும்.

3. சுழிமுனை என்பது செயல்படாத மூச்சாகும். உலகியலில் வாழ்வதற்கு மேற்கண்ட இருகலை போதுமானது என்பதால் இறைவன் சுழிமுனைக்கு வாசல் அமைத்து கதவை வைத்து அதனை இழுத்து பூட்டிவிட்டார். இதனை திறக்க வேண்டுமென்றால் இறைவனின் அனுமதி பெற்றாக வேண்டும். இந்த சுழிமுனையை செயல்பட வேண்டுமென்றால் அதனையும் வசப்படுத்தவும் இயக்கவும் மேற்கண்ட இருகலையில் கூறியவாறு செய்ய வேண்டும்.

இடைக்கலை என்னும் இடது மூக்கின் வழியே மூச்சானது ஒரு மாத்திரை அளவு வாங்கி நான்கு மாத்திரை அளவு முடிந்தவுடன் பிங்கலை என்னும் வலது மூக்கு வழியே இரண்டுமாத்திரை அளவு மூச்சுவிட வேண்டும்.

மேற்கண்ட மூன்று நாடிகளுக்குரிய மந்திரங்களும் 1:4:2 என்ற அளவுடைய எண்ணிக்கையில் செயல்படுத்த வேண்டும். எப்பொழுதும் இரண்டு மாத்திரை அளவுள்ள மூச்சு உடலில் நிற்கும். அதனால் நாடிகளிலுள்ள மாசுக்கள் அகலும். இது ஒரு முறையாகும்.

அடுத்து ஒருமுறை இங்கு கூறப்படுகிறது அறிக

இடைகலை நாடியான இடது மூக்கில் ஒரு மாத்திரையளவு மூச்சுஇழுத்து நான்கு மாத்திரை அளவு வரை நிறுத்தி, நிறுத்தியதை இரண்டு மாத்திரை அளவு பிங்கலை என்னும் வலது நாசியில் இரண்டு மாத்திரை அளவு விட வேண்டும்.

பிங்கலை நாடியான வலது மூக்கில் ஒரு மாத்திரை அளவு மூச்சு உள்ளுக்கு இழுத்து நான்கு மாத்திரை அளவு மூச்சு நிறுத்திய பின் இரண்டு மாத்திரை அளவு மூச்சு இடது நாசியில் விட வேண்டும்.

சுழிமுனை நாடி என்பது செயல்படாத நாடியானதால் இதனை, அறிய இறையருளை வேண்டி இடது நாசியில் ஒரு மாத்திரையளவு மூச்சு இழுத்து நான்கு மாத்திரைஅளவு நிறுத்தி, இரண்டு மாத்திரை அளவு வலது நாசியில் மட்டும் விடவேண்டும். தொடர்ந்து ஆறு மாதகாலம் செய்தால் களங்கள் அகன்று தூய்மையாகும். இந்த நாடியில் எவ்வித மாற்றம் கிடையாது ஒரே முறையில் கூறியவாறு செய்தால் இறைவன் வழிகாட்டுதல் அறிவுக்கு எட்டும். ஒவ்வொரு 15 நாளுக்கு ஒருமுறை மாத்திரையின் அளவு ஏற்ற வேணடும். 16:64:32 என்றளவு உயர்த்தி ஒரே சீராக செய்ய வேண்டும்.

சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் சிவயோகம் — 40 என்னும் நூலில் நாடிகள் சுத்தம் செய்யும்முறையை கூறியருளியுள்ளார். அதனை மிக விழிப்புணர்வுடன் படித்து அறிந்து புரிந்து தெரிந்து கொள்ள வேண்டுவது சாகாக் கல்வி பயிலும் மானிடனுக்கு நலம் தரும்.

Koviloor Digital Library

ஓகோகோ யிடையும் பிங்கலையினோடு
தாமப்பா சுழிமுனையாம் மூன்று நாடி
தானதிலே இடையிடது நாசிதேவும்
சோமனப்பா பிங்கலையும் வலது நாசி
சூரியனே தேவதை யென் றியம்பலாமே - 12

இயம்பு சுழிமுனைக்கு மிடை பிங் கலைக்கு
மிடை நடுவே யிலங்கு மிதன்தேவ பிர்மா
சுயம்பு வாய் ரேசகம் பூரககும்பகமும்
சொல்மூனறு தேவதையின் சென்ம பூமி
வயம்பு வாயு வெளிவிடுதல் ரேசகம்
வாயுவையு மேற்றிடுதல் பூரகம்
பயம்போக வுள்ளடக்கல் கும்பகமாகும்
பாலகனே இவ்வுண்மை பரிந்து பாரே -13

பாரப்பா பிங்கலையைப் பிடித்து நீயும்
பாங்கா மிச்சரீரத்திலிருக்கும் வாய்வை
நேரப்பா யிடையெட்டாம் உரு செபிக்கும்
நேரம் வரைரேசிக்கப் பின்னிரெட்டு
சீரப்பா பூரிக்க வுருநாளெடடுச்
செபித்துமே கும்பிக்கச் செய்த தன்பின்
மாரப்பா வந்தது போல் திருப்பிக் கொள்ளும்
வகைவிபரம் நன்றாக வுழுத்துவேனே - 14

வேனப்பா கும்பித்ததைத் திருப்பி
விடும்போது நீபதினாறுருச் செபித்துத்
தானப்பா பிங்கலையில் விடுமெண்போலச்
சமயிடையைப் பிடித்துப் பிங்கலை பூரித்துத்
தேனப்பா செப் பெணணான் குருவதாகச்
செபிக்கும் வரை கும்பித்துத் திருப்பும் போது
ஈனப்பா யிரெட்டா முருச்செபித்து
இடையிலே விட்டுவர வின்னும் பாரோ - 15

பாரப்பா யிடையும் பிங்கலையும் சேரப்
பாரிரண்டு தரம் விடவோர் பிராணாயாமம்
பூரப்பா யிடை யிடையிலேரேசித்துப்
பூரித்துக் கும்பித்துக் கொள்வாய் நீயும்
சாரப்பா பிங்கலை ரேசிக்கும் போது
சந்திரனைத் தியானித்து விட வேண்டும்
தேரப்பா பிங்கலை ரேசகத் தினோடு
சேரும் பூரகமுங் கும்பகமும் பண்ணே - 16

பண்ணியே யிடையிலே ரேசிக்கும்போது
பானுதனைத் தியான மது பண்ணிவிட்டால்
கண்ணிமையைக் காத்ததுபோலுன்னைக் காக்கும்
கற்பாந்த காலம் வரை நீளுமாயுள்
எண்ணரிய பிறவிமய லெல்லாம் போகும்
ஈசனே இவனாமென் றெவருஞ் சொல்வார்
மண்ணிலே வாழ்ந் தாதா ரொருவருண்டே
வாயுவை நீங்கா மலதைச் செய்குவாயே - 17

செய்குவா யிப்படியே மூன்று மாதம்
செய்துவர நாடி மிகச் சுத்தமாகும்
உய்குவாய் வியாதியிலும் புசித்த தெல்லாம்
ஓர் நிமிடந் தன்னிற் சீரணம்தாகும்
துய்யநா தந்தெளிய மயக்க மில்லை
துவாதசம் பிராணாயம் செய்யுங்காலம்
அய்யனே பிரத்யா காரமொன்றாம்
அப்படிப் பன்னி ரண்டோர் தாரணையுமாமே - 18

மேற்கண்ட பாடலில் கூறுவது என்னவென்றால் நமது தேகத்தில் முக்கிய நாடிகள் மூன்றாகும். அவைகள் இடைகலை — பிங்கலை — சுழிமுனையாகும். இடைகலையின் தெய்வம் சந்திரனாகும். பிங்கலையின் தெய்வம் சூரியனாகும். சுழிமுனையின் தெய்வம் பிர்மம். இந்த நாடிகளின் பிறப்பிடம் இடதுபுறம் — வலதுபுறம — நடுபுறம் என்பதாம். விடுதல் நிறுத்தல் வாங்கல் தொழிலுடையதாம்.

வாயுவை வெளிவிடுதலுக்கு ரேசகமாகும். வாயுவை உள்வாங்களுக்கு பூரகமாகும். வாயுவை நிறுத்தலுக்கு கும்பகமாகும்— இதுவே இதன் உண்மைநிலையாம்.

1. பிங்கலை என்னும் வலதுநாசியில் 32 மாத்திரை காலயளவு பூசிக்க வேண்டும். அதனை 64 மாத்திரை காலயளவு வாங்கிய மூச்சு கும்பகம் செய்து, செய்ததை 16 மாத்திரைக் காலஅளவு இடைகலை என்னும் இடது நாசியில் மூச்சு விட வேண்டும். இடது நாசியில் விடும்போது சந்திரனை தியானிக்க வேண்டும்.

2. இடைகலை என்னும் இடதுநாசியில் 32 மாத்திரை கால அளவு பூரிக்க வேண்டும். அதனை 64 மாத்திரை காலஅளவு வாங்கிய மூச்சு கும்பகம் செய்து செய்ததை 16 மாத்திரை கால அளவு பிங்கலை என்னும் வலதுநாசியில் மூச்சு விட வேண்டும. வலது நாசியில் விடும்போது சூரியனை தியானிக்க வேண்டும். இப்படி செய்வதால் ஆயுள் நீடிக்கும். இதனை மூன்று மாதம்

Koviloor Digital Library

தொடர்ந்து செய்தால் நாடிகள் சுத்தமாகும் என்பதாம் என்று கூறப்படுகிறது.

மேலும் சுழிமுனை நாடி செயல் படவேண்டுமானால் இடைகலையில் வாங்கி — நிறுத்தி — பிங்கலையில் விட வேண்டும். இதில் மாற்றமில்லை. இதற்குரிய வித்தெழுத்துக்கள் சித்தர்கள் கூறியுள்ளார்கள். தக்கவரிடம் செவிஉரை கேட்டு பயனடையலாம்.

இனிநாம் திரைகளைப் பற்றி சிந்திப்போம். மானிட உடலில் அடி முதல் உச்சி வரை மும்மலம் உண்டு என்று சித்தர்களின் வேதாகமங்களில் சொல்லப்பட்டுள்ளது. அந்த முறையில் நமது உடலில் 1. கீழ்வளை 2. மேல்வளை என்று இரு இடங்கள் இருக்கிறது. இதற்கு மேல் மூலம் — கீழ்மூலம் என்றும் கூறுவார்கள். இதில் மேல்மூலம் என்று கூறப்படும் மேல்வளையில் திரை என்ற மலத்தால் மூடப்பட்டுள்ளது. இதனை யோக முறை துணைக் கொண்டு செயல்பட்டால் இத்திரைகள் விலக்கி சித்தி பெறலாம் என்பது சித்தர்களின் வேதாகமங்களில் கூறப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட திரைகள் இறைவனின் அருளாலும் சித்தஞானிகளின் செவிஉரை கேட்பதாலும், தன்னறிவே குருவாய் நின்று உணர்த்துவதாலும் அறிந்துக் கொள்ளலாம். இத்திரைகளுக்கு அகத்திரைகள் என்று கூறப்படும். இத்திரைகள் புருவமத்தியிலிருந்து ஆவி அடங்கும் உச்சிவரை காணப்படும் என்று கூறப்படும் திரைகளிலுள்ள மலங்கள் என்று கூறுப்படும் களங்கங்கள் விலக்கி முத்தியுடன் சித்தியடைபவனுக்கு "ஞானி" என்றும் சித்தன் என்று கூறப்படுகிறது. இதனை அகத்தியர் பெருமான் கூறுவது பார்க்க,

"மேவிநின்ற அண்டமது மைந்தா மைந்தா
மெய்ஞ்ஞான "சிதம்பரமாம் புருவமத்தி"
ஆவிநின்ற மத்தயில் திரை தானாறு
அதை யகற்றி தீப மணியறிய வென்றால்
கூவிநின்ற புலத்தியனே கடின மெத்த
குவிந்து நின்ற திரையறுக்க வகையை கேளு
தாவியந்த தன்னிலையில் தானே நின்று
சமர சமாய் நின்ற தொரு "அகாரம் பாரே" - 52

அகத்தியர் பூரணம் 1000/4

மேற்கூறப்படும் செய்திகள் தக்கவரிடம் கேட்டு அறிந்து தெரிந்து உணர்ந்துக் கொள்ளவும்.

இனி ஆணவம் மலத்தைப் பற்றி சிறிது அறிய முயற்சிப்போம். ஐந்து வித மலங்களில் ஆணவ மலம் ஒன்றாகும். இந்த மலங்கள திருமூலர் திருமந்திரத்தில் கீழ்வருமாறு கூறுகிறார். அவைகள் 1.ஆணவம், 2. மாயை, 3. கன்மம், 4. மாயேயம், 5.திரோதம் என்பன. இம்மலங்கள் அயன் என்று சொல்லப்படும விஷ்ணுவுக்கு நான்கு மலங்கள் என்றும் அரன் என்று சொல்லப்படும் உருத்திரனுக்கு மூன்று மலங்கள் என்றும், ஈசன் என்று சொல்லப்படும் மகேசனுக்கு இரண்டு மலங்கள் என்றும், அருளோன் என்று அழைக்கப்படும் சதாசிவனுக்கு ஒரு மலம் என்று கூறுப்படுகிறது. இதனை திருமந்திரம் கூறுவது காண்க.

"ஆணவ மாதி மலமைந் தலரோனுக்
காணவ மாதி நான் காமற் கரனும்
காணவ மாதிமூன் றீசர்க்கிரண் டென்ப
ஆணவ மொன்றே சதாசிவற் காவதே - 2149- ஆம் திருமந்திரததில் ஓதுகிறார். அதாவது.

1. பிர்மாவுக்கு 1. ஆணவம், 2. மாயை, 3. கன்மம, 4. மாயேயம், 5. திரோதம் ஆக ஐந்தாகும் என்பது
2. விஷ்ணுக்கு 1. மாயை, 2. கன்மம், 3. மாயேயம், 4. திரோதம் ஆக நான்கு என்பர்
3. உருத்திரனுக்கு 1. மாயேயம் 2. திரோதம் ஆக இரண்டு உண்டு என்பர்.
4. சதாசிவனுக்கு 1. ஆணவனம் ஒன்று மட்டும் என்பர்.

இந்த ஆணவப் பொருந் சதாசிவ தத்துவமான இருகண் புருவமத்தியாகும். அந்த இடத்தில் உயிர்ப்படங்குதல் (ஆவி அடங்குதல்) அல்லது அதீதம் என்று சொல்லப்படும். அப்பால் நிலையின் கண் "ஆணவம்" மட்டும ஆருயிர்களை (ஆன்மாவை) பிணித்து நிற்கும். அதாவது

Koviloor Digital Library

உட்கட்டாக இறுகி நிற்கும். பேருறக்கத்தின் கண்ட (தூரியநிலை) தூவாமாயை (அசுத்த மாயை) புணர்ந்து நிற்கும். உறக்கத்தின் கண் (சுழுத்தி) காமியம் என்னும் இருவினைகள் கூடிநிற்கும். கனவின் கண்தூமாயை கூடி நிற்கும். நனவின் கண்நடப்பாற்றலாகிய திரோதாயினுடன் ஐம்மலமும் பிணிப்புற்று நிற்கும். இதனை திருமூலர் திருமந்திர 3000த்தில் 2220ஆம் மந்திரத்தில்

"ஆணவ மாகும் அதீதமேன் மாயையும்
பூணும் துரியஞ் சுழுத்தி பொய்க் காமியம்
பேணு கனவும்மாமாயை திரோதாயி
காணு நனவில் மலக்கலப் பாகுமே" - 2220 என்று ஓதுகிறார்.

மேலும் இந்த ஆணவம் மூலாதாரத்தில் தோன்றுகிற. அங்கு நின்றே ஆணவமூலமும் தோன்றுகிறது. ஆருயிர் (ஆன்மா) அகாரநிலையில் நிற்குங்கால் ஆணவம் சுருங்கி அடங்கி விடும். உகாரம் பேணி ஒன்றானால் கலாதியினை பிறவித்துவிடும்.

மகாரம் தானுவாகக் காணப்படும் சதாசிவமாக நின்று எல்லாவற்றையும் ஒடுக்கி அருள் புரியும். மகாரம் இனம் பற்றி மாயையின் மூலப்பகுதி யொடுக்கமாகக் கொள்க இம்முறையால் ஆணவங்களுக்கு அடர்தல் செய்யாது என்பதாம். கீழ்காணும் திருமந்திரம் பார்க்க

"ஆணவ மூலத் தகார முதித்திடப்
பேணி "யுகாரங்" காலதி பிறவிக்கத்
தாணு "மகாரஞ்" சதாசிவ மாகவே
ஆணவ பாச மடர்தல் செய் யாவன்றே - 2824 - என்று திருமந்திரம் உணர்த்துகிறது.

வடலூர் வள்ளல் பெருமான் ஆணவமால நிவர்த்திக்கும் வழி ஒன்று நமக்கு அறிவுறுத்துவதை அறிய வேண்டும். மனித வல்லபத்தால் தனக்கிருகிற அசுத்தங்களை நிவர்த்தித்துக் கொள்ள கூடுமவா வென்றால், "இது நல்லது — இது கெட்டது" என்று பகுத்தறியும் ஞானத்தால் விஷய வாசனையில் கரணங்களைச் செல்ல வொட்டாமல் தடுக்கக் கூடுமே ஒழிய, நிவர்த்திக்கக் கூடாது. அது ஆண்டவருளால் சுத்த தேகம் பெற்றவர்களால் தான் முடியும். அது அருள் ஒளி கிடைத்தால் அத்தருணமே சுத்தக் கரணமாய் நிற்கும். அசுத்தம் வருவதற்குக் காரணம் யாதெனில் — செம்பில் களிம்பு இயற்கை அதுபோல, ஆன்மாவிற்கு ஆணவம் இயற்கை. செம்பிலே களிம்பு உள்ளதைப் பரிசனவேதியினால் நிவர்த்தித்து ஏமமாக்குவதுபோல், மாயாகாரியமான இந்தத் தேகத்தின் உள்ள ஆன்ம இயறகையாகிய ஆணவமலம் ஆண்டவரருளினால் நீக்கப் பெற்று சுத்த உடம்பாக்கிக் கொள்ளலாம். ஆண்டவர் அருள் அடைவதற்கு நாம் இடைவிடாது நன்முயற்சியின் கண்பழகுதல் வேண்—டும். மேலும் மும்மலங்கள் பற்றிய செய்தியை வள்ளல் பெருமானின் கருத்தையும் இங்கு அறியலாம்.

மும்மலங்கள் 1. ஆணவம், 2. மாயை, 3. கன்மம் என மலம் மூன்று. இதில் பக்குவம் மூன்று, அபக்குவம் மூன்று — ஆக ஆறு இவை ஒவ்வொன்றும் 18 ஆக விரிதலின் 18ஆம் இந்த கன்ம பேதத்தால் அருட்சக்தியின் சமூகத்தில் எழுவகைத் தோற்றும் உண்டானது. மேற்படி கன்ம மலத்தால் சிருட்டி உண்டாகும். விவரம் ஒருவாறு. பக்குவ ஆணவம், பக்குவ மாயை, இவ்விரண்டினாலும் விஞ்ஞான காலபேதம், அபக்குவ மாயை, அபக்குவ கன்மம், அபக்குவ ஆணவம் கூடியது — தேவநரக பைசாசங்கள். பக்குவ மாயை, அபக்குவ கன்மம் கூடியது. தாவர உயிர்கள், இதை விரிக்கில் பெருகும் என்று உபதேசத்தில் கூறப்பட்டுள்ளது.

எனவே மானிட உயிர்கள் தக்க ஞானிகளை அணுகி இறையருள் முன்னிலையில் மண்டியிடடு உள்ளமுருக எப்பொழுதும் அருளை நினைந்து வேண்டி நின்றால் தடையாக உள்ள மலங்கள் இறையருளால் விலகி முத்திக்கு வழிகோலும் என்பதை அறிந்து உணர்ந்து அருளின் உதவியுடன் இதனை நிறைவு செய்யப்படுகிறது.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

8. கற்ப மூலிகைகளுக்கு கருப்பேற்றல்

உலகம் பல மூலிகைகள் பெற்றுள்ளது. அதில் கற்ப மூலிகை நோய்த் தீர்க்கும் மூலிகை — வசிய மூலிகைகள் — அட்டகரு மத்திலாடும் மூலிகைகள என்று உள்ளது. இவைகளில் கற்ப சாதனைக்கு உகுந்த மூலிகைகள் போகர் எடுத்துக் காட்டியுள்ளார்கள். அவைகள் பற்றியச் செய்தியை அறியலாம்.

1. கருநெல்லி
2. கருத்த நொச்சி
3. கருவிழி
4. கருத்த வாழை
5. கரிய கரு சாலை
6. கரு நீலி
7. கரிய வேலி
8. கருவுமத்தை
9. தீபச்சோதி
10. திரண சோதி
11. சாயா விருட்சம்
12. எருமை கணைச்சான்
13. உரோம விருட்சம்
14. சுணங்கள் விருட்சம்
15. செந்திராய்
16. செங்கள்ளி
17. செம்பல்லி
18. சிவந்த தாழை
19. செஞ்சித்திர மூலம்
20. சிவப்பு நாயுருவி
21. கல் பிரமி
22. கல்சேம்பு
23. கல் தாமரை
24. குழலா தண்டை
25. மகாபொற சீந்தில்
26. வெண்புரசு
27. வெள்ளைத்துத்தி
28. வெள்ளைத் தூதுவளை
29. குண்டலப் பாலை
30. வெள்ளை நீர் முள்ளி
31. வெள்ள விஷ்ணுகிராந்து
32. வெண் கண்டங்காரி
33. கசப்பு பசளை
,34. மதுர வேம்பு
35. கிளி மூக்கு துவரை
36. அழுக்கண்ணி
37. பொன்னுமத்தை
38. மதுரக் கோவை
39. பொன்வண்ணச் சாலி
40. கருந்தும்பை
41. மதனத் தண்டு
42. குருந்தி
43. சிவந்ததில்லை
44. கருத்த வேம்பு
45. இண்டு

ஆக 45 மூலிகைகைகள் மலைகள் தோறும் காணப்படுவதாக போகர் சித்தர் தமது கற்ப நூல் 300இல் ஓதியுள்ளார். இம்மூலிகையின் உதவியால் வேதி மருந்தான நச்சு பொருள்கள் கட்டுப்படும். சூதம் கட்டுப்படும். உபரசப் பொருள்களிலிருந்து சத்து பிரிக்கலாம் என்று ஓதுவதை அந்த சித்தரின் பாடலால் அறிக.

"கேளன்ற கருநெல்லி கருத்த நொச்சி
கெடியான கருவீழி கருத்த வாழை
காளென்ற கரிய கரு சாலை யோடு
கருப்பான நீலியொடு கரிய வேலி
கோனென்ற கருமத்தை தீபசோதி
கொடு திரணச் சோதியொடு சாயாவிருட்சம்
ஏளென்ற யெருமைக் கணைச்சான் ரோமவிருட்சம்
ஏற்றமாஞ் சுணங் விருட்சஞ் செந்திராம்ய – 190.

"செந்திராய் செங்கள்ளி செம்மல்லியோடு
சிவந்த கத்தாழை செஞ்சித்திர மூலம்
நந்திராய் சிவப்பு அபா மார்க்கத்தோடு
நலமான கல்பிரமி கல்சேம் பாகும்
பந்திராய் கல்லுத்தா மரையினோடு
பாய்ந்தகுழலாத் தண்டை மகாபொற சீந்தில்

Koviloor Digital Library

வெந்திராய் வெண்புரசு வெள்ளைத் துத்தி
மிகுவெள்ளைத் தூதுவளை மிடுக்குமாமே" - 191.

"மிடுக்கான குணடலாம் பாலையோடு
வெள்ளைநீர் முள்ளிவெள்ளை விஷ்ணு கிராந்தி
கடுக்கான வெண்கண்டங் காரியோடு
கசப்பான பசளையோடு மதுரவேம்பு
கிடுக்கான கிளிமுக்குத் துவரை அமுகண்ணி
கெடியான பொன்மத்தை மதுரக் கோவை
படுக்கான பொன்வண்ணச் சாலியோடு
பாங்கான கருந்தும்பை மதனத் தண்டே" - 192

"தண்டோடு மூலிகையால் குருத்தினோடு
தணலான சிவந்த தில்லை கருத்த வேம்பு
இண்டடோடு இவ்வகைகள் நாற்பத்தைந்து
ஏத்தமா மலைகளிலே மெத்த வுண்டு
பண்டோடு பாடான மறுபத்துனாலும்
பட்டுடனே கட்டுண்டு படுந்தீப்பற்றும்
துண்டோடு சூதமது கட்டுமாகும்
சுயம்பான உபரசங்கள் சத்து மாமே" - 193.

போக சித்தர் கற்பநூல் — 400.

மேற்கண்ட மூலிகைகள் அனைத்தும் சேகரித்துப் பக்குவப்படுத்தி ஒரு மண்டலம் உண்டால் உண்டவனுக்கு இறப்பில்லை. உண்டவனின் உடல் கலையழகு ஒழுகும் வனப்பு உண்டாகி பார்வைக்கு மன்மதன் போல் தேகம் தெரியும். மாசுள்ள தேகம் மாறி நரைதிரை போக்கும். நம்மில் ஓடும் மூச்சு ஒடுங்கி இறுகிப் போகும். அதனால் கெவன சந்தி உண்டாகும். அண்ட அடுக்குகள் அனைத்திலும் ஊடுருவி சென்று அண்டம் பேரண்டம் பதமெல்லாம் அறியும் தன்மை உண்டாம். கீழ்வரும் பாடலால் அறிக.

"சத்தான மூலிகையில் சுருக்குச் சுற்றி
சாப்பிட்டால் மண்டலந்தான் சாவேயில்லை
மந்தான மன்மதன் போல் தேகமாகும்
மாசற்று நரை திரைகளெல்லாமாறும்
எத்தான வாசியெல்லாமிருகிப் போகும்
ஏறலாங் கெவனத்தில் ஏற்றமாக
அத்தான அடுக் கெல்லாஞ் சென்றுயேறி
அண்ட ரண்ட பதமெல்லா மறியலாம்" - 194.

மூலிகைகளுக்கு கருப்பேற்றல்

நமக்கு நலம் தரும் கற்ப மூலிகைகள் முதலில் தேர்வு செய்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதேபோல் கரம்பு மண்ணுள்ள நிலத்தை தேர்வு செய்ய வேண்டும். அந்த நிலத்தை பண்படுத்தி குழி வெட்டி அதில் சேங்கொட்டை இடித்து ஒரு முழமளவு குழி வெட்டி போடடு விட்டால் மண் மூடி நீர் ஊற்றி வந்தால் அவைகள் மக்கி எருவாகும். சேங்கோட்டை சிதைத்து போட்டால் மூன்று மாதத்தில் மக்கி விடும். சிதைக்காமல் கொட்டையாகப் போட்டால் ஆறு மாதம் பிடிக்கும்.

சேங்கொர்டை அழுகி மக்கி விடும் போது தண்ணீரில் விடுவது நிறுத்தி அதனை காயப் போட வேண்டும். காயப்போட்டு அதனை கொத்தி விடவேண்டும். பத்துநாள் காயப் போட்டு, அந்த நிலத்தில் பாத்தி பாத்தியாக செய்து அதில் எருவான சேங்கொட்டை உரமிட்டு அதில் பயிர் செய்யும் மூலிகைகள் கரிசாலை கரந்தை — செருப்படை — ஓமம் — வல்லாரை — நீலிதனாகும்.

மேலும் அந்த பாத்திகளில் கருவீழி — கருத்த வாழை — கருநெல்லி — கருநொச்சி — கருவேம்பு — கருத்த வேலி — கருத்த மணத்தக்காளி — கருவூமத்தை — அரைக்கீரை கருங்கடுக்காய் — கஞ் சாவும், — மற்ற மூலிகைகள் வேண்டியதை செடியாக்கி பூ — காயாக்கி வேர் விதைகள் கொடி கொம்புகள் காய்ந்த பின் வாங்கிக் கொள்ள வேண்டும்.

சேங்கொட்டை மக்கிய எருவு மீண்டும் இரண்டாவது முறைபாத்திக்கட்டி அதில் போட்டு மேற்கண்ட மூலிகையை பயிரிட வேண்டும. இதேபோல் நான்கு முறை பயிர் செய்து மூலிகைக்கு கருப்பேற்ற வேண்டும். அப்பொழுது மூலிகைகள் கருத்த நிறத்தில் காணப்படும்.

அதேபோல் மரங்கள் கருப்பாக வேண்டுமானால் ஒரு ஆள் உயரம் குழிவெட்டி அதில் சேங்கொட்டை சிதைத்து போட்டு மக்கவைத்து பயிர்

Koviloor Digital Library

செய்ய வேண்டும். அவைகள் மூன்று முறை கருப்பேற்றி எடுத்துக் கொண்டு உண்டு வந்தால் மனித தேகத்தில் உண்டாகும் நரை திரையாவும் நீங்கி நலங்கள் உண்டாகும்.

அந்த மூலிகைகளின் சாறு எடுத்து அதில் கொக்கிறகு எடுத்து தடவி பார்த்தால் அந்த இறகு கருப்பாகிவிடும். இதற்கு அதுவே சோதனையாகும். இதனை உண்டு தேகத்தை திடம் செய்து சிவயோகத்திலிருந்து முத்தி பெற வழிதேடிக் கொள்ள வேண்டும். இதுபோல் அனைத்து சித்தர்கள் செய்து நீண்டவர் இவ்வுலகின் கண் நிலைத்தார்கள் என்பதை போகரின் மூலம் அறியும் செய்திகள் கீழ்காண்க.

"மருவவே கருப்பாக மூலிதன்னை
வைக்கிற தோர் முறைதானும் வண்மைகேளு
கருவவே கரம்பைமண் தான் அரையளவு விட்டு
கதித்து நன்றாய்ப் பரப்பியே பாத்திகட்டி
திருவவே சேங்கொட்டை முழ உயரம் போட்டு
சிறப்பாக வெட்டிவிட்டால் மூன்று திங்கள்
தருவவே முழுக் கொட்டை ஆறு திங்கள்
ததும்பாமல் விட்டுவரத் தண்ணீர் தானே - 198

தானான சேங்கொட்டை அழுகியதின் பின்பு
தண்ணீரை விடாமல் தான் காயப் போடு
பானான பத்து நாள் காயவிட்டு
பாங்காக் கொத்தியே ஆறப் போட்டு
வானான பாத்தியெல்லாம் வரிசையாக்கி
வைக்கின்ற மூலிகை தான் கரியசாலை
தேனான கரந்தையொடு செருப்படை ஓமம்
செப்பரிய வல்லாரை நீலிதானே - 199

தானான கருவீழி கருத்தவாழை
தாக்கான கருநெல்லி கருத்த நொச்சி
கானான கருவேம்பு கருத்தவேலி
கருத்த மணித் தக்காளி கருவூமத்தை
பானான அறுக்கீரை கருங்கடுக்காய்
பாங்கான கஞ்சாவும் மற்று மூலி
வேனான வேர் விரைகள் கொடிகள் கொம்பு
விதித்து வைத்துக் காய்த்தபின்பு விரையை வாங்கே - 200

வாங்கியேமுன் போல் சேங்கொட்டைபோட்டு
வாகாக அழுகி மண்ணில் சேர்ந்த பின்பு
மாங்கியே மண் காய்ந்த பிறகு நீயும்
வகுக்கின்றபோதுதான் இரட்டித்தே போடு
வேங்கியே விரை தெளித்துப் பயிருண்டாக்கி
விரைமுதிர்ந்த போதுதான் மருவிடத்திற்போடு
தாங்கியே நாலுதரம் போட்டுத் தீர்ந்தால்
சமரசமாய முழுக் கருப்பு ஆகும் பாரே - 201.

பாரென்ற பார் பரமவிருட்சத்துக் கெல்லாம்
பாங்காக குழிவெட்டி ஆள் உயரம் போடு
மூரென்ற முதல் தரமா மூலிகையைக் கொள்ளு
முதிர்ந்த பின்பு இரண்டான மூலிகையைக் கொள்ளு
தாரென்ற மூன்றான மூலிகையைக் கொள்ளு
தண்மையாய முழுக் கருப்பு பின்னே கொள்ளு
நாரென்ற நரை திரைகள் மாறிப்போகும்
நலமாகும் பரிட்சையது பார்த்துக் கொள்ளே - 202

பார்த்துமே கொக்கிறகு தன்னில்தானும்
பரிவான யிலைச்சாறு மூன்று தரம் தடவி
வேர்த்துமே வெய்யிலினில் போட்டு வைக்க
மிக்கான காகத்தினிறகேயாகும்
நீர்த்துமே யிப்படித்தான் நிலைமை பார்த்து
நிச்சயத்துக் கருப்பான மூலிகையைக் கொள்ளு
சேர்த்துமே சித்தர்கள்தான் கொண்ட மார்க்கம்
திறமையாய் திட்டந்தான் செப்பினேனே - 203

செப்பினேன் பாட்டர் திருமூலனாயன்
சிறப்பாக கரிசாலைக் கற்பமுண்டு
ஒப்பிலெழு பதுகோடியுக மிருந்தார்
உகந்துயெனை யீன்றகா லாங்கினாயன்
கப்பினேன் கரைந்தை யென்ற கற்பமுண்டு
கண்திறவாச் சமாதியிலே கற்பாந்தம் நின்றார்
அப்பினேன் அடியேன் தான் ஓமமுண்டு
ஐந்து யுகம் பிள்ளைகட்டு அருள்செய்தேனே - 204

செய்ததொரு செருப்படையின் கற்பமுண்டு
சிறுபாட்டர் பதஞ்சலியார் வியாக்கிரமர் தானும்
அய்ததொரு அம்பலத்தில் அனந்தங் கோடி
அதிகமாய்த் தவமிருந்து ஆடல் கண்டார்.
மய்த தொரு மச்சமுனி வல்லாரை யுண்டு
மௌனமாஞ் சமாதியிலே கோடி யுகம் நின்றார்
கொய்த தோர் கூர்மமுனி கருவிழியுண்டு
கோடி யுகஞ் சமாதியிலே கூர்ந்திட்டாரே - 205

கூர்ந்திட்ட சித்தர்கள் தான் கோடாகோடி
குறிப்பாகக் கற்பமுண்டு கொடிதா ஞானம்

Koviloor Digital Library

ஆர்ந்திட்டு அதீதத்தில் லகித்துப் போனார்.
அதிகமாய் லிங்கத்தில் புக்கினோர் கோடி
ஓர்ந்திட்ட தாதியிலே ஒன்பதுபேர் சித்தர்
ஒருகோடி நவகோடி கோடாகோடி
பூர்ந்திட்டுப் பூரணத்தி லகித்தோர் கோடி
பேரான நாதாக்கள் சித்தனாட்டே - 206

போகர் கற்ப நூல் — 300

இனிநாம் சட்டை முனி சித்தர் மிகச்சிறந்த சித்தராவார்.

மக்களுக்கு முத்தி தரக்கூடிய தீட்சாவிதி 200 என்ற நூலும் அதனை சுருக்கி பாடிய தீட்சாவிதி 50யையும் திருமூலரால் கிழியுண்டு. அதனால் சித்தர்கள் அனைவருக்கும் வெறுப்பு ஏற்பட்டது. பிறகு அனைத்து சித்தர்கள் வெளிப்படையாக பாடி நூல்கள் இயற்றப்பட்டது. கயிலாய சட்டை முனி சித்தரின் வெள்ளை மனதுடன் வெட்ட வெளிச்சமாக தெளிவான நடையில் பாடும் திறம் கொண்டவர்.

அவரும் மூலிகைக்கு கருப்பேற்றும் முறையை மிகத்தெளிவாக பாடியுள்ளதையும் அறியலாம். மூலிகைக்கு வண்ண கற்பம் செய்யும் முறையானது விளக்குகிறார். பூமியில் குழி வெட்ட வேண்டும். அதில் சேங்கொட்டை வெட்டிப் போட வேண்டும். முழவுயரம் வெட்டிய குழியில் சேங்கொட்டை பரப்பி போட வேண்டும். அதில் மண்ணை வெட்டி அதன்மேல் பரப்ப வேண்டும்.

பின்னர் அதன்மேல் நீர்விட்டு வரவேண்டும். காயாமல் கட்டுபுகாமல் மூன்று மாதம் நீர்விட்டால் அழுகி மக்கி விடும். அந்த குழியில் உள்ளது கொத்திப் பார்த்து மண் கருகியிருக்கும் பதம் கண்டு. அதில் கட்டை போட்டால் கொடியருகம்புல் ஆறுமாதத்தில் பொருமி நிற்கும். மேலும் நீர் விட்டு கொத்தி கிண்டி விடவும்.

வெட்டிப் போட்ட கொட்டையானால் ஆறு மாதத்தில் அழுகும். வெட்டாதக் கொட்டையால் எட்டு மாதத்தில் அழுகி பொருமி நிற்கும். அந்த குழியில் நீலி மூலிகை, கரிசாலை மூலி, கரந்தை மூலி, பொற்றிலையும், வல்லாரை, சிறிய செருப்படையும் போட்டு பயிரிடவும்.

மேலும் அந்த உரத்தில் குமரி, நிலப்பனை — கொல்லங்கோவை — மேனி — வீழி — சிவனார் வேம்பு — கொடி வேலி — இவைகள் வரிசையாக பயிர் செய்யவும்.

முதல்முறையில் பயிர் செய்த மூலிகை கால்பாகம் கருப்பாகும். அதே மூலிகை இரண்டாவது பயிர் செய்தால் அரைபாகம் கருப்பாகும். மீண்டும் மூன்றாம் முறை பயிர் செய்தால் முக்கால் பாகம் கருப்பாகும். நான்காம் முறை பயிர் செய்தால் முழுதாக கருப்பாகும்.

மூலிகைகள் கருப்பானதற்கு சோதனை உண்டு. கருப்பான மூலிகைகள் பன்னீரில் போட்டு ஊரவிட்டு எடுத்து கொக்கிறகு அதில் தேய்த்து எடுக்க காகத்தின் நிறம் ஏற்படும். அந்த இறகு நீரில் விட்டு அழுத்தி தேய்த்தால் நிறம் மாறாது. ஆகவே இங்கு கூறப்படும் முதல்நிலை கருப்பாக்கிய மூலிகை முதலில் உட்கொள்ள வேண்டும். பிறகு அரைபாகம் கருப்பேறிய மூலிகை உட்கொள்ள வேண்டும். பின்னர் முக்கால் பாகம் கருப்பேறிய மூலிகைக் கொள்ள வேண்டும். நான்காம் முறை கருப்பேறிய மூலிகை அடுத்து உட்கொள்ள தேகத்தின் சட்டை யொன்று கழலும். மயிர்கள் கரும் தும்பி நிறம் உண்டாகும். முதலில் வல்லாரை எடுத்துக் கொள்ளவேண்டும். அடுத்து கரந்தைக் கொள். பின்னர் கரிசாலை கொள்ள வேண்டும். பின்னர் குமரி எடுத்துக் கொள்ள வேண்டும். இதன்பிறகு ஓமம் எடுத்துக் கொள்ள வேண்டும். இறுதியில் வீழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

வீழிமூலி உண்ட மச்சமுனி ஊழிகாலம் வேதாந்த சமாதியிலே யிருந்து வந்தார். கமலமுனி என்னும் காலாங்கி முனிவர் கொடுவேலி உண்டு அடங்காத சமாதியில் இருந்தார். பிரமமுனி சிறுசெருப்படை உண்டு சமாதியிலிருந்து போனார். வாசமுனி பொற்றிலையை உண்டு சுகமான சமாதியிலிருந்து வந்தார்.

கோரக்கர் கஞ்சா மூலிகை உண்டு ஏழுயுகங் கடந்து பின்பு எழுந்தாா.

Koviloor Digital Library

கொங்கணர் கரிசாலை உண்டு நாலு யுகம் வாதம் பார்த்தார்.சொரூபானந்தார் திருமேனியுண்டு சமாதியில் பிரண்டு நின்றார். போகர் கொல்லன் கோவை உண்டு கோடி வரையிருந்திட்டாரே.

மலைகள் தோறும் சுந்தரானந்தார் முதல் எல்லோரும் மரமூலிகைகள் கருப்பாச் செய்வதற்கு இரண்டான் பள்ளம் வெட்டி சேங்கொட்டை மண்ணும் அடுக்கடுக்காக போட்டு அதில் கருநெல்லி கருத்த நொச்சி — கஞ்சா — கொடி வேலி முறை வைத்து பக்குவப் படுத்தி உண்டார்கள்.

சோதி மரம் — சுணங்கன் மரம் — ரோம மரம் — சேர்ந்தாடு பரவை மரம் — இவைகளின் பாலை கரந்து உண்ண வேண்டும். சுரபி விருட்சம் — சோம விருட்சம் — எருமை விருட்சம் அதன் பாலையும் உண்டு தேகம் கற்பமாக்கிக் கொள்க. இந்த விவரம் கைலாய சட்டை முனி சித்த நாதர் பாடலை கண்டுபிடித்து தெளிக.

"பாரென்று கைக் கொடுக்கச் சித்தர் மெச்சிப்
பாங்கான கெவுனத்தே யழைத்துப் போனார்
காரென்று கறுப்பாக்கி மூலிகையைத் தானுஞ்
சாதகமாய்த் தின்பதற்கு வண்ண கற்பம்
நேரென்று பூமியிலே குழியை வெட்டி
நினைவாக செங்கொட்டைவெட்டிப் போட்டுத்
தூரென்று முழவுயரம் பரப்பிக் கீழே
சுகமான மண்வெட்டி மேலே போடே - 70.

போட்டதன் மேல்நீர் விட்டுக் காயாமற் கட்டுப்
புகழாக மூன்று திங்க ளழுகிப் பார்த்து
நீட்டிலே சிறுவகைக் கொத்திப் பார்த்து
நேராக மண்கறுத்த பதத்தைக் கண்டு
மூட்டிலே முழுகட்டை போட்டாயானால்
மூதண்ட மாறுதிங்கள் பொரும நிற்குங்
காட்டிலே ஜலம்விட்டு மேலே கிண்டிக்
காயாம லேமுதிங்கட் சேருமாமே - 71

ஆமப்பாக வெட்டினதோர் கொட்டையானால்
அசையவில்லை மூன்றுதிங்கள் வித்தை யெல்லாம்போடு
ஓமப்பா வெட்டாத கொட்டை யானால்
ஓரெட்டுத் திங்களிலே வித்தெல்லாம் போடு
சேமப்பா வித்தென்ன தெளிப்ப தென்றாற்
செப்புகிறேன் நீலியோடு கரிசாலை கரந்தை
தாமப்பா பொற்றலையும் வல்லாரையோடு
சாதகமாயச் சிறியதொரு செறுப்படையும் போடே - 72

போடப்பா குமரிக் கண் ணோடுதோறும்
புகழான நிலப் பனையுங் கொல்லன் கோவை
நீடப்பா திருமேனி வீழிவீழி
நிலையான முறமசைக்கி சிவனார் வேம்பு
ஓடப்பா கொடிவேலி யிதுகளெல்லாம்
ஒவ்வொன்றாய் வரிசையுடன் பயிரே செய்து
சூடப்பா தேவிதபம் பூஜைபண்ணு
சுணங்காய் மறந்துவிட்டாற் பயிராகாதே - 73

பயிரான மூலிகை தான் முதற்றத்திற் கேளு
பாங்காகக் கால்வாசி கறுப்பே யோடும்
பயிரான மறுதரத்தி லரைவாசி கறுக்கும்
பாரப்பா மறுதரத்தில் முக்கால்வாசி
முயிரான மறுதரத்தில் முழுவாசி கறுக்கும்
மோசமில்லைக் கறுப்பாகு முன் பெரியோர் செய்தாற்
மயிராகும் கறுப்பதற்குச் சோதனையே சொல்வேன்.
மைந்தனே மனமகிழக் கண்டிடாயே - 74

கண்டு கொள்ளச் சோதனை தான் கொக்கிறகுதானும்
கைமுறையாய் முக்கரப்பின் பன்னீர்க்குள்ளே
கண்டுமெள்ளப் பிரட்டியதைத் தேய்த்துப் பார்த்தாற்
சாதகமாயக் காகத்தினிற மேயாகும்.
ஒன்று கொள்ளக் கழுவியதைத் தேய்த்தாலும் போகா
துண்டவர்க்கு மயிர்கறுக்குஞ் சமுசயமோ சொல்வீர்
பண்டு கொள்ள கால்கறுப்பை முன்னே கொள்ள
பாங்கான யரைக் கறுப்பை பின்னே கொள்ளே - 75.

கொள்ளப் பாவதின் பிறகு முக்கால் வர்ணங்
கூசாதே முழுக் கறுப்பைச் சண்ணித் தின்று
முள்ளப்பா சட்டை யொன்று கழன்று போகும்
உத்தமனே ரோமமெல்லாந் தும்பிபோலா
மெள்ளப்பா முந்தி முந்தி வல்லாரை கொள்ளு
விழுங்கியபின் கரந்தை கொள்ளு கரிசாலை கொள்ளு
நள்ளப்பா குமரிகொள்ளு வோமங் கொள்ளு
நலமாகச் சேரும்படி வீழி கொள்ளே - 76

வீழிகொண்ட மச்சமுனி வூழிகாலம்
வேதாந்த சமாதியிலே யிருந்து முண்டார்
ஆழி கொண்ட கமலமுனி கொடுவேலி கொண்டு

Koviloor Digital Library

வடங்காத சமாதியிலே வுகந்து நின்றார்
வாழி கொண்ட பிரமமுனி செருப்படையை யுண்டு
வாகாகச் சமாதியிலே யிருந்து போனார்
சூழி கொண்ட வாசமுனி பொற்றிலையைக் கண்டு
சுகமாக சமாதியிலே யிருந்திட்டாரே - 77

இருந்திட்டார் கஞ்சாவைக் கோரக்கர் தானும்
ஏழுயுகங் கடந்த பின் யெழுந்திருந்தார்
அருந்திட்ட கரிசாலை கொங்கணர் தானுண்டு
யாச்சரியம் நாலுயுகம் வாதம் பார்த்தார்
பெருந்திட்ட திருமேனி சொருபா நந்தர்
பேணியுண்டு சமாதியிலே பிரண்டு நின்றார்
பொருந்திட்ட கொல்லனுட கோவை யுண்டு
போகமுனி கோடிவரை யிருந்திட்டாரே - 78

இருந்திட்ட மலைதோறும் சுந்தரானந்தர்
யெல்லோருங் கருப்பது வாய்செய்த மார்க்கம்
பருந்திட்ட குழிவெட்டி யிரண்டான் மட்டும்
பாங்காக வதினிறையச் செங்கொட்டைப் போட்டு
வருந்திட்ட மண்போடடு வதில் மேலையா
வைத்தாரே கருநெல்லி கருத்த நொச்சி
கருத்திட கஞ்சாவுங் கொடிவேலியோடு
கைமுறையாய் வைத்தார்கள் கருத்துப் போச்சே - 79

புகழான யிதன் பிறகு முட்பனியை யுண்ணு
போக்கோடே சோதியொடு சுணங்க முண்ணு
தகளாதே ரோகத்தின் விருட்சந் தானஞ்
சாதகமாய்ச் சேர்ந்தாடு பாலையுண்ணு
துகளாகச் சுரபி விருட்சஞ் சோம விருக்ஷஞ்
சொற்பெரிய யெருமை விருட்ச முண்ணு
இகளாம லுன்மனையைக் கணடுதேறி
யிவளுடைய நாடகத்தின் கற்பங்கேளே - 81

கைலாயநாதர் சட்டைமுனி கற்பம்ட — *100*

பதினெண் சித்தர்களால் கூறப்படும் கற்ப மூலிகைகள் அனைத்தும் சித்தர்கள் கூறும் முறையில் கறுப்பேற்றி அதனை உண்டு வரலாம். எளிதான மூலிகையான பொற்கொடி, இருவகை காக்கணம், செருப்படை, வல்லாரை, அரைக்கீரை, குமரி என்னும் சோற்றுக்கற்றாழை, கரந்தை, சிவனார் மூலி இவைகள் வீட்டுத் தோட்டங்களில் மண்ணில் பயிர் செய்து இல்லறத்தாரும் உண்டு வரலாம்.

கற்ப மூலிகைகள் கற்ப தேகங்கள் வலிமை — உறுதி — திடம் பெருகும். கூட்டு மூலிகைகள் செய்து உண்டு வரலாம். மூக்கூட்டு மூலிகை, ஐங்கூட்டு மூலிகை, எண்கூட்டு மூலிகைப் பொடி இணைத்து உண்டு தேகமதை கல் போன்று உறுதியாக்கலாம்.

கற்ப மருந்துகள் உண்ணும்போது பசும்பாலில் பச்சரிசியும் பாசிபயிறும் கலந்து பொங்கி அதில், பசுநெய்யில் சீரகம், கரிமிளகு, கறிவேப்பிலே தாளிதம் செய்து சேர்த்து அரை வயிறு உண்டு வென்னீர் கால்வயிறு அளவு எடுத்து, நாளுக்கு ஒரு வேளை உண்டு வரவும். சிவயோகம், வாசி யோகம், மௌனயோகம் செய்து வரவேண்டும்.

வாலை பூசை, சிவபூசை செய்து வாசி யோகம் செய்ய வேண்டும். சக்தி பூசை மாலையிக்கு மேலும், சிவ பூசை விடியற்காலையும் செய்து வந்தால் சகல சித்தர்கள் உம்மை காத்து அருள்வார்கள்.

கற்ப மூலிகைகள் உண்டு வருவதால் உடலின் அணுக்கள் பரந்து விரிந்துள்ளதை ஒன்றாக திரட்டி வலிமையும் உறுதியும் உண்டாக்கும். இதனால் தேகயணுக்கள் நிலைகுலையாது நீண்டநாள் வாழும் நிலை உண்டாக்கும். மானிடனுக்கு நல்வினையின் ஏற்ப நலங்கள் வழங்கி இறையருள் துணை புரியும்.

சாகாத கல்வி என்னும் சாகாக்கலை இறையருளால் தெரிவிக்கப்பட்டு சிவயோக வாழ்க்கையில் நிலையாக குடியமர்ந்து மரணமில்லா வாழ்வு உண்டாக்கி என்றும் சோதிவடிவம் பெரும் வாய்ப்பு உண்டாகி அமைதி பெற்று மேலை பொருளைச் சார்ந்து முத்தியும் சித்தியும் பெற்றுத் திகழலாம்.

"சாகாம லிருக்க வென்றால் பஞ்ச தீட்சை
சாதித்து கற்பமுண்டு தள்ளியேறே - 13

அகத்தியர் தீட்சாவிதி — *200*

"நாடப்பா சாகாத கல்வி தன்னை
நலமாக கற்பதற்கு வுன்னைத் தேற்று - 7

இராமரிஷி சிவயோக ஞானம் — *13*

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

9. சரியை - கிரியை - யோகம் - ஞானம்

உலக மக்கள் மீது மிகவும் இரக்கப்பட்டவர்கள் சித்தர்களேயாவர்கள். இவர்கள் உலகில் மக்கள் இறந்து போவதைக் கண்டு மிகவும் வருந்தி அவர்களுக்காக சாகாத கல்வி கற்கும் வழியினையும் தங்கள் நூல்களில் கண்டு தொகுத்து கூறியுள்ளார்கள்.

மக்கள் நலம் கருதாது, அனைவரும் செத்து மடிய வேண்டுமென்று வேதவியாசன் பொய்யான செய்திகளை தொகுத்து வேதமாகவும், இதிகாசமாகவும் புராணங்களாகவும் ஒன்றாகக் கலந்து மக்களைக் குழப்பத்தின் பள்ளத்தில் விழச் செய்தான். வேதவியாசன், பொய்யான செய்திகள் மெய்ப் போல் தோன்றுமாறு அண்டப்புளுகும், ஆகாசப்புளுகும் கட்டு கட்டாக அவிழ்த்து மக்களிடையே பரப்பி இன்று பொய்யான பாதையில் சென்றுக் கொண்டு இருக்கிறது.

அதனால் தான் மக்களின் நிலை, அவன் கட்டிவிட்ட அண்ட புளுகு ஆகாச புளுகு மூட்டை குப்பைகள் நம்பியவர்கள், மரணத்திலிருந்து மீள முடியாமல் மடிகிறார்கள். இக்கருத்தை மனதில் கொண்ட காகபுசண்டர் என்னும் சிவயோக ஞானச் சித்தர் தம் நூலான பெருங்காவியத்தில்,

"சாகாமல் இருப்பதற்கும் கல்வி யுண்டு
சாக்காடு கொள்வதற்கும் விபரம் உண்டு" -

என்று மக்கள் மண்டையில் உறைக்குமாறு கூறி அவர்களை நோக்கி பெருங்கவலைக் கொண்டு இரக்கப்பட்டு, வருந்தி கூறுகிறார். மேலும் இராம மாமுனி சிவயோக ஞானம் என்னும் சிறுநூலில்,

"நாடப்பா சாகாத கல்வி தன்னை
நலமாகக் கற்பதற்கு உன்னைத் தேற்று"

என்றும் அருளுவுரை கூறுகிறார். மேலும் இடைக்காட்டு சித்தர் அவர்கள் தாம் பாடிய பாடலில, எது மெய்கல்வி என்பதையும் மக்களுக்கு எடுத்துக்காட்டுகிறார். அதனையும் அறிவது நலமகும். காண்க.

"சாகாதிருப்பதற்கு தான் கற்குங் கல்வியன்றோ
வாகான மெய்க்கல்வி வகுத்தறி நீ கன் மனமே"
- 66

என்று மெய்க்கல்வியைப் பற்றி விளக்கியுள்ளார்.

சாகாத கல்வியை கற்கும் கலையை சித்தர்கள் அனைவரும் மறையகமாக வைத்துள்ளனர். அதன் மறையகம் நூல்களில் எடுத்துக் காட்டியுள்ளனர். அவ்வகையில் சரியை — கிரியை — யோகம் — ஞானம் என்பார்கள். அதில் சரியை என்றால் என்ன? கிரியை என்றால் என்ன? யோகம் என்றால் என்ன? ஞானம் என்றால் என்ன என்பதை வகுத்துள்ளனர். இனி அதனைப் பற்றி அறிவோம்.

சரியையும் கிரியையும் சக்தியின் பகுதியான பிரிவாகவும், யோகமும் ஞானமும் சிவத்தின் பகுதியான பிரிவாகவும் கூறப்படுகிறது. சரியையும் கிரியையும் சக்தி மார்க்கமாகவும், யோகமும் ஞானமும் சிவமார்க்கமாகவும் சித்தர்கள் கூறுகிறார்கள். சக்தி மார்க்கம் என்று கூறப்படும் சரியையும் கிரியும் முத்திக்கு செல்லமுடியாது. யோகமும் ஞானமும் முத்தி தர வழிகூறும். சக்தி மார்க்கம் இறப்பு தரும். சிவமார்க்கம் இறப்பைத் தடுக்கும். ஆகவே முன்னதை விட பின்னது மிகச்சிறந்தது.

"தேரப்பா சரிதையுடன் கிரியை ரெண்டுந்
சிவசிவா சக்தியுட கூறேயாச்சி
காரப்பா யோகமுடன் ஞானம் ரெண்டும்
கருவான சிவத்தினூட காலேயாச்சு" - 50

அக.ரசனமி.சாகரம் — *1200*

மேற்கண்ட செப்பும் மொழியால் உணர்தல் வேண்டும்.

சுந்தரானநதர் சுத்த ஞானம் என்னும்

Koviloor Digital Library

நூலில் சரியை என்பது தேவியின் தீட்சை பெற்று நடைமுறைப்படுத்தல். கிரியை என்றால் கற்பம் கொள்வதுதான் கிரியையாகும். யோகம் என்பது புருவ மையத்தில் நின்று ஒளி காண்பது தான் சிவயோகம் என்பர். ஞானம் என்றால் தலங்கள் ஆறு கண்டால் ஞானம் என்பர் என்று கூறும் பாடலைக் காண்க.

"முன்னே தான் சரியையொடு கிரியை யோகம்
முக்கியமா ஞானமொடு நாலுங் கேளு
உன்னே தான் சரியை யென்ன தேவி தீட்சை
யுபதேசம் செய்தாக்கால் சரியைதானே - 6

தானென்ற சரியை யென்ன தேவி பூசை
தயவாகச் செய்து கற்பங் கொண்டாலையா
வேனென்ற கிரியை யென்ற நாம மாச்சு
வேதாந்த யோகத்தை விளம்பக் கேளு
ஊனென்ற புருவ மையத் தமர்ந்திருந்து
ஒளி கண்டால் யோக மென்ற நாமமாச்சு
கானென்ற ஞான மென்ன தலங்களாறும்
கண்டாக்கால் ஞானி யென்று சொல்லலாமே - 7

என்று கூறப்படுகிறது. மேலும் அந்த சித்தர் பெருமானும் அதனை விரிவாக விளக்குகிறார். சரியை நடைமுறை படுத்திய போது தேகம் உயிர்விட்டு விலகினால் கிரியையிலே தூக்கும். பின் கிரியை நடைமுறை செய்யும் போது மனம் விழ்ந்தால் யோகத்திற்கு எடுத்துச் செல்லும். யோகம் விட்டு மனம் விழ்ந்தால் நன்மை தரக்கூடிய ஞானத்தில் நாட்டுவிக்கும். கற்றவை கை கண்டபடி சொல்லி வைத்தோம். இதன் கருத்து என்னவென்றால் சக்தியே யாகும் என்பதாம். இது தொடர்புடைய பாடலைக் காண்க.

"சொல்லவே சரியையலே நின்ற சடம் வீழ்ந்தால்
சுகமாகக் கிரியையிலே தூக்கம் பின்னும்
அல்லவே கிரியைவிட்டு மனந்தான் வீழ்ந்தால்
ஆச்சரியம் யோகத்தா லடுத்து நிற்கும்
நல்லவே ஞானத்தில் நாட்டு விக்கும்
கல்லவே கைகண்ட படியே சொன்னோம்
கருத்திதுக்கு யென்ன வென்றால் வாமம் - 8

சுந்தரானந்தர் சுத்தஞானம் — 51

வால்மீகர் தம் நூலான ஞானம் என்னும் சிறுநூலில் நான்கு வித முறைகள் எளிதான பாடல் வரிககளால் விளக்குகிறார். காண்க.

"அறிந்து கொள்ளு பூரகமே சரியை மார்க்கம்
அடங்கு கின்ற கும்பகமே கிரியை மார்க்கம்
பிரிந்து வரும் ரேசகமே யோக மார்க்கம்
பிசகாமல் நின்ற துவே ஞான மார்க்கம்
மறிந்து டலில் புகுகின்ற பிராணவாயு
மகத்தான சிவசக்தி அடங்கும் வீடு
சிறந்து மனந் தெளிவாகிச் சோர்ந்தோன் சித்தன்
சிவ சிவா அவன வானென் றுரைக்கலாமே - 3

வால்மீகர் மிக எளிமையான பொருளுடன் விளக்கியுள்ளார். அதனை காண்க.

பூரகம் செய்வது சரியை வழியாகும். அடங்க வைக்கும் கும்பகமே கிரியை வழியாகும். பிரிந்து போகும வழிமுறையே யோகமென்றும், அதில் பிசிருயில்லாமல் செயல்படுவதே ஞானவழி யென்றும் கூறுவார்கள். மாறி வரும் தேகத்தின் கண் அறிந்து உடலில் புகுந்து வரும் பிராண வாயு பெருமையுள்ள சிவசகதி ஒன்றி நிற்கும் வீடு தெளிந்த மனம் கொண்டு சேர்ந்தோன் சித்தன்.

மேலும் சச்சிநானந்தர் சுழிமுனை சூத்திரம் என்னும் நூலில் மேற்குறிப்பிட்ட நான்கு நிலையைப் பற்றி மிகவும் தெளிவாகவும் எளிமையாகவும் விளக்கமாகவும் கூறுவதும் அறியத்தக்கது. இந்த தூலவுடல் பெற்றவர் நாளும் "ஓம் நம சிவய" என்று நினைப்பது சரியையாகும். நெஞ்சியிலே வாசியது இயக்குவது கிரியையாகும்.

இயக்கப்பட்ட வாசியானது கண்டத்தில் நிறுத்தியும் — இழுத்தும் — பூரித்தும் — செய்வது யோகமாகும். இந்த யோகத்தின் விளைவாக மௌனமாய் இருப்பதும் ஞானமாகும் என்று கூறப்படும் செய்தியை கூறும் பாடல் காண்க.

"துணிந்தே நாம் சொல்லுகிறோம் நன்றாய் கேளு
தூலவுடல் "ஓம் நமசிவாய மது சரியை
அணிந்த நெஞ்சில் வாசியது கிரியாகும்

Koviloor Digital Library

அதன் மேலே கண்டத்தில் யோகமாகும்
தணிந்த தொரு புருவமையம் மவுனமாகும்
சாதகமாயத் தூலவுடல் நானுந்தானே" - 13

என்று ஓதுவது அறிவது நலமாகும்.

திரு கோண சித்தர் பாடல் என்ற கோர்வையில் சரியை நிலையில் உள்ளவர்கள் பின் போகக் கூடாது என்றும், அவல நிலையாகிய கிரியை உள்ளவர்களிடம் சார்ந்து நிற்கக் கூடாது என்றும், யோகவான்கள் வந்தால் அவரை வரவழைத்து அன்பு செலுத்தி பேசி அனுப்பவும். தவஞான போனநிலையில் உள்ளவர்கள் வந்தால் அவர்களை மதித்து அழைத்து சிவநிலை பொருளைப் பற்றி கேட்டு அறிந்து கொள்க என்று அவர் கூறும் அறிவுரைக் காண்க.

"சாற்றுஞ் சரியை சளுக்கரு னைத்தழுவப்
போற்றுவா ரங்கவர் பின் போகாதே - யேற்றும் - 81

அவலக்கிரியை அசடருனை மேவக்
கவலைப் படுவார் கட்ததிப் சிவயோக - 82

வாதியர்கள் வந்துன் மலரடியைத் தெண்டனிட்டாற்
பேதியா துள்ள ழைத்தப பேசிக் கொள் - ஆதி - 83

தவஞான மோனத்துக்காரர் வந்தால்
அவமான் பண்ணா தழைத்துச் - சிவபொருளை"
- 84

என்று திரிகோண சித்தர் ஓதுகிறார். சரியையாளர்களிடத்தில் செல்லக்கூடாது. கிரியையாளர் கண்டால் அவரை கடந்து செல்ல வேண்டும். யோகியர்களைக் கண்டால் அவரை அழைத்துப் பேசி மனநிறைவை உண்டாகும்படி நடந்துக் கொள்ள வேண்டும். தவஞானிகளைக் கண்டால் அவர்களை மதித்து நடந்துக் கொள்ள வேண்டும் எனற அறிவுரை வழங்குவது கவனிக்கத்தக்கது.

அகத்தியர் பரிபூரணம் சுருக்கம் என்னும் சிறுநூலில் சரியை, கிரியை, யோகம், ஞானம் பற்றி கூறுவதும் காணத்தக்கது. உலக மக்கள் வீடு கட்டி மகிழ்ச்சியுடன் கல் மரத்தையும், செம்பையும் இவைகளால் பூசை செய்வது சரியையாகும். தகட்டினாலும், மரத்தாலும், சக்கரங்கள் செய்து ஓமம் வளர்த்து செய்முறைக்கு கிரியை என்றும், வாசியை கொண்டு உடலுக்கு நிறுத்தல், வாங்கல், விடுதல், செய்யும் முறைக்கு யோகம் என்றும் கூறலாம். உரை செய்யாத பொருளை அறிந்து மௌனமாக இருந்து வருவதற்கு ஞானம் என்றும் கூறும் அறிவுரைக் காண்க.

"காணுதற்குச் சரியை யொடு கிரியை யோகம்
கண்ட தொரு ஞானமடா நாலுங் கேளு
மாணுதற்கு லோகத் தோர் வீடு கட்டி
மகிழ்வாகக கல்மரத்தைச் செம்பை நாட்டித்
தாணு வெனப் புகழ்ந்தாக்காற் சரியை யாகும்
தகட்டிற் செய் சக்கரங்கள் கிரியை யாகும்
ஊணுதற்கு வாசி கொண்டு உடலிலுத
உத்தமனே யோக மென்று உரைத்திட்டேனே - 3

உரையாயததைக் கண்டால் ஞானமப்பா
உத்தமனே புலத்தியனே உண்மைகேளு - 14

என்று கூறும் பாடலலால அறிக.

மேலும் அகத்தியர் பூரண காவியம் என்னும் நூலில் நான்காவது பகுதியில் சரியை எதைக் குறிக்கிறது என்றும் அது எந்த வேத்ததில் கூறப்படுகிறது என்றும், கிரியை எந்த வேதத்தில் கூறப்படுகிறது என்றும், யோகம் எந்த வேதத்தில் கூறப்படுகிறது என்றும், ஞானம் எந்த வேதத்தை சார்ந்து நிற்கிறது என்பதையும் கூறுகிறார். மேலும் எவ்வித மண்ணை சார்ந்து வருகிறது என்றும் எடுத்துக் காட்டும் அற்புதமான செய்திகள் காணலாம்.

"நாலான வேதமதில் இருக்கு வேதம்
நன்மையுள்ள சரிதைவழி நன்றாய்ச் சொல்லும்
பாலான வேதமது சாமவேதம்
பதிவான கிரியை வழிநன்றாய்ச் சொல்லும்
நாலான வேதமடா யெசுர்வேதந்தான்
கருணையுடன் யோகவழி கருவாய்ச் சொல்லும்
மேலான அமுர்தமா அதர்வண வேதம்
வேதாந்த ஞானநெறி விளம்புந்தானே - 33

வேதங்கள் நான்கு. இருக்கு வேதம் சரியைக் கூறும்

சாமவேதம் கிரியைக் கூறும். யசூர் வேதம் யோகவழயை கூறும். அதர்வணவேதம். ஞான வழியை கூறும்

Koviloor Digital Library

என்று கூறுகிறார். மேலும் அடுத்தப் பாடலில் கூறும் செய்திகளையும் காண வேண்டும்.

"தானான சரிதை வழி நன்றாய்க் காத்தால்
சாலோக பதிவியது தானே தங்கும்
தேனான கிரியை யதின் படியே நின்றால்
சிவ சவா சாமீபந் தெளிவாய்க் காணும்
கோனான யோகவழி நடந்தாயானால்
குணமான சருப பதவி காணும்
வானான ஞான வழி கண்டாயானால்
மகத்தான சாயுச்சிய பதவிய பதவியாமே - 34.

சரியையில் நின்றால் சாலோக பதவி வந்து கூடும். கிரியையில் நின்றால் சாமீபந்தான் தெளிவாகத் தோன்றும். யோக வழி நின்றால் குணங்கொண்ட சாருப பதவி பெறலாம். ஞான வழி கண்டாயானால் மகத்தான சாயுச்சிய பதவியாகும் என்று கூறப்படுகிறது. மேலும் அதற்குரிய நிலப்பகுதியையும் எடுத்துக் காட்டியுள்ளதையும் அறிய வேண்டும்.

"ஆமப்பா முல்லைநிலத் தனிலிருந்து
அப்பனே சரிதை வழி நன்றாயப் பாரு
தாமப்பா மருதனிலந் தனிலிருந்து
தன்மையுடன் கிரிகையிலே தானாய்நின்று
ஓமப்பா குறிஞ்சிலத் தனிலிருந்து
உத்தமனே சிவயோக நன்றாய்ப் பாரு
போமப்பா பாலை னிலம் ஞானத் தியானம்
புத்தியுடன திலிருந்து ஞானம் பாரே - 35

சரியையில் நின்றவருக்கு முல்லை நிலம் ஏற்றது. கிரியையில் நின்றவருக்கு மருதனிலம் ஏற்றது. யோகம் செய்வதற்கு குறிஞ்சி நிலம் ஏற்றது. ஞான தியானம் செய்வதற்கு பாலை நிலம் ஏற்றது. இவற்றை அறிந்து அறிவை பயன்படுத்தி ஞானம் அதன் வழியில் நிற்க என்பதாம்.

மேலும் அகத்திய பெருமான் சரியை — கிரியை — யோகம் — ஞானம் போன்ற எளியமுறையில் ஓதியுள்ளதை அறிவது அறியுடையோர் அறிய வேண்டும். இனி அப்பாடல்கள் முதலில் கூறி அடுத்து அதனுடைய பொருளையும் உணர்த்துவோம். பாடலைக் காண்க.

"காணுதற்கு சரியை வழி என்ன வென்றாற்
கருணையுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
பூணுதற்கு நவ்வெழுத்தின் மேலே மைந்தா
புகழான மவ்வெழுத்தின் சிகாரந் தோணும்
பேணுதற்கு மவ்வெழுத்தின் மேலே சென்று
பிலமாக அவ்வெழுத்தின் கீழதாகத்
தோணுதற்கு சிவாலயமம் நதியு முண்டு
சுத்தமுடன் அந்திடத்தில் கண்டு தேரே" - 91

கண்டு மனத் தேர்ந்தந்த நதியில் மூழ்கிக்
கமல மலர் சிவாலயத்தைப் பூசை பண்ணி
நின்ற நிலை காணாத மாந்தரெல்லாம்
நீள்புவியில் சிவாலயங்கள் நதிகள் தேடி
சென்று மிகத் தானலைந்து பரத வித்து
சீவனிலையறியாமல் திகைத்து மாண்பர்
அண்டமெனும் உடலுயிரை அறியாமல்தான்
அலைவார்கள் சரியைவழி அறிார் தான் - 92

தானென்ற திருக்கோவில் நதிகள் நல்ல
சங்கையுள்ள வேத முதல் சாஸ்திரங்கள்
ஊனென்ற மனுப்பிறந்து செய்த மாய்கை
உருதியுள்ள அம்மாய்கை யறிந்துதள்ள
வானென்ற நாதவிந்து செயலறிந்து
மார்க்கமுள்ள மெஞ்ஞானத் தலைவரெல்லாங்
கோனென்ற கேசரியைப் பூசை பண்ணிக்
குறியறியான சரியை வழிக் கூர்ந்தோர்தானே - 93

தானென்ற பூரகத்தின் கீழதாகச்
சபையான சிவாலயங்கள் நதிகளுண்டு
கோனென்ற அனாகதமாம் மயிர்பாலத்தப்பால்
கொள்கி நின்ற சிவாலயங்கள் நதிகளுண்டு
வானென்ற வாசிமலர் தனையெடுத்து
மகத்தான சிவாலயத்தைப் பூசை பண்ணி
தோனன்று உடலுயிரை அறியா மற்றான்
திகத்தப்படி மாய்கையிலே திரிவார் பாரே - 94

மேற்கண்ட நான்கு பாடலும் சரியை வழியை நடைமுறைப் பின்பற்றி நடப்பவர்களின் நிலையை உணர்த்துகிறார். 91ஆம் பாடலில் கருணையுள்ள என் மாணவனே புலத்தியா சொல் கேள். சரியை வழி என்றால் என்ன என்பதை காணும் வழிமுறை என்ன வென்றால் நகர எழுத்தின் மேலே ஐயா கேள். மகர எழுத்திலினின்ற சிகாரம் தோன்றும். மகர

Koviloor Digital Library

எழுத்தினால் அகார எழுத்து தோன்றும். அந்த அகார எழுத்தின் கீழே பல சிவாலயங்கள் நதிகள் உண்டு சுத்தமுடன் அவ்விடத்தில் நின்று நோக்குக.

92ஆம் பாடலில் அதனைக் கண்டு மனத்தை உறுதிபடுத்தி நதிகளில் மூழ்கி கமல மலர் வடிவத்திலுள்ள சிவாலயத்தைக் கண்டு பூசை பண்ணி இருந்த நிலையில் அதனை காணாத மாந்தர்கள் எல்லோரும் நீண்டு செல்லும் உலகத்தில் சிவாலயம் நதிகள் தேடி சென்று அலைந்து சோர்வடைந்து சீவனிலை அறியாமல் திகைத்த மாண்பர் அண்டமெனும் உடலுயிரை அறியாது அலைந்து சரியை வழி அறியாதவர்கள் ஆவார்கள்.

93ஆம் பாடலில் தானென்ற திருக்கோவில் நதிகள் நல்ல சங்கையுள்ள வேதமுதல் சாத்திரங்கள் ஊனெனற மனு பிறந்து செய்த மாய்கை உறுதியுள்ள அம்மாய்கை யறிந்து தள்ள முடியாமல் நாதவிந்து நிலை செயலறிந்து மார்க்கத்தை மெய்ஞ்ஞாத்தோர்கள் கோவிலாக உள்ள கேசரியென்னும் பூரண வழிபாடு பண்ணிக் குறியினை அறியாதவர் சரியை வழி உடையவர்கள் ஆவார்கள்.

94ஆம் பாடலில் பூரகத்தின் கீழ்நிலையில் சபையான சிவாலயங்கள் நதிகள் உண்டு. கோண் என்ற அனாகதமான மயிர்பாலத்தப்பால் நின்ற சிவாலயங்கள் நதிகள் உண்டு. வானம் என்ற யுச்சி நிலையில் வாசிமலர் தனை யெழுத்து மகத்துவம் பொருந்திய சிவாலயத்தைப் பூசை செய்ய இந்த உடலும் உயிரும் அறியாததால் திகைத்து நின்று மாய்கை (மாயையில்)யிலே மாட்டிக் கொண்டு அலைவர் என்று அகத்தியர் அறிவிக்கிறார். இனி சரியைப் பற்றிய பேச்சை முடிவுக்கு கொண்டு வந்து கிரியைப் பற்றி கூறுவோம் என்று மீண்டும் தொடங்குகிறார்.

"பாரப்பா சரியை வழி முறைமை சொன்னேன்
பதிவான கிரியை வழி பகரக் கேளு
நேரப்பா முக்கோணந் தன்னிலே தான்
நிறைந்த விதழ் பனிரெண்டின் மேலதாகச்
சேரப்பா முக்கோணந் தன்னிலே லேதாகச்
சிவாலயத்திற் சிவனுமையுந் தீபம் போலே
காரப்பர் கருவிழி மலர்க்கண் கொண்டு
கருணையுள்ள வாசிமலர் கருவாயச் சாற்றே - 95

சாற்றி நீ தொழுதங்கே நின்றாயானாற்
சங்கையுள்ள பாவமெலலாந் தானே தீரும்
போற்றியே ஆதாரப் புதுமை கண்டு
பொருந்தினின்ற வாசியுட திரத்தைப் பெற்று
நேத்திரத்தின் சின்மயத்தைக் கண்டு போற்றி
நினைவறியா மானிடர்கள் நேசந்தப்பி
ஆற்றுமத்தின் நிலைதனையே காணாமற்றான்
அலைவார்கள் கிரியை வழி அறியார் பாரே - 96

பாரப்பா துரிய மதின் கீழதாகப்
பத்தினின்ற சுடரொளியாம் மூலத்துள்ளே
காரப்பா கணபதியைத் தொழுது போற்றிக்
கருணையுடன் வாசிமலர் சாத்தி மைந்தா
நேரப்பா அவ்வாசி கொண்டு மேலே
நீயறிந்து பூரணமாய் நின்றுக் கொண்டு
சாரப்பா சார்புனிலை அறியா ரெல்லாம்
சங்கையுடன் அதில்மூழ்கித் தயங்குவாரே - 97

தயங்குவார் நதிமூழ்கி நீர் தெளித்து
தன்மையுடன் நீறணிந்து ஸ்நானம் பண்ணி
மயங்குவார் இருவிழியு மூடிக் கொண்டு
மணியெடுத்துத் தானாட்டி மதங்கள் பேசி
தியங்குவார் அக்கிரமம் பிடித்தே அந்தச்
சிவனி நிலை அறியாதத் திருடர் தானும்
தயங்கு விந்து வாதாரம் பாரமற்றான்
நாடு களிற் றான் திரிவார் நயந்து தள்ளே- 98

தள்ளடா தனையறியா மூடர் தன்னை
தள்ளி மனை யேறி மனஞ் சாந்தமாக
அள்ளடா எட்டுடெழுததுஞ் சிவமதாகும்
உறுதியுள்ள் இரண்டெழுத்துஞ் சத்தியாகும்
நில்லடா எட்டிரண்டும் ஒன்றாய் நின்ற
நிலையான சிவாலயங்கள் நதிகள் தன்னை
அல்லடா அந்தநிலை காணாரெல்லாம்
அலைவார்கள் கிரியைவழி அறியார்தானே -99

பாடல் 95 முதல் 99 வரை கிரியைப் பற்றி அகத்தியர் கூறியுள்ளதை கவனிக்கத்தக்கது. இனி அப்பாடலில் கூறியுள்ள செய்திகள் காண்போம். 95ஆம் பாடலில் நாம் கிரியை வழி கூறுவோம். முக்கோணம் அதனை சுற்றிலுள்ள பன்னிரெண்டு

Koviloor Digital Library

இதழ்கள் நடுவில் சிவனும் உமையும் வீற்றிருப்பார்கள். அதில் அவர்கள் தீபம் போல் தோன்றுவார்கள். கண் போன்ற மலர் கொண்டு கருணையுடன் வாசமலர் சாற்றி வணங்குக. 96வது பாடலில் பாவங்கள் அனைத்தும் தீரும். ஆதார புதுமைக் கண்டு போற்றி வழிபடுக. அந்த ஆதாரத்தின் மேல் பொருந்தி அதன் நிரத்தை அறிக. கண்ணொளி கண்டு அதன் சின்மயத்தின் நிலை உணர்ந்து போற்றி மகிழாமல் நினைவுடன் மானிடர்கள் நேசம் தவறி ஆத்மாவின் உண்மை நில உணராது அலைவார்கள் கிரியை வழி அறியார் என்பதாம். 97வது பாடலில் தூரியம் அதன் கீழ் எரியும் சுடரொளியான மூலத்தில் கணபதியை தொழுது போற்றி கருணைக் கொண்டு வாசிமலர் சாற்றி, அந்த வாசியை மேலேற்றி பூரணத்தின் உண்மைநிலை அறியாத அதன் சார்பு நிலை அறியாமல் சங்கைக் கொண்டு அதில் மூழ்கி தயங்குவார்கள் என்பதாம். 98வது பாடலில் தயங்குவது நதியில் குளித்து நீர் தெளித்து நீறு அணிந்து குளியல் செய்து மயக்கம் கொண்டு இருகண்கள் மூடிக் கொண்டு மணியடித்து அதனையாட்டி மதங்களைப் பற்றி பேசி தயக்கம் காட்டி, அக்கிரமம் பிடித்து சிவத்தின் நிலை உணராதும் அறியா கள்ளர்கள் தான் தயங்கி விந்து அதன் ஆதாரம் பார்க்காமல் நாடுகளில் திரிவார்கள். அவர்களை ஒதுக்கி விடுங்கள்.

99ஆம் பாடலில் தன்னைப் பற்றியும் தன் அறிவைப் பற்றியும் புரியாத மூடங்கள் தள்ளி ஒவ்வொரு மனையை கடந்தேறினால் மனம் அமைதி உண்டாகும். எட்டெழுத்து என்பது சிவமாகும் இரண்டெழுத்து சக்தியாகும். எட்டிரண்டும் புரியாமல் அந்த இருநிலை ஒன்றாக இருக்கும் நிலையும் அறியாமல் திரமுள்ள சிவாலயங்கள் நதிகள் தன்னை அதன் நிலை காணமுடியாதவர்கள் அலைந்து திரிவார்கள் கிரியை வழி தெரியாதவர்களாவார்கள். இதுகாறும் கிரியை வழி கூறிவந்தோம். அடுத்து யோக வழி கூறப்படும் என்று ஓதுகிறார். இனி அவரின் பாடல்கள் ஊன்றி அறியத்தக்கது.

"தானென்ற கிரியை வழி சொன்னேன் மைந்தா
தன்மையுடன் யோகவழி சாற்றக் கேளு
கானென்ற இருகதிருஞ் சுழியிலேற்றி
குறியான நவக்கிரகந் தன்னைக் கண்டு
வானென்ற அனுக்கிரகத்துள்ளே சென்று
மகத்தான சிதம்பரத்துக் கப்பால் நின்று
தேனென்ற கமல மலர்ப் பொய்கை தன்னில்
திருவான பொய்கையில் நீராடிக்காணே - 100

காணடா நீராடி சிவனை நீயுங்
கண்டுமன துருதியின லம்பரத்தில்
கோணடா பெருவாசற் சென்று புக்கிக்
குணமான சுழிமுனையில் பத்திக் கொண்டு
ஊணடா வாசியினால் ஆறாதாரம்
ஊடுருவ நிராதாரம் அண்டம்மேவி
பேணடா அந்தனிலை தன்னிலை நின்று
பிலமான ரவிமதியைத் தன்னுடட் காணே - 101

காணப்பா சந்திர கலை பதினாறாகும்
கருவான சூரிய கலை பன்னிரண்டாகும்
பேணவே இருகதிரும் ஒன்றாய் நின்று
பிலாமன சூரியகலைப் பன்னிரண்டில்
தோணப்பா உடலுக்குள் நின்ற மிச்சஞ்
சொந்தமுடன் போன தெங்கே இருந்ததெங்கே
பூணப்பா இருந்த மிச்சம் நாலுந்தானும்
பொருந்திநின்ற பூரணமாயக் கண்டு பாரே - 102

கண்டு பார் பூரணமே யென்று போற்றி
கருணைவளர் கலைநாலுங் காணாமற்றான்
தொண்டரெனப் பசியடக்கி விரதங்காத்துச்
சுழன்று னின்ற வாசிதனை அடக்கிமைந்தா
நின்ற னிலை காணாமல் நதிகள் தேடி
தேடினதால் மலைகளெல்லாஞ் சுற்றிப் பார்த்து
ஒன்று மிடம் அறியாமல் யோகஞ் செய்து
உடலுயிரைக் காணாமல் அலைவார் பாரே - 103

பாடல் 100வது முதல் 103 வரையுள்ள நான்கு பாடல்களில் யோக நிலை முறையை எடுத்து உரைக்கப்படுகிறது. இனி அதனை காண்போம். 100வது பாடலில் கதிர்இரண்டும் சுழிமுனையில் ஏற்றி குறிப்பாக நவக்கிரகம் தன்னை காணவேண்டும். வரும் கோள்கள் அல்ல. நமது உடலில் உள்ள பஞ்ச கர்த்தாக்கள் + சூரியன் + சந்திரன் + அக்கினி குண்டலி ஆக இவைகள் தான் நவக்கிரகம் என்பர்.

Koviloor Digital Library

இவர்களின் அருளைப் பெற வேண்டும். அருளைப் பெற்றால் மகத்துவம் நிறைந்த சிதம்பரமும் அதற்கப்பாலுள்ள தேன் ஊற்று வரும் ஆயிரமிதழ் கமல மலர் குளத்தில் இறங்கி அதிலுள்ளதை உண்டு தேறலாம்.

101வது பாடலில் எடுத்த தேன் உண்டு சிவனையும் கண்டு திருவம்பலத்தில் சென்றடைய பெருவாசல் நுழைந்து சென்று குணமிகுந்த சுழிமுனையைப் பற்றிக் கொண்டு அதில் மனத்தைச் செலுத்தினால் ஆதாரங்கள் ஊடுருவிச்சென்று நிராதாரம் என்கிற அண்டத்திலேறி அந்த நிலை தன்னில் நின்று வலிமையுள்ள சூரியனும் சந்திரனும் உண்ணுள் கண்டடைய வேண்டும்.

102வது பாடலில் சந்திர கலை பதினாறாகும். கருவைப் போல் உள்ள சூரிய கலை பன்னிரண்டாகும். ஆக இரண்டும் ஒன்றாக இணைய வலுவுள்ள சூரிய கலை பன்னிரண்டில் உடலுக்குள் நின்ற மீதி கலைகள் எங்கு சென்றது. எங்கு இருக்கிறது. இந்தில் மீதியுள்ள நான்கு கலை பொருந்துமிடம் பூரணத்தில் காண்க.

103வது பாடலில் பூரணத்தை வாழ்த்தி கருணை மிகுந்த கலை நாலும் காணாமல் போனது எங்கு என்று அதை அறியாதத் தொண்டர்கள் பசியை அடக்கி விரதங்கள் இருந்து சுழன்றுனின்ற வாசிதனை அடக்கி மைந்தா நின்ற நிலை காணாமல் நதிகள் தேடி தேடி மலையெல்லாம் சுற்றி அலைந்து ஒன்றுமிடம் அறியாமல் யோகம் செய்து உடலும் உயிரும் காணாமல் அலைவார்கள் என்பதாம்.

இதுகாறும் சிவயோகம் பற்றிக் கூறப்பட்டது. இனி ஞான வழி அறியமுற்படுவோம். இனிபாடல்கள் மிகவும் ஆழ்ந்து ஊன்றி நோக்குக.

"பாரப்பா யோகவழி நன்றாய்ச் சொன்னேன்
பதிவான ஞானவழி பகரக் கேளு
காரப்பா ஆதரா மூலந் தன்னிற்
கனிவான அக்கினிதன் ஆவி தன்னை
சேரப்பா முக்கோணச் சுடரில் நின்று
திருவாசி யானதொரு செங்கண் மேவி
சாரப்பா அந்த மனைச் சொந்தமென்று
சங்கையுடன் தானிருந்து தன்னைக் காணே - 104

காணப்பா மேல் வெளியைக் கண்டுகூடி
கருணையுடன் அவ்வெளியைக் கண்டு கூடி
பூணப்பா நிராதாரச் சித்தமாகிப்
பூரணமாய் நின்ற பரிபூரண மே யாகி
தேணப்பா சிவன் அயன் மால் பூசை செய்து
துடங்கி நின்ற தீவினைகள் ஒன்று மற்று
பேணப்பா ருசியற்று ஆசையற்று
பேரண்ட சோதியுட சோதிதானே - 105

சோதி என்ற ஐந்தெழுத்துந் தான்தானாகித்
துலங்கு கின்ற சதானந்தம் தான்தானாகி
ஆதியென் மூன்றை முத்தும் தான் தானாகி
அடங்கி யொன்றாய் நின்ற பொருள் தான் தானாகிச்
சாதி யென்ற சமரசமும் தான் தானாகிச்
சதா கோடி மந்திரமுந் தான் தானாகி
வேதியென்ற கெவுன முதல் அஷ்ட சித்தும்
பேசாத மவுனமதும் தான் தானாமே - 106

ஆமப்பா வாதியந்தப் பொருள் தானென்றும்
அடங்கினின்ற பஞ்ச கர்த்தாள் அதுதானென்றும்,
தாமப்பா சக்தி சிவம் தான் தானென்றும்
தண்மையுள்ள பஞ்சகர்த்தான் தான்தானென்று
ஓமப்பா யேமுவகை யுலக மெல்லாம்
உறுதி கொண்டு தானாகத் தான் தானென்று
சோமப்பா நான்தானே அவன் தானென்றுஞ்
சோதி மயமாயிருப்பார் ஞானிதானே - 107

தானென் சரியை முதல் ஞானஞ் சொன்னே
சமரசமாய்க் கண்டறிந்து தன்னை பாரு
வூனென்ற உடலுயிர்க் கண்டாயானால்
உண்மை யென்ன சரியை முதல் ஞானந்தோற்றுங்
கோனென்ற குருவருளால் மைந்தா நீயுங்
குறிப்பறிந்து ஞான நிலை கூர்ந்துப் பார்க்க
வானனென்ற சரியை முதல் ஞான மட்டும்
மார்க்கமுட நன்றாகச் சூக்ஷங் கேளே - 108

கேளப்பா அயன்மாலின் திரை யறுத்து
கிருபை யுள்ள ருத்திரன் தன் திரையை நீக்கி
ஆளப்பா மயேசுரன்றன் திரையைத் தள்ளி
அதன் மேல் சதா சிவன் தன் திரையைக் கட்டு
சூளப்பா ஐம்புலனைச் சுட்டுத் தள்ளிச்

Koviloor Digital Library

சுக சீவப் பிராணமயத் தோடிருந்து
காலப்பா செவிவிழ்யுங் கடந்தப்பாலே
கருணையுடன் தானிருப்பர் ஞானிதானே - 109

தானென்ற முப்பாழில் மும்மலமும் நீக்கி
தற்பரத் பரத்துக் கப்பால் மயிர்ப்பாலம் நீக்கி
வானென்ற நெருப்பாறுக்கு அப்பாற் சென்ற
மகத்தான பரவெளியில் மனதொடுங்கி
கோனென்ற வெளியொளியில் தானே தானாய்க்
குவித்திருந்து சிவயோக ஞானந்தானாய்
ஊனென்ற வாதியந்தந் தானேதானாய்
உகந்திருப்பார் சிவஞான முணர்ந்தோர் காணே
- 110

என்ற செய்தியை தமது பாடல் மூலம் அகத்தியர் உணர்த்துகிறார். இனி அதன் பொருள் காணலாம்.

104வது பாடலில் சிவயோக நன்றாக கூறினேன். இனிமேல் ஞான வழியினை கூறுவதைக் கேட்க. ஆதார மூலத்தின் உள்ள அக்கினி என்ற ஆவி தான் முக்கோணச் சுடரில் நின்று திருவாசி என்று கூறப்படும் ஓங்காரம் செம்மை வாய்ந்த கண்மேல் சென்று சார்ந்து (புருவ நடு) அந்த மனை சொந்தமென்று அச்சப்பட்டு யிருந்தேன் அதனைக் காண வேண்டி.

105வது பாடலில் மேல் வெளியைக் கண்டு சேர்ந்து கருணையுடன் அவ்வெளியைக் கண்டு அதில் சேர்ந்து நிராதார நிலைக்கு சித்தமாயிருக்க பூரணம் என்று சொல்லும் பரிபூரணமேயாகி அதனில் சிவன் அயன் மால் வழிபட்டு தொடர்ந்து வரும் தீவினைகள் ஒழித்து உண்மையற்ற ஆசைகள் அறுத்து பேரண்ட பரிபூரண சோதியுடன் சோதியானேன்.

106வது பாடலில் சோதியாயுள்ள ஐந்தெழுத்துத் தான் தானாகி விளங்குகின்ற சதானந்த நிலையில் தான் தானாகி ஆதி என்ற மூன்றெழுத்தும் தான் தானாகி அடங்கி நின்ற பொருளாகி தன்னை தானாகி சாதியென்ற பிரிவில் சமரசமும் தன்னை தானாகி சதா கோடி மந்திரத்தில் தன்னை அறிந்து தானாகி வேதியிலான கெவு முதல் அட்ட சித்துக்களுமாகி வாய்ப்பேசா மவுன மதும் தன்னை அறிந்து தானாகி இருந்தேன்.

107வது பாடலில் ஆதி அந்த மென்ற பொருளில் தன்னை அறிந்து தானதாகவே யிருந்து தானே சக்தியாகவும் சிவமாகவும் இருப்பதை அறிந்து அதில் அடங்கி நின்று பஞ்சகர்த்தால் அதுதான் என்றும் அத்தன்மையுள்ள பஞ்சகர்த்தாள் தானே தானாகவும், ஓங்கார வடிவமாயுள்ள ஏழு உலகங்களும் தான் தானானென்றும், மவுன நிலையில் கமலமலர் போல் சோமம் என்ற அமுதம் நான்தான் அவன் தான் என்ற சோதிமயமாயிருப்பார் ஞானிகள் என்று கூறுகிறார்.

108வது பாடலில் சரியை முதல் ஞான நிலைப்பற்றியும் கூறினேன். அதனை சமரசமாய் இருந்து கண்டு அறிந்து தன்னைப் பார். தோலுடம்பால் ஆன தேகமும் அதிலுள்ள உயிரும் கண்டெடுத்தால் உண்மை யென்ற சரியை முதல் ஞானம் தெரியவரும். இறைவன் என்ற குருவின் அருளால் செவி அருளுரையின் குறிப்பறிந்து ஞானநிலை கூர்ந்துப் பார்க்க உயர்ந்ததாகக் கருதப்பட்ட சரியை முதல் ஞான மட்டும் அடையும் வழியினையும் அதன் சூட்சுமம் கேட்பாயாக.

109வது பாடலில் மாணவனே கேள். முதலில் அயன் மாலின் திரைகள அறுத்து நீக்க வேண்டும். அதன்பிறகு உருத்திரனின் திரையையும் நீக்க வேண்டும். அதன்பின் மகேசனின் திரைகள் அகற்ற வேண்டும். அதன்பின் மகேசனின் திரைகள் அகற்ற வேண்டும். அதன் மேலுள்ள சதாசிவனின் திரையை விலகத் தள்ளி, பின் ஐந்து புலன்கள் சுட்டு தள்ளி சுகம் தரும் ஜீவ பிராணாயம் செய்து வருவதோடு செவி, விழியும் கடந்தப்பாலே கருணையுடன் தானிருப்பார் ஞானிகள்.

110வது பாடலில் முப்பாழ் என்று கூறும் நிலையில் மும்மலம் நீக்கி விட்டு தற்பரம் என்று கூறப்படும் நிலையில் மயிர்பாலம் மீது சென்று, அதனை கடந்து உயர்ந்து வளரும் நெருப்பாறுக்கு அப்பால் கடந்து மகத்துவம் பொருந்திய பரவெளியில்

Koviloor Digital Library

மனம் ஒன்றி இறையருளாக துலங்கும் வெளியொளியில் தானே தானாய் மனம் குவித்து சிவயோக ஞானம் மிகுந்தவராக ஆதி அந்தத்தில் தானே தானாய் உகந்து இருப்பவர்கள் சிவஞானமிக்கோராவார் என்பதைக் கண்டுக் கொள்க.

இதுகாறும் எடுத்துக் காட்டிய மேற்கோள்களால் சரியை நிலை என்ன? கிரியையின் நிலை என்ன? யோகத்தின் படி நிலை என்ன? ஞானத்தின் உயர்நிலை என்ன? என்னவென்று புரிந்துக் கொண்டு இருப்பீர்கள். சரியை நிலை ஏழையருக்கும், கிரியை நிலை உகந்தவர்களுக்கும் உதவும். ஆனால் இவையிரண்டு முத்திநிலை பெற உதவாது. யோகமும் ஞானமும் உடலும் உயிருமாக இருப்பது. யோகம் உடலென்றால் ஞானம் உயிராகும். இவையிரண்டும் செயல்பட்டால் தான் முந்திக்கு வழி நிலை ஏற்படும். யோகத்தின் வாயிலாக தீட்சைகள் பெற்று அதனை அனுபவத்தில் கொண்டு வந்தால் ஞான நிலை பெற முடியும். ஞானமே இறுதிநிலையாகும் என்ற உயர்ந்த செய்தியை எளிமையாக எடுத்து காட்டிய நல்ல பொருளை உணர்த்தும் என்ற நல்நோக்கத்துடன் பயன்படுத்தி அரிய முத்தி நிலை பெற வழி நடத்தும் இந்த அற்புத நல்வார்த்தை இனிதாக முடிவடைகிறது.

திருச்சிற்றம்பலம்

10. ஐந்தெழுத்து (அ) பஞ்சாக்கரம்

அறுபத்து நாலுகலையாவு மறிந்தோம்
அதற்குமே லொருகலை யானதறிந்தோம் - 33
பாம்பாட்டிச் சித்தர் பாடல் 130

நாடப்பா சாகாத கல்வி தன்னை
நலமாக கற்பதற்கு வுன்னைத் தேற்று - 7 இராமமுனி
சித்தர் சிவயோக ஞானம் - 30

முதல் முதலாக அக்கரங்கள் எவ்வாறு தோன்றியிருக்கக் கூடும். பேரண்டத்தின் அடுக்குநிலை நாம் அறிந்தால் ஒழிய அக்கரங்கள் தோன்றிய முறை தெரியாது. சித்தர்கள் பேரண்டத்தில் ஆதார அடுக்குகள் இருப்பதாகக் கூறுகிறார்கள். அதன் நெறிமுறைகள் சச்சிதாநந்தர் என்னும் சித்தர் பெருமான் ஒருவராக தமது சுழிமுனை நுட்பம் என்னும் நூலில் கீழ்வருமாறு ஓதுகிறார்.

"பாரப்பா ஆதாரத் தடுக்கை கேளு
பண்பாக வந்த வகை பரிவாய்ச் சொல்வேன்
பேரப்பா குருவாகிப் பரமுமாகிப்
பிலத்த தொரு சிவமாக சக்தியாகி
நேரப்பா விந்து சதாசிவமு மாகி
நிலைத்த மயே சுரனாகி ருத்ரனாகிச்
சீரப்பா மாலாகி அயனுமாகிச்
சித்திரமாயப் பரம் படைத்த திறத்தைக் காணே" - 6
"காணப்பா அதிற் பிறந்த அட்சரத்தைக்
கருத்துறவே பிரித்துயான் சொல்லக் கேளு
ஆணப்பா ஆ-ஈயும் - ஊவ்வும் - ஏயும்
அதீதமாய் ஒவ்வுமது அஞ்சுமாகி
பேணப்பா அதிலிருந்து அகாரந் தோன்றி
பிலத்த உகாரந்தனிலே மகாரந் தோன்றி
நீணப்பா பஞ்சாக்கர நாத விந்தாய்
நின்ற சிவ பஞ்சாட்சரத்தின் நிலைமை கேளே" - 7
கேளப்பா அகாரத்திற் சிகாரந் தோன்றி
கெடியான உகாரத்தில் வகாரந் தோன்றி
வாளப்பா மகாரத்தில் யகாரந் தோன்றி
வளமான விந்துவிலே நகாரந் தோன்றி
வேளப்பா நாதத்தில் மகாரந் தோன்ற
விளைந்த ஞ்சுஞ் "சிவாயநமா" வென்று சொல்லி
நாளப்பா அதிலிருந்து அஞ்சு மாறி
நாடினதோ ரிது "நமசிவாயமாச்சு" - 8
சச்சிதானந்தர் சுழிமுனை சுத்தஞான நுட்பம் — 30

முதல் பாடலில் பேரண்டத்தில் ஆதார அடுக்குநிலைகள் உண்டு. அதில் குருநிலை அடுக்கு. பரநிலை அடுக்கு. சிவநிலை அடுக்கு. சக்திநிலை அடுக்கு. விந்து நிலை

Koviloor Digital Library

அடுக்கு. சதாசிவ நிலை அடுக்கு. மாஈச நிலை அடுக்கு. உருத்திர நிலை அடுக்கு. மால் நிலை அடுக்கு. அயன் நிலை அடுக்கு. இதுபோல் பல ஆதார அடுக்கு நிலைகள் இருப்பதை சித்தர்கள் அறிந்துள்ளனர். இந்த பேரண்ட பூரணம் என்னும் பரம் அது தோற்றுவித்த திரத்தின் வலிமைக் காண்க என்று ஓதுகிறார்.

இரண்டாவது பாடலில் உயர்நிலையிருந்து பிறந்த எழுத்துக்களைப் பற்றியும் அதன் கருதிறத்தைப் பற்றியும் நாம் சொல்வது கேட்க. முதலில் ஆவும் — ஊவ்வு — ஈயும் — எயும் — ஒவ்வும் பிறந்தது. ஒவ்விலிருந்து அகாரம் தோன்றியது. வலிமையுள்ள உகாரம் தோன்றியது. அதிலிருந்து மகாரம் தோன்றியது. பின்பு நாத விந்தாக பஞ்சாக்கார மாகி தோன்றி நிலைத்தது. இதற்கு ஓங்கார பஞ்சகம் என்பர். இப்படி பரத்தின் கண் உயிர் எழுத்துக்கள் தோன்றி அதிலிருந்த ஓங்கார பஞ்சாக்காரங்கள் தோன்றி, அதிலிருந்து சிவபஞ்சாக்கார் தோன்றியது என்று கூறுகிறார்.

மூன்றாவது பாடலில், அகாரத்திலிருந்து சிகாரம் தோன்றியது. அடுத்து உகாரத்திலிருந்து வகாரம் தோன்றியது. அதற்கடுத்து மகாரத்திலிருந்து யகாரம் தோன்றியது. பின்பு விந்துவிலே நகாரம் தோன்றியது. இதன்பிறகு நாதத்திலிருந்து மகாரம் தோன்றியது. இப்படி உற்பத்தியான ஐந்தெழுத்து "சிவயநம" என்று ஓதப்பட்டது. "சிவயநம" என்ற நிலை மாறுதலடைந்து "நமசிவய" என்ற மேற்கண்ட பாடலில் சித்தர் பெருமான் சச்சிதானந்தர் ஓதுகிறார்.

ஐந்தெழுத்தின் திறன்:

கணிப்பாரை அகமுகப் படுத்தி புலன்களை ஒடுங்க வித்து ஆன்மநேயம் வளர்த்து இறையருளை கூட்டுவிக்கும் உயர்ந்த சிறப்பு மந்திரம் திருவைந்தெழுத்து.

மந்திரங்கள் மனிதனுக்கு அளிக்கும் அழகுகள்:

உயிர் — உணர்வு — உள்ளம் — உடல் — உடை — உறையுள் — ஆகியவற்றிக்கு அழகினை தருவதாகும். திருவடியை சேர்க்கும் தூய நெறியாகும்.

ஐந்தெழுத்து சுமக்கும பாடல்:

மண்ணைச் சுமந்த வன்றானும்
வரதராசன் மகன் றானும்
எண்ணிய வரகாலி மூன்றும்
இரண்டு மரமும் ஓர் யாறும்
திண்ணம் அறிய வல்லார்க்கு
சிவகதியைப் பெறலாம்.

பொருள்: மண்ணைச் சுமந்தவன் - நகாரம்
வரதராசன் மகன் - மகாரம்
வரகாலி மூன்று - சிகாரம்
இரண்டு மரம் - வகாரம்
ஓர் யாறும் - யகாரம்

எனக்கூற "நமசிவய" வாகும். ஐந்தெழுத்து சிவகதிக்கு வித்தெழுத்தாகும் என்பது பொருள்.

ஐந்தெழுத்தும் அதன் குழு ஊக்குறிச் சொல்

1. சிவன் நாமங்கள்,
2. பஞ்சாக்கரம்,
3. மாமொழி
4. நந்தி நாமம்
5. மூலமந்திரம்
6. பஞ்சாட்சரம்
7. திருவெழுத்தஞ்சு
8. ஐந்தின் பெருமை
9. நந்தி திருவெழுத்து
10. அருவினை தீர்க்கும் எழுத்து
11. நன்னெறி எழுத்து
12. விசை நாண் எழுத்து
13. நன் மந்திரன்
14. நற்பூசை மந்திரம்
15. உலகியல் எழுத்து மந்திரம்
16. அருளியல் எழுத்து மந்திரம்
17. வீட்டியல் எழுத்து மந்திரம்
18. திருமந்திரம்
19. தன்னியல் எழுத்து
20. கூத்தெனழுத்து
21. சிவமந்திரம்
22. அங்குச மந்திரம்

Koviloor Digital Library

23. இருமூன்றெழுத்து
24. இறைவ எழுத்து
25. மலமாய்க்கும் மந்திரம்
26. குரு மந்திரம்
27. உட்பூசை மந்திரம்
28. சைவ மந்திரம்
29. பெரும் பொருட்கிளவி
30. பேருரைச் சொல்
31. மகா வாக்கியம்
32. அமுத மந்திரம்
33. ஞானம் தரும் நல்லெழுத்து
34. பொருளியல் எழுத்து
35. பிறப்பியல் மந்திரம்
36. அருட்பதம்
37. இன்பியல் மந்திரம்
38. சிவபோகம் தரும் எழுத்து
39. தமிழ் மறை
40. அங்குதி மந்திரம்
41. செந்நெறி தரும் மந்திரம்
42. ஆலினெழுத்து
43. பெருமறைச் சொல்
44. அருட்குரு மந்திரம்
45. பிறவியகலும் மந்திரம்
46. சுகுண மந்திரம்
47. ஈறில் உரை மந்திரம்
48. அழியாத உபதேச மொழி
49. நதி தரும் மந்திரம்
50. நதி கூறும் மந்திரம்
51. அகாதி மந்திரம்
52. அருங்கரை சேர்க்கும் மந்திரம்
53. வினையகலும் மந்திர்
54. புனித மந்திரம்
55. மேதகு மந்திரம்
56. வீடுபேறு தரும் மந்திரம்
57. முத்தி நல்கும் மந்திரம்
58. உத்தம மந்திரம்
59. தூய மந்திரம்
60. ஞானமந்திரம்
61. அத்தன் மந்திரம்
62. திருவடி சேர்க்கும் மந்திரம்
63. மருள் மாய்க்கும் மந்திரம்
64. இருள் நீக்கும் மந்திரம்
65. ஐந்தாற்றல் மந்திரம்
66. ஐந்தியியல் மந்திரம்
67. சிவதனு மந்திரம்
68. காதல் மந்திரம்
69. ஐந்தமிழ் மந்திரம்
70. உயிரிறை மந்திரம்
71. சிறப்பியல் மந்திரம்
72. எண்ணியல் மந்திரம்
73. அருட் குண மந்திரம்
74. எண்குண மந்திரம்
75. பெரும்பெயர் மந்திரம்
76. அறிவியல் மந்திரம்
77. இறையியல் மந்திரம்
78. ஞான மொழி
79. அன்பியல் மந்திரம்
80. உலகியல் மந்திரம்
81. அருளியல் மந்திரம்
82. வீட்டியல் மந்திரம்
83. மெய்ப் பொருட் மந்திரம்
84. இயற்பியல் மந்திரம்
85. வேதியல் மந்திரம்
86. தமிழ் வேதம்
87. இனிப்பியல் மந்திரம்
88. திருகயிலை மந்திரம்
89. மேலாம் விழுப் பொருள்
90. இறைநூல்
91. வாய்மை எழுத்து
92. ஐம்பெரும் எழுத்து
93. கண்ணுதல் நாமம்
94. ஓர்கனி
95. நமசிவய

சிகரமும் வகரமும் சித்தர்களின் விளக்கம்:

"பேணதுவே சிகார மென்றால் ஆர்தான் காண்பார்
பேரண்ட பூரணமே ஆகும் ஆகும்
தோணதுவே பூரணத்தைக் கண்டுக் கொள்
சுகமான சிவசக்தி வாலையோடு" - 211.
அகத்தியர் அந்தரங்க தீட்சாவிதி — 400

சிகாரம் என்பது யாரும் காணமாட்டார். அதனை அறிய முற்பட மாட்டார் என்றும், சிகாரமே பேரண்டமாகிய பூரண நிலையை

Koviloor Digital Library

யுடையது. அந்த பூரணமே சிவவாலை சக்தி வாலை என்று ஓதப்படுகிறது.

மேலும் சுப்பிரமணியர் ஞான சுருக்கம் 2.ஆம் பாடலில் சிகாரமானது சோதியான வன்னிச் சுடராகும் என்றும், வகாரமானது வாசியாகும் என்றும ஓதுகிறார்.

"அப்பனே சிகாரமானது வன்னி
நாளப்பா வகாரமது வாசியாகும் - 2

என்று ஓதுகிறார். வகாரம் என்பது உயிர் மூச்சு என்பதாம். தமது திருமூலர் சிகாரம் சிவம் என்றும், வகாரம் என்றும் சிவ வடிவம் என்றும், யகாரம் உயிர் என்று குறிப்பிடுகிறார்.

சிகாரம் சிவமாய் வகாரம் வடிவாய்
யகாரம் உயிரென் றறையலு மாமே - 952 திருமூலர் திருமந்திரம் 3000

ஐந்தெழுத்தின் மந்திர நிலைப்பாடுகள்:

1. சிங் — வங் — சிவசக்தியை குறிக்கும். நல்லறிவு பூரணம் ஒளிரும். பொசித்ததெல்லாம் சுவை தரும்.

2. நங் — மங் — திரோதாயி — மாயையாக்கம் குறிக்கும். ஆன்ம தரிசனம், பிரமதரிசனம் உண்டாக்கும். பேரின்பம் — சித்தின்பம் இரண்டும் தோன்றும்.

3. நங் — நங் — நன்மைகள் கூடும்

4. சிங் — சிங் — விலங்குகள் எதிர்படாமல் ஓடும்.

5. வங் — வங் = உலகெல்லாம் வசியமாகும்.

6. வசி — வசி = சகலமும் வசியமாகி தன்வயப்படுத்தும்

7. நசி — நசி = பீடைகள் விலகும்.

8. மசி — மசி = சகல நஞ்சுகள் விலகும்.

9. நசி — மசி = நன்மைகள் உண்டாகும்.

10. மசி — நசி = தீமைகள் உண்டாகும்.

11. சிவ — சிவ = தீவினைகள் ஒழியும்.

12. சிவயநம = திருவருளை நாட வைக்கும்.

13. சிவயசிவ = இறையருள் ஆன்ம நேயம் கூடும்.

14. நமசிவய = திருவடியை கூட வைக்கும்.

ஐந்தெழுத்தும் – உடலும் – உயிரும் எண்ணும்:

1. நகரம் = ஐயும் — லம் — 9
2. மகரம் = கிலியும் — வம் — 11
3. சிகரம் = சவ்வும் — ரம் — 4
4. வகரம் = ஸ்ரீயும் — யம் — 15
5. யகரம் — அரிஓம் — அம் — 12

தலையும் காலும் (அ) அருளும் ஞானமும்:

கால் என்றால் வழி என்றும், பாதை என்றும், ஆறு என்றும் கூறுவார்கள். கால் என்னும் சொல்லுக்கு எண் தொகையில் 4இல் ஒரு பங்கு ஆகும். இதனை எண்ணில் கால் என்று ஓதப்படுகிறது.

இந்த கால் என்ற சொல்லை தமிழ் எழுத்துக்கள் கணக்கில் "வ"கரம் என்று எழுதப்படுகிறது. வகரம் ஐந்தெழுத்தில் வனப்பாற்றலைக் குறிக்கிறது. வகாரத்தின் நுண் எண் தொகை "கரு" (அ) 15 ஆகும். வகரத்து ஒலி அலை "கரு" அல்லது 15 ஆகும்.

"வ"கரம் சிவஞானத்தை அடைய துணையாக (அ) வழியாக அமைந்துள்ளது. அதாவது பற்றும் நூலாக உள்ளது. தலை எனில் "சிரம்" என்று பொருள். தலை என்றால் "ஞானம்" என்றும் பொருள். தலை என்றால் மேலான ஞான உணர்வு தரக்கூடியது என்று பொருள். "வ"கரம் என்னும் காலான வழியுடைய அருளானது "தலை" என்னும் "ஞானத்தை" பற்றும் ஓர் கொடியாக இருப்பதால் "காலும் தலையும்" என்று ஓதுகிறார்கள். இதன் உண்மை நூற்கல்வி பயிலாதவர்கள் உணர்வற்றவர்கள்.

கால் என்று சிறப்பித்து இங்கு சொல்லப்படும் "வ"கரமான எழுத்து சக்தியாகிய திருவருள் என்பர். இதனை வனப்பாற்றல் என்றும் கூறுவர். வினையகற்றும் எழுத்து என்பர். அனைத்திற்கும் வினை முதற்காரணமாக என்றும் எப்பொழுதும் இயற்கையாக விளங்கும் "சிவ ஞானம்" பெற்ற இறைவன்

Koviloor Digital Library

திருவருட் பண்பு எட்டும் நிரம்பிய தலைவனாவான்.

ஆருயிருக்குக் "காலாகிய திருவருள் நிரம்பிய வகர" சக்தியானவன் அச்"சிவஞானத்தை" அடையாளம் காட்டி யருள்வான். அப்படி காட்டியருள ஆருயிரானது திருவடிப் பேறாகிய வீடெய்தும், சிரம் என்பதிலுள்ள சிகரமும் வழி என்பதிலுள்ள வகரமும் கூட "சிவ" என்றாகும். அது ஐந்தெழுத்தில் "வகரம் கூட சிவ என்றாகும். அது ஐந்தெழுத்தில் "சிவ" என்னும் செந்தமிழ்ப் பொருண்மறையாகும்.

மேலும் "பரையுயிரில் யான் என தென்ற றதடியாகும்" என்றும், உரையிறந்த சுகமதுவே முடியாகும்" என்று தமிழாகமும் ஓதியருள்வதால் இவை இரண்டும் முறையே வழியான் சிறப்பு பேறாகும். இவற்றை உணரா தாரையே "தலைகால் தெரிா தலையும்" தருமாற்றத் தவராவர் என்பர்.

வகரத்திற்கு தொகை எண் பதினைந்தாகும். ஒன்றுக்கு "க" என்றும், ஐந்துக்கு "ரு" என்றும், அதுவே ஆன்மா (உயிர்) என்றும் பொருளாகும். உயிர்களுக்கு மேல்நிலை ஞானம் வழங்கும் பொருட்டு பாதையாக உள்ளது "கால்" என்று குறிக்கும் வனப்பாற்றலாகிய வகரம் அருள் சக்தியாகும்.

ஆருயிரின் உடம்பகத்துக்கு தலை உச்சியியுள்ளது. கால் என்ற அடியானது வழியாக உள்ளது. இவ்வுண்மையை அருள் என்னும் வனப்பாற்றலின் உதவியாயுள்ளது அறியார்கள். தலை அடி என்பது தலைகால் என்பர். கால் எனில் அடி என்றும் கூறுவர். இது "சிவ" என்னும் செந்தமிழ்ப் பெருமறையாகும்.

இவ்வறிவை அறிந்தோர் சிவமாகவே யிருந்து இன்புறுவர். அடியாவது பிண்ட உற்பத்தியின் முதலாவது, தலையடி உச்சி என்பது தலையில் உச்சிக்கு நேர்கீழாக உள்ளது மூலம். இந்த மூலத்தை ஆன்மா என்பார்கள். இதனை திருமூலர்

"காலுந் தலையும் அறியார் கலதிகள்
காலந்தச் சக்தி யிருளென்பார் காரணம்
பாலொன்று ஞானமே பண்பார் தலையுயிர்
காலந்த ஞானத்தைக் காட்டவீ டாகும்".

"தலையடி யாவதறியார் காயத்தில்
தலையடி யுச்சியில் உள்ளது மூலந்
தலையடி யான அறிவை யறிந்தோர்
தலையடி யாகவே தானிருந்தாரே" - திருமூலர் திருமந்திரம் 3000.

ஐந்தெழுத்தின் நடப்புகள்:

1. நகரம்: திரோதாயி சக்தி அல்லது நடப்பாற்றல் என்பர். ஆன்மாக்களை உலக அரங்கத்திலே விருப்பத்தை (இச்சை) வருவிக்கும்.

2. மகரம்: கிரியா சக்தி அல்லது இயக்காற்றல் என்பர். ஆன்மாக்களைப் பிரபஞ்சத்தில் மெய் என்று அழுந்தும். இச்சக்தி சிவத்திலே ஆசையை வருவித்து சிகரத்தோடு கூடி நிற்கும்.

3. வகரம்: ஞானசக்தி அல்லது அறிவாற்றல் என்பர். ஆன்மாக்களை நின்ற சிவத்திலே அருள்முகமாக ஆசையை மேலோங்கச் செய்து மகரத்தோடு கூடி நிற்பது.

4. யகரம்: ஆருயிர் அல்லது ஆன்மா என்பர். மேற்கண்ட சக்திகள் ஆன்மாவை சிவ சார்ப்பு ஏற்படத்துணையாக நின்று செயல்படும்.

5. சிகரம்: பேருயிர் அல்லது பேரான்மா (அ) சிவம் என்று கூறுவார்கள்.

"நமசிவய என்று உரைத்த மந்திரம்
நவ்வொடு மவ்வும் போய்கை மாய்கை வலமாதாய்
யவ்வான சீவன் வவ்வுறுச் சேர்ந்திடில்
சிவம் எனில் ஒன்றாய்ச் சிவம்" எனலாம்.

இறைவன் ஐந்தெழுத்தில் எண்பொருளாயிருப்பது:

சிறப்பும் சீறும் எல்லாவற்றிற்கும் மேலானது அஞ்செழுத்தாகும். அன்பு சேர் ஆருயிருக்கு அஞ்செழுத்தின் கண் விழைவு (விருப்பம்) உண்டாக வேண்டி மறப்பு நினைப்பும் உண்டாக அம்பலவாணர் திருகூத்து ஆடுவார். திருவருள் நடுவே, ஆருயிர் நடுவே, அனைத்துலகின் நடுவே

Koviloor Digital Library

இடங் கொண்டு எண்பெரும் பொருளாய் நின்றருள்பவன் சிவன். எண்பொருள் எண்பதும் நிலம் — நீர் — நெருப்பு — காற்று — வானகம் — திங்கள் — ஞாயிறு — ஆருயிர் (வன்னி) ஆக இவைகள் எட்டுமாகும். நகரம் — லகரம்: ம = வகரம் சி = ரகரம் வ = யகரம் ய = அகரம் சந்திரன் — சூரியன் — வன்னி ஆக இவைகள் எட்டும் ஆகும். சந்திரனுக்கு பீசம் "டம்" மாகும். சூரியனுக்கு = 'ஓம்' மாகும். ஆருயிர் (அ) வன்னி — அம்மாகும்.

"பட்ட பரிசே பரமஞ் செழுத்தின்
இட்ட மறிந்திட டிரவு பகல்வர
நட்டம தாடு நடுவே நிலயங்கொண்
டட்டதே சப்பொரு ளாகிநின் றானே - 974 திருமூலர் திருமந்திரம் - 3000

விட்ட யெழுத்தும் விடாத எழுத்தும்:

சிவனும் சிவையும் பிரிவில்லாமல் ஒட்டியுறையும் வழிவகைகள் அறிந்தால் விட்ட எழுத்தாகிய "வ"கரம் விடாத எழுத்தாகிய "சி"கரம் ஆக இவ்விரண்டினையும் மாமுதல் என்னும் உண்மை வெளியாகும். மாமுதல் = மகா காரணம். இவ்விரு பெரும் எழுத்தாகிய "சிவ" என்னும் செந்தமிழ்த் தனி மறையினை இடையறாது கணிக்க வல்லவர்கள் தம்முயிர் திருவடியிற் கூடிப் பேரின்பம் பெருவாழ்வு எய்தும் நிலையினைக் காக்க வல்லவராவார்.

"மட்ட விழ் தாமரை மாது நல் லானுடன்
ஒட்டி இருந்த உபாயம் அறிகிலர்
விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
கட்டவல் லாருயிர் காக்க வல்லாரே" - 918 திருமூலர் திருமந்திரம் 3000.

நிலைதாங்கும் ஐந்தெழுத்துக்கள்:

1. வேர் எழுத்து = பிரணவம் (அ) ஓம்காரம்
2. விண்ணெழுத்து = வகரம்
3. நீர் எழுத்து = மகரம்
4. நிலம் தாங்கி எழுத்து = நகரம்
5. அங்கி எழுத்து = சிகரம்
6. உயிராமெழுத்து = யகரம்
7. ஓர் எழுத்து = சிகரம்

"வே ரெழுத்தாய் விண்ணாய் அப்புற மாய்நிற்கும்
நீரெழுத் தாய்நிலந் தாங்கியும் அங்குளன்
சீரெழுத் தாய் அங்கி யாயுயி ராமெழுத்
தோ ரெழுத் தீசனும் ஒண்சுட ராமே" - 970.

ஐந்தெழுத்தும் அதன் பஞ்ச பூதங்கள் மற்றும் வித்தெழுத்தும்:

1. மண் — நகரம் — லம் — நிலம்
2. நீர் — மகரம் — வம் — தண்ணீர்
3. தீ — சிகரம் — ரம் — நெருப்பு
4. காற்று — வகரம் — யம் — வளி
5. வான் — யகரம் — அம் — ஆகாயம்

"இயலுமிம் மந்திரம் எய்தும் வழியின்
செயலும் அறியத் தெளிவிக்குந் நாதன்
புயலும் புனலும் பொருந்தங்கி மண்விண்
மயலும் எழுத்துக்கு முன்னா இருந்ததே - 929

திருமூலர் திருமந்திரம் 3000.

எண்தொழில் புரியும் ஐந்தெழுத்துக்கள்:

1. நங் — மங் — நமசிவய — தம்பனம் கைக்கூடும்
2. நசி — நசி — சிவயநம = மாரணம் கைக்கூடும்
3. வசி — வசி — யநமசிவ = வசியம் கைக்கூடும்
4. வசி — வசி — மசிவயந — மோகனம் கைக்கூடும்
5. வங் — சிங் — வயநமசி = உச்சாடனம கைகூடும்.
6. வவ் — வும் — நயவசிம — பேதனம் கைக்கூடும்
7. நசி — நசி — யவசிநம = வித்வேடனம் கைக்கூடும்
8. வருக — வருக — நசிவயமவ = அழைப்பு கைக்கூடும்.

பாடினேன் "யநமவசி" வசியமாகும்
பண்பான "மசிவயந" மோகனமே சித்தி
ஆடியே "வசிமநய" அழைப்பு மாகும்.
அப்பனே "நமசிவய" தம்பனமே செய்யும்
கூடியே "வயநமசி" யுச்சாடனந்தான்

Koviloor Digital Library

குணமான "யவசிமந" பேதனந்தான்
தேடியே "நயவசிம" வித்துவேடணம்
"சிவயநம" மாரணமாய்ச் செப்பலாமே - 21
புலிப்பாணி சித்தர் சிதம்பரம் — 25

இறைவன் அருளும் ஐந்தெழுத்து கூத்துகள்:

இறைவன் அருளும் ஐந்தெழுத்து கூத்து ஆனந்த கூத்து என்பர். ஐந்தெழுத்தில் புரியும் ஐந்தொழில் கூத்து 1. படைத்தல், 2. காத்தல், 3. அழித்தல், 4. மறைத்தல், 5. அருளல் என்பன. இவைகளுக்கு வடமொழியில் முறையே 1. கிருட்டி, 2. திதி, 3. சங்காரம், 4. திரோபவம், 5. அனுகிரகம் என்பர். இவ்வைந்து தொழில்களும் ஆனந்தத் தாண்டவத்தில் ஒருங்கே நிகழ்கின்றம் என்பதைத் திருமூலர்,

"அரன் துடிதோற்றம் அமைத்தல் திதியாம்
அரன் அங்கி தன்னில் அறையிற் சங்காரம்
அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி
அரனடி யென்றும் அனுகிரகம் என்னே - 2799 திருமூலர் திருமந்திரம் — 3000 என திருமந்திரத்தாலும், திருவதிகை மனவாசங் கடந்தார் கூறும்,

"தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றப்பா
ஊன்று மலர்ப் பதத்தில் உற்றுதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப் பதத்தே நாடு" என உண்மை விளக்கத்தாலும் அருள்கிறார்.

கூத்துப் பெருமானது துடிசேர்கரம் — அபயகரம் — தீயேந்தியகரம் — ஊன்றிய திருவடி — தூக்கிய திருவடி ஆகிய ஐந்தும் முறையே படைத்தல் — காத்தல் — அழித்தல் — மறைத்தல் — அருளல் என்னும் ஐந்தொழில்களையும் அருள்கின்றார்.

1. படைத்தல்: சிருட்டி துடிசேர்கரமாகும். துடி எனில் தமருகம். தமருகம் எனில் உடுக்கையாகும். உடுக்கை யேந்திய கரம் படைத்தல் தொழிலை அருள்கிறது. உடுக்கை ஓசை (நாத) தத்துவத்தை குறிக்கிறது. வானகம் ஓசை தன் மாத்திரையினின்றும் தோன்றியது. ஆகாயமாகிய அம்பலத்தில் நடமியற்றல் கூத்த பெருமான் ஓசையின் அறிகுறியாக நாத தத்துவத்தின் அறிகுறியாக, உடுக்கை என்னும் (பொறியை) அல்லது கருவியை ஏந்தியிருக்கிறார்.

2. காத்தல்: திதி அபயகரம். அமைத்தல் என்றும், அமைப்பில் என்றும், அமைத்த பொற்கரம், அபய ஹஸ்தம் என்றும் கூறுவர். அபயகரம் வலக்கை அபய முத்திரை காட்டுகிறது. இது அடைக்கல் என்பர். அபய ஹஸ்தம் என்பர். அமைத்த கரம் என்பர். இடக்கை வீசிய நிலை தூக்கிய திருவடியைக் காட்டுவதாக இருக்கும். இந்த வீசியகரம் கஜ ஹஸ்தம் என்றும் சொல்லப்படும். அபயக்கரம் காட்டுவதான அமைத்த கரம் காத்தல் தொழிலைச் செய்கிறது.

3. அழித்தல்: சங்காரம் தீயேந்திய கையென்பார். அங்கி என்றும் அழல் என்றும் தீயென்றும் கூறுவர். இடக்கைகளுள் ஒன்று தீ சுடரை ஏந்தியிருக்கும். இத்தீயேந்திய கரம் அழித்தல் தொழிலை செய்வது.

4. மறைத்தல்: திரோபவம். ஊன்றிய திருவடி. கூத்தரசு பெருமான் வலக்காலை ஊன்றி நின்று ஆடியருளுகின்றார். ஊன்றிய திருவடியாகிய வலக்கால் மறைத்தல் தொழிலைச் செய்கின்றது.

5. அருளல்: அனுக்கிரகம். தூக்கிய திருவடி. கூத்தப் பெருமான் இடதுக்காலை ஆடியருள்கின்றார். இத்தூக்கிய திருவடி "குஞ்சித பாதம்" எனப்படும். (நான்ற மலர் பாதம் — தூக்கி தொங்க விடப்பட்ட கால்) தூக்கிய திருவடியாகிய இடக்கால் அருளல் தொழிலைச் செய்கிறார்.

ஆனந்த நடனம் ஐந்தொழில்களையும் செய்வதாக அமைவதால் பஞ்ச கிருத்திய கூத்து என்பர். ஐந்தொழில் கூத்தாகிய இவ்வானந்தத் தாண்டவத்தில் ஐந்தெழுத்து திருமறையும் பொருந்திருப்பதால் பஞ் சாக்கார கூத்து ஆகும். பஞ்சாக்கரக் கூத்து உண்மை விளக்க ஆசிரியர் மனவாசங் கடந்தார் அருளுமாறு.

Koviloor Digital Library

எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் சிட்டன்
சிவாயநம என்னும் திருஎழுத்தஞ்சாலே
அவாயமற நின்றாடுவான் - உண்மை விளக்கம் - 31

ஐந்தெழுத்தே திருமேனியாகக் கொண்டு இறைவன் ஆடியருளுவான் என்று செப்பும் இவ்வாசிரியர், அடுத்த இரண்டு பாடல்களில் இறைவனது பருமை (தூலம்) நுண்மை (சூட்சும) ஐந்தெழுத்து கூத்துக்களைக் கூறியருளுகிறார்.

"ஆடும் படிகேள் நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியிலே "ந"கரம் - கூடும்
"ம"கரம் உதரம் வளர்தோள் "சி"கரம்
பகரு முகம் "வா" முடி "ய"ப்பார் - உண்மை விளக்கம் - 32.

திருவடி — நகரம்
உதரம் — மகரம்
தோள்கள் — சிகரம்
முகம் — வகரம்
முடி — யகரம்

இது தூலம் அல்லது பருமை ஐந்தெழுத்து கூத்தென்பர். "நமசிவய" என்பது தூல பஞ் சாக்கரம்.

அடுத்து வருவது சூட்சும பஞ்சாக்கரம் பாடலைக் காண்க.

"சேர்க்கும் துடி 'சி'கரம் சிக்கன 'வா' வீசுகரம்
ஆர்க்கும் 'ய'கரம் அபயகரம - பார்க்கில் இறைக்கு
அங்கி 'ந'கரம் அடிகீழ் மயலகனார்
தங்கும் 'ம'கரமதுதான் - உண்மை விளக்கம் - 33

சி கரம் — உடுக்கை ஏந்திய வலக்கரம்
வ கரம் — வீசியகரம்
ய கரம் — அபயகரம்
ந கரம் — தீச்சுடர் ஏந்திய இடக்கரம்
ம கரம் — ஊன்றிய திருவடி வலக்கால்

அது சுக்கும அல்லது நுண்மை ஐந்தெழுத்தாகும். இதற்கு ஐந்தெழுத்து நடனம் என்பர். "சிவாயநம" என்பது ஐந்தெழுத்து நுண்மை என்பர். "நமசிவாய" என்பது தூலம் அல்லது பருமை ஐந்தெழுத்து கூத்தாகும். நமசிவய என்னும் தூலத்திற்கு ஊனநடனம் என்பர். சிவாயநம என்னும் நுண்மைக்கு ஞான நடனம் என்பார்கள்.

சிகார பஞ்சாக்கரத்தின் இருப்பிடம்:

பற்று கோடுடைய மூலம் — அடிவயிறு — மேல்வயிறு நெஞ்சம் — கழுத்து — புருவநடு — ஆகிய ஆதாரங்களும், பற்று கோடிலாலது ஆன ஞாயிறு மண்டலம் — திங்கள் மண்டலம் — தீ மண்டலம் — சமனை — உன்மனை — அதீதம் என்ற நிலைகள் உண்டு. ஆக மேற்கண்ட நெருங்க முடியாத ஆறாதார அகநிலை ஒளிக்கு அப்புறமாய் அதன் மேலுமாய் விளங்குவது தனித் தன்மை வாய்ந்த "அருட்பெரும் அறிவு பெருவெளி" யாகும். அவ்விடத்தே பொருந்தி எழுந்தருளிருப்பவன் நமது முழுமுதற் தலைவன் சிவபெருமான் ஆவார். அவருடைய அருமையும் பெருமையும் சிறப்பையும் உணர்த்தக் கூடிய அவனது "சிகர" எழுத்து பொருந்தி நிற்கும். அச்சிகர எழுத்தின் அளவில் பேரொளியின் சிறப்பை பேசுவது இயலாது. அவரின் திருப்பெயராகிய மந்திரம் என்னும் "சிகர"த்தை உரை காணுதல் இயலாலது. அதனைப் பற்றி சிந்தனை செய்யும் காலத்து ஓர் உருவம் என்னும் கருவியாகிய மனத்து முன் தோன்றும். உரைக்கும் கால் ஒலியுருவம் செவிக்கு புலனாகும. இவ்விரண்டு நிலையையும் கடந்து விரவி நின்றுனரும் மேல்நிலை ஆதலின் அதனை பெருவெளி என்பர். அதனை அவன் திருவருளால் உணர்வின் கண் உணர்த்தியருளி ஆருயிருக்கு "சிகரத் திருவடி" தலை நின்றனன். இந்நிலையை "அசி" என்ற மந்திர பொருளை உணர்த்தும்.

ஆன்மாவின் முடியில் ஞான பேரான்மாவான சிவபெருமான் திருவடியினை சூட்டியருளினான். அப்படி சூட்டிய போது தளையான கன்மத்தால் வரும் வினையும் மாயையால் வரும் மயக்கும் மாயையும், ஆணவத்தால் வரும் மலமும் கட்டகன்று நிற்கும். ஆணவக் கட்டறலும் — மாயாகாரியப் பொருள்களிடம் பதிந்துள்ள நெஞ்சின் மயக்கம் நீங்கும். மயக்கம் நீங்கிய ஆன்மாவுக்கு திருவடியுணர்வாகி சிவஞானத்தை அடிமையாகிய ஆருயிருக்கு வழங்கி அருளுகிறான். அவ்வுணர்வு பெற்ற ஆருயிர் மேலாம் நிலையாகி சிகர

Koviloor Digital Library

வண்ணத்தை ஆக்கி தன் வண்ணமாகக் அருள்நிலை கொண்டு அருள்வான். அதனால் ஆரா இன்பத் திருவடியினையின் மேல்நிலையைப் பெற்று ஆருயிர் உய்த்தது. அத்தகைய நிலை மேற்கொண்டு துய்க்கும் செம்மை நலம் "சொல்லிறந்த சுக" நிலை என்பர்.

"பண்ணாத பாரொளிக் கப்புறத் தப்பால்
என்னா யகன்றார் இசைந்தங் கிருந்திடம்
உன்னா ஒளியு முறை செய்யா மந்திரம்
சொன்னான் கழலினை சூடி நின்றேனே - 3093

உரை செய்யாமந்திரம் — சிகரம்.

ஐந்தெழுத்தும் - ஐவிரலும்

1. பெருவிரல் — பதியைக் குறிக்கும். இறைவனை சுட்டும். பதிவான்மா என்றும் கூறலாம். இதற்கு சிகரம் என்ற எழுத்து தழுவி நிற்கும்.

2. ஆள்காட்டி விரல் பசுவைக் குறிக்கும். ஆளை சுட்டும். பசுவான் மாவை தழுவி நிற்கும். இது யகரம் என்ற எழுத்து ஒட்டி நிற்கும். மேற்கண்ட இரண்டு சிகரமும் யகரமும் இணைபிரியாது ஒட்டி நிற்கும். யசி அல்லது அசி என்ற மந்திரத்தால் வழங்கப்படும். பதியும் பசுவும் ஆக இரண்டின் கலப்பு நிலையே 'அசி' நிலையாகும. பெரு விரலும் — ஆள் காட்டிவிரலும் ஆக இவ்விரு விரல்கள் ஒட்டி இணைந்தால் நடுவே வட்டம் தோன்றும். இவ்வட்டம் ஆருயிரானது கட்டற்று பேருயிருடன் ஒட்டியும் இருக்கும். அப்போது அவ்வுயிர் கிடைக்கப் பெறாத பேரின்பத்தில் மீளாது அமுழ்ந்தி மரணமில்லா பெருவாழ்வில் முத்தி பெரும். மையத்தில் ஏற்பட்ட வட்டமே மகார வட்டம். மகாரத்திற்கு உரியவர் சிவபெருமான். மகார வட்டமே ஓங்காரமாக செயல்படும். ஆருயிர் பிரணவடிவம் பெற்றதை குறிக்கும்.

3. நடுவிரல் — வகரத்தை குறிக்கும். இதனை (வகரத்தை) வினையாக மெய்ஞ் ஞான நூல்கள் கூறுகின்றது.

4. அணிவிரல் — மகரத்தைக் குறிக்கிறது. இதனை மாயையாகும்.

5. சிறுவிரல் — மலத்தைக் குறிக்கிறது. இது ஆணவ மலத்தை குறித்து நிற்கும்.

மேற்கண்ட மூன்றும் தளைகள் என்று கூறப்படும். தளையான மூன்றும் இருள் தேகம். மருள் தேகத்தில் பொருந்தி நிற்கும். ஒருவன் சுத்த தேகம் பெறும்போது எல்லா தத்துவங்களும் கெட்டு அழிந்து பெருவிரல் ஆகிய பதியும் — ஆள்காட்டி விரலாகிய ஆருயிரும் ஒட்டி உறையும் — அப்படி ஒட்டி உறையும் காலத்தில் மீண்டும் அத்தேகம் பிரணவதேகமாக மாறி வட்டமாக நிற்கும். அதில் சில கால பயிற்சியின் மூலம் பழக்கம் ஏற்படும். மாற்றம் ஞானதேகமாக மாறி மரணமில்லா வாழ்வை பெறுவார்கள். கல்வி எனில் ஞானம். வாழ்வு எனில் போகம். பேறு எனில் முத்தி.

"சிவனருள் ஆவி திரோத மலம் ஐந்தும்
அவனெழுத் தஞ்சின் அடைவாம்" - உண்மை விளக்கம் - 41

"நம்முதல் ஓரைந்தின் நாடும் கருமங்கள்
அம்முதல் ஐந்தில் அடங்கிய நல்வினை - 983

திருமூலர் திருமந்திரம் — 3000

"முன்னோன் பெருவிரலாம் மூவா உயிர் சுட்டாம்
பின்மூன்றும் நீள் வினையே மாயைமல்
- உன்னுங்கால்
ஆளும் பெருவிரல் ஆட்காட்டியும் புணர்ப்பக்
கேளுறுமால் ஒட்டாவம் மூன்று"

ஐந்து எழுத்துக்கள் குறிக்கும் படிநிலைகள்:

1. **நமசிவய:** இம்மொழியில் 'ந — ம' என்பது வினையானது முதன்மையாக நின்று உயிருக்கு நற்கதி ஏற்படத்தடையாக உள்ளது.

2. **சிவயநம:** இம்மொழியில் 'ந — ம' ஆக இரு எழுத்துக்களின் வினையானது முதன்மையாக நின்றதை விலகி அவ்வினையானது கடைசியில் ஆருயிர் நற்கதி அடைய தடையாக உள்ளது. ஆருயிர் வகரத்திற்கும் நகரத்திற்கு நடுவே நின்று மீளாது நிற்கிறது.

Koviloor Digital Library

3. சிவயசிவ: இம்மொழியில் 'ந — ம' என்பது முழுமையாக வினையாது அகன்றது. ஆருயிர் சிவபெருமானுக்கு அடிமையாய் நின்று வகரத்திற்கும் சிகரத்திற்கும் நடுவில் நின்று இறையருள் பணியில் நின்று ஒழுகும் இயல்பினை பெற்றதைக் குறிப்பாகக் குறித்து நின்றது.

4. சிவய: இதற்கு முத்தி பஞ்சாட்சரம் என்பர். ஆருயிர் சிவனை ஒட்டி வகரத்திற்கு அடுத்து நிற்பது வகரம் வழிகாட்ட சிவனையடையும் நிலை ஏற்படுத்தியுள்ளது.

5. வசிய: இதுவும் ஆருயிர்க்கு (யகரத்திற்கு) சிவன் முன்னிலையில் நின்று ஆருயிருடன் பேருயிர் உடன் அருகில் நின்றது முத்தி கொடுக்க இணைவு பெற (சேர) உள்ளது.

6. யசி: ஆன்மாவின் முழுவினைகள் நீங்கி சிவத்தில் இணைந்து கலந்தது. யகரத்தில் அகர ஒலியும் யகரஒலியும் ஒலிக்கும். அப்பொழுது ஞான யான்மாவாகி 'அசி' நிலையில் கலக்கும்.

7. சி: அருங்கரை சேர்ந்த அருங்கலம் என்று செப்புவர். சிகரம் பேசா எழுத்தென்பர். அருளான வகரத்துடன் கூட்டி "சிவ" என் பேசும் அக்கரமாக இணைந்து ஒட்டி நிற்கும். சிகரத்தின் கண் சகரம் என்ற மெய்யும் (ச்) (இச்) இகரமாகிய உயிரும், அகரமாகிய உயிருக்கு உயிராம் உட்பட்டுள்ளது. சகரம் மாயையை குறிக்கும். இகரம் ஆருயிரினையும் அகரம்பேருயிரினையும் ஒரு சேர இணைந்து குறிப்பனவாகும். இதன் மூலம் நாம் ஓரெழுத்தினிடத்தே முப்பொருள் உண்மை தேறப்படும். பிறப்பு இறப்பு அறுக்கும் வல்லமையும் பெருமையும் சிகரத்திற்கு உண்டு. சி = ச்+அ+இ+விந்து+நாதம் என்று நிற்கும்.

மேற்கோள்கள்:

"முன்பின் உறு 'நம' வால்
முன் பின் ஆம் சிவத்தால்

இன் பின் வழி விழுப்பேறாமெண்" கூறுவதால் தெளிவு பெறலாம்.

அருளாளர்கள் ஓதும் ஐந்தெழுத்து மந்திரப்பாடல்:

திருமூலர் திருமந்திரம் மூவ்வாயிரம் அதில் ஓதும் ஐந்தெழுத்துப் பாடல்கள் சில இங்கு எடுத்துக் காட்டப்படுகிறது.

1. அஞ்செழுத் தாலே அமர்ந்தனன் நந்தியும்
அஞ்செழுத் தாலே அமர்ந்தபஞ் சாக்கரம்
அஞ்செழுத் தாகிய அக்கர சக்கரம்
அஞ்செழுத் துள்ளே அமர்ந்திருந்தான் - 934

நந்தியின் திருப்பெயர் நமசிவய

நமசிவய என்று அமர்ந்து நிலைத்த ஐந்தெழுத்து, ஐந்தெழுத்து சக்கர விஞ்ஞையாகவும் நிற்கும் அந்த சக்கரதத்தினுள் பதிந்து நின்றனன்

ந	ம	சி	வ	ய
சி	வ	ய	ந	ம
ய	ந	ம	சி	வ
ம	சி	வ	ய	ந
வ	ய	ந	ம	சி

2. அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தாலிவ் அகலிடந் தாங்கினான்
அஞ்செழுத் தாலே அமர்ந்து நின்றானே - 966

நவம்	மவம்	சிரம்	வயம்	யஅம்
சிரம்	வயம்	யஅம்	நலம்	மவம்
யஅம்	நலம்	மவம்	சிரம்	வயம்
மவம்	சிரம்	வயம்	யஅம்	நலம்
வயம்	யரம்	நலம்	மவம்	சிரம்

3. ஐந்தின் பெருமையே அகலிட மாவது
ஐந்தின் பெருமையே ஆலய மாவது
ஐந்தின் பெருமையே அறவோன் வழக்கமாகும்
ஐந்தின் வகை செயப் பாலனு மாமே - 969

தன்மையின் பெருமையினாலேயே எல்லாவுலகமும் செம்மையாகவும் ஒழுங்காகவும் நடைப்பெற்று

Koviloor Digital Library

வருகின்றன. திருவைந்தெழுத்தின் சிறந்த திருக்குறிப்பே சிவபெருமானின் மேலான திருக்கோயிலாகும். அது சிவ கொழுந்தாகிய "சிவலிங்கம்" காணப்படும். 1.கருவறை நிலையை "சிகரம்" என்பர். 2. அதன் அடுத்த மண்டப்தில் காணப்படும் மனோன்மணி நிலையை "வகரம்" என்பர். 3. ஆனேற்று நிலைய "யகரம்" என்பர். 4. அம்பலவாணர் நிலையை "நகரம்" என்பர். 5. பலிபீடம் குறிக்கும் நிலையை "மகரம்" என்பர். அறிவோனாகிய மெய்ப்பொருளான "சிவம்" அருளும் வழங்குவது "திருவைந்தெழுத்தேயாகும்.

திருஞான சம்பந்தர் அருளிய திருவைந் தெழுத்திப் பதிகங்கள் இரண்டாகும். ஒன்று பஞ்சாக்கரத் திருப்பதிகம். "துஞ் சலும் துஞ்சலிலாத போழ்கினும்" என்பது. இந்த திருப்பாடலால் பூணூல் அணியும் விழா நடைபெற அக்காலத்தில் இதனை மந்திரமாக ஓதி பூணூல் அணிவிக்கும் திருவிழா சிறப்பாக செய்வார்கள். இரண்டாவதாக நமசிவாயப் பதிகம் என்பது மற்றொன்று. இப்பதிகம் திருமணம் செய்யும்போது நமசிவாயப்பதிகம் ஓதி நடத்தினர். இதுவே தமிழ் திருமணமாகும். இந்த இரண்டு திருப்பதிகங்களில் முதலும் இறுதியாகவும் பாடல் தரப்படுகிறது. படித்து இன்புறுக. பஞ்சாக்கரத்தில் திருப்பதிகத்தில் பதினோருப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. முதல் பாடல்,

"துஞ்சலும் துஞ்சிலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தோறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்த கூற்
றஞ்ச உதைத்தன அஞ்செழுத்தாமே" - இறுதிப்பாடல்

"நற்ற மிழ் ஞானசம்பந்தன் நான்மயை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்
துற்றன வல்லவர் உம்பராவரே" - என்பதாம்.

நமச்சிவாயத் திருப்பதிகத்தில் முதல் பாடலும் இறுதிப்பாடலும் இங்கு தரப்படுகின்றன. முதல் பாடல்

"காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமே நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே" - இறுதிப் பாடல்

"நந்தி நாமம் நமச்சிவா யவேனும்
சந்தை யால்தமிழ் ஞானசம் பந்தன் சொல்
சிந்தை யால் மகிழ்ந் தேதவல் லாரெல்லாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே - என்பதாம்,

திருநாவுக்கரசர் அருளிய திருவைந்தெழுத்துப் பதிகம் ஒன்று "சொற்றுணை வேதியன் சோதி வானவன் என்று தொடங்கும் திருப்பாடலாகும். சமணர்கள் திருநாகரசரை கல்லிற் கட்டிக் கடலில் வீசியபோது அருளியது. ஒவ்வொரு பாடலிலும் "நமச்சிவாயவே" என்பதில் இறுதியாக மகுடம் சூட்டி பாடியருளியது. அதில் முதல் பாடலும் இறுதிப்பாடலும் தரப்படுகிறது. முதல்பாடல்,

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக்கை தொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே" - இறுதிப்பாடல்

"மாப்பிணை தழுவிய மாதொர் பாகன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்த்
தேத்தவல் லார்தமக்கிடுக்க ணில்லையே - என்பதாகும். இதுபோல் பத்து பாடல் பாடியருளினார்.

சுந்தரமூர்த்தி நாயினார் அவர்கள் திருப்பாண்டிக் கொடுமுடியில் பாடியருளிய நமச்சிவாயத் திருப்பதிகமாகும். அதில் முதல் பாடல் எடுத்துக்காட்டப்படுகிறது.

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாதமேமன பாவித்தேன்
பெற்ற லும் பிறந்தேன் இனிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினும்
சொல்லும் நாநமச்சி வாயவே - இதுபோன்று பத்து பாடல்கள் பாடியுள்ளார்.

மேலும் மாணிக்க வாசகர் பெருமான் அருளிய திருவாசகத்தின் தொடக்கத்தில்

Koviloor Digital Library

"நமச்சிவாய வா அழ்க" என்று நமச்சிவாயத்தை வாழ்த்தித் தொடங்கும் திருவாசகம் நமச்சிவாயத்தையும், சிவாயநம என்ற ஐந்தெழுத்து சில இடங்களில் அருமையாக பொருள்படப் பாடியருளியுள்ளார். நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன் என்பது மாணிக்க வாசகரின் அனுபவ அருள் வாக்காகும்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப் பொழுதும் என்நெஞ்சில் நீங்கா
தான் தாள் வாழ்க - 1 - 1

போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் மறிதொன்றில்லை
போற்றியே நமச்சிவாய புறம்எனைப் போக்கல்கண்டாய்
போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி - 31

நமது வடலூர் வள்ளல் பெருமான் அருளிய திருவருட்பாவில் திருவைந்தெழுத்துப் பதிகங்கள் நான்கு. அதில் இரண்டு பதிகங்கள் தூல பஞ் சாக்கரம், ஒரு பதிகம் சூட்சும பஞ்சாரக்கரம் — ஒரு பதிகம் காரண பஞ்சாக்கரம் என்பன. அதில் ஒரு சிலப்பாடல்கள் இங்கு காணலாம்.

சொல்அ வாவிய தொண்டர்தம் மனத்தில்
சுதந்த ரங்கொடு தோன்றிய துணையைக்
கரைந்து வந்திடக் கலந்திடும் களிப்பைச்
செல்அ வாவிய பொழில்திரு வொற்றித்
தேனைத் தில்லைச் சிற்றம்பலத்தாடும்
நல்ல வாழ்வினை நான் மறைப் பொருளை
நமச் சிவாயத்தை நான் மற வேனே - என்ற பாடல் போன்று பத்து பாடல்கள் இடம் பெற்றுள்ளது.

நற்றுணை விளக்கம் என்று ஓதப்படும் விளக்கப் பாடலில் பத்து பாடல்கள் இடம் பெற்றுள்ளது. அதில் முதல் பாடல் இங்கு தரப்படுகிறது.

"எஞ்ச வேண்டிய ஐம்புலப் பகையால்
இடர் கொண்டோய்ந்தனை என்னினும் இனிநீ
அஞ்ச வேண்டிய தென்னை என் நெஞ்சே
அஞ்சல் அஞ்சல்காண் அருமறை நான்கும்
விஞ்ச வேண்டியும் மாலவன் மலரோன்
விளங் வேண்டியும் மிடற்றின் கண் அமுதா
நஞ்சை வேண்டிய நாதன்தன் நாமம்
நமச் சிவாயம் காண் நாம்பெறும் துணையே

மேற்காட்டிய அனைத்து பாடல்கள் தூலபஞ்சாக்கரத்தைப் பற்றி ஓதப்படுகிறது. இனி சூக்கும பஞ்சாக்கரத்தைப் பற்றி நினைவு செய்வோம்.

திருமூலர் தூல பஞ்சாக்கரம் பற்றி குறிப்பிடும் பாடல்கள் உண்டு. அதில் இரண்டொன்று பாடல்கள் மேற்கோள் எடுத்துத் தரப்படுகிறது. படித்தறிக.

"ஐம்ப தெழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்தாக மங்களும்
ஐம்ப தெழுத்தின் அடைவை யறிந்த பின்
ஐம்ப தெழுத்தே அஞ் செழுத்தாமே - 2698

"அகராதி யீரெண் கலந்த பரையும்
உகராதி தன்சக்தி யுள்ளொளி யீசன்
சிகராதி தான்சிவ வேதமே கோண
நகராதி தான் மூலமந்திர நண்ணுமே - 2700

"அகர முதலாக ஐம்பத்தொன்றாகி
உகர முதலாக வோங்கி யுதித்து
மகார இருதியாய் மாய்ந்து மாய்ந் தேறி
நகார முதலாகும் நந்திதன் நாமமே - 2699

மேற்கண்ட மூன்று பாடல்கள் தூல ஐந்தெழுத்தைக் குறித்து நிற்கிறது.

இனி சூட்சும பஞ்சாட்சம் பற்றி சிந்தனை செய்வோம் சிவாயநம என்பது சூட்சும பஞ்சாட்சரமாகும். முதலாவது கூறிய தூல பஞ்சாட்சம் கருமத்தை கூடும். தவிர சிவத்தையும் கூட வைக்கும். ஆனால் அதனை ஓதினால் உலகியல் வாழ்விலிருந்து மீளுவது கடினம். எனவே அருளைத்தரும் பஞ்சாட்சரமான சிவாயநம என்ற ஐந்தக்கரம் ஓதல் நன்றும். அருள் சிவசக்தியின் ஏற்றங்கள் அடையவழி காட்ட துணையாக நிற்கும். அருளியல்வாழ்வு சிறக்கும். உலகியல் வாழ்வு விலகி அருளியல் வாழ்வில் நிலைபெறச் செய்யும். இனி சில பாடல்கள் எடுத்துக்காட்டப்படுகின்றது.

"செம்பு பொன் னாகுஞ் சிவாய நமவெ ன்னிற்
செம்பு பொன் னாகுஞ் திரண்டது சிற்பரஞ்

Koviloor Digital Library

செம்பு பொன் னாகுந் ஸ்ரீரிபுங் கிரியு மெனச்
செம்பு பொன் னான திருவம் பலமே - 903

செம்பு என்ற களிமத்திற்கு ஊறல் உண்டு. அதாவது சிலிம்பு ஏற்படும். களிம்பு ஏறும் தன்மையுள்ளது. இதனை எந்த பொருள் கொண்டு தேய்த்து கழுவினாலும் மீண்டும் களிம்பேறி அதன் நிறத்தையும் குணத்தையும் மாற்றி விடும். அதனால் இந்த தேகம் அருளை வழங்கும் மந்திர பஞ்சாக்கரமான சிவாயநம என்று ஓத வேண்டும். அதனை ஓதினால் அருளின் இறுக்கத்தால் இந்த தேகத்திலுள்ள 96 தத்துவங்கள் அகன்று சுத்ததேகம் உண்டாகும். அந்த தேகத்தின் வடிவம் பொன்வணமாகத் திகழும். எனவே சிவாயநம என்ற மந்திரப் பஞ்சாட்சம் நாளும் ஓதல் வேண்டும். அப்படி ஓதினால் என்ன பலன் உண்டாகும் என்பதை கீழ்வரும் பாடல் மூலம் படித்தறிந்து தெளிக.

"வாறே சிவாய நமச்சிவாய நம
வாறே செபிக்கில் வரும்பேர் பிறப்பிலலை
வாறே அருளால் வளர்சுத்துக் காணலாம்
வாறே செபிக்கில் வருஞ் செம்பு பொன்னே - 905

அருளைத் தரும் பஞ்சாட்சரம் சிவாயநம என்பதாகும். அந்த ஐந்தெழுத்து ஓதினால் பிறவியில்லை. தவிர திருவம்பலத் திருக்கூத்து கண்டு களிக்கலாம். மேலும் தொடர்ந்து பஞ்சாக்கரம் ஓதினால் ஊறல் பெற்ற தேகம் பொன்னாகும் என்று திருமூலர் கூறுகிறார்.

மணிவாசகப் பெருமான் அருள் நல்கும் சூட்சும பஞ்சாட்சரம் பற்றி ஓதும் பாடல் கீழ்காண்க.

"தானேயோ தவம் செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் னமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனதுள்ளம் புகுந்து அடியேற்கு
அருள் செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே
- 553

சிவயநம என்று ஓதி தவமிருந்ததனால் தேன் போன்ற அமுதம் உண்ணும் வாய்ப்பு பெற்று, அதனால் சிவபெருமான் எனது உள்ளத்தின் உட்புகுந்து அடியேனுக்கு அருள் தந்தான் ஊன் போன உடலையும் அதில் உயிரையும் மேன்மை உண்டாக்கியது. அதனால் உலகியல் வாழ்க்கையில் வெறுத்து அருளியல் வாழ்வில் சேர்ந்தேன் என்பதாம்.

நமது வள்ளல் பெருமான் புண்ணிய விளக்கம் என்னும் நூலில் சிவாயநம இடு நீறே என்பது மகுடமாக ஒளிர்கிறது. அதில் ஓரிரண்டு பாடல்களை எடுத்துக்காட்டாக தருகிறோம் படித்து இன்புறுக.

"பாடற்கினிய வாக்களிக்கும்
பாலும் சோறும் பரிந்தளிக்கும்
கூடற் கினிய அடியவர்தம்
கூட்டம் அளிக்கும் குணம் அளிக்கும்
ஆடற்கினிய நெஞ்சே நீ
அஞ்சேல் என்மேல் ஆணை கண்டாய்
தேடற் கினிய சீர் அளிக்கும்
சிவாயநம என்றிடு நீறே - 834

கருமால் அகற்றும் இறப்பதனைக்
களையு நெறியும் காட்டு விக்கும்
பெரு மால் அதனால் மயக்கு கின்ற
பேதை மடவார் நசை யறுக்கும்
அருமால் உழந்து நெஞ்சே நீ
அஞ்சேல் என் மேல் ஆணை கண்டால்
திருமால் அயனும் தொழுதேத்தும
சிவாய நமஎன் றிடுநீறே - 835 அருட்பா

நமது திருமூலர் காரண பஞ்சாக்கரம் ஓதும் சிறப்பினைக் கூறப்படுகிறது. அந்த திருமந்திரத்தைக் காண்க.

ஆனந்த மூன்றும் அறிவிரண் டொன்றாகும்
ஆனந்தஞ் சிவாய அறிவார் பலரில்லை
ஆனந்த மோடும் அறிய வல்லார்க்கு
ஆனந்தக் கூத்தாய் அகப் படுந்தானே - 892

சிவாய என்ற ஐந்தக்கரம் காரண பஞ்சாக்கரமாகும். சிவமும் சக்தியும் அறிவாரில்லை. சிவம் என்னும் சொல்லில் சிகாரம் அகாரத்தைக் குறிக்கும் வகாரம் உகாரத்தை குறிக்கும். மகாரம் யகாரத்தைக் குறிக்கும். சிவசக்தி தீட்சை ஓதினால்

Koviloor Digital Library

உயிருக்கு ஆனந்த நிலை உண்டாகும். இந்த நிலை உண்டாக்க உதவி புரிவது மகாரம் என்பர். மகாரம் மௌன தீட்சையாகும். மௌன தீட்சை ஓர் உயிர் சாதித்தால் ஆனந்தம் என்று கூறப்படும் இன்பநிலை உண்டாகும்.

மருவுஞ் சிவாயமே மன்னும் உயிரும்
அருமந்த யோகமும் ஞானமு மாகுந்
தெருள்வந்த சீவனார் சென்றிவற்றாலே
அருள் தங்கி யச்சிவ மாவது வீடே - 979

என்று திருமூலர் ஓதுகிறார். சிவாய என்று கூறும் உயிரான யோகமும் ஞானமும் கைக்கூடும். தெருள் என்று கூறப்படும் உயிரானது அதிலிருந்து விடுப்பட்டு அருள்நிலை அடைவர் என்று காரண பஞ்சாக்கரம் நினைவுறும் பயனை ஓதப்படுகிறது.

வள்ளல் பெருமானும் காரண பஞ் சாக்கரம் பயன்படுத்தி பத்துப் பாடல்கள் ஓதியுள்ளார்கள். அந்த பாடல்களில் ஒன்று இரண்டு மேற்கோள் எடுத்துக் காட்டப்படுகிறது. காண்க.

வாங்கு வில்நுதல் மங்கையர் விழியால்
மயங்கி வஞ்சர்பால் வருந்தி நாள்தோறும்
ஏங்கு கின்றதில் என்பயன் கண்டாய்
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
தேங்கு லாவுசெங் கரும்பினும் இனிதாய்த்
தித்தித் தன்பர்தம் சித்தத்துள் ஊறி
ஓங்கும் ஓம்சிவ சண்முக சிவ ஓம்
ஓம் "சிவய" என் நுன்னுதி மனனே - 794

தவம் தின்றிவன் மங்கையர் முயக்கால்
தருமம் இன்றுவஞ் சகர்கடுஞ் சார்வால்
இவகை யால்மிக வருந்துறில் என்னாம்
எழில் கொள்ஒற்றயூர்க் கென்னுடன் போந்து
பவம தோட்டிநல் ஆனந்த உருவாம்.
பாங்கு காட்டிநல் பதந்தரும் அடியார்
உவகை ஓம் சிவ சண்முக சிவஓம்
ஓம் சிவாய என் நுன்னிதி மனனே - 795

பஞ்சாக்கர வகைகள், மானிட உயிர்களின் பக்குவ வேறுபாடுகளுக் கேற்பப் பஞ்சாக்கரம் ஐந்துபிரிவாக ஓதப்பட்டுள்ளது. அவை தூலம், சூட்சுமம், காரணம், மகாகாரணம், மகாமனு என்பனவாம்.

1. தூல பஞ்சாக்கரம் = ந — ம — சி — வ — ய

2. சூட்சும பஞ்சாக்கரம் = சி — வா — ய — ந — ம

3. காரண பஞ்சாக்கரம் = சி — வ — ய — சி — வ

4. மகா காரண பஞ்சாக்கரம் = சி — வ

5. மகா மனு = சி

சிவாயநம என்னும் ஐந்தக்கரங்கள் பஞ் சாக்கரம் என ஓதப்படும். ஐந்து எழுத்துக்கள் பொருளுள் எழுத்தாகும். ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு பொருளைக் குறிக்கும் திறனுடையது.

சிகாரம் — சிவம் (பதி)
வகரம் — சக்தி (அருள்)
யகரம் — உயிர் (ஆன்மா)
நகரம் — திரோதம்
மகரம் — மலம்

மேற்கோள் பாடல் எடுத்துக்காட்டப் படுகிறது.

"உற்ற குறி அழியும் ஓதுங்கால் பாடைகளில்
சற்றும் பொருள்தான் சலியாது - மற்றது
ஈசனருள் ஆவி எழிலார் திரோத மலம்
ஆசில் எழுத் தஞ்சின் அடைவாம்" உ.வி.40.

சிவனருள் ஆவி திரோத மலம் ஐந்தும்
அவனெழுத் தஞ்சின் அடைவாம் - இவனின்று
நம்முதலா ஓதிலருள் நாடாது நாடுமருள்
சிம் முதலா ஓதுநீ சென்று - உ.வி.41

என்று ஓதும் இருபாடல்கள் ஐந்தெழுத்தின் அடைவைக் கூறுகின்றன என்பது உண்மை விளக்கம் கூறுகிறது.

மேலும் திருமந்திரம் பிரணவப் பொருளையும் ஐந்தெழுத்தின் பொருளையும் கூறுகிறது. அந்த திருமந்திரப் பாடல் காண்க.

"அகாரம் உயிரே உகாரம் பரமே
மகாரம் சிவமாய் வருமுப் பதத்துச்
சிகாரம் சிவமே வகாரம் பரமே

Koviloor Digital Library

யகாரம் உயிரேன றறையலு மாமே" - 2503

என்று திருமந்திரம் ஆதிமகாமூலமான பிரணவப் பொருளையும், ஐந்தெழுத்தின் பொருளையும் ஓதுகிறது. முதல் இரு அடிகளில் பிரணவப் பொருள் கூறுகிறது. அடுத்து வரும் இருஅடிகள் ஐந்தெழுத்தின் பொருள் ஓதுகிறது. சிகர — வகர — யகர விளக்கம் ஓதுகிறது.

பஞ்சாக்கர அக்கரங்கள் வெறும் எழுத்துக்களாக இன்றித் தனித்தனிப் பொருள் கற்றுத்தருவதால் அந்த ஐந்தெழுத்தை ஐந்து பதம் என்று கூறுகிறது. இதனை சுந்தரமூர்த்தி சுவாமிகள் விளிக்கிறார்.

அந்தியும் நண்பகலும் "அஞ்சு பதஞ்" சொல்லி
முந்தி எழும் பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென் திரு வாரூர்புக் (கு)
எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே - 8066
என்பது சுந்தரர்தேவாரம் ஓதுகிறது.

பஞ்சாக்கர பிரிவுகளின் தெளிவான விளக்கம்

1. தூல ஐந்தெழுத்து:

நகரத்தை முதன்மையாக வைத்து "நமசிவய" என்று ஓதுவது கால பஞ் சாக்கரம் என்பர். முன்பு பக்கங்களில் எழுத்தோய மூவர் அருளிய நமச்சிவாயப் பதிகங்களையும் வள்ளலார் பெருமான் அருளிய நமச்சிவாய பதிகங்களை புரட்டிப் பார்க்கவும்.

"ஒன்றுகண் டீர்உல முக்கொரு தெய்வதும்
ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவது
நன்றுகண் டீர்இனி நமச்சிவாயப் பழம்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே - 2962

"ஒன்றுகண் டேன்இவ் வுலகுக் கொருகனி
நன்றுகண் டாய்அது நமச்சிவா யக்கனி
மென்று கண் டால்அது மெத்தென ிருக்கும்
தின்றுகண் டால்அது தித்திக்குந் தானே - (மிகுதிப் பாடல்)

என்னும் திருமூலரின் திருமந்திரப் பாடலால் அறியலாம்.

"நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநசின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டும் - 6113

என்னும் அப்பா தேவாரத்தையும் கண்டு இன்புறுங்கள். "நமசிவாய" என்னும் துல ஐந்தெழுத்தால் சமயாசாரியரால் உபதேசிக்கப் பெறுகிறது. இம்மைப் பயனும் மறுமைப் பயனும் அளிப்பது.

2. சூக்கும பஞ்சாக்கரம்:

சிகர பஞ்சாட்ரத்டிதை முதன்மையாக வைத்துச் "சிவயநம" என்று ஓதுவது சூக்கும (நுட்பம்) பஞ்சாட்சரமாகும். இந்த சூக்கும பஞ்சாட்சரம் ஞானாசாரியரால் உபதேசிக்கப் பெறுகிறது. முத்திப் பயணம் நோக்கி அதன் பயனை அளிப்பதாகும்.

செம்பு பொன் னாகும் சிவாய நமவென்னில்
செம்பு பொன் னாகத் திரண்டது சிற்பரம்
செம்பு பொன் னாகும் ஸ்ரீயும் கிரீயு மெனச்
செம்பு பொன் னான திருவம் பலமே - 903

என்னும் திருமூலர் திருமந்திரம் செப்பும் பஞ்சாக்கரத்தால் வகர வித்தை சித்திக்கும் செயலை செப்புகிறது. வகர வித்தை = வாத வேதியில் முறையில் பொன் செய்யும் முறையை ஓதப்படுகிறது.

எளிய வாதுசெய் வார் எங்கள் ஈசனை
ஒளியை உன்னி உருகு மனத்திராய்த்
தெளிய ஓதிச் சிவாய நமவென்னும்
குளிகை யிட்டுப் பொன் னாக்குவன் கூட்டையே - 2709.

என்னும் அற்புத திருமந்திர பஞ் சாக்கரத்தால் தகர வித்தை சித்திப்பதைக் கூறப்படுகிறது. தகரவித்தை — தேகசித்தி. பொன்னாக்குவன் கூட்டையே என்பது உடம்பைப் பொன்னுடம்பாக (சொர்ண தேகமாக) ஆக்குதல். உலோகத்தைப் பொன்னாக்குதல் உடம்பைப் பொன்னாக் குதல் இவ்விரண்டும் பஞ்சாக்கரத்தாற் கூடும் என்பதற்கு இவ்விருத்திரு மந்திரப் பாடல்கள் சிறந்த எடுத்துக்காட்டுப்பாடலாகும்.

வகர — தகர வித்தைகளைக் கூறும்போது இவ்விரு திருமந்திரப் பாடல்களையே

Koviloor Digital Library

வள்ளற்பெருமான் மேற்கோளாக எடுத்துக்காட்டுகிறார்.

"சிவாய நம என்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை - உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்."

என்று ஓதப்படும் அவ்வைப் பெரும்பாட்டியின் நல்வரி "சிவாயநம" என்று சிந்தித்திருப்போருக்கு மரண அபாயம் ஒருநாளும் இல்லை என்று அறுதியிட்டு உறுதியாக ஓதப்படுகிறது. இத்திருப்பாடலும் வடலூர் இராமலிங்க பெருமானால் எடுத்தாளப் பெற்ற அற்புதத் திருப்பாட்டாகும்.

3. தூலமும் (பருமையும் - நுண்மையும்) சூக்குமமும்:

தூலம் = நமசிவய (பருமை)
சூக்குமம் = சிவாயநம (நுண்மை)
"நகார மகார சிகார நடுவாய்
வகாரம் இரண்டும் வளியுடன் கூடி
ஓகாரமுதற் கொண் டொருகால் உரைக்க
மகார முதல்வன் மனந்தகத் தானே - 976

என்னும் திருமூலரின்ன திருமந்திரப் பாடலால் நகாரத்தை முதலாகக் கொண்டு ஓதும் வேதமுறையைக் கூறுகிறது.

சிகார வகர யகார முடனே
நகார மகார நடுவுற நாடி
ஓகார முடனே ஒருகால் உரைக்க
மகார முதல்வன் மதித்து நின்றானே - 982

என்னும் திருமூலரின் திருமந்திரப் பாடலால் சிகார முதன்மையாகக் கொண்டு ஓதும் ஆகம முறையைக் கூறுவது.

மேற்கண்டவாறு இருவகையால் ஓதும்முறை திருமூலர் அவர்கள், நகர முதன்மையாக செப்பிக்கின் கரும சித்திகள் வழங்கும் என்றும் சிகர முதன்மையாக செபிக்கின் ஞான சித்திகள் வழங்கும் என்றும் ஓதுகிறார்.

"நம்முதல் ஓரைந்தின் நாடும் கருமங்கள்
அம்முதல் ஐந்தில் அடங்கிய வல்வினை
இம் முத லுள்ளே தெளியவல் லார்கட்குத்
தம்முத லாகும் சதாசிவந் தானே - 983 என்று திருமூலர் பெருமான் ஓதுகிறார்.

நம்முதல் என்பது நகர முதன்மையாக ஓதும் தூலம்
சிம்முதல் என்பது சிகர முதன்மையாக ஓதும் சூக்குமம்

மனவாசகங் கடந்தார் அருளிய உண்மை விளக்கம் என்பதில் இன்னும் அழுத்தந் திருத்தமாக விளக்கி ஓதுகிறார்.

"சிவனருள் ஆவி திரோதமலம் ஐந்தும்
அவனெழுத் தஞ்சின் அடைவாம் - இவனின்று
நம்முதல ஓதிலருள் நாடாது நாடு மருள்
இம் முதலா ஓதுநீ சென்று" உண்மை விளக்கம் - 41

"நம் முதல் ஓரைந்தின் நாடுங்கருமங்கள்" என்கின்றார் நமது திருமூலப் பெருமான்.

"நம் முதலா ஓதில் அருள் நாடாது" என்று மனவா சகங்கடந்தார் தமது உண்மை விளக்கத்தில் ஓதுகிறார் என்பதை அறிக.

நகரத்தை முதன்மையாக நிறுத்தி ஓதினார் அருள் நாட்டம் உண்டாகாது. நாடும் அருள் = அருள் நாட்டம் உண்டாக வேண்டுமென்றால் சிகார முதலாக ஓத வேண்டும்.

"நமசிவாய" என்ற தூல (பருமை) பஞ் சாக்கரம் ஓதினால் அருள் பெறமுடியாது அருள்நாட்டம் தேவையென்றால் "சிவாயநம" என்ற சூக்கும் (நுண்மை) பஞ் சாக்கர் ஓத வேண்டும்.

அருளாளர்கள் அனைவரும் தூலபஞ் சாக்கரமும் சூக்கும பஞ்சாக்கரமும் ஓதி பயனைப் பெற்றனர். இருவகைப் பஞ்சாக்கரத்தால் மிகவும் நுணுக்கமாக ஆராயுமிடத்து "நமசிவாய" என்று ஓதுமிடத்து இறைவனைப் போற்றி புகழ்ந்துள்ளனர். சிவாயநம எனப்படும் இடங்களில் தாம் பெற்ற பேற்றைக் கூறும் அனுபவங்கூறும் இடங்களாக விளங்குவதையும் காணலாம்.

"நானேயோ தவம் செய்தேன் "சிவாயநம" எனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்

Koviloor Digital Library

தானேவந்து எனதுள்ளம் புகுந்து அடியேற்கு அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே
- 553 என்று திருவாசகம் ஓதுகிறது. மேலும் திருவருட்பாவில் நான் செய்த புண்ணியம் யாதோ "சிவாய நம" எனவே

"நான் செய்த புண்ணியம் யாதோ "சிவாய நம" எனவே
ஊன் செய்த நாவைக்கொண் டோதப் பெற்றேன் எனை ஒப்பவரார்
வான் செய்த நான்முகத் தோனும் திருநெடு மாலுமற்றைத்
தேன் செய்த கற்பகத் தேவனும் தேவருஞ் செய்யரிதே"
- 2260

என்னும் வள்ளற்பெருமானின் திருவருட்பாவும் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு மேற்கோளாகும்.

இதனால் நாம் அறிவது "நமச்சிவாய" என்பது தோத்திரமாகவும், சிவாயநம என்பது சாத்திரமாயும் (அகயனுபவமாகவும்) நமது அருளாள ஆன்றோர்களின் நடைமுறையில் காணப்பெறுகிறதென்பது துணிபு.

நமச்சிவாய என்பது திருப்பெயராகும். சிவாயநம என்பது மந்திரமாகும். "நாதன் நாமம் நமச்சிவாயவே" நம்பன் நாமம் நமச்சிவாயவே" போன்ற அருள் வாக்காக விளங்கும் சுந்தரரின் துணிவு. மேலும் "நாதன் தன் நாமம் நமச்சிவாயம் காண் நாம் பெறும் துணையே" நாலு மாமறைப் பொருள் நாமம் நமச்சிவாயம் காண் நாம் பெறும் துணையே "முதலிய வள்ளற்பெருமானின் திருவருள் வாக்காலும் காண்க. இவற்றால் "நமச்சிவாயம்" என்பது இறைவனின் திருப்பெயராகும் என்பது வெள்ளிடையாகும். திருவாசகத்தில் "நமச்சிவாய வாஅழ்க" என்பது அவன் திருநாமத்தை வாழ்த்தியது. "நானேயே தவஞ்செய்தேன் "சிவாயநம" எனப் பெற்றேன். என்பது அவன்திரு அவன் திருமந்திரத்தைக் கூறியது. "நமசிவாயம்" எனப் பெயரிடப் பெற்றோர் மிகப் பலராவார். "சிவாயநம" எனப் பெயரிடப் பெற்றவர்கள் யாரும் இல்லாதது வெள்ளிடையாம். நமச்சிவாயம் நமச்சிவாயம் எனப் பெயரிடுவது பெரு வழக்காகும். சிவாயநம எனப் பெயரிடுவதே இல்லை. இறைவன் திருப்பெயர் மக்கள் தமது பெயராக வைத்துக் கொள்வது வழக்கு. மந்திரத்தைப் பெயராக வைத்துக் கொள்வது வழக்கத்தில் இல்லை. இதுவரை நாம் கண்ட ஆய்வில்

நமசிவாய என்று கூறுவது பெயர்
சிவாயநம என்று ஓதுவது மந்திரம்
நமச்சிவாய என்று கூறுவது வேதமுயையாகும்.
சிவாயநம என்று ஓதுவது ஆகம முறையாகும்.
நமச்சிவாய என்றால் சமயகுரு செவியுரை செப்புதல்
சிவாயநம என்றால் ஞானகுரு செவியுரை செப்புதல்
நமசிவாய என்பது சாதாரண பக்குவர்களுக்கு உரியது
சிவாயநம என்பது தீவிர பக்குவர்களுக்கு உரியது.

நமசிவாய என்று ஓதுவது இம்மை மறுமைப் பயன்களை வழங்குவது — கருமசித்தி — சிவாயநம என்று ஓதுவது முத்திப் பயனை வழங்குவது ஞான சித்தி நமச்சிவாய என்று ஓதுவது தோத்திரத்துக்குரியது. சிவாயநம என்று ஓதுவது சாத்திரத்திற்குரியது (அகஅனுபவம்) என்று மிகத் தெளிவாகிறது. நமசிவாய என்று வழங்குவது திருஆவடுதுறை ஆதின வழக்காகும். சிவாயநம என்று வழங்குவது தருமபுர ஆதீன வழக்காகும். காரண பஞ் சாக்கரம்:

சிவாய நம வெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே யடிமைய தாக்கி
சிவாய சிவ சிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெட நிற்க ஆனந்த மாமே - 2718

உயிரைக் குறிக்கும் யகரம் நடுவில் நிற்கப்பதி எழுத்தும் அருளெழுத்துமாகிய சிகர — வகரங்கள் (சிவ) முன்னும் பின்னுமாக இருபுருமும் நிற்கச் "சிவயசிவ" என்று ஓதுவது காரண பஞ்சாக்கரமாகும். "சிவயவசி" என்பது ஒரு முறையாகும். "சிவயசிவ" என்பது வேறொரு முறையாகும். சிவயசிவ என்று கூறுப்படும் ஐந்தெழுத்தில் சிகரம் — வகரம் முன்புறமும் பின்புறமும் எதர் நிரனிறையாக நிற்கிறது. சிவயவசி என்ற பஞ்சாக்கரத்தில் யகரத்திற்கு முன்

Koviloor Digital Library

வகாரமும் பின் அதே வகாரமும் நிற்க முதலில் சிகாரமும் இறுதியில் அதே சிகாரமும் நிற்கிறது. இந்த காரண பஞ்சாகக்ரம் அதி சூக்கும பஞ்சாக்கரம், முத்தி பஞ்சாக்கரம் எனப்பெறும். உயிர் நடுவே நிற்க சிவமும் சக்தி என்றும், முதலும் இறுதியிலும் இரண்டு சிகரங்கள் நின்று யகரம் நடுவில் நிற்க இடபுறமும், வலபுறம் சக்தி நிற்க இதற்கு இருதலை மாணிக்கம் என்று கூறுவர். இவ்விருவிதமும் அதிசூக்கும பஞ் சாட்சரம் என்றும், முத்தி பஞ்சாட்சரம் என்று ஓதப்படுகிறது.

"ஒருதலை மாணிக்க முன்ன ரெனக்குப்
தேசஞ்செய்தான்
இருதலை மாணிக்கம் பின்னரும் பேசி இருளறுத்தான்
இரிதலை மற்றை அயன்தலை சூட்சிய கங்கையின்மூ
எரிதலைச் சூலத் தொடுநடிப்பான் கஞ்சி ஏகம்பனே
கண்ணுடைய வள்ளலார்.

காரண பஞ்சாக்கரத்தில் நகர மகர (திரோதமும் — மலமும்) இல்லை. சிகர வகர யகரங்களே (சிவம் — சக்தி — ஆருயிர் இம்மூன்றுமே) உள்ளன. உயிர்நடுவில் இருக்கிறது. சிவமும் சத்தியுமாகிய சிகர வகரங்கள் அதன் இருதலையும் இருக்கின்றன. உயிரானது நகர மகரங்களாககிய திரோத மலங்களின் செயலை நீக்கி வகரமாகியுள்ள அருட்சக்தியின் வழியே சிகரமாகிய சிவத்தை அடைவதே பஞ்சாக்கர உண்மையான அகஅனுபமாகும்.

ஒருதலை மாணிக்கம் = சிவயசிவ
இருதலை மாணிக்கம் = சிவயவசி

மேற்கண்ட காரண பஞ்சாக்கரம் பசுபதியாக விளக்கப் பாடலொன்றும், கண்ணுடைய வள்ளலார் பாடலொன்றும் மிகவும் தெளிவாகவும் அற்புதமாகவும் விளக்கும்முறை மிகஅழகாகச் செப்புகின்றன.

நகரமாகிய சேரியை நஞ்சென வெறுத்து
மகர மாகிய மயலெலாம் வேரொடு மறுத்து
வகர மாகிய வனத்தினீ விருத்தினைப் பாறிச்
சிகர மாகிய நகரினை யடைந்தனன் சீவன். - பஞ் சாக்கர பதிபசுபாச விளக்கம்.

"அஞ்சக் கரமன்றி வேறொரு மந்திர மாயினில்லை
அஞ்சி விறையரு ளாவி திரோதைகில் லாணவமற்
றஞ்சி லிரண்டை அருளா லகற்றிடி லாவியந்த
அஞ்சி லிரண்டை அணையு மென் றான்கச்சி
ஏகம்பனே - கண்ணுடைய வள்ளலார்.

ஐந்தெழுத்தில் இரு வித மல எழுத்துக்கள் அருளால் நீக்கினர் அந்த ஆவியானதை அந்த ஐந்தெழுத்தில் இரண்டெழுத்து சேரும் என்று கூறுகிறார். இந்த செய்தியில் அகற்ற வேண்டிய இரண்டான நகர மகரமாகும். பொருந்த வேண்டிய இரண்டு சிகர வகர யகரமாகிய உயிரானது 'நம' வை அகற்றி சிவவைப் பொருந்த 'சிவய' வாய்த் திகழ வேண்டும்.

சிவாய என்னும் இக்காரண பஞ் சாட்சரம் அப்பர் பெருமானால் அருளப் பெற்ற அடங்கன் முறையில் நடுவில் "தமிழ்வேத இருதயமாக"த் திகழ்கின்றது

"விண்ணி னார் பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி னார்மற வாது "சிவாய" வென்
றெண்ணி னார்க்கிட மாவெழில் வானகம்
பண்ணி னாரவர் பாலைத் துறையரே - 5742

அப்பர் திருப்பாலைத்துறைக் குறுந்தொகை.

திருமூலர் திருமந்திரத்தில் "சிவாய" என்ற காரண பஞ்சாக்கரத்தின் செய்தியும் ஓதுவது சிறந்தது.

"ஆறா றகன்று நம விட் டறிவாகி
வேறான தானே யகாரமாய் மிக்கோங்கி
ஈறார் பரையின் இருளற்ற தற்பரன்
பேறார் "சிவாய" அடங்கும்பின் முத்தியே - 2991

அடுத்து வரும் பாடலில்,

ஓதிய "நம்மலம்" எல்லாம் ஒழித்திட்டவ்
வாதி தனைவிட டிறை யருட் சத்தியால்
தீதில் சிவஞான யோகமே சித்தக்கும்
ஓதும் "சிவாய" மலமற்ற உண்மையே - 2712

அடுத்து வரும் பாடலில் அனுபவ நிலை கூறுகிறது.

ஆனந்த மூன்றும் அறிவிரண் டொன்றாகும்
ஆனந்தஞ் "சிவாய" அறிவார் பலரில்லை

Koviloor Digital Library

ஆனந்த மோடும் அறிய வல்லார்க்கு
ஆன்ந்தக் கூத்தாய் அகப்படுந்தானே - 892

மேலும் சிவாய என்று ஓத வேண்டுமென்றும் அப்படி ஓதினால் பெரும்பலன்கள் யாவை என்றும் கீழ்வரும் திருமந்திரப் பாடலால் அறிக.

"சிவாய வொடவ்வே தெளிந்துள்தோதச்
சிவாய வொடவ்வே சிவனுரு வாகுஞ்
சிவாய வொ டவ்வுந் தெளிய வல்லார்கள்
சிவாய வொ டவ்வே தெளிந் திருந்தாரே - 991

மகாகாரண பஞ்சாக்கரம்:

முதலில் சிவாயநம பஞ்சாக்கரம் ஓதினோம். அடுத்து சிவாயசிவ என்றும், சிவயவசி என்றும் ஓதவேண்டும் என்று அறிந்தோம். பின்பு சிவாய என்று ஓத வேண்டுமென்று தெளிந்தோம். எவ்வாறு ஓத வேண்டுமென்று திருமூலர் வரிசைப்படுத்தி கூறும் முறை மிக பெருமையுடையது. காண்க.

"சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே யடிமைய தாக்கி
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெட நிற்க அனந்த மாமே" - 2718

முதலில் சிவாயநம. பின்பு சிவாய சிவ. அதன் பின்பு சிவாய, அடுத்து சிவசிவ என்று ஓதும் மறையகம் அறிவுறுத்துகிறார்.

காரண பஞ்சாக்கரமாகிய சிகரவகர யகரங்களுள், யகரமாகிய உயிர் (ஆன்மா) வகரமாகிய திருவருளால் ஒன்றுபடடு இயைந்து நிற்க, சிவமாகிய சிரகம் திருவருளாகிய வகரம் இவ்விரண்டு மட்டுமே "சிவ" விளங்கி நிற்பதே மகா காரண பஞ்சாக்கரம் என்பர்.

சிவ சிவ என்றே தெளிகிலர் ஊமர்
சிவ சிவ வாயுவும் தேர்ந்துள் அடங்கச்
சிவ சிவ வாய தெளிவினுள் ளார்கள்
சிவ சிவ வாகும் திருவரு ளாமே - 2715

சிவசிவ என்கிறலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவார்
சிவசிவ என்னச் சிவகதி தானே - 2716

என்று திருமூலப் பெருமகனார் தமது திருமந்திரம் 3000&த்தில் சிறப்பித்து ஓதுகிறார்.

மகா மனு:

மகாகாரண ஐந்தெழுத்தில் சிகரவகரம் ஆக இரண்டினுள் வகரமாகிய திருஅருளையும் தன்னிடத்து ஒன்றியப்படுத்தி இணைத்துக் கொண்டு 'சிகரம்' மட்டும் தனித்து நிற்பது தான் மகாமனு என்பர். 'சி' என்பர்.

மேற்கண்ட 'சி என்று ஓதப்படும் பஞ்சாக்கரத்திற்கு நாயோட்டு மந்திரம் என்றும், பெருஎழுத்தென்றும், பேசா எழுத்தென்றும் கூறப்படும்.

"நாயோட்டு மந்திரம்" நான்மறை வேதம்
"நாயோட்டு மந்திரம்" நாத னிருப்பிடம்
"நாயோட்டு மந்திரம்" நாதாந்த சோதி
"நாயோட்டு மந்திரம்" நாமறி யோம் - 3051
திருமந்திரம் - 3000.

நாயோட்டும் மந்திரம் என்பது பரிபாடையாகும். சீ என்பது நாயை ஒட்டுவது (துரத்துவது) வழக்கு. ஆதலின் "சிகாரம்" நாயோட்டு மந்திரம் எனப் பழமொழியில் குறிப்பிடப் பெற்றது.

"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் நெஞ் சமுத்திப்
பேசும் எழுத்துடன் பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி"

என்னும் உமாபதி சிவனார் கொடிக்கவியில் பெருவெழுத்து பேசாவெழுத்து எனப்படுவது சிகாரமே.

திருமூலர் திருமந்திரம் 3000த்தில் ஓர் எழுத்தின் சிறப்பை கூறும் திருமந்திரம் பாடல் காண்க.

"போற் றுகின் றேன் புகழ்ந் தும்புகல் ஞானத்தை
தேற்று கின் றேன் சிந்தை நாயகன் சேவடி
சாற்று கின் றேன் அறை யோ சிவ யோகத்தை
ஏற்றுகின் றேன்நம் பிரான் ஓர் எழுத்தே - 884 -
பிரான் ஓர் எழுத்து - சிகரம்

Koviloor Digital Library

அங்கமும் ஆகம வேதம் தோதினும்
எங்கள் பிரானெழுத் தொன்றில் இருப்பது
சங்கை கெட்டவவெழுத் தொன்றையுஞ் சாதித்தால்
அங்கரை சேர்ந்த அருங்கலமாமே - 2720.

பிரான் எழுத்து ஒன்றில் = சிகாரம்

வகாரத்திற்கு = பிஞ்சு எழுத்து, பேசும் எழுத்து, விட்ட எழுத்து என்று ஓதப்படுகிறது.

சிகாரத்திற்கு = பெரிய எழுத்து, பேசா எழுத்து, விடாத எழுத்து என்று ஓதப்படுகிறது.

இப்பேசாப் பெரு வெழுத்தின் பெருமையின் சிறப்பியல் பண்புகள் வள்ளற் பெருமான் அதன் சிறப்புக்களையும் பெருமைகளை விளக்கியிருப்பது உணரத்தக்கது.

சிவம் – சிவ – சி = வள்ளலார் விளக்கம்:

சிவம் — சிவ — சிவ இந்த மூன்று எழுத்திற்கு வள்ளற் பெருமான் அருளிய விளக்கம் சன்மார்க்க அன்பர்களால் கீழ்வருமாறு குறிப்பெடுத்து வைத்து பாதுகாக்கப்பட்டுள்ளது.

சிவம்: என்பதற்குப் பொருள் சச்சிதானந்தம். சச்சிதானந்தம் என்பது சத்து, சித்து, ஆனந்தம். இதில் சிகரம் சத்து,, வகரம் சித்து, மகரம் ஆனந்தம். சிகரம் எல்லாம் உள்ளதாய் விளங்குகிறது. வகரம் எல்லாம் விளங்குவதாய் உள்ளது. மகரம் இரண்டினாலும் நிரம்பிய இன்பம்.

சிவ:

சிவ என்பதற்குப் பொருள் அனாதியாய் மலமில்லாத சர்வ வல்லமையுடையது.

சி = என்பதற்குப் பொருள் அனாதியாய் மலமில்லாதது.

வ = என்பதற்குப் பொருள் சர்வ வல்லமையுடையது.

சி:

மேலும் 'சி' என்னும் எழுத்திற்குப் பொருள் ஒருவாறு இதிலடங்கி பீஜம் — ஐந்து. அவையாவன, தோன்றி அசைதலகிய விந்து ஒன்று. அதன் புடைபெயர்ச்சி ஒலியாகிய நாதம் இரண்டவது அதன் வண்ண வடிவமாகிய வரி அக்கரத்தின் சகர மெய்யென்னும் 'ச்' மூன்றாவது. அதனது குணங்களை வெளிப்படுத்தும் ஆதி அக்கரமாகிய பிரணவ மூல அக்கரம். நான்காவது இதைத் தன் வண்ணச் சுபாவத்தோடு வெளியில் தோன்றச் செய்வித்து விளக்கும் அருட்பிரணவமாகிய இகரம் ஐந்தாவது.

ஆகக்கூடிய விந்துக்களைந்தும் ஒருருவமாயச் சிகர — மாயிற்று. இதன் இலக்கணம் விரிக்கிற் பெருகும். அனுபவத்தால் அறிக.

பெருமானது இவ்வுப தேசத்தையே வேறு ஒருவர் குறித்து வைத்துள்ளது வருமாறு:

சி = சி என்னும் எழுத்திற்குப் பொருள். இதன் பீஜாக்ஷரம் ஐந்து, அவையாவன,

இவைகூடிய சிகரமாகிய, ஓர் உருவம். இதற்குப் பொருள் சுத்த சன்மார்க்க காலத்தில் வெளிப்படும்.

வள்ளலார் உபதேசக் குறிப்புகள் திருஅருட்பா — உரைநடை பகுதி பக்கம் 282 — 3

வள்ளற் பெருமானது மேற்படி உபதேசத்தைக் கீழ்வருமாறு வரிசைப் படுத்திக் கொள்வது விளக்கத்திற்கு எளிதாக அமையும்.

சிவம்: சிவம் – சச்சிதானந்தம்

சி — சத்து
வ — சித்து
ம — ஆனந்தம்
சி — எல்லாம் உள்ளதாய் விளங்குவது — சத்து
வ — எல்லாம் விளங்குவதாய் உள்ளது — சித்து
ம் — இரண்டாலும் நிரம்பிய இன்பம் — ஆனந்தம்

சிவ: சிவ எஎன்பது அனாதியாய் மலமில்லாத சர்வ வல்வப முடையது.

Koviloor Digital Library

சி = அனாதியாய் மலமில்லாதது.

வ = சர்வ வல்லப முடையது.

சி: இதன் பீஜம் — ஐந்து

1. விந்து = தோன்றி அசைதல்

2. நாதம் = புடைப் பெயர்ச்சி

3. ச் = சசர மெய்.

அ = பிரணவ மூல அக்கரம்
இ = அருட் பிரணவம்.
விந்து + நாதம் + ச் + அ + இ = சி

பஞ்சாக்கரம் = வள்ளற்பெருமான் விளக்கம்:

பஞ்சாக்கரத்தின் விளக்கம் வள்ளற் பெருமான் அருளியவாறு வருமாறு.

சமய சூக்குமபஞ்சாக்கரத்தின் தாத்பரியம் நான்கு மேற்படி அக்ஷரம் ஐந்து. சிவாயநம:

இதற்குத் தாத்பரியம் நான்காவன:

பூர்வம், பூர்வபூர்வம், உத்தரம், உத்தரோத்தரம் அக நான்கு.

இதில் பூர்வத்திற்கு அர்த்தம் சிவனை நமஸ்கரிக்கிறேன்.

பூர்வ பூர்வத்தற்குத் தாத்பரியம்: அனாதியில் மலமில்லாதது. எல்லாமுடைய சிவத்திற்கு என்னுடைய கரண உள்ளங்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

மற்ற இரண்டிற்கும் அர்த்தம் அனுபவத்தில் தெரியலாம். இதுபோல் மத சன்மார்க்கத்திற்கு மேற்படி அக்ஷரம் அதற்கும் முன்போலவே நான்கு தாத்பரியம் உள்ளது.

அதில் பூர்வத்திற்குத் தாத்பரியம்:

சி = என்பது பதி

வா = என்பது சக்தி

ய = என்பது ஜீவன்

ந = என்பது திரோதை

ம = என்பது மாமாயை

ஆதலால் மாமயை திரோதை நீங்கி ஜீவபோதமற்று அருள் வடிவாய்ச் சிவமானது.

பூர்வ பூர்வத்தின் தாத்பரியம்:

சி = என்பது எல்லாமுடையது.

வா = என்பது அபிந்நமாகிய அருள்

ய = என்பது ஆன்மசிற்சவை

ந = என்பது சீவன்

ம = என்பது பசு.

ஆதலால் பசுத்தன்மை கெட்டு, ஜீவபோதம் போய், ஆன்ம வியற்கை வடிவாய்ச் சத்துவமயமாய் எல்லாமுடையதுவாய்ப் பூரணமாய் நிற்றல், ஒருவாறு:

அனுபவத்தில், பரவிந்து பரநாதம் பரத்திலும், அபரவிந்து மூலமாய்க் கரணசுத்தி வந்து, அக்ஷரமுன்னு தலைவிட்டு, அறிவாகிருதியாய், கருணையும் சிவமும் பொருளேனும்படி நிற்றற்கு முதற்றுவாரமாம்.

மற்ற உத்திரத்தில் ஏமசித்தியும், உத்தரோத்தரத்தில் தேகமுத்தியும் சொல்லும். இது மதசன்மார்க அனுஷ்டானம். இதேபோல் சமயத்திலும் தேகசித்தியும் ஏமசித்தியுமுள் மேற்குறித்த சமய மதங்களில் அளவு அனந்தகோடி. அந்த சித்திகள் யாவும் அவ்வச் சமயமதங்களின் கர்த்தா மூர்த்தி தலைவன் தலைவி முதலியவர்களின் பதப்பிராப்தி வரையிலும் நிற்கும். ஆதலால் மேற்குறித்த இரண்டு சித்தியும் எக்காலத்தும் அழிவுறா திருப்பதற்காகச் சொல்லுவது சுத்த சன்மார்க்கம் பூர்வோத்தரம். ஏமசித்தி தேக சித்தி ஆகிய இவற்றை மேற்குறித்த சூட்சும பஞ்சாரக்கரத்தில் சொல்லுவதற்கு பிரமாணம்:

"சிவாயநம வெனச் செம்பு பொன்னாயிடும்" "சிவாயநம வனச் சிந்தித்திருப்பார்க்கு அபாய மொரு நாளுமில்லை" ஆதலால் மேற்குறித்த அக்கரத்தை மகான்கள் குழுக்குறியாக வரிவடிவாய் — சுட்டினார்கள். இதை அக அனுபவிகள் தத்துவங்களை அறிந்து அனுசந்தானஞ் செய்வார்கள். சாதகிகளுக்கு நாவினாலுன்னிக் கரண மோய்ந்தால் தத்துவானு சந்தானம்

Koviloor Digital Library

செய்யக்கூடும். உலகில் நாவினாலுன்னத் தங்கள் மனோரதம் சித்திக்கிகும் "வகர வித்தை" உடையவர்கள் மேற்படி அக்கரத்தின் உண்மையைப் பவுநிகம், லோகம் ஒதி லவணம் முதலியவற்றிற் சேர்ந்து வகாத்தை முடிப்பார்கள். "நகர வித்தை" உடையவர்கள் அதுபோலவே அமைத்துக் கொண்டு தேகத்தை நீடிக்கச் செய்வார்கள். ஆதலால் மேற்குறித்த அக்கரங்கள் "பரிபாஷை". இதனது உண்மையாவும் சுத்த சன்மார்க்க சகஜ சாத்திய ஞானானுபவிக்கு விளங்கும்.

உபதேச குறிப்புகள். திருஅருட்பா உரைநடைப்பகுதி பக்கம் - 284.

இவ்வுபதேசத்தை சுருங்க குறித்துள்ள வேறு இரு குறிப்புகள் வருமாறு: ஒரு குறிப்பு:

சமயத்தில் சிவாய நம வென்னும் வாக்கியத்திற்குத் தாத்பரியம் நான்கு வகைப்படும். பூர்வம், பூர்வபூர்வம், உத்தரம், உத்தரோத்தரம்.

பூர்வம்: சிவனை நமஸ்கரிக்கின்றேன் என்பது. பூர்வ பூர்வம்: அனாதயில் மலமில்லாத தாயும் எல்லாமுடைய தாயும் உள்ள சிவத்திற்கு என்னுடைய கரண உள்ளங்களைச் சமர்ப்பிக்கிறேன் என்பது. உத்தரம் — உத்தரோத்தர மென்னும் பொருளுக்கு விபரம் "இனிச்சுத்த சன்மார்க்கத்தில் வெளிப்படும்."

மற்றொரு குறிப்பு: சிவாய நம வென்னும் மந்திரத்துக்கு பொருள் முன்போல் நான்கு வகை. அதில் பூர்வமாவது: சி என்பது பதி. வா — சத்தி. ய — ஜீவன், ந — திரோதை, ம — மாயை. பூர்வ பூர்வமாவது: சி என்பது எல்லாமுடையது. வ என்பது அபின்னமாகிய அருள். ய — ஆன்மாவாகிய சபை. ந — ஜீவன், ம — பசு. உத்திரத்தின் பொருள்: பரவிந்து பரநாதம் பரத்திலும் அபரவிந்து அபரநாதம் பூர்வத்திலும் வழங்கும். "இவ்வளவும் சிவத்தியானமல்ல. தத்துவ அனுசந்தானமே" உத்திரத்தில் ஏம சித்தியும், உத்தரோத்தரத்தில் தேக சித்தியும் சொல்லுவது மத சன்மார்க்க அனுஷ்டானமாம். பஞ்சாக்ஷரத்தில் ஏம சித்தியும், தேகசித்தயும் சொல்லுவதற்கு பிரமாணம்: "சிவாயநம வெனச் செம்பு பொன்னாயிடும்,, "சிவாய நமவெனச் சிந்தித்திருப்பார்க்கு அபாயம் ஒருநாளுமில்லை" ஆதலால் பரிபாஷையால் மறுத்தது. மேற்குறித்த ஏம சித்தியும் தேக சித்தியும் எக்காலத்தும் இருக்கும்படியாக சொல்வது சுத்த சன்மார்க்கப் பூர்வோத்தாம்.

பஞ்சாக்கர சிந்தனையைப் பற்றி வேறு ஒரு உபதேசக் குறிப்பும் ஈண்டு காணத்தக்கது. அதுவருமாறு:

"ஓம் சிவாய நம" என்று சதாசிந்தித்துக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வுலகம் அருட்சத்தி — பொருட்சக்தி — கிரியா சக்தி — யோக சக்தி — ஞானசக்தி மயமாக இருப்பதாகப் பார்த்துக் கொண்டிருத்தல் வேண்டும். யோகம் செய்தல் வேண்டுவதில்லை. அதில் அழுந்தி விட்டால் மீளுவது கஷ்டம். சதாசிவக் கலப்பாய்க் கிடந்தாலும் மீளுதல் அருமை. மூடம் உண்டாகும். உண்மை — உபதேசக் குறிப்புகள். திருஅருட்பா — உரை நடைப்பகுதி, பக்கம் 285.

இதுவரையிலும் ஐந்தெழுத்தின் அருமைப் பெருமைகள் எழுதியதை உணர்ந்திருப்பீர்கள். ஐந்தெழுத்தின் குணங்கள். இயல்புகள், விளக்கங்கள் தெரிவித்துள்ளதை ஊன்றி படித்து உணருங்கள். பருமை — நுண்மை — அதிநுண்மை — மீநுண்மை — மகாரமனு போன்ற ஐந்தெழுத்துக்கள் வகைகள் தெரிந்தவரை அருளாளர்கள் ஓதியுள்ளதை எடுத்துக் காட்டியுள்ளோம். உலகியல் மக்கள் அதில் ஊன்றி படிக்கவேண்டும். அருளியல் மக்கள் படித்ததின் பயனை அடைய அருள்மிகு இறையருள் முன்நின்ற அனைவரையும் முத்தியும் சித்தியும் பெற்று இறைவனருள் திருவடியில் என்றும் உய்ய வேண்டுமென்று வேண்டி இந்த அருமையான இனியச் செய்தியை கனிவுடன் நிறைவு செய்கிறோம்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

11. ஆதி மகா மூலம் (அ) ஓங்காரம்

ஓங்காரம் என்றால் ஆதிமூலம். ஓங்காரம் என்றால் அருட்பதம். ஓங்காரம் என்றால் மூலமந்திரம். ஓம்காரம் பஞ்ச அக்கர மந்திரங்களுள் அரசன் ஓம்காரம் என்றால் மந்திர ராஜம். ஓங்காரம் திருவைந்தெழுத்தின் திறவுக் கோல். ஓங்காரம் பாத தீட்சை ஓதும் மூலமாகும். ஓங்காரம் என்பது பிரணவம்.

சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் என்னும் நூலில், கீழ்வருமாறு ஓதுவதை மானிடர்கள் மதிநுட்பத்தால் அறிய வேண்டும். சொல்லற்ற பிர்மம் என்று கூறுமிடத்து இருந்து மானுடன் ஆழ்நிலை தவம் செய்ய அதனை நுட்பமாக உணரலாம் என்று கூறுகிறார். ஓம் என்பது பிரணவமாக உள்ளயிடம் அண்ட உச்சியாம். உத்தமகுணமுடைய யோகியே அறிக. அதுவே ஆதிமகா மூலமாகும். அதில் அகரம் உகரம் என்ற மூலாங்க பிரணவ அக்கரம், மற்று அருட் பிரணவ அக்கரம் உள்ளதைக் கண்டு சலனமற்ற மனதுடன் மேரு என்னும் நந்தி வாழ்யிடமறிந்து நாட்டத்துடனிருந்து வருவாயாக என்பதைக் குறிக்கும் பாடலைக் காண்க.

"தாமென்ற சொல்லற்றுப் பிர்மந் தன்னிற்
சார்ந்துமிக அனுதினமுந் தவமே செய்து
ஓமென்ற பிரணவமே அண்ட வுச்சி
உத்தமனே ஆதிமகா மூலமாகும்
ஆமென்ற அகாரமுடன் உகாரங் கண்டு
அருளான அருளை யுந்தா னடுத்துச் சென்று
நாமென்ற சொல்லற்ற மேருவிற் சென்று
நந்திதனி லேயிருந்து நாட்டுவாயே - 8

- சுப்பிரமணியர் சிவம் சத்த ஞானம் - 33

மேலும் ஆதி அகத்தியர் தட்சாணாமூர்த்தி என்னும் சித்த சிரோண்மணி தாம் எழுதிய பரிபூரணம் என்னும் நூலில் உச்சமான மாளிகையாகக் கருதப்படும் ஓங்கார நெடுங்கம்பம் அதன் நுனி மிகுதியாகும் என்றும், அதன் உயரத்தில் நின்று பார்த்தபோது அண்டமென்ற சுழிமுனை என்று கூறப்படும் மேலே அந்த ஓங்கார கம்பநுனி கற்பூர தீபம் சுடர்விட்டு ஒளிர்கின்றது. அதுவே சொல்லற்ற சோதியாய்த் திகழ்கின்றது. பிரணவமே சோதியாய் நின்றது. அம்மையே ஆகுமாகும். வாசி என்ற திருவாசி என்று கூறுப்படும் ஓங்காரமே ஆகும். அதன் முனைக் கண்டு அதன்மேல் நுனியில் ஏறினோம் என்கிற பாடலைக் காண்க

"உச்ச மென்ற மாளிகையில் நிறுத்திப் பார்த்தால்
ஓங்காரக் கம்பநுனி மிச்ச மாச்சே - 453

ஆச்சப்பா மிச்சமதாய் நின்ற மிச்சம்
அண்டமென்ற சுழிமுனையிலே நின்று பார்த்தேன்
காச்சப்பா கம்பநுனி மிச்சம் பார்த்தால்
கம்பநுனி கற்பூர தீபம் போலே
போச்சப்பா பேசாதே சோதி யாச்சு
பிரணவமாய் நின்றதொரு சோதித் தாயை
மூச்சப்பா நிறைந்த திருவாசியாலே
முனைகண்டு கம்பமதில் யேறினேனே - 454

தட்சண பகுதி ஆதிஅகத்தியர் பரிபூரணம் - 1200.

திருமூலர் ஞானம் 16இல் விரும்பு கலைகள் அனைத்தும் தானே வழங்கும் பீடமானது ஓங்காரமே ஆகும் என்பதை கீழ்வரும் வரிகளால் உணர்த்தப்படுகிறது.

"நேசாருங் கலைக ளெல்லாந் தானேயாகும்
நிலையான ஓங்கார பீடம் மாகும்" - 6 திருமூலர் ஞானம் - 16

மேலும் கடைப்பிள்ளை மவுன தீட்சையில் ஓங்காரந்தான் ஆதிமுதல் அந்தம் முடிய ஏகமாகி நின்றது. ஆன்மா என்னும் வாசியான மூச்சுக்கு உயிராக நின்ற ஏகாட்சரமே ஓங்காரம் என்பதாகும் என்பதைக் கீழ்வரும் அவருடை அனுபவப் பாடலைக் காண்க.

"ஆச்சப்பா கம்பமென்ற ஓங்காரந் தான்
ஆதி தொடுத் தந்தம் வரை ஒன்றாய் நின்று

Koviloor Digital Library

காச்சப்பா முச்சதற்கு உயிராய் நின்ற
கருணை யட்சரமே காட்சர மதாச்சு" -5

கடைப்பிள்ளை மவுன தீட்சை - 12

ஆதி அகத்தியருமானவரும் சுப்பிரமணி சிவம் அவரின் முதல் மாணவருமானவர் இவர் தாம் இயற்றிய நூல் சௌமிய சாகரத்தில் ஓங்காரத்தைப் பற்றி மிகவும் தெளிவாக ஓதுவதைக் காணலாம்.

ஓங்காரமே ஆதிப்பொருளாகும். புவனங்கள் அனைத்திலும் ஓம்சக்தியாக விளங்குகிறது. அந்த சக்தியே எங்கும் பரந்து நிறைந்து ஊடுருவி நின்று ஏழுகோடி மந்திரங்களுக்கு உயிராக நிற்கிறது. வரிவடிமானதும் ஓங்காரந்தான். அடிமுடியாக நின்றதும் ஓங்காரந்தான். ஓங்காரமே ஏழுவகை தோற்றத்துக்கும் காரணமாயிருப்பதும் அதுவேயாகுமென்பதை கூறும் பாடல் காண்க.

அடுத்து வரும் பாடலில் ஏழுவகை தோற்றத்திற்கு வடிவம் தருவதும் ஓங்காரமாகும். வேதங்கள் — சாத்திரங்கள் — தவங்கள் — யோக நாட்டம் ஆக இவைகள் செயல்படுகிற. கௌன முதல் வசிய மாற்றங்கள் — வாத வேதியியல் — மருத்துவங்கள் எல்லாம் குருவாக இருப்பதும் ஓங்காரத்தின் குறியீடாகும். இதனை கீழ்வரும் பாடலால் அறிக.

"ஓமென்றார் பிரணவமே ஆதிவஸ்து
உலகமெல்லாந் தானி றைந்த ஓம்சக்தி
தாமென்ற சக்தியடா எங்குந்தானாய்ச்
சதகோடி மந்திரத்துக்கு உயிராய் நின்று
ஆமென்று வாடினது ஓங்காரந் தான்
அடிமுடியாய் நின்றதுவும் ஓங்காரந்தான்
நாமென்ற ஓங்காரந் தன்னிலேதான்
நாடி னின்ற எழுவகையும் பிறந்தவாறே - 186

வாறான எழுவகையின் தோற்ற மெல்லர்ம்
மகத்தான ஓங்கார வடிவுமாச்சு
பேரான வேதமொடு சாத்திரங்கள்
பெருகி னின்ற மந்திரங்கள் அட்டகர்மம்
நேரான செப தபங்கள் யோக நிட்டை
நின்றி லங்கும் கௌனமுதல் வசிய மாற்றம்
கூறான வாதமொடு வைத்திய மெல்லாம்
குருவான ஓங்காரம் ஓம் பிரதானம்
கருணை வளர் ஆதாரமூல பீடம்
தோணவே மூலமென்ற ஆதாரத்தில்
துலங்கி னின்ற ஆவியடா வாசியாச்சு
பேணவே ஆவியென்ற வாசி யேறி
பெருகி னின்ற ஆதாரங் கடந்தப்பாலே
பூணவே ரவி மதியின் சுடரிற் சென்று
புத்தியுடன் பூரணமாய்த் தீபம் பாரே - 188.

பாடல் 188இல் ஓங்காரமானது ஓம் என்பது தலைவாசலாகும். கருணையின் மிகுதியால் ஆதாரங்களுக்கெல்லாம் பீடமாக விளங்குகிறது. ஆதாரங்களில் எல்லாம் நின்று வரும் வாசியானது ஆவியாகும். மிகவும் காத்து நின்ற ஆவியான வாசியில் ஏற்றி ஒவ்வொரு ஆதாரங்கடந்து நின்றபோது சூரியன் சந்திரன் — வன்னியில் கலந்து நின்று பூரணம் என்ற பீடத்தில் தீபமாக திகழும் என்பதாம் என்று ஆதி அகத்தியருமான தென்னாட்டு சித்தரான தட்சணாமூர்த்தியாய் விளங்கும் அவரே கூறி போந்தார்.

மச்சமுனி சித்தர் இயற்றிய காரண ஞானம் — 10இல் ஓங்காரம் என்பது என்னவெனில் என்று கேட்டால் உகாரம், மகாரம், அகாரம் ஆக மூன்றும் இணைந்ததே ஓங்காரமாகும். இந்த கருவின் நுட்பத்தை தன்னுடைய குரு கூறினார் என்று மச்சமுனி கூறுகிறார். அகாரம், உகாரம் சேர்ந்த நிலையே வன்னியாகும். இந்த வன்னியே மகாரமாகும். இந்த மகாரம் கேசரி என்ற வாலையைக் காட்டித் தரும். இதற்கு சச்சிதானந்தம் என்ற மவுனமென்று கூறுவர். இக்கருத்தைக் கூறும் பாடலைக் காண்க.

"ஓங்கார மாவ தென்ன வென்று கேட்கில்
உகார மொன்று மகார மொன்று அகார மொன்று
பாங்காக நின்ற பிரணவமே யாச்சு
பாரிந்த கருவல்லோ ஆசான் சொன்னார்.
வாங்காத அகார உகாரத்திற் சேர்ந்து
வன்னி நின்ற இடமல்லோ மகார மாச்சு
தாங்காதே உரைக்கிற் கேசரியைக் காட்டும்
சச்சிதா னந்த மென்றமவுனந்தானே - 1- மச்சமுனி

Koviloor Digital Library

சித்தர் காரணந்தானே - 10

சுப்பிரமணியர் சுத்த ஞானம் — 20இல் அகாரம் உகாரம் எட்டும் இரண்டும் என்பர். இதுவே பாத தீட்சை என்பர். மகார மென்றது மவுனமாகும். இதுவே வாலையாகும். மேலும் இந்த பாத தீட்சை அறியாதவர்கள் குற்றம் குறையுள்ளவர்கள். இதனால் பரப்பிரமம் என்றும் திருவடியை காணார்கள் என்பதைக் கூறும் பாடல் காண்க.

"அகாரமென்ற உகாரமடா யெட்டிரண்டு
அடங்கியது மொன்றான பாத தீட்சை
மகார மென்ற மவுனமடா வாலை வாலை
மகத்தான ஆவியடா யேக மாச்சு - 12
பாரடா எட்டிரண்டு மறியாத் தோசி
பரப் பிரமந் தன்னுடைய பாதங்க காணார். -17

சுப்பிரமணியர் சிவம் சுத்தஞானம்— 20

சச்சிதானந்தர் இயற்றிய சுழிமுனை சூத்திரம் என்னும் நூலில் உயிரெழுத்துக்கள் தோன்றும் முறை கூறுகிறார். அவ்வாறு கூறும் நிலையில் ஆ — ஈ — ஊ — ஏ — ஓ என்று ஐந்தாகத் தோன்றியது. அதில் ஓங்காரத்திலிருந்து அகாரம் தோன்றியது. அடுத்து உகாரம் தோன்றியது. அதற்கடுத்து மகாரம் தோன்றியது. பின் நாதம் — விந்தாகி ஓங்கார பஞ்சாக்கரமாக நிலைக் கொண்டது. ஓம் என்பது தொகுப்புவாகும். அ + உ + ம + விந்து + நாதம் ஆக பகுத்து கூறுவதாகும். சமட்டிப் பிரணம் அடுத்து வியட்டி பிரணவமாகும். அகரம், உகரம், மகரம் ஆக இவ் மூன்றும் ஓங்காரம். எழுத்து வடிவம் எழுதும் போது விந்து என்பர். ஒலிவடிவம் உணரும் போது நாதம் என்பர். ஓங்காரத்தின் வரிவடிவம் விந்து. ஒலி வடிவம் நாதமென்பர். அதற்குரிய பாடலைக் காண்க.

"காணப்பா அதிற் பிறந்த அட்சத்தைக்
கருத்துறவே பிரிந்து யான் சொல்லக் கேளு
ஆணப்பா ஆ - ஈயும் - ஊவ்வும் - ஏயும்
ஆத்தமாய் ஒவ்வுமது அஞ்சுமாகி
பேணப்பா அதிலிருந்து அகாரந் தோன்றி
விலத்த உகாரந் தனிலே மகாரந் தோன்றி
நீணப்பா பஞ்சாக்கர நாதவிந்தாய்
நின்ற சிவபஞ்சாட்சரத்தின் நிலைமைக் கேளே - 30

சச்சதிதானந்தர் சுழிமுனை சூத்திரம் — 31

கௌசிக முனிவர் எழுதியுள்ள ஞான நுட்பம் 30இல் அகாரம் கருவாகும். அதுவே விந்தாகும். அகாரமே தாய்— தந்தையாகும். அதுவே ஞானக்கல்வியை கற்பிக்கும். அகாரம் கண்ணுக்கு எட்டாத பொருளாகும். அகரமே மதியாகும். விதியுமாகும். அகாரம் அகண்ட பர வெளியாகும். அகரமே ஆசானும் — மாணவனுமாகும். அகாரமே செவிவுரை செப்பும் மொழியாகும் என்ற கருத்தை கூறும் பாடல் காண்க.

"அகார மல்லோ கருவுடனே விந்துமாச்சு
அகார மல்லே அன்னையொடு தந்தையாச்சு
அகார மல்லோ ஆடுகிற வித்தை யாச்சு
அகார மல்லே கண் காணா தெட்டாதாச்சு
அகார மல்லே மதியுடன் விதியுமாச்சு
அகார மல்லோ அகண்ட பரவெளியுமாச்சு
அகார மல்லோ குருவுடனே சீடனாச்சு
அகார மடாவுபதேச பொருளுமாச்சே - 2

கௌசிக முனிவர் சுத்தஞான நுட்பம் — 30

மேலும் அகத்தியர் பரிபூரணம் என்னும் நூலில் அகாரத்தின் பயன்கள் ஓதுவதும் காணலாம்.

"இருந்த நிலை பெறுத் தகாரத்தினாலே
யேகாந்த மானதுவும் அகாரத்தாலே
அருந்தவசு ஆனதுவும் அகாரத்தாலே
அட்டாங்க யோகமது அகாரத்தலே
வருந்தி நின்ற வாசியது அகாரத்தாலே
மருவி நின்ற சிலொம்பொலியும் அகாரத்தாலே
பொருந்தி நின்ற தீபமதும் அகாரத்தாலே
பூரணமாய் நின்றதுவும் அகாரத்தாலே - அகத்தியர் பரிபூரணம் - 1000

மேற்கண்ட பாடலில் அகத்தியர் அகரம் அறிய வேண்டுமென்றும், அந்த அகாரமே இருந்த நிலைக்காட்டக் கூடியது. ஏகாந்த நிலை தருவதும் அகாரமேயாகும். அருந்தவம் செய்ய தூண்டுவதும்

Koviloor Digital Library

அகாரமாகும். அட்டாங்க யோகம் அறிவிப்பதும். அகாரமாகும். வாசியின் நிலையும் அதன் போக்கும். அதனால் ஏற்படும் மனசஞ்சலங்கள் அகாரம் தான். அந்த அகாரமே மருவிநின்று மேல் மூலத்தின்கண் எடுத்துச் சென்று அங்கு நாத ஒலியை கேட்க செய்வதும் அகாரம்தான். மானுடனுக்கு சோதி வடிவம் உண்டாவதும் அகாரம்தான். பூரணம் என்னும் அந்தம் நிலை பெறுவதும் அகாரமே ஆகும் என்று ஓதப்படுகிறது.

சுப்பிரணமணியர் சிவம் இயற்றிய சுத்தஞான தீட்சை 16இல் முத்தி கொடுப்பது அகாரம் என்றும், அதுவே சூரியன் — சந்திரன் — வன்னி என்ற முப்பொருளாகவும் முக்கோணமாகவும் நின்றது அகரமாகும் என்றும் கூறுகிறார். அவருயை ஞானவரிகள் காண்க.

"முத்தியடா பிரமமே றம்மென்றாச்சு
முக்கோண ரவி - மதி - யக்கினி யுமாச்சு" - 15

சுப்பிரமணியர் சுத்தஞான தீட்சை — 16

சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் 2 என்னும் பாடல் கொண்ட நூலில் அகாரம் மூலம் என்றும், உகாரம் விந்து என்றும், மகாரம் சக்தி என்றும் கூறுகிறார். மேலும் ஓங்காரம் நடுவிலாகும் என்றும் ஊமை என்ற எழுத்தை கண்டுதேறு என்றும் கூறும்பாடல் காண்க.

கேளப்பா உகாரமது விந்து வாகும்
இருபையுள்ள மகாரமது சக்தியாகும்
ஆளப்பா அகாரமது மூலமாகும்
நல்லதொரு ஓங்காரம் நடுவிலாகும்
வாளப்பா ஊமை யென்ற எழுத்தைக் கண்டு
வளமாகத் தெரிந்துக் கொண்டால் ஞானந்தானே
- 2

சுப்பிரமணியர் சிவம் சுத்தஞானம் - 2

அகத்தியர் இயற்றிய சுத்த ஞானம் — 40 என்னும் நூலில் ஆதிமகா மூலமான ஓங்காரத்தை கூறுவேன் கேளு. முச்சந்தி வீதியில் அது ஊமையாச்சு. அதற்கு பாலமாக அமைந்த இரண்டு எழுத்து தமிழ்மொழியானது. அதுவே பரவெளியின் கண் சக்தி சிவமாக வெளிப்பட்டது.

மேலும் அகத்தியர் சுத்தஞானம் 30இல் அகாரம் சிவ மாச்சு என்றும், உகாரம் சக்தியாச்சு என்றும், இவைகள் இரண்டும் கூடியதும் மகர என்ற மவுன மூலமாச்சு என்றும், அகாரமும் உகாரமும் மருவி பாய்ந்து தொன்றாய்க் கலக்க பிரணவப் பொருளானது என்றும், அந்த பிரணவமே தீட்சை விதியாகவும் நின்றது என்றும், அந்த ஓங்காரப் பொருளேமாசு மருவு இல்லாத மனம்படைத்த நாதவடிவம் (பிரணவ தேகம் படைத்த) சித்தர்கள் மறைத்தார்கள் என்று ஓதுகிறார். அப்பாடலைக் காண்க.

"அறைகுவேன் அகாரமது சிவமதாச்சு
ஆச்சரியம் உகாரமது சக்தியாகும்
திறைகுவேன் சிவசக்தி யிரண்டுங் கூடிச்
சேர்ந்தடா மகரமென் மவுன மக்கால்
பறைவேன் அகாரமுடன் உகார மவ்விற்
பாய்ந்து தொன்றாய் கலக்க பிரணவமாச்சு
மறைகுவேன் தீட்சை ஓங்காரந் தன்னை
மாசற்ற நாதாக்கள் மறைத்திட்டாரே - 19

அகத்தியர் சுத்தஞானம் — 30.

மச்சமுனி சித்தர் இயற்றிய தீட்சை ஞானம் 55இல் அகாரம் என்பது சிவமாகும் என்றும், உகாரம் சக்தியாகும் என்றும், இவைகள் இரண்டும் சேர்ந்தால் சுழி முனையாகும் என்றும் தமக்கு நந்தியம் பெருமான் விரும்பியவாறு கூறுகிறேன் என்றுஅவர் காட்டுப்பாடலை படித்து அறிக.

"காணா யகாரங் கடிய சிவமாச்சு
பூணா யுகாரம் புரிகின்ற சக்தியாச்சு
தோணாதிது ரெண்டுஞ் சேரச் சுழிமுனை
வீணல்ல நந்நதி விளங்கிய காமமே - 4

மச்சமுனி சித்தர் தீட்சை ஞானம் - 55

கடைப்பிள்ளை ஞான கக்கிசம் 80 — என்னும் நூலில் நாத நிலை விளக்கும் பாடல் காண்க.

"தானான பூரணமே சோதி சோதி
தன்மயமாய் நின்ற திருஞான தீபம்
வானான ஆகாசம் அண்டத்துச்சி

Koviloor Digital Library

மகத்தான கமலமடா ஆதி பீடம்
கோனான பீடமதின் நடுவிலே தான்
குவிந் தெழுந்த நாதமடா வேதத் தந்தம்
தேனான நாதமதி னந்தங்கண்டு
திருவேற உருவே றுத் திரந் தானாமே - 76

என்று ஓதுகிறார். பூரணம் என்னும் பரவெளி சோதிமயமானது. அதுவே திருஞானதீபமாகும். ஆகாயமே அண்டத்தின் உச்சியாகும். ஆயிரத்தெென் மலரின் ஆதிபீடமாகும். அந்த பீடத்தின் மையத்தில் நாதம் என்ற ஒலியுடைய பிரணவம் நீங்காரமாகும். அப்படி குவிந்து காணப்படும் நாதமே திருமறைப் பொருளாகும். இந்த இனிய நாதமதை வெகுவாகக் கண்டு களிக்க திருவாகும். அதுவே உருவாகும். அதன் திரத்தைக் கண்டு பெறுக என்று அப்பெருஞ்சித்தர் ஓதுகிறார்.

கடைப்பிள்ளை கலைஞானம் — 120இல் அகாரம் — உகாரம் — மகாரம் — விந்து — நாதம் பற்றிக் கூறும் பாடலைக் காண்க.

எண்ணவே யிடைகலை தான் அகாரமாச்சு
இன்பமுள்ள பிங்கலைதான் உகாரமாச்சு
உண்ணவே சுழிமுனையது மகாரமாச்சு
உத்தமமே கண்ணொளிதான் விந்து நாதம் - 120

என்று கூறுகிறார். இடைகலையே அகாரமாகும். பிங்கலை உகாரமாச்சு. சுழிமுனை மகார மாச்சு என்று ஓதப்படுகிறது. மேலும் கண்ணொளியானது விந்து நாதமாகும்.

கடைப்பிள்ளை கலைஞானம் 120இல் உங்களுக்கு கருநுட்பமதைக் கூறுகிறேன். அதனை கேட்க. சந்திரகலை அகாரமாச்சு. சூரியகலை உகாரமாச்சு. சுழிமுனையானது மகாரமாச்சு. இவை மூன்று யோகமாக (நன்றாக) பார்க்க திருநேத்திரமாகும். ஒன்றாக பார்கும் போது ஓங்காரக் கம்பமாச்சு என்பதாம். இதனை அறிவிக்கும் பாடல் காண்க.

"காணவே யின்ன மொரு கருமானங் கேளு
கருணைவளர் சந்திரகலை அகார மாச்சு
பூணவே பானுகலை உகாரமாச்சு
பொருந்தி நின்று சுழிமுனையிலே மகாரமாச்சு
தோணவே மூன்றும் தரு நேத்திரந் தன்னைச்
சுத்த முடன் றான் பார்க்க யேகமாச்சு
பேணவே யேக மென்ற தன்னைப் பார்த்தாற்
பிலமான ஓங்காரக் கம்பமாச்சு - 50

கடைப்பிள்ளை சித்தர் ஞானம் — 120

மேலும் அகத்தியர் சவுமிய சாகரம் என்றும் நூலில் அகாரம் சிவமாகும். அந்த சிவமே உயிரானது. உகாரம் என்பது சக்தியாகும். சக்தியே உடலாக வடிவம் தரும். மகாரம் என்பது மவுனமாகும். முந்தி தருரும் மவுனமே சோதியாக நிற்கும் என்று கூறும் பாடல் காண்க.

"பாரப்பா அகாரமது சிவமுமாச்சு
பதிவான சிவமது தான் உயிருமாச்சு
நேரப்பா உகாரமது சக்தியாச்சு
நேர்மையுள்ள சக்தியது உடல் தானப்பா
சாரப்பா மகாரமது மவுனமாச்சு
சாயுச்சிய மவுனமது சோதியாச்சு - 649

மேலும் இடதுகண் அகாரம் ஆகும். அதுவே சந்திரன் பதிவான வலது கண் உகாரமாகும். அதுவே சூரியனாகும். சுழிமுனை மகாரமாகும். அதுவே அக்கினி என்பது நினைவு செய்க. இதனை ஒட்டி தியானம் செய்து தேறுக என்று கூறும் பாடல் காண்க.

பாரப்பா இடதுகண் அகாரந் சந்திரன்
பதிவான வலதுகண் உகாரம் சூரியன்
நேரப்பா சுழிமுனை தான் மகாரம் அக்கினி
நினைவாக இப்படியே தியான செய்து - 454

அகத்தியர் சவுமிய சாகரம் — 1200

மேலும் சுப்பிரமணியர் சிவம் இயற்றிய ஞானம் 100இல் பரவெளியில் அகாரமென்ற ஒளி தோன்றியது. அதிலிருந்து காற்றும் நெருப்பும் உண்டானது. இகாரத்தில் நீர் மண் இரண்டும் உண்டானது. இதிலிருந்து சீவாத்மான தோன்றியது. உகாரத்திலிருந்து பூமி, மலைகள் தோன்ற நால்வித யோனிகள் உண்டானது. இந்த உண்மை பராபரம் என்னும் செயல் ஆகும் என்று கூறும் பாடல் காண்க.

Koviloor Digital Library

"அகரந்தான் பரவெளியி லொளி உண்டாச்சு
அதில் நின்ற காற்றுடனே நெருப்புண்டாச்சி
இகாரந்தான் தண்ணீர் மண்ரெண்டதாச்சு
இதில் நின்றே சீவாத்மா தோன்றலாச்சு
உகாரந்தான் பூமிபருவதமாச்ச
உகந்த தொரு நான்கு வித யோனியாச்சு
ஒகார சுழி வட்டமெழு தோற்ற மாச்சு
உண்மை பராபரதினுட செயல்தானாதி - 85

சுப்பிரமணிய சிவம் சுத்தஞானம் - 100

கடைப்பிள்ளை சுத்தஞானம் - 120இல்.

"போகாத புனலது தான் மைந்தா மைந்தா
பூரணமாய் நின்றிலங்கம் வாசி வாசி
சாகத காலதுதா னென்ன வென்றாற்
சதா போதமான தொரு நாதமாகும்
வேகாத்தலையது தான்விந்து விந்து
வேதாந்த மூலமடா ஆர்க்கும் தோணா
வாகாக யிதுமூன்றும் தான்னுட் கண்டு
மகத்தான சிவயோகம் வளமை பாரே - 53

போகாத புனல் என்பது வன்னியாகும். அந்த வன்னியே வாசியாகும். இதற்கு மகாரம் என்றும் கூறுவர். மகாரமே ஊமையாகும். மகாரமே ஓங்காரமாகும். ஓங்காரமே திருவாசியாகும். திருவாசியே ஆத்ம பீடமாகும். ஆத்ம பீடமே பூரணமாகும். போகாத காலது என்பது ஞானம் மிகுந்து காணப்படும் நாதமாகும். அதுவே அகாரமாகும். அகாரமே மூலாங்க பிரணவமாகும். ஒலி வடிவமாகும் வேகாதலை என்பது விந்துவாகும். வரிவடிவமாகும். அதுவே உகாரமாகும். உகாரமே புருவ வாசலின் திறவுகோலாகும். அதனால் அதை அறிந்து சிவயோகம் செய்வாயாக.

அகத்தியர் பரிபூரணம் என்னும் நூலில் சாகாத கால் என்பது வாசியாகும். அதுவேவாயுமாகும். வேகாத தலை என்பது ஆகாச வெளியாகும். போகாத புனல் என்பது ஆவியாகும். அதுவே வன்னியாகும். இந்த மூன்றின் உண்மைப்பொருள் என்னவென்றால் இதனை அறிவது இயலாதது ஒன்றாகும் என்பதை கீழ்வரும் பாடலால் உணர்க.

பாரப்பா சகாத கால் தான் மைந்தா
பதிவான வாசியடா வாயு வாச்சி
நேரப்பா வேகாத தலையே தென்றால்
நிசமான ஆகாச வெளிதான் பாகு
காரப்பா போகாத புனல்தானப்பா
கனிவான ஆவியடா வன்னி
ஆரப்பா அறிவார்கள் மூன்றின் நேர்மை
அரிதரிது காணவென்றால் ரெண்டை கேளு
- 644

அகத்தியர் பரிபூரணம் - 1200.

மேற்கண்ட பாடலில் ஓங்காரத்தில் முப்பிரிவான பாதங்கள் கூறப்படுகிறது. அகரம் — உகாரம் — மகாரம் ஆகும். வெளி — காற்று — வன்னியான மூச்சுரைக்குறிக்கும். வெளி — காற்று — வன்னி — ஆக மூன்றும் அகாரமாகும். அகாரமே நாதமாகும். இதுவே வடிவத்தில் பார்த்தால் விந்துவாகும்.

இனி திருமூலர்தாம் அருளிய திருமந்திரம் மூவ்வாயிரத்தில் ஓங்காரத்தைப் பற்றி அறிவிக்கிறார். இதைப் பற்றி இனி அறிய முற்படுவோம்.

"ஓமெனும் ஓங்காரத் துள்ளே ஒருமொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே உருஅரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே" - 2676

திருமூலர் திருமந்திரம் - 3000

ஓங்காரம் ஒரு மொழிச் சொல்லாகும். ஏகாட்சரம் — பிரணவம் — ஓங்காரம் அதனுள் பலவித மாறுப்பட்ட செயல்கள் நிகழ்கின்றன. ஓங்காரம் அருவ வடிவமாகவும், உருவ வடிவமாகவும், பஞ்சகமாகவும் உண்டு. ஓங்காரமே மானிடனுக்கு முத்திக்கு வித்தாகும். முத்தி சித்த பெற முதற்படியாகும். மேலும் ஓங்காரத்தில்,

"ஓங்காரத்துளளே உதித்தஐம் பூதங்கள்
ஓங்காரத்துள்ளே உதித்த சராசரம்
ஓங்காரா தீதத் துயிர்மூன்றும் உற்றன
ஓங்கார சிவ பரசிவ ரூபமே - 2677

ஓங்காரம் பகுத்தால் பஞ்சகமாகும்.

Koviloor Digital Library

அந்த பஞ்சகத்தில் பஞ்ச பூதங்கள் பஞ்சகரத்தாள் தோன்றுவர். ஓங்காரத்தால் உலக படைப்புகள் உண்டாகும். ஓங்காரம் என்னும் அதீதத்தில் மூன்று சுடர்கள் உற்றன. ஓங்காரமே சிவமாகும். அதுவே வரமாகும். ஓங்காரமே பரசிவ வடிவமாகும்.

ஓங்காரம் என்று தொகுத்து (சேர்த்து) கூறுவது சமட்டிப் பிரணவம் ஆகம். அதுவே அ + உ + ம என பிரித்து (வகுத்துக்) கூறுவது வியட்டி பிரணவமாகும். அ — என்பது பதி (சிவம் — அருட்சக்தி) உ — என்பது பசு (ஆன்மா) ம — என்பது பாசம் (திரோதாயிட ஆணவம்)

உமாதிபதி சிவம் அருளிய திருவருட் பயன் என்னும் நூலில்,

இறைசக்தி பாசம் எழில்மாயை ஆவி

உறநிற்கும் ஓங்காரத்துள் — 82— திருவருட்பயன்

அ+உ+ம் = ஓம் என்பதாம். ஓங்காரத்தின் ஒலி வடிவம் நாதமாகும். அகாரம் — உகாரம் — மகாரம் இம்மூன்றும் கூடி ஓம் என்று எழுதும்போது விந்து என்பர். ஒலிக்கும்போது நாதம் என்பர். அகாரம் உகாரம், மகாரம் விந்து, நாதம் ஆக இவை ஐந்து ஓங்காரமாகும். அகாரம் — உகாரம் — மகாரங்கள் — சிவம் — அருட்சக்தி — ஆன்மா — திரோதானம் — ஆணவம் — ஆகிய ஐந்தையும் குறிக்கின்றன.

மேற்கண்ட விளக்கும் காரணங்களால் ஓங்காரம் ஒருவிதத்தில் நுட்பமான ஐந்தெழுத்தாகம். இதற்கு ஓங்கார பஞ்சகம் என்பர்.

வள்ளற்பெருமான் "ஓங்கார பஞ்சகத்தே பாங்காக நடிக்கின்றார்—" என்றும, "ஒரெழுத்தில் ஐந்துண்டென்பார் வெண்ணிலாவே" என்றும் கூறும் அருமை பெருமைப் படத்தக்க அற்புத வரிகளாகும்.

மேலும் முருகன் என்னும் அற்புத மனிதப் பிறவி எடுத்துப் பலகலைக் கல்விகள் பயின்று யோக நெறிகள் பின்பற்றி நாதாந்தத்தில் பிரணவடிவத்தோடும் ஞானவடிவத்தோடு சோதியாக திகழ்பவர் என்பது சித்தர்களின் வாக்காகும். அவருக்கு போகர் நாதாந்த கடவுள் என்று நமது போகர் ஏழாயிரம் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவருடைய வயதும் அறியமுடியாது என்றும் கூறுகிறார். அவருக்கு முருகன் — கந்தன் — குமரன் — வாலசுப்பிரமணியர் — சிவனுக்கு மேல் சிவன் — திருத்தென் நிலையில் கூத்தாடியவர் என்றும் சித்தர்கள் போற்றுகிறார்கள். அப்படிப்பட்ட அற்புதக் கடவுளை தெய்வமணி மாலையில் மாமறையான ஓங்காரத்தில் அருட்பதத்தை யருளிய நிகழ்ச்சி கூறிபெருமைப்படுவதை கீழ்வரும் வரிகளால் அறிக.

"சேமமிகு மாமறையின் ஓம் எனும் அருட்பதத்
திறன் அருளி மலயமுனிவன்
சிந்தனையின் வந்தனை உவந்தமெய்ஞ்ஞான சிவ
தேசிக சிகாரஞ்னமே - என்பது அவருடைய அற்புத
வாக்காகும். திருவருட்பா - 6

ஓம் என்பதை அருட்பதம் என்று வள்ளற்பெருமான் அருள்வதை மிகவும் நுட்பமாக கவனிக்க வேண்டும். ஓங்காரத்தை சமட்டியாகக் காணும் போது அதுவே ஓரெழுத்தாகும். வியட்டியாக பிரித்துக் காணும்போது அதுவே பதமாகும். வார்த்தையாகும். இதன் நுட்பத்தை வெளிப்படுத்த அருட்பதம் என்று ஓதுகிறார். அதனுடை மறைப்பொதுளை உணர்த்த "சேமமிகு மாமறையின் ஓம் எனும்" என்று அருள்கிறார். அதன் நுட்பமான உட்கருததை அகத்தியருக்கு ஓதினார். அப்பெருமானுக்கு அப்பொழுது அகவை ஒன்பதாகும் என்பது ஆச்சரியமாகும்.

மேலும வள்ளல்பெருமான் "முருகன் பிரணவச்சொரூபன்" என்பது அவருடைய கருத்தாக விளங்குகிறது. முருகனை "பிரணவாகார சின்மய விமல சொரூபமே" என்று அழைக்கிறார். அதனைக் காண்க.

பெற்றமேல் வரும் ஒரு பெருந்தகையின் அருள் உருப்
பெற்றெழுந் தோங்கு சுடரே
பிரணவா காரசின் மயவிமல சொரூபமே
பேதமில் பரப் பிரமமே"

மேற்கணட திருஅருட்பாவின் வரிகளில் "பெற்ற மேல்வரும் ஒரு" என்பதும்,

Koviloor Digital Library

பேதமில்லா பரப்பிரமமே என்பதில் நுட்பக் கருத்தை நோக்க வேண்டும். பெற்றம் என்பது இடபம். (எருது) "பெற்றமேல்வரும் ஒரு பெருந்தகை"— யானவர் சிவபெருமானார் ஆகும். அச்சிவபெருமான் தோற்றருளிய "அருள் உருப்பெற்றெழுந்தோங் சுடர்" என்பவர் முருகன். அவன் வடிவம் "பிரணவாகார சின்மய விமல சொரூபன்" பேதமில் பரப்பிரமம். பெற்றமேல் வரும் ஒரு பெருந்தகையின் அருள் உருப்பெற் றெழுந்தோங்கு சுடரே" என்பது சிவ பெருமானது சிவவடிவானமான அருளுருவையே முருகன் பெற்று வந்தான் என்பதில் சிவனே முருகனாகத் தோன்றினான் என்பது அதன் நுட்பக் கருத்தாகும். ஞானக் கண்ணினின்று ஞானச் சுடராகத் தோன்றியமையால் "சுடரே" என்கிறார். (எழுந்தோங்கும் சோதியே சுடரே) முருகன் பிரணவாகார சொரூபன் என்பதை, பிரணவாகார இமைய விமல சொரூபமே" என்றார். சின்மயம் என்றால் அறிவுமயம். ஞானமயம். சித் என்றால் அறிவு என்றும் ஞானம் என்றும் கூறுவர். விமலாம் என்றால் மலமற்றது என்பர். வள்ளற்பெருமான் முருகனை பிரணவமாகக் கண்டவர் பேதமில் பரப்பிரமமே என்று பரப்பிரமமாகவும் காண்கிறா. முருகனை பரம்பொருளாக் கண்டவர் வள்ளற் பெருமானாவார். இதனால் அறிவது பிரணவத்திற்கும் பிரமத்திற்கும் பேதமற்றது. என்பது சித்தர்களின் பெரும் வாக்காகும். பழம்பெரும் நூல்களிலும் உண்மை நிலை துணிந்து கூறுவர். கல்வியாளர்களான ஆன்றோர்களின் துணிவாகும்.

மேலும் வள்ளல்பெருமான் விநாயகரை வணங்கும் போது வேழமுகத்தானை பிரணவ ஒளியாகவும் சிரண வடிவமாகவும் வழிபட்டார் என்பது வரலாறாகும். கருங்குழி என்னும் திருவிடத்துகண் ஓர் சிறிய குகைக் கோயில் இருப்பதாகவும். அந்த குகை கோவிலில் வள்ளற்பெரமான் எவ்வித சலனங்கள் இல்லாத அமைதியான இடமாகும். அவர் தவயோக பயிற்சி பெறுதற்குரிய இடமாக தேர்வு செய்து அவ்விடத்தில் அவருடைய பயிற்சியினை செய்யும்போது அவர்முன் கண்ட வேழ முகத்தானை பிரணவ ஒளியாகவும், வேறு ஒரு பாடலில் பிரணவ வடிவமாகவும் கண்டதாக அருட்பாவில் இடம் பெற்றுள்ளது. அப்படி இடம் பெற்ற பாடல்கள் கண்டு களியுங்கள்.

"கானல் நீர் விழைத்த மான் என உலகம்
 கட்டினை நட்டுழன் றலையும்
ஈனவஞ் சகநெஞ் சகப்புலை யேனை
 என்று கொண்டருளும் நாள் உளதோ
ஊனம்ஒன் றில்லா உத்தமர் உளத்தே
 ஓங்கு சீர்ப் பிரணவ ஒளியே
வேல் நவில் கரத்தோர்க் கினியவா சித்தி
 விநாயக விக்கினேச் சுரனே - 2526

பெரும்பொருட் கிடனாம் பிரணவ வடிவில்
 பிறங்கிய தனிப் பேறே
அரும்பொருள் ஆகி மறைமுடிக் கண்ணே
 அமர்ந்தபே ரானந்த நிறைவே
தரும்பர போகம் சித்தியும் சுத்த
 தருமம் முத்தியும் சார்ந்து
விரும்பினோர்க் களிக்கும் வள்ளலே சித்தி
 விநாயக விக்கினேச் சுரனே - 2529

மேலும் வள்ளற் பெருமான் இறைவனின் திருவடிகள் பிரணவத்தின் அடி — முடி — நகுவாக நிலவுவதாக ஓர் திருஅருட்பாவில் ஓதுகிறார்.

"பிரணவத்தின் அடிமுடியின் நடுவினும்நின் றோங்கும்
 பெருங் கருணைத் திருவடிகள் பெயர்ந்துவருந் திடவே
கரணமுற்ற கடந்தடியேன் இருக்குமிடந் தேடிக்
 கதவுதிறப் பித்தருளிக் கடையேனை அழைத்துச்
- 3074

என்று கூறுவதாலும், அடுத்து வரும் திருப்பாடலில் இறைவனின் திருப்பதம ஓங்காரத்தின் உள்ளொளியாகவும், அவ்வுள் ளொளிக்குள் ஒளியாகவும் விளங்குவதாகவும் கூறும் திருவருட்பா காண்க,

"ஓங்காரத் துள்ளொளியாய் அவ்வொளிக்குள் ஒளியாய்
 உபய வடிவாகியநின் அபய பதம் வருந்த

Koviloor Digital Library

ஈகார நடந்திரவில் யானிருக்கும் இடம் போந்

தொழிற் கதவத் திறப்பித்தங் கென்னை வலித்

தழைத்து - 3075 என்று ஓதுகிறார்.

மேலும் சத்திநிப்பாதத்தில் பிரணவமே வடிவமாய் இறைவனின் அருள் எழுந்துணர்த்துவதையும் ஓர் பாடலில் மிக அற்புதமாகவும் அழகாகவும் மிக நுட்பத்துடன் வள்ளற்பெருமான் தெரிவிக்கும் பாடல் காண்க.

"இருவினைஒப் பாகிமல பரிபாகம் பொருந்தல்

எத்தகுணம் அத்தருணத்தியல் ஞான ஒளியாம்

உருவினையுற் றுள்ளத்தும் பிரணவமே வடிவாய்

உற்றுவெளிப் புறத்தும் எழுந் துணர்த்திஉரைத்

தருளும் - 3136 என்று திருஅருட்பாவில் ஓதுகிறார்.

இருவினை ஒப்பு — நல்வினை தீவினைகள் (ஆகாமியம்) அவற்றின் விளைவாகிய புண்ணிய பாவங்கள் (சஞ்சிதம்) இவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களில் (பிராரத்தம்) ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புமின்றி ஆன்ம அறிவின் கண் ஒப்பு வெறுப்பு நிகழ்தல்.

மலபரிபாகம் = ஆணவ மலத்தினது சகதி ஆன்ம அறிவை மயக்க இயலாது வலிகுன்றி நிற்றல் — மலம் — ஆணவ மலம் — பரி = உபசர்க்கம், பாகம் = திரிவு, பக்குவம்.

இருவினையும் ஒத்து மலபரிபாகம் ஏற்பட்டபோது சத்திநி பாதம் உண்டாம். சத்திநிபாதம் = அருட்சத்திபதிதல், சத்தி = அருட்சக்தி, நி = உபசர்க்கம், பாதம் = பதிதல்.

வள்ளற்பெருமான, ஓங்காரம் என்பது அதுஒரு தனிமொழியாகும் என்றும, அதன் பயனை யான் அறிந்திலேன் என்றும், இவ்வுலக வாழ்வில் உழலகிறேன் என்று வருந்தி, "ஓங்காரத்தனி மொழியின் பயனைச் சற்றும் ஓர் கிலேன்" என்று கூறும் திருவருட்பா காண்க.

"ஓங்கார தனிமொழியின் பயனைச் சற்றும்

ஓர்கிலேன் சிறியேன் இவ்வுலக வாழ்வில்

ஆங்காரப் பெருமதமால் யானை போல்

அகம்பாவ மயனாகி அலைகின் றேன்உன்

பாங்காய் மெய்யடியார் தம்மைச் சுற்றும்

பரிந்திலேன் அருளடையும் பரிசொன்றண்டோ

தீங்காய செயலனைத்தும் உடையேன் என்ன

செய்வேன்சொல் லாசேஎன் செய்கு வேனே - 3242

வள்ளற்பெருமான் ஓங்காரத்தில் பேசும் ஓங்காரம் பேசாப்பெரிய ஓங்காரம், ஊமை எழுத்து, பேசாதமந்திரம் பற்றி திருவருட்பாவில் கூறும் சில பாடல்கள் காண்போம்.

ஓம் என்னும் பிரணவம், ஐந்தெழுத்து என்று கூறப்படும் பஞ்சாக்கரம் ஆக இவ்விரண்டிலுமே பேசும் நிலை, பேசாத(ப்பெரு) நிலை என இருநிலைகள் உண்டு என்னும் குறிப்புகள் சைவ சித்தாந்தச் சாத்திரங்களில் ஊன்றி படிப்பவர்கள் அறிவார்கள். வள்ளற்பெருமானும் இந்த இருவித நிலைகளைத் திருவருட்பாவில் ஓதுகிறார். கீழ்க்காண்க.

"பேசும் ஓங்காரம் ஈறதாப் பேசாப்

பெரிய ஓங்காரமே முதலா

ஏசறும் அங்கம் உபாங்கம் வே றங்க்

என்ற வற் றவண்அவண் இசைந்த

மாசறு சக்தி சத்தர் ஆண் டமைத்து

மன்அதி காரம்ஐந் தியற்றத்

தேசு செய் தனி பொன் னம்பலத் தாடும்

என்பரால் திருவடி நிலையே" - 3932

பேசும் ஓங்காரம் என்பது அகரம் — உகரமாகும். பேசா பெரிய ஓங்காரம் என்பது மகரமாகும். இதில் ஐந்து அங்கங்கள் உண்டு. அ+உ+ம+விந்து+நாதம். ஓங்காரத்திலிருந்து தான் சிவ ஐந்தெழுத்தும் உண்டானது. மேலும்,

"ஓரெழுத்தி லைந்துண்டென்பார் வெண்ணிலாவேஅது

ஊமையெழுத் தாவ தென்ன வெண்ணிலாவே" - 2864

"ஊமை எழுத்தினுள் ஆமை எழுத்துண்டென்

றோமை அறிவித்தீர் வாரீர்"

சேமஞ் செறிவித்தீர் வாரீர் - 4412

"ஏசாத தந்திரம் பேசா மந்திரம்

Koviloor Digital Library

ஈசான மேலென்றீர் வாரீர்

ஆ சாதி இல்லீரே வாரீ' - 4433 என்று வள்ளல் பெருமான் திருவருட்பாவில் கூறுகிறார்.

ஓரெழுத்தான ஓங்காரத்தில் பேசும் ஓங்காரம், பேசா ஓங்காரரத்தையும் அருட்பாவில் ஓதுகிறார். அதேபோல் திருவைந் தெழுத்தான பஞ்சாக்கரத்திலும் பேசும் எழுத்தும் பேசா எழுத்தையும் இருப்பதை உமாபதி சிவம் உணர்த்துகிறார். அப்பாடல் இங்க அறியத் தக்கது.

"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்

பிஞ் செழுத்தும் மேலைப்பெருவெழுத்தும் - நெஞ் செழுத்தில்

பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்

சுவசாமற் காட்டக் கொடி - கொடிக்கவி - 4

- உமாபதிசிவம்

பேசும் எழுத்து - வகரம் (சத்தி பேசா எழுத்து - சிகரம் சிவம் என்பர், மேலும்,

"பேசும் எழுத்துடன் பேசா எழுத்துறின்

ஆசான் பரநந்தியாம்" என்னும் ஔவையார். குறளும் இங்கு எண்ணத்குரியது.

வள்ளற்பெருமான் ஓங்கார உலகங்கள் ஓங்கார அண்டங்கள் பலப்பலவாக உள்ளது என்று கூறுகிறார். ஓங்கார உலகு — ஓங்கார அண்டமாகும். ஓங்கார உலகும் — ஓங்கார அண்டமும் குடிவிளங்க இறைவன் பெருஞ்சுடராய் ஒளிக்கதிர் பரப்பிக் குலவுகின்றான். என வள்ளற் பெருமான் ஒரு பாடலிற் குறிக்கின்றார்.

நாட்டிய ஓங்காரம் ஐந்தில் பரமுதல் ஓர் நான்கும்

நந்நான்கு மாறிடத்தும் நயந்து நிறைந்தருளி

ஈட்டியசெம் பொருள் நிலையோ டிலக்கியமும் விளங்க

இனிதுநின்று விளங்கு கின்ற இன்பமய ஒளியே

சூட்டிய ஓங்கார உல கோங்கார அண்டம்

குடிவிளங்கக் கதிர் பரப்பிக் குலவு பெருஞ்சுடரே

பாட்டியல் கொண் டன்ரெலாம் போற்ற

மன்றில் நடிக்கும்

பரமநடத் தரசோன் பாட்டும் அணிந்தருளே - 4123

இறைவனின் கூத்தாடும் நிலையை ஓங்கார நடனம் பஞ்சாக்கர நடனம், பஞ்ச கிருத்திய நடனம் என்று மெய்ஞ்ஞான நூல்களில் ஓதப்படுகிறது.

கூத்தாடும வடிவத்தில் திருவாசி ஓங்காரத்தை குறிப்பதற்கு "ஓங்காரமே நல்திருவாசி" என்று உண்மை விளக்கம் கூறுகிறது.

"ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்

நீங்கா எழுத்தே நிறைசுடரோம் - ஆங்காரம்

அற்றார் அறிவர்அணி அம்பலத்தான் ஆடலிது

பெற்றார் மிறப்பற்றார் பின் - உண்மை விளக்கம் - 34

மற்றைய திருவடிவங்களில் திருவாசி தனியாகக் காணப்படும். கூத்தாடும் எம்பெருமான் திருவடிவத்தில் திருவாசி திருவடித்தோடு சேர்ந்து இருக்கும்.

இறைவன் ஓங்கார நாடர் என்றும், அவர் கூத்தாடுவது ஓங்கார நடனம் என்று வள்ளப்பெருமான் கூறும் அருட்பா காண்க.

"ஓங்கார நாடகம் பாங்காச் செய்கின்ற

ஓங்கார நாடரே வாரீர்

ஆங்கார நீக்கினீர் வாரீர்" - 4445

வள்ளற்பெருமான் ஓங்காரததில் ஐந்து பிரிவுகள் உண்டு என்று கூறுகிறார். அதற்கு "ஓங்கார பஞ்சகம்" என்றும், அந்த ஓங்கார பஞ்சகத்தில் இறைவன் அருள்வடிவமாக நடிக்கின்றார் என்றும் கூறுகிறார்.

ஓங்கார் — அகரம், உகரம், மகரம், விந்து, நாதம் என்ற ஐந்து பகுதிகள் உண்டு. எனவே அதற்கு ஓங்கார பஞ்சகம் எனக் குறிப்பதுண்டென்பார். ஓங்கார பஞ்சகத்தை வள்ளல்பெருமான் கூறும் அருட்பா பாடல் காண்க.

"ஓதி எந்த விதத்தாலும் வேதியனும் தேர்வறியார்

ஓங்கார பஞ்சகத்தே பாங்காக நடிக்கின்றார்

ஆதி யந்தம் காண்பரிய ஜோதி சுயஞ் சோதி உன்னே

பாட வந்தார் வந்தார் என்றே நாடிநாதம் சொல்கின்றதே" - 4492

"ஓரெழுத்தி லைந்துண் டென்பார் வெண்ணிலாவே" - 2864

"நாட்டிய ஓங்காரம் ஐந்தில்"- 4123

Koviloor Digital Library

மேலும் வள்ளற் பெருமான் நாதங்களில் திருச்சின்ன நாதம், எக்காள நாதம் வேணு நாதம் (வேய்ங்குழல்) நாதம், ஓங்கார நாதம் என்றும் இன்னும் பலவாறு தமது அருட்பாவில் ஓதுகிறார். அதில்

"ஓங்கார பஞ்சகத்தே பாங்காக நடிக்கின்றர்ர்
ஆதியந்தம் காண்பரிய ஜோதி சுயம்சோதி உன்னே
டாட வந்தர் வந்தார் என்றே
"நாடிநாதம்" சொல்கின்றதே - 4492

இப்பாடலில் ஆடவந்தார் வந்தார் என்று நாதம் சொல்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார். வந்தார் என்று ஒரு முறை மட்டும் கூறாது இருமுறையாக வந்தார் வந்தார் என்றுஒரு முறைக்கு இருமுறையாக அடுக்கிச் சொல்கிறார். கூறுவது எது? நாதமல்லவா என்று ஓதுகிறார்.

மேலும் வள்ளற் பெருமான் ஏகாக்கரம் பெற்றதையும் அதன் அனுபவங்களையும் கூறுகிறார். இறைவன் வள்ளற்பெருமானுக்கு சாகாக் கல்வியைக் கற்பித்து ஏகாக்கர பொருளையும் அருளினான் என்பதை,

சாகாக் கல்வியின் தரம் எலாம் கற்பித்
தேகாக் கரப்பொருள் ஈந்த சற்குருவே"

என்று அருட்பெருஞ்சோதி அகவல்
— 1065 — 6

ஏசாக்கரம் - ஏக அட்சரம் - ஓரெழுத்து - ஓங்காரம் - ஓம் என்பன.

வள்ளற்பெருமானுக்கு இறைவனால் ஓங்கார நிலை எடுத்துக் கூறி அதன்மேல் உற்றொளிரும் நிலையைக் எடுத்துக்காட்டியும், அதற்காப்பால் ஓர் உயர்ந்த தனிநிலையில் ஏற்றினான் என்பது கீழ்வரும் அருட்பாவில் தன் அனுபவத்தை ஓதுகிறார்.

"ஆங்காரம் தவிர்த்த வருவள் ஓங்காநின்றவனே
அம்மே என் அப்பா என் ஐயா என் அரசே
"ஓங்கார நிலைக்காட்டி அதன்மேல் உற்றொளிரும்
ஒரு நிலையும் காட்டி அப்பார் உயர்ந்த தனிநிலையில்
பாங்காக ஏற்றி எந்தப் பதத்தலைவராலும்
படைக்க வொன் சித்தியை நான் படைக்க வைத்தபதியே
தூங்காது பெருஞ்சுகமே சுகித்தட இவ்வுலகைச்
சுத்த சன்மார்க்கந்தனிலே வைத்தருள்க விரைந்தே
- 4641

மேலும் வள்ளற் பெருமான் தனக்கு பிரணவாகாரப்பரிசு வழங்கினார் என்று கூறுகிறார். வள்ளற்பெருமான் தமது அருட்பாவில் மூன்றுவித தேகங்களைப் பற்றி தெரிவிக்கிறார். அதில் சுத்த தேகம், பிரணவ தேகம், ஞானதேகம் என்பன அப்பெருமான் பெற்ற சுத்ததேகமும், பிரணவ தேகமும் இறைவனால் பரிசுப் பொருளாக கொடுத்தார் என்று ஓதுகிறார். அப்பாடலைக் காண்க.

வேதாந்த நிலையும் அதன் அந்தந்தே விளங்கும்
மெய்ந் நிலையும் காட்டு வித்தீர் விளங்கிய சித்தாந்தப்
போதாந்த நிலையும் அப்பால் புகல் அரிதாம்பெரிய
பொருள் நிலையும் தெரிவீத்தீர் புண்ணியரே நமது
பாதாந்தம் அறிவீத்தீர் சுத்தவடி வுடனே
பகர் பிரண வாகாரப் பரிசும் எனக் களீர்த்தீர்
நாதாந்தத் தனிசெங் கோல் நான்செலுத்தக் கொடுத்தீர்
நடராஜ ரேநுமக்கு நான்எதுசெய் வேனே - 4749

வள்ளற் பெருமான் குறிப்பிடும் பிரணவாகார பரிசு என்னவென்றால் முவ்வித தேகங்களில் முதலில் சுத்த தேகம் பெற்றார். அடுத்து பிரணவதேகம் பெற்றார்கள் என்பதையும் ஓதுகிறார். பிரணவ தேகம் என்பது மந்திரதநு என்றும் கூறுவார்கள். பிரணவம் என்பது மந்திரமாதலால் மேற்கண்ட பாடலில் பிரணவக்காரப் பரிசு என்று கூறுவது பிரணவ தேகம் பெற்ற அனுபவத்தை உணர்த்துகிறார்.

வள்ளற்பெருமான் ஓங்கார பீடம் பற்றியும், ஓங்கார அணையில் இருந்ததைப் பற்றியும் கூறி தம் அனுபவத்தை உணர்த்துகிறார்.

ஓங்கார பீடத்தில் இறைவன் வீற்றிருந்து அருள்வது சித்தர்கள் தங்கள் நூல்களில் அவரை நாதாந்தத்து இறைவன் என்றும், கடவுள் என்றும் குறிப்பிடுகின்றனர்.

Koviloor Digital Library

நமது வள்ளற்பெருமான் இறைவனின் திவடியை ஓங்கார பீடத்தொளிர்கின்ற பாதம் என்றும், இறைவி சிவகாம வல்லிமையை "ஓங்கார பீட மிசைப் பாங்காக இருந்தாள்" என்றும் வாசிக்கிறார்.

"ஓங்கார பீடத் தொளிர்கின்ற பாதம்
ஒன்றாய் இரண்டாகி ஓங்கிய பாதம்
தூங்காத தூக்கத்தில் தூக்கிய பாதம்
தூரியத்தில் ஊன்றித் துலங்கிய பாதம் - 4329

"உள்ளமுதம் ஊற்றுவிக்கம் உத்தமி என் அம்மை
"ஓங்கார பீடமிசைப் பாங்காக இருந்தாள்
தெள்ளமுத வடிவுடையாள் செல்வம் நல்கும் பதத்தாள்
சிவகாம வல்லி பெருந்தேவி உளங் களிப்பக்
- 3176

மேற்கண்ட இருதிருவருட்பாவில் ஓதியவாறு இறைவன் இறைவி வீற்றிருக்கும் பீடம் ஓங்கார பீடமாகும். அப்பீடத்தில் வள்ளற்பெருமானும் ஏறினார். இறைவனே முன் வந்து வள்ளலாரை வரவேற்று ஓங்கார பீடத்தில் ஏற்றி விளங்க வைத்தார். "ஏகாக்கரப் பொற் பீடத்தென்னை ஏற்று சோதியே" என்பது வள்ளற் பெருமானின் திருவாக்காகும்.

"சாகாக் கல்வி எனக்குப் பயிற்றித் தந்த சோதியே
தன்னேர் முடிஒன் றெனது முடியில் தரித்த சோதியே
ஏகாக் கரப்பொற் பீடத் தென்னை ஏற்று சோதியே
எல்லாம் வல்ல சித்தி ஆட்சி ஈய்ந்த சோதியே
- 5061

மேலும் வள்ளற் பெருமான் ஓங்கார அணை மீது இருந்ததையும் அந்த நேரத்தில் இறைவன் அங்குவந்து எழுந்தருளி வந்ததையும், அவ்விருவரும் ஒன்றாக இணைந்ததையும் கூறும் அனுபவம் ஓதும் பாடல் காண்க.

"ஓங்கார அணை மீது நான் இருந்த தருணம்
உவந்தெனது மணவாளர் சிவந்ததடி வகன்றே
ஈகாரப் பளிக்குவடி வெடுத்தெதிரே நின்றார்
இருந் தருள்க என எழுந்தேன் எழுந்திருப்பதென் நீ
ஆங்காரம் ஒழி என்றார் ஒழிந்திருந்தேன் அப்போ
தவர் நானோ நான் அவரோ அறிந்திலேன் முன்குறிப்பை
ஊங்கார இரண்டுருவும் ஒன்றானோம் ஆங்கே
உறைந்த அனுபவம் தோழி நிறைந்த பெருவளியே
- 5440.

இறைவன் ஓங்கார பீடத்தில் வீற்றியிருக்கிறார். வள்ளற்பெருமானும் ஓங்கார பீடத்தில் அமர்ந்திருக்கிறார். இதன் பொருள் யாது? அவ்விருவம் ஒரே நிலையிலிருக்கின்றனர் என்பது பொருளாகும். வள்ளற்பெருமான் ஓங்கார பீடத்தில் இருக்கும்போது இறைவன் அங்கு வந்தார். அவ்விருவரும் ஒன்றாகக் கலந்தனர். அவர் இறைவனா, இறைவன் அவரா என்று அறிய இயலாத அளவுக்கு ஒன்றாக இசைந்து இணைந்தனர். அவர் நானோ, நான் அவரோ, அறிந்திலேன் — இரண்டுருவம் ஒன்றானோம் என்று தமது அனுபவ உணர்வுகள் திருவருட்பாவில் வடித்துத் தந்துள்ளார்.

வள்ளற்பெருமான் தாம் பெற்ற ஓங்கார பீடத்துணர்வுகள் மிக நுட்பமாக விளக்கி அதன் அனுபவம் முழுதும் கைவரப் பெற்றவர் என்பது வாசிக்கும் அன்பர் அறியலாம். இறைவனின் பீடமாகி ஓங்கார பீடத்தில் தாம் எழுந்தருளிய நுட்பமான கருத்தையும் அனுபவ உணர்வுகளும் பெற்ற அற்புத மென்மையான சுகத்தையும் கூறியுள்ளது மிக அற்புதமாகும்.

வள்ளற்பெருமான் பிரணவத்தை குறித்து அருளிய உபதேசமொன்று சன்மார்க்க அன்பர்களால் கீழ்வருமாறு குறித்து வைக்கப் பெற்றுள்ளதை கண்டு இன்புறுங்கள்.

1. பிரணவம்: ஓம் என்னும் எழுத்து பிரணவம் என்று சொல்லப்படும. படைத்தளித்தழிக் வல்ல தலைவன் என்பதே ஓங்காரத்தின் பொருள்.

2. மேற்கண்ட உபதேச குறிப்பு வேறொரு சன்மார்க்க அன்பர் குறித்து வைத்துள்ளது வருமாறு:

பிரணவத்தன் ஐந்து பாகம் யாவெனில் அகரம் — உகரம் — மகரம் — விந்து — நாதம் — பஞ்சமி என்னும் வாக்கு பிரணவத்தின் கண் இருந்து தோன்றியது. அதற்கு ஸ்தானம் மூலாதாரம். அதிலிருந்து

Koviloor Digital Library

தோன்றிய மற்ற நான்கும் சுக்குமை, பைசநதி, மத்திமை, வைகரி, இவற்றிற் இடம் நாபி, இருதயம், கண்டம், லலாடம்.

திருவருட்பா: உரைநடைப்பகுதி, பக்கம் *286* — உபதேசக் குறிப்புகள்.

ஓங்காரம், பஞ்சாக்கரம் ஆக இவையிரண்டுமே மந்திரங்களுக்குள் மிகச் சிறந்தவையாகும். ஏனைய மந்திரங்கள் எல்லாம் இவ்விரு மந்திரங்களுக்கு கீழ்ப்பட்டவையே.

ஓங்காரமும் பஞ்சாக்கரமும் சரிசமமான மந்திரங்களாகும். ஓங்காரம் மூலமந்திரமாகும். வித்தெழுத்தாகும். பீஜ மந்திரம் என்றும் கூறுவார்கள். அனைத்து மந்திரங்களுக்கு தலைமையானது. எல்லா மந்திரங்களுக்கு ஓங்காரம் சேர்த்து ஓத வேண்டும்.

ஓங்கார இணைத்து ஓதாவிட்டால் மந்திரங்களுக்குப் பயன்தராது. மந்திரங்களுக்கு பயன் அளிப்பது ஓங்காரம் என்ற ஆதி மகாமூலமாகும். ஐந்தெழுத்து மந்திரத்துக்கு ஓங்காரம் இல்லாமல் ஓதினாலும் பயனளிக்கும். இதற்கு விலக்காகும் இரு மந்திரங்களும் ஒன்றில் ஒன்று இணைந்தது. ஐந்தெழுத்து மந்திர அரசு அல்லது (மந்திரராஜன்) ஓங்காரம் மிக நுட்பமான பஞ்சாக்கரம். இவவிரு மந்திரங்கள் இணையான சிறப்பு மந்திரமாகும். சரிநிகர் சமமானது.

எனவே இவ்விரண்டு மந்திரங்களில் பஞ்சாக்கரத்திற்கு சேர்த்து ஓதினாலும் குறையொன்றுமில்லை. சேர்க்காமல் ஓதினாலும் குறை ஏற்படாது. வடமொழியில் கூறப்படும் காயத்ரி மந்திரங்களுக்கு ஓங்காரம் சேர்த்து ஓதினால் தான் பலன் உண்டு. இல்லையேல் பலன் ஏற்படாது. ஓங்காரமே ஆதிமகா மூலமாகும். ஓங்காரமே தாரக மந்திரமாகும். ஓங்காரமே மந்திரங்களுக்கு பெருமை சேர்க்க வந்தது. ஓங்காரமே பிறமந்திரங்களுக்கு பயனிளிக்கவல்லது. ஓங்காரமே தனிச்சிறப்பு மந்திரமாகும்.

"நாடப்பா சாகாத கல்வி தன்னை
நலமாக கற்பதற்கு வுன்னைத் தேற்றே" - 7

இராம முனி சித்தர் சிவயோகம் ஞானம் — *30*

"சாகாமலிருப்பதற்குக் கல்வி யுண்டு
சாக்காடு கொள்வதற்கு விபரமுண்டு" - 238

காக புசண்ட காவியம் — *1000*

"அறிவை நீ அறிந்தலே பிறவி போச்சு
அடுத்தாப் போல் பரம பதம் நிலையுமாச்சு"

கொங்கணர் மெய்ஞ்ஞானம் — *13*

"மனிதனாய் பிறந்தாக்கால் சாகாக் கல்வி
வாசிக்கும் சிவமோடு வாழ்க்கை சேர்வான்" - 56

அகத்தியர் பூரண நுட்பம் — *216*

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

12. எட்டும் இரண்டும்

வேதங்கள் பல விதமாக உள்ளது. திசைக்கொரு வேதங்கள் கூறப்பட்டுள்ளது. தென்னவர்கள் வேதம் ஒரு வகை உண்டு. வடவர்களின் வேதம் ஒருவகை உண்டு. மேற்கிந்தியர்கள் வேதம் ஒருவகை உண்டு. கிழக்கத்தியர்கள வேதம் ஒருவகை உண்டு. இந்த வேதங்கள் ஒன்றை ஒன்று ஒத்துப் போவதில்லை. முரண்பாடுகள் நிரம்பக் காணப்படுகிறது.

தென்னவர்கள் வேதங்கள் சைவ மரபு பீடத்தைச் சார்நது மிகச் சிறந்து விளங்குகிறது. உயர்ந்த நோக்கம் கொண்டது. இதில் சைவ சமயம் சார்ந்த வேத ஆகமங்கள் அனுபூதிகள் கொண்டது. சமயம் சாராத சைவ பீட மரபு வேதங்கள் ஆகமங்கள் அனுபூதிகள் இடம் பெற்றுள்ளது.

தென்னவர்கள் வேதங்களில் சித்தர்களின் வேதம் தனித்தன்மை யுடையது. சித்தர் வேதங்களில் கருமச் சித்தர்களின் வேதம் என்றும், ஞான சித்தர்களின் வேதம் என்றும், இருபிரிவாக உள்ளது. கருமச சித்தர்களின் வேதங்கள் தொழில்முறை சார்ந்து வரும். ஞான சித்தர்களின் வேதம் இயற்கையை ஒட்டி வரும். இவ்விருவர்களின் வேத ஆகங்களில் "சாகாக்கல்வி" என்னும் மிக உயர்ந்த வேதநெறி முறைகள் தமிழில் எழுதப்பட்டுள்து. அறிவுத் திறமையுடையவர்கள், மனவுறுதி உடையவர்கள், ஆன்மிக அன்பர்கள் கடின உழைப்பால் கற்று பயனடையலாம்.

சமயம சார்ந்த சைவ ஆன்மிக அருளாளர்கள் மற்றும் சமயம் சாராத சைவபீட ஆன்மிக ஞானிகள் தங்களின் வேதங்களில் "எட்டும் இரண்டும்" பெற்று சுக சீவ நிலை பெற்றதாக கூறியுள்ளனர். அவர்கள் பெற்ற "எட்டும் இரண்டும்" என்ன என்பதை நாம் தெரிந்து அறிந்து புரிந்து உணர்ந்து அறிய வேண்டியது நமது கடமையல்லவா.

எட்டு என்றால் என்ன. அது எதைக் குறிககிறது. என்ன உணர்த்துகிறது. இந்த எட்டு யார் யாருக்கு கிட்டியது. அதனை எடுத்து என்னசெய்தார்கள் என்பதை ஆராய வேண்டி இறையருளை நாடி அணுகி அவன் துணைப்பெற்று இங்கு நாம் அறியலாம்.

இரண்டு என்றால் என்ன. அது எதைக்குறிக்கிறது. எதை உணர்த்துகிறது. இந்த இரண்டு யார் யாரப் பெற்றார்கள் என்பதை நாம் ஆராய இறைவனின் தயவை அணுகிப் பெற்று அவனின் துணையோடு இங்கு நாம் ஆய்ந்து பார்க்கலாம்.

மானிட உயிர் பயிர்கள் சாகாமல் இருக்க வேண்டிடுமென்றால் அதற்குரியத் "தனிக்கல்வி" தன்னறிவால் அறிந்து உணர்ந்து தானே அதனை கற்று வந்தால் தான் மனிதன் முத்தி பெறமுடியும். தெய்வங்கள் என்று கூறப்படும் அவர்களாலும் முத்தி தர முடியாது என்பது வேத ஆகமங்களில் கூறப்படும் செய்தி உண்மையாகும். ஒவ்வொருவரும் மானிடதேகம் எடுத்தவர் தன் தனி முயற்சியால் தான் சித்தர்களை அணுகி அவர்களின் கருணையால் மானிட இனம் முத்தி பெறு தனிவழி காட்டி அருள்வார்கள். சமய மதங்களில் கூறப்படும் தெய்வங்களால் முத்தி தர இயலாது என்பது தென்னவர்கள் இயற்றிய வேத ஆகமங்களில் ஓதப்பட்டுள்ளது. இதனை அறிய நாம் "சாகாக்கலை" என்று கூறப்படும் "சாகாக்கல்வி" அறிய வேண்டும். தென்னவர்கள் வேத ஆகமங்களில் சாகாமல் இருப்பதற்கும் சாவதற்கும் போதிய செய்திகள் உண்டு என்பதை நமது தெய்வீக சித்தர் காகபுசண்டர்தம் பெரு நூல் 1000த்தில் 238ஆம் பாடலில்

"சாகாமல் இருப்பதற்குக் கல்வியுண்டு
சாக்காடு கொள்வதற்கு விபரமுண்டு" – 238 என்று ஓதுகிறார். மரணத்தை மீட்கக் கூடிய கல்வியும் உண்டு. அதே போல் இறப்பதற்கும் அனேக வித விளக்கங்களும் உண்டு என்று கூறுகிறார்.

Koviloor Digital Library

மானிட இடம் சாகாமல் இருக்க வேண்டுமானால் முதல் முதலில் ஓர் உண்மையுள்ள நேர்மையான நல்லொழுக்கம் கொண்ட தயவு குணம் பெற்று கருணை உள்ளம் மிகுந்த அன்பு மனம் உடைய அறிவான சிறந்த குரு நமக்கு கிடைக்க வேண்டும். அவர் மீது மானிடம் உண்மை பக்திக் கொண்டு குரு சொல்லும் "செவியுரை கேட்டு" அதனடி நடந்தால் அறுபத்து நாலுகலையுடன் (கல்வி) கற்று தேறலாம் என்பதை நமது குருநாதரான காகபுசண்டர் தம்பெரு நூலில் 466ஆம் பாடலில் கீழ்வருமாறு கூறுவதை ஊன்றி கவனிக்க வேண்டும்.

"குருபத்து வைத்திருந்தால் அறுபத்து நாலும்
கூடாதோ அறுபத்து நாலுந்தானே
மறுபத்து வந்திடும் அறுபத்தைந்தாய்
மாவுடலம் பெலித்திடுமே சுகமாம் வீடு - 466
காக புசண்டர் பெருநூல் — 1000

மேற்கண்ட பாடலில் அறுபத்து ஐந்தாவதாக திகழும் "சாகாக்கல்வி" கற்றால் மானிட உடல் வலுவடைந்து உறுதிப் பெற்று மாயை ஒழிந்து சுகம் தரும் வீடு கிட்டும் என்பது உறுதியாகும் என்று ஆதி குருநாதர் காகபுசண்டர் உணர்த்துகிறார்.

சித்தர்களால் மறைக்கப்பட்ட "சாகாக்கல்வியில்" பலபடிநிலைகள் இருக்கிறது. அதில் முதற்படியாகக் கூறப்படும் "எட்டும் இரண்டும்" ஒரு நிலைப்படியாகும். அவ்வாறு கூறப்படும் "எட்டும் இரண்டும்" என்னவென்று மானிட உயிர் பயிர்கள் அறிய வேண்டும். அறிய முயற்சிக்க வேண்டும். அழிந்தே ஆக வேண்டும். அறிவதே சிறந்தது. அதற்கு தயவு, இரக்கம், கருணை, உயிரிரக்கம், கொல்லாமை, புலால் உண்ணாமை, எவ்வுயிரும் தன்னுயிர் போல் கருதுதல், எல்லா உயிர்களிடத்திலும் இறையருள் இருப்பதை அறிந்து உணர்தல் வேண்டும் என்றும் அமைதி நற்சிந்தனை, மனஉறுதி, வாசி நேர்மை போன்ற அரிய நலன்கள் உடையவராக வேண்டும். எப்பொழுது மவுனத்தை கடைப்பிடித்தால் அவசியத்தை உணர்தல் வேண்டும். இவ்வாறாக இருந்தால் மானிட உயிர் பயிர்கள் நலமடையலாம் என்பது இறையருள் வகுத்த வழியாகும். இனி எட்டு என்றால் என்ன? இரண்டு என்றால் என்ன என்பதை சித்தர் பெருநெறியில் நின்று ஆராய முற்படுவோம்.

மிகப் பழம் பெருஞ்சித்தர் காகபுசண்டர் ஆவார். அவர் வசிட்ட மாமுனிவருக்கு செவிஉரை செப்பியகுரு ஆவார். அவர் தமது பெருநூல் காவியம் 1000 — என்ற நூலில் தட்சணாயன் என்றும் தட்சணாமூர்த்தி என்றும் பெயர் பெற்ற ஆதி அகத்தியரின் பெருமையை கூறி மகிழ்கிறார். ஆதி அகத்தியர் "எட்டு இரண்டு" என்பதை ஓதியதைக் கீழ்வரும் குறிப்பிட்டுள்ளார்.

"அகத்தியரே பெரும் பேற்றை அடைந்தோராவார்
அம்மம்மா வெகு தெளிவு அவர் வாக்குத்தான்
அகத்திலுறை பொருள் எல்லாம் வெளியாயச் சொல்வார்
அவர் வாக்குச் செவி கேட்க அருமையாகும்
அகத்தியரின் பொதிகையே மேருவாகும்
அம்மலையும் அகத்தியரின் மலையாகும்
அகத்தியரின் அடையாளம் பொதிகை மேரு
அவர் மனது மவரைப் போற் பெரியோடுண்டோ" –

என்று 142ஆம் பாடலில் தெளிவாக ஓதுகிறார். மேற்கண்ட பாடல் மிக எளிமையாகவும் பொருள் விளங்குமாறு உள்ளதால் அப்பாடலின் விளக்கம் தேவையில்லை என்று கருதுகிறோம்.

மேலும் அகத்தியர் "எட்டிரண்டு" என்ன என்பதைத் மிகவும் தெளிவாக கூறியுள்ளதாகவும், அவர் மாபெரும் குருயாவார் என்றும், அவரின் அடியாராவோம் என்றும் கூறுகிறார். மற்றவர்கள் எட்டு ரெண்டுக்கு பத்து என்று கூறினார்கள். ஆனால் அகத்தியர் ஒருவரே அதனைப் பற்றி விரித்து கூறியதாக காகபுசண்டர் தமது பாடலில் ஓதுகிறார். மானிட உயிர்கள் அதனைக் கேட்டு மதி மயங்கினர். இதனை சித்தர் நிலையுடையவர்களால் மட்டும் தான் கூறுவார்கள். ஆனால் நீர்(வசிட்டர்) கேட்டதால் இந்த எட்டிரண்டு சொல்லும் படியாக நேர்ந்தது. இது மந்திரங்களில்

Koviloor Digital Library

குருவாக நிகழ்கின்றன என்பதை காகபுசண்டரின் அற்புதப் பாடலை நோக்குங்கள்.

கூறும் யாம் நினைத்த சங்கற்பத்தை
குருவானாற் சொல்லிடுமே அடியாராவோம்
யாருமே எட்டுரெண்டு பத்தென்றார்கள்
யார் சொன்னார் அகத்தியரே விரித்துச் சொன்னார்
தாருமே மாந்தர்கள் மயங்கினார்கள்
தமர் சித்தரானாக் காற் சொல்லுவார்கள்
கோருமே நீர்கேட்க சொல்லிவாரேன்
குருவாகு மந்திரங்க ளிதுதானே - 773 என்று விளக்கி கூறுவதும் உணரலாம்.

ஆதி அகத்திய பெருமான் 'எட்டிரண்டுக்கு' என்னவென்று பொருள் விளக்கம் கொடுத்தார் என்பதையும் இங்கு விளக்கப்படுகிறது. அகத்தியரின் மாணவரான புலத்தியருக்கு செவியுரை அருளிய போது, கேள்மகனே என்று தொடங்கிக் கூறுவரானார். எட்டு ரெண்டு என்பது கருவான நாதவிந்துவாகும். அந்த நாதவிந்து சக்தி சிவமாகும். சிவசக்தியாக இருப்பதை அறிவுடையமனதால் புத்திகொணடு சக்தி சிவம் என்று உரைக்கவும். இவ்வாறு அறிந்து நீர் வழிபடுவாயாக. அதன் கருமான என்ன என்பதை யாம் உமக்கு சொல்லுவோம் என்பதை அவர் எழுதிய சௌமி சாகரம் 1200இல் 336ஆம் பாடலில் இவ்வாறு ஓதியுள்ளார்.

"காணப்பா புலத்தியனே உனக்காய்ச் சொன்னேன்
கருவான எட்டிரண்டும் நாத விந்து
பேணப்பா நாதவிந்து சக்தி சிவமாச்சு
பெருநின்ற சக்தி சிவம் தான் தானென்று
பூணப்பா அறிவதனால் மனமே பூண்டு
புத்தியுடன் "சக்தி சிவம்" உரைக்க கேளு
தோணப்பா தனையறிந்து பூசை செய்ய
சொல்லுகிறேன் கருமானஞ் சுட்சந் தானே - என்று அகத்திய பெருமான் மக்கள் என்ற சித்தகளின் மீது கருணை மிகுந்து கூறுகிறார்.

இராமதேவர் என்று கூறப்படும் இவர் வெளிநாடு சென்று மதமாறியவர். இவர் எட்டிரண்டு என்னவென்று அவருடைய குருவினிடம் கேட்டதாகவும் அதற்கு அவர் அளித்த விடையானது என்ன வென்று நாம் பார்ப்போம்.

"எட்டிரண்டு" என்பது என்ன வெனில், அகாரமது எட்டாகும். உகாரமது இரண்டாகும், இதனை உனக்காக மறையகமாக கூறியதை பிறகுக்கு உரையாதே என்று ஓதுவதை கீழ்வரும் பாடலில்,

உரைத்த தொரு என்குருவே அய்யா அய்யா
உண்மையுள்ள எட்டிரண்டு மென்றா னென்ன
கரைத்த புளிபோல வல்லோ சொல்வேன் சேயே
கருவான அகரமது எட்டதாகும்
நிரைத்தபொரு ளான தொரு உகாரந் தாண்டா
நிலையான லக்கத்தில் ரெண்டாகும்
வரைத் திட்டே னுந்தனுக்காய் மைந்தா னானும்
வகையறியா மடையருக்குக் காட்டிடாதே" - என்று வாத சூத்திரம் 300இல் 180ஆம் பாடலில் இராமதேவர் என்ற யாகோப்பு முனிவர் கூறுகிறார்.

மேலும் சுப்பிரமணியர் ஞானம் 20 — 17ஆம் பாடலில் சற்று தெளிவாக எட்டுரெண்டுப் பற்றி கூறுகிறார் எட்டு என்பது இரண்டு என்பது அறியாத மானிட உயிர் பயிர்கள் குற்றம் நிறையுடையவர்கள். மலம் மிகுந்து காணப்படுவதால் அவர்கள் தேகம். உயிர் மலக்குற்றத்தால் அறிய இயலாது என்பர். எட்டுரெண்டில், எட்டு என்பது அகாரம். அது சந்திரனின் விந்தாகும். இரண்டு என்பது உகாரமாகும். அது சூரியனின் வித்தாகும். சிகாரம் என்ற சுழிமுனையாகும். அது சுடரி என்கிற வன்னியாகும். சந்திரன் என்கிற கலையை சூரிய கலையில் சேர்த்தால் உங்களுடைய முன் பிறவியில் விட்டகுறையும் தொட்டகுறையும் தெரிய வரும் என்கிறார். இனி சுப்பிரமணிய சிவம் என்பவர் பாடலை ஊன்றிநோக்குக.

"பாரடா எட்டிரெண்டு மறியாற் தோசி
பரப்பிர்மந் தன்னுடை பாதங் காணார்
ஆரடா எட்டிரண்டு மோதென்றாக்கால்
அப்பனே அகார மல்லோ சந்திர பீசம்
மேரடா சூரியன்தான் உகாரமாகும்
மேன்மையுள்ள சிகாரமுந்தான் வன்னி வன்னி

Koviloor Digital Library

வேரடா சந்திரனைச் சூரியனிற் சேரு
விட்ட குறை தொட்ட குறை தெரியுந்தானே - 17
சுப்பிரணமணிய சிவம் ஞானம் — 20.

கலை கோட்டு சித்தர் என்பர் எட்டுரெண்டு பற்றி என்ன கூறியுள்ளார் என்பதயும் அறிய வேண்டியது நலமாகும். எட்டுரெண்டு என்று கூறப்படும் சக்தியை நாள்தோறும் வழிபட்டு வந்தால் நமது உடல்சோதி வடிவமாகும். அந்த எட்டுரெண்டு என்ற அகார உகாரப் பொருள்தான் கதவு பூட்டை திறக்கும் திறவுகோலாக உள்ளது என்றும் ஓதுகிறாா. அவருடை பாடலை வாசித்து நேசித்து உணர்க.

தாக்கப்பா எட்டு இரண்டு ஒன்றாய்க் கூட்டி
தன்மையுடன் தானோதச் சோதியாகும்
வாக்கப்பா எட்டு ரெண்டும் கூடியல்லோ
வளமான திறவுகோ லாச்சுதப்பா - 17 என்று

கலைகோட்டு சித்தர் பிர்மதீட்சா ஞானம் 32இல் எடுத்துக் காட்டுகிறார்.

கடுவெளி சித்தர் பாடல் 35இல் எட்டிரண்டு பற்றி என்ன ஓதுகிறார் என்பதைப் பற்றி நாம் காணலாம். எட்டு இரண்டு என்கிற சிவசக்தியாக திகழ்கின்ற சந்திரக்கலையை சூரியக் கலையில் கொண்வந்து நிறுத்தி வந்தால் சுழினை கலை உருவாகும். அந்த சுழினை கலையை வாசி கொண்டு உண்ணாக்கு கதவு பூட்டைத் திறந்து உள்ளே சென்று புருவமத்தியடைந்து அதன்வழியே உச்சி சென்று நின்றால் ஆனந்தம் என்ற மகிழ்ச்சி பொங்கி அதில் துன்பமின்ற இன்புறலாம் என்று ஓதுகிறார் என்பதை கீழ்வரும் பாடலால் அறிக.

"எட்டு யிரண்டையு - மோர்ந்து - மறை
எல்லா முனக்குள்ளே யேகமாய்த் தேர்ந்து
வெட்ட வெளியினைச் சார்ந்து - ஆனந்த
வெள்ளத்தில் மூழ்கி மிருகளி கூர்ந்து - 23

என்று கருவெளி சித்தர் மெய்ப்பொருள் — 35இல் ஓதுகிறார். பாடலில் எட்டு என்கின்ற அகரமான சிவத்தையும், இரண்டு என்கின்ற உகரமான சக்தியையும் இணைந்து அம்மைப்பராகி இலிங்கமாயத் தோன்றினர். இப்படியுள்ளதை உமது அகத்தில் கண்டால் கடினமான பிறவி பெருங்கடலை கடந்து விரும்பியவாறு வானுலகில் குடியிருக்க காணலாம். இதனை,

எட்டி ரண்டும் கூட்டியே இலிங்க மானதேவனை
மட்டதாக உம்முளே மதித்து நோக்க வல்லிரேல்
கட்டமான பிறவிஎன் கருங்கடல் கடக்கலாம்
இட்டமான வெளியினோடு இசைந்திருப்பீர் காண்மினே

என்று ஓதுவதால் அறியலாம்.

இடைக்காட்டு சித்தர் குயிலோடு கிளத்தல் என்னும் பகுதியல் எட்டு இரண்டின் பலனை என்ன கூறுகிறார் என்பதை பார்க்கலாம். எட்டு இரண்டும் என்னவென்று அதன் உள்ளக மறைப்பொருள் அறிந்தவருக்கு எவ்வித இடர் என்கிற தொல்லை ஏற்படாது என்று சுகமான வீடுபேறு கிட்டும் என்றும் பாடுவதை அறிக,

"எட்டிரண்டு அறிந்தோர்க்கு இடர்இல்லைகுயிலே
ஏகாமல் நிற்கில் கதி எய்தும் குயிலே" - 86 என்று

இடைகாடர் என்னும் சித்தர்பாடல் கூறுகிறது.

திருமூலர் ஞானம் 80இல் 8ஆம் பாடலில் எட்டுயிரண்டும் பற்றி நாம் ஓதும் பாடலில் சித்தி முத்தி அமுதம் தர இந்த எட்டு ரெண்டாகும் என்பதை கீழ்வரும் பாடலில,

"சித்திக்கு முத்தி யெட்டுட னிரண்டையும்
அத்திக்கு மென்று அமுதத்தை வாங்கி" - 8

என்பதால் உணரலாம்.

கௌசிக முனிவர் தம்முடைய ஞான சூத்திரம் 30&இல் 1&2&ஆம் பாடலில் கீழ்கண்டவாறு அகாரத்தைப் பற்றி கூறுகிறார்.

அகாரம்தான் கருவானது. விந்துவானது. அகாரம் தான் அன்னையும் அப்பனுமாச்சு. அகாரம்தான் ஆடுகிற வித்தையாச்சு. அகாரம் தான் கண்ணுக்கு எட்டாத எட்டு என்ற பொருளாச்சு. அகாரம் தான் சந்திர சூரியனாச்சு. அகாரம்தான் குருவும் மாணவனுமாச்சு அகாரம் தான் செவவுரை பொருளாச்சி. இப்படியானதால் அகாரத்தோடு இணைந்த உகாரம் என்ற

Koviloor Digital Library

அருள்வடிவாய்யிருந்தாள் அன்னை என்று ஓதுகிறார். இதனைக் குறித்து அப்பாடலை கவனமாக பாருங்கள்.

"அகார மல்லோ கருவுடனே விந்து மாச்சு
அகார மல்லோ அன்னை யொடு தந்தையாச்சு
அகார மலலோ ஆடுகிற வித்தை யாச்சு
அகார மல்லோ கண் காணா தெட்டதாச்சு
அகார மல்லோ மதிவுடன் விதியுமாச்சு
அகார மல்லோ குருவுடனே சீடனாச்சு
அகார மல்லோ வுடதேசப் பொருளு மாச்சு - 2

ஆச்சப்பா அகார முடன் உகாரமாகி
அருளொளியா யிருந்தாளே ஆத்தாள்தான் - 3

என்று கூறுவதோடு நில்லாமல் அதன்நிலையையும் கூறுகிறார். முக்கால் என்று கூறப்படும் மதி — சூரியன் — வன்னி ஆக இவை மூன்று வசப்படும். அதனை மாத்திரை முறை வாங்கல் விடுதல் — நிறுத்தல் செய்தால் எட்டுபொருள்கள் சுத்தமாகும். இதனைப் பற்றி அறியாதவர்களால் ஒருவித பயனும் இல்லை. ஆனால் இதனை அறிந்தவர்கள் மனத்தூய்மையுடன் எட்டு ரெண்டு அறிய வேண்டும். இந்த செய்தியைப் பற்றி தெரியாத மடமையருடன் சேராமல், தமக்கு முத்தி கிடைக்க வேண்டுமென்றால் வாலை என்னும் சிறுபெண்ணை பூசிப்பாய். அப்பலன் பதிமூன்றாம் நிலை மேல் கிட்டும். அதனால் மதியமுதம் கண்டு உண்ட அங்கேயே குடியிருக்கலாம். இப்பாடலை கூர்ந்து ஊன்றி உன்னிப்பாக நோக்குக.

காணவே முக்காலந் தப்பிடாது
கணக்காக அட்டசுத்தி இதனாலாகும்
தோண விந்த நூலறியார்க் கொன்று மில்லை
சுத்தமுடன் எட்டிரண்டும் அறிந்து பாரு
நாண மற்று நூலறியா மடையரோடே
நாடி நீ கூடாமல் முத்தி சித்தி
பேணவே வாலை பதிமூன்றுள்ளாகப்
பெருமையுடன் மதியமுதம் அங்கே உண்டே - 11

என்பதால் அறிக.

கருவூரார் பூஜாவிதி 30இல் 25ஆம் பாடலில் எட்டு இரண்டு என்பது பத்து வயதுள்ள சிறுவாலைப் பெண் என்று கூறுவார்கள். இந்த எட்டு இரண்டு என்பது பரிதி — மதி — சுழினை என்றும் கூறுவார்கள். ஏகமாக ஒரே எழுத்தாக இருந்ததை விடுப்பட்டு நின்ற எழுத்து முக்கோணம் என்று கூறுவார். ஓர் எழுத்திலிருந்து பிரிந்து வாதபாத எழுத்தான அகார உகார மகாரம் அறிவார்களா? அறியார். இவ்வெழுத்து ஓர் எழுத்தாகும் போது தேளின் வடிவமாகு தோன்றும். இதை கூட்டம் கூடி பார்க்காதீர்கள். பலவித தோற்றங்கள் குறியாகப் புலப்படும். அதன் வெளிப்பாடு சுட்ட சுடுகாடு போன்று வெறுமனே காணும். இதனை வெளிப்படையாக கூறினாலும் யாருக்கும் விளங்காது என்பதை கீழ்வரும் பாடலால் அறிக.

எட்டிரண்டு மொன்று மது வாலை என்பார்
இது தானே பரிதிமதி சுழினை என்பார்
ஒட்டிமுறிந் தெழுத் ததுமுக் கோண மென்பார்
உதித் தெழுந்த மூன்றெழுத்தை அறியாரையோ
கொட்டுமொரு கேளுருவாய் நிற்கும் பாரு
கூட்ட மிட்டுப் பாராதே குறிகள்தோன்றும்
சுட்டசுடு காடுமது வெளியுமாகும்
சொல்லுவதற்கு வாய் விளங்கா சூட்சம்தானே -

என்று தெளிவாக கூறுகிறார்.

திருவள்ளுவர் அருளிய ஞான வெட்டியான் 1500இல் 938ஆம் பாடலில், 939ஆம் பாடலில்,

கட்டுப் படாது செம்பது காண் - மூல
காரத்தினால் கரு சேர்ந்தல்லோ கட்டும்
வட்டுப்போ லிறுகியும் வலுவாஞ் - சோதி
வஸ்து வென்ன வாசிமயம் அதுஞ் சேர்ந்தால்
எட்டிரண்டும் பத்துவயதாம் - அது
இங்கித நாதச்சு ரோணிதத்தாலும்
பட்டுவிடும் சரக்கதீதம் - நவ
பாஷாண முதற் கொண்டு பரிசவேதியதாம்
நமசிவயமென்ற தஞ்சு - விந்து
நாதமூன்றெழுத்தையுங் கிலியும் ஓம் சவ்வும்
சமரச மாகும் பத்தெழுத்தும் - குரு
அமிர்தங் கொண்டுவாசி ஊது
அடங்காது அம்உம் மென்று அட்சரம் ரெண்டு
சாமி கடாட் சத்தால் சாதித்தோன் காணும்
எமலபி யகற்றும் இவ்வெழுத்து - எந்தன்
ஆசான் சொல்லவு மினியான் கண்டேனாண்டே

Koviloor Digital Library

என்று ஓதப்படுவதில் செம்பு என்பது நமதுதேகமாகும். செம்புக்கு ஊறல் (சிலிம்பு) என்ற குணம் உண்டு. அதுபோல் தேகத்திற்கும் மாய்க்கை என்னும் சிலிம்பு (ஊறல்) உண்டு. தன்தேகம் ஊறலற்றால் செம்பின் ஊறல் போகும். ஊறல் அகன்றால் பொன்னாகும். அதுபோல் 96 தத்துவங்கள் நீங்கிய தேகம் பொன்தேகம் என்பர்.

செம்பு என்ற பொருளுக்கு குருமருந்து அல்லது கருமருந்து சேர்த்து உருகினால் கட்டுப்படும். அந்த செம்பு வட்டுபோல் இறுகி வலுவாகி நிற்கும். வாசி என்னும் வன்னி எட்டு என்ற அகரம், இரண்டு என்ற உகரம் இணையும் போது, பத்துமாத்து பொன்போல் ஒளிவிடும். இந்த எட்டு இரண்டு என்ற நாதவிந்தால் நவநஞ்சுகள் முதல் வேதியல் முறையால் பொன்மாற்றம் ஏற்படும்.

நமசிவய என்ற ஐந்தெழுத்து விந்துவாகும். இத்துடன் மூன்றெழுத்தாக திகழும் ஐயும் கிலியும் சவ்வும் மற்றும் ஓங்காரமும் நாத எழுத்தாகும். இவைகள் வாசி கொண்டு ஊதினால் அமுதம் ஊறும். அம் உம் மென்ற எழுத்தும் ரெண்டும் சமரசமாக இணைந்தால் பத்தாகும். இதனை குருசாமியின் கடாட்சத்தால் நலமடைந்தேன். கூற்றுவன் தலையெழுத்து அகற்றி விட்டான். எந்தன் குரு இதனை சொல்லவும் அதை நான் கண்டுகொண்டேன் என்ற மேற்கண்ட பாடலில் கூறப்பட்டுள்ளது.

அகத்தியர் தாம் அருளி பூரணம் 1000 என்னும் நூலில் அகாரம் அதன் திரத்தை மிக அழகாக கூறுகிறார். அதனை கூர்ந்து கவனிக்கவும்.

தோணவே அகாரமது சிவமுமாச்சி
தொடு குறிபோ லாத்து மாவைத்தியானம் பண்ணி
பேணவே சிவமான அகாரந் தன்னை
பிலமாக உருவேறச் செபித் தேன்பாரே - 6216

காரப்பா அகத்தீச ரென்றும் பேரு
கருவான அகாரமதின் கருணையாலே - 63/6

இருந்த நிலை பெற்றுதான் அகாரத்தாலே
யேகாந்த மானதுவும் அகாரத்தாலே
அருந்தவசு ஆனதும் அகாரத்தாலே
அட்டாங்க யோகமது அகாரத்தாலே
வருந்தி நின்ற வாசியது அகாரத்தாலே
மருவிநின்ற சிலம்பொலியும் அகாரத்தாலே
பொருந்திநின்ற தீபமதும் அகாரத்தாலே
பூரணமாய் நின்றதுவும் அகாரந் தானே - 64/6

அகத்தியர் பூரண ஞானம் — 1000.

சித்தர் கடைப்பிள்ளை தாம் ஆக்கிய ஞான மந்திரம் 80இல் 36&ஆம் பாடலில் அகாரம் உகாரம் அறிந்து அதனை வழிப்பட்டால் எமன் என்று கூறப்படும் சிலேத்துமம் மூல அனல் கொண்டு எரித்து அதனை அகற்றிவிடலாம். அதனை நீக்கி விட்டால் உமக்கு மறுபிறவி என்ற பேச்சு இல்லை என்று ஓதுகிறார். இதனை அவருடைய கீழ்வரும் பாடலால் அறிக.

"ஆமப்பா அகாரமுடன் உகாரம்ரெண்டு
அறிந்து மனதுரிமை யினாற் கொண்டாயானாற்
போமப்பா கபமான கூற்றவன் தான்
பொருந்தி நின்ற மூல அனல் தானால் மைந்தா
ஓமப்பா ஓமுடிந்த அகன்று போகும்
உத்தமமே மறுபிறவி இல்லை - 36 என்று கடைப்பிள்ளை சித்தர் கூறுகிறார்.

சுந்தரானந்தர் இயற்றிய வாக்கிய சூத்திரம் என்னும் நூலில் 'அகாரம் உகாரம்' பற்றிய நுணுக்கமான செய்தி ஒன்று கூறுகிறார். அகாரம் என்பது சிவமாகும். உகாரம் என்பது சக்தியாகும். சிவசக்தி இரண்டும் கூடியதால் மகாரம் என்ற மவுனநிலை கூடும். அகாரமுடன் உகார மவ்வில் ஊடுருவியதால் கலந்து நின்றது ஓங்காரமாகும். மறை ஆகமங்களில் தீட்சை முறைகள் மறைத்து விட்டதாக ஓதப்படுகிறது என்பதை கீழ்வரும் பாடலில்,

"அறை குவேன் அகரமது சிவமதாச்சு
ஆச்சரியம் உகரமது சக்தியாச்சு
திறைகுவேன் சிவசக்தி விரண்டுங் கூடில்
சேர்ந்தடா மகரமென்று மவுனமாக் கார்
மறைகுவேன் அகாரமுடன் உகாரமவ்விற்
பாய்ந்தொன்றாய் க்லக்க பிரணவமுமாச்சு
மறைகுவேன் தீட்சை யோங்காரந் தன்னை
மாசற்ற நாதாக்கள் மறைத்திட்டாரே - 19
என்று கூறுகிறார்.

Koviloor Digital Library

போக மகா முனிவர் ஞானம் 100இல் பாடல் 81இல்

அறியவே அட்டகர்ம வித்தை நன்றாய்
அடிமுடியும் தெரிந்திடவே கொங்கணையர்
பிரியமாய் அட்சரத்தின் மாறல் சொன்னார்
பேர்பெரிய வாசிசித்தை மறைத்துப் போட்டார்
குறிப்புடனே கொம்புசுழி எட்டிரண்டு
குறு கலின்றி நீண்டதுவே கர்ம வாலை
வெறியான முலம் அந்த மகாரங் கூட்டு
விஞ்ஞை என்ற கர்ம வித்தை கைக்குள்ளாமே –

என்று ஓதப்படுகிறது. கொங்கணர் என்கின்ற சித்தர் எண்தொழில் ஆற்றல் என்னும் செய்தியையும் எழுத்து மாறி போகும் செய்தியையும் விவரமாக கூறினார். மிக முக்கியமான செய்தியான வாசிநிலையை மறைத்து விட்டார். அது என்னவெனில் கொம்பு சுழி என்கின்ற ஓங்காரமாம். அதன் பாதநிலையான அகர் — உகரம் ஆக இவை இரண்டும் விரிவாகயுள்ள கரும வாலையும் அதன் மூலமான மகாரங்கூட்டும் முறையும், அதன் விஞ்ஞை என்ற கருமவித்தையும் நமக்கு சித்தியாகும் என்பதாம்.

கோரக்கர் என்னும் சித்தர் ஓர் சிவயோகியின் அருளால் உலகில் உண்டானவர். இவர் நெருப்பில் இருந்து உண்டானதால் கோரக்கர் என்று பெயர் பெற்றார். இவர் எழுதும் நூல் அனைத்து சித்தர்களிலிருந்து சற்று மாறுபட்டது. இவருடைய தமிழ் தனித்தமிழாகும். சித்தர்களாலும் புரிந்துக் கொள்ள முடியாதயளவு மறைத்து பாடக் கூடியவர். இவர் சந்திரரேகை 200 என்னும் நூலில், எட்டு இரண்டு பற்றியும், சில காவி கட்டிய நபர்களைப் பற்றியும் கூறுகிறார். அப்பாடலை இனி வாசித்துணருங்கள். பாடல் 9இல்

மட்டி லடங்காத நன்னூல் மறைகள் மற்றும்
மனந்தேற உணர்ந்தாலும் மதிதான் காணார்
அட்டி யிறைமதி யதனை அறிந்திட்டாலும்
அலை மனத்தை அகத்தடக்கார்
ஆண்மை கொள்வார்
எட்டிரண்டு மின்னதென்று மியம் பமாட்டார்
எவர்கட்கும் யாங்கள்குரு லென்றே சொல்வார்
திட்டமுடன் பொருள் கேட்டால் சிவன்தன் விட்டுனு
திறமை யென்று ஓதுவார் தீவிரமாய்த் தானே
தீவிரமாய்க் காவியங்கள் உணர்ந்தால் என்ன
திறமையுடன் தினகரனை திருத்திக் கூட்டார்
கோவில் என்றும் குளங்கள் என்றும் குதர்க்கம் பேசி
குரு இருக்குமிடம் காணார் குளத்தைக் காணார்
ஆவியது அடங்கி நிற்கும் தலத்தைக் காணார்
ஆண் பெண்தான் இன்னதென்றும் அறியான் மட்டே
காவி கட்டிச் சாம்பல்பூசிக் கபடங் கொண்டு
காசு பணம் பறிப்பவர் கள்ளர் பாரே – 10

என்று ஓதுகிறார். இவ்விரு பாட்டில் இருக்கும் கருத்து என்ன வெனில் வருமாறு.

கணக்கில்லா நூல்கள் என்று கூறப்படும் வேதங்கள் ஆகமங்கள் கற்று உணர்ந்தாலும் அதன் உட்பொருட் அறிவுயதனை காணமுடியாது. நமக்குள்ளிருக்கும் இறையருள் மதியினை அறிந்தாலும் ஊசலாடும் மனத்தைக் கட்டுப்படுத்தாது தன்னை ஆண்மகன் என்று கூறிக் கொள்வான். எட்டு என்றால் என்ன இரண்டு என்றால் என்ன என்பதை முழுமையாக அறியாததால் அதைப் ப்றறி கூறமாட்டான். தான் அனைவருக்கும் குரு என்று கூறிக் கொள்வான். அதன் உட்கருப் பொருள் என்னவென்று கேட்டால் சிவன் என்றும், விட்ணு என்றும் மிகத்திறமையாக கூறி மதி மயக்த்தை உண்டாக்குவான்.

அடுத்துவரும் பாடலில் ஒருவர் தன்கல்விக் கொண்டு காவியங்கள் படித்து உணர்ந்து என்ன பயன்? ஆனால் தினகரன் என்னும் சூரியனைப் பற்றி கூறமாட்டார். கோவில் என்றும் குளங்கள் என்றும் வீணான சொல்லாடல் செய்து மேல்நிலையில் இருக்கும் குருவையும் காணான். அங்குள்ள குளத்தையும் காணான். ஆன்மா அடங்கி நிற்கும் உச்சி தலத்தையும் காணான். ஆண்பெண் என்பதையும் அறியாத மட்டியாகவும் இருப்பான். காவியாடை உடுத்தி உடல் முழுதும் விபூதி பூதி பொய் நாடகம் நடத்தி காசு பணம் பொருள் ஆக இவைகள் பறித்து உண்பவர்கள் கள்ளர் என்பர் என்பதாம்.

முருகர் மீது மிகுஅன்பு கொண்டு

Koviloor Digital Library

அவன் அருளைப் பாடிய அருணகிரிநாதர் திருப்புகழில் எட்டு இரண்டு பற்றிய செய்தி ஒன்று உள்ளது. அதனைப் பாருங்கள்

"கட்டி முண்டர பாலி யங்கி தனை

- - - - - - - - - - - - - - - -

எட்டிரண்டு மறியாத என்செவியில்

எட்டிரண்டு மிதுவாமிலங்க மென

எட்டிரண்டு வெளி யா மொழிந்த - குரு - முருகோனே

எட்டி ரண்டு திசையோடு செங்குருதி

எட்டி ரண்டு முருவாகி வஞ்சகர் மெ

லெட்டிரண்டு திசை யோர்கள் போன்ற அயில் விடுவானே என்று கூறுகிறார்.

முருகப் பெருமான் அருணகிரி பெருமானுக்கு எட்டு இரண்டு என்ன என்று அதன் மறையகப் பொருள் செவி அருள் செப்பினார். எட்டு இரண்டு என்பது இலிங்கம் என்றும், அதனை வெளிப்படையாக கூறியவர் குருவாக திகழும் முருகப் பெருமானவார் என்பதாம்.

திருமூலர் பிரான் அருளிய திருமந்திரம் 3000த்தில் 963ஆம் பாடலில்,

"எட்டும் இரண்டும் இனிதறி கின்றிலர்

எட்டும் இரண்டும் அறியாத எழையர்

எட்டும் இரண்டும் இருமூன்று நான் கெனப்

பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே - என்பர். எட்டு என்பது. அகரம் இரண்டு என்பது உகரம். அது இரண்டும் இணைவதால் பத்து என் உயிர் உண்டாகும். இக் குறியடையாளம் "ய" என்ற யகரமாகும். இந்த செய்தியை உலகியலார் அறிய வாய்ப்பில்லை. இதையறிய வல்ல அறிவிலார் இரண்டு மூன்று நான்கு என்று கூட்டும் கணிதம் போல் பத்தென்பர். இறையருள் திருவடியே பத்தென்பர். செந்நெறியில் ஓதப்படும் பருமை நுண்மையாகிய திருவைந்தெழுத்து பத்தாகும். இதனையே சிவகுறி என்பர். சிவகொழுந்துவான சிவலிங்கம் என்பர்.

மணிவாசகப் பெருமான் அருளிய திருச்சதகம் கைம்மாறு கொடுத்தல் என்பதில் 49ஆம் பாடலினை ஊன்றி நோக்குக.

கட்ட றுத்தெனை ஆண்டு கண்ணார நீ

றிட்ட அன்பரொ டியா வருங் காணவே

பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை

"எட்டினோ டிரண்டும்" அறியே யனையே

பத்தாம் வாசல் என்று சொல்லப்படும் மூக்குமுனை வாசலினிமுனையை கட்டறுத்து சுழினை வழியே மேலேற்றி சென்று பட்டி மண்டபத்தில் என்னை அமர வைத்தாய். அப்படியிருந்து எட்டி இரண்டு அறியாத என்னை சிறப்பித்து அருளியுள்ளீர் என்று கூறுவாரானார்.

மனவாசங் கடந்தார் அருளிய உண்மை விளக்கம் 32ஆம் பாடலில் எட்டு இரண்டு என்ன என்பதை உணர்த்துகிறார். அதன்பாடலை படித்து உணருங்கள்

எட்டு மிரண்டு முருவான லிங்கத்தே

நட்டம் புதல்வா நவிலக் கேள் - சிட்டன்

சிவாயநம வென்னுந் திருவெழுத் தஞ்சாலே

அவாயமற நின்றாடு வான். என்று ஓதப்படுகிறது.

சிவாய நம என்ற ஐந்தெழுத்து நடுவிலுள்ள யகர உயிர் தான் எட்டு இரண்டாகும். இது இணைவதால் லிங்க வடிவம் தோன்றி அருள்வடிவத்தால் அவ்வுயிருக்கு எவ்வித விபத்து ஏற்படாமல் காத்தருள்வான் என்றார் போலே என்று கூறுகிறார்.

அகத்தியர் எழுதிய அமுத கலைஞானம் 1200இல் 31ஆம் பாடலில் அகரம் உகரம் நாள் தோறும் மனவுறுதியுடன் தியானிக்க வேண்டும். அவனே சித்தனாவான் என்று கூறும் பாடலை கீழ்காண்க.

சேர்க்கையுடன் அகார உகாரம் ரெண்டும்

தினந்தோறும் செபித்தவனே சித்தனாம் - 31 என்று மக்கள் மீது கருணைக் கொண்டு கூறியுள்ளார்.

வள்ளற் பிரான், அருட்பெருஞ் சோதி அகவல் 1131 — 1132 வரிகளில் எட்டு இரண்டு பற்றி ஓதுவதைக் கீழ்வரும் இருவரிகள் உள்ளதை உணருங்கள்.

எட்டிரண்டறிவித்து எனைத் தனி ஏற்றிப்

பட்டி மண்பத்திற் பதித்த மெய்த் தந்தையே என்பார். முதலில் இறைருள் வள்ளலாருக்கு எட்டு இரண்டைப் பற்றி செவிவுரை

Koviloor Digital Library

அருளியப்பின் புருவ நடுவின் கண் விளங்கும் பட்டிமண்டபத்தில் இருக்குச் செய்தார் என்று கூறுகிறார்.

மேலும் அருள்விளக்க மாலை பாடல் 22இல் வடலூர் வள்ளல் பெருமான்,

"எட்டிரண்டும் என்னென்றால் மயங்கிய என்றனக்கே
எட்டாத நிலை எல்லாம் எட்டு வித்த குருவே"

என்று நன்றியுணர்வோடு நினைவுப் படுத்திக் கொள்கிறார்.

தனக்கு எட்டும் இரண்டும் தெரியாது மயக்கநிலையை உணர்ந்து எட்ட முடியாது உயர்நிலைப்படிகள் அனைத்தும் எட்டும்படி செய்த என் அருள்குருவே ஆகும் என்றும் செப்புகிறார்.

மேலும் வள்ளல் பெருமான் திருவருட் பேறு என்று ஓதும் 2ஆம் பாடலில்,

பெட்டி இதில் உலவாத பெரும்பொருள்உண் டிதுநீ
பெறுக வெனஅது திறக்கும் பெருந்திறவுக் கோலும்
எட்டி ரண்டும் தெரியாதேன் என்கையில் கொடுத்தீர்
இது தருணம் திறந்தனை எடுக்க முயல் கின்றேன்
அட்டி செய நினையாதீர் அரைக்கணமும் தரியேன்
அரைக்கணத்துக் காயிரம் ஆயிரங்கோடி ஆக
வட்டி இட்டு நும்மிடத்தே வாங்குவன்நும் ஆணை
மணி மன்றில் நடம்புரிவீர் வந்தருள்வீர் விரைந்தே

பெருமைப் படியான தெய்விகப் பெட்டில் அருமையானப் பொருள் வைத்து பூட்டப்பட்டுள்ளது. அதனை திறக்க வேண்டி எட்டிரண்டு என்ற திறவுகோல் கொடுத்தீர். ஆனால் அந்த திறவுக்கோல் கொண்டு பூட்டைத் திறந்து எடுக்க முயற்சிக்கின்றேன். ஆனால் திறவுக் கோல் இருந்தும் எப்படி திறப்பது என்பதை கூறாது பிடிவதம் செய்யாதீர். அதனை என்னால் பொருத்துக் கொள்ள முடியவில்லை. அதனால் உம்மிடத்தில் கோடி கோடியாக வட்டி கணக்கிட்டு வாங்குவேன். இது மணிமன்றில் நடம்புரியும் இறையருள் மீது ஆணையாகும் என்று வள்ளல் பெருமான் கூறுகிறார்.

முருகப் பெருமான் அகத்திய மகா முனிவருக்கு செவியுரை அருளிய யோக ஞானம் 500 என்னும் நூலில் 121ஆம் பாடலில்,

ஏற்றுவது வாசி மனோன்மணியாள் தேவி
இருதயமே இவளிருந்தே எட்டி ரண்டாய்ச்
சாற்று மொரு விஞ்சை யெனுமுன்றெ முத்துத்
தற்பரத்தைத்தைத் தாவி அதற்கப்பால் மேவு
மாற்று மொன்று மதிகமடாதேகமாக்கி
மனோன் மணியாள் கற்பநிலை மருவிச் சொல்வால்
போற்றும் நிலையறியாத சவுங்கல் தன்னைப்
புழுக் குழியிற் றள்ளி யுந்தான் போக்கு வாயே

என்றும், அடுத்து யோக ஞானம் 500இல் 64ஆம் பாடலில்

ஆச்சடா இதனாலே கவன சித்தி
அம்பல வரனுாதினமு மாட்டைப் பாரு
பேச்சடா வாய்திறந்து பேசிடாதே
பேய்ப்போலே இருந்து மனதறிவில் நில்லு
ஏச்சிடா திரியாதே இந்தப் பேச்சு
எட்டிரண்டும் அறியாத சவங்கள் தானும்
மூச்சடா பிறந்திடத்தில் முனையைப் பாரு
மூவ்வுலகம் தனதாச்சு மோதுமோதே -

எனப்படுகிறது.

தாய் மனோன்மணியின் இருதயமே எட்டிரண்டாகும். அதனை வாசி கொண்டு ஏறவேண்டும். அவரின் விஞ்ஞையின் வித்து மூன்றாகும். தற்பரம் என்னும் நிலைக்கும் அப்பால் கூட உலாவும். தேகத்தின் மாற்றம் பெற்று பொன்தேகமாகும். அத்தாய் யானவள் கற்ப நிலை உண்ணச் சொல்வாள். இவளை வாழ்த்தும் நிலையாதவர்கள் அழி குழியைத் தள்ளி விட்டுச் செல்வாய் என்று கூறுகிறார்.

மேற்கண்ட இதனாலே கவன சித்தி அம்பலவரை அனுதினமும் நந்தியை பாரு. வாய் திறந்து பேசாமல் மௌனமாக இருப்பாய். மனதறிவில் நிலையாக நின்று சாதனை செய்வாய். இல்லையேல் என்றால் எட்டி ரண்டும் அறியாத சவங்கள் ஆவார்கள். மூச்சு பிறந்திடத்தில் சுழினை பார். இப்படிப் பார்த்தால் முவ்வுலகம் தனக்கு சொந்தமாகும்.

சித்தர்களாலும முனிவர்களாலும் கூறப்படும் பாடல்களில் "எட்டிரண்டு"

Koviloor Digital Library

என்று கூறப்படும் சொற்றொடர் கையாளப்படுகிறது. இவர்கள் அனைவரும் முருகப்பெருமான் அகத்திய மகா முனிவர் 'சைவ பீட மரபில்' வந்தவர்கள் என்ற அடையாளம் கண்டு கொள்ளலாம். மேற்கண்ட "மறையகம் பொருள் குரு பரம்பரை" வழியாக வந்துக் கொண்டிருக்கிறது.

வாழையடி வாழையாக இந்த சித்தர் மரபில் வரும் சற்குரு பெருமான் உதவியின்றி மேற்கண்ட "இரகசியப் பெட்டியைத் திறக்க யாராலும் முடியாது" இந்த வள்ளற் பெருமானும் கூறியுள்ளார். உலகில் உதவாத புழக்கத்தில் இல்லாத ஒரு பெரும் பொருள் இந்த எட்டிரண்டும் என்ற மாபெரும் பொருள் பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டுள்ளது என்பதை கூறி, "அதனை திறக்கும் ஒரு பெருந்திறக்கோல் கொடுத்தீர். எட்டிரண்டு தெரியாத நான் அந்த சாவி கொண்டு திறந்து அந்தப் பெரும்பொருளை எடுக்க முயற்சிக்கிறேன். அது திறந்து அநத பெரும்பொருளை எனக்கு கொடுத்துதவ விரைந்து வந்தருள்வீர். என்று தன் குரு பெருமானிடம் விண்ணப்பம் செய்வதையும் காணலாம்.

திறவு கோல் கிடைத்தாலும் திறக்க முடியாத பெரும் பூட்டு அது. அந்த திறவு கோல் கொண்டு குரு பெருமானே தான் திறக்க வேண்டும். வேறு யாராலும் திறக்க இயலாது. இந்த மெய்ஞ்ஞான இரகசியங்களை எல்லாம் ஆதியிலே பூட்டியவர் "ஒருவல்லவர்" என்று வள்ளர்பிரான் கூறியதின் பொருள் உணரலாம். அவர் "எல்லாம் வல்லவர்" நமது முருகப் பெருமான் தவிர வேறு யாராக இருக்க முடியும்?

இது காறும் பல சித்தர் பெருமக்கள் உட்பட முருகப் பெருமான் ஓதும் எட்டிரண்டிடுப் பற்றிய செய்தியை பல மேற்கோள்காட்டி கூறப்பட்டுள்ளது. அகரம் உகரம் என்ற எட்டும் இரண்டும் ஓர் ஆய்வு செய்வோம். இந்த எட்டு இரண்டு என்பது ஓங்கார பாதத்தில் இரண்டு உறுப்புகள் ஆகும் அது பற்றி இனி சிந்தனை செய்வோம்.

எட்டும் இரண்டும் என்பது யாவை? எண் வடிவத்தில் கூற முற்படுவோம்.

எட்டு என்பது ஓர் எண்ணாகும். அது = 8

இரண்டு என்பது ஓர் எண்ணாகும். அது = 2

இவ்விரண்டு உறுப்புக்களும் சேர்த்தால் அல்லது இணைத்தால் அல்லது கூட்டினால் 8+2 = 10 என்ற ஓர் உறுப்பெண் உருவாகியுள்ளது. எட்டும் இரண்டும் தெரியாதவனா? அல்லது அறியாதவனா அல்லது புரியாதவனா? என்றால் எட்டைத் தெரியாதவனா? இரண்டை தெரியாதவனா? எட்டும் இரண்டும் பத்து என்று தெரியாதவன் என்பது பொருளா?

சித்தர் பெருமக்கள் — திருமூலர் — சித்தர் மரபில் வந்த வள்ளலார் — மாணிக்க வாசகர் ஆகி பெருமக்கள் அதனைப் பற்றி அறியாதவர்கள் என்று கூறிக் கொள்கிறார்களே? அது எவ்வாறு? இப்பெருமக்கள் எட்டு என்று கூறப்படும் உறுப்பு எண்ணையும், இரண்டு என்று கூறப்படும் உறுப்பு எண்ணையும் ஆக இவ்விரண்டு சேர்த்தால் பத்தாகும் என்ற செய்தியை அறியாதவர்களா? எட்டு இரண்டும் என்னும் உறுப்பு எண்கள் இணைவதால் பத்து என்பதும் படிக்கத் தெரியாதவர்களுக்கும் தெரியுமே? என்பதும் அறிவார்கள். எட்டும் இரண்டும் என்பது அவர்கள் கூறும் அறியாமையா?

இந்த எட்டு இரண்டும் வேறு ஒருவகையில் சிந்தனைச் செய்யலாம். அதற்கு வேறு ஒரு பொருள் கண்டெடுக்கலாம். இனி அதனைப் பற்றி ஆய்வு செய்வோம்.

எட்டு என்று கூறப்படும் எண் தமிழ் மொழியில் 'அ'கரமாக எழுதப்படுகிறது. இரண்டு என்று கூறப்படும் எண் தமிழ் மொழியில் 'உ'கரமாக எழுதப்படுகிறது. இவ்விரு உறுப்பு எண்கள் 8 = அ; 2 = உ; என்று தமிழில் எண்ணாக எழுதப்படுகிறது. இவை இரண்டும் தமிழ் எண்கள். அ = ஓர் எழுத்தாகும் ஓர் எண்ணாகும். உ = ஓர் எழுத்தாகும். ஓர் எண்ணாகும்.

Koviloor Digital Library

'அ' என்ற உறுப்பு எழுத்தாக எழுதும்போதும் படிக்கும்போதும் அகரமாகும்.

'உ'— என்ற உறுப்பு எழுத்தாக எழுதும்போதும் படிக்கும்போதும் உகரமாகும்.

மேற்கண்ட இரண்டு உறுப்புக்களும் எண்ணாக எழுதும் போதும் "எட்டு" (8) என்பர். அதுபோல் மற்றொன்று எண்ணாக எழுதும்போதும் இரண்டு என்பர். (2)

அகரம் உகரம் ஆக இவை இரண்டும் சுட்டெழுத்துக்கள் என்பர். தமிழ் மொழியில் சுட்டிக் காட்டும் எழுத்துக்கள் மூன்று என்பர். அவை அ, இ, உ என்பர். அ என்பது தொலைவில் உள்ளவை சுட்டிக் காட்டும். இதற்கு சேய்மைச் சுட்டு என்பர். இ என்பது அருகில் உளளவை சுட்டிக் காட்டும். இதற்கு அண்மைச் சுட்டு என்பர். உ என்பது தொலைவு இல்லாமலும் அருகில்லாமலும் இடைப்பட்ட நிலையிலுள்ளவை சுட்டிக் காட்டும். இதற்கு இடைநிலைச் சுட்டு என்பர். அகரம் என்ற சுட்டும், இகரம் என்ற சுட்டும் பெருவழக்கில் வழங்குகிறது. உகரம் என்ற சுட்டு பெரும்பாலும் எப்பொழுதாவது அரிதாக பயன்படுத்தப்படுகிறது.

அகரம் — அவன் — அந்த தூரத்திலிருப்பவை குறிக்கிறது.

இரகம் — இவன் — இந்த — அருகில் இருப்பவை குறிக்கிறது.

உகரம் — உவன் — உந்த — தூரமின்றியும் — அண்மையின்றியும் இடையில் உள்ளவையை குறிக்கிறது.

எட்டும் இரண்டும் தெரியாதவன் என்றால் அகரம் என்ற உறுப்பையும், உகரம் என்ற உறுப்பையும் ஆகிய எழுத்துக்கள் அறியாதவன் என்று பொருள். எழுத்தறிவு இல்லாதவனை "உனக்கு ஆனா. ஆவன்னா" தெரியுமா? "ஊனா ஊவ்வன்னா" தெரியுமா என்று கேட்டு இன்றும் உலகியல் வழக்கில் உள்ள்தை எல்லோரும் அறிவார்கள். 'அ', 'உ'— தெரியுமா என்பது கடந்த கால வழக்காகும்.

தமிழ் மொழியில் அகரம் மற்றும் உகரம் எண்ணாகவும், எழுத்தாகவும் வழங்குவதால் அகரம் உகரம் ஆகிய எழுத்துக்களை அறியாதவன் என்றும், 8,2 என்ற எண்களை அறியாதவன் என்னும் இருவேறு பொருளிலும் "எட்டிரண்டு அறியாதவன்" என்பது வழங்குகிறது. இவை வெளிப்படையான பொருளாகும். வெளிப்படையான பொருளில் அகர உகரத்தை ஞான நிறையுடையோர் வழங்கவில்லை. ஞான நிறையுடையோரின் வழக்கில் அதன் உட்கருப்பொருள் வேறாக இருப்பதை அறியலாம். அதனை இனி சிந்தனை செய்து மன அறிவுக் கொண்டு ஆய்வு செய்யலாம்.

ஓம்காரத்திற்கு ஐந்து பாத உறுப்புகள் உண்டு என்று சித்தர்கள் கூறுவர். ஓம் என்பதற்கு அகரம்+உகரம்+மகரம் இம்மூன்றும் பாத உறுப்பாகும். (அ+உ+ம் = ஓம்) என்பதை எடுத்து காட்டியுள்ளோம். எட்டிரண்டு தெரியாதவன் என்று கூறினால் அகர உகரங்கள் சேர்ந்த ஓங்காரததை அறியாதவன் என்று பொருள் கூறுவர். அகர உகரம் இரண்டு தானே உள்ளது என்பர் மகரம் இல்லையே என்றும் பேசுவார். மூன்றும் கூடினால் தான் ஓங்காரமாகும் என்று வினா எழுப்பலாம். எட்டு இரண்டு என்பது அகரம் என்றும் உகரம் என்றும் நின்றும் "ம்" — மகரமாய் நின்று, அ+உ+ம் = ஓங்காரமாகும். இது வகர உகரங்களை எழுத்தாகக் கெகாணட முறையாகும்.

மேற்கொண்டு வேறுபொருள் 8+2 = 10 என்பர். தமிழில் பத்து என்னும் எண் 'ய'கரமாக எழுதப்படுகிறது. ய = 10 என்பர். அ+உ = ய என்றும் கூறுவர். ஐந்தெழுத்தில் (பஞ்சாட்சரத்தில்) சிவயநம என்பதில் "யகரம்" ஆன்மாவை தொட்டு நிற்கும். எட்டிரண்டும் அறியாமையை எடுத்துக்காட்ட வேண்டி அதனை எட்டிரண்டும் பத்து என்பர். பத்தாகிய (யகரமாகிய) 'ஆ'ன்மாவை அறியாமை என்பது பொருளாகும். இது அகர உகரங்களை எண்ணாகக் கொண்டு காணும் முறைப்பொருளாகும். இதனை

Koviloor Digital Library

திருமூலர்,

எட்டும் இரண்டும் இனிதறிகின்றில்
எட்டும் இரண்டும் அறியாத ஏழையர்
எட்டும் இரண்டும் இருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே - 963

என்று திருமந்திரத்தில் எட்டும் இரண்டும் பத்தென்பது கூறப்பட்டது. இருமூன்று நான்கு = 10. இரண்டும், மூன்றும், நான்கும் சேர்ந்தது பத்தென்பர்.

1. அகரம்+உகரம் = ஓங்காரம் = ஓ
2. அகரம்+உகரம் = ஆன்மா = ய

ஒரு பொருளில் ஓங்காரத்தின் நிலையை உணர்ந்துக் கொள்ளாமை. மற்றொரு பொருளில் தன்னுடைய ஆன்மாவாகிய அறிவை உணர்ந்துக் கொள்ளாமை ஆகி இவ்விரண்டு நிலையை எட்டு ரெண்டு அறியாமையாகும். இவ்விதமாக மெய்ஞ் ஞானிகள் பாடியருளினார்.

வள்ளலாரின் எட்டி ரண்டின் அனுபவத்தையும் அனுபூதியும் நாம் அறிவது நலமாகும். வள்ளலர் பெருமான் தன்னை நோக்கி எட்டும் இரண்டும் தெரியாதவன் என்றுகூறிக் கொள்கிறார்.

"எட்டுரண்டு தெரியாதே" - 3871 என்றும் இவருக்கு முன் ஞானிகளான திருமூலரும், மாணிக்க வாசகரும் எட்டுரண்டு அறியாதவர்கள் என்று கூறிக் கொள்கின்றனர். கீழ்வரும் செய்தியை காண்க.

"எட்டும் இரண்டும் அறியாத என்னை" - திருமூலர்
"எட்டினோடு இரண்டும் அறியனையே" — மணிவாசகர் ஆக இவ்விருவரும் எட்டும் இரண்டும் தெரியாதவன் என்று பாடிக் கொள்ளும் இவர்கள், வடலூர் வள்ளல்பிரானுக்கு இறையருள் வந்து எட்டும் இரண்டும் இன்ன பொருள் என்று உணர்த்தியதாக கூறுகிறார் என்பதை கவனிக்கவும்.

"எட்டி ரண்டு சொல்லினானை" - 3946
"எட்டும் இரண்டும் இது என்றெனக்குச் சுட்டிக் காட்டிய - 5011 என்று ஓதுகிறார்.

திருவாசகம் தந்த மணிவாசகப் பெருமானும், வடலூர் வள்ளலாரும் எட்டும் இரண்டும் அறிந்து பட்டிமன்றத்தில் அமர்ந்தனர் என்பதை கீழ்வரும் அகச் சான்றால் அறியலாகும்.

மணிவாசகப் பெருமகனார் எட்டும் இரண்டும் அறியாதபோது பட்டிமண்டபம் ஏறியதை இறையருளை வியந்து ஓதும் பாடலை படித்துணர்க.

"கட்ட றுத்து எனை ஆண்டுகள் கண்ணாரநீறு
இட்ட அன்பரொடு யாவரும் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடு இரண்டும் அறியேனையே - 53 என்று திருவாசகம் நம்மை உணர்த்துகிறது.

வள்ளல் பெருமானுக்கு எட்டிரண்டு இறையருள் அறிவித்த பின் பட்டி மண்டபம் ஏறியதாக கூறும் செய்தியை அறிக.

எட்டிரண் டறிவித் தெனைத்தனி ஏற்றிப்
பட்டிமண் டபத்திற் பதித்த மெயத் தந்தையே"

திருவருட்பா 4615 (1131 —2) பாடலால் அறிக. மாணிக்க வாசகர் எட்டும் இரண்டும் அறியாத போது பட்டி மண்டபம் ஏறினார். வடலூர் வள்ளல் பெருமான் எட்டும் இரண்டும் அறிந்தபின் பட்டிமண்டபம் ஏறினார் என்பது நலமான செய்தியாகும்.

வள்ளல் பெருமானுக்கு எட்டும் இரண்டும் ஆக இதனை முதற்படி என்றும் அடுத்து வரும் படிகள் அனைத்து இவ்வாறே கண்டு தேறவேண்டும் என்று அருட்பெருஞ்சோதி ஆண்டவர் தனக்கு அருள் காட்டி வழி காட்டினார் என்று ஓதுவதை கீழ் வரும் அகவலில் காணலாம்.

"எட்டிரண் டென்பன இயலும்முற படிஎன
அட்டநின் றருளிய அருட்பெருஞ் சோதி
இப்படி கண்டனை இனிஉறு படிஎலாம்
அப்படி யேனும் அருட்பெருஞ்சோதி - என்பது ஞான தேகம்பெற்ற வள்ளர்பெருமானின் அருட்பெருஞ்சோதி அகவல் நமக்கு உணர்த்துகிறது.

இறையருளால் உந்தப்பட்டு இறையருளையே வணங்கி எப்பொழுதும் நினைந்தும் சிந்தனை செய்தும் பணிந்து தொழுது வரும் அருளாளர்கள் முதலில் காண வேண்டியபடி நிலை எட்டும்

Koviloor Digital Library

இரண்டுமாகும். அதன் மேலேயுள்ள படிநிலைகள் எல்லாம் அப்படியேயாம். ஆகவே முதல் படியாகி எட்டிரண்டு படியை எவ்வளவு சிறப்பும் அவசியமும் உள்ளது என்பதை உணர்தல் வேண்டும்.

ஓங்காரத்தின் உள்ளகத்தை ஆழ்ந்து உணர்தல். அதன் அக அனுபவம் அனுபூதியாக கண்டு உணர்ந்து களித்தல், அதன் உள்ளகத்திற்குச் சிலம்பொலி கேட்டு அனுபவித்தல். இது முதல் படியாகும். தன்னைத்தான் தன் அறிவைக் கொண்டு ஆன்மாவாகிய தன்னை முழுக்க அறிதல் வேண்டும். ஆன்ம தரிசனம் காணுவதும் முதற்படியாகும். தன்னைப் பற்றி தன் அறிவைக் கொண்டு அறிந்தால் தலைவனை (பதிப்பொருளை) அறியலாம். பதிப்பொருளை அறிதல் என்பது சிவம் என்னும் அருள் வடிவின் தரிசனம் காணல் வேண்டும் இது பிறபடியாகும்.

எட்டும் இரண்டும் அறிதல் என்பதற்கு பொருள்யாது எனில்,

சிவராசயோக மார்க்கப் பொருளான ஓங்காரத்தையும் அதன் உட்பொருளையும் அறிதல் ஒன்று.

மௌனம் என்னும் ஞானமார்க்கப் பொருளான ஆன்மாவாகிய தன்னறிவைக் கொண்டு அதன் உண்மை இயற்கை நிலை அறிதல் மற்றொன்று.

வேதாந்தம் என்னும் பொருள் ஓங்காரத்தையும் அதன் உட்கரு பொருளையும் அறிதல் ஒன்று.

சித்தாந்தம் எனனும் பொருள் தன்னறிவால் தன் ஆன்ம காட்சியையும் அதன் உட்நிலையும் அறிதல் மற்றொன்று.

இக்கருத்தை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். இருந்தாலும் திருமூலர்,

எட்டும் இரண்டும் இரு மூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே" - 963

என்று திருமூலர் திருமந்திரம் 3000த்தில் ஓதுவதால் இக்கருத்து மிகச் சிறப்புடையதாகும். சன்மார்க்கப் பாதமாகவது என்பது இயற்கையை ஒட்டிய ஞானபாதமாகும். இரண்டு மூன்று நான்கென்பது பத்து என்பதாகும். சன்மார்க்க பாதம் என்பது ஞான பாதமாகும். ஆகவே ஓங்காரம் யோக பாதம் ஆகும். மேலும் இங்கு ஓதப்படுவது யோகம் ஞான யோகமாகும்.

ஒவ்வொருவரும் தன்னைப் பற்றி அறிவதை குறித்து திருமூலப் பெருமானும், வள்ளல் பெருமானும் மிக அழகாகவும் சிறப்பாகவும் கூறுவதை உள்ளகத்தால் ஊன்றி நோக்குக.

"தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியம் அறிவை அறிந்த பின்
தன்னையே அர்ச்சிகத் தானிருந் தானே" - 2315

என்று கூறுவது திருமூலரின் திருமந்திரமாம் — மேலும் வள்ளர்பெருமான் திருவருட்பாவில் தன்னை அறிதலின் சிறப்பையும், அதன் அவசியத்தையும் அறியும்படி ஓதுகிறார். அதனை ஊன்றி கவனிக்க.

தன்னை அறிந் தின்பமுற வெண்ணிலாவே - ஒரு

தந்திரநீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே - 2849
அருட்பா மூலம் தெரிவிக்கிறார்.

உலகியல் மக்கள் அவர்களைப் பற்றி நாம் கவலை கொள்ள தேவையில்லை நாய்வாலும் அவர்களும் ஒன்று. அருளியலில் வாழ்ந்து வரும் மக்களாவது அறிய முற்பட வேண்டும். இவர்களும் அதில் ஊக்கம் காட்டுவதில்லை. அதனால் நம்மைப் பார்தது எட்டோடு இரண்டு சேர்த்து எண்ணவும் அறியாதவர்களாக இருக்கிறோம் என்று வருந்தப்படுகிறார். "எட்டோடு இரண்டு சேர்த்து எண்ணும் அறியீர் (5556) என்று வள்ளர்பெருமான் அறிவுரை கூறுகிறார். கடந்த கால ஞானிகளும் வள்ளர்பெருமானும் காட்டும் வழியில் நின்று அறிவுரை ஏற்று எட்டிரண்டு என்பதை கண்டுணர்ந்து முயற்சிப்பது மானிட மக்களின் தலையாயக் கடமையாகும் என்பதை யறியச் செய்த இச்செய்தியை நலமுடன் முடிவடைகிறது.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

13.அகாரம் - உகாரம் - மகாரம்

உண்மையான உலக உற்பத்தி உயர்நிலையிலிருந்து உண்டானது. அந்த உயர்நிலை பல அடுக்குகளாக உள்ளது. பரம் என்பது உயர் நிலையானது. அதிலிருந்து பரை தோன்றும். இந்து இருநிலையும் நாதாந்த அடுக்கு நிலையிலிருந்து தோன்றும். அதிலிருந்து ஓங்காரம் உண்டாகும். அதிலிருந்து மீண்டும் அகாரமாகப் பிரிவு தோன்றும். இதிலிருந்து உகாரம் பிரியும். பின் மகாரம் உண்டாகும். இவைகள் மூன்றுமே மேனிலைப் பொருள்களாகும். இவைகளைப் பற்றி இனி பார்ப்போம்.

அகாரம் எவையெல்லாம் குறிக்கிறது. உகாரம் எதையெல்லாம் குறிக்கிறது. மகாரம் எவையெல்லாம் குறிக்கிறது என்பதே இனி வரும் செய்திகளாகும்.

சச்சிதானந்தர் எழுதிய சுழிமுனை என்னும் சூத்திரத்தில்,

"பாரப்பா ஆதாரத் தடுக்கை கேளு
பண்பாக வந்தவகை பரிவாய்ச் சொல்வேன்
பேரப்பா குருவாகிப் பரமுமாகி
பிலத்த தொரு சிவமாகிச் சத்தியாகி
நேரப்பா விந்து சதா சிவமுமாகி
நிலைத்த மயே சுரணாகி ருத்திரனாகிச்
சீரப்பா மாலாகி அயனுமாகிச்
சித்தரமாய்ப் பரம் படைத்த திறத்தைக் காணே - 6

மேற்கண்ட பாடலில் குருபூரணத்திலிருந்து பரமாகவும், அதிலிருந்து சிவமும் சக்தியும் தோன்றி அதிலிருந்து விந்து வெளிப்பட்டு மீண்டும் அதிலிருந்து சதாசிவம், மாஈசன், உருத்திரன், மால் — அயன் ஆக இவர்கள் உண்டாகி அதிலிருந்து ஓவியமாக பரம் படைத்த திறத்தைக் காண்பீர்கள் என்று ஓதுகிறார். அடுத்து வரும் பாடலில்,

அந்த உயர்நிலையிலிருந்து பிறக்கக் கூடிய அக்கரங்கள் தோன்றும் முறையை உங்களுக்கு எடுத்து ஓதுகிறேன். ஆட்சிமையுடைய அ, ஈ, ஊ, ஏ, ஓ ஆக ஐந்தும் உண்டானது. பின் ஓகாரத்தில் இருந்து மீண்டும் அகரம், உகரம், மகரம், தோன்றி நாத விந்து ஐந்தாக நின்று, அதிலிருந்து சிவனுடைய ஐந்து அட்சரங்கள் உண்டாகும்.

அகாரம் இதிலிருந்து சிகார் தோன்றும், உகாரம் இதிலிருந்து வகாரம் நிற்கும். மகாரம் இதிலிருந்து யகாரம் உண்டாகும். விந்துவிலிருந்து நகாரம் உண்டு செய்யும். நாதம் இதிலிருந்து மகாரம் உண்டாகும். இவைகள் ஐந்தும் "சிவய நம" என்று நிற்கும். அதிலிருந்து "நமசிவய" என்று மாறி நிற்கும். கீழ்வரும் பாடலால் அறிக.

"காணப்பா அதிற் பிறந்த அட்சரத்தைக்
கருத்துறவே பிரித்து யான் சொல்லக் கேளு
ஆணப்பர் ஆ - ஈயும் - ஊவ்வும் - ஏயும்
அதீதமாய் ஒவ்வுமது அஞ்சுமாகி
பேணப்பா அதிலிருந்து அகாரந் தோன்றி
பிலத்த உகாரந் தனிலே மகாரந் தோன்றி
நீணப்பா பஞ்சாக்கர நாத விந்தாய்
நின்ற சிவபஞ்சாட்சரத்தின் நிலமைகேளே - 7

கேளப்பா அகாரத்திற் சிகாரந் தோன்றி
கெடியான உகாரத்தில் வகாரந் தோன்றி
வாளப்பா மகாரத்தில் யகாரந் தோன்றி
வளமான விந்துவிலே நகாரந் தோன்றி
வேளப்பா நாதத்தில் மகாரந் தோன்றி
விளைந்த ஞ்சுஞ் சிவய நமா வென்று சொல்லி
நாளப்பா அதிலிருந்து அஞ்சுமாறி
நாடினதோரிது நமசிவாய மாச்சு - 8

என்று சச்சிதானந்த சுழிமுனை சூத்திரம் என்னும் நூலில் வெளிப்படுத்தியுள்ளார். இனி நாம் அகாரம் எது, எதை, எப்படி யென்றும், இதுபோல் மற்ற உகாரம், மகாரம, பற்றி ஆய்வு செய்வதே இந்த செய்தியின் மிக ஆழ்ந்த கருத்தாகும்.

அகாரம் என்பது ஓர் நிலையாகும். ஏகாந்தமாய் நிற்பதும் அகாரமேயாகும். அரும்பெருந்தவமாக நிற்பதும் அகாரமாகும். அட்டாங்கயோகமாவதும் அகாரத்தாலே, வாசியானதும் அகாரத்தாலே. சிலம்பொலி

Koviloor Digital Library

எழுதுவதும் அகாரத்தாலே. தீபமாக மருவி நிற்பதும் அகாரமேயாகும். பூரணமாய் நிற்பதும் அகாரமேயாகும் என்பதை அகத்தியர்,

"இருந்த நிலை பெற்றுத்தான் அகாரத்தாலே
யேகாந்த மானதுவு மகாரத்தாலே
அருந்தவசு ஆனதுவும் அகாரத்தாலே
அட்டாங்க யோகமது அகாரத்தாலே
வருந்தி நின்ற வாசியது அகாரத்தாலே
மருவு நின்ற சிலம்பொலியும் மகாரத்தாலே
பொருந்தி நின்ற தீபமதும் அகாரத்தாலே
பூரணமாய் நின்றதுவும் அகாரத்தாலே - 64 - 6

என்று பூரண காவியத்தில் ஓதுகிறார். மேலும் சுந்தரானந்தர் எழுதிய சுத்த ஞானத்தில்,

"அகார மல்லோ கருவுடனே விந்துவாச்சி
அகார மல்லோ ஆடுகிற வித்தை யாச்சு
அகார மல்லோ கண்காணா தெட்டாச்சு
அகார மல்லோ மதியுடன் விதியுமாச்சு
அகார மல்லோ அகண்ட பரவெளியுமாச்சு
அகார மல்லோ குருவுடனே சீடனாச்சு
அகார மாடவுப தேசப் பொருளாச்சு - 2

ஆச்சப்பா அகாரமுடனுகார மாகி
அருளொளயா யிருந்தாளே ஆத்தாள்தான் - 3 என்று ஓதப்படுகிறது. இதன் பொருள் வெளிப்படையாக இருப்பதால் அறியலாம்.

இந்த அகாரம் — உகாரம் — மகாரம் எங்கு பொருந்தி நிற்கும் என்பதை இனி அறியலாம்.

அகாரம் வலக்கண்ணில் நிற்கும். உகாரம் இடக்கண்ணில் பொருந்தும். மகாரம் புருவ நடுவில் உறையும் என்பதை கீழ்வரும் பாடல் மூலம் தெளிக.

"பார்த்து நீ மாவென்ன புருவமையம்
பண்பான இடக்கண்ணி லுகாரமாச்சு
ஏத்து நீ வலக்கண்ணில் அகாரமாச்சு
என்மக்காள் புருவநடு மகாரமாச்சு - 22

சுந்தரானந்தர் சுத்தஞானம் — 51 சுப்பிரமணியர் சிவம் எழுதிய சுத்தஞானம் என்னும் செய்தியில்,

"கேளப்பா உகாரமது விந்துவாகும்.
கிருபையுள்ள மகாரமது சக்தியாகும்.
ஆளப்பா அகாரமது மூலமாகும்
அப்பனே சிகாரமது வன்னி
வாளப்பா ஊமையென்ற எழுத்தைக் கண்டு
வளமாகத் தெரிந்து கொண்டால் ஞானந்தானே - 10

உகாரம் விந்துவாக நிற்கும். மகாரமது சக்தியாக நிற்கும். அகாரம் மூலமாகும். மகாரம் என்ற ஊமையை அறிந்தால் ஞான நிலை எய்தலாம் என்று கூறப்படுகிறது.

மச்சமுனி சித்தர் தூலஞானம் என்னும் நூலில் ஞானம் என்பது புருவமையம். அதுவே சிவமாகும். கவனித்து பார். அதுவே அகார வடிவமாகும் என்று கூறுகிறார். அவருடைய வாக்குக் காண்க.

"ஞானமென்ன புருவமையஞ் சிவம்
நாடி பாரு அகார வடிவதாம்" - 2

மச்சமுனி சித்தர் தூல ஞானம் — 70.

கடைப்பிள்ளை சித்தர் எழுதிய ஞானமந்திரம் என்னும் நூலில் அகரம் — உகரம் — மனதுரிமையாகக் கொண்டு அதனை வழிப்பட்டால் அவ்விரண்டின் மூலம் அனலின் தாக்கத்தால் கபம் என்ற கோழையான கூற்றுவன் என்கிற எமன் அருகில் நிற்கமாட்டான். இவை இரண்டும் ஓங்காரமாக நின்று மௌனங்கொண்டு ஒரு நிலையில் இருந்து வந்தால் மறவியின் போக்கு மாறிவிடும். அதனால் மறு பிறவி உண்டாகாது என்பதை உணர்த்தும் பாடல் காண்க.

"ஆமப்பா அகாரமுடன் உகாரம் ரெண்டு
அறிந்து மனதுரிமை யினாற் கொண்டாயானாற்
போமப்பா கபமான கூற்றவன் தான்
பொருந்தி நின்ற மூல அனல் தன்னால் மைந்தா
ஓமப்பா ஓமுடிந்து அகன்று போகும்
உத்தமனே மறுபிறவி இல்லை - 30

சுந்தரனாந்தர் சுத்தஞானம் என்னும் நூலில் அகாரம் சிவமாகும். உகாரம் சத்தியாகும். சிவனுந் சக்தியும் ஆக இருவரும கூடிய நிலை மகாரம் என்பர். அதுவே மவுனமாகும். மேலும்

Koviloor Digital Library

கூறவதானால் அகாரம் உகாரம் — மகாரமாகும். இவைகள் முன் கூறிய இரண்டும் ஒன்றில் ஒன்று பாய்ந்து நின்றால் பிரணவமாகும். அந்த பிரணவ தீட்சையே உண்மை விளம்பும் நாதாக்கள் மறைத்து விட்டனர் என்று ஓதுகிறார். கீழ் காண்க.

"அறைகுவேன் அகாரமது சிவமாச்சு
ஆச்சரியம் உகாரமது சக்தியாச்சு
திறைகுவேன் சிவசக்தி யிரண்டுங்கூடிச்
சேர்ந்தடா மகரமென் மவுன மக்காள்
பறைகுவேன் அகாரமுடன் உகார மவ்விற்
பாய்ந்து தொன்றாய் கலக்க பிரணவமாச்சு
மறைகுவேன் தீட்சை ஓங்காரந் தன்னை
மாசற்ற நாதாக்கள் மறைத்திட்டாரே - 19

சுந்தரானந்தார் சுத்தஞானம் — 30.

மேலும் அகத்தியர் எழுதிய சுத்தஞானம் என்னும் நூலில் சில விளக்கங்கள் அவர் கூறுகிறார். அதனை நாம் அறிவது நல்லது.

"அகார மென்ற உகார மடா யெட்டிரண்டு
அடங்கியது மொன்றான பாத தீட்சை
மகார மென்ற மவுனமடா வாலை வாலை
மகத்தான ஆவியடா யேக மாச்சு - 12

அகாரம் என்பது எண்ணில் எட்டு என்பர். உகாரம் என்பது எண்ணில் இரண்டு என்பர். இவை இரண்டும் பாத தீட்சை என்பர். அதில் மகாரமென்ற மவுனமாகும். இவை வாலை என்பர். அதுவே பெருமைமிக்க ஆவியாகி ஏகாரமாக நிற்கும் என்று அகத்தியர் ஓதுகிறார். மேலும், அகத்தியர் தெளிவுபடுத்தும் பாடலை படித்தறிய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

"பாரடா எட்டிரண்டு மறியாத் தோசி
பரப் பிர்மந் தன்னுடை பாதங் காணார்
ஆரடா எட்டி ரண்டு மேதென்றாக்கால்
அப்பனே அகார மல்லோ சந்திரபீசம்
யேரடா சூரியன்றா னுகார மாகும்
மேன்மையுள்ள சிகார முந்தான் வன்னிவன்னி
வேரடா சந்திரனைச் சூரியனிற் சேரு
விட்ட குறை தொட்ட குறை தெரியுந் தானே - 17

அகத்தியர் சுத்த ஞான் — 20.

மேலும் அகத்தியர் எட்டு என்று கூறப்படும் அகாரமும், இரண்டு என்று சொல்லப்படும் உகாரமும் ஆக இதனை அறியாதவர்கள் களங்கமுடைய மாயையில் சிக்கியவர்கள். எட்டும் இரண்டும் என்பது என்னவெனில், அகாரம் என்பது சந்திரனின் வித்தாகும். சூரியன் என்று சொல்லுவது உகாரமாகும். இதில் சிகாரமே வன்னி என்ற அக்கினியாகும். இது வேறாகும். சந்திரன் என்னும் இடக்கலையை சூரியன் என்ற பிங்கலையில் சேர்க்க வேண்டும். அதனால் உமக்கு விட்டகுறையும் தொட்ட குறையும் இருந்தால் எல்லாம் தெரியவரும் என்பதாம்.

மேலும் அகத்தியர் தமது அந்தரங்க தீட்சாவில் அகாரம் என்ற சிவத்தையும், உகாரம் என்ற சக்தி ஆக இருவர்களின் தீட்சைகள் நாள் தவறாமல் சிந்தை செய்து வர வேண்டும். அப்படி சிந்தை செய்பவனே சித்தனாக இயலும் என்பதை அவருடைய பாடலைக் காண்க.

"சேர்க்கையுடன் அகாரம் உகாரம் ரெண்டும்
தினந்தோறும் செபித்தவனே சித்தனாவான்" - 31

அகத்தியா அந்தரங்க தீட்சா விதி — 400

மச்சமுனி ஞான தீட்சாவிதியில் மகாரத்தின் தீட்சையைப் பற்றி உணர்த்துவதையும் அறிய வேண்டும்.

மகாரம் என்ற அட்சரத்தால் மவுன உண்டாகும். மகாரம் என்ற அக்கரத்தால் விந்து வளர்ச்சி பெறும். மகாரம் என்ற எழுத்தால் நாதம் வளர்ந்து ஓங்கும். மகாரமே மௌன தீட்சையாகும் என்பதையும் தெரிவிக்கிறார். கீழே அப்பாடலைக் காண்க.

"மகாரத்தனாலே வளர்ந்த மவுனந்தான்
மகாரத்தி னாலே வளர்ந்திடும் விந்து தான்
மகாரத்தி னாலே வளர்ந்திடும் நாதந்தான்
மகாரத்தி னாலே மவுனாயி தீட்சையே" - 65

மச்சமாமுனி ஞான தீட்சை விதி — 100.

மேலும் அதே மச்சமாமுனியார் காரணஞானம் என்னும் நூலில் அகாரம் — உகாரம் — மகாரம் ஆக இவைகளின நுட்பங்களை உணர்த்துகிறார்.

Koviloor Digital Library

அவருடையப் பாடலைக் காண்க.

"ஓங்கார மாவ தென்ன வென்று கேட்கில்
உகாரமொன்று மகார மொன்று அகாரமொன்று
பாங்காக நின்ற பிரணவமே யாச்சு
பாரிந்த கருவல்லோ ஆசான் சொன்னார்
வாங்காத அகார உகாரத்திற் சேர்ந்து
வன்னி நின்ற யிடமல்லோ மகார மாச்சி - 1

தாங்காதே உரைக்கிற் கேசரியைக் காட்டும்
சச்சிதானந்த மென்ற மவுனந்தானே - 1

ஓதப்படும் இப்பாடலில் ஓங்காரம் என்று கூறப்படும் நாதத்ததில உகாரம் ஒன்று, மகாரம் ஒன்று, அகாரம் ஒன்று ஆக இவைகள் மூன்று இணைந்தது தான் பிரணவமாகும். இதன் கருவானது எனக்கு குரு சொன்னார். அகாரம் உகாரம் ஆக இணைந்து வன்னி என்ற அக்கினி நின்ற இடமானது தான் மகாரமாகும். இவை மூன்று இணைந்த இடமே கேசரி என்ற தெய்வ சக்தி எடுத்துக் காட்டும். சத்தி சித்து ஆனந்தம் பெற மவுனந்தான் துணையாகும் என்பதாம் என்று எடுத்து சொல்லப்பட்டுள்ளது.

சுப்பிரமணியர் ஞானம் என்னும் நூலில் அகாரம் பரவெளியில் ஒளியாக விளங்கத் தோன்றியது. அதனில் காற்றும் நெருப்பும் உண்டாக்கி. இகாரம் என்னும் நிலையில் தண்ணீர் — மண் — இவை இரண்டும் உண்டானது. இந்த இரண்டியிருந்து சிவாத்மா என்ற உயிர் உண்டானது. உகாரத்திலிருந்து பூமி, மலைகள், நான்கு வித யோனிகள் உண்டானது. ஓங்காரத்திலிருந்து ஏழுவகை தோற்றங்கள் உண்டாகி உண்மையான இவைகள் அனைத்து பராபத்தினுடய செயல்பாடுகளாகும் என்பதை கீழ்வரும் பாடல் மூலம் அறிக.

"அகாரந்தான் பரவெளியில் லொளி உண்டாச்சி
அதில் நின்ற காற்றுடனே நெருப்புண்டாச்சி
இகாரந்தான் தண்ணீர் மண் ரெண்ட தாச்சு
இதில் நின்றே ஜீவாத்மா தோன்றலாச்சு
உகாரந்தான் பூமி பருவத மாச்சி
உகந்த தொரு நான்கு விதி யோனியாச்சு
ஓகார சுழி வட்ட மெழு தோற்ற மாச்சு
உண்மை பார பரத்தினுட செயல் தானாதி - 85

சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம்
— *100.*

பிரம மாமுனி சித்தர் எழுதிய சுத்த பிரமஞானம் என்னும் நூலில் நமது தேகத்தில் உந்தியின் இடத்தில் ஓங்காரம் நிற்கும். உறுதியான கண்டம் என்னும் கழுத்திடத்தில் வேகாக்கால் நிற்கும். நாட்டத்தில் (புருவ மையம்) சாகாக் கலை நிற்கும். இதுவே பரமான வெளி வீட்டில் அகாரமாகும். குண்டலிக்குள் உகாரமாக இருக்கும். இப்படி இருந்தால் யுக யுகமாக சமாதியிலருந்து வாழலாம். கீழ்வரும் பாடல் காண்க.

"தீரடா வுந்தியிலே ஓங்காரந்தான்
திரமான கண்டத்தில் வேகாக்கால்
பாரடா நாட்டத்திற் காகா சென்னி
பரமான வெளிவீட்டில் அகாரமாச்சு
சேரடா குண்டலிக்குள் உகாரந்தானுஞ்
சிவ சிவ யுக மட்டுஞ் சமாதிக்குள்ளே - 27

பிரம முனிசித்தர் சுத்த பிரமஞானம்
— *36*

சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் என்னும் நூலில், எவர் ஒருவர் சொல்லற்று பிரம நிலையில் தவம் செய்பவர்கள் தேகத்தின் ஓங்காரமென்ற பிரணவம் அண்ட உச்சியில் விளங்கும். இதுவே ஆதி மகா மூலமாகுமாக நிற்கும். அகார நிலையும் உகார நிலையும் உணர்ந்து அருளை நாடி அந்த அருளால் அடுத்து நின்று, அதனால் ஓசையற்ற மேரு என்று சொல்லப்படும் நந்தி நிலையிலிருந்து நீ நின்று அதில் தூங்குவாயாக என்று கூறப்படும் அவரின் பாடல் உணர்த்துவதைக் காண்க.

"தாமென்ற சொல்லற்றுப் பிர்மந் தன்னிற்
சார்ந்து மிக அனுதினமுந் தவமே செய்து
ஓமென்ற பிரணவமே அண்டவுச்சி
உத்தமனே ஆதிமகா மூலமாகும்
ஆமென்ற அகாரமுடன் உகாரங்கண்டு
அருளான அருளை யுந்தானடுத்துச் சென்று
நாமென்ற சொல்லற்று மேருவிற் சென்று
நந்தி தனி லேயிருந்து நாட்டு வாயே - 8

Koviloor Digital Library

சுப்பிரமணியர் சிவம் சுத்தஞானம் — 33

மேலும் சுப்பிரமணியர் சிவம் யோக ஞானம் என்னும் நூலில், கண்ணுக்கு புலப்படாத இடத்தின் கண் அகாரமாகும். அதுவே சிவமாகும். அதன் கண் தோன்றி உகாரம் சக்தியாகும். அறியாமல் இவையிரண்டும் இணைய சுழிமுனையாகும். இது வீணாக இல்லாமல் அதுவே நந்தியாக விளங்குமிடமாகும் என்கிறார். அவரின் பாடலைக் கீழ்க்காண்க.

"காணா யகாரங் கடிய சிவமாச்சு
பூணா யுகாரம் புரிகின்ற சத்தியாம்
தோணாதிது ரெண்டுஞ் சேரச் சுழிமுனை
வீணல்ல நந்தி விளங்கிய நாமம்.

சுப்பிரமணிய யோக ஞானம் — 500

கடைப்பிள்ளை கலைஞ்ஞானம் என்னும் நூலில் இடைக்கலை அகாரமாகவும், பிங்கலை உகாரமாகவும் சுழிமுனையானது மகாரமாகவும், விந்து நாதம் கண்ணொளியாகவும் செயல்படும் என்று கூறப்படும் அவரின் பாடல் காண்க.

"எண்ணவே யிடைகலைதான் அகாரமாச்சு
இன்பமுள்ள பிங்கலைதான் உகாரமாச்சு
உண்ணவே சுழினையது மகாரமாச்சு
உத்தமனே கண்ணொளிதான் விந்துநாதம் -56

என்று கூறுகிறார். மேலும் அவரே சந்திரக்கலை அகாரமாகவும், சூரியக்கலை உகாரமாகுவும், சுழிமுனையே மகாரமாகவும் இருக்கிறது என்பதை,

"காணவே யின்னமொரு கருமானங் கேளு
கருணை வளர் சந்திரகலை அகாரமாச்சி
பூணவே பானுகலை உகாரமாச்சு
பொருந்தி நின்று சுழினையிலே மகாரமாச்சு - 50 என்று கூறுகிறார்.

மேலும் கொங்கணர் மேற்கண்ட நிலைப்பற்றி என்ன கூற வருகிறார் என்பதையும் நாம் அறிய வேண்டும்.

"வாச்சு தென்றால் மூலத்தே அகாரமீசன்
மருவி நின்றால் உகாரமது சக்தியாச்சு
கூச்சென்ற யிரண்டு மொன்றாய்க் கூட நாத
குறியொத்த மவுன மிது கூடு கூடே - 3

கொங்கணர் சுத்த ஞானம் — 16

மேல்மூலம் என்ற இடத்தில் அகாரம் யீசனாக இருப்பார். அவரை மருவி நிற்கும் உகாரம் சக்தியாக இருப்பாள். இவர்கள் இருவரும் கூட நாத மென்ற மவுனமாக இருப்பர் என்று ஓதுகிறார்.

மேலும் கொங்கணர் வேறு ஒருநூலில் அகாரம் மூலத்தில் நிற்கும் என்றும், உகாரம் கண்டத்தில் நிற்கும் என்றும், மகாரம் மனோமணியில் நிற்கும் என்றும், ஆக இவைகள் இணைந்தால் ஓங்காரம் என்ற நாதவடிவமாக ஓங்கி நிற்கும். இதனை,

"அறைகிறே னகார மூலத்தே நிற்கும்
அப்பனே உகாரங் கண்டத்தே நிற்கும்
வறைகிறேன் மகாரம் மனோ மணியில் நிற்கும்
வாகாக வெழுத் தொன்றாய்க் கூடினாக்கால் - 76

கொங்கணர் சுத்தஞான சைதன்யம் — 110.

போகர் என்ற சித்தர் பெருமான் தாம் எழுதிய உபதேச ஞானம் என்னும் நூலில் மனோன்மணி நிலைக்கு மேல் உள்ள எட்டு விரர்கடை மேல் குருபதம் உள்ள நிலையில் அங்கு ஆயிரத்தெட்டு இதழான மலரின் மையத்தில் ஐங்கோணம் தோன்றும். அதன்மேல் அகாரம் உகாரம் மகாரம் விந்து நாதம் ஆக ஐந்தும் நிற்கும். அதனை நீ கண்டுக் கொள்வாய் என்பதைக் கூறும் சித்தரின் பாடலைக் காண்க.

"தானான மனோன்மணியைத் தாண்டி யப்பால்
தனித்ததோ ரெட்டு விரல் மேலே கேளு
கோனான குருப்பதந்தான் கூட்டிப்பாரு
குறிப்பான யிதழா யிரத்தியெட்டு
ஆனான நடுவிலைங் கோணமாகும்
அகாரமாம் உகாரமொடு மகாரமாகும்
நானான நடுமைய நிலை யிற்றானே
நாதமொடு விந்து வைந்து நிற்கும் பாரே - 57

போகர் உபதேச ஞானம் — 150.

சட்டை முனி நுட்ப ஞான நூலில் எல்லோரும் அகாரம், உகாரம் ஆக

Koviloor Digital Library

இரண்டும் அடியாகவும் முடியாகவும் வைத்துக் கொண்டு சொல்லுவார்கள். ஆனால் நடுவாக விளங்கும் ஊமையென்ற இகாரத்தை யாரும் கூறமாட்டார். எல்லோரும் அதனை மறைப்பார்கள். அதன் இரகசியத்தை யாரும் சொல்ல மாட்டார்கள். ஈனர்களுக்கு இதனை காட்டிக் கொடுத்தால் தலைவெடித்து சிதறும் என்று ஓதப்படும பாடலைக் காண்க.

"காட்டுவார் அகாரமொடு உகாரம் ரெண்டும்
கருத்தாக அடிமுடியில் வைத்துக் கொண்டு
ஊட்டு வா ருண்டு பார்மைய கண்டம்
ஊமையெனும் இகாரத்தைச் சொல்லாரப்பா
பூட்டுவார் மவுன மென்ற திதுவேயாகும்
புலையருக்குக் காட்டி னால் தலைதெரிக்கும்
நாட்டுவா ரவரே யிப் படிதான் சொல்வார்.
நான் சொல் சூத்திரமிருபத்தைந்து முற்றே - 25

சட்டைமுனி நுட்ப ஞானநூல் — 25

இராம தேவர் எழுதிய பரை ஞான கேசரி என்னும் நூலில் அகாரம் — உகாரம் — மகாரம் போன்ற சில செய்திகள் தந்துள்ளார். அதனை இனி காண்போம்.

முதற்கலை அகாரமாகும். பிங்கலை உகாரமாகும். இவைகள் கலந்தால் ஓங்கார வடிவமாகும். கருணை பெற்றால் முப்பொருளாகும். அதனைக் கண்டு அதில் நின்றேன்.

அடுத்து பங்கமில்லாத அகாரமடா சிவதீட்சையாகும். சொல்லரிய உகாரம் சக்தி தீட்சையாம்.

அடுத்து திரமாக பார்க்க வேண்டிய வாசியோகம் முடிவாக சொல்லுகிறேன் உறுதியான பிடமாக விளங்குவது நந்தியின் பீடம். ஓங்காரமான அப்பீடந்தன்னில் பரத்தில் ஓங்கி நிற்கின்ற அகாரமும் உகாரமும் ஆக ரெண்டும் அன்பு பூண்டு மனதை அதில் வைத்து இணைந்தால் ஓங்காரந் தன்னில் நாட்டம் உண்டாகும். உறுதியாக மூலத்தினில் அக்கினி கொண்டேறி மகிமை பெற்ற ஓமகுண்ட மென்றே பேராகும்.

இக்கருத்தைக் கொண்ட பாடல் காண்க.

"செல்லந்த முதற்கலைகள் அகார மயமாகும்
திருவான பிங்கலையும் உகாரமயமாகும்
கல்லந்த மானதொரு ஓங்கார ரூபம்
கருணை பெற முப்பொருளுங் கண்டு மிக நின்றேன் - 4

"பங்க மில்லா அகாரமடா சிவ தீட்சையாகும்
பகரரிய உகாரமட சக்தியுட தீட்சை" - 8

திரமாக பார்ப்பதற்கு வாசியோகம்
தீர்க்கமுடன் சொல்லுகிறேன் மைந்தா கேளு
உரமான பீடமடா நந்தி பீடம்
ஓங்கார மானதொரு பீடந்தன்னிற்
பரமான அகாரமுடன் உகாரம் ரெண்டும்
பத்தி கொண்டு ஓங்காரந் தன்னில் நாட்டே
உரமா மூலத்தினிலக்கினி கொண்டேறி
மகத்தான ஓம குண்ட மென்றும் பேரே" - 47

இராமதேவர் பரைஞான கேசரி — 100

மச்சமுனி தூலஞானம் என்னும் நூலில் ஞானம் விளங்குமிடம் புருவ மையமாகும். அதற்கு சிவம் என்று கூறுவர். வான் போல் உயர்வான மனந்தாந் உகாரமாகும். இது இரண்டும் மருவி ஒன்று கூடினால் நாதமென்ற மகாரமாகும். இதுவே மவுன என்பர் என்பதை கீழ்வரும் பாடலைக் காண்க.

"ஞான மென்ன புருவமை யஞ்சிவம்
நாடி பாரு அகார வடிவதாம்
வானமென்ன மனத்தில் உகாரந்தான்
மருவி ரெண்டையுங் கூட்டிட நாதமாம்
காமென்ன மகார மவுனந்தான்
கண்டு கூட கடின மிது மெத்தப் - 8 என்று ஓதப்படுகிறது.

கண்ணாநந்தர் சிவராச யோகம் என்னும் நூலில் திறமையான குருவின் அருளால் அகார தீட்சை பெற வேண்டும். அதற்குப் பின் உகார தீட்சை பெற்று, பின் மவுன மென்னும் மகாரதீட்சை நலம் தரத்தக்க குருவை அறிந்து அவரிடம் தீட்சை பெற வேண்டும் என்பதை,

"வல்லதொரு குருவருளால் அகார தீட்சை
வந்தபின்பு உகாரமடா சக்தி தீட்சை

Koviloor Digital Library

நல்லதொரு மவுனமடா மகார தீட்சை
நலமாகக் குருவறிந்து தீட்சை பெற்று" - 9
என்று மேற்கண்ட சித்தர் கூறுகிறார்.

திருமூலர் சுத்த ஞானம் என்னும் நூலில் தற்பரம் என்பது அகாரமாகும், ஞானமே உகாரம் என்பர். அதுவே சிற்பரமாகும். செறிவுள்ள, மகரம் என்று கூறுவது மாயை ஆகும். சிந்தையில் நிற்கும் மூலமென்று கூறப்படுவது சிகாரமாகும் என்று கூறும் பாடல் காண்க.

"அறிந்த துவுந் தற்பரமே அகாரமாகும்
அறிவுடைய உகாரந் சிற்பரம தாகும்
செறிந்திடு மகாரமதே மாயை யாகும்
சிந்தித்த மூலமதே சிகார மென்பர் - 4 என்று
அந்த சித்தர் பெருமகனார் ஓதுகிறார்.

மேலும் திருமூலர் அகாரத்தின் பெருமையை கூறும் ஞானப்பாடலைப் படித்தறிய வேண்டும். காண்க.

"தெளிவரிய பாதமது அகாரமாகி
சிற்பரமும் தற்பரமுந் தானே யாகி
அளிவரிய சோதியது தானே யாகி
அடி நடுவு முடியாகி யமர்ந்து நின்ற
மொழியரிய முதலாகி மூலமாகி
முச்சுடருந் தானாகி முடிந்த சோதி
சுழியினிலலே முனையாகிக் கோபமாகிச்
சொல்லரிய வெழுத்தென்றே தொகுத்துப் பாரீர்"- 9

தெளிவாக கூறவேண்டுமென்றால் அகாரமே பாதமாகும். அதுவே சிற்பரமாகும். அதுவே தற்பரமாகும். அளவிலா சோதியோக நின்றதும் அகாரமேயாகும். அதுவே அடியாகவும் நடுவாகவும் முடியாகவும் அமர்ந்து நின்றது. மொழிக்கு முதலக்கரமாகவும் முடிந்து நின்ற சோதியெழுத்தாகும். அதுவே மூலயெழுத்தாகும். முச்சுடராகி நின்ற எழுத்தே அகாரமாகும். சுழிமுனையிலே கோபமாகி நின்றதுவும் அகரமேயாகும். அது பற்றியச் செய்தியை விவரிக்க இயலாத அக்கரமே அகாரமாகும். அதனை தொகுத்து பாரீர்.

சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் என்னும் நூலில் அகாரத்தை பற்றி சிறு விளக்கம் தருவதையும் அறிய வேண்டும்.

"பேரப்பா கங்குல் பகல் திடமே யாச்சு
பேராக வந்ததுவே அகாரமாச்சு
சேரப்பா இதுவல்லே ஞானமாச்சு
செப்பாமற் சித்தரெல்லா மறைத்திட்டார் -1

அகாரத்தால் இரவு பகல் உறுதியாச்சு. பெயர் பெற்று நின்றதும அகாரமேயாகும். அகாரமே ஞான நிலையாகும். இந்த உண்மைகள் சித்தர்கள் மறைத்திட்டார்கள் என்று கூறுகிறார்.

நொண்டி சித்தர் செய்த சிவயோகம் என்னும் நூலில் அகாரம் பற்றியும் உகாரம் பற்றியும் என்ன கூறுகிறார் என்பதை அறிவோம்.

அறிவு ஒளி வீசும் தீபம் போன்ற வீடே அகாரமாகும். சொல்ல வேண்டுமென்றால் அது அந்தரங்க அதீதமாகும். மேரு என்ற மாமலை மீது நடுவீற்றிருக்கும் தீபமாகும். அது சொரூப வடிவமாகும். திடமாய்க் குறிக்க வேண்டிய குறிப்பு காண வேண்டும். ஏக்கங்கொள்ள வேண்டிய தாழ்வில்லை நிலையாய் நின்றதில்லை. அகாரம் கண்டவனுக்கும், அகாரத்தில் நின்றவனும், அகார சொரூப வடிவம் பெற்றவனுக்கும் சாவும் பிறப்பும் இல்லை. அதனை சார்ந்து பார். மறதியில்லாமல் அறிவு கொண்டு கண்டால் மூலப்பொருளாகும். அதுவே முப்பாழாகும். நானே நீயாகவும், நீயே நானாகவும் விளங்கும் நலல வீடாகும் என்பதை கீழ்வரும் சித்தரின் ஞான அற்புதப் பாடலைக் காண்க.

"தீபமடா அறிவென்ற அகாரமாச்சு
செப்புகின்ற அந்தரங்க வதீதமாச்சு
தீபமடா மேருநடு சொரூப மாச்சுத்
திடமாய்க் குறிப்பு தனைக் கண்டாயானால்
தாபமடா நீச்சில்லை நிலைப்போ யில்லை
சாவு பிறப்பற்ற தடா சார்ந்து பாரு
ஞாபகமா மூலமடா முப்பாழாகும்
நானோனே நீதுனக்கு நல்ல வீடோ - 10

மேலும் உகாரம் பற்றி கூறும் போது என்ன சொல்ல வருகிறார் என்பதைப் பற்றியும் அறிவது நல்லது. இனி அதனைப்

Koviloor Digital Library

பார்ப்போம்.

"விடான மூலமடா உகார ரூபி
வித்தாரக் காரிமிகு சலிகைக் காரி
பாடான மாயமுள்ள மார்க்கக் காரி
பக்குவமாம் போதையுள்ள வாமரூபி
கேடாக மதி மயக்கி கேட்டைச் செய்வாள்
கிளர்த்த றியாள் மூச்சறியாள் கேளாய்ப்பா
தாடாள மாயமுதங் கொள்ள பேதை
தகமை யுள்ள பூரணியை வணங்கி நில்லே - 11 என்கிறார்.

உகார வடிவமானவள். வீட்டின் நிலை பெற்று நிலைக்க மூலப்பொருளானவள். அவள் வித்தையுள்ளவள். பெருஞ் சலுகை கொடுக்கக் கூடியவள். மாயா வடிவமானவள். ஓர் மார்க்கமாய் விளங்குபவள். பக்குவ நிலை தருபவள். மாயக்காரி. போதை தரும் வடிவம் உள்ளவள். வாம பாகமிடங்கொண்டு விளங்குபவள். அறிவை மயக்கும் தன்மையுள்ளவள். பெருங்கேட்டையும் தருபவள். கிளர்ச்சி செய்யும் போக்கை அறியாதவள். மூச்சுயறியாதவள். பெரும் ஆட்சி நடத்தும் மகா அமுத கொள்ள பேதை மருவமுள்ளவள். பெருந்தனைமை பொருந்திய பூரணி என்ற பெயர் பெற்று விளங்குபவளை வணங்கி போற்றி நிற்க வேண்டும் என்று நொண்டி சித்தர் சிவயோகத்தில் கூறுகிறார்.

சுந்தரானந்தர் என்ற சித்தர் பெருமான் எழுதிய சுத்த ஞானத்தில் மகாரம் என்ன என்பதைப் பற்றி கூறுவது அறிய அவசியமாகும்.

"வாச்சப்பா மகாரமென்றா லென்ன சொல்லு
மைந்தனே ஆவதிலே ரெண்டை சேர்த்தால்
வீச்சப்பா மவுனமது மகார பீடம்
வேதாந்தப் பேச்சை வெளிவிட்டேன் பாரே - 18

என்று கூறுகிறார். அதாவது மகாரம் என்பது என்ன? மகனே கேள். அகார என்ற அட்சரத்தில் இரண்டு என்று சொல்லப்படும் உகார எழுத்து சேர்ந்து கலந்தால் மவுனமது உண்டாகும். அதற்கு மகார பீடம் என்று கூறுவர். இந்த வேதாந்த அந்தரங்கம் மறைப்பொருளை வெளிப்படையாக தெரிவிக்கிறேன் என்று கூறுகிறார்.

கருவெளி சித்தரின் சிவராஜ யோகம் என்னும் நூலில் அகாரம் — உகாரம் — மகாரம் ஆக இவற்றின் பண்புகள் விளக்குகிறார். அச்சித்தர் பெருமான் என்ன கூறுகிறார் என்பதை அறிக. பாடலைக் காண்க.

"வணக்கிலே னெதாற் தென்றால் வலை பூசை
வகை களெல்லாம் உரைக்கின்றேன்
தெளிவாய் கேளு
குணக் கொன்று மில்லாத அகார தீட்சை
கொண்டு செவி மண்டலந்தர்ன கொண்டாயானால்
கணக்கென்ற தேகமது உறுதி யாச்சு
காயமாந் தேமதற் கழிவோ யில்லை
பிணக்க மிலாத் தேகமது வுறுதியானாற்
பேரான வுயிர் பரத்துக்குறுதி யாச்சே - 12

உமக்கு வணங்கும் வழிவகை எளிதாக கூறுகிறேன். வாலை வழிபாடு எல்லாம் உங்களுக்கு உரைக்கிறேன். அதில் அகார மதன் தீடசை ஒன்றாகும். அதனைக் கொண்டு செவி மண்டலத்தில் எடுத்துக் கொண்டால் கணக்கில்லா ஆண்டு வாழும் நிலையில் உனது தேகம் உறுதி பெற்று, அத்தேகத்திற்கு அழிவு இல்லை. குற்றம் ஏதும் இல்லாத தேகத்திற்கு உறுதியாக நிற்கும். அவ்வாறு உறுதியானால் பெருமை பெற்ற உயிரென்ற நிலை பரத்தில் சேரும் வாய்ப்பு பெறும் என்றும் ஓதுகிறார்.

அடுத்து உகாரத்தைப் பற்றி பேசும் போது அவர் கூறும் அற்புதப் ஞானப் பாடலைக் காண்க.

"ஆச் சென்ற சக்தியடா உகார தீட்சை
அதை யுணர்ந்து செபித்திடுவாய் மண்டலந்தான்
பாச்சென்ற வாசியதற்கு உறுதியாச்சு
பரிவான வாசியது பிராணணப்பா
நீச்சதில்லாச் சடீவ னுறுதியானால்
நின்னயமா யாடிடலாம் வேணுசித்து
மாச்சியிலாப் பொருளான பொருளைப் பார்த்து
வகை விபரம் பூசைவிதி மார்க்கந்தானே - 13

என்று கூறப்படும் பாடலில் உகாரம் என்பது சக்தியாகும். அதுவே தீட்சையின்

Koviloor Digital Library

வழிமுறையுமாகும். அந்த வழிபாடு செய்யு முறை உணர்ந்து ஒரு மண்டலம் பூசை செய்க. அதுவே வாசியாக இருந்து செயல்பட்டு நின்று உறுதிபெறும். பரியின் வேகமுள்ள வாசியானது உயிர்வளியாகும் (பிராணன்) தாழ்வு பெறாமல் தேகத்திலுள்ள திருவிளையாடல் புரிய வேண்டிய சித்துகள் பெறலாம். களங்கமில்லா மேலைப் பொருளைக் கண்டு அதன் விரிவான செய்தியை அறிந்து வழிபடும் வழியைக் கண்டு மேலேறுங்கள் என்று கூறுகிறார் என்பதை அறிக.

அடுத்து வருவது மகாரமாகும். அதன் செயல்பாடு வழிகள் காண மனம வேண்டும். மனமே மகார பீடமாகும். அதுவே மருவி நின்றால் விந்துவாகும். அதன் வடிவம் வட்டமாகும். உறுதிக் கொண்டு விந்து என்று அறிந்த பின் மகாரம் என்ற மௌன தீட்சை தேர்ந்துவழி பட்டால் அதுவே ஓங்கார கம்பமாக நிற்கும். அந்த ஓங்கார கம்ப நுனியின் உச்சியின் மேல் அழுத்தமானதொரு வன்னி என்ற சுடர் நிற்கும். அதனை பார்க்க வேண்டுமென்றால் ஆயிரத்தெனிதழ் மலரில் உள்ளே நிற்க, அதிலிருந்து உயிரும் உடலும் காக்கும் அற்புதப் பொருளான அமுதம் அங்கு ஊறும் என்று கூறும் ஞானப்பாடல் காண்க.

"மார்க்கந்தான் காணமன மகார பீடம்
மருவி நின்ற விந்துவடா வட்டமாகும்
தீர்க்கமுள்ள விந்துவென மகாரந்தன்னைத்
தேர்ந்துபா ரோங்காரக் கம்பமாக
காக்கவே கம்ப நுனி மேலே யப்பா
கனமாகி நின்ற தொரு வன்னி தன்னை
பார்க்கவது ஆயிரத்தெண் மலருக்குள்ளே
பாலகனே அமுத மதற் குள்ளே பாரே - 14

மேலும் அடுத்து பாடலில் மகார மென்ற தீட்சையால் அமுதம் ஒழுகும் என்று அதனை உண்டால் என்ன பலன் உண்டாகும் என்பதை அறிய அவரின் அடுத்தப் பாடலைக் கீழ் காண்க.

"பாரே நீ மதியமுதந் தன்மை மைந்தா
பண விடை தானொரு போது உள்ளேகொண்டால்
நேரேயிச் சடலம் அதற்கழிவே யில்லை
நிச்சயமா யுன்தேகம் வலுத்துப் போச்சு
காரேநின் மந்தரிமுந் சித்தி யாச்சு
கருத்தான் முடிவு பொருட் காணலாச்சு
மாறாத அட்ட கர்மஞ் சித்தியாச்சு
மகத்தான சத்தியைப் பூசித்துப் பாரே - 15

கடுவெளி சித்தர் சிவராசு யோகம் — 18

மகாரம் என்னும் மௌன தீட்சையில் இருப்பவர்களுக்கு மதியமுதம் ஊற்று உண்டாகி அதனை நாள்தோறம் பண எடையளவு உண்டு வந்தல் இந்த தேகம் அழியாது. உறுதியாகும். வலிமைப் பெறும். உமக்கு மந்திரங்கள் எல்லாம் சித்தியாகும். கருப்பொருளின் முடிவு காணலாம். எண் தொழிலாற்றல் சித்தி பெறும். பெருமையுடைய சக்தியை வழிபட்டு தேறுக என்கிறார்.

அகத்தியர் சுத்தஞானம் சுறுக்கம் என்னும் நூலில் மூலம் என்ற ஓர் எழுத்து ஓங்காரமாகும். முச்சந்தி என்றுக் கூறப்படும் சூரியன் & சந்திரன் — வன்னி ஆக மூன்றும் கூடியமிடம் முச்சந்தி என்பார்கள், ஓங்காரமே இரண்டு அக்கரங்களுக்கு பாலமாக இருந்து மொழிகள் தோன்றும். இவைகள் இரண்டும் பரவெளியில் சக்தியாகவும் சிவமாகவும் விளங்குவார்கள் என்று ஓதும்பாடல் காண்க.

"மூலமென்ற ஓரெழுத்தைச் சொல்ல கேளு
முச்சந்தி வீதிதனில் ஊமையாச்சு
பாலாமன்ற ஈரெழுத்தே மொழியாச்சு
பரவெளியிலே சத்தி சிவமதுவேயாச்சு - 46

என்று கூறுகிறார்.

மேலும் அகத்தியர் சௌமிய சாகரத்தில் இடது கண் அகாரம். அது சந்திரன். வலது கண் உகாரம். அதுவே சூரியன். சுழிமுனையே மகாரம். அதுவேஅக்கினி. இந்த முறையே சிந்தை செய்க என்று ஓதும் பாடல் காண்க.

"பாரப்பா இடது கண் அகாரஞ் சந்திரன்
பதிவான வலதுகண் உகாரஞ் சூரியன்
நோரப்பா சுழிமுனை தான் மகாரம் அக்கினி
நினைவாக இப்படியே தியானஞ் செய்து - 454

Koviloor Digital Library

மேலும் அடுத்து வரும் பாடலில், அகாரம் சிவமாச்சு. சிவமே உயிராகும். உகாரமது சக்தியாகும். சக்தியே உடலாக அமையும். மகாரம் மவுனமாகும் அதுவே மனிதனை சாயுச்சிய பதவி பெற மவுனமாக செயல்படும் அதுவே சோதியாகும் என்று ஓதுகிறார். அந்த பாடலைக் காண்க.

"பாரப்பா அகாரமது சிவமுமாச்சு
பதிவான சிவமதுதான் உயிருமாச்சு
நேரப்பா உகாரமது சத்தியாச்ச
நேர்மையுள்ள சக்தியது உடல்தானப்பா
சாரப்பா மகாரமது மவுனமாச்சு
சாயுச்சிய மவுனமது சோதியாச்ச - 649

அகத்தியர் சவுமிய சாகரம் — 1200 என்று ஓதுகிறார.

இதுவரையில் நாம் மேற்கொண்ட ஆய்வு மூலம் அகாரம் எதையெல்லாம் குறிக்கிறது. எப்படி செயல்படுகிறது. என்ன பலன் உண்டாகும் என்றும் பார்த்தோம். அதேபோல் உகாரத்தையும் அறிந்தோம். மற்றும் மகாரத்தையும் உணர்த்தியுள்ளோம். சாகாக்கலைக்கு செல்ல ஒவ்வொரு மனிதனும் அவசியம் அறிய வேண்டிய செய்தியாகும்.

அகத்திய பெருமான் இந்த அக்கரங்களைக் கொண்டுணர்த்தும் காப்பு பாடலைக் காண்க.

"உகார மென்ற நாதமடா சக்தி காப்பு
உறுதியுள்ள அகாரமடா சிவமே காப்பு
சிகார மென்ற சோதியடா வாலை காப்பு
சிவ சிவா மகார மென்ற மவுனங் காப்பு
வகார மென்ற பஞ்சகண தீட்சை காப்பு
மகத்தான சடாதார ஆதிகாப்பு
நகாரமுடன் அகார வரை ஓங்காரத்தில்
நாடி நின்ற சூட்சமடா ஆதி காப்பே - 4

என்று தெரிவிக்கிறார். இதனை அறிந்து சாகாத கல்வி கற்று என்றும் இறவாமல் இருக்க இந்த அக்கரங்கள் உங்களுக்கு என்றும் உறுதுணையாக நின்ற அதன்மூலம் ஞானம் பெற உதவும் என்ற அன்பான செய்தியை இனிமையாக நிறைவடைகிறது.

திருச்சிற்றம்பலம்

14. ஆமையும் ஊமையும்

ஊமை இல்லை என்றால் உலகம் இல்லை. ஊமையின் விரிநிலைத் தான் ஆமையாகும். ஆமையின் விரிநிலை இல்லை என்றால் உலகம் இயங்காது. ஊமை என்றால் என்ன? ஆமை என்றால் என்ன? ஊமைக்கும் ஆமைக்கும் உள்ள தொடர்பு எவ்வாறு என்பது இனி ஆராய்வோம்.

ஊமைக்கு சித்தர்கள் பல்வேறு பரிசொற்களால் பொருளை அறியமுடியாமல் மறைத்து கூறியுள்ளனர். அதற்கு 1. ஊமை 2. ஓங்காரம் 3. மகரம் 4. மோனம் 5. வாய்பேசா மந்திரம் 6. இம்மெழுத்து 7. உரை செய்யா பொருள் 8. நடுத்தி 9. சொல்லாத மந்திரம் 10. வாலை 11. மறைகள் அறியா எழுத்து 12. மாவெழுத்து 13. மௌனம் 14. ஊவெழுத்து 15. பரமாத்மா 16. குருசக்தி 17. கண்டறியா எழுத்து சிறந்தமொழி என்பர்.

திருமூலர் திருமந்திரத்தில் ஊமையைப் பற்றிய பாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது. அது இதுவேயாகும்.

"ஊமை யெழுத்தோடு பேசும் எழுத்துறில்
ஆமை யகத்தினில் அஞ்சும் அடங்கிடும்
ஓமய முற்றது வுள்ளொளி பெற்றது
நாமய மற்றது நாமறியோமே - 2158

திருமூலர் திருமந்திரம் — 3000

ஊமை அக்கரம் என்பது வாய்பேசா எழுத்தாகும். ஒலி பிறக்காது. அதாவது 'இம்' = ம் என்பர். திருமூலர் காலத்தில் 16 உயிர் எழுத்துக்கள் + 35 மெய்யெழுத்துக்கள் சேர்ந்து ஆக 51 எழுத்துக்கள் அன்று நடைமுறையில் இருந்தது. அது வட்டெழுத்துக் காலமாகும். இவ்வெழுத்து 25வது மெய்யெழுத்தாகும்.

Koviloor Digital Library

தற்பொழுது சதுர எழுத்து எழுதும் செந்தமிழ் காலமாகும். இதில் 12 உயிரெழுத்துக்கள் + 18 மெய்யெழுத்தும் சேர்ந்து ஆக 30 எழுத்துக்கள் கொண்டு தமிழ் மொழி உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ் எழுத்து நெடுங்கணக்கில் இது 10வது இடத்திற்குரியது. உயிர் புணர்ந்தாலின்றி மெய்யெழுத்து இயங்காது. ஒளியாது. அதனால் அவை ஊமையெழுத்து எனப்படுகிறது.

இந்த மகர அக்கரம் "ஓம்" மொழி சொல்லி கண் ஒரு மொழிச் சொல்லாக நிற்கிறது. "ஓ"கார எழுத்து 16உயிர்களில் 13வது இடத்திலும், செந்தமிழில் 10வது இடத்தில் அமைகிறது. ஓகாரம் என்பது இறையருள் கரு பேரான்மாக்கள் அணுக்கரங்கள் அகரம் + உகரம் என்பதாகும். இந்த இரு அக்கரங்கள் செயல்பட்டு பேசும் எழுத்துக்கள் என்று அறியப்படுகிறது. இந்த இரண்டும் பேசும் எழுத்துக்களான அகர உகரங்கள் மகரத்தோடு பொருந்தினால் "ஓம்" என்று உயர்நிலையில் ஓதப்படுகிறது. இவ்வெழுத்துக்கள் அ = ஆற்றலையும், உ = அறிவையும் குறிப்பிடுவனவாக செயல்படும். ஆற்றல் சக்தியாகவும், அறிவை சிவமாகவும் கூறுவர். சக்தி விந்துவாகவும், சிவம் நாதமாகவும் செயல்படும்.

எனவே இதனை ஆமையகம் என ஓதப்படுகிறது. ஓங்காரத்தில் அ+உ+ம்+விந்து+நாதம் என்று பிரித்து பார்க்கப்படுகிறது. ஓங்கார பஞ்சகம் என்று மெய்ஞ்ஞான நிறையுடையோர் கூறுவர். ஆமையானது தனக்கு தொல்லை வருகால் அதனை உணரும் போது இரண்டு கால் + இரண்டு கைகள் + முகம் ஒன்று ஆக ஐந்து உறுப்புகள் உள்ளடங்கி விடும்.

அதுபோல் "ஆருயிராகிய ஆன்மா இந்த மொழி சிறப்பால் ஐந்துறுப்பையும் தீமையின் கண் அடங்கி, நன்னெறியில் பால் உய்த்தும் நலம் புரியும். அக்காலத்து, அக்காலத்து அவ்வுயிர் "ஓமொழி" வயமாய் நிற்பதால் தன்னறிவாகிய சிற்றறிவு விலகி நிற்கும். இதுவே நாமயற்ற நன்னியல்பாகும்.

ஊமை எழுத்தென்பதை ஓங்கார வடிவாகிய பஞ்சமை வாக்கெனவும், பேசும் எழுத்து வைகரிவாக்கு எனவும் கொண்டு அதற்குதக்கவாறு பொருள் கூறுவாரும் உண்டு. இது ஒருவாறு பொருள் கூறப்பட்டுள்ளது. சித்தர்களின் முறையில் மற்றும் வேறு முறையில் பொருள் கூறவும் செய்கிறார்கள். இனி அதனை ஆய்வு செய்வோம்.

அகத்தியர் சொரூப ஞானம் என்னும் நூல் இவ்வாறு ஓதப்படும் பாடல் வாசித்து அறிக.

"ஆமை யெனும் ஐந்தெழுத்துக் குயிருமாக
யஞ்செழுத்தோ பஞ்சமுக மாகி நின்று
ஊமையனும் ஆதார மாறு மாகி
உற்று நின்ற பரவெளியில் உகார சக்தி
சோம னெனும் வன்னிரவி ஒளியுமாகித்
தொட் டெழுத்தும் விட்டெழுத்தும் மூலமாகி
ஓம் நம சிவாய வென்றைந் தெழுத்து மாகி
ஓடுது பார் உச்சிநடு முடியிற் றானே - 3

அகத்தியர் சொரூப ஞானம் — 16

ஆமையெழுத்து — அகரம் — இகரம் — உகரம் — ஏகாரம் ஓகாரம் என்பர். இதுவே ஐந்தெழுத்து உயிர் என்பர். இதுவே ஐந்து முகமாக விளங்கும்.

ஊமையெழுத்து = மகரமாகும் அல்லது ஓம் காரம் என்றும் கூறுவர். இதுவே ஆதாரம் ஆறுக்கும் நின்று செயல்படும். பரவெளியின் கண் உகார சக்தியானது. மதி — ரவி — வன்னி கலந்து ஒளியாக நிற்கும். தொட்டெழுத்தாகிய சிகரம் விட்டெழுத்தாகிய வகரம் மூலஐந்து எழுத்து உண்டாகும். முன்கூறிய ஆமை எழுத்து இறுதியிலுள்ள ஓம் காரத்திலிருந்து விரிவாகும். இதற்கும். ஐந்தெழுத்து என்பர். இந்த ஐந்தில் அகரம் சிவமாகவும் உகரம் சக்தியாகவும், மகரம் ஊமையாகவும் விந்து வரிவடிவமாகவும் — நாதம் ஒலிவடிவமாகவும் விளங்கும். மீண்டும் அகாரத்திலிருந்து சிகாரம் தோன்றும். உகாரத்தில் வகாரம் தோன்றும். மகாரத்தில் யகாரம் தோன்றும். விந்துவிலே நகாரம் தோன்றும். நாதத்திலே மகாரம் தோன்ற இவைகள் ஐநதும் சிவாயநம என்று நிற்கும்.

Koviloor Digital Library

இதுவே பின் நமசிவாய அனைத்து உச்சிநடு முடியில் தோன்றி ஓடும் என்பதாகும். இதில் ஆமை உலகியலில் உழலவைக்கும். ஊமை முத்திக்கு வழி காட்டும் என்பதாம்.

கருவூரார் தச தீட்சை என்னும் நூலில் ஊமையைப் பற்றி ஒரு பாடலை கூறுவது முத்திக்கு வழிகாட்டுவதாக உள்ளது. அதனை அறிக.

"உரை செய்த பொருளை ஊமையது வைக்
கரை யென்னப் போற்றிக் கருவை யறிந்தே
திரை யென்ன நீக்கித் தெளிவை உணர்த்தும்
புரை யென்ன சடையோன் பூவென்னு மொன்றே
- 24

கருவூரார் தச தீட்சை — 39

ஊமையை நாம் அறிவின் துணைக் கொண்டு ஆராய்ந்து அதன் கருவை அறிய வேண்டும். இதுவே உயிருக்கு விடியும் காலமாகி முத்திக்கு மனிதனை வழிகாட்டும். இராசயோகம் செய்யும் மானிடம் புருவ மத்தியிலிருந்து ஆறு திரைகள் உண்டு. அந்த ஆறு திரைகள் ஊமையால் விலகும் என்பதை தெளிவாக உணர்ந்து புரிசடையோன் என்று கூறப்படும் இறைவன் சிவனை பூவென்னும் ஆயிரத்தெண் மலரில் காண்பதும் ஒன்றேயாகும் என்பது உறுதியாம்.

மறைகள் நான்கு
அறியாத மொழி ஊமை:

அயன் என்னும் பிர்மா நான்கு வேதங்கள் செய்தார். அந்த மறைகளுக்கு ஏக சுழியாக முன் நிற்பது ஊமையாகும். அந்த ஊமையைப் பற்றி நான்கு வேதங்களில் இடம் பெறாததும் அறியாததுமாக உள்ளது என்று கருவூரார் கூறுகிறார். அவர் கூறும் வரிகள் வாசித்துணர்க.

"மறை நாலும் வேதமொழி மறையோன் சொனன்
நான்கினுக்கு யேக சுழி "ஊமை ஊமை"
நாலு மறை யறியாத யெழுத்தை யுள்ளே - 37

கருவூரார் மெய்யருள் நுட்பம் = 51

பிரம முனி பிரம ஞானம் என்னும் நூலில் ஞானம் மற்றும் சித்திகள் பெற வேண்டுமென்றால் மிகக் கடின பணியாகும். மோனம் என்ற அக்கரத்தை நீங்கள் அறிந்தால் மூன்று எழுத்தும் ஐந்தெழுத்தும் ஒன்றில் உருகி வெளியாகும். இதனை நீ அறிந்தாயனால் அமுதச் சாரம் வழிந்து வர அதனை பெற்று உண்டால் ஞானங்கள் சித்திகளும் கைக்கூடும் என்பதை அவருடைய பாடலில் அறியலாம்.

"ஞானமென்று சித்தென்று மிரண்டு வித்தை
நலமான சித்தப்பாக் கடின மெத்த
"மோன மென்ற" யட்சரத்தை யறிந்தாயானால்
மூன்றெழுத்தும் மைந்திலே கசிந்து விடும்
பானமென்ற வமுதத்தை யுண்டாயானால்
பதறாமல் ஞானம் சித்தியாச்சு - 10

பிரம முனி பிரமஞானம் = 36

மேலும் அகத்தியர் சுத்த ஞானம் என்ற தனிபாடலில் மூல என்று கூறப்படும் ஓம் எழுத்து கூறுவதை கேளுங்கள். முச்சந்தி என்னும் வீதி தன்னில் ஊமையாச்சு. முச்சந்தி என்றால் மதி — கதி — சுடரி இணைந்த இடத்தில் ஊமை என்ற சக்தியாகும். அதற்கு மேம்பாலமாக விளங்கும் ஈரெழுத்தான அகர உகரங்கள் சிறந்த மொழியாகும். அதுவே பரம் என்ற வெளியின் கண் சக்திசிவமாகவே இருந்து வரும் என்பதை,

"மூலமென்ற ஓரெழுத்தைச் சொல்ல கேளு
முச்சந்தி வீதிதனில் ஊமை யாச்சு
பால மென்ற ஈரெழுத்தே மொழியாச்சு
பரவெளியில் சக்தி சிவ மதுவே யாச்சு - 4

அகத்தியர் சுத்தஞானம் = 4

சட்டை முனி சித்தர் சூத்திரம் என்றும் நூலில் அகார தீட்சையென்றும் உகார தீட்சை என்றும் உங்களுக்கு குரு செவியுரைக் கூறுவார்கள். அதுவே அடியாகவும் முடியாகவும் கருவாக வைத்துக் கொண்டு ஓதுவார்கள். நடு என்ற ஊமையான எழுத்து என்பது இகாரத்தை ஓதுவார்கள். அதுவே மௌன மென்ற திது என்றும் சொல்வார்கள் என்பதை,

"காட்டுவார் அகார மொடு உகாரம் ரெண்டுங்
கருத்தாக அடிமுடியில் வைத்துக் கொண்டு
ஊட்டுவா ருண்டு பார் மைய கண்டம்

Koviloor Digital Library

ஊமையெனும் இகாரத்தைச் சொல்வாரப்பா
பூட்டுவார் மவுனமென்ற திதுவேயாகும். 25

மேலும் சட்டைமுனி சித்தர் எழுதிய ஞான விளக்கம் என்னும் நூலில் கண் கூறப்படும் அறிவு கொண்டும் மனக் கண் கொண்டு அதில் ஆய்ந்து அறிக. அதுவே கருவாகும். உருவாகும். குருவாகவும் நிற்கும். எண்ணில் உகாரமாகி என்றும் அழியாமல் இருக்கும் ஆத்தாளே ஊமையாகும். ஏழையான எனக்கும் அம்மாள் ஓர் ஏழையாகும் என்பதை,

"கண்ணுமது மனக் கண்ணாற் பதிந்துபாரு
கருவாகும் உருவாகும் குருவுமாகும்
எண்ணு மவ ழியாத ஆத்தாளுமை
யேழைக்கு எம்மாளு மேழைத்தானே - 18
சட்டைமுனி சித்தர் ஞான விளக்கம் - 52


கௌசி முனிசித்தர் ஞான சூத்திரம் என்னும் நூலில் தெளிவாகவும் தேட்டமுடனும் கண்டறியாவெழுத்து என்பது அது ஓர் சிறந்த மொழியாகும். ஏகமென்ற மூலமாகும். அதுவே ஊமை ஊமை என்று ஓதப்படுகிறது. வருத்தமும் வாட்டமில்லாமல் நுட்பமாக ஆராய்ச்சி செய்தால் அது செம்மையான வண்ணமாகும். அதுவே பிர்ம வித்தையுமாகும்.

அவள் ஒரு மாது. அவள் மாதுளம் மலர் போன்ற வண்ண வாலையாவாள். இவளையே முன்னோர்கள் மறைத்து வைத்ததை வெளிப்பட சொல்லி விட்டேன் என்று எனக்கு என் ஆத்தாள் கூறினாள் என்பதை உணர்த்தும் பாடலைக் கண்டு தெளிக.

"தேட்டமுடன் கண்டறியா வெழுத்தான
சிறந்த மொழி யேக மென்ப தூமையூமை
வாட்டமில்லா துன்னிய மத்தித் தாக்கால்
வருநிறன் செம்மைப் பிர்ம வித்தையாமே - 24
வித்தையாம் மாதுமா தளம் பூ வாலை
வேண்டி முன் மறைத்தையும் வெளியாய்ச்
சொன்னாள் - 25

கௌசிக முனிவர் ஞான சூத்திரம் 30

திருமூலர் சோடச ஞானம் என்னும்



நூலில் மானிடர் முக்கியமாக அறிவதும் அதில் கவனம் செலுத்துவதும் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறார். நோக்குவது என்னவென்றால் "வாலை"யைத் தான் அதிகமாக பார்க்க வேண்டும். இவ்வுலகில் அவளை பார்க்காமல் இருப்பவர்கள் உண்டோ என்று கூறுங்கள். ஊர் என்பது அவள் ஊர் பெருமைப்படதக்க பெரிய ஊராகும். இதனை மிகவும் ஆழமாக உன்னிப்பாக கவனிப்பவர்களுக்கு மட்டும் தெரியவரும். அந்த வாலையம்மை புருவ நடுமைத்துள்ளே கம்பீரமாக பூமேடையில் வீற்றிருந்தாள். அவள் அனேக கோடி வடிவங்களாகக் காணப்பட்டாள். பெருமை என்று கருதப்படும் அவன் பெயர் "மௌனி" என்று கூறுவார்கள். அவனே "பேசாத மந்திர" என்று உரை செய்து கூறுவான் என்று திருமூலர் தெரிவிக்கிறார். அதனைக் காண்க.

"பாரென்றால் வாலை யைத்தான் பார்க்கபோமோ
பாருலகிற் காண்பவர்க ளுண்டோ செல்லு
ஊரென்றா "லுவளூரே பேரூராகும்.
உற்றுணர்ந்த பேர்களுக்கே உறுதியாகும்
வோரென்றாற் "புருவநாடு" மைத்துள்ளே
வீற்றிருந்தாள் வெகுகோடி ரூபாரூபி
பேரென்றாலவள் பேரொமௌனி யென்பார்
பேசாத மந்திர மென்று றுரைப்பார்தானே - 7
திருமூலர் சோடச ஞானம் — 16

Koviloor Digital Library

கடைப்பிள்ளை கலைக்கியானம் என்னும் நூலில் ஊமையை என்று கூறப்படும். வாய்பேசா மந்திரம் யாரும் முன்வந்து சொல்ல மாட்டார்கள். அதனை குருசக்தி அல்லது சிவகுரு சொல்ல அறிய வேண்டிய மிக முக்கிய செய்தியாகும் என்பதை இதன்மூலம் அறிக.

"வாத்தியே மவுனத்தை யாருஞ் சொல்லார்
மகாத்தான குருச் சொல்ல அறிய வேணும்" - 94
கடைப்பிள்ளை கலைக்கியானம் — 120.

யாகோப்பு என்ற மதம் மாறிய சித்தர் தமிழ்நாட்டில் இராமதேவராக விளங்கியவர் இவர் சித்தர்களின் தேவையில்ல கட்டுப்பாடும், நிபந்தனைகளை வெறுத்து ககன வழியாக மெக்கா சென்று இஸ்லாமிய கொள்கையை ஏற்று அதில் மதம் மாறியும் அவருக்கு அதில் நிறைவு ஏற்படாததால் மீண்டும் தன்சொந்த நாட்டுக்கு வந்து மௌனியாக யிருந்து முத்தி பெற்றவர். அவர் ஊமையைப் பற்றி ஓதுகிறார். அதில் அவர் மானிடன் ஊமையைப் பற்றி கேட்டால் சித்தர்கள் யாரும் சொல்ல மாட்டார்கள். பழங்காலம் தொட்டு சித்தர்கள் ஊமைப் பற்றி மறைத்துவிட்டனர். பதினெண் சித்தர்கள் கேட்டாலும் கூறமாட்டார்கள். யாகோப்பு ஆகிய நாம் கூறும் அருள்வாக்கு என்னவெனில் ஊமையாகிய எழுத்தைக் கூறுவேன். என்னவெனில் "மகாரம்" என்பதாகும். இதனை கேடுகெட்ட ஈன மானிட மக்களுக்கு கூறக்கூடாது என்று கூறும் அவர் பாடல் காண்க.

"கலங்கியே கேட்டாக்கால் சித்தரெல்லாம்
கருவான ஊமையதைச் சொல்ல மாட்டார்
துலங்கு மந்த பதினெட்டுச் சித்தரையா
தொல்புவியிற் சொல்லாமல் மறைத்து வதைத்தார்.
இலங்குகின்ற யாகோப்பு சொன்ன வாக்கு
எழியான ஊமையதை சொல்வேன் கண்ணே
நலங் கிடைக்கும் "ஊமையது" "மகாரந்"தானப்பா
நலமில்லா யீனருக்கு உரைக்காதென்னே - 179
யாகோப்பு வாத சூத்திரம் — 400

குதம்பை சித்தர் என்பவர் எல்லா ஆருயிருக்கும் முத்தி வழங்கும் ஆற்றலுடையது ஊமை என்றும், ஆமை போல் அலைந்து திரிகின்றவர்கள் அதனை அடக்கி ஊமைக் கண்டால் முத்தி அளிக்க வல்லது என்பதை உணர்த்தும் பாடல் காண்க.

"ஆமைபோ லைந்து மடக்கி திரிகின்ற
ஊமைக்கு முத்தியடி குதம்பாய்
ஊமைக்கு முத்தியடி - என்று ஓதுகிறார்.

இதுகாறும் எடுத்துக் காட்டிய மேற்கோள்களாலும் சான்றுகளாலும் அறிந்து புரிந்து கொண்டிருப்பீர்கள். மானிடன் இறையருள் வேண்டின் கோவில், குளம் பயன்படாது. மடாதிபதிகள் துணை புரிய மாட்டார்கள் அல்லது மற்றவர்கள் துணை புரிய மாட்டார்கள். பயனில்லா வழிபாடுகள் பயன்படாது. மானிடன் தன்னறிவைக் கொண்டு தான் யார் என்று அறிந்து சாகாத கல்வி என்று கூறப்படும் செய்திகள் அறிந்து உன்னை நீ தேற்றுக் கொள்ள வேண்டும். அறிவை நீ அறிந்தால் பிறவி வருவது நின்றுவிடும் என்பதை பல சித்தர்களில் அனேகர் உறுதி செய்துள்ள செய்தியை அறிந்து அதன்வழி நிற்க வேண்டும் என்பதை,

"சாகாமல் இருப்பதற்கு கல்வி யுண்டு
சாக்காடு கொள்வதற்கு விபர முண்டு" - 238
காக புசண்டர் பெரும்காவியம் — 1000

"நாடப்பா சாகாத கல்விதன்னை
நலமாக் கற்பதற்கு வுன்னைத் தேற்றே" - 7
இராமரிஷி சிவயோக ஞானம் — 15

"அறிவை நீ அறிந்தாலே பிறவி போச்சு
அடுத்தாப் போல் பரம பதம் நிலையுமாச்சு - 6
கொங்கணர் மெய்ஞ்ஞானம் — 13

மேற்கண்ட சித்தர்களின் அகச் சான்றர்ல் மக்கள் அனைவரும் உணர்ந்து நடந்தால் சாவைதடுத்த கொள்ளும் நிலை ஒவ்வொருவரும் முத்தி சித்தி பெறுவர். எனவே அன்புடன் கூறும் இனிய எழிலான செய்தி நிறைவடைகிறது.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

15. முத்தி தரும் ஊமை

பெண்ணு மாணும் பிறவி தன் வாழ்க்கை போல்
பிறந்த பின்னி றிவா திரு மாண்பரே - 704

திருவள்ளுவர் சிந்தாமணி — 800

ஊமையானது பூரணத்தின் பூட்டிய திறவு கோல்வாய் திறந்து சொல்லாத பொருள். ஊமை முத்தி தரும் பொருள். பேசாத மௌனம். ஊமை இம்மென்ற மூலம். ஞான தரும் ஊமை. ஊமை என்றால் மோனம் என்பர். தச திட்சையில் ஒன்று ஊமை. அந்தரத்தில் ஒரு ஊமை. பாத தீட்சையில் ஒரு ஊமை. பாத தீட்சையில் ஒரு பாதம். மூன்றாம் பாத தீட்சை ஊமை. இதமான கீதம் ஊமை.

ஊமை மவுனமென்ற பரமாத்மா. ஊமை பரநாத விந்து, மா என்ற ஊமை. ஊமை ஒரு உபதேசம். ஊமை என்பது நடுத்தீ. நாலுமறையும் அறியாதது ஊமை. சொல்லாத மந்திரம் ஊமை. பேசாமந்திரம் ஊமை. பேசாத பிரம வித்தை இன்னும் பலவாறு சித்தர்கள் பரிபாசையில் கூறியுள்ளனர். இந்த ஊமை என்ற பொருளை அறிவதுதான் இந்த செய்தியின் உட்நோக்கமாகும்.

சித்தர் பெருமக்கள் அனைவரும் ஊமை என்னது என்று சொல்வதில்லை என்று கூறியுள்ளன. அது குருமூலம் அறிய வேண்டும் என்றும் கூறுகிறார்கள். குருசக்தி என்பவள் தனக்கு ஊமைப் பற்றி செவியுறை செப்பினார்கள் என்று சுந்தரானந்தர் கூறுகிறார்.

சித்தர் கருவூரார் தாம் இயற்றிய நூல்களில் ஊமைப் பற்றி தெளிவாகக் கூறுகிறார். இனி அவர் கூறும் ஊமையைப் பற்றி அறியலாம்.

"மாப் பெஎ்ற கொங்கணவர் மகிழ்ந்து கூற
வாய் பேசா மந்திரமு மிதுவே மென்றார்.
ஏப்பென்ற சதாசிவன்றா னெனக்குச் சொன்னார்
எல்லோருங் கண்டாக்கால் சித்தராவார் - 2

கருவூரார் தச தீட்சை — 39

மகாரம் தான் பேசாத மந்திரம். மகாரம் என்றால் ஓங்காரத்தின் மூன்றாம் பாதம் (ம்) (அ) இம் என்பர். இத்துடன் உயிர் புணர்ந்தால் ஒழிய பேச முடியாது. அதனால் இதற்கு "இம்" என்று கூறுவார்கள். கொங்கணருக்கு இந்த பேசா மந்திரம் சதாசிவன் சொன்னதாக கருவூராருக்கு செவியுரை செப்பினார் என்று கூறுகிறார். இந்த 'மா' என்ற மௌனப் பொருளை உணர்ந்த வாய்ப் பேசாமல் இருந்தது மோனம் கொண்டால் எல்லோரும் சித்தர்கள் ஆவார்கள்.

ஊமை என்ற பேசா மந்திரம் நான்கு மறைகள் அறியாதது என்றும், அந்த நான்கு மறைக்கு விரிவாக்கம் இந்த ஊமையே ஆகும் என்றும், வேதம் சொன்னவனுக்கும் யேக சுழியாக நிற்பது இந்த ஊமையே ஆகும் என்பதை கீழ்வரும் பாடலில் காண்க.

மறை நாலு வேதமொழி மறையோன் சொன்ன
நான் கினுக்கும் யேக சுழி ஊமை ஊமை
நாலு மறை யறியாத யெழுத்தை யுள்ளே - 37

கருவூரார் மெய்ச் சுருக்கம் — 50

மேலும் கருவூரார் பெண்ணரவம் தீண்டாத ஒருவன் ஊமை விரும்பி சுழியில்யேற்றி அதிகமாக வாசியோகம் செய்தால் அமுதம் ஒழுகும். அதனால் அரவத்தின் விடம் தீண்டினாலும் அரவம் பொசுங்கி போகும். தன் தேகத்திற்கு கெடுதல் இல்லை என்பதாம். வள்ளல் பெருமான் ஒருமுறை பாம்பு தீண்டியபோது அவருக்கு எவ்வித கெடுதலும் ஏற்படவில்லை. ஆனால் தீண்டிய அரவம் இறந்து விட்டது. இதிலிருந்து ஊமையின் பெருமையறிய வருகிறது. கருவூராரின் சொல்லான பாடலை பார்க்க.

உய்குவாய் பெண்ணரவங் கடியா வண்ணம்
ஊமை யென்ற நடுத்தீயை யதிகங் கொண்டால்
பைகுவாய ரவுவிடம் பொசுங்கிப் போகும்
பங்க முனக்கில்லை யடா அங்க மீதில் - 12

கருவூரார் பூஜாவிதி — 30

Koviloor Digital Library

மேலும் ஒருவர் சுத்தமான எண்ணத்துடன் தூய்மையுடன் வெள்ளை உள்ளத்துடன் ஆதி அந்தம் சிந்தையுடன் நடுத்தீயை என்று கூறப்படும் சுழிமுனையில் சொல்லாத மந்திரமான ஊமையைக் கொண்டால் முத்தி பெறலாம் என்று கூறும் பாடலைக் காண்க.

"சுத்தியுடன் ஆதியந்தம் மனதில் வைத்தச்
சொல்லாத மந்திரத்தின் தீயை மூட்டு" - 21

கருவூரார் பூஜாவிதி — 30

மேலும் பேசா மந்திரத்தின் பொருளுரை உணர்ந்து அதனை வாழ்த்தி அதன் கருவை அறிந்து சுழினையில் ஏற்றி மௌனமாக ஆழ்நிலை மௌனத்தில் இருந்தால் திரைகள் விலகி தெளிவான நிலைப் பெற்று பூமலரின் மீது அமர்ந்துள்ள அருட்சிவமான சடையோனை கண்டு பெருமையடையலாம்.

உரை செய்த பொருளை ஊமையது வைக்
கரை யென்னப் போற்றிக் கருவை யறிந்தே
திரை யென்ன நீக்கித் தெளிவை யுணர்த்தம்
புரை யென்ன சடையோன் பூவென்னு மொன்றே
- 24

கருவூரார் தச தீட்சை — 39

மேலும் கருவூரார் சிவஞான போதம் என்னும் நூலில் தான் யார் என்பதையும், தன்னைத் தானறிந்தும், தன்னறிவின் நிலையும் அறிந்து, தானசையாமல் மௌனமாய் இருந்து நானெனவும் பேசப்படாத எழுத்தையறிந்து ஊமையின் பேச்சு என்பது நான் நீ நான் என்று கூறியும், அதன் மெய்நிலையறிந்து, தேன் போன்ற அமுதச்சாறு உண்டு. அதன் விளைவால் உலகமனைத்தும் ஒன்றும் இல்லை என்று அறிந்து மிக உயர்ந்த பராபரமான இடத்தில் இணைந்து கோடியுகக் காலம் ஊழிவரை அழியாமல் இருக்கலாம் என்று கூறப்படும் மிக அற்புதப் பாடலைக் காண்க.

தானெனவுந் தன்னை யுந்தா னறிந் தானானாற்
றானசைய அசையாம லிருந்து கொண்டு
நானெனவு மெழுத்தறிந்து ஊமைப் பேச்சு
நானீநா னென்ற சொல்லி யுண்மைபேசித்
தேனனவு அமுதமது பானமுண்டு
செக மெல்லா மொன்று மில்லை யென்று பூண்டு
கோ னெனவும் பரா பரத்திற் சேர்ந்து கொண்டு
கோடியுகம் ஊழிவரை யிருப்பார் காணே - 31

கருவூரார் சிவஞானபேதம் — 43

மேலும் கருவூரார் தீட்சா விதி 39இல் மா என்ற திரு எழுத்தானது நாதமாகும். அதுவே வாய் பேசாத ஊமை எழுத்து என்று வகுத்து வைத்தனர் என்று அவர் கூறும் பாடல் காண்க.

"மா னென்ற திருவெனவே யிருந்த நாதம்
வாய் பேசா "ஊவெழுத்து வகுத்த வாறே" - 39

கருவூரார் தச தீட்சை — 39

மேலும் கருவூரார் மெய்ச் சுருக்கம் என்னும் நூலில் பேசு என்று பேசும் பேசாதப் பேச்சைப் பேச பேச்சறிந்து தேடி அலைந்து திரிவது போலாச்சு அதனை பார் என்று உணர்த்தும் பாடல் காண்க.

பேச்சென்றும் பேசாத பேச்சைப் பேச
பேச்சறிந்து திரிவது போலாச்சு பாரு - 33

கருவூரார் மெய் சுருக்கம் — 50

அடுத்து மச்சமுனி சித்தர் ஞான தீட்சாவிதியில் மவுனம் என்பது வாலையின் வசமாகாது என்று உரை செய்யார். தவன சதாசிவனும் தானும் பொருளுரையான் கெவனிகள் என்று கூறப்படும் சித்தர் கூட்டமும் அதனைப் பற்றி பேசார். தவத்தின் மேன்மை பொருந்திய உயர்ந்தோர்கள் தானுரையார் என்றும் கூறப்படும் சித்தர் பாடல் அறிக.

"மவுனத்தின் வாலை வசமா யுரைக்கிலார்
தவன சதாசிவன் தானுமுறை பேசார்
கெவனத்தின் சித்தர் கேட்டாலும் பேசார்
தவபோதனர்களுந் தானுரை யார் கேளு" - 43

மச்சமுனி ஞான தீட்சா விதி — 100

பிரமாநந்தர் சித்தர் பாடலின் தொகுப்பில் பேசாதிருக்கும் மௌனங்கள் என்பது பேச தெரிந்தவர்களுக்கு மட்டும் ஆசான் என்று கூறப்படும் குரு செவியுரையாகும் என்று அறிவுடையோர்கள் தான் அறிவார்கள் என்று கூறும் பாடல்.

Koviloor Digital Library

"பேசா திருந்த மௌனங்க ளென்பது பேசத் தெரிந்தோர்கள்
ஆசா னுரைத்த உபதேச மென்று அறிவுள்ளோர் தான்றிவார்"-16

பிரமானந்தர் சித்தர் தொகுப்பு
பாடல் — 34

இனி அகத்தியரின் தெளிவான கருத்து என்ன என்பதை நாம் அறியவேண்டும். அன்னார் ஊமையைத் தரும். அவரின் தெளிவான சிந்தனையில் தோன்றிய எளிய நடையிலுள்ள கருத்துக்கள் படிக்க வியப்புத் தரக்கூடியது. இனி அவரின் ஆய்வனுபவத்தில் கண்ட உண்மைகள் என்ன என்று கூறுவோம்.

"மூலமென்ற் ஓரெழுத்தைச் சொல்ல கேளு
முச்சந்தி வீதிதனில் ஊமையாச்சு
பாலமென்ற ஈரெழுத்தே மொழியாச்சு
பரவெளியில் சக்திசிவ மதவே யாச்சு" - 4

அகத்தியர் ஞானம் — 40

மூலம் என்பது ஓம்காரம். முச்சந்தி அகாரம். உகாரம் — மகாரம் என்பர். இதில் மகாரம் ஊமையாச்சு. அதில் பாலமாக நின்றது உகாரம் அகாரமாகும். இவை இரண்டும் இரண்டு மொழியாச்சு. அதுவே பரவெளியின் கண் சக்தியாகவும் சிவனாகவும் உருவானது என்று கூறப்படுகிறது.

ஊமையாது பரம் என்ற நிலை படைத்தது. அந்த பரமான ஈரெழுவுலகமாக விரிந்து படர்ந்தது. அந்த ஊமையானது பரநாத விந்தாக நின்று சித்தர்கள் ஆனார்கள் என்பது அகத்தியர் மர்மஞானம் 7இல் கூறும் அருமையான வரிகள் கற்க.

ஊரே நீ கேட்ட தெல்லாம் முவந்தளிப்பார்
ஊமை பரநாத விந்து சித்தராச்சு" - 3 என்று கூறப்படுகிறது.

அகத்தியர் மேலும்

படமாகி யீரேழு வுலக மெல்லாம்
படைத்த பரம் ஊமை யென்றே பகிர்ந்து பாரே - என்று சொரூப ஞானம் 19இல் கூறுகிறார்.

சட்டைமுனி ஞான விளக்கம் என்னும் நூலில் ஊமையைப் பற்றி பேசுகிறார். அவர் கூறும் விளக்கமறியலாம்.

"ஏழையவள் தாளெழை நானுமேழை
எனை யறிந்தேன் என்னைத்
தாய்தியானம் பண்ண
நாளையல்ல பின்னையல்ல க்ஷணத்திற் கேளு
நவிலாத வூமை யெழுத் துனக்கே சித்தி
வேளையிது பாருனக்கு ஆத்தாள் பாதம்
விருது பெற அர்ச்சித்துத் தியானம் பண்ணு
காளை தனிலேறி வருமீசன் சக்தி
கை கண்ட சக்தி தருமையு மாச்சே - 19

சட்டைமுனி ஞான விளக்கம் — 52

தாய் என்பவள் வாலையாவாள் அவள் ஏழையாவாள். நானும் ஏழையாவேன். நான் என்னை அறிந்தேன். என்னை அறிய தாயின் திருமந்திரம் மௌனமாக ஆழ்நிலையில் மௌனமாகச் சிந்தித்தேன். நாளையல்ல. பிள்ளையல்லா. சணநேரத்தில் சொல்லாத மந்திரத்தை உணர்த்தி அது உனக்கே சித்தியாகும் என்று கூறினாள். அந்த வேளையில் பாரருனக்கு ஆத்தாளின் திருவடி தீட்சை பெற்றேன். காளை மீது அமர்ந்து வரும் சிவசக்தி கைக்கண்ட சக்தியின் அருமை உணர்ந்தேன் என்று மேற்கண்ட பாடலில் உணர்த்துகிறார்.

மேலும் சட்டை முனியார் சூத்திரத்தில்,

"காட்டுவார் அகாரமொடு உகாரம் ரெண்டுங்
கருத்தாக அடிமுடியில் வைத்து கொண்டு
ஊட்டுவார் உண்டு பார் மைய கண்டம்
ஊமையெனும் இகாரத்தைச் சொல்லாரப்பா
பூட்டுவார் மவுனமென்ற திதுவேயாகும் - 25

சட்டமுனி சூத்திரம் — 25

அகார உகாரங்கள் உங்களுக்கு எல்லோரும் காட்டுவார்கள். அது அடிமுடியாக வைத்துக் கொண்டு உங்களுக்கு போதிப்பார்கள். மைய கண்டம் என்று ஓதப்படும் ஊமை என்ற 'இம்' என்னும் ஊமையை யாரும் கூறமாட்டார்கள். அதற்கு பூட்டு போட்டு மறைத்து மவுனம் என்று கூறி மழுப்புவார்கள் என்று கூறுகிறார்.

சுந்தரானந்தர் சிவயோக ஞான என்னும்

Koviloor Digital Library

ஊமையின் செவியுரை வழங்க வாலை என்னும் ஆயி வந்து உரை செய்வாள். அதனை வாய் பேசாமல் மவுனம் கொள்க. அந்த மவுனம் செய்ய செய்ய தூய்மையான வாசியானது உன்னை மேலேற்றும். கவுன வழியோட அமுதமானது குளிகையாகக் கட்டும். கேசரம் என்னும் கேசரித்தாயின் ஒளியானது கட்டுக்கடங்காது ஒளிவீசும். அப்பொழுது உறக்கமில்லை. பசியில்லை. மரணமில்லை. இந்த தேக சட்டை சூரியஒளி போல் சுடர் விட்டு வீசும். உலகில் தேகமாற்றம் உண்டாகி தேகத்தின் சாயை பொய்யாகும். தேகத்தின் நிழல் தரையில் விழாது என்று கூறப்படுகிறது. ஊமையே பூரணத்தின் பூட்டில் பூட்டுவாகுமே என்று கூறும் அற்புதப் பாடலைக் காண்க.

"வந்து உனக்கு உபதேசம் ஆயி சொல்வாள்
வாய்திறந்து சொல்லாதே மவுனம் உண்ணே - 8

மவுனமுள்ள மவுனமுன்ன மவுனமுன்ன
மாசற்ற மவுனமுன்னை வாசித் தூக்கும்
கவுன வழியோடுதற்குக் குளிகைக் கட்டும்
நேசர மெல்லா மடங்கா வொளிதான் வீசும்
தவன மில்லை பசியில்லை சாவுமில்லை
சட்டைக்குத் தேகமது அருணன் போலாகும்
புவன மதில் மாற்றமுந் தான் தேகச் சாயை
பொய்யடா பூரணத்திற் பூட்டு வாமே - 32

மேலும் சுந்தரானந்தர் திட்சா விதியில் பேசாத மந்திரம் ஆழ்நிலை சிந்தனையின் மவுனங் கொண்டால் காயசித்தி வலிமை பெறும் என்றும் ஓதும் பாடல் காண்க.

"பேசாதே முன் மவுனங் கொண்டாயானால்
பிலக்குமடா காயசித்தி பிலக்குமடா" - 43

சுந்தரானந்தர் திட்சா விதி — 51

அடுத்து உரோம மாமுனி சித்திர் பிர்மஞானம் என்னும் நூலில் ஒளிபடைத்த அறிவுக் கண்ணால் காண்க. அது வெளியான அண்டமென்ற உச்சியாகும். உச்சி என்ற அண்டமீதில் உண்மைப் பொருள் உணர ஒளியான அறிவின் கண் மேலே பாய்ந்தால் சிவாத்மா பேசாத மௌனம் என்ற பரமாத்மாவும் தனித்தனியாக உள்ள இவைகள் இரண்டும் இணைந்தால் சிவவடிவமாகி வெளியுமானுள்ள பரத்தில் இணையும் என்பதை கூறும் பாடலைக் காண்க.

"பாரப்பா ஒளிவான அறிவின் கண்ணும்
பதிவான வெளியது தான் அண்டத்துச்சி
நேரப்பா அண்டமென்ற உச்சி மீதில்
நீசமான அறிவின்கண் மேலே பாய்ந்தால்
பேராப்பா பெற்றதொரு சீவாத்மாவும்
பேசாத மவுனமென்ற பரமாத் மாவும்
சேரப்பா ஒன்றிரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்தால்
சிவ சிவா வெளி யொளியாய்ச் சேரு பாரே" - 7

உரோம மாமுனி பிர்மஞானம் — 18

மேலும் மேற்கண்ட சித்தர் வழலை என்னும் நூலில் சுழிமுனையினால் வாசி என்ற வன்னி அக்கரத்தினால் காணலாம். ஆத்தாளின் உகார பாதம் என்றும், வாசியின் துருத்தியினால் கனலைத் தூண்டி, அந்த கனலினாலே அமுதச்சாறு கசிந்து ஊற்றேறி வரும். கறையான் சென்னலுண்டவாறு சித்தெறும்பு உறும்போது கல்தேய்தாற்போல் குழந்தையான வாலையின் கால் பிடித்து வாசியோகம் செய்ய மவுனமதைச் செய்தால் சன்மார்க்க நெறியான ஞானம் நெறியில் செல்லும் பாதையதுவாம் என்று ஓதிய சித்தரின் பாடலைக் காண்க.

"இதழான சுழிமுனையை வன்னி வன்னி
எட்டினால் காணலாம் ஆத்தாள் பாதம்
கதளான வாசி கொண்டு கணலைத் தூண்டி
கணலிலே பானமது கசிந்து ஊரும்
சிதளைத் தான் சென்னெலுண்ட வாலுபோலும்
சித்தெறும்பு ஊறவுங்கல் தேய்ந்தாற் போலும்
மதளைக் காலிப் படியே வாசியோக
மவுனத்தினாதப் பெற்றிடு சன்மார்க்கந் தானே - 8

உரோமா முனி வழலை நூல் — 16

ஓர் சித்தர் பாடலில் பதவியானது பிடிப்பது என்னவென்றால் உனது தேகமானது நாதமாகும். ஒலி உடலாகும். இதற்கு பிரண தேகம் என்பர். ஆகாசம் உற்று பார்த்தால் வெட்டவெளியாகத் தோன்றும். அது இதமான கீத கானம் போன்ற பேசாத ஊமையாக அமைதியாகத் தோன்றும். அது புவி ஆளப் பிறந்த அரசனாகவும் ஆக்கும் மதம் பிடித்த

Koviloor Digital Library

மத யானையை அடக்க வந்த அங்குக் கருவியாகத் தோன்றுவது வாய்பேசா ஊமையன் அடக்குவான் என்பதை எடுத்துக் காட்டும் சித்தர் பாடல் காண்க.

"பதவியெனப் பத்துவது யென்ன வென்றால்
பார் மகனே உன்னுடம்பு நாதமாகும்
உதவியென நின்றி லங்குமாகா சந்தான்
உத்தப் பார் வெளியாகத் தோணுந்தோணும்
இதங் கீதம் பேசாத ஊமையாகும்
இப்புவியை யாளவந்த ராசாவாகும்
மதமுடைய மதயானை கெர்ச்சித் தக்கால்
வாய்பேச ஊமையவ னடக்குவானே

சித்தர் பாடல்

தன்வந்தரி ஞானம் என்னும் நூலில் அந்தர வானத்தில் குடியிருந்தது ஊமை என்றும் பொருள். அந்த ஊமையினால் குருவும் பிர்மம் ஒன்றுமில்லாதுபோயின என்று கூறும் பாடலை காணலாம்.

குடியிருந்த அந்தரத்தில் ஊமையப்பா
குருவெங்கே பிர்மமெங்கே ஒன்றுமில்லை - 10

தன்வந்தரி ஞானம் — 15

சாகோத நாதர் பாடலில் ஊமை எழுத்தாலே ஓங்காரமாகி நின்றதை மேலையினர் தெரிந்துக் கொள்வாரோ! இல்லை என்றும், மௌனம் என்ற ஊமையை தீட்சை விதி விபத்தில் உள்ளது. அதனை சாதனை செய்தால் ஞான நிலை பெறுவார்கள் என்பதை கீழ்வரும் பாடலால் அறிக.

"ஊமை யெழுத்தாலே தான் ஓங்காரமாகினதைச்
சீமையிலுள்ளவர்கள் தெரிவாரோ மாங்குயிலே"
- 9

"வாச்சுதடா மவுன முந்தான் தீட்சை பத்து
வாகாகச் சாதித்தால் ஞானமாச்சே" - 9

சாகோநாதர் பாடல் தொகுப்பு — 42

பிரம முனி பிரமஞானம் என்னும் நூல் மோனம் என்ற அக்கரத்தை யறிந்தாயானால் மூன்று பாரமான எழுத்து, ஐந்தெழுத்தில் அமுதம் ஊற்று பெருகும். அமுதச் சாறு உண்டாயானால் ஞானமது சித்தியாகும். ஞானமும் சித்தென்ற இருகல்வியில் சித்தி பெற மிகக் கடினமாகும் என்று கூறுவதும், ஊமையின் சிறப்பையும் ஒநியுள்ள பாடல் காண்க.

சுப்பிரமணியர் சிவம் ஞான சுருக்கம் என்னும் நூலில்,

"கேளப்பா உகாரமது விந்து வாகும்
கிருபை யுள்ள மகாரமது சக்தியாகும்
சூளப்பா அகாரமது மூலமாகும்
அப்பனே சிகாரமது வன்னி
நாளப்பா வகாரமது வாசியாகும்
நல்லதொரு ஓங்காரம் நடுவிலாகும்
வாளப்பா ஊமையென்ற எழுத்தைக் கண்டு
வளமாகத் தெரிந்து கொண்டால் ஞானந்தானே
- 2

மகனே கேள். உகாரம் விந்துவாகும். மகாரமது சக்தியாகும். அகாரமது மூலமாகும். வகாரமது வாசியாகும். நல்ல ஓங்காரம் நடுவில் நிற்கும். வாளப்பா ஊமையென்ற எழுத்த அதன் உண்மை நிலையறிந்தால் ஞானம் சித்தியாகும் என்று கூறப்படுகிறது.

சுப்பிரமணியர் சுத்த ஞானம் சுருக்கம் — 2

மேலும் சுப்பிரமணியர் சிவம் பூரணத்தில் ஒடுங்கி நிற்கும் ஊமையை பூட்டினால் பூட்டியதை திறக்க முடியுமா? நீ அதற்காக அலையாதே வெளியைப் பத்தி கண்டு கொண்டலே பறைவாசல் திறந்து விடும் என்பதை

"பூட்டினால் பூட்டத் திறக்கப் போமோ
பூரணத்தி லொடுங்கு மந்த வூமையாக்க
காட்டினால் நீ யலையாதே வெளியைப் பத்திக்
கண்டாலோ பறைவாசல் திறக்குமையா - 12

சுப்பிரமணியர் சிவம் சுத்தஞானம் — 12

மேலும் இம் (ம்) என்ற மௌனத்தை அறிவதில்லை. இதனை அறிந்தால் உறுதியான ஞானம் உண்டாகும் என்பதை,

"தீர்க்கமுடன் மௌனத்தை யறிவாருண்டோ
செப்புகிறேன் "னிம்" மென்றாற் றிடமதாகும் - 12

சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் — 16

Koviloor Digital Library

மேலும் சுப்பிரமணியர் சிவம் சுத்த யோக ஞானம் என்ற நூலில் இம் என்ற மூலத்தை தன்னறிவால் உணர்ந்து சுழினையில் ஏற்றி பராபரமான உயர்ந்த இடத்தில் மூவரும் முத்தி பெற்றார். இம்மூலத்தை தொடர்ந்து உண்டுவந்தால் நினைவாக பரத்தில் சேர்க்கும். போப்பாயிதனாலே முத்தி பெற்ற பெரியவர்கள் அளவில்லாதவர்கள் வெகு கோடியாவர் என்று ஓதும் பாடலைக் காண்க.

"பாரப்பா இம்மூலம் தன்னைப் பார்த்து
பரா பரத்தில் மூவருந்தான் முத்தியானார்
நேரப்பா நிறைந்த பரா பரத்தினூடே
நீங்காமல் நிறுத்தி நினைவாய்ச் சேர்க்கும்
பெரியோர் களனந்தம் வெகு கோடிதானே - 400

சுப்பிரமணியர் சிவம் ஞானம்
யோகம் — 500


திருமூலரும் தன் திருமந்திரத்தில் வாக்கு மனம் ஆக இரண்டு இணைவதால் மவுனமாகும். வாக்கானது மவுனத்தில் இருந்தால் மூங்கை என்பர். இதில் வாயால் பேசமுடியாது ஆனால் மனம் சேராது. இதற்கு மூங்கை. உதாரணமாக சில காவியாடை அணிந்த வாயால் பேசாமல் மனதால் சிந்தனை ஓடிக் கொண்டு இருக்கும். இவர்கள் போலி சாமியாராகும் என்பர். வாக்கும் மனமும் இணைந்த சுத்த மௌனிகள் என்பர். இதன் சுத்த மௌனத்தை யாறிவாருண்டோ? என்று கூறும் மந்திரம் காண்க.

வாக்கும் மனமும் இரண்டு மவுன மாம்
வாக்கு மவுனத்து வந்தாலும் மூங்கையாம்
வாக்கு மனமும் மவுனமாஞ் சுத்தரே
ஆக்கும சுத்ததை யாறிவார்களே - 1859

திருமூலர் திருமந்திரம் — 3000

மன்று தொழுத பஞ்தலி என்ற சித்தர் பெருமான் சூத்திரத்தில் பேசாத மவுனம் என்பது பெரிய பிரம வித்தையாகும். அது பிடரிவழி கண் திறந்து ஒளிவீசும் என்பதை.

பேசாத மௌன மென்ற பிரம வித்தை
பிடரி வழி கண்திறந்து பிரகாசிக்கும் - 7



மன்று தொழுத பதஞ்சலி சித்தர் சூத்திரம் - 200

குதம்பை என்ற சித்தர் பெருமான் ஆமையானதை தனது ஐந்து உறுப்பானத நீட்டி அலைந்து வரும். அதுபோல் இல்லாமல் ஊமை என்ற வாய்பேசா எழுத்து உனக்கு முத்தியளிக்கும் என்று கூறும் அச்சித்தரின் பாடலை காண்க.

"ஆமைபோ லைந்து மடக்கித் திரிகின்ற
ஊமைக்கு முத்தியடி குதம்பாய்
ஊமைக்கு முத்தியடி யடி - என்று குதம்பை சித்தர் அறிவுறுத்துகிறார்.

யாகோப்பு என்னும் சித்தர் ஒரு காலத்தில் இராமதேவர் என்ற பெயரில் தமிழகத்தில் வாழ்ந்து வந்தார். சித்தர்களின் தொல்லையிலிருந்து விலகக் கருதி இவர் மெக்காவுக்கு சென்று மதம் மாறி யாகோப்பு என்ற பெயரில் இறுதி காலம் அங்கு வாழ்ந்து பின் தமிழகத்திற்கு வந்து சமாதியடைந்தவராவார். அவர் ஊமையைப் பற்றி சித்தர்களிடம் கேட்டால் யாரும் கூற மாட்டார்கள் என்றும், பெயர் பெற்று விளங்கும் பதினென் சித்தர்களை அணுகிக் கேட்டாலும் கூறாமல், பழங்காலந்தொட்டே ஊமையை நீண்ட காலமாக கூறாமல் மறைத்தார்கள். இன்று இவ்வுலகின் கண் இருந்த வரும்

Koviloor Digital Library

யாகோப்பு என்னும் நான் ஊமைப் பற்றி சொல்வேன் என்று கூறி, ஊமை என்பது மகாரமாகும் என்று வெளிப்படுத்தி, இதனை நலமில்லா ஈனருக்குச் சொல்லக் கூடாது என்றும் ஓதுகிறார் என்பதை கீழ்வரும் பாடலால் அறியலாம்.

"கலங்கியே கேட்டக்கால் சித்தரெல்லாம்
கருவான ஊமை யதைச் சொல்ல மாட்டார்
துலங்குமந்த பதிணென் சித்தரய்யா
தொல் புவியிற் சொல்லாமல் மறைத்து வைத்தார்
எளிலான ஊமையதை சொல்வேன் கண்ணே
நலங்கிடைக்கும் ஊமையது மகாரந்தானடா
நலமில்லா யீனருக்கு உரைக்கா தென்னே - 179

யோகோப்பு சித்தரின் வாத சூத்திரம் — *400*

இறுதியாக ஆலமர் செல்வர் என்று கூறப்படும் திரு தட்சணாமூர்த்தி என்னும் சிவகுரு நால்வரான சனகர், சனந்தினர், சனாதனர், சனற்குமாரர் ஆக இவர்களுக்கு அத்தமாகிய "சின்முத்திரை" காட்டி அமைதியானார். வலது கையால் சிறுவிரல் — மோதிர விரல் — நின்ற நிலையில் நிமிர்ந்து நிற்க, ஆள்காட்டி விரல் நுனியும், பெருவிரல் நுனியும் இணைந்து வட்டம் ஏற்படுமாறு தமது கை மூலம் கூறா உபதேசம் எடுத்துக் காட்டினார். (சின்முத்திரை எனில் அறிவுப் பொறி (அ) ஞானக் கருவி என்பர்)

ஆலமர் செல்வலர் தட்சணாமூர்த்தி கல்லாலின் கீழ் இருந்து அவர்களை தன்மேனியுடன் அனைத்து தலையினை தொட்ட சிவசக்தி தீட்சை கூறி சின்முத்திரையான கூறா உபதேசத்தை தன் கையடையாளம் காட்டி ஊமைப் பொருளை உணர்த்தினார். சிவகுருவின் கையடையாலளச் சின்னத்தைக்கண்டு பொருளுணர்ந்து நால்வரும் ஓவியம் போல் ஊமையானார்கள். இக்கருத்தை கீழ்வரும் பாடலால் அறிக.

"அத்தத்தில் உத்திரங் கேட்ட அருந்தவர்
அத்தத்தில் உத்திரமாகும் அருள்மேனி
அத்தத்தினாலே யணையப் பிடித்தாலும்
அத்தத்தில் தம்மை அடைந்து நின்றாரன்றே"

என்று திருமூலர் திருமந்திரம் ஓதுகிறது. இம்மந்திரத்தின் பொருள் வருமாறு

அத்தத்தில் = சின்முத்திரையில் (ஞானக்கருவி (அ) அறிவி பொறி)
உத்திரம் கேட்ட = தம் வினாக்களுக்கு விடை கேட்க.
அருந்தவர்கள் = மாபெருந்தவசிகள் (சிவயோக சித்தர்கள்)
பிடித்தல் = கையால் தொட்டு சிவதீட்சை அளித்தல்.

ஆலமர் செல்வரான திருதட்சணாமூர்த்தியான சிவகுரு ஐந்தெழுத்ததின் உட்பொருளும், ஓங்காரத்தின் மூன்றாம் பாதமான இம் என்ற மகாரம் பாதத்தின் பொருளையும் வெளிப்படையாகக் கூறாமல் குறிப்பால் உணர்த்தவே கையடையாளமூலம் தெரிவித்தார். சுட்டுவிரலும் பெருவிரலும் ஆக இரண்டு விரல் முனைகள் தொட்டு நிற்க ஓர் பெரும் வட்டம் தோன்ற அதுவே சுழி என்ற பிரணவமாகும். அந்த பிரணவமே ஓங்காரமாக கருதப்படுகிறது. அதுவே மகாரமாகும். இந்த மகாரமே ஊமையாகும். இது தச தீட்சையில் ஊமையான மௌன தீட்சையாகும். இது பேசா மந்திரமாகும். இதுவே முத்தி தரும் ஊமையாகும். வாய் பேசா ஊமை என்றும் கூறுவார்கள். இந்த ஊமை என்ற வாய்க் கூறா வுரையை சூட்சுமமாக கைக் குறியின் மூலம் தெரிவித்தார். அதனை உணர்ந்த நால்வரும் ஓவியம் போல் ஊமையானார்கள் என்பதே அதன் பொருளாகும்.

இதன் பெருமை உணர்ந்து அறிந்து மௌன யோகத்தில் இருந்தால் மரணமில்லா வழியின் கதவுகளின் பூட்டு திறக்கும் திறவுக் கோலாகும் என்ற விரிவான செய்தியை கனிவுடன் நிறைவு பெறுகிறது.

அறிவை நீ அறிந்தாலே பிறவி போச்சு
அடுத்தாப் போல் பரம பதம் நிலையுமாச்சு

கொங்கணர் மெய்ஞ்ஞானம் — *13*

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

16. மவுனத்தின் சிறப்பு

"தேவியுட குற்றத்தால் பிறந்த தேகஞ்
சிவனை யறிவ தெல்லாம் சக்தி தானே" - 124

தட்சாணமூர்த்தி மெய்ஞ்ஞானம் — 1200

"மனிதனாய் பிறந்தாக்கால் சாகாக்கல்வி
வாசிக்கும் சிவமோடு வாழ்க்கை சேர்வான்" - 56

அகத்தியர் பூரண சூத்திரர் — 2016

"அறிவை நீ அறிந்தாலே பிறவி போச்சு
அடுத்தாப் போல் பரமபதம் நிலையுமாச்சி - 10

கொங்கணர் மெய்ஞ்ஞானம் — 13

முருகப்பெருமான் மீது இடைவிடாது ஆழ்ந்த அன்புக் கொண்ட அருணகிரி என்னும் மாமனிதர் பெண் சுகத்தில் மூழ்கி உடல் ஊனம் பெற்று, அதனைக் கண்டு சகிக்க இயலாதப் போது அருணையம்பதி கோவிலுள்ள பேய்க் கோபுரத்தின் மீது ஏறி தன் உயிரை முடித்துக் கொள்ள எண்ணியப் போது, அந்த உயரமான இடத்திலிருந்து கீழே பாய்ந்த போது முருகப்பெருமான் அருளால் தடுக்கப்பட்டு, ஆட்கொள்ளப்பட்டு "சொல்லற சும்மா இரு" என்று அருளுரை வழங்கினார்.

முருகப் பெருமான் குருவாக இருந்து கூறப்பட்ட அருளுரையானது "சொல்லற சும்மா இரு" என்றால் "மௌனமாயிரு" என்று பொருள்பட ஓதினார். ஒருவன் உலகியல் வாழ்க்கையிலிருந்து விடுபட நினைப்பவர்கள் "மௌனம்" என்னும் மோனமாகும். இந்த மௌனத்தின் சிறப்பைப் பெற்ற சித்தர்கள் அடைந்த மாபெரும் நன்மையைப் பற்றியச் செய்தியை இனி ஆய்வு செய்வோம்.

மௌனம் யார் சொல்லி அறிய வேண்டும்:

கடைப்பிள்ளை யென்றும் சித்தர் எழுதிய கலைஞ்ஞானம் என்னும் நூலில், மௌனத்தைப் பற்றிக் கூறும் செய்தியைக் காண்க.

"போத்தியே யிப்படியே மவுனமூலம்
பூரணமாயக் கண்டவர்க ளொருவரில்லை
வாத்தியே மவுனத்தை யாருந் சொல்லார்
மகத்தான குருசொல்ல அறிய வேணும்" - 88

கடைப்பிள்ளை சித்தர் கலைக்கியானம் — 120.

மௌன மூலம் போற்றி வாழ்த்த வேண்டும். மவுனத்தை பூரணமாயக் கண்டவர்கள் யாரும் இல்லை. வாழ்த்தும் மௌனத்தை யாரும் கூறமாட்டார்கள். மேன்மைத் தாங்கிய குரு என்று கூறும் ஆசான் கூறயறிய வேண்டுமென்று ஓதப்படுகிறது.

அறிவே ஆசான்:

அகத்தியர் எழுதிய ஞான சூத்திரம் என்னும் சிறுநூலில் மவுனத்தினை உணர்த்த அறிவே ஆசானாகயிருந்து உணர்த்தும் என்று ஓதும் ஞானசூத்திரப் பாடல் காண்க.

"குருவிருக்கு மிடந்தானே புருவ மையம்
கூடு வலக்கண் தானே சீவ சாட்சி
திருவிருக்கு மூல மல்லோ ஞான சித்தி
சிங்கு வங்கு மென்றானாற் பேறாமுத்தி
கருவிருக்கு "மவுனத்தி லிந்த மார்க்கம்"
கைக்காட்டி சொல்வதற்கு "அறிவேயாசான்"-7

குருவானவர் குடியிருக்குமிடம் புருவ மையம். புருவ மையம்தான் குருபீடம் என்பர். வலக்கண் தான் சீவசாட்சயாக கூடி நிற்கும். வலக்கண் என்பது உகாரமாகும். உகாரம் என்றால் சூரியனாகும். சூரியக்கலை கூடினால் சீவனுக்கு பழுதில்லை. அதனால் அதுவே கண் கண்ட அத்தாட்சி. திரு என்றால் சக்தியாகும். அதுவே மூலமாகும். மேலாதார குண்டலி சக்தியாகும். அந்த சக்தியே ஞானம் பெறவும் ஞானத்தின் அனுபவம் உணரவும் செய்யுமுறையே சித்தி என்பர். ஞானவாலை என்றும் கூறுவார்கள். சிங் — வங் — என்று மௌனமாயிருந்து உள்ளகமாக கூறினால் பெற இயலாத முத்தி பெற்றுத்தரும்.

Koviloor Digital Library

மவுனத்தின் கருநிலை உணர்வதற்கும் உணர்த்துவதற்கும் அறிவதற்கும் துணையாக நிற்பது எதுவென்றால் அறிவாகும். அந்த அறிவுத்தான் ஆசானாக நின்று உணர்த்தும். ஆசான் என்றால் குரு என்பார் என்று அகத்தியர் ஓதுகிறார்.

மவுனத்தை யாரும் உரை செய்யார்

மச்சமுனி சித்தர் ஞான தீட்சா விதி என்ற நூலில் மவுனத்தின் உண்மையான பொருள் யாரும் கூறமாட்டார்கள் என்று எடுத்துக் காட்டும் சித்தரின் பாடல் காண்க.

"மவுனத்தின் வாலை வசமா யுரைக்கிலார்
தவன சதாசீவன் தானு முறை பேசார்
கெவனத்தின் சித்தர் கேட்டாலும் பேசார்
தவ போதனர் களுந் தானுரையார் கேளு - 43

வாலை என்பது ஒருவகை சக்தியாவாள் . அச்சக்தி மனிதனை உயர்நிலைக்கு கொண்டு வந்து முத்திக்கு வழிகாட்டுபவள். அவளுக்கு மவுனவாலை என்றும், பேசா மடந்தை என்றும் கூறுவார்கள். அந்த சக்தியை தனவசப்படுத்தும் வழியை யாரும் உரை செய்யார். தவநிலையுள்ள ஆசி சிவகுருவான சிவனும் உரை செய்யார். கெவுன சித்தர் என்று கூறப்படும் சிவயோகியிடம் கேட்டாலும் உரையார். தவசீலர்களிடம் கேட்டாலும் உரை செய்யார் என்று மச்சமுனி சித்தர் ஓதுகிறார்.

மவுனத்தின் நிலை எப்படி அறிவது:

மவுனத்தின் மறையகம் எப்படி அறிவது. தன்னறிவு தான் அறியும் சக்தியுள்ளவன் தான் அறிய முடியும். மற்றவர்களால் இயலாது என்று கூறப்படும் சித்தர்களின் வாக்கால் அறியலாம். பிரமாநந்த சித்தர் பாடல் காண்க.

"பேசா திருந்த மௌனங்க ளென்பது
பேசத் தெரிந்தோர்கள்
ஆசானுரைத்த உபதேச மென்று
அறிவுள்ளோர் தானறிவார்"

சொல்லாடல் செய்ய தெரிந்தவர்கள் பேசா ஊமையைப் பற்றிய மௌனங்கள் பேசுவார்கள் குருவான ஆசான் உரைத்த அருளுரை என்று அறிவுள்ளவர்கள் அறிவார்கள் என்று சித்தர்பெருமான் கூறுகிறார்.

கருவூரார் தச தீட்சை என்னும் நூலில் மௌனத்தின் நிலை உரைக்க அது ஊமை என்று கூறுகிறார். அதன் கருவை அறிந்து இளங்காலையிலே தீட்சைகள் மௌனமாக சாதனை செய்ய வேண்டும். மௌனம் திரை மறைப்புகளை நீக்கி தெளிவை உணர்த்தும் புரைச்சடையோன் பூ என்று கூறப்படும் ஆயிரெட்டிதழ் கொண்டதும் ஒன்றேயாகும் என்பதை கூறும பாடல் காண்க.

"உரை செய்து பொருளை ஊமை யதுவைக்
கரை யென்னப் போற்றிக் கருவை யறிந்தே
திரை யென்ன நீக்கித் தெளிவை யுணர்த்தும்
புரை யென்னச் சடையோன் பூ வென்னுமொன்றே
- 24

மௌனத்திற்கு உரைக்கண்டால் ஊமையாகும். அந்த ஊமையை இளங்காலையில் போற்றுதல் வேண்டும். அதன் உண்மையான கருநிலை அறிய வேண்டும். ஆன்மாவை மூடி மறைத்துள்ள அனைத்து திரைகள் விலக்கி தெளிவான அறிவை உணர்த்தும். புரிசடையோனான சிவனின் சென்னியின் மீது ஆயிரெட்டிதழ் பூவின் நிலையும் ஒன்றேயாகும்.

இனி மவுனத்தின் பெருமையும் சிறப்பையும் திருமூலர் என்ன கூறுகிறார் என்பதை அறியலாம்.

மன்மனம் எங்குண்டு வாயும் அங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாயும் அங்கில்லை
மன் மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன் மனத் துள்ளே மனோலய மாமே - 620

சிந்திக்கும் மனம் எங்குண்டு அங்கே உயிர்வளி செயல்படும். மனம் சிந்திக்காத போது உயிர்வளி அங்கே வெளிபடாது. வேகாத சிந்தை மனத்தினுள் இன்புறுவோர்க்கு மனத்தினுள் உயிர்வளியும் ஒன்றி நிற்கும் என்பது திருமூலரின் வாக்காகும். மௌனத்தின் இயல்பு ஓதப்படுகிறது.

சொல்லிறந்து சும்மா இருந்தால்

Koviloor Digital Library

(மௌனமாய் இருந்தால்) ஓசை உணர்வு, உயிர் உணர்வு, உணர்வின் உணர்வற்று நின்றால் ஆன்மாக்கு சுற்றியுள்ள திரைகள் விலக்கி நின்றால் சுத்த ஆன்மா (நீர் போன்ற தூய்மையான) சிவமாயத் திகழும். எல்லையற்ற சத்தாதி (நாதாந்த ஓசை) நான்கு (வெளிப்பாழ், ஒளிப்பாழ், வெளிவொளி பாழ், நிற்குணப் பாழ் கடந்து) ஆன்மாவின் ஆணவ மலம் அகன்று சிவவடிவமாய் நிற்க, (ஆன்மா பேரான்மாவுடன் இணைய சொரூப சித்தி நிலை) சொரூபத் திருத்தினன் என்றால் ஞான வடிவமாய் (அறிவு வடிவமாய்) தேகம் நிற்கும் அப்பொழுது சொல்லிறந்த நிலையில் இருப்பர் என்பதாம். இதனை திருமூலர்.

உரையற் றுணர்வற் றுயிர்பர மற்றுத்
திரையற்ற நீர்போல் சிவமாதல் தீர்த்து
கரை யற்ற சத்தாதி நான்குங் கடந்த
சொரூபத்திருத்தினன் சொல்லிறந் தோமே - 1593

திருமூலர் திருமந்திரம் — 3000

மவுன வித்தையார் கண்டு பிடித்து உரை செய்தார்:

சூரியானந்தர் கற்ப ஞான நுட்பம் என்னும் சிறுநூலில் மவுன வித்தை முதலில் கண்டதும் பின் வெளிப்படுத்தியதும் யார் என்று கூறும் அவரின் பாடல் காண்க.

"ஆமப்பா மவுன வித்தையார்தான் செய்தார்
ஆதியந்த கைலைபரா பரையாய் வந்தான்
ஓமப்பா தெட்சணசின் மயமாந் தேவர்
ஒருகோடி சித்தருக்கு வுபதேசித்தார்
தாமப்பா வென் றெனறுஞ் சாகா மற்றான்
தனக்கு ளூகித் தே தென்றால் மனத்தாலே
வாமப்பா வெகுகோடி சித்தராச்சி
மவுனம் விட்டாற் காயசித்தி தூரப்போச்சே - 4

முதலும் முடிவுமாயிருப்பவர் கயிலை பராபரன் ஆவார். அவர் மவுன வித்தை (கல்வி) அருளச் செய்தார். அவர் தென்னக மூர்த்தியான தட்சணாமூர்த்தியாவர். அவர் ஒரு கோடி சித்தர்களுக்கு மவுனக் கல்வி அருளுரை செய்தார். அதுவே பல கோடி சித்தர்கள் பெருகி நின்றனர். மவுனக் கல்வி மூலம் சாகாக்கல்வி அருளியதால் மரணமில்லா பெருவாழ்வுப் பெற்று திகழ்ந்தனர். மனதையின் சிந்தையற்ற நிலையால் வெகுகோடி சித்தர்கள் உருவாயினர். "சொல்லற சும்மா இரு" என்ற மவுனக் கல்வி விட்டால் காயசித்தி அடைய முடியாது என்பதாம்.

மவுனத்திற்கு மூலமாய் இருப்பது எது:

மச்சமுனி சித்தர் தீட்சா ஞானம் என்னும் நூலில் மவுனத்தின் மூலப்பொருளாகவுள்ளவை என்ன என்று கூறும் பாடல் காண்க.

"மவுனத்தின் மூலம் வாசியின் மூலமும்
மவுனத்தின் பஞ்ச பூதத்தின் மூலமும்
மவுனத்தின் சக்கர லெட்சய மூலமும்
மவுனத்தின் சக்தி பூசையும் மார்க்கமே - 26

மவுனத்திற்கு அடிப்பயையாகவுள்ள மூலகப் பொருள் வகாரம் என்ற வாசிமூலமாகும். மவுனத்திற்கு உறுதி செய்வது பஞ்ச பூதமான விண், வளி, தீ, நீர், மண் ஆக இவை ஐந்தும் மூலப்பொருளாக விளங்குவது. அகாரம், இகாரமுமாகும். இலட்சிய வாலையின் மவுன மூலமாக விளங்குவது சக்கரங்களாகும். மவுனத்தின் மூலமானது சக்தி பூசை மார்க்கமாகும் என்று ஓதப்படுகிறது.

காகபுசண்ட சித்தர்பெருமான் தாம் எழுதிய ஞான காவியம் என்னும் சிறுநூலில் மூலப்பொருளாக இருப்பது வாமி என்ற சிறவாலையாகும் என்று ஓதும் அவரின் பாடல் காண்க.

"இடபாக யிருந்தவளு மிவளே மூலம்
இருவருக்கு நடுவான திவளே மூலம்
தொடக்காக நின்ற வளு மிவளே மூலம்
சூட்ச மெல்லாங் கற்றுணர்ந்த திவளே மூலம்
அடக்காக அடங்கத்துக் கிவளே மூலம்
ஐவருக்குங் குருமூல மாதி மூலம்
கடக் கோடிக் கொப்பதனில் நின்ற மூலம்
கன்னி யவள் சிறுவாலை கன்னி தானே - 29

சிவனுக்கு இடப்பக்கமாக இருந்தவள் சக்தி என்ற வாலையான மூலமாகும். சிவசக்தி இருவருக்கு மூலப் பொருளாக இருப்பவன் சக்தி என்ற வாலை. தொடக்கத்தில்

Koviloor Digital Library

முன்நின்ற சக்தி வாலையாகும். நுட்பங்கள் கற்றுணர்ந்தவள் அடக்கமாக நின்ற மூலப் பொருள் சக்தியேயாம். ஐவர் என்று கூறப்படும் அருளோன், ஆண்டான், ஈசன், அரி, அயன் மூலப்பொருளாக நின்றவளும் சக்தியே. அவளே குருக்களுக்கு மூலமாவாள். அவளே ஆதி மூலமாகவும் இருப்பாள். கடைக்கோடியிலும் முடிவிலும் நின்ற மூலப்பொருள் சக்தி என்ற சிறுவாலை கன்னியாம் என்று ஓதப்படுகிறது. இந்த சக்தியே மவுனத்தற்கு மூலமாகவும் விளங்குபவளாவாள்.

மச்சமுனி சித்தர் எழுதிய தீட்சா விதி என்னும் சிறு நூலில் மௌனத்தின் சிறப்பை என்னவென்று கூறும் பாடல் காண்க.

"மவுனந்தா னாவது வாலையின் தீட்சையாம்
மவுனந்தா னாவது வாசிக்கு மூலமாம்
மவுனந்தா னாவது வாழுந் சமாதிக்கும்
மவுனந்தா னாவது மந்திர மூலமே - 29

வாலை என்பது சக்தி. அவளை வணங்க மௌன தீட்சையால் தான் முடியும். சித்தியும் அடையலாம். வகாரம் என்ற வாசிக்கும் மூலமாக இருப்பதும், மௌனமாகும். மானிடன் வாழ்வுக்கும், அவன் சமாதி நிலை வர துணையாக இருப்பதும் மௌனமாகும். மந்திரங்கள் சித்தி பெற மூலமாக அமைவதும் மௌனமே மூலமாகும் என்பதாம்.

மவுனத்தின் நிலையும் அதன் தன்மையும்:

கூர்மானந்த சித்தர் எழுதியய ஞான சூத்திரம் என்னும் நூலில் மவுனத்தின் நிலையும் அதன் தன்மையும் விளக்கி எழுதிய பாடல் காண்க.

"காட்டுகிறே னட்டாங்க யோக மெல்லாம்
கண்டித்து சொல்லாமற் சித்தர் சொன்னார்
தீட்டுகிறேன் பலபலவா யோக மெல்லாம்
செடம் நிலைக்க மாட்டாது சிதறிப் போகும்
ஊட்டுகிறேன் மவுன மென்ற யோகத்தாலே
உறுதி பண்ணிக் கொள்ளலாம் மூலத்தீயால்
வீட்டிலே யேத்தி வைத்தாற் பிரகாசிக்கும்
வெளியேறி னாற்தீபம் மெலிந்துபோம்" - 3

"காலான மவுனத்தைப் பெற்ற பேர்கள்
கருத்தினா லறிவார்கள் கடினந்தானே - 9

கடினமென்ற தள்ளாதே மவுனயோகம்
கண்மூக்கு மத்தியிலே கருதிப் பாரு
துடி மிகுந்த சுழிமுனையி னூடு தாக்கு
சூரியனுஞ் சந்திரனு மொன்றாய்ப் போகும்
குடியிருப்புச் சக்கரத்தின் கோட்டையாச்சு
கோடி கற்ப காலயுகம் வாழ்வதாச்சு.
நொடி நிமைக்கு நேரமல்லோ பிரமன் வாழ்க்கை
நுண்ணிமையாய்ப் பார்த்திருந்து நுடங்குவாயே - 10

நுடங்கினாற் பூரணமாஞ் சுழினை யுள்ளே
நுழைந் தேறி யாகாசப் பதியினின்று
துடங்கினா லிதுவல்லோ மவுன வாழ்க்கை
துருவமென்ற சுட்சமதிற் சொக்கிப் போகும்
அடங்கினாற் பின்னு மந்தப் படி சிருட்டி
ஆக்கலாங் கருமானு பவத்தை வெட்டித்
திடங் கொள்ள மிப்படியே மவுன மாகச்
சித்தர் வந்து ரகசியங்கள் செப்பு வாரே - 11

கூர்மானந்தர் கூறிய முதல் பாடலில் அட்டாங்க யோகம் அனைத்தும் கண்டிக்கப்படவேண்டிய செய்திகளாகும் என்று கூறுகிறார். பலவகை யோகமெல்லாம் செய்வது "மனிதனின் உடல்" நிலைத்து நிற்காது. அந்த செடம் சிதறி வீணாகும் என்று கூறுகிறார். மூலத்தீயென்று கூறப்படும் சுழினையால் உறுதிக் கொண்டு "மவுனமென்று கூறும் சொல்லற சும்மா இருத்தல்" யோக நிலை அடைதல் நல்லது. வீட்டில் என்று கூறவது மனிதனின் தேகமாகும். மனித தேகத்தில் மூலத்தீயால் பற்றவைத்தால் "தீபம் என் உயிர்" நிலைக்கும். இல்லாது போனால் மெலிந்து போய் விலகும் என்பதாம்.

அடுத்து வரும் 9ஆம் பாடல் இரண்டு வரிகளில் காலாகயிருக்கும் "உயிர்வளி" (பிராணன்) மவுன நிலைக்கு கொண்டு வந்தால் விரிவடையாது ஒரு நிலையில் நிற்கும். அப்பொழுது மவுனமாய் இருப்பது என்பது கடினம் என்று தெரியவரும்.

மவுனமாய் இருக்கும் யோகம் கடினமான செயல் என்று தள்ளாதே. கண்மூக்கு மையத்திலே கருத்தைச் செலுத்திப்

Koviloor Digital Library

பார்க்கவும். துடிப்போடுயிருக்கும் சுழினை என்று கூறப்படும் நடுநாடியின் ஊடுருவி தாக்கினால் சந்திரன் சூரியனுடன் இணைந்து சூரியன் சுழினையில் சேரும். சுழினையில் சேர்ந்த போது உயிர்வளி இந்த தேகத்தில் குடியிருக்க உறுதியாகும். உறுதிப் பெற்ற உயிர்வளி இந்த தேகத்தை விட்டு அகலாது கோடி கற்ப காலயுகம் வாழ்ந்து வரும். நொடி இமைக்கும் நேரத்தில் பிரமன் வாழ்க்கை நுட்பத்தை அறிந்து மௌனமாய் இருக்க அதில் சொக்குவாய் என்பதாம்.

பூரணம் என்று கூறப்படும் சுழினையினால் உள்ளே நுழைந்து ஏறி ஆகாசப் பதியில் சேர்ந்தால் பெறும் வாழ்க்கையை "மவுன யோகத்தால் சூட்சமங்கள் அறிந்து அதில் சொக்கி நின்றால் அந்த தொழில்கள் விடுத்து மவுனத்தில் உறுதிகொண்டு இருக்க அங்கிருக்கும் சித்தர்கள் உம்மை நாடி வந்து உலக இரகசியங்கள் கூறுவார்கள் என்பதாம். இந்த சித்தரின் வாக்குப்படி மௌனத்தின் வலிமையும் தன்மையும் உணர்த்துகிறார்.

மௌனம் என்றால் என்ன? அதன் வகை எத்தனை:

அகத்தியர் பூசா விதி என்ற நூலில் மௌனம் என்றால் என்ன என்பதை உணர்த்துகிறார்.

"பூரணமா மவுனமல்லோ ஞானவாழ்க்கை
புகழான அட்டாங்க நடன மாகும் - 1

ஞான வாழ்க்கைத் தான் பூரணம் பெற்றது. அந்த பூரணம் மவுனத்தினால் உண்டானது. மவுன நிலை நான்கு உள்ளதாக அகத்தியர் கூறுகிறார். அவரின் அற்புதப்பாடலைக் காண்க.

"மவுன மென்றால் நாலு வகை மவுனமுண்டு
வாசியிலே மவுன மொன்று கண்டத்துாணல்
மவுனமென்ற சடாதார நிராதாரத்தில்
மவுனமொன்று சாக்கிரமா மதிலே நில்லு
மவுன மென்றால் மேல் வாசல் மவுன மொன்று
மவுன மென்றால் வாலையடா வாமியோகி - 80

சொல்லற சும்மாய இரு யென்ற மவுனநிலை நான்கு வகை உண்டு. வகாரம் மென்ற வாசியிலே மவுனம் ஒன்றுவாகும். சடாதாரம். நிராதாரத்தில் செய்யும் மவுனம் ஒன்று. சாக்கிரமான மேல்வாசல் மீது கண் வைத்து செய்யும் மவுனமொன்று. மேல்வாசல் வாய்த்திருந்தால் விந்து என்னுமிடத்தில் மவுனமொன்று. மவுனமென்று கூறுவது என்னவெனில் வாலையாகிய யோகமாகும் என்று கூறுவார்.

மவுனமென்பது என்ன:

சுப்பிரமணியர் சிவம் சுத்தஞானம் என்னும் நூலில் மவுனம் என்ன என்பதைக் கூறும் வரிப்பாடல்கள் சிலது காண்க.

"தீர்க்கமுடன் மௌனமதை யறிவாருண்டோ
செப்புகிறேன் னிம் மென்றாற் றிடமதாகும் - 12

"வாச்ச இம் மென்ற மவுனந்தன்னை
வசமாக அனுதினமும் நிறுத்திப் பாரே" - 20

தெளிவாகவும் உறுதியாகவும் மௌனத்தின் நிலையை அறிந்தவர்கள் இருக்கிறார்களா என்று கேட்க, சொல்லுகிறேன் இம் (ம்) என்று கூறப்படும். மகாராமகும் என்பதாம்.

அடுத்த இருவரிகளில் இம் (ம்) என்று கூறப்படும் மவுனந்தன்னை தன்வசப்படுத்த நாள்தோறும் சொல்லற சும்மா இருந்து பார்க்க அறிய வரும் என்பதாம்.

அகத்தியர் எழுதிய ஞான சைதன்யம் என்னும் நூலில் மகாரம் நிற்கும் நிலைக் கூறப்படுகிறது. இம் என்ற (ம்) மகாரம் ஓங்காரக் கம்பநுனி உச்சியாகும். சாதனையாளருக்கு அது சுழினையில் நிற்கும்.

சுழினை யென்ற மகாரம் விண்ணில் நிற்கும் இதனை சித்தர்கள் அனைவரும் மறைத்தார்கள். இதன் செய்தியை குருயென்று கூறும் ஆசான் காட்ட தெரியவரும். சிவச்செய்திகள் அறியாத பாவிகள் அறிய மாட்டார்கள் என்பதாம். மேற்கூறிய செய்திகள் பாடல் மூலம் அறிக.

"தாமெனவே ஓங்காரக் கம்பநுனி யுச்சி
சாதித்தார் சுழிமுனையில் மகாரம் நிற்கும் - 2

"வானென்ற சுழினையதே மகாரமாகும்

Koviloor Digital Library

மைந்தனே யிதை மறைத்தார் சித்தரெல்லாம்
தேனென்ற குருகாட்டத் தெரியுமல்லால்
சிவ மறியாப் பாவிகட்குத் தெரியாதப்பா - 3

அகத்தியர் தீட்சா விதி என்னும் நூலில் மவுனம் தான் மகாரமாகும் என்பதை கூறும் வரிப்பாடல் காண்க.

"வாச்சப்பா பேச்சு தென்றே பராபரந்தான
மவுனமென்ற சிகாரந்தான் மகாரமாச்சி 161
"மகார மென்ற மூன்றெழுத்தே மவுனமாச்சு
வாச்சுதடா பரவாலை மவுன வாலை
அகாரமென்ற உகாரமொடு நீங்காதானால்
ஆதித்தன் கோடி யொளி மதிதான் கோடி
சிகார மென்ற சிவனப்பா உன்னைப் பெற்றோர்.

பேசுவதெல்லாம் என்னவென்றால் பரா பரஞ் தான் மவுனமாகயிருந்து சிகாரத்தை குறிக்க, அதுவே மகாரமாச்சு என்று கூறுகிறார்.

மகாரம் என்பது மூன்று எழுத்துக்களால் ஆனது. அதுவே மவுனமாக நிற்கும். பரை வாலை மவுன வாலையான அகாரம்+உகாரம் = நாதமாம். நாதமே ஆதித்தன் கோடி ஒளியாகவும், மதியும் கோடி காந்தியாவும் துலங்கும். சிகாரம் என்ற சிவமே உன்னைப் பெற்றவர்களாவார்கள் என்பதாம்.

மவுனத்தினால் பெறும் நன்மைகள்:

உரோமமா முனிசித்தர் எழுதிய தீட்சாவிதி நூலில் மகாரம் என்ற அக்கரத்தால் மானிடம் பெறும் நலன்கள் கீழ்வருமாறு ஓதப்படுகிறது. அறிக

"மகாரத்தி னாலே வளர்ந்த மவுனந்தான்
மகாரத்தி னாலே வளர்ந்திடும் விந்துதான்
மகாரத்தி னாலே வளர்ந்திடும் நாதந்தான்
மகாரத்தி னாலே மவுனாய தீட்சையே - 63

மவுனம் என்ற நிலை மகாரத்தின் அக்கரத் வளர்ந்து நிற்கும். மகார அக்கரத்தால் பெருகும் விந்து நிலை. மகார அக்கரத்தால் வளர்ச்சியுண்டாம் நாதப் பொருள். தீட்சைகளும் மகார அக்கரத்தால் மவுன நிலைக் கொள்ளும்.

மேலும் பிரமமுனி பிரம ஞானம் என்னும் நூலில் மோன என்ற அக்கரத்தால் மூன்று எழுத்தும், ஐந்தெழுத்து உண்டாகும் என்று இருவரிப்பாடல் கண்டு இன்புறுங்கள்.

"மோன மென்ற யட்சரத்தை யறிந்தாயானால்
மூன்றெழுத்து மைந்திலே கசிந்து விழும்" - 10

என்று ஓதுகிறார். அதாவது மோன யட்சரம் என்பது மகாரம். இந்த மகாரத்திலிருந்து அகரம்+உகரம்+மகரம் என்றும், அதிலே சிவயநம என்ற ஐந்தெழுத்தும் நழுவி வரும் என்று ஓதப்படுகிறது.

கமலமாமுனி என்கிற காலாங்கிநாதர் சுத்த சூத்திரம் என்னும் நூலில் மவுனம் என்ற அக்கரத்தினால் பெறும் நிலைகள் என்னவென்று ஓதுகிறார். அவரின் நாலடிப்பாடல் காண்க.

"மவுனத்தி னாலே வளராதி யந்தமும்
மவுனத்தி னாலே வளர்ந்த பராபரம்
மவுனத்தி னாலே வளர் பஞ்ச பூதமும்
மவுனத்தி னாலே வளராறு தெய்வமே" - 70

மகாரம் என்ற மவுனத்தால் வளரும் ஆதி அந்தமாகும். மகார என்ற மவுனத்தினாலே விரிவடைந்த பராபரம். மகார மவுனத்தினாலே தோன்றிய ஐவகை பூதப்பொருள்கள். மவுனமென்ற மகாரத்தினாலே நீண்ட நின்ற ஆறு தெய்வங்களுமாகும்.

சுப்பிரமணியர் சிவம் சிவயோக ஞானம் என்னும் நூலில் மவுனம் பெருக பெருக கிடைக்கும் அற்புத நிலையை எடுத்தோதும் பாடல் காண்க.

"மவுனமுண்ண மவுனமுண்ண மவுனமாகும்
மாசற்ற மவுன முன்னை வாரித் தூக்கும்
கெவுன வழியோடுதற்குக் குளிகை கட்டும
கேசர மெல்லா மடங்கா வொளி தான்வீசும்
தவனமில்லை பசியில்லை சாவுமில்லை
சட்டைக்குந் தேகமது அருணன் போலாம்
புவனமதில் மாற்றமுந்தான் தேகச் சாயை
பொய்யடா பூரணத்திற் பூட்டுவாயே - 9 என்று ஓதுகிறார்.

மானிட வாழ்நாளில் சிவயோக மவுனம் பெருக பெருக மவுன நிலை

Koviloor Digital Library

உண்டாம். தூய்மையான மவுனம் பெருக தேகம் மேலே தூக்கும். கேசரம் என்று சொல்லப்படும் கேசரியினிடத்தில் கெவுன வழியான குளிகைக் கட்டும். நாதவிந்து என்ற குளிகையான மணியாகக் கட்டும். கேசரம் என்னுமிடம் ஒளிவெள்ளம் பாய்ந்து சுடராக வீசும். தடைகள் இல்லை. பசியில்லை. சாவதுமில்லை இந்த தேக சட்டையானது சூரிய ஒளி போன்ற நிலை பெறும். உலகில் மாற்றம் உண்டாகும்படி தேகத்தின் நிழல் சாயை பொய்த்துபோகும். பூரணம் என்ற கேசரியினிடம் யாருக்கும அறியாமல் பூட்டுப்போடுக என்று ஓதப்படுகிறது.

உரோம மாமுனிசித்தர் மவுனம் பெற்றவன் தான் சன்மார்க்கம் பெறுவான் என்று கூறும் பாடல் காண்க.

"இதழான சுழிமுனையை வன்னிவன்னி
எட்டினால் காணலாம் ஆத்தாள் பாதம்
கதளான வாசி கொண்டு கனலைத் தூண்டு
கனலிலே பானமது கசிந்து ஊறும்
சிதளைத்தான் சென்னெலுண்டவாறு போலும்
சித்தெறும்பு ஊறவுங்கல் தேய்ந்தாய் போலும்
மதனைக் காலிப்படியே வாசி யோகம்
மவுனத்தைப் பெற்றிடு சன்மார்க்கந்தானே - 8

ஆயிரத்தெட்டிதழ் தாமரை மலர் அடைய சுழிமுனை என்ற வன்னியின் துணைக் கொண்டு ஊத தாயின் திருவடி நாம் காணலாம். வகார என்ற வாசியின் துணை கொண்டு கனலைத் தூண்டி ஊதினால் அந்த கனலில் வெப்பத்தால் அந்த மலரிலிருந்து அமுதபானம் கசிந்து ஊறும். சிதல் என்று கூறப்படும் உயிர்கள் தேனுண்டது போல் சித்தெறும்பு ஊற கல் தேயும் என்பது போல் உயிர்வளியானது வாசியோகம் செய்ய மகாரம் என்ற மவுனம் பெற்று சன்மார்க்கம் வழியாகும் என்பதாம்.

தன்வந்திரி எழுதிய ஞானம் என்னும் சிறுநூலில் மகார எழுத்தான மவுன அக்கரம் மறைமுகமாக தெரிவித்து அதனால் எதனை பெறலாம் என்பதை கூறும் பாடல் காண்க.

"வெளிவிட்ட முப்பாழ் சென்றப்பா லேறி
விண்ணான பயிர் செய்து விளையவைத்தால்
ஒளிவிட்ட "ஓமென்ற எழுத்தினால்"
உற்ற துணை யொரு வரில்லை
கழிவிட்ட நாளதனில் ஒடுங்குமாகிக்
கண்ணாடிப் பிர்மத்திர் கலந்து போகும்
சுழி விட்ட எழுத்தினால் முத்தி யேறும்
சொரூப நிலை யிலாத விடங்குடியதாமே - 9

புரியட்டம் கடந்த நிலையில், வெளியாகவுள்ள முப்பாழ்க்கு அப்பால் கடந்து ஏறினால் விண்வெளியில் பயிர் செய்து விளைய வைத்தால் ஒளிவிட்ட ஓங்கார மென்ற அக்கரத்தினால் துணையாக நிற்கும். அங்கு வொருவருமில்லை கழிந்து நின்ற நாலு சிவகலையில் ஒடுங்கும் கண்ணாடி போல் துலங்கும் தூய்மையான பரப்பிரமத்தில் (சிவஞானத்தில்) கலந்து நிற்கும். சுழியான அக்கரத்தினால் முத்திக்கு செல்லும் சொரூப நிலையில்லாத இடத்தில் குடிபுகும் என்பதாம்.

புரியட்டம் என்பது எட்டு அடுக்கு நிலை குறிக்கும். ஈசன், மாஈசன், சதாசிவம், விந்து, நாதம், சக்தி, சிவம், வராட்டியான், பரையானதாகும்.

பரை என்ற நிலையில் சிவயோகி நின்று அதில் மரணம் அடைந்தால் மீண்டும் சிவயோகியாகவே பிறந்து, அதிலிருந்து மீண்டு முப்பாழ் கடந்து நின்று அங்கு அவனிடத்தில் உண்டாகும் அமுதமுண்டு நிற்குணபாழ் கடந்து நிற்பான். அங்கு அவனுக்கு ஓங்கார அக்கரம் துணையாக நிற்கும். நாலான பாழ்கள் கடந்த அங்கு ஒடுங்கி கண்ணாடி போன்ற தூய்மையான பிரமத்தில் கலப்பன். ஓங்கார நிலையில் முத்தியேறி வடிவமற்ற விடத்தில் குடிஅமர்வான் என்பதாம். ஞான தோத்தோ பரஞானியாகத் திகழ்வான் என்பதாம்.

பரை கடந்த நிலை வெளிபாழ், வொளிப்பாழ் வெளி ஒளிப்பாழ், நிற்குணப் பாழ் ஆக இவைகள் நான்குவாகும். சிவகலை என்பது அனந்தை, தேனாதை, அனாதை, சிறுனதை என்பர். இக்கூற்று பராசார முனிவர் செவியுரை நூலில்,

"நின்றருளைத் தருகும் ஓம்ருபியோடு

Koviloor Digital Library

நேரனந்தை முதனாதை அனாதையான
குன்றாத சிறுனதைது யிவை நாலுந்தான்
குணமான சிவகலை யென்ற றிந்து கொண்டு
சென்று பதி னாறு கலைத் தீபம் பார்க்கத்
திறவு கோல் உகாரந்தான் மின்போற் சொக்கே - 8 என்று ஓதுவதால் அறியலாம்.

அகத்தியர் எழுதிய தத்துவம் என்னும் நூல் மவுனத்தின் தன்மை மிக எளிதாக குறித்துள்ளார். அதனை படித்து அறிந்து புரிந்து, தெளிவுப் பெற்றுப் பயனடைக.

"பணியான மவுனத்தைப் பாங்காய்க் கேளு
பாங்கான அவ்வு மவ்வு மவ்வுங் கூடி
கனியாத விந்து நாதத் தொனியினோடு
கைமுறையாய்ப் பிரணவமே யெழுத்தஞ்சுந்தான்
பணியான மூலத்திலறிந்து மூட்டு
மகத்தான சுழிமுனையாம் வழியிற்கூடி
அணியான மவுனவா னந்தம் நிற்கில்
அடங்காத தசநாத மெழும்பும் பாரே - 248

பாரந்த நாதத்தில் மவுனங் கூட்டப்
பளிச் சென்று கோடி ரவி யொளிதான் தோன்றும்
நேரந்த மவுனமே தாந்த பிர்மம்
நிச்சயமாய்ச் சிவ னென்று சித்தாந்தங்கள்
கூரந்த சமரசமே யானந்த மென்று
கூறுமது மவுனத்தின் குறியைக் கேளே - 249

"குறியான மவுனத்திற் கூடும் போது
குறிப்பான மேத கலை முன்னே தோன்றும்
அரியாதி யரன் பீசம் வீச கலையின் விந்து
அதன் பின்னே தோன்றுமது ஆத்மவடி வென்பார்
பிரியாத தொம்பதமாம் யிறைவர் தூலவடிவாம்
பேசாத சிவதுரிய மிதவா மென்பார்
நெறியானந விந்துவிலே மவுன மூட்டில்
நிரோதையர்த்த சந்திரனுந்தோற்றும் பாரே" - 250

"தோன்று மந்த நாதாந்த முடனே நாளும்
சொல்லுவா ரிதைச் சூக்ம தேகந்தானென்று
ஊன்று பர துரியந்தற்பத மருளா மென்று
உரைநாத கடந்தந்த மவுன மூட்ட
ஏனென்ற சக்தியா மளை சாமளை யுன்மனையும்
யிதன் பின் னொன் றுமிறைவன் காரணதேகமதாம்
ஊன்று சிவ துரிய பத மிவை தானென்பார்
உன்மனானந் தம்மிறைவ னுருவென்பாரே - 231

அருள்மிகு அகத்தியர் தத்துவம் — 300

மேற்கண்ட பாடல் மிக எளிய நடையில் உள்ளதால் இதற்கு விளக்கம் தேவையில்லை என்று கருதுகிறோம்.

மௌனம் என்றால் மகாரம் என்பர். இதற்குப் பெயர் ஓரெழுத்த என்பர். அதுவே பூரணம் என்பர். மாவென்று மகிழ்ந்து கூறு என்று கொங்கணர் கூற, அதவே வாய்பேசா மந்திரமாகும். ஒன்று என்று மகிழ்ந்து கூற, அதுவே அகாரம்+உகாரம் = ஓங்காரம் என்பர் (எட்டு = அகாரம். உ என்றால் இரண்டு) இதனை கீழ்வரும் சித்தர் பாடலால் அறிக.

"மாவென்ற ஓரெழுத்து நாமமாச்சு
மகத்தான பூரணமென்ற மாட்டு மாட்டு"

"மாப்பென்றே கொங்கணவர் மகிழ்ந்து கூற
வாய் பேசா மந்திரமு மிதுவே யென்றார் - 2

"ஒன்றெளவே மனமகிழ்ந்து செப்பு செப்பு
ஊவென்ன எட்டுடனே யுகந்து கூறு - 3

மவுன எழுத்து என்பது ஓங்காரமாகும் என்பதாம். இதுவே மனிதனை உயர்நிலைக்கு இட்டுச் செல்லும். இதுவே மனிதன் மானதாமாய் ஓத வேண்டிய எழுத்தாகும். இதுவே வேகாசிந்தையுடன் மனதில் நினைக்க வேண்டிய மந்திரமாகும். இதற்கு மகாரம் என்பர். மகாரத்திற்கு வாய்பேசா மந்திரம் என்பர்.

மவுனம் என்பது ஓர் சிறந்த சாதனமாகும். யார்ரொவருவர் மவுன சாதனை செய்கிறாரோ அவர்கள் முத்தியும் சித்தியும் பெற்று சிறப்படைகிறார்கள். மவுன சாதனையே சன்மார்க்கம் ஆகும். மவுனத்தின் ஆக்கம் எல்லா நிலைகளிலும் உயர்த்தி ஞானமடைய செய்யும் ஆற்றலுடையது என்பதால் சித்தர்கள் மவுனத்தின் மூலம் பெரும் பயனடைந்து சிறப்புற்று என்றும் மரணமில்லா நிலை பெற்று ஞானநிலை பெற்று நீண்டகாலம் நீடூழி வாழ்ந்து காலம் கடந்து யுகம் கடந்து நிலைப்பெற்று பயனடைந்தது மௌன மொழியால் தான் அறிய மக்களும் அதனை படித்துணர்ந்து செயல்படுத்தி பெரும்பயனடையுமாறு கூறி இந்த அன்புடையச் செய்தியை இன்புடன் நிறைவு பெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

17. குண்டலினி

மூலம் என்றும் கூறப்படும் கீழ் மூலாதார நிலைக்களத்தில் தீ மண்டலம் இருக்கிறது. இதனை அக்கினி மண்டலம் என்பர். இந்த மூலாக்கினி குண்டலினியான அந்தமில் சக்தியாக இருப்புக் கொண்டுள்ளது. அது பாம்பு போல் குண்டலமிட்டுச் சுருண்டுக் கொண்டிருப்பதால் குண்டலினி சக்தி அல்லது அந்தமில் சக்தி என்று போற்றுகின்றனர்.

மேலை நாட்டு மக்கள் இதனை SERPENTPOWER என்பர். அந்தமில் ஆற்றல் அல்லது வாலை என்றும் கூறுவர். குண்டலினி பாம்பை சிவயோக வழியே தட்டி எழுப்ப வேண்டும். அல்லது ஆழ்நிலை மௌன தியான முறையில் தூண்டி எழுப்ப வேண்டும். அது சீறி பாயந்து எழுந்து வெளிப்படும். அது பார்வைக்கு கிழக்கே வெளிப்படும் இளஞ் சூரியனைப் போல் தோன்றும்.

சிவராஜ யோகத்தால் அல்லது தவிர ஆழ்நிலை மௌன தியான யோகத்தால் சுழிமுனை நாடியை குண்டலினி சக்தி இயங்கி சுழினை நாடியினால் ஊசிமுனை வாசல் திறக்கும். திறந்த சுழிமுனை வாசல் வழியாக குண்டலினி சக்தி முதுகு தண்டுவடத்தின் தொளை வழியே மேலே பாயும். குண்டலினிப் பாம்பையை ஆட்சிமைச் செலுத்தி அதனை ஆட்டி படைத்தவர் சித்தர்களில் ஒருவர் பாம்பாட்டிச் சித்தர் ஆவார். அவர் குண்டலினி பாம்பைப் பற்றியச் செய்தி ஒன்று காண்க.

"நாதர் முடி மேலிருக்கும் நாகப் பாம்பே
நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே
பாதாளத்திற்குடி புகும் பைக் கொள் பாம்பே
பாடி பாடி நின்று விளையாடு பாம்பே - 20


பாம்பாட்டி சித்தர் பாடல் — 129. என்று ஓதுகிறார். குண்டலினியை வெகு விழிப்புணர்வுடன் தட்டி எழுப்புவதற்கு தக்க ஆசானின் மூலம் அவருடைய நேரடிப் பார்வையின் கீழ் பயிற்சி பெற வேண்டும். பக்குவ நிலை அடையாத மானிடர்கள், ஒழுக்கமில்லாத நபர்கள் இதில் ஈடுபட்டால் பலதொல்லைகள் உண்டாகும். குரு சொல்லி வழிகாட்டுதல் மூலமே குண்டலியைப் பயிற்சியின் மூலம் இயக்க வேண்டும். இல்லையேல் உடலுக்கும் உயிருக்கும் ஆபத்து உண்டாகும். மனக்கோளாறு ஏற்பட வாய்ப்பு உண்டு. இறப்பு முதலானவை உண்டாக்க நேரலாம்.

சாதாரண உலகியல் வாழ்க்கையில் ஈடுபட்டவர்களுக்கு கீழ்மூலத்தில் குண்டலினி உறங்குகிறது. சுழிமுனை வாயில் அடைப்பட்டுள்ளது. சூட்சுமமான சுழினை நாடியை வழங்கப்படவில்லை. குண்டலினி உறக்கநிலையில் இருந்து வருகிறது. சுழினை முனை நாடி அடைக்கப்பட்டிருந்தும், நமது உடலில் உயிரோட்டம் நடந்து வருகிறது. மக்கள் தங்கள் வாழ்க்கையை நடந்துக் கொண்டுதான் இருக்கிறது. மக்களும் உலக அரங்கில் வாழ்க்கைச் சூழல் ஓடிக் கொண்டிருக்கிறது. சாதாரண வாழ்க்கைக்கு எவ்வித இடர்பாடுமில்லை. சாதாரண உலகியல் வாழ்வில் குண்டலினி விழிப்படையத் தேவையில்லை. சுழிமுனை நாடி திறக்க வேண்டிய அவசியமில்லை.

இறையருள் தாக்கத்தால் ஆர்வமுடையவர்கள் முத்தி பெற வேண்டியும், உயர்ந்த சிறந்த ஆன்மிக சித்த அனுபவங்கள் பெற வேண்டியும், காயாதிகற்பம் உண்ணவும், சொரூப வடிவம் பெற வேண்டியும், மரணமில்லா பெருவாழ்வில் என்றும் திகழ வேண்டியும் குண்டலினியை தட்டியெழுப்பி சுழிமுனை நடுநாடியை இயக்கவும் அடைப்பட்டு வாசல் திறந்து புருவ மையத்தைக் கண்டு அதன் மேலைநிலையில் சென்று சித்தானுபவம் பெறவும் அதனை செயலாக்கம் செய்ய வேண்டும்.

இந்த குண்டலினியை செயல்படும்போது

Koviloor Digital Library



சாதாரண செயல் செய்யாது, அசாதாரண அற்புதச் செயலை செய்து எளிதாக முடிக்கப்படும். அவற்றிற்குரிய பக்குவமும், பயிற்சியும் இல்லாவிடில் குண்டலியை எழுப்பி சுழிமுனை நடுநாடி திறக்க இயலாது. நாம் அதற்குரிய பக்குவம் பெற்றுள்ளோமா இல்லையா என்பது நமக்கு விளங்காது. இந்த செய்தி நமது குருவுக்கு தெரியும். குரு என்னும் ஆசான் மூலம் பயிற்சிப் பெறுவதே மிகவும் உகந்தது. சாலச் சிறந்தது.

இந்த குண்டலினி சக்திக்கு அந்தமில் சக்தியென்றும் முழை முகப்பு, ஆச்சி, சக்தி, மண், மூலம், பாம்பு, பொன், மண், பூதலம், அரவினை, தையல், பை, பணி, கோங்கு, அரும்பு என்று பல்வேறு இடங்களில் திருமூலர் தம் மந்திரத்தில் குறிப்பிடுகிறார்.

1. குண்டலி என்பது யாது:

குண்டலினி என்பது சக்தியாவாள். தவயோகத்தால் அவளை சார்ந்து நின்றால் உமது குறிக்கோள் பூர்த்தியாகும். அவளே பூரணம் என்னுமிடத்தைக் காட்டியருளுவாள் என்பதை இராம தேவர் என்னும் சித்தர் கூறுவது காண்க.

"தவயோகக் குண்டலியே சக்தி சக்தி
சார்ந்தறிவாய் லட்சியம் பூரணந்தானாச்சு" - 106

இராம தேவர் தண்டக பட்சணி - 150.

2. திரிகரண சுத்தியாக்கும் சக்தியான குண்டலினி:

மானிட அழுக்குகள் போக்கி திரிகரணம் சுத்தப்படுத்து இனிய சொல்லுடையான் குண்டலினி சக்தி தேவியாவாள் என்பதை கருவூரார் சித்தரின் வாக்குக் காண்க.

"தேனென்ற மொழியாள் குண்டலியாஞ் சக்தி
திரிகரண சுத்தி செய்யுந் தேவி தானே" - 29

கருவூரார் சித்தர் சிவஞான போதம் — *43*

3. குண்டலினி வட்டம் அதுவே வல்லபை:

குண்டலினி என்ற சக்தியானவள் சுருண்டு வட்டமாக அமர்ந்து இருப்பாள். அதற்கு வல்லபை என்றும் பஞ்சகலையுடன் இதழாய்க் காணப்படும் என்பது குருராஜன் அவர்கள் கூறும் அற்புதச் செய்தி காண்க.

குறிவுற்ற குண்டலியின் வட்ட மென்றும்
கூறுவார் வல்லபதா னிதழ் னென்றே - 6
இதழான பஞ்சகலை யிருக்கும் தானம் - 7

குருராசுன் சிவயோக சிந்தாமணி - 30

4. குண்டலினி நிலையை அறிதல்:

அகாரம் என்னும் மந்திர எழுத்துக்குள் கணேசர் நிற்பார். ஆதி என்பவள் ஒரு கோணத்தில் நிற்பாள். உகாரம் என்ற மந்திர யெழுத்தில் வல்லபை என்னும் சக்தி நிற்பாள். அதன் சேர்க்கையின் ஒடுக்கத்தில் முனைப்பகுதி கதலிப்பூவாய் காணும். அதன்முகம் கீழ்நோக்கி குண்டலினி சக்தியாய் பாம்பு சுருட்டி படுத்திருப்பது போல் தோன்றும். அக்குண்டலினி சக்தி சுழிமுனை நடுநாடியில் ஊடுருவி நிற்கும். அப்படி நிற்பவ்ள் சிகாரமென்னும் துரியாதீத அவத்தையில் நிற்கும் என்பதை போகர்,

Koviloor Digital Library

"அகாரத்தின் மேலாகக் கணேசர் நிற்பார்
ஆதியொரு கோணத்தின் நிற்கும்
உகாரத்தில் வல்லபை யாள் சக்தி நிற்பாள்
ஒடுங்கிய தோர் முனை யொன்றிற் கதலிப் பூவாய்
ரரகாரமாய் முகங் கீழ்க் குண்டலியாஞ் சக்தி
யெனும் பாம்பு போலுருட்டிச் சீறிக் கொண்டு
சிகாரமாய்ச் சுழிமுனை யோடுருவி நிற்பாள்
திகழ் துரியா தீத மென்ற அவஸ்தை தானே - 2

போகர் திருமந்திர ஞானம் — 10.

அகத்தியர் சுத்த ஞானம் 12இல் 1ஆம் பாடலில் ஓம் என்ற மூல சீவன் உதிர வண்ணமாயிருப்பதால் அதுவே ஓங்கார பிரணவமாகும். அந்த ஓங்காரத்தினுள்ள வட்டமாயுள்ள இடத்தில் கணேசனின் இல்லமாகும். அந்த இல்லத்தில் குண்டலினி என்ற வல்லபையான சக்தியும் இருப்பாள் என்பதை,

"உதிர மதே ஓமென்ற மூல சீவன்
ஓங்கார பிரணவமு மிதுவேயாச்சு
பதியான வட்டமிது கணேசன் வீடு
பாங்கான குண்டலியும் வல்லபையாகும்" - என்று ஓதுகிறார்.

5. குண்டலியை எவ்வாறு எழுப்புவது:

குண்டலினி சக்தி நமது உடலில் உறக்கத்தில் உள்ளது. அதனை எவ்வாறு எழுப்புவது என்றால், இடைகலையில் வாசி வாங்கி நிறுத்தி பின்கலையில் வாசி விட வேண்டும். 2 — 4 — 1 என்ற அளவில் இழுத்தல் — நிறுத்தல் — விடுதல் என்றயளவு விகிதத்தில் சிவயோகம் செய்தால் உறங்கிக் கிடக்கும் குண்டலினி என்ற பாம்பு தியின் தாக்கத்தால் சீறியெழும் என்பதை.

"கூட்டி யிடை பிங்கலையில் வகுத்து பாயுங்
குண்டலியின் குணங் குறியுங் கூர்ந்து செல்வார் - 11

சச்சிதானந்த சுழிமுனை சூத்திரம் — 30

மேலும் போகர் உபதேச ஞானம் 120இல் மூலமதை வணங்கி வகாரம் என்ற வாசியினால் இழுத்தல் — நிறுத்தல் — விடுதல் போன்ற சிவயோகம் செய்தால் களங்கமற்ற குண்டலினியானவள் நந்தி குரு இருப்பிடத்திற்கு சேர்ப்பாள் என்பதை போகர் வாக்கினைக் காண்க.

"கேளு மூலத்திற்கும் பிட்டு வகாரத்தைக்
கீழ் போற்றிச் சிகாரம் போகாமல் ரேசி
நீளு ரேசித்துப் பூசித்துப் பாரு
நிர்மலமாங் குண்டலியில் நந்தி காணும் - 64

போகர் உபதேச ஞானம் — 120

6. குண்டலினியால் களங்கங்கள் ஒழியும்:

இடைகலையில் வாசியை வாங்கி சுழினையில் நிறுத்தி பிங்கிலையில் விடுதல் என்பது சிவயோகமாகும். இந்த வாசியை நாளுக்கு நாள் உயர்த்திக் கொண்டு சென்றால் தேகத்தின் அழுக்குகளும் — உயிரின் களங்கங்கள் நீங்கி சுத்த தேகம் பெறும் வாய்ப்பு குண்டலினியின் சக்தியால் உண்டாகும் என்பதை திருமூலர்.

"குவியான குண்டலியை இடை பின்னாகக்
கூர்மையுட னாட்டி மிக நடுவே யேற்றிக்
கவியானை வசமாகுங் களங்கந் தீரும்
கண்ட படி யானுரைத்தேன் கருத்துள்ளோர்க்கு - 5

திருமூலர் சோடச ஞானம் — 16

7. குண்டலினி சக்தி ஒருவனை சித்தனாக்கும்:

மானிடன் இறையருள் உந்துதலால் ஆன்மிக செய்திகள் தன்முன் பிறவியின் நன்மையால் கூடும். நல்லதையே நாடி நன்மை செய்து நலமே புரிந்தால் அம்மானிட ஆன்மா பக்குவ நிலையடையும். பக்குவப்பட்ட மானிட ஆன்மா இறையருளால் சாகாக்கலை அறியும் வாய்ப்பு உண்டாகும். அப்பொழுது சிவயோக செந்நெறியில் நின்று வாசியின் துணைக் கொண்டு குண்டலினியைத் தட்டி எழுப்பினால் அது குரு பூரண நிலைக்கு அழைத்துச் சென்று அருளும். அந்த அருளினால் மானிடன் சித்தன் என்றும் ஞானசித்தன் என்றும் போற்றப்படுவான் என்பதை

"அறியப்பா சித்தியாஞ் சித்தனாவாய்
அப்பனே குண்டலியாம் வாசிக் கொண்டே" - 240

Koviloor Digital Library

அகத்தியர் அந்தரங்க தீட்சாவிதி — 400

8. குண்டலினியால் குருநந்தியிடம் சார்தல்:

குண்டலினியின் செந்தீயால் சிறுவாசலுக்குள் நுழைந்து சென்றால் சீவாத்மாவும் பரமாத்மாவும் இரண்டு ஒன்றாக கலந்து நந்தியைப் பற்றி முக்கோணத்தில் ஏறி நின்றால் நெற்றி நடுவே குண்டலினியின் நடனம் கண்டு மகிழலாம் என்பதை சுப்பிரமணியர் வாக்கு கவனிக்க.

"செந்தீயே சிறுவாசற் குள்ளே நின்று
சீவாத்மா பரமாத்மா யிரண்டு மொன்றாய்
நந்தியினாற் பத்தியே முக்கோணமேறில்
நடுவிருக்குங் குண்டலியின் நடனம் பெற்று - 1

சுப்பிரமணியர் ஞானம் — 16

மேலும் உரோம மாமுனி சித்தர் தம் பூசாவிதி விஞ்ஞை 14இல், 6ஆம் பாடலில் முக்கோணத்தில் நின்ற ஆன்மா குண்டலினியால் கணேசனின் துணையால் அக்கோணத்தில் நிற்கும். பிறப்பில்லை என்பதாம்.

"முக்கோணத்துள்ளே முழங்கு முக்கோணந்தான்
அக்கோணங் குண்டலி யான்மா கணேசனாற்" - 6

என்று அப்பெருஞ்சித்தர் அனுபவம் உணர்த்துகிறார்.

கருவூரார் சிவஞானபோதம் 43இல், 6ஆம் பாடலில் ஒளியான குண்டலியான மூலமதில் முக்கோணத்திலும் அறுகோணத்திலும் உதித்தெழும் நிலையில் தேவி நிற்பாள்.

"ஒளியாகிக் குண்டலியாய் மூலந்தன்னில்
உதித்தெழுந்த முக்கோணம் சட்கோணம்" - 6

கருவூரார் சிவஞான போதம் — 43

மேற்கண்ட கருத்தை உரோமா முனி சித்தரும் உறுதிப்படுத்துவதை அறிக.

"அண்டம் போலாகும் அறுக்கோணத்துள்ளே
குண்டலியாகு முக் கோணத்தினுள்ளே" - 1

உரோமமாமுனி பூசாவிதி விஞ்ஞை — 14

9. குண்டலினியே பலவிதத்தில் குருபதியை காண உதவியாக இருத்தல்

தாயை வைத்துதான் தந்தையை அறிதல் வேண்டுமென்ற இயற்கையின் ஒழுக்கமாக உள்ளது. அதுபோல் குண்டலினியின் துணைக் கொண்டு குருபதி அடைய வேண்டுமென்ற சித்தர்கள் கூறுகிறார்கள் என்பதை கீழ்வரும் சித்தர் பாடலால் அறியலாம்.

"குணமான குண்டலியைக் கண்டால் மைந்தா
குருவான பதி தலத்தில் கூடலாம்" - 376

அகத்தியர் அந்தரங்க தீட்சை — 400

"கோன வனாய் நின்று அவராடுங் கூத்து
குண்டலியி னந்தியிடங் கூர்ந்து பாரே" - 58

அகத்தியர் பரிபூரணம் — 1200

" கணபதியை மூலத்தே யறிந்து போற்றி
கன லெழுப்பக் குண்டலிக்குள் நந்தியாச்சு" - 5

கொங்கணர் ஆதியந்த சூத்திரம் — 11

"பாரே நீ சாகரத்தின் விந்துக் குள்ளே
பன்னி ரெண்டு முகத்துடைய வன்னியாலே
கூரே நீ ரவி மதி குண்டலியிற் பாயும்" - 3

சுப்பிரமணியர் ஞானம் — 13

"சேரடா குண்டலிக்குள் உகாரந் தானுஞ்
சிவ சிவ யுக மட்டுஞ் சமாதிக்குள்ளே" - 27

பிரம முனி பிரம ஞானம் — 36

"குடமதிலே பருத்த பூசணிக்காய் போலே
குண்டலியைப் பத்தி திரி முதுகெலும்பு
அடவுடனே ஆயிரத்தெட்டிதழ்ப் பூத்து
அருவுருவாய்ப் புருவமைத்த மர்ந்தவாரே" - 2

சச்சிதானந்தர் சுழிமுனை ஞானம் — 31

"வித்தாதி முளைத் தெழுந்த சுடரே தீப
விமலியே குண்டலி ஓங்கார சக்தி" - 10

அகத்தியர் மெய்ஞ்ஞானம் — 33

"அளிந்து அந்தப்பதியான பிரம பீடம்
அமர்ந்த நிலையான தொரு அண்ட பீடம்
குளிர்ந்த இதழயிரமாய் குவிந்த பீடம்
குருவான குண்டலியின் பீடந் தானே" - 59

அகத்தியர் பூரணம் — 1000

Koviloor Digital Library

"அருந் தவமாய் வாசி கொண்டு சுழினையேறி
அனு தினமு மனது கொண்டு பரத்தை நாடிப்
பொருந்தவே குண்டலியி னிடத்தைப் போற்றி
போற்றிரியப் பூரணத்தில் மனதை நாட்டி" - 100
இராம தேவர் தண்டக பட்சணி — 150.

"பரமென்ற குண்டலியின் நன்மையாலே
பரா பரமே மனத்திற்குப் பரிவாய்க் காணும்
சரமென்ற வாசி யெல்லா மிதற்குள்ளாச்சு
சச்சிதானந்த மயந் தானுண்டாச்சு - 15
வசிட்டர் ஞானோதயம் — 16

மானிடன் ஒவ்வொருவரும் சாகாக்கலையை அறிய ஆர்வம் கொள்ள வேண்டும். அல்லது அதிலுள்ள செய்திகள் நாம் படித்து உணர்தல் வேண்டும். சாகாக்கலைக்கு தூண்டுக் கோலாக இருப்பது குண்டலினி என்னும் அந்தமில் சக்தியாகும். இந்த குண்டலினி சக்தி உலகியலில் உழலும் மானிடர்களுக்கு தேவைப்படாது. அவசியம் உண்டாகாது.

குண்டலினி சக்தியை வாசி கொண்டு எழுப்பிவித்தால் போதும். அக்குண்டலினி சக்தி ஆதாரங்கள் கடந்து அண்ட உச்சியில் நிறுத்தி தேக்க வேண்டும். முதலில் கீழ் ஆதாரக்குண்டலி சக்தி. அடுத்து உந்தியில் ஓர் குண்டலி சக்தி. பின்பு கண்டத்தில் ஓம் குண்டலினின சக்தி.

அதன்பின் நெற்றி புருவ மையத்தில் குண்டலினின சக்தி. அடுத்து வட்டத்தில் அமரும் குண்டலினி சக்தி. முக்கோணத்தில் அமரும் குண்டலினி சக்தி. மூலத்தில் அமரும் குண்டலினி சக்தி. அதன்பின் அறுகோணத்தில் நிலைக்கும் குண்டலினி சக்தி. உச்சந்தலையில் கீழ் நிற்கும் குண்டலினி சக்தி. றீங்காரத்தில் அமரும் குண்டலினி சக்தி. ஆதி மகா மூலத்தில் அமரும் குண்டலினி சக்தி ஆக பலவேறு நிலையில் காணப்படும் குண்டலினி சக்தியாகத் திகழ்கின்றது. இதனை அனுபவ வாயிலாகத்தான் உணர முடியும். படிப்பதாலே எழுதுவதாலே அறிய முடியாது. மானிடர்களுக்கு சித்தர்களின் துணையிருந்து, இறையருள் கூடும்போது சாகாக்கலைச் செய்திகள் அறிய வரும்.

மானிடன் சாகாக்கலை உணர வேண்டுமென்றால் உயிரிரக்கம் எல்லாம் உயிர்கள் தன்னுயிராகக் கருதுதல் — பசியாற்றல் — கல்வி வழங்கல் — கருணை காட்டல் — அன்பு செலுத்தல் — புலால் உண்ணாமை — மௌனம் கடைப்பிடித்தல் — தியானம் செய்தல் — மனஅழுக்குகள் அகற்றல் — கடுஞ்சொல் கூறுவது தவிர்த்தல் — எந்த நேரமும் இறையருள் சிந்தனையில் இருத்தல் — கடமை தவறாமல் பணி செய்தல் — நல்லொழுக்கம் நாடுதல் — பெண்மையை தவறாக நடத்துவது தவிர்த்தல் போன்ற நல்லொழுக்கம் கடைப்பிடித்தல் என்ற கொள்கையை அன்றாடம் நாம் செய்தால் நலம் தரும் நிகழ்ச்சிகள் நமக்கு இறைவன் உகந்தளிப்பான்.

உரியக் காலக் கட்டத்தில் வயதாக வயதாக சாகாக்கலை தெரிவிக்கும் நூல்கள் வாங்கி படித்து உண்மை நிலை அறிதல் வேண்டும். சாதி — மதம் — சமயம் — நீக்கி மானிட இனம் அனைவரும் ஒன்றாக பழகுதல் வேண்டும். புலால் உண்ணாத அக இன மக்களுடன் பழகுதல் — புலால் உண்ணும் இன மக்களை அறிவுரை கூறுதல் போன்ற நல்வழியை கூறி அதன் உண்மை நிலை அறிய வைத்தல் என்பன போன்ற நல்வார்த்தை கூறி அவர்களை அதிலிருந்து மீட்டு சைவம் தழைக்கப்பாடுபடுதல் வேண்டும்.

சமய சின்னங்கள் தவிர்த்தல் போன்ற நல்லுணர்வு ஏற்படுத்தினால் ஒவ்வொரு மானிடப்பிறவி சாகாக்கலை அறியும் வாய்ப்பு இறையருளால் உந்தப்பட்டும், உணர்த்தப்பட்டும் நல்வழியில் செல்லும் நற்குணங்கள் உண்டாகும் என்பதை உணர்ந்துக் கொண்டு இறையருளின் நோக்கம் மானிட மக்கள் மீது என்றும் நிற்கும்படி வேண்டி இந்த அருமையானச் செய்தியை நிறைவு செய்கிறோம்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

18. பரிசுழி அல்லது சுழிமுனை

உலகம் என்பது பல்லுயிர்கள் தாங்கி உருண்டு செல்லும் பூமியாகும். நான்கு வித யோனி மூலம் பல்வேறு உயிரினங்கள் பிறந்து சிறிது காலம் வாழ்ந்து உலகில் உழன்று நலிந்து மாண்டு மடிகின்றனர். உயிரினங்களில் மானிடப் பிறவி உயர்ந்தது. இதனை ஔவையார்,

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்பதின் மூலம் அறியலாம். மானிடப் பிறவி எடுத்து உலகில் உழன்று மாண்டு போனவர்கள் எண்ணிலர். மானிடப் பிறவி எடுத்த உயிர் தாம் செய்த வினையின் முனைப்பால் நல்லவையும் தீயவையும் அனுபவிக்கின்றனர்.

சிலமானிடப் பிறவிகள் தங்கள் கடின உழைப்பால் உலக நலனுக்காக ஆறாவது அறிவான பகுத்தறிவுக் கொண்டு பயன்படுத்தி விஞ்ஞான கண்டுபிடிப்புகள் உருவாக்கி மக்கள் நலனுக்காக, அறிமுகப் படுத்துகின்றனர். சில மானிடப் பிறவிகள் சில விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் உருவாக்கி மக்களின் தீமைக்காகவும் உலக அழிவிற்காகவும் பயன்படுத்துறார்கள். சில மானிடப் பிறவிகள் உலகியல் நலன் கருதாமல் சொந்த வாழ்வியல் நலம் கருதாமலும் எவ்வித பயனின்றி மாண்டு மடிகிறார்கள்.

இன்னும் சில மானிட இனங்கள் மக்களை ஏமாற்றி அவர்களின் உழைப்பை திருடிக் கொண்டு அதனை உடையவரின் அனுமதி இல்லாமல் அதனை பயன்படுத்தி அதனால் வருமானம் ஈட்டி கொடுத்து உண்டுகளித்து பின் எவருக்கும் பயன்படாமல் இறப்பை தேடி மடிகிறார்கள். இன்னும் சில மானிட உயிர்கள் வழிப்பறி, கொள்ளை, களவு, கொலை, கற்பழித்தல் போன்ற அடாத செயலில் தலையிட்டு உலகில் சில காலம் இருந்து அகால மரணத்தை சந்திக்கிறார்கள்.

பொய்யான செய்திகள் உண்மையாக நிகழ்ந்தாக கூறியும் எழுதியும் அடுத்தவர்களை மதி மயக்கி அதனால் கிடைக்கும் வருவாயினால் வாழ்க்கை நடத்தி சில காலம் வாழ்ந்து நொந்து நலிந்து இறந்து போகின்றனர். மேலும் சில மானிட உயிர் பயிர்கள் யாருக்கும் பயன்படாது வீணே வாழ்ந்து வீணே மடிகின்றனர்.

மேற்கண்டவாறு மானிடர்கள் உலகில் பிறவி எடுத்ததை "சண்டாளப் பிறவி" என்று சித்தர்கள் கூறுகிறார்கள். மானிடர்கள் உலகில் பிறவி எடுத்தால் மரணத்தை தடுக்கும் பயனுள்ள நற்கல்வியான "சாகாக் கல்வி" கற்கும் அல்லது அறியும் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

பல மானிடர்கள் தங்களை பெரிய மேதையென்றும் சிறந்த அறிவாளியென்றும் கருதிக் கொண்டு தன்னுடைய வயிற்று பிழைப்புக்காக மலமடங்கிய வேதத்தையும் நாறும் சாத்திரக்குப்பைகளும் மக்களுக்கு எடுத்துக் கூறி உலகியலில் உழன்று தானும் முத்திக்கு வழிநிலை பெறலாமலும் அடுத்தவர்களை முத்திக்கு செல்லும் வழிப்பாதை அடைத்தும் தடுக்கப்படுகிறார்கள். உலகில் உள்ள மக்கள் பொய்யாகக் கூறப்பட்ட அசைவவேத சாத்திர குப்பைகள் படித்து அதனை நடைமுறைப் படுத்தி எவ்வித பலன்கள் காணாமல் உடல்தளர்ந்து உள்ளம் நலிந்து, மனம் வெந்து நிலைகுலைந்து மாண்டு மடிகின்றனர் என்பதை ஜெயமுனி என்னும் மெய்யன்பர் தாம் எழுதிய திருமந்திரம் — 37 — என்ற நூலில் 2ஆம் பாடலில்,

"வீணப்பா வேதமென்றும் சாத்திரம் என்றும்,
விளம்பினார் வயிற் பிழைக்க மெய்மை போலக்
காணப்பா அவை முற்றும் உலகத் தோர்கள்
கையாண்டு மெய்சிலித்து மாண்டு போனார்" - 2

என்று மக்கள் மீது இரக்கப்பட்டு ஓதினார்.

Koviloor Digital Library

மாண்டு போகும் மக்களை நோக்கி சித்தர்கள் மக்களுக்கு அறிவுரையாக "சாகாக்கல்வி" யினைப் பற்றி எடுத்துக் கூறி இன்றும் நம்மிடையே இருந்து வருகிறார்கள். மக்களின் நிலையை அறிந்து அவர்கள் மீது கருணைக் கொண்டு சித்துக்களின் சிவநெறியை மேற்கொண்டு மரணத்தைத் தடுத்துத் தெய்வீக தன்மை பேறு பெற்று உயர்ந்த வாழ்க்கை பெறலாம் என்று இன்றும் நம்மிடையே நம்மையறியாமல் சித்தர்கள் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்.

உலகில் பிறக்கும் மானிடர்கள், மரணத்தை தடுக்கும் கலையை அறிய முற்படாதவன், அதனைப் பற்றி தெரிந்துக் கொள்ள ஆர்வம் காட்டாதவன், இவர்களின் பிறப்பு நிலை "சண்டாளப் பிறப்பு" என்றும், இவர்கள் இறந்து பிறந்தும், பிறந்தும் இறந்தும் உலகில் பயன்படா பறிவி எடுப்பர் என்று அகத்தியர்,

"மனிதனாய் பிறந்தக்கால் "சாகாக்கல்வி"
வாசிக்கும் சிவமோடு வாழ்க்கை சேர்வான்
செனித்தமாஞ் சண்டாளப் பிறவிலோர்கள்
செகத்திறந்து செனிப்பார்கள் செகதிற்றானே" - 56

அகத்தியர் பூரண நுட்பநூல் — 216

மானிடப்பிறவி முத்தி பெற வேண்டுமென்றால் பரிசுழி என்னும் சுழிமுனை அறிந்தால் ஒழிய பரம்பொருள் பெற முடியாது. அதற்கு செம்மையான தமிழ் மொழி அறிந்திருத்தல் வேண்டும். அந்த தமிழ் மொழிக்குத் தான் முருகர் செய்த மொழி என்றும், அகத்தியர் மொழி என்றும், சிவமொழி என்றும், வாலை மொழி என்றும், சித்தர்கள் மொழி என்றும், தமிழுக்கு சிறப்பித்துக் கூறுகிறார்கள். தமிழ் மொழி ஒன்று தான் மானிட பிறவிக்கு முத்திக்கு வழிகாட்டும் மொழி என்று மேன் மக்களான சித்தர்கள் கூறுகிறார்கள். பிற மொழிகள் பரிசுழி என்னும் சுழிமுனை நிலை காட்டாது என்றும், முத்தியும் தராது என்றும் ஓதியுள்ளனர். பல வடவர்களான முனிகள் — ரிஷிகள் — இருடிகள் போன்றவர்கள் தென்பகுதியான தட்சணத்திற்கு வந்து தமிழைக் கற்று அதன் மூலம் இரகசியமான பொருளை அறிந்து உணர்ந்து செயல்படுத்தி முத்திப் பெற்ற செய்தியை தமிழில் நூல்களாக செய்துள்ளனர் என்பது சித்தர் நூல்களில் அறிய செய்திகள் காணக் கிடக்கிறது.

எனவே தமிழ் மொழி ஒன்றுதான் எக்காலத்துக்கும் முத்தி தரும் மொழியாக சிறந்து விளங்கி வருகிறது என்பதை காகபுசண்டர் வாக்கால் அறியலாம். ஆய கலை அறுபத்து நாலுடன் சாகாக்கலை யென்னும் சாகாக்கல்வியை சித்தர்கள் துணையின்றியும் தமிழ்மொழி துணையின்றி மரணத்தை தடுக்கும் வழிமுறைகள் அக்கல்வி மூலம் அறிய தடுக்கப்பட்டுள்ளது. பிற மொழிகளின் மூலம் அதன் உள்ளகத்தில் மறைந்துள்ள இரகசியங்கள் மறைபொருள்கள் மற்றும் பரிசுழி என்று கூறப்படும் சுழிமுனையப் பற்றி அறிந்துக் கொள்ள முடியாது என்ற செய்திகள் சித்தர்கள் கூறியுள்ளனர்.

இச்செய்தியை அறுபது சதிர் யுகம். சந்தித்து கடந்து நிற்கும் சித்தர் பெருமான் காகபுசண்டர் கூறுகிறார். சதிர் யுகம் என்பது பதினெட்டு யுகம் கொண்ட கணக்கியல் காலயளவு என்று சித்தர்கள் கணக்கிட்டு தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளார்கள். ஒரு சதிர் யுகத்திற்கு சற்றேறக்குறைய நூறு கோடி வருடமாகும். மேதகு அருள் வடிவமான சித்தர் காகபுசண்டர் அறுபது சதிர் யுகம் சந்தித்து கடந்து நிற்பது ஆகும். அதாவது ஆறாயிரம் கோடி வருடம் காலம் கடந்து இன்னும் வாழ்ந்துக் கொண்டு வருபவராவார். அப்பெருஞ் சித்தர் தம் நூல் 1000த்தில் கீழ்வருமாறு கூறுகிறார்.

"பாசை யென்ன சமஸ்கிருத வடமாம் பாசை
பரிசுழியைக் காட்டிடுமா முத்தி யீமா
ஆசையென்ன தமிழருத்தம் அதுவும் ரெண்டோ
ஆஊவும் வேறலவே வார்த்தை பேதம்
காசை யென்ன கொடுத்திடுமோ காசு கேட்க
கையேந்தி நிற்க வைக்கும் மந்த பாசை
ஓசையென்ன நீட்டிடுவீர் நாவின் சத்தம்
உச்சரித்த மந்தரம் அரிய தானே" - 436

என்று அவர்கூறும் அந்த மொழியின்

Koviloor Digital Library

நிலையை குறித்து வருந்துகிறார்.

மேலும் தமிழகத்தை பிறப்பிடமாகக் கொண்ட மிகச் சிறந்த மெய்ஞ்ஞானியான தேரையர் என்னும் சித்தர் "சிவபூசா விதி — 75"இல் மானிடன் இறையருள் நிலை பெறவும் முத்தி அடையவும் தமிழ்மொழி எல்லாச் சமூக மக்கள் கற்பதின் அவசியம் அறிந்து இருக்க வேண்டுமென்று அவர் ஓதியுள்ள சில பாடல்கள் தந்துள்ளதை படித்து அதன் முக்கியத்துவத்தை உணர்ந்துக் கொள்க.

"ஆச்சப்பா "தமிழினுடை பெருமை" கேளு
அப்பனே "யகத்தியன்றான்" நின்றாரப்பா
வாச்சப்பா வடுகருக்கும் ஆகும் பாரு
வகையான பிராமணர்க்கு மாகும் பாரு
காச்சப்பா கன்னடியர்க்காகும் பாரு
கலையான குச்சிலியர்க் காகும் பாரு
மாச்சப்பா மராஷ்டகருக்காகும் பாரு
மறையான மிலேச்சருக்காகும் பாரே - 66

பாரப்பா யனைவருக்கும் வேணும் வேணும்
பாங்கான க்ஷத்திரியர்க்கு வேணும்
நேரப்பா வைசியர்க்கு வேணும் வேணும்
நிலையான சூத்திரர்க்கு வேணும் வேணும்
தேரப்பா துலுக்கருக்கு வேணும் வேணும்
தெளிவான கலிங்கருக்கு வேணும் வேணும்
ஏரப்பா எடுத்திருக்கும் அண்டத் தோர்க்கும்
இயலான "தமிழது" தான் வேணும் பாரே - 67

பாரப்பா அதலமென்றும் விதல மென்றும்
பரிவான நிதலமென்றும் ஏழுலோகம்
மேரப்பா மேலேழு லோக முண்டு
மெய்யான லோகமடா சத்யலோகம்
ஏறப்பா யிப்படியே கூடி நின்றால்
இயலான அண்டமடா வொன்று மாகும்
ஆரப்பா ஆயிரத்துயெட்டு அண்டம்
அப்பனே யவர்களுக்குந் "தமிழே" வேணும் - 68

வேணுமடா சிதம்பரத்தை பார்க்க வென்றால்
விரிவா "தமிழது" தான் வேணும் வேணும்
பூணுமடா வாலையைத்தான் பூணவென்றால்
"புகழாகத் "தமிழது" தான் வேணும் வேணும
தோணுமடா சிவயோகம் வாசியோகம்
தூக்க வென்றால் "தமிழது" தான் வேணும்
வேணும்
ஆணுமடா யனைவருக்கும் வேணும் வேணும்
அப்பனே யனைவருந்தா எறிந்து பாரே - 69

என்று தேரையர் கூற்று கவனிக்கத் தக்கது. சாகாக்கல்வி பயிலவேண்டுமென்றே அனைவருக்கும் தமிழ்மொழி இன்றியமை யாதது. இனி பரிசுழி என்கிற சுழிமுனைப் பற்றி ஆராய்வோம்.

நமது தேகத்தில் எழுபத்திரெண்டாயிரம் நாடிகள் உள்ளன. இந்த அனேக நாடிக்குள் பத்து நாடிகள் மிக முக்கியமானது. இந்த பத்து நாடிக்குள் மிக மிக முக்கியமானது மூன்று நாடிகள் ஆகும். அவை இடைகலை அல்லது இடக்கால் என்று கூறுவர். அடுத்தது பிங்கலை அல்லது வலக்கால் என்று கூறுவர். மற்றொன்று நடு நாடி அல்லது சுழிமுனை என்கிற பரிசுழி என்பர்.

மேற்கண்ட மூன்று நாடிகளில் முத்திக்கு படிகாலாக இருப்பது "சுழிமுனை" நாடியாகும். இடைகலை நாடிக்கு சந்திர நாடி என்பர். பிங்கலைக்கு சூரியநாடி என்பர். நடுநாடியாகிய சுழினைக்கு அக்கினி அல்லது வன்னி நாடி என்பர்.

இடைக்கலை நாடியும் பிங்கலை நாடியும் மனிதன் உயிர்வாழ வேண்டி உயிர்வளி (பிராணவாயு) போக்கு வரவு செய்யும் நாடியாகும். பரிசுழியான சுழிமுனை நாடி எதுவும் வழங்காமல் அதன் உட்வழியின் துவாரங்கள் சவ்வும் வழலையும் கலந்து அடைப்பட்டுள்ளது. சுழிமுனை நாடியில் வாசி ஓட்டம் கிடையாது. வாசியென்றால் மூச்சு ஓட்டம் இல்லை என்பதாம். அதன் வாசல் பூட்டப்பட்டுள்ளதால் சுழிமுனையில் எவ்வித சலனமின்றி மானிடன் அறிய இயலாதவாறு மறைக்கப்பட்டுள்ளது. சுழிமுனை மானிடனுக்கு முத்தியளிக்கும் ஓர் இடமாகும். எனவே அதனை முக்கியமாய் பார்த்தறிந்து கொள் என்று சித்தர்கள் கூறுவதை நோக்குக.

"மூச்சப்பா ஓடாது சுழிமுனை யிடம்பாரு"
முத்தியுள்ள மதை முன்னிலையாய்ப் பகரே - 39

Koviloor Digital Library

என்று மானிடர்கள் மீது மிக தயவுக் கொண்டு கூறுகிறார்கள்.

மூலாதாரம் ஆரம்பித்து வீணாதண்டூடே உச்சி சிரசளவும் முட்டி நிற்கும் நாடியாகும். இந்த நாடி மிக நுட்பமான நாடியாகும். இந்த நாடிக்குள் சித்திரநாடியும் வச்சிர நாடியும் குழாயிக்குள் குழாய் சொருகினார் போல் இருக்கும். எல்லா நாடிகளுக்கும் ஆதாரமாய் நடுநாடி முக்கியத்துவமாக இருக்கும். இந்நாடியின் இருபக்க முனையான கீழ மூலாதாரத்திலிருந்து மேல் பிரமமந்தரம் வரையிலும் அதன் நுட்ப வழியான துவாரமான துளையை அடைப்பட்டுள்ளன. நடுநாடியின் துளையை அடைப்பட்டுள்ளதை திறந்தால் நமக்கு வழங்காத மாபெருஞ் சிவயோக வாழ்வு வழங்கு வழங்காத மாபெருஞ் சிவயோக வாழ்வு வழங்குவிப்பதே இந்த நடுநாடியின் பெருநோக்கமாகும். அதன் கதவு ஆன்ம நெகிழ்ச்சியின் அருளால் திறந்தால் பெறும் நன்மைகள் என்ன என்று திருமூலர்,

கதவு திறந்தாற் கயிலாச மப்பா
கதவு திறந்தாற் காரண மப்பா
உதவா தமுதம் உதவிகள் செய்தால்
சதகோடி காலந் தானொரு நாளே - 139

என்று திருமூலர் குருமூப்பு நூல் 200இல் ஒதுகிறார்.

சுழிமுனையின் கதவு திறவு கோல் கொண்டு திறந்து அதன் வழியே உயிர் கலந்தால் கயிலாசம் என்னும் திருவம்பலம் சேரலாம். பிண்டமான தேகத்திலுள்ள உண்ணாக்கு முனையை திறந்தால் அமுதம் என்னும் அற்புத பொருள் கிடைக்க உதவியாக இருக்கும். அந்த அமுதப் பொருள் கண்டு உண்டவர்கள் எண்ணிலா கோடி காலம் மரணமின்றி அருளைப் பெறலாம் என்பதாம்.

மூன்று நாடிகள் எவை என்பதையும், அதன் தெய்வங்ககள் யார் என்பதையும், அதன் செயல்களும் சித்தர் பாடல் மூலம் அறியலாம்.

"ஓகோ கோ "யிடையும்" பிங்லையினோடு
தாமப்பா "சுழிமுனையாம்" மூன்று நாடி
தானதிலே இடை யிடது நாசி தேவும்
சோமனப்பா பிங்கலையும் வலது நாசி
சூரியனே தேவதை யென்று இயம்பலாமே - 12

இயம்பு "சுழிமுனை"க்கு மிடை பிங்கலைக்கு
யிடை நடுவே யிலங்கு மிதன் தேவு பிர்ம
சுயம்புவாய் ரேசகம் "பூர"க் கும்பகமும்
சொல்மூன்று தேதையின் ஜென்மபூமி
வயம்வாயு வெளிவிடுதல் ரேசகந்தான்
வாயு வையு மேற்றிடுதல் பூரகந்தான்
பயம் போக வுள்ளடங்கல் கும்பகந்தான்
பாலகனே இவ்வுண்மை பரிந்து பாரே - 13

என்று ஓதப்படுகிறது.

நாடிகள் மூன்று, அவை இடைகலை — பிங்கலை — சுழிமுனை — இடைகலை இடது மூக்கு வழியாகும். பிங்கலை வல மூக்கு வழியாகும். சுழிமுனை மேற்சொல்லப்பட்ட இரு நாடிகளுக்கு நடுவில் இருப்பது என்பதாம் இதன் தெய்வங்கள் என்னவெனில் இடைகலைக்கு சந்திரன் பிங்கலைக்கு சூரியன் — சுழிமுனைக்கு பிர்மம் என்பதாம். இவை மூன்றும் விடுதல் — எடுத்தல் — நிறுத்தல் என்ற தொழிலை செயல்படுத்துவது இவைகளின் பணியாகும் என்பதாம்.

மேலும் மச்சமுனி தீட்சை ஞானம் 55இல் 4ஆம் பாடலில் இடைகலை சந்திரன் அகாரமாகும். அதுவே சிவமாச்சு என்றும், பிங்கலை சூரியன், உகாரமாகும். அதுவே சத்தியுமாச்சு என்றும், ஆக இவை இரண்டும் சேர்ந்து நிற்பது தான் சுழிமுனையாகும். அந்த சுழிமுனையே நந்தியாகும். அந்த நந்தியே விந்து வாகும் என்பது கீழ்வருமாறு ஓதுகிறார்.

"காணா யகாரங் கடிய சிவமாச்சு
பூணா யுகாரம் புரிகின்ற சக்தியாச்சு
தோணாதிது ரெண்டுஞ் சேரச் சுழிமுனை
வீணல்ல நந்தி விளங்கிய காமமே - 64 என்று

சித்தர் பெருமான் மச்சமுனி ஓதுகிறார்.

கடுவெளி சித்தர் சுழிமுனையைப் பற்றி கேட்டால் இவ்வாறு விடை தருகிறார். இடைகலை பிங்கலையும் கூடி பற்றி நின்ற நேரிடமே சுழிமுனையாம். இந்த

Koviloor Digital Library

மூன்று சுடர்கள் ஒன்றாக கூடினால் அக ஆகாசத்தில் தீபவொளியை கண்டு கொண்டதாக ஓதுவதை அவரின் பாடல் மூலம் அறிக.

பாரே நீ இடைகலை பிங்கலையுங் கூடிப்
பத்தி நின்ற யிட மல்லோ சுழினையாச்சு
தேரே நீ இம்மூனிடஞ் சுடருமான
தீபவொளி வெளியதனைக் கண்டு கொண்டு - 116

என்று சிவராஜயோகம் 18இல் 16ஆம் பாடலில் ஓதுகிறார்.

இராமதேவர் பரைஞான கேசரி என்னும் நூலில் சுழிமுனை அடங்கினால் பத்து வளிகள் (தசவாய்வு) அதில் ஒடுங்கும் என்று ஓதுவதை கீழ்வரும் பாடலில் அறிக.

அறியாமல் இடகலையும் பிங்கலையுங் கூடி
அசையாமல் வலமாக அந்திரத்திலேகி
நெறியான "சுழியினிடம்" ஒடுங்கவாதயானல்
நின்றிலங்கு மறிவுடனே "தசவாய்வு" ஒடுங்கும் - 12

என்று பரைஞான கேசரி — 100இல் இராமதேவர் ஓதுகிறார்.

கருவூரார் ஆக்கிய சித்தர்களில் மெய் சுருக்கும் 51இல் சுழிமுனை என்பது, இடையும் பிங்கலையும் ஓர் நேர் கோட்டில் இணைந்து வன்னி என்னும் சுடரியான அதில் கலந்து ஏகமாக நின்ற இடமே சுழினை என்றும், அந்த சுழினையே ஊமையாகும் என்றும், இதனை நான்கு வேதங்கள் அறியாது என்றும் கூறுகிறார்கள் என்பதை,

மறைநாலு வேதமொழி மறையோன் சொன்ன
நான்கினுக்கும் "யேக சுழி" "ஊமை ஊமை"
நாலுமறை யறியாத யெகுத்தையுன்ன - 37இல்
என்று கூறுகிறார்.

அகப்பேய் சித்தர் பூரண ஞானம் 55இல் மூன்று நாடிகள் ஒன்றாக இணைந்தால் பதினாறு கலையான சந்திரனான சிவபொருளாகும். மேற்கண்ட மூன்று நாடிகள் அயன் — அரி — ஈசன் என்று கூறுவார்கள். இம்மூன்ற நாடிகள் உச்சி — நடு — ஆதி என்று அறிந்து உணர்ந்து அவ்விடத்தில் இருங்கள் என்கின்ற கலை அறிக.

இடக்கலை பிங்கலை சுழிமுனை யெதுவென்றாக்கால்
இன்பமுறுஞ் சோடசத்தின் பொருளதாகும்
இடக்கலை பிங்கலை சுழிமுனை அரி - யயன் - ஈசன்
இதை உணரா தேங்கினார்கள் மாந்தர் தானும்
இடைகலை பிங்கலை சுழினை யுச்சி நடு வாதி
இக் கலையை பறிந்துணர்ந்தவ் விடத்தில் நில்லே - 11

என்று அகப்பேய் சித்தர் ஓதுகிறார்.

கருவூரார் எழுதிய பூரண ஞானம் — 100இல் 84ஆம் பாடலில் நமக்கு அழிவைத் தேடி கொடுக்கும் வாசி என்ற மூச்சை வாசிக்காதே என்றும், இதனைப் பற்றி அறியாது உலகினர் பல்வேறு மயக்கும் வார்த்தையால் கூறி அதனை காசாக்கி அவ்வருவாயினால் வயிற்று பிழைத்து தாம் குருவென்று கூறி அலைவார்கள். ஆனால் சுழிமுனையான மூச்சு தன்மையை அறிந்து அதில் நாட்டம் செலுத்தாமல் கெட்டலைகிறார்கள் என்பதாம்.

கருவூராரின் பாடலை படித்து உணர்க

சுழிமுனையாம் மூச்சுத் துறையறிந்து நாடி
அழிவு செய்யும் வாசி யருந்தாதே - தெளிவு செய்
மாட்டாருலக மதில் வார்த்தை விற்று உண்டதனாற்
கோட்டாலைப் பட்டார் குரு - 84 என்று கூறுகிறார்.

மேலும் சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் — 20இல் 5ஆம் பாடலில் ஓங்கார பிரணவமே சுழிமுனை வீடாகும் என்று கூறுகிறார். மயிர் பாலம் நெருப்பாறு கடந்து சென்ற ஆன்மா ஆறுமுக வேலனின் அருளைப் பெற்று பின் ஓம் என்ற பிரணவமே சுழினையாம் வீடு கோடி சூரிய ஒளிவீசும் காந்த ஆற்றலையும் மீறி கடந்து செல்லும் என்று கூறும் பாடலை கவனிக்கவும்.

ஆமென்ற பாலம் நெருப்பாறுந் தாண்டி
ஆறுமுக வேலவனென்ற ருளும் பெற்று
ஓமென்ற பிரணவமே சுழினை வீடு
ஒரு கோடி ரவிபோலக் காந்தி மீறும் - 5 என்று ஓதப்படுகிறது.

சுந்தரானந்தர் என்னும் சித்தர் சுத்த ஞானம் 12இல் 4ஆம் பாடலில் இருப்பதை இருப்பதுபடி காணவேண்டுமென்றால்

Koviloor Digital Library

கற்பம் உண்ட பின் சுழிமுனையை பார்ப்பது நல்லது என்று கூறுகிறார். சுழிமுனையில் மனஅறிவின் துணைக் கொண்டு அதில் கருத்தைச் செலுத்தி நாதவிந்து என்னும் சூரிய சந்திர கலையை மூலத்தில் ஊன்றி துரிய இடத்தை கண்டால் சோதி அங்கு காணலாம். உகாரம் என்ற தாயைக் வழிபடாமல் சென்றால் சுழிமுனை மாயையின் மயக்கத்தால் யுகயுகமாகியிருந்தாலும் சுழினை அறிய முடியாது. சுழிமுனை நாம் காண வேண்டும் என்றால் உகாரம் என்ற பானத்தை அருந்த வேண்டும் என்று கீழ்வரும் பாடலில் அறிவுறுத்துகிறார்.

கண்டபடிகாண வென்றால் சொல்லக் கேளு
கற்பமுண்டு "சுழிமுனையிற் கருத்தை" வைத்து
தொண்டு செய்ய நாதவிந்தை மூலத்தூண்
துரியத்தைப் பார்க்கிலப்போ சோதிகாணும்
வண்டணிந்த குழலாளை விட்டு பார்த்தால்
மாயமாம் யுகாந்தம் வரை சுழி பார்த்தாலும்
அண்டருட் சுழிமுனைதான் தோற்றாதப்பா
ஆச்சரியங் காண வென்றால் பானமுண்ணே - 4

என்பது சித்தரின் அனுபவத்தை ஓதியருள்கிறார்.

கடைப்பிள்ளை சித்தர் செய்த கலைஞானம் — 100இல் சில பாடல்கள் இங்கு தரப்படுகின்றது. அச்சித்தரின் தமிழ் நடைமிக எளிதானது. அதனைப் படித்தால் அறியலாம். இதற்கு பொருள் விளக்கம் தேவையில்லை.

"தாக்கி "மனதறிவாலே" நின்றாலையா
சணத்திலே சுழினை வழி தானே காணும்
பாக்கியமாய் சுழிமுனை வழி தானே காணும்
பத்தியுடன் வாசி சிவயோகம் செய்யே - 10

செய்யப்பா வாசி சிவயோகம் செய்யக்
தீர்க்கமுடன் வங் கென் மூலத்தில் ரேசி
பெய்யப்பா மூலத்தற் ரே சித்தப்பாற்
பாலகனே சுழினை வழிக்குள்ளே நீயும்
மெய்யப்பா சிங் கென்று பூரி பூரி
மேன்மைப் பேர் ரேசக பூரகமாய் நின்றால்
பொய்யப்பா போகாது வாசி தானும்
பூரணமாய் உள்வெளியாய் பொருந்தும் பாரே
பாரப்பா மனம் பொருந்து ரேசக பூரகமாய்ப்
பத்தி முத்தி யானவயி ராக்யமாக
நேரப்பா தானிருந்து மனக் கண் கொண்டு
நேமமுடன் வாசிதா ரணயே செய்யச்
சாரப்பா திரு நடன மாடிநின்ற
சத்தி சிவ கலைகள் ரெண்டுஞ் தன்னுட் டங்கும்
ஆரப்பா கலையறிந்து நிறுத்தப் போரார்
அருள் பெருகுஞ் சுழிமுனையை அழுத்தி பாரே
- 12

அழுத்தி யந்தச் சுழிமுனையைப் பார்க்கும்போது
அகாரமுடன் உகாரமது மகாரமூன்றும்
சுழித்த சுழி நடு மலையிற் கண்ட காட்சி
சொல்லுகிறேன் "ஓங்கார சுத்தமாக"
வழுத்துதற்கு அரிதான "வடிவேல்" போல்
மண்ணும் விண்ணும் ஊடுருவிவளைந்து
கொண்டு
செழித்த மன துறுதியுள்ள சித்தருக்குச்
சிவ சிவா பழம் பொருளாய் விளங்கதானே - 13

தானே தானே தானவனாய் விளங்குகின்ற
சகல கலை "பூரண ஓங்காரந்" தன்னைத்
தானே தான் "சூரிய கலை உகாரமாகும்"
சதா போத "சுழிமுனை ஓங்காரமாச்சு
தானே தான் சுழிமுனையிற் றாக்கி பார்த்தாற்
"சந்திர கலை அகாரமதாய்த்" தானே காணும்
தானே தான் மூன்று மொன்றாய்க் கண்ட போதே
சகல கலைக் கியான மெல்லாம் ஒன்றாய்ப்
பாரே - 14

பாரப்பா பதி யறிந்து நினைவாய்ப் பார்த்தாற்
பத்தியுட ணாறுதலம் பதிவாய்த் தோணும்
நேரப்பா ஆதார நிலையில் நின்றால்
நிசமான "சுழிமுனையிற் றீபம்" காணும்
காரப்பா 'சுழிமுனையிலே தீபம்' கண்டாற்
கருணை வளர் சிவயோகங் கைக்குள்ளாகும்
சாரப்பா சிவயோகத் திருந்துக் கொண்டு
சதா போத மான சுழி கண்ணைக் காணே - 49

காணவே யின்னமொரு கருமானங் கேள்
கருணைவளர் "சந்திர கலை" "அகாரமாச்சி"
பூணவே "பானு கலை" "உகாரமாச்சு"
பொருந்தி நின்ற "சுழினையிலே" "மகாரமாச்சி"
தோணவே மூன்று திருநேத்திரந் தன்னைச்
சுத்தமுடன் றான் பார்க்க யேக மாச்சு

Koviloor Digital Library

பேணவே யேக மென்ற தன்னைப் பார்த்தாற்
பிலமான ஓங்காரக் கம்ப மாச்சே - 50

ஆச்சப்பா ஓங்காரக் கம்பந் தன்னை
ஆதி முதலந்தம் வரை பார்க்கும் போது
பேச்சப்பா பேசுதற்கு நாவங் கேது
பிலமான மூல ஓங்காரத் தீய்த்தான்
மூச்சப்பா நிறைந்த கலை வாசியாக
மூதண்ட அண்டவரை முட்டி நின்ற
போச்சப்பா நாலுகலை பாழே பாய்ந்து
பொருந்துமடா பெண்கலைதான் மூலங்காணே - 51

காணவே கலைகள் பனிரண்டுந் தானும்
கடந்து வெளி பாயாமற் றன்னுள்ளே தான்
பூணவே வங்கென்றும் சிங்கென்றுந் தான்
புத்தியுடன் வாசி கொண்டு புருவத் தேகித்
தோணவே தானிருந்து தன்னைப் பார்த்தாற்
"சுக சீவ பிராண கலை" சுத்தமாகும்.
ஊணவே பிராண கலை சுத்தமானால்
'உடலை விட்டு' வுயிரிழுந்து போகா தென்னே - 52

போகாத புனலதுதான் மைந்தா மைந்தா
பூரணமாய் நின்றிலங்கும் வாசி - வாசி
சாகாத காலதுதா னென்ன வென்றாற்
சதாபோதமான தொரு நாதமாகும்
வேகாதா தலையதுதான் விந்து - விந்து
வேதாந்த மூலமடா ஆர்க்குந் தோணா
வாகாக யிது மூன்றுந் தன்னுட் கண்டு
மகத்தான சிவயோகம் வளமை பாரே - 53

வாரான சுழிமூல மறிய வென்றால்
மகத்தான 'ஓங்கார வடிவமாச்சு'
நேரான ஓங்கார வடிவே தென்றால்
நிலையான ரூபமடா 'பிராண நாதம்'
கூான 'நாதசக்தி சிவமதாச்சு'
"குரு சக்தி சிவம் உடலுமுயிராய் நிற்கும்'
பேரான உடலுயிரைக் காணா மற்றான்
பேய்க் கூத்தாய் நின்றலைந்து பிலங் கெட்டாரே - 57

பிலமான 'அகாரத்தை மூலந்தொட்டுப்
பிசகாமல் உகாரத்தை நடுவிற் சேரு
குலமான "மகாரத்தைச் சுழியிலேத்து
குறையாது வாசியது நிலையில் நிற்கும்
எண்ணவே 'யிடகலை'தான் 'உகாரமாச்சு
உண்ணவே 'சுழினையது மகாரமாச்சு'
உத்தமனே 'கண்ணொளி தான் விந்து நாதம்'
முன்னமே ஆதியிலே முளைத்த சத்தம்
மூவுலகந் தானறிந்து முளைத்ததையோ
சொன்னபடி விழிப்பறிந்து பார்த்தாயானாற்
சோதி சிவ சூட்சமடா சொல்லக் கேளே - 96

கேளப்பா கண்ட தெல்லா மழிந்து போச்சு
கேள்வி யென்ன ஒளிவெளியே நிசமதாச்சு
வாளப்பா அரூப மென்ன சுழினை காந்தி
மக்களே "சுழினையிலே" மனதை வூணு
வேளப்பா நிற்குணமே துவாதசாந்தம்
மெய்யான நிற்குண மூல சூட்சம்
ஆளப்பா நிற்குணமே ஒளி தான் தேகம்
அப்பனே கத்தி நடு ஆடும் பாரே - 97

ஆடுமாட ஓங்கார வாளின் கூர்மை
அரகரா வேதாந்த மானதேகம்
நாடுமடா பூரணத்தை நாடி நாடி
நலமான சுழினையிலே நாடிப் போச்சு
ஓடுமடா ஓட்டம்பூ ரணத்தினாட்டம்
உத்தமனே அண்ட பகிரண்டத் தாட்டு
பாடுமடா ஓசை பரா பரையின் நாதம்
பத்தி கொண்ட சித்த மதின் மோட்சம் பாரே - 98

என்று கடைப்பிள்ளைச் சித்தர் தாம் ஆக்கிய கலைஞானம் 100இல் மேற்கண்ட பாடல்கள் பதிவு செய்துள்ளார். எளிய நடையில் இருப்பதால் விளக்கம் தேவையில்லை யென்று கருதியதால் எழுதப்படவில்லை.

சுழிமுனை திறக்க எளியமுறை:

கயிலாயப் பரம்பரையைச் சார்ந்த சட்டை முனிநாதர் என்னும் சித்தர் மானிடர்களின் இறப்பைக் கண்டு வருந்தி அவர்கள் மீது கருணைக் கொண்டு இறக்கும் மானிடர்களை இறப்பிலிருந்து மீட்க தீட்சாவிதி 200 மற்றும் அதன் சுருக்கு நூல் 50ஆம் பாடியருளினார். அந்நூல்கள் சித்தா சபையில் அரங்கேற்றத்திற்கு வந்தபோது மச்சமுனி என்னுஞ் சித்தர் அதனை வாசித்துக் கொண்டு இருக்கும்போது, திருமூலர் எழுந்து வந்து மச்சமுனி படித்துக் கொண்டிருந்த தீட்சா விதி 200 என்னும் நூலை பறித்து

Koviloor Digital Library

கிழித்தெறிந்தார். அதே போல் தீட்சா விதி 50ஆம் கிழித்தெறியப்பட்டது. அந்த இருநூலை கொங்கணன் என்னும் சித்தர் தீயிட்டு கொளுத்தி சாம்பலாக்கினார். இதனை கண்ட சித்தர்கள் திகைத்து நின்றனர். திருமூலரின் செய்கைக் கண்டு முகஞ்சுளித்து வெறுப்படைந்தனர். சாகாக்கல்வியை இரகசியப் பொருளாக வைக்காமல் வெள்ளையாக பாடிவிட்டான் என்று ஆணவ மேலிடத்தால் அவர் செயலை கண்டு அவரை குறைக் கூறினார்கள். இளகிய மனம் கொண்ட சட்டை முனிநாதர் கற்பம் 100 என்னும் நூல் சுழிமுனை எவ்வாறு திறக்க வேண்டும் என்று கூறியுள்ளதை எளிய பாடலாகப் பாடியுள்ளார். இனி அதனை ஊன்றி படித்தறிக.

நீளப்பா பெருவிரலிற் "கரிசலோஞ் சாறு
நெய்யோடே மதித்துப் பூசிக் கொண்டு
சூளப்பா "அண்ணாக்கில் விரலை யோட்டி
சுழட்டையிலே கபாலத்திற் கபமெல்லாம் வீழும்
நாளப்பா நாளு உதயத்திற் செய்வாயாகில்
நலமான குணத்தை யினிச் சொல்லுகிறேன் - 2

சொல்லுகிறேன் வாரிதிபோற் கபநீர் வீழுஞ்
சோதிக் கிலண்ணாக்கிற் குறியைக் கேளு
வெல்லுகிறேன் சுழிமுனையின் ராகுகேது
மைந்தனே சங்கோடு சக்கரம் போல் நிற்கும்
அல்லுகிறேனிதன் பேரு ரவி மதி தானெப்பார்
ஆச்சரிய மிடை பின்னா யமர்ந்த நாக்கு
சொல்லுகிறே னென்ற சொல் ஜனங்களைத் தான்
கூட்டியில்லே கபத்தை யுள்ளே வளர்க்குந் தானே - 3

தானென்ற யிதை மடக்கி விரலை யேற்றிச்
சாதகமாய் சுழிமுனை விரலில் தட்டும்
கோனென்ற சுழிமுனையே திறந்து தானால்
குறி சொல்வேன் அமுர்தமங்கே குமிழிபாயும்
ஊனென்ற அமிர்தமடா சுந்தர மேயையா
உற்றுப்பா ரிளந்தேங்காய்போலே காணுந்
உற்றுப்பா ரிளந்தேங்காய் போலே காணுந்
தேனென்ற அமுர்தம் முண்டாற் காய சித்தியாகுஞ்
செப்பாமற் சித்தரெல்லாம் மறைந்திட்டாரே" - 4

மறைத்திட்டா ரமுதத்தை விழுங்கிக் கொள்ள
மைந்தனே 'விஷமது தான் கண்டத்தில் நிற்கும்
நிறைத்திட்ட "தட்சணையு மத்திமையுங்" கூட்டி
நேரகாக் கண்டத்தே அமைத்து ஆட்டு
உரைத்திட்ட விஷங்க ளெல்லாங் கக்கிவீழு
முத்தமனே பித்தமென்பார் உலகத்தோரே
கரைத்திட்ட கரை கண்டாற் சின்மயந்தான் சொன்னார்
காய சித்தி கின்னமொரு மார்க்கங்கேளு - 5

என்று சட்டமுனி கற்பம் 100இல் மேற்கண்ட பாடல்கள் மேற்கோள் எடுததுக் காட்டப்படுகிறது. இதன் கருத்து என்னவென்றால்,

கரிசாலை மூல ஓர் அளவும் அதேயளவு நெய்யும் எடுத்து நன்றாக உறவாகும்படி காய்ச்சி பதப்படுத்திக் கொள்ளவும் இதனை பெருவிரலால் தோய்த்து அண்ணாக்கின் உண்ணாக்குமேல் நன்றாக சுழல தேய்க்கவும் அப்படி தேய்த்தால் மண்டையில் இருக்கும் வழலை, கோழை, ஈளை, சளி நீர் இவைகள் கீழேயிறங்கும். பின் தட்சணை விரலும் மத்திமை விரலும் இணைத்து வாய்தடவி கண்டத்தில் விட்டு ஆட்டுக. கண்டத்திலுள்ள நஞ்சுகள் இழை இழையாகக் கக்கி விழும். இதனை சிலர் பித்தம் என்பர் உலகில் வாழ்வோர். இப்படி இவ்விரு பொருள்கள் கரைந்து வெளியேறினால் சின்மயம் என்னும் நிலையும் காயசித்தியும் உண்டாம் என்று ஓதுகிறார்.

மேலும் நமது திருவள்ளுவநாயினார் சுழிமுனை வாசல் திறக்க சட்டைமுனி கூறியது போல் சற்று இன்னும் தெளிவாக கூறுகிறார். இதனை .படித்துணர்க.

அறியவே நாத விந்து யெங்கே யென்று
அவைய வேண்டாமுந்தன் திரேகமேற் றானும்
பெருகி வரு மமுத மதைக் கண்டறிந்தால்
பேரான சித்தனுந் தான் நீயே யாகும்
கருவிருந்து பிறக்குமடா அமுதந் தானும்
கண்ட பின்பு ஒருவருக்கும் வெளியிடாதே
மருவில்லா "வாசியினாற் றிறக்க வேண்டும்"
வாசி வசமான பின்பு செய்து பாரே - 50

செய்வதேன்ன ஒன்றுமில்லை பழக்கத்தாலே
திறக்கலாம் ஒருவேளை "திறக்கவிட்டால்"

Koviloor Digital Library

உய்வதென்ன "அறைக்கதவு உள்வாசற்றான்"
உற்றபடி திறப்பதற்கு வகையைக் கேளு
மெய்யான "சுழிமுனை யென் றிதற்குப் பேரு"
வேணுமென்றே உற்றுப் பார்த்தாலுங் காணார்
பொய்யான மொழியில்லை நிசமே யாகும்
பூரணத்தைத் தெரிந்து கொள்ள வேணும் பாரே - 51

பாரப்பா "அண்ணாக்குண் ணாக்குக் கூடே"
பண்பாக "வோர் வாசல் அடைந்த தப்பா"
நேரப்பா அதை திறக்கும் "மருந்து கேளு"
நேர்மையுள்ள "ஆவின்நெய் சுத்தமாகச்
சீரப்பா "படியரைக்கால் வாங்கி" வந்து
திறமாங் "கையாந்தகரை" தன்னைப் பிடுங்கி
காரப்பா அதைத் தானும் அரைத்து நிம்பக்
கனியளவாயத் தானுருட்டி "வைத்துக் கொள்ளே - 52

உருட்டியதோர் "கரிப்பானும் நெய்யுஞ் சேர்த்து"
உண்மையுடன் தான் குழப்பிக் கொதிக்க வைத்துப்
பருவம் பார்த்தே யிறக்கி யெடுத்துத் தானும்
பக்குவமாய்ப் பீங்கானில் வைத்துக் கொள்ளு
திருவான "அமுதரசக் கற்பமாச்சு"
ஜெயமான "மேல் வாசல் திறமாய்க் கண்டு"
தருவான "வலதுபெரு விரலால்" நெய்யைத்
தானெடுத்து "மேல் வாசல் தடவக் கேளே" - 53

வாசலிலே "அடைத்த சவ்வு விலகுதற்கு"
"வலக்கை பெருவிரலாலே" வலமாய்ச் சுற்றி
நேசமுடன் நாலுதரந் தடவி பின்பு
நினைவாயோர் சாமம் பட்டினியிருக்க
பாசவினை தானகலும் உண்ணுதற்கு
பத்தியமோ "புகை புளியு மாகாதப்பா"
ஆசை யுள்ள "பசுமோருஞ் சோறுமாகும்"
அதுதவிர மற்றவைகளாகா தென்னே - 54

மற்றபடி "யிக்கற்பங் காலையில் தான்"
"மண்டலமுந் தடவிவர மேலாம் வாசல்"
உற்றபடி கால் மண்ட லங் கழிந்தால்
"ஒருவாசல் திறக்குமப்பா" பூட்டு விட்டுக்
கற்றவர்களறிவார்கள் அமுதம் சிந்தும்
கணக்காக மண்டலமு மாச்சு தானால்
பெற்ற தொரு "நால்வாசல்" திறந்து போகும்
பெருமையுள்ள அமுதமது பெருகுந்தானே - 55

பெருகுகின்ற அமுதமது நாதமாகும்
பிரித்து நான் சொல்கிற விபரங் கேளு
மருகியே விந்து வென்றால் வெள்ளையாகும்
மதிப்பான சிவப்பானால் நாதமாகும்
பொருதி பெற இதையெடுத்துப் புளியே செய்து
புசித்து வரக் காயதி கற்பமாச்சு
பருதி கண்ட பனியாகும் "பிறப்பு போச்சு"
பாங்காக இன்னும் மொன்று சொல்லக் கேளு - 56

என்று திருவள்ளுவ நாயினார் கற்பம் — 300. ஓதுகிறார். முன் கூறிய சட்டை முனிநாதர் சற்று மறைத்து பாடினார். ஆனால் திருவள்ளுவப் பெருமான் வெட்டவெளியாகப் பாடியுள்ளார். இனி இதனை சுருக்கமாகக் கூறுவோம்.

கரிசாலை மூலி ஓர் எலுமிச்சையளவு + சுத்தமான பசு நெய்யெடுத்து இரண்டும் நன்றாகக் குழைத்து காய்ச்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இதனை பெருவிரலில் தடவி சூரிய உதயத்திற்கு முன் அண்ணாக்குள்ள உண்ணாக்கு மேல் நன்றாக சுழற்றி தடவ வேண்டும். அப்படி தடவினால் மேல்வாசல் என்று கூறப்பபடும் சுழிமுனை கதவு திறக்கும். இப்படி நாள்தோறும் காலையில் நான்கு முறை தடவிய பின் ஒரு மணி நேரம் எந்த உணவும் எடுத்துக் கொள்ளக் கூடாது. தவிர புகையிலை சம்பந்தப்பட்டப் பொருள்கள் — புளிப்புள்ள பொருள்கள் கண்டிப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பசுமோர் சாதம் மட்டும் உண்டு வரலாம். மற்ற உணவுகள் எடுத்துக் கொள்ளக் கூடாது.

இந்த கற்ப மருந்து காலையில் மட்டும் நான்கு முறை தடவி வர, இப்படி கால் மண்டலம் செய்தால் ஒருவாசல் பூட்டுவிட்டு திறக்கும். அப்படி திறந்தால் அங்கு அமுதம் வரும் என்பதை கற்றவர்கள் அறிவார்கள். இப்படி கணக்கோடு ஒரு மண்டலம் செய்த பின்னால் தொடர்ந்து நான்கு வாசல் கதவு திறந்து விடும். பெருமை உண்டாகும்படியான அமுதம் பெருகும்.

அந்த அமுதமே நாதமாகும். இதனை பிரித்து அதன் விரிவான செய்தியை கூறுகிறேன் கேள் என்று கூறும் இவர்

Koviloor Digital Library

வெண்மையான அமுதம் வந்தால், விந்துவாகும். செம்மையாக வந்தால் நாதமாகும். இதுவே காயக் கற்பமாகும். சூரியனைக் கண்ட பனி போல் பிறவி நின்றது என்று அப்பெருமகனார் கூறுகிறார்.

முத்தி வழங்கும் பொருள் எது:

நாள்தோறும் பல்வேறு சமயம் சார்ந்தவர்கள் தொலைக்காட்சியில் இந்த கடவுள் முத்தி கொடுப்பார் என்றும் அந்தக் கடவுள் முத்திக் கொடுப்பார் என்றும், எந்தக் கடவுள் முத்தி கொடுப்பார்கள் என்று உறுதியுடன் கூற இயலாம். மத சின்னங்கள் அணிந்து நாள்தோறும் புளுகு மூட்டை அவிழ்த்துக் கொட்டுகிறார்கள். தற்பொழுது இந்த உலகம் மதம் — சமயம் — ஜாதி — சமூகம் அனைத்தும் மாசு படிந்து சுற்றுப்புறச் சூழல் கெட்டுவிட்டது. உலகம் முழுதும் ஆன்மிகம் மாசு படிந்து சமயம் சார்ந்தவர்களின் பிடியில் சிக்கியுள்ளதால் மக்கள் முத்தி பெறும் வாய்ப்பு இழந்துவிட்டனர்.

எனவே சித்தர்கள் கூறும் சாகாகலை அல்லது கல்வியை படித்து கற்று அறிந்து உணர்ந்து முத்தி அடையும் வழியை தனிநபராக தானே தேடி சென்று பெறவேண்டிய சூழல் ஏற்பட்டுவிட்டது. முத்தி வழங்கும் பொருள் எது என்றால் "வாசியேயாகும்". அந்த "வாசியை" நினையாதவர்களுக்கு எந்த சமயத்திலிருந்தாலும் அவன் வீணாகி மாண்டுவிடுகிறான் என்பது உலகம் கண்ட உண்மையாகும் என்பதை சித்தர் பாடலால் உணரலாம்.

கொள்ளடா "வாசி யொன்றே" முத்தியாகும்
கொடி தொரு மற்றலாமு "முத்தியில்லை" - 4

என்று சுப்பிரமணியர் சுத்த ஞானம் என்ற சித்தர் நூல் கூறுகிறது. அதே போல் காகபுசண்டர் என்னும் சித்தர் தமது ஞான சூரியன் நூலில்,

"சாகாத மார்க்க விட்டால்" நோகாதப்பா
தன்னுட னே "பிறந்த குல மெல்லா மாளும்"
போகாது ஆனதினாற் பொல்லாப்பேகும்
பூரணமாம் சாத்திரத்தை முழுதும் பாரூர" - 265

என்று கூறுகிறார். மானிடர் உலகம் "சாகாத மார்க்கம் கற்றுக் கொள்ளாமல்" விட்டால் தன்னோடு பிறந்தவர்கள் எல்லோரும் மற்றும் தமது குலம் மாண்டு விடும் என்கின்றார். இந்த "சாகாத வழியினை கற்காமல்" விட்டால் உயிர் பயிர்களுக்கு பொல்லாப்பு நிகழும். அதனால் பூரணத்தைக் காட்ட கூடிய முத்திநிலை கற்பிக்கும் நூல்கள் தேடி அதனை முழுதும் கற்று "பிறவி தடுக்க" வேண்டுமென்று கூறுகிறார்.

நமது உடலில் பெரும் வாசலாக இருக்கும் வாயில் பெருநாக்குக்கு மேல் அண்ணாக்குக்கு கீழ் உண்ணாக்கு மேல் அடி பாகத்திலுள்ள அறையின் உள்வாசல் கதவு பூட்டப்பட்டுள்ளது. அதுதான் சுழிமுனை என்று இதற்கு பேராகும் இந்த சுழிமுனையை நாம் உற்று உற்று பார்த்தாலும் அது நம் கண்ணுக்கு தென்படாது.

சுழினை என்பது திறக்கப்படாத அறையின் உள்வாசல் கதவின் பூட்டாகும். அந்த வாசல் கதவின் உள்வாசல் பூட்டுதான் சுழிமுனை என்று திருவள்ளுவ நாயினார் கற்பம் 300இல் கூறுகிறார்.

"உய்வதென்ன "அறைகதவு உள்வாசற்றான்
உற்றபடி திறப்பதற்கு வகையைக் கேளு"
மெய்யான சுழிமுனை யென்றிதற்கு பேரு
வேணு மென்றே உற்றுப் பார்த்தாலும் காணார் -51

இதனால் நாம் அறிவது என்னவென்றால் பூட்டப்பட்ட கதவும் சுழிமுனையும் ஒன்றேயாகும் என்று அறிய வருகிறது.

சுழிமுனை நாடி கீழ மூலாதாரத்திலிருந்து மேல் சகஸ்ராத்தில் வரை அடைப்பட்டுள்ளது. அடைப்பட்டிருக்கும் துவாரம் திறப்பதே சுழிமுனை வாசல் திறத்தல் அல்லது கதவு திறத்தல் என்பதாம். இவ்விடத்தில் கதவு திறக்கப்படுவது மேல் துவாரம் (மேலை வாசல்) திறக்கப்பெறுவதுதான் சுழிமுனை திறத்தல் என்பர். பாம்பு போல் வட்டமிட்டு கிடக்கும் குண்டலினி வாசியின் உந்துதலால் சீறிப் பாய்ந்து எழுந்து, அதே வேகத்தில் சுழிமுனையின்

Koviloor Digital Library

கீழ்வாசல் திறக்கப் பெற்று, சுழிமுனை நாடி வழியே மேலேறி ஆதாரங்கள் ஆறுங் கடந்து மேல்நோக்கி சென்று மேலை வாசலைத் திறந்து மதிமண்டலத்தை அடையும்.

இந்த செய்தியை திருமூலர் திருமந்திரம் மூவ்வாயிரத்தில்,

"மூலத் துவாரத்து" மூளும் ஒருவனை
மேலை துவாரத்து மேலுற நோக்கிமுற்
காலுற்று காலனைக் காய் ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்தே - 345

"மூலந் துவாரத்தை மொக்கர மிட்டிரு
மேலைத் துவாரத்தின் மேல் மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்திது தானே - 583

மூலத்துவாரம் - சுழுமுனை வாயில்
மேலைத்துவாரம் - பிரமந்தர வாயில்

மேலைவாசல் திறக்கப்பெற்றவர்க்குக் காலன் என்ற சொல் கனவிலும் இல்லை என்பது திருமூலரின் வாக்காகும்.

மூலநாடி முகட்டல குச்சியுன்
நாலு வாசல் நடுவுள் இருப்பீர்கள்
மேலை வாசல் வெளியுறக் கண்ட பின்
காலன் வார்த்தை கனாவிலும் இல்லையே - 622

மேலையண்ணாவில் விரைந்திரு காலிடிற்
"காலனும் இல்லை கதவுந் திறந்திடும்"
ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவான் பரா நந்தி ஆணையே - 805

நமது வடலூர் வள்ளற் பெருமான் திருக்கதவந் திறக்க பாடுகின்ற திருவட்பாக்களைக் காண்போம்.

"திருக் கதவும் திறவாயோ" திரைகளெலாம் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்சோதித் திருஉருக் காட்டாயோ
- 3760

"மணிகதவம் திறவாயே" மறைப்பையெலாம் தவிர்த்தே
மாற்றறியாப் பொன்னேநின் வடிவது காட்டாயே -
3761

"ஏறுகின்ற நிறம் விழைந்தேன் ஏற்றுவித்தாய் அங்கே
இலங்க திருக் கதவு திறந் தின்னமுதம் அளித்தே"
3766

"செடிகள் இலாத் திருக்கதவம் திறப்பித்துக் காட்டி
திரும்பவும் நீர் மூடுவித்தீர் திறந்திடுதல் வேண்டும"
- 3780

கடல் கடந்தேன் கரையடைந்தேன் கண்டுகொண்டேன் கோயில்
"கதவு திறந்திடப் பெற்றேன்" காட்சியெல்லாம் கண்டேன் - 5449

என்று வடலூர் வள்ளல் பெருமான் அருள் முன்னிடமாக பணிந்து வேண்டி விளைகிறார். அப்பெருமானின் வேண்டுகோள் இறைவன் நிறைவேற்றியதாகவும் கூறப்படுகிறது.

மானிட தேகத்தை சாயாமல் ஓர் நேர்கோட்டில் நிற்க வைப்பது முதுகின் முள்ளெலும்பான தண்டுவடமாகும். இதன் கீழ் மூலாதார முதல் ஆரம்பித்து பிரமந்திரம் வரை செல்லும் சுழிமுனை நாடியைத் தனக்குள் கொண்டது முதுகெலும்பு முள்ளந்தண்டு ஆகும். முதுகு தண்டுக்கு மேரு தண்டம், வீணாத்தண்டு, பிரமம் தண்டு என சித்தர்களின் யோக நூல்கள் கூறும்.

"சுழி முனை நாடியைச் "சிவாகார பூரண ஸ்தம்பம் என்றும், "ஜோதிஸ்தம்பம்" என்று வள்ளற் பெருமான் குறிப்பிடுகின்றார்.

பிரமஸ்தானந் தொடங்கிச் சுத்த சிவஸ்தானம் வரையில் ஒரு ஸ்தம்பம் இருதயம் வரையில் வாயுநாடி வண்ணமாயும், அதற்குமேல் அக்கினி வண்ணமாயும் இருக்கும். இது அடியில் பருத்து வர வர நேர்மையாய், இந்திரிய கரணங்களுக்குப் புலப்படாமல் அணுவுக்கணுவாய், ஜீவனுக்குப் புலப்படாமல் அகண்டமாய், ஆன்மக் காட்சியில் அருகித் தோன்றுவதாய், இரண்டற நிற்கும். இதற்கு "சிவாகார பூரண ஸ்தம்பமென்றுஸ பெயர் என்று உபதேசத் (வள்ளலார் உபதேச பகுதி — 54)த்தில் குறிப்பிட்டுள்ளார்.

இது காறும் சித்தர்களின் மூலம்

Koviloor Digital Library

பெறப்பட்ட செய்தியான சுழிமுனை நாடியைப் பற்றிய செய்தி பகர்ந்துக் கொண்டிருப்பீர்கள். சுழிமுனையை இயக்கச்செய்யும் வழிகளையும், படித்துணர்ந்திருப்பீர்கள். இந்த சுழிமுனை நாடி தான் சாகாக்கல்வியை மானிட பிறவிக்கு உதவி செய்கிறது. மானிடன் பிறவி எடுத்தால் அவன் சாகக் கூடாது. அதற்குரிய மேல்நிலைக் கல்வியான சாகாத வழியினை கற்று தேர்வாக வேண்டும். அப்படி சாகாதவன் தான் சித்தன் என்று கூறுவார்கள் இதனை அகத்தியர் பூசா விதி 200இல் 127ஆம் பாடலில்

"சாகாமல் இருந்தால்" அவனே சித்தன்
"சச்சிதானந்த "குரு" புத்திரனாகும் - 127

என்பது குமாரகுரு முருகனுக்கு ஆதி மாணவர் அகத்தியர் கூறுகிறார்.

மேலும் வடலூர் வள்ளல் பெருமான் "சாகாதவனே சன்மார்க்கி" என்று உறுதிபடுத்துகிறார். சாகாத கல்வியே சன்மார்க்க மரபு" என்றும் அதனை சன்மார்க்கிகள் பெறத்தக்க பெரும்பேறாகும் என்றும் வள்ளர் பெருமான் கூறுகிறார். அப்பெருமான் செய்த உபதேசப் பகுதி 68இல் இவ்வாறு சன்மார்க்கிகளுக்கு அருள்புரிகிறார்.

"சன்மார்க்கத்தின் முடிவு சாகாத கல்வியைத் தெரிவிப்பதே யன்றி வேறில்லை. சாகிறவன் சன்மார்க்க நிலையைப் பெற்றவனல்லன். "சாகாதவனே சன்மார்க்கி" என்று கூறி முடித்துள்ளார்.

இப்பெரியோர்களின் அறிவுரை ஏற்று மானிட உயிர் பயிர்கள் உய்யும் பொருட்டு இறைவனின் அருளை வேண்டி இதனை நிறைவு செய்கிறோம்.

திருச்சிற்றம்பலம்

19. திருவருள் சக்தி வாலை

உகாரம் + அகாரம் இணைந்ததுதான் வாலையாகும். வாலை என்பது பூரணம் என்பர். வாலை என்பது பராசக்தி யென்னும் அருட்சக்தியாகும். இதற்கு ஞான சக்தி என்றும் கூறுவர். உகார அகாரமே வாலையான பத்து வயதான சிறுமி என்றும் சித்தர்கள் போற்றி வழிபடுகின்றனர்.

வாலை என்னும் பரதேவி திரிபுரை புவனை போன்ற மாபெரும் வடிவங்களாக திகழ்பவளாவாள். இவளே நாத திருவருட் சக்தியாகவும், விந்து திருவருள் சக்தியாகவும் மனோன்மணியாகவும் திகழ்பவள். இவளே புருவப்பூட்டின் திறவுகோலாக திகழ்பவளாவாள். இவள் இரீம் என்னும் வித்தில் உறைந்து நிற்பவள். மானுடர்களின் பிறவிக்கு மறுபிறப்பு அளித்து மரணமில்லா பெருவாழ்வு வழங்குபவள். அவள் வாழுமிடம் கருவூர் என்னும் ஐந்தாவது யோனியாக திகழ்கின்றன. இவள் எப்பொழுதும் முக்கோணத்தில் வசிப்பவள்.

திருவருள் சக்தி வாலை யம்மையைப் பற்றி நாம் வேகாத சிந்தனையுடன் தெளிவாக நினைந்து அறிந்து புரிந்து சித்தர் பெருமக்களின் அனுபவ வாயிலாக ஆய்வு செய்வோம். கருவூரார் பூஜா விதி என்னும் நூலில் திருவருள் சக்தி வாலையைப் பற்றி என்ன கூறியுள்ளார் என்பதை கீழ்வரும் பாடலால் அறியலாம்.

"எட்டிரண்டு மொன்று மது வாலை என்பார்
இதுதானே பரிதி மதி சுழினை என்பார்
ஒட்டி முறிந் தெழுந்த துமுக் கோண என்பார்
உதித் தெழுந்த மூன்றெழுத்தை அறியாரையோ
கொட்டு மொரு தேளருவாய் நிற்கும் பாரு
கூட்ட மிட்டுப் பாராதே குறிகள் தோன்றும்
சுட்ட சுடு காடுமது வெளியுமாகும்
சொல்லுவதற்கு வாய்விளங்கா சூட்சும்தானே - 25/30

எட்டு என்பது அகரமாகும். இரண்டு என்பது உகரமாகும். அகரம் சிவமாகும். உகரம் வாலையாகும். இவைகள்

Koviloor Digital Library

இரண்டும் சேர்நதது திருவருள் சக்தி வாலை என்பர். மேலும் பரிதி என்றால் வன்னி. இவைகள் மூன்றும் இணைந்து நிற்பது முக்கோணமாகும். ஓரெழுத்தாக இருந்த ஓம் காரம் என்பார். அந்த எழுத்து முறிந்ததால் அல்லது பிரிந்ததால் அகரம்+உகரம்+மகரமாக முறிந்தது என்பர். இவைகள் மூன்றும் முக்கோணம் என்றும் கூறுவர். இந்த மூன்று அக்கரத்தை அறியாதவர் யாராக இருக்க முடியும். ஓங்காரமே தேளின் வடிவமாக நிற்கும். இதனை கூட்டத்தைச் சேர்த்து பாராதே. அப்படி பார்த்தால் அதன் விளக்கங்களும் நுட்பங்களும் அறியாமல் போகும். எனவே உமக்கு அதன் உண்மைகளின் நுட்பங்கள் அறிய வேண்டுமென்றால் கூட்டத்தைக் சேர்த்துக் கொள்ளாதே. வெட்வெளியே சுடுகாடு என்பர். இதனை வாய்விட்டு சொல்லுவதற்கு வார்த்தைகள் இல்லாத நுட்பமான செய்தியாகும் என்பதை கருவூரார் பூஜாவிதி 30இல் தெரிவிக்கிறார்.

சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் 100இல் வாலையின் இருப்பிடத்தை ஓதுகிறார். அதனை சாகாகலலை அறிய ஆர்வமுடையவர்களுக்கு பயன்படும். தெளிக.

"காரப்பா உச்சி நின்ற வாலை தன்னைக்
காண் பிப்பா ளெட்டாத வெளியைத் தானே" - 38

என் சாண் உடலுக்கு தலையே முக்கிய உறுப்பாகும். அந்த சிரசில் உள்ளகத்தில் உச்சி பாகத்தில் திருவருள் சக்தி வாலையம்மை இருப்பிடமாக உள்ளது. அது சாதாரண மனிதர் முதல் சித்தர்களுக்கும் எட்டாத விண்வெளியாகத் திகழ்கிறது.

சட்டை முனி சித்தர் தண்டகம் 80இல் வாலையைப் பற்றி கூறியுள்ளதை அறிய வேண்டிய செய்தியாகும்.

"உண்மை யென்ற மவுனபர தேசி வாலை
ஊடாடுங் கயிலாத் துண்மை கேளீர்
வெண்மை நிலா மதியெனவே விளங்கும்மேரு
வெகுகோடி சித்தர் தவம் செய்யும்மேரு
தன்மை யென்ற ஆதியந்தம் நிறைந்த வாமி
சற்குருவாய் நிற்குமொளி தழைத்த மேரு
நன்மை தின்மை யறிந்து மதி நிறைந்த மேரு
நற்கமல முற்ற திருமேரு தானே - 16

மெய்யாக விளங்கும் திருவருள் சக்தி வாலை என்பவள் பராசக்தி ஆவாள். அவள் ஊடாடி வசிக்குமிடம் கயிலாயமாகும். அதன் உண்மையை நீங்கள் கேட்க வேண்டும். தூய்மையான வெண்வண்ண நிலாவாக திகழ்கின்றன. அங்கு அறிவு என்னும் ஞானப் பொருள்கள் விளங்கும். மகா மேரு மலையாகும். அனேக கோடி சித்தர்கள் தவம் மேற்கொண்டு திகழும் மகாமேரு என்னும் சிறப்புடைய மலையாகும். தொடக்கமும் முடிவும் நிறைவுபெற்ற வாமியாம். அந்த வாழி சற்குருவாய் வந்து ஞான உரை செவியருள் செப்பும் வாமியாகும். நலம் தரும் நன்மைகள் உறுதிப்பாடுகள் அறிவிக்கும் ஞானம் நிறைந்த மகாமேருவாகும். கமல மலரில் வீற்றிருக்கும் திருவருள் சக்தி வாலையின் திருமேருவாகும். மேலும்,

"தானவளாய் நின்ற வுல கெங்குமப்பா
தன்மை யுள்ள பூரண மாய் நின்றாளத்தான்
நானவளைக் காணுதற்கு என்ன சொல்வேன்
நான் செய்த தவப் பெருமை மேருவாச்சுக்
கோனருளாற் கண்டே னடா ஆத்தாள் ரூபம்
குழந்தையடா சிறு மதலை கோலக்காரி
வானவர் கோ னறியாத சக்தி சக்தி
வசை யகற்றும் திருவாணி வாமம் பெண்ணே - 17

தானே தானாக உலகெங்கும் நிறைந்தும் நின்று நிறைந்து காணப்படுவாள் எனது தாய் வாலையம்மையாம். தான் செய்த தவத்தின் மேன்மையால் அவளை காணும் பேறு பெற்றேன். அருளின் ஆற்றலால் அவளுடைய வடிவத்தைக் கண்டு மகிழந்தேன். அவள் சிறு குழந்தை வடிவில் இருந்தாள். அவள் பெரிய சாகசக்காரி வானவர்களும் அறிய இயலாத திருவருள் சக்தியாவாள். குற்றங்கள் அகற்றும் நிறைவு பெற்ற வாணியாம். அவள் அருளின் இடப்பக்கத்தில் இருந்த மேன்மையான மிகச்சிறந்த பெண்மணியாம்.

அடுத்துவரும் பாடலில் வாலையைப்

Koviloor Digital Library

பற்றி என்ன கூறி நின்றார் என்பதை அறியலாம்.

"பெண்ணான நீலியடா ஐவருக்கு
பெருமையுள்ள சக்தியடா பேதைபேதை
கண்ணான நடுமதியும் விண்ணுக்குள்ளே
கற்பூரத் தீபமெனக் கலந்தாளாந்தாள்
பண்ணான மதியமுதப் பாலையுண்டு
பதும மலருச்சியின் மேலிருந்து கொண்டு
விண்ணான விண்ணிலொரு நடனஞ் செய்தே
வேதாந்தச் சக்தியென விளங்குவாளே - 18

பேதை என்று கூறப்படும் சக்தியானவள் பெருமை நிறைந்தவள். அவள் பெயர் நீலி என்பார் ஐவரை பெற்றவள். நெற்றி நடுவில் ஞானசக்தியாக விளங்குபவள். விண்ணில் கற்பூர தீபம் போல் கலந்து நிற்கும் பெருமைப் பெற்றவள். பண்புடைய மதியமுத பாலை பெற்று தாமரை மலர் மேல் உச்சியில் இருக்கும் அமுதவல்லியாவாள். விண் என்று கூறப்படும் அண்டமதில் கூத்தாடும் வேதாந்த வல்லியான திருவருள் சக்தி வாலையாவாள். அடுத்துவரும் பாடலில் என்ன கூறப்படுகிறது என்பதையும் அறியலாம்.

"விளங்குவாள் எட்டு ரெண்டும நான்தானென்று
விஞ்சை யஞ்சு மூன்றும் ஆட நாள் தானொன்பாள்
களங்க மற்ற கன்னியடா கமலமாது
கற்புடைய மங்கை யடா கமலமாது
இளங்குமரி நீலியடா வயதோ பத்து
இவள் சமைந்தப் பரத்துடனே யேகமாகி
உளங்கனிந்து பூரணமாயக் கெற்பமாகி
உற்பனமாஞ் சக்தி சிவந் தன்னை யீன்றாள் - 18
சட்டை முனி சித்தர் தண்டகம் — 80

திருவருள் சக்தி வாலையானவள் எட்டு இரண்டு என்று தானே திகழ்வாள். விஞ்சை ஐந்துதோடு மூன்றும் ஆட நாள் ஒன்பதில் திகழ்வாள். தாமரை மலரின் அமர்ந்துள்ள வாலை களங்கமற்ற கன்னி பெண்ணாவாள். கற்புடைய மங்கைப் பருவம் பெற்றவள். இளமை மிகுந்து குமரி பருவம் பெற்றவள். அவளின் வயது பத்தாகும். இவள் சமைந்த பரத்துடன் இணைந்து உளங்கனிந்து பூரண கற்பமாகி சிவசக்தி என்னும் குழந்தைகளைப் பெற்றெடுத்தான் என்பதாம். இதுகாறும் நாம் காலாய சட்டைமுனி சித்தநாதர் அறிந்த உண்மைகளை நாம் அறிந்தோம்.

கடைப்பிள்ளை சித்தர் ஞான சூத்திரம் 80இல் 36ஆம் பாடலில் அகாரம் உகாரம் இரண்டும் அதன் வழிபாட்டு முறைகளை அறிந்து அதனை வழிபட்டால் கபமான எமன் என்ற கூற்றுவன் மூல அனலினால் கரைந்து போகும். மகாரம் என்ற மௌனமான ஓங்காரம் என்னும் ஆதி மகா மூலம் கண்டால் மறுபிறவியில்லை என்று கூறப்படும் பாடலைக் காண்க.

ஆமப்பா அகாரமுடன் உகாரம் ரெண்டும்
அறிந்து மனதுரிமையாற் கொண்டாயானாற்
போமப்பா கபமான கூற்றுவன்றான்
பொருந்தி நின்ற மூல அனல் தன்னால் மைந்தா
ஓமப்பா முடிந்து அகன்று போகும்
உத்தமனே மறுபிறவி யில்லை யில்லை - 36

என்று சித்தர் பெருமான் அறிவிக்கப்படுவது தெளிக.

கருவூரார் சிவஞான போதம் 40இல் சில பாடல்களில் வாலையம்மைப் பற்றி என்ன கூறுகிறார் என்பதைப் பார்ப்போம்.

"மானே தான் குருதேசி தேவி வாலை
மகராசி விசுவாசி மவுனயாமே - 2

மவுனி யவள் நிராமயமா யிருந்தானாத்தாள்
மதி குறையாக் கன்னி சிறு பிள்ளையப்பா
புவன மதிற் செகசால வித்தை யாடிப்
புவனை திரிபுரை யெனவே நின்றாள் வாலை
சிவமயமா யிரண்டெழுத்தா யசபையாக
ஸ்ரீகோணக் குறியாகிச் சித்தர்கெல்லாம்
மவுனமென்ற வுபதேச மகண்ட வீதி
மணி கனக கெவுன மனோ மணியாம் பாரே - 3

பாரடா அகார முதல் உகாரங் கொண்டு
பரிசுத்தந் தொக்காகிச் சூட்ச மானாள்
பாரடா மனம் பூண்டா லுறவே யானாள்
பஞ் சவர்ண ரூபியிவள் சூட்சம் பாரே - 9

என்று கருவூரார் சிவஞான போதம் என்ற நூலில் பாடுகிறார்.

தேவி வாலை குருவாகி விளங்குபவள்

Koviloor Digital Library

மாபெரும் மகராசி. நல்ல விசுவாசி மவுனியாகும்.

மவுனியானவள் ஞானவடிவாய் அகன்ற அண்டம் முழுதும் பரவியிருந்தாள். ஞான குறைவு இல்லாதவள். கன்னித் தன்மையுடையவள். சிவ குழந்தை புவனகளில் செக ஜால விந்தையாடியவள். புவனை என்றும் திரிபுரை என்றும் விரிந்து நின்றாள். சிவமாயும், இரண்டெழுத்தாகவும் அசபையாகவும் ஸ்ரீகோணத்தில் வாழ்வாள். சித்தர்களுக்கு மவுன தீட்சை செவியருள் செப்பி உரை செய்வாள். அகண்ட பரவெளியில் கனக மணியாவாள். வேகமுடையவள் கெவுளிகளுக்கு மனோன்மணியாக நிற்பாள்.

அகார முதல் உகாரங் கொண்டு சிவவாலையாகி வெகு தூய்மையுடள் நுட்பமாய் நிற்பாள். அவளை மனதால் என்றும் நினைவுடன் இருந்தால் நல்லுறவு உண்டாகும். ஐவண்ண வடிவமாவாள். அவளுடைய சூட்சமமான நிலை உணர்ந்து நோக்குக என்பதாம்.

ஆதி அகத்தியர் எழுதிய சித்தர் நூல்களில் சில பாடல்கள் நாம் அறிதல் நலம் தரும். அவர் கூறும் அற்புத செய்திகள் சாகாக்கலை கற்கும் அன்பர்களுக்கு பயன்படும். ஆதி அகத்தியர் அந்தரங்கா தீட்சா நூல் 400இல் சில பாடல்கள் ஆய்வு செய்வோம்.

"தோணவே பூரணத்தைக் கண்டு கொள்ளு
சுகமான சிவசக்தி வாலை யோடு
பூணவேதான் நிறுத்தி செபித்தால் மைந்தா
பூரணமாய் காயசித்தி புனிதமாமே - 22

மானிட ஆன்மா பூரணம் என்னும் சிவசக்தி வாலையை கண்டு கொண்டால் சுகமான சுகம் தரும். வாலையின் மவுன தீட்சை மவுனமாக செய்தால் பூரணமாய் காயசித்தி புனிதமாகும்.

"சாணான தேகமட யெண்சாண் தேகம்
சமரச மாய் நின்றிலங்கும் வாலையாச்சு - 187

எண் சாண் தேகமான நமது உடல் வாலையின் தீட்சா மவுனத்தால் உடலான இளமையாகும் என்பதாம்.

"கயிலாச சிதம்பரம் வாலையைக் கண்டால்
கண்ணடாங்காத் தீப வொளி கருணையாகும் - 145

கயிலாயம் என்பது ஞானம் மிகுந்த நிறையுடையது. அந்த கைலாயத்திற்கு சிதம்பரம் என்பர். அங்கு இருப்பவள் இளமைமிகு அழகுடைய பெண் சிவவாலையாகும். அவள் கண்ணுக்கு அடங்காத பெரும் பேரொளியாகும்.

"தேனான வாலையுட பூசை கேளு
சிதம்பரத்தின் தீட்சையடா வாலை தானும்
கோனான திரிகோண நடுவே விந்து
குருவான விந்துவதி னடுவே கேளு
மானான ரீங்கார மிட்டு மேலே
மகத்தான சூட்சமிட்டுச் சுழியும் போடே - 143

அகத்தியர் பரிபூரணம் — 1200.

இனிதான வாலையுடைய வழிபாடு கேட்கவும்,. சிதம்பர பூசை போன்ற வாலையுட பூசையும் ஆகும். உயர்வாக பேசக் கூடிய திரிகோணம் போடவும். அதன் நடுவில் விந்து போடவும். குருவாக நிற்கும் வட்டத்தின் நடுவே மயக்கமில்லாமல் ரீங்காரம் போடுக. அதன் மேல்பகுதியில் சூட்சமம் என்ற சுழினை போடுக. அதனை போட்டு வழிபட்டால் சித்தர் நிலையடையலாம் என்பதாம்.

இன்னும் விரிவான விளக்கமான அரிய பெரிய செய்திகள் அறிய ஆர்வமுடையவர்கள் சித்தர்களின் நூல்களில் கண்டுக் கொள்ளலாம். கருவூரார் வழிபாடு முறைகள் என்னும் நூலில் அருமையான செய்திகள் வெளியிட்டுள்ளன. மேலும் கொங்கணர் வாலை கும்மி என்னும் நூலிலும் காணப்படும் செய்திகள் உண்டு. அகத்தியர் வாலையை வணங்கியதால் பல் சித்துக்கள் கற்றதாகவும் கூறப்படுகிறது. வாலையிலன் தீட்சா விதிமுறைகள் அதற்குரிய மந்திரங்கள் மிகவும் வலிமையுடையது. பல சித்தர்கள் மறைமுகமாக பாடினாலும் அகத்தியர் மிக தெளிவாகப் பாடியுள்ளார்.

ஆகவே சாகாக்கலை கற்று சாகாமல்

Koviloor Digital Library

இருக்க வேண்டுமென்றால் பூரணத்தில் குடியுள்ள சிவவாலையை வழிபட்டு அவளின் துணையுடன் முன்னேறலாம். பூரணம் என்பது அண்டம் என்பர். முத்திக்கு முதல் படியாகவும் மூலப்படியாகவும் செயல்படக் கூடியவள் சிவவாலையே ஆகும். அதனால் தான் சித்தர்க்ள அந்த வாலையம்மையை விடாமல் வழிபட்டு வருகிறார்கள்.

பூரணத்தில் குடியிருக்கும் சிவவாலை வழிபட்டு மானுட ஆன்மாக்கள் தங்களின் உடலை இழக்காமல் சுத்ததேகமாக்கி அதிலிருந்து உயர்ந்து பிரணவ தேகமாக நின்று பின் அதிலிருந்து விடுபட்டு ஞானதேகம் பெற்று மரணமில்லா பெரும் வாழ்வில் எக்காலமும் இருக்கலாம்.

எப்பொழுதும் இறப்பில்லை. பிறப்பில்லை. சிறப்பான தெய்வீக நலம் பெற்று உய்யலாம். அதுபோல் அம்மானிடனுக்கு எமன் என்ற வார்த்தையும் அணுகாது. சிவவடிவம் பெறுவதே மானிடப் பிறவியின் முக்கிய நாட்டமாக இருக்க வேண்டும். அனைவரும் முத்திவரும் வாய்ப்பு உண்டு. சைவமில்லாதாருக்கும், பெண்ணரவம் தீண்டியவர்களுக்கும், ஒழுக்கம் கெட்டு நடக்கும் மனிதர்களுக்கும் தீ செயல் புரியும் மானிடர்களுக்கும் சாகாக்கலை அறியும் வாய்ப்பு கிட்டாது. ஆகவே இந்த செய்திகள் படித்தவர்கள் திருந்தி வாழ்ந்தால் பயனடைவார்கள் என்பதை உணர்ந்து நலம் பெறுக.

திருச்சிற்றம்பலம்

20. திருவருள் சாம்பவி - கேசரி

திருவருள் சக்தியாக ஓங்கி நிற்கும் சாம்பவியான அருள்சக்தியும், கேசரியான திருவருட் சக்தியும் ஒன்றை ஒன்றுக்கு மிக நெருங்கிய உறவு உண்டு. ஒன்று வட்டகோணத்தில் நிற்பாள். மற்றொன்று முக்கோணத்தில் குடியிருப்பாள். இவர்கள் இருவரின் அருள் மானிடனுக்கு உதவி செய்தால் தான் மானிடன் முத்தி நிலை பெற முடியும்.

மேற்கண்ட இரு திருவருள் சக்தியின் கருணை இல்லையெனில் எந்த மனிதனுக்கும் அருள் சார்ந்து வராது. இவர்களின் இருப்பிடம் மானிட தேகத்தில் எங்கு செயல்படுகிறது. அவர்களின் பணிகள் என்ன என்பதை அறிய வேண்டும்.

முதலில் சாம்பவி என்னும் திருவருள் சக்தியைப் பற்றி அறியலாம். அடுத்து கேசரி என்னும் திருவருள் சக்தியின் பெருமையைக் கண்டு அறியலாம்.

சுப்பிரமணியர் சிவம் யோக ஞான—500 என்னும் நூலில் சாம்பவியைப் பற்றிய செய்தியை மிகவும் நேர்த்தியான முறையில் கூறுகிறார். திருவருள் சக்தி சாம்பவிமதி மண்டலத்தின் மேல் உறைபவள் என்றும், அவளை காணும் முறையான வழி எதுவெனில் யோக நெறிமறையாமல் காணலாம் என்றும், இருளும் ஒளியும் இல்லாத இடம் ஞான நெறிமுறையாகும் என்றும், என்றும் கன்னியாக விளங்கும் திருவருள் சக்தி அதனைக் கண்டவன் அவனே ஞானியாம் என்றும், ஞானியானவள் தான் திருவருள் சக்தியான கேசரியை காட்ட வல்லவன் என்றும் கூறுகிறார். நமது நாதாந்த கடவுளான சுப்பிரமணிய சிவம் கூறுவது அறிக.

"உன்னி நின்ற மூல முதல் ஆறும் பார்த்தே
உருகி நின்ற சுழிமுனையை யறிந்த பின்
மன்னி நின்று மதிமுதல் சாம்பவியைக் கண்டு
மருவி நின்று மனமுறைந்து தேர்ந்த பின்பு
பன்னி நின்ற இவ்வளவும் யோக மார்க்கம்
பகலிரவு மற்ற இடம் ஞான மார்க்கம்
கன்னி நின்ற இடங்கண்டால் அவனே ஞானி
காட்டுவான் கேசரியைக் காட்டுவானே - 11


என்பது அவர் கண்ட அனுபவக் காட்சியாகும்.

Koviloor Digital Library

சச்சிதானந்தர் என்னும் சித்தபெரு மகனார் சுழிமுனை கலை 30இல் 25ஆம் பாடலில்

"காரியமாய்ச் சொல்லுகிறேன் நாதமது தானே
கலங்காதே சாம்பவி.....

என்று ஓதுகிறார். என்றும் இயங்கிக் கொண்டிருக்கும் நாதம் என்று கூறப்படும் ஓசைவடிவமான பொருளாக திகழ்கின்ற திருவருள் சக்தி தான் சாம்பவி என்று கூறுகிறார் என்பதை அறிக.



மதி மண்டலத்தின் வாசம் செய்யும் சாம்பவி என்னும் திருவருள் சக்தி மானிடன் எண்ணியது எல்லாம் தரும் வல்லமையுடையவள். அவளே திருவடி நிலையையும் அதனை அடையும் வழிமுறையையும் கூறுவாள் என்று சுப்பிரமணி சிவம் யோக ஞானம் 500இல் ஓதும் பாடல் காண்க.

"தருகுவாள் நினைத்தபடி யுனக்கே மைந்தா
சாம்பவியாள் பாதமத க்ஷணத்திற் காட்டி - 96

என்று ஓதப்படுகிறது. மேலும் சாம்பவியான திருவருள் சக்தியின் திருவடியைப் பற்றி வணங்கினால் சாரை என்னும் அமுத நீர் பருக தருவாள். அதனுடை நாவேறு "நசி" என்ற மந்திரத்தால் விலக்கி அந்த சாரையின் அமுத நீர் முழுதும் உண்டு தேறுவாய் என்பதாம். இக்கருத்தை வலியுறுத்தும் சித்தர் பாடல் கண்டு தேறுங்கள்.

தாரான சாரையைத் தான் விட்டி டாமற்
சாம்பவியாள் பாத மதிற் றயவாய்க் கூடி
நேரான "நசி" யென்றே சாமந் தீர்த்து
நீ மகனே முழுவதையும் முண்டு தேறி - 140

சு.சு.ஞானம் — 100

சாம்பவி என்னும் திருவருள் சக்தி சம்புவுடன் சுற்றிலும் எட்டு சக்திகளுடன் மதி மண்டலத்தில் இருப்பவள். அவள் அமுதம் அளிக்கும் ஆற்றல் படைத்தவள். எண் பெரும் பேறுகள் வழங்கும் நிலையுடையவள். அவளை நாம் சுழிமுனையின் துணைக் கொண்டு புருவ மத்தி பூட்டினை திறந்து உட்சென்று வணங்க வேண்டும். திருவருள் சக்தி சாம்பவியைக் கண்டு அவளின் அருளின் துணையோடு மூலத்தைக் கடந்து கேசரி என்ற திருவருள் சக்தியைக் காணவும் மகிழ்ந்து இன்புறலாம். இனி திருவருள் சக்தி கேசரியைப் பற்றி நிந்தனைச் செய்வோம்.

சாம்பவி என்னும் திருவருள் சக்தியை கண்டபின் அங்குள்ள மூன்று திரைகளை விலக்கி மும்மூலம் என்னும் முச்சுடர் கண்டால் அங்கு திருவருள் சக்தியான கேசரி என்னும் அருள் நலம் நல்கும் அம்மையான கேசரியை முக்கோணத்தில் அழகான வனப்புடன் தெய்வீக வடிவத்துடன் விளங்கும் அவளின் கருவூரில் மறுபிறப்பெடுத்தால் மானிடனுக்கு மரணம் என்னும் எமனை வெற்றி காணலாம். இவளே பாலமுதம் ஊட்டி வைப்பாள். அதனை உண்டு இறப்பில்லா பெருவாழ்வு பெற்று ஏகாந்த நிலை பெற்று திகழ்வான் என்பதை சித்தர்களின் வாயிலாக அறியலாம்.

மச்சமுனி சித்தர் காரண ஞானம் — 10இல் முதல் பாடலில் ஆதி மகா மூலம் என்று சொல்லப்படும் ஓங்காரம் முறிந்து அகாரம் — உகாரம் — மகாரமாக விளங்கியது. அதுவே பின்பு ஒன்றாக இணைந்து அதுவே பிரணவமாக திகழும். அகரமும் உகரமும் ஒன்றாக இணைந்ததுவே மகாரமாகும். இதுவே வன்னி என்ற நிலைமை உண்டானது. இப்பொருளைப் பற்றி பேசினால் திருவருள் சக்தியான கேசரி என்னும் தெய்வத் தாயை அகக்கண்ணுக்குக் காட்சியாக விளங்குவாள் என்பதை அடுத்துவரும் பாடலைக் காண்க.

"ஓங்கார மாவதென்ன வென்று கேட்கில்

Koviloor Digital Library

உகார மொன்று மகாரமொன்று அகாரமொன்று
பாங்காக நின்ற பிரணவமே யாச்சு
பாரிந்த கருவல்லோ ஆசான் சொன்னார்
வாங்காத அகார உகாரத்திற் சேர்ந்து
வன்னி நின்ற யிடமல்லோ மகார மாச்சு
தாங்காதே உரைக்கிற் கேசரியைக் காட்டும்
சச்சிதானந்த மென்ற மவுனந் தானே

மச்சமுனி சித்தர் காரண ஞானம் — 10.

மேலும் சச்சிதாந்த சித்தர் சுழிமுனை சாத்திரம் — 30இல் முத்திரை தானப்பா,

உரியதோர் விந்துவுடன் நாதமுமக்கினியும்
ஒன்றாகக் கூடினது கேசரி தானே தானாமே - 25

மானுடன் ஆறு ஆதாரங்கள் கடந்து புருமத்தி கதவின் பூட்டிசை நீக்கி அங்குள்ள திருவருள் சக்தியான சாம்பவியை வணங்கிய பின் அவனே அங்குள்ள நாதம் — விந்து — அக்கினி — என்ற முப்பொருளுடன் இணைந்து நிற்கும் இடமாக உள்ள நிலையே கேசரி என்னும் திருவருள் சக்தியாகும் என்று அச்சித்தரின் உயிரனுபவத்தை உணர்ந்ததை ஓதுகிறார்.

சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் 100இல் திருவருள் சகதியான சேகரியைக் காண வேண்டுமென்றால் முதலில் புருவ மத்தி என்னும் இடத்தைக் கண்டு அங்கிருந்து மேலேற சுழிமுனை என்றும் துருத்திக் கொண்டு ஊதினால் வாசியான வெளியிற் சேரும் என்று ஓதப்படுகிறது.

"பரிந்து நின்று கேசரியின் மையங் காணப்
பண்புடன் புருவ மத்தி பாரு பாரு
விரிந்து நின்ற துருத்தி தனை யூதும் போது
மேல்நோக்கி வாயுவது வெளியிற் சேரும் - 12

என்று அவரின் அக அனுபவத்தை உணர்த்துகிறார்.

கொங்கணர் என்னும் சித்தர் ஞான சைதன்யம் 110இல் கேசரியைப் பற்றி கூறுவதைக் காண்க.

கானென்ற மவுனத்தின் கருவுந் சொன்னேன்
கைமுறையாய்க் கேசரிதானே தென்றாக்கால்
கோ னென்ற ரவிமதியும் வன்னி மூன்றுங்
கூடிநின்ற வறிவல்லோ கேசரிதான் தானே - 101

கால் என்ற மவுனத்தின் கருவுந் சொன்னேன். வழிமுறையாக கேசரிதான் எதுவென்றால் பெருமைப்படத்தக்க சூரியன் — மதியும் — வன்னி ஆக மூன்றும் இணைந்த இடம் தான் ஞானம் என்பர். இந்த ஞானமாக விளங்குபவனே கேசரி என்னும் திருவருள் சக்தியாகும்.

சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் — 30இல் கேசரத்தின் நிலையை நமக்கு உணர்த்தும் பாடலானது

"பாரடா கேசரத்திலிருந்து கொண்டு
பன்னி ரெண்டு முகத்தினுட வன்னியாலே
ஆரடா செந்தீயைப் பார்க்கும் போது
ஆகாச கெங்கையுட அமுத முண்டேன் - 25

என்று ஓதப்படுகிறது.

கேசரி என்னும் ஞான சக்தி வாழுமிடம் கேசரம் என்பர். அவ்விடத்தைக் கண்ட மனிதன் பன்னிரெண்டு தீ நாக்கு உள்ள சூரியக் கலையைக் கொண்டு சுழிமுனை என்னும் வன்னியின் துணைக் கொண்டு வானிலுள்ள கெங்கையான வானமுதம் உண்டோம் என்று கூறப்படுகிறது. வானமுதம் தருவது ஞான சக்தியான கேசரியான திருவருள் சக்தியாவாள் அதனை உண்டவர்கள் கோடிக்கணக்கான சித்தர்கள் ஆவார்கள்.

மேற்கோள் எடுத்துக் காட்டியுள்ள சித்தர்களின் பாடல்கள் இடம்பெற்ற நூலில் கண்டவாறு விளக்கமாகவும் விரிவாகவும் தெளிவாகவும் உணர்த்தப்பட்டுள்ளது. இந்த இரு திருவருள் சக்திகளான சாம்பவியும் கேசரியின் இருப்பிடம் நிலைகள் அவர்களின் உயர்வின் பெருமைகள் சாகாக்கலையின் முக்கிய பங்கு பெறுகிறது என்பதை உணர வேண்டும். ஒருமானிட இவருரையும் சந்தித்தால் மானுட பிறவி மீண்டும் இல்லாது முத்தியும், சித்தியும் வழங்கும் என்பதை அறியலாமென்ற அற்புதச் செய்தியை இனிதுடன் முடிக்கப்படுகிறது.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

21. மும் மூலம்

புவனங்கள் முழுதும் ஆளுமைப் பெற்று ஆட்சி செலுத்தி அற்புதமான படைப்புகளுக்கு வடிவம் தருவது திருவருள் சக்தியாகும். அவளின் அற்புதத்திருவருளினால் படைக்கப்பட்ட இனமே மனித மூலமாகும். வடிவமில்லா் உயிர்கள் முத்தி பெறமுடியாது. அதே போல் வடிவமிருந்து உயிர் இல்லை என்றாலும் பயன்படாது. உயிருடன் அதற்கு வடிவம் (தேகம்) இருந்தால் தான் தனியொரு மனிதன் முத்தியும் சித்தியும் பெற இயலும்.

தனியொரு மனிதன் முத்தியும் சித்தியும் பெற இயலும். கூட வேண்டுமென்றால் திருவருள் சக்தியின் கடைக்கண் பார்வையின் அருள் வேண்டும். அவருடைய அருட்பார்வை நமக்கு வேண்டுமென்றால் ஈவு, இரக்கம், கருணை, ஒழுக்கம், ஆன்ம சிந்தனை, நல்ல உள்ளம், புலால் உண்ணாமை, தன்னடக்கம், அன்பு, பக்தி, தனது உயிர் போன்று மற்ற உயிர்கள் என்ற நற்சிந்தனை, நலம் தரும் செயல்கள், இறைவனின் திருவருளை நினைதல், பசியாற்றல், கல்வி பயிற்றுவித்தல் போன்ற நன்மைகள் செய்து வருவதே இறையருளைப் பெற வழிவகுக்கும்.



நற்சிந்தனையும், சிதறாத எண்ணங்களும், மனம் தளராத உறுதியும், உள்ளம் ஒருமுகப்படுத்தும் ஆற்றலும், எப்பொழுதும் அருளின் நன்மையை நாடி வரும் பொறுமையும் வேண்டும்.

சிதறாத சிந்தனையும் மனஉறுதியும் இருந்தால் சாகாத கல்வியில் கற்கும் வாய்ப்புகள் இறையருளால் தெரிய வரும். இதற்கு மூலக்கடவுளாக இருப்பவள் திருவருள் சக்தியே ஆகும். மும்மூலத்திற்கும் முதன்மையாக நிற்பவளும் திருவருள் சக்தியே ஆகும். அவளின் வழிகாட்டுதல் மூலமே தனியொரு மனிதன் முத்தியும் சித்தியும் பெறமுடியும். அத்திருவருள் சக்தியே யோகி ஞானிகளுக்கு மறுபிறப்பு அளிக்கும் ஆற்றல் உடைய மேல்நிலை திருவருள் சக்தியாகும். அத்திருவருள் சக்தியின் மானிட தேகத்தில் எங்கு எவ்வாறு செயல்படுகிறது. இந்த இடத்தில் மனிதனுக்கு பெரும்பேறு கிடைக்கிறது என்பதை அறிவதே மும்மூலம் என்னும் சிறப்புடைய மேல்நிலை கருவூராகும். அந்த கருவூருக்குள் யோகிகள் சென்று தன் சொந்த தேகத்துடன் மறுபிறப்பு பெறும்போது மரணமில்லா பெரும் பேறு பெற்று மகிழ்கிறான் என்பதையும் நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அதன் உண்மை நிலை அறிந்துக் கொள்ள முடியும். இனி இந்த இடத்தின் நிலையை சித்தர் பெருமக்களின் வாயிலாக அறியலாம்.

மும்மூலத்தின் இருப்பிடமும் அதன் நிலையும்:

மும்மூலம் என்பது வன்னி, கதிர், மதி இவைகளின் இணையுமிடமாகும். அடிமூலம் வன்னி, நடுமூலம், கதிர், முடிமூலம் மதியாகும். இவைகள் மூன்று மும்மூலமாகும். அடிமூலமான அக்கினியின் வித்தெழுத்து ஓம் — ஆம் — உம் ஆகும். நடுமூலமான கதிரின் வித்தெழுத்து ஐயும் — கிலியும் — சவ்வுமாகும். முடிமூலமான மதியின் வித்தெழுத்து நமசிவய (அ) சிவயநமவாகும்.

கதிரின் இல்லம் மூலாதாரமாகும். மதியின் வீடு புருவமத்தியாகும். சுடரின்

Koviloor Digital Library

(வன்னியின்) வீடு சிகாரத்தின் அந்தமாகும். இவைகள் மூன்றும் முச்சுடராகும். பிள்ளையின் கருத்தாகும் அவருடைய ஞானப்பாடலை படித்து தெளிக.

நேரப்பா அடிமூலம் அக்கினியின் பீசம்
நிலையான பீசமடா ஓம் - ஆம் - உம் மென்றோது
காரப்பா நடுவன கதிரினுட பீசம்
கருணை வளர் ஐயும் - கிலியும் - சவ்வும் மென்றோது
மேரப்பா முடிவான மதியின் பீசம்
விளங்கி நின்ற நமசிவாயமென்று காணே - 3

கடைப்பிள்ளை ஞான கக்கிசம் — 80

"பாரப்பா ரவி வீடு மூலாதாரம்
பதிவான மதிவீடு புருவ மத்தி
நேரப்பா சுடரது தான் சிகாரத்தந்தம்
நிசமான முச்சுடரும் மிதுதான்பாரு
பேரப்பா முச்சுடரே மும் மூலமாகும்.

கடைப்பிள்ளை ஞானத் தண்டகம் — 50

மேலும் மும்மூலமான சூரியன் — சந்திரன் — அக்கினி மூன்றும் கூடி நின்ற யிடம் ஞானமாகும். அந்த ஞானமே கேசரி என்றும் கூறுவார்கள். என்று கொங்கண சித்தர் ஞான சைதன்யம் 110இல் ஓதுவது அறிக.

"கோனென்ற ரவி - மதியும் - வன்னி மூன்றுங்
கூடிநின்ற வறிவல்லோ கேசரிதான் காணே - 101

என்பது கொங்கண சித்தரின் அற்புத வாக்காகும்.

மேலும் சச்சிதானந்தர் சுழிமுனை கலை 16இல் ஓரிடத்தில் விந்து — நாதம் — அக்கினி ஒன்றாக இணைந்தயிடமே கேசரி என்று கூறுகிறார். அதுவே மும்மூலமாகும் என்பதை,

ஊரியதோர் விந்துடனாதமு மக்கினியும்
ஒன்றாகக் கூடினது கேசரிதானாமே - 5

மேலும் அகத்தியர் அந்தரங்க தீட்சாவிதி 400இல் 67ஆம் பாடலில்

"சொன்ன தொரு சடாதார பீடம்
அதில் நாத பிரகாசம் பிராணன் தோணும்
அன்னை தலம் கருவூராம் நாடுவிட்டு
அம்மலையம் வீட்டினில் சோனைபாயும்
சின்ன மணி சித்தர் கூட்டம் மூலம் மூலம்
சிவ சிவங் காதன மேரு சிவமுசக்தி - 67

புருவ மத்தி திரையினால் பூட்டப்பட்டுள்ளதை அங்கிருந்து திரைகள் ஏழுயிருப்பதாக சித்தர்கள் நூலிலும் அனுபவ உணர்வாலும் அறியலாம். இவைகளுக்குள்ள திரைகள் அகற்றி பார்க்கும் போது ஒவ்வொரு பீடம் தென்படும். அந்த பீடங்களில் ஒன்றான ஆறவாவது பீடத்தில் ஓசையின் ஒளிச் சுடராக ஆன்மா தோன்றும். தாயின் இருப்பிடமான அது கருவூர் என்று சித்தர்கள் கூறுகிறார்கள். அது முக்கோண மலையாகும். அம்மலையின் கண் அமிர்தம் என்னும் அற்புதப் பொருள் பாய்ந்து வரும். சின்னமணி சித்தர் கூட்டம் மும்மூலம் என்ற அவ்விடம் சிவசக்தி சிங்காதன மேரு என்னும் இருப்பிடமாகும் என்பதாம். இவ்விடம் சந்திக்கும் மனிதன் மறுபிறப்பு பெற்று மரணமில்லா பெருவாழ்வு பெரும் பாக்கியம் பெற்று இன்புறுகிறான் என்பதாம்.

மேலும் சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் 200இல் சில பாடல்கள் ஆய்வு செய்வோம். சுப்பிரமணியர் தான் பெற்ற அக அனுபூதி அனுபவத்தை நாம் இங்கு காணலாம்.

"அடைத்திடவே சிலம் பொலியுங் கேட்டேன் யானும்
ஐயையா காதிரண்டும அடைத்துப் போச்சு
படைத்திடவே ரோசமென்ற வெக்கம் போச்சு
பரிவான மயில் மீதில் பாய்ந்து சென்றேன்
வடைத்திடவே வாசியின் மேற்சொக்கிக் கொண்டேன்
வயிரமங்கே யிருக்கின்ற வகையுங் கண்டேன்
முடைத்திடவே மும்மூலம் கொண்ட தாலே
முருகன் என்று யெந்தனுக்குப் பேருமாச்சி - 17

மும்மூலம் என்னும் கதிர் — மதி — வன்னி ஆக இவைகள் இணையுமிடமாகும். இவ்விடத்திற்கு கேசரி என்ற பெயராகும். மூன்றின் இணைவு தான் முக்கோணமாகும். இந்த முக்கோண பீடம் நெற்றியின் நடுவாகும். அந்த நடுமையம் அடைந்தபோது

Koviloor Digital Library

சிலம்பொலியின் ஓசையைக் கேட்டு எனது காது அடைத்து விட்டது. அவ்விடத்தில் அடைந்த போது ரோசம் — வெக்கம் போய்விட்டது. மயில் என்ற திருவாசி மீதில் ஏறி பாய்ந்து சென்றேன். வாசியென்ற ஓங்கார வடிவத்தில் மறந்து மதியில் சொக்கிக் கொண்டேன். அவ்விடத்தில் வயிரஒளிச் சுடர் வீசுவதையும் கண்டு மகிழ்ந்தேன். இப்படி கதிர் — மதி — வன்னி இணைவு பெற்ற மும்மூலம் தனதாக்கிக் கொண்டதால் முருகன் என்ற திருப்பெயர் பெற்றேன் என்று ஓதுகிறார்.

மேலும் ஓரிடத்தில் சுப்பிமணியர் தனது ஆவி (ஆன்மா) மும்மூலம் என்ற திருவிடமான கருவூல் மறுபிறப்பு ஏற்பட்டதால் நான் என்றும் சிரஞ் சீவியாக வாழும் மேன்மையான அருளும் பெற்றதாக கீழ்வரும் பாடலால் அறியலாம்.

"ஆவியே மும்மூலம் கொள்ளா மற்றான்
அதிசயமாய் சிரஞ்சீவி யருளுமுண்டேன் - 133
சுப்பிரமணியர் சுத்த ஞானம் — 200

கருவூராரின் பூசாவிதி 30இல் 25அம் பாடலில் மும்மூலத்தைப் பற்றி மறைப்பொருளாகவும், அதன் விளக்கம் விரிவாகவும் குறிக்கும் இடமே வாலை என்று கூறுகிறார். அந்த அற்புதப் பாடலைப் படித்து மகிழுங்கள்.

"எட்டிரண்டு மொன்றுமது வாலை என்பார்
இதுதானே பரிதி - மதி சுழினை என்பார்
ஒட்டிமுறிந் தெழுத் ததுமுக் கோண மென்பார்
உதித் தெழுந்த மூன்றெழுத்தை அறியரையோ
கொட்டு மொரு தேளுருவாய் நிற்கும் பாரு
கூட்ட மிட்டுப் பாராதே குறிகள் தோன்றும்
சுட்ட சுடு காடுமது வெளியுமாகும்
சொல்லுவதற்கு வாய்விளங்கா சூட்சம் தானே - 25

இந்த பாடலில் மறைந்துள்ள பொருள் என்னவென்றால் அகரம் உகரம் ஆக இணைந்து தான் வாலை என்று கூறுவார்கள். இது பரிதி — மதி — சுழினை (வன்னி) என்று போற்றுவர். இதுவே முக்கோணமாகும். ஓங்காரம் முறிந்தால் அகரம் — உகரம் — மகரம் என்ற முப்பிரிவாக பிரிந்து நிற்கும். மூல எழுத்து எது அதனை கூட்டமோடு கூட்டமாக பார்க்காதே. அதில் பற்பல வியப்பான செய்திகள் தோன்றும். சுட்ட சுடுகாடாக இருக்கும் பெருகாடு வெளியாகும். இதனைப் பற்றி கூறுவது அவ்வளவு எளிதல்ல என்பதாம்.

மும்மூலம் என்பது வாலை என்ற கேசரியாகும். அதுவே முக்கோணமாகும். அந்த முக்கோணமே மறுபிறப்பு வழங்குமிடமாகும். அதுவே கருவூராகும். அந்த கருவூரில் இந்த உடலோடு மறுபிறப்பு உண்டு செய்யும். அங்கு அற்புதமான சோனை என்னும் சாகாமருந்தான அமிழ்தம் உண்டு மரணமில்லா பெருவாழ்வு பெறுகிறார்கள் அந்த முக்கோணமே பரிதி — மதி — சுழினையாகும். அந்த கோணத்தில் ஆதி மகா மூலம் என்ற ஓங்காரமே முறிந்து மூன்றாக பிரிந்து நிற்கிறது. அதன் வடிவம் தேருவானது. இதனைப் பற்றி கூறுவது அவ்வளவு எளிதானதல்ல என்று சித்தர்கள் கண்ட அக அனுபவ ஆகம அனுபூதிகள் கூறுகின்றன. சமயம் சார்ந்து வரும் செய்திகளுக்கும், சித்தர்களை சார்ந்து வரும் செய்திகளுக்கும் பெரும் மாறுதல் உண்டு. எனவே சாகாத கல்வி பயில உண்மையை நாடி நிற்க வேண்டுமென்று மெய்ஞ்ஞானம் அறிந்து மெய்யன்பர்கள் உணர வேண்டும என்று கேட்டுக் கொள்கிறேன்.

"மனிதனாய்ப் பிறந்தால் சாகாக்கல்வி
வாசிக்கும் சிவமோடு வாழ்க்கை சேர்வான்" - 56"
அகத்தியர் பூரண சூட்சம் — 216

"அறிவை நீ யறிந்தாலே பிறவி போச்சு
அடுத்தாப் போற் பரம பதம் நிலையுமாச்சு" - 3
கொங்கணர் மெய்ஞ்ஞானம் — 13

மேற்கண்ட இந்த இனியச் செய்தியைப் படித்து ஒவ்வொரு மானிடப்பிறவி எடுத்தவர்கள் சிறிதளவு முயற்சி எடுத்து நாளும் பயிற்சி மேற்கொண்டால் அது பெரு முயற்சியாகி வல்வினைகள் அகன்று இறவாமையிலிருந்து விடுபட்டு முத்தியும் சித்தியும் பெறலாம் என்பது இனிய செய்தியாக ஒளிரட்டும்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

உஉ. புருவ மத்தி

உலகம் என்பது பல்லுயிர்கள் அடங்கியது தான் உலகம் என்பர். ஐம்பெரும் பூதங்கள் செயல்படும். அதில் நீர் பூதம் இல்லை எனில் அதுஒரு உலகமாக கருதப்படாது. பல்வேறு உயிரினங்களில் மானுட உயிரினம் மிகவும் சிறந்தது. அந்த மானிடனே மனம் மற்றும் அறிவு கொண்டு சிந்தித்து பகுத்தறியும் பண்புடையவன்.

மானிடன் இறையருளை பெற வேண்டி அகஅனுபவம் பெற வேண்டியுள்ளது. அவன் தன்னைத் தான் அறியும் அறிவு பெற்றால் இறையருள் அனுபவம் கூடும். அம்மானிடன் தன் தேகத்தை கற்பாதி மூலிகைகள் — செந்தூரங்கள் — நெய்கள் எடுத்துண்டு தேகத்தினை திடம் செய்துக் கொள்ளமுயற்சி எடுத்துக் கொள்ளுகிறான். அதனை தொடர்ந்து வாசியோகம், சிவராஜயோகம் செய்ய அறிந்துக் கொள்கின்றான்.

சிவராஜயோக முறையில் மூச்சு, இடத்தில் இழுத்து நிறுத்தி வலத்தில் விடும்போது, இடையும் பிங்கலையும் இணைந்து சுழிமுனையாக மாற்றி உயிரின் நிலையை வன்மை செய்துக் கொள்கிறான். அந்த உயிர் ஐந்து ஆதாரங்கள் கடந்து வந்து ஆறாவது ஆதாரத்தில் நுழையுமிடந்தான் புருவமத்தியாகும். இனி அதனைப் பற்றி சிந்திப்போம்.

புருவ மத்தி:

இது மூலம் — கிழ்வயிறு — கொப்பூழ் — நெஞ்சம்— மிடறு — புருவ மத்தி என்ற வரிசையில் ஆதாரங்கள் ஆறினுள் ஆறாவது நிலைக்களமாகும். இதற்கு ஆக்ஞை எனப் பெயர் உண்டு. இந்த இடத்தில் தான் ஆய்த எழுத்தும், ஔகார எழுத்தும் (ஃ — ஔ) செயல்படுமிடமாகும்.

இவ்விடத்திலிருந்து ஆணைகள் பிறப்பிக்கும் இடம் என்பர். கட்டளைகள் பிறப்பித்து அறிவிக்குமிடமாகும். இவ்விடத்திலிருந்து எல்லா இடங்களுக்கும் ஆணைகள் பிறப்பிக்கப்படுவதால் "ஆக்ஞை" என்று பெயர் பெற்றது. இதற்குப் பலபெயர்கள் உண்டு.

இவ்விடத்திற்கு விந்து ஸ்தானம் — அறிவிடம் —லலாடம் — முச்சுடரிடம் — முச்சந்தி — மேல்மூலம் — முப்பாழ் — மகாமேரு பாலும் — கபாடஸ்தானம் — சபாத்துவாரம் — சிற்சபை — நெற்றிக் கண் — புருவ முத்தி — நடுமையம் — புருவ நடுமையம் என்ற பெயர் உண்டு என்று வள்ளல் பெருமான் கூறுவார்.

புருவ மையமே திருச்சிற்றம்பலம் — ஞான சபை — இங்கே தான் நாம் இறைவனை நிறைந்துக் காண வேண்டும்.

"நெற்றிக்கு நேரே நிறைந்து ஒளிகாணில்
முற்றும் அழியா துடம்பு"
"புருவத்திடை யிருந்து புண்ணியனைக் காணில்
உருவற்று நிற்கும் உடம்பு" - ஔவையார்.

இந்த தேகத்தில் புருவ மையத்தலே நமது ஆன்மா அறிவென்கிற கற்பூரத்தில் உடவுள் அருளென்ற தீபம் (விளக்கு) விளங்குவதாக ஊகித்து அறிந்து கண்டு, அதில் நாள்தோறும் பழகிக் கடவுளிடத்தே உண்மையாகிய அன்பு நேயத்தை, உயிர்களிடத்தில் உண்மையான தயவு, இரக்கம், கருணையும் இடைவிடாமல் வைத்து ஓங்கார பஞ்சாட்சரம் (ஓம் சிவாயநம) எந்நேரமும் நினைவு செய்தல் வேண்டும். சிவனின் ஐந்தெழுத்தை நினைவு கூர்தல் அவசியமாகும். சிவ பஞ் சாட்சரம் நினைவு கூர்தல் வேண்டுமென்று வள்ளலாரின் அருமையான இன்குருஞானமொழியாகும்.

எக்காலத்தும் புருவமத்தியின் கண்ணே நம்முடைய கரணத்தைச் (சித்தம் — மனம் — அகங்காரம் — புத்தி) செலுத்த வேண்டும்.

நாம் இருப்பது பாலஸ்தான மாதலால், அந்த பால் சிறந்தது என்பார் நமது

Koviloor Digital Library

வடலூர் வள்ளல் பெருமான்.

புருவ மையத்திற்கு நெற்றிக் கண் என்றொரு பெயர் உண்டு. வலது கண் சூரியன். இடது கண் சந்திரன் நெற்றிக கண் அக்கினி (தீ) என்பர். இதையே ஆய்தம் என்றும் கூறுவார்கள். எழுத்துவடிவில் (ஃ) இப்படி எழுதுகிறார்கள். இந்த இடத்தில் ஔகாரம் செயல்படுகிறது. "அ+உ+வ" = இங்கு செயல்படும். நெற்றிக் கண் "அகரம்". இடது கண் "வகரம்". வலது கண் "உகரம்" என்றும் கூறலாம். புருவ மத்தி திறவுக் கோல் "உகாரமாகும்". இவ்விடம் இதுகள் ஆக்கல் — அழித்தல் — அருளல் என்னும் செயல் இயங்குமிடமாகும்.

சிவபெருமான் ஒருவரே நெற்றிக் கண்ணை உடையவராவார். சிவப்பெருமான் ஒரு முறை நெற்றிக் கண்ணை திறந்தார். காமன் எரிந்து சாம்பலானான். மற்றொரு முறை திறந்தபோது முருகன் பிறந்தார். நெற்றி கண்ணைப் பற்றி வள்ளற் பெருமான் பின்வருமாறு ஞானக்கல்வி அருள்கிறார்.

நாம் நமது நெற்றியிலிருங்கும் மையக் கண்ணை ஆசானின் துணையுடன் திருவருளால் திறக்கப் பெற்றுக் கொள்வது சாலச்சிந்தது. ஏனெனில் மேற்படி நெற்றிக் கண்ணைத் திறக்கப்ப பெற்றுக் கொண்டவனுக்கு எல்லா அனுபவங்கள் பட்டபகல் போல் தெரியும். அவன்தான் சுத்த ஞானி. மேற்படி ஞானியார் தயவோடு ஒரு பிணத்தைப் பார்த்த் மாத்திரத்தில் சினம் தோன்றினால் உடனே அந்த ஜீவன் சாம்பலாகி விடுவான். மேற்படி ஞானிக்கு மேற்குறித்த அடையாளங்கள் உண்டு.

ஒன்னார்த் தேறலும் உவந்தாரை ஆக்களும்
எண்ணின தவத்தான் வரும் - என்பது திருக்குறளின் நற்செய்தியாகும்.

மேற்படி புருவ மையத்திலிருக்கும் கண்ணைத் திறப்பதற்கு ஒரு கதவும் பூட்டும் உள்ளது. மேற்படி பூட்டை அருள்கின்ற திறவுக் கோலைக் கொண்டு திறக்க வேண்டும். எனவே மேற்படி அருளென்பது ஆன்ம இயற்கையாகிய பெருந்தயவு தேவை. நாம் தயாவடிமானால் மேற்படி அனுபவம் நிகழும்.

இனி மெய்ஞ்ஞானி சித்தர்களின் அனுபவங்களை நாம் சற்று அலசி ஆய்வு செய்து அறிவோம். மாபெருஞ்சித்தர் காகபுசண்டர் ஞான காவியம் 100இல் புருவ மத்தியை இருக்கும் இடத்தை அறிமுகப்படுத்துகிறார். அவருடையப் பாடலைக் கண்டு இன்புறுங்கள்.

"மூக்கு மேற் தண்டிலே முனைமூக்குக்குள்
முளைத் தெழுந்த வாசிவரப் பார்த்த பேர்கள்
தாக்குவார் "புருவநடு" மேலே பார் பார்
தமர்வாசல் அடைந்திருக்கும் பூட்டு தானே - 32

இதன் பொருள் என்னவென்றால் மூக்குமுனை மேற்தண்டில் மூக்கு முனைக்குள் சுழினை என்ற வாசியானது முளைத்து வருவதை கண்டவர்கள், அதனை மேன்மேலும் ஏற்றி புருவநடுவின் கண் மேலே பார்வை செலுத்திய போது தமர்வாசலின் கதவு பூட்டுள்ளதைக் கண்டனர் என்பதாம். மேலும் அவர் கூறும் அடுத்தப் பாடலை கவனியுங்கள்.

"காட்டம் விறகெய்தாமற் தீயிடாமல்
கதிர் மதிக்கு மத்தியது "புருவமத்தி"
நாட்ட மிடக் கோபுரத்தின் வாசற் பூட்டு
நாசி முனை புருவமத்தி திறந்துகொள்ளே" - 33

என்று கூறுகிறார். இதன் பொருளென்னவென்றால் சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடைப்பட்ட தலம்தான் புருவமத்தியாம். அதில் மிகத்தீவிர நாட்டம் செலுத்தும் போது அங்கு விறகு வைக்காமல் நெருப்பிடாமல் தீயின் சோதியை காணும் வாய்ப்பு பெரும் போது நாசிமுனை கோபுரத்தின் வாசல் கதவின் பூட்டு வாசியின் அழுத்தத்தால் புருவப்பூட்டு தானாகவே திறந்துக் கொள்ளும், என்பதாம். மேலும் காகபுசண்டர் ஞான காவியம் — 1000த்தில்

"புருவமே" சிறுவாசற் கதவின் தாளைப் போக்கினாற
தெரியுமாட சொர்க்க மெல்லாம்" என்று கூறுகிறார். புருவமத்தியிலே சிறுவாசல் உண்டு. அதற்கு ஒரு கதவு உண்டு. கதவின் தாள் பூட்டப்பட்டுள்ளது. அந்த தாழ்ப்பாளை சாவிக் கொண்டு திறந்து கொண்டல் சொர்க்கம் என்னும் முத்தி வாழ்க்கைக் கண்டு கொள்ளலாம் என்பதாம்.

Koviloor Digital Library

கடைப்பிள்ளை ஞானத் தண்டகம் — 51இல் புருவ மத்தியைப் பற்றி கூறியுள்ளதையும் நாம் கவனிக்கத்தக்கது.

"ஆச்சப்பா பிராண நிலை "புருவ மத்தி"
அப்பனே திசையதுவே யாகுமாகும்
மூச்சப்பா நின்றிலங்கும் முனையாந்தீபம்
முத்தி கொண்ட யிடமதுதான் சித்தியாகும்"

உயிரின் நிலையான பிராணன் ஆகும். அது புருவமத்தியில் நிற்கும். மூச்சு என்று கூறப்படும் வாசியானது புருவமத்தியில் நின்று விளங்கும் முனையான தீபமாகும். அதுவே முத்தி தரக்கூடிய இடமாகும். அதுவே சித்திகள் கைக்கூடுமிடமாகும்.

அகத்தியர் பூரணம் 1000இல் 4ஆம் காண்டத்தில்

"மேவி நின்ற அண்டமது மைந்தா மைந்தா
மெய்ஞ்ஞான சிதம்பரமாம் புருவமத்தி
ஆவி நின்ற மத்தியிலே திரை தானாறு
அதையகற்றி தீபமணியறிய வென்றால் - 52/4

புருவ மத்தி என்பது மெய்ஞ்ஞானம் நிரம்பிய சிதம்பர இடமாகும். அங்கு ஆவி நின்ற இடமும் புருவ மத்தியாகும். அந்த இடத்தில் ஆறுவித திரைகளால் மூடப்பட்டுள்ளது. அதனை நீக்கினால் தீபத்தின் மணிஓசை அறியலாம் என்பதாம். மேலும் அகத்தியர் பெருமான் தன்னுடைய வாத சௌமிய சாகரத்தில்,

காலப்பா வலுவான ரவிமதி தன்னாலே
கருணை வளர் "புருவ நடுச்சுடரிலே" தான்
வாளப்பா மனம்குவிந்து நிற்கும் போதில்
மகத்தான சோதி வெகு சோதியாச்சு - 79

என்று கூறுகிறார். சூரியன் சந்திரன் ஆக இருவர்கள் மிக வலிமையாக இணைந்து நிற்க, அதுவே சுழினையாகி புருவ மத்தியில் சுடர்போல் விளங்கும். மேலும் அவ்விடத்தில் மனமானது குவிந்து நின்றால் மௌனம் உண்டாகி பெரியதொரு சோதியாக நிற்கும் என்பதாம் என்று கூறுகிறார்.

திருமூலர் தாம் இயற்றிய சோடசஞானம் — 16 இல்

"வேரென்றாற் புருவநடு மையத்துள்ளே
வீற்றிருந்தாள் வெகுகோடி ரூபாரூபி
பேரென்றாலவனே பேரோ மௌனி யென்பார்
பேசாத மந்திரமென்றுரைப்பார் தானே - 7

என்று ஓதுகிறார். அதாவது புருவ நடு மையம் வேர் போன்றது. அவ்விடத்தில் தாய் சக்தியானவள் பலப்பல வடிவங்களாய் அமர்ந்து இருந்தாள். அவ்விடத்தில் சென்ற மானிட ஆன்மாவுக்கு "மௌனி" என்பார்கள். அதுவே அவ்விடத்தில் உரைக்கப்படாத மந்திரம் என்றும் கூறவார்கள்.

காலாங்கி நாதர் என்னும் சித்தர் பூஜாவிதி 80இல்

"நெறியான "புருவநடு சுழினைப் பாத்து
நின்றிலங்குங் கற்பூர தீபந்தானே - 12
"தானான தீபமொடு "சிலம்பினோசை"
தன்னகத்திற் காணுமடா உண்மையாகக் - 13

என்று கூறுகிறார். சிவராசயோக நெறியில் புருவ நடுசுழினைப் பார்த்ததால் அங்கு புகை சிறிதுமில்லா கற்பூர தீபமும் அதில் சிலம்பினுடைய ஒலியும் அறியலாம். இந்த செய்திகள் அனைத்தும் தன்னகத்தின் காணக் கூடிய உண்மைகளாகும்.

சுந்தரானந்தர் என்னும் சித்தர் சுத்த ஞானம் 51இல்

பார்த்து நீ மாவென்ன "புருவ மையம்"
பண்பான இடக்கண்ணி லுகார மாச்சு
ஏத்து நீ வலக்கண்ணில் அகாரமாச்சு
என் மாக்காள் "புருவநடு" மகாரமாச்சு - 22
என்று ஓதுகிறார்.

மவுனம் கூடுமிடம் புருவமையமாகும். இதற்கு 'ம' என்று கூறுவார்கள். கட்டுப்படாத மனத்தை ஒருமுகப்படுத்தி அசையாமல் வன்மையாக்கி அகார முதல் உகார திட்சைகள் தாக்கி மவுனத்தை அறிவில் நிற்க மகாரம்-புருவ மையத்தில் நிற்கும். இடது கண்ணில் உகாரம் நிற்கும். வலது கண்ணில் அகாரம் நிற்கும். புருவமே மௌனம் சாதிக்கும் இடமாகும்.

பராசர முனிவர் ஞானபோதம் 22இல் 10ஆம் பாடலில்,

Koviloor Digital Library

என்னவே "புருநடுச்" சந்திரன் போல்
இலங்கி நின்ற சம்புபத முனக்குத் தோனும்
நன்னயமாயத் தினந்தோறும் பழக்கஞ் செய்தால்
நாடியதோர் கற்பூரத் தேகமாச்சி - 10

என்று ஓதுகிறாா. புருவநடுப் பகுதி சந்திரனைப் போல் ஒரு வட்டம் உண்டு. அதுவே சம்புவின் திருவடி உனக்கு காட்சிக்குத் தோன்றும். அவ்விடத்தில் சிவராசயோகம் தொடர்ந்து செய்து வந்தால் நீங்கள் விரும்பும் கற்பூர மணம் கமழும் வெண்ணிற தேகமாக மாறி நிற்கும் என்பதாம்.

மச்சமுனி தூலஞானம் 70இல் 8ஆம் பாடலில்

"ஞான மென்ன "புருமை யஞ்சிவம்"
நாடி பாரு அகார வடிவதாம் - 8 என்று கூறுகிறார். புருவ மையம் ஞானம் நிரம்பிய இடமாகும். அங்கு சிவம் என்னும் இறையருள் வாழுமிடமாகும். அதனை நீ நாடி பார்த்தால் அதன் வடிவம் அகாரமாகும் என்று கூறவதால் அறியலாம்.

இது காறும் புருவ மத்தியின் தன்மையும் — புருவ மத்தியின் மேலான சிறப்புக்கள் அங்கு நிகழும் செய்திகள் அறிந்திருப்பீர்கள். இதில் கூறப்படும் செய்தியில் "சாகாத கல்விக்கு" உதவக்கூடிய செய்திகளாகும். இதனை உணர்ந்து மானிட இனங்கள் மாயையில் சிக்காமல் வெளிப்பட்டு முன்னேற வேண்டும் என்பதே பெருநோக்கமாகும். மக்கள் படித்து மரணமில்லா பெருவாழ்வை தேடிக்கொண்டு பிறவிதோறும் உயர்வு பெற இறைவனை சிந்தித்து இனிய செய்தியை முடிக்கப்படுகிறது.

திருச்சிற்றம்பலம்

23. ஆயிரத்தெண்ணிதழ் கமலமலர்

உயிர்ஒளி, உடல் இருள், ஒளி சிவம், இருள்சக்தி, உயிர்களுக்கு மாயா சக்தியால் உடல் தரப்படுகிறது. இருளுக்குள் சிக்கிய ஒளி மங்கி விடுகிறது. அதுபோல் உடலுக்குள் சிக்கிய உயிர் மறைக்கப்பட்டு விடுகிறது. அதனால் தான் சிற்றணு பாறைக்குள்ளிருப்பது போல் உயிரானது நமது தேகத்திற்குள் மறைந்து உள்ளது. மறைக்கப்பட்டுள்ள உயிரான சிற்றொளியை பேரொளியில் இணைவதுதான் முத்தி என்று கூறப்படுகிறது. முத்தியின் அனுபவ நிலை தான் சித்தி என்று கூறுவார்கள். இதனைப் பெற்றவர்கள் நமது சித்தர்களாவார்கள்.

சரீர மென்ற சத்தியடா இருள்தானப்பா = 324
சுப்பிரமணிர் யோக ஞானம் — 500

தேவியுட குற்றத்தால் பிறந்த தேகம்
சீவனை யறிவ தெல்லாஞ் சந்தி தானே - 124
தட்சாணாமூர்த்தி மெய்ஞ்ஞானம் — 1200

கதித்த வுடல் சக்தியது பாசமாகும்
மானென் பசுதானு முயிரான சிவமாம் -42

மூச்சப்பா நிலையான சீவாத்துமாவும்
மூர்த்தி பர மாத்மாவின் முத்தியாச்சு - 397
அகத்தியர் பரிபூரணம் — 1200

உயிர்களுக்கு மாயா சக்தியால் தேகம் தரப்படுகிறது. அந்த உயிரின் ஒளி இருளால் மறைக்கப்படுகிறது. அதனால் தேகத்தின் அசைவுகள் உள்ளுணர்வுகளின் செயல் மாயையென்னும் மலத்தால் உந்தப்பட்டு செயல்படுகிறது. எல்லா உயிர்களும் தனக்கு விதிக்கப்பட்ட இறையருளின் விருப்பத்தால் செயல்படுகிறது.

இறையருளால் தரப்படும் மானிடப் பிறவி அவன் செய்யும் நன்மை தீமையால் மீண்டும் மீண்டும் பிறவி வந்துக் கொண்டேயிருக்கும். மானிடனின் சிந்தனை நல்லது கெட்டது அறியும் உணர்வுடையது. நல்ல சீரிய நற்சிந்தனையுடைய மானிடன் தன்தூய உணர்வால் மன அறிவுத் துணைக் கொண்டு நன்மை செய்யும்

Koviloor Digital Library

பக்குவம் பெறுகின்றான். அதனை தவறும் மானிடன் தன் தீமையின் வலிமையால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றான். நன்மையே நாடும் நன்னான் மாக்கள் உயர்வு பெறுகின்றான். தீமையே செய்யும் மானிடன்தன் உயர் பிறவியான மானிடப்பிறவி இழக்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றான்.

நல்லதையே செய்யும் நல்லுணர்வும் பெற்றவர்கள் இறையருளால் உயர்வு பெறுகின்றான். பிறவி தோறும் நன்மையே செய்யும் நன்னுயிர்கள் அறிவு விளக்கம் பெரும் வாய்ப்புப் பெற இறையருள் துணை செய்கிறது. அதில் உயிரிரக்கம் காட்டல். பசிப் பிணி போக்க அந்த நற்கல்வியில் இறையருளின் மென்மையான கல்வியால் பிறவிகள் தவிர்க்கும் வழிகள் மற்றும் இறையருள் வழிபாடுகள் செய்யும் கல்வி வழங்குல். கருணைக் காட்டல். அன்பு வழியில் செல்ல மானிட இனங்களுக்கு வழிவகுத்தல். என்றும் நல்லுணர்வுடன் நற்செயல், நல்ல ஆன்ம நேய வழிபாடு செய்தால் இறையருள் சாகாதநிலை கலை உணர்வு உள்ளத்தில் உதிக்குமாறு கருணை புரிவார். அதற்குரிய நல்வழிகள் காட்டி நல்லோர்களின் தொடர்பு — உறவுகள் ஏற்பட மானிடனுக்கு அருள்வார் என்பது உண்மையாகும்.

சாகாத கல்வி அறியும் வாய்ப்பு மானிடனின் உள்ளகத்தின் உணர்வில் குருவாக வந்து உணர்ந்துவதால் அரிய பெரிய அறிவியல் உயர் மெய்யறிவு மறைமுகமாகவே வழங்கி வருவான். இவ்வாறு இறையருள் மானிடனின் நிலையறிந்து தன்னருளின் கருணையால் வழங்குவதால் மானிடன் சாகாத கல்வி கற்கும் அறிவு பெறுகின்றான். அக்கல்வியின் வழியே மாபெரும் அற்புத மேன்மையான சிறப்பு வாய்ந்த உயர் பதவியான மரணமில்லா பெருவாழ்வு பெற்று முத்தியும் சித்தியும் பெற்று என்றும் வாழ்கின்றான் என்பதை வடலூர் வள்ளற்பெருமமான் அவர்களின் அருட்பாவில்,

தானந்தம் இல்லாத தன்மையைக் காட்டும்
"சாகாத கல்வியைத்" தந்தெனக்குள்ளே
தேனந்தத் தெள்ள முதூற்றிப் பெறுக்கித்
தித்தித்துச் "சித்தம் சிவமய மாக்கி" - 4657

என்று ஓதுகிறார்.

இந்த நிலைக்கு கொண்டு செல்ல காரணமாக துணை புரிந்தது. "ஆயிரத்தெட்டிதழ் மலர் ஓர் உறுப்பு சிறப்பாக விளங்கியது. அதனை சற்று அறிவது மானிட பிறவியின் முக்கியமான நோக்கமாகும். முயற்சியுமாகும். இனி அச்செய்தியைப் பற்றி நாம் அறியலாம். நாம் அகத்தியரை அணுகிக் கேட்டால் அப்பெருஞ்சித்தர் இவ்வாறு கூறுவார். காமப்பால் கானற்பால் என்பதின் மறைவு நிலை கூறி, ஆயிரத் தெட்டிதழின் விரிநிலை அறிவித்து முழு மதி (16 கலையுடன் கூடிய மதி) யில் கசியும் சோமப்பாலின் நிலையை உணர்த்தி பூரணம் என்னும் அண்டநிலைக் கூறி அதன் துரியாதீதனுட அனுபவத்தின் சுகநலை சொல்வார் என்பதை,

"காமப்பால் கானற்பால் கருவுஞ் சொல்லி
கமலமென்ற ஆயிரத்தெட்டிதழுங்காட்டி
சோமப்பாலான பூரணமுங் காட்டி
துரியா தீத்ததினுட சுகந் சொல்வாரே -18 - 4
அகத்தியர் பூரண காவியம் — 1000

காமப்பால் - கருஞ்சாரை; கானற்பால் = வெண் சாரை சோமப்பால் = அமுதகற்பம்; துரியாதீதம் = அப்பாலுக்கப்பால்;

மேலும் அகத்தியர் அந்தரங்க தீட்சாவிதி 400இல் அண்டத்தது உச்சியின் நடுவான பீடத்தில் மதி என்ற சித்தம் (ஞானமதியும் மதியான ஞானமும்) நிறைந்துள்ள உச்சி மீதில் ஆயிரத்தெட்டிதழ் என்ற கமல மலரின் உற்பத்தியாகும் அமுதம் பெருகி ஓடும் என்பதை,

நண்ணப்பா சித்தமுள்ள மதிதான் மைந்தா
நடுவான பீடமடா அண்டத்துச்சி
கண்ணப்பா தானிறைந்த உச்சி மீதில
கமலமென்ற ஆயிரத்தெட்டு இதழினுள்ளே
உண்ணப்பா அமர்தமது கண்விட்டோடும் - 35

மேலும் அகத்தியர் பூரண காவியத்தில், மேலான உச்சநிலையிலுள்ள உச்சிமீதில்

Koviloor Digital Library

ஆயிரத் தெண்மலர் இதழுக்குள்ளே உண்டாகும் அமுதரசபானம் பருகி சதாகாலம் பூரணம் என்னும் விண்வெளியை நோக்கி இருப்பாயாக என்று கூறுகிறார். அவரின் அழகான அருமையான மந்திரப் பாடலை அறியுங்கள்.

"காரடா உச்சமென்ற உச்சி மீதிற் கமலாமென்ற
ஆயிரத்தெண் மலருக்குள்ளே
சாரடா அமுதரச பானம் உண்டு
சதாகால் பூரணமாய் விண்ணை நோக்கு - 44 - 3

அகத்தியர் பூரணம் — 1000

மேலும் அகத்தியர் மேற்கண்டவாறு அருள்நிறைவுடையோரின் அறிவுரை ஏற்று ஆயிரெட்டெடிதழின் உள்ளே மதியான ஞானம் ஒன்றி நின்றால் எப்பொழுதும் சச்சிதானசந்த என்ற (சத்து+சித்து+ஆனந்தம்) நிலையை முழுமையாக பெற்று பூரணத்தில் நிற்பாயாக என்பதை,

பாரடா சொல் மொழியின் பயனை பெற்று
பதிவான ஆயிரத்தென் மலருக்குள்ளே
காரடா சார்ந்து மதி ஒன்றாய் நின்றால்
சச்சிதானந்த பூரண மாச்சே - 63 - 4

அகத்தியர் பூரண ஞானம் — 1000

மேலும் அகத்தியர் ஆயிரத்தெண்மலர் பதியான பிரமபீடமாகும். அமுதம் உண்டாகும் அண்ட பீடமாகும். கமலமரிதழ்கள் குவிந்து காணப்படும் பீடமாகும். அவ்விடம் ஆதிசக்தி குருவாய் நின்றகுண்டலியின் பீடமாகும் என்பதை,

"அளிந்து அந்த பதிான பிரம பீடம்
அமுர்த நிலை யானதொரு அண்ட பீடம்
குளிந்த இதழாயிரமாய் குவிந்த பீடம்
குருவான குண்டலியின் பீடந்தானே - 59

அகத்தியர் பூரணம் — 1000

சுந்தரானந்தர் என்னும் சித்தர் பெருமகனார் கமல மலரைப் பற்றி என்ன கூறுகிறார் எனப்தை அறிய நலம்தரும் ஞானத்தின் வழியே சுழினை என்ற பூட்டைத்திறந்து வெளியாகும் பெரும் பொருள் அருளைக் கொண்டு அதன் போக்கு கூறுவோம். சுருளாகக் காணப்படும் ஆயிரத்தெண் மலரின் இதழின் மேலே சோதி வடிவம் கொண்டு அதில் முழுகி நின்றோம் என்பதை,

"பொருள் வெளியா மருள் சேரும்
போக்குஞ்சொல்வோம்
போதமதாற் சுழினையென்ற பூட்டை வெட்டிச்
சுருளிபோல லாயிரத்தெண் மலரின்மேலே
சேரிதயுருக் கொண்டு மனஞ் சொக்கி நில்லே - 5

சுந்தரானந்தர் மெய்ஞ்ஞான சுருக்கம் — 16

கல்லுள்ளி சித்தர் அவரது பாடலில் கமலமலர் கண்டதாகவும் அதன் நிலையை மனதிற் கொண்டு தாயினுட சொரூப நிலைகள் ஆனதை எல்ல புவனங்களில் பிண்டத்தால் ஆனதையும் கண்டதைக் கீழ்வரும் பாடலின்,

"ஆயிரத் தெட்டி தழுங் கண்டேன் - கண்
டந்தந்த சொரூபத் துள் - ளாச்சு- இன்னும்
சகல புவனங்களும் பிண்டத்தி - லாச்சு - 43

என்று கல்லுள்ளி சித்தரின் ஞானப்பாடல் 66இல் ஓதுகிறார்.

மேலும் சட்டை முனி சித்தர் தண்டகம் 80இல் கீழ்வருமாறு ஓதுவதை அறிக. தமது பசியாற்ற பானமுதம் தேவை. பசியெடுக்காமல் இருக்க ஆயிரத் தெட்டிதழைப் பற்றி அறிய வேண்டும். இறையருள் கொண்டு நின்ற தாய் நீ தான் என்றும், அவளே குருவாய் அமர்ந்துள்ள சன்னதியைக்கண்டு ஆழ்நிலை வழிபாடுவான மனம் குவிந்து நினைப்போடு வாழ்த்துவாயாக என்று கூறுவதை,

"பானமுதமுண்டு பசி தீர வேணும்
பசியாமல் ஆயிரத் தெட்டிதழைப் பற்றிக்
கோனருளால் நின்றவளே நீதானென்று
குருவிருக்கும் சன்னதியைக் குவிந்து போற்றி - 80

சட்டைமுனி சித்தர் தண்டகம் — 80

கொங்கணர் நடுகாண்டம் 50இல் 7வது பாடலில் சக்தி மண்டலம் என்னுமிடத்தில் சக்தியானவள் ஆயிரத்தெட்டிதழாம் பாத மலர் கண் குருவாக இருந்து சர்வக்ஞ ஞானம் உணர்த்துவாள் என்பதை,

Koviloor Digital Library

சார்ந்துகுரு வாயிரத் தெட்டிதழாம் பாதம்

சர்வக்கு சக்தி மண்டலந் தானப்பா - 7 என்பார்.

சூரியானந்தர் கற்பஞான் 25இல் 3ஆம் பாடலில்

"வேண சுழி வழி சுகஸ்திரத் தெண்மலர்க்குள்

விரவியது மன்னுமது மவுமமானே - 3 என்று ஓதுகிறார்.

அகத்தியர் ஞான் 15இல் — 6ஆம் பாடலில் ஆறுதலம் கடந்தேன். நற்கமல மலரிதழாயிரட்டெட்டு விட்ட குறையின் தொடர்பால் தோன்றியது. அப்பொழுது மேல் மூலாதாரம் என்வசமானதாக ஓதும் பாடலைக் காண்க.

"சுதியான ஆறுதலந் தாண்டி நின்று

நற்கமல மாயிரத் தெட்டிதழின் மேலே

விதியான விட்டகுறை உதித்த போது

மேல் மூலாதாரம் வசமே யாச்சு - 6 என்கிறார்.

போகர் உபதேச ஞானம் 150இல் 57ஆம் பாடலில் மனோன்மணித் தாயின் குழலையின் எட்டுவிரல் அதன் நடுவில் ஐங்கோணமாகும். அது அகாரம் — உகாரம் — மகாரமோடு நாதவிந்து ஐந்தும் நிற்கும் என்று போகரின் வாசகம் காண்க.

தானான மனோமணியைத் தாண்டியப்பால்

தனித்தோ ரெட்டு விரல் மேலே கேளு

கோனான குருபதந்தான்கூட்டி பாரு

குறிப்பான யிதழா யிரத்தியெட்டு

ஆனான நடுவிலைங் கோணமாகும்

அகாரமாம் உகாரமொடு மகாரமாகும்

நானான நடுமைய நிலையிற்றானே

நாதமொடு விந்து வைந்து நிற்கும் பாரே - 57

மௌன சித்தர் ஞானம் 8&இல் 5&ஆம் பாடலில் ஓர் எழுத்து மகாரமாகும். அது ஆயிரெட்டிதழ் மலர்க்குள் சார்ந்துக் கொள்வாயாக. அதனை யாருக்கும் சொல்லாதே. துவாத சாந்தம் என்னும் பன்னிரெண்டாம் நிலைக்கு மேல் வெட்ட வெளியாயிருக்குமிடம் ஞானம் திகழும் என்பதை.

தள்ளாமல் ஓரெழுத்து மகாரமப்பா

சகஸ்திரதெண் மலர்க்குள்ளாய்ச் சார்ந்துகொள்ளு

விள்ளாதே மேற்கொண்டால் துவாத சாந்தம்

வெட்டி வெளிக்குள்ளான ஞான மாச்சு - 5 என்பதால் அறிக.

சுப்பிரமணியர் ஞானம் 32இல், 4ஆம் பாடலில்

"பூவென்ற ஆயிரத் தெண் மலருக்குள்ளே

பொரந்தி மனந் தறிவாலே யறிந்து வாழே" - 4

என்பது அவர் வாக்காகும். மன அறிவு கொண்டு ஆயிரத்தெட்டிதழ் மலருக்குள்ளே ஆன்மா பொருந்தி நின்று அங்கே வாழ வேண்டுமென்று கூறுகிறார்.

மானிட உடலில் ஆறு தலங்கள் கடந்து ஏழாவது தலம் என்பது புருவ மத்தியாகும். இதற்கு மேல்மூலாதாரம் என்பர். நந்திகுரு இருப்பிடம் என்பர். அந்த மூலாதாரத்தில் சக்தியானவள் வட்டவடிவமாக இருப்பதால் இதற்கும் மேல்குண்டலினி சக்தி என்பர். இதற்கு சக்தி மண்டலமாக சித்தர்கள் கருதுகிறார்கள் மற்றும் காண்கிறார்கள். இதில் அடி — நடு — முடி என்ற நிலையையும் சித்தர்கள் கண்டுள்ளனர். அந்த மூன்று இடங்களிலும் கமலமலர் ஆயிரத்தெட்டு இதழுடைய பூவினைக் கண்டுள்ளனர். அந்த மலரிலிருந்து ஐந்துவகை அமுத கற்பம் பற்றியும் தெரிவித்துள்ளனர்.

ஆயிரெத்தெண் மலரிதழ் கொண்ட இருப்பிடம் பற்றியும் சித்தர்கள் கண்டு தமது மாணவர்களுக்கும் கற்பித்துள்ளனர். அதன் பயனையும் அதனால் வரும் தேகத்தின் மாற்றினையும் கண்டு காட்டியுள்ளனர். எனவே ஆயிரம் இதழெட்டினைக் கொண்ட மலரும் மானிட உடலில் சிவயோகிகள் எடுத்து காட்டியுள்ளனர் என்பதைய அறியும் மானிடர்கள் வியப்படைவர்.

உலகியலில் உழலும் மானிடர்கள் மனை, மனைவி, மக்களோடு உழலும் பிறவியர்களுக்கு உணரும் சக்தி கிடையாது. அறியும் எண்ணம் எழாது. ஆகவே விட்டகுறை தொட்ட குறையான பிறவிச் சுழலில் அறிய வந்தால் மேற்கண்ட செய்தியை தொடர இறையருள் துணை புரியும் என்பதை எடுத்துக்காட்டி இந்த தித்திப்பான விபரம் நிறைவு செய்யப்படுகிறது.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

24. மதி மண்டலம்

உகரம் என்றால் சக்தியைக் குறிக்கும். அந்த அம்மைக்கு ஞானாம்பிகை என்றும் போற்றுவர். இந்த உகரத்திற்குரிய சக்தியானவள் புருவ மத்தியின் திறவுக் கோலாகும். உகார சக்தியான குண்டலினி புருவ மத்திய தலத்தில் வட்ட வடிவமாகக் காணப்படுவாள். இருபுருவ மத்தியில் நிற்கும் குண்டலினியின் சக்திக்கு சாம்பவி என்று பெயராகும் அந்தயம்மை சம்புவினுடன் கலந்து காணப்படுவாள்.

இருவரும் இருக்கும் அத்தலத்திற்கு சாம்பவி மண்டலம் அல்லது மதி மண்டலம் என்பர். இங்குள்ள உகார சக்தியான குண்டலினிக்கு மேல்மூலாதாரக் குண்டலினி என்பர். குண்டலினின சக்தியின் நிலைகள் இடத்துக்குத் தக்கவாறு மாறும்.

மேல்நிலை குண்டலினியான உகார சக்தியான சாம்பவியைச் சுற்றி எட்டு இதழ்கள் கொண்ட கமல மலாராக விரிந்து அழகாகக் காணப்படும். எட்டு இதழ்களிலும் எண் சக்தி திருவருள் அம்மையர்கள் வீற்றுயிருப்பர். இவர்கள் எட்டு பேரும் எண்மகா சித்துக்கள் வழங்க வல்லவர்கள். இவர்களின் ஒளிச்சுடர் பன்னிரண்டாம் (துவாத சாந்தம்) நிலையைக் கடந்து வண்ணொளி பரவி நிறைந்து நிற்கும்.

பிறவியின் சஞ்சித வினைகள் நீக்க வல்லது. இதன் கண்ணே சலம் என்னும் அமுத மண்டலமாகும். இந்த மதிமண்டலம் விசுத்தி மேல் ஆக்கினையின் கீழ் இருப்பிடமாகும். இனி இதனைப் பற்றி சிறுஆய்வு செய்வோம். இச்செய்தியைப் பற்றி சித்தர்கள் என்ன கூறியுள்ளனர் என்பதை அவர்களின் துணையுடன் அறியலாம்.

மதி மண்டலத்தின் வேறு பரிபாசை பெயர்கள்:

1. ஆவிக்கமலம் 2. சிரமுக வட்டம் 3. கைச் சதுரம் 4. முக்கூடம் 5. முகடு 6. சகசிர அறை 7. குளம் 8. கபாலக் குகை 9. கூம்பு 10. வட்டக் கழல் 11. பொது வித்து 12. சிற்சபை 13. சதாகயம் 14. சிதம்பரம் 15. பொன்னிடை வட்டம் 16. விண் 17. தாள் 18. மந்திரம் 19. மேரு 20. பிரமரந்திரம் 21. பங்கயம் 22. சந்திரபூ 23. ஆக்ஞை 24. உச்சி தொளை 25. அடுக்கு தாமரை 26. சாணாகம் 27. பண்டாகம் 28. பூ 29. கண் 30. சகஸ்ராரம் 31. ஆயிரத்தெட்டுத் தாமரை 32. கமல மலர் 33. முண்டக மலர் 34. சந்திர பூமி என்றெல்லாம் ஆன்மிக சித்தர் நூல்களில் குறிக்கப்படுகிறது.

இதனை வள்ளல் பெருமான் அருள்மிகு அடிகளார் அவர்கள் 'சோதி வளநாடு' என்று கூறுவார். இதில் பொருந்தியுள்ள ஒளிச்சக்தி ஆயிரங்கதிர்களோடும், ஆயிரம் முகங்களோடும், இயங்கி வருவதை ஆயிரத்தெட்டு இதழ் என்று இயம்புகின்றனர். இதனை ஆயிரத்தெட்டு மாற்று பொற்கோவில் (ஆணி பொன்னம்பலக்காட்சி) என்பர் நமது அடிகளார்.

கோவில்களில் ஆயிரங்கால் மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளதை மதி மண்டலத்தில் காணப்படும் தத்துத்தைக் கொண்டு அமைக்கப்ட்டுள்ளது. மானுட உடலின் மெய்களை (தத்துவங்களை) உள்ளடக்கிய முந்தியக் காலத்தில் ஞானிகள் கோவில்கள் அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர். புத்தர் சிலை வடிவ தலை அமைப்பில் மயிர் சுருண்டுச் சுருண்டு தாமரை மடல் போல் அமைந்திருப்பதும் ஆவி கமல பிரமரந்திரத்தைக் குறிக்கும் சகஸ்ராரத்தை குறிக்கிறது. சிவபெருமான் மதியைச் சூடியிருக்கிறான் என்பதும் பிண்டமாகிய மானுட உடம்பில் மதிமண்லகத்தில் இறையருள் நல்கும் கடவுள் இருப்பதை குறிக்க வந்ததே ஆகும்.

இது காறும் பொதுவான செய்தியைக் கூறிவந்தோம். இனி மதி மண்டலத்தைப்

Koviloor Digital Library

பற்றி சித்தர் பெருமக்கள் கூறும் செய்திகளை அறிய முயலுவோம். இதைப்பற்றி திருமூலர் கூறும் திருமந்திரப் பாடலைக் காண்போம்.

"சந்திர பூமிக் குடன் புரு வத்திடைக்
கந்த மலரில் இரண்டிதழ்க் கன்னியும்
பந்த மிலாத பளிங்கின் உருவினள்
பந்தம் அறுத்து பரங்குரு பற்றன்றே - திருமூலர்

3000த்தில் ஓதுகிறார். இதன் பொருள் என்ன வெனில், திங்கள் மண்டலத்தினோடு கூடிப் புருவ நடுவாக இருக்கும் நறுமணம் கமழும் இரண்டிதழ்த் தாமரை மலரை நெருங்குதல் வேண்டும். நெருங்கி அங்கு வீற்றிருக்கும் திருவருள் ஆற்றலாங் கன்னியைக் (சாம்பவியை) காணுதல் வேண்டும்.

அத்திருவருளின் கன்னி பளிங்கின் வண்ணத்தவளாவள் திருவருளின் பேறலருந் துணையால் சிவஞான மெய்க் குருவின் (நந்திகுருவின்) திருவடியினைப் பற்றுதல் சிறந்தது. அதுவே பெரும் பேறாகும். (புருவ நடு — ஆணைகள் பிறப்பிக்குமிடமாகும். பரங்குரு பந்த மறுத்தபரம் பொருளாகும்.

கடைப்பிள்ளை சித்தர் தாம் அருளிய ஞானத்தண்டகம் 51இல் 22ஆம் பாடலில்

"பதிவான மதி வீடு புருவ மத்தி" — 22

என்றும் கூறுகிறார். அதாவது உயிர் ஆன்மா நிலைக்கு உயரும் போது மதி மண்டலம் என்னும் புருவமத்தியல் பதிவாகும் என்பதாம். மேலும் போகர் உபதேசஞானம் 120இல் 12ஆம் பாடலில், ஆயிரம் இதழ் கொண்ட கமலமலரின் சேர்ந்து சந்திர மண்டலத்தில் புகுந்து அறிவெனும் மனத்தின் கண் நின்று ஆனை முகனுடன் வல்லபையான குண்டலினியைத் தாக்கி அந்த மலரினை கொய்தல் வேண்டும் என்பதை,

சேரவே சகஸ்திர முண்டகத்தின் பூவைச்
சேர்ந்தேறிச் சந்திர மண்டலத்திற் புக்கி
ஆரவே அறிவென்ற மனதாற் கொய்து
ஆனை முகன் வல்லபை குண்டலியைத் தாக்கு - 12
போகர் உபதேச ஞானம் — 120

மதி மண்டலம் சூரிய மண்டலத்துக்கு அப்பால் உள்ளதை நீ அறிய வேண்டும். அது சோதி வீசும் மௌன இல்லமாகும். அதைப் பற்றி கூறுவதரிது. இருந்தாலும் சொல்கிறேன். அவ்விடத்தில் நீ 'அங்' என்று சுழிமுனை வாசியுடன் தாக்கு. அதனையே மனதால் நினை. அப்பொழுது அவ்விடத்தில் சோதி கோடி கூடி ஒளி விடும். அந்த சோதியின் விளைவால் நமது உடல் அருபாரூபமாக தோன்றும். அவ்விடம் எழுத்துக்கள் தோன்றும் இடமாக மறைந்து காணும என்பதனை,

காணுகின்ற சூரிய மண்டலத்துக்கப்பால்,
கலை மதியாஞ் சந்திர மண்ட லத்தைக் கேளு
தோணுகின்ற சோதியடா மௌன வீடு
சொல்லரிது சொல்லுகிறேன் அங்கென்றூணு
பேணியே செபித்திடவே சோதி கோடி
பிரகாசமாயிடுங்காண் பெருமை பேசார்
ஆணுவங்க னற்றதடா அருபாரூபம்
அட்சரங் ஏற்ற விட மறையக் கேளே - 20
காகபுசண்டர் மெய்ஞானம் — 80

யூகி மகாமுனிசித்தர் தத்துவஞானம் 100இல் 74ஆம் பாடலில் விசுத்தியின் மேலாகவும் ஆக்ஞையின் கீழ் விளங்கும் சந்திர மண்டலத்தைப் பாரு. தூராதி தூரம் என்று கூறும் துவாத சாந்தத்தின் நிலையின் கண் சுடரொளியாக கதிரொளியாக பரவி நிற்கும் என்பதனை கீழ்வரும் சித்தரின் பாடலை ஊன்றி கவனித்து அறிக என்பதை,

வேரென்றால் விசுத்தி மேலாக் கிணையின் கீழே
விளங்கி யெழுஞ் "சந்திர மண்டலந்தான் பாரு"
தூரென்றாற் றுவாத சாந் தத்தின் மட்டும்
சுட ரொளியாய்ப் பிரகாச மாகி நிற்கும் - 74

என்று அப்பெருஞ்சித்தர் ஓதுகிறார்.

கொங்கணர் என்ற பெருஞ்சித்தர் தாம் அருளிய ஞான வெண்பா 50இல் 44ஆம் பாடலை ஊன்றி கவனிக்கவும். அப்பாடலில் மதி மண்டலாமானது கண்டத்தின் மேலாகவும் கபாலத்தின் கிழாகவும் துண்டத்தின் மேலாய் விளங்கி நிற்கும். மண்டபத்தில் வட்டமதி தானும் விளங்கும். வயதும் செல்லாது. எண் மகா

Koviloor Digital Library

பெருஞ் சித்துகள் வழங்கும் இடமும் அதுவேயாகும் என்பதை கொங்கணர்.,

கண்டத்தின் மேலாக கபாலத்தின் கீழாகத்
துண்டத்தின் மேலாய்த் துலங்குதே - மண்டபத்தில்
அட்மா சித்து மது - 44 - என்பது கொங்கணரின் ஞானம் கூறுகிறது.

இனி ஆதி அகத்தியர் மதி மண்டலத்தைப் பற்றி சற்று விரிவாக கூறியுள்ளார். அவருடைய பாடலை இனி நாம் படித்து அறிந்து உணர்ந்து நினைந்து பார்ப்பது சிறப்பாகும். அவருடைய பாடலை இனி பார்ப்போம்.

பண்ணப்பா ஆதார பூசைப் பண்ணி
பதியான முச்சுடரின் தியானங் கேளு
நண்ணப்பா புருவமதில் மனக் கண் சாற்றி
நாட்டமுடன் அங்கிலிநங் கென்றே தான்
உண்ணப்பா லலாட விழிக கண்ணினின்று
உத்தமனே நூறறெட்டு உருவே செய்தால்
கண்ணப்பா தான் குளிர மதிதானின்று
காணுமடா பூரணச் சந்திரனைப் பாரூர - 73

பாரப்பா பூரணச் சந்திரனைக் காணில்
பாதாதிகேச முதல் பதிவாய் மைந்தா
நேரப்பா குளிர்ச்சி வெகு குளிர்ச்சியாகும்
நேமமுட னன்னேரும் நினைவாய் மைந்த
தேரப்பா குருபதியில திரமாய் நின்று
செகத் தோர்க்கு விபூதியை நீ கடாட்சித்தாக்கால்
வீரப்பா கொண்ட தொரு சுரமுந்தீரும்
வினையான வல்வினையும் விட்டுபோமே - 74

போமப்பா சகல பிணி ரோக மெல்லாம்
பூரணச் சந்திரனுடைய பிறப்பைக் கண்டால்
காமப்பால் காணற்பால் கருணை தங்கும்
கலையான வாசியது கடக்காது அப்பா
சோமப்பால் சொலிக்குமடா அந்த பாலை
அந்த முடன் நித்தியமுங் கொண்டாயாகில்
தாமப்பா தன்னிலையே தான்தானாருந்
தானான ஆதாரமூலம் பாரே - 75

ஆச்சப்பா சோதி வெகு காந்தியாகும்
மகார வவ்வேளை யறிவாய் நின்று
மூச்சப்பா நிறைந்ததொரு வாசியாயே
முனையான சுழிமுளையில் வாசிநாட்டி
பேச்சப்பா தானிருத்தி மவுனமாக
பெருமையுடன் சிவயோகத் திருந்தாயாகில்
போச்சப்பா அபமிருந்து அகன்று போகும்
பொன் னொளிவு தேக காந்தி ஆச்சு பாரே - 76

அகத்தியர் பூரணம் — 1000

அகத்தியர் கூறும் முதல் பாடலில் ஆதார வழிபாடு செய்க. முச்சுடர் கூடும் தலத்தின் தியானம் செய்க. புருவநடுத்தலத்தில் மனக்கண்ணால் கண்டு அதில் ஒன்றி, "அங் கிலி நங்" என்ற மந்திரம் நூற்றெட்டு முறை சிந்தனை செய்தால் இலலாட விழிக் கண்ணின்று குளிர்ந்த மதியான சந்திரன் காணலாம்—

புருவ மத்தியின் கண் முழுகலை நிறைவுப் பெற்ற சந்திரனைக் கண்டால் தலைமுதல் அடிவரை உமது உடல் குளிர்சசி மிக குளிர்ச்சி பரவும். ஒழுக்கமுடன் எந்நாளும் இருக்க வேண்டும். நந்தி குருபதியை கண்டு எச்சமயமும் சிந்தனை செய்து உலகத்தாருக்கு வெண்பொடி வழங்கினால் சுரம் குணமாகும் தீவினைகள் எல்லாம் மாய்ந்து விலகும்.

சகல பிணிகள் எல்லாம் குணமாகும். முழுநிலைவின் பிறப்பைக் கண்டால் காமப்பால், கானற்பால் தயவு மிகவும் பதியும். கலையான வாசியானது அவ்விடத்தை விட்டு விலகாது. பூரண நிலவின் அமுதப் பால் சொலிக்குமடா. அதனை உண்டால் நீ நீயாகவே இருப்பாய். இதனால ஆதார மூலத்தை கண்டு பார். மதி மண்டல சோதிச்சுடர் வெகுவாக காந்தி மீறும் மகார என்னும் நிலையை அப்பொழுது அறிவாய். மூச்சு என்னும் வாசி சுழிமுனையுடன் நாட்டம் கொண்டு அதில் ஆழ்நிலை மவுனம் கொண்டு சிவயோக நிலையில நின்றால் அபமிருத்து என்னும் கேடுகள் விலகி விடும். உமது உடல் ஒளி தேகமாக காந்த சக்தியுடன் சுடர் வீசும் என்பதாம்.

சட்டை முனி சித்தர் பெருமான் வாத சூத்திரம் — 200இல் ஆக்கினையான சந்திரன் தன் வீடாகும். அதன் நிலை வட்டமாகும். சக்தியமையர்கள் எண்மருடன் சம்புவும் உடன் நிற்பார்கள். திருவருள் சக்தி அம்மையர்கள் எண்மரின திருப்பெயர்

Koviloor Digital Library

கூறுகிறேன். அவர்கள் 1யாமளை, 2சாமளை 3.உன்மனை 4.உன்மனாதி 5.மாயோமி 6.வியோமரூபி 7.நிர்மளை 8.சக்தி ஆக இவர்கள் எண்மராவர். இவர்கள் சந்திர மண்டல சக்தியான சாம்பவியின் உடன் உறைபவர்களாவார்கள்.

நமது வடலூர் வள்ளல் இராமலிங்க அடிகளார் மதி மண்டலத்தில் சுரக்கும் அமுதம் எடுத்து உண்டதாகவும், பதியான மண்டலத்து பேரரசு, வான கூத்தரசன் நிதிநிறைவா நவநேயமாக்கும தமது கூத்தரசனான சிவமே அதன் திறவு கோல் நந்து கதவை திறக்கவும் என்று வேண்டுகிறார். அவர் ஓதும்பாடல்,

மதி மண்டல லத்தமுதம் வாயார உண்டே
பதி மண்டல லத்தரசு பண்ண - நிதிய
நவநேய மாக்கும் நடராசனே யெந்
சிவனே கதவைத் திற - அருட்பா - 3832

சிவமே அருளாக கருதி வழிப்பட்ட நமது வடலூர் பெருமான் அண்ட அற்புத அனுபவததை ஓதினார்.

இதுகாறும் மதிமண்டலம் பற்றிய செய்தியும், அதன் இருப்பிடமும், அங்குள்ள சக்திகளின் நிலையையும் அதனால் பெற்ற பெரும் பயனும் அங்கு பெற்ற அமுதத்தின் வகைகளும் அதனை உண்டால் வரும் தேக மாற்றங்களின் விரிவான செய்திகள் வாசிதது உணர்ந்திருப்பீர்கள். மனிதன் முயற்சி செய்தார் சித்தர்கள் அடைந்த பெரும் பேற்றை நாமும் பெற்று ஏகாந்த இன்பம் பெற்று மகிழவுறலாம் என்பதை தெரிவிக்கும் இனிய சுவையான செய்தியை நிறைவு செய்கிறோம்.

திருச்சிற்றம்பலம்

25. சோதித் தம்பம் (அ) ஓங்கார கம்பம்

சுத்தம் என்றால் இயற்கை என்பர். இயற்கை என்றால் ஞானமாகும். ஞானம் என்றால் பரிபூரண அறிவு என்பர். இதற்கு குரு பூரண ஞானம் என்பர். சுத்த இயற்கையே சுத்த ஞானமாகும். சுத்த ஞானத்திற்கு "சித்" என்று கூறுவர். "சித்" நிலை அடைந்தவன் "சித்தன்" என்ற பதவி பெறுகின்றான். "சித்" என்ற ஞான நிலை பெற்ற சித்தன் ஞான ஒளியில் "அருட்பெருஞ் சோதி வடிவம்" பெற்று தெய்வமாக வாழ்கின்றான். மேற்கண்டவர்கள் என்றும் எப்பொழுதும் எவ்விதத்திலும் மரணம் என்ற நிலை நீங்கி அற்புத வாழ்வு பெற்று விளங்குகின்றான். இப்படி சாகாமல் இருப்பதற்கு தனிச்சிற்ப்புக் கல்வி உண்டு. அதற்கு "சாகாக் கல்வி" என்பர். இதனை மாபெரும் சித்தர்,

"சாகா மலிருப்பதற்கு கல்வியுண்டு
சாக்காடு கொள்வதற்கு விபரமுண்டு" - 238

என்று ஆறாயிரம் கோடி கடந்து இன்னும் வாழ்ந்துக் கொண்டு வரும் மாபெரும் சித்தர் காகபுசண்டர் பெருநூல் காவியம் 1000த்தில் ஓதியுள்ளார். மேலும் திருமூலர் திருமந்திரம் 3000த்தில் 2068ஆம் பாடலில்,

"இக்காயம் நீங்கி யினி யொரு காயத்திற்
புக்கும் பிறவாமற் போம் வழிநாடு மின்" - 2068

என்று ஓதுவது கூர்ந்து கவனிக்கத் தக்கது.

மானிடர்கள் சாவதற்கு விரும்புவதில்லை. ஆனால் நாள்தோறும் சாவைநோக்கிச் செல்கின்றான. சாகாமல் இருப்பதற்கு எவ்வித முயற்சியும் எடுப்பதில்லை. உலகில் மனிதன் சாகாமல் இருப்பதற்கு கோடியில் ஒருவன் தான் விரும்புகிறான். ஆனாலும் அவனும் ஞானவியல் பாதையிலிருந்து தடுமாறி விடுவதால் இறப்பைத் தழுவுகின்றான்.

ஒருவன் தன்னறிவைக் கொண்டு தன்னை அறிந்து ஞான அருளியல் வழியல் கடுமையான உழைப்பாலும் தீவிர முயற்சியாலும் பயிற்சியாலும் சாகாக்கலை ஞானம் பெறத்தக்க ஞான குரு கிடைக்கப் பெற முடியாது தடுமாறுகின்றான்.

Koviloor Digital Library

இந்த சாகாக்கலையை கற்பிக்கும் இறைவன் தென்னவனான ஆதி குரு தட்சாணாமூர்த்தியேயாம். இவரை நாளும் வழிபட்டு வந்தால் நமக்கு கிடைக்கும் பெரும் ஆன்ம ஊதியம் மரணமில்லா பெரு வாழ்வாகும். ஆதி ஞானகுரு தட்சணாமூர்த்தியே இன்று பெரும் மக்கள் வழிபட்டு வரும் தெய்வமானவர் முருகனாவார். இவருடைய முதல் மாணவர் ஆதிகுரு அகத்தியர் ஆவார்.

மானிடர்கள் தன்னறிவால் தன்னை உணாந்து அறிந்து புரிந்து அறிவியல் வாழ்கையில் நுழைந்து சாகாக்கல்வி கற்கும் போது அவன் தன் உடலிலுள்ள அமுதம் உண்ணும் வாய்ப்பை பெறுகின்றான். அமுதம் பருகும் போது உயிர் பல வேதியல் மாற்றத்தால் ஆன்ம நிலை பெற்று அந்த ஆன்ம நிலையை உயர்த்திக் கொள்ளும் போது ஞானான்மா நிலையில் உயர்ந்து சோதித் தம்பம் எட்டும் நிலை பெறுகின்றான். இந்த சோதித் தம்பம் பற்றி நாம் அறிவது மிகவும் அவசியமாகும். இந்த சோதித் தம்பத்திற்கு ஓங்கார கம்ப நுனியென்றும், கொடி மரம் என்றும் சித்தர்கள் கூறுகிறார்கள்.

மானிட உலகில் மூலாதாரம் ஆரம்பித்து பிரமரந்திரம் வரை செல்லும் சுழிமுனை நாடியைத் தனக்குள் பெற்ற முதுகெலும்பைத் தான் முள்ளத்தண்டு, முதுகந்தண்டு (Spinal column, Vertebral column) என்று கூறுவதைத்தான் மேருதண்டம், வீணாத் தண்டு, பிரம்ம தண்டம் என்று சித்தர்களின் யோக நூல்களில் கூறப்படுகின்றன. சுழிமுனை நாடியை "சிவாகார பூரண ஸ்தம்பம்" என்றும் "ஜோதிஸ்தம்பம்" என்று வள்ளர் பெருமான் தம் அருட்பா உபதேச பகுதியில் மக்களுக்கு எடுத்துரைக்கிறார்.

இனி மேற்கண்ட சோதிஸ்தம்பம் என்ற செய்தியை சித்தர்கள் என்ன என்று கூறுவதை அவர்களின் ஞான அனுபவத்தையும் அனுபூதியும் படித்தறியலாம். நமது கடுவெளி சித்தர் என்பவர் சிவராஜ யோக ஞான நூல் 18இல் காணும் அவருடைய பாடலை ஆழ்ந்து சிந்தித்து அறிக.

"மார்க்கந்தான் காணமன "மகார பீடம்"
மருவி நின்ற விந்துவடா வட்டமாகும்
தீர்க்கமுள்ள விந்துவெனு மகாரந் தன்னைத்
தேர்ந்துபா "ரோங்காரக் கம்பமாகி"
காக்கவே "கம்ப நுனி" மேலப்பா
கனமாகி நின்ற தொரு வன்னி தன்னை
பார்க்கவது ஆயிரத்தெண் மலருக்குள்ளே
பாலகனே அமுதமதற்குள்ளே பாரே

கடுவெளி சித்தர் சிவராசயோகம் — 18

மகார பீடம் என்றால் ஓங்கார பீடமாகும். அதனை மருவி நின்றநிலை விந்து என்பார். விந்து என்பது வட்ட நிலையாகும். மகாரம் என்ற ஓங்காரம் கம்பம் போல் உயர்ந்து நிற்பது வள்ளி என்னும் சோதி நிலையாகும். இந்த நிலை ஆயிரத் தெண்மலர்க்குள்ளே அமுதம் என்ற உயர்ந்த பொருள் இருப்பதை அறிக என்பதாம்.

மேலும் கடைப்பிள்ளை மவுன ஞான தீட்சா 12இல் கீழ்வரும் பாடலை படித்தறிக.

"காணப்பா மகாரத்தைச் "சுழினை தன்னிற்
கண்ணறிந்து "சுழி முனையில்" மங்கொன்றாட்டி
தோனப்பா வாசி கொண்டு "ஊதிப் பார்க்க"
"துவாத சாந்த்ந்" தனிலே துலங்கி நிற்கும்
பேணப்பா யிந்தவிதம் அறிந்து கொண்டு
பெருமை விட்டு உரிமையதாய்த் தியானந் செய்தல்
தோணப்பா சொல்லுகிறேன் மூன்று மொன்றாய்த்
துலங்கி நின்ற "ஓங்கார கம்பமாச்சி" - 4

ஆச்சப்பா "கம்பமென்ற "ஓங்காரந்தான்"
ஆதி தொடுத் தந்தம் வரை" ஒன்றாய் நின்று"
காச்சப்பா மூச்சதற்கு உயிராய் நின்ற
கருணைச் சரமே காட்சர மதாச்சு" - 5

கடைப்பிள்ளை மவுன தீட்சா — 12

மங் என்னும் திருமந்திரத்தை சுழிமுனையில் வாசியை ஏற்ற வேண்டும். அந்த வாசியை ஊதினால் பன்னிரெண்டாம் நிலையில் போய் நிற்கும். இப்படி நாம் அறிந்து பெருமையாக பேசுவதை விட்டு விட்டு உரிமையுடன் ஆழ்நிலை தியானம் செய்தால் சோமன்

Koviloor Digital Library



சூரியன் — வன்னி மூன்றும் ஒன்றாக இணைந்து ஓங்கார கம்பமாக நெடுக உயர்ந்து சோதி வடிவமாக நிற்கும்.

நெடுக உயர்ந்து நிற்கும் கம்பமே ஓங்காரமே ஆகும். இது ஆதி முதல் அந்தம் வரை ஒன்றாக நிற்கும். அதற்கு வாசியென்னும் மூச்சே உயிராக நின்று அதுவே ஏகாட்சரமாய் நிற்கும் என்பதாம்.

சுப்பிரமணியர் சிவம் யோக ஞானம் என்னும் நூலில் ஓங்காரம் என்பது ஆதி மகா மூலம் என்றும் அதனுள் ஆகாரம் உகாரம் என்று இனங்கண்டு அதன் அருளை மானிடன் பெற்று அடுத்துச் சென்று அமுதம் உண்டு வாழவேண்டும் என்றும் ஓதப்படுகின்றது. இப்பாடலைக் கண்டு இன்புறுங்கள்.

"ஓமென்ற பிரணவமே அண்டவுச்சி
உத்தமனே ஆதி மகா மூலமாகும்
ஆமென்ற அகாரமுடன் உகாரங்கண்டு
அருளான அருளை யுந்தானடுத்துச் சென்று

என்று ஓதப்படுகிறது.

சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் என்னும நூலில் சுழிமுனை என்னும் நாடியே ஆதிமுதல் அந்தம் வரை கம்பமாகியும் அதுவே மெய்ப்பொருளாகவும் சோதி வடிவமாகி மேல்நோக்கி நிற்கும். இந்த வகையான மூலமெனும் பாதங்கள் மற்றயிடங்களில் விரைந்து காணவும் என்றும், மற்றொரு பாடலில் அண்ணாக்குக்கு மேல் நெடுக நிற்கும் "கொடி மரம்" ஆதிமகா பொருளின் "சிரசு" நிற்கும். அதனை நீ வேறு இடங்களில் அலைந்திடாமல் அந்த "சிரசே" வேகாத தலை என்று அறிந்து அதனை நீ விரும்பி பார்க்கவும் என்றும் கூறுகிறார். இதன் பாடலை மகிழ்ச்சியுடன் கண்டு இன்புறுக.

"மெய்த் தொழியுஞ் "சுழினையோ கம்பமாகி"
மெய்ப் பொருளாஞ் "சோதி யென மேவி நிற்கும்"
இவ்வகையே மூலமெனும் பாதந்தன்னை
யிரு நேர மற்றிடத்தே யிறைஞ்சிக் காணே - 7

"ஆணப்பா அண்ணாக்கு "மாத்துக் கப்பால்"
"ஆதி வஸ்துதின் சிரசு நிற்கும்" அறிந்து பாரு
வீணப்பா திரிந்து மிக அலைந்திடாமல்
வேகாத தலையிதுவாயம் விரும்பிப் பாரே - 5

சுப்பிரமணி ஞானம் — 33

கணநாத சித்தர் தாம் எழுதிய ஞானம் உபதேசம் 16இல் சுழிமுனை நாடியே ஆதி முதல் அந்தம் வரை "ஒற்றைத் கொம்பாக" நிற்கும் என்றும் கூறுவது காண்க.

"நேரப்பா "சுழிமுனையோ னொற்றைக் கொம்பன்"
நினைவான வல்லபையோ யெண்ணக்காரி - 2

கணநாத சித்தர் ஞானஉபதேசம் — 16

தட்சணா மூர்த்தி சுத்த ஞானம் 13இல் 2ஆம் பாடலில் சுழிமுனை நடுவே முளைத்தெழுந்து ஓங்கார கம்பத்து உச்சியில் வியத்தகு விநோதங்கள் ஆகாயமாக அமர்ந்த மேடையே, அகார பீடமாகும். இதன் நிலையை பராபரம் என்னும் நிலையுடையதாம். அதனை நீ அறிய வேண்டும் என்பதை அவர் கூறும் பாடலை ஊன்றி ஓதுக.

"விதி முறையாற் சுழி நடுவே முளைத்தெழுந்து
விளங்கி நின்ற "ஓங்காரக் கம்பத்துச்சி"
ஆதி விதங்கா ணாகாயம் "அகார பீடம்"
அமர்ந்த பரா பரத்தினிலை யறிய வேண்டி - 2

என்று ஓதப்படுகிறது. மேலும் திருமூலர் சோடச ஞானம் 16இல் முதல் பாடலில் ஆறு திரை என்னும் வீதியை கடந்து கண்டேன் அங்கு நந்தியின் அடியான கொடிக் கம்பமீது பாதி மதி சூடிய வாழி என்னும் பாதமலர் பணிந்து உணர்ந்து

Koviloor Digital Library

வணங்கி நின்றேன் என்று ஓதும் பாடலைக் கண்டு மனமகிழ்ச்சியடையுங்கள்.

"வீதயென்ற ஆறு தெரு தன்னைக் கண்டேன்
வீற்றிருந்தேன் "நந்தியடிக் கொடிக் கம்பத்திற்
பாத யென்ற "மதி சூடி யிருந்தவாமி"
பாதமலர் தன்னை பரிந்து பணிந்திட்டேனே - 1
திருமூலர் சோடச ஞானம் — 16

திருமூலர் அவர்கள் ஓங்கார கம்ப உச்சியின் மலரிலுள்ள திகட்டுமளவு யமுதத்தை அள்ளியுண்டு முக்கண்ணுடைய கால கண்டனின் நடைமுறைகள் கண்டேன். அந்த ஓங்காரக் கம்பமீதில் உயர்ந்து நின்ற பூரணத்தின் சோதிவடிவமும் அதன் சுடரும் கண்டேன் என்று ஓதுகிறார். அவரின் பாடலைக் காண்க.

"திகட்டுவா யமுதத்தை யள்ளி யுண்டு
திரு நேத்திர காலகண்டர் செயலுண்டாகும்
உகட்டுவா "யோங்காரக் கம்பமீதில்"
ஓங்கி நின்று பூரணத்தி னொளியைக் காணே - 13
திருமூலர் சோடச ஞானம் — 16

அகத்தியர் பரிபூரணம் 1200&இல் சோதி தம்பம் பற்றிய அனுபவத்தை விளக்குகிறார். அதனைக் கண்டு அனுபவிப்பது நமது கடமையாகும்.

"உச்சமென்ற மாளிகையில் நிறுத்திப்பார்த்தால்
ஓங்காரக் கம்பநுனி "மிச்ச மாச்சே - 453

ஆச்சப்பா மிச்சமதாய் நின்ற மிச்சம்
அண்டமென்ற சுழினையிலே நின்று பார்த்தேன்
காச்சப்பா கம்பநுனி மிச்சம் பார்த்தால்
"கம்பநுனி கற்பூர தீபம்" போலே
போச்சப்பா பேசாத சோதியாச்சு
பிரணவமாய் நின்ற தொரு சோதித்தாயை
மூச்சப்பா நிறைந்த திருவாசியாலே
முனை கண்டு "கம்பமதில் யேறினேனே - 454

ஏறினேன் சவுதகிரி வட்டமேறி
ஏகாந்த வெளியொளியைப் பார்த்து மைந்தா
மீறினேன் "அகாரமதின்" செயல்தன்னால்
மின்னொளியி னமுர்தரச பானங்கொண்டு
தேறினேன் சாகாத கால்மேல் நின்று
தெளிந்து கொண்டு போகாத புனலைக் கண்டு
ஆறினேன் வேகாத தலையைக் கண்டு
அடங்கினேன் முப்பொருளு மடக்கினேனே - 455
அகத்தியர் பரிபூரணம் 1200.

மாளிகை என்பது நமது உடலாகும். நமது உடலில் மேல்நிலை வரை கபாலமாகும். அது உச்சம் என்று கூறப்படும் அந்த கபலாம் என்னும் உயர்ந்த நிலை ஓங்காரம் நிலை வரும். அந்த ஓங்காரமே கீழ்மூலத்திலிருந்து மேல்நிலை உச்சம் வரை பார்க்கும்போது கற்பூர தீபச்சோதி கண்டேன். அந்த கற்பூர தீபச் சோதியே ஓங்கார வடிவமாய் நின்ற சோதித் தாயை என்னும் அம்மையவள் திருவாசியாலே சுழிமுனை நடு கம்பம் கண்டு அதில் யேறினேனேன் என்று கூறுகிறார்.

சவுதகிரி என்னும் வட்டமான ஏகாந்த வெளியொளியை பார்த்து அதன் மேல் உள்ள அகாரம் என்னும் அருள்நிலை உணர்ந்து அதன் மின்னொளியில் ஆயிரத்தெண் மலரின் வழிந்து வரும் அமுதரசம் பானம் உண்டு மகிழ்ந்து சாகாத கால் என்னும் இறைவியின் அருளையும் (வகரம்) பெற்றுத் தெளிவடைந்தேன். அங்குள்ள் போகாத புனல் என்னும் அமுதம் உண்டு இளைப்பாறினேன். வேகாதத்தலை என்னும் பூரணத்தில் ஒடுங்கினேன் என்று கூறுவாரானார்.

இனி வடலூர் வள்ளல் பெருமானின் அனுபவங்களையும் நாம் அறிவது அவசியமாகும். அவர் உபதேசப்பகுதியில் கீழ்வருமாறு ஓதுகிறார்.

"பிரமஸ்தானந் தொடங்கிச் சுத்த சிவஸ்தானம் வரையில் ஒரு ஸ்தம்பம் இருதயம் வரை வாயுநாடி வண்ணமாயும், அதற்குமேல் அக்கினி வண்ணமாயும் இருக்கும் இது அடியிற் பருத்து வர வர நேர்மையாய், இந்திரிய கரணங்களுக்குப் புலப்படாமல் அணுவுக்கணுவாய், ஜீவனுக்குப் புலப்படாமல் அகண்டமாய், ஆன்மக் காட்சியில் அருகிக் தோன்றுவாய், இரண்டற நிற்கும்.

இதற்கு "சிவாகார பூரண ஸ்தம்பம் மென்று பெயர். உபதேச பகுதி — 54

1. படிக மேடை, 2. ஆயிரத்தெட்டுக்கமல

Koviloor Digital Library

இதழ், 3. ஓங்கார பீடம், 4. குண்டலிவட்டம், 5. ஜோதிஸ்தம்பம், 6. சுத்த நடனம் இவற்றை அனுபவத்தால் அறிக. இஃது நிராதார லட்ணம் — உபதேசம் பகுதி — 103

வள்ளல் பெருமான் அனுபவித்த ஜோதிஸ்தபத்தின் செய்திகளும் அனுபூதிகளும் அவர் இயற்றிய திருவருட்பாவிற் பலவிடங்களில் இடம்பெற்றுள்ளது. என்பதை எடுத்துக்காட்டு சில அருட்பாக்கள் காண்க.

வெற்புறு முடியில் "தம்ப மேல் ஏற்றி"
மெய்ந்நிலை அமர்வித்த வியப்பே - 3881

பொன்வணப் பொருப்பொன்றது சகு ணாந்தம்
போந்தவான் முடியதாங் கதன் மேல்
மண் வணச் "சோதித் தம்பம்" ஒன் றதுமா
வயிந்துவாந் தத்ததாண் டதன் மேல்
எவ்வணச் சோதிக் கொடிபர நாதாந்
தத்திலே இலங்கிய ததன்மேல்
தன்வணம் மணக்கும் ஒளிமலராகத்
தழுவினன் திருவடி நிலையே - 3928

"தம்பத்தில் ஏற்றிய" ஜோதி - அப்பால்
சார்மணி மேடைமேல் நான் வைத்தத் ஜோதி - 4573

மேரு வெற் புச்சியின் பாலே - நின்று
விளங்குமோர் "தம்பத்தின்" மேலுக்கு மேலே - 4597

மேற்கண்டபடி பல இடங்கில் பலவாறு அருட்பாவில் பாடியுள்ளார் என்பதை அறிய வியப்புக்குரியதேயாகும்.

அழுக்கண் சித்தர் பெரமான் பாடிய ஒரு பாடலையும் கூர்ந்து கவனிக்கத்தக்கது.

"மூலப்பதியடியே மூவிரண்டு வீடதிலே
கோலப் பதியடியோ குதர்க்கந் தெருநடுவே
சாலப் பதிதனிலே தனலாய் வளர்ந்த கம்பம்
மேலப் பதி தனிலே என் கண்ணம்மா
விளையாட்டைப் பாரேனோ!

அழுக்கண் சித்தர் பாடல்கள் — 200

மானிடப்பிறவி பெற்றவர்கள் ஒவ்வொருவரும் தன் அறிவைக் கொண்டு ஆய்வு செய்யும் சிந்தனா சக்தி படைத்த ஒவ்வொருவரும் முயற்சி எடுத்தால் சாகாக்கலை என்னும் மானிட சமுதாயம் சாவினை நோக்கி செல்லத்தான் இருக்கிறான். சாவின் பிடியில் சிக்கிய போது பல தெய்வங்களை வேண்டி பொருள்கள் இழக்கின்றான்.

சாவை எந்த தெய்வத்தாலும் தடுக்க இயலாது அதேபோல் எந்த தெய்வம் சாகாக் கல்வி தெரிவிக்காது. சாகாக் கல்வி மட்டும் தன்னறிவு கொண்டு அறிய வேண்டிய அற்புதச் செய்தியாகும். உண்மையான வேத மொழிப் பாடல்கள் கொண்ட சித்தர்களின் நூலில் தான் கூறப்பட்டுள்ளது. சித்தர்களால் அனுபவிக்கப்பட்டு அவர்கள் தங்கள் அனுபவங்கள் தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ளது.

மற்றவர்களாளான வடவர்களின் வேதங்களில் சாகாக்கல்வி இடம் பெறவில்லை. வேதவியாசர் சொன்ன பொய்யான வேத இதிகாச புராணங்கள் பாரத கதைகள் படித்தாலும் சாகாகல்வி தெரியாது. பொய்யான செய்தியை உண்மைப் போல் தோற்றவித்ததால் அகில உலக அனைத்து மானிட இனம் இன்று சாகாகல்வி கற்க மறந்து விட்டனர். காகபுசண்டர் வேத வியாசனை எழுதிய நூல்கள் உண்மையை பிரட்டி போட்டு விட்டவன் என்று கூறுகின்றார். வேதவியாசனின் பொய்யான செய்தி உண்மைப் போல் ஓர் மாயத் தோற்றத்தை உண்டாக்கியதால் மானிட சமுதயம் நாளும் மாண்டு மடிகிறார்கள்.

வேத வியாசனின் கட்டுக் கதைகளும் புளுகு மூட்டைகளும் குப்பையில் போட்டுவிட்டு சித்தர்கள் கூறும் உண்மை செய்திகளை நாடி மனித சமுதாயம் நின்றால் மானிடன் தன் பிறவியின் உண்மையறிந்து மரணமில்லா பெருவாழ்வு பெரும் வழி உண்டாகும் என்பதை தெரிவிக்கும் செய்தியை நிறைவு செய்கிறோம்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

26. உள்ளக தீபம்

"சாகாமல் இருப்பதற்கு கல்வியுண்டு
சாக்காடு கொள்வதற்கும் விவரம் உண்டு" - 238
காகபுசண்ட காவியம் 1000

மனிதன் சாகாமல் இருப்பதற்கு தனிக்கல்வியுண்டு. அதேபோல் சாக்காடு கொள்வதற்கு செய்திகள் நிறையவே உண்டு. சித்தர் நூல்கள் பொருளுணர்ந்து அறிந்தால் சாவை தடுத்துக் கொள்ளலாம். வேத வியாசன் செய்த வேதங்கள் — புராணங்கள் — இதிகாச நூல்கள் படித்தால் மரணம் நம் வாசலருகில் நிற்கும். அதனால் தான் நமது முதுபெரும் ஞான சித்தர் காக புசண்டர் மேற்கண்ட செய்தியை தம் நூலில் பதிவு செய்துள்ளார்.

புறதீபமும் அகதீபமும்

புறதீபம் என்பது வீட்டில் ஏற்றப்படுகிறது. கோவில்களில் ஏற்றப்படுகிறது. பூசையறையில் ஏற்றப்படுகிறது. கார்த்திகை மாதத்தில் திருவண்ணாமலை மலையில் ஏற்றப்படுகிறது. புறதீபம் எற்ற அகல்+நெய்+திரி+எரி வேண்டும். அப்பொழுது தான் தீபமாக தெரியும்.

அகதீபம் என்பது உள்ளத்தில் ஏற்றப்படும் தீபமாகும். மானிட உள்ளகத்தில் ஏற்றப்படும். அகல் என்பது தேகம். நெய் என்பது தேகத்தில் உண்டாகும். நெய் சத்து. திரி என்பது சுழினை. எரி என்பது அக்னியாகும். முன்னது செயற்கை பின்னது இயற்கை. இந்த அகதீபம் ஏழுதிரைகள் விலக்கி பார்க்க வேண்டும். இந்த அகதீபத்தைப் பற்றி சிந்தனை செய்வோம்.

தனிமனிதன் தனது விடாமுயற்சியால் சிவராச யோகம் செய்யும் காலத்தில் இந்த தேகமான பல வேதியல் மாறுதல் உண்டாகும். சந்திரக்கலையான இடதுமூச்சு, சூரியக்கலையான வலது மூச்சில் கொண்டு வந்து இணைக்கும் போது ஓர் நேர்கோட்டில் இணையும். அதற்கு சுழினை என்ற நடுவாகும். மூச்சுக்கலையான சுழினை புருவமையத்தில் கொண்டு வந்து நிறுத்தும் போது சிறு தீபம் போல் ஒளிரும் புருவ நடுவில் ஒளிரும் தீபம் குருபீடம் என்று ஆன்மிகத்தில் கூறுவர். அதாவது நமது உயிர் உயர்நிலை பெறும்போது ஆன்மா என்று கூறுவர். இருபுருவ நடுவில் உள்ள புள்ளியில் நடுவாசல் திறந்து காணுமிடமே அம்பலம் என்றும் கூறுவார்கள். அங்கிருந்து மேல் நோக்கி செல்ல ஏழு திரைகள் விலக்கி பார்க்கும்போது மாபெருந்தீபமாக விளங்கும். அப்படி விளங்கி ஓங்கி நிற்கும் தீபத்திற்கு சோதி என்றும் கூறவார். அப்பொழுது மனிதனின் தேகம் வேதிமாற்றத்தால், அம்மனிதனின் ஊனுடல் அருளால் பெருஞ்சோதி வடிவமாகி நிற்கும். அந்த நிலையுள்ள சோதிக்கு சித்தர்கள் தீபமென்று ஓதுகிறார்கள். அந்த நிலையைப் பற்றி நமது தமிழக சித்தர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை இனி ஆய்வு செய்வோம்.

நொண்டிச் சித்தர் சிவயோகம் என்ற நூலில் தீபம் என்பது அறிவாகும். அறிவு என்றால் ஞானம் ஆகும். அந்த ஞானமே அகர வடிவமாகும். அதுவே அந்தரங்கமான இடத்தில் அதீதமாக இருக்கும். அந்த தீபம் மேரு என்ற மலை தனில் தீபமாக ஒளிரும். அதற்கு சொரூபம் என்று கூறுவார்கள். இதற்கு சொரூப சித்தி என்றும் சித்தர்கள் ஓதுவார்கள். மனித வடிவம் தோல் இறைச்சி பால் உருவாக்கப்பட்டு தேக மாக வெளிப்புறத்தில் கண்ணுக்கு தோன்றும். மனிதன் சொரூப வடிவம் பெறும் போது ஊனுடல் மறைந்து ஒளியுடலாகத் தெரியும். அதில் தேகம் என்ற திடப் பொருள் கரைந்து விடும். அதுவே தீபசோதி என்றும் சித்தர்களால் போற்றப்படுகிறது. அந்த ஆன்மாவுக்கு மரணம் ஏற்படுவதில்லை. மீண்டும் பிறப்பதில்லை. மரணத்திலிருந்து மீண்டும் பெருவாழ்வு கண்டதால் இதற்கு சாகாத கல்வி என்று சித்தர்கள் கூறிவாரானார்கள்.

Koviloor Digital Library

மும்மூலமான கதி மதி சுடரி இவைகள் இணையுமிடம் மூலமாக நடு நெற்றியில் நிற்கும். அந்த இடம் கேசரி என்றும், முக்கோணமான இடமென்று சித்தர்கள் ஓதுகிறார்கள். அதனைக் கடந்து முப்பாழ் என்னும் நிலை கடந்து நிற்கும் நிலைக்கு அவனவனாக இருக்க அது அவனுக்கு நல்லவீடாக என்றும் முத்தியிடமென்றும் கூறவார்கள். அதனைப் பற்றி சித்தர் பாடல் அறிக.

"தீபமடா அறிவென்ற அகாரமாச்சு
செப்பு கின்ற அந்தரக வதீதமாச்சு
தீபமடா மேருநடு சொருப மாச்சுத்
தீபமாய்க் குறிப்பதனைக் கண்டாயானால்
தாப மடா நீச்சில்லை நிலைப் போயில்லை
சாவு பிறப்பற்றதடா சார்ந்து பாரு
ஞாபகமா மூலமடா முப்பாழாகும்
நானானே வீதுனக்கு நல்ல வீடே - 10
நொண்டிச் சித்தர் சிவயோகம் — 16

கடைப்பிள்ளை ஞான கச்சிசத்தில் பூரணம் என்பது சோதியாக விளங்குமிடமாகும். தன்மயமாய் நின்று விளங்குவதும் திருஞான தீபமாகும். வான் என்று கூறப்படும் ஆகாசம் அண்டத்துச்சியில் கமலமலராக விளங்கும் மேடையே ஆதிபீடமாகும்.

இறைவன் விளங்கி நிற்குமிடத்தில் மையத்தில் நாதமானது குவிந்து நிற்கும் வேதத்தில் முடிவான தேன் போன்ற அமுதம் மிகவும் கண்டு திருவாகவும் உருவாகவும் நிற்கும் உறுதியாகும் என்பதை பாடலில் இருப்பதைக் கற்றுக் கொள்க என்று கூறும் பாடல் காண்க.

தானான பூரணமே சோதி சோதி
தன்மயமாய் நின்ற திருஞான தீபம்
வானான ஆகாசம் அண்டத்துச்சி
மகத்தான கமலமடா ஆதி பீடம்
கோனான பீடமதில் நடுவிலேதான்
குவிந் தெழுந்த நாதமடா வேதத் தந்தம்
தேனான நாத மதினந்தங் கண்டு
திருவே உருவே துத்திரந்தானே - 70
கடைப்பிள்ளை ஞான கக்கிசம் — 80

அகத்தியர் பூரணம் காவியத்தில் தீபம் காணவேண்டுமென்றால் ஞான தீபம் காண். அத்தீபம் என்பது முச்சுடராக இணைந்து நிற்கும் தீபமாகும. இருதய தானத்தில் இருக்கும் கமல மலரின் நிற்கும் தீபமாகும். அது கலைக்கியான தீபமாகும். பேரண்டத்தில் துலங்கும் வாசி தீபம். தன்மயமாய் ஒளிரும் தீபமாகும். சக்கரங்களுக்கு உயிரான தீபந்தானே என்பதை பாடலில் காண்க.

"பாரப்பா தீப மென்றால் ஞானத் தீபம்
பாங்கான முச்சுடராய் நின்ற தீபம்
நேரப்பா யிரதயமாங் கமல தீபம்
நீங்காத போதமயமான தீபம்
பேரப்பா பெத்த கலைக்கியான தீபம்
பேரண்டம் நிறைந்த தொரு வாசிதீபதம்
காரப்பா தன்மயமாய் நின்ற தீபதம்
சக்கரத்துக்கு குயிரான தீபந்தானே - 49/2
அகத்தியர் பூரண காவியம் — 1000.

மேலும் அகத்தியர் கூற வருவது நமது உச்சிமுடியிலிருந்து அடிவரை பார்த்தால் தேகமானது தீபம் போல் விளங்கும்.அதில் சேர்ந்தால் மனித தேகம் எல்லையற்று நிற்கும் நிலைசென்று பார்க்க என்று ஓதுகிறார். இச்செய்தி கூறும் பாடல் காண்க.

"பாரடா கேசாதி பாத மட்டும்
பார்க்கையிலே தேகமது தீபம் போலாம்
சேரடா தீபந்தனில் நின்று கொண்டு
திக்கடங்க நன்றாகச் சென்று பாரே - 37/2

மேலும் அகத்தியர் கூற வருவது என்னவெனில் மனித உடல் தன்கையால் எண் சாண் அளவாக இருக்கும. அது நமது தலைத்தன் உச்சியாகும். அதற்கு உச்சியென்று சித்தர்கள் கூறுகிறார்கள். அந்த உச்சியென்ற பகுதிக்கு மேல் கற்பூர தீபம் போல் ஒளிரும். அது ஆதியான தீபமாகும். அந்த தீபம் அருள் நிறைவான தீபமாகும். அனல் என்ற ஆவியால் எழுந்த வாசியின் இறுதியாகும். அப்பாடல் காண்க.

"சோதி யென்றால் சதுரகிரி உச்சிமீதில்
துலங்குகின்ற கற்பூர தீபந்தீபம்
ஆதியென்ற தீபமடா அருள் ஞானத் தீ

Koviloor Digital Library

அனலெ முந்த ஆவியடா சுவாசத் தந்தம் 8/3

மேலும் அகத்தியர் பரிபூரணம் என்னும் நூலில் நாசி நுனி நடுவான நயனத்தின் தீபம் கற்பூர தீபம் போல் நிற்கும். வாசி என்ற சவுத கிரி (சதுரகிரி) வட்டம் ஏறி நின்று பார்க்க ஞான தீபத்தில் சேர்ந்து நிற்க தேகம் தீபம் போன்று ஒளிரும் என்பதை,

"நாசி நுனி நடுவான நயன தீபம்
நடுவான கற்பூர தீபந் தன்னை
வாசி யென்ற சவுத கிரி வட்ட மேறி
வளர்ஞான தீபமதில் சேர்ந்து நில்லே - 339
அகத்தியர் பரிபூரணம் — 1200

மேலும் அகத்தியர் சௌமிய சாகரத்தில் ஓங்காரம் காண். அதுவே பிரதானமாக ஓங்கும். கருணையின் வடிவே ஆதார மூலமாகியிருப்பது ஆதிபீடம் — மூலமென்ற ஆதாரத்திலே துலங்கி நிற்கும் ஆவிதான் வாசியாச்சு. அதனை நீ பேணுதல் வேண்டும். ஆவி என்னும் வாசி உயர்த்தல் வேண்டும். அப்பொழுது கதி+மதி+சுடரில் ஆவி நின்று பார்த்தால் அதுவே பூரணமாகும். பூரணமே தீபமாகு துலங்கும் என்று கூறும் பாடல் காண்க.

"காணவே ஓங்காரம் ஓம் பிரதானம்
கருணை வளர் ஆதார மூலபீடம்
தோணவே மூலமென்ற ஆதாரத்தில்
துலங்கி நின்ற ஆவியடா வாசியாச்சு
பேணவே ஆவியென்ற வாசியேறி
பெருகி னின்ற ஆதாரங் கடந்தப் பாலே
பூணவே ரவி மதியான சுடரிற் சென்று
புத்தியுடன் பூரணமாய்த் தீபம் பாரே - 188
அகத்தியர் சௌமிய சாகரம் — 1200

திருமூலர் திருமந்திரம் என்னும் நூலில் நன்மார்க்க நெறியாளருக்கு சிவராசயோகத்தால் நடுக்கமில்ல தீபம் சித்தியாகும். அதற்குரிய ஆவியும் நிற்குமிடம் சதுரகிரி என்று ஓதப்படும் உயர்ந்த இடம் உச்சியாகும்.

"நற்றார் நடுக்கற்ற தீபந் சித்தம்
உற்றாகும் ஆவி அமர்ந்த திடம் உச்சி - 239
திருமூலர் திருமந்திரம் — 3000

மேலும் தாயுமானவர் மானிடன் யோகத்தால் உயர்வு பெற்ற போது நிருவிகற்பம் சேர்ந்தார் உடல் தீபம் வைத்த கற்பூரம் போல் விளங்கும் என்பதை,

நித்த நிருவிகற்பம் சேர்ந்தார். உடல்தீபம்
வைத்த கற்பூரம் போல் வயங்கம் பராபரமே -
தாயுமானவர் பாடல் 245

இராம ரிஷி என்னும் சித்தர் சிவயோக ஞானம் எனனும் நூலில்

"சுயமான முத்தி மத்தி சோதி வீட்டிற்
சுகமாக முன் பிருந்து விழித்துப் பாரு
நயமாக நின்றி லங்குந் சொரூப சோதி
நன்றான தீப மதைப் போற்றிப் பாரே - 8

போற்றிடுவாய் நிஷ்களாக மாசற்றுப்
பூரணமாய்ச் சுயஞ்சோதியான தீபம்
சாற்றிடுவாய் மேருவின் மேலான தீபம்
சார்ந்து கீழ் மேலாக விளங்குந் தீபம்
ஏற்றிடுவாய் வாலை யபிராமி பாதம்
இணங்கினாலட்ட சிததி யெல்லாமாகும்
நாற்றிசையு முனைபோல் மற்றொர வருண்டோ
நலமான அறிவல்லோ தீபந்தானே - 9

தானான அகார மடா தீபமாகும்
தன்மயமாய் நின்ற துவும் வாம தீபம் - 10
இராமரிஷி சிவயோக ஞானம் — 18

முக்தி நிலை அடைவது தனிமனிதனின் முயற்சியாகும்.

மும்மூர்த்திகளால் முத்தி தர முடியாது. அப்படியாவது கூறினால் கூறியவனை திருப்பிக் கேளுங்கள். முத்தி அடைவதோ அல்லது பெறுவது என்பதோ தனி மனிதனின் சுயமுயற்சி செய்து முத்தி பெறலாம். வேறு எக்காரணத்தாலும் பெற இயலாது என்பதை முதலில் உணரவேண்டும். வியாசன் செய்தது வேத — இதிகாச — புராணங்களில் அவன் முத்தி கொடுத்தான் இவன் முத்தி கொடுத்தான் என்று எழுதிய கட்டுக்கதைகளும் அண்டப்புளுகாகும். வேத வியாசன் மனிதர்களை மரணத்தின் பிடியில் விழச்செய்த தந்திரமாகும். அவனுடைய பொய்யுரைத்து எழுதிய செய்திகள் குழியில் போட்டு புதைத்து

Koviloor Digital Library

விடுங்கள். ஒவ்வொரு ஆண் பெண்கள் தன்னுடைய சிவராஜ யோகப் பயிற்சியால் நமது ஆன்மாவில் படிந்த மாசுக்கள் ஊறல்கள் நீக்கிக் கொண்டு இந்த தேகத்தை சுத்தம் செய்ய வேண்டும். பரிசுத்தமான சிவதேகங்கள் பெற்று முத்திக்கு வழிதேட வேண்டுமே ஒழிய அங்கு சென்றால் முத்தி கிடைக்கும் இங்கு சென்றால் முத்தி கிடைக்கும் என்று அலையாமல், சாகாக்கல்வியை கற்கும் குருவை நாடிச் சென்று அவன்திருவடி வணங்கி அக்கல்வியை முறையே செயல்முறைக்கு கொண்டு வந்து அதன் மூலம் முத்தி பெற வேண்டுமே தவிர வேதவியாசன் கூறிய மடத்தனமான செய்திகளை நீக்கி அறிவை பயன்படுத்தி முத்தி வழிவகை அறியவேண்டும். அதுபோன்ற முத்தி பெற வேண்டுமென்ற முத்திதரும் சோதி வீடான புருவ மத்தியின் நுழைவு வாசலைக் கண்டு பிடித்து, அந்த கதவின் திறவுகோல் தேடிபிடிக்க அருளை நோக்கி வழிபட வேண்டும். வழிபாட்டின் முதிர்வால் அருளே வந்து உணர்த்த அதன் வழியில் நின்று தன் தேகத்தை தீபம் போல் ஆக்க வேண்டும். அப்பொழுது முத்தியும் சித்தம் பெறலாம். சித்தர்களின் கருத்து என்பதை அறிய வேண்டும். மேற்கண்ட பாடலின் பொருளைக் காண்போம்.

சுயமான முத்தி யென்றால் தன் முயற்சியாலும் கடின உழைப்பாலும் — சிவராஜயோகத்தின் பயிற்சியாலும் தேக சுத்தியும் ஆன்ம சுத்தியும் செய்தபின் மேலும் விடாமல் முயற்சி செய்து பொன்தேக வடிவம் உண்டாகும். மேலும் முயற்சி செய்தால் மந்திர வடிவான தேகம் பெறலாம். இன்னும் முயற்சி செய்தால் ஞானதேக வடிவம் கற்பதேகமாகவும், கற்பூர தேகமாவும் கயிலாச தேகமாகவும் காணப்படுவதோடு கண்ணுக்கு தேகம் புலப்படாது. அந்த தேகத்தில் வாள் கத்தியை விட்டு குறுக்கே செலுத்தினாலும் கீழும் மேலும் செலுத்தினாலும் அக்கத்தி ஆடும். அப்படிப்பட்ட தேகமே தீபமாக விளங்கி நிற்கும். அந்த தீப நிலையே அகார நிலையுமாகும். மத்தி என்பது புருவ மத்தியாகும். அதற்கு லலாடம் என்பர். சிதம்பரம் என்றும் கூறுவர். குருபீடம் என்றும் கூறுவர்.

சோதி வீடு என்பது அண்ட உச்சிக்கு ஆன்மா நிலைக் கொள்ளும். அதற்கு பூரணம் என்பர். முத்தி தருமிடமாகும். அந்த சோதி வீட்டை எப்பொழுதும் விழிப்புடன் இருந்து பார்க்க வேண்டும். நேயமாகவும் நயமாகவும் நின்று விளங்கும் வீடு. அது சொரூப சோதி என்றும் கூறுவர். அந்த சோதி என்ற தீபம் போற்றி காக்க.

தீப சோதி வீடு களங்கங்கள் அற்று சுத்தமானது. மாசுக்கள் அகன்றது. பூரணத்துவம் பெற்றது. தனித்து தன்முயற்சியால் பெற்ற சுயஞ்சோதி தீபமாகும். மேருமலை மீது தீபமாய் விளங்கும் சோதியாகும். அந்த தீப சோதி மத்தி மூலமானயிடத்திலும் — உச்சியென்ற மூலத்திலும் விளங்கும் தீபமாகும். மூலத்தில் நிற்கும் வாலை அபிராமியின் கருணையால் எண்பேறு சித்திகள் ஆடும் தீபசோதியாகும். அறிவே தீபம். தீபமாக விளங்குவதே ஞானமாகும். அகரமாகவும் ஒளிர்வதும் அந்த ஞான தீபமேயாகும். தன்மயமாய் நின்றதுவும் வாம தீபமாகும். வாமம் என்றால் சக்தியாகும். வள்ளல் இராமலிங்க அடிகளார் தீபத்தைப் பற்றி என்ன கூறுகிறார் என்பதை இங்கு அறியவும்.

"கண்களிக்க புகை சிறிதும் காட்டாதே புருவக்
கலை நடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே

– அருட்பா

புருவ நடுவில் புகையில்லாமல் கண் துலங்கும் கற்பூரம் போன்று ஒளிவிடும் விளக்காக விளங்கும் தீபமாக தெரியும். மேலும் நமது அடிகளார் ஆவார்கள் மானிடனுக்கு வரும் ஆபத்து நீக்கி அசையாமலும் அவியாமலும் எனது உள்ளகத்தில் தீபம் போல் வைத்து பார்த்து திரு சிற்றம்பலத்தில் திருநடம் செய்யும் சோதியாக விளங்கிறது என்பதை,

ஆபத்தை நீக்கி வளர்த்தே – சற்றும்
அசையாமல் அவியாமல் அடியேன் உள்ளத்தே
தீபத்தை வைத்தது பாரீர் – திருச்

Koviloor Digital Library

சிற்றம்பலத்தே திருநட சோதி - சோதி - அருட்பா என்று ஓதுகிறார்.

ஒருவன் தன் கடின முயற்சியால் சிவராஜயோக பயிற்சியால் ஆன்மா புருவ நடுவில் கொண்டு நிறுத்தினால் சிறுதீபம் போல் ஒளிரும். அந்த தீப ஒளியை காண ஏழு திரைகள் விலக்கி பார்த்தால் ஆன்மா உச்சியில் நிற்கும் போது இந்த தேகம் தீபசோதியாகி சொரூப சித்தி பெற்று அருளின் வடிவாகி எல்லையில்லா பெருஞ்சோதி நிலை பெற்றால் மரணத்தின் ஆபத்தை விலக்கி உள்ளகத்தில் தீபத்தை காண்பதே திருநடன சோதி வடிவாகி நிறைவு பெற்று ஞானம் உற்று சித்தனாக விளங்குவார்கள். விளங்கும் நிலையே பரிபூரண நிலையாகும்.

அருட்பிரகாச வடலூர் வள்ளல் இராமலிங்க பெருமான் தாம் சித்தர் பதவி பெற்றார் என்ற அகச்சான்றாக விளங்கும் செய்தியைக் காண்க.

"முத்தியைப் பெற்றேன் அம்முத்தியினால் ஞான
சித்தியை உற்றேன் என்று உந்தீபற
சித்தனும் ஆனேன் என்று உந்தீபற" - 4904
திருவருட்பா.

வள்ளல் பெருமான் முதலில் முத்தியை பெற்றார். அம்முத்தியினால் ஞானசித்தை பெற்றார் சித்தரானார்.

திருச்சிற்றம்பலம்

27. தலையும் காலும்

"நாடப்பா சாகாத கல்வி தன்னை
நலமாகக் கற்பதற்கு உன்னைத் தேற்று"

இராம மாமுனிவர் ஞானம் — 18

தலை என்றால் என்ன? கால் என்றால் என்ன? இவைகள் இரண்டிற்கும் என்ன தொடர்பு உண்டு? தலை எதைக் குறிக்கிறது. கால் எதைக் குறிக்கிறது. ஏன் தலையும் காலும் என்று கூறுகிறார்கள். இவை இரண்டும் எப்பொருளைக் கண்டுக் கொள்ளச் செய்கிறது. இந்த இருபொருளும் எதை பாலமாக நின்று இணைக்கிறது. இதனைப் பற்றி இனி ஆய்வு செய்து அறிவதே இந்த செய்தியின் நோக்கமாகும்.

இந்த தலையும் காலும் பற்றி பல சித்தர்கள் பல்வேறு பொருள்பட கூறுகிறார்கள் அதில் அகத்தியர்,

"குருவான நாதனவன் மடி மீதில் வைத்து
கும்ப முனி நீயெனவே என்று முகந்தடவி
திருவான பூரணத்தை வாரிமிகத் திரட்டி
செம்மையுடன் தானீய்ந்தார் வாங்கிமிகக் கொண்டேன்
உருவான தேகமது அமுர்த பூரணமாய்
உண்மையுட னவர்பாதஞ் சிரமீதில் வைத்து
கருவான காலேது தலையேது யென்றேன்
கைமுறையாய் நீ காணும் வேறல்லவென்றார்
- 27

அகத்தியர் பரிபூரணம் — 1200

கலாதீதனான (காலம் கடந்து நிற்கும்) நாதாந்தக் கடவுளான குருநாதனாக இருக்கும் இறையருள் மிகுந்த இறைவன் மடி மீது தலைவைத்து இருக்கும்போது அப்பெருமான் முகதடவி மிக உயர்ந்த பூரணம் (போதம்) என்ற ஞானம் மிக வாரி திரட்டி செம்மையாக வழங்கினார். அதனை வாங்கிக் கொண்டேன். அதனால் இந்த உடலானது அமிர்த பூரணமாய் கொண்டதால் ஞானம் விளங்கியது. அவருடைய திருவடி என்னுடைய தலை மீது வைத்த போதே ஐயா கருவாக துலங்கும். இதில் காலேது தலையேது என்று கேட்டேன். அதற்கு அவர் நீயும் நானும் என்று கூறி வேறு எதுவும் இல்லை என்று ஓதினார்.

குரு என்றால் இறைவன். பூரணம் என்றால் கால் திரு என்றால் இறையருள். பூரணம் என்றால் அமுதம். திருவருள் வழங்கிய அமுர்த பூரணம் உண்டதால் இந்த உடல் சொரூப சித்தி பெற்று ஞான

Koviloor Digital Library

தேகமாக விளங்கியது. அப்பொழுது என் தலை அவர் திருவடியின் கீழ் இருந்தது. அதுவே தலையும் காலுமாகும். அந்த திருவடியும் தலையாக பூரணம் வழிக்காட்ட ஞானம் பெற்று இறையருளே திருவருளாகி திருவடியாக நின்று என் தலை மீது (தலை என்றால் ஞானம்) பதித்ததல் அது வேறுயல்ல நீ நானும் என்று குருவருள் ஓதியது என்று கூறுகிறார் மற்றும் ஓர் பொருள் உண்டு. அது யாதுயெனில் அது ஆன்மா பரமான்மாவுடன் இணைவதால் ஆன்மா தலையாகும். பரமான்மா காலாகவும் நின்று ஞானத்தை பெருவதால் தலையும் காலும் என்று ஓதப்படுகிறது. சிகாரம் தலையாகவும் வகாரம் காலாகவும் நினைத்து தலையாகிய ஞானத்தை காலாகயிருக்கும் சக்தியின் வழிகாட்டுதல் மூலம் ஞானம் பெற வேண்டும் என்பதே அதன் நோக்கமாகும். தாயின் வழிகாட்டுதலால் தந்தையை அறிதல் வேண்டும் என்பது இதன் கருத்தாகும்.

மேலும் அகாரமே தலையாகும் உகாரமே காலாகவும் செயல்படும் என்றும் சித்தர்கள் கூறுகிறார்கள். அகாரம் சிவமாகவும் உகாரம் சக்தியாகவும் செயல்படும். இதற்கு தலைகால் என்பர்.

அடுத்து அகத்தியர்,

"நீயென்றும் நானென்றும் வேறொன்றில்லை
நிசமான பூரணத்தை நம்பும் போது
தாயென்று வந்தமுர்தங் கொடுப்பாள் நன்றாய்
தலைவனையுந் தன்னை யுந்தான் காட்டி வைப்பாள்
காயென்றும் பழமென்றும் வேறேல்லை
கனியான முப்பழத்தைக் கண்டபோது
சேயென்ற வாலையவள் முன்னே நின்று
தெகுட்டாத பூரணத்தின் திறஞ் சொல் வாளே"
- 154

நீ என்பதும் நான் என்பதும் வேறில்லை. உண்மையான பூரணம் தாயாக வந்து அமுர்தமது தந்து தலைவனையும் (இறைவனையும்) காட்டிக் கொடுப்பாள். காயென்றும் பழமென்று வேறில்லை. கனிந்த முப்பழத்தைக் கண்ட போது குழந்தை வடிவமான வாலையம்மைய முதன்மையாக நின்று திகட்டல்லிலா பூரணத்தின் வளமைக் கூறுவாள்.

பூரணம் என்பது வன்னி — கதிர் — மதி ஆ க மூன்றும் இணைந்த நிலையே பூரணம் என்பார்கள். அந்த பூரணம் என்பவள் கேசரியாவாள். கேசரி என்பவர் வாலையம்மையாவாள். அந்த அம்மை என்பவள் தலைவனான தலையும் காலையும் காட்டி வைப்பாள். அதன் மேலுள்ள சிவகலையும் அறிய செய்வாள். மேலும் அகத்தியர்,

"உண்டு மிக நின்றாதினா லமுர்தபோதம்
உண்மையுடன் சொன்ன தினா லுறுதியாகும்
கண்டு கொண்டு கலைக் யான முடிவாய் நின்ற
காலதுதான் தலையாகும் தலை காலாகும்
விண்டு சொல்லப் போகாத அமுர்தபோதம்
மெய்யான கலைக்யான முடிவாகும் - 182

காலானது தலையாகும். தலைகாலாகும். தலையும் காலும் பூரணமாகும். அதில் வழியும் அமுதம் உண்டால் ஞானம் என்ற போதம் உண்டு ஒளிதேகமாக நிற்கும்.

மேலும் அகத்தியர் பரிபூரணம் என்னும் நூலில்

"பாரப்பா சாகாத கால் தான் மைந்தா
பதிவான வாசியடா வாயு வாச்சி
நேரப்பா வேகாத தலையே தென்றால்
நிசமான ஆகாச வெளிதான் பாரு" - 644

அகத்தியப் பெருமான் என்னும் சித்தர் "சாகாத கால்" என்பது அண்ட பிண்டத்தில் பதிவாகியுள்ள வாசியடா என்றும், அதுவே வளியாகும் என்றும் கூறுகிறார். "வேகாத நிலை" எதுவென்றால் ஆகாச வெளியென்று ஓதுகிறார். மகனே நீ கூர்ந்து அறிந்து தெளிந்து உணர்க என்று கூறுகிறார்.

மேலும் அகத்தியர் சௌமிய சாகரத்தில்,

"பாரப்பா பூரணமே அண் மாச்சுப்
பதிவான காரணமே பிண்டமாச்சு
நேரப்பா அண்டமொடு பிண்டம் ரெண்டும்
நேரறிந்துக் கொண்டவனே சித்தன் சித்தன்

Koviloor Digital Library

சாரப்பா சௌமிய சாகரத்தில் நீயும்
தன்மையுடன் பூரணமாய்ச் சார்ந்து கொண்டால்
மேரப்பா அண்ட பிண்டம் தானாய் நின்று
மேதினியில் பூரணமாய் வாசியமே'' - 205

முப்பொருளும் இணைந்த இடமே பூரணம் என்பர். இதற்கு வாலை என்றும் கேசரி என்றும் கூறுவர். இதற்கு அண்டம் என்றும் கூறுவார்கள். இதுவே காரணமாக தொழிற்படும் போது பிண்டம் என்பார்கள். அண்டமென்ற தலையும் பிண்டமென்ற காலும் நேர்மையுடன் அறிந்தவனே சித்தனாக முடியும். ஆக இவைகளுக்கு காரணமாய் நிற்பது வாசி என்ற வன்னியாக திகழ்கின்ற ஆவியாகும். ஆவி என்பது சுத்த ஆன்மா. சுத்த ஆன்மாவே தலையாகும். பேரான்மாவே காலாகவும் நின்று அருள் தரும். இதற்கு அடிமுடியென்றும் திருவடி ஞானம் என்றும் கூறுவர். திருவடியும் ஞானமும் சிவயோகம் சேர்க்கும்.

அடுத்து வரும் சித்தர்கள் தலையும் காலையும் பற்றி என்ன கூறுகிறார்கள் என்பதை அறியலாம். கயிலாய சட்டைமுனி நாத சித்தர் கீழ்வரும் பாடலில்,

''புக்கினேனறிவாலே அறிவைக் கொண்டு
பூரணத்தா யாடுகிற காலிற் பூண்டு
சிக்கினேன் கால்தலையாய் நின்ற காலிற்
சிவ சிவா தலை காலாய் மவுனங் கொண்டு
சொக்கினேன் கலையான சுகத்தைச் சொல்லச்
சொல்லேது சொல்லுவதற்கு வாயோ இல்லை
கக்கிசமோ கக்கிசந்தா னில்லைபாரு
கனவெளியாம் ஒளியான கருவைப் பாரு'' - 3
க.சட்டைமுனிநாதர் ஞானவிளக்கம்
— *52*

தன்னறிவாலே அறிவின் மூலம் கண்டு பூரணமாய் ஆடுகிற காலின் புகுந்தேன். அதில் சிக்கியபோது கால் தன்தலை மீதும் நின்ற காலினை சிவசிவ தலைகாலாய் நின்ற போது மவுனநிலை (சொல்லிறந்த நிலை) அதில் சொக்கி தன்னை மறந்து கூறுவதற்கு வாய்பேசா நிலை உண்டானது. சொல்வதற்கும் சொற்கள் கிடைத்தில. மந்திர மொழியாக நிற்கும் ஊமை நிலையால் மௌனமானேன். கனத்த வெட்ட வெளியும், அதில் ஒளியும் அறிய அதன் மூலத்தைக் காணுங்கள் என்று கூறுகிறார்.

சிவகலைகள் நான்கும், அதில் வெளிப்பாழ், ஒளிப்பாழ், வெளியொளிப்பாழ், நிற்குணப் பாழ் என்பர். இந்த சிவகலையான முதல் பாழில் சிவயோகி வந்தால் மரணம் தடுக்கப்படுகிறது. அப்பொழுது ஏம சித்தி உண்டாகும் ஒளிப்பாழில் வந்தால் நாத சித்தி உண்டாகும். இதற்கு பிரணவ சித்தி என்பர். வெளியொளி பாழில் வந்தால் ஞான சித்தி உண்டாகும். இதனை முறையே பொன்வடிவம், பிரணவ வடிவம், ஞானவடிவம் பெறுகிறது. நிற்குண பாழில் சிவயோகி வந்தால் முத்தியும் அதனால் சித்தியும் பெற்று சித்தனாக திகழ்கிறான். அப்பொழுது சிவயோகி ஒருவர் "தனிச்சிவன்" என்ற பெருமை பெயரும் பெற்று காலம் கடந்து நிற்பான்.

மேலும் கயிலாய சட்டை முனிநாத சித்தர் தலைகாலையை அடிமுடி என்றும் குறிப்பிட்டு அது எவ்வாறானது என்றும் கூறும் பாடல் காண்க.

''போத மதி நிறைந்த பூரணமே போதம்
புகழுடைய பூரணமே யேகமாகிச்
சோதியென நின்ற சிவசக்தியாகிச்
சொல் நிறைந்த பூவறி நால்வேதமாகி
பேதமில்லா அஞ்சு பஞ்சு பூதமாகிப்
பின்னாகி முன்னாகி யெங்கந்தானாய்ப்
பாதமடியென்று சொல்லிமுடியைத் தேடி
பத்துவது பூரணத்தின் பதவிதானே'' - 69
கைலாய சட்டைமுனி நாத
சித்தர்தண்டகம் — *80*

மதி (அறிவு நிறைவு பெற்ற) நிறைந்த பூரணமே ஞானமாகும். பூரணம் என்றால் முக்கூட்டுப் பொருளாகும். அது வன்னி — கதிர் — மதி — இவைகளின் சேர்க்கையே பூரணம் என்பர். இந்த நிலை சிவயோகி கண்டால் ஞானம் விளங்கும். அதுவே யேகமாகி (ஒரே நிலையாக அடிமுடியாகவும் முடியடியாகவும்) சோதி வடிவமாக நிற்கும். அதுவே சிவசக்தியாகவும் விளங்கும். மாறுபாடு

Koviloor Digital Library

அற்ற பஞ்ச பருப்பொருளாகவும், முன்பின்னாகவும், பின் முன்னாகவும் தோற்றம் உண்டாம். அதுவே கால் என்ற பாத அடியாகவும், ஞானமாகவும் சொல்லும் முடியைத் தேடி அதனை அடைவதுதான் பூணத்தின் பதவி என்ற முத்தியாகும் என்று கூறப்படுகிறது.

கோரக்கர் என்ற சித்தர் பிர்மஞானம் என்னும் நூலில் காலைப் பற்றி கூறும் பாடல் காண்க.

"தானென்ற வுருவமாய் கம்பந்தானும்
தலமதில் யஞ்சுருவ தானவாணி
தேனென்ற வானுருவி பாய்ந்து நிற்குஞ்
செம்மையுடன் காணாத சாகாக்காலும்
வானென்ற சத்தி சிவம் நின்ற கால்காட்டி
வளம் பொருந்துஞ் சக்திகால் கீழே காட்டி
கோனென்ற சிவத்தின் கால் மேலே காட்டிக்
குணமாகக் கண்ட தொரு மார்க்கங் கேளு - 9

கோரக்கர் பிர்மஞான தெரிசனம் — 17

கொடிமரக் கொம்பின் மேலே பஞ் சவர்ண நிறமுள்ள வாணி என்ற வாலை விண்ணில் பாய்ந்தது தேன்போன்ற அமுர்த அருவி பாய்ந்து நிற்கும். செம்மை வண்ணமுள்ள காணயியலாத சாகாத காலாகி வெளி விண்ணில் சக்தியுமாய் சிவனுமாய் நின்று கால் காட்டி பெருமைமிக்க உயர்ந்து நிற்கும் சிவத்தின் காலானது மேலே காட்டி நிற்குணமான சுத்த வெளிபாழில் நிற்கும் வழிகாண்க என்று ஓதப்படுகிறது. உகாரம் கீழாகும் சிகாரம் என்ற வன்னி மேல் காட்டி நிற்கும் அதுவுமில்லாமல் மகாரம் என்ற வன்னி மேலே காலாகவும். அகாரம் சிர்காலாகவும் உகாரம் வழிகாட்டியும் நிற்கும் என்றும் கூறலாம்.

பிரம முனி பிரம ஞானம் என்னும் நூலில் உந்தியில் ஓங்காரம் நிற்க, கண்டத்தில் வேகா காலாகவும், நாட்டமென்ற புருவ மையத்தில் சாகாத்தலையாகவும் நிற்கும். பரம் என்ற நிலையின் வெளி வீட்டில் அகாரமாகும். புருவ நடுக்குண்டலிக்குள் உகாரந்தாமாக இருக்க, சமாதிக்குள் யுகம் முடியும் வரை இருக்க, இவைகள் குகையை நீங்கி வர ஆதியென்று பொருள் கொண்டுரைப் பார் என்று அறிந்து தெளிக என்பதைக் குறிக்கும் பாடல் காண்க.

"தீரடா வுந்தியிலே ஓங்காரந்தான்
திரமான கண்டத்தில் வேகாக் காலை
பாரடா நாட்டத்திற் சாகாச் சென்னி
பரமான வெளிவீட்டில் அகாரமாச்சு
சேரடா குண்டலிக்குள் உகாரந்தானுந்
சிவ சிவா யுகமட்டுஞ் சமாதிக்குள்ளே
ஆடடா யிவ்வளவுங் குகையை விட்டு
ஆதியென்ற பொரளுரைப்பா ரறிந்து பாரே" - 27

பிரம மாமுனிசித்தர் பிரம ஞானம் — *36*

மிருகண்டர் எழுதிய மெய்ஞ்ஞானம் என்னும் நூலில் கதிர் — மதி — வன்னி இவர்கள் மூவரும் காலாகவும் — தலையாகவும் — புனலாகவும் இருப்பர். அதில் சாகாத கால் என்று அறிதல். வேகாத தலை அறிய வேண்டும். போகாத புனலும் அறிய வேண்டும். மூன்றையும் அறிந்து சற்குருநாதனைப் துதிக்க வேண்டும். இந்த மூன்று பொருள்கள் நமது உடலின் கண்ணுள்ளது. அதனை அறியவேண்டுமனால் இலட்சியத்தினன் வாலையை அறிந்து தெளிந்து வணங்கினால், ஓம் காரமாகும். அதுவே நிகரில்லாச் சித்தாக விளங்கும் பொருளாகும் என்று கூறும் பாடல் காண்க.

"ஆமப்பா சாகாத காலினோடு
அருளான வேகாத தலை யறிந்து
நாமப்பா கூடிய புனலைக் கண்டு
நன்றாக வுண்டு சற்குருவைப் போற்று
தாமப்பா மூன்றையுந் தான் தனக்குள்ளாகத்
தானறிய லட்சியத்தைத் தெளிந்து பாரு
நோமப்பா வாகாத தொன்ற மில்லை
நிகரில்லாச் சித்தான பொருளாம் பாரே - 14

மிருகண்ட மாமுனி சித்தர் மெய்ஞ் ஞானம் — *30*

கடைப்பிள்ளையின் ஞானம் என்னும் நூலில் கண் சாகாத காலும், வேகாத தலையும் பற்றி ஓதப்பட்டுள்ளது. அதாவது ஞானமயமாய் எப்பொழுதும் விளங்கும் நாதம் என்ற பொருளாகும் என்றும்,

Koviloor Digital Library

வேகாத தலை என்பது வேதாந்த மூலமாக விளங்கும் விந்து என்ற பொருளாகும் என்று ஓதுகிறார். அந்த சித்தரின் அரிதான பாடலைக் காண்க.

"சாகாத காலதுதா னென்ன வென்றாற்
சதா போதமான தொரு நாதமாகும்
வேகாத தலையதுதான் விந்து விந்து
வேதாந்த மூலமடா ஆர்க்கும தோணா" - 53

கடைப்பிள்ளை ஞானம் — 120

அடுத்து காகபுசண்டர் என்னும் சித்தர் தாம் அருளிய மெய்ஞ்ஞான விளக்கம் என்னும் நூலில்,

"பார்க்கலா மொருகாலை யுயரேத் தூக்கி
பாடுவா னொரு காலைத் தாழ விட்டு
ஏர்க்கையிலே மேல் நோக்கும் காலைக்கேளு
என்மகனே மதியென்று மதற்குப் பேரு
கார்க்கையிலே கீழ்நோக்குங் காலை மைந்தா
கண்டு பாரிரவி யென்று கருதலாகும்
மார்க்கமுடன் அண்டவுச்சி மேலே தானும்
மகத்தான வன்னி யிருப்பிடந்தான் பாரே

காகபுசண்டர் மெய்ஞ்ஞான விளக்கம் — 80

பார்க்கும் போது ஒரு காலை உயரே நிற்க மற்றொரு காலை கீழே விட மேல்நிற்கும் காலுக்கு மதி என்ற சந்திரன் (அறிவு, ஞானம்) ஆகும். கீழ்நோக்கும் காலை இரவி (சூரியன்) என்றும் கூறலாம். அண்டவுச்சியில் வன்னி என்ற அக்கினி (சுழினை கம்பம், கொடி மரம் மேல் சுடரி) இருப்பிடமாகும். சாகாதகால் வேகாத தலை, போகாத புனல் இவைகளின் நிலையை உணர்த்துகிறார். மேலும் காகபுசண்டர் இன்னும் விளக்கமாக கூறும் பாடல் காண்க.

"விளையாடிக் கருநெல்லி பறித்து வுண்ணு
வேகாத தலையாகும் விரும்பி பாரு
மலையாமல் வெண்சாரை பிடித்து உண்ணு
மைந்தனே சாகாக் காலிதுவே யாகும்.
அலையாமற் சோதியுட பாலை யுண்ணு
அக்கினியாங் கம்பமடா சுழினை யாச்சு
கலை நாலு பேரதையு மெட்டிற் சேரு
கட்டற்ற தேக மடா கண்டு பாரே" - 28

வேகாத தலை என்பது கருநெல்லி என்ற ஞானப்பாலாகும். நாதம் என்பர். சாகாத கால் என்பது விந்துவாகும். அதுவே தண்ணீர் என்பர். மேலும் சோதியுட பாலை கறந்து உண்க. அது கொடி மரம் போன்று மேலான அக்கினி என்ற சுழினையாகும். கலை நான்கும அகாரத்தில் (எட்டில்) சேர்த்தால் களங்கமற்ற தேகமாக விளங்கும் கண்டு பாரே எனறு ஓதுகிறார்.

அமுத வகையில் ஐந்து வகையுண்டு. அதில் தண்ணீர் போன்று வருவது வெண்சாரை என்ற அமுதமாகும். இதன் கன அடர்த்தி நீர் போன்று இருக்கும். அடுத்துவரும் அமுதத்திற்கு தேனின் கன அடர்த்தி போன்று இருக்கும். இதற்கு கருநெல்லி என்று பெயராகும். அந்த நிறத்தை ஒத்துயிருக்கும். அதற்கு அடுத்து வரும் அமுதத்திற்கும் சற்று மிகுந்த அடர்த்தி நிலையாகும். அடுத்து வரும் அமுதநிலை கட்டி தயிர் போன்று இருக்கும். அதற்குப் பின்வரும் அமுதம் மணி போன்று கடினமாக இருக்கும். சிவகலை என்னும் வெளிப்பாழ், ஒளிப்பாழ், ஒளிவெளிப்பாழ், நிற்குணப்பாழ் ஆக இவைகள் அகரம் என்ற சிவத்தில் சேர்க்க களங்கமற்ற சுத்த தேகமாக விளங்கும் என்பதாம். சிவகலை என்பது ஓமரூபியாக விளங்கும் 1.நேரனந்தை 2.உதனாதை 3.அனாதை, 4.சிறுனதை ஆக இவைகள் நான்கும் சிவகலைகள் என்பர். இதனை பராச ரிஷியின் பாடலில் காண்க.

நின்றருளைத் தருகும் ஓம்ரூபியோடு
நேரனந்தை முதனாதை, அனாதையான
குன்றாத சிறுனதைது யிவை நாலுந்தான்
குணமான சிவகலை யென்றறிந்து கொண்டு
சென்று பதினாறு கலை தீபம் பார்க்கத்
திறவு கோல் உகாரந்தான் மின்போற்சொக்கே - 8

பராச ரிஷி செவி அருள்வுரை ஞானம் — 22

அடுத்து வரும் இராமதேவர் என்னும் சித்தர் எழுதிய தண்டகம் என்னும் நூலின் பாடலைக் காண்க. அதில் நேர்மையுடன் நீ கவனி. நாட்டத்தின் விதியான யோக நெறி வழியான நினைவில் அறிந்து இதுதான்

Koviloor Digital Library

கால் என்றும். இதுதான் ஞானம் என்று அதனை தேர்ந்து பார்க்க வேண்டும். சிவதிட்சை யென்னும் அகாரமும் சக்தி திட்சை யென்னும் உகாரமும் அறிந்து திறம்பெற்று விளங்குவார்கள் சித்தர்கள் என்று ஓதும் பாடலைக் காண்க.

"நேர்ந்து பார் நிட்டை விதி யோக மார்க்கம்
நினைவறிந்து காலறிந்து அறிவில் நின்று
தேர்ந்து பார் சிவதிட்சை சக்தி தீட்சை
திறம் பெற்றார் மெய்ஞ்ஞானச் சித்தராமே - 102

என்று இராமதேவர் கூறுகிறார்.

மேலும் திருமூலர் திருமந்திரம் மூவ்வாயிரத்தில் காலும் தலையும் பற்றி அவருடைய நடையில் ஓதுவது காண்க.

"திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்
திருவடி ஞானஞ் சிவயோகஞ் சேர்க்கும்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்கும்
திருவடி ஞானமே திண் சித்தி முத்தியே - என்று

ஓதுகிறார். திருவடி என்றால் காலாகும். ஞானம் என்றால் தலையாகும். இவை இரண்டும் சாகாத தலையாகவும் வேகாத காலாகவும் கூறுவார்கள். அதனால் இதனை அறிந்தால் மனிதனை சிவமாக்கும். சிவயோகம் சேர்க்கும் சிறை மலம் மீட்கும். இதனால் திடமான முத்தியும் அதனால் சித்தியும் பெறுவார்கள் என்று ஓதப்படுகிறது

வடலூர் வள்ளல் பெருமான் தமது அருட்பாவில் தலையும் காலும் பற்றியும் ஓதியுள்ளார். அந்த அருட்பா காண்க.

"சாகாத தலையிது வேகாத காலாம் இது
காண் எனத் தயவு செய்துரையே
போகாத புனலையும் தெரிவித்து என் உள்த்தே
பொற்புற அமர்ந்த தோர் அற்புத சுடரே
சாகாத கல்வியிலே தலை காட்டி கொடுத்தீர்
தடையறிய கால்காட்டி தரம் பெறவும் அளித்தீர்
போகாத புனலாலே சுத்த வுடம் பினராம்
புண்ணியரும் நண்ணறிய பொது நிலையம்
தந்தீர் - அருட்பா

சாகாத தலை என்பது ஞானமாகும். வேகாத காலென்பது பூரணமாகும். போகாத புனல் என்பது அமுதமாகும். இவை மூன்றும் சாகாத கல்வியைத் தெரிவிக்கும் கலைக் கூடமாகும். இந்த பொருளாக விளங்கும் தலையென்னும் ஞானம் அறியச் செய்தீர். தடையில்லாமல் கால் என்ற பூரண நிலையும் காட்டி உயர்வு பெறவும் வழங்கியுள்ளீர். போகாத புனல் என்று கூறப்படும் அமுத நிலை உண்ணக் காட்டிக் களங்க மற்ற சுத்த வுடம்பு பெறும் புண்ணியம் நன்மைபெற பொது உடமை நிலையம் தந்து பெருமை யாக்கினீர் என்று கூறி நன்றியைத் தெரிவிக்கிறார்.

தலையும் காலும் அறிந்து புரிந்து தெளிவு பெற நாளாகும். செய்முறை அனுபவத்தில் தான் அறிய வரும் செய்தியாக உள்ள சாகாத கல்வி புண்ணியருக்கு மட்டும் தான் பேறு பெறும் நிலை உண்டாகும். அதனால் வடலூர் வள்ள பெருமான்

கரண மெலாம் கலக்க வரும்
மரணமும் சம்மதமோ
இற்றிதனைத் தடுத்திடலாம்
என்னோடு சேர்ந்திடுமின்
என்மார்க்கம் இறப்பொழிக்கும்
சன்மார்க்கம் தானே" - திருவருட்பா

அடிகளார் அறைக்கூவல் விடுக்கிறார். அவரை அணுகியவர்கள் மரணத்தத வென்றார்கள் அணுகாதவர்கள் மரணத்தை தழுவினார்கள்.

உலகத்தோர் அனைவரும் சமுசார வாழ்க்கையில் கலந்ததால் இறந்தார்கள் என்பதால் அவர்களை செத்தவர்கள் என்று கூறுவர். இவர்களுக்கு முத்தி கிடையாது. மீண்டும் பிறவி தொடர்ந்து வரும். ஒளி தேகம் என்று சொரூப சித்தி பெற்றவர்களுக்கு பிறவி ஒழிந்து முத்தியும் சித்தியும் பெறுவர்கள் என்று சித்தர்கள் ஓதுகிறார்கள்.

மேற்கண்ட அருமை பெருமை தரும் உண்மைச் செய்தியைக் கண்டு மரணத்தை வெல்லும் சாகாத கல்வி தன்னறிவின் துணைக் கொண்டு அறிவின் மூலம் கண்டுக் கொண்டால் என்று மரணமில்லா பெருவாழ்வு பெற்று இன்புறும் அன்பு செய்தியானது நிறைவடைகிறது.


திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

௨௮. மூன்று நாடிகள் அல்லது மூன்று கலைகள்

உலகியல் வாழ்வில் உயர வேண்டுமென்றால் கடின உழைப்பு தேவையாகும். உழைப்பு மானிடனுக்கு உயர்வு தரும். உழைப்பால் உயர்ந்தவர்கள் புற உலக வாழ்வின் பெரும் மதிப்பும் புகழும் பெற்று பெரும்பயன்கள் பெறுகிறார்கள். உயர்ந்த நேர்த்தியான இல்லங்கள் கட்டி மண்ணையும் சேர்க்கிறார்கள். இல்லத்தில் பணிகள் செய்ய வேலைக்காரர்களை அமர்த்திக் கொண்டு சொர்க்கம் போக வாழ்க்கை அனுபவிக்கிறார்கள். ஆனால் மனிதர் மரணத்தைப் பற்றி கவலைப்படுவதில்லை. ஒருநாள் எல்லாத்தையும் விட்டு சாவைத் தழுவிக் கொள்கிறான். உறவுகள் அவனை மறந்து விடுகின்றனர்.

மானிடர்கள் சாகாமல் இருக்க் வேண்டுமென்றால் கடின உழைப்பு வேண்டும். விடாமுயற்சி வேண்டும். இடைவிடாது சாகாக்கலை அறிந்து அதில் தீவிர ஈடுபாடு கொண்டு பழகி வரவேண்டும். மனிதன் எப்பொழுது தன்னறிவு கொண்டு தன்னை அறிந்தால் எந்த நேரத்திலும் மரணத்தை தவிர்க்கும் சூழ்நிலை உருவாகும். இந்த கலை அறிய ஒருவனுக்கு சிறந்த ஒழுக்கம் தேவை. கருணை வேண்டும். இரக்கம் வேண்டும். பக்தி வேண்டும். அன்பு வேண்டும்.



அனைத்து உயிர்கள் தன்னுயிர் போல் கருதும் சிறந்த குணம் வேண்டும். நாடி சுத்தம் வேண்டும். வாசி பயிற்சி செய்ய வேண்டும். யோக நெறிகள் ஆழ்நிலை தியானம் செலுத்த வேண்டும். சிவனருளையும் தாயின் அருளையும் எந்நேரமும் சிந்தனை செய்ய வேண்டும்.

சோம்பலைத் தவிர்க்க வேண்டும். தூக்கத்தை தவிர்க்க பழகுதல் வேண்டும். அச்சத்தை முழுதும் அகற்ற வேண்டும் பெண்ணுறவு முழுதும் விலக்க வேண்டும். சைவ உணவு மட்டும் ஒருவேளை எடுத்துக் கொள்ள வேண்டும். மனக்கட்டுப்பாடு அவசியம் செய்ய வேண்டும. வாசியின் நேர்மை அறிந்திருத்தல் அவசியமாகும். நாடிகளைப் பற்றி அறிந்திருத்தல். நாடிகளின் இயல்பினை புரிந்திருத்தல் வேண்டும். நாடிகளின் சிறப்பை அறிந்துக் கொள்ள வேண்டும்.

நாடிகள் என்ன என்பதையும், அந்த நாடிகளில் எத்தன நாடிகள் முக்கியமானவை என்பதையும் அவசியம் அறிய வேண்டும். நாடிகளின் நிலையை தெரிந்திருக்க வேண்டும். இந்த நாடிகளைப் பற்றி நாம் அறிந்தால் மானிடன் சாகாக்கலையில் தேர்வு பெறுவான். தேர்வு பெற்ற பின் அதனை செயல்படுத்தி முத்தியும் சித்தியும் பெற்று மகிழலாம் என்பது திண்ணம்.

நமது உடலில் எழுபத்திராயிரம் நாடிகள் பின்னலுடன் மேலும் கீழுமாய் உள்ளது. அவற்றுள் பத்து நாடிகள் முக்கியமானது. அந்த பத்தில் மூன்று நாடிகள் முக்கியமானது. அவை இடைகலை, பிங்கலை, சுழிமுனை என்பன. இதற்குத்தான் முக்கலைகள் என்று சித்தர்கள் கூறுகிறார்கள். இந்த மூன்று கலையில் மிக மிக முக்கியமான கலை சுழிமுனை கலையாகும். இடைகலை சந்திரநாடி ஆகும். பிங்கலை சூரிய நாடியாகும். நடு நாடியாகிய சுழிமுனை வன்னி அல்லது அக்கினி நாடி என்பர். இடைகலை நாடியும், பிங்கலை நாடியும் பிராணவாயு (உயிர்வளி) போக வரவும் நடத்துகிறது.

Koviloor Digital Library

சுழிமுனை நாடி எதுவும் வழங்காமல் அதன் பாதையான துவாரத்தை இயற்கையாக அடைப்புக்கட்டுள்ளது. மூலாதாரம் தொடர்ந்து வீணாதண்டுடே சென்று சிரசு உச்சியளவு முட்டி சுழன்று நிற்கும். இது மிக நுட்பமான நாடியாகும். இந்த நாடியின் குழாயிக்குள் குழாய் சொறுகினது போல் சித்திர நாடியும் வச்சிர நாடியும் இருக்கும். எல்லா நாடிகளுக்கும் ஆதாரமாக இந்நாடி நிற்கும். கீழ்மூலாதாரம் முதல் தொடங்கி மேலுள்ள பிரமரந்திரம் வரை துவாரங்கள் அடைப்பட்டுள்ளது. இந்த அடைப்பட்ட ஊசிமுனை திறந்து முத்தியை வழங்குவதே இந்த நாடியின் சிறப்பாகும்.

இனி இந்த மூன்று நாடிகளின் இயல்பை சித்தர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை அறியலாம்.

ஈஸ்வர மெய்ஞ்ஞான நாடியில் கீழ்வரும் பாடலை நீங்கள் படித்து உணர்ந்து அறியுங்கள்.

''மூல மெழுபத்தீராயிரமாம் நாடி
முளைத் தெழுந்து வலை போலே முடிந்தோட - 2

சாற்றுகிறேன் ''வாதஞ் சந்திரனேயாகும்''
தனித்த நின்ற ''பித்தஞ் சூரியனே'' ஆகும்.
ஏற்றுகின்ற ''வாசியது சீதமாகும்''
இயம்பினோம் நாடியின் தன்னியல்பு தன்னை
மாற்றுகின்ற் ''வாதமது அடிதானென்று
வகுத்துரைப்பார் ''பித்தமது நடுத்தான் என்றும்
போற்றுகின்ற சீதமது முடி தானென்று
புகன்றிட்டார் சித்தரெல்லாம் புகன்றிட்டாரே - 3

என்று ஈஸ்வரஞான நாடியில் 29இல் ஓதப்படுகிறது.

மூலம் முதல் எழுபத்தீராயிரம் நாடிகள் வலை போல் முடிந்து ஓடும் என்பதோடு, வாதம் சந்திரன் ஆகும் பித்தம் சூரியனாகும். வாசி கபமாகும். இது நாடியின் இயல்பாகும். வாதம் அடி என்பர். பித்தம் நடு என்பர். கபம் முடியென்பர் என்று அனைத்து சித்திகளும் கூறுவர் என்று ஓதுகிறார்.

இடைகலை நாடி எமனாகும். பிங்கலை நாடி மலமாகும். சுழிமுனை நாடி முத்தி வழங்கும் நாடியாகும். இதனை சுப்பிரமணியர் யோகஞானம் என்னும் நூலில் ஓதுகிறார். அதனை கவனிக்க,

''கூரான ''இடைகலையே காலனாகும்''
குறிப்பான பிங்கலையே பாசமாச்சு
பேரான சுழிமுனையே முத்தி''
பேசாத குல தெய்வந் தன்னை பாரே - 370
சுப்பிரமணியர் சிவம் யோக ஞானம் — *500*

இடைகலை நாடி எமன் என்பர். ஏனென்றால் இந்த கலையில் மூச்சு 16&மாத்திரை செலவாகிறது. பிங்கலை பாசமாகும். இதில் *12* மாத்திரை செலவாகிறது. பிங்கலை பாசமாகும். நடுமுனை செயல்படுவதில்லை. இதனை செயல்பட வேண்டுமானால் மூச்சானது இடது கலையில் வாங்கி நிறுத்து பிங்கலை என்னும் வலது மூக்கில் விடல் வேண்டும். இந்த இருகலையும் சேர்ந்த போது சுழிமுனை செயல்படும் என்பதாம்.

அகப்பேய் சித்தர் பூரண ஞானம் 15இல் பாடல் இங்கு தருகிறோம் படித்து உணர்க.

''இடைகலை பிங்கலை சுழிமுனையெது
வென்றாக்கால்
இன்பமுறுஞ் ''சோடசத்தின்'' பொருளாகும் - 4
''இடைகலை பிங்கலை சுழிமுனை யுச்சிநடு வாதி
இக்கலை யறிந்து ணர்ந்தவ்விடத்தில் நில்லே - 11
அகப்பேய் சித்தர் பூரண ஞானம் — *15*

இடைகலை பிங்கலை சுழிமுனை என்பது உச்சிநடு — ஆதி என்பதை அறிந்து உணர்ந்து அவ்விடத்தில் நின்று உணர்ந்துக் கொள்ளவும். முக்கலை நாடிகள் சோடசம் என்னும் பதினாறு கலை நிரம்பிய சோமனின் அமுத கலைப் பொருளாகும்.

நாடிகள் நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென்ற கீழ்வரும் சித்தர் பாடல் படித்து அறிக.

ஏத்தினாற் பன்னிரண்டு கதிருக்குள்ளே
யீரெட்டுக் கலை யடங்கு மியக்க மில்லை
மாத்தினா ரிடக்கலைப் பூரகம் செய்
மைந்தனே பின்கலைப் பூரகம் செய்
தேத்தினார் சுழிமுனையிற் கும்பகஞ்செய்

Koviloor Digital Library

சிவயோக வாழ்க்கையினிற் சேர்ந்து போகும் காத்தினால் இறப்பதுவும் பிறப்பதாச்சு – என்று கூறப்படுகிறது.

சூரியன் பன்னிரண்டு கலையாகும். சந்திரன் கலை பதினாறாகும். சந்திர கலையானது சூரியக்கலையில் அடங்கும். இடதுகலை இடது நாசியில் இழுக்க வேண்டும். வலது கலையில் வலது நாசியில் மூச்சு விடுதல் வேண்டும். நடுநாடியான சுழிமுனையில் வாசியை நிறுத்த வேண்டும். அப்படி செய்தால் மானிடனுக்கு சிவயோக வாழ்க்கையில் இணைக்கும். இந்த மூச்சினால் இறப்பதுவும் பிறப்பதுவும் நிகழ்கின்றன. மேலும் சில செய்திகள் சித்தர் நூலில் கூறப்படுவதையும் உணர வேண்டும்.

"ஆனாலும் என் மகனே அறிவுள்ளோனே
அம்மையெனுங் "குண்டலித்தாயருளினாளே"
மானாகி நடுவனையில் மனதை வைத்து
மாறாமல் அனுதினமும் பார்த்திடாயே – 5

பார்த்திடுவாய்ச் "சந்திரனை ரவியிற்றாக்கிப்"
பாலகனே "சுழிமுனையில்" நிறுத்திக் கொண்டு
காத்திடவே "கும்பத்திலிருந்தால்" மைந்தா
"கனலெழுந்து மேலேறிக் கபாலமுட்டி"
வேர்த்திடும் நீ ரதுவல்லோ வமுதமாகும்.
மெய்யான ஊசிநீ ரதனி லென்று
கோர்த்திட்டார் கோடான கோடி சித்தர்
குறிப்பறிந்து "சுழினையிலே" கூடுவாயே – 6

சித்தர்கள் தனது மாணவர்களை உறவு முறையில் மகனே என்று அன்பு மிகுதியால் அழைப்பார்கள். அறிவுடைய மகனே சுழிமுனையான நடுவனையில் தீவிரமாக மனத்தை செலுத்தி நாள் தோறும் வாசியோகம் செய்வாய்.

சந்திரக்கலையை இடது நாசியில் இழுத்து சூரிய கலையான வலது நாசியில் தாக்கி சுழிமுனை என்னும் நடுநாடியில் நிறுத்த வேண்டும். இப்படி கும்பத்திலிருந்தால் தீயேறி கபாலத்தில் முட்டி நிற்கும் போது வேர்த்திடும். அதனால் நீர் போன்ற அமுதரசம் வரும். இதற்கு உண்மையான ஊசிநீர் என்று கூறுவர். இப்படி கோடிக்கணக்கில் சித்தர்கள் குறிப்பறிந்து சுழிமுனையிலே இருந்து வருவார்கள்.

முக்கலை நாடிகள் பூரகத்தில் 32 மாத்திரைகள் கணக்கில் இழுக்க வேண்டும். கும்பத்தில் 64 மாத்திரைகள் நிறுத்த வேண்டும. ரேசகத்தில் 16 மாத்திரைகள் என்று தெரிவது நலமாகும் என்பதை அறிய செய்தோம் என்பர். இச்செய்தியை சித்தர்கள் அருளிய வேதரகசிய நூல்களில் காணப்படுகிறது. அதனை இனி காண்க.

"கூடியே பூரகம் முப்பத்திரண்டு
குறியான கும்பகம் இதற்கு ரெட்டி
நாடியே ரேசகந்தான் பதினாறாகும்.
நலமான மாத்திரைகள் தெரிய சொன்னே – 7

அழுகண்ணி சித்தர் ஞான சூத்திரம் — 23

போகர் யோக ஞானம் என்னும் நூலில் முக்கலையும் அதன் செயல்முறைகளும் கூறுவது அறியத் தக்கது.

"வேறென்ற நினையாம" லிடையில் வாங்கி"
விதமான "சுழிமுறையிற் கும்பஞ்செய்து
கூறென்ற பின் கலையில் ரேகஞ்செய்
குருமுனிதான் சொன்ன படியுள்ள தாக்கு
வாறென்ற ஞாயிறு தான் திங்களுண்டு
மதியமுத மக்கினியோ வழிய லாச்சு – 37

பத்திக்கஞ் சந்திரனிற் பூரகஞ் செய்
பரிவான சூரியனில் ரேசகஞ் செய்
சந்திக்க அக்கினியிற் கும்பி யென்ன
சாற்றினேன் லட்சணத்தைச் சார்ந்து கேளே
உத்திக்கச் சந்திர கலை சோடகந்தான்
கூற்றத்தோரு சூரியகலை பன்னிரண்டே – 38

போகர் யோக ஞானம் — 120

இடைகலையில் இடது நாசியில் வாங்கி சுழிமுனை கலையில் கும்பகம் செய்து பின்கலையில் ரேசகஞ் செய்ய வேண்டும். குருமுனிவர் அகத்தியர் கூறியப்படி அகத்தில் தாக்க வேண்டும். ஞாயிறு என்ற சூரியகலை திங்கள் என்ற சந்திர கலையில் கலந்து மதியமுதம் அக்கினியால் அழிவு நேர்ந்தது. அதே போல் சந்திரக் கலையில் பூரகம் செய்து சூரியக்கலையில் ரேசகம் செய்து நடுகலையாகிய சுழிமுனையில்

Koviloor Digital Library

கும்பகம் செய்து அதன் இயல்பில் சார்ந்து கேள். சந்திரனில் கலை 16ஆகும். சூரியனின் கலை 12 ஆகும் என்று செய்தியை ஓதுகிறார்.

சச்சிதானந்தர் சுழிமுனை சூத்திரம் 31இல் நாடியின் தொழிலினை கூறுகிறார். அவரின் பாடலைக் காண்க.

''இருநான்காய் வருவதோர்'' முடிச்சியாய் நின்று
இடையும் பிங்கலையும் மாறிக் கீழ்மேலாகப்
பெருவிரலாம் நாடி வழியோடி மீண்டும்
பின்புருவ மதுவெளியாய் நாசி பாய்ந்து
அருபமா யிருபத்தோராயிரத்து
அறுநூறு மப்படியே யியங்கி யாடி
வருகிறதும் போகிறதும் பார்த்தறிந்த
மகத்தான குரு பதத்தை வணங்கிப் போற்றே - 4

உச்சி தொட்டு இடைகலையும் பிங்கலையும் எதிரும் புதிருமாக பெருவிரல் தொட்டு மீண்டும் பின் புருவமது வெளியாய் மூச்சு பாய்ந்து அருவமாக இருபத்தோராயிரத்து அறுநூறு அப்படியே இயங்கியாடி வருவதும் போவதுமாக இருக்க, அதனை அறிந்து பெருமையுடைய குரு பதத்தை வணங்கி போற்றுக என்று கூறப்படுகிறது.

போகர் யோக ஞானம் என்னும் நூலில் மூன்று நாடியின் செயலால் தான் மானிடனுக்கு முத்தி உண்டாகும் என்று ஓதும் வேத வடிகள் கூர்ந்து நோக்குக.

''சத்தி யென்ப ''இடைகலைதான் மதித்தியாகுந்
தருவான ''பிங்கலைதா னாதித்தன்தீ
சுத்தியாய் ''நடுநின்ற அக்கினி தீ
சுடர் மூன்று மொன் றான லதுதான் முத்தி - 36
போகர் யோகஞானம் — *120*

சக்தி என்று ஓதப்படும் இடக்கலை தான் சந்திரத் தியாகும். சிவம் என்று ஓதப்படும் பிங்கலைத் தான் சூரியத் தியாகும். அக்கினி என்ற சுழிமுனை தான் வன்னித் தியாகும். இந்த மூன்று சுடர்கள் எப்பொழுது இணைந்து நிற்கிறதோ அப்பொழுது தான் முத்தி என்று கூறப்படும் என்பதாம். மானிடன் சாகாமல் இருந்தால் தான் முத்தி பெற முடியும். செத்தால் முத்தி கிடையாது. சாகாமல் இருந்து பெறும் முத்திக்கு மறுபிறவி இல்லை. செத்து பிறக்கும் இவர்களுக்கு பிறவி வந்து கொண்டேயிருக்கும். மானிடனுக்கு மலம் தேக உயிரிலும் ஒட்டிக் கொண்டு தேயாமல் இருக்கும் வரை இறந்து பிறந்துக் கொண்டே தான் இருப்பர். நாம் சாகாமல் இருக்க சாகாக்கலையான மேம்பாடுடைய உயர்ந்த கல்வியை குரு மூலமாக பெற்றுக் கொண்டேயாக வேண்டும். அகத்தியரின் பாடலில் கூறும் செய்தியை கவனிக்க வேண்டும்.

''காச்சப்பா மூலமென்ற வன்னி தன்னாற்
காய்ச்சியே அத்தேகம் கசடு நீங்கும்
போச்சப்பா கசடதுதான் நீங்கிப் போனாற்
போத மென்ற ஞானநெறி புனிதமாமே - 20
அகத்தியர் பஞ்சாட்சரம் — *37*

மூலம் என்னும் வன்னிக் கொண்டு வாசியோக நெறியினை கைக் கொண்டால் தேகத்தின் கசடு என்ற மலம் விலகும். தேகத்தின் மலம் முழுதும் அகன்று விட்டால் ஞான என்ற சிவஞான நெறியானது சுத்தமடையும் என்பதாம்.

முத்தி பெறுவதற்கு கொங்கணர் ஓர் வழி கூறுகிறார். அதனை நீங்கள் அனுசரித்தால் வரும் பிறவியில் முத்தி பெறலாம் என்பதை,

''தானென்ற பரமறியான் மிலேச்சரெல்லாம்
சாதமாய்க் கவுனிக்கும் கவள மீய்ந்தல்
வாறென்ற வெளி கடந்து அறிவிற் சேர
மாறு சென்மம் எடுத்து முத்தி சேரும் சேரும் - 15
கொங்கணர் உற்பத்தி ஞானம் — *21*

சித்தர் நிலையினை சாறும் சிவயோகிகளான கெவுனிக்கு பசியால் வந்து கேட்கும் போது ஒருகவள சாதம் இல்லையென்று கூறாது உணவிட்டால், உணவிட்ட அந்த மானிடனும் மறுசென்மம் எடுத்து பின்முத்தி உண்டாகும் என்பதை தெரிவிக்கப்படுகிறது. பசியாற்றிலின் பெரும் செல்வம் கிடைப்பது மரணமில்லா வாழ்வாகும்

''சாகாத கல்வியைத் தாங்கற்க வேணும்
வேகாத சிந்தை படைத்திட வேணும்

Koviloor Digital Library

கோகாமி யத்தைக் குறைத்திட வேணும்
ஆகாத மட்டைக் கறிவதுண் டாமே - 102
திருமூலர் குருமூப்பு நூல் 200

திருமூலர் கூறியவாறு சாகாத கல்வி தன்னறிவுக் கொண்டு தன்னறிவால் உணர்ந்து அறிந்து கற்க வேண்டும். மனப்புழுக்கத்தை நீக்கி மனக்கட்டுப் படுத்தி நற்சிந்தனையில் மனம் செலுத்திது நிற்க வேண்டும். கோகாமியம் என்ற பஞ்ச மலம் அறவே நீக்கிவிட வேண்டும். இதனை அறியாதவன் மட்டைக்கு நிகராவன் என்பதாம்.

மானிடனுக்கு மூன்று கலைகள் முத்தி தர வல்லதாகையால் அதனை அறிந்து வாசி பழக்கம் செய்தால் மூன்று நாடிகள் தூய்மை உண்டாகும். நாடிகள் தூய்மைப் பெற்ற பின் சிவராச யோகம் பயில முயற்சி எடுத்து வந்தால் மேற்கண்ட முக்கலை நாடிகள் முத்திக்கு அழைத்து சென்று நிற்க வைக்கும் என்பதை மானிடன் உணர்ந்தால் அப்பொழுதே மரணமில்லா பெரு வாழ்க்கை கூடி சாகாக்கல்வியின் பயனை அடைந்து முத்தியும் சித்தியும் பெற்று மகிழ்வுறுவார்கள் என்பது திண்ணமாகும். எனவே மானிடன் முடிந்தளவு சாகாக்கல்வி உணர்ந்து செயல்பட இறையருளை வேண்டி இந்த இனிய செய்தியை நிறைவு செய்கிறோம்.

திருச்சிற்றம்பலம்

29. சிவராச யோகம்

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
A. No. 45040

"சாகா திருப்பதற்கு தான் கற்குங் கல்வி யன்றோ
வாகா மெய்க்கல்வி வகுத்றி நீ கன் மனமே - 66
இடைக்காட்டு சித்தர் பாடல் — 130

சிவராச யோகத்திற்கு அரசாங்க யோகம் என்றும், குரு ராச யோகம் என்று, இராஜாங்க யோகம் என்றும் சித்தர் பெருமக்கள் ஓதியுள்ளனர். யோக நெறிமுறையில் 64 யோகங்கள் இருப்பதாகவும் சித்தர்கள் தங்களின் நூல்களில் பதிவு செய்துள்ளனர். அதனை இங்கு மேற்கோள் காட்டப்படுகிறது. கீழ்காண்க.

"பாராப்பா அறுபத்து நாலுயோகம்
பார்தனிலே பாராம லிறந்து போனார்
ஆரப்பா அறுபத்து நாலு யோகம்
அறைகிறேன் அகத்திய மாமுனியே கேளு - 5
சுப்பிரமணியர் சிவம்ஞானம் — 16

மேலும் சுப்பிரமணிர் சிவம் சிவயோக என்னும் நூலில் அறுபத்து நாலு யோகம் இருப்பதாகக் கூறுவது மக்கள் சீரு கெட்டு அலைந்து திரிந்து காணாமல் மடிவதற்காக கூறியுள்ளனர் என்று அவர் கூறுகிறார். அதனால் யாம் இராசாங்க யோகத்தை உங்களுக்கு எடுத்து கூறுவேன். யாரொருவர் அறியாமல் மாறு செய்து ஐம்பத்தோரட்சரமும் வேதமாகக் கூறாக சொன்னது போல் மனிதர் தன்னைக் கொல்வதற்கு ஒத்தவாறு கூறியுள்ளனர் என்று கூறுகிறார்.

"பாரே அகத்தியமா முனியே ஆறு
பத்தோடு நான்கு வித யோக மென்பார்
சீரு கெட்டுத் திரிந்து மவ ரிறந்து போவார்
செப்புகிறேன் ராசாங்க யோகம்
ஆரொரவ ரறியாமற் பேதஞ் செய்து
ஐம்பத்தோ ரட்சரமும் வேதமாகக்
கூராகவச் சொன்னதுபோல் மனிதர் தன்னைக்
கொல்லுவதற் கொப்பினை யாய்க் கூறினாரே - 11

மேலும் காகபுசண்டர் என்னும் சித்தர் தமது நூல் மெய்ஞ்ஞானத்தில் அறுபத்து நாலு யோகம் இருப்பதாக கூறிக் கொண்ட பலர் இறந்தார்கள். அறுபத்து நாலு யோகம் இருப்பதாக எண்ணி அதனை அறியாமல் பலர் அலைந்து கெட்டு அனேகர் கெட்டனர். இராசாங்க யோகம் அறிந்தவர்கள் கோடியில் ஒருவர் என்று கூறும் அவரின் அறிவுரைப் பாடல் காண்க.

Koviloor Digital Library

"பாரப்பா யிதை யறியாச் சித்தர் கோடி
பார்தனிலே யறுபத்து நாலு யோகம்
ஆரப்பா யிருக்கு தென்ற வெவ்வேறாக
அலைந்த லைந்து கெட்டவர்களனந்தங் கோடி
நேரப்பா ராஜாங்க யோகாந் தன்னை
நிலையறிந்து கண்டவனே கோடிக் கொன்று - 18

காகபுசண்டர் மெய்ஞ்ஞானம்
விளக்கம் — 80

மேல்கண்ட விளக்கத்தின்படி அறுபத்துநாலு யோக நிலை இல்லை யென்று அறிய வருகிறது. இருந்தாலும் சிலரால் கூறப்படும். யோகங்கள் இங்கு தெரிவிக்கிறோம்.

1. அடை யோகம்
2. மவுன யோகம்
3. சுழினை யோகம்
4. வாசி யோகம்
5. கெவுன யோகம்
6. அம்பிகை யோகம்
7. பரியங்க யோகம்
8. கேசரி யோகம்
9. சௌமிய யோகம்
10. அமுத யோகம்
11. சாம்பவி யோகம்
12. சிவராஜ யோகம்
13. கிரியா யோகம்
14. அங்கி யோகம்
15. புகை யோகம்
16. சடாதார யோகம்
17. அனுயோகம்
18. அட்டாங்க யோகம்
19. வாமி யோகம்
20. சந்திர யோகம்
21. சூரிய யோகம்
22. பஞ்ச நிலை யோகம்
23. பிராணாய யோகம்
24. நீர் தம்பன யோகம்
25. முத்தி யோகம்
26. சித்தி யோகம்

இதுபோன்ற யோகங்கள் நூல்களில் காணப்படுகிறது. அறிக.

சிவராச யோகம் மிகச் சிறந்தது:

சித்தர்கள் அனைவரும் எல்லா



யோகங்களை விட மிகச் சிறந்த யோகம் சிவராஜயோகமே என்பது கருத்தாக உள்ளது. அதனை கீழ்வரும் மேற்கோளால் அறியலாம்

"ஆச்சப்பா கம்பகமுந் தீர்ந்த பின்பு
அரகரா சுழிவாசி நிலையில் நிற்கும்
பேச்சப்பா ஒன்றுமில்லை வாசி யோகம்
பெருமையுள்ள சிவராஜ யோகமாகும்
போச்சப்பா மற்ற மற்ற யோக மெல்லாம்
பொய்யாச்சு தென்பதல்லா சிறந்தில்லை
காச்சப்பா நடுவாசி யுண்ணாவ் மேலே
காட்டினேன் சிவராசயோகம் காணே - 15

அகத்தியர் மெய்ஞ்ஞானம் — 18

இரேசகம் பூரகம் கும்பகம் தீர்ந்து பின்பு சுழியில் வாசி நிற்கும். அதனால் அதற்கு வாசியோகம் என்று பெருமையாகக் கூறப்படும் யோகமே சிவராசயோகமாகும். இதனால் வேறுபட்டு நிற்கும் பிறயோக நெறிவழிகள் பொய்யாய் போச்சு. அவைகள் அனைத்தும் சிறப்பானதாக கருதமுடியாது. உண்ணா நாவில் மேல் வாசி நிலை எடுத்துக்காட்டியதை சிவராச யோகமாகும் என்பதாகும் என்று அகத்தியர் கூறுகிறார்.

சிவராச யோகத்தின் பலன்கள்:

அகத்தியர் தமது மெய்ஞ்ஞானம் என்னும் சிறு நூலில் சிவராசயோகத்தின் நன்மைத் தரும் பலன் எடுத்துக்காட்டுகிறார்.

"பாரப்பா புலத்தியனே ராசயோகம்
பன்னினோர்க்கு வாத முறை பரிசு காணும்
சீரப்பா ரேசகபூ ரகமுங் கும்பகஞ்

Koviloor Digital Library

செய்வோர்க்குச் சுழிமுனையுந் திறந்து நிற்கும்
சாரப்பா அடிமூலம் நடுவாம் மேலும்
சமர்த்தருக் கெட்டு அதிலைந் தோணும்
சீரப்பா சிவராச யோகத் திற்குச்
செப்புவேன் பேர் வகைத் தெரிந்துகொள்ளே - 9

எமது மாணவனே புலத்தியா கேள. இராசயோகம் செய்தவர்க்ளுக்கு வாதமுறை பரிசாகக் கிடைக்கும். அதிலே ரேசகம் — பூரகம் — கும்பகம் செய்வோருக்கு சுழிமுனையும் திறந்துவிடும். சிவராசயோகத்தில் சார்ந்து நிற்பவர்களுக்கு அடிமூலம் நடுமூலம் கெட்டு அதில் ஐந்துவித யோகங்கள் தெரியவரும் என்று ஓதுகிறார்.

மேலும் நமது இராமதேவர் பரைஞான கேசரி என்னும் நூலில் சிவராச யோகம் கொண்டவர்களுக்கு கேசரி யென்னும் வாலையை கண்டுதொழும் பேறு கிடைக்கும். சூரியன் — சந்திரன் — ஆக இரண்டும் கலந்து தோய்ந்த நிலையில் ஆகாசம் தெரிவிக்கும் சுழிமுனையும் இணைந்த நிலையை மும்மண்டலமாகும். இந்த நிலை உமது அகத்தில் முக்கோண வடிவத்தில் மெய்யாகத் தெரியும். அண்டமென்னும் திரிகூடம் என்று கூறப்படும் ஆக்கினையில் அடங்கியுள்ள பரிதி — மதி — சுடர் ஆக இவைகளைப் பற்றி கேள்.

"கொண்ட தொரு பரைஞான கேசரியைத் தானும்
கூர்மையுடன் கண்டு தொழ நேர்மை தனைச் சொல்வோம்
கண்டதொரு சூரியனுஞ் சந்திரனு மிரண்டு
கலந்தோடு மாகாசச் சுழிமுனையது ஒன்றும்
விண்டதொரு மூன்றுமும் மண்டலம தாகும்
விபரமுடன் உனதிடத்தில் மெய்யாகப் பாரு
அண்ட மெனுந் திரிகூட ஆக்கினைதன் னதிலே
அடங்கி நின்ற பகுதிமதி சுடரதனைக் கேளு - 10

என்று கூறி மேலும் அடுத்துவரும் பாடலில்

"கேளடா சதுரகிரி கொடுமுடிதன் னதிலே
கிருபையுடன் வாழுகின்ற இடைகலை பிங்கலையும்
சூளடா சுடரான சுழிமுனைதன் மீதில்
துலங்கு கின்ற விபரமதை சூசக மாய்க் கேளு
பாளடா யிடையான சந்திரனார் சேரில்
பஞ்சபூ தங்களொடு அறிவுமிக வொடுங்கும்
வாளடா வலமான சூரியனார் சேரில்
மகத்தான ஐம்புலனும் மறிவுமிகு வருமே - 11

சதுரகிரி கொடுமுடி என்னும் தலத்திலே கருணையுடன் திகழ்கின்ற இடைக்கலை — பிங்கலை — சுழிமுனை ஆக இவைகளைப் பற்றிய செய்திகள் கூறுவோம்.

பாளாக (பாழாக) செல்லுகின்ற சந்திரன் சேர்ந்தால் ஐம்பெரும் பூதங்கள் மற்றும் அறிவும் அதிகமாக ஒடுங்கும். வாழ்வு தருகின்ற வலத்தில் சூரியன் சேர்ந்தால் பெருமைமிகும் ஐந்து புலன்கள் அறிவும் மிகவும் அதிகமாகும் என்று கூறுகிறார்.

அடுத்து வரும் பாடலில் மேலும் சில செய்திகள் தெளிவாக விளக்குகிறார்.

"அறியாம விடகலையும் பிங்களையும் சுடி
அசையாமல் வலமாக அந்தரத்தி லேகி
நெறியான சுழியினிடம் ஒடுங்குவதே யானால்
நின்றிலங்கு மறிவுடனே தசவாய்வு ஒடுங்கும்
குறியான தொடுங்குவது இயங்குவதோ யில்லை
கூர்மையுட னிதை யறிந்து குருவருளைப் போற்றிப்
பறியான பரைஞான கேசரியைக் கண்டு
பத்தி கொண்டு யிருகலையும் பதிப்பதனாற் சித்தே - 12

அறியாமையில் நிகழ்கின்ற இடைகலையும், பிங்கலையும் ஆக இரண்டும் கலந்து கூடி வலமாக நின்று அந்தரத்தில் சென்று வழியில் முறையாக சுழிமுனையில் ஒன்றினால் எப்பொழுதும் விளங்குகின்ற அறிவுடன் பத்து காற்றுகள் ஒன்றி நிற்கும் அவைகள் பின்பு முக்கலைகள் ஒடுங்குவதோ இயங்குவதோ கிடையாது. மிகுந்த நுண்ணிப்பாக இதனை அறிந்து குருவின் அருளை போற்றி மேல் மூலத்தில் காண்கின்ற பறைஞான கேசரியென்னும் வாலையைக் கண்டு பத்தியுடன் இருகலையும் பதித்து கண்டால் சித்திநிலை உண்டாகும் என்று ஓதப்படுகிறது.

Koviloor Digital Library

அடுத்து வரும்பாடலில் மேலான நிலைக்கு எடுத்துச் செல்லும் என்றும் பூரணத்தின் ஆன்ம தரிசனம் உண்டாகும். முத்து போன்ற உறுதியான தூய்மையான தேகம் மாறும் என்றும், வாசிநிலை தீர்க்கம் பெற்று திகழும் என்றும், வித்தாக விளங்குகின்ற பரைஞான கேசரியில் இணைந்து நேர்மையுள்ள வாசியானது தீபம் போன்று அதில் விளங்கும் என்றும், அந்த தீபமே வாசிவழியாக பக்குவமாய் தான் அதில் புகுந்து கேசரி என்ற மேல் மூலத்தில் இணைத்துக் கொள்ள என்பதைக் கீழ்வரும் பாடலால் அறிக.

"சித்தாகுஞ் சிவமாகுஞ் சிவயோகமாகும்
சிவ சிவா பூரணத்தின் தெரிசனமுமாகும்
முத்தாகுஞ் தேகமது சித்தி மயமாகும்
மூர்க்கமுடன் வாசியது தீர்க்கமுடணையா
வித்தாகும் பரைஞான கேசரியிற் சேர்ந்தால்
விபர முள்ள வாசியது தீபமதிற் புகுக்கும
பந்தாகும் தீபமது வாசியதின் வழியாய்
பகுக்குமாய்த் தானிரங்கி மூல மதிற் சேரும் - 13

என்று எடுத்துக் காட்டுகிறார். மேலும் அடுத்து வரும் பாடலில் தீபவொளியினால் பெரும் பயன்கள் என்ன வென்ற செய்தியையும் பாடல் மூலம் உணர்த்துகிறார். அதனையும் வாசித்து அகவுணர்வு பெறுக.

"மூல மதிற் சேர்ந்தந்தத் தீபவொளி தானும்
முத்தி கொண்ட பரைஞான கேசரியிற் சென்று
ஞால மெனும் புருவ நடுப் பிடரியதி னோரம்
நடுவான பீடமடா பிரம மதியின் பீடம்
சீலமெனும் பீடமதில் நடுவுமது வாகி
சிவஞான குரு தேசி சக்தி சிவமாக
கோலமுடன் குடியிருந்த பாகமதை யறியக்
குறியொன்று சொல்லுகிறோம் நெறியாக கேளு - 14

இராமதேவர் பரைஞான கேசரி — *100*

மேல்மூலத்தில் சேர்ந்த அந்த தீபவொளியானது முத்தியாகும். முத்தி பெற்ற ஆன்ம தீபவொளி பரைஞான கேசரியிற் சென்று ஞாலம் என்னும் புருவ நடுபிடரியதின் ஓரம் நடுவாக திகழும் பீடமாக நின்று விளங்குகின்ற அதுவே பிரம்மதியின் பீடமாம். தூய்மையாக திகழ்கின்ற பீடமதில் நடுவுமது வாதியான சிவஞானம் பெற்று குருதேசி சக்தி சிவமாக திகழும். அதனுடைய அழகு நிலையான அற்புதக் கோலத்தின் குடியிருக்கும் பகுதியை அறியக் குறிப்பு ஒன்று சொல்லுகிறேன். அதனை முறையாகக் கேள் என்று கூறுகிறார்.

யோகம் செய்வதில் உள்ள தவறான கருத்துக்கள்:

சுப்பிரமணியர் சிவம் தாம் எழுதிய சிவயோகம் என்னும் சிறுநூலில் யோகம் செய்வதில் சில தவறான கருத்துக்கள் நிலவுகிறது. அதனை என்னவென்று அறிந்து யோகநெறி வழிகள் பின்பற்ற வேண்டும். தவறாகக் கூறப்படும் கருத்துக்கள் யாவை என்பதை இங்கு எடுத்துக் காட்டப்படுகிறது.

1. இந்திரியத்தை விடயத்தோடு இணைப்பது தான் யோகம் என்ற கருத்து உள்ளது

2. சிந்தனையை ஆன்மாவோடு கூட்டுவது தான் சிலரின் கருத்தாக உள்ளது.

3. பிராணவாயு அபான வாயுவோடு கலக்கச் செய்வது தான் யோகம் என்று சிலரின் கருத்தாக உள்ளது.

4. மேற்கண்ட யோக செய்திகள் யார் சொல்லக் கூடும். யோகம் நெறி அறியாத மட்டைகள் கூறுவார்கள் என்று கூறுகிறார். பாடல் காண்க.

"கூரப்பா இந்திரியத்தை விடயத் தூடே
கூட்டுவதே யோகமெனக் கொண்டார் சிலவோர்
தேரப்பா சிந்தையதை ஆன்மாவோடு
சேர்ப்பதுவே யோக மெனச் செய்தார்சில்லோர்
மாரப்பா பிராணவாயு வோடு அபான
வாயுவையுந் தான் கலக்க யோக மென்பார்
ஆரப்பா சொல்வார்களிதனை யெல்லாம்
அறியாதார் யோக மெனச் சொல்வார் காணே - 6

சுப்பிரமணியர் சிவம் சிவயோகம் — *40*

மேலும் சுப்பிரமணியர் சிவம் அடுத்து

Koviloor Digital Library

வரும் பாடலில் மேல் கூறியவாறு செய்து வீணாக போனார்கள் என்றும் ஆண்டு கணக்கில் அதனை செய்து உடல்கள் உயிர் இழந்தனர் என்றும் கூறுகிறார். அதோடு யோகம் என்பது என்ன என்றும் கூறுகிறார். அதாவது என்னுடைய கருத்து எனன்வென்றால் சீவாத்மாவை பரமாத்துமாவுடன் கூட செய்வதே உயர்ந்த கருத்தாகும். அதனால் அந்த யோகம் சித்தியாகும். அதன் செய்தியை விளக்குகிறேன் என்று கூறுகிறார்கள்.

"காணப்பா இவையெல்லாம் யோக மல்லா
காசினியிற் செய்த லூத்தா ரநேக மாந்தர்
வீணப்பா மாமங்க யோகஞ் செய்தும்
விழலாகத் தேகமது வீயலாச்சு
காணப்பா குமரன் சொல் சிவாத்மாவைத்
தானுமே பரமாத்மாவுடனே கூட்ட
மாணப்பா யோகமது சித்தியாச்சு
மைந்தனே அதன் விபரம் வழுத்துவேன் - 7

மேலும் அப்பெருமகனார் அடுத்துவரும் பாடலில் அதன் செய்தியை விளக்கி கூறும் பாடல் காண்க.

"வழுத்துவே னென்ன புறக் கரணந் தன்னை
வழிமுறையா யுட்கரணத் தியாக்கிம் பண்ணி
அழுத்தும் சீவான்மாவைப் பரமான் மாவில்
ஆக்கியக்கங் கருத்தாகப் பண்ண வேண்டும்
பழுத்திடும் வாயுவைத் தரித்தே மனத்திருத்திப்
பண்ணுவதே யோக மெனப் பகரலாகும்.
இழுத்தி முத்தும் வாசிவச மாகாதேங்கி
யிவ்வுலகத் திருந்து செத்தா ரெண்ணிலாமே - 18
சுப்பிரமணியர் சிவம் சிவயோகம் — 8

யோகத்தைப் பற்றி கூறுகின்றேன் கேட்பாயாக. புறகரணத்தை வழிமுறையாக யுட்கரணம் இயக்கம் செய்து அதன்மூலம் சீவாத்மாவை பரமாத்மாவுடன் ஒன்றச் செய்து வருவதோடு கூட வாசியை மனவுறுதியுடன் யோகம் செய்வதே சிவராசயோகம் என்று கூறலாம். தவிர மற்றபடி வாயுதனை இழுத்தெழுத்து அது வசமாக வில்லையே என்று ஏங்கி நினைந்து இவ்வலகத்திலிருந்து இறந்து போயினர். கணக்கில்லாதார் என்று மேற்கண்ட பாடலில் எடுத்து விளக்கி கூறுகிறார்.

மக்கள் மாண்டு வரக்காரணம் என்ன:

மக்கள் மாண்டு வருவதற்கு காரணம் என்னவென்றால் திருமணம் செய்துக் கொண்டு வாழ்ந்துக் கொண்டு வருபவர்கள் எல்லாரும் மாண்டு விடுவார்கள் என்பதை தேரையர் பூஜா விதியில் ஓதுகிறார்.

"பாழப்பா சமுசார வாழ்க்கை யாலே
பாங்காக மனிதரெல்லா மாளுவாரே" - 60
தேரையர் பூசா விதி — 75

"பெண்ணார் தன்னாசை தன்னை விட்டுவந்தால்
பேரின்பமுத்தி வழி பேசுவேனே - 69
உரோமமாமுனி குருநூல் — 100

பெண்ணாசை விட்டு வந்தால் முத்தி யென்ற பெருநிலை உண்டு செய்யும்.

மேலும் அகத்தியர் ஞான சைதன்யம் என்ற நூலில் மக்கள் மாண்டு வருவதற்கான செய்தியை படித்தறிக. அவரின் பாடல் காண்க.

"தலையறியா மாந்தருக்கு தவங்க ளில்லை
சாதிகுல மென்ற வருக்குச் சாவுதானே - 16

"சாவதுதா னெதினாலே வந்த தென்றால்
சண்டாள மனம் நிலைக்காந் தோடத்தாலே
ஆவதுவு மழிவதுவு விந்தாலப்பா
ஆச்சரியம் பாழ்குழியி லாசை யாலே
காவலது கட்டழிந்து போன தாலே
காட்சி யெல்லம் பொய்யாச்சு கண்டுபாரு - 17
அகத்தியர் ஞான சைதன்யம் — 51

தலையும் காலும் என்னவென்று அறியாமையில் உழலும் மக்களுக்கு தவங்கள் செய்ய தெரியாததாலும், சாதி மதம் என்று மாற்றத்தைப் பார்த்து இழிவு படுத்துவதாலும் அவர்களுக்கு மரணம் உறுதியாகும்.

சாவுகள் நிகழ்வது எதுவென்றால் சண்டாள குணம் கொண்ட மனமுடையக் குற்றத்தாலும் தோன்றுவதும் மறைவதும் விந்து என்ற பொருளாகும். மக்களை மரணம் உண்டாவது பெண்ணிடமுள்ள பாழாய்ப் போன குழியின் மேலுள்ள

Koviloor Digital Library

ஆசையின் மிகுதியாலும், உயிருக்கு காவலாக உள்ள இந்த உடல் கட்டு இழப்பதாலும் உண்மையாய் உள்ள இத்தேகம் மடிவதால் பொய்யானதை உணர வேண்டும் என்று அகத்தியரின் அறிவுரையால் அறிய வேண்டும். மேலும் அகத்தியர் அந்தரங்க திட்சையில்,

"உழலாதே யோனியுட ஆசை தீயில்
விழுவதை நீ மறந்து விடு உறுதியாக - 332
அகத்தியர் அதிட்சா விதி — 400.

பெண்களின் மரணக்குழியில் மோகம் கொண்டு உழன்று அதில் விழுந்தால் மீளுவது மிகக் கடினமாகும். அதனை மிகவும் உறுதியாக மறந்துவிடுக என்று கூறுகிறார். மேலும் அகத்தியர்

"மனிதனாய் பிறந்தகால் சாகாக் கல்வி
வாசிக்கும் சிவயோக வாழ்க்கை சேர்வான்
செனித்தமாஞ் சண்டாளப் பிறவியோர்கள்
செகத் திறந்து செனிப்பார்கள் செகந்தானே - 10
அகத்தியர் ஞான சூத்திரம் — 20

மேலும் நமது திருமூலர்,

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம் பட மெய்ஞ் ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்"
திருமூலர் திருமந்திரம் — 3000.

உடல் அழிந்தால் உயிரும் அழியும். உறுதியான மெய்யான ஞானம் மேற்கொள்ளாமல் விலகி நின்றால் அழிவு உண்டாகும். ஊனுடலை பாதுகாக்கும் வழியை அறிந்து, பின் உடலை பாதுகாத்தேன். அதுபோல் உயிரும் நீடிக்கச் செய்து அதன் ஆயுளை நீடிக்கச் செய்தேன் என்பதாம்.

அகத்தியர் கூறும் அறிவுரையாவது என்னவென்றால் மனிதனாக பிறவி எடுத்தவர்கள் (ஆணும் பெண்ணும் ஆக இருவர்களும்) சாகாத கல்வியை தெரிந்துக் கொள்ள வேண்டும். அப்படித் தவறினால் பிறந்தும் இறந்தும் மீண்டும் பிறவியெடுப்பார்கள் என்று அறிவுரைக் கூறுகிறார். இந்த அவல நிலை ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் சிவராச யோகம் அறிய வேண்டும்.

யோகம் செய்ய என்ன வேண்டும்:

நமக்கு இந்த ஊனுடல் திடமாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் யோகம் வரும். மனத்தில் உறுதி வேண்டும். வாசியோகம் சித்திக்கும். அப்பொழுது தான் அரவம் என்னும் பாம்பினை விட்டோட்ட முடியும். இந்த உடல் போனால் உனக்கு திடம் ஏது என் இறைவா என்று திருவள்ளுவப் பெருமகனார் பஞ் சாத்தனம் 500இல் ஓதுகிறார். அவரின் பாடல் காண்க.

"சடமிருந்தா லன்றோ சாதிக்கலாம் யோகம்
திடமிருந்தா லன்றோ சித்திக்கும் வாசி
விடமான வரவம் விட்டோ ட்ட வேணும்
உடல் போனால் உனக்கு உறுதியே தாண்டையே
- 311
திருவள்ளுவ பஞ்சரத்தனம் — 500

முத்தி யாருக்கு கிடைக்கப் பெறுவார்:

முத்தி பெறும் தகுதி நிலையை போகர் சாராம்சம் என்னும் நூலில் ஓதியுள்ளார். அது யாருக்கும் கிடடும் எப்படி யுள்ளருவக்கு கிடைக்கும் என்று கூறியுள்ளதை அதன் உண்மை நிலை அணுகி அறியவேண்டும். உலக மக்கள் அதனைக் கண்டும் காணாமல் செல்வதால் வீணாகிப் போகிறார்கள் என்பதை அவர் கூறும் ஞானமொழியை படித்தும் கேட்டும், புரிந்தும் அறிந்து ஆராய்ந்துப் பார்க்கவும்.

முத்தி பெற பேற மென்பாரு லகத் தோர்கள்
முத்தி புகுஞ் சேர்ந்த விடங் காணா காணோர்.
சத்தியென்ப இடைக்கலை தானாதித்தன் நீ
சுத்தி யாய் நடுநின்ற அக்கினித் தீ
சுடர் மூன்று மொன்று றானா லதுதான் முத்தி
பத்தியுட னிருந்தோர்க்கு யிதுதான் முத்தி
பாராத பேய்களுக்கு வேறு தானே - 36

முத்தி பெற வேண்டுமென்று உலக மக்கள் கூறுவார்கள். ஆனால் முத்தி காணுமிடம், சேருமிடம் காணார் காணாா. அந்த முத்தி நிலை அடைய விரும்புகிறவர்கள் இடைகலையான

Koviloor Digital Library

மதியை என்னும் தீயை அறிய வேண்டும். பிங்கலை என்னும் ஆதித்தன் தீயை உணர வேண்டும். நடுக்கலையான சுழினையான அக்கினித் தீயை அறிய வேண்டும். இவைகள் மூன்றும் அறிந்து பெறும் ஞானமுடையோர்கள் இவை மூன்றும் இணைக்கும் வழியறிந்தால் அதுவே முத்திநிலை உண்டாகும். இதன் நுட்ப வழியும் அறிந்தவர்கள் முத்தி உறுதியாகும். அறியாத மட்டைகளுக்கு வேறாக உணர்வார்கள் என்பதாம்.

மாறாட்டம் தரும் யோகமுறைகள்:

அகத்தியர் மெய்ஞ்ஞானம் என்னும் நூலில் மாறாட்டம் தரும் யோகங்களான சில யோகங்கள் கூறுகிறார். அதனைக் காணலாம்.

"தெரிந்து கொள்வாய் அடையோகம் மவுன யோகம்
செலத்தம்பன முதலான சுழினை யோகம்
புரிந்துக் கொள்வாய் அம்பிகையின் நாசியோகம்
பக்குவமாய்ச் செய்யுமொரு கெவுன யோகம்
வரிந்து கொள்வாய் தாரணியில் கௌரி யோகம்
மாறாட்டம் பண்ணிடு மிவ்வளவும் வீணே
புரிந்து கொள்வாய் இவ்வளவும் விட்டுமேலாய்
பேசு குரு ராச யோகத்தைக் கேளே - 11

அகத்தியர் மெய்ஞ்ஞானம் — 18

அடை யோகம், மவுனயோகம், செலத்தம்பன யோகம், மற்றும் சுழினை யோகம், அம்பிகையின் நாசி யோகம், கெவுன யோகம், கௌரி யோகம் ஆக இவைகள் போன்ற யோக முறைகள் மாறாட்டம் செய்யும். அதனால் இவ்வளவும் விட்டு அதற்கு மேலானதாகக் கருதப்படும் குருராசயோகமாகும். அதனைப் பற்றி இனி அழகாய் ஆராய்ந்து அறிவோம்.

யோகத்திற்கு தடையாக உள்ளவை நீக்குவது:

அகத்தியர் பஞ்சாட்சரம் என்னும் நூலில் யோகத்திற்கு தடையாக உள்ளவை தள்ள வேண்டும் என்று கூறுகிறார். அவைகள் யாவை என்று அறிவது நலம் ஆகும். அவரின் அறிவுரைப் பாடல் காண்க.

"தள்ளுவது யென்ன வென்று யென்ன வேண்டாம்
தன்னுறவு யில்லாத சமைத்தேரே
உள்ளுணர்வு யில்லாத உருப்பேய்தன்னை
உறுதியுள்ள வாசிநிலை யறியார்தன்னைக்
கள்ளுடனே அபீனுறக்கங் கொண்டு மோகக்
காலபதறிவாய் புலம்புங் கசடர்தன்னை
எள்ளளவு மனந்தனிலே நினைக்க வேண்டாம்
எள்ளுடனே மீனிறைச்சி தள்ளுந்தானே - 23

"தள்ளடா சத்துருவாய் நின்ற தெல்லாம்
தன் மனமே சாட்சியதாய்த் தள்ளுதள்ளு
அள்ளடா தள்ளுகிற தே தென்றாக் கால்
அப்பனே அபமிருந்து அகன்று போகும்
தெள்ளடா அவமிருந்து தணிந்து தானாற்
சிவ சிவா சிவயோக சித்தியாகும்
உள்ள உள்ளுணர் வாய்த் தன்னைப் பார்த்து
உத்தவெளி யாமதிலே ஒடுங்கி நில்லே - 24

அகத்தியர் பஞ்சாட்சரம் — 36

தள்ளவேண்டியது எதுவென்றால் தனக்கு உறவு இல்லாதவர்கள். சைவ நெறியல்லாதவர்கள். பிற சமயம் சார்ந்து நிற்பவர்கள். யோக நெறிகள் புரியாத பிற சமயத்தார்கள். அசைவ நெறியுடைய மக்களைத் தள்ள வேண்டும்.

உள்ளுணர்வு இல்லத உருப்படாதவர்களைத் தள்ளவேண்டும். திடமான நம்பிக்கை அற்றவர்கள், வாசியின் நேர்மை உணராதவர்கள், கள், கஞ்சா, அபின், உறக்கம ஆக இவைகள் உள்ளவர்கள், பெண் மோகம் கொண்டு அலைபவர்கள், காலபதறி வாய்ப்புலம்பும் பதர்கள் ஆக இவர்களைப்பற்றி நினைக்காமல் தள்ளப்பட வேண்டியவர்கள் ஆவார்கள்.

மேலும் அடுத்து வரும் பாடலில் தனக்கு பகையாக உள்ளவர்கள் தன் மனச்சாட்சியுடன் அவர்களைத் தள்ள வேண்டும். ஆக இவர்களையெல்லாம் தள்ளி நின்றால் அபமிருந்து அகலும். தெளிவுடன் அவமிருத்து தணிந்த தனாற் சிவ சிவ சிவயோகம் சித்தியாகும். உள்ளமுடன் உள்ளுணர்வால் தன்னைத் தான் அறிந்து பார்த்தால் உத்தமமான வெளியான வெளியில் ஒடுங்கி நிற்க

Koviloor Digital Library

வேண்டும் என்று அறிவுரை கூறுகிறார்.

யோகம் செய்ய ஏற்ற இடம் தேர்வு செய்தல்:

சிவராச யோகம் செய்ய ஏற்றயிடத்தை தேர்வு செய்ய வேண்டும். அந்த இடம் மிகவும் அமைதியாகவும், ஏகாந்த நிலை உண்டாக்குமிடமாகவும் இருக்க வேண்டும். எலும்புகள் — தீ — ஈ, எறும்பு — கொசு — சாம்பல் — உமிக்கரி — நீர் — காற்று இல்லாத தூய்மையான இடத்தை தேர்வு செய்ய வேண்டும் என்பதை கீழ்வரும் பாடல் மூலம் அறிக.

''ஏரப்பா ஏகாந்தத் தலமதாக
 எலும்பு தீ யியெறும்பு கொசுவு சாம்பல்
பாரப்பா உமிகரி நீர் காற்றில்லாத
 பரிசுத்த மான இடமதனைப் பாரே - 9

சுப்பிரமணியர் சிவம் சிவயோகம் — 40

யோகம் செய்யும் காலத்தில் பத்திய உணவு:

சிவயோகம் செய்யும் காலத்தில் கட்டுப்பாடான உணவுமுறைகள் கூறப்படுகிறது. எப்படியான உணவு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைக் கீழ்வரும் பாடலில் காண்க.

''போடப்பா சம்பா நெல்லரிசி யோடு
 புது பச்சைப் பயிரிடடுப் பொங்கல் செய்து
பாடப்பா பசுவின் நெய்யும் பசுவின் பாலும்
 பாங்கான சர்க்கரை தேன் கூட்டி யுண்ணே - 10

சுப்பிரமணியர் சிவம் சிவயோகம் — 40

மேலும் அகத்தியர் ஞான சைதன்யம் என்னும் நூலில் யோகம் செய்பவர்கள் அனுசரிக்க வேண்டிய நடைமுறை கட்டுப்பாடுகள் கூறும் பாடலைக் காண்க.

''நாட்டம் பார் சூரியனி லிவிதழ்தங் கொள்ளு
 நலமான அமுதமுண்ணு உறக்கம் பண்ணு
ஆட்டம் பார் சூடுகொண்டால் நெய்யைத் தேய்து
 அதன்பிறகு பயிர் தேய்த்துக் குளித்துப் போடு
ஊட்டம் பார் அமுதுடனே பாலுங் கொள்ளு
 ஒருவாரம் ஓர் முழுக்கு பஞ்ச கற்பம்
சிவராஜ யோகம் யிது தீர்க்கஞ்தானே - 14

அகத்தியர் ஞான சைதன்யம் — 50

சிவராச யோகம் செய்வோர் எப்பொழுதும் குருபீடமான இடத்தை நாட்டமுடன் இருக்க வேண்டும். வலது மூக்கில் வாசி நடக்கும் காலத்தில் மருந்துகள் உண்ண வேண்டும். வலது வாசிக்கு சூரியன் என்று கூறுவார்கள். உணவு கொள்ள வேண்டும். உறக்கம் செய்ய வேண்டும். உடல் சூடுகண்டால் பசு நெய்யைத் தேய்த்து சிறிது நேரம் பச்சைப் பயிர் மாவை தேய்த்து குளிக்க வேண்டும். பால் சாதம் உட்கொள்ளு. பஞ்ச கற்பம் வாரத்திற்கு ஒருமுறை தேய்த்துக் குளிக்க வேண்டும்.

சட்டைமுனி நாதர் பரிபூரணம் என்னும சிறுநூல் உணவு எடுத்துக் ொள்ளும் முறையைத் தெரிவித்து இருப்பதையும் கவனிக்கவும்.

''நீடுவதும் அன்ன மரை தண்ணீர் கால் தான்
 நிலைத்துண்ணு மொருபொழுது நீ தானப்பா - 6

சட்டை முனிநாதர் பரிபூரணம் — 6

அரைவயிறு அன்னம் எடுத்துக் கொள்ள வேண்டும். கால்வயிறு தண்ணீர் குடிக்க வேண்டும். நாளுக்கு ஒரு வேளை மட்டும் உண்ண வேண்டும் என்று அறிவுரை கூறுகிறார்.

கொங்கணர் தமது கற்ப நூலில் அவர்கூறும் பத்திய உணவுப் பற்றி கூறும் பாடல் காண்க.

''கேளப்பா சிறுகீரை பொன்னாங் கண்ணி
 கெடியான புளிாரை மிளகு சீனி
வாளப்பா பசும் பயிறு கட்டுமுப்பு
 வாற்குருவையரிசி சாதமடா பாலுமாகுங்
கோளப்பா மற்ற தொன்றுங் கொள்ள வேண்டாம்
 குடிலமாயத் தேகத்தைக் கெடுத்து போடும்
வேளப்பா யிது வரை கைமுறை தானாகும்
 விள்ளார்கள் சட்டைமுனி விளம்பினாரே - 50

கொங்கணர் கற்ப சூத்திரம் — 100

போகர் என்ற சித்தர் தமது நூலான வரலாறு கூறும் நூலில் கீழ்கண்டவாறு

Koviloor Digital Library


பத்தியம் கூறுகிறார். பாடலைக் காண்க.

“உன்னியோ பாலோடு நெய்யைக் கூட்டி
ஒருசேரக் சமைத்து உண்பாய் ஒருபோதப்பா
பன்னியே யிராமாறு பாலைக் கொள்ளு
பணியாரஞ் சிறுபயிறு பழமும் தேனாம் - 372

புளியாரை புளியரனை சீக்காய் கொழுந்து
நேம மென்ற நெல்லிக்காய்க் பசரைக் கீரை - 373

போக சித்தர் பெருநூல் வரலாறு — 7000

கொங்கணரின் கற்ப நூலில் சிறுகீரை — பொன்னாங்கண்ணி — புளியாரை — மிளகு — சீனி — பசும் பயிர் — கட்டிய உப்பு — குருவையரிசி சாதம் — பால் இவைகள் கொள்ளவும் மற்றவை தள்ளவும் என்று கூறியுள்ளார்.



அடுத்து வரும் போகரின் பாடலில் பால் — நெய்யைக் கூட்டி ஆக இரண்டும் சேர்த்து சமைத்து ஒருவேளை உண்ண வேண்டும். மறவாமல் பாலையும் கொள்ளவும். பணியாரம் என்பது ஆவியில் வேக வைத்த உணவுகள் எடுத்துக் கொள்க. கீரைகளில் புளியாரை — புளியாரணை சீயக்காய் கொழுந்து — நெல்லிக்காய் — பசரைக் கீரை ஆக இவைகள் எடுத்துக் கொள்க என்றும் கூறுகிறார்.

வடலூர் வள்ளல் பெருமான் கீரைகளில் புளியாரையும் — மஞ்சள் கரிசாலங்கண்ணி — மற்றும் — தூதுவளையும் எடுத்துக் கொள்க என்று கூறுகிறார். வல்லாரை மருந்தாக செய்து உண்ணலாம். வல்லாரை நன்றாக உப்பிட்டு தண்ணீரில் சிறுநேரம் ஊறவைத்து அலம்பி எடுத்து பச்சையாக உண்ணலாம். காரட்டின் நறுமணம் அதில் வீசும். அறிவு விளக்கமும் நினைவாற்றலும் உண்டாகும்.

பஞ்ச கற்ப மூலிகைப் பொடி:

சுந்தரானந்தர் என்னும் சித்தர் வாரம் ஒருமுறை பஞ்ச கற்ப பொடியை பாலில் காய்ச்சி அதனை தலை முதல் காலடி வரை நன்றாகத் தேய்த்து வென்னீரில் அல்லது ஓடும் நீரில் அல்லது அருவிகளில் குளிக்க வேண்டும். பஞ்ச கல்ப பொடியானது கீழ்வருமாறு செய்துக் கொள்க.

1. வெண் மிளகு 2. கடுக்காய் 3. கஸ்தூரி மஞ்சள் 4. வேப்பரிசி (வேப்பங்கொட்டை பருப்பு) 5. நெல்லி வற்றல் ஆக இவைகள் ஐந்தும் சமஅளவு எடுத்து நன்றாகப் பொடி செய்துக் கொண்டு வைத்து பாலில் பொடியிட்டு கொதிக்க வைத்தபின் அடி முதல் தலை உச்சி வரை நன்றாகத் தேய்த்துக் கொண்டு அரைமணிநேரம் கடந்த பின் குளியல் செய்தால் தேகத்தின் வெப்பம் தணிந்து பிராணாயம் செய்ய துணையாக உதவும் என்று எடுத்துக் காட்டியுள்ளார். இனி அவரின பாடல் காண்க.

“தானென்ற தலைமுழுக வரிசை கேளு
சாதகமாம் மிளகோடு கடுக்காய் மஞ்சள்
வேனென்ற வேப்பரிசி நெல்லிக்காயும்
மீறாத சமபாகம் நிறுத்திக் கொண்டு
கோனென்ற யாவின் பால்விட்டு ஆட்டிக்
குமரவே முழுகி வர பட்சந்தோறும்
ஊனென்ற நெய்வார்த்து வாரந்தோறும்
உத்தமனே பசும் பயர்க்காய்ப் பாகம் பண்ணே - 36

சுந்தரானந்த கற்பம் — 100

இதுவரையில சில முக்கியச் செய்திகள் சொல்லி வந்தோம். யோகத்தன் மூலம் வரும் சில சிக்கலை தீர்ப்பதற்கான வழிமுறைகளும் பாதுகாக்கும் முறைகளும் கூறினோம். இனி யோகத்தைப் பற்றியும், அதனை எவ்வாறு தொடங்க வேண்டும் என்பதையும் அறிவிப்பதே இனி கூறுவோம்.

Koviloor Digital Library

யோகம் என்றால் எவ்வாறு கூறுவர்:

தோலுடம்பில் புரு மையத்தில் தீப ஒளிக் கண்டால் யோகமென்ற பெயராகும் என்று சுந்தரானந்த சுத்த ஞான மென்னும் கூறும்பாடல் காண்க.

''ஊனென்ற புருவ மையத் தமர்ந்திருந்து
ஒளிக் கண்டால் யோகம் மென்ற நாமமாச்சு
கானென்ற ஞானமென்ன தலங்களாறும்
கண்டாக்கால் ஞானி யென்று சொல்லலாமே'' - 7
சுந்தரானந்த சுத்த ஞானம் — 51

அகத்தியர் பூசா விதியென்னும் நூலில் யோகத்தால் ஞானபீடம் பெறலாம். ஞானபீடமே நமக்கு சச்சிதானந்தம் பெறக் கூடிய வரையின்றி அதற்குப் அப்பாலும் செல்ல வழிக் காட்டக் கூடியது என்பதைக் காண்க.

''தானென்ற யோக மல்லா ஞான பீடம்
சச்சிதா னந்த வரைக்கப்பா லேறும் - 181
அகத்தியர் பூசா விதி — 200

அகத்தியர் ஞான சூத்திரம் என்னும் சிறுநூலில்

குருவிருக்கும் இடந்தானே புருவமையம்
கூடு வலக் கண் தானே சீவசாட்சி
திருவிருக்கும் மூலமல்லோ ஞான சித்தி
சிங்கு வங்கு மென்றானாற் பேறா முத்தி
கருவிருக்கும் மவுனத்தி விந்த மார்க்கம்
கைகாட்டிச் சொல்லுவதற்கும் அறிவே ஆசான் - 7
அகத்தியர் ஞான சூத்திரம் — 8

புருவ மையம் என்பது குரு குடியுள்ள இடமாகும். இதற்கு வலக்கண்ணில் திகழும் சூரியக் கலைத்தான உயிர் நாடியானது சாட்சியாக உள்ளது. திருவென்றுக் கூறப்படும் மேல் மூலமே ஞானசித்தி தரவல்லது. இதற்கு சிங்கென்றும், வங்கென்றும் கூறினால் பெரும் முத்தி உண்டு. கருவாக திகழ்கின்ற மவுனம் என்னும் மகாரம்கைக்காட்டி சொல்லக்கூடிய தன்னறிவே ஆசானாக விளங்கும் என்று ஓதுகிறார்.

மேலும் அகத்தியர் ஞான சூத்திரத்தில் மகாரம் என்ற மவுனம் பலித்ததனால் யோகி என்றபெயர் பெறுவார்கள் என்று ஓதும் பாடல் காண்க.

''பாரபப்பா புலத்தியனே மகார சூட்சம்
பலித்தாக் கால் யோகி யென்றே பகரலாமே - 3
அகத்தியர் ஞான சூத்திர் — 8

கடைப்பிள்ளை மெய்ஞ்ஞான தாண்டகம் என்னும் நூலில் உயிர் தங்குமிடம் புருவ மையம். புருவமே முத்திக்கு மூலமாகும். மூச்சானது நின்று திகழும் இடம் சுழிமுனையே தீபமாம். முத்தி பெற்ற இடமாகக் காண்பவர்களுக்கு சித்தியே ஆகும் என்று கூறும் பாடல் படித்தறிக.

''ஆச்சப்பா பிரணா நிலை புருவமத்தி
அப்பனே திசையதுவே யாகுமாகும்
மூச்சப்பா நின்றலங்கும் முனையாந் தீபம்
முத்தி கொண்ட யிடமதுதான் சித்தியாம்
கடைப்பிள்ளை மெய்ஞ்ஞான
தாண்டகம் — 57

மேலும் மச்சமுனியின் தூல ஞானம் என்னும் சிறுநூல் புருவ மையம் சிவமிருக்குமிடமாகும. அதுவே ஞானமிடமாகும். அந்த சிவஞான வடிவமே அகார வடிவமாகும் என்பதை கீழ்வரும் மச்சமுனியின் வாக்கைப் பார்க்க.

''ஞான மென்ன புருவமை யஞ்சிவம்
நாடி பாரு அகார வடிவாகும் - 8
மச்ச முனி தூல ஞானம் — 10

காலாங்கி நாதர் எழுதிய உபதேச ஞானம் என்னும் சிறுநூலில் சீவாத்தமானது பரமாத்மாவுடன் இணைவதே யோகம் என்று கூறுவார்கள் என்பதை எடுத்துக் காட்டும் பாடல் காண்க.

''தானப்பா குமாரன் சொல் ஜீவாத்மாவை
தானுமே பரமாத்மாவுடன் கூட்ட
மாணப்பா யோகமது சித்தியாச்சு - 7
காலங்கி நாதர் உபதேச ஞானம் — 34

பிறபிறப்பு நீக்கும் சிவராஜ யோகம்:

சமதகினி மாதுனி வஸ்து தரிசனம் என்னும் சிறுநூலில், உலகில் சிவராஜயோக் செய்யத் தெரிந்தவர்கள் அதில் தேர்ந்து

Koviloor Digital Library

நின்று முச்சுடர் என்னும் சூரியன் — சந்திரன் — வன்னி ஒன்றாய் இணைத்து காண்பவர்களுக்கு மிகத தெளிவாக அறியும் செயல் ஏற்பட்டால் மறுபிறவி உண்டாகுவது நீங்கி விடும் என்று கூறும் அவரின் பாடல் காண்க.

"பாரு நீ சிவராஜ யோகமப்பா
பாருலகிற் செய்தறிந்து பின்பு தானும்
தேரு நீ முச்சுடருமொன்றாயக் காண்பாய்
தெளிவான பிறப்பிறப்பு நீங்கிப் போகும் -26

சமதகினி மாமுனி வஸ்து தரிசனம் — 31

மேலும் அகத்தியர் அந்தரங்க தீட்சாவிதி என்னும் நூலில் பூரணம் என்னும் நிலையில் சேர பிராணாயம் செய்தவர்களுக்கு மறுபிறவி உண்டாவது நீக்கி பெருமையில் சேர்க்கும் என்று அறிவுறுத்தும் பாடல் காண்க.

"பிறவாதே பிறப்பிக்கும் பூரணத்தினுள்ளே
பேரான பிராணாயப் பெருமையைக் கேளு" - 344

அகத்தியர் அந்தரங்க தீட்சாவிதி — 400

காகபுசண்டர் மெய்ஞ்ஞானம் என்னும் நூலில் பிறவியை தடுக்கும் சிவராஜ யோகம் தெரிந்தவர்கள் கோடியில் ஒருவராக இருப்பார் என்னும் கருத்து வெளியிடுவதை அவரின் பாடலில் காண்க.

"நேரப்பா ராசாங்க யோகம் தன்னை
நிலையறிந்து கண்டவனே கொடிக் கொன்றி - 18

காகபுசண்டர் மெய்ஞ்ஞான விளக்கம் — 80

அகத்தியர் ஞான சுருக்கம் என்னும் நூலில் அடிமுதல் முடிவரைக்கும் ரேசகம் பூரகம் கும்பகம் செய்து முறையாக மேலேறுதல் வேண்டும். அந்த முறையில் சிவராஜயோகம் நிலைக்க செய்ய வேண்டும் என்று அறிவுரை கூறும் பாடல் காண்க.

"அடி தொட்டு முடிவரைக்கும் ஏற நீ தான்
அரசாங்க சிவயோகம் நிலைக்க பாரே - 9

அகத்தியர் மெய்ஞ்ஞான சுருக்கம் — 18

சிவராச யோகம் எவ்வாறு செய்ய வேண்டும்:

அகத்தியர் பூசா விதி என்னும் நூலில் சிவராச யோகம் எவ்வாறு செய்ய வேண்டுமென்று ஓதும் பாடலைக் காண்க.

"வாசியிலே இடைகலையிதில் பூரகந் தாணிரண்டு
மகத்தான சுழியையிலே கும்பகந்தானாலு
தேசி யென்ற பின்கலையிலே ரேசகந்தா னொன்று - 140

அகத்தியர் பூசா விதி — 200

வாசியை இடது மூக்கில் இரண்டு மாத்திரை அளவு பூரகம் செய்ய வேண்டும். சுழினை முனை என்னும் நடுமூக்கில் நான்கு மாத்திரை அளவு கும்பகம் செய்ய வேண்டும். பின்கலையென்னும் வலது மூக்கில் ஒரு மாத்திரை அளவு ரேசகம் செய்வதே யோகம் என்று கூறுவார்கள்.

உரோமமாமுனி சித்தர் தாம் எழுதிய குருநூலில் சிவராஜயேக செய்முறை கூறும் பாடல் காண்க.

"சூட்சி யலோ கண்டறிய வேணுமையா
சுழிமுனைய லொரு முனையைத் தூக்கி யேத்தே" - 42

"ஏத்தினாற் பன்னிரண்டு கதிரிக்குள்ளே
யீரெட்டுக் கலை யடங்கு மியக்க மில்லே
மாத்தினா ரிடைகலையைப் பூரகஞ்செய்
மைந்தனே பின்கலையில் ரேசகங் செய்
தேத்தனார் சுழிமுனையிற் கும்பகஞ் செய்
சிவயோக வாழ்க்கையினிற் சேர்ந்து போகும்
காத்தினா லிறப்பதுவும் பிறப்பதாச்சே - 43

உரோம மாமுனி சித்தர் குருநூல் — 50

நுட்பமாய் ஆராய்ந்து அறிந்து சுழிமுனையில் ஒரு முனையைத் தூக்கி ஏற்ற வேண்டும். அப்படி ஏற்றுவது. பன்னிரண்டு கலையுடை சூரியனுக்குள் பதினாறு கலையுடைய சந்திரனை அடங்க வைக்க இயக்கம் இல்லை. இடைகலை யென்னும் இடதுமூக்கில் பூரகம் செய்ய செய்ய, சுழிமுனை என்னும் நடுநாடியில் கும்பகம் செய்ய வேண்டும். இவைகள் சிவயோக வாழ்க்கையினிற் சேர்ந்து

Koviloor Digital Library

போகும். நம்முள்ள மூச்சுக் காற்றினால் தான் இறக்கவும் பிறக்கவும் உண்டாகிறது.

மேலும் போகர் ஞான சாராம்சம் என்னும் நூலில் சிவயோகம் செய்முறை கூறுவதும் காணத்தக்கது. அன்னாரின் பாடல் காண்க.

''வேறென்ற நினையாம யிடையில் வாங்கி
விதமான சுழிமுனையிற் கும்பகஞ் செய்து
கூறென்றே பிங்கலையில் ரேசகஞ் செய்
குருமுனிதான் சொன்னபடி யுள்ளே தாக்கு - 37

''பந்திக்கச் சந்திரனிற் பூரகஞ்செய்
பரிவான சூரியனில் ரேசகஞ் செய்ய
சந்திக்க அக்கினியிற் கும்பியென்ன
சாற்றினேன் லக்ஷணத்தைச் சார்ந்து கேளு
உத்திக்க சந்திர கலை சோடசந்தான்
உற்றதொரு சூரியகலை பன்னிரண்டே - 38

போகர் ஞான சாராம்சம் — 100

வேறு ஒன்றும் சிந்திக்காமல் இடது கலையில் மூச்சு வாங்கி, சுழிமுனையில் கும்பகம் செய்து கூர்மையுள்ள பிங்கலையில் ரேசிக்கவேண்டும். இந்த முறையை அகத்தியர் சொன்னபடி உள்ளுக்குள் தாக்கு.

மேலும் சந்திரன் என்னும் இடைகலையில் பூரகஞ் செய். பரிவுடன் சூரியன் என்ற பிங்கலை ரேசகஞ் செய். அவையிரண்டும் சந்தித்துக் கொள்ள சுழிமுனை என்ற அக்கினியில் கும்பிக்க வேண்டும். சந்திரக் கலை பதினாறாகும். சூரியக்கலை பன்னிரண்டாகும் என்று போகர் கூறுகிறார்.

மேலும் சுந்தரானந்தர் சிவயோக ஞானம் என்னும் நூலில் பூரகம் இரண்டு மாத்திரை அளவு செய்ய வேண்டும். கும்பகம் நான்கு மாத்திரை அளவு செய்ய வேண்டும். ரேசகம் ஒரு மாத்திரை அளவு செய்யும் கைமுறைக் சொன்னபடி கருத்தாகசெய்த அவரின் பாடல்காண்க.

''தருணமுள்ள பூரகந்தா னிரண்டுவாங்கு
சதாநித்தம் கும்பகந்தாள் நாலு கும்பி
கருணைமுள்ள ரேசகத்தை யொன்றேரேசி
கைமுறையாய்ச் சொன்னப்படி கருதிச் செய்யே - 32

சுந்தரானந்தர் சிவயோக ஞானம் — 32

ரேசகம் - பூரகம் - கும்பக மாத்திரையின் அளவுகள்:

அகத்தியர் தீட்சா விதி என்னும் நூலில் சிவயோகம் செய்ய மாத்திரையின் அளவுகள் கூறுகிறார்கள் அதனை இனிக்காண்க.

பூரகத்தின் மாத்திரையின் அளவு முப்பத்திரெண்டு. கும்பகத்தின் மாத்திரையின் அளவு அறுபத்துநாலும், ரேசகத்தின் மாத்திரையின் அளவு பதினாறு என்றுகூறுகிறார். தரவி ஒரு மாத்திரை என்பது தன் தலையை சுற்றிவரும் நேரகாலம் ஒரு மாத்திரையாக அளவிட்டு கூறுகிறார். அவரின் தீட்சா பாடலினின் கருத்தைக் கண்டு உணர்க.

''வாறான பிராணாய வரிசை கேளு
வகையான பூரகமோமுப் பத்திரண்டு
ஆறான கும்பகமோ அறுபத்துநாலு
அடைவான ரேசகமோ பதினாறப்பா
கூறான மாத்திரை தானி வைகளெல்லாம்
குறிப்பர்க அறிந்துக் கொள் சொல்வேனப்பா
தாறான தலை சுற்றி நொடிப்பதப்பா
சமுசியங்க ளொன்று மிலலை மத்திரை யொன்றே யாச்சே - 18

அகத்தியர் தீட்சாவிதி 2000.

அகத்தியர் வேறொரு நூலான மெய்ஞ் ஞான சுருக்கம் என்னும் சிறுநூலில் அதன் மாத்திரையின் அளவுகள் கூறுகிறார். அறிக.

''கேளப்பா அடிமூலம் அமர்ந்து வாங்கு
கெடியாக அறுபத்து நாலுஞ் செல்லும்
வாளப்பா நடுமூலம் நிறுத்தி நில்லு
வளமாகவே முப்பத்தி ரண்டுந் தீருஞ்
சூளப்பா புருவமையக் குறி கண்ணட்டு
சூட்சமதாயப் பதினாறுந் தீர வாங்கு
பாளப்பா போகாதே யிறுக்குப் பேர்கேளே
பதிவான ரேசகபூ ரகமே யாச்சு - 14

ஆச்சப்பா கும்பகமுந் தீர்ந்த பின்பு
அரகார சுழிவாசி நிலையில் நிற்கும்

Koviloor Digital Library

பேச்சப்பா ஒன்றுமில்லை வாசியோகம்
பெருமையுள்ள சிவராச யோகமாகும்
போச்சப்பா மற்ற மற்ற யோக மெல்லாம்
பொய்யாச்சு தென்பதல்லா சிறந்ததில்லை
காச்சப்பா நடுவாசி யுண்ணாவு மேலே
காட்டினேன் சிவராச யோகங் காணே-15

அகத்தியர் மெய்ஞ்ஞான சுறுக்கம் — 18

அடிமூலம் என்ற சுழினையில் அறுபத்து நாலு மாத்திரை காலயளவு கும்பகம் செய். நடுமூலம் என்ற இடைகலையில் முப்பத்திரண்டு மாத்திரை காலயளவு பூரகம் செய். புருவமையம் நாட்டம் வைத்து பதினாறு மாத்திரை காலயளவு ரேசகம் செய். இது மாதிரி செய்யாமல் பாழாக போகாமல் இருப்பவர்கள் இதனை கண்டு ரேசகம் பூரகம் கும்பகம் செய்து பலன் பெறுங்கள்.

அடுத்துவரும் பாடலில் இந்த யோகத்தால் வாசியானது சுழியில் நிற்கும். இதில் பேசுவதற்கு ஒன்றுமில்லை. இந்த வாசியோகம் பெருமையுள்ள சிவராசயோகம் என்பார்கள். பிற யோக நெறிவழிகள் பொய்யாகி நின்றது. அதுவும் அவ்வளவு சிறந்த நெறியான யோக வழியல்ல. சிவராஜயோகம் உண்ணாக்கு மேலேயுள்ள வழி திறக்கும் இந்த சிவராஜ யோகம் என்பதாம்.

சுப்பிரமணியர் சிவம் சிவயோக மென்னும் நூலில் மூச்சு வெளிவிடுதலுக்கு ரேசகம் என்பர். மூச்சு உள்வாங்கலுக்கு கும்பகம் என்று மிகவும் எளிதாகவும் தெளிவாகவும் ஓதுகிறார். கீழ்காண்க.

“வயம் வாயு வெளிவிடுதல் ரேசகந்தான்
வாயு வையு மேற்றிடுதல் பூரகந்தான்
பயம் போக வுள்ளடக்கல் கும்பகந்தான்
பாலகனே இவ்வுண்மை பரிந்து பாரே - 13

யோகம் செய்முறை கூறும் நெறிமுறை:

யோகம் செய்யும் முன் நிமிர்ந்து நன்றாக அமர்ந்து செவ்வாக யோகம் செய்ய பிர்மாசனம் — சித்தராசனம் ஆக நிலை உட்கார்ந்து கழுத்தையும் சற்று வணங்கியபடி தனது வாய், கண் மூடியும் புலனடக்கி, நாவின் நுனியை உண்ணாக்கிற் செலுத்தி கீழ் பல்லும், மேல் பல்லும் ஒட்டாமல் செய்ய வேண்டும் என்பதை கீழ்வரும் பாடலில் சுப்பிரமணியர் சிவம் சிவ யோகம் என்னும் கூறும் பாடல் காண்க.

“பாரு நீ செவ்வையா யிருந்து கொண்டு
பலவித முன் பாசனந்தான் பாரிலப்பா
தேரு நீ அதற்பிர்மாசன மிசைந்த
சித்திரா சனத்தை நிய மித்துக் கொண்டு
சாரு நீ கழுத்தை யுஞசற் றே வணங்கித்
தன்வாய் கண்முடியும் புலனடக்கிற்
சேருநீ காவினுனி யையுண்ணாக்கிற்
செலுத்தப்பல் லோடு பல்லைச் சேர்க்கொணாதே - 10

சுப்பிரமணியா சிவம் சிவயோகம் - 40

யோக நாடிகள் தூய்மைப்பெறச் செய்யும் முறைகள்:

1. இடைகலையிலே மூச்சு இழுத்து பின் நிறுத்தி அதிலே விட வேண்டும். அப்பொழுது சூரியனைக் குறிக்கும் தியான மந்திரம் நினைக்க வேண்டும்.

2. பிங்கலையிலே மூச்சு இழுத்து பின் நிறுத்தி அதிலே விட வேண்டும். அப்பொழுது சந்திரனைக் குறிக்கும் தியான மந்திரம் நினைக்க வேண்டும்.

3. இடைகலையிலே மூச்சு இழுத்து நிறுத்தி பிங்கலையிலே மூச்சு விட வேண்டும். இதுபோல் தொடர்ந்து மூன்று மாதம் செய்தால் யோகக்கலை நாடிகள் தூய்மையாகும். இந்த யோகப்பயிற்சி இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் செய்ய வேண்டும். இதன் பாடலைக் காண்க.

“பாரப்பா யிடையிடை லேரேசித்துப்
பூரித்துக் கும்பித்துக் கொள்வாய் நீயும்
சாரப்பா பிங்கலைரே சிக்கும்போது
சந்திரனைத் தியானித்து விட வேண்டும்.
தேரப்பா பிங்கலைரே சகத்தினோடு
சேரும் பூரகமுங்கும் பகமும் பண்ணே” - 16

Koviloor Digital Library

"பண்ணியே யிடையில் ரே சிக்கும்போது
பானுதனைத் தியானமது பண்ணிவிட்டால்
கண்ணிமையைக் காத்ததுபோ லுன்னைக் காக்கும்
கற்பாந்த காலம் வரை நீளுமாயுள்
எண்ணரிய பிறவிமய லெல்லாம் போகும்
ஈசனே சிவனாமென் றெவருஞ் சொல்வார்
மண்ணிலே வாழ்த்தாதா ரொருவருண்டோ
வாயுவைநீங் காமலதைச் செய்குவாயே - 17

மேற்கண்டவாறு செய்தால் கற்பகாலம் வரை ஆயுள் நீடிக்கும். கணக்கில்லா பிறவிகள் நீங்கும். இவன் சிவன் என்று யாவரும் சொல்லுவார். செய்யாதவர்கள் மண்ணில் வாழ்ந்ததாக இல்லை. எனவே மூச்சை நீங்க விடாமல் தொடர்க என்று கூறுகிறார்.

மேலும் சுப்பிரமணியர் சிவம் மேற்கூறியவாறு தொடர்ந்து மூன்று திங்கள் தொடர்ந்துசெய்து வர யோக நாடிகள் தூய்மையாகும். இதனால் நோய்கள் அணுகாது. உண்பதெல்லாம் ஓர் நிமிடத்து செரிந்து விடும். தூய்மையான நாதம் தெளிய மயக்கம் அகன்று விடும் என்பதை கிழ்வரும் பாடலில் காண்க.

"செய்துவா யிப்படியே மூன்று மாதம்
செய்துவர நாடி மிகச் சுத்தமாகும்
உய்குவாய் வியாதியறும் புசித்த தெல்லாம்
ஓர் நிமிடந் தன்னிற்சீ ரணமதாகும்
துய்யநா தந்தெளிய மயக்கமில்லை
துவாதசம் பிராணாயம் செய்யும் காலம் - 18
சுப்பிரமணியர் சிவம் சிவயோகம் — 40

சிவராச யோகம் எவ்வாறு தொடங்க வேண்டும்:

சிவராசயோகம் செய்யத் தொடங்கும்முன் சில முக்கியமான அடிப்படைச் செய்திகள் தெரிந்துக் கொள்ள வேண்டும். சிவராச யோகம் தொடங்க திடீரென மாத்திரையின் அளவுகள் அதன் காலநேர எண்ணிக்கைகள் படிப்படியாக உயர்த்திக் கொண்டு வரவேண்டும் முதன் முறையாக தொடங்குபவர்கள் நாடி சுத்தம் செய்ய வேண்டும். அதற்கு மூன்று மாத காலயளவு எடுத்துக் கொள்ள வேண்டும். பின் சிவயோகம் செய்யத் தொடங்க வேண்டும். இடைகலையில் பூரகம் செய்யும்போது இரண்டு மாத்திரை அளவு அதனை சுழிமுனையில் கும்பிக்க நான்கு மாத்திரையளவு அடுத்து பின்கலை ரேசகம் ஒரு மாத்திரை அளவு செய்ய வேண்டும் என்று சித்தர்கள் கூறுகிறார்கள் அதனைக் காண்போம்.

போகர் என்னும் சித்தர் சிவயோக ஞானம் என்னும் நூலில் இடைகலையின் பூரகம் இரண்டு மாத்திரையளவும், சுழிமுனையிற் கும்பகம் நாலுமாத்திரையளவும், பிங்கலையில் ரேசகம் ஒரு மாத்திரை அளவும் செய்ய வேண்டும். மேலும் சிவயோகம் பௌர்ண்மியிலிருந்து ரேசக பூரக கும்பகம் செய்ய வேண்டும். அதனை அமாவாசை முதல் வளர்பிறையில் தாக்கி மாறியும் மாசி மாதத்தில் பித்த நீர்ப்பாயாமல் சந்திரனைப் பார்த்து கண்ணால் கண்பாயாக என்று கூறும் அந்த சித்தரின் பாடல் காண்க.

"வாசியிலே இடைகலை பூரகந்தான் ரெண்டு
வளமான சுழினை யிற்கும் பகந்தான் நாலு
தேசியென்ற பிங்களை ரேசகந் தானொன்று
திடமாகப் பௌரயைத் தொட்டு நீயும்
ரேசியிந்த முறை அம்மாவாசி தொட்டு
நிசமாக வளர்பிறையைத் தாக்கி மாறு
மாசியிலே பித்தநீர்ப் பாயா வண்ணம்
மதிபார்த்துக் கண்ணாலே நோக்குவாயே - 8
போகர் சிவயோக ஞானம் — 120

அடுத்து நமது அகத்திய பெருமான் பூசாவிதி என்னும் நூலில் வாசியின் மாத்திரையின் அளவோடு முக்கலையில் எப்படி வாசி வாங்கி விடும் காலஅளவு நிலை கூறும் அவரின் பாடலைக் காண்க.

"வாசியிலே இடைகலையிதில் பூரகத்தானிரண்டு
மகத்தான சுழினையிலே கும்பகந்தானாலு
தேசியென்ற பின்கலையிலே ரேசகந்தானொன்று - 140
அகத்தியர் பூசாவிதி — 200

சுந்தரானந்தர் சிவயோக ஞானம் என்னும நூலில் சித்தர்களின் கருத்துப் படியே இவரும் கூறுகிறார். அந்த சித்தரின்

Koviloor Digital Library

கருத்துக்கள் நாம் அறிவது முக்கியமாகும். அவசியமுமாகும்.

"தருணமுள்ள பூரகந்தா னிரண்டு வாங்கு
சதாநித்தம் கும்பகந்தான் நாலு கும்பி
கருணமுள்ள ரேசகத்தை யொன்றே ரேசி
கைமுறையாய்ச் சொன்னப்படி கருதிசெய்யே - 32
சுந்தரானந்தர் சிவயோகம் — 32

சிவராஜயோகஞ் செய்ய வரிசைமுறை காணல்:

சிவராஜயோகம் செய்ய் வரிசை முறையை சுந்தரானந்தர் சித்தர் தெளிவாகத் தெரிவிக்கிறார் ஒவ்வொரு வரிசையில் மாத்திரைகள் உயர்த்திச் செய்யவேண்டுமென்ற செய்தியும் தெரிவிக்க வாசியை உயர்த்தும் முறையும் கூறுவது காண்க.

1. சிவயோக முதல் வரிசை:

ரேசகத்தின் மாத்திரையானது ஒன்று
பூரகத்தின் மாத்திரையானது இரண்டு
கும்பகத்தின் மாத்திரையானது நான்கு

இந்த வரிசை முறையாக முதலில் செய்ய வேண்டும். இதனை புழக்கத்தில் கொண்டு அடுத்தவரிசை முறையைக் கேட்க

"பிரிவென்ன ரேசக மாத்திரை தானொன்று
பேசாதே பூரக மாத்திரை தான் ரெண்டு
தருவென்ன கும்பக மாத்திரை தான் நாலு
தயங்காமலிப்படியே முன்னே பண்ணு
அரிவென்ன இப்படியே பழக்க மாக்கி
யான பின்பு இன்ன மொரு வகையை கேளு - 11

2. சிவயோகம் இரண்டாவது வரிசை:

பிரிவென்ன ரேசக மாத்திரை தான் இரண்டு
பேசாதே பூரக மாத்திரைதான் நாலே - 11
நலமாகக் கும்பக மாத்திரைதான் னெட்டு
நயமாகப் பழக்க மது நன்றாய்ப் பண்ணி - 12

ரேசகத்தின் மாத்திரையானது இரண்டு
பூரகத்தின் மாத்திரையானது நான்கு
கும்பத்தின் மாத்திரையானது எட்டுவாகும்.

இதனை மிக நன்றாக வாசியோகம் பழக்கம் செய்துக் கொள்ள வேண்டும். அடுத்த வரிசை கேள்.

3. சிவயோகம் மூன்றாவது வரிசை:

"மேன்மையாம் ரேசகந்தான் நாலு பண்ணு
பாலாகப் பூரக மாத்திரை தானெட்டுப்
பதிவான கும்பக மாத்திரை யீரெட்டு
மாலாக வரிசைமுறை தவறா மற்றான்
மணமாக இப்படியே பழக்கம் பண்ணு. - 12

மேன்மை மிகுந்த ரேசகத்தின் மாத்திரை நான்கு.
பூரகத்தின் மாத்திரை தான் எட்டு
கும்பகத்தின் மாத்திரை தான் பதினாறாகும்.

மயக்கமில்லாமல் வரிசை முறையை தவறாமல் மனதுடன் இப்படியே பழக்கம் செய்ய வேண்டும்.

4. சிவயோக நான்காவது வரிசை:

பண்ணியே இன்னமொரு வரிசை கேளு
பரிவான ரேசக மாத்திரையே எட்டு
உண்ணியே பூரக மாத்தரை யீரெட்டு
உத்த தொரு கும்பக மாத்தரை நாலெட்டு
மண்ணியே யிப்படி நீ பழக்கம் பண்ணு
வாகாகத் தீர்ந்த பின்பு வரிசை கேளு" - 13

ரேசகத்தின் மாத்திரையானது எட்டு
பூரகத்தின் மாத்திரையானது பதினாறு
கும்பகத்தின் மாத்திரையானது முப்பத்திரண்டு

இப்படியே நீ பழக்கம் செய். இதனை முடிந்த பின் அடுத்த வரிசை கூறுகிறேன்.

5. சிவயோகம் ஐந்தாவது வரிசை

நண்ணியே ரேசக மாத்திரை பத்தாகும்
நன்றாக பூரகந்தா னிருபதாமே - 13
ஆமப்பா கும்பகந் தான் நாற்பதாகும்
ஆச்சரிய மிப்படியே பழக்கம் பண்ணு - 14

ரேசகத்தின் மாத்திரை தான் பத்தாகும்
பூரகத்ன் மாத்திரை தான் இருபதாகும்
கும்பகத்தின் மாத்திரை தான் நாற்பதாகும்

இந்த முறையில் பழக்கம் செய்ய வேண்டும்.

Koviloor Digital Library

6. சிவயோகம் ஆறாவது வரிசை:

இந்த வரிசையில் ரேசகந்தான் பன்னிரண்டு

பூரகந்தான் மாத்திரையானது இருபது ஆகும்
கும்பகத்தின் மாத்திரை யானது நாற்பத்தெட்டு

இதுபோன்று தொடர்ந்து பழக்கப்படுத்த வேண்டும்

''ஓமப்பா தேர்நத பின்பு இன்னும் கேளு
உரைக்கிறேன் ரேசகந்தான் பன்னிரண்டாகும்
தாமப்பா பூரகந்தானிரு பான்நாலு
தயவான கும்பகந்தான் நாற்பத் தெட்டு
நாமப்பா இப்படியேயோகம் பார்த்தோம்
நலமாக இன்னமொரு வரிசை கேளு'' - 14

7. சிவயோக ஏழாவது வரிசை:

வரிசை யென்ன ரேசகந்தான் பதினாலுக்கும்
வகையான பூரகந்தானிருபத் தெட்டு
உரிமையுடன் கும்பகந்தானையும் பாத்தாறு
உத்தமனே இப்படி பழக்கம் பண்ணு - 15

ரேசகத்தின் மாத்திரையானது பதினாலு
பூரகத்தின் மாத்திரையானது இருபத்தெட்டு
கம்பகத்தின் மாத்திரையானது ஐம்பத்தாறு

என்ற வரிசையில் மாத்திரைகள் உயர்த்தி சிவயோகம் செய்ய வேண்டும்.

8. சிவயோகம் எட்டாவது வரிசை:

''கரிசையுடன் இன்னுமொரு வரிசை கேளு
கனமான ரேசகந்தான் பதினாறாகும்
பரிசையுடன் பூரகமுப் பத்திரண்டு
பண்பான கும்பகத்தைப் பகரக்கேளே
பகரமுள்ள மாத்திரைதா னறுபான் நான்கு
பாங்க இப்படியே பழக்கம் பண்ணு - 15

ரேசகத்தின் மாத்திரையானது பதினாறு
பூரகத்தின் மாத்திரையானது முப்பத்திரெண்டு
கும்பகத்தின் மாத்திரை யானது அறுபத்தி நாலு -16

இப்படி இனி மேற்கொண்டு தொடர்ந்து சிவயோகம் செய்து வரவேண்டும். சித்தர்கள் கூறு சிவராசயோகத்தின் மாத்திரையின் அளவு ரேசகம் பதினாறு பூரகத்தின் மாத்திரையின் அளவு முப்பத்தியிரண்டு. கும்பகத்தின் மாத்திரையின் அளவு அறுபத்தி நாலுவாகும். இதனை ஒருமுறையில் மூச்சுகள் இழுத்து நிறுத்தி விடமுடியாது என்ற காரணத்தால் முறையாகப் படிப்படியாக உயர்த்தி பழக்கம் செய்ய வேண்டும் சித்தர் சுந்தரானந்தர் கூறுகிறார்கள். இந்த முறையை நாதாந்த சித்தர்கள் மறைத்தனர் என்று கூறி இந்த முறையில் சிவராச யோகம் செய்ய செய்ய ராசயோகமாகும் என்று கூறுகிறார். இனி அடுத்து அவர் சொல்லப்போகும் கருத்தையும் நாம் அறிய வேண்டும்.

''உகரமுள்ள திதுக்காதி யுண்ணு வுண்ணு
உரைக்கிறேன் ரேசகத்தை உங்களுக்குத்
தகரமுள்ள மூச்சுவெளி விடுவதற்குத்
தப்பாது பூரகத்தைச் சாற்ற கேளு
அகரமுள்ள மூச்சை யுள்ளே வாங்கலப்பா
ஆச்சரியங் கும்பத்தை அறையக் கேளே - 16

''கேளப்பா மூச்சை யுள்ளே வாங்கி கொண்டு
கெடியாகத் தம்பித்து யிருந்தலாச்சு
வாளப்பா மூன்றுக்கும் வரிசை சொன்னேன்
வகையாக இப்படியே யோகம் பாரு
நாளப்பா வருடமொன்றிற் சித்தியாகும்
நாதாக்களிப் படித்தான் சொல்லவில்லை
ஆளப்பா சொன்ன வழி தவறாமற் செய்
ஆச்சரியம் யோகவிதி யறைத்திட்டேனே - 17
சுந்தரானந்தர் சிவ யோகம் — 32

உகரம் என்பது சூரியனில் ரேசிக்க வேண்டும். அகரம் என்பது சந்திரனில் பூரகம் செய்ய வேண்டும். சுழினையில் வன்னியில் கும்பகம் செய்ய வேண்டும். இவை மூன்றுக்கு முறையைச் சொன்னேன். இந்த முறையில் யோகம் பார்க்க வேண்டும். ஒரு வருடத்தில் சித்தியாகும். இதனை நாதாக்கள் இப்படியெல்லாம் சொல்லவில்லை. யாம் சொன்னமுறையை செய். ஆச்சரியமாக உள்ளயோக முறை விதிகள் கூறிவிட்டேன்.

மேலும் அவர் மாத்திரையின் அளவினையும் அடையாளத்தையும் கூறுகிறார். கருணையுடன் அவருடைய தீட்சை விதி ஐம்பத்தொன்று என்னும் நூலில் அறிவான தீட்சையை மறைத்து

Koviloor Digital Library

கூறினேன். இதனை இங்கு மறைக்காமல் கூறுவேன் என்று கீழ்காணும் பாடலில் கூறுவதைக் காண்க.

“கெதியாக மாத்திரைக்கு அடையாளம் கேள்
கிருபையுடன் யென் தீபசை ஐம்பத்தொன்றில்
மதியான தீட்சை யொன்று மறைத்து சொன்னேன்
வாகாக மறைமா லறைகு வேன் - 18

அடுத்து வரும் அவரின் பாடலில் அகரம் என்பது சிவமாகும். உகரம் என்பது சக்தியாகும். சிவமும் சக்தியும் ஆக இரண்டும் கூடியது மகாரம் என்ற மவுனமாகும். அகரம் + உகரமும் இணைந்தால் ஓங்காரமாகும். அதுவே பிரணவமாகும். மறைக்கப்பட்டது தீட்சை ஓங்காரமாகும். இதனை நாதாந்த தநிலை அடைந்தவர்கள் மறைத்து வைத்தனர்.

“அறைகுவேன் அகரமது சிவமதாச்சு
ஆச்சரியம் உகரமது சத்தியாச்சு
திறைகுவேன் சிவசக்தி யிரண்டுங் கூடிச்
சேர்ந்து தடா மகரமென்ற மவுன மக்காள்
பறைகுவேன் அகாரமுடன் உகார மவ்விற்
பாய்ந தொன்றாய் கலக்க பிரணவமு மாச்சு
மறைகுவேன் தீட்சையோங் காரந்தன்னை
மாசற்ற நாதாக்கள் மறைத்திட்டாரே - 19

அடுத்துவரும் பாடலில் சிவதீட்சையும் சக்தி தீட்சையும் ஆக முப்பதிரண்டாகக் கூறியதை நூல்களில் காணப்படும் அக்கரங்கள் காண்க. ஒன்றாக இணைந்து ஒன்றி நிற்கும் மூன்றெழுத்தில் கூறிய மூன்றும் ஓங்காரத்தில் அடங்கி போச்சு. அதன் மாத்திரைகள் கூறுகின்றேன் கேட்பாயாக. ஊம் மென்று ஒருமுறைக் கூறினால் ஒரு மாத்திரையாகும். பாடலைக் காண்க.

மறைத்திட்ட சிவதீட்சை சக்தி தீட்சை
வாகாக் முப்பத்தி ரெண்டாகத் தான்
உறைத்திட நூல்களட் சரங்கள் பாரு
ஒடுங்கிற்று மூன்றெழுத்தி லுரைத்த மூன்றும்
அறைத்திட்ட ஓங்காரத் துள்ளாய்ப் போச்சு
அம்மம்மா மாத்திரையை அறையக் கேளு
துறைத்திட்ட “ஊமென்று ஒருக் காற் சொன்னால்
துடியான மாத்திரை தானொன்ற தாச்சே - 20

அடுத்துவரும் பாடலில் வாசிகள் வாங்கல் — நிறுத்தல் — விடுதல் பற்றி கூறுகிறார். பூரகம் முப்பத்திரெண்டு மூச்சுகள் வாங்க வேண்டும். கும்பகம் அறுபத்து நாலு மூச்சுக்கள் நிறுத்த வேண்டும். ரேசகம் பதினாறு மூச்சுகள் விடுதல் வேண்டும். இப்படி இனி வரும் நாட்களில் இதுபோல் மாறாமல் நாள்தோறும் ஒருமுறை இலகுவாக செய்ய வேண்டும். பாடலைக் காண்க.

“ஆச்சப்பா பூரகமுப் பத்திரண்டு
ஆச்சரியம் மூச்சையுள்ளே வாங்கு வாங்கு
வாச்சப்பா கும்பகந்தா னறுபான் நான்கு
வளமாக மூச்சையுள்ளே தம்பி தம்பி
தாச்சப்பா ரேசகமோ யீரெட்டாகும்
தவிடுதா னாடாமல் விடு நீ மூச்சை
பேச்சப்பா பின்னையுமிப் படியே பண்ணி
பிரளாமற் தீள மொன்று லெகுவாய்ப் பண்ணே
- 21


அடுத்துவரும் பாடலில் செய்கிற வரிசை முறையைக் கேளு பங்குனி திங்கள் முதல் செய்கிற மாத்திரையின் அளவு நூற்றிப்பன்னிரெண்டாகும். அது பிரதமை முதல் செய்ய வேண்டும். மீள்வதற்கு துதிக்கையிலே சிவயோகம் செய். மாத்திரையை சொல்லுகிறோம் இருநூற்று இருபத்தி நான்குவாகும். திரிதிகையிற் கூறுகிறேன். அதில் முன்னூறறு முப்பத்தாறாகும் என்று கூறுகிறார். காண்க.

“பண்ணுகிற வரிசையைத் தான் கேளுகேளு
பங்குனியாம் மாதர்தைக் தொட்டுப் பண்ணு
நண்ணுதற்கு மாத்திரைதான் நூற்றீராறு
நலமான பிரதமையில் நயந்து பண்ணு
துண்ணுதற்குத் துதிகையிலே யோகம் பண்ணச்
சொல்லுகிறேன் இருநூற்றோ டெண் மூன்றாக
முண்ணுதற்குத் திரிதிகையிற் சொல்லக் கேளு
முந்நூற்றி முப்பத்தாறாகும் பாரே - 22

இனி அடுத்துவரும் பாடலை நோக்குவோம்

அதில் வாசியயோகம் நாள்தோறும் முறையாக மாத்திரையை ஏற்றி ஏற்றி செல்ல வேண்டும். இதுபோல் ஒரு நூற்றுப் பன்னிரண்டு முறையானால்

Koviloor Digital Library



Koviloor Digital Library

உறுதியாக பிராணாயாம் ஒன்றுவாகும். பிரதமையில் ஒருமுறை செய். துதிகையில் இரண்டு செய். திரிகையில் மூன்று முறை செய். சதுர்த்தியில் நாலு பண்ணு என்று கீழ்வரும் பாடலில் கூறுவது காண்க.

"பாரே நீ யிப்படியே வாசியோகம்
பாங்காகத் தினம் தினமும் யேத்தி யேத்தி
நேரே நீ ஒருநூற்றிப் பனிரண் டானால்
நிச்சயமாய்ப் பிராணாயம் ஒன்றதாகும்
காரே நீ பிரதமைக்கு ஒன்று பண்ணு
கைமுறையாயத் துதிகைக்கு இரண்டு பண்ணு
மாரே நீ திரிதிகைக்கு மூன்று பண்ணு
வாக்கான சதுர்த்திக்கு நாலு பண்ண - 23

அடுத்துவரும் சித்தரின் பாடலில் திதிகள் யேற யேற ஒவ்வொன்றாக கூட்டிவர பௌர்ணமிக்கு பதினைந்து முறையாகும். அமாவாசை திதிவரைக்கும் முப்பது முறை பிராணாயம் கூடும். இதுபோல் பதினாறு மாதம் ஆனால் அறுநூற்று இருபது முறை பிராணாயத்தை முடிவுக்கு வரும். புரியட்டத்திலுள்ளே வாசி வாங்கியேறும். அதனால் பாழில்லை. இதனால் சாவதுமில்லை என்று கூறும்பாடல் காண்க.

"பண்ணடா திதியேற ஒவ்வொன்றேத்தி
பண்ணிவரப் பவுரணைக்குப் பதினைந்தாகும்
முண்ணடா அமாவாசைத் திதி வரைக்கும்
முப்பதுதான் பிராணாய மேறும்பாரு
எண்ணடா பதினாறு மாதமாகில்
இரட்டிலறு நூற்றிரு பான் பிராணாயத்தை
வண்ணடா புரியட்டத் துள்ளே காலு
வாங்குமபி பாழியில்லை சாவும் போச்சே - 24

அடுத்துவரும் பாடலில் பிராணாயம் செய்கிறபோது முதல்முதலில் தேகத்தில் வியர்வை வெளியேறும். அதற்கு சுக்கு பொடி செய்து அதனை வேர்வை விடுதேகத்தில் நன்றாக தடவி விடவும். அதனால் முதலில் இப்படியே வியர்வை வெளியேறும். அடுத்து இரண்டாம் பட்சத்திலும் வெளியேறும். மூன்றாம் பட்சத்தில் பசி அதிகம் உண்டாகும். நீ அறிக என்று கூறுவதைக் காண்க. அவரின் பாடலை ஊன்றி படிக்கவும்.

"போச்சப்பா பிராணாயம் பண்ணும் போது
புதுமையாய் முக்தி முந்தி வேர்வை காணு
ஆச்சப்பா சுக்கதனைப் பொடியாய்ப் பண்ணு
ஆச்சரியம் வேர்வையிலே தேய்த்துப் போடு
மாச்சப்பா முதலிலிப் படியே காணு
மைந்தனே தப்பிக்கு மிரண்டாம் பட்சம்
பாசப்பா மூன்றான பட்சத்துள்ளே
பசிமெத்த வுண்டாகும் பாரு பாரே - 25

அடுத்துவரும் சித்தரின் பாடலில் நாலாவது பட்சத்துள்ளே வாசி பதிவாகும். இலவாகும் யோகம் செய்ய ஐந்தாவது பட்சத்துள்ளே நிச்சயமாக ஒளி வீசும். கண்ணால் பார்க்கலாம். கூறடா ஆறாவது பட்சத்தில் குண்டலியானது. பிரகாசிக்கும். ஏழாவது பட்சத்தில் பராபரையைக் காணலாம் என்றுகூறும் பாடல் காண்க.

"பாரடா நாலான பட்சத்துள்ளே
பதிவாகும் லெகுவாகும் யோகம் பார்க்க
நேரடா அஞ்சான பட்சத்துள்ளே
நிச்சயந்தா னொளி வீசுங் கண்ணாற்பாரு
கூறடா ஆறான பட்சத்துள்ளே
குண்டலிதான் பிரகாச மாகும்பாரு
ஆரடா யேழான பட்சத்துள்ளே
ஆச்சரியம் பராபரையைக் காணலாமே - 26

அடுத்துவரும் பாடலில் எட்டாவது பட்சத்தில் விந்து மேல் நோக்கியேறும். கீழே ஓடுவது நிற்கும். திங்களுக்கு இரண்டு பட்சமாகும். பதினாறு மாதம் கொண்ட பருவம் தொடர்ந்து யோகம் பாரு. உடலில் வெபபம் மீறினால் அறுகும் புல்வேர் குடிநீர் செய்து காலை மாலை மறவாமல் குடித்து வருக. சிவயோகம் செய்கிற போது கண்ணெரிச்சல் கண்டால் அதற்கு மருந்து ஒன்று கூறுகிறேன் பாடல் காண்க.

"காணவே யெட்டான பட்சத்துள்ளே
காமமது மேலேறுங் கீழ் நோக்காது
பாணவே பட்சமென்ன அதுதான் ரெண்டும்
பதினாறு திங்களுக்குப் பருவம்பாரு
ஆணவே மூதண்டக் கியாழந் தன்னை
அந்தி சந்தி மறவாமற் றினமும் கொள்ளு
பூணவே யோகமது செய்யும் போது
பொய்யல்ல கண்கடுத்தாற் புகலுவோமே - 27

Koviloor Digital Library

அடுத்துவரும் சித்தரின் பாடலில் பசுவின் நெய்யோடு + தாய்பாலும் சேர்த்து நன்றாகக் குழைத்து உள்ளங்காலில் பூச கண்கடுப்பு நீங்கும். உணவு கொள்ளும் முறையை கூறுவோம். பூரணமாய் கேட்பாயாக. அன்னம் குறைவாக உண்க. இதற்கு ஒத்தவாறு தொடர்ந்து மஞ்சள் கரிசாலங்கண்ணி இலையை எடுதது நன்றாக நீரில் அலம்பி அந்த இலையை சூரிய உதயத்திற்கு முன் உட்கொள்ளக. அளவு ஒரு கைப்பிடியாகும் என்பதை கீழ்வரும் பாடலைக் காண்க.

''புகலுமே ஆவின் நெய் கலசப்பாலும்
போட்டு நன்றாய்க் கலந்துள்ளங் காலிற்பூசு
அகலுமே கண்கடுப்பு அன்னங் கொள்ள
அறையுகிறேன் பூரணாந்தா கேளு
துகலுமே அன்னத்தைக் குறைத்து வுண்ணு
சொல்லுகிறேன் சாதகமாய்த் தொடர்ந்துதானே
மகிழுமே கையான்றன் இலையை வாங்கி
மைந்தனே உதயாதி பிடிதான் கொள்ளே - 28

இனி அடுத்து வரும் பாடலில் சித்தர் என்ன கூறுகிறார் என்பதை அறிவோம். மாலையில் எடுத்துக் கொள்ளும் இனலைக் கேட்பாயாக. கட்டுக் கொடி யிலையை ஆவின் பாலில் தொடர்ந்து ஒரு மண்டலம் உண்டுவர பசியைக் கட்டுப்படும். அன்னக்கொள்வது குறைந்துவிடும். நன்மைதரும் பச்சரிசி ஒரு சேர் வாங்கி அதனை பாலில் பொங்கி அதனை ஆவின் பால் வுற்றிக் கலந்து உண்க. வாசியோகம் சித்தியாகும். தண்ட தீனி உண்பதில் விருப்பம் கொண்டால் அனைத்தும் கெட்டுவிடும் என்று கூறுவதைக் காண்க.

''கொள்ளவே அந்தியிலே யிலையைக் கேளு
கொடிக் கட்டு கொடியிலையை ஆவின்பாலில்
பள்ளவே மண்டலந்தான் காய்ச்சிக் கொள்ளப்
பசிகட்டும் அன்னமது குறைந்து போகும்
நள்ளவே பச்சரிசி யொருசேர் வாங்கி
நயமாகப் பொங்கியதை ஆவின் பாலில்
தெள்ளவே போட்டுண்ண யோகஞ் சித்தி
தீனியிலே ஆசைவைத்தாற சிதறிபோகுமே - 29

அடுத்துவரும் சித்தரின் பாடல் கவனிக்கத்தக்கது. சாதம் அரைவயிறு, கால்வயிறு தண்ணீர் எடுத்துக் கொண்டு ஒருவேளை உண்டுவர நாள் தோறும் வாசியோகக் குறியில் நின்றால் பதினாறு மாதத்தில் தவறாது யோகமது சித்தியாகும். வகையாய்யுள்ள புரியட்டம் பாழாய் மாண்டு விடும் நான்கு எட்டிற் கலந்துபோகும். ஆகாத விந்துவும் கட்டிவிடும். அதற்கு அடையாளமாக யோக சித்தி கூறுவேன் என்று கூறுவது காண்க.

''போகாமல் அன்னமரை தண்ணீர் காலாய்ப்
புசித்துநீ தினந்தினமுங் குறியில் நில்லு
தாகாமற் பதினாறு மாதந் தன்னில்
தப்பாது யோக மது சித்தியாகும்
வாகா மற் புரியட்ட மெட்டும் பாழாய்
மாண்டுடனே நாலு மெட்டிற் கலந்துபோகும்
ஆகாத விந்துவது கட்டிப் போகும்
அடையாளம் யோக சித்தி அறைகு வேனே - 30

மேலும் அடுத்து வரும் பாடலில் மேலும் சில செய்திகள் தொடர்ந்து கூறுகிறார். அதாவது என்ன கூறுகிறோம் என்றால் எட்டதிலே நாலும் சேர்ந்தால் அப்போது அல்லவா சிவயோகம் சித்தியாகும். மேலும் கூறுவேன் சாவது என்பது செய்தி பொய்யாச்சு. தன்னுடை நிழல் சாயை இல்லை. தீபத்தின் முன்நின்றாலும் நிழல் விழாது. தண்ணீரின் முன் நின்றால் அதில் தன் வடிவம் தெரியாது. கூறுவேன் இவ்வாறு சாதனை செய்தவர்க்கு தேகத்தின் சட்டை நீங்கி உடல் சூரியனின் ஒளிபோல் சுடர்விட்டு ஒளிரும். இனிஇதன் பாடலைக் காண்க.

''அறைகுவேன் யெட்டதிலே நாலுஞ் சேர்த்தால்
அப்பவல்லோ யோகமது சித்தியாச்சு
பறைகுவேன் சாவென்ற பேச்சும் பேச்சு
பண்பாகத் தன்நிழலின் சாயையில்லை
மறைகுவேன் தீபமதின் சாயை யில்லை
மக்களே தண்ணீரின் சாயையில்லை
தறைகுவேன் இவ்விதமாய்ச் சாதித் தோர்க்குச
சட்டை கக்கித் தேகமது அருணனாமே - 31

இறுதியாக வரும் சித்தரின் பாடலில், உன்தேகம் அருணன் போல் ஒளிவிடும். இருக்கையிலும் நடக்கையிலும் வகையை

Koviloor Digital Library

ஒளி போலுள்ள சிவயோகம் முடிப்பதற்கு வகையைக் கூறுவேன். பூரணானந்தரே கேளு. கூறும் சமநிலையின் சமயத்தில் மேலும் பூரகம் இரண்டுமுறை வாங்க வேண்டும். எப்பொழுதும் கும்பகந்தான் நான்காகும். கருணையுள்ள ரேசகம் ஒன்று ரேசிப்பாய். கைமுறையாய் சொன்னதை செய்யவும் என்று கூறுவது அவரின் இறுதிப் பாடல் மூலம் அறிக.

"அருணனா யிருக்குமடா உந்தன் தேகம்
ஆச்சரிய மிருக்கையிலும் நடக்கும்போதும்
வருணமுள்ள யோகமதைத் தீர்ப்பதற்கு
வகைசொல்வேன் பூரணா னந்தா கேளு
தருணமுள்ள பூரகந்தா னிரண்டு வாங்கு
சதாநித்தம் கும்பகந்தான் நாலு கும்பி
கருணமுள்ள ரேசகத்தை யொன்றே ரேசி
கைமறையாய்ச் சொன்படி கருதிச் செய்யே - 52

சுந்தரானந்தர் சிவயோக ஞான் — 32

"சித்தர் சுந்தரானந்தர் சிவயோக ஞானம் என்னும் நூலில் கூறியவாறு கூறி வந்தோம். இந்த சித்தரின் முறை மிகவும் எளிதானது. அவர் கூறியவாறு படித்துணர்ந்து செயல்படுவார்களுக்கு பின் விளைவுகள் நேராது. புரியாது செய்தால் சித்தர்கள் பொறுப்பாகார்கள். சிவராச யோக ஞானம் பெற வேண்டுமென்றால் தக்க குருவை அணுகி பயிற்சி எடுத்துக் கொள்ளவேண்டும. குருவை நாடி அவரின் அறிவுரைப்படி நடந்தால் சாகாத கல்வி கற்று பயனடையலாம். மிகவும் எச்சரிக்கையாக செய்ய வேண்டும்.

ரேசக பூரக கும்பக செய்யும் போது மந்திரவித்தெழுத்துகள் தியானித்தும் உள்ளித்தும் நிறுத்தியும், வெளிவிடும் போதும் சிந்தனையில் நினைந்து செய்ய வேண்டுமென்று சித்தர் பெருமக்கள் கூறியுள்ளார்கள். நாமும் இவ்வாறே இனி அந்த வழியை பயிலுவோம். பயிற்சி செய்வோம்.

சிவஞான யோகத்திற்கு ஆதியாகவுள்ளது:

மச்சமுனி ஞான தீட்சாவிதி என்னும் நூலில் சிவஞான யோகத்திற்கு ஆதியாக இருப்பது மூலமென்று வாசியாகும். வாசியே யோகத்திற்கு மூலமாகும். யோகமே ஞானத்திற்கு மூலமாகும். அதுவே தேகத்திற்கு அழிவு என்பது இல்லை என்று மேற்கூறிய சித்தர் ஓதுகிறார். அவரின் பாடல் காண்க.

ஆவது சித்தம் அழியாது காயந்தான்
ஆவது ஞானத்துக் காத்யாம் யோகந்தான்
ஆவது யோகத்துக் காதியாம் வாசிதான்
ஆவது வாசிக் குடி மூல மாதியே - 34

மேலும் அந்த சித்தர் சிவராச யோகம் செய்ய வேண்டுமென்றால் அதனை சிங் + ஐந்தெழுத்து சேர்த்து + மூன்றும் சேர்த்து ரேசகம் செய்க.

அங்கென்ற தைந்துடன் மூன்றும் சேர்த்து கும்பகம் செய் என்றும், வங்+ஐந்தெழுத்துடன் + மூன்றும் சேர்த்து பூரகம் செய்ய வேண்டும். இதுமூன்றும் மங் கென்றே மவுனநிலையைக் கூடும் என்று ஓதும் பாடல் காண்க.

சிங் கென்ற தைந்துடன் சேர் மூன்று ரேசகம்
அங் கென்ற தைந்துடன் சேர் மூன்று கும்பகம்
வங் கென்ற தைந்துடன் சேர் மூன்று பூரகம்
மங் கென்ற மவுனம தாமே - 42

மச்சமுனி ஞான தீட்சா விதி — 100

மேலும் சுப்பிரமணியர் சிவம் சிவயோகம் என்னும் நூலில் சுழினையில் மனத்தை ஊன்றி மூலத்தில் வங் என்று பூரகம் செய்க. சுழியிலே சிங் என்று ரேசகம் செய்க. துரிதமாக கண்டமதில் அங் கென்ற கும்பக செய்க என்று ஓதும் பாடல் காண்க.

"பையப்பா சுழினையிலே வின் னென்றூணி
பதியாக மூல மதில் 'வங்' கென்று பூரி
மெய்யப்பா சுழினையிலே 'சிங்' கென்று ரேசி
வேகமுடன் 'கணடமதில்' 'அங்' கென்று கும்பே
- 26

சுப்பிரமணியர் சிவம் — சிவயோகம் — 40

அகத்திய பெருமான் தாம் எழுதிய மெய்ஞ்ஞானம் சுருக்கம் என்னும் நூல் ரேசக பரகம் கும்பகம் செய்யும் போது

Koviloor Digital Library

வித்தெழுத்துக்கள் இணைந்து சிவயோகம் செய்யும் முறையைக் கூறுவது காண்க.

'சிங்'கென்றே மந்திர வித்துடன் உள்ளே பூரகம் 'வங்' கென்ற மந்திர வித்துடன் வெளியே ரேசகம் செய்க. 'அங்' கென்ற மந்திர வித்துடன் வாங்கியதை நிறுத்தி கும்பகம் செய்க. அப்பொழுது ஐம் — ஓம் — சிம் — வம் என்ற மந்திரத்தை சிந்தையில் நினைத்தல் (தியானம்) வேண்டும். இம்மந்திரத்தை சுழிமுனையில் நிலை நிறுத்திய பின் அம் — உம் — சிம் — வம் — ஓம் — ஓம் — ஐயும் — கிலியும் — சௌவும் — வா — சிவா — உம் — பலையே — சிவா — வா என்று நினைதல் வேண்டும். அதுவே ரேசகம் முப்பத்திரெண்டு முறை செய்க. பூரகம் பதினாறு முறை செய்க. கும்பகம் அறுபத்து நாலு முறை செய்க. இதுவே பிராணாயம் சொல்லும் குறியாகும். பிங்கலையிலே தியான மந்திரம் நங் — மங் — சிங் — வங் =— யங் — ஓம் யவசிவந வென்று மவுனத்தால் தியானம் செய்து சதா சிவமாஞ் சுழினையில் நில்லுவதோடு அன்னை வாலைதாயின் பூசையை செய்க என்று கூறும் பாடலை கீழ்க்காண்க.

''கேளப்பா 'சிங்' கென்று உள்ளே பூரி
கிருபையாய் 'வங்'கென்று உள்ளே ரேசி
ஆளப்பா 'அங்'கென்று உள்ளே கும்பி
'ஐம் - ஓம் - சிம் - வம்' மென்று
தியானஞ்செய்வாய்
சூளப்பா சுழிமுனை கண் சுழியி லெத்தச்
சொல்லுகிறேன் ''அம் - உம் - சிம் - வம்
ஓமென்று
வாளப்பா ஓம் - ஐயும் - கிலியும் - சௌவும்
வா சிவா உம் பரையே சிவா வா வென்றே - 10

என்னவே ரேசகமுப் பத்திரெண்டு
இயல்பான பூரகந்தான் பதினாறாகும்
உன்னவே கும்பந்தா னெட்டாகும்
உயர்ந்து நின்று பிராணாயம் குறிசொற் கேட்டு
தின்த தசநாடிதா ரணையே யானால்
திர மறிந்து சையோக நிலையைப் பற்றி
கண்ணில் நின்ற யிட மறிந்து வாம்பூசை
கருவான சிவயோகங் காணலாமே

''ஆமென்றும் ஓமென்றும் பூசையாச்சு
அறிவான புரியட்டத் திருந்து கொண்ட
நாமென்ற பிங்கலையில் தியான மந்திரம்
''நங் - மங் - சிங் - வங் - யங் - ஓம் - யவசிமந வென்றும்
தாமென்ற மவுனத்தால் தியானஞ் செய்து
சதாசிவமாஞ் சுழிமுனையிற் றானும் நின்று
காமென்ற பரவெளியி னொளியைக் கண்டு
கருத்துடனே வாலையவள் பூசை பாரே - 12

அகத்தியர் மெய்ஞ்ஞான சூத்திரம் - 12

மிருகண்ட மாமுனிவர் தாம் எழுதிய மெய்ஞ்ஞானம் என்னும் நூலில் குருவின் துணைக் கொண்டு சிவராஜயோகம் கற்க வேண்டும். மூச்சு வங் என்ற மந்திரத்துடன் வெளிவிடுதல். மூச்சு சிங் என்ற மந்திரத்துடன் உள்ளே வாங்க வேண்டும். மூச்சானது அங் என்ற மந்திரத்துடன் நிறுத்தல் வேண்டும். "அம் — உம் — ஓம் — சிம் — யம்" என்று சிந்தனையில் நினைத்து தியானம் செய்யவேண்டும் என்று கூறும் பாடல் காண்க.

''இன்ன வகை யென்று கேள் குருவைத் தான்''
இதையறிந்து ''வங்'' கென்று முள்ள ரேசி
நன்னய மாய்ச் ''சிங்'' கெனவு முள்ளே பூரி
நாடியே ''அங்'' கென்று முள்ளே கும்பி
சொன்னாயமாய் ''அம் - உம் - ஓம், சிம் - யம்''
மென்று
சிந்தை நினைந் தேதியானம செய்குவாயே - 8

மேலும் அந்த மாமுனிவர் நடுநாடியின்கண் சுடரை ஏற்றச் சிறந்த முறையில் — "அம் — உம் — சிம் — வம் — ஓம்" என்று மெதுவாக ஓம் — ஐயும் — கிலியும் — சவ்வும் — பரவாகி வாலை பரை — சிவா பூரகம் பதினாறும், கும்பகம் அறுபத்தி நாலும் முறையாகப் பிராணயங் குருவை கேட்டு அறிக என்று கூறும் பாடல் காண்க.

''செய்து நடு நாடிக்கண் பிரபையேற்றச்
சிறப்பாக ''அம் - உம் - சிம் - வம் - ஓம்''
மென்று
பையவே ''ஓம் - ஐயும் - கிலியும் - சவ்வும்''
''பரவாசி வாலையாம் பரை சிவா'' வென்

Koviloor Digital Library

நுய்யவே ரேசக் முப்பத்தி ரெண்
சுயமான பூரகம் பன்னாறதாகும்.
வைபவமாய்க் கும்பகமும் அறுபான்நாலு
வகையாகப் பிராணாயங் குருவைக்கேளே - 9

மேலும் அடுத்துவரும் பாடலில் மகனே நீ கேட்டறிக. பத்து நாடிகளைப் பற்றி முழுதாக அறிந்து தாரணையின் தன்மையின் வலிமை தெரிந்து நாள்தோறும் சிவயோக நிலையைப் பற்றியும் அதன் நன்மையைப் பற்றியும் அதுகள் நிற்கும் இடங்களைப் பற்றியும் வளமை பெற்ற வாமமெனற பூசை செய்க. அதன் பொருள்கள் உணர்ந்து கருவை அறிந்து செய்தால் யோகமாச்சு. அதன் தொடர்பாக "ஆம் — உம் — ஓம் — வங் — யம் — ஓம்" "யவசிமந" என்று சிந்தையில் நினைந்தும் வழிபடல் வேண்டும் என்பதை கீழ்வரும் பாடலால் அறிக,

"கேளப்பா பத்தென்ற நாடிதானும்
கெடியா தாரணை யாய்ப் பல மறிந்து
நாளபபா யோக மென்ற நிலைப் பற்றி
நன்மையுடன் கண்ணின்ற யிடமறிந்து
வாளப்பா வாமமென்ற பூசை செய்து
வஸ்தான கருவறிந்தால் யோகமாச்சு
நீளப்பா "அம் - உம் - ஓம் - வங் - யம் - ஓம்"
நெறியான "யவசிமந" வென்று தானே - 10

மிருகண்ட மாமுனிவர் மேலும் கூறுகிறார். அதனையும் அறியுங்கள். அவர் ஐந்தெழுத்தை மாறி தியானம் செய்ய வேண்டும். இடகலையிற் சிங் — வங் — யங் — நங் — ஓம் — நமயவசி என்றும், அடுத்து வலிமையான சிகாரத்தின் தன்மை அறிய வேண்டும். அடுத்து சுழினையில் "ஓம் — மங் — நங் = யங் — வங் — சிங் — ஓம் — சிவயநம ஓம் என்று நினைத்து சிந்தை செய்து அடுத்து நகாரத்தை அறிய வேண்டும். எப்பொழுது இன்பம் தரக்கூடிய சுழினையின் சுடரைக்கண்டு பார் என்று ஓதப்படுகிறது. அவரின் பாடல் காண்க.

"தானாக வைந்தெழுத்தை மாற்ற வேணும்
தன்மையுட னிடகலையிற் "சிங்-வங்-யங் - நங்"
தானாமங் "ஓம் - நமயவ சி" யென்று
சத்தான சிகார மதை யறிய வேணும்
தானாகச சுழிமுனைக்கு "ஓம் - மங் - நங் - யங்
சதா - "வங் - சிங் - ஓம் - சிவயநம - ஓமென்று"
தானாக நகாத மதை யறிய வேணும்
சதானந்த சுழி முனையி னொளிவைப் பாரே - 11

மேற்கண்ட பயிற்சி செய்தல் வேண்டும். இதனால் புரியட்டம் என்று சொல்லக்கூடிய ஐந்து பூதம்+மதி — கதி — தீ இணைந்து ஒன்றாக நின்று பூரண நிலையடையும். அதனால் அவனே சீவன் முத்தன் — இதனைப் பற்றி தெரிந்த குரு ஆசானாவான். அதனால் இருள் அகன்று ஒளிதோன்றும் ஆயிரத்தெட்டு இதழ் மலரின் மேல் அமுத கற்பம் ஒழுகும். பொருள் அறிந்து பயனாக்குபவனே சிவயோகி யாவான். முக்கால் அறிந்தோன் சித்தனாமே என்பதை கீழ்வரும் இருபாடல் மூலம் அறிந்து புரிந்து உணர்ந்து தெளிக என்று ஓதப்படும் பாடல் காண்க.

"பாரப்பா பவள பச்சை நீலத்தோடு
பசுமையுடன் வெண்மை யென்ற வைந்தினோடு
சேரப்பா கதிரவன்ற னுதயம் போலச்
சேகரமா மொளி யென்னக் காந்தி காணும்
நேரப்பா பிறர்கையிற் கொடுத்த பொன்னை
நினைவுடனே பன்முறையா யீட்டல்போலத்
தேறப்பா வைந்துரு வொன் றான மூலம்
தெரிசிக்கத் தீங்கில்லா தருளதாமே - 12

"அருளான வன்னி கதிர் மதியுங் கூடி
அசைவற வொன்றாய் நிற்கப் பூரணந்தான்
வெருளாம லறிபவனே முத்தனாவான்
விதிமுறைத் தோன் குருவென்னு மாசானாகும்
இருளகற்றுங் கிரண வொளி யுதிக்கும் பாரு
இதழயி ரத்தெட்டின் மேலாங் கற்பம்
பொருளாள தறிந்துண்போன் யோகியாகும்
புகழான காலறிந்தோன் சித்தனாமே - 13

என்று மிருகண்ட மாமுனிவர் தமது மெய்ஞ்ஞானத்தில் ஓதுகிறார்

மேலும் ஓர் சித்தரான அழுகணிச் சித்தர் தம் ஞுழன சுருக்கு சூத்திரத்தில் வாசியோக முறையும் அதில் சிந்தை தனில் நினைக்கும் மந்திரமும் முறையாக கூறும் அவரின் பாடலைக் கண்டு

Koviloor Digital Library

சிவராச யோகத்தில் ஈடுபட நினைக்கும் அன்பர்களுக்கு உதவியாக இருக்கும் என்று நினைத்து அந்த சித்தரின் பாடலை தருகிறோம். பயனடைக.

"தானேதா னாக வென்றால் வாசி பற்றி
தற்பரத்தை யெந்நாளுஞ் சார வேண்டும்
கோனான குருபதத்தை யடுக்க வேண்டும்
குறியான குறியறிந்து கொள்ள வேண்டும்
ஆனாலும் மென்மக்களே அறிவுள் ளோனே
அம்மையெனுங் குண்டலித்தா யருளினாலே
மானாகி நடுவனையில் மனதை வைத்து
மாறாம லனுதினமும் பார்த்திடாயே - 5

மனிதன் தன் அறிவின் துணைக் கொண்டு தானாகி நின்று வாசியை கைப்பற்றி தற்பரப்பொருளை எந்நாளும் அகலாம் சார்ந்து நிற்க வேண்டும். உயர்ந்த சிறப்புடைய குருவின் இடத்தில் நிழல்போல் அடுத்து இருக்க வேண்டும். குறிகளின் குறியை அறிந்துக் கொள்ள வேண்டும். இருந்தாலும் என் மைந்தனே அறிவு மிகுந்தவனே அம்மையென்னும் மேல் மூலக்குண்டலித் தாயின் அருளினால் மயக்கும் மனத்தைத் தெளிவுப் படுத்தி நடுவணை என்னும் சுழினையில் மனதை நிறுத்தி மாறாமல் நாள்தோறும் நாட்டம் பார்ப்பாயே என்று கூறுகிறார். அடுத்து வரும் பாடலில் விளக்கம் தருவதைக் காண்க.

"பார்த்திடுவாய்ச் சந்திரனை ரவியிற்றாக்கிப்
பாலகனே சுழிமுனையில் நிறுத்திக் கொண்டு
காத்திடவே கும்பகத்திலிருந்தால் மைந்தா
கனலெழுந்து மேலேறிக் கபாலமுட்டி
வேர்த்திடும் நீ ரதுவல்லோ வமுதமாகும்
மெய்யான ஊறி நீ ரதினிலென்றும்
கோர்த்திட்டார் கோடனு கோடி சித்தர்
குறிப்பறிந்து சுழினை யிலே கூடுவாயே - 6

சந்திரன் என்பது இடைகலையாகும் ரவி என்பது பிங்கலையாகும். சந்திரக்கலையில் மூச்சு வாங்கி பிங்கலை தாக்கி சுழினையில் நிறுத்தி இருந்தால் அக்கினியானது மிகுந்து மேலேச் செல்ல கபாலமுட்டி இருக்கும் போது உருகிவரும் நீரானது அமுதமாகும். உண்மையாக அந்த நீருக்கு ஊசி நீர் என்பதாகும். அந்த ஊசி நீர்தான் சித்தர்கள் எல்லோரும் உண்டனர். எனவே குறிப்புணர்நது சுழினையிலே கூடி நிற்பாயாக என்று கூறுகிறார்.

அடுத்துவரும் பாடலில் எடுத்தல் — நிறுத்தல் — விடுதல் அவைகளின் மாத்திரையின் அளவு வீடுகள் 16—64 —32 என்ற தொகையில் தெரிந்து கூறுனேன். அதில் நங் — வங் — வயநமசி — வயநமசி வங் — நங் — என்று மந்திரத்தை மாறி கூறினால் ஒரு மாத்திரை நேரமாகும். இதுபோல் இரண்டு முறை செய்து மனத்தால் தியானம் செய்ய வேண்டும். அதனை தெரிந்து செய்க. அதன் பாடலைக் காண்க.

"கூடியே பூரகமுப் பத்திரண்டு
குறியான கும்பகமு மிதற்கு ரெட்டி
நாடியே ரேசகந்தான் பதினாறுகும்
நலமான மாத்திரைகள் தெரியச் சொன்னேன்
வாடிடா "நங் வங் வய நமசி" யென்று
மாறியொருதரஞ் சொல்ல மாத்திரையொன்றாகும்
தேடியிந்தப் படியிரண்டு தரம் செய்யத்
தேர்ந்து மனக் கண்ணாலே தெரிந்து வூணே - 7

அடுத்து வரும் பாடலில் மேற்கண்ட பாடலில் கூறியவாறு கண்ணை மூடியிருக்கும் போது உன்னுள்ளே நந்தி மூலம் காணலாம். பாலமாக இருக்கும் மந்திரம் சொல். "ஓம - அங் - யநமசிவ" என்று நாலு தரம் ஏற்றி கும்பகம் செய்தாக்கால் அப்பொழுதே பிங்கலையில் ரேசகம் செய்ய, "ஓம் - சிங் - நங் - சிவாயநம" என்று ஓதினால் சூரியனும் சந்திரனும் இரண்டும் ஒன்றாகி நிற்கும் என்று கூறும் பாடல் காண்க.

"ஊனியே கண்மூடி யிருக்கும் போது
உன்னுள்ளே காணு மங்கே நந்திமூலம்
தோணியே மந்திரஞ் செய் மாத்திக்கு
சொல் "ஓம் - அங் - அங் - யநம சிவா" வென்று
ஆணியே நாலுதரங் கும்பித்தாக் கால்
அப்பொழுதே பிங்கலியல் ரேசகஞ் செய்
பாணியே "ஓம் சிங் நங் சிவாய நமா" வென்று
பற்றினால் ரவி மதியு மொன்றாந் தானே - 8

Koviloor Digital Library

அடுத்து வரும் பாடலில் ரேசகமானது ஒரு மாத்திரையளவு செய். இதுபோல் செய்து சிவயோகத்திற்கு இதுவே ஆதாரமாகும். இந்த முறையில் பதினாறு முறை மாத்திரை தீர்ந்தால் வளமுள்ள பௌர்ணமி முதல் அமாவாசை வரை செய்க. மீன மாதம் மேச மாதம் ஆக இரண்டில் சிவ யோகம் செய்தால் மதியாக உள்ள இடைகலை கரைந்து பிங்கலையில் இணையும் என்பது அவரின் பாடலால் அறிக.

"தானே நீ யொரு தரந்தான் ரேசகஞ் செய்
தப்பாது யோகத்துக் கிதுவே யாதி
வானே நீ யிப்படி சோடசமுந் தீர்ந்தால்
வளமான நந்தி கொலு பவுர்ணை தொட்டு
கோனேயாம் மாவாசை வரைக்கும் பாரு
குணமான மீனமேச மதிரண்டில்
மானே நீ யமாவாசை வரைக்குந் தீர்ந்தால்
மகனேகேள் மதி தேய்ந்து போகும் பாரே - 9

அடுத்துவரும் பாடலில் பதினாறு முறையானதும் கருணையுடன் சொல்லிவிட்டேன் இதனை இப்படி யாரும் சொல்லமாட்டார்கள். மேற்கண்டவாறு வாசிகள் பயிற்சி செய்து வரும் முறைக்கு சிவராச யோகம் என்பா. இந்த முறைகள் வழியோடு சொல்லமாட்டார்கள். இந்த நூல் தனக்கென்று எவ்வாறு கணக்காக சொன்னது யோக நெறி வழியாகும். தேர்வு பெற நீ மாத்திரை யீரெண்டு தீர்ந்து உறுதியாக மதி பாதி புகுந்து பாரு என்று கூறும் பாடல் காண்க.

"பாரே நீ சோடசமுந் தீர்ந்த பேர்க்குப்
பரிவுடனே சொல்லிவிட்டே னெவருஞ் சொல்லார்
சாரே நீ யிது வல்லோ ராசயோகம்
தவறாமல் முறையாக யெவருஞ் சொல்லார்
காரேமின் னூல்தனக் கென்னூலொவ்வாது
கணக்காகச் சொன்னே னேயோக மார்க்கம்
தேறே நீ மாத்திரையீ ரெண்டுந் தீர்ந்து
திடமுடனே மதிப்பாதி புக்கிப் பாரே - 10

பின்வரும் அடுத்தப்பாடலில் நீ நூற்றிருபதுத் தெட்டு மாத்திரை பூரகம் செய். நீ பிரதமையில் அறுபத்து நாலு மாத்திரை சாதகஞ் செய். சதுர்த்தி வரை செய். இந்த மாதிரி பழக்கம் செய்யும் முறை என்னை போல் யாரும் கூறமாட்டார்கள். இப்படி மாறி செய்யும் வழியை குறியைச் சொன்னேன். மறவாமல் அமாவாசை வரை வாசி யோகம் செய். இப்படி மூன்று முறை செய்க என்று கூறும் பாடல் காண்க.

"பாரே நீ மாத்திரை நூற் றிருபத்தெட்டும்
பக்குவ மாய்ப் பின்னுமது பத்தினாலு
தேறே நீ பிரத மைதா னறு பானாலுந்
தீர்ந்து பிரதமை யதனிற் சாதகஞ் செய்
தேரே சதுர்த்திவரை சொல்லக் கேளு
நிகழ்த்துவே னென்போல லெவருஞ் சொல்லார்
மாறே நீ மாத்திரையின் குறியைச் சொன்னேன்
மறவாம லமாவாவை வரைக்கு மூன்றே - 11

அடுத்து வரும் இருபாடலில் பூர்வ பட்ச பிரதமை மட்டு அடுத்து மாத்திரை நூற்றிருபத்து எட்டு ஊன்றிய பின் மதி என்ற இடைகலை தேய்ந்து போகும் வழியை விளக்கமாக கூறிவிட்டோன் மீண்டும் பௌர்ணமி அடுத்து பிரதமை தொடங்கி அமாவாசை மறுநாள் வரை வாசியை ஊன்றுக. மற்ற முறைகள் யோகமாகாது. உயர்ந்து நின்ற மதி போன்ற இடகலை தேய்ந்து குறைந்து போகும்.

குறைந்து நிற்கும் இடகலை விண்ணில் சந்திரன் போல குறைந்து பின்கலையில் இணைந்து போச்சு. இந்த யோக மார்க்கம் பதினாறு மாதம் குறையாமல் மேற்கணடவாறு சிவராசயோகம் செய். குறையாத சந்திரக்கலை குறைந்து போச்சு. குணமிருந்த குருநந்தியிடம் சேர்ந்தேன். குறையாத புரியட்டம் உடலானது முடிந்தது உண்மையாகும் என்பதை இருபாடல்களில் ஓதியிருப்பதைக் காண்க.

"ஊன்றடா பூர்வ பட்ச பிரதமைமட்
டுத்த மாத்திரை நூத்தி யிருபத் தெட்டாகும்
ஊன்றடா மதியை யுண்டு விழுங்கு மார்க்கம்
உத்தமனே விபர மதாய்ச் சொல்லிவிட்டேன்.
ஊன்றடா பௌர்ணமியைத் தான்றொடங்கி
உத்தமமா மமாவாசை மறுநாள் மட்டும்
ஊன்றடா மற்றதெல்லாம் யோகமாமோ
உயர்மதி போல லிடகலையுங் குறைந்து போமே- 12

Koviloor Digital Library

"குறையுமிட கலைவானின் மதியம் போலக்
குறைந்தித மாய்ப்பின் கலையிற் கூடிப் போச்சு
குறையாத பதினாறு மாதமப்பா
கூடியே யிவ்வண்ணம் யோகம்பாரு
குறையாத சந்திரகலை தேய்ந்து போச்சு
குணமிருந்த நந்தியைப் போய்க் கூடலாச்சு
குறையாத புரியெட்ட சரிநமையா
கூசகூ ஓம் முடிந்த துண்மை தானே

சிவராச யோகத்தால் உடல் சூட்டுக்கு வில்வாதி நெய்:

சிவராச யோகம் செய்பவர்கள் தேகத்தில் அதிகமாக வெப்பமுள்ளதை உணர்ந்தால் வில்வப் பழம் இருபத்தி ஒன்றாகும். அதனைக் கொண்டு வந்து பழத்தை உடைத்து அதிலிலுள்ள சதைப்பற்று கரண்டி எடுத்து மூன்று படிநீரில் கரைத்து, தேய்த்து எடுத்து வடிக்கட்டிய கரைசல் மூன்று படி. அதனை நன்றாக காய்ச்சி சுண்டவைத் தெடுத்த ஒருபடி சாறு எடுத்துக் கொள்க. அத்துடன் நல்ல எண்ணெய் என்று கூறப்படும் எள்ளெண்ணை ஒரு படி சேர்த்து ஒருபடியாகும் வரை சுண்டக் காய்ச்சி எடுத்து பாத்திரத்தில் ஊற்றிக் கொண்டு அதில் சர்க்கரை ஒரு பலமிட்டு சக்தி பூஜை செய்து எடுத்துக் கொள்க. பின் இறையருளை வேண்டி தலையில் தேய்த்து முழுகினால் கண்ணெரிச்சல் மாறி விடும். கைகாலின் காந்தல் தீரும். வெப்பம் தணியும். கண்ணெரிச்சல் குணமாகி கண் குளிர்ச்சி ஆகும். இந்த நெய் போன்ற சூட்சமத் தன்மையாகும்.

தேகத்தில் ஒளி உண்டாகும். இரத்த விருத்தி மிகவும் உண்டாகும். அனலோ நீங்கும் மேகம் என்ற நோயெல்லாம் விலகும். தேகம் தங்கம் போல் ஒளிரும். குட்டம் போகும். வெட்டை தீரும். கைக்கால் குடைச்சல் போகும். இந்த நெய்யை மிகவும் புத்தியுடனும் பக்தியுடனும் வைத்துக் கொள்க. பகலில் தூங்கக் கூடாது. பெண்களின் உறவு கூடாது என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.

சீரகம் — கிராம்பு — ஏலம் — கடுக்காய் — கெருட பச்சை வகைக்கு இரண்டு வராகனெடை, பளம்பாசி, சிறுகீரை — தகரை — அகத்தி — கொடுப்பை ஆக இதன் சாறு அரைக்கால் படி சாறு வாங்கி முன் மருந்துடன் சேர்த்து அரைத்து சிற்றாமணக்கு எண்ணெய் + வெள்ளாட்டுப் பால் வகைக்கு அரைபடி சேர்த்து மெழுகு பதமாக காய்ச்சி எடுத்துக் கொண்டு தினம் ஒரு கரண்டி வீதம் இருவேளை குடித்தால் வெப்பம் — வாய்வு — மேகம் கொடிய கிரந்தி அரமும் போகும். பத்தியம் அசைவ உணவுகள் தள்ளவேண்டும். பெண்ணின் உறவு தள்ள வேண்டும் என்று எச்சரிக்கப்படுகிறது.

மேற்கண்டவாறு இருந்து சிவராச யோகம் செய்ய வேண்டும் என்று அழுகணி சித்தர் தமது ஞான சூத்திரநூலில் கூறுகிறார்.

சிவராஜ யோகத்தால் தேகம் மாறுநிலை:

குருராச சித்தர் சிவயோக சிந்தாமணி என்னும் நூலில் சிவராச யோகம் செய்யும் போது முதலாண்டில் நோய்கள் போகும். இரண்டாவது ஆண்டில் மோகம் என்று கூறும் குற்றம் போகும். மூன்றாவது ஆண்டில் மனசாந்தியாகும். வசையாகப் பாடினாலும் புகழ்ந்தாலும் நிதானம் (பொறுமை) ஏற்படும். நாலாவது ஆண்டில் நஞ்சுயுடைய உயிர்கள் தீண்டினால் நஞ்சு உடலில் ஏறாது. பொய்யாய் போகும் உடல் மெய்யாய் நிலைக்கும். பூ — காய் — கனியாக நிற்கும். ஐந்தாம் ஆண்டால் பொறிகள் வெல்லும். பொறிகள் வென்ற பின் ஆறாவது ஆண்டில் எமனும் மரணமடைந்தான். பூரணத்திலிருக்கும் தாய் சக்தியின் அன்பிற்கு உகந்தவனானேன். தந்திரம் செய்யும் நரி போன்ற மனத்தை ஏழாம் ஆண்டில் வென்று நிலைத்தேன். அறிவான பரிகுருவைக் கண்டு தங்கத்தினை போன்று மின்னும் தேகம் மகிமை உணர்ந்தேன். பதட்டமில்லாது அட்டாங்க யோகம் பார்த்தேன். எட்டாவது ஆண்டில் குற்றமற்ற திருவடியைச் சார்ந்து அதனை போற்றி மனம் மகிழ்ந்தேன் என்று கூறும் பாடல் காண்க.

"ஆச்சுதடா ஓராண்டில் வியாதி போச்சு

Koviloor Digital Library

அப்பனே ரெண்டாண்டில் மோகம் போச்சு
வாச்சுதடா மூன்றாண்டிற் சாந்தியாசசு
வைதாலும் புகழ்ந்தாலும் நிதான மாச்சு
போச்சுதாட நாலாண்டில் விடமேறாது
பொய்யென்ற தேகமது மெய்யாச்சு
காச்சுதடா பூகாயுங் கனியாச்சு
கருதிப்பாரஞ்சினிலே பொறி வென்றேன் – 23

பொறி வென்றேன் ஆறாண்டில் எமனுமாண்டான்
பூரணத்தாய் பதத்துக்கு ஆளுமானேள்
நரியென்று எனையேய்த்த மனதையேழில்
நன்றாக வென்றுவிட்டு அறிவைக் கண்டு
பரிகுருவாந் தங்கத்தின் மகிமை கண்டு
பதைப்பறவே அட்டாங்க யோகம் பார்த்து
வரிவரியாய் எட்டாண்டில் நிட்களத்தின்
மலரடியைப் போற்றி மனம் மகிழ்ந்திடடேனே – 34

அடுத்து வரும் பாடலில் எட்டாம் ஆண்டில் பெற்ற நலன்கள் மேலும் கூறுகறிார். தாம்பெற்ற மகிழ்ச்சியுடன் யான் நினைத்தபடி பணியை முடித்தேன். வாலை என்னும் துரைசானி பெண்ணின் உதவியாள் மகிமையை புகழ்ந்தேன். நிராமயத்தை யெந்நாளும் போக்குவரவு நிலைபேறாமல் மயக்கமெல்லாம் கீழ்தள்ளி விட்டேன். எனக்கு எவரும் இணையானவர் இல்லையென்று மெச்சி அமைதி கொண்டேன். அண்டமென்னும் வெளியை கண்டு அதில் தேர்வடைந்து யாரும் அறியார். அதன் அதீதமான பொருள். இதன் பாடல் காண்க.

“மகிழ்ந்திட்டேன் சிந்தித்த படிமுடித்தேன்
வாலையெனுந் துரைப் பெண்ணாள் மகிமையாலே
மகிழ்ந்திட்டேன் நிராமயத்தை யெந்நாளுந்தான்
வாலையெனுந் துரைப் பெண்ணாள் மகிமையாலே
புகழ்ந்திட்டேன் நிராமயத்தை யெந்நாளுந்தான்
போக்குவரத் தொழிலதந்த நிலை பேறாமல்
இகழ்ந்திட்டேன் மயக்கமெல்லாங் கீழேதள்ளி
எனக்கொருவ ரிணையேது என்று மெச்சி
அகழ்ந்திட்டேன் அண்டத்தைக் கண்டு தேறி
ஆரறிவா ளவளறிவாள தீதந்தானே – 25

அடுத்துவரும் பாடலில் ஒன்பதாவது ஆண்டில் நிகழந்த வழிமுறையை தெரிவிக்கிறேன் மைந்தா கேள். காசினியில் நடக்கும் செயல்கள் மிகவும் அருகில் தெரிந்து கெவுன சித்திரை தன்னைக் கண்டேன். தொலைதூரத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம் அருகில் கண்டேன். பகலவன் வரும் நிகழ்ச்சியும் அறிந்தேன். விசித்திரமான மனிதருடைய செயல்கண்டு அதனை விதவிதமாக தெரிவித்து விளக்கினேன் என்று கூறும் பாடல் காண்க.

“அதீதமாம் ஒன்பதிலே நடந்த மார்க்கம்
அறைகிறேன் அழகுடைய மைந்த கேளு
நதீத மாங் காசியிலே நடக்குஞ் செய்கை
நான் தெரிந்து கெவுன சித்தர் தன்னைக்
கண்டேன்
பதீதமாந் தூர திஷ்டி யென்னைப் பெற்றாள்
பகலவனுந் சொல்லி வந்த பண்புங் கண்டேன்
விதீதமாய் மனிதருட நிகலுந் தோன்றி
விதவிதமாய்ப் பாடியே விளங்கினேனே – 26

என்று கூறுவதோடு எல்லாம் பத்தாம் ஆண்டின் நிகழ்வுகளும் கீழ்வருமாறு கூறுகிறார். பத்தாம் ஆண்டில் ஆயிரத் தெட்டண்டம் விசாலமெல்லாம் ஒரு நொடியில் மேவி பார்த்தேன். துலங்கின்ற பிரம லோகத்தில் கலைமகள் நிலையையும் கண்டேன். பொன்னுலக தேவர்கள் தன்னை வணங்கினார்கள். அவர் வழங்கிய அருளும் பெற்றேன். மால் என்னும் உலகத்தில் நுழைந்து அவரையும் கண்டேன். கயிலாயம் கரைகண்டு மகிழ்ச்சி அடைந்தேன் என்பதைக் கூறும் பாடல் இங்கு கண்டு களிப்புறுக.

“விளங்கினேன் பத்தாண்டா யிரத் தெட்டண்டம்
விசாலமெல்லாம் ஒரு நொடியில்
மேவிப் பார்த்தேன்
துளங்கினேன் பிரமலோ கத்திற் சொன்ன
சுகமான சரசுவதி நிலையுங் கண்டேன்
வளங்கினேன் பொன்னுலகத் தேவரெல்லாம்
வணங்கவே வரம் பெற்றேன் மாயானார்தன்
களங்க மில்லா வைகுண்டந் தன்னிற் சென்று
கயிலாசங் கரைகண்டு களிப்புற்றேனே –27

இதற்கு மேல்நிலையுள்ள சில செய்திகள் குருராஜர் தமது சிந்தாமணியில் ஓதியுள்ளார். அவர் எழுதிய நூல் கண்டு

Koviloor Digital Library

தெளிக.

நிஜானந்த போதம் என்னும் நூலில் ஞானிகள் தேக சித்தி பெறுவதற்கு தச தீட்சை என்னும் குறிப்புகள் விளக்கியுள்ளனர். அதில் முதல் தீட்சை முடித்தால் மயிர்துளையிலிருந்து அழுக்கு நீர்கள் வியர்வையாக கசியும். இரண்டாவது தீட்சை முடிந்தால் முக்குற்றங்களான வாத — பித்த — சிலேத்துமன களங்கள் விலகும். மூன்றாவது தீட்சையில் பழைய அழுக்கு இரத்தங்கள் கசியும். நாலாவது தீட்சையில் பாம்பு தோல் உரிப்பது போல் உடலில் சட்டை நீங்கும். ஐந்தாவது தீட்சையிலே தேகத்தின் சட்டை கழன்று உடல் சிவந்து காணும். பஞ்ச கர்த்தாள் கேட்டதைக் கொடுப்பார்கள். ஆறாவது தீட்சையிலே மீண்டும் சட்டை ஒன்று கழனறு சுழிமுனை வாசல் திறந்துக் கொள்ளும். தொலை நீள காட்சிகள் கண்ணுக்கு நன்றாக தெரியும். ஏழாவது தீட்சை முடிவான நிலையில் மீண்டுமொரு சட்டை வெண்போல் ஒளி வீசும். எட்டாவது தீட்சையில் சடம் மேலே உயரத்தில் தூக்கும். இலகுவாகும் கூடு விட்டு கூடு பாயும். ஒன்பதாவது தீட்சையிலே தேகம் சூரியனின் பிரகாசம் பெற்று எண்பேரும் பேறு தரும் சித்துகள் கைக்கூடும். தேவர்கள் தமக்கு ஏவல் புரிவார்கள். பத்தாவது தீட்சையிலே தேகம் முழுவதும் மயிர்கால் தோறும் ஒளி உண்டாகி தீபம் போல் சுடர்விட்டு ஒளிரும். தேகத்தை வெட்ட கத்தி நடுவோரும் இதற்கு சொரூப சித்தியென்பர். அண்டத்தில் மௌனம் பெறும். நரை — திரை — மூப்பு அகன்று எப்பொழுதும் பொய்யாக இருந்த உடல் மெய்யாக திகழ்ந்து மரணமில்லா வாழ்வு உண்டாகும் என்று ஓதப்பட்டுள்ளது. மேலும் செய்திகள் வேண்டியவர்கள் நூலை தேடி படித்தறிக.

சாகாத கல்வி கற்பிக்கும் சிவராச யோகம் ஓர் ஏணிப்படியாகும். அந்த ஏணி என்றுக் கூறப்படும் சிவயோகம் முத்தியும் கொடுத்து அதன் மூலம் சித்தியும் வழங்குகிறது. இதனால் ஒரு தனி மனிதன் (ஆண் — பெண்) இருவரும் இக்கலையை கற்க தகுதியுடையவர்களாவார்கள். இதில் பெண்கள் மிகுந்த ஆர்வம் காட்டவருவார்களானால் சாகாக் கலை மிகவும் எளிதாக இக்கலை விரிந்து விளங்கும் பெண்கள் ஏன் இதில் ஆர்வம் — ஊக்கம் — காட்டுவதில்லை ஒரு பெண் முழுதாக ஆர்வம் காட்டினால் அவள் மூலம் பத்து பெண்கள் சாகாத கல்வி பரவும் வாய்ப்பு அதிகம் ஏற்படலாம்.

பெண்களினால் தான் ஆண்கள் இக்கலையை கற்க தடைப்படுகிறது. அதில் முக்கியமாக வேதவியாசன் கட்டிய பொய்யன நான்கு வேதங்கள் ஆறு சாத்திரங்கள் புராணக் கதைகள் இதிகாசங்கள் கட்டி பரவ விட்டதின் விளைவே இன்றைய உலக மக்கள் திசை திருப்பப்பட்டனர். வேத வியாசனின் பொய்யான கட்டுக்கதையால் மக்கள் சுயநினைவு இழந்து நேர்மை தவறி செய்கிறார்கள் சாவதற்கு என்னென்ன வழிகள் உள்ளதோ அத்தனை வழிகள் வேதவியாசன் கட்டுக்கோப்பாக செய்து மக்களை திசை திருப்பி விட்டதின் விளைவே மக்கள் உண்மைக்கு மாறான செய்திகள் படித்து உண்மையென்று நம்பியதின் விளைவே சாகாத கல்வி கற்பதை முழுதுமாக தடைப்பட்டும் சாகும் கல்வி கற்று அதனை வாழ்க்கையில் கடைப்பிடித்து சாவது தான் முத்தி (செத்தால் முத்தி) கருத்து நிலை உருவாக்கியவன் வேத வியாசனே ஆவான்.

அதனால் தான் வேதவியாசனை கண்டிக்காத சித்தர்கள் இல்லை. அதனால் சித்தர் குழுவிலிருந்து விலக்கப்பட்டான். சித்தர்கள் சாகாத கலை ஓதினார்கள். ஆனால் வேதவியாசன் சாகும்நிலை உண்டாக்கி பொய்யான கட்டுக்கதைகள் புனைந்து வெளிவிட்டதின் காரணத்தினால் சாகும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர். இந்த நிலையை காகபுசண்டர் தமது பெருங்காவியத்தில்,

"சாகாமலிருப்பதற்குக் கல்வியுண்டு
சாக்காடு கொள்வதற்கும் விபரமுண்டு" – 238
காகபுசண்டர் பெரும்காவியம் – *1000*

Koviloor Digital Library

வேத வியாசன் மூட்டை மூட்டையாக புளுகி விட்ட செய்தியால் ஒரு சமுதாய கூட்டமே வேத வியாசனின் பெயர் சொல்லி வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் நிலை சமுதாயத்தில் உயர்ந்ததரம் என்றால் இல்லை என்ற நிலையே இன்னும் உண்டு.

எனவே வேதவியாசன் புளுகு மூட்டைகள் தள்ளிவிட்டு சித்தர்கள் கூறும் நெறிகள் பின்பற்றினால் ஒவ்வொரு தனிமனிதனான ஆண் பெண்கள் சாகாத கல்வி கற்க தகுதியுடையவர்கள் ஆவார்கள். இதனை இராம மாமுனி சித்தர் சிவயோக ஞானம் என்னும் சிறுநூலில்,

"நாடப்பா சாகாத கல்விதன்னை
நலமாக கற்பதற்கு வுன்னைத் தேற்றே" - 7

இராம மாமுனி சித்தர் சிவயோகம்35

என்று ஓதுகிறார். சாகாத கல்வியே ஒரு உண்மையான கல்வியாகும் என்பதை கல்நெஞ்சம் உடையவர்கள் அறிய வேண்டுமென்று கூறும் இடைக்காட்டு சித்தர் கூறும் வாக்கும் நோக்குக.

"சாகாதிருப்பதற்குத் தான் கற்கும்கல்வி யன்றோ
வாகான மெய்க்கல்வி வகுத்தறி நீ கல் மனமே - 66

இடைக்காட்டு சித்தர் பாடல் - 130

மேலும் சாகாத கல்வி பயின்றால் அவனின் வாழ்க்கை சிவமோடு சேரும் வாழ்க்கையாக அமையும் என்பதை அகத்தியர் பூரண சூத்திரம் என்னும் நூலில் வெளிப்படுத்திய வாக்கும் அறிந்து தெளிக.

"மனிதனாய் பிறந்தாக்கால் சாகாக்கல்வி
வாசிக்கும் சிவமோடு வாழ்க்கை சேர்வானம்" - 56

என்றும் கூறுகிறார். இந்த சாகாத கல்வி கற்க ஆண் - பெண் கற்று அதன் வாழ்க்கை போல் பின் இறக்காமல் இருங்கள் என்று திருவள்ளுவர் தமது சிந்தாமணி என்னும் நூலில் ஓதுவதையும் அறிக.

"பெண்ணும் மாணும் பிறவிதன் வாழ்க்கைபோல்
பிறந்த பின்னிறவாதிரு மாண்பரே - 74

என்று கூறுவதும் சிறப்புடையச செய்தியாகும்.

இந்த சாகாத கல்வி பயில மனிதன் எவ்வித மனம் உடையவனாக இருக்க வேண்டுமென்று திருமூலர் கூறும் மெய்யான செய்தியை அறிக.

"சாகாத கல்வியைத் தாங்கற்க வேணும்
வேகாத சிந்தை படைத்திட வேணும்
கோகாமியத்தைக் குறைத்திட வேணும்
ஆகாத மட்டைக் கறிவதுண்டாமே - 102

திருமூலலர் குருமூப்பு நூல் - 200

ஒரு மனிதன் சாகாத கல்வி கற்க வேண்டுமென்றால் உறுதியான சிந்தனை உடையவனாக இருக்க வேண்டும். பஞ் சமலம் ஒழிக்கும் உறுதியுடைய மனம் படைத்திருக்க வேண்டும். இதில் ஒன்றும் தெரிந்துக் கொள்ளாதவன் மட்டைக்கு ஈடானவன் என்று ஓதுகிறார்.

மனிதர்கள் சாகாமல் இருக்க வழிகள் கூறுய சித்தர்களின் முறைகள் இருக்க, மக்களை திசை திருப்பி சாவதற்கு கூறிய செய்திகள் தந்த வேத வியாசனின் பொய்யான வேத இதிகாச புராணங்களின் புளுக்கு மூட்டை தள்ளிவிட்டு ஒவ்வொரு ஆண் பெண் சாகாத கல்வி பயிலும் முறை அறியமுன் வந்தால் உண்மையில் சாவதைத் தடுத்துக் கொண்டு முத்தியும் சித்தியும் பெற்று என்றும் சிவத்தோடு இணைந்து உயர்ந்த வாழ்வு பெற முன்வர வேண்டும். பொய்யான வேத இதிகாச புராணங்கள் படித்து மனம் புண்பட்டு மடிந்து செத்தால் முத்தி என்ற பொய்வாக்கு அறிந்து உணர்ந்து மக்கள் அனைவரும் மெய்வாக்கை வாழ முன் வர வேண்டும்.

அகத்தியர் பூசாவிதி என்னும் நூலில் ஒருவன் சாகாமல் இருந்தால் அவனே சித்தன் என்று சச்சிதானந்த குருவிற்கு மகனும் ஆவான் என்று ஓதும் வாக்கு காண்க.

"சாகாமல் இருந்தால் அவனே சித்தன்
சச்சிதானந்த குருபுத்திரனாகும்" - 127

அகத்தியர் பூசாவிதி - 200.

Koviloor Digital Library

மேலும் வள்ளல் இராமலிங்க அடிகளார் "சாகாதவனே சன்மார்க்கி" என்று ஓதுகிறார்.

சாகாத கல்வி பயில வேண்டுமென்றால் மதத்தை விட்டு விலக வேண்டும். சமயத்தை விட்டு விலக வேண்டும். ஜாதியை மறந்துவிட வேண்டும். இவைகளை விட்டு அகலாத வரை சாகாத கல்வி கற்கும் நலை உண்டாகா. பொன்னான வாய்ப்புகள் இழந்தவன் மண்ணாகி போவான் என்பது உறுதியாகும்.

எனவே உலக மக்கள் அனைவரும் மதம் - சமயம் - ஜாதிகள் விட்டு விலகி அனைவரும் ஓரேமனித இனத்தவர் என்று கருதி செயல்பட்டால் சாகாத கல்வி பயிலும் தன்னறிவு பெறுவான். அதனால் தன்னறிவினால் தன்னை உணர்வான். அதனால் அறிவின் மூல மறியும் வழி தோன்றும். அந்த மூலம் அறிந்தால் அடுத்த விநாடியே அவனுக்கு திருவடி சேரும் வாய்ப்பு பெறுவான் என்பதை கொங்கணர் மெய்ஞ்ஞானம் என்னும் நூல் ஓதியதைக் காண்க.

"அறிவையா யறிவினுட மூலங் கண்டால்
அசடில்லை கற்பூர தேக மாச்சு
அறிவை நீ யறிந்தால் பிறவி போச்சு
அடுத்தாப் போற பரமபதம் நிலைப்பு மாச்சு" - 13
கொங்கணர் மெய்ஞ்ஞானம் — 13

மேற்கூறிய செய்திகள் அனைவரும் படித்து அறிந்து — தெளிந்து & உணர்ந்து அதில் ஈடுபாடு கொண்டு சாவில் இருந்து மீண்டு வர வேண்டும் என்பது பெருநோக்கமாகும். சாகாத கல்வி எல்லோருக்கும் உரிமையுடையது. இந்த கல்வி கற்று பயன்படும் நோக்கத்தில் எழுதிய செய்தியாகும். ஆகவே இறையருளைச் சார்ந்து அதனால் வாசியினை இயக்கி நேர்மையாக இருந்தால் யோகநிலை கூடி அதனால் ஞானம் பெற்று முத்தியினை அடைந்து அதனால் சித்தியும் பெற்று சாகார வரம் பெற்று அனைவரும் பேரானந்த நிலை பெற்று உய்ய வருமாறு தெரிவித்துள்ள செய்தியை இறையருளால் பெரிதும் மகிழ்வுறுகிறோம். இந்த இனிமையான அருள் நிறைவுக் கொண்ட செய்தியை அன்புடன் நிறைவேற அனைவரும் பயனடையுமாறு அருளை வேண்டி நிறைவு பெறுகிறது என்பதை மகிழ்வுடன் அறிக.

திருச்சிற்றம்பலம்

30. சிவசக்தி தீட்சா விதிகள்

"அறிவையா யறிவினுட மூலங் கண்டால்
அசடில்லை கற்பூர தேகமாச்சு
அறிவை நீ அறிந்தால் பிறவி போச்சு
அடுத்தாப் போற பரம பதம் நிலையு மாச்சு"
கொங்கணர் மெய்ஞ்ஞானம் — 13

உலக மக்கள் அனைவரும் மரணத்தின் வாசலுக்குள் நுழைந்து மடிவதை விரும்பாத சித்தர் பெருமக்கள் மானிடர்களின் மீது கொண்ட இரக்கத்தாலும், கருணையாலும், அன்பினாலும் அவர்கள் கற்ற சாகாக்கலையான இறப்பொழிக்கும் முறைகள் தெரிந்துக் கொள்ளவழி வகைகள் தங்களின் நூல் வழியே தெரிந்துக் கொள்ள பல நெறிமுறைகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு நூற்றாண்டுக்கு முன் வடலூர் ராமலிங்க அடிகளார் மரணமில்லா பெருவாழ்வு பெற மானிடர்களுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் உலகியல் மயக்கத்திலிருந்து விடுபட முடியாத மனித இனம் இதனைக் கண்டுக் கொள்ளவில்லை. உலகியல் அற்ப சுகங்கள் அனுபவிக்க நினைக்கும் இரக்கமற்ற மனித இனம் மரணத்தின் பிடியிலிருந்து மீள முடியாமல் மாண்டு வருகின்றனர். பிறவி தோறும் சிறுக சிறுக சாகாக்கலைப் பற்றி உணர்ந்தால் அதுவே தொடர் பிறவிகள் தோறும் நினைவு உண்டாகி ஏதாவது ஒரு பிறவியில் மரணத்தை வெல்லும் வேகம் தோன்றும்.

Koviloor Digital Library

அதுவே சாகாக்கலை கற்கும் வாய்ப்பு ஏற்படும். தனி மனிதனின் அறிவே அதனை உணர்த்தி உயர்த்தி மெய்ஞ் ஞானம் பெற வைத்து இறப்பொழிக்கும் வழிகளை திருவருள் உணர்த்தும் என்பது உறுதியாகும். இனி நாம் தீட்சாவிதிகளைப் பற்றி ஆய்வு மேற்கொள்வோம்.

போகர் என்ற சித்தர் பெருமகனார் சித்தர்களுக்கு ஓர் அறிவுரை கூறுகிறார். நல்ல குணம் கொண்ட மாணவ மணிகளை தனக்கு சீடனாக இருக்க தேர்வு செய்ய வேண்டும் என்றும், அதற்கு பிற ஒரு தீட்சா மந்திரங்களை செவியுரை அருள வேண்டுமென்றும் கூறுகிறார்.

முதலில் வாலையுட தீட்சை ஓத வேண்டும். அடுத்து புவனையுட தீட்சை செப்ப வேண்டும். இதற்கடுத்து திரிபரையின் தீட்சை செவியுரை அருளல் வேண்டும். அதன்பின் யாமளையின் தீட்சைக் கூற வேண்டும். இதன்பின்பு சாமளையின் தீட்சைக் பகர வேண்டும். மேலும் அம்பிகையின் தீட்சை பறைய வேண்டும். அதற்கு மேல் வல்லபையின் தீட்சை உரைக்க வேண்டும் மீண்டும் கேசரியின் தீட்சை விளக்க் வேண்டும். அதன்பின் உகர தீட்சை சொல்ல வேண்டும். இதனையடுத்து அனந்தாள் தீட்சை எடுத்தோத வேண்டும். இத்தனை தீட்சைகள் முடிந்த மாணவனின் மனயொடுக்கமானவன் என்று அறிந்தால் மௌனம் என்ற தீட்சை ஓத வேண்டுமென்று அவர் கூறும் பாடலை காணுங்கள்

"சேர்க்கையிலே புத்தி கண்டு சீர் சேரு
செப்பு முன்னே வாலையுட தீட்சை தன்னை
ஆர்க்கையிலே திர முற்றால் புவனை யோது
அப்புறத்திற் திரிபுரையின் தீட்சை யோடு
மார்க்கமாம் யாமளையின் தீட்சை யோது
வளமாகச் சாமளையின் தீட்சை செப்பே" - 74

"செப்பிய பின் அம்பிகையின் தீட்சை யோது
தெளி வானால் வல்லபையின் தீட்சை யோது
ஒப்பிய பின் கேசரியின் தீட்சை யோடு
உம் முடைய தீட்சையதன் பிறகு யோது
கொப்பி டவே ஆனந்தாள் தீட்சை யோது
குவிந்த மன மொன்றானால் மௌன தீட்சை
இப்படியே தசதீட்சை தன்னைச் சொல்லு
இதன் பிறகு சிவதீட்சை யிசைக்கிறனே - 75

மேற்கண்ட பாடலில் குறிப்பிட்டவாறு தசதீட்சை பற்றி ஓதியுள்ளார். இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். இவைகள் அனைத்தும் உகாரம் என்னும் சக்தி தீட்சைகளாகும்.

இனி அடுத்து சிவதீட்சைப் பற்றி அறிந்துக் கொள்வது நல்லது. சிவதீட்சைகள் உருத்திரனில் இரண்டு தீட்சை. மாஈசனில் இரண்டு தீட்சைகள் சதாசிவனில் ஐந்து தீட்சைகள். பராபரத்தில் தீட்சை ஒன்று. அதன்பிறகு மௌன தீட்சையாகும். இவைகளில் வெற்றிபெற்ற பின் பூரணத்தில் உறுதியாக நுழைந்து நிற்க வேண்டும். இதுபோன்ற தீட்சாவிதிகள் விளக்கமாக அறிய வேண்டுமென்றால் பொதிகை முனியான அகத்தியரையும், மச்சமுனியான சித்திரை கண்டு தெளிக என்று சித்தர் போகர் பெருமான் கூறுகிறார். அவருடைய பாடலைக் கண்டு களிப்புறுங்கள்.

"இசைக்கின்றேன் ருத்திரனில் ரண்டு தீட்சை
இயல்பான மயேஸ்பரனில் ரண்டு தீட்சை
அசைக்கிறேன் சதாசிவனில் ஐந்து தீட்சை
அப்பனே பராபத்தில் ஐந்து தீட்சை
திசைக்குள்ளே யிதன் பிறகு மௌன தீட்சை
செயமான பூரணத்தில் நிற்கச் சொல்லு
விசைக்குள்ளே தீட்சை யெல்லாஞ் செப்ப வென்றால்
விளம்புகிறேன் கும்பமுனி மச்சன்றானே - 76

மேற்கண்ட பாடலில் சித்தர் போகர் பெருமான் தாம் இயற்றிய ஞான சாராம்சம் என்னும் நூலில் ஓதியுள்ளார்.

எதனால் தீட்சைகள் பலன் அளிக்காது போகும்:

கமலமா முனி என்பவரே காலாங்கி நாதர் என்று அவர் எழுதியுள்ள நூல்களில் குறிப்பிட்டுள்ளார். அவர் எழுதிய ஞான சைதன்யம் 18இல் 9ஆம் பாடலில் தீட்சாவிதிகள் கடைபிடிக்கும் போது மனிதர்களின் நடமாட்டம் கூடாது. நண்பர்கள் இருக்கக் கூடாது.

Koviloor Digital Library

தீட்சைகள் சொல்லும் போது மயக்கம் தயக்கம் கூடாது வெட்ட வெளியாது. மக்கள் இல்லாத தனித்தரை வீட்டில் செய்ய வேண்டும். தீட்சைகள் முடிக்காது சிவசொத்தான வாத வேதியல் செய்து அனுபவதத்தால் தீட்சா முறைகள் மந்திரங்கள் பலிக்காது. சிவ சொத்தை அனுபவிக்கும் ஒவ்வொருவருக்கும் மாயையின் தாக்கம் ஏற்பட்டு உயர்நிலைக்கு செல்லவொட்டாது என்பது உறுதியாகும். அவர் கூறும் பாடலைப் படித்து அறிவுரையாக ஏற்று செயலபட வேண்டும் என்பதே பெருநோக்கமாக உணர வேண்டும். அப்பாடலைக் கண்டு தெளிக.

"தீட்சையிலே மனிதருட வாச மாகா
திறமாகச் சினேகிதர் தானிருக்க லாகா
தீட்சையிலே மயக்கமுடன் வெளியே யாகா
ஜெனமில்லா தரை வீட்டிற் செய்ய வேணும
தீட்சையிலே அஞ்சு மொடுஞ் செய்யுமுன்னே
சிவமான வாதமது அனுபோதித்தால்
தீட்சையது பலியாது ஆனார் கேளு
சிவசொத்தால் மாயையது யேறொட்டாதே - 9
கமலமுனி ஞான சைதன்யம் — 18

யாரைக் கேட்டால் தீட்சா விதிகள் கூறுவார்கள்:

சகல தீட்சைகள் அறிந்து முழுமைப் பெற்ற பெரியோர்களான சித்தர்களைக் கண்டு அவர்களின் திருவடிகளைத் தொழுது வணங்கி அப்பெரியோரை போற்றி சிரம் தாழ்த்தி கரம் குவித்து வேகாத தலையைக் கேளு சாகாத காலைக்கேளு. இந்த இரண்டும் யார் கூறுவார்கள். பெருமையும் மேன்மையும் பெற்ற தசதீட்சை முடித்த அறிஞர் பெருமக்களான சித்தர்களால்தான் கூற முடியும். மானிடம் சாகாமல் இருக்க வேண்டுமென்றால் பஞ்ச தீட்சை முடித்து கற்பமுண்டு வாசியை ஏற்றி முன்னேற வேண்டும் என்று பொதிகையில் வாழும் சித்தர் பெருமான் அகத்தியர் தம் பூரண காவியம் என்னும் நூலில் கீழ்க்கண்டவாறு அறிவுறுத்தும் பாடலைப் படித்து அறிந்து தெளிக.

"போகாமல் தீட்சை பெற்றோர் பெரியோர் பாதம்
பொற் பூவால் பூசை செய்து புகழ்ந்து கேளு
வேகாமல் நின்ற தொரு தலையைக் கேளு
விளங்கியதோர் சாகாத காலை கேளு
வாகாம லிரண்டை யுந்தான் யார் தான் சொல்வார்
மகத்தான தச தீட்சை வந்தோர் சொல்வார்
சாகாமலிருக்க வென்றால் பஞ்ச தீட்சை
சாதிக்க கற்பமுண்டு தள்ளியதே - 19
அகத்தியர் பூரண காவியம் — 1000

தீட்சைகள் என்றால் யாரை குறித்து ஓதப்படுகிறது:

தீட்சைகள் என்பது சிவனும் சக்தியும் பற்றி ஓதப்படுகிறது. சிவத்திற்கு அகாரம் என்னும், சக்தி உகாரம் என்றும் கூறப்படுகிறது. அகாரம் சிவ தீட்சையாகவும், உகாரம் சக்தி தீட்சையாகவும் ஓதப்படுகிறது. அதுவே எட்டு இரண்டு என்றும் கூறுவார்கள். இந்த இரண்டும் சேர்ந்தால் மகாரம் என்ற மௌன தீட்சையாக ஓதப்படுகிறது. அகாரம் உகாரம் ஆக இரண்டும் ஒன்றாய் கலந்தால் பிரணவமாகும். பிரணவம் என்ற ஓங்காரத்தீட்சையே ஒளிபடைத்த நாதாக்கள் மறைத்து விட்டனர் என்று ஓதுகிறார். இந்தப் பாடலைக் கண்டு மனமகிழ்யுறுங்கள்.

"அறைகுவேன் அகரமது சிவமதாச்சு
ஆச்சரியம் உகரமது சக்தியாச்சு
திறைகுவேன் சிவசக்தி யிரண்டுங் கூடிச்
சேர்ந்தடா மகரமென் மவுனமக்கால்
பறைகுவேன் அகாரமுடன் உகாரமவ்விற்
பாய்ந் தொன்றாய் கலக்க பிரணவமுமாச்சு
மறைகுவேன் தீட்சை யோங் காரந் தன்னை
மாசற்ற நாதாக்கள் மறைத் திட்டாரே - 19
அகத்தியர் சுத்த ஞானம் — 30

தச தீட்சைகளின் விளக்கங்கள்:

அகத்தியர் பூரண காவியம் 1000 என்னும் நூலில் மூன்றாம் பகுதியில் 31ஆம் பாடலிலிருந்து தொடங்குகிறது. அவர் முதல் தீட்சை முதல் பத்து தீட்சைகள் அறிவித்துள்ளார். அதன் பலன்களும் கூறியுள்ளார். சித்தர் பெருமகனார் ஓதியுள்ள தீட்சா மந்திரங்களின்

Koviloor Digital Library

பெருமைகளையும் உணர்த்தியுள்ளார் அந்த காவியப் பாடல்கள் படித்து அறிவுக் கொண்டு ஆய்ந்துத் தெளிந்து புரிந்து இன்புறுங்கள்

முதல் சிவ தீட்சா விதி மந்திரங்கள் அறியலாம்

"பாரப்பா சக்தி சிவ தீட்சை தன்னை
பத்து முதல் ஒன்று வரை நன்றாய்ச் சொல்வேன்
நேரப்பா நின்ற நிலை தன்னைப் பெற்று
நிற்ஞ் சனமாஞ் சற்குருவின் பாதம் போற்றி
காரப்பா முதற் தீட்சை "அம் - சிவய - நம" வென்று
கருத்துறவே செபித்திட நல்கருணை தங்கு
மாரப்பா அறிவார்கள் நிட்டை மார்க்கம்
ஆதி தொடுத் தந்தவரை யறிந்து காணே" - 31

முதல் தீட்சை: "ஓம் - அம் - சிவயநம"

பலன்: நல்ல கருணை குணம் மேலோங்கும். இந்த குணம் முதலும் முடிவுமாக அறியலாம்.

2. இரண்டாம் தீட்சா விதி:

காணவே ரெண்டான தீட்சை கேளு
கருணையுடன் சொல்லுகிறேன் "உம் வய நமசி" என்று
பூணவே மனதுறுதியாக நீயும்
புதுமையுடன் பூரணமாய் செபித்தாயாகில்
தேணவே சக்தி சிவந் தானாய் நின்று
துலங்குமடா யிருதயமாங் கமலந்தன்னில்
பேறுல கெல்லாம் நிறைந்த சோதி தானே - 32

தானான சோதியது முக்கோணத்திலே
தன்மயமாய்த் தோணுமடா விண்ணைப் பாரு
ஊனான காயமடா மாயாரூபம்
உள்ளெழுந்த சோதியடா ஞானத்தீபம்
கோளான தீபமதில் மனதை நாட்டி
குவிந்துமனக் கண்ணாலே தன்னைப் பாரு
தேனான ரூபமடா அரூபமாகுஞ்
செகச்சால வித்தை யெல்லாந் தெளியும் பாரே - 35

இரண்டாம் தீட்சை: "ஓம் - உம் -வநநமசி"

பலன்கள்: ஊன் உடல் அரூப வடிவமாகும். அனைத்து கல்வி வித்தைகள் அறியவரும்.

3. மூன்றாம் தீட்சா விதி:

தெளிவான மனதாலே மூன்றாக் தீட்சை
செப்புகிறேன் சத்தியமாய் நன்றாய்க் கேளு
ஒளிவான புருவமதன் மனதை வைத்து
உத்தமனே "வம் - யநமசிவ" வென்று
நெளியாமல் மனதறிவால் உருவே செய்ய
நேர்மையுள்ள யிருதயமாங் கமலமீதில்
அளியாத ரவி மதியுஞ் சுடர் தான்மைந்தா
அங்கனையே தோணுமடா ஆதிசோதி - 34

ஆதியென்ற மண்டலந்தான் மூன்று கண்டா
வப்பவல்லோ ஞான சித்தி அருளே தங்குஞ்
சோதியென்ற அருள்ஞானந் தங்கித்தானால்
சுடரொளிபோல் தேகமது துலங்கும் பாரு
நீதியுட னாதாரமூலம் பார்த்து
நின்ற நிலை தனையறிந்து நேமமானால
ஓதிய தோர் மந்திரகலை நீதாக்கி
உண்மையென்ற மந்திரங்க ளுறுதியாச்சே - 36

உருமையுடன நீயிருந்து உண்மைபெத்தா
லுன்னுடம்பு தங்கமடா அங்கமங்கஞ்
கருமையுள்ள் அங்கதை லிங்கமாக
சுத்தமுட னித்தமுமே சித்தாக்கால்
பருதிமதி சுடரதுவுந்தானே தானாய்
பாருல கெலாநிறைந்த சோதியாவாய்
சரிதையொடு கிரியை யென்ற யோகம் பார்த்து
சதாகாலம் பூரணமாய் ஞானம் பாரே" - 37

மூன்றாம் தீட்சாவிதி: "ஓம் - வம் - யநமசிவ"

பலன்: சூரியன் — சந்திரன் — வன்னி — இணைந்து சோதி வடிவம் பெற்று ஆதிசோதி நிலை காணலாம். சூரிய மண்டலம் — சந்திர மண்டலம் — வன்னி மண்டலம் மூன்றும் கண்டு காணலாம். அதனால் அருள் வடிவம் தங்கும். அருள்வடிவம் ஆனால் தேகம் சோதி வடிவம் பெறும். அத்தேகத்தில் சுடரொளி பிரகாசிக்கும். மந்திரங்கள் அனைத்தும் உண்மையென்று உறுதியாகும். தேகம் பொன்னுடலாக மாறி நிற்கும்.

4. நாலாம் தீட்சாவிதி:

"பாரப்பா ஞான மென்ற நாலாந்தீட்சை
பிரிவாக சொல்லுகிறேன் மதியாய்க் கேளு

Koviloor Digital Library

காரப்பா கருணையினால் வாசியேறி
கண்ணடங்க விண்ணொளியை கருவாய்ப் பார்த்து
நேரப்பா அண்ட பதந் தன்னிலேதான்
நீயிருந்து "சும் நமவசிய" வென்று
பேரப்பா அண்ட பதந் தன்னிலே தான்
பேரான பூரணமுந் தான்றானாமே" - 37

"ஆமப்பா தானாகி தானவனுமாகி
அருள்ஞான பூரண நால்வேதமாகி
நாமப்பா வென்றதொரு நாதமாகி
நாதாந்த நடுமனையின் சூட்சமாகி
காமப்பாற் கானற்பா விரண்டுங் கூட்டி
கலந்துநின்ற மணிகெவுனக் குளிகை யாகி
ஓமப்பா வென்ற குறி உறுமையாகி
உத்தமனே நாலான பதவிதானே" - 38

தானான பதவியது தானே தானாய்
சாயுச்சியமான பூரணமுந் தானாச்சு
கோனான குருபதமுந் தானே தானாய்
உருவாகி நின்றதொரு மாய்கை தானாய்
வானான அண்டபத வடிவுந்தானாய்
மந்திரமாய் நின்ற தொரு மாய்கை தானாய்
தேனான அமுர்தரச பானந்தானாய்
தெளிந்ததுவுங் கழிந்ததுவுந் தான்றானாச்சே - 39

நான்காம் தீட்சாவிதி: "ஓம் - சும் - நமசிவ"

பலன்: அருள் ஞானம் — பூரணம் — நால்வேதம் — நாதம் — அந்த நாதத்தின் நடுவில் சூட்சும வடிவமாகி அதில் உண்டான இருஅமுதப் பொருள் உண்டு — அங்கு ஏற்படும் கெவுன மணிகுளிகை எடுத்து ஓங்கார நிலைக்கண்டு நாலாம் நிலைபதிவு பெற்று, முத்தி நிலை அடையும் குருபதம் காணலாம். மாய்கை அகன்று அண்ட பதம் பெற்று அமுதரசம் என்னும் உண்டு தெளிவு பெற்று தானே தானாய் நிற்கலாம்.

5. ஐந்தாம் தீட்சாவிதி:

"ஆச்சென்ற ஐந்தான தீட்சை கேளு
அவையடக்கஞ் சொல்கிறேன் "டம் மசிவயந" வென்று
மூச்சென்ற வாசியை நீ மைந்தா கேளு
முனைமைய மென்ற தொரு மைய மீதில்
பேச்சென்ற மவுனமதாய் மவுனந்தாங்கி
பெருமையன்றி உருமையாதாய் உருவே செய்தாய்
சூட்சமென்று தேகமதில் பஞ்ச கர்த்தா
சுடரொளி போல் தானாகி தோன்றுந்தானே - 40

தானாகத் தோணுமடா பஞ்சவர்ணந்
தனையறிந்து தனதாக தன்னைப்பாரு
தோணாது தோணுமடா தானே தானாய்
துலங்குகின்ற மெய்ஞ்ஞான தீபத்தாலே
ஊனாகி நின்றதொரு தேகந் தன்னி
லுடன் சேர்ந்து பஞ்சகர்த்தா ளுறுமையாகுங்
கோனான பஞ்சகர்த்தா ளுறுமையினால்
குருவான கற்பூர தீபந் தானே - 41

தீப மென்ற கற்பூர தீபம் பார்க்கச்
சிவாயகுரு மூலமென்ற வாசியேறி
சாபமென்ற சாபமதை நிவர்த்தி செய்து
சங்கையன்றி சிவபதத்தில் மனதை நாட்டி
தூபமென்ற வாசியினால் முக்கோணத்தில்
துலுங்கி நின்ற சுடரொளியால் புருவமீதில்
நீபதிவாய் நின்று கொண்டு நிலையைப் பாரு
நின்தேகங் கற்பூர தீபந்தானே - 42

ஐந்தாம் தீட்சா விதி: "ஓம் - டம் - மசிவயந"

பலன்: சுழிமுனையில் நிறுத்தி மவுனமாக தீட்சை மந்திரம் உருவேற்ற வேண்டும். சூட்சும தேகத்தில் பஞ்ச கர்த்தாளின் சுடரொளி வெளிப்படும். வனத்தில் ஐவகை நிறங்கள் வெளிபடும். மெய்ஞ்ஞானம் தீபம் போல் ஒளிரும். தோலுடம்பினால் ஆன தேகம் பஞ்சகர்த்தாள் உறுதியாகும். குருவின் திருவடியில் கற்பூர தீபம் ஒளிவீசும். கற்பூரதீபம் ஒளி சிவாய குருவின் மூலம். மூலத்தில் வாசியேறினால் சாபங்கள் அனைத்தும் விலகும். ஐயமின்றி சிவபதமதில் மனதை நாட்டி புகை வடிவத்தில் முக்கோணமாக துலங்கி நின்ற சுடளொளியால் புருவமதில கவனம் செலுத்தினால் உனது தேகம் கற்பூர தீபம் போல் சுடர் விட்டு வீசும்.

6. ஆறாம் தீட்சா விதி:

"தானாகி தன்னையுமே தன்னைக் காண
தண்மையுடன் ஆறான தீட்சை கேளு

Koviloor Digital Library

தானாகித் தானவனாய் விண்ணை நோக்கி
சங்கையுடன் "ரம்-சிம்-சிவ-நம" வென்று
தானான பூரணமா யுருவே செய்து
தன்னருளைத் தானோக்கி தானே நின்றால்
தானான ஆதார மாறாதாரந்
தடையறவே யூடுருவி தோணும் பாரே - 43

பாரடா பதியறிந்து நிலையில் நின்று
பத்தியுட னூடு ருவப் பார்த்தாயானால்
நேரடா ஆதார மூலமெல்லாம்
நிச்சயமாயத் தோணுமடா உச்சம்பாரு
காரடா உச்சமென்ற உச்சிமீதிற் கமலமென்ற
ஆயிரித்தெண் மலருக்குள்ளே
சாரடா அமுர்தரச பானமுண்டு
சதாகால் பூரணமாய் விண்ணை நோக்கே - 44

நோக்குவது பூரணந்தான் தன்னைப் பார்த்து
நுணுக்கமுடன் நவக்கிரக சூட்சங் கண்டு
போக்குவரத் தாகி நின்ற சூட்சந்தன்னை
புதுமையுடன் னனுக் கிரகத்தாலே மைந்தா
தாக்குவது முக்கோணச் சுடரில் நின்று
தன்னறிவால் ரேசக பானங்கொண்டு
நாக்குநுனி அமுர்தரச பூரசமும் பண்ணி
நடுவான கம்பத்தில் நாடினில்லை - 45

ஆறாம் தீட்சா விதி: "ஓம்-ரம்-சிம் -சிவ - நம"

பலன்: ஆயிரத் தெண்மலருக்கும் அமுதரசம் வரும். அதனை உண்டு எப்பொழுதும் பூரணம் நோக்க வேண்டும். பூரணத்தை நோக்கும்போது புதுமையான இல்லங்கள் வெளிப்படும். புதுமையான இல்லங்களிலிருந்து அதன் சூட்சுமம் கண்டால் அதன் அருளின் கருணை பெறலாம். முக்கோண சுடரில் வழியும் தேனமுதுரசம் கொண்டு நாக்கு நுனியால் இழுத்து நடுமுனை கம்பத்தில் ஏறி செல்ல வேண்டும்.

7. ஏழாம் தீட்சை:

"நாடி னின்ற நயனமதின் சூட்சத்தாலே
நன்மையுட னேழான தீட்சை கேளு
வாடினின்ற அலையாதே மைந்தா மைந்தா
மார்கமுடன் "ஓம் நமசிவய" வென்று
கூடி மனங் குவிந்து திருவாசி யேறி
குருவிருந்த பதிநோக்கி உருவே செய்தால்
ஆடி நின்ற அம்பலவர் அருளே தங்கு
மாதார புருவநடு சுடரைப் பற்றே - 46

பத்தான பதியந்து பத்திப் பாரு
பதிவான தசதீட்சை முத்தி மோட்சம்
சத்தான மோட்சமடா புருவமத்தி
தருவான உச்சியடா அண்டமேரு
வித்தான அண்ட மதிற் றாண்டந் தோன்றி
விளைந்த கதிர் சுழிமுனையாய் விலாசமாகி
சுத்தமுடன் விலாசமதா யிருந்து கொண்டு
சோதி யென்ற சிவஞானத் துளிரைப் பாரே - 47

பாரப்பா துளிரறிந்து கொம்பிற் சென்று
பார்வை விழிக் கண்ணறிந்து விண்ணை நோக்கி
நேரப்பா நோக்கி மனத்தன்னைப் பாரு
நேசமுள்ள வாசமதாய் நிலையில் நில்லு
காரப்பா அந்த நிலை சொந்தவீடு
கமலமென்ற ஆயிரத்தெண் மலரின் வீடு
சேரப்பா அம்மலரின் வீட்டிலே தான்
தேனருவி பாயுமடா தினமுங் கொள்ளே
கொள்ளடா குருநாடு தில்லைமேரு
குருவான றில்லை நடராசர் வாசஞ்
செல்லடா வாசமதின் மனது கூர்ந்து
திவ்விய ரச அமுர்தமதை தினமும் கொண்டால்
அல்லடா சொல்லுகிறேன் தூலசூட்ச
மதிலிருந்து காரணத்தை யறிலாகுஞ்
சொல்லடா காரண காரியங்கள் பார்த்து
சொன்ன மொழியை மறவாமற் சுருதி தேறே - 49


ஏழாந் தீட்சை விதி: "ஓம் நம சிவய"

பலன்: மேற்கண்ட தீட்சா மந்திரத்தை தொடர்ந்து காலையில் உருவேற்றினால் அம்பலவரின் அருள் சார்ந்து நமக்கு கிட்டும். அதனால் ஆதாரம் என்று கூறப்படும் புருவமத்தி நோக்கி நாட்டத்தில் இருக்கவும். அங்குள்ளள சுடரை நோக்குக. தச தீட்சை என்பது முத்தி மோட்சம் தரக்கூடியது. மோட்சத்திற்கு முதலிடம் புருவ மத்தியாகும். தரு என்ற கொடிமரம் உச்சியானது அண்டத்தின் மேருமலையாகும். அண்டமேருவே வித்தாக உள்ளது. அந்த வித்தில் பிண்ட நிலை உண்டாகும. அதில் விளைந்த கதிர் என்னும் சூரியன் சுழிமுனையில் தோய்ந்து

Koviloor Digital Library

விரிந்து பாந்து சுத்தமான விண்ணில் சோதியென்ற சிவஞானம் துளிர்வதைக் காணலாம்.

துளிர்ந்து வரும் கொம்பில் ஏறி அதனை நாம் விழியால் கண்டால் விண்ணை நோக்கி அகலாமாய் விரிந்து அந்தநிலையில் நமக்குள்ளிருக்கும் சொந்த வீடு தாமரைமலர் என்னும் ஆயிரத்தெண்ணிதழின் மலர் வீடும் அதுவேயாகும். அந்த வீட்டின் உள்ளேயிருந்து தேனருவியான அமுதச்சாறு வெளியாவதை நாள் தோறும் உட்கொள்க.



அமுதச் சாறு உட்கொள்ளும் வீடே குரு என்று கூறப்படும் தில்லை நாடாகும். அங்கு கூத்த பிரான் குடிலமாகும். அந்த குடிலில் நுழைந்து சுத்த அமுதச் சாறு நாள்தோறும் கொண்டால் தூல உடல் சூட்சம தேகமாகும். சூட்சம தேகமானது காரண தேகமாகும். இதன் போகதை அறிந்து மேலும் வரும் காவிய பாடல் நோக்குக.

8. எட்டாம் தீட்சை:

“தானென்ற காயமடா மாயாரூபத்
 தண்மையுண்ண ரூபமடா பிரம பீடங்
கோனென்ற ரூபமதைத் தியானம் பண்ணி
 குணமாகக வெட்டான தீட்சை கேளு
வானென்ற மந்திரமாய் “அம் - றங் - றீங்” கென்று
 மார்க்கமுடன் மனதறிவா யுருவே மாகி
நானென்ற தத்துவந்தான் சுத்தமாகி
 நன்மையுடன் அட்டசித்தும் நாடுந்தானே - 52

நாடுவது பூரணத்தை நாட வேணும்
 நந்தியென்ற நயனவொளி பார்க்க வேணும்
தேடுவது சாத்திரத்தை தேட வேணும்
 தேடி மனதறிவாலே தெரிய வேணும்
கூடுவது குறியறிந்து வாசியேறி
 குமருகின்ற சிலம்பினூட நாதங்கண்டு
ஆடுவது மடங்குவது நாதத்தாலே
 அடிநடுவாய் நின்றதொரு ஆதிபாரே - 53

ஆதியென்ற சோதியிலே அருட் கண்ணாட்டி
 ஆனந்த பெருவெளியில் மனது நின்று
ஓதியதோர் மந்திரகலை வாசியேறி
 உண்மையென்ற சத்தி சிவதீட்சை மார்க்கம்
நீதியுடன் நானறிந்து நிலை தப்பாமல்
 நின்ற நிலை தனிலிருந்து உருவே செய்தாற்
சோதியென்ற கற்பூர தீபம் போல்
 சுத்தமுடன் துலுங்குமடா முத்திதானே - 54

எட்டாந் தீட்சை: “ஓம் - அம - றங் - றீங் - ஓம்”

பலன்: தத்துவ வாசனைகள் அறுந்தொழியும். எண் பெருசித்தர்கள் கைவசமாகும். பூரணமே எப்பொழுதும் நோட்ட பார்க்க வேண்டும். நந்தியென்ற குருவீடு பார்க்க வேண்டும். சித்தர்களின் நூல்களை என்றும் நாடி அதனை கற்று வாசியினை பூரணத்தில் ஏற்றி நிலைக்கச் செய்ய வேண்டும். சிலம்பின் ஒலியிலே நாத ஒலி கேட்டல் வேண்டும். ஆடுவதும் அடங்குவதும் நாதம் என்னும் ஓசையிலே. அடி நடு என்றும் பார்த்து ஆதியென்னும் மூலப்பொருள் பார்க்க வேண்டும். ஆதியென்ற சோதியிலே அருள் என்ற ஞான சிவம் கண்டு மகிழ்ச்சி பெரு வெளியில் மனது நிலை நிறுத்தி மந்திரங்கள் உருவேற்றினால் வாசியானது சுழிமுனையில் ஏறி அண்டர்பதம் எட்டும். சக்தி சிவ தீட்சை வழியினை தேர்ந்து உருவே செய்து வந்தால் தேகம் சோதியான கற்பூர தீபம் போல் சுத்தமுடன் துலங்கும். அதனால் முத்தி பெறலாம்.

9. ஒன்பதாம் தீட்சை:

முத்தியுடன் ஒன்பதாந் தீட்சை தன்னை
 மூர்க்கமுடன் சொல்லுகிறேன் தீர்க்கமாக
பத்தியுடன் பற்றிமனம் புரிவாய் நின்று
 பாலகனே “கம்றிங்சிம் சிவ் என்று
சுத்தமுட நீயிருந்து நித்த மைந்தா
 சுருத யுடனந்தி சந்தி உருவே செய்தால்
வெத்தியுள்ள நவக்கிரகஞ் சுத்தமாகி
 வேதாந்த அனுக்கிரகம் விளங்குந்தானே - 55

விளங்கி நின்ற அனுக்கிரகந் தன்னிலேதான்
 விஞ்ஞையென்று மூலமதன் வாசியேறி

Koviloor Digital Library

இலங்குமடா சோதியென்ற தீபந்தானு
மேகாந்த முச்சரிடனின் பத்தாலே
முழங்கி நின்ற நாதமடா சிலம்பினோசை
முத்தியுள்ள வோசையடா சுவாசத் தந்தங்
களங்கமிலா வந்தமதை சொந்தமாகக்
கருத்துவைத்து கண்ணாலே காற்கநன்றே - 56

நாற்பதுதா னென்ன வென்றால் மைந்தாகேளு
கருணைமலர் கண்ணுமனக் கண்ணு கொண்டு
கூற்புடனே ருத்தரனார் மனையில் நின்று
குவிந் தெழுந்த வாசிமலர் குணமாய் சாற்றி
நேர்புடனே அந்த நிலை பருவம் பார்த்து
நீ மகனே சிவயோக நிலை நின்றாக்கா
லார்பனத்துக் குயிரான சோதிதானு
மரகரா பூரணமா மருட் கண்டானே - 57

ஒன்பதாம் தீட்சா விதி: "ஓம் - கம் - றீங் - சிங் - சிங் - ஓம்"

பலன்: இந்த மந்திரத்தை காலை மாலை உருவேற்ற வேண்டு. நமது தேகத்திலுள்ள நவகிரக மென்ற பஞ்சகர்த்தால் — கதிர் — மதி & வன்னியுடன் குண்டலி தூய்மைப் பெறறு வேதாந்த வெளியின் அருள் நிலை விளங்கும். அருளின் ஆசிகள் பெற்று மூலமென்னும் ஆதிமகா மூலத்தின் சோதி என்ற தீபம் காணும். ஏகாந்த நிலை ஏற்படும். மந்திரங்கள் உருவேற்றயேற்ற சிலம்பினூட ஒலியின் நாதம் கலந்து வெளியாகும். அதுவே முத்திக்கு வித்தாக விளங்கக்கூடியது. எப்பொழுதும் சிவயோக நிலையிலே யிருந்து பூரணம் என்னும் அருட் கண் காணல் வேணும்.

10. பத்தாம் தீட்சை:

தானான சோதியிது கண்டால் மைந்தா
தனை யறிந்து கண்ணதுதான் தீபமாச்சு
கோனான தீபமடா அறிவானந்தங்
குவிந் தெழுந்த போதமடா அருட்ஞானத் தீ
தேனான உத்தியிலே மனதை வைத்து
சிவ சிவமாத் தான தீட்சைகேளு
நானான அகம்போக்கி மைந்தாகேளு
நன்மையுடன் "அம்உம்சிம்சிவ" யெண்ணே - 58

எண்ணமுள்ள மந்திரங்கள் அனேகமுண்டு
இன்பமுள்ள தீட்சையடா பத்தாந் தீட்சை
சொன்னமொழி தவறா மலுருவே செய்தாற்
சோதியென்ற தச தீட்சை சுத்தமாகுங்
கண்ணிறைந்த காட்சியது சுத்தமாகி
கமலமென்ற ஆயிரத்தெண் மலருக்குள்ளே
தண்ணமிர்த முண்ணியது மேலேபாயுந்
தானருந்தி நின்றதனாற் போதமாமே - 59

பத்தாம் தீட்சா விதி: "ஓம் - அம் - உம் - சிம் - சிவ - ஓம்"

பலன்: சோதியாகும் ஆயிரத்தெண் மலர் அமுதச்சாறு வழிந்து தேகம் முழுதும் பாயும். அதனை உண்டு வர ஞானதேகமாக மாறி ஞான அருள் நிலைஅடையும்.

11. பதினோராந் தீட்சை:

நாதமென்ற பதினோராந் தீட்சை கேளு
நன்மையுள்ள புலத்தியனே பிரமயோகி
வேதமென்ற பொருளிதுதான் மைந்தாமைந்தா
விபரமுடன் "சிம் - றீங் - றிங் - சிம் - யென்றேதான்
போதமென்ற நிலையறிந்து புருவமேவி
புத்தியுடன் சுத்தமதா யுருவே செய்தால்
நீதிமென்ற பூதமடா பஞ்சபூதம்
நிலைதவறா நின்ற சிவயோக மாமே - 61

ஆமப்பா சிவயோக ராசயோகம்
அருள்ஞான பூரணமாய் மந்தயோகந்
தாமப்பா தன்னருளே தானாய் நின்ற
சச்சிதா னந்தமய மானயோகம்
காமப்பாற் கானற்பாற் கலந் தொன்றாகி
கயிலாச பூரணமாய் வந்தயோகம்
வாமப்பா மதியேகி ரவியிற் கூடி
மகத்தான சோதிசிவ யோகம் பாரே - 62

பாரப்பா சோதிசிவ யோக மானால்
பரமான கேசரியின் வசமேயாவாள்
காரப்பா பதினோராந் தீட்சை தன்னால்
கனிந்து நின்ற சகலகலைக் கியானந் தோணும்
ஆரப்பா உனக்கீடு யாருமில்லை
யாதியென்ற காவியத்தை அறிந்து பாய்ந்து
தேரப்பா கருவறிந்து உருவைப் பார்த்தால்
சின்மயமுந் தன்மயமுந் தெளிவாம் பாரே - 63

பதினோராம் தீட்சா விதி: "ஓம் - சிம் - றிங் - றிங் - சிம் - ஓம்"

Koviloor Digital Library

பலன்: பஞ்ச பூதம் நிலை அறியலாம். சிவயோகம் கைக்கூடும். இராசயோகம் அறிய வரும். அருள்ஞானம் உண்டாகும். எப்பொழுதும் சத்து+சித்து+ஆனந்தம் பெறும் யோக நிலை தெரியும். கானல்பால் — காமப்பால் கலந்து ஒன்றாக தெரியும். கைலாச தேகமாக பூரணம் பெறலாம். பூரணத்தில் வாழும் கேசரி என்னும் பெண் தெய்வம் கனிந்து வந்து சகலகலை ஞானங்கள் உமக்கும் கிட்டும். தன்மயமும் சின்மயமும் தெளிவாக உணரலாம்.

சிவசக்தியான அருட்சக்தியின் தீட்சா விதிகள்:

1. முதல் தீட்சா விதி:

பாரப்பா சக்திசிவ தீட்சை சொன்னேன்
பதுவான வேதியன்றன் பத மேற் கொண்டு
நேரப்பா சிவசகதி தீட்சை மைந்தா
நேர்மையுடன் ஒன்று முதற் பத்தாந் தீட்சை
ஆரப்பா அறிவார்கள் புலத்தியா கேள்
அருமையுடன் சொல்லுகிறே னன் பாய்க்கேளு
காரப்பா சுழினையிலே மனதை வைத்துக்
கருணையுடன் "அங் - அங் - அம் - சிங்" வெண்ணே - 65

எண்ண முடன் நீயிருந்து தன்னைப் பார்த்து
இருக திருமொன்றாக உருவே செய்தாற்
தன்னருளால் நின்றதிரு மாதுதன்னை
தன்னகத்தில் விண்ணொளிபோல் தானே தோன்றும்
விண்ணிறைந்த காட்சியெல்லா மதிலே காணும்
வேதாந்த சித்தாந்தம் யிரண்டுந் தோணுஞ்
சொன்ன மொழி தவறாமல் கருதி பார்த்து
சுற்றமுடன் காவியத்தை தொழுது போற்றே - 66

முதல் தீட்சை: "ஓம் — அங் — அங் — அம் — சிவ் — ஓம்" பாடலில் அதன் பலன்கள் எளிமையாக உள்ளதால் படித்து இன்புறுக.

2. இரண்டாம் தீட்சா விதி:

தெய்வமென்ற பூரணமே ஆத்துமாவாகுஞ்
சிவசிவா ரெண்டான தீட்சைகேளு
மெய்யப்பா சொல்லுகிறேன் மைந்தா கேளு
வேதமடா "றங் - லிங் - உம் - சிவ்" வென்று
ஐவகையு மொன்றாகி உருவே செய்தால்
ஆகார உடலுயிரு மொன்றாய்க் காணும்
மைவகையாய் நின்ற திரு மதுதந்த
மகத்தான நாதவிந்து மனந்தான் பாரே - 68

பாரப்பா மனந்தானே சோதியாகி
பதிவான நாதவிந்து களையுமாகிக்
காரப்பா கலையான வாசியாகி
கமலதச பூரணமுந் தானே யாகி
நேரப்பா ஆதார மூலமாகி
நின்றி லங்கு ரவிமதியுஞ் சுழினையாக
மேரப்பா அண்டபதந் தானே யாகி
மெய்ஞ்ஞான பூரணமாய் சோதியாச்சு

இரண்டாம் தீட்சை விதி: "ஓம் — றங் — லிங் — உம் — சிவ் — ஓம"

பலன்கள்: புரியும் வகையில் இருப்பதால் பாடலை ஒரு முறைக்கு இருமுறை படித்தறிக. தெளிக.

3. மூன்றாம் தீட்சா விதி:

சோதியென்ற சோதியிலே மனதை வைத்து
சுருதியுடன் மூன்றான தீட்சை கேளு
நீதியுடன் சற்குருவைத் தியானம் பண்ணி
நின்ற நிலை தனையறிந்து சிங் - சிங் - றீங் - சிங் கென்று
ஆதியென்ற நிலையறிந்து அருட்கண் பார்த்து
அப்பனே மனதோட உருவே செய்தால்
வீதியென்று ஆதார மேலாதாரம்
வேதாந்த கண்ணிமைக்குள் விளங்குபாரே - 70

விளங்கி நின்ற கணந்தானே வேத மாச்சு
மெய்ஞ்ஞான மானதொரு தீபமாச்சி
இலங்குகின்ற பஞ்சகர்த்தாள் பஞ்ச சக்தி
யேகாந்த திசை சுத்தி யேக சக்தி
முழங்கி நின்ற நாதாநத நாத சக்தி
மோக மென்ற ஆசையுள்ள கிரியா சக்தி
உளங் கனிந்த சக்திமய மெல்லாம் பார்த்தால்
ஒளியான கண்கலக்க மெய்தாம் பாரே - 71

மூன்றாம் தீட்சாவிதி: "ஓம் - சிங் - சிங் - றிங் - சிங் - ஓம்

பலன்கள்: பாடலில் கூறியவாறு தெரியவரும். ஆழ்ந்து படித்து அறிவிற் கொண்டு மனஉறுதியுடன் மந்திரம்

Koviloor Digital Library

உருவேற்றினால் அற்புத பலன்கள் காணலாம்.

4. நாலாந் தீட்சாவிதிமுறை:

மேவிப்பார் புலத்தியனே வேதக் கண்ணை
வேதாந்தக் கண்ணறிந்து நாதாந்தத்தை
தாவிப்பார் தன்னிலையை தானே கண்டு
தன்மையுடன் நாலான தீட்சை கேளு
ஆவிப்பார் கண்டவெளி தன்னில் நின்று
அப்பனே மனது கந்து உங் - றிங் - ரூம் - ரூம் யென்று
சேவிப்பாய் உருவறிந்து உருவே செய்ய
திருவான தேகமது உறுதியாமே - 73

உறுதியுள்ள தீட்சை யது மைந்தா கேளு
உண்மையுள்ள மவுனமதா யுருவே செய்ய
கருதியதோர் மந்தரங் ளெல்லாஞ் சித்தி
கணங்கள் முதல் தேவதைகள் வசியமாகும்
சுருதிமுடி வானபொருட் கண்டால் தோணுந்
தொல்லுகில் நடத்தை யெல்லாந் துலங்கிநெஞ்சில்
பருதிமதி சுடர்மூன்று மொன்றாய் நின்று
பற்றி நின்ற அக்கினிதான் வாசியாச்சே - 74

4. நாலாந் தீட்சா விதி: "ஓம் - உங் - றீங் - ரூம் - ரூம் - ஓம்"

பலன்கள்: பாடலில் கண்டபடி பெறலாம். அனுபவத்தில் காண்க. சொல்லி தெரியாது. உணர்ந்தாலும் புரியது. மனயறிவுக் கொண்டு ஞானம் பெற்றால் வெட்டவெளியாக தெரியும்.

5. ஐந்தாம் தீட்சா விதி:

கண்ணான தீட்சையிலே அஞ்சாந் தீட்சை
கருணை வளர் புலத்தியனே சொல்ல கேளு
விண்ணான அண்ட கேசரியைப் போற்றி
விஞ்ஞையென்ற மந்தரமிது லங் - லங் - நம் - சிம் என்று
என்னாளும் மனதுருமையாக நின்று
யேகாந்த பூரணமா யுருவே செய்ய
முன்னா சுழிமுனையில் வாசியானே
முக்கோண சுடரதுதான் முத்தியாச்சே - 76

முத்தியுள்ள ஆதார முனை மையத்தில்
மூலமதில் நின்ற தொரு முத்தியாலே
சித்த மதை தெளிவாலே தெளிந்து கொண்டு
தெளிந்து மன துருமையினால் தீபம் பார்த்து
சுத்தமுடன் நீயிருந்து வாசியாலே
சுருதியுள்ள றீங்காரத் துருவமேறி
பத்தியுடன் அஷ்டதிசை தன்னைப் பாரு
பருமணியாந் திசைநாதந் காதிற் கேளே - 77

ஐந்தாம் தீட்சை விதி: "ஓம் - லங் - லங் - நம் - சிம் - ஓம்"

பலன்கள்: அறிவு கொண்டு படித்தறிக. அற்புத பலன்கள் அனுபவத்தில் கண்டு தெளிவு பெறலாம். அனுபவமே அனுபூதியாகும்.

6. ஆறாம் தீட்சா விதி:

நடுங்கி மனம் பூரணமா யிரந்து கொண்டு
உத்தமனே ஆறான தீட்சை கேளு
திடங்குவிந்து செடமறிந்து திருவைனோக்கி
சிவசிவ பூரணமாய் கம் - கம் - கிலி - சிங்கென்று
அடங்கி வழிதனை யறிந்து உருவே செய்தால்
அப்பல்லோ நினைத்தபடி யாடலாகும்
துடங்கியந்த வாசியினாற் துருவமேறி
தூரதிஷ்டி காரியங்கள் துலக்கு பாரே - 80

துலங்குமணி மண்டபமா மண்டமேரு
சோதியென்ற செகசோதி பொதிகை தன்னில்
விளங்கி நின்ற ஆறான தீட்சை சோதி
மெய்யாகி நின்றிநிலை தன்னைப் பார்த்தேன்
களங்கமில்லா னிராதார ரூபங் கண்டேன்
கண்ட கடைக் கண்ணறிந்து காட்சி காட்சி
இலங்க தடா யெங்குனி றைந் திருந்த காட்சி
யேகாந்த பூரணமா யிருந்து பாரே - 81

ஆறாம் தீட்சா விதி: "ஓம் - கம் - கம் - கிலி - சிங் - ஓம்"

பலன்கள்: பாடலில் கண்டவாறு அனுபவிக்க தீட்சா மந்திங்கள் உருவேற்றி பூரணத்தைத் தொட்டு அதில் குடியேறி ஏகாந்த நிலையில் மாபெரும் இன்பநிலை பெற்றேன். ஆதார நிலைகள் வெட்டவெளி போல் துலங்கும்.

7. ஏழாந் தீட்சா விதி:

பாரப்பா பற்றி மனஞ் சுத்தமாக
பற்றிக் கொண்டு பாத்ததினா லேழாந் தீட்சை
காரப்பா புருவமதில் மலர்க் கண்சாத்தி

Koviloor Digital Library

கனிந்த மனக்கண்ணாலே "சிங் - சிங் - சிங் - றிங்" கென்று
மேரப்பா ஆதார பூசை பண்ணி
வேதாந்த பூரணமா யுருவே செய்தால்
நேரப்பா நிலையான உச்சி தன்னில்
நிறைந்ததொரு தீபமடா ஞானந்தானனே - 82

ஞானமென்ற போதமடா பானம் பானம்
நல்லோர்க ளறிவார்கள் நாதாந்தத்தை
மோனமென்ற முத்தியதா யிருந்து கொண்டு
முத்திதரு மணி வாசல் தன்னைக் கார்த்துப்
பானமென்ற அமுர்தரச அருவிதன்னை
பற்றி மனங் கொண்டுறுதி பதிவாய் நின்று
தானமென்ற தானமாட முக்கோணத்தை
சாந்தமுடன் கண்டு அதில் தபசு பண்ணே - 83

7. ஏழாந்தீட்சை: "ஓம் - சிங் - சிங் - சிவ் - றிங் - ஓம்"

பலன்கள்: ஏற்பட பாடலில் கூறியவாறு தீட்சா மந்திரம் மானதமாக உருவேற்றினால் உச்சிஎன்ற அண்டமதில் தீபம் தோன்றும். அதுவே ஞானமாகும். அந்த ஞானம் ஊனுடலுக்கு அமுதச்சாறு அருவி போல் கொட்டும். அதுவே நாத பீடமாகும். மௌனமென்ற நிலையில் இருந்து முத்தி தரு மணிவாசல் அதுவேயாகும். அவ்விடமே முக்கோண மென்ற இடமாகும். அவ்விடத்தில் தவநிலையில் இருக்க வேண்டும்.

8. எட்டாம் தீட்சா விதி:

"பூசையென்ன ஆத்து மாவைப் பூசை பண்ண
புற்றியு னக்கிலையடா சத்துஞ் சத்தும்
நேசமுடன் நீயிருந்து மைந்தா மைந்தா
நினைவாக யெட்டான தீட்சை கேளு
வாச மென்ற ஆதார மூலத்தேகி
மந்திர கலை வாசியினால் "சிறீங் - சிம் - றிங்" கென்று
ஆசையுட னந்தமென்ற புருவதேகி
அப்பனே மனதறிவாலுருவே செய்யே - 86

"உருவேறத் திருவேறிக் களையுண்டாகும்
உன்னுடம்பு கெட்டியடா நாதவாழ்வு
திருவான பூரணத்தின் வாழ்வினாலே
சிவசிவ பொதிகைமுனி சித்தனானேன்
கருவான கருவறிந்து கலந்து கொள்ள
கருத்துனக்கு யில்லையடா கமலமேயி
குருவான சற்குருவால் மலர்க்கண் கண்டு
குவிந்து சிவயோக மதன் குறிகண்ணாட்டே - 87

8. எட்டாம் தீட்சா: "ஓம் - சிறீங் - சிம் - றிங் - ஓம்"

பலன்கள்: பாடல் கண்டவாறு உண்டாகும் மனதறிவு கொண்டு உருவேற்றினால் ஞானியாகலாம். சற்குருவால் ஆசிபெற்று சிவயோகத்தில் கண்ணாக இருந்தால் உன்னுடல் உறுதியாகும். நாதவாழ்க்கை ஏற்படும். அதன்நுட்பங்கள் அறிந்து சிவயோகம் செய்யவும்.

9. ஒன்பதாம் தீட்சா விதி:

பாரடா ஒன்பதாந் தீட்சை தன்னை
பாலகனே தன்னறிவைப் பற்றிக் கொண்டு
காரடா சுழிமுனையைக் கார்த்து மைந்தா
கண்மணிபோல தன் மனதில் "றங் - றங் - றங் - றிங்" கென்று
நேரடா நிலையான நிலையைப் பத்தி
நீ மகனே நிலையறிந்து உருவே செய்தால்
வீரடா கொண்டுனின்ற கிரகதோஷம்
விலகுமடா வேதாந்த சுருதிபாரே - 91

சுருதிமய மானநவ தீட்சை தன்னை
சுத்தமுடன் தான்செய்து துருவம் பார்த்தால்
பருதிமதி ஒன்றாகி சுழினைக் குள்ளே
பாய்ந்து னின்ற சோதிதனை பார்க்கப் போமோ
உறுதியுட நீயிருந்து சுழினை மேவி
உத்தமனே வாசியை நீ சுத்தம் பண்ணிக்
கருதிமனக் கண்ணாலே கால்மேல் கொண்டால்
கலந்து நின்ற சோதியடா போத் மாமே - 92

9. ஒன்பதாம் தீட்சா விதி: "ஓம் - றங் - றங் - றங் - றீங் - ஓம்"

பலன்கள்: பாடலில் கண்டவாறு கூறும்போது கிரக குற்றங்கள் விலகும். வேதாந்தம் துலங்கும். நவீனம் என்னும் புதுமையான தீட்சா முறைகள் உருவேற்றி வந்தால் சூரியனும் சந்திரனும் இணைந்து சுழிமுனையில் கலந்து வாசியானது சுத்தமாகும். அதனால் சோதியான ஒளிச்சுடர் கண்டு ஞானம் பெற்று விளங்கலாம்.

Koviloor Digital Library

10. பத்தாம் தீட்சை:

"தனதான தீட்சையிலே பத்தாஞ் தீட்சை
தன்மையுடன் சொல்லுகிறேன் "அங் - சிறிங் - லங் - சிங்" கென்று
குணமான மனங் குவிய குருவை நோக்கி
குருவிருந்த உறுமையினால் உருவே செய்ய
கனமான திசை நாதங் காதிற் கேழ்க்குங்
கருணை வளர் சுழினையிலே காந்தி மீருஞ்
சினமான மாய்கையென்னும் காந்தியாலே
தீருமடா சிவயோக நீ திறமாய் பாரே" - 94

திறமான தச தீட்சை சத தீட்சை
தீர்க்கமுடன் நீதான் செபித்துக் கொண்டு
சிரமான சுழினையிலே மனக் கண்சாத்தி
சிவசிவா சிந்தைமன மொன்றாய் நின்றால்
பரமான அண்ட கேசரி யாளந்த
பதிவான சுழியிலொரு சோதி போலே
அறமான யில்லரத்தை சுத்தி பண்ணி
அப்பனே சதா போதை யாக்கி நிற்பாய் 95

10. பத்தாம் தீட்சை:

"ஓம் - அங் - சிறிங் - லங் - சிங் - ஓம்"

பலன்கள்: பாடலில் கூறியவாறு அனுபவம் ஏற்படும் மனங்குவிய வேண்டும். குருவினிடம் அறியும் நிலை உண்டாகும். தசநாதம் காதில் கேட்கும். மாய்கை என்னும் மயக்கங்கள் விலகும். உடல் சாந்தி மீறும், ஒவ்வொரு தீட்சை மந்தரங்கள் நூறுக்கு மேல் உருவேற்ற வேண்டும். அண்டத்தில் இருக்கும் கேசரி என்னும் பெண் தெய்வம் காண வேண்டும். சோதி வடிவம் காணும். எப்பொழுதும் ஞானத்தில் இருந்து வரவும்.

அகத்தியர் தமது வேதநூலான பூரண காவியம் 1000த்தில் மேலும் சில தீட்சாவிதிகள் கூறியுள்ளார். அதனையும் அறிக.

1. பரமகுரு தீட்சை: "ஓங் - அங் - றீங் - சிங் - சிம் - ஓம்"
2. அட்டகிரியில் தவஞ்செய்ய தீட்சை: "ஓம் - கிறி - லங் - சிம் - சிம் - ஓம்"
3. அட்ட சக்தி தீட்சை: ஓம் - அம் - சிம் - சிறீங் - ஓம்
4. அட்ட பாலர் தீட்சை: ஓம் - ரங் - கிலி - சவ் - ஓம்
5. அட்டநாக தீட்சை: ஓம் - சிங் - கிலி - நங் - ஓம்
6. பஞ்சகர்த்தாள் பஞ்ச சக்தி தீட்சை: ஓம் - சிம் - சிறீங் - லங் - நம் - ஓம்
7. சத்தரிஷி சத்தகன்னி தீட்சை: ஓம் - கிலி - சிறீங் - சிம் - ஓம்
8. பதினென் சித்தர் தீட்சை: ஓம் - கிலி - ரங் - அங் - சிங் - ஓம்
9. சுத்த தீட்சை: ஓம் - அம் - சிம் - ஓம்

மேற்கண்ட தீட்சா மந்திரங்கள் அகத்தியர் பூரண காவியம் நான்காவது காண்டம் பாடல் 3 முதுல் 17ஆம் பாடல் வரையுள்ளவையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் அகத்தியர் பரிபூரணம் 1200இல் சிவதீட்சையும் சக்தி தீட்சையும் கூறியுள்ளார். அதனையும் கண்டு களியுங்கள் மிகவும் எளிதான தீட்சா மந்திரங்கள் ஓதுகிறார்.

1. சிவ தீட்சா மந்திரங்கள்:

முதல் தீட்சை: "ஓம் - சிங் - சிவ் - ஓம்"
இரண்டாம் தீட்சை: "ஓம் - அங் - அம் - ஓம்"
மூன்றாம் தீட்சை: "ஓம் - அம் - சிங் - ஓம்"
நான்காம் தீட்சை: "ஓம் - சிங் - வங் - ஓம்"
ஐந்தாம் தீட்சை: "ஓம் - அம் - றீங் - ஓம்"
ஆறாம் தீட்சை: "ஓம் - நங் - கிலி - ஓம்"
ஏழாம் தீட்சை: "ஓம் - அய்யும் - சிவ் - ஓம்"
எட்டாம் தீட்சை: "ஓம் - உம் - சவ் - ஓம்"
ஒன்பதாம் தீட்சை: "ஓம் - ரம் - லம் - ஓம்"
பத்தாம் தீட்சை: "ஓம் - கம் - கிலி - ஓம்"

2. சக்தி தீட்சா மந்திரங்கள்:

முதல் தீட்சை: ஓம் அரியும் ஓம்
இரண்டாம் தீட்சை: ஓம் - உம் - அம் - ஓம்
மூன்றாம் தீட்சை: ஓம் - நசி - சிம் - ஓம்
நான்காம் தீட்சை: ஓம் - ரம் - லம் - ஓம்
ஐந்தாம் தீட்சை: ஓம் - றீங் - ஓம்
ஆறாம் தீட்சை ஓம் - அம் - கிலி - ஓம்
ஏழாந் தீட்சை: ஓம் - நம் - ஓம்
எட்டாந் தீட்சை: ஓம் - சும் - சுவ் - ஓம்
ஒன்பதாம் தீட்சை: ஓம் - ரம் - ரங் - யம் - ஓம்
பத்தாம் தீட்சை: ஓம் - பிறீங் - சும் - ஓம்
பதினோராம் தீட்சை: ஓம் - டம் - நம் - ஓம்

Koviloor Digital Library

மேற்கண்ட திட்சா முறைகள் அகத்தியர் பரிபூரண்ம 1200இல் 70.ஆம் பாடல் முதல் 91.ஆம் பாடல் முடிய கூறியுள்ளார்.

1. சற்குரு தியானம்: ஓம் - சிம் - சிங் - ஓம்
2. பிரம தரிசன தியானம்: ஓம் - நங் - மங் - ஓம்
3. விஷ்ணு தரிசன தியானம்: ஓம் - மங் - சிங் - ஓம்
4. உருத்திர தரிசன தியானம்: ஓம் - சிங் - வங் - ஓம்
5. மாாசன் தரிசன தியானம்: ஓம் - வங் - யங் - ஓம்
6. சதா சிவதரிசன தியானம்: ஓம் - யங் - நங் - ஓம்
7. பருதி மதி சுடர் தியானம்: ஓம் - அங் - கிலி - வா - ஓம்
8. மதி தியானம்: ஓம் - லங் - லங் - ஓம்
9. ரவி தியானம்: ஓம் - ரங் - ரங் - ஓம்
10. மனோன்மணி தியானம்: ஓம் - சிறீங் - றீங் - ஓம்
11. பரமகுரு தியானம்: ஓம் - லிங் - கிலி - சிம் - ஓம்
12. வயிரவ தியானம்: ஓம் - சிங் - சிம் - அங் - கிலி - ஓம்

மேற்கண்ட தரிசன தியான மந்திரங்கள் அகத்தியர் பரிபூரணம் 1200இல் பாடல் 95 முதல் 113 வரை பார்க்க.

மேற்கண்ட திட்சாமுறைகளில் சிவதிட்சை காலையிலும், சக்தி தீட்சா முறைகள் மாலையிலும் செய்ய வேண்டும். இதற்குரிய பாடலைக் காண்க.

''காணவே காலையிலே சிவத்தைப் பூசி
கனிவாக மாலையிலே சக்தியை பூசை
பேணவே காலைசிவ மாலைசக்தி
பேறாமல் நின்று தவஞ் செய்வாகில் - 161 என்று கூறுகிறார்.

1. வாலையின் தீட்சை: ''ஓங் - அங் - உங் - லங் - கிலி - சுவாகா'' உதயத்தில் செய்க.
2. புவனையுட தீட்சை ஓம் - சிரீங் - றீங் - வசிங் - சுவாகா மதியத்தில் செய்க.
3. திரிபுரையின் தீட்சை: ஓம் - அய்யும் - கிலியும் - சவ்வும் - வசி - சுவாகா மாலையில் செய்க.
4. சாமளையின் மந்திரம்: ஓங் - கிலி - றீங் - சிவசிவ ஓம் நாள்தோறும் செபிக்கவும்.
5. மகேஸ்வரி மந்திரம்: ஓங் - கிலி - சிறீங் - அங் - ஓம் - நாள்தோறும் செபிக்க
6. அம்பிகா தேவி மந்திரம்: ஓங் - அங் - உங் - நங் - கிலி - ஓம் - மவுனத்திலிருந்து காலை மாலை செபிக்கவும்

7. பகவதி தியான மந்திரம்:

ஓம் — றீங் — றீங் — அங் — கருணை தேவி — பகவதி வாவா — ஸ்ரீராஜ ராஜேஸ்வரியே — கண்ணமா — கமலாயி — மந்திர ரூபிணி — கமல சித்து வடிவே சிவ சோதித் தாயே முன்னமாய் நீயிருந்து என்னை காக்க காக்க — ஓம் — ஸ்ரீம் — றீங் நசிமசி — வாவா — நம — சுவாகா.

மேலும் அகத்தியர் பூரண சூத்திரம் 216இல் சிவசக்தி தீட்சாவிதிகள் பற்றி ஓதப்பட்டுள்ளது. அதனையும் இங்கு அறிமுகப்படுத்தப் படுகிறது. சிவதீட்சாவிதி காண்க.

1. முதல் தீட்சா விதி: ''ஓம் - அம் - உம் - சிம் - யம் - ஓம்''
2. இரண்டாம் தீட்சா விதி: ''ஓம் - அவ்வும் மவ்வும் ஓம் நமசிவய ஓம்''
3. மூன்றாம் தீட்சா விதி: ''ஓம் - உம் - அம் - சிவ சிவாய ஓம்''
4. நான்காம் தீட்சா விதி: ''ஓம் - சிவாயநம - ஓம் - ஐயும் - ஓம்''
5. ஐந்தாம் தீட்சா விதி: ''ஓம் - அவ்வும் - உவ்வும் - சவ்வும் - ஓம்''
6. ஆறாம் தீட்சா விதி: ''ஓம் - மவ்வும் - உவ்வும் - நமசிவய - ஓம்''
7. ஏழாம் தீட்சா விதி: ''ஓம் - கிலீம் - நமசிவய - அவ்வும் - ஓம்''
8. எட்டாம் தீட்சை விதி: ''ஓம் - ஐயும் - சிவ - அங்கிஷாயா ஓம்''
9. ஒன்பதாம் தீட்சை விதி: ''ஓம் - சிவாயநம - அம் - உம் - ஓம்''
10. பத்தாம் தீட்சை விதி: ''ஓம் - சிவாயம - அம் - உம் - ஓம்''
11. பதினோராம் தீட்சை விதி: ''ஓம் - சிவாயநம - அம் - உம் - ஓம்''

2. வாலையான சக்தியின் தீட்சா விதி:

1. முதல் தீட்சை: ஓம் - உம் - ஆம் - மம் - ஓம்
2. இரண்டாம் தீட்சை: ஓம் - யம் - ரம் - அம் - உம் - மம் - ஓம்
3. மூன்றாம் தீட்சை: ஓம் - ஈம் - ஓம் - அம் - உம் - மம் - ஓம்
4. நான்காம் தீட்சை: ஓம் - உம் - மம் - அம் -

Koviloor Digital Library

ஈம் - ஐம் - ஓம்

5. ஐந்தாம் தீட்சை: ஓம் - கிலீம் - ஓம் - மம் - அம் - ஐம் - ஓம்

6. ஆறாம் தீட்சை: ஓம் - வம் - ஈம் - ஓம்

7. ஏழாம் தீட்சை; ஓம் - ஸ்ரீம் - ஈம் - அம் - ஐயும் - ஓம்

8. எட்டாம் தீட்சை: ஓம் - சவ்வும் - அவ்வும் - மவ்வும் - ஓம்

9. ஒன்பதாம் தீட்சை: ஓம் - நம் - மம் - சிம் - வம் - ஐம் - ஓம்

10. பத்தாம் தீட்சை: ஓம் - உம் - மம் - சம் - ஓம்

11. பதினோராம் தீட்சை: ஓம் - றீம் - சம் - மம் - ஓம்

3. மந்திரங்களின் சாப நிவர்த்தி

ஓம் - சிவாயநம - அம் - உம் - சிம் - கிலீம் - ஸ்ரீம் - ஓம் - சீ - ரம் - மம் - யம் - ஓம் (லட்சு உரு

தீட்சா மந்திரங்கள் நடைமுறை படுத்தும்முன் சாபவிலக்கும் மந்திரம் பயன்படுத்துக.

தன்வந்திரி என்னும் முனிவர் தாம் எழுதிய தண்டகம் 130இல் சில பாடல்கள் சில தீட்சா விதிகள் ஓதியுள்ளார் அதனையும் மானிடர்கள் அறிய வேண்டும்.


1. குண்டலியின் தீட்சை:

பாரெனவே குண்டலியின் தீட்சை கேளு
பண்பான "ஓங் - கிலியும் - ஸ்ரீங் - றீங் - அங் - அங்
ஆரனவே சிவாய கெசமுகாயா வென்று
அப்பனே லட்சத் தெண் ணாயிரந்தான்
வாரெனவே பாலு முப சாரந் செய்தால்
வளமாக மண்டலத்திற் பிரகாசிக்கும்
காரெனவே அட்ட சௌபாக்கியம் மெய்தும்
கடாட்சிப்ப பார் குண்டலிதான் கண்டு கொள்ளு - 5

மந்திரம்: ஓம் — கிலிம் — ஸ்ரீங் — றீங் — அங் — அங் — சிவாய — ஜெகமுகாயா நம (சுவாக)

2. சுப்பிரமணியர் தீட்சை:

கொள்ளவே சுப்பிரமணியர் தீட்சை கேளு
கொடிதான "கங் - கிலியும் - வங் - அங் -கென்று
மள்ளவே புட்ப பரிமள நெய்வேதியம்
மண்டலம் வலட்சத் தெண்ணாயிரத்தை யோது



வள்ளலே பால சுப்பிரமணியர் தானும்
வருட்சிப் பாரட்ட சௌபாக்கியம் ஈவார்
கள்ளவே கனகசபை நடனங் காண்பாய்
கருத்தரிய மனவெகுளி அடக்கமாமே - 6

மந்திரம் "ஓங் — கங் — கிலியும் — வங் — அங் — பாலசுப்பிரமணியாய நம" (சுவாக)

3. வயிரவருடை தீட்சை:

ஆமென்ற வயிரவன்றன் தீட்சை கேளு
அப்பனே "சிம் வம் யவசிமந வென்று
நாமென்ற மண்டலத்தில் லட்சுமோது
நலமாக பூசை நெய்வேதியம் செய்தால்
காமென்ற வயிரவர் தான் பிரகாசிப்பார்
கயிலை யொடு சௌபாக்கியமீவாரப்பா
வாமென்ற வடுகனவர் சித்தியானால்
வகார சிவ பூபதியுஞ் சித்தியாச்சே - 7

மந்திரம்: ஓம் — சிம் — வம் — யவசிமந — வயிரவ தேவாய நம (சுவாக)

4. சிவ தீட்சா முறை:

ஆச்சென் சிவத்தினூட தீட்சை கேளு
அப்பனே "அம் நம் மங் சிம் வம் மென்று

Koviloor Digital Library

காச்சென்ற லட்சத் தெண்ணா யிரந்தான்
கண்டோது சித்திப் பார் சதா சிவந்தான்
மாச் சென்ற சித்தனடா வுனக் கீடில்லை
மகத்தான போத மெல்லா மாட்டி விப்பார்
நாச் சென்ற ஆயிரத்தெட்டண்டந்த தோன்றும்
நலமான சிதம்பரமுந் தோன்றும் பாரே - 8

(ஓம் — அம் — நம் — மங் — சிம் — வம் — சதா சிவதேவாயா நம — சுவாகா)

5. சத்தி தீட்சா முறை:

பாரென்ற சக்தியுடன் தீட்சை கேளு
பண்பான ஆம் - ஊம் - ரம் - எங் - சிங் கென்று
ஆறென்ற லட்சுமுருச் செய்து கொண்டு
அப்பனே மண்டலந்தான் பூசை செய்தால்
காரென்ற சக்தியவள் பிரகாசிப்பாள்
கண்மணியே சகலகலை யீவாள்பாரு
நாரென்ற யிந்நூலிற் தீட்சை யெல்லாம்
நலமாகத் திறந்து விட்டோம் நாமேயாமே - 9

மந்திரம்: "ஓம் - ஆம் - உம் - ரம் - எங் - சிங் - சக்தி தேவித்தாயே நம" (சுவாக)

தன்வந்தரி தண்டகம் - 130.

பாத தீட்சை என்றால் என்ன?

உலகியிலில் வாழும் மக்கள் பலர் பொய்யுலக வாழ்க்கையில் உழல்கிறார்கள் . சொற்பமாக ஒருசிலர் மெய்யுலகில் உண்மையறிந்து அருளை நாடி நிற்கிறார்கள். பொய்யுலகில் உழலும் மனிதர்கள் தாம் என்ன செய்கிறோம் என்று கூட சிந்திப்பதில்லை. இவர்கள் சில பொய்யுரை செய்யும் மடத்தின் காவியாடை காட்டி பட்டை தீட்டிய விபூதியும் பூசி தோற்றமளிக்கும் பெருத்த உடல் பெற்ற காலடியை தட்டில் வைத்து நீர் ஊற்றிக் கழுவி மலரிட்டு மண் தோய்ந்த காலடியை வணங்கி பணிகிறார்கள். அதனை பாத தீட்சை என்றும் கூறும் இவ்வுலக மக்களின் அறியாமையின் வெளிப்பாடேயாகும். இவ்வாறு மடசாமியார்கள் தங்களை இறைவனுக் கொப்பானவர்கள் என்று கூறும் போலி சாமியார்கள் அடியோடு ஒழிக்க வேண்டும்.

பாத தீட்சை என்பது ஆதி மகாமூலமான ஓங்காரத்தின் பாத தீட்சையாகும். மெய்யுலக மக்கள் அருள் நோக்கம் கொண்டவர்கள் அறிவார்கள். முதல் பாதம், அகாரமாகும். இரண்டாம் பாதம் உகாரமாகும். மூன்றாம் பாதம் மகாராமாகும். அகார தீட்சை என்பது சிவத்தின் தீட்சையாகும். உகார தீட்சை என்பது சக்தியின் தீட்சையாகும். மகாரம் என்பது வாலையின் தீட்சையாகும். இந்த மூன்றுமே பாத தீட்சையாகும்.

மானிடன் உயர்நிலை அடைய நினைக்கும் நிலையில் அருள் நோக்கம் உண்டாகும். அப்பொழுது ஆவியே மகாரமாக செயல்படும். அதுவே வாலையாகும். அந்த வாலையே அகர உகர என்று கூறும் எட்டும் இரண்டும் கூடியடங்கி நிற்கும். இதுவே பாததீட்சை என்பர். பேரண்ட பூரணமே சிகாரமாய் நிற்கும். மானுட ஆவி பெறும் பாததீட்சையே மேன்நிலை உயர்வுக்கு மிக்க காரணமாக உள்ளது. அதன் உண்மைக் கூறும் பாடலை அறிக. படிக்க தெளிக.

"சிகார மென்ற வாசியடா மகாரத்துள்ளே
சென்று சதா சிவத்துடனே சேர்ந்து கொண்டு
நாகார மென்ற பிரமாவே நான்தானென்று
நாதாந்த பூரணமா யேக மானார்
அகார மென்ற உகாரமடா யெட்டி ரண்டும்
அடங்கியது மொன்றான பாத தீட்சை
மகார மென்ற மவுனமடா வாலை வாலை
மகத்தான ஆவியடா யேக மாச்சு" - 12

ஆன்மாவுக்கு முத்தியளிக்கும் இந்த பாத தீட்சை உயிருக்கு முத்தி தராத பருத்த மனித தேகத்தின் காலடி பாத தீட்சையா என்பதை சிந்திக்க வேண்டும். பருத்த தேகத்தின் காலடி பாதம் பூசை செய்தால் உயிர்கள் முத்தி பெற முடியாது.

எனவே காவியாடை அணிந்து வரும் சாமியார்களின் காலடி முத்தி அளிக்காது. அது பாத தீட்சையல்ல என்பதை உணர வேண்டும். மேற்கண்டவர்கள் சுப்பிரமணியர் சிவம் யோக ஞானம் 500இல் கூறப்படுகிறது.

Koviloor Digital Library

மௌன தீட்சை என்றால் என்ன?

மௌன தீட்சைப் பற்றி யாரும் கூறமாட்டார்கள் என்று சித்தர்கள் பாடியுள்ளனர். அதனையும் வெளியிடக் கூடாது என்றும் ஓதியுள்ளனர். இந்த தீட்சைகள் சதாசிவனும் உரைக்க மாட்டார்கள் என்று கூறியுள்ளார். கெவுனி நிலைப் பெற்ற சித்தர்களும் கூறமாட்டார்கள். தவதில் ஞானம் பெற்றவர்களும் கூறமாட்டார்கள் என்று கூறப்படுகிறது. இதன் கருத்தை வலியுறுத்தும் சித்தர் பாடல் காண்க.

"மவுனத்தின் வாலை வசமாக யுரைக்கிலார்
தவன சதாசிவன் தானுமுறை பேசார்
கெவனத்தின் சித்தர் கேட்டாலும் பேசார்
தவ போதனர்களுந் தானுரை யார்களே - 43

மச்சமுனி ஞான தீட்சா விதி — *100*

மௌன தீட்சை யார் சொல்லக் கூடும்:

மௌன தீட்சை யாரும் கூறமாட்டார்கள் ஆனால் மௌன தீட்சை குருவின் மூலம் அறிய வேண்டும் என்பதை கீழ்வரும் பாடல் மூலம் அறியலாம்.

"வாத்தியே மவுனத்தை யாருஞ் சொல்லார்
மகத்தான குரு சொல்ல அறிய வேணும்" - 94

கடைப்பிள்ளை சித்தர் கலைஞானம் — *120.*

மௌன தீட்சையின் அக்கரம் என்ன:

மௌன தீட்சையின் எழுத்து என்ன? அது ஊமை எழுத்தாகும். குற்றங்களங்கமில்லை ஒன்பதுக்கும் ஆகும் என்று கூறுகிறார்கள். இதனை கௌசிகர்,

"காற்றிரமாய் ஊமை யட்சரத்தை யோதி
கள்ளமில்லா வொன்பதுக்கு மாகுமென்ன" - 16

கௌசிக முனிவர்ஞான சூத்திரம் — *30*

மௌனம் என்ற ஊமை எழுத்து எது:

சித்தர்களின் காலடி பற்றிக் கேட்டாலும் அவர்கள் கூற மாட்டார்கள். அழுது புரண்டாலும் அவர்கள் கரு என்ற ஊமையைப் பற்றிச் சொல்ல மாட்டார்கள். பதிணென் சித்தர்கள் கேட்டாலும் அவர்கள் கூற மாட்டார்கள். இதனை பழம்பெரும் உலகில் புதைத்து மறைத்தார்கள். ஆனால் யாகோப்பு என்ற பெயருடைய யாம் உமக்கும் ஊமை எழுத்தைப் பற்றி சொல்வோம். அவ்வெழுத்து மிகவும் அழகானது. அதனால் நன்மை அடைய விரும்பும் எழுத்து மகாரமாகும். இந்த எழுத்தின் உண்மை ஈன குணம் உள்ளவர்களுக்கு உரைக்கக் கூடாது என்று அறிவுறுத்தும் சித்தர் பாடல் கீழ் காண்க.

"கலங்கியே கேட்டாக் கால் சித்த ரெல்லாம்
கருவான ஊமை யதைச் சொல்ல மாட்டார்
துலங்கு மந்த பதினெட்டுச் சிந்தரையா
தொல் புவியிற் சொல்லாமல் மறைத்து வைத்தார்
இலங்கு நின்ற யாகோப்பு சொன்ன வாக்கு
எளிலான ஊமையதை சொல்வேன் கண்ணே
நலங் கிடைக்கும் ஊமையது மகாரந்தானடா
நலமில்ல யீனருக்கு உரைக்கா தென்னே - 179

யாகோப்பு வாத சூத்திரம் — *400*

தீட்சையால் பெறும் நலன்கள் என்ன:

மேல்கூறிய தீட்சா முறைகள் ஒரு தனிமனிதன் தன்னறிவை கொண்டு மனதறிவினால் நடைமுறைப்படுத்தினால் காயசித்தி உண்டாகும். ஆவியான உயிர் தேகத்தில் ஒளிவிட்டு வீசும். அதனால் ஒளி தேகம் பெற்றால் ஞானம் உண்டாகும். இச்செய்திகள் கூறும் சித்தர் பாடலை காண்போம்.

"ஒளியான தீட்சையிலே மனதை வைத்து
உறுதியுட னமுதரச பானங் கொண்டால்
கழியாது தேகமது காந்தி மீறும்
கருணையுட னெந்நாளும் வாழலாமே
வாழ்வவதற்கு அமுதரச கற்பம் கொண்டால
வாசியென்ற ஆவியது பிரகாசிக்கும்" - 10

காலாங்கி நாதர் உபதேச ஞானம் — *34*

"பேசாத முன் மவுனங்கொண்டா யானால்
பிலக்குமடா காயசித்தி பிலக்குமாட - 43

சுந்தரானந்தர் தீட்சாவிதி - 50

"பேசாத மௌன மென்ற பிரம வித்தை
பிடரி வழி கண் திறந்து பிரகாசிக்கும் - 10

Koviloor Digital Library

மன்றுதொழுத பதஞ்சலியார் சூத்திரம் - 20

"ஆமப்பா அகாரமுடன் உகாரம் ரெண்டு
அறிந்து மனது ரிமை யினாற் கொண்டாயானாற்
போமப்பா கபமான சுவற்றுவன்தான்
பொருந்தி நின்ற மூல அனல் தன்னால் மைந்தா
ஓமப்பா ஓ முடிந்து அகன்று போகும்
உத்தமனே மறு பிறவி இல்லை - 30

கடைப்பிள்ளை ஞான சித்தர்
மந்திரம் — 30

அகாரம் என்பது சிவனின் தீடசா மந்திரங்கள். உகாரம் என்பது சக்தியின் தீட்சா மந்திரங்கள் சிவ தீட்சை உதயமான இளங்காலையில் தொழ வேண்டும். சக்தி தீட்சை ஒளிமறையும் மாலை பொழுதில் தொழ வேண்டும். அகாத்திற்கு எட்டு என்றும் உகரத்திற்கு இரண்டு என்று கூறப்படுகிறது. இந்த அகார உகாரம் இணைய மகாரமென்ற மௌனம் உண்டாகும். அந்த மௌனமே மகாரம் என்ற ஊமையாகும் ஊமையே வாலையாகும். வாலையை வணங்கி நின்றால் பிறவியில்லை இக்கலையை அனுபவத்தில் கொண்டு வந்தால் தான் இதில் உள்ள உண்மை நிலை அறிய முடியும். வெறுமனே வாலை வழிபாடு செய்பவர்களுக்கு பிறவி தடுக்க முடியாது. செய்முறையும் அனுபவமும் தேவையாகும். அதற்கு திருமூலர் தீர்வு கூறுவது காண்க.

"சாகாத கல்வியைத் தாங்கற்க வேணும்
வேகாத சிந்தை படைத்திட வேணும்
கோகாமி யத்தைக் குறைத்திட வேணும்
ஆகாத மட்டைக் கறிவதுண்டாமே" - 102

திருமூலர் மூப்பு குருநூல் — 200

திருச்சிற்றம்பலம்

31. கரு ஊர்

உலக உயிர்கள் அனைத்தும் யோனி மூலமாகவே பிறக்கின்றது என்பது உலக வழக்கமாகும். அந்த யோனி நால்வகை என்பர். யோனி என்றால் கரு என்று பொருள். கரு உற்பத்தியாகும் இடத்தற்கு ஊர் என்று கூறுவர். உயிர்கள் நிலைத்து வளர்ந்து முதிர்ச்சி பெற்று வெளியேறும் இடத்திற்கு கருஊராகும்.

உலக உயிரனங்கள் நால்வகை யோனி ஏழுவகை பிறப்பு (தோற்றம்) வேறுபாடுகளுடன் பிறக்கின்றன என்பது சமய நூல்களிலும் வேதங்களிலும் காணப்படுகின்றன. நால்வகை யோனி எழுவகை தோற்றம் உண்டாகும் போது எண்பத்து நான்கு லட்சம் உயிரினங்கள் உற்பத்தியாகிறது என்பது புற உலக சமய நூல்களிலும் வேதங்களிலும் காணப்படுகிறது.

நால்வகை தோற்றம்:

1. அண்டசம் 2. சுவேதம் 3. உற்பீசம் 4. சாரயுசம் முறையே முட்டை, வியர்வை, விந்து, கருப்பை இவைகளில் உயிர் தோன்றல்.

1. **அண்டசம்** = அண்டம் என்றால் முட்டை. சம் என்றால் பிறந்தது என்பர். அவைகள் பறவை, பல்லி, பாம்பு, மீன் தவளை முதலியன.

2. **சுவேதம்** = வியர்வையில் தோன்றுவன. அவைகள் பேன், கிருமி, கீடம், விட்டில் முதலியன.

3. **உற்பீசம்** = வித்து, வேர், கிழங்கு முதலியவற்றை மண்மேற் பிளந்து தோன்றுவன. மரம், செடி, கொடி, பூண்டு புல் முதலியன.

4. **சராயுசம்** = கருப்பையில் தோன்றுவன. இவை தேவர், மனிதர், நாற்கால் விலங்குகள் முதலியன.

கருவேறுபாடுகள் அல்லது யோனி பேதம்:

1. தேவர் 14 இலட்சம் 2. மக்கள் 9

Koviloor Digital Library

இலட்சம் 3. விலங்கு 10 இலட்சம் 4. பறவை 10 இலட்சம் 5. ஊர்வன 11 இலட்சம் 6. நீர் வாழ்வன 10 இலட்சம் 7. தாவரம் 320 இலட்சம் மொத்த தொகை 84 லட்ச பேதமான உயிரினங்கள் தோன்றுவதாக சமய நூல்களிலும் வேதங்களிலும் கூறுகிறது.

1. பறவைகள் பல்லி, பாம்பு, மீன் போன்ற உயிரினங்களுக்கு கருவூர் முட்டை என்று கூறுப்படும் அண்டசமாகும்.

2. பேன், கிருமி, கீடம், விட்டில் போன்ற உயிரினங்களினங்களுக்கு கருவூர் வியர்வையாகும். இதற்கு சுவேதம் என்பர்.

3. வித்து, வேர், கிழங்கு முதலிய தாவர உயிரினங்களுக்கு மண்ணிலிருந்து பிளந்து வெளியேறி முளையாக மேல்நோக்கி வரும். மரம், கொடி, செடி, புல், பூண்டு இவைகளுமாகும். இதற்கு உற்பீசம் என்பர்.

4. கருப்பையிலிருந்து தோன்றுவன தேவர், மனிதர், நாற்கால் விலங்குகள் முதலியனவாகும். இதற்கு சராயுசம் என்பர்.

மேற்கண்ட இவைகள் நான்கும் சமயநூல்களிலும், வேதங்களிலும் செய்தியாக வெளியிட்டுள்ளனர். ஆனால் ஐந்தாவது யோனிப் பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை என்பதுதான் உண்மை. ஐந்தாவது யோனியின் நிலை சமயம் சார்ந்தவர்களாலோ அல்லது வேதநூல்கள் மனனம் செய்து ஓதுவதாலோ தெரியாது. அந்த ஐந்தாவதுயோனி நிலை மனிதனுக்கு யோக நிலையிலிருந்து முன்னேறிவரும் அருளாளர்களுக்கு மட்டும்தான் மறுபிறப்பளிக்கும் “கருவூர்” ஆகும். இந்த செய்தியானது சித்தர்கள் அடைந்தவர்கள், சித்தர் நிலை கடந்தவர்கள், சித்தர் நிலைக்கு முன்னேறி வருபவர்கள் மட்டும் உணர்ந்து அறியும் வாய்ப்பு உள்ளது. மற்றவர்களால் அறிய முடியாது. அந்த அறிவு மனத்திற்குப் புலப்படாது என்பது உண்மையாகும். இனி ஐந்தாவது யோனி அல்லது கருவுள்ளயிடம் (யோனி) பற்றி அறிய முயற்சிப்போம்.

யோனி என்றால் கருவிடமாகும். இந்த ஐந்தவாது யோனி அல்லது கருவிடமானது முச்சுடர் கூடுமிடமாகும். முச்சுடர் என்றால் சூரியன், சந்திரன், வன்னி(அக்கினி) இவைகள் மூன்றும் இணையுமிடமாகும். இதற்கு மும்மூலம் என்றும் கூறுவர். மும்மூலம் ஒன்றாக சேரும் போது முக்கோணம் உண்டாகும். அந்த முக்கோணத்தில் கேசரி என்று அழைக்கப்படும் திருவருள் சக்தியம்மையாகும்.

மனிதன் தன்னுடைய தொன்னுத்தாறு தத்துவங்கள் என்னும் தீயோர்களைக் கொன்றபின் சாம்பவி என்னும் திருவருள் சக்தியை மனித ஆன்மா சந்திக்கிறது. அந்த ஆன்மாவானது சிவராசயோகத்தால் முன்னேறிவரும் போது முச்சுடரைச் சந்திக்கிறான் முச்சுடரே மும்மூலமாகும். அந்த மும்மூலம் நமது மனித அகத்தில் நெற்றி நடுவிடமான முக்கோணத்தில் கேசரி என்னும் திருவருள் சக்தியுடன் மௌன தியானத்தில் ஆழ்ந்து நிற்பான்.

கேசரி என்னும திருவருள் சக்தியம்மைதான் மனிதனை மறுபிறப்பு அளித்து மரணத்தை தடுக்கும். அருட் பெருந்தனிக்கருணையுடன் திகழ்வாள். இந்த மறுபிறப்பு அளிக்க வல்லயிடமே ஐந்தாவது யோனியாகும். யோனி என்றால் கருவிடம் என்று பொருளாகும். இந்த செய்தியை உணர தீவிர ஆழ்நிலை மௌன தியானத்தின் வழியேக் கண்டுக் கொள்ள ஆண்டுகள் ஐந்து கடந்த பின்னரே தெரிய வந்தது.

மானிடன் பிறந்து வாசியோகத்தால் நாடிகள் சுத்தம் செய்த பின்னர் சிவராசயோகம் என்னும் சித்தர்கள் கூறும் யோக நெறியில் தொன்னூத்தாறு தத்துவக் கூட்டங்கள் அழித்த பின் சாம்பவியை என்னும் திருவருள் சக்தியைக் கடந்து, அதன்பின்னர் மூலம் என்னும் மும்மூலம் சற்று கடந்து, முக்கோணத்தில் இருக்கும் கேசரி என்னும் திருவருள் சக்தியம்மை என்னும் கருவில் பிறந்த தேகத்துடன் மறுபிறப்பு பெற்று முத்தியின்

Koviloor Digital Library

முதல்படியில் வாழ்வான். அவ்விடமே சாகாமல் மரணத்தை வென்ற முத்தி நிலை பெறுகிறான். இப்படி மறுபிறப்பு வழங்கும் திருவருள் சக்தியான கேசரி அம்மை மூலம் மறுபிறப்பு பெற்று மந்திரதேகம் பெறுகிறான். இந்த இடமே ஐந்தாவது யோனியாகும். இந்த ஐந்தாவது யோனி இரகசியமாக சித்தர்கள் கருவூர் என்ற பரிபாசையில் கூறுகிறார்கள்.

ஐந்தாவது யோனியான இதற்கு ஞானம் வழங்கும் வல்லமையுடையது. அதனால் இதற்கு ஞானக் கருவிடம் என்று கூறுவார்கள். இந்த இடத்தை முதல்முதலில் கண்டு கொண்டவர் சுப்பிரமணிய சிவம் என்னும் மாபெரும் சித்தர் பெருமானாவார். அதனால் அவருக்கு கருவூர் காங்கேயன் என்பர். கரு+ஊர்+காங்கை+அயன் என்று பிரித்து பார்க்க வேண்டும்.

கரு என்றால் யோனி என்பர். ஊர் என்றால் இருப்பிடத்தை குறிக்கும். காங்கை என்றால் அனல் அல்லது வன்னியைக் குறிக்கும். சோதிநிலை என்றும் கூறுவர். அயன் என்றால் தலைமை என்றும், ஞானான்மா என்றும், பிரமம் என்றும் கூறுவர். பாரப்பிரம நிலையைப் பெற்றவர் நமது சுப்பிரமணி சிவமாவார்.

இனி இந்த ஐந்தாவது யோனியைப் பற்றிய செய்திகள் விளக்கமாகவும் தெளிவாகவும் சித்தர்களின் நூலிலிருந்து நாம் அறிய முயற்சிப்போம்.

சுப்பிரமணிய சிவம் எழுதிய சுத்தஞானம் 30 என்னும் நூலில் ஐந்து வகையான யோனிகள் உண்டு என்று கூறுவர். இந்த ஐந்துவகை யோனி வழியே தான் ஏழுவிதமான பிறப்புகள் உண்டாவதாகக் கூறப்படுகிறது. முன் பக்கங்களில் கூறியவாறு நான்குவித யோனிகளைப் பற்றிய செய்திகள் சமய நூல், வேதம், ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது. ஆனால் ஐந்தாவது யோனிப் பற்றிய செய்திகள் கூறப்படவில்லை என்பது தெளிவாகிறது. இந்த ஐந்தாவது யோனியைப் பற்றிய செய்திகள் சித்தர்களால் தெளிவாகக் கூறியுள்ளனர். யோனி என்று கூறாமல் கருவூர் என்று சித்தர்கள் சொல்லியுள்ளனர் என்பது தான் உண்மையாகும். இதனைப் பற்றி நமது சுப்பிரமணிய சிவம்,

"தானென்ற ஐந்துவகை யோனியாச்சு
சித்தியமா யெழுவகைத் தோற்றமாச்சு - 11

என்பது அவருடைய சுத்த ஞானம் என்னும் நூலில் தெரிவிக்கிறார். மேலும் அப்பெருமகனார் அகத்தியருக்கு ஞானம் வழங்கும் போது ஐவகை யோனியின் பிறப்புகளையும் அதன் விரிவான செய்திகளையும் அகத்தியருக்கு கூறியதாக கூறும் செய்தியைக் காண்க.

"பிறந்ததப்பா ஐயோனி பிறப்பின் மார்க்கஞ்
சேதி தனை யுன்றனக்குச் சொல்லினேனே - 75
சுப்பிரமணியர் சிவம் ஞான
சைத்தன்யம் — 108

மேலும் சுப்பிரமணியர் சிவம் ஐந்தாவது யோனி என்று கூறப்படும் கருவூர் கடந்து நின்றதாகவும், கன்ம மென்ற பாசங்கள் அனைத்தும் அழித்து விட்டதாகவும் கூறும் செய்தியைக் காண்க.

"கைதிட்டேன் கருவூரிற் கடக்க நின்றேன்
கன்ம மென்ற பாசங்கள் கடத்திப் போட்டேன்"
- 132

மேலும் தமக்கு கருவூர் காங்கேயன் என்ற நற்பெயரும் உண்டானது என்றும் மும்மூலத்தின் கருவை உமக்கு பிரித்து சொல்லுவேன் என்றும் கூறும் அவருடைய நற்பாடலைக் காண்க.

"கருதவே மும்மூலம் பிரித்துச் சொல்லுங்
கருவூரிற் காங்கேயனே கருவாய்த்தானே - 31

சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் - 200 என்று ஓதுவதால் அறியலாம்.

மேலும் சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் 100இல் 80ஆம் பாடலில் கருவூர் கடந்தவர்களுக்கு மறுபிறப்பு பிறந்தவர்களுக்கு பெண்ணின் யோனியில் பிறவியில்லை. அரனுடனும் அவர்கள் கலக்கமாட்டார்கள் என்பதைக் கூறும் பாடல் காண்க.

Koviloor Digital Library

"வழுத்துகின்ற சித்தர்களே வரிசை கேளு
வகையுடனே மறுபிறப்புக் பிறந்தாயானால்
அழுத்தமுள்ள யோனிதனிற் பிறப்பில்லை
அரனுடனே சேர்வதில்லை யையா கேளு - 80

மேலும் சுப்பிரமணியர் சிவம் மறுபிறப்பு என்றால் என்ன என்பதைப் பற்றிய குறிப்பு கூறுகிறார். அதனைப் பற்றியப் பாடலைக் காண்க.

"பரத்தோடே சேர்ந்தவர்கள் பரமேயாவார்
பரப்பிர்மப் பிறவி யதாயெங்கும் தோன்றும்
வரத்தோடே யருள் பெற்று மனமுந்தேறி
வாசி யென்ற குதிரையினால் வீடு கட்டிக்
சுரத்தோடே மனையதனி லறிவிற் சேர்ந்தால்
தயவான மறுபிறப்பு யது தானப்பா
திரத்தோடே இந்த வகை யறிந்தாயானால்
சிவத்தோடே சேருவதில் செயம் பெற்றாயே - 92
சுப்பிரமணியர் சுத்த ஞானம் — 100

கருவூர் கடந்து நின்ற ஆன்மாக்கள் பரம் என்னும் திருவருள் இடத்தை சேர்ந்தவர்கள், திருவருள் வடிவமாகவே இருப்பார்கள். அதாவது ஞான வடிவமாகவே இருப்பார்கள். அருட் துணைப் பெற்று மனம் ஒன்றாக்கி சுழிதனை என்ற வாசியான குதிரையை கட்டுப்படுத்தி பற்பல ஒலிகளின் இனிய ஓசை கேட்டு அறிவின் துணைக் கொண்டு கருவூரில் மறுபிறப்பு எடுத்தால் மீண்டும் பெண் யோனி பிறவி இல்லை என்பதை அறிந்துக் கொண்டவர்கள் அருள் என்னும் சிவமுடன் சேர்ந்து சித்தி பெற்று வெற்றி பெற்றவர்களாவார்கள் என்று கூறப்படுகிறது. மேலும் சுப்பிரமணியர் சிவம் என்பவர் எல்லா உயிர்களிலும் கலந்து நின்றேன். சிவம் என்ற அருளுக்கு மேலான சிவனாகவே திகழ்ந்தேன். ஆய்ந்துக் கொண்டு அவ்வூரில் அழிவு என்னும் ஞானம் பெற்று ஆதி மகாமூலம் என்ற மாபெரும் அருளைப் பெற்றேன். கருவூரும் கடந்து, கன்ம பாசங்கள் ஒழித்து, மெய்யென்ற மெய்ஞ்ஞான குருவென்ற உயர்நிலை அடைந்தேன். உயர்ந்த சிறப்பான பதவியென்ற சித்தர் நிலைப் பெற்றேன் என்று கூறும் பாடலைக் காண்க.

"செய்திட்டோம் எவ்வுயிரும் நானுமானேன்
சிவனுக்கு மேலான சிவனுமானேன்
அய்திட்டேன் யவ்வூரிலறிவாய்ச் சென்றேன்
ஆதிமகா மூலம் என்ற மருளே பெற்றேன்
கைதிட்டேன் கருவூரில் கடக்க நின்றேன்
கன்மமென்ற பாசங்கள் கடத்தி போட்டேன்
மெய்திட்ட மெய்ஞ்ஞானி குருவு மானேன்
மேலான பதவியிலே மேவினேனே - 132/200

இனி சில சித்தர்களின் கருத்தையும் நாம் அறிவது அவசியமாகும். இனி அதனைப் பற்றிப் பார்ப்போம்.

கடுவெளி சித்தர் பூரண ஞானம் 67இல் 39ஆம் பாடலில் கருவூரின் நிலைப்பற்றி கூறுவதைக் காண்க.

"கருவூர் நடுவணையாங் காமா வடிவிற்
திருவடர்ந்த நல்லூரில் (என்னையா) தீரமுடன்
வந்தவரே - 39

என்று கூறுகிறார். நடுவணையான நெற்றி நடுவில் அனைவரும் விரும்பும் காமக்கலை பொழியும் அழகான ஊராகும். அந்த கருவூருக்கு தீரமுடன் வந்தநீர் திருவருள் மிகுந்த நல்லூராகும் என்று கூறுகிறார்.

கோரக்கர் தமது சந்திர கலை 200இல் 6ஆம் பாடலில் நிராதாரமான திரைகளை விலக்கி அம்பலம் என்னும் தலமான சிவசக்தியம்மையுடன் இருக்கும் தலமான கருவூராகும். அந்த கருவூர் அந்தரத்தில் ஊசலாடிக் கொண்டு இருக்கும் என்பதை,

"அமபரமே டாறுதல மரன்பா லம்மை
அமைந்த கருவூராகும் அந்தரத்து ஊசல் - 6 என்று கூறுவதால் அறிக.

மச்சமுனி சித்தர் காரண ஞானம் 10 என்ற நூலில் 9ஆம் பாடலில் கேசரி என்ற திருவருள் சக்தியம்மை அங்கே இருக்கும் தலமான முக்கோணமே கருவூராகும் இதனை அறிந்து மறுபிறப்பு வழங்கும் பதி இதுவேயாகும் என்று கூறுகிறார்.

"பானென்ற கருவூர் கேசரிதா னெங்கே
பார்க்கிற தோர் முறையறியார் பதியிதாமே - 9 என்று செப்புவதால் தெளிக.

Koviloor Digital Library

கடைப்பிள்ளை சித்தர் தாம் எழுதிய சிவயோகம் என்னும் நூலில் கேசரியின் கருவூரை கொள்ளையிட்டதாகவும், கேட்பவருக்கும் கேளாமல் மறுபிறப்பு வழங்கி மரணத்தை விலக்கி சாகாவரம் தரும் இடமே தான் இந்த கருவூராகும் என்பதை.

"கேளப்பா கருவூரிற் கொள்ளை கொள்ளை
கேட்டவர்க்குங் கேளாமற் கூ கூ கூ கூ - 16
கடைப்பிள்ளை சிவயோகம் — 120.

அகத்தியர் இயற்றிய அந்தரங்கா திட்சாவிதி — 400இல் 67ஆம் பாடலில் நிராதாரமமான ஆறாது பீடமான அதில் பிராணனின் (ஆன்மா) ஒலியான நாத பிரகாசம் தோன்றும். அதாவது மானிட தேகம் பிரணவதேசமாகி மயிர்கால் தோரும் ஒளிச்சுடர் வீசும். இதற்கு மந்திர தேகம் என்றும் கூறுவார்கள். அந்தமும் மூலத்தலத்தில் சின்னமணி சித்தர் கூட்டம் இருப்பிடமாக இருக்கும். சிவசக்தி ஆக இவர்களின் சிங்காதன மேரு என்பர். அந்த விட்டில் சோனை என்றும் திருயிமிழ்தம் பாய்ந்து வரும். என்று கூறும்பாடல் காண்க.

"சொன்ன தோரு சடாதார பீடம்
அதில் நாத பிரகாசம் பிராணன் தோணும்
அன்னை தலம் கருவூராம் நாடுவிட்டு
அம்மலையாம் வீட்டினில் சோனை பாயும்
சின்ன மணி சித்தர் கூட்டம் மூலம்மூலம்
சிவ சிங்காதன மேரு சிவமுசக்தி - 67

சுப்பிரமணிய சிவம் யோக ஞானம் என்னும் நூலில் மும்மூலம் ஒன்றானால் அதில் மானிட ஆன்மா கேசரி என்னும் திருவருள் சக்தியை சந்திக்கும் வாய்ப்பு உண்டாகும்போது மவுனம் உண்டாகும். ஆயிரத்தெட்டு மலர்கள் அழகாய் காணலாம். அது வலிமையான கருவூராகும். அந்த கருவூரில் ஆன்மாக்கள் வளர்ந்து நிற்கும் வாய்ப்பு ஏற்படும் நிலையில் ஆயிரம் திருவிளக்கின் ஒளிச்சுடர் காணலாம் என்பதை

"அல்லடா கேசரியாள் மவுனம் வாய்க்கும்
ஆயிரத் தெட்டு மல ரழகாய்க் காணும்
வல்லா கருவூரில் வளர்ந்து நிற்பாய்
வாய்ப்பான வயிரத் திருவிளக்கைக் காண்பாய்"
என்று ஓதுகிறார்.

சமதக்கினிமாமுனிவர் வஸ்து தரிசனம் 31இல் 8ஆம் பாடலில்

"காட்டிய சொல்லி விட்டே னறிந்து கொள்ளு
கருவான கருவூரிற் கால்தான் தோன்றும்
நீட்டியே காலதனை யின்ன தென்று
நேர்மையுடன் றிந்து கொண்டார் பூரணந்தான்
கூட்டியதோர் பூரணத்தைத் தெரிந்து கொண்டால்
குறியான சிவயோக முடிவு மாச்சி
நாட்டியதோர் சிவயோக முடிந்த தானால்
நல்லதொரு ஞானமுந்தான் சித்தியாச்சி - 12

என்கிறார். சமதக்கினி மாமுனிவர் கருவூர் எது என்பதை அதன் செய்தியை விளக்கமாக எடுத்துக்காட்டி கூறியதாக சொல்கிறார். அந்த கருவூரில் கால் என்ற வகாரம் தோன்றும். அந்த காலென்னும் வகாரம் இன்னது என்று அறிந்துக் கொண்டால் அது பூரணம் என்பர். பூரணத்தின் இருப்பிடமே கருவூர் என்று தெரிந்துக் கொண்டு சிவயோகம் முடிவுக்கு வரும். சிவயோகம் முடிவுக்கு வந்தால் நல்ல ஞானதேகம் பெற்று சிறந்த ஞானநிலை அடைந்து ஞானி என்ற சிறப்பு பெயர் சித்தியாகி சித்தர்நிலை பெறுவார்கள் என்பதாம்.

மேலும் அகத்தியர் அந்தரங்க தீட்சா விதி — 400இல் 344ஆம் பாடலில் பிறவாமல் பிறப்பிக்கும் நிலையை உண்டாக்கும் இடம் பூரணமாகும். அந்த இடத்தில் ஆன்மாக்கள் சிவயோக நெறியில் இருந்தார்களேயானால் அதன் பெருமையை சிறப்பு நிலைக்கு உந்தும் என்பதை,

"பிறவாதே பிறப்பிக்கும் பூரணத் தினுள்ளே
பேரான பிராணாய பெருமை கேளே" - 344

என்று ஓதுகிறார். உலகியலில் உழலும் சமயம் சார்ந்தவர்கள் நான்குவித யோனியின் விவரம் கூறியுள்ளது. அவர்கள் அறிந்த செய்தியாகும். ஆனால் சித்தர் மரபினரில் வந்தவர்கள் ஐந்தவாவது

Koviloor Digital Library

யோனியைப் பற்றி அறிந்துள்ளனர்.

ஐந்தாவது யோனியின் இருப்பிடம் நெற்றிநடுவணையாகும். அந்த இடத்தில் மும்மூலம் சேருமிடமாகும். மும்மூலம் என்பது முச்சுடராகும். முச்சுடர் என்பது சூரியன் — சந்திரன் — வன்னி இவைகளாகும். இந்த மூன்று இணையுமிடமே முக்கோணமாகும் அந்த முக்கோணத்திற்குரியவள் கேசரி என்னும் திருவருள் சக்தியாகும். அந்த திருவருள் சக்தியின் இடமே ஐந்தாவது யோனி என்னும் கருவூராகும். அந்த கருவூரில் இந்த மானிட தேகத்துக்கு மீண்டும் ஓர் மறுபிறப்பு வழங்கும்.

மறுபிறப்பு பெற்றவர்களின் தேகம் பிரணவ தேகமாக மாறும். இதற்கு மந்திர தேகம் என்றும் கூறுவர். இந்தயிடம் மரணம் தடுக்குமிடமாதாலால் மீண்டும் பிறவி இல்லை என்று சித்தர்கள் தங்கள் அக அனுபவங்கள் அறிந்ததை கூறியுள்ளனர். அந்த கேசரி என்னும் திருவருள் சக்தியே முத்திக்கு வழியும் காட்டி, ஞானதேகம் பெறவும் உதவுகிறாள். ஞானி என்ற பதவியும் மனிதன் பெறுகிறான். இந்த நிலையையே திருமூலரும் மனிதனும் தெய்வமாகலாம் என்று ஓதியுள்ளார் என்பதையும் அறியலாம்.

மானிட இனங்கள் தங்களின் அறிவைக் கொண்டு அறிந்தால் பிறவி இல்லை. அடுதாப் போல் பரமபதம் பெறும் நிலையும் உண்டாகும் என்ற நல்ல செய்தியை அறிந்து புரிந்து தெளிந்தால் உயர்நிலை பெறும் வாய்ப்பை பெறும் சூழலை உண்டாகும் என்ற விவரம் கூறிய இந்த செய்தியை இத்துடன் முடிவடைகிறது.

திருச்சிற்றம்பலம்

32. சீவாத்மாவும் பரமாத்மாவும்

உலகம் என்பது ஐம்பெரும் பூத அமைப்பு கொண்டதாக இருக்க வேண்டும். அப்படி இல்லை என்றால் அதற்கு உலகம் என்று கூறமாட்டார்கள். உலகம் பஞ்ச பூதங்கள் அமைந்து இயங்கினால் தான் உயிர்கள் தோன்றும். அதில் மானிட உயிர் வெளிப்படுவது உயர்ந்த நிலையில் இருந்து தோன்றுவதாக சித்தர்பெருமக்கள் தெரிவிக்கிறார்கள்.

உயிர்கள் தோன்றக்காரணமாயிருப்பது அண்டப் பகுதியாகும். அந்த அண்ட பகுதியிலிருந்து நாதம் வெளிப்படும். நாதத்திலிருந்து விந்து வெளிப்படும். இறையருள் கருணையால் அகாரம் என்ற அண்டநிலை உருவாகும். அதிலிருந்து உகாரமென்ற அண்டம் வெளிப்படும். அதன் பின் ஓங்காரம் என்ற அண்டப் பகுதி வெளிப்படும். அண்டத்தில் பிண்டம் உண்டாகும். அதுவே ஆதி அந்தமாய் நிற்கும். அதிலிருந்து கோசமும் பீசமும் தோன்றும். மாஎன்ற ஊமையின் உதவியால் நாதவிந்துவால் ஆண், பெண் ஆக இரண்டு வெளியாக அதிலிருந்து சீவாத்மா தோன்றும் என்று கூறப்படும் சித்தர் பாடல் காண்க.

காப்பான அண்டமதில் நாதவிந்து
கருணைதர அகாரமுடன் உகாரந்தாண்ட
வாப்பான ஓங்காரம் அண்டமப்பா
வளர்ந்துதடா அண்டமப்பா
ஆப்பான அண்ட பிண்ட மாதியந்தம்
அன்பான கோசமுடன் பீசமாச்சு
மாப்பான நாதவிந்தா லாண்பெண ரெண்டும்
மகத்தான சீவாத்மா உதித்தவாரே - 2

தன்வந்திரி மூப்பு சுருக்கம் — 48

மேலும் விந்துவும் நாதமும் நுட்பமான மேலைநிலையிடத்தில் உண்டு அதனை தன்னறிவினால் நாதமென்ற பொருளுடன் விந்து சேர்த்து, குருவின் அருளால் மனிதவடிவம் (தேகத்துடன்) பிறப்பான். அதன் மறையகம் எப்படி என்று கூறமுடியும். அந்த மனிததேகத்தில் பஞ்ச

Koviloor Digital Library

பூத நிலையில் அக்கினியும் வாயுவுங் கூடியதால் சீவாத்மாவும் — பரமாத்மாவாய் கலந்து உறுதியுடன் ஆதாரமாக நிற்கும். இக்கருத்தை வலியுறுத்தும் பாடல் காண்க.

தானென்ற சூட்சமடா விந்து நாதம்
　தனையறிந்து நாதமுடன் விந்து சேர்த்து
கோனென்ற குருவருளால் அங்குறித்து
　கொண்டெழுந்த மடபதியை என்ன சொல்வேன்
ஊனென்ற மடதிக்கு உறுதியான
　உண்மையுள்ள அக்கினியும் வாயுவுங் கூடி
தேனென்ற சீவாத்மா பரமாத்மாவாய்ச்
　சென்றிருந்து ஆதாரமானார் பாரே - 33
　　அகத்தியர் சௌமிய சாகரம் — 1200.

மேலும் அகத்தியர் அந்தரங்க தீட்சையில் சீவாத்மாவும் பரமாத்மாவும் பரம் என்ற இடத்தில் ஆதாரமானது. அதுவே ஆதாரம் ஆறாதாரமாய் நின்றது. அவ்வாறு பூதம் ஐந்தில் அக்கினி என்ற பூதம் சீவாத்மாகவும் எங்கு நிறைந்து நின்ற வாயு என்ற பூதம் பராமாத்வாய் இணைந்து சரீரத்தில் கலந்து பிரமாக நின்று திருவிளையாடல் புரியும். இதுவேபெரும் கண் கண்ட காட்சியாக தயவாய் நிற்கும் அதன் கரு பொருளாய் பார்க்கவும் என்றும் கூறும் பாடல் காண்க.

பாரப்பா ஆதாரம் ஆறாதாரம்
　பதிவான ஆதராம் பரத்துக் குள்ளே
நேரப்பா அக்கினிதான சீவாத்மாவாய்
　நிறைந்து நின்ற வாயுதான் பரமாத்மாவாய்
பேரப்பா பெருகி நின்ற சடத்துக்குள்ளே
　பிர்மாக நின்று திரு விளையாட்டாடி
காரப்பா ஆகாயம் சாட்சியாக
　கருணையுடன் நின்றதடா கருவாய் பாரே - 21
　　அகத்தியர் அந்தரங்க தீட்சை — 400

கடைப்பிள்ளை ஞான கக்சிசம் 80இல் கிரகங்களில் சூரியன் ஆத்மாவாகும். சந்திரன் தேகம் என்றும் கூறுகிறார். அந்த மாயை நீக்க ஒளியுள்ள கோளானை சூரியனை நம்ப வேண்டும். சூரியனை நம்புவதால் எல்லா வினைகளும் ஒழியும். உடல் பொன்போன்ற தாமரை மலர் வண்ணமாகும். சூரிய சந்திரனை அறிந்து கலையானதை நானும் தவறாமல் உருவேற்றி அதன் கருணை பெற வேண்டும் என்பதை அறிக.

“ஆமப்பா சூரியனே ஆத்மாவாய்
　அழிகிரதோர் சந்திரனே மாயை மாயை
ஓமப்பா மாயை தனை நீக்கி மைந்தா
　ஒளிவான சூரியனை நம்பினாக்கால்
போமப்பா சகல வினை யொழிந்து நல்ல
　பொற் கமலம் போதவுமே தேகமாகும்
காமப் பால் கானற் பாலறிந்து மைந்த
　கலைதவறா துருவேறக் கருணையாமே - 46
　　கடைப்பிள்ளை ஞான கக்கிசம் — 80

சீவாத்மாவின் பரிமொழி பெயர்கள் மானிட பிறவிகள் அறிய வேண்டும். நமது சித்தர்கள் சீவாத்மாவை இடம் பொருள் ஏவல் என்ற கால வேறுபாட்டு சூழலில் பல்வேறு நிலையில் பெயரிட்டு அழைத்துள்ளார்கள். முதலில் திருமூலர் என்னவென்று கூறுகிறார் என்பதை அறியலாம்

1. அணு
2. அரிசி
3. அச்சு
4. அறிவு
5. நல்வித்து
6. அணுவன்
7. அந்தமில்லான்
8. அத்தன்
9. ஆவி
10. உயிர்
11. ஆன்
12. ஆருயிர்
13. ஆன்மா
14. ஆனை
15. ஆதன்
16. உயிர்ப்பு
17. ஊமன்
18. ஒளி
19. குருகு
20. குறி
21. கால்
22. சேதன்
23. சதசித்து
24. சீவன்

Koviloor Digital Library

25. தேசி
26. தான்
27. தன்னை
28. தீபம்
29. தொழும்பன்
30. நான்
31. நாம்
32. நாகம்
33. புருடன்
34. பிராணன்
35. படியுடை மன்னன்
36. பசு
37. புள்
38. பாகன்
39. பத்து
40. மடவன்னன்
41. மூலம்
42. மானன்
43. மீகாமன்
44. மைந்தன்
45. மைந்தன்
47. யகரம்
48. யான்
49. யோனி
50. புரவி
51. எட்டு இரண்டு
52. கரு

என்று திருமூலரும் தம் திருமந்திரத்தில் குறிப்பிடுகிறார். சில மேற்கோள் காண்க.

1. கைவிட்டு நாடிக் கருத் தொழிந் தச்சற — 195

2. கடந்தோர் ஆவி கழிவதன் முன்னே — 225

3. அத்திப் பழமும் அறைக் கீரை நல்வித்தும் — 204

4. துடுப்பிடு பானைக்கும் ஒன்றே அரிசி — 235

5. மற்றோர் அணுக்களை கொல்லாமை ஒண்மலர் — 239

6. சீவனும் அங்கே சிவனும் உறைவிடம் — 783

7. நற்றார் நடுக்கற்ற தீபமும் சித்தமும் — 2139

8. யகாரம் உயிரென்றாறறை யலுமாமே — 925

இன்னும் பற்பல சொற்களால் திருமூலர் திருமந்திரமான நூலில் ஓதுகிறார்.

ஆத்மாவின் வடிவும் அதன் அளவீடும்

சீவாத்மாவின் வடிவம் அளவிட்டு கூறமுடியாது. அதன் உண்மைநிலை ஒருவகையால் திருமூலர் கூறுவார். உடல் கலன் — உலகம் — ஊன் முதலியவற்றுடன் பொருந்திய சீவாத்மாவின் நிலை கூற வேண்டுமானால் பசுவினது மயிர் ஒன்றினை எடுத்து நூறு பங்கு செய்தல் வேண்டும். பின்பு அந்நூறினில் ஒன்றினை எடுத்து நூறு பங்கு செய்தல் வேண்டும. பின்பு அந்நூறினில் ஒன்றினை எடுத்து ஆயிரம் கூறு செய்தல் வேண்டும். அந்நிலையில் ஏற்படும் ஒரு கூறினை நூறாயிரம் கூறு செய்தால் எவ்வளவு ஏற்படுமோ அவ்வளவாகும். ஆருயிரின் வடிவமென்க.

எனவே சீவாத்மாவின் உண்மை நிலையை எழிலாக வகுத்து ஓதப்படுகிறது. இதனை திருமூலர்,

“மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிர மாயினால்
ஆவியின் கூறு நூறாயிரத் தொன்றாமே - 1974

சீவாத்மாவின் அணு உருமானது:

அணு உருமான சீவாத்மாவுக்கு பரமாத்மாவாய் விளங்குபவன் ஆதி என்ற அம்மை பெற்ற சிவபெருமான் ஆவார். அப்பொருளை திருவருளுணர்வால் அளவின்றி நுணகி நுணுக்கமாக திறனாய்வு செய்தவருக்கு அணுவுக்கு அணுவாய்த் திகழும் சிவபெருமான் அணுகுவது கைக்கூடும். இதனை திருமூலர்,

“அணுவில் அணுவினை ஆதிபிரான்
அணுவில் அணுவினை ஆயிரங் கூறிட
டணுவில் அணுவை அணுகவல் லார்கட்
கணுவில் அணுவை அணுகலுமாமே - 1971

Koviloor Digital Library

சீவாத்மாவும் பரமாத்மாவும் அணுயளவில் கலந்திருப்பதை உணர்த்துவதை அறிக.

''அணுவுள் அவனும் அவனுள் அணுவும்'' - 1973

திருமந்திரத்தால் அறியலாம்.

ஆத்மாவுக்கு தாங்குமிடம் (அ) ஆதாரம்:

செடத்தில் ஆத்மாவுக்கு ஆதாரமான கருவிகள் எவையெனில் வலது சரம் — இடது சரம் நாபி — கண் — மூக்கு — செவி — உச்சி இந்த ஏழு இடங்களிலும் ஆத்மாவானது ஒன்றைவிட்டு ஒன்றில் மாறி மாறி பரவியிருப்பதற்கு தூல உடலின் வழியாகக் கொண்டு சஞ் சரிக்கின்றது என்று அருட்சோதி வடிவம் பெற்ற பெருமகனார் உபதேச பகுதியில் அருள்கிறார்.

ஆத்மா செல்லும் துரித கதி:

பகைவரை கூட்டத்தில் நுழைந்து பாய்ந்து சென்று வெல்லும் தன்மையுள்ள குதிரை அண்மை இடத்தில் மட்டுமில்லாமல் மிகவும் தொலைவான இடத்துக்கும் மிகுந்த விரைவில் செல்லவும் வன்மையுடையதாகும். அதுபோல் ஆத்மாவும் தன்னை மூடியிருக்கும் துகிலால் ஆகிய போர்வை போன்றுள்ள சரீரத்தை வினைக்கீடாக ஒன்றை விட்டு ஒன்று பற்றிப் பிறக்கும் துணி போன்ற போர்வை கெடுமானால் அதனை நீக்கி விட்டு மற்றொரு போர்வினை எடுத்துக் கொள்ளும் என்பதை திருமூலர்,

''காயும் கடும் பரிகால் வைத்து வாங்கல்போற்
சேய விடமண்மை செல்லவும் வல்லது
காய துகிற் போர்வை யொன்றுவிட் டாங்கிகொன்றிட
டேயு மவரென்ன ஏய்ந்திடுங் காயமே'' - 2049

திருமூலர் திருமந்திரம் — *3000*

ஆத்மாவின் அடையாளம் 'ய' கரம்:

எட்டு இரண்டு பத்து என்பர். இதன் அடையாளம் 'ய'கரம் என்பார். ஆத்மாவின் அடையாள குறியீடு யாரும் அறிந்திலர். எட்டு இரண்டு என்பது அகரம் — உகரம் என்பர். இவை இரண்டும் உயிரும் இறையும் என்று கூறப்படும். அகரம் எட்டு என்பர். உகரம் இரண்டும் என்பர். இவைகள் இணைந்து நின்றாள் பத்தாகும். பத்து தமிழியில் 'ய' கரம் என்பர். அதுவே யகரமாகும்.

''அந்தமில் லாணுக் ககலிடத் தானில்லை
அந்தமில் லாணை அளப்பவர் தாமில்லை
அந்த மில்லானுக் கடுத்த சொற்றானில்லை
அந்த மில்லானை அறிந்து கொள் பத்தே - 1007

"யகாரம் உயிரென் றறையலு மாமே
— *952*

பஞ்ச பூதத்தாலானது ஆத்மா:

வெளி என்னும் வான் — வளி என்னும் வாயுவு — தீ என்னும் நெருப்பு — நீர் என்னும் தண்ணீர் — நிலம் என்னும் மண்ணும் இவைகள் ஒன்றாக கூடியதே ஆத்மாவாகும். அதனால் நிலையை புரிந்துக் கொண்டு காயத்தை சித்தி செய்ய வேண்டும் என்று அகத்தியர் ஓதுகிறார்.

வெளியோடே வெளிசேரும் ஈறும் தண்ணீர்
விதமாக அப்புடனே சேர்ந்து போகும்
ஒளியோடே தேய்வதில் சேர்ந்து போகும்.
உத்தமனே மண்ணுடனே மண்ணும் சேரும்
அழியாத வாயுவிலே வாயு சேரும்
மஞ்ச மொன்றாய்க் கூடினால் ஆத்மாவாகும்
வழியோடே இவ்வண்ணம றிந்து கொண்டு
மானிடரே காயசித்தி ஞான முத்தே - 100

அகத்தியர் ஞானம் — *100*

தேகம் அழியாமல் இருக்க ஆத்மாவின் நிலைப்பாடு

ஆத்மா அண்டத்தில் நுழைவு ஆனால் தேகம் அழிவதில்லை. பிண்டம் என்னும் செடத்தில் உறுதி பெறும் மூலத்தில் ஆன்மா அண்ட போல் அறுகோணத்தில் நிற்கும். முக்கோணம் என்னும் இடத்தில் குண்டலி என்னும் அம்மையாக விளங்கும். இவைகள் புருவத்தின் மேல்நிலை நிகழ்வுகளாகும்.

''அணடத்தைப் பார்த்தா லழியாதுன் தேகம்
பிண்டத்தி லான்மா பிலத்திடுமூ லத்தில்
அண்டம் போலாகும் அறுகோணத்துள்ளே
குண்டலி யாகுமுக் கோணத்தி லுள்ளே - 1

Koviloor Digital Library

உரோம மாமுனிசித்தர் பூசை முறை நுட்பம் — 14

தேகம் நிலையற்றது ஆத்மா நிலையானது:

சரீரம் என்னும் சடம் எடுக்காமல் மோட்சம் பெற வேண்டிய வழிமுறைகள் சொல்லுகிறேன். மீன்போன்ற விழியுடை உமை என்னும் என் தாயானவர் வேல் பிடித்த வேலன் என்று பெயரிட்டான். வேல் நின்றால் மேல் முக்கோணமாக விளங்கும். அவ்வித முக்கோணத்து பிறந்த சரீரத்துடன் சென்று மறுபிறப்பு உண்டாகும். மாயாதேகம் நிலையற்றது. சீவாத்மா நிலையுள்ளது என்று அறிக.

“தானப்பா சரீர மினி யெடாமல் மோட்ச
சாதனையை அடைகின்ற வழியைச் சொல்ல
மீனப்பா போன்ற விழியுமை யென்னாத்தாள்
வேல் பிடித்த வேலனெனப் பெயருமிட்டாள்
தேனப்பா தேகதிதி அநித்தியமென்று
சீவான்மா நித்தியமென்ற யறிந்து கொள்ளே - 4

சுந்தரானந்தர் சிவயோகஞானம் — 40

சீவாத்மாவின் களங்கங்கள் (கசடுகள்) நீக்கல்:

ஆத்மாவின் கசடு என்று கூறப்படும் அழுக்குகள் நீங்க ஒரு சற்குருவை தேடி சரணடைதல் வேண்டும். அகர உகர பாதங்கள் காட்டும் அனேகர் இருக்கிறார்கள். அவர்களை தேடி கண்டு ஆராய்க.

“சரியாக ஆத்துமத்தின் கசட்டை தீர்க்கும்
சற்குருவைத் தேடி போய்ச் சரண் செய்தால்
அரிபாதங் காண்பிப் பாரனேகருண்டு
அப்புவியில் அவர்களை நீ தேடுவயே - 26

மேலும் ஆத்மாவை சுத்தம் செய்ய வேண்டுமென்றால் தொண்ணுத்தாறு தத்துவங்கள் ஒழிய வேண்டும். அப்பொழுது ஆன்மா சுத்தியாகும். அப்படி செய்யாத ஆத்மாக்கள் ஊதாரி தனத்தால் உம்மோடு சிவன் ஒட்ட மாட்டான் என்று கூறும் பாடல் காண்க.

“ஆத்து மத்தை தான் பிடித்து அன்பு கொண்டு
ஆத்துமத்தைக் கூடியடையாம - லாத்துமத்தை
ஓடவிட்டுப் பார்த்திருக்க முதாரிகாளும்மைத்
தேட வொட்டு வானே சிவன்

ஆத்மா முத்தியும் சித்தியும் பெற வேண்டிய வழிகள் :

புருவ பூட்டைத் திறந்து சிறுவாசலக்குள் சென்றடைந்த சிவாத்மாவும் பரமாத்துவாவும் இரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்து நந்தி குருவை உறுதியாகப் படித்து மேல் மூலமான முக்கோணத்தில் ஏறி நின்றுப் பார்த்தால் நெற்றி நடுவின் குண்டலி தாயான கேசரியின் நடனம் கண்டு களிக்கலாம்.

“செந்தியே சிறுவாசற் குள்ளே நின்று
சீவாத்மா பரமாத்மா யிரண்டு மொன்றாய்
நந்தியினாற் பத்தியே முக்கோணமேறில்
நடுவிருக்குங் குண்டலியின் நடனம் பெற்று - 7

சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் — 16

ஆத்மாவும் பரமாத்மாவும் சேர்ந்தால் அதுவே முத்தியாகும்.

“மூச்சப்பா நிலையான சீவாத்மாவும்
மூர்த்தி பரமாத்மாவில் முத்தியாச்சு - 25

பட்டினத்தார் பாடல்கள்.

மேலும் மனம் என்ற உயிரான ஆத்மா அண்டவெளியில் சேர்ந்தால் அதுவே முத்தி என்பர் என்பதை

“அறியலாம் மனந்தானே உயிர்தானாகும்
அண்டத்திற் சேர்த்திடவே யாரும் முத்தி - 26

காகபுசண்டர் மெய்ஞ்ஞான விளக்கம் — 80

பிராணம் என்ற ஆத்மா புருவ மத்தி நிலைக்கொள்ள வேண்டும். மூச்சாக விளங்கும் சுழினை முனையே தீபமாகும். அந்த தீபத்தில் விளங்கும் ஆன்மாவே முத்தி பெற்ற இடமே சித்தி பெறும்.

“ஆச்சப்பா பிராண நிலை புருவ மத்தி
அப்பனே திசையதுவே யாகுமாகும்
மூச்சப்பா நின்றிலங்கும் முனையாந் தீபம்
கடைப்பிள்ளை ஞானத்தின் சித்தியாகும் - 27

கடைப்பிள்ளை ஞானத்தாண்டகம் — 51

Koviloor Digital Library

அருள் ஒளியான ஞானத்தின் கண் உறுதியாகும் வெளியாக நின்றயிடம் அண்ட உச்சியாகும். அவ்வண்ட உச்சியின் மேலுள்ள ஞான மதில் உட்சென்றால் அங்குள்ள சீவாத்மாவும் மவுனமென்ற பரமாத்துமாவும் இவை இரண்டும் ஒன்றாய் சேர்ந்து முத்தி சித்தி பெறும்.

“பாரப்பா ஒளியான அறிவின் கண்ணும்
பதிவான வெளியது தான் அண்டத்ததுச்சி
நேரப்பா அண்ட மென்ற உச்சி மீதில்
நிசமான அறிவின் கண் மேலே பாய்ந்தால்
பேரப்பா பெற்றதொரு சீவாத்மாவும்
பேசாத மவுன மென்ற பரமாத்மாவும்
சேரப்பா ஒன்றி ரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்தால்
சிவசிவ வெளியொளியாயச் சேரு பாரே - 7

உரோம மாமுனி சித்தர் பிர்மஞானம் — 18

ஆத்மா நின்ற இடத்தின் பலன்கள்;

ஆவி நின்ற ஆத்மா புருவ மீது அடங்கினால் மறுபிறவி உண்டாகும். ஆவியென்ற பிராணன் முக்கோணத்தில் அடங்கினால் மறுபிறவி இல்லை. ஆவி என்ற உயிர் மூலத்துள்ளே அடங்கினால் வெளியொளியாய் அமர்ந்து நிற்கும். ஆவி என்ற பிராணன் அறுகோணத்தில் அடங்கினால் வெளியோடு வெளியாய் போகும் என்பதை,



“ஆவியென்ற பிராணனது புருவ மீது
அடங்கினால் மறுபிறவி யுண்டாம்பாரு
ஆவியென்ற பிராணனது முக்கோணத்தில்
அடங்கினால் மறு பிறவியில்லை லில்லை
ஆவியென்ற பிராணனது மூலத்துள்ளே
அடங்கினால் வெளி வொளியா மர்ந்து நிற்க
ஆவி யென்ற பிராணது அறு கோணத்தில்
அடங்கினால் வெளியோடு வெளியோய்போம் - 10

காலாங்கி நாதர் உபதேச ஞானம் — 35

அண்டப் பகுதியில் நுட்பமான இடத்தின் கண் பரமாத்மா நாதாந்த பீடத்தில் வீற்றிருந்த அருள் நின்றான். பரமாத்மாவின் நுட்பமான சிறுயொளியான ஆத்மா தான் வெளிப்பட்டு, அந்த ஆன்மாக்களுக்கு பஞ்ச பூத துணையின் உதவியால் தேகம் பெற்று உலகில் பிறக்கிறான். அப்படி பிறந்த மனிதன் நற்காரியங்கள் செய்து முத்தி பெற வேண்டும் மாறுபட்ட செயலில் இறங்கினால் பாவங்கள் பெருகி அதனால் பிறவி தோறும் பாவங்கள் கூடிவரும்

பாவங்கள் குறைக்க அடுத்த உயிர்கள் தன்னுயிர் போல் கருத வேண்டும். எல்லா உயிர்களுள் இறையருள் கலந்திருப்பதை உணர வேண்டும். சைவநெறி கடைபிடிக்க வேண்டும். புலால் உண்பது தவிர்க்க வேண்டும். பசி பிணிக்கு உதவிகள் மூலம் உணவிட வேண்டும். அதன் பின் கல்வி பசி போக்க வேண்டும். எந்த நேரமும் இறை சிந்தனை இருக்க வேண்டும். எளிமையான தோற்றத்துடன் பழுதில்லா வாழ்க்கை வாழ வேண்டும். பிறர் மனம் புண்படும் படி பேசக் கூடாது. எல்லோரும் இறைவனின் மக்கள் என்று கருத வேண்டும். சாதிகளில் கவனம் செலுத்தக் கூடாது. மதங்களில் மனம் ஈடுபடுத்தக் கூடாது. சமயங்களில் சார்ந்து கலக்கம் அடையக் கூடாது.

சித்தர்களின் நெறியான சன்மார்க்க நெறிகள் கடைபிடித்தால் சாகாமல் இருக்கும் கல்வி கற்கும் உயர்நிலை அறிய வேண்டும். சித்தர்களின் மறைகள் நாளும் ஓத வேண்டும். சித்தர்களின் ஆகமங்கள் கற்க வேண்டும். அவர்களின் வழியைப் பின்பற்றினால் சீவாத்மா என்கிற உயிரின் மாசு நீக்கி, பரமாத்மாவான இறையருளில் இணைந்து முத்தியும் சித்தியும் நாம் பெற்று மரணமில்லா பெருவாழ்வு உலகில் என்றும் உயர்நிலை பெற்று திகழலாம் என்ற நல்ல செய்தி இத்துடன் நிறைவடைகிறது.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

33. சாகாக்கால் வேகாத் தலை போகாப் புனல்

உயர்ந்த மிகச் சிறந்த வேதாகம உயர்ஞான இரகசியங்கள் உள்ளடங்கிய மாபெரும் அருமைமிக்க அற்புதச் சொற்றொடராகும். மூன்று சொற்களும் வடநூலார் மகா வாக்கியம் என்பர். இதை தமிழில் பேருரை பெருஞ் சொற்றொடர்" என்பர். ஆனால் மகா வாக்கியத்திற்கும், பேருரை பெரும் சொற்றொடர் என்று கூறும் சொற்களுக்கு பொருளுரைக் கண்டு அறிந்து தெரிந்து உணரலாம். ஆனால் மேல் கூறப்பட்டுள்ள தெய்வீகச் சொற்களுக்கு குருமூலமாகத் தான் அறியவேண்டும். இறையருள் முழுதும் பெற்றவர்களால் தான் மேற்கண்ட தெய்வநலம் கொண்ட சொற்களுக்கு பொருள் அறிய முடியும். இறையருளால் இச்சொற்களும் தேவபீட இரகசிய அறையில் பூட்டி அதன் திறவுக்கோல் இறையருளிடமும் தக்க வைக்கப்பட்டுள்ளது.

எனவே சித்தர்களில் ஒருவரான கயிலாய சட்டை முனிசித்தர் இந்த மூன்று சொற்களுக்கு "ஆகாச தேரணி" என்று சிறப்பித்து கூறுகிறார். அப்பெருஞ்சித்தரின் அற்புதப் பாடலைக் கண்டு இன்புறுங்கள்.

''ஆகாசத் தேரணி'' லாறு மறிந்திலர்
சாகாத பூரணந் தனை யறி மந்திரம்
வேகாத சென்னி வேத நிராமயம்
போகாத புனல் நிலைப் புகல்வ மரிதே - 37

சட்டைமுனியார் தண்டகம் — *50*

பூரணம் என்றால் பேரண்டம். இதனை ஆதி மகா மூல மந்திரத்தால் அறிக. வேகாத சென்னி என்பது சுத்த ஞான வேத பொருளான சிவமயமாகும். போகாத புனல் என்று கூறப்படும் நிலைத் தன்மை செப்புதல் அரிதாகுமாம் என்று கூறுகிறார்.

சாகாக்கால் — வேகாத் தலை — போகாப் புனல் இவை மூன்று சித்தர்கள் மருத்துவம் — யோகம் — ஞானம் — மந்திரம் போன்றவைகளில் சித்தர்கள் பயன்படுத்தியுள்ளனர். இனி அவைகளைப் பற்றி நாம் அறிவது சிறந்தமுறையாகும்.

மருத்துவத்தில் மச்சமுனி சித்தர் மூன்று சொற்றொடருக்கு என்ன கூறியுள்ளார் என்பதை கவனிக்கவும்.

''நவலுவேன் ''சாகாக்கால்'' பூதமென்பார்''
நானிலத்தில் ''ரசஞ்சேர்ந்தால் கெவனம் பாயும்
கவலுவேன் நான் ''போகாப் புனலைக் கேளு
அவலுவேன் ''மிதந்து தென்றால்'' வாய்ப்பாசப்பா
அக்கினி புகையாத கெந்தி வாய்த்தால்
நவலுவாய் நீ வேகாத் தலை யென்றப்பா
நெஞ்சிலே யடக்கி வைப்பாய் பின் பேசாதே - 159

மச்சமுனி சித்தர்பெருநூல் — *800*

சித்தர் நெறிமுறைப்படி இரசம் கட்டினால் கெவனம் பாயும். கந்தகம் நெருப்புக்கு புகையாமல் கட்டுதல் காந்தம் நீரில் முழுகாமல் இருப்பது. இது சொல்லி முறையில இந்த மூன்று பொருட்கள் செய்யும் திரமுடையவர்களே முத்தொடர் சொல்லின் பொருள் உணரக்கூடும். இந்த இரகசியத்தை நெஞ்சில் நிறுத்தி வெளியிடாமல் இருப்பாயாக என்று கூறுகிறார்

வேகாத் தலை என்பது கந்தகம் நஞ்சுப் பொருட்களில் ஒன்று. சாகாக்கால் என்பது சூதமான பாதரசம். இது பஞ்ச சூதத்தில் ஒன்று. போகாப் புனல் என்பது காந்தமாகும். இது உலோகங்களில் ஒன்று.

சித்தர்கள் மூப்புப் பற்றி அவர்கள் எழுதியுள்ள நூல்களில் கூறப்படுகிறது. இந்த மூப்பு பகுதியில் சிவமூப்பு சக்தி மூப்பு — மருத்துவ மூப்பு — வாத மூப்பு என்று பல்வேறு இடங்களில் பாடலில் இடம் பெற்றுள்ளது. அதில் அகத்தியர் என்ன கூறுகிறார் என்பதைப் பார்ப்போம். அவசியம் அறிவது நலம் தரும்.

Koviloor Digital Library

"ஆகாது தேய் பிறையிற் பிரதமை தொட்டு
அமாவாசை பதினைந்துக் கடுத்த நாளில்
"சாகாத காலுக்கு பிரம கற்பம்"
தாண்டி னாற் சிவம்நீங்கிற் றவறுண்டேபோம்
போகாத புனலன்றோ சுத்த கங்கை
பூரணமும் காரணமும் போதிப்பேன்
வேகாத தலை யன்றோ உப்பு உப்பு
மேலாக வளர் கலையே அப்பு அப்பு - 79

அகத்தியர் பரிபாசை உதிரட்டு — 500

பிரம கற்பம் என்னும் அண்டக்கல் பூமியின் அடியில் கிடைப்பதால் இதற்கு சாகாத கால் என்றுகூறுகிறார். இந்த அண்டக் கல்லுக்கு அகத்தியா சிவம் என்று தெரிவிக்கிறார். இந்த சிவம் என்னும் அண்டகல்லில் உள்ள சத்துப்பொருளே பூமியின் வெப்பத்தாலும், நிலவின் குளிர்ச்சியாலும் அண்டக்கல்லிலுள்ள சத்துப்பொருள் பூமிக்கு மேல்வந்து. நீராக நிற்கும். இந்த நீரே பூநீர் என்பர். இந்த பூநீர் பாதி இரவில் மண்ணுடன் கலந்த சிவனும் சக்தியும் உண்டும். அண்டக்கல்லின் சத்து முழுமையாக நமக்கு கிடைக்க வேண்டுமென்றால் கார்த்திகை, தை மாதங்களில் மண்ணை தோண்டி எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அதிலுள்ள சிவம் என்னும் பொருள் முழுமையாக இருக்கும். வேறு மாதங்களில் எடுப்பது சிவம் நீங்கி நிற்கும். பயன்படாது. இதுவே தலைகிழாகி அடியில் நிற்பதால் சிவத்தைச் சாகாத கால் என்று சித்தர் பெருமான் கூறுகிறார்.



போகாத புனல் என்பது சுத்த கங்கையாகும். புனல் என்பது காரம் மிகுந்து கைக்கால் பட்டால் சுடும் தன்மையுள்ளது. மேகங்கள் கடல் நீர் உண்டு கற்பமுற்று வேதியல் மாற்றத்தால் இடி மின்னல் காற்று கலந்து மழையாக வரும்போது கடலில் விழுந்தால் கடல்நீர் சுழன்று அதிலுள்ள கைப்பு கசிவு சுவையற்ற கல்லுப்பாக மாறும். இதுவே சுத்த கங்கை என்றும் கூறுவர் பூரணம் என்பது அண்டவெளி காரணம் என்பது பூமியில் தேங்கியுள்ள கடல்நீர். அதற்கு பிண்டம் என்பர். இதற்கு சுத்த கங்கை என்றும் கூறுவர் பூரண் என்பது அண்டவெளி காரணம் என்பது பூமியில் தேங்கியுள்ள கடல்நீர். அதற்கு பிண்டம் என்பர். இதற்கு சுத்த கங்கை என்பர். இதில் கிடைக்கும் கல்லுப்பு கைப்பு கசிவு நீங்கி சுவையற்ற சுத்த வெள்யைாக கிடைப்பதே சுத்த கங்கை என்பர்.

வேகாதத் தலை என்பது சக்தியாகிய பூ நீராகும். இந்த பூநீர் பூமியின் மண் மேலே நிற்பதால் தலை என்று சித்தர் பெருமான் ஓதுகிறார். சக்தி அடியே மேல்வந்து நிற்பதால் தலை என்று கூறுகிறார். மேற்கண்ட மூன்று பொருட்கள் கிடைத்து முறைப்படி சுத்தம் செய்து சுத்தம் செய்த பொருட்கள் சித்தர்கள் கூறியப்படி கணக்குடன் இணைத்து உருவாக்குவதே மூப்பு என்பார்.

சாகாத கால் சிவம் பூமியின் மண்ணின் கீழ் புதைந்து அடியில் தங்கியதால் அதற்கு கால் என்று உணர்த்துகிறார். போகாத புனல் சிவசக்தி இணைவினால் உண்டாகும் சுத்த கங்கையாகும். இப்பொருள் கடலில் கைப்பு கசிவு நீங்கி சுவையற்று சுத்த வெளியாக கிடைக்கும் கல்லே கல்லுப்பு என்பர். இது இடி — மின்னல் — காற்று இவைகளினால் கடையப்படுவதால் அமுதம் போன்ற சுத்த கங்கையில் கடினத்தன்மையுள் கல்லுப் போன்ற சுத்த கங்கையில் கடினத்தன்மையுடன் கல்லுப்பே சுத்த

Koviloor Digital Library

கங்கை என்று ஓதப்படுகிறது.

வேகாத்தலை — காவான சக்தி மழையுடன் இடி மின்னல் காற்று இவற்றுடன் நிலத்தில் பாய்ந்தால் மண் வெந்து காரம்மேறி நிற்கும். இந்த மண்கையில் பட்டால் புண் உண்டாகும். எனவே மண் மேலே சக்தியான பூநீர் இருப்பதால் தலை என்று ஓதப்படுகிறது.

மேற்கண்ட செய்தியை அகத்தியர் மூப்பு கன்னம் 16 மேற்கண்ட கருத்தை வலியுறுத்துவதை கீழ்வரும் பாடலில் நன்றாக ஊன்றி படித்து அறிந்து தெளிந்து புரிந்து அதன் பொருளைக் கண்டு பார்க்க விளங்கும்.

"சாகாத காலதுவே" யறுகோணந்தான்
தனி "வேகாத்தலை" யதுவே மூலமாகும
"போகாத புனலதுவே" பரவெளி தானப்பா
போக் கோடே யிது "மூன்றும்" புதுமை மெத்த
போகாத பிரம கற்பங் கல்லுச் சுன்னம்
புலனுடைய கூறல்லாலெவருமில்லை
வேகாமல் வெந்து நின்ற "சவுக்காரந்தான்"
விளங்கியதோர் "மாவாகும்" வியந்துபாரே - 5
அகத்தியர் மூப்பு சுன்னம் — 16

வேகாத தலை என்பது மூலமாகும். சிவம் என்பர். சாகாத கால் என்பது அறுகோணமாய் நிற்கும் சத்தியாம். போகாத புனல் என்பது பரவெளி என்பதாம். இந்த மூன்று பொருளும் நவீனமாது. பிரம கற்பம் என்பது மண் சவுக்காரமாகும். இதற்கு மாவு என்ற துகளாகும் மாவு என்றால் நேர்த்தியான் பொடி என்பர். இந்த இரு அங்குள்ள சுத்த கங்கையே போகாத புனலாக நிற்கும் என்பதாம்.

அகத்தியர் பரிபூரணம் 1200இல் சாகாத கால் வேகாத தலை — போகாத புனல் பற்றி பேசப்படுகிறது. அதனை அவருடைய பாடல் மூலம் உணரலாம்.

"நித்தமுமே சுத்தமதாய்க் கண்ட காட்சி
நிசமாகப் பார்க்கையிலே சுத்தப் பாழாம்
சுத்தமுடன் முப்பாழாய் முடிந்துதய்யா
சொல்லிறந்த முப்பாழை யென்ன சொல்வேன்
சுத்தமுள்ள ஆகாச வெளி தானாச்சு
"சாகாத காலதுவும் வெளிதானாச்சு"
வெத்தியுடன் "வேகாத தலையு மாச்சு"
வேகமுடன் போகாத புனல் தான் பாரே - 643

பாரப்பா "சாகாத கால்" தான் மைந்தா
பதிவான "வாசியடா வாயுவாச்சி"
நேரப்பா வேகாத தலையே தென்றால்
நிசமான ஆகாச வெளிதான் பாரு
காரப்பா போகாத புனல் தானப்பா
கனிவான ஆவியடா வன்னி வன்னி
ஆரப்பா அறிவார்கள் மூன்றின் ளேர்மை
அரிதரிது காணவென்றால் ரெண்டே கேள் - 644

என்பதை அகத்தியர் சுருக்கமாக ஓதுகிறார்.

சுத்த பாழ் என்னும் இடத்தை நித்தமும் தூய்மையுடன் கண்ட காட்சியானது முப்பாழ் என்பதாகும். இந்த முப்பாழ் வெளிப்பாழ், ஒளிப்பாழ், வெளிஒளிப்பாழ் என்பதாம். இந்த முப்பாழ் சொல்லிறந்த இடமாகும். ஒன்று சுத்தமான ஆகாச வெளியாகும். அதற்கு சாகாத கால் என்பர். அதுவே வேகாத தலையுமாச்சி. அதுவே போகாத புனல் தானாகும்.

சாகாத கால் என்பது வாசியென்னும் வாயுவாச்சி. வேகாத தலை என்பது ஆகாச வெளியாகும். போகாத புனல் என்பது ஆவி என்ற வன்னியாகும். இந்த மூன்றிலும் பெருமை பேச இயலாது. என்பதாம் என்று ஓதுகிறார்.

கடைப்பிள்ளை ஞானம் 120இல் மேற்கண்ட மூன்று செய்திகள் சற்று மாற்றி ஓதுகிறார் அதனை அறிக.

போகாத புனலது தான் மைந்தா மைந்தா
பூரணமாய் நின்றிலங்கும் வாசி வாசி
சாகாத காலதுதா னென்ன வென்றாற்
சதா போதமா தொரு நாதமாகும்
வேகாதத் தலையதுதான் விந்து விந்து
வேதாந்த மூலமடா ஆர்க்கும் தோணா
வாகாக யிது மூன்று தன்னுட் கண்டு
மகத்தான சிவயோகம் வளமை பாரே - 53
கடைப்பிள்ளை ஞானம் — 120

Koviloor Digital Library

பூரணமாக நின்று விளங்கும் வாசி தான் போகாத புனல் என்று கூறுவார்கள். எப்பொழுது சுத்த ஞானமாக இருக்கும் ஒலி வடிவமான நாதம் தான் சாகாத காலாகும். வேதாந்த மூலமாக விளங்கும் விந்து என்ற வரிவடிவம் தான் வேகாத்தலை என்பர். இந்த மூன்று செய்தியின் உண்மை நிலை அறிந்து தெரிந்து புரிந்து தெளிந்து அதனை தன் அகத்தினுட் கொண்டு பெருமை மிக்க சிவ சிவயோகம் வளமை அறிக.

புலிப்பாணி சித்தர் பூஜாவிதி — 50இல் முப்பொருளின் பயனை அனுபவித்து அதில் கூறப்படும் மேல்நிலை இடத்தில் அமைதியானேன் என்று கூறுவதை உணர்க.

"ஏறினேன் சதுரகிரி வட்டம் ஏறி
யேகாந்த வெளியொளியைப் பார்த்து மைந்தா
மீறினேன் அகார மதிற் செயல் தன்னாலே
மின்னொளியி னமுர்தரச பாணங் கொண்டு
தேறினேன் சாகாத கால்மேலே நின்று
தெளிந்து கொண்டு போகாத புனலைக் கண்டு
ஆறினேன் வேகாத தலையைக் கொண்டு
அடங்கினேனப் பொழுது அடங்கினேனே
புலிப்பாணி சித்தர் பூஜா விதி — 50

ஓங்கார கம்ப நுனியிலிருந்து அண்டமென்ற சுழினையிலே நின்று பார்த்தேன். சுழினையிலே இருந்து கம்பநுனியைப் பார்க்கும் போது கற்பூர தீபம் போல் நின்று நின்று சொல்லற்று சுகநிலையில் சோதியைக் கண்டேன் அந்த சோதி பிரணவவடிவமாய் பகவதித் தாய்த் திருவாசியிலே (ஆதிமகாமூலம்) சேவித்து கொண்டு மீண்டும் கம்பநுனியை பிடித்து மேலேறினேன். அப்படி ஏறிய போது சதுரகிரியிலே வட்டம் தோன்றி அதில் ஏறி ஏகாந்த வெளிவொளியில் பார்த்து நின்றேன்.

ஏகாந்த வெளியின் சுடரினைக் கடந்து அகர வடிவமாகி செயலியக்கம் பெற்றேன். அகர மின்னொளியின் கண் அமுதர்த ரச பானம் உட்கொண்டு மீண்டும் தேர்வு பெற்றேன்.

சாகாத காலாகிய வகரம் என்னும் தாயின் திருவடியைப் பற்றி தெளிந்த பின் போகாத புலனான ஆன்மா என்னும் வன்னி (ஆன்ம காட்சி) கண்டுக் கொண்டு மனமடங்கி வேகாத தலையாகிய சிகரம் என்னும் சிவத்தைப் பற்றிக் கொண்ட பின் யாம் அதில் தோய்ந்து உறைந்து நின்றோம் என்று சித்தர் பெருமான் கூறுகிறார்.

மேற்கண்ட கருத்தை அகத்தியர் பரிபூரணம் 1200இல் வரிகள் மாறாமல் 453ஆம் பாடலில் வலியுறுத்துகிறார்.

வடலூர் வள்ளல் இராமலிங்க அடிகளார் அருட்பாவில் கீழ்கண்டவாறு ஓதுகிறார்.

"சாகாத தலையிது வேகாத காலம்இது காண்
எனத் தயவு செய் துரையே
போகாத புனலையும் தெரிவித்து என் உள்ளத்தே
பொற்புற அமர்ந்த தோர் அற்புத சுடரே
சாகாத கல்வியிலே தலை காட்டி கொடுத்தீர்
தடையறியா கால் காட்டி தரம் பெறவும் அளித்தீர்
போகாத புனலாலே சுத்த வுடம் பினராம்
புண்ணியரும் நண்ணரிய பொது நிலையம்
தந்தீர் என்று கூறுகிறார்.

அடிகளால் இறையருளை நோக்கி தமக்கு சாகாத தலையிது என்றும் வேகாத கால் இதுவென்று எனக்கு தயவு செய்து அறிமுகம் செய்ய வேண்டும் துறையே என்று கேட்டுக் கொள்ளுகிறார். போகாத புனலையும் தெரிவித்து என் உள்ளத்தில் குடியமர்ந்த அற்புத சுடரே என்று வியக்ககிறார். சாகாத கல்வியிலே தலையைக் காட்டி அருளினீர். தடையில்லாமல் கால் காட்டியும் கொடுத்து அதன் உயர்வை பெறவும் செய்தீர். போகாத புனலால் எமக்கு சுத்த உடம்பு பெற வழி வகுத்த புண்ணியவானே நண்ணரிய பொது நிலையம் எமக்கு வழங்கி அருள் புரிந்தீர் என்று கூறுகிறார்.

அதே போல் உபதேச பகுதியில் இது இன்னது என்று விளக்க முற்பட்டு மீண்டும் இது இரகசியமானது என்று முடிக்கிறார். அதனை கீழ் கூறியவாறு அறிக.

சாகாக்கலை வேகாக்கால் போகாப்புனல் என்பவனவற்றிக்குப்

Koviloor Digital Library

பொருள் யாதெனில் அடியில் வருவேதே யாம். சாகாத்தலையென்பது உருத்திரபாகம், ருத்திர தத்துவம். வேகாக்காலென்பது மகேசுவர பாகம், மகேசுவர தத்துவம், போகாப் புனலென்பது சதாசிவ பாகம், சதா சிவ தத்துவம் "இவைமூன்றும் சாகாத கல்வியைத் தெரிவிக்கும்". ஆத்ம தத்துவதி சிவகரணம் 36, நிர்மல குரு துரியாதீதம் 7, ஆக நிலைகள் 43, இந்த 43 நிலைகளில் ஒவ்வொரு நிலைகளிலும் மேற் குறித்தவை உள. மேலும் இவை மூன்று பிண்டத்தில் நாலிடத்திலும் அண்டத்தில் நாலிடத்திலும் உள. அவைகள் பிண்டாண்ட ருத்திர சதாசிவ பேதம். சாகாக் கல்வியைக் குறித்த 43 நிலைகளில முதல் நிலை அனுபவத்தைப் பெற்றுக் கொண்டவன் பிரமன். அவனது காலம் ஒரு கல்பம். இப்படி 43 நிலைகளையுமே அனுபவத்தைப் பெற்றவன் காலங்கடந்த காலாதீதன்.

"மேற்குறித்த மூன்று பரமார்க்கமாகிய யோகக் காட்சியில் உண்டாகும் யோகானுபவங்களின் உண்மைப் பொருள்" அபர மார்க்கத்தில் சிலர் உப்பு வகைகளின் ஓஷதிபேதமென்றும் பூதபேதமென்றும் சொல்வது உபாய மார்க்கம். அக அனுபவனே உண்மை. உபாய வகையாகிய அபர மார்க்கம் தேக பூஷணாதிகாயிய சித்தியைத் தரும். உண்மை, நீக்கமற்ற சொரூப ஞானத்தைத் தருமென்றறிக. "மேல்படி உபாயங்களை ஒருவாறு தெரிவிப்பதும் சைவ சமயங்கள்தவிர வேறு எவ்வித சமயங்களிலுமில்லை" அப்படியிருப்பதாகச் சொல்லியிருப்பதும் ஏகதேச மென்றறியவும். மேற்படி வழங்குகின்றபடியால் ஒன்பது மாற்றுக்கு மேற்பட்ட கங்கரேக்கில் பஞ் சாக்ஷரத்தை அடைத்து விக்கிரத்தின் அடியில் வைக்கச மகத்துவங்கள் உண்டாகும். மேலும் மேற்படி உயர்வுடைய தங்கத்தில் விக்கிரகஞ் செய்து வைத்து ஓஷதியாதிலவனங்களை அதற்றுச் சேர்தது வைத்தால், விசேஷ சித்தி விளங்கும். இஃது திரிசியக் காட்சி, சுத்தசன்மார்க்கத்திற்கு உபாய வகைகளான அபர மார்க்கம் காட்சி கூடாது. பரமார்க்கமாகிய அக அனுபவமே உண்மை. மேற்படி மூன்றையும் இலக்ஷியமாகவே கொள்க. உபாய வகையான வாச்சிய திரிசியக் காட்சிகள் பரோபகாரம். ஆதலால் சாகாத் கலை வேகாக்கால் போகாப்புனல் லென்பவை இரண்டு புறத்தினுமுள.

உபாய வகையை நம்புதல் கூடாது. உண்மையை நம்புதல் வேண்டும். "இஃது இரகசியம்". உபதேசப்பகுதி — 43

சித்தர்கள் சாகாத் தலை — வேகாக்கால் — போகாப்புனல் என்று பல்வேறு நிலையுள்ள நிலைமைகள் குறிப்பிட்டுள்ளார்கள். இருந்தாலும் ஒன்று மட்டும் சரியாகக் கூறியுள்ளார்கள். "சூரியன் — சந்திரன் — சுடர்" இவைகளின் அக இணைவு தான் மேற்சொல்லிய பொருளாகும். இதற்கு "மும்மூலம்" என்பர். இந்த இணைப்பில் தான் மனிதனுக்கு "மறுபிறப்பு". இந்த தேகத்துடன் உண்டாகிறது. தன் தேகத்துடன் அந்த இடத்தில் "மறுபிறப்பு" ஏற்படுவதால் "செத்தவர் மீண்டார் என்று சித்தர்கள் கூறுகிறார்கள். இதனை சந்தித்தவர்கள் தான் முத்தியும் சித்தியம் பெற தகுதியானவர்கள்.

இந்த மறுபிறப்பு சாகாநிலை அடைவதோடு அந்த தேகம் சோதி வடிவமாகத் திகழும். அந்த வடிவமே மானிடம் பெற முயற்சி எடுத்தால் ஒவ்வொருவரும் எளிதாக மரணத்திலிருந்து மீண்டுவிடலாம். இந்த சாகாக்கல்வி நூல் படிக்கும் ஒவ்வொரு தனி மனிதன் சாகாமல் இருக்க வழி வகுக்கும் என்பதை அறிய வேண்டும்.

தனி ஒரு மனிதன் சாகாமல் இருக்க தன்னறிவு கொண்டு தன்னை உணர்ந்து அவன் சாகாமல் இருக்க முயற்சி எடுக்க இந்த செய்தி உங்களுக்கு ஊக்குவிக்கும் என்பது திண்ணம். மானிடன் ஆறறிவு படைத்ததால் பகுத்து பார்க்கும் அறிவின் துணை கொண்டு சாகாமல் இருக்கச் சிந்தனை கொண்டு உய்யவேண்டுமென்பதே இங்கு ஒவ்வொருவருக்கும் உணர்த்தப்படும் இந்த செய்தியை இனிதுடன நிறைவடைகிறது.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

34. சாகாக்கல்வி அருளிய சாதகம்

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்று ஔவைத் தாயார் கூறுவர். மானுடர் பிறவி என்பது மிகச் சிறந்த ஓர் உன்னதப் பிறவியாகும். அப்படிப்பட்ட இந்த பிறவியானது நாம் எடுத்தப் போது, அதே பிறவியிலே மரணமில்லா பெருவாழ்வுக்கான வழிமுறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு அடிப்படை காரணமாக உள்ள வழிகள் நாம் முதலில் அறிந்து அதன் வழியில் சென்று கடைப்பிடிக்க வேண்டும். ஓர் உயிர் மானுடப்பிறவிப் பெற்றால், அவன் தன் உயிர்போல் பிற உயிர்களின் மீது உயிரிரக்கம், சீவக்காருண்யக் கொள்கை, தயா உள்ளம் தராமல் நல்லதையேச் செய்து வந்தால் வரும் பிறவியின் பிறப்பு எண்ணிக்கைகளைக் குறைத்துக் கொள்ள முடியும். அப்படி இல்லாமல் எதிர்மாறாகவும், தாறுமாறாக நடந்தால் பிறவியின் தொகைகள் இருந்து நீண்டுக் கொண்டேபோகும். ஈனப்பிறவி ஏற்பட வாய்ப்புகள் மிகுந்து வரும். இதனால் நாம் பெண்களுக்கு பிரசவத்தின் மூலம் உடல் உயிர்துன்பம் தொல்லைகள் கடுமையாக கொடுக்க நேரிடுகிறது. அந்த துன்பத்தை அருள் உள்ளமும் உயிரிரக்கம் கொண்ட மானுடனின் கருணை உள்ளம் உடைய எந்த மானுடனும் ஏற்க மாட்டான்.

எனவே ஒரு மானிடன் பெற்ற இந்த மானுடப்பிறவி பயனாக்க விரும்பினால் அந்த மானிடன் "மேலைப் பொருள்" என்று கூறப்படும் இறையருள் வடிவம் அடைய முயற்சிக்க வேண்டும். இறையருள் வடிவம் அடையவேண்டுமென்றால் அந்த மானிடன் "சாகாக்கல்வி" அருளும் சாதக அமைப்பு கொண்டவனாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட சாதக அமைப்புகள் பல கோடியில் ஒருவனாக இருப்பார்கள் என்று சித்தர் பெருமக்கள் கருத்துக்கள் தெரிவிக்கிறார்கள். செயமாமுனிவர் என்னும் முனிவர் சித்த பெருமான் தாம் உரைத்த திருமந்திரம் 37இல் முதல்பாடலில்

"சேதியல்ல பல கோடிக் கொருவனுண்டு
 தெளிந்து மனம் விரியாமல் நிலைநிறுத்தி
போதியா திருந்து சுழிமுனையின் சூட்சம்
 பேரறிவாற் கண்டறிந்தாற் சித்தி தானே - 1

செயமுனிவர் திருமந்திரம் — *37*

செயமா முனிவர் என்னும் சித்தபெருமான் பல கோடி மக்களில் ஒருவன் தான். உண்டு என்றும் தெளிந்த மனமுடன் இருந்து, மனத்தை கட்டுப்படுத்தி ஓர் நிலையில் கொண்டு வந்து அறிவினை பயன்படுத்தி சுழிமுனையின் நுட்பம் பேரறிவால் கண்டுக் கொண்டால் சித்தி பெறும் வாய்ப்புகள் தான் உண்டு என்று கூறுகிறார். மேலும் தேரையர் என்னும் சித்தர் பெருமகனார் கடந்து சென்ற முன் மூன்று யுக முடிவில் சித்தர்களின் தொகையினை குறித்ததுடன் கலியுகத்தில் உருவாகும் சித்தர்களின் கணக்கு தொகையும் கீழ்வரும் பாடலில் குறித்துள்ளதை அறிந்தால் வியப்புண்டாகும். இதோ அந்தப் பாடலை படித்தறிக.

பாரப்பா கிரே தாயுகஞ் சித்தரப்பா
 பலமான பெருகினுட கணக்கை கேளு
நேரப்பா கோடியடா ரண்டு லட்சம்
 நிலையான திரேதாயுகம் லட்சம் கோடி
தூரப்பா துவாபரத்திற்க கோடி கேளு
 தூக்கா தைம்ப தென்ற ஆயிரந்தான்
காரப்பா கலியுகத்திற் கோடி கேளு
 கணக் கிருபத் தையா யிரந்தான் பாரே" - 70

தேரையர் சித்தர் பூஜாவிதி — *75*

கிரேதா யுகம் = இரண்டு லட்சம் கோடி
திரேதா யுகம் = ஒரு லட்சம் கோடி
துவா பர யுகம் = ஐம்பதாயிரங் கோடி
கலியுகம் = இருபத்தைந்தாயிரங் கோடி

இதற்குமுன் 14 யுகங்கள் உண்டு. அந்த யுகங்களின் சித்தர்களின் எண்ணிக்கையில் தொகையினை தெரிந்திலை. கடந்த 14 யுகங்ளின் செய்திகள் சித்தர் நூல்களில்

Koviloor Digital Library

அகப்படவில்லை. ஆனால் ஆதி அகத்தியமானவரும், முருகனின் முதல் மாணவருமானவர் பதினெட்டு யுகங்களின் தொகையுடன் சௌமிய சாகாரம் என்னும் நூலில் ஓர் குறிப்பு தந்துள்ளார் என்பது வியப்புக்குரிய செய்தியாகும்.

சாகாதக் கல்வி கற்பிக்கும் வள்ளல் இராமலிங்க அடிகளாரின் ஜாதகம் நாம் இனி இறையருள் முகமாக அடிகளாரின் திருத்தாள் வணங்கி ஆய்வு மேற்கொள்வோம்.

நலம் தரும் பிறவியின் பிறப்பு பயன்
குலப் பரம்பரை விரி விளங்க - ஆதியாம்
நல்வினைப் பதவி நுகர சோதிடம்
நல்கும் பிறப்பு நூலே - சித்தர் அடியார்

வள்ளல் இராமலிங்க அடிகளார் அவர்கள் கலியுகம் 1925—ஆண்டு சுபானு பெயருடைய வருடம் புரட்டாசி திங்கள் 21ஆம் நாள் (ஆங்கில ஆண்டு 5—10—1823இல்) பூர்வ பட்சம், துவிதியைப் பட்ச தினம் சித்திரை நட்சத்திரம், நாலாம் பாதம், சூரிய உதயாதி இருபத்தொண்பதே முக்கால் நாழிகையில் (29¾இல் நாழிகை) ஞயிற்றுக்கிழமை மாலை 5.54 மணியளவில் இராமையா — சின்னம்மை என்ற தெய்வீக தம்பதியருக்கு மருதூர் சிற்றூரில் சிதம்பர வட்டத்தில் கடலூர் மாவட்டத்தில் ஐந்தாவது மகவாக அடிகளார் இவ்வுலகின் கண் தோன்றியருளினார். அன்னாரின் அன்றைய நிலையின் சாதக அமைப்பு இதுவாகும்.

ல		சனி	குரு
	5.10.1823 மாலை 5.54 P.M இராசி சக்கரம்		செவ் கேது
ராகு			
		புத சந்	சூரி சுக்

சாகாக்கலை கற்பித்து இறையருள் வடிவம் அருளும் சாதகம் எப்படி இருக்கும் என்பதை அகத்தியப் பெருமகனார் தம் கருத்தை பாடல் வழியே வலியுறுத்துவதை ஊன்றி கவனியுங்கள்.

செப்புவேன் துலாத்தோர்க்கு தேவிமுதல் சித்தி
சிவனோடு மந்திரங்கள் எல்லாம் சித்தி
ஒப்புவோர் வாத சித்தி குளிகை சித்தி
உயாந்து நின்ற காயச் சித்தி உறுதியாகும
தப்புவேன் என்றாலும் தவறிடாது
சாதகமாய் வாசியது தானே தூக்கும்
கொப்புவேன் உலகத்தில் தச தீட்சை பெற்ற
கொடிய சிவயோகி யெக் கூறுவாறே" - 2

அகத்தியர் நாச் சித்தர் பெருமான்
திராவகம் — 800

துலா இராசியில் சந்திரன் நிற்பதுதான் இராசி என்று கூறப்படுகிறது. இந்த இராசியில் சந்திரன் குடிக்கொள்ளாமல் இலக்கினமாக அமையுமானால் பலனளிக்காது. சந்திரன் நின்ற இலக்கின இராசி கொடுக்கும் பலன் உயிர் பதித்து நின்ற இலக்கின இராசி கொடுக்கும் பலன், உயிர் பதித்து நின்ற இலக்கின துலா இராசியான அமைப்பு பலனளிப்பதில்லை. சந்திரன் அமர்ந்த இராசியான துலாவில் பிறந்த நபர்களுக்கு மற்ற கோள்கள் நலமே பொருந்தி நின்று விட்டால் அந்த மானுட சாதகனுக்கு சக்தி வழிபாடு சித்தியாகும். சிவவழிபாடு சித்தியாம். மந்திர வழிபாடு மற்றும் மந்திரங்கள் சித்தியாகும். வேதியல் மருந்து தொழில் சித்தியாகும். இரசக் குளிளைகள் செய்யும் வேதிமுறைகள் சித்தியாகும. உடல் கல்ப சித்தி அடையும் வழிமுறைகள் தானாகவே சித்தியாகும். இதுபோன்ற சித்திகள் பெறும் நிலையிருந்து விலகிச் சென்றாலும் விலக முடியாது இறையருள் தானே வழிகாட்டும். வாசியோகம் சித்தியாகும். அதனால் தேக மாற்றங்கள் நிகழும். எண்பெருஞ்சித்திகள் கைகூடும். அதனால் உடலை இலகுவாக்கும். வான் வெளியில் உலாவரும் சித்தி ஏற்படும். உலகில் பத்து வித தீட்சைப் பெற்று கடுமையான சிவயோக வாழ்க்கைப் பெற்று மரணமில்லா பெருவாழ்வு பெறுவர்.

சித்தர் பெருமக்கள் கூறும் அமைப்புக் கொண்ட சாதகன் யாம் பல ஆண்டுகள் தேடியதுண்டு. அவர்களில் யேசுநாதர்

Koviloor Digital Library

அவருடைய சாதகம் பொருந்திவர வில்லை. புத்தர் அவருடைய சாதகம் பொருந்தி வரவில்லை.

ஆதிசங்கரர் அவருடைய சாதகம் பொருத்தமாக எடுபடவில்லை. நபிகள் நாயகம் அவருடைய சாதகம் இறவாநெறிக்கு பொருத்தமாக அமையவில்லை. குருநானக் அவருடைய சாதகம் மரணமில்லா பெருவாழ்வுக்கு ஏற்றதாக அமையவில்லை. மகாவீரர் அவருடைய சாதகம் சித்தர்கள் கூறும் சித்திகள் அடைய பொருத்தமாக அமையவில்லை. மேற்கண்டவர்கள் கொள்கைகளை எடுத்துக்காட்டி ஊனமான மதங்களின் கொள்கைகளை எடுத்துக்காட்டி மண்ணுக்குள் கரைந்தார்களே ஒழிய மரணமில்லா பெருவாழ்வான சாகாத கல்வி என்னும் சாகாக்கலை பற்றிய உண்மைகளை எடுத்துக் கூற முன்வரவில்லை.

மேற்கண்டவர்களைத் தவிர ஒவ்வொரு யுகத்தில் தோன்றிய அவதார நபர்கள் சாகாக்கலை கற்று அறிந்து அருளியதாக செய்திகள் இதிகாச புராண நூல்களில் செய்திகள் காணப்படவில்லை. ஆனால் சித்தர்களால் இயற்றப்பட்ட நூல்களில் மட்டும் மரணமில்லா பெரு வாழ்வு பெறுதற்குண்டான அற்புதமான செய்திகள் மிகுதியாகச் சொல்லப்பட்டுள்ளது. அவைகளில் சில மேற்கோள்கள் எடுத்துத் தரப்படுவது படித்தறிக.

''இக்காயம் நீங்கி யினியொரு காயத்திற்
புக்குப் பிறவாமற் போம்வழி நாடுமின்'' - 2068

திருமூலர் திருமந்திரம் — 3000

''பெண்ணு மாணும் பிறவிதன் வாழ்க்கைபோல்
பிறந்த பின் னிறவாதிரு மாண்பரே'' - 704

திருவள்ளுவர் சிந்தாமணி — 800

''மனிதனாய் பிறந்தாக்கால் சாகாக்கல்வி
வாசிக்கும் சிவமோடு வாழ்க்கை சேர்வான் - 56

அகத்தியர் பூரண சூத்திரம் — 216

''சாகாது மார்க்கம் விட்டால் நோகாதப்பா
தன்னுடனே பிறந்த குலம் எல்லாம் மாளும்'' - 265

காகபுசண்டர் காவியம் — 1000

''சாகாமலிருப்பதற்குக் கல்வி யுண்டு
சாக்காடு கொள்வதற்கு விவரமுண்டு- 238

காகபுசண்டர் காவியம் — 1000

இதுபோன்ற செய்திகள் சித்தர்களால் இயற்றப் பெற்ற சித்தர் மறைகளிலும் திருமறைகளிலும் மிகுந்துக் காணப்படுகிறது.

சாகாத கல்வி அறியாத சாதகர்களை விடுத்து நமது தமிழ்நாடு ஞான பூமி என்று திருமூலரால் பெயர் பெற்ற தமிழகத்தில் நுழைந்து ஆய்ந்த போது சாகாக்கலை என்ற சாகாத கல்வி கற்பிக்கும் சாதகம் உண்டா என்று தேடினோம். தேடியதில் மிகச் சிறந்த அற்புதமான தூய்மையான சாதகம் ஒன்று கிடைக்கப் பெற்றோம். கடந்த சமீபகால நூற்றாண்டில் தமது தாய்த்திரு நாடாம் தமிழகத்தில் மாபெரும் சிறந்த இறைவடிவம் பெற்ற இறை அருளாளர் பிறவி எடுத்து அனைத்துலகுக்கும் வழிகாட்டியாக இருந்தவர் நமது சிதம்பர இராமலிங்க அடிகளார் ஆவார். அன்னாரின் சாதகம் சாகாதக் கல்வி என்னும் சாகாக்கலை அருள வந்த சாதகம் என்றால் மிகையல்ல. அவருடைய சாதக அமைப்புக் கொண்ட வரைபடம் இதற்கு முன் பத்திகளில் எடுத்துக் காட்டியுள்ளோம். அந்த சாதகவரை படம் உற்றுநோக்கி உன்னிப்பாகத் திறனாய்வு செய்தால் உண்மை விளக்கம் பெறலாம்.

வடலூர் வள்ளல் இராமலிங்க அடிகளின் சாதக வரைபடம் இராசி சக்கரம் மேதகு இறைவடிவம் (வான்வடிவம்) பெற்று திகழ்கிறது. மரணமில்லா வரம் பெற்ற சிதம்பர இராமலிங்க அடிகளாரின் பிறவி எடுத்த வைத்தக் குறிப்பு தரப்பட்டுள்ளச் சாதகமாகும். இந்த சாதகத்திற்கு உலகியல் வாழ்க்கையில் வாழும் ஜோதிட மேதைகள் கூறும் பலாபலன்கள் அதனை ஒட்டியே இருக்கும். இந்த சாதகத்தை வைத்து பிற சாதகத்துடன் ஒப்பு நோக்கியும் இணைத்தும் பலன்கள கூறுகிறார்கள். அவைகள் அனைத்தும் எடுபடாது. பயனற்று விடுகிறது. இந்த சாதகத்திற்கு பலவாறு பலன்கள் எழுதியும் சோதிட இதழ்களிலும் செய்தியாக வெளிவந்துள்ளது. அவைகள் அனைத்தும்

Koviloor Digital Library

உலகியல் வாழ்வியலை ஒட்டி பலன்கள் எழுதப்படுகிறது. ஏனென்றால் பலன்கள் கூறி எழுதுபவர்கள் உலகியல் வாழ்வியல் மாசுகளில சிக்கி உழல்பவர்களே. அதனால் அவர்களால் வேறுவிதமாக சிந்தித்து திறனாய்வு செய்து அதன் நுட்பமான வழிகள் அணுக முடியவில்லை என்பது அறியலாம்.

மேதகு இராமலிங்க அடிகளாரின் சாதகத்தில் உயிர்பதிந்து பிறவி எடுத்த இலக்கினம் மீனமாகும். 12 இராசிகளில் முடிவான இராசி மீனமாகும். இந்த மீன இராசி பங்குனி என்ற கடைசியான மாதத்தைக் குறிக்கிறது. மீனம் — பங்குனி என்ற சொற்கள் ஆய்வு செய்தால் இதன் உண்மைகள் வெளிப்படும்.

மீனம் - மீ = ம்+ஈ. ன = ன்+அ; ம் = ம்

விடை = ம்2+ஈ+அ+ன் = மீனம்

பங்குனி - ப = ப்+அ; ங் = ங்; கு = க்+உ; னி = ன்+இ

விடை = ப்+ங்+க்+ன்+அ+இ+உ = பங்குனி

மீனம் என்னும் இராசிப் பெயரில் மகரம் என்னும் மெய்யெழுத்து இரண்டு அடுக்கு நிலை. அகரம் ஒன்று. ஈகாரம் ஒன்று. னகரம் மெய்யெழுத்து ஒன்று.

பங்குனி என்ற மாத பெயரில் அகரம் ஒன்று உகரம் ஒன்று, இகரம் ஒன்று, பகர மெய்யொன்று. ஙகர மெய்யொன்று, னகர மெய் ஒன்று.

மீனம் என்னும் மகர மெய் ஈகாரம் என்னும் சக்தியின் விதத்தில் இணைந்து வருகிறது. ஈகாரம் அருட்பிரணவ நெடிலாகும். எங்கும் இருப்பதாகும். அகரம் மூலாங்க பிரணவமாகும். னகர மெய் சிவத்தையும் சக்தியையும் குறிக்கும். மகரமெய் ஊமை என்பர்.

பங்குனி என்னும் பகர மெய் மேரு பீடத்தைக் குறிக்கும். ககர மெய் ஆன்மாவைக் குறிக்கும் ஙகர மெய் உழைப்பைக் குறிக்கும். பலவளைவுகளில் கடின உழைப்பால் கடந்து வருதல். னகர மெய் சக்தி வாலையைக் குறிக்கும். அகரம் சிவத்தையும் மூலாங்க பிரணவமும், நாதாந்த நிலையும் குறிக்கும். இகரம் அருட்பிரணவமும் சக்தியின் வித்தையும் குறிக்கும். உகாரம் சக்தியான வாலையும் குறிக்கும்.

மீனத்தில் வரும் அகரம் + இகரம் = ஐகாரமாகும். பங்குனியில் வரும் அகரம் + உகரம் = ஓங்காரமாகும் அடுத்து அகரம் + இகரம் = ஐகாராமாகும். அடுத்து அ+இ+உ = ஐயும் ஆகும்.

கேளப்பா உகாரமது விந்து வாகும்
கிருபையுள்ள மகாரமது சக்தியாகும்
ஆளப்பா அகாரமது மூலமாகும் = 2

சுப்பிரமணியர் சுத்த ஞானம் — 2

நலங் கிடைக்கும் ஊமை யது மகாரந்தானடா
நலமில்லா யீனருக்கு உரைக்கா தென்னே - 179

யாகேப்பு சித்தர் வாத சூத்திரம் — *400*

மேற்கண்ட பாடலில் அகாரம் மூலாங்க பிரணவம். உகாரம் விந்து. மகாரம் சக்தி என்ற ஊமையாகும். மேலும் அகத்தியர்,

“மூலமென்ற ஓரெழுத்தைச் சொல்லக் கேளு
முச்சந்தி வீதிகளில் ஊமையாச்சு
பாலமென்ற ஈரெழுத்தே மொழியாச்சு
பரவெளியில் சக்தி சிவ மதுவேயாச்சு - 4

அகத்தியர் சுத்த ஞானம் — *40*

ஆதிமா மூலம் என்பது ஓங்காராமகும். அதுவே ஓரெழுத்தாகும். முச்சந்தி என்பது மேல்மூல முக்கோணம் ஆகும். அது சூரியன் + சந்திரன் + வன்னி இணைந்து கூடும் நிலைக்கு முச்சந்தி என்பர். அந்த வீதியில் மகரம்(ம்) = (இம்) = ஊமை வாய் பேசா மந்திரமாக நிற்கும். பாலமாக நிற்பது அகர உகரமான பேசும் மொழியாக நிற்கும். அதுவே பரவெளியின் கண்சிவ சக்தியமாக நிற்கும். என்பர்

மேலும் அகத்தியர் சுத்த ஞானம் என்னும் நூலில்,

“அறைகுவேன் அகரமது சிவமதாச்சு
ஆச்சரியம் உகரமது சக்தியாச்சு
திறைகுவேன் சிவசக்தி யிரண்டுங் கூடிச்
சேர்ந்தடா மகரமென் மவுனமக்கால்

Koviloor Digital Library

பறைகுவேன் அகாரமுடன் உகார மவ்விற்
பாய்ந்து தொன்றாய் கலக்க பிரணமாச்சு
மறைகுவேன் தீட்சை ஓங்காரந் தன்னை
மாசற்ற நாதாக்கள் மறைத்திட்டாரே - 19
அகத்தயர் சுத்த ஞானம் — 30.

அகாம் சிவமாகும். உகரம் சக்தியாகும். சிவசக்தி இரண்டும் கூடிச் சேர்ந்தால் மகரமென்ற மவுனம் பெறுமேயானால் அகர உகர மகரம் இவைகள் ஒன்றில் ஒன்று பாய்ந்து நிற்கும்போது ஓங்கார பிரணமாகும் என்பதாகும்.

அடிகளார் தோன்றிய திங்கள் புரட்டாசி மாதமாகும். இதனையும் சற்று ஆய்வு செய்வோம். புரட்டாசி என்பதில் பு = ப்+உ, ர = ர்+அ, ட் = ட், டா = ட்+ஆ, சி = ச்+அ+இ+நாதம், என்று கூறுவர்.

விடை = ப்+ர்+ட்+ட்+அ+உ+ஆ;
ச்+அ+இ+விந்து+நாதம்;
ஃ = ப்+ர்+ட்+உ+ச்+அ2+இ+உ+ஆ;

பகர மெய் இறையருள் பீடம். ரகர மெய் தீவடிவமான சோதிவடிவம். டகர மெய் இரண்டு அடுக்கு நிலை. ஓசை சகர மெய் அருளின் மென்மை, மங்கலமான தூய்மை நிலை. அகாம் இரண்டு அடுக்கு நிலை. ஒன்று ஓங்காரத்தின் பாதநிலை. மற்றொன்று சிவத்தின் அருளான நாதாந்த நிலை. இகரம் சக்தியின் வித்து. அடுத்து அருட் பிரணவநிலை. மற்றொன்று 'இம்' என்ற ஊமையான மௌன தீட்சை நிலை. உகரம் வாலை சக்தியான திறவுகோல் நிலை. ஆகாரம் எங்கும் பரவி நின்று ஆசி கூறும் இறையருள் நிலையாகும். விந்து உகரமாகும். நாதம் அகரமாகும். உகாரம் வடிவம் அகாரம் ஒலி நிலை. இவை இரண்டும் இணைவது வாலை நிலை. அதுவே தீட்சை ஓதும் சாகாக்கலை நிலையாகும்.

கருத்து = மீனத்தில் உள்ள முதல் எழுத்தான மகரம் சிவனை குறிக்கும். இறுதியுள்ள மகரம் ஊமையை குறிக்கும். ஊமை என்பது 'ம்' (அ) 'இம்' அக்கர் குறிக்கும். இதுவே சிவசக்தி தீட்சை மௌன தீட்சையாகும். இதுவே முத்தி தரக்கூடியது என்பது குதம்பை சித்தரின் அருள்வாக்கு ஆகும். அவருடைய பாடல் அறிக.

"ஆமைபோ லைந்து மடக்கித் திரிகின்ற
ஊமைக்கு முத்தியடி குதம்பாய்

ஊமைக்கு முத்தியடி - என்று கூறும் அப்பெருஞ் சித்தர் ஓதுகிறார். தனிமனிதன் ஒருவன் முத்துக்கு செல்ல வேண்டுமானால் சித்தர் நெறியான சன்மார்க்க நெறியில் நிற்க வேண்டும். அப்பொழுது தான் முத்தி நிலை அடையலாம்.

சக்தியின் கூறாக விளங்கும் ஈகாரம் சக்தியின் வித்து எழுத்தாகவும் செயல்படும். ஈகாரம் ஓங்காரமாகவும் செயல்படும். ஈகாரம் ஓங்காரமாகவும் செயல்படும். ம்+ஈ = மீ என்ற அக்கரம் சக்தியின் கூறாகவும், வித்தாகாவும், ஓங்காரமாகவும் செயல்படும். 'னகரம்' இதில் அகரம் என்ற இறைவனின் அக்கரம் உள்ளது. அகரம் மூலாங்க பிரணவம். மேலும் முதல் எழுத்தாகும். னகரம் இரு சுழியுள்ள எழுத்தாகும். முதல் சுழி இறைவனான அகரத்தைக் குறிக்கும். இரண்டாவது சுழி இறைவியான உகரத்தைக் குறிக்கும். சிவசக்தி இணைவுப் பெற்ற தமிழ் மெய்யெழுத்தில் 18வது நிலையைக் குறிக்கும். இந்த 18யை தமிழில் "கஅ" என்று எண்ணியலில் குறிக்கப்படுகிறது. இரு அக்கரத்தில் ககரம் ஆன்மாகவும், அகரம் பேரான்மாகவும் நிற்கும். செயல்படும். ஆன்மா பேரான்மாவை எட்டியநிலையாகும். ஆத்மாவும் பரமாத்மாவும் கலந்த நிலையாகும். மேலும் ஒன்றே குலம் ஒன்றே தெய்வம்" என்ற உண்மையை ஓதப்படுகிறது. திருமூலர் ஆன்மாவை சுடர் என்றும் பேரான்மாவை பெருஞ்சுடர் என்றும் கூறுகிறார். சுடரில் பெருஞ்சுடர் இணைவது முத்தியென்றும் சித்தியென்றும் கூறுகிறார். சித்தர் பெருமக்கள். உலகியலில் உழலும் மாசு படிந்த மனிதன் அறியான்.

மகரம் ஓங்காரம் பிரணவ அமைப்பை உணர்த்துவது. மகரத்தை ஊமை எழுத்து என்று சித்தர்கள் ஓதுகின்றனர். உயிர்கள் தோன்றுவதும் ஒடுங்குவதும் போன்ற பணிகள் நிகழ்வதும் வல்லமையுடையது.

Koviloor Digital Library

தவிர முத்தியை தருவதும் மகரமாகும். எனவே மீனம் என்ற சொல் வள்ளலார் என்று கூறப்படும் அடிகளாரின் சாதகம் ஞான தேகமுடன் இறைவடிவம் பெற துணையாக நின்றது.

பங்குனி என்ற மாதச் சொல்லிலுள்ள பரகம் இறைவனின் உப்பரிகை என்றும் மேடையான பீடத்தைக் குறிக்கும். அதில் அகரம் நாதாந்த நிலையுடைய இறைவனைக் குறிக்கும். 'ங'கரம் கடின உழைப்பால் பசு உயிர் நீக்கம் பெற்று ஆன்மாவாக மாறும் நிலையைக் குறிக்கும். இறையருள் பெற்ற போது ஆன்மா அருளின் மென்மை, பெருமை, அருமை, பசுமை, இளமை, வளமை, பொறுமை உண்டாக்கும். ஆன்மாவின் நிலை மாறுபாடுகளால் பெருமை, அருமை, செம்மை, வளமை, வனப்பு போன்ற மன நெகிழ்வுகள் தரவல்லலது. உதாரணமாக ஙொப்போல் நிமிர்ந்து குறுக்கே பாய்ந்து நெடுகே உயர்ந்து நிற்கும் நிலையை தனி மனிதனின் கடின உழைப்பால் உயர்வு பெறுவார்கள் என்று கூறப்படுகிறது. 'ங'கரம் எழுத்து எப்படி நெடுக உயர்ந்து நிற்கும் தன்மையும் பண்புகள் பெற்ற எழுத்தாகும். அதனால் நம் மூத்தோர்கள் கடின உழைப்பால் உயர்ந்தோர்களை "ஙொப்" போல் உழைக்க வேண்டுமென்று கூறியுள்ளனர். க்+உ = கு என்ற எழுத்து ஆன்மாவின் சக்தி நிலையைக் குறிக்கிறது. உகரம் இறைவி சக்தியை குறிக்கும். உகரம் இரண்டு என்ற தொகையையும் குறிக்கும். உகரம் முத்திக்கு திறவு கோலாகும். "ன்+, = னி. இதில் இகர அருள் பிரணவ நிலையை குறிக்க வந்த அக்கரமாகும். இரண்டு சுழியுள்ள "னகரம்" இறைவன்+இறைவி (சிவசக்தி) இணைந்தால் வாலை என்ற மெய்யருட் சக்தியை குறிக்க, அதனால் ஆன்மாக்கள் தோன்றும். "திருவாசியே ஆத்ம பீடம்" என்பதால் அறியலாம். திருவாசி என்பது ஓங்காரம் ஆகும்.

அதில் செயல்படும் பிரணவ எழுத்துக்களான பேசு எழுத்து அகரம் உகரமாகும். வாய்பேச எழுத்து மகரமாகும். அகரம் சிவனையும் உகரம் சக்தியையும் இவர்களின் இணைவே ஆத்ம தோற்றம் உண்டாகும். அதனால் சுப்பிரணமணிர் சிவம் "திருவாசி ஆன்ம பீடம்" என்று யோக ஞானம் 500இல் ஓதுகிறர். அந்த ஆன்மாவே இகரமாக செயல்படும். மொத்தத்தில் பங்குனி என்ற சொல்லில் பகரம் — ஙகரம் — ககரம், னகரம் — அகரம் — உகரம் — இகரம் ஆகிய உயர்நிலை அமுத உயிர் எழுத்துக்கள் மற்றும் மெய்யெழுத்தில் வல்லினம், மெல்லினம் போன்ற அக்கரங்கள் பொருந்திவருவதால் அகர அக்கரம் ஓர் சுழி, உகர அக்கரம் ஓர் சுழி ஆக இரு சுழியெழுத்துக்களான "னகரம்" ஆக சேர்ந்து நிற்கும் அதன் உள்ளக மெய்ஞ் ஞான நிலையை எடுத்துக் காட்டுகிறது. இரு இறையருள் பேரான்மாக்கள் இகரம் என்ற அருளுடன் ஆன்மாவை தன்னுடன்கலந்துக் கொள்ளச் செய்து 'ககரம்' என்ற இறைவடிவம் வழங்கி பகர மேடையில் வீற்றிருக்கச் செய்து "ஙகரம்" போன்று கடுமையான உழைப்பால் மனிதனை தயா உள்ளத்துடன் திகழ வைக்க வேண்டிய அடிகளாரின் ஆன்ம நிலை மீன இலக்கினமாக நின்று பிறவியின் இறுதிநிலைக் குறிக்க "பங்குனி" திங்களாக பூரண நிலவு போன்று திகழ்கிறது.

அடிகளாரின் ஆன்மா பதிந்து பிறவி தோன்றிய இலக்கினம் துவாத சாந்தம் என்னும் மீனமாகும். பன்னிரண்டு இராசிகளில் முடிவான இராசி இலக்கின இல்லம் மீனமாகும். இந்த இல்லம் பங்குனி என்ற திங்களை குறித்து நின்றது. இறுதியாக வந்தநூல் அவருடைய பிறவி, இந்த பிறவியுடன் முடிவானதாக நின்றது.

வள்ளல் இராமலிங்க அடிகளாரின் இராசி சக்கரத்தில் சந்திரன் அமர்ந்த இலக்கினம் துலா இராசியாகும். இதற்கு சந்திர இலக்கினம் என்று குறிப்பார்கள். ஆன்மா பதிந்து நின்ற மீன இலக்கினம், சந்திரன் பதிந்து நின்ற சந்திரா இலக்கினம் ஆகிய இரு இராசிக்கிடையில் அதாவது மீன — துலா இராசிக்கிடையில் முன்புறமாக கோள்கள் அடைவும் பெற்று ஒரு புறமாக நிற்கிறது. அடிகளாரின் ஆன்மா பதிந்து

Koviloor Digital Library

பிறவி எடுத்த சாதகச் சக்கரத்தில் மீனமும் இலக்கினமும், அடுத்த சந்திரன் துலா இராசி நின்ற இலக்கினமும் ஆக இவைகள் இரு வாசற்கதவுகளாகும். உயிர் தோன்றி பிறப்பெடுத்த இலக்னமும், உடலானன சந்திரா இலக்கினத்திற் பிறப்பெடுத்த சாதக சக்கரத்தில் அனைத்து கோள் அவரால் சிறைப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது அடிகளாரின் மரணமில்லா பெருவாழ்வியல் சிறப்படைய அனைத்துக் கோள் ஒதுங்கி நின்று வழிவிட்டு விலகி நிற்கிறது.

மீன இலக்கினம் மூல ஆதாரமாக நின்று நிகழ்கிறது. மீனம் என்ற சொல்லினுக்குள் ஈங்காரம் என்ற சக்தியானது ஓங்கார மகா மூலமாக நிற்கிறது. இரீங் காரமே சக்தியின் வித்தெழுத்தாகும். அகரம் என்ற நாத எழுத்தான மூலாங்க பிரணவம் பதிந்துள்ளது. மகரம் இருமுறை வந்துள்ளது. அடுத்த மகரம் வாய்பேசா மந்திரம் ஊமை என்ற 'இம்' மென்ற மௌன தீட்சையான செவியுரை அருள வந்தது. ஊமைக்கு தோற்றமும் ஒடுக்கமும் செயல்படும் ஆற்றலைக் குறிக்கிறது. ஈங்காரமான ஓங்கார சக்தியை குறிக்கிறது. அகரம் சிவனைக் குறிக்கிறது. இவையிரண்டு என்றும் எங்கும் எதிலும் உண்மையென்றும், அது இரு சுழியுள்ளாத இருக்கிறது என்பதைக் குறிக்க "னகரம்" என்ற அக்க்ரம் தெரிவிக்கிறது. இரண்டு இறையருள் தரும் அக்கரங்கள் மூலத்தில் பதிவாகியுள்ளதை "மகரம்" குறிக்கிறது.

அடுத்து பங்குனி என்ற மாதச் சொல்லில் அகரம் — இகரம் — உகரம் — பகரம் — ககரம் — ஙகரம் — னகரம் ஆக விரிந்து நிற்கிறது. அகரம் சிவம். உகரம் சிவை. இகரம் அருள் (அ) ஆன்மாவை குறிக்கும். இவைகள் அனைத்தும் பிரணவ நிலை, உழைப்பு, அருள் நிலை, முத்தி நிலை, பிட நிலை இவைகள் குறிக்கிறது. அகர உகரங்களான பேசும் எழுத்தான உயர்நிலையான 18ஆம் நிலையில் ஒன்றி பூரணநிலை வழங்க வல்லது. அகரம்+உகரம் சேர்வதால் உயிர்தோற்றம் உண்டாகிறது. இந்த உயிருக்கு இகரம் என்ற அக்கரம் அருளை வழங்கி சிவசக்தி வடிவமாக உருவாகி இறையருள் வடிவமாக மாறிய ககரவடிவமாகும். இதற்கு ஆன்மநிலை என்பர். இந்த ஆன்மநிலை பெற 'ஙகரம்' என்ற அக்கரம் மேலைநிலைப் பொருளை அடைய கடினமாக உழைக்க வேண்டுமென்று அறிவுறுத்தும் நிலையை உணர்த்தும் ஆற்றல் பெற்றது.

எனவே மீன இலக்கினம் முதல் ஆதாரமாக நின்றது. அருளின் வடிவமாகத் திகழும் இராமலிங்க பெருமகனாரின் ஆன்மநிலை பதிந்து நின்றது. அதுவே பகர மேடையில் அவரை அமரச் செய்தது என்பதை உணரலாம்.

"பீடமென்ற பீடமடா பிர்ம பீடம்
பேசாத மவுன மென்ற அகாரந்தானே" - 16
அகத்தியர் பூரண காவிய — 16

"காணா யகாரங் கடிய சிவமாச்சு
பூணா யுகாரம் பரிகின்ற சக்தியாம் - 63
சுகப்பிரமமாமுனிஞானம் — 32

நேசாருந் கலைகளெல்லாந் தானே யாகும்
நிலையான ஓங்கார பீடமாகும் - 6
திருமூலர் ஞானம் — 10

ஏரப்பா வுழுதால் வெள்ளாமை யாகும்
ஏரில்லான் அறுத்தடித்த தன்மை தானே - 15
சுப்பிரமணியர் சிவம் யோக ஞானம் — 500

மீன இலக்கினத்திற்கு அதிபதி குருக்கோளாகும். குரு குணத்தில் சாத்வீக (அமைதியான) கோளாகும். குரு செயல்படும் முறையில் நற்கோளாகும். குரு இலக்கினத்திற்கு 4ஆம் இல்லமான புதன் வீட்டில் குடியுள்ளார். புதன் ஓர் நற்கோளாகும். அவருடைய வீட்டில் குரு குடியுள்ளதால் அவ்விடம் கேந்திரமாக விளங்குகிறது. குரு கேந்திரம் பெறுவது நல்லதல்ல என்று சோதிடர்கள் கூறுவர். ஆனால் நல்ல கோளான வீட்டில் நற்கோளான குரு குடியிருப்ப நன்மையே நடக்கும். குரு கேந்திரம் பெற்றதற்கு நாற்கோணம் என்று கூறுவர். இதற்கு சதுரம் என்றும் கூறுவர். இது பிர்ம பீடம் என்றும் கூறுவர். குருபஞ்ச பூத நிலையில்

Koviloor Digital Library

ஆகாயமென்றவான் வெளியைக குறிக்கும்.

குருக்கோளான கேந்திரத்திலிருந்து பத்தாமிடமான தன் சொந்த இல்லமான இலக்கின கேந்திரம் அமைந்துள்ளது. குரு இரண்டாம் கேந்திரத்திலிருந்து நான்கர் கேந்திரமான தன் இல்லத்தை நோட்டம் விடுவதால் ஆன்மா பதிந்த இடம் மிகத் தூய்மை பெறுகிறது. அதே சமயத்தில் குரு முதல் கோணத்திலிருநந்து துலா இராசியான சந்திரா இலக்கினத்தை நோக்குகிறார். இதனால் அடிகளாரின் தேகம் மிகத்தூய்மைப் பெறுகிறது. அந்த இராசியில் புதன் அமர்ந்துள்ளது. குரு நோக்கத்தால் ஆன்மா தூய்மை நிலை பெற்றது. அதே நேரத்தில் குருவின் பெரும் பார்வையால் தேகமும் தூய்மை பெற்றது. அந்த தேகமான உள்ளகத்தில் புதன் இணைவால் அத்தேகம் கைலாச குருவினால் ஆன்மா பதிந்த இலக்கினம். உடல் பெற்ற சந்திரா ஞானம் நிறையுடன் விளங்குகிறது. குரு ஆகாய தத்துவமாதலால் இராமலிங்க அடிகளார் வான் வடிவம் பெற்று சோதியில் மரணமில்லா பெருவாழ்வை கண்டு இன்புற்றுள்ளார் என்பதை திறனாய்வில் அறிய வருகிறறது. இனி கீழ் வரும் மேற்கோள்களால் அறிக.

"கோனவனாய் நின்ற குறி மூலாதாரம்
குருவான ஆதராம் சிகாரமாச்சி - 36
கடைப்பிள்ளை ஞான தண்டகம் — 50

"கோனென்ற சிகாரமடா சிவரூபந்தான்
கொள்கி நின்ற றீங்காரம் சக்தி ரூபம் - 24
கடைப்பிள்ளை ஞான கக்கிசம் — 80

அறிவை நீ அறிந்தாலே பிறவி போச்சு
அடுத்தாப் போல் பரமபதம் நிலையு மாச்சு - 10
கொங்கணர் மெய்ஞ்ஞானம் — 13

நன்மையென்ற குருபரன்றான் வொளி போற் காணும்
நாதாந்தம் பெற்றவர்கள் சாதித்தாரே - 82
கடைப்பிள்ளை கலைக்கியானம் — 120

கூரான நாத சகதி சிவமதாச்சு
குரு சக்தி சிவம் உடலும் உயிராய் நிற்கும் - 57
கடைப்பிள்ளை கலைஞ்ஞானம்— 120

குருவே சிவமெனக் கூறினன் நந்தி - 4581
திருமூலர் திருமந்திரம் — 3000

குருவென் பவனே வேதாக மங்கூறும் - 2057
திருமூலர் திருமந்திரம் — 3000

உத்தியாய்ப் பாராதே குருவைக் காரு
உன்மனத்தைக் கண்டு குருவுபதேசிபார் - 52
கடைப்பிள்ளை சிவயோக ஞானம் — 100

குரு என்றால் இருளும் ஒளியும் என்பர். 'ரு' என்ற ஒளியால் நீக்குதல் என்பது பொருள். குரு = க்+உ; ர்+உ; என்றும் பகுத்து பார்க்கப்படுகிறது. க்+ர்+உ+உ என்று ஏற்படுகிறது. ககரம் — ரகரம்+ உகரங்கள் வந்துள்ளது. இருட்சக்தியை ஒளிசக்தியால் நீக்குதல் என்பாா. ஒன்று அறியாமை விலக்கி அறிவை ஏற்பதும் என்பது குருவின் இயல்பாகும். இதில் குருசிவம் ஒன்றும், குரு சக்தி என்றும் இருவகை உண்டு. குருசக்தியின் செவியுரை கேட்டு நடந்தால் குருசிவம் நாம் அடையும் வாய்ப்பு ஏற்படும். அருட்சிவத்தால் முத்தியும் சித்தியும் உண்டாகும்.

இனி சந்திரன் அமர்ந்த துலா இராசியான சந்திரா இலக்கினத்தை ஆய்வு செய்வோம். துலாம் என்பதை பகுத்து பார்க்கலாம். து = த்+உ; லா = ல்+ஆ; ம் = ம். விடை = த்+ல்+ம்+உ+ஆ மாகும். இதில் தகர் — லகரம் — மகரம் — உகரம் — ஆகரம் பொருந்தியுள்ளது. இப்படி சந்திர இலக்கின இராசியானதில் தகரம் வல்லினமாகவும், லகரம் இடையினமாகவும், மகரம் மெல்லினமாகவும் வந்துள்ளது. உகர — ஆகரம் ஆக இரு அக்கரம் இணைந்துள்ளது. இவைகள் இரண்டும் அமுத எழுத்துக்களாகும். உகரம் சக்தி. "ஆ"கரம் தூய்மையான ஆன்மா. லகரம் மேல்நிலை மூலம். ஞானம் நிறைவுடையது. மேல்மூலாதார பூமியாகும். தகரம் நுண்மையான வான்வெளியிடம். மகரம் தோற்றமும் ஒடுக்கமும் உடையது. அதுவே மௌன தீட்சையாகும். வாய்பேச்சு மந்திரம் என்பர். துலா இராசியில் சந்திரன் சக்தியாகும். அதுவே உடலாக நிற்கும். அதுவே மாயையாகும். அதுவே மனமாகும்.

Koviloor Digital Library

துலா சந்திர இலக்கின இராசியில் புதன் சந்திரனான மனமும் புதனான அறிவும் ஒன்றையொன்று இணைந்தது. கீழ்வரும் பாடலைக் காண்க.

"கதித்தவுடல் சத்தியது பாசமாகும்
மானென்ற பசுதானு முயிரான சிவமாம் - 42
அகத்தியர் பரிபூரணம் — 1200

"பாரப்பா அகாரமது சிவமுமாச்சு
பதிவான சிவமதுதான் உயிருமாச்சு
நேர்மையுள்ள சத்தியது உடல்தானப்பா - 649
அகத்தியர் சௌமிய சாகரம் — 1200

"கூறப்பா அறிவுடனே மனதையுந்தான்
குறிப்பாகக் கட்டினவன் சித்தனாகும்
வேரப்பா மனதாலே அறிவைக் கட்டி
விட்டவனே ஞானி என்று மேவுவாரே - 6
அஸ்வனி தேவர் ஞானம் — 16

துலா இராசியில் சந்திரன் நின்ற சந்திரா இலக்கினம் ஐப்பசி என்ற மாதத்தை இடமாகவும் காலமாகவும் பெற்றுள்ளது. இந்த ஐப்பசி என்கிற சொல்லை ஆய்வு செய்தால் மிக அற்புதமான பொருள் விளக்கம் உண்டாகும். ஐப்பசி = ஐ = அ + இ என்று கூறுவர். ஐகாரம் ஓர் கூட்டு எழுத்தாகும். ப் = ப், மெய்யெழுத்தாகும். விண்வெளியில் அமைந்த பீடமான மேடையைக் குறிக்கும். இறை பேரான்மாக்கள் அமரும் பீடமாகும். ப்+அ = பவாகும். மூலாங்க பிரணவ அக்கரமாக திகழும். அகரம் சிவனைக் குறிக்கும். அகரமான சிவன் பகர பீடத்தில் என்றும் வீற்றிருப்பதாக குறிக்கும். சிகரம் = ச்+அ+இ+விந்து நாதம் என்று பகுத்து கூறுவார்கள். இதற்கு சிகார பஞ்சம் என்பர். இதுவும் தோன்றும் உயிர்கள் உடலைத் தந்து மீண்டும் மேனிலை அடைய வைக்கும் உறுப்பாகும். சிகாரத்தில் சகரம் — அகரம் — இகரம் என்று அக்கரங்கள் உண்டு. இதனை ச்+அ = ச என்றும், ச்+இ = சி என்றும், கூறுவர். சகரம் அருளைக் குறிக்கும். (சகரம் அருளைக் குறிக்கும் சக்தி) அ+இ = இணைந்தால் ஐகாரம் தோன்றும். ஐகாரம் கல்வி ஞானம் வழங்கும்பதியாகும். சிகாரத்தில் அருள்சக்தியாகிய கங்கையும் — ஆற்றல் சக்தியாகிய ஆதிசக்தியாகவும், சிகரம் சிவமான நிலை ஆக இவை மூன்றும் இணைந்த நிலையைக் குறிக்கும். இதற்கு மேல் ஆன்மாவின் விந்துநிலையான வடிவத்தை சுத்தமாக்கி அருவமாக்கி பிரணவ நிலையைக் கொண்டு சென்று ஞான தேகமாக சிகாரம் அளிக்கக் கூடியது. சந்திராலக்கினம் துலா இராசியின் காலதிங்கள் ஐப்பசி ஆகும். மேற்கண்ட முறையில் ஆய்வு செய்ததில் அடிகளாரின் சாதகம் சாகாக்கல்வி என்னும் சாகாக்கலை தெரிவிக்க வந்த சாதகம் என்பதை அறிய வியப்பு ஏற்படுகிறது. ஐப்பசி மாத காலத்தின் விடையானது. அ3+இ2+ச்+ப்2+விந்து நாதம் (றீங்) என்று கனிந்து நிற்கும்.

தேகமென் வுடலுக்கு ஞானம் வேணும்
சித்தாந்தம் வேதாந்தம் நோக்கம் வேணும்
தேகமென்ற உடலுக்குப் பூசை வேணும்
செபம் வேணும் தவம் வேணும் எக்யம் வேணும்
தேகமென்ற வுடலுக்கு யோகம் வேணும்
சிறப்பாக வாசியென்ற குதிரை வேணும்
தேகமென்ற வுடலுக்குச் சித்தி வேணும்
தெளிவாக வுப்பினிட கருவை காணே - 45
சுந்தரானந்தர் வாக்கு நுட்பம் — 64

"சோதியென்னும் பூரணத்தே சிகாரம் நின்றே" - 1
கடைப்பிள்ளை ஞான சமாதி தீட்சை — 17

"பேச்சப்பா யில்லை தொற் றொடுக்கம் ரெண்டும்
பெரும் பாதை சிகாரமடி மூலமாகும்" - 44
கடைப்பிள்ளை ஞான தண்டகம் — 50

"அழியாத பேரின்ப வீட்டில் செல்லும்
அவ்விடந்தான் சிகாரமடா சுழியாம் பாரே - 21
கடைப்பிள்ளை சுத்த ஞானம் — 50

"மனிதனாய் பிறந்தாக்கால் சாகாக்கல்வி
வாசிக்கும் சிவமோடு வாழ்க்கை சேர்வான் - 56
அகத்தியர் பூரண சூத்திரம் — 216

"அகார மல்லோ கருவுடனே விந்துமாச்சு
அகார மல்லோ அன்னை யொடு தந்தையாச்சு
அகார மல்லோ ஆடுகிற வித்தையாச்சு

அகார மல்லோ கண் காணா தெட்டதாச்சு
அகார மல்லோ மதியுடனே விதியுமாச்சு
அகார மல்லோ அகண்ட பரவெளியுமாச்சு
அகார மல்லோ குருவுடன் சீடனாச்சு
அகார மடா வுபதேச பொருளுமாச்சு - 2

கௌசிகர் ஞான நுட்பம் — 30

"இருந்த நிலைபெற்றுத் தகாரத்தினாலே
யேகாந்த மானதுவும் அகாரத்தாலே
அருந் தவசு ஆனதுவும் அகாரத்தாலே
அட்டாங் யோகமது அகாரத்தாலே
வருந்தி நின்ற வாசியது அகாரத்தாலே
மருவி நின்ற வாசியது அகாரத்தாலே
பொருந்தி நின்ற சிலொம் பொலியும் அகாரத்தாலே
பூரணமாய் நின்றதுவும் அகாரத்தாலே" - 52

அகத்தியர் பரிபூரணம் — 1000

"அதி விதங்கா ணாகாயம் அகார பீடம்
அமர்ந்த பரா பரத்தினிலை யறிய வேண்டி - 2

தெட்சணாமூர்த்தி சுத்த ஞானம் — 13

"நேசாருங் கலைகளெல்லாந்தானே யாகும்
நிலையான ஓங்கார பீடமாகும் - 6

திருமூலர் ஞானம் — 16

வள்ளல் இராமலிங்க அடிகளாரின் ஆன்மா தோன்றி பதிந்து நின்ற இலக்கினத்திலிருந்து எட்டாமிடத்தில் துலா இராசியில் சந்திரன் நின்று இலக்கினமாக அமைந்துள்ளது ஓர் உயர்ந்த நிலையைக் குறிக்கிறது. சந்திரன் நின்ற துலா இராசி எட்டு என்ற எண்ணியல் எழுத்து தமிழில் அகரத்தைக் குறிக்கும். அகரம் இறைவனைக் குறிக்கும். அந்த எட்டாமிடத்தில் புதன் நிற்கிறது. புதன் அறிவு அல்லது ஞானத்தைக் குறிக்கும். அதே வேளையில் கேந்திரத்திலிருந்து குரு தன் பார்வையை திரிகோணமான முக்கோணத்திலிருந்து நோக்குகிறார். சந்திரன் என்ற மாயையால் பெற்ற உடல் குருவினால் தூய்மைப்படுத்தப்பட்டு புதன் சேர்ந்ததால் அவர் தேகம் ஞானம் பெற்று விளங்குவதால், இறைவனே உலகில் மானுட உடல் எடுத்து வந்துள்ளதாக கருத வேண்டியுள்ளது. இலக்கினத்திற்கு எட்டில் புதனும் சேர்ந்து ஞானம் என்கிற அறிவும் பிறவி தோன்றியப் போது இயற்கையிலே ஞான தேகத்துடன் பிறவி எடுத்துள்ளாார் என்று ஆய்வு செய்தபோது நமது நுண்ணறிவுக்கு புலனாகும் என்பதை உணர்வு உண்டாகும். கீழ்வரும் பாடல் மூலம் அறிக.

"சுத்தியாந் தேகம் அழிவது மிலையே
சுகாதீத வெகு வதி செயமாம் - 7

புலத்தியர் கற்பம் — 300

"காணவே சிவஞானம் உணர் தோர் தான்
கருணையுள்ள மாதவத் தோர்ப் பெருமை தானும்
பேணவே தூலத்தைச் சூட்சுமாக்கிப்
பிலமான சுட்சுமதுக் காரணமாய் நின்று
தோணவே ஆதி அந்தம் ஒன்றாய் நின்று
துலங்கி நின்ற சுடரொளியில் சோதியாகிப்
பேணவே பூமியில் வந்து அவதரிப்பார்
பிறந்தாலம் சிவயோகி யாவார் பாரே - 111

அகத்தியர் சௌமிய சாகரம் — 1200

மேற்கண்ட முறையில் உலகியல் மாயையில் சிக்கி அவதிப்படும் சாதாரண மக்களுக்கு திறனாய்வுச் செய்தால் பொருந்தி வராது. பயனற்றுப் போகும் என்பதை அறிய வேண்டும். உலகியல் மாயயையில் வாழும் சாதாரண மக்கள் கோள்களின் ஆதிக்க சிறையில் சாதகர்கள் வசமாக சிக்கித் தவிப்பார்கள். கோள்கள் சாதகர்களுக்கு நல்வினை தீவினையின் தொகைக்கு தக்கவாறு வழிவிட்டு நிற்காமல் கிரகங்களின் அடைவில் அகப்பட்டு சிக்கல் உண்டாக்கப்பட்டு அடைப்பட்டு அல்லாடுவார்கள். அதனால் மானுட இனங்கள் கோள்கள் நின்ற நிலையிலும், கோள்கள் சுற்றிவரும் நிலையிலும், கோள்களின் நோக்கத்தாலும் அடிக்கடி சிக்கலை ஏற்படுத்தி சிக்கி தவிக்கும்.

உலகியல் மாயையில் வாழ்வில் சிக்கி தவிக்கும் ஓர் மானுடன் சோதிடப் பலன்கள் முழுமையாகப் கூற இயலாது. ஓரளவுதானக் பலனை எடுத்துச் சொல்லப்படுகிறது. அந்த பலனே சில வேளையில் பயனற்றுப் போகிறது என்பதுதான் உண்மை. இதற்குரிய காரணம் என்னவென்றால் சித்தர்களின் பாடலைக் காண்க.

Koviloor Digital Library

''பிசகாது அபானத்தில் மலமே குற்றம்
பேசுகின்ற வுதானத்தில் நாடி குற்றம்
விசையான கண்டத்திற் கபமே குற்றம்
மேல்மூல வளையிலே திரை ஏறா குற்றம்
மசையான மனத்துக்கு கியான குற்றம்
மிவையைந்து போக்கி விட்டாலாமே ஞானம்
பசியாது ஞானத்திற் பிரகாசித்தாற்
பானமல்லோ பதினாறு பானங் கொள்ளே - 1

உரோம மாமுனி சித்தர் நுட்பஞானம் — 16

''காயமென்ற தேகமது மாயாரூபம்
கவலை குடி கொண்ட தொரு காம வீடு
மாய மென்ற ஜீவநிலை நிலையாத வீடு
மதிபெருகி ரவிதேய்ந்து மாளும் வீடு
நேயமென்ற நேமமது இல்லா வீடு
நேர் நிலைகள் அறியாமல் நின்ற வீடு
தாயகமாய் அவ்வீடு நிலைக்கவே தான்
தன்மையுடன் இன்னமொரு கருவைக் கேள்'' - 10

காலாங்நாத சித்தர் தீட்சாவிதி — 36

பாடலில் கூறியவாறு உள்ள சோதிடர்கள் கூறும் பலன்கள் எவ்வாறு சரியாக இருக்கும் என்பதை உணர வேண்டும்.

வள்ளல் இராமலிங்க அடிகளார் பிறவி தோன்றிய இலக்கின இராசிக்கு இரண்டாமிடமான வாக்கு இல்லத்திற்கு செவ்வாய் கோள் பூர்வ புண்ணியம் என்னும் ஐந்தாமிடமான கடகத்தில் திரிகோண நிலையில் இலக்கின இராசிக்கு இரண்டாமிடம் செவ்வாயாகும். சந்திரா இலக்கினத்திற்கு செவ்வாய் 10ஆம் இடமான கடகத்தில் தசம கேந்திர நிலைப் பெற்று, பூர்வ புண்ணிய இடத்தில் உயர்ந்து நிற்கிறது. ஒரே கோள் இலக்கினத்திற்கு பூர்வ புண்ணிய இடமான கடகத்தில் முக்கோணமாகவும், சந்திரா இலக்கினத்திற்கு நாற்கோணமாகவும் அமைவது உன்னத சிறப்பு நிலையைக் காட்டுகிறது. ஒரே கேள் இலக்கினத்திற்கும் சந்திரா இலக்கினத்திற்கும் இரண்டாமிடமாகி வாக்கு நிலையில் இருப்பது தனித்தன்மை வாய்ந்த அதி உன்னத சிறப்பாகும். செவ்வாய் இலக்கினத்திற்கு முக்கோணமாகவும், இராசிக்கு நாற்கோணமாகவும் பொருந்தி, நான்காமிடமான துலா இராசியில் அமர்ந்த சந்திரனையும் புதனையும் நோக்கிய செவ்வாயானது, அதற்கு திரிகோணமாக இலக்கினம் பொருந்தியுள்ளது கூடுதல் தனித்தன்மை வாய்ந்த உயர்சிறப்பாகும். இந்நிலைக்கு மதியும் செவ்வாயும் செறிவுப் பெற்ற சாதகமாகும்.

செவ்வாய் ஓர் தீக்கோளாகும். இக்கோள் இலக்கினத்திற்கு 2ஆமிடம் வாக்கு நிலைக்கும், 9ஆமிடம் பாக்கிய நிலைக்கும் பூர்வ புண்ணியமாக பெருகி கடல் போன்ற நிலையில் அருள் மயமாகியதால் செவ்வாயின் வெம்மை தணிந்து விட்டது. கடல்நீர் அருளின் நிலைகுறிக்கும். அதே போல் வாக்காக அமைந்த 2ஆமிடம் அருட்பா பாடல்கள் என்றும் கடல் போல் குவிந்தது. கடகத்தில் கேது என்ற கோள் இடம் பெற்றதால் பூர்வ புண்ணியம் ஞானக்கடல் போன்று அவருக்கு துணையாக நின்றது. செவ்வாய் பஞ்ச பூதத்தில் தேய்வுக் கூறாகும். வள்ளல் இராமலிங்க அடிகளார் சேமித்து வைத்துள்ள பூர்வ புண்ணியம் ஞானக்கடல் போன்ற அருளில் செவ்வாயனது கடக இராசியில் தணிந்து நின்றதால் அவருடைய அதிபதியான சந்திரன் என்ற சக்தி கொடுத்த உடல் தீயிக்கு இறையாகாமல் இருக்க கடகத்தில் நீச்சநிலை பெற்ற செவ்வாய் முழுக்க முழுக்க அருளால் தடுக்கப்பட்டு தணிந்து அமர்ந்தது. செவ்வாய்க்கு 7ஆமிடத்தில் கேந்திர பார்வைப் பெற்ற இராகு கோள், சந்திரா இலக்கினத்திற்கு 4ஆம் இடம் கேந்திரமாக அமைய பிறவி இலக்கினமான மீனத்திற்கு இலாபாதிபதியாக நின்று பெரும் பயனைத் தந்துள்ளது.

சந்திரன் தன்னாட்சியாக உள்ள கடகத்தில் கேது இருப்பதும் சனி தன்னாட்சியாக உள்ள மகரத்தில் இராகு இருப்பதும் நலம் தரக்கூடியதே. சித்தர்கள் "இராகு கேது" வுக்கு உண்மை பொருள் வேறுவிதமாக கூறியுள்ளனர். சித்தர் ஞானத்தில் இராகுவும் கேதுவும் ஒன்றாக இணைத்து முத்திநிலைக்கு எடுத்து

Koviloor Digital Library

செல்வார்கள். ஆனால் சோதிடத்தில் இராகு கேது எப்பொழுதும் இணையாது என்பது சோதிடத்தின் கொள்கை. சோதிட செய்திக்கும் ஞான செய்திக்கும் முரண்பாடு உள்ளது.

சோதிடத்தில் கூறப்படும் இராகு கேது மனித சாதக கால சக்கரத்திற்கு சற்று கூட தொடர்பு கிடையாது. உலகியலில் வாழும் சாதாரண மக்களுக்கு இராகு கேது செயல்படாது. ஆனால் இறையருள் ஆன்மிக வாசியோக நிலையிலுள்ள இறையருளார்களுக்கு இராகு கேது இரண்டும் செயல்பட்டு சுழினையான நடுநிலைப்பெற்று முத்தி நிலை அடையச் செய்யும். முதன்முதலில் ஆன்மிகநிலையில் கேது என்ற குண்டலினி என்ற மின்கொடி போன்று சுருண்டுள்ளது. கேதுவிற்கு தளிர், சுடர், மின்னும் கொடி, வெண்கதிர், நீறுபூத்த உள்ளுடைத் தீ என்று பொருள் கூறுவர். கேதுவே வாசியோகத்தின் வழியே செயல்பட்டு மேல் மூலாதாரத்தில் இராகு என்ற பெயரில் புருவ நடு மையத்தில் நிற்கும். இந்த நிலை இராகுவுக்குப் பொருள் தீப்பிழம்பு ஒளி — இளகல் — அருள் குழைவு — மென்மையான சக்தியில் வடிவியல் அன்பு குளிமை என்று கூறுவர்.

"பதிவான ராகுவுட கிரகமேது
பாலகனே சொல்லுகிறேன் லிங்கம் லிங்கம்
சேதியான லிங்கமடா பிரம லிங்கம்
கேசரத்திற் பூரணமா மமுத லிங்கம்
விதியான விதிவளரும் விந்து லிங்கம்
வேதாந்த அமுதரசஞ் சொலிக்கும் லிங்கம்
நதியான லிங்க மதில் மனதை நாட்டி
நழுவாமல் மனதிருக்கப் பூசை பண்ணே - 57
கடைப்பிள்ளை ஞான கக்கிசம்
இலக்கின — 80

இராகு என்கிற புருவ நடுவின் நிலையில் இலிங்கமாக தென்படும். இதற்கு சம்பு பதம் என்பார்கள் அந்த இலிங்கமானது பிரம இலிங்கம் என்பர். பூரணமிடமான கேசரத்தில் அமுத லிங்கமாக செயல்படும். விதியை மாற்றி வளரும் இலிங்கம் விந்து இலிங்கம் என்பர். வேதாந்த நிலையில் அமுதரசம் சொலிக்கும் இலிங்கம் என்பர். அந்த இலிங்கத்தின் கண் மனதை ஈடுபடுத்தி நாளும் தொழுது வரவேண்டும் என்று கூறுவதாகும்.

"தானான கேதுவுட கிரகமேது
சங்கையுடன் சொல்லுகிறேன் மூலம் மூலம்
கோனான மூலமுடா ஆதாரந்தான்
குருவான அக்கினி கொண்டிருந்த வீடு
ஊனான அவ்வீட்டிற் குடிலம் ரொம்ப
உத்தமனே அதை யறிந்து மனதை நாட்டித்
தேனான ஓங்காரப் பிரணவத்தைத்
தினந் தோறு மதில் நிறுத்தி இம் மென்றோதே - 60
கடைப்பிள்ளை ஞான கக்கிசம் — 80

கேதுவின் கிரகம் பணியிடம் என்னவென்றால் மூலமாகும். அது மூன்று மூலப்பொருளின் கூட்டாகும். அதாவது சூரியன் சந்திரன் வன்னி — இணைந்த முக்கோண மூலமாகும். அந்த வீட்டில் குருவானவர் குடியுள்ளார். அவர் வடிவம் சோதியாகும். இந்த தேகத்தில் புருவநடு என்ற இடத்தில் மனதை உறுதியாக நிறுத்தி இனிமையான நாத ஒலியான ஓங்காரம் என்ற பிரணவத்தை நாளும் ஊமையை ஓத வேண்டும்.

எட்டிப் பார்க்க முடியாத தகர நிலை என்னும் மிக நுண்மையான அண்டவெளியிலிருந்து பேரான்மாவின் ஒளிவெள்ளச் சிதறலிருந்து வெளிப்பட்ட ஆன்ம ஒளிக்கீற்று சக்தி வடிவமாகி பாம்பின் உருவத்தில் மூலத்தில் சுருண்டு நிற்கும் நிலையை உணர்த்தும் இந்த நிலைக்கு கேது என்பர்

பேரண்ட வெளியிலுள்ள பேரான்மா சக்திவடிவமாகி வெளிப்பட்டு நெருப்புருவமாகி கரை காணா ஞான ஒளி வெள்ளமாய் ஊர்ந்து பரவி விரி நிலையடைந்து ஓர் எல்லையின் வரம்பிற்குள் பாம்பின் தலையாடும் படம் போல் மூலத்தில், மூலத்திலுள்ள நிலைக்கு "ராகு" என்றனர். மேல்மூலத்தில் உறைந்து கடினத்தன்மையுடன் காணப்படும். இந்த நிலைக்கு கேது என்பர். கேதுவானது அருள்நிலையில் இராகு நிலை அடையும் போது மானுட உயிரானது ஆன்மா உயர்நிலை பெறுகிறது. இந்த மானுட

Koviloor Digital Library

ஆன்மாவே இறைவனான பேரான்மாவை நாடும்.

எனவே சாதாரணமான மக்களுக்கு இராகு கேதுக்கள் செயல்படுவதில்லை. செயல்படாத காரணத்தால் அதற்குரிய காலச்சகரம் திசைகளும் பலன்தருவதில்லை.

இராமலிங்க அடிகளாருக்கு இராகு கோள் இலக்கினத்திற்கு இலாபத்தில் உள்ளதாலும், கேது பூர்வ புண்ணிய இடமான கடகத்தில் இருப்பதாலும், பூர்வ ஞான தொடர்பால் அவருக்கு வைராக்கியம் — தைரியம் — துணிவு — பதவி — புகழ் — ஆட்சிமை — தன்னார்வத்துவம் — அருளின் மென்மையும் — கருணையின் மேன்மையும் — உயிரிரக்க குணமும் — தயவுள்ளம் போன்ற நற்குணங்கள் உண்டாகக் காரணமாக அமைந்தது.

இராகு கோள் சனியின் இல்லத்தில் அமர்ந்திருப்பதால் சனியின் குண இயல்பு பெற்று பலனை வழங்கியது. இராகு சனி இல்லத்தில் இருந்ததால் அமுதம் உண்டு அடிகளார் மரணமில்லா பெருவாழ்வுப் பெற வேண்டி பெருஞ்சாதனை செய்து பேரின்ப சுகுண சத்துவமுத்தி என்ற சுத்த பரிபூரண மேல்நிலையில் சித்தி பெற முடிந்தது.

இராகு கோள் சனி வீட்டில் சார்ப்புப் பெற்றதாலும், இலக்கணத்திற்கு இலாபாதிபதியாக நின்றுள்ளதாலும் இலாபாதிபதியான சனிகோள் வீட்டிலிருந்து, இராகுவுக்கு 5ஆம் இடமான திரிகோணத்தில் நின்று முத்தி தரும் வீடான, கும்பத்தை சனி பார்ப்பதாலும், அதே இடத்தை குருவின் பார்வையில் நோக்கம் பெற்றதாலும், அடிகளார் அவரது உடல் கற்பூர தீபம்போல் சோதி வடிவம் பெற ஏதுவாக அமைந்தது.

"குவியான குண்டலியை யிடை பின்னாகக்
சுவர்மையுட னாட்டி யிகநடுவே யேத்தக்
கவியான வசமாகுங் களங்கந் தீரும்
கண்டபடி யானுரைத்தேன் கருத்துள்ளோர்க்கு
அவியான முகஸ்தானங் கண்ட போது
அப்பவலோ மூலரடி யறியலாமே - 5

"புரியலா மிடையோடு பின்னுமாகுப்
புகட்டியே மேல்முகடு தன்னிலேறி
வறியலாம் பன்னிருவர் வசமே யாவர்
வாலையவள் சிறு பெண்ணாய் வருவார் பாரே" - 6

திருமூலர் சோடச ஞானம் — 16

"வாட்டுவாய் குண்டலிதான் நடுவாம் மூலம்
உத்தமனே வாசியது புருவமையம்
தீட்டுவாய் சிவயோகம் ஒளியைப் பாரு" - 17

"ஞானமென்ன புருவமை யஞ்சிவம்
நாடி பாரு அகார உகார தூலஞானம் - 8

மச்சமாமுனி சித்தர் தூலஞானம் — 70

"என்னவே புருவ நடுச் சந்திரன் போல்
இலங்கி நின்ற சம்புபத முனக்குத் தோணும்
நன்னயமாயத் தினந்தோறும் பழக்கம் செய்தால்
நாடியதோர் கற்பூர தேகமாச்சு - 10

பராசரமாக ரிஷஞான உபதேசம் — 22

"அறிவையா யறிவினுட மூலங் கண்டால்
அசடில்லை கற்பூர தேக மாச்சு - 10

கொங்கணர் மெய்ஞ்ஞானம் — 13

இராமலிங்க அடிகளாரின் பிறவி இலக்கினத்திற்கு 12ஆம் வீடு சனியின் சொந்த வீடு கும்பகமாகும். கும்ப சனியின் தெய்வீக அருள்சக்தி மனோன்மணி தாயினுடையது. மனோன்மணி என்ற உயர்சிறப்பு நிலை பெற்ற ஆதிசக்தியாவான்.

அதோ முகங்கொண்ட தெய்வீக பெண்மணியாவாள். கீழ்நோக்கும் பார்வையுடையவள். அருள்சக்தியுமாவாள். மனோன்மணியின் பிரதிநிதி தான் சனியாவார். இலக்கினத்திற்கு 3இல் சனிக்கோள் சுக்கிரன் வீட்டில் நின்று பூர்வ புண்ணிய இல்லமான கடகத்தை நோட்டம் பார்ப்பதுடன் தன்னுடைய வீடான கும்பத்தை 10ஆம் கேந்திரமாக பார்வையிடுகிறார். அடுத்து இலக்கினாதிபதியான குரு 4மிடமான மிதுனத்திலிருந்து அதே சனியின் கும்ப இல்லத்தை 9ஆமிடப்பார்வையாக திரிகோண நோக்கம் பெறுகிறது. சனியின்


Koviloor Digital Library

பூர்வ தெய்வமான மனோன்மணி தாயார் தன் அருள் பார்வையால் 5ஆமிடம் கடகத்தை நோக்கம் பெறுவதால் அருட்பாக்கள் அவரது உணர்வில் கலந்து உள்ளத்தில் பதிந்து வாக்கிலிருந்து அருள் மழைப் போல் பெருகி ஆறு திருமறையாக வெளியானது. அவ்வம்மையின் நோக்கில் செவ்வாயும், கேதுவும் சுகப்பார்வை பெற்றனர்.

முத்தி தரும் 12ஆம் வீட்டை துவாத சாந்தம் என்பர். ஆன்மா அவ்விடத்தில் ஒடுங்கி நின்றால் எல்லாமே வெட்டவெளியாகப் புலப்படும் என்று சித்தர்கள் கூறுவர். புருவ மத்தியிலிருந்து திரைகள் ஆறுதிரைகளால் மறைப்பு உண்டு என்றும் கூறுவார்கள். அதிலிருந்து மீண்டும் திரைகள் விலக்கினால் 18ஆம் நிலையில்ல முதற்படியான முத்திநிலை ஏற்பட்டு அதற்குமேல் போகச் சித்தி நிலை பெற்று பரிபூரண நிலையில் விளங்குவார்கள். சனி 12ஆம் வீட்டை பார்வையினால் கேந்திரமாகவும், குரு திரிகோண கேந்திரம் என்றால் நாற்கோணம். திரிகோணம் என்றால் முக்கோணமாகும். இவைகள் ஒன்றில் ஒன்று ஒடுங்கக் கூடியது. வாயுக்கூறான சனி ஆகாயக் கூறான குருவில் சேர்ந்து நிற்கும். ஆகாயம் வரிவடிவத்தில் வட்டமாக அடையாளம் காட்டப்படுகிறது. இது விந்து நிலை என்பர். அதனால் அடிகளாரின் ஜாதகத்தில் சனியும் குருவும் அடுத்தடுத்து அமர்ந்துள்ளனர்.

கும்பம் என்றால் குடம் என்பர். நமது தேகத்தில் கண்டத்தின் மேல் குடம் வடிவில் கும்பம் என்ற உறுப்பு தேவ உறுப்பாகும். அதில்தான் தெய்வீக தெய்வநிலைகள் உண்டு. அந்த கும்பத்தில் இருந்துதான் சித்தர்கள் அமுதம் எடுத்து உண்டு கற்பதேகமாக மாற்றுகிறார்கள். ஐந்து வித அமுத கற்பம் உண்டவர்களுக்கு மரணமில்லா பெருவாழ்வு பெறுகிறார்கள் என்பது சித்தர்களின் நூலில் பாடி வைத்துள்ளனர்.

"வேளப்பா நிற்குணமே துவாத சாந்தம்
மெய்யான நிற்குணமே மூல சூட்சம்



ஆளப்பா நிற்குணமே ஒளிதான் தேகம்" - 97
கடைப்பிள்ளை ஞானம் — 120

தோணப்பா வாசிகொண்டு ஊதிப் பார்க்க
துவாத சாந்தன்னிலே துலங்கி நிற்கும் - 4
கடைப்பிள்ளை மவுன தீட்சை — 12

"தானான பதவியது தானே தானாய்
சாயுச்சியமான பூரணமுந் தானாச்சு
கோனான குருபதமுந் தானே தானாய்
குருவாகி நின்ற தொரு மாய்மை தானாய்
வானான அண்ட பத வடிவந் தானாய்
மந்திரமாய் நின்ற தொரு மாய் கைதானாய்
தேன அமுர்த ரச பானந்தானாய்
தெளிந்ததுவுங் கழந்த துவுந் தான்றானாச்சே"
அகத்தியர் பூரண காவியம் — 1000

"சுரந்து போம் ஞானாமிர்தம் உடல் தன்னில்
தோன்றிடுமே ஞானவொளி சோதி தானும் - 54
காகபுசண்டர் பெருநூல் — 1000.

குருவும் சனியும் ஆக இருகோள்கள் இராமலிங்க அடிகளாரின் பிறவி தோன்றிய சாதகத்தில் 12ஆம் இடத்தை நோக்கம் பெற்றுள்ளதை மிகவும் சிறப்புடையது.

Koviloor Digital Library

ஆகாயத்தில் வாயு ஒடுங்கும். வாயுவின் உயர்நிலைக் கூறுஎன்னவென்றால் பேரான்மாவாகும். (பரமாத்மா என்பர்) அதாவது பேரான்மா இறைவனைக் குறிக்கிறது. அது காற்றின் வடிவாகும். ஆன்மா அக்கினியின் கூறாகும்.

அக்கினியானது எப்பொழுதும் இயங்க வேண்டுமென்றால் காற்று தேவைப்படுகிறது. காற்று இல்லையென்றால் அக்கினி எரியாது. அசையாது. நீறுபூத்த நெருப்பு போல் இருந்து இறுதியில் தீ கரைந்து அணைந்துவிடும்

அக்கினியானது எப்பொழுதும் மேல்நோக்கி எரியும் தன்மைக் கொண்டது. அதனால் மானுடன் எப்பொழுதும் மேல்நோக்கிய உயர்ந்த நல்ல சிந்தனைகள் பெற்று உயர்வான பரம்பொருள் அடைய முயற்சிக்க வேண்டும். அக்கினி சூரியனாகும். அந்த சூரியன் மானிட ஆன்மாவை குறிக்கும். சந்திரன் உடலை குறிக்கும். அதற்கு மாயை என்று கூறுவர். சில பாடல்கள் காண்க.

"நேரப்பா அக்கினிதான் சீவாத்மாவாய்
நிறைந்து நின்றதுவாயுதான் பரமாத்மாவாய்
பேரப்பா பெருகி நின்ற சடத்துக்குள்ளே" - 21

"ஊனென்ன மடபதிக்கு உறுதியான
உண்மையுள்ள அக்கினியும் வாயுவுங்கூடி
தேனென்ற சீவாத்மா பரமாத்மாவாய்
சென்றிருந்து ஆதார மானார் பாரே - 20
அகத்தியர் அந்தரங்தீட்சை — 400

ஆமப்பா சூரியனே ஆத்மாவாகும்
அழிகிறதோர் சந்திரனே மாயை மாயை
கடைப்பிள்ளை ஞான கக்கிசம் — 80

துலா இராசியில் சந்திரன் புதன் ஆக இருவரும் அமர்ந்து இருக்கின்றனர். சந்திரன் மானை உடலாகச் செயல்படுகிறது. சந்திரனின் உடலான தேகத்தில் மாயை என்னும் அறியாமை இருள் விலக்கி அவ்வுடலை குருவின் திரிகோண பார்வையால் சுத்தமாக்கி அறிவுடலாக (ஞானதேகம்) அதில் நின்ற புதன் துலா சந்திர இலக்கின இராசியில் உள்ளார். புதன் அறிவாகச் செயல்படும். சந்திரனுக்கு மதி என்று கூறுவர். புதன் பேரறிவுவாம் என்றும் கூறுவார்கள். புதன் மானிட உடலில் புருவமேல் நடுநெற்றியில் செயல்படும். கீழ்வரும் பாடலால் அறியலாம்.

"உற்றமுக்கோணப் புருவசுழி புதன் றான்
உகறந்தவா ரமதான வெரு வருந்தான்" - 15
அத்திரி மகாமுனி சித்தர் உண்மை ஞானம் — 34

செந்தியே சிறுவாசற்குள்ளே நின்று
சீவாத்மா பரமாத்மா யிரண்டு மொன்றாய்
நந்தியினாற் பத்தியே முக்கோணமேறில்
நடுவிருக்குங் குண்டலியின் நடனம் பெற்று"
சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் — 16

"மூச்சப்பா நிலையான சீவாத்மாவும்
மூர்த்தி பரமாத்மாவில் முத்தியாச்சு
பட்டினத்தார் பாடல்கள் — 25

"குருவான பீடமடா புருவ மத்தி" - 38
கடைப்பிள்ளை ஞான கக்கிசம் — 80

"ஊனான தேகமது வாசியாகும்
ஒருதீங்கு மில்லை யடா நமன் நாடானே - 33
கடைப்பிள்ளை ஞானம் — 80

"வழியோடு போம் வாயுவு சிவமதாகும்
மார்க்கமுட னுட்புகுதல் சக்தியாகும்" - 21
கடைப்பிள்ளை ஞான கக்கிசம் — 80

துலா இராசியில் அமர்ந்த சந்திரன் மனத்தையும் ஆட்டும் ஆற்றல் உண்டு. அதனோடு சேர்ந்த புதன் அறிவுவெளிப்படுத்தும் ஆற்றல் உண்டு. மனத்தை கட்டும் ஆற்றல் அறிவுக்கு உண்டு. அறிவை விரிவாக்கி செயல்படுத்தும் ஆற்றல் மனத்திற்கு உண்டு. அடிகளார் அமாவாசை கழிந்து இரண்டாம் நான்ள் அவதரித்துள்ளார். சந்திரனால் மனதை அறிவினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கொண்டு மனதை பல செய்திகளில் அலைபாயாமல் இருக்க அறிவு துணை புரிந்துள்ளது. அதேவேளையில் குருவின் திரிகோண பார்வையால் மனமதை செம்மைபடுத்தப்பட்டு மனது தூய்மையாக்கப்பட்டுள்ளது. அந்த

Koviloor Digital Library

மனத்தைப் பற்றி சித்தர்கள் என்ன கூறுகிறார் என்பதை காண்க.

"ஏகாதே மனமதுவே வாசியாகும்
எட்டாதே வெட்டவெளி மனதிலே தான்
போகாதே மனமது யோக மாகும்
புகலுகிறேன் ஞானமது மனமே யாகும்
சாகாதே சந்தேங் கொண்டிடாதே
சார்பான நற்பதவி மனதினால்
வாகாகச் சொல்லுகிறேன் மனமே மந்திரம்
வகை யறியா மானிடராங் கூட்டந்தானே - 254

கூட்டியே மனமதவே நில்லா விட்டால்
குணமில்லை கருத்தை யொன்றாய்ச் சேர்க்கவேணும்
தாட்டிகமா யிம்பி விட்டேன் மறைப்பையெல்லாம்
தாரணியி லென்ன போலாருந் சொல்லார்
பூட்டான பூட்டெல்லா மிதிலே காண்பாய்
புண்ணியனே சொல்லி விட்டே ளுளவையெல்லாம்
காட்டாதே யொருவருக்குங் கைபாகங்கள்
கண்மணியே யம்மையவள் காப்பாள்தானே- 255

யாகோப்பு வாத சூத்திரம் — 400

"செப்பினேன் மனத்தாலே தவமுமாச்சி
சேரவிழ லாவதும் மனமே யாச்சு
ஒப்பினேன் மாயமெல்லாம் மனமே யாச்சு
ஓகோகோ சஞ்சலத்தால் மனம் பேயாச்சு
அப்பு நீ ருப்பது போய் மனமே சென்று
அகண்டத்திற் சேர்ந்து தென்றாலதுதான் போதங்
கொப்பு நேர் மனம் விட்டால் மவுனம் போச்சுக்
கொள்கி யிந்த நூலை விட்டால் ஞானம் போச்சு - 7

கொங்கணர் சுத்தஞானம் — 16

மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை
மன் மனத்துள்ளே மகிழ்ந் திருப்பார்க்கு
மன் மனத்துள்ளே மனோலாய மாமே -620

திருமூலர் திருமந்திரம் — 3000

மேற்கண்ட திறனாய்வினால் அறிவது என்னவென்றால் அடிகளாரின் உடலிலிருந்து இருள் என்ற மாயை விலகி ஒளி என்ற ஞானதேகமாகும். ஞானத்தின் வெளிபாடு ஒளியாகும். எங்கும் எதிலும் எப்பொழுதும் ஒளியானது இருளான மாயை நீக்கும் தன்மையுடையது. அறிவே உடல். உடலே அறிவாகும். அடிகளாருக்கு இறையருளயான சுத்த இயற்கைத்தந்த பெரும்பேறாகும். அதாவது அடிகளாரின் பிறவி இயற்கையிலே அருள்ஞான தேகம் பெற்றவர் என்பது புலனாகும்.

புதன் கோள் தேவர்களின் மகா ஈசனுக்கு ஒப்பிடுகிறார் திருமூலர். சந்திரன் சக்தி என்ற அம்மையின் இயல்புப் பெற்றவர். இவ்விரு கோள்கள் துலாராசியில் கூடியிருப்பது சிவசக்தி சேர்க்கையைக் குறிக்கிறது. சிவசக்தி இணைவே சுத்த பரிபூரண மேனிலை பொருளாகக் கூறுவர்.

வள்ளல் இராமலிங்க அடிகளாரின் மீன இலக்கினத்திற்கு கீழ்யுள்ள இராசி 12ஆம் வீடான கும்ப இராசியாக வந்துள்ளது. கும்ப இராசியை நாற்கோணப் பார்வையாக கனியும், முக்கோண பார்வையாக குருவும் பார்வை செலுத்தி வருகிறார்கள். சனிக்கு கும்ப இராசி தசம கேந்திரமாக நிற்கிறது. அதே போல் மீன இலக்கினத்திற்கு 12ஆம் இராசியான கும்ப இராசிக்கு திரிகோணத்தில் குருவும், குருவுக்கு உண்டான மிதுன இராசியிலிருந்து இரண்டாம் திரிகோணமாக கும்ப இராசி அமைந்துள்ளது. கும்ப இராசியிலிருந்து சனி கேந்திரத்திலும், சனி அமர்ந்த எருது இராசியிலிரந்து தசம கேந்திரமான கும்ப இராசி இடம் பெற்றுள்ளது.

கும்ப இராசிக்கு சனி நாற்கோணமாகவும், குரு திரிகோணமாகவும் வருகிறது. சனி எண்கோணம் பெருகிறது. குரு அறுகோணம் பெறுகிறது. எண்கோணம் சக்தி அம்மையினுடையது. அறுகோணம் சிவகுரு அறுமுக நாயகன் முருகனுடையது. இவருக்கு சுப்பிரமணியர் சிவம் என்பார்கள். ஆதிகுரு தட்சணாமூர்த்தி என்றும் கூறுவார்கள். வள்ளல் பெருமானுக்கு சிவகுரு முருகனும் குருசக்தியும் செவியுரை செப்பி (உபதேசம்) குருமொழி ஓதினார்கள் என்பதை ஆய்வின் மூலம் அறிகிறோம். கீழ்வரும் செய்தியால் கண்டுக் கொள்க.

"வாகான விரண்டையும் தானாருஞ் சொல்லார்
மகத்தான நந்திகுரு வுபதேசிப்பார் - 11

உரோமமாமுனி சித்தர் வராக சூத்திரம் — 25

Koviloor Digital Library

"தேரலாங் குருவினுட உபதே சத்தாற்
சிதம்பரமாம் ரகசியத்தில் ஒடுக்கங் காணே" - 7
தன்வந்திரி ஞானம் — 12

"குருவான பீடமடா புருவ மத்தி - 38
கடைப்பிள்ளை ஞான கக்கிசம் — 80

"கூரான நாதசக்தி சிவமதாச்சு
குருசக்தி சிவம் உடலுமுயிராய் நிற்கும் - 57
கடைப்பிள்ளை கலைக்கியானம் — 120

கும்ப இராசி என்பது அருட்கடலாகும். கும்பத்திற்கு குடம் என்றும் கலசம் என்றும் கூறுவார்கள். அந்த கும்பத்தில் அருட்கடல் அமுதம் உண்டு. கும்பம் என்பது கு = க் + உ; ப் + அ = ப; ம் = ம் என்று பகுத்துப் பார்த்தல் வேண்டும். அதன் விடை க் + ம் + ப் + அ + உ என்று வரும். ஓங்கார வடிவுடையது கும்பமாகும். அந்த ஓங்காரம், அ + அ = பேசும் மொழியாகவும், மகரம் ஊமையாகவும் வருகிறது. அகரம் உகரம் இணைந்து ஓடகாரமாகும். மகரம் ஒட்டினால் "ஓம்" மொழியாகும். "ஓம்" காரம் என்பது நாதாந்த நிலையாகும். வள்ளல்பெருமான் பிரண தேகம் பெற்று, அங்குள்ள அருட்கடலான அமுதகற்பம் உண்டு ஞான தேகம் பெற்றார் என்பது உணராலம். அங்கு உள்ள நிலையை சித்தர்கள் வாயிலாக நாம் அறியலாம்.

"ஆச்சப்பா பிராண நிலை புருவமத்தி
அப்பனே திசையதுவே யாகுமாகும்
மூச்சப்பா நின்றிலங்கும் முனையாந் தீபம்
முத்தி கொண்ட யிடமதுதான் சித்தியாம்"
கடைப்பிள்ளை ஞானத் தண்டகம் — 51

"கூடுகிறேன் மனம் புருவ மைத்தூணிக்
கொடு மனத் தசையாமற் கெட்டி பண்ணி
கூறுகிறேன் அகார முதல் உகாரந் தாக்கி
குவிந்து நின்ற மவுனத்தை யறிவிற் தாக்கே - 68
அகத்தியர் அந்தரங்க திட்சாவிதி — 4000

"என்னவே புருவநடுச் சந்திரன் போல்
இலங்கி நின்ற சம்புபத முனக்குத் தோணும்
நன்னயமாய்த் தினந்தோறும் பழக்கஞ் செய்தால்
நாடியதோர் கற்பூரத் தேகமாச்சி" - 10
பராசர ரிஷி ஞானஉபதேசமட் — 22

"எட்டிரண்டு மொன்று மது வாலை என்பார்
இதுதானே பரிதி மதி சுழினை என்பார்
ஒட்டிமுறிந் தெழுந்த மூன்றெழுத்தை அறியாரையோ
உதித்தெழுந்த முன்றெழுத்தை அறியாரையோ
கொட்டுமொரு தேளுருவாய் நிற்கும் பாரு
கூட்டமிட்டுப் பாராதே குறிகள் தோன்றும்
சுட்ட சுடு காடுமது வெளியுமாகும்
சொல்லுவதற்கு வாய்விளங்கா சூட்சம்தானே" - 25
கருவூரார் பூஜா விதி — 30

"சுறந்துபோம் ஞானாமிர்தம் உடலந்தன்னில்
தோன்றிடுமே ஞானவொளி சோதிதானும்"
காகபுசண்டர் பெருநூல் காவியம் — 1000

"ஆங்கது கொண்டமுர்தரசங் கொண்டாயானால்
அசையாது கூற்றவனு மகன்றுபோவான்
தீங்கான பிரமையுமோ தீர்ந்து போகும்
சிவ சிவ கயிலாச தேகமாச்சு" - 129
சுப்பிரமணியர் சிவம்யோக ஞானம் — 500

"நின்றனடா அப்பொழுது ஆத்தாள் என்னை
நிமிடத்தில் வரவழைத்து ராமா வென்று
பண்டுடைய தேவா வா வென்று கூவி
பகர்ந்திட்டாள் பாலமுதம் பசியைத் தீர்த்து - 5
இராமதேவர் அட்டாங்க யோகம் — 51

வாழ்வதற்கு அமுதர கற்பங் கொண்டால்
வாசியெனிற ஆவியது பிரகாசிக்கும்" - 23
காலாங்கி நாதர் உபதேச ஞானம் — 34

அடிகளாரின் பிறப்பு தோன்றிய சாதகத்தில் கன்னியில் இருக்கும் சூரியனுக்கும் அடுத்துள்ள துலா இராசியில் சந்திரன் இருப்பதால் அது பிறை கோணமாகும். அடிகளாரின் பிறப்பு தோன்றிய சாதகத்தில் பிறை கோணம், நாற்கோணம், முக்கோணம், அறுகோணம், வட்டம் ஆகிய ஆறு ஆதார கோணங்கள் இடம் பெற்றுள்ளன. இவருடைய சாதகத்தில் உள்ளது போல்

Koviloor Digital Library

மானுட உடலிலும் இது போன்ற உள்ளகக் கோணங்கள் உண்டு என்பதை சித்தர் மெய்ஞ்ஞான அறிவியல் நூல்களிலில் நிரம்ப செய்திகள் உண்டு. இதன்மூலம் நாம் அறிவது என்னவெனில் மேனிலைப் பொருள்கள் அனைத்தும் பெற்று, இவைகள் கடந்து நின்றவர் என்பதை ஆய்வில் வெளியாகி உள்ளது.

இராசி சக்கரத்தில் முடிவான 12ஆம் இராசி மீன இராசியாகும். அந்த மீன இராசி இலக்கினமாக அமைந்து பிறப்பின் முடிவைக் குறிக்கிறது. அதுபோல் சூரியன் ஆண்டு கால் கதியில் பங்குனி மாதம் அந்த முடிவாக ஏற்பட்டதால் அடிகளாருக்கு இனி எக்காலத்திலும் பிறவி இல்லை என்று உணர்த்துகிறது. மீனம் உயிர் பதிந்த பிறவி இல்லை என்று இலக்கினத்தின் அதிபதி குருவாகும். அந்த குரு கோள் இரண்டாம் கேந்திரமான நாற்கோணமாக வந்துள்ளது. குருவின் பஞ்சமா திரிகோண பார்வையில் துலா இராசி அமைந்துள்ளது. அந்த இராசியில் சந்திரன் புதனும் சேர்ந்து உள்ளது. குருவால் நோக்கம் பெறுகின்றனர். குரு பார்வை பெற்ற சந்திரன் என்னும் உடல், அவ்வுடலிலிருந்து நின்று, புதன் சந்திரனின் உடலகத்தில் நின்ற மாயையும் இருளையும் அகற்றியது. மீனத்தில் தோற்றம் பெற்ற பசு உயிர் ஆன்மநிலை அடைய ஆன்ம காரகன், சூரியன் உதவியால் நின்றது. இந்தநிலைப் பெற்ற அடிகளாரின் சாதகம் ஞானவியல் மிகுந்த சிறப்புமிக்க சாதகமாகத் திகழ்கிறது. நூதன நவீன வழியில் இறைவன் அருளின் வடிவத்தையும் அதன் உண்மை நிலையைக் கண்டபடி கண்டவாறு சோதிவழிபாடு உருவாக்கி அதற்குரிய ஞானசோதி சபையும் ஏற்படுத்தி வணங்கும்முறையை உண்டாக்கி நடைமுறைக்கு கொண்டு வந்து மரணமில்லா வாழ்வு நல்கும் சோதி வழிபாடு புகுத்தினார்.

இறைவன் அருள் என்றும் சோதி வடிவானவர். அந்த அருளின் சோதி வடிவத்தை உணர்த்த மேல்நோக்கிய திரிகோணமாகும். இது வன்னியின் சின்னமாகும். அக்கினியின் எரிநாக்கு எப்பொழுதும் மேல்நோக்கியே இருக்கும்.

"பாரப்பா ஒளிவான அறிவின் கண்ணும்
பதிவான வெளியதுதன் அண்டத்துச்சி
நேரப்பா அண்டமென்ற உச்சி மீதில்
நிசமான அறிவின் கண்மேலே பாய்ந்தால்
பேரப்பா பெற்றதொரு சீவாத்மாவும்
பேசாத மவுனமென்ற பரமாத்மாவும்
சேரப்பா ஒன்றிரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்தால்
சிவ சிவ வெளி யொளியாயச் சேரும்பாரே - 7

உரோம மாமுனி சித்தர் பிர்மஞானம் — 18

"தானான பூரணமே சோதி சோதி
தன்மயமாய் நின்ற திருஞான தீபம்
வானான ஆகாசம் அண்டத்துச்சி
மகத்தான கமலமடா ஆதி பீடம் - 76

கடைப்பிள்ளை ஞான கக்கிசம் — 80

"தூக்கிய பாதங் கண்டேன் சோதி கண்டேன்
சுத்த வெளிக்குள்ளே யொர கூத்தன் கண்டேன்
தாக்கிய சிரசின்மேல் வைத்த பாதம்
சற்குருவின் பாத மென்றாடாய் பாம்பே - 82

பாம்பாட்டி சித்தர் பாடல் — 82

"நீரப்பா தான் பெருகிப் பூரணமாய் நிற்கும்
நிலையாத பூரணத்தில் நிலைத்து மிக நின்றால்
தேரப்பா மனந்தேறி அந்தமுர்நதங் கொள்ளு
சிவயோக சிந்தையிலே பூரணமாய் நில்லே - 3

அகத்தியர் பரிபூரணம் — 1200

"கண்ணப்பா கொண்நிலை பார்க்கும்போது
கற்பூரத் தீபமபோற் சடமே காணும்
விண்ணப்பா தன்சாய்மைக யத்துப்போச்சு
வேதாந்த அந்த மென்ற தேக மாச்சே - 583

அகத்தியர் பரிபூரணம் — 1200

"பரமான கற்பூரத் தீபத் தேகி
பரஞான கேசரியைக் கண்டாயானால்
இறக்காது தேகமது உறவாய் நிற்கும்
யிருகதிரு மொருக திராயிணங்கிக் காணே - 18

அகத்தியர் பூரண காவியம் — 1000

காணுதற்கு மூலமடா ஆதாரந்தான்
கருத்துறவே ஆதாரந் தன்னில் நின்று
தோணுதற்கு வாசியென்ற திருவுகோலால்
சுழினை தனை நின்று திரை சுற்றித்தள்ளி

Koviloor Digital Library

ஊணுதற்கு ஓங்காரக் கம்பமேற
உற்றகலை ரவிமதியு மொன்றாய்க் கூட்டி
பேணுதற்கு உச்சியென்ற துவாத சாந்தப்
பெரு வெளியை பார்த்தக்கால் சோதியாச்சே - 22
அகத்தியர் பூரணம் — 1000

அடிகளாரின் சாதகத்தில் குருவானவர், உடலான சந்திரா இலக்கின இராசியான துலாவை நோக்குவதோடு கேந்திரம் பெற்று சிறப்பிக்கிறார். குரு அமர்ந்த இடம் நாற்கோணமாகும். குருவின் பார்வை திரிகோணமாகும். இந்த குரு தான் அமர்ந்த இடத்திலிருந்து 3வது திரிகோணமான 9ஆமிடத்தை நோக்க தந்துள்ளார். இது சத்து சித்து — முத்தி தருமிடமான இலக்கினத்திற்கு 12ஆம் இடம் திரிகோணப் பார்வைப் பெற்றதால், அந்த இடம் மேல்நோக்கிய முக்கோணமாகும்.

குருவின் திரிகோணப் பார்வையால் உடலான சந்திரா இலக்கினம் இருளான மாயை அகன்று உடலான வடிவம் கரைந்து பசு உயிரானது ஆன்ம நிலைப் பெற்று இலகுவாகி மண்ணுக்கு போகாமல் விண்ணில் பூதமாகும். ஆகாயம் என்பது வடிவமில்லாது கரையற்ற எல்லை கடந்து முடிவற்ற மேனிலை சிறப்பிடமாகும்.

"ஏறினேன் சதுரகிரி வட்டமேறி
யேகாந்த வெளியொளியைப் பார்த்து மைந்தா
மீறினேன் அகார மதிற் செயல் தன்னாலே
மின்னொளியி னமுர்தரச பானங்கொண்டு
தேறினேன் சாகாத கால் மேல்நின்று
தெளிந்து கொண்டு போகாதப் புனலைக் கண்டு
ஆறினேன் வேகாத தலையைக் கொண்டு
அடங்கினேனப் பொழுது அடங்கினேனே - 50
புலிப்பாணி சித்தர் பூஜா விதி — 50

"அருவான அய்யாவே கும்பமேறி
அகண்டவரை யகண்டவரை காணுவய - 14
இராமதேவர் சுத்தம்முறை — 52

"அணுவுங் கணுவாய் அருட்சோதி யென்ற குரு
மணியாய் விளங்கும் மகிமையறி மாங்குயிலே
- 41
சகோதநாத யோக சித்தர் பாடல் —
42

அடிகளாரார் தோன்றி பிறப்பு இலக்கினத்திற் 7வது இடம் கன்னி இராசியாகும். இந்த இராசியில் சுக்கிரன் வலிமை இழந்து நீச்சமடைந்துள்ளது. சூரியன் அதே இராசியில் அமர்ந்து சமநிலை பெற்றுள்ளான். சூரியனும் சுக்கிரனும் பகைகோளாகும். மாயை என்ற சுக்கிரனை ஒளி என்ற சூரியனால் வளைக்கப்பட்டு சிறைப்படுத்தி உள்ளான். இதனால் இல்லற வாழ்க்கை ஏற்றம் தராது போய்விட்டது. மேலும் சூரியன் பூமியைப் போல் சுற்றி பேரண்ட வெளியில் நகர்ந்து செல்கிறது. இது நட்சத்திர வடிவமுடையது. ஆனால் சுக்கிரன் மாறுபட்ட இயல்புடையது. இக்கோளுக்கு சுயவொளி கிடையாது. இது சூரியனை சுற்றி வருகிறது. இக்கோள் நேர்மாறான திசையில் சுற்றுகிறது. பூமியில் சூரியன் கிழக்கே எழுந்து ஒளி தோன்றும். ஆனால் சுக்கிரனில் மேற்கே சூரியன் எழுந்து ஒளி பரவும். அதனால் இவ்வடிவங்கள் முரண்பாடான இயல்புகள் கொண்டது.

சூரியனும் சுக்கிரனும் ஒரு இராசியில் அமர்வது நல்லதல்ல. அப்படி இருந்தால் இல்லறவாழ்க்கை துண்டிக்க ஏதுவாக அமையும். இல்லற வாழ்க்கை சுவை ஏற்படாது. சுகமும் விளங்காது. உலகியல் வாழ்க்கை நடப்பு நிகழ்ச்சிகள், இல்லற அக உறவுகள் பாதிக்கப்பட்டு எப்பொழுதும் விலகியே இருக்கும். உலகியல் வாழ்க்கையில் பல கசப்பான அனுபவங்கள் தந்துவிடும். சுக்கிரன் எப்பொழுதும் உலகியல் வாழ்க்கையில் மாறுபட்ட கருத்தை உருவாகும் கோளாகும். சுக்கிரனின் நீச்ச நிலையில் வள்ளல் பெருமானுக்கு அருளியல் வாழ்வுக்கு மிகவும் ஏற்றம் தந்தது. சிவயோக வாழ்வு தரவே இலக்கினத்திற் எட்டாமிடம் அமைந்த சுக்கிரன் 7இல் கன்னியில் வந்து நீச்சநிலை அடைந்தது. இதனால் இல்லற வாழ்க்கை முழுதுமாக வலிமை இழந்தது. கன்னியிலிருந்த சூரியன் தந்தது. சூரியன் நட்பு இடமான மீன இலக்கினம் நோட்டமிடுவது, அந்த மீன இலக்கினத்தில் அவதரித்த உயிர் ஆத்மகாரகன் சூரியன் பார்வையால் ஒளிவெளியாக நின்றது. அதே வேளையில்

Koviloor Digital Library

வான்வடிவமானது அவருடைய உடல். ஒளியில் கரைந்த தேகமும் ஒளி துலங்கி சோதி வடிவம் பெற்றது.

"தானப்பா சரீர மியெடாமல் மோட்ச
சாதனையை அடைகின்ற வழியை சொல்ல
மீனப்பா போன்ற விழியுமை யென் னாத்தாள்
வேல் பிடித்த வேலனெனப் பெயருமிட்டாள்
தேனப்பா தேகதிதி அநித்திய மென்றும்
சீவான்மா நித்திய மென்ற றிந்து கொள்ளே" - 4
சுந்தரானந்தர் சிவயோகம் — 40

"கதித்தவுடல் சக்தியது பாசமாகும்
மானென்ற பசுதானு முயிரான சிவமாம்" - 42
அகத்தியர் பரிபூரணம் — 1200

"ஊஎனன்ன மடபதிக்கு உறுதியான
உண்மையுள்ள அக்கினியும் வாய்வுங் கூடி
தேனென்ற சீவாத்மா பரமாத்மாவாய்
சென்றிருந்து ஆதாரமானார் பாரே - 20
அகத்தியர் அந்தரங்க தீட்சா விதி — 400

"பாரப்பா ஒளிவான அறிவின் கண்ணும்
பதிவான வெளியதுதான் அண்டத்துச்சி
நேரப்பா் அண்டமென்ற உச்சி மீதல்
நிசமான அறிவின் கண் மேலே பாய்ந்தால்
பேரப்பா பெற்றதொரு "சீவாத்மாவும்"
பேசாத மவுனமென்ற "பரமாத்மாவும்"
சேரப்பா ஒன்றிரண்டு ஒன்றாய் சேர்ந்தால்
சிவசிவ வெளி யொளியாய்ச் சேரும்பாரே - 7
உரோம மாமுனி சித்தர் பிர்மஞானம் — 18

அடிகளாரின் சாதகத்தில் கண்ட நிலையில் சூரியன் சிவம். சுக்கிரன் சக்தி ஆக இருவரும் 7ஆம் இடம் கேந்திரம் பெற்றது. அடிகளாருக்கு இல்லற வாழ்க்கை நீக்க செய்தது. சிவயோக வாழ்க்கை தந்தது. இரண்டு கோள்கள் இல்லறமிடத்தில் ஒன்றாகச் சேர்ந்து, ஒன்றுக்கொன்று பகைக் கோள்களாக மாறியது. ஆறுக்குரிய சூரியன் — எட்டுக்குடைய சுக்கிரன் இல்லறமிடமான 7வது இடத்தில் கூடியுள்ளதால், உலக வாழ்க்கை துண்டாக்கப்பட்டு முற்றுப் புள்ளி பெற்றது. சுக்கிரன் பெண்ணியல்பு மிகுந்த கோள். சூரியன் ஆணியல்பு மிகுந்த ஒளிக்கோள். சுக்கிரன் கன்னியில் நீச்சமடைந்து வீழ்ச்சியடைந்தார். சூரியன் கன்னியில் சமமாகி நின்றார். நீச்சமும் — சமமான இரண்டும் உலகியல் இல்லற வாழ்க்கை குறிக்கும் 7ஆம் இடம் துண்டிக்கப்பட்டு விட்டது. இதுவே இல்லற வாழ்க்கைக்கு ஓர் முற்றுப்புள்ளியாக அமைந்தது கீழ்கண்ட பாடலால் அறிக.

"மோச மென்ன செகமெல்லாம் மால் மாயம்
முத்திவாச லடைத்து பெண் மயம்
வாசமென்ன திரோபவ மாயந்தான்
மயக்க மென்ன திராபவ மாயந்தான்
பீசமென்ன விதுக்கெல்லாம் நானென்று
பெரிய பீசம் பிறப்பிறப்பாச்சு
காசமென்ன அருமாந்த கண்ணுக்குள்
கலந்த மாயைத் திரை வந்து சூழ்ந்ததே - 6
மச்சமாமுனி சித்தர் தூல ஞானம் — 10

"செறிந்து நின்ற மும்மலங்கள் சேர மாறும்
செய லெல்லாஞ் சிவன் செயலாய்தி தெளியும்
பாரே - 6
சுந்தரானந்தா மெய்ஞ்ஞானம் — 16

"சரியாக ஆத்துமத்தின் கசட்டை தீர்க்கும்
சற்குருவைத் தேடிப் போய்ச் சரண செய்தால்
அரிபாதங் காண் பிப்பா ரனேகருண்டு
அப்புவியில் அவர்களை நீ தேடுவாயே - 26
அகத்தியர் ஞான விளக்கம் — 35

காச்சப்பா மூலமென்ற வன்னிதன்னாற்
காய்ச்சியே அத்தேகம் கசடு நீங்கும்
போட்டப்பா கசடதுதான் நீங்கிப் போனாற்
போத மென்ற ஞானநெறி புனித மாமே - 20
அகத்தியர் பஞ்சாட்சரம் — 37

வள்ளல் பெருமானின் சாதகத்தில் சூரியனும் சுக்கிரனும் ஆக இருகோள்கள் மீன பிறவி இலக்கினத்தை பார்வையிடுவது நல்லது. சுக்கிரன் அசுர குரு என்பர். உலகியல் வாழ்க்கை அனைத்து சுகங்கள், அனுபவிக்க வேண்டுமென்றால் அவனுடைய தயவு வேண்டும். சுக்கிரன் நட்பு — ஆட்சி — சமம் போன்ற இடங்களில் இருக்க வேண்டும். பகை

Koviloor Digital Library

— நீச்சம் — 6—8—12இல் இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் உலக சுகங்கள் அனுபவிக்க இடம் தராது. சுக்கிரனின் அதிதேவர் ஈசனாவார். நீச்சம் பெற்ற சுக்கிரனால் இல்லற வாழ்க்கை வழங்க மறுத்து, துறவர அருளியல் வாழ்க்கைக்கு செல்ல தூண்டுகோலாக அமைந்தது சுக்கிரன்.

சுக்கிரன் என்ற ஈசனும் — சூரியன் என்ற சதாசிவனும் சிவ சார்பு பெற்ற கிரகமும், நட்சத்திர கோளுமாகும். சூரியன் சதாசிவனுக்கு பிரதியத்துவம் என்பதால் அருஉருவமாகும். மேலும் சுக்கிரனின் இருள் என்ற மாயையாகும். சூரியன் ஒளி என்ற உயிரோட்டமுள்ள நட்சத்திரமாகும். இருளை ஒளியினால் சிறைப்பிடிக்கப்பட்டு, மீன இலக்கினம் தேவ குரு பார்வையிடுகிறார். சீவான்மாய எப்பொழுதும் மாய்வதில்லை. ஆனால் தேகம் மாய்ந்து விடும். மேலும் தேகம் தந்த சந்திரன் சக்தியாகும். அதனை குருவால் பார்க்கப்படுவதால் சுத்த தேகமாகிறது. அந்த தேகத்தில் இருந்த மாயை இழக்கச் செய்தது துலா சந்திர இலக்கினம் துலாவின் அதிபதி சுக்கிரனாகும். அவை பின்நோக்கி தள்ளப்பட்டு விரையம் பெற்றது. இவ்விரு கோள்களின் பார்வையின் தீட்சை பெறப்பட்டு பொய்யென்ற தேகம் மெய்யாக்கப் பெற்றது. ஈசனும் — சதாசிவம் என்ற சுக்கிர சூரியனுக்கிடையில் மகேசன் என்ற நிலையில் புதன் மறைத்தல் தொழில் நடத்துபவராவார். சூரிய — சுக்கிர இயக்கத்தால் அடிகளாரின் தேகம் புதனால் மறைத்து அருவுருவமாகி மீண்டும் அருவுருவத்திலிருந்து உருவமாக தோன்றக் காரணமாக சில நாள் அமைந்திருக்கிறது. இதற்கு காரணமாக குரு செவ்வாய் புதன் ஆக மூன்று கோள்கள் செயல்பட்டது. கீழ்வரும் பாடலால் அறிக.

“ஆமப்பா சூரியனே ஆத்மாவாகும்
அழிகிறதோர் சந்திரனே மாயை மாயை
ஓமப்பா மாயைதனை நீக்கி மைந்தா
ஒளிவான சூரியனை நம்பினாக்கால்
போமப்பா சகல வினை யொழிந்து நல்ல
பொற்கமலம் போலவுமே தேகமாகும் - 46
கடைப்பிள்ளை ஞான கக்கிசம் — 80

“உல்லாச தேகம் ஊறலற்று விட்டால்
உறுதியாய் தாம்பூரம் ஊறல் போமென்று
எல்லைதனில் என் குருவும் எனக்கு உரைத்தார்
ஆதலால் புலத்தியனே உனக்காய் சொன்னேன்”
- 152
அகத்தியர் அந்தரங்க தீட்சாவிதி — 400

வள்ளல் பெருமானின் சாதகத்ததில் சூரியன் புதன் இல்லத்திலிருந்து பிறப்பு நிகழ்ந்த ஆன்ம இலக்கினமாக நின்ற இடத்தைப் பார்வையால் புனிதமடையச் செய்தார். உயிர் சூரியன் என்பதால் ஆன்மிக ஞானமயமான உன்னதநிலையடையச் செய்தது. இதனால் அன்னார் தாம் பெற்ற மரணமில்லா பெருவாழ்வு எல்லா மக்களும் பெற வேண்டும் என்ற அழைப்பு விடுத்தார். ஆன்மா சூரியன், சூரியன் அக்கினி. எனவே மானுட ஆன்மா சூரியனுக்கு ஒப்புமையாகக் கூறுகிறார்கள். வாயுவே பேரான்மாவாகும். அது சனி என்பார். சனீசனை காற்றுக்கு ஒப்புமையாகக் கூறப்படுகிறது. அதுவே முதலும் முடிவாக நிற்கும். இக்கருத்தை வலியுறுத்தும் சித்தர்களின் மறைக்கூற்றுகள் நோக்குக.

“நேரப்பா அக்கினிதான் சீவாத்மாவாய்
நிறைந்து நின்ற வாய்வதுதான் பரமாத்வாய்ப் - 24
அகத்தியர் சௌமிய சாகரம் — 1200

“வழியோடு போம் வாய்வு சிவமதமாகும்
மார்க்கமுட னுட்புகதல் சக்தியாகும் - 21
கடைப்பிள்ளை ஞானம் — 80

“ஆமப்பா சூரியனே ஆத்மாவாகும்
அழிகிறதோர் சந்திரனே மாயை மாயை” - 46
கடைப்பிள்ளை ஞான கக்கிசம் — 20

“கூரான நாதசக்தி சிவமதாச்சு
குரு சக்திசிவம் உடலுமுயிராய் நிற்கும் - 57
கடைப்பிள்ளை ஞானக்கலை — 120

“மூச்சப்பா நிலையான சீவாத்மாவும்
மூர்த்தி பரமாத்மாவில் முத்தியாச்சு
பட்டினத்தார் பாடல் — 25

Koviloor Digital Library

"ஊனென்ன மடபதிக்கு உறுதியான
உண்மையுள்ள அக்கினியும் வாய்வுங் கூடி
தேனென்ற சீவாத்மா பரமாத்மா வாய்
சென்றிருந்து ஆதார மானார் பாரே - 20

அகத்தியர் அந்தரங்க தீட்சாவிதி — 400

வள்ளல்பெருமானின் சாதகத்தில் சனி நின்ற ஐந்தாமிடத்தில் சூரியன் நிற்க, சூரியன் நின்ற கன்னியிலிந்து சூரியனுக்கு 9ஆமிடத்தில் சனி நிற்கிறார். 1, 5, 9 ஆக இவைகள் திரிகோணங்கள் என்பர். இந்த திரிகோணமான இடம் தாயின் கருவூராகும். இந்த தேகத்தோட கருவூரான முக்கோணத்தில் மறுபிறப்பு ஒருவருக்கு ஏற்படுமானால் அவள் முத்தி பெறும் வாய்ப்பு உண்டாகும். அது பல கோடியில் ஒருவனுக்கு மட்டும் உண்டாகும் என்று சித்தர்களின் மறைகளில் ஓதப்படுகிறது. இக்கூற்றை கவனிக்கவும்.

"வழுத்துகின்ற சித்தர்களே வரிசை கேளு
வகையுடனே மறுபிறப்புப் பிறந்தாயானால்
அழுத்தமுள்ள யோனிதனிற் பிறப்பில்லை
அரனுடனே சேர்வதில்லை யையா கேளு - 85

"பரத்தோட சேர்ந்தவர்கள் பரமே யாவார்
பரப் பிர்மப் பிறவியதா யெங்குந் தோன்றும்
வரத்தோட யருள் பெற்ற மனந்தேறி
வாசியென்ற குதிரை யினால் வீடு கட்டிக்
சுரத்தோடே மனையதனி லறிவற் சேர்ந்தால்
தயவான மறுபிறப்பு யிது தாயானால்
திரத்துதோடே இந்த வகை யறிந்தாயானால்
சிவத்தோடே சேருவதில் செயம் பெற்றாயே - 92

சுப்பிரமணியர் ஞானம் — 100

"காட்டியே சொல்லிவிட்டே னறிந்து கொள்ளு
கருவான கருவூரிற் கால் தான் தோன்றும்
நீட்டியே காலதனை யின்ன தென்று
நேர்மை யுடன றிந்து கொண்டார் பூரணந்தான்
காட்டியதோர் பூரணத்தை தெரிந்துக் கொண்டால்
குறியான சிவயோகம் முடிவமாச்சு
நாட்டியதோர் சிவயோக முடிந்ததானால்
நல்லதொரு ஞானந்தான் சித்தியாச்சு

சமதக்கினி மாமுனிவர் வாஸ்துதரிசனம் — 31

"ஞானியென்று வொரு கலையில் காய்ந்ததோசொல்
நர செனமங் கோடியிலே யொருவனப்பா - 16

அகத்தியர் பூஜா விதி — 216

வள்ளல் பெருமானின் ஜாதகத்தில் சூரியன் சதாசிவனாகும். சனி மனோன்மணி. சதா சிவன் — மனோன்மணி அமர்ந்த இடம் வட்டமாகும். சனீசன் — சூரியன் நின்ற இடம் அறுகோணமாகும். பேரான்மா சிவத்தைக் குறிக்கும். ஆன்மா சக்தியைக் குறிக்கும். சிவசக்தி சேர்க்கையே பரிபூரண நிலையின் முடிவைத் தருகிறது. ஆன்மாவும் — பேரான்மாவும் இணைவதே பூரணமாகும். இப்படி இணைவதால் மறுபிறவி ஏற்படாது. இறப்பொழிக்கும். பிறவா நெறிகூடியது. ஆன்மா சோதி நிலை அடைவதே சாகாதக்கல்வி என்னும் சாகாக்கல்வி என்பர்.

"தேனென்ற சீவாத்மா பரமாத்மாவாய்
சென்றிருந்து ஆதாரமானார் பாரே" - 20

அகத்தியர் அந்தரங்க தீட்சா விதி — 400

"பாரப்பா ஒளிவான அறிவின் கண்ணும்
பதிவான வெளியது தான் அண்டத்துச்சி
நேரப்பா அண்டமென்ற உச்சி மீதில்
நிசமான அறிவின் கண் மேலே பாய்ந்தால்
பேரப்பா பெற்ற தொரு சீவாத்மாவும்
பேசாத மவுனமென்ற பரமாத்மாவும்
சேரப்பா ஒன்றிரண்டும் ஒன்றாய் சேர்ந்தால்
சிவ சிவா வெளி யொளியாச் சேரும் - 7

மாயையில் பிறந்த பசு உயிர் சுத்தமாகி உயர்வு பெறும்போது ஆன்மா என்ற மேனிலைப் பெற்று அது தங்குமிடங்களில் சிறப்புகள் எடுத்துக் கூறும் சித்தர்களின் பாடல்கள் என்ன கூறுகிறது என்பதை அறிக.

"ஆவியென் பிராணனது புருவமீது
அடங்கினால் மறுபிறவி யுண்டாம் பாரு
ஆவியென்ற பிராணனது முக்கோணத்தி
லடங்கினால் மறுபிறவி யில்லை யில்லை
ஆவியென்ற பிராணனது மூலத்துள்ளே
அடங்கினால் வெளியொளியா யமர்ந்து நிற்கும்
ஆவியென்ற பிராணனது அறு கோணத்தில்

Koviloor Digital Library

அடங்கினால் வெளியோடு வெளியாய்ப் போமே - 34

காலாங்கி நாதர் உபதேச ஞானம் — 34

மேலும் ஆன்மா உகாரமாகும். பேரான்மா அகரமாகும் இது இரண்டும் ஒன்று சேர்ந்தால் ஓங்காரம் என்பர். அடுத்து அகரம் + உகரம் புணர்ந்தால் யகரம் என்ற இலிங்க வடிவம் பெரும். இந்த சேர்க்கையே பத்து என்ற சூரியன் மகேசன் வீடு கன்னி வீடாகும். ஆக இவ்விரு வடிவங்கள் உயிரும் உடலுமாக இருப்பதால், ஆன்மா என்ற உயிரும் பேரான்மா என்ற பேருயிர் ஒன்றையொன்று இணைத்துக் கொண்டது. இந்தநிலையை சித்தர்கள் என்ன கூறுகிறார்கள் என்று அறியலாம்.

"பாரப்பா அகாரமது சிவமுமாச்சு
பதிவான சிவமதுதான் உயிருமாச்சு
நேரப்பா உகாரமது சக்தியாச்சு
நேர்மையுள்ள சக்தியது உடல்தானப்பா - 649

அகத்தியர் சௌமிய சாகாரம் — 1200

"கதித்த வுடல் சக்தியது பாசமாகும்
மானென்ற பசுதானு முயிரான சிவமாம் - 42

அகத்தியர் பரிபூரணம் — 1200

"மூச்சப்பா நிலையான சீமாத்துவாமாவும்
மூர்த்தி பரமாத்மாவில் முத்தியாச்சு" - 397

அகத்தியர் பரிபூரணம் — 1200

"கோனென்ற சிகாரமாட சிவரூபந்தான்
கொள்கி நின்ற றீங்காரஞ் சக்தி ரூபம்
ஊனென்ற சக்தி சிவ மொன்றாய் நின்று
உறுதியுள்ள வோங்கார வட்டாமாச்சு - 29

கடைப்பிள்ளை ஞான கக்கிசம் — 80

"ஆமப்பா சூரியனே ஆத்மாவாகும்
அழிகிறதோர் சந்திரனே மாயை மாயை
ஓமப்பா மாயைதனை நீக்கி மைந்தா
ஒளியான சூரியனே நம்பினாக்கால்
போமப்பா சகல வினை யொழிந்து நல்ல
பொற்க மலாமம் போதவுமே தேகமாகும் - 46

கடைப்பிள்ளை ஞான கச்சிகம் — 80

"ஊனான தேகமது வாசியாகும்
ஒரு தீங்கு மில்லையடா நமன் நாடானே - 33

கடைப்பிள்ளை மெய்ஞ்ஞானம் — 80

"சேதியல்ல பலகோடி கொருவனுண்டு
தெளிந்து மனம் விரியாமல் நிலைநிறுத்தி
போதியா திருந்து சுழிமுனையின் சூட்சம்
பேரறிவாற் கண்ட றிந்தாற் சித்தி தானே -1

ஜெயமுனி திருமந்திரம் — 37

"சிகாரம் சிவமாய் வகாரம் வடிவாய்
யகாரம் உயிரென் றறையலு மாமே - 952

திருமூலர் திருமந்திரம் — 3000

குரு தன்னிடத்திலிருந்து இலக்கினத்திற்கு பத்தாமிடமான தன் சொந்த வீட்டை ஆன்மா சுத்தமாகும். இலக்கினத்திற்கு நாலில் அமர்ந்த குரு தன்னிடமான 7ஆம் பார்வையாக பெற்றது கடல் போன்ற ஞான நூல்கள் ஆறுதிருமுறையாக வெளிப்பட காரணமாய் அமர்ந்த, புதன் கல்வி அறிவு ஆகிய நிலை ஏற்படுத்தக் கூடியது. மிகுந்த கல்வியும், மிகுந்த ஞானமும், உயர்ந்த கல்வியான சாகாக்கல்வி அறியவைத்தது. குரு மிதுனத்தில் அமர்ந்து யாருடைய பார்வையும் பெறாமல் உன்னத நிலை பெற்றதால் தெய்வீக அருளும் அறிவும், சித்தாந்த நாதாந்த நிலை பெரும் ஞானக் கல்வியும் பெற சிறபப்ாக செயல்பட்டது வள்ளலாரின் சாகாக்கல்வி என்ற சாகாக்கலை அறியும் வாய்ப்பு பெற்றார். குருவின் அற்புத பார்வையால் கடல் போன்ற திருமறையும், திருவருட்பாவும் பாடி உலகுக்கு தந்துள்ளார்.

வள்ளல் பெருமான் பாடியருளிய திருவருட்பாக்கள் ஓதினாலும் ஓதி உணர்ந்தாலும், அவர்களின் மனம் மாசு நீங்கும். மாயை சுழியும். மனம் தெளிவு பெரும். சாகாக்கல்வி ஓதும் வள்ளல் பெருமானின் திருவருட்பாக்க்ள் சாகாக்கலை உணர்த்த வேண்டியே மீன வீடு இலக்கினமாக அமைந்து குரு புதன் வீட்டில் அமர்ந்து, அங்கிருந்தது தனுசு வீடான தானமர்ந்த வீட்டிற்கு 7மிடமாகவும், இலக்கினத்திற்கு 10மிடமாகவும் பார்வையும், பக்கமும் பெற்று சிறப்பினை ஏற்படுத்தியது.

Koviloor Digital Library

"மனிதனாய் பிறந்தாக்கால் சாகாக்கல்வி
வாசிக்கும் சிவமோடு வாழ்க்கை சேர்வான் - 56
அகத்தியர் பூரண நுட்பம் — 216

"நாடப்பா சாகாத கல்வி தன்னை
நலமாகக் கற்பதற்கு வுன்னைத் தேற்று - 7
இராமமாமுனிசித்தர்
சிவயோகஞானம் — 13

"சாகாதிருப்பதற்குதான் கற்குங்கல்வி யன்றோ
வாகான மெய்க்கல்வி வகுத்தறி நீ கன் மனமே - 66
இடைக்காட்டு சித்தர் ஞான நுட்பம் — 130

"குருபத்த வைத்திருந்தால் அறுபத்துநாலும்
கூடாதோ அறுபத்து நாலுந்தானே
மறுபத்து வந்திடும் அறுபத்தைந்தாய்
மாவுடலம் பெலுத்திடுமே சுகமாம் வீடு - 466
காகபுசண்டர் பெருங்காவியம் — 1000

"கோனவனாய் நின்று குறி மூலாதாரம்
குருவான ஆதாரம் சிகார மாச்சு" - 36
கடைப்பிள்ளை ஞானத் தண்டகம் — 36

வள்ளல் பெருமானின் சாதகத்தில் துலாவில் அமர்ந்துள்ள சந்திரன் 7மிடமான மேசத்தையும் இலக்கினத்திற்கு 2ஆமிடமான அதே இடத்தை தனது குறைந்த கலையுடன் பார்வை பெற்றதால் குடும்ப வாழ்க்கை எடுபடவில்லை. அந்த இடத்தின் அதிபதி செவ்வாய் கடகத்தில் நீச்சநிலை அடைந்து கேதுவுடன் இணைந்ததால் இராகுவின் பார்வையால் ஞானஅருள் வாழ்க்கையான சிவயோக வாழ்க்கை வள்ளல் பெருமான் பெற மிகவும் துணையாக அமைந்தது. இலக்கினத்திற்கு 2ஆமிடமாகவும், சந்திரா இலக்கினத்திற்கு 2ஆமிடமாகவும் அமைந்து வந்துள்ளது. சிவயோக வாழ்க்கைக்கு சிறப்பு பெற்றது. இராகு இலக்கினத்திலிருந்து 11மிடமான சனீசனின் வீட்டிலிருந்தும், சந்திர இலககினத்திற்கு கேந்திரத்திலிருந்தும், இராகுவுக்கு 7மிடமான கடகத்திலிருந்தும் செவ்வாயும் கேதுவையும் சிறப்பான பார்வையாகும். இராகுவின் சாகாத்தலையாகவும் கேது வேகாக்காலாகவும் அமைந்தது. அப்படி அமைந்ததால் தான் அவருடைய சிவயோக செந்நெறி வாழ்க்கை சிறப்படைந்தது. இக்கருத்தை சித்தர்களின் வாயிலாக நாம் உணரலாம்.

"தூக்கிய பாதங் கண்டேன் சோதி கண்டேன்
சுத்த வெளிக்குள்ளேயொரு கூத்தன் கண்டேன்
தாக்கிய சிரசின் மேல் வைத்த பாதம்
சற்குருவின் பாதமென்றாடாய் பாம்பே - 82
பாம்பாட்டி சித்தர் பாடல்கள் — 120

"காட்டியே சொல்லி விட்டே னறிந்து கொள்ளு
கருவான கருவூரிற் கால்தான் தோன்றும்
நீட்டியே காலதனையின்ன தென்று
நேர்மையுடன றிந்து கொண்டார் பூரணந்தான்
கூட்டியதோர் பூரணத்தைத் தெரிந்து கொண்டால்
குறியான சிவயோகம் முடிவுமாச்சு
நாட்டியதோர் சிவயோக முடிந்ததானால்
நல்லதொரு ஞானமுந்தான் சித்தியாச்சு
சமதக்கினி மாமுனிவர் வாஸ்து தரிசனம் — 31

"ஆகா புலையனடி அஞ்ஞானந்தான் பேசி
சாகாத் தலையறியேன் தன்னறிவு தானறியேன்
வேகாக் காலறியேன் விதிமோச மானனடி
நோகாமல் நொந்தல்வோ என் கண்ணமா
நொடியில் மெழு கானனடி" - 25
அழுக்கண்ணி சித்தர் — பாடல் — 200

"நேர்ந்து பார் நிட்டை விதியோக மார்க்கம்
நினை வறிந்து காலறிந்து அறிவில் நின்று
தேர்ந்து பார் சிவதீட்சை சக்தி தீட்சை
திறம் பெற்றார் மெய்ஞ்ஞானச் சித்தராமே - 102
இராமதேவ சித்தர் தண்டகம் — 109

"சாகாத காலும் சவுக்கடிக்குள் மீதினிலே
தந்திர மாகச் சதுர் கோண மீதினிலே
வோகத் தலையும் அமுதமது உண்ண
வெட்ட வெளியாகும் வேத பரஞ்சோதி - 240
திருவள்ளுவர் ஞான கற்பம் — 300

"தீரட வுந்தியிலே ஓங்காரந்தான்
திரமான கண்டத்தில் வேகாக் காலைப்
பாரடா நாட்டத்திற் சாகாச் சென்னி
பரமா வெளிவீட்டிர் அகார மாச்சு

Koviloor Digital Library

சேரடா குண்டலிக்குள் உகாரந்தானுந்
சிவ சிவ யுகமட்டுஞ் சமாதிக்குள்ளே - 27
பிரம முனி சித்தர் பிரமஞானம் — 36

"சாகாமலிருக்க வென்றாற் றாயைப் போற்று
சரணமென்று நந்தியடி தெண்டம் பண்ணு
வேகாமல் நின்றதொரு தலையை கேளு
விதமாகச் சாகாதக்காலைக் கேளு
வாகான விரண்டையுந் தானாருஞ் சொல்லார்
மகத்தான நந்திகுரு வுபதேசிப்பார் - 11
உரோமமா முனி சித்தர் வராகநுட்பம் — 25

"சாகாத கல்வி தர மறிதல் வேண்டு மென்றும்
வேகாத காலுணர்தல் வேண்டுமுடன் - சாகாத்
தலையறிதல் வேண்டுந் தனியருளால் உண்மை
நிலையடைதல் வேண்டும் நிலைத்து - அருட்பா.
"சாகாத கல்வியிலே தலைகாட்டி கொடுத்தீர்
தடையறியா கால்காட்டி தரம்பெறவும் அளித்தீர்
- அருட்பா
"திருவடி ஞானத் சிவமாக்கு விக்குந்
திருவடி ஞானஞ் சிவயோகஞ் சேர்க்கும்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்கும்
திருவடி ஞானமே திண் சித்தி முத்தியே"
திருமூலர் திருமந்திரம் — 3000

வள்ளல் பெருமானின் சாதகத்தில் துணைக் கோளான சந்திரனைத் தவிர மற்ற கோள்கள் தன் இராசியில் இருப்பதைவிட பிற இராசிகளிலிருந்து நோக்கம் கூட்டு சேர்ந்து நிற்பது வலிமை அதிகமாகும். குரு மீனத்திலிருந்து துலா இராசியும், தனுசு இராசியும், கும்ப இராசியும் பார்ப்பது மிகச் சிறந்த பார்வையாகும். குரு எவ்வித கிரகப் பார்வையில் சிக்காமல் இருப்பது மேலும் சிறப்பானது. சனீசனும் — குருவும் அடுத்தடுத்து இருப்பது காற்றும் — ஆகாயமுமாகும். இரு பூதப் பொருள்கள் நட்புடையது. அதேபோல் துலா இராசி சந்திரனும் சூரியனும் அடுத்தடுத்து இருப்பது நலமே. உடலும் உயிருமாக ஒட்டியிருப்பது தெரிவிக்கிறது. உடலின் மாயையை குருவின் அருள் பார்வையால் விலகியது. சுத்ததேகமாக துலங்கியது. புதன் சுக்கிரன் பரிவர்த்தனை மாற்றத்தால் மாயை விலகி ஒளி என்னும் அறிவு துலங்க செய்தது. உடலை தீயிக்கு போக விடாமல் செவ்வாய் கடகத்தில் நின்று தணிவு பெற்றது. அந்த செவ்வாய் நின்ற இடத்தில் கேது நின்று இராகுவின் பார்வையால் பூர்வ புண்ணியம் (நல்வினைகள்) அருள் மயமாய்ப் பொங்கி அடிகளார்மூலம் ஞானமொழியாக அருட்பாவின் வழியே வெளிப்படுத்தியது.

மீன இலக்கினத்திற்கு 11மிடமான மகரத்தில் நின்ற இராகு இலாபம் அடைந்ததால் அருள்மிகுந்த இறையருள்நேயம் — ஆன்ம நேயம் — மனித நேயம் தந்து சாதி — மதம் — சமய பேதங்கள் விலகவும் எல்லோரும் இறைவனின் உயிர் உணர்வுகள் என்றும், எல்லா உயிர்களிலும் இறையருள் கலந்துள்ளதையும எடுத்து காட்டியது இராகுவின் செயல்பாடேயாகும். இறைவனின் உண்மை வடிவம் அருட்பெருஞ்சோதி வடிவம் என்று பெரும் மெய்ஞ்ஞானத்தை அனுபவத்தில் கண்டு மக்களுக்கு உணர்த்த அனைத்து வழிகள் தமது அருட்பாவில் இடம்பெறச் செய்து, இராகுவின் 11ஆம் நிலை கடந்து துவாத சாந்த நிலையும் கடந்து நின்றார். இக்கருத்தைக் கூறும் சித்தர்கள் பாடலைக் காண்க.

"வேளப்பா நிற்குணமே துவாத சாந்தம்
மெய்யான நிற்குணமே மூல சூட்சம்
ஆளப்பா நிற்குணமே ஒளிதான் தேகம்" - 97
கடைப்பிள்ளை சுத்தஞானம் — 120

"பேராம் பிர் மானந்த மடைந்தோன் சித்தன்
பிர்ம வுப்பைக் கண்டவனே தவசிரேட்டன்
கூரான வாசி மறித் தோன் சித்தன்
குறிகண்டு மாயை வென்றவனே முத்தன்
நேரான தீட்சை பெற்றோன் சிவமுத்தன்
நிறை சிவயோகம் புரிந்தோன் ஞானியாமே - 2
கோரக்கர் பிர்மஞான காட்சி — 17

வள்ளல் பெருமானின் சாதகத்தில் மீன இலக்கினத்திற்கு 12ஆம் இடம் கும்பராசியாகும். சந்திரா இலக்கினமான துலா இராசிக்கு 5ஆமிடம் கும்பஇராசியாகும். இந்த கும்ப இராசியை

Koviloor Digital Library

கேந்திரத்தில் நின்று (மிதுனத்தில்) திரிகோணமான 9ஆம் பார்வையாக பார்த்தார. சந்திரா இலக்கினமான துலாவிலிருந்து திரிகோணமான 5ஆமிடம் பெறுகிறது கும்ப இராசி. இந்த இரு இருகோணம் இணைவு பெற்றால் அறுகோணமாகும். அந்த அறுகோணமே நாதாந்தமென்ற பேரான்மாவில் நிலைத்து நிற்கும் வாய்ப்புப் பெற்றது.

கும்பம் என்பது குடம் — கலசம் — தவலை என்றறெல்லாம் கூறப்படுகிறது. பூசைக்கு தலைமையாக இருப்பதும் கும்பமாகும். மானுட தேகத்திற்கு முதன்மையாக விளங்குவது சிரசாகும். அந்த சிரசே கும்பமாகும். அந்த கும்பத்தில் நாதாந்த நிலை உண்டு. அந்த நாதாந்தம் ஓசையாக றீங்காரத்துடன் ஆன்மா அடங்கி நிற்கும். இதற்கு சமாதி என்பர். ஆன்மா பேரான்மாவில் அடங்குதலுக்கே சமாதி என்பார். புற உலகில் காட்டிடும் பூமியில் குகை செய்து மனிதன் அதில் அடங்குவது சமாதியாகாது. அதனால் நமது வள்ளல் பெருமான் ஒரு ஓட்டு வீட்டில் எல்லோரும் அறிய அறையினும் சென்று சில நாளில் மறைந்தருளினார். இதுவே சுத்த கும்ப சமாதியாகும். அருள் முகமா பலர் அறிய சித்திவளாகம் என்ற பெருமை மிகுந்த ஓர் தனி இல்லத்தில் திறந்த கதவின் பூட்டி தோன்றிய தேகத்துடன் மறைதருளினார். இப்படி தன்னுடலை மெய்யுடலாக்கி மறைவுவதுவே சாகாதக் கல்வி என்ற கலையாகும். அதுவே மரணமில்லா பெருவாழ்வாகும்.

முத்தி தந்த கும்ப இராசி இல்லம் 12ஆம் வீட்டை வாயுக் கோள் சனிசனும் — ஆகாயக் கோள் குருவும் ஆக இருவர் பார்வையால் நோக்குண்டதால் அருள்ஞான முத்தி பெற்று — சிவயோக பேறு அடைந்து — முத்திநிலைக்கண்டு — கற்பூர தீபமான உடலோடு சிவசோதி வடிவம் பெற்று என்றும் எல்லாயிடங்களிலும் பரவியும் —எல்லா உயிர்களிலும் கலந்து என்றும் மரணமில்லா பெருவாழ்வில் நிலைத்து நின்றது அவருடை சாதமாகும். எனவே அடிகளாரின் சாதகம் சாகாதக்கல்வி என்னும் சாகாக்கலை அருளிய உன்னத சுத்த சாதமாகும். அதுவே அனைவரும் அறிய வெளியாகியுள்ள பெருமை இதனில் தரும்செய்தி என்ற வான்வடிவம் பெற அனைத்து மக்கள் முயற்சி எடுத்தால் பெறலாம் என்பதும் அறியலாம். அனைவரும் மரணமில்லா இறையருளால் இதனை சிறப்புடன் முடிவடைகிறது.

திருச்சிற்றம்பலம்

35. தீட்சைகளும் தியானங்களும்

"சாகாத கல்வியைத் தாங்கற்க வேணும்
வேகாத சிந்தை படைத்திட வேணும்
கோகாமி யத்தைக் குறைத்திட வேண்டும்
ஆகாத மட்டை கறிவதுண்டாமே" - 102

திருமூலர் குருமுப்பு நூல் — 200

உலக மக்கள் அன்றாடம் கணக்கில் லாமல் மாண்டு மடிகின்றனளர். ஒரு காலக்கட்டத்தில் பிறந்தவர்கள் நிறைய மக்கள் சாகாக்கலை கற்று என்றும் ஒளி தேகத்துடன் விளங்கினார்கள். இதுபோல் பல்கிபெருகிய போது அவர்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு, பரம்பொருளாய்த் திகழும் இறையருள் முன்தோன்றி சித்தர்களை அழைத்து சபையைக் கூட்டி பேச்சு வார்த்தை நடத்தினார். சாகாக்கலை மார்க்கத்தை யாருக்கும் கற்றுத் தரக்கூடாது என்று உறுதி செய்தனர்.

மேற்கண்ட காரணத்தால் சித்தர்கள் அனைவரும் பூரணத்தில் மறைந்து போயினர். தவிர சட்டைமுனி சித்தர் பல நூல்கள் இயற்றினார். அதில் தீட்சாவிதி 200 என்ற நூலும் அதன் சுருக்கமான தீட்சாவிதி 50ம் எழுதி அதனை அரங்கேற்றத்திற்கு வந்து படித்து காட்டியபோது, திருமூலர் அந்நூல்

Koviloor Digital Library

பறித்து கிழித்து போட்டார். அதேபோல் மற்றொரு நூல் கிழித்தெறிந்தார். அதனைக் கண்ட சித்தர்கள் திகைத்துப் போயினர். மிகவும் வேதனையடைந்தனர். உண்மையை எழுதிய நூல் கிழித்தெறியப் பட்டுவிட்டதால் திருமூலரை நோக்கி அங்கு கூடிய சித்தர்கள் அனைவரும் கடுமையாக கடிந்தனர். சில சித்தர்கள் திருமூலரை ஏசியும் பேசியும் தங்களின் கருங்கல் போன்ற சொற்களால் தாக்கியும் சினந்தும் வெளியேறினர்.

கூடியிருந்த சித்தர்களின் சபையில் இறைவன் கேட்டுக் கொண்டபடி பரிமொழி நடையில் பாடல்கள் செய்தனர். சித்தர்களின் தமிழ் எளிமையாக இருக்கும். ஆனால் அதன் உண்மைப் பொருள் வெளிப்படையாகத் தெரியாது. படிப்பவர்கள் கல்விதரத்திற்கு ஏற்றவாறு பொருள் வெளிப்படும்.

அந்த சபையில் பொய்யான நூல்கள் செய்ய வேண்டுமென்று இறைவன் கேட்டபோது சித்தர்கள் அனைவரும் மறுத்தனர். சித்தர்கள் அனைவரும் ஒரே சமயத்தில் ஏக குரலில் தங்களின் மறுப்புகள் பெருங் கூச்சலுடன் வெளிப்படுத்தினர்.

அந்த நேரத்தில் வியாசன் என்பன் மட்டும் முன் வந்து சித்தர்களின் பெருக்கத்தை பெருகாமல் இருக்க வேண்டியும், மக்களை மரணத்தின் வாயில் சிக்க வைக்கவும் பொய்யான பல நூல்கள் செய்தான். அவனும் பொய் வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் செய்து வெளியிட்டான். அவனை சித்தர்களின் குழுவிலிருந்து நீக்கப்பட்டான்.

அந்த நூல்கள்ளை படித்த மக்கள் மரணத்தின் பெருவாயில் விழுந்து மடிந்தனர். அவன் செய்த நூல் மடியும் தன்மையுள்ள பிரமன் — திருமால் — உருத்திரனான சிவன் அவர்களை முத்தி தரக்கூடிய தெய்வங்கள் என்றும், அந்த நிலையுள்ளவர்கள் வழிகாட்டுவார்கள் என்றும் எழுதினான். செத்தாலும் அது முத்திதான் என்றும் "பொய்யான செய்தியை மெய்ப்போல் தோன்றுமாறு" எழுதி உலக மக்களிடையே பரவ விட்டான். இன்று அதனை படித்து அதுவே ஒர தொழிலாக மாற்றியமைத்த வேத வியாசன் சொன்ன பொய்யே சொல்லும் மக்கள் கூட்டம் பெருகி அதுவே ஒரு சமுதாயமாக மாறிவிட்டது. இன்று உலகில் வேத வியாசன் "மெய்ப் போல் தோன்றும் பொய்யான செய்திகள் கூறி தன் வயிற்கு பிழைப்பு நடத்தி வருகின்றனர். அந்த காலத்தில் எழுதிய தொடர்கள் இன்றைய தொலைக்காட்சி மகா தொடர்கள் போல் அன்றும் அவன் எழுதியதை படித்தும் கேட்டும் மக்கள் மரணத்தைச் சந்திக்கின்றனர். இந்த கருத்தைத்தான் காகபுசண்டர் என்னும் சித்தர் தமது பெருங்காவியத்தில்,

"சாகாமல் இருகககக் கல்வியுண்டு
சாக்காடு கொள்வதற்கும் விவரம் உண்டு"

என்று ஓதுகிறார். மனிதர்கள் சாகாமல் இருக்க வேண்டுமென்றால் தன்னையும் தன் உயிரைப் பற்றியும் அறிந்து, தன்னறிவுக் கொண்டு சிந்தை செய்து சாகாதக் கல்வியைக் கற்க வேண்டும். அவன் ஆன்மிகத்தில் உயர்ந்தவனாவான் என்பதை சுப்பிரமணி சிவம் எழுதிய சுத்த ஞானம் என்ற நூலில்,

"தன்னிலை அறிந்தவனே பெரியோனையா
தன்னை யறியான் வகைக் கெட்ட சண்டிமாடே -
96 என்று தெரிவிக்கிறார்.

மேலும் கொங்கணர் செய்து எழுதிய மெய்ஞ்ஞானம் என்னும் நூலில்,

"அறிவை நீ அந்தாலே பிறவி போச்சி
அடுத்தாப் போல் பரமபதம் நிலையுமாச்சு" - 8

என்று எடுத்துக் காட்டி மனிதனுக்கு அறிவுறுத்துகிறார்.

அடுத்து அகத்தியர் பூரண சூத்திரத்தில்,

"மனிதனாய் பிறந்தாக்கால் சாகாக்கல்வி
வாசிக்கும் சிவயோக மோடு வாழ்க்கை சேர்வான்"

என்று ஓதுகிறார். மேலும் இடைக்காட்டு சித்தர், ஞான சூத்திரப் பாடலின் தொகுப்பில்,

Koviloor Digital Library

"சாகாதிருப்பதற்குத் தான் கற்குங் கல்வி யன்றோ
வாகான மெய்க்கல்வி வகுத்தறி நீ கன்மனமே - 66

என்று கூறுவது மனித மக்கள் விழிப்புணர்வு பெற வேண்டும்.

வேத வியாசன் எழுதிய வேதங்கள் — இதிகாசங்கள்& புராணங்கள் குப்பையில் போட்டு எரித்துவிட்டு சித்தர்கள் செய்த நூல்கள் அதில் காணப்படும் உண்மைகளை படித்தறிந்து நடைமுறைக்கு கொண்டு வந்து மரணமில்லா பெருவாழ்வை தேடி அதற்குரிய தீட்சா விதிகள் சிந்தை செய்யும் ஆழந்த பற்றுணர்வு — தியானங்கள் — மந்திரங்கள் அறிந்து நாளும் செய்து வந்தால் ஒவ்வொருத் தனி மனிதன் சாவதை தடுத்துக் கொள்ளமுடியும்.

இன்றைய உலகில் காவியாடை அணிந்து ஆசரமங்கள், மடங்களின் அலுவலர்கள் அனைவரும் வேத வியாசன் கூறிய "மெய்ப்போல் தோன்றும் பொய்யான குப்பைகள்" அள்ளிச் சென்று அதையே பயன்படுத்தி மரணத்தை ஏற்று மடியும் ஈனர்கள் ஆவார்கள்.

நாம் அனைவரும் மரணத்தின் எல்லையில் நின்றாலும் சரி மரணத்தின் பிடியில் சிக்கியிருந்தாலும் இப்பிறவியில் பயன்தரும் உண்மைப்பொருள் தேடிச் சென்று அறிவைக் கொண்டு அறிந்து அடுத்துவரும் பிறவியிலாவது மரணத்தை தடுத்துக் கொள்ளும் சாகாதக்கல்வி அறியும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு மீள வேண்டும்.

மேற்கண்ட சாகாதக் கல்விக்குரிய தீட்சைகள் என்ன? தியானங்கள் என்ன? அதனை பெறுவது எவ்வாறு என்பதை அறிய வேண்டும். இனி அதனைப் பற்றி அறிந்து அறிமுகப்படுத்தி அந்த தீட்சைகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தி யோகமும் ஞானமும் பெற வேண்டுமென்பதை ஆய்வு செய்வோம்.

தீட்சைகள் குரு சொல்ல அறிதல் வேண்டும்:

கூர்மானந்தர் செய்த சுத்த ஞான நுட்பம் என்னும் நூலில் குரு என்பவர் அருந்தவம் பெற்ற தென்பகுதியை சேர்ந்த ஆதி சிவகுரு தட்சணாமூர்த்தி சின்மயமான தேவர் ஆவார். அவருடைய திருவடிகள் தொழுது இந்த நூலை செய்கிறேன் என்று கூறும் இரண்டடி பாடல் காண்க.

"அருந் தவஞ் செய் தெட்சணஞ் சின்மயமாந் தேவர்
அடிதொழுது சூத்திரமா மைம்பதுக்குள்" - 1 என்று ஓதுகிறார்.

அடுத்து சூரியானந்தர் என்னும் சித்தர் கற்ப ஞான நுட்ப நூலில் மவுன வித்தை யார் கூறுவார்கள். ஆதியந்த கயிலை பராபரனாய் வந்த ஓங்கார நாடி வடிவமாயிருக்கும் தென் சின்மயமான தேவர் ஒருகோடி மானிடராக இருந்து, சித்தநிலை பெற்ற அனைவருக்கும் சாகாமல் இருக்க செவியருள் உரை செய்தார். அவர்கள் மூலமாகவே அனேக கோடி சித்தர்கள் உருவானார்கள். மௌனம் என்ற தீட்சை விட்டால் காய சித்தி பெற முடியாது போகும் என்ற அற்புதச் செய்தியை பாடல் மூலம் அறிக.

"ஆமப்பா மவுன வித்தை யார்தான் செய்தார்
ஆதியந்தங் கயிலை பரா பரையாய் வந்தான்
ஓமப்பா தெட்சணசின் மயமாந் தேவர்
ஒரு கோடி சித்தருக்கு வுபதேசித்தார்
தாமப்பா வென்றெனறுஞ் சாகா மற்றான்
தனக்கு உரித்தே தென்றால் மனத்தாலே
வாமப்பா வெகுகோடி சித்தராச்சி
மவுனம் விட்டாற் காயசித்தி தூரப்போச்சி - 4
என்று சூரியானந்தர் ஓதுகிறார்.

மேலும் இடைக்காட்டு பிள்ளை சித்தர்கலைஞ் ஞானம் என்னும் நூலில் மேற்கண்ட கருத்தை வலியுறுத்திள்ளதையும் நாம் அறிதல் வேண்டும்.

"போத்தியே யிப்படியே மவுன மூலம்
பூரணமாய்க் கண்டவர்க ளொருவரில்லை
வாத்தியே மவுனத்தை யாருந் சொல்லார்
மகத்தான குரு சொல்ல அறிவேணும் - 97

என்று ஓதும் உண்மையை மானிட மக்கள் உணர்ந்து அறிய வேண்டும். மேலும் கண்ணாநந்தர் என்னும் சித்தர் எழுதிய ஞானசிவராஜயோகம் என்னும்

Koviloor Digital Library

நூல் திட்சைகள் குருவருளால் பெற்று உய்ய வேண்டுமென்று ஓதுவதும் வலியுறுத்துவதும் காண்க.

''வல்லதொரு குருவருளால் அகார தீட்சை
வந்த பின்பு உகார மடா சத்தி தீட்சை
நல்லதொரு மவுனமடா மகார தீட்சை
நலமாக குருவறிந்து தீட்சை பெற்று - 9

என்று வலியுறுத்தும் செய்தியை உணர்ந்து ஈடுபடவேண்டும்.

சுகப்பிரம மாமுனி ஞான சூத்திரம் என்னும் நூலில் சிவராஜ யோகம் செய் நினைவுக் கொள்ளும்போது குருபரன் தோன்றி சிவராஜ யோகம் காட்டியும் பூசை வகைகளையும் வழங்குவார் என்பதை,

''ஏற்றமுள்ள சிவயோகம் நினைத்தபோது
இன்பமாய்க் குருபரனும் பதிவாய் வந்து
ஆற்றலுடன் சிவராசயோகங் காட்டி
அன்புடனே பூசைவகை நல்குவாரே - 27

என்று மேற்கண்ட சித்தர் பெருமான் தெரிவிக்கிறார்.

அகத்தியர் அமுதகலை ஞானம் என்னும் நூலில் குருவை அடுத்திருந்து அவருடன் இருக்க வேண்டும். குருநிலையின் பதியை அறிய வேண்டும. குருவின் செவியருள் உரைகேட்டு பூரணத்தின் குணாகுணங்கள் கொள்ள திருவாக விளங்கும் பூரணத்தின் நிலையில் தீட்சை செய்தால் நமது தேகம் ஒளிதேகமாகும் என்பதை கீழ்க்காண்க.

''குருவான பதி அறிந்து குருவைக் காரு
குருவறிந்து பூரணத்தைக் குணமாய்க் கொள்ளு
திருவிருந்த பூரணத்தைத் தினமும் கொண்டால்
சிவசிவ கைலாச தேகமாகும் - என்று அகத்தியர் கூறுகிறார்.

உரோமா முனி எழுதிய வகார சூத்திரம் என்ற நூலில், ஒருவன் சாகாமல் இருக்க வேண்டுமென்றால் தாயை போற்றி வாழ்த்தி வணங்க வேண்டும். நந்தியின் திருவடியை சரணமடைய வேண்டும். வேகாத்தலையான உண்மைச் செய்தியைக் கேட்க வேண்டும். அதேபோல் சாகாக்கலையைக் கேட்டு அறிக. இந்த இரண்டு செய்திகளும் யாரும் சொல்ல மாட்டார்கள். பெருமைமிக்க நந்தி குருவிடம் செவியருள் உரை மறையகம் ஓதியருள்வார். போகாபுனல் என்று கூறப்படும் பரிவாசி 'அம்' என்று ஏற்று பொறிவழியே லாடத்திற் புகுந்து பார் என்று ஓதும் பாடலைக் காண்க.

''சாகாமலிருக்க வென்றாற் றாயைப் போற்று
சரணமென்று நந்தியடி தெண்டம் பண்ணு
வேகாமல் நின்ற தொரு தலையைக் கேளு
விதமாகச் சாகாத காலை கேளு
வாகான விரண்டையுந்தா னாகுஞ் சொல்லார்
மகத்தான நந்திகுரு வுபதேசிப்பார்
போகாமற் பரிவாசி யம்மென்றேற்றிப்
பொறி வழியே லாடத்திற் புகுந்து பாரே - 11

என்று சித்தர் பெருமான் ஓதுகிறார்.

மிருகண்ட மாமுனி என்னும் சித்தர் பெருமான் தாம் எழுதிய மெய்ஞ்ஞானம் என்னும் நூலில் வன்னி & கதிர் & மதி ஆக இவை மூன்றும் அசையாமல் ஒன்றாய் நின்றால் பூரணம் என்பார். இந்த செய்தியை மயங்காமல் அறிபவனே முத்தர் என்ற நிலை பெறுவான். இவ்விதமாக உரைத்தவன் குருவென்னும் ஆசானாவான். இருளகற்றும் கிரணவொளி உதிக்கும் பாரு. ஆயிரத்தெட்டிதழின் மேலே அமுதக் கற்பம் உண்டு. பொருளான அறிந்துண்போன்யோகியாகும். புகழான காலறிந்தோன் சித்தனாகும் என்று கூறும் பாடலைக் காண்க.

''அருளான வன்னி - கதிர் - மதியுங் வடி
அசைவற வொன்றாய் நிற்கப் பூரணந்தான்
வெருளாம லறிபவனே முத்தனாவான்
விதமுறைத்தோன் குருவென்னு மாசானாகும்
இருளகற்றுங் கிரண வொளி யுதிக்கும் பாரு
இதழா யிரத்தெட்டின் மேலாங் கற்பம்
பொருளான தறிந்துண் போன் யோகியாகும்
புகழான காலறிந்தோன் சித்தனாமே - 13

என்று ஓதிய அந்த மிருகண்ட மாமுனிவர் மேலும் ஒரு பாடலில் சாகாத காலும் அருளான வேகாத தலையறிந்து கூடிவரும் புனலைக் கண்டு அதனை நன்றாக உண்டு சற்குருவானவரை வணங்க வேண்டும். மேற்கண்ட மூன்று

Koviloor Digital Library

தன்னகத்தில் உள்ளன. இதனை அறிய இலட்சயத்தின் வாலைத் தெளிந்து பார். இந்த மூன்றினால் ஆகாதது ஒன்றுமில்லை. இதற்கு நிகரில்லாதது ஒன்றும் இல்லை. சித்தன் என்று பெயரும் எடுக்க ஒரு மாபெரும் பொருளாகும் பார்ப்பாயாக என்று கூறுகிறார்.

"ஆமப்பா சாகாத காலினோடு
அருளான வேகாத தலை யறிந்து
நாமப்பா கூடிய புனலைக் கண்டு
நன்றாக வுண்டு சற்குருவைப் போற்று
தாமப்பா மூன்றைந் தான் தனக்குள்ளாகத்
தானறிய லட்சியத்தைத் தெளிந்து பாரு
நேமப்பா வாகாத தொன்று மில்லை
நிகரில்லாச் சித்தான பொருளாம் பாரே - 14

என்று மிருகண்ட மாமுனிவர் கூறுகிறார்.

தன்வந்திரி மாமுனிவர் சுத்த ஞானம் என்னும் நூல் குருவினால் வரும் நிலை பெற்று பயனடையலாம் என்று கூறுகிறார் என்பதை இருவரி பாடல் கண்டு பெருமை கொள்க.

"தேரலாங் குருவினுட உபதேசத்தாற்
சிதம்பரமாம் ரகசியத்தில் ஒடுக்கங்காணே - 7

என்றும் கூறுகிறார். குருவின் செவியருள் உரை கேட்பதால் சிதம்பர இரகசியத்தில் உள்ளகம் அறியும் வாய்ப்பு பெறலாம் என்று ஓதுகிறார்.

கடைப்பிள்ளை கலைஞ்ஞானம் என்னும் நூலில் நாத சக்தி சிவமாகும். குரு சக்தி சிவம் உடலும் உயிருமாக நிற்கும் என்பதைக் காண்க.

"கூரான நாதஞ்சக்தி சிவமாச்சு
குருசக்தி சிவம் உடலுமுயிராய் நிற்கும் - 57

என்று கூறுகிறார். நாத நிலையே சக்தி சிவமாகும். இவை இரண்டும் அதாவது சக்தியும் சிவமும் குருவாகவும், உடலும் உயிருமாகவும் நின்று செயல்படுவார்கள் என்று கூறுகிறார். மேலும் கடைப்பிள்ளை சிவயோக ஞானம் என்னும் நூலில்,

"உத்தியாயப் பாராதே குருவைக் காரு
உன்மனத்தைக் கண்டு குருவுப தேசிப்பார் - 52

"உபதேசம் நந்திகுரு வாய்க்க வேணும்
உன்மனத் தாய முதுகண்பால் கொள்ளவேணும்
உபதேசஞ் சற்குருவைக் காண்பதெப்போ
உன்தேகஞ் சத்தியமாய் வாழ்வ தெப்போ
உபதேச மான தெட்டு யிரண்டும் பத்தாய்
உட் கொண்ட தப்பாலு முதுகண் பத்தாய்
உபதேச மான திந்த முதுகண் பார்க்க
ஒரு பிள்ளை பிறவாதோ கருவாய்த்தானே - 53

மேற்கண்ட பாடலில் ஓதுகிறார். இனி அவர் கூற வந்த பொருளைப் பார்க்கலாம்.

சிந்தனை செய்யாதே. குருவின் நிழலை அடுத்து நில். உன் உள்ளக மனத்தைக் கண்டு உமக்கு செவியருள் உரை ஓதுவார்.

செவியருள் உரை பெற நந்திகுரு வாய்க்க வேண்டும. உன் மனதால் செவியருளுரை பெற்ற பின் முதுகண்ணிடத்து பிடரி வழியில் ஒளி காணும். ஒளி காணும் முறையை அருளும் சற்குருவை காண்பது எப்பொழுது. உனது உடல் சத்தியமாய் வாழ்வது எப்பொழுது செவியருள் உரையான எட்டு (அகாரம்) இரண்டு (உகாரம்) பத்தாய் (உயிராய்) அல்லது (யகாரமாய்) பத்து தீட்சைகள் பெறுவதும், பெற்றுக் கொண்ட பின் பயனாகி அதன் பலனாக முதுகண் பிடரி வழியில் ஒளி வட்டம் தோன்றுவதும், அருளுரையால் முதுகண் பத்தாய் (உயிரான) இந்த தேகத்தோடு பூரணத்தில் மறுபிறப்பு எடுத்து வர ஒரு பிள்ளை பிறவாதோ கருவூரில் தானே என்று ஓதுகிறார். இப்பாடலில் உள்ள நுட்பம் என்னவென்றால் இந்த மாயாதேகத்தை சத்திய தேகமாக செய்து. இந்த தேகத்தோடு கருவூர் என்னும் பூரணத்தாயின் வயிற்றில் ஓர் மகவாக பிறக்க மறுபிறவி தடுத்து மரணமில்லா பெருவாழ்வு பெரும் செல்வத்தை அடையும் என்பதாம்.

காலாங்கிநாதர் எழுதிய ஞான விளக்கம் என்னும் நூலில் ஆன்மாவின் கசட்டை சரியான முறை நீக்கும் சற்குருவை நாடி சென்று சரண் புகுந்தால் அரிபாதம் காட்டும் குருவானவர்கள் அனேகர் இருக்கிறார்கள். அதுமாதிரியான குருவை நீ தேடுவாயாக என்று கூறுகிறார். அரிபாதம்

Koviloor Digital Library

என்பது ஓங்காரத்தின் கூறுகள். அகரம் ஒரு பாதம். இகரம் ஒரு பாதம். இருபாத கூறுகள் காட்டி தரும் குருக்கள் நிறைய பேர் உண்டு. அகரம் சிவபாதம். இருபாத கூறுகள் காட்டி தரும் குருக்கள் நிறைய பேர் உண்டு. அகரம் சிவபாதம். இகரம் சக்தி பாதம். இகரம் என்பது மௌனபாத தீட்சை என்பார். இந்த அரிபாதத்தை சிலர் தவறான கருத்து கொண்டு விஷ்ணுவின் பாதம் என்று பொருள் கொள்வார்கள். முத்தி தரும் வழிகாட்டுதல் நிலை விஷ்ணுக்கு எடுத்துகூறும் தகுதி இல்லை. காலாங்கி நாதரின் ஞான விளக்கப்பாடல் காண்க.

''சரியாத ஆத்துமத்தின் கசட்டை தீர்க்கும்
சற்குருவைத் தேடிப் போய்ச் சரண் செய்தால்
அரிபாதங் காண்பிப் பாரனேகர் உண்டு
அப்புவியில் அவர்களை நீ தேடுவாயே'' - 26

என்று நுட்பத்தை உணர்த்துகிறார்.

இது காரும் குருவினிடமிருந்து சகல கலைகளும் அறிய வேண்டும். அதற்குரிய குருவைத் தேடுதல் வேண்டும். குரு சொல்லக் கேட்டு அதன்படி நடந்தால் சகல ஞானச் செய்திகள் அறியலாம். அந்த சகல ஞானச் செய்திகளில் வழிபடும் தீட்சா முறைகளும் அதற்குரிய மந்திரங்களும் உண்டு. அதேபோல் தியானங்களும் அதற்குரிய மந்திரங்களும் உண்டு. இனி அதனைக் கண்டு ஆய்வு செய்வோம்.

முதலில் பஞ்சகண தீட்சை என்பது உண்டு. அதில் அகார தீட்சை உகார தீட்சை, மகார தீட்சை, சிகார தீட்சை, வகார தீட்சையாகும்.

''பண்ணடா சிவபூசை சக்தி பூசை
பத்தியுடன் சித்தமாய் வாலை பூசை
நண்ணப்பா பூரணமாய் பூசை செய்ய
கருமானஞ் சொல்லுகிறேன் கருவாய் கேளு
விண்ணடா நிறைந்த மலர்க் கண்ணே சூட்சம்
வேதாந்த சூட்சமதை விரும்பிகேளு - 192

என்று கூறுகிறார். மேலும் அகார தீட்சைப் பற்றி அகத்தியர் ஓதுவதும் கற்பமும் யோகிகளுக்கு பயன்தரக் கூடியது.

அகார தீட்சை:

''விரும்பி மனங் கொண்டு சிவபூசை கேளு
வேதாந்த சின் மயத்தை மெய்யிற் கொண்டு
வரும் பிறவி தனை யகற்றுஞ் சிவமே தென்றால்
வகையுடனே சொல்லுகிறேன் அகாரமாச்சு
அருந்தவமாய் நின்றதொரு அகார பீடம்
ஆரறியப் பேரார் காதி விந்து
திருந்திய தோர் விந்து வென்றால் கெங்கை கெங்கை
திருவான கெங்கையடா அமிர்தந் தானே - 193

''தானான அமிர்தமடா வகார மாச்சு
சங்கையுடன் காரமதை தானே தானாய்
வாரான கேசரியைத் தியானம் பண்ணி
வரிசையுடன் உதயத்தில் தியானஞ் செய்தால்
ஊனான தேகமதில் நின்ற பீடை
உத்தமனே அப்போதே விலகிப் போச்சு
வீணான பீடையது விலகிப் போனால்
வேதாந்த திரேகமது சித்தியாச்சே'' = 194

ஆச்சப்பா திரேகமது சித்தியானால்
ஆதிசதா சிவசோதி அங்கே காணும்
மூச்சப்பா தன்னிலை விட் டசையாதையா
முத்தியுள்ள சித்தமது கெட்டியாச்சு
பேச்சப்பா தானடங்கி மௌனமாச்சு
பேரண்டஞ் சுத்திவர கெவனமாச்சு
நீச்சப்பா தானறிந்து கெவனத்தேகி
நிசமான வகாரமதைப் பூசைப் பண்ணே - 195

193ஆம் பாடலில் மனத்தினால் விரும்பி ஏற்று சிவத்தின் வழிபாடு செய்யும் முறையைக் கேட்பாய். வேதாந்த சின்மயத்தின் (ஞானம்) உண்மையறிந்து வர இருக்கின்ற பிறவிகள் தன்னை யகற்ற சிவமே (சிவஞானமே) எதுவென்றால் இதனை முறையாகச் சொல்லுகின்றேன். அதுவே "அகாரமாகும்". அதாவது "அகார தீட்சை"யாகும். அருந்தவ நிலை பெறத்தரக் கூடிய அகார பீடமாகும். இதனைப் பற்றி யார் அறியப் போகிறார்கள். இதுவே ஆதி விந்துவாகும். இந்த விந்து என்ற நிலையை வெற்றி கொண்டால் சுத்த கங்கை என்ற அமுதம் காணலாம். அந்த திருப்பெயர் பெற்ற அமுதக் கெங்கை ஊற்று உண்டாகி இந்த பொய்யான தேகம் மெய்யாக்கும் என்பது அகார தீட்சையாகும்.

Koviloor Digital Library

அடுத்து 194ஆம் பாடலில் அந்த அமுதம் பெற்றுத் தருவது வகாரம் என்ற பூரணமாகும். அதாவது சிவராச வாசியோகமாகும். வகாரம் என்றால் வாசியோகமாகும். ஐயமின்றி அகார தீட்சையை பெற்ற கேசரி என்ற வாலையை பணிந்து வழிபட்டு பின் உதயத்தில் அகார தீட்சா மந்திரங்ள் தியானம் செய்து வந்தால் தோல் எலும்பால் செய்த ஊன் உடல் நின்றுள்ள பீடைகள் (களங்கங்கள்) விலகிப் போகும். தேகத்தின் களங்கங்கள் தொலைந்து போனால் ஆதிசதா சிவசோதி அங்கே காணும். வாசியானது தன்னிலை (தேகத்தை விட்டு) அசையாது. முத்தி பெரும் சித்தி நிலை உறுதியாகும். எண்ணங்கள் தானடங்கி மௌன நிலையெய்தும். பேரண்டங்கள் சுற்றிவரும் கெவனசித்த நிலை உண்டாகும். தாழ்வாகக் கருதும் தன்னை அறிந்து தன்னறிவை உணர்ந்து கெவனத் தேகம் பெற உண்மை ஞானமாக விளங்கும் வாசியோகமான வகார பூசை செய்ய வேண்டும். வேதாந்த தேகமாகச் சித்தியாகும்

தீட்சா மந்திரங்கள்:

அகார தீட்சா மந்திரங்கள் அல்லது சிவதீட்சா மந்திரங்கள்

1. ஓம்.ரம் — சிவாயநம —ஓம்
2. ஓம்.உம் — வயநமசி — ஓம்
3. ஓம்.வம் — யநமசிவ — ஓம்
4. ஓம்.ரம் — நமசிவய — ஓம்
5. ஓம்.உம் — மசிவயந — ஓம்
6. ஓம்.வம் — சிம் — சிவநம — ஓம்
7. ஓம்.ரம் — நமசிவய — ஓம்
8. ஓம்.உம் — றங் — றீங் — ஓம்
9. ஓம்.வம் — றிங் — சிம் — சிவ் — ஓம்
10. ஓம்.ரம் — உம் — சிம் — சிவ — ஓம்
11. ஓம்.உம் — றீங் — றீங் — சிம் — ஓம்

(மௌன தீட்சை)

ஒவ்வொரு மந்திரம் சிந்தை செய்யும் போது 'ஓம்' என்ற சொல் சேர்த்து செபித்தல் வேண்டும். இந்த மந்திரங்கள் சிவராஜயோகம் செய்பவர்களுக்கு மட்டும் உரியதாகும். மற்றவர்களுக்கு பயன்படாது. சிவராச யோகத்தில் சிறந்து விளங்குபவர்கள் நாள்தோறும் உதயத்தில் தியானம் செய்ய வேண்டும். இந்த மந்திரங்கள் ஆண்டு ஒன்றுக்கு முழுதும் செபிக்க வேண்டும். ஒவ்வொரு மந்திரம் ஓர் ஆண்டு வீதம் முடித்தால் பதினோரு ஆண்டு வரை செய்து வந்தால் எல்லா உண்மைகள் விளங்கும். சிவஞான மிகுந்து சித்தி நிலை பெறும். தேகங்கள் மாறி நிற்கும். அட்டமா சித்திகள் ஆடும். முத்தியும் சித்தியும் பெற்று சித்தன் என்ற பெயர் பெற்று விளங்குவார்கள்.

இந்த தீட்சா விதி மந்திரங்களுக்கு நாவேறு (சாபங்கள்) கொடுக்கப்பட்டுள்ளது. அதனை விலக்கிவிட்டு அடுத்து அம்மந்திரங்கள் தியானம் செய்தால் பயனுக்கு வரும். சாபவிலக்கு மந்திரம் காண்க.

"ஓம் — சிவாயநம — அம் — உம் — சிம் — கிலீம் — ஸ்ரீம் — ஓம் — சீ — ரம் — மம் — யம் — ஓம் — (லட்சம் உரு செபித்தால் பலிதமாகும்)

அடுத்து 195ஆம் பாடலில் ஊனான இந்த உடல் சித்தி பெற்றால் ஆதிசதாசிவ சோதி அகத்தின்கண் தோன்றும். வாசியானது இந்த உடலை விட்டு அகலாது. முத்திக்கு வழியாகயுள்ள சித்தமது உறுதியாகும். பேச்சானது தானடங்கி மௌனமாகும். பேரண்டங்கள் சுற்றிவர கெவுனநிலை சித்தியாகும். தாழ்ந்து போகாமல் தன்னை தான் அறிந்து கெவுனதேகி உண்மையுள்ள வகார என்ற வாசியோக நிலை தொடர்ந்து வழிபட்டு வரவேண்டும்.

அகத்தியர் எழுதிய பூரண காவியம் ஆயிரத்தில் புலத்தியருக்கு அகார தீட்சைப் பற்றி என்ன அறிவுரை கூறுகிறார் என்பதைக் காண்க.

"உண்மையுள்ள புலத்தியனே சொல்ல கேளு
உருவான தேகமது உறுதியாக
நன்மையுள்ள அகாரமடா உண்மை உண்மை
நாதாந்த சற்குருவால் கடாட்சம் பெற்று
தன்மையுடன் தன்னகத்தை தானே கண்டு
தானவனாய் நீ யிருந்து தன்னைப் பார்த்து

Koviloor Digital Library

செம்மையுடள் உதயாதி தன்னிலே தான்
தீர்க்கமுடன் அகாரமதை உருவே செய்யே - 28

என்று கூறுவது கவனிக்கத்தக்கது.

2. உகார தீட்சை:றி

பண்ணப்பா சிவமான அகார தீட்சை
பத்தி கொண்டு பூரணமாயச் செய்த பின்பு
நண்ணப்பா உகாரமென்ற சக்தி தீட்சை
நன்மையுடள் சொல்லுகிறேன் ஆண்மை கேளு
விண்ணப்பா கண்ணா மூலத்தீயில்
விளங்கி னின்ற உகாரமென்றும் சத்தியென்றும்
முன்னப்பா நிறைந்த சிவசக்தி யோடு
முத்தியுள்ள அகாரமென்ற வஸ்துசேரே - 196

சேரப்பா அகாரமுடன் உகாரங் கூட்டி
செம்மையுடன் உருவேத்தி நின்றாயானால்
நேரப்பா நின்ற திருவாசி யாலே
நிலையான புருவ மதில் தீபங் காணும்
காரப்பா நின்ற திருவாசி யாலே
நிலையான புருவ மதில் தீபங் காணும்
காரப்பா தீபமதைக் கமலக் கண்ணால்
கண்ணிறைந்த வாசியினால் ஊன்றிப் பாரு
சாரப்பா வாசியினால் ஊன்றிப் பார்க்கச்
சதா போதமான சிவயோகி யாமே - 197

சிவம் என்று கூறப்படும் அகார தீட்சை அதிகாலை செய்து பூரணத்தை நோக்கி உகாரமென்ற சக்தி தீட்சை மாலையில் செய்ய வேண்டும். காலையில் சிவதீட்சையும் மாலையில் சக்தி தீட்சையும் செய்து வந்தால் முத்தித் தரக்கூடிய அகாரப் பொருளைச் சார்ந்து நில். அகாரமும் உகாரம் உருவேற்றி வருவாயானால் இவைகள் இரண்டும் திருவாசி வடிவத்தில் புருவநடுவில் தீபம் காணும். திருவாசி என்றால் ஓங்காரம் என்று பொருள். அடுத்து வாசியோகத்தால் திருவாகப் புருவநடுவில் விளங்கும் குருநந்தியின் ஒளிவடிவான தீபம் காணலாம் என்று கூறியதுடன் நாளும் செய்து வந்தால் எப்பொழுதும் ஞானம் மிகுந்து விளங்கும் சிவயோகியாக இருப்பார்கள் என்று மேற்கண்ட இருபாடலில் விளங்கும்.

அகத்தியர் பரிபூரணத்தில் காலையில் சிவத்தையும் மாலையில் சக்தியையும் வழிபட்டு தவம் செய்ய வேண்டுமென்று கூறும் பாடல் காண்க.

"காணவே காலையிலே சிவத்தை பூசி
கனிவாக மாலையிலே சக்தி பூசை
பேணவே காலை சிவ மாலை சத்தி
பேறாமல் நின்று தவஞ் செய்வாகில் - 161

என்று தெளிவாகக் கூறுகிறார்.

உகார தீட்சா மந்திரங்கள்:

1. ஓம் — அங் — அங் — அம் — சிவ — ஓம்
2. ஓம் — றங் — லிங் — உம் — சிவ — ஓம்
3. ஓம் — சிங் — சிங் — றீங் — சிங் — ஓம்
4. ஓம் — உங் — றீங் — ரூம் — ரூம் — ஓம்
5. ஓம் — லங் — லங் — நம் — சிங் — ஓம்
6. ஓம் — கம் — கம் — கிலி — சிங் — ஓம்
7. ஓம் — சிங் — சிங் — றீங் — ஓம்
8. ஓம் — சிறிங் — சிம் — றீங் — ஓம்
9. ஓம் — றங் — றங் — றங் — றீங் — ஓம்
10. ஓம் — அங் — சிறீங் — லங் — சிங் — ஓம்

3. மகார தீட்சை விதி:

"ஆமப்பா சிவயோகஞ் செயல்வதற்கு
அப்பனே அகாரமுடன் உகாரஞ் சொன்னேன்
தாமப்பா மகாரமென்ற வாவை தன்னைத்
தாரணியி லாரறிவார் சங்கை மார்க்கம்
காமப்பால் கொண்ட சிவகெங்கையான
கன்னி மனோன் மணியீன்ற நாதமென்றும்
காமப்பா சொல்லுகிறோஞ் செந்தோனன்றும்
நாதாந்த மென்ற மகாரமாமே - 198

ஆமென்ற மகாரமுடன் மைந்தா கேளு
ஓமென்ற பிரணவத்தின் மகிமையாலே
உறுதியுடன் மூன்றெழுந்துமஞ் சேவித்தாயாகில்
தாமென்ற தன்னிலையே பிரம்மாகி
தானாகித் தானாவனாய் தான் தானாவாய்
நாமென்ற நாதாந்த முத்தியாலே
நடுவெழுத்து மூன்றெழுத்துஞ் சித்திதானே - 199

Koviloor Digital Library

அடுத்து 198ஆம் பாடலில் அகார தீட்சையும் உகார தீட்சையென்று ஓதப்படும் சிவசக்தி கூறினேன். இனி மகார தீட்சை கூற வேண்டும். மகாரம் என்பது வாலையாகும். அந்த வாலையின் தீட்சை தான் கூறுகிறேன். அவளைப் பற்றி யார் அறிவார்கள் அவருடைய வழி சங்கை மார்க்கமாகும். விருப்பமான அமுதப்பால் அருளும் சிவகெங்கையாவாள் கன்னி மனோன்மணி பெற்ற நாதமாகும். விரும்பி சொல்லுகிறேன் அது செந்தேனாகும். அதுவே நாதாநச்த மென்ற மகாரமாகும்.

மகாரம் என்னவென்று கேள். அருள் பெருகும் அகாரம் கேள். இவைகள் ஓம் என்ற பிரணவத்தின் பெருமையாலே உண்டானது. அகாரம் — உகாரம் — மகாரம் மூன்று போற்றி வழிபட்டால் தன்னிலை என்ற நிலை மாறி தேகம் பிரமமாகும்.

தீட்சா விதி மந்திரம்: ஓம் - றீங் - அம் - உம் - மம் - ஓம் (ஓம் - றீங் - சிவய)

4. சிகார தீட்சை:

தானவே மூன்றெழுத்துங் கருணையாகக்
கூட்டாகச் செபித்த பின்பு இன்னும் கேளு
பேணவே சிகார மென்றால் ஆர்தான் காண்பார்
பேரண்டமான பூரணமே யாகும்
தோணவே பூரணத்தைக் கண்டு கொண்டு
சுகமான சிவசக்தி வாலை யோடு
யூணவே தானிருத்தி செபித்தால் மைந்தா
பூரணமாய்க் காய சித்தி புனிதமாமே - 200

சிகார தீட்சையில் ஓதும்போது அகரம் — உகரம் — மகரம் ஆக இவைகளின் தீட்சைகள் வழிபட்டு வந்தால், சிகாரம் என்னவென்றால் பேரண்ட பூரணமாகும். பூரணத்தைக் கண்டபின் சுகங்கள் தரும் சிவசக்தி வாலையோடு மேற்கூறிய தீட்சா விதி மந்திரங்கள் தனிமை நாடி சென்று உருவேற்றினால் முழுமையாக காயம் சித்தி பெற்று சுத்த தேகமாக விளங்கும்.

தீட்சா மந்திரம்: ஓம் – றீங் – சிவய – வசி

5. வகார தீட்சை:

புனித முடன் தானிருந்து பூசை பண்ணி
பொற் கமலத் துச்சியிலே மனதை வைத்து
இனிதமுடன் வகார மென்றால் வாசியாச்சு
ஏகமென்ற வாசியிலே இன்பம் வைத்து
கனி கரணமான சிவசக்தி வாலை
கண்ணான பூரணமும் நாலுங் கூட்டி
மணி கரண மான தொரு அஞ்சும் மைந்தா
மகத்தான பஞ்சகண் தீட்சையாச்சே - 201

புனித தேகம் என்பது சுத்த தேகம் பெற்றவர்கள் இவர்கள் புருவநடு உச்சியின் கண்ணுள்ள ஆயிரத்தெண்ணிதழ் பொற்கமல உச்சிமது மனதை வைத்து வகார மென்று கூறக்கூடிய வாசியோகத்தின் மீது கவனம் செலுத்தவும். ஏகமென்ற வாசி மீது கவனம் செலுத்தி சிவராசயோக வாசியினால் கனிவான கரண சிவசக்தி வாலையுடன் கண்போன்று விளங்கும் பூரணத்துடன் மேற்கண்ட நான்கும் சேர்த்து மணிமணியாக விளங்கும் இவைகள் ஐந்து இணைந்ததே பஞ்ச கண் தீட்சையாகும் என்பர். வகாரம் என்பது வாசியோகமாகும். வகாரம் என்றால் பரை என்ற வாலையாகும். ஞானசக்தி வாலை என்று கூறுவார்கள்.

மேலும் பஞ்சகண தீட்சை பற்றி கூறும் பாடல் காண்க.

“ஆச்சப்பா பஞ்ச கண் தீட்சை போதம்
அப்பனே வகை விபரம் நன்றாய்க் கேளு
நீச்சப்பா சிவதீட்சை உதயமாகும்
நிசமான மாலையிலே சத்தி தீட்சை
பேச்சபபா பேசாத வாலை தீட்சை
பேணி மனங் கண்டவுடன் தெண்டம் பண்ணு
மூச்சப்பா நிறைந்த தொரு வாமரூபி
முத்த கொண்ட பஞ்ச கெணந்தான் தானாகும் - 202

தானான பஞ்சகெணத் தானாய் நின்று
தன்மையுடன் நின்று விளையாடலாச்சு
ஊனாகி நின்று விளையாடுஞ் சித்தை
உலக மதில் அறியாமல் உழன்று போனால்
வானான வடிவு பஞ்ச ரூபந் தன்னை
மார்க்கமுடன் கண்டு மன மகிழ்ச்சியானார்
கோனான குருபரம் கண்டு மன மகிழ்ச்சியானார்
குவலயத்தில் நீயுமொரு சித்தனாமே - 203

Koviloor Digital Library

சித்துமய மாவதற்கு மைந்தா மைந்தா
தீர்க்க முடனகார மதை யாண்டு சேவி
முத்திபெற செப்பித்த பின்பு உகாரந்தன்னை
மூர்க்கமுடன் ஆண்டொன்று செபித்துக் கொள்ளு
பத்தியுடன் செபித்தபின்பு மகாரந் தன்னை
பாலகனனே ஆண்டொன்று பதியாய்ச் சேவி
புத்தியுடன் இது மூன்றும் செபித்து தீர்ந்தால்
பூரணமும் காரணமும் பொருந்தும் பாரே - 204

பாரப்பா பூரணமே அண்டமாச்சு
பதிவான காரணமே பிண்டமாச்சு
நேரப்பா அண்டமொடு பிண்டம் ரெண்டும்
நேரறிந்துக் கொண்டவனே சித்தன் சித்தன்
சாரப்பா சௌமிய சாகரத்தில் நீயும்
தன்மையுடன் பூரணமாய்ச் சார்ந்து கொண்டால்
மேரப்பா அண்ட பிண்டம் தானாய் நின்று
மேதினியில் பூரணமாய் வாசியாமே - 205

அகத்தியர் சௌமிய சாகரம் — 1200

மேற்கண்ட பாடலின் கருத்தைக் காணலாம்.

முதல் 202ஆம் பாடலில் பஞ் சகண தீட்சை என்பது ஞானமாகும். அதன்வகையும் விவரமும் நன்றாய் கேளு. தாழ்ந்து போகாத சிவதீட்சை உதயத்தில் செபிக்க வேண்டும். சக்தி தீட்சை மாலையில் செபிக்க வேண்டும். மகார மென்ற பேசாத வாலை தீட்சை பேணி மனங் கண்டவுடன் வணங்க வேண்டும். மூச்சு என்ற வாசியோகம் ஆனது வாமரூபிணியாவாள். அவளே முத்திக்கு பஞ்சகண தீட்சையாகும்.

அடுத்து 203ஆம் பாடலில் பஞ் சகண தீட்சையே எல்லாம் வல்ல திருவிளையாடல் ஆச்சு. ஊனாகி நின்று விளையாடுஞ் சிந்தை உலக மாந்தர்கள் அறியாமல் உழன்று போனார்கள். வான் வடிவமான ஐந்தான வடிவந் தன்னை வடிவோடு கையாண்டு வந்தால் மனதில் இன்பம் பெற்றார். கோன் என்ற உயர்நிலை பெற்று குருபரம் வேறு ஒன்றுமில்லை மகனே. இதையறிந்தால் உலகில் நீயும் ஓர் சித்தனாவாய் என்று கூறுகிறது.

அடுத்து 204ஆம் பாடலில் சித்துகள் மயமாவதற்கு மகனே உறுதியைக் கேளு. அகாரமென்ற சிவதீட்சை காலையில் ஆண்டு செபிப்பாய். உகாரம் மென்ற சக்தி தீட்சை மாலையில் ஓர் ஆண்டு செபிப்பாய். இதில் பதினோரு தீட்சா மந்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் பதினோறு ஆண்டுக்குள் முடித்துவிட வேண்டும். மேலும் மகாரமென்ற மௌன வாலை தீட்சை ஓர் ஆண்டு செபிக்க வேண்டும். ஆக இவை மூன்றும் செபித்து வழிபட்டால் பூரணம் என்ற அண்டம் காரணம் என்ற பிண்டமும் ஒன்றாக பொருந்தும் என்ற கருத்தை கருவாக கருதவேண்டும்.

அடுத்து 205ஆம் பாடலில் பூரணம் என்பது அண்டமாகும். பதிவான காரணம் என்பது பிண்டமாகும். அண்டமென்பது பரமாத்மாவாகும். பிண்டமென்பது சீவாத்மாவாகும். இவைகள் இரண்டும் பொருந்துவதே முத்தியென்ற சிவயோகமாகும். அண்டபிண்டமும் நேரறிந்து கொண்ட மனிதனே சித்தனாவான். இந்த இரண்டும் இணைவதற்கு பாலமாக இருப்பது பஞ்ச கணம் என்ற தீட்சா முறைகள். அதுவே பூரணமாய் நிற்பதற்கு இணை பாலமாக இருப்பது வாசியோகமேயாகும்.

மேலும் காலங்கி நாத சித்தரின் மறுபெயரான கமலமுனி சித்தர் என்று அழைப்பர். அவர் ஆயிரத்தெண்ணிதழ் கமலமலரில் நீண்டநாள் சிவயோகத்திலிருந்து அமுத கற்பம் உண்டு ஒளிதேகம் பெற்று நாதாந்தில் குடியுள்ளதால் சித்தர் கமல மாமுனி சித்தநாதர் என்று அழைப்பார்கள். ஒருவர் இருபெயரில் திகழ்வதால் நாம் குழப்பம் அடைய வேண்டியதில்லை. அச்சித்த பெருமான் பஞ்சாட்சர பட்சண தீட்சாயோக விளங்குவதாக கூறும் பாடலில் அவருடைய கருத்தும் ஏற்க வேண்டியுள்ளது. நோக்குக.

“பாங்கான நகார வித்தை மவுன யோகம்
பர மகார வித்தை குண்டலியின் யோகம்
ஆங்கான வகார சித்தை வாசியோகம்

Koviloor Digital Library

அழகான சிகார வித்தை சீவ யோகம்
ஊங்கான யகார வித்தை அங்கி யோகம்
உற்றுபார் ஓங்கார மவுனம் பாரு
வாங்கா லிப்படியச் சரங்கள் கண்டு
மாட்டுவா யுயிர் நிலையும் நாட்டுவாயே - 16
கமலமுனி ஞான சைதன்யம் — 18

மேற்கள்ட பாடலில் ஐந்தெழுத்து யோக தீட்சா நிலைக்குறிக்கப்பட்டுள்ளது. ஐந்தெழுத்தில் நகாரம் மவுன யோகம். வகாரம் வாசியோகம். மகாரம் குண்டலியின் யோகம். சிகாரம் சீவயோகம். யகாரம் அங்கி (வன்னி) யோகம். அடுத்து ஓங்காரம் மவுன தீட்சா நிலையாகும். ஓம் நமசிவய என்பது ஆறெழுத்து மந்திரமாகும். இதில் எல்லா தீட்சா யோகங்கள் அடங்கியுள்ளன. இதில் மறைந்துள்ள காலின் வாசிகள் அறிந்து சிவநிலை உயர்வடைய செய்வாயாக என்று கூறப்படுகிறது.

இதுகாறும் தீட்சைகளைப் பற்றி அறிந்தோம். இனி தியானத்தில் இருக்கும் போது என்னென்ன மந்திரங்கள் பயன்படுகிறது என்பதைப் பற்றி காண்போம்.

2. ஆதார தீட்சா மந்திரங்கள்:

சுப்பிரமணியர் சிவம் சுத்தஞானம் என்னும் நூலில் ஆதார தீட்சா மந்திரங்கள் ஓத வேண்டும் என்று கூறுகிறார். அப்பொழுது தான் இந்த தேகம் வலிமையும் உறுதியும் பெற்று நிலைத்து நிற்கும் என்று கூறியுள்ள பாடல் காண்க.

"உண்மையுடன் சுழினையிலே வெண்ணென் நூணி
உறுதியுடன் ஆதார தீட்சை கேளு
பண்மையுடன் "ஓம் - ரீங் - அங் - அங் - அங்" - கென்று
பட்சமுடன் பதினாறு உருவே செய்தால்
தண்மையுடன் கணபதியும் பிரகாசிப்பார்
தானமென்ற சுழினையிலே தன்னைப் பார்த்து
நுண்மையுடன் "ஓம் நமசிவய" வென்றால்
நோக்கு முன்னே பிரமதரிசன முமாமே" - 17

"ஆமப்பா சிவயநம - சிவயநம வென்று
அதன்பிறகு "வயநமசி - வயநமசி" வாவென்று
நாமப்பா தலை காலாய மாறிக் கொண்டு
சங்கையுடன் கால்தலையாய் மாறிக் கொள்
ஆமப்பா "நமசிவய - நமசிவய" வென்று
அதன்பிறகு சிவயநம சிவயநம வென்று
ஓமப்பா நமயசிவ வென்று மாற
உண்மையென்ற ஆதாரஞ் சித்தியாமே" - 18

"சித்தமுடனைந் தெழுத்தை மைந்தா நீயும்
செம்மையுடனே தலைகால் தலையாய் மாற
சுத்தமுடன் ஆதார தேவதைகள் வந்து
சொன்னபடி யிருதயத்திற் சுகமாய் நிற்பார்
பத்தியுட னிப்படியே தியானம் பண்ணி
பதிவாக விபூதியும் தளமாய்ப் பூசி
நித்தமு ந யிப்படியே செய்து நின்றால்
நிலையில்லாத் தூல சடம் நிலைக்கும் பாரே - 19

வாசியோகம் செய்பவர்கள் இருகலையும் ஒன்றாக செய்து சுழினையில் சேர்த்து ஆகாயம் என்று குறிப்பிடும் புருவ மையத்தில் ஊன்றி "ஓம் — ரீங் — அங் — அங் — அங் — ஓம்" என்று தொடர்ந்து பதினைந்து நாள் செபித்தால் கணபதி பிரகாசிக்க அவர் அருள் பெற்ற பின் "ஓம் நமசிவய" என்று தொடர்ந்து இருவாரம் செபிக்க பிரம தரிசனம் உண்டாகும்.

அடுத்துவரும் 18ஆம் பாடலில் "ஓம் — சிவயநம — சிவயநம — வயநமசி — வயநமசி — சிவயநம — சிவயநம — வயநமசி — வயநமசி — நமசிவய — நமசிவய என்று மாறி உருவே செய்தால் ஆதாரங்கள் சித்தியாகும்.

அடுத்து வரும் 19ஆம் பாடலில் "ஓம் — சிவயநம — சிவயநம — வயநமசி — வயநமசி — சிவயநம — சிவயநம — என்று மீண்டும் உருவே செய்தால் ஆதாரங்களின் தேவதைகள் நம்மை நாடி வந்து நெஞ் சகத்தில் நிலை நிற்கும். மேற்கண்டவாறு செய்ய (விபூதி தேகம் முழுதும் பூசிக் கொண்டு) நாள்தோறும் தியானம் செய்தால் தூல சடம் உலகில் நிலைக்க உறுதியாகும் என்று கூறப்பபடுகிறது. மேலும் சில பாடல் காண்க.

ஆதார சூட்சும மந்திரங்கள்:

"பாரப்பா கலை யறிந்து நிலையில் நின்று
புத்தியுட னாதார சூட்சங் கேளு

Koviloor Digital Library

நேரப்பா "ஓங் - கிலி - அங்" கென்றோது
நிலை யறிந்து "அங் - கிலி - நங்" கென்றோது
காரப்பா "மங் - கிலி - சிங்" கென்றோது
கருணையுடன் "சிங் - கிலி - வங்" கென்றோது
சாரப்பா "வங் - கிலி - யங்" - கென்றோதே" - 20

"ஓதிய பின் "யங் - கிலி - உங்" கென்றோது
உண்மையுடன் "உங் - கிலி - அங்" கென்றோது
நீதியுடன் "அங் - கிலி - மங்" கென்றோது
நிலையறிந்து "மங் - கிலி - றீங்" கென்றோது
ஆதியுடன் "றீங் - கிலி - ஓம் - என்றோது
அப்பனே தலைகாலாய் மாறி யோது
சோதியுடன் சுழினையிலே மனக்கண் சாற்றிச்
சுத்தமுடன் விபூதியை நீ தரித்துக் கொள்ளே - 21

"கொள்ளப்பா விபூதியை நீ தரித்துக் கொண்டு
சுவர்மையுடன் கால்தலையாய் மாறக் கேளு
தெள்ளப்பா "ஓங் - கிலி - றீங்" கென்றோது
சித்த சுத்தம் "றீங் - கிலி - றீங்" கென்றோது
விள்ளப்பா "மங் - கிலி - யங்" கென்றோது
விவரமாய்த் தோற்றுமடா செய்கை யாவும்
உள்ளப்பா "மங் - கிலி - அங்" கென்றோது
உறுதியுடன் "அங் - கிலி - வங்" கென்றோதே - 22

"ஓதியபின் "வங் - கிலி - நங்" கென்றோது
உத்தமனே "சிங் - கிலி - நங்" கென்றோது
நீதியுடன் "மங் - கிலி - நங்" கெனறோது
நிலையறிந்து "நங் - கிலி - யங் கென்றோது
சோதியுடன் "மங் - கிலி - ஓம்" என வோது
சுத்தமுடன் ஈராறு தலமுஞ் சித்தி
வீதியென்ற ஆதார மேலாதாரம்
விண்ணடங்கிக் கண்ணடங்கி மேவி நில்லே" - 23

"நில்லப்பா கண்ணடங்கி வின்னென்றூணி
நியைறிந்து பிராணாஞ் செய்தால் மைந்தா
கல்லப்பா தேகமது காலனேது
காலனென்னும் வியாதி யெல்லாங் காணாதோடும்
ஒல்லப்பா ஸ்தூலமுடன் சூட்சஞ் சொன்னேன்
துலங்கி நின்று ஸ்தூலத்தின் சுருக்கங் கேளே - 24

சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் — 32

பாடல் 20 முதல் 24 வரை ஆதார சூட்சம தியான மந்திரங்களுக்கு இங்கு தரப்படுவது யோகிகள் பயன்படுத்தினால் பெரும் பலன்கள் பெறலாம். தியானத்தில் அமர்ந்து உருவேற்றவும், கீழ்காண்க.

ஓங் — கிலி — அங், அங் — கிலி — நங், மங் — கிலி — சிங், சிங் — கிலி — வங், வங் — கிலி — யங் , அங் — கிலி — மங், யங் — கிலி — உங், உங் — கிலி — அங், அங் — கிலி — மங், மங் — கிலி — றீங், றீங் — கிலி — ஓம்.

ஓம் — கிலி — றீங், றீங் — கிலி — மங், மங் — கிலி — யங், மங் — கிலி — அங், அங் — கிலி — வங், வங் — கிலி — சிங், சிங் — கிலி — மங், மங் — கிலி — நங், மங் — கிலி — ஓம் என்று தலைகீழாய் தலையாய் தியானிக்க வேண்டும். அப்பொழுதுதான் ஆதார அதிபதிகள் தரிசம் உண்டாகும். பன்னிரண்டு தலமும் சித்தியாகும். வீதியாக உள்ள ஆதராரங்கள், மேலாதாரங்கள் இரண்டும் கடந்து நிற்கும் என்று அந்த பாடல்கள் ஓதப்படுகின்றன.

மேலும் கடைப்பிள்ளை சித்தர் அவர்கள் இந்த ஆதார தியானங்கள் இன்னும் தெளிவாக கூறும் பாடல்கள் கவனிக்கத்தக்கது.

"உண்ணப்பா வாலைபதம் பணிந்து கொண்டு
உத்தசிவ யோக மதி லுறுதியாக
நண்ணப்பா ஆதார தியான சூட்சம்
நன்மையுடன் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
விண்ணப்பா நோக்கி "ஓம் - கிலி - அங்" கென்று
விநாயகனைத் தியானித்து அப்பாலமைந்து
கண்ணப்பா நிறுத்து "அங் - கிலி - நங்" கென்னக்
கருணையுடன் பிரமனுட தியானம் மாச்சே - 36

ஆச்சப்பா பிரமனுட தியானம் பண்ணி
அதன்பிறகு "நங் - கிலி - மங்" கென்றோத
நீச்சப்பா மாலினுட தியான மாச்சு
நிசமாக "மங் - கிலி - சிங் - கென்றோத
மூச்சப்பா ருத்திரனுட தியானமாச்சு
முனையறிந்து "சிங் - கிலி - வங்" கென்றோத
பேச்சப்பா மயேஸ்பரத்தின் தியானமாச்சு
பெருமையுடன் "வங் - கிலி - யங்" கென்றோதே - 37

ஒதவே சதாசிவத்தின் தியானமாச்சு
உத்தமனே "அங் - கிலி - உங்" கென்றோத

Koviloor Digital Library

நீதமா மிரவியுட தியானமாச்சு
நிச்சயமாய் "உங் - கிலி - அங்" கென்றோதப்
பேதமிலா மதியினுட தியானமாச்சு
பிலமாக "அங் - கிலி - மங்" கென்றோதச்
சாதகமாயச் சுடரினுட் தியான மாச்சு
சங்கையுடன் "மங் - கிலி - ஓமமென்றெண்ணே"
- 38

எண்ணவே ஒளியினுட தியானமாச்சு
என்மகனே "ஓம் - கிலி - சிறீங் - றீங்" கென்று
உண்ணவே பரம்வெளி தியான மாச்சு
உறுதியுள்ள வெளியோடே வெளியாய் நின்று
நண்ணவே வெளியோடே வெளியாய் நின்று
நாடெல்லாம் வெளியேறிப் போகாமாற்றான்
துண்ணவே உடலறிந்து கட்டிக் கொண்டு
சோதி மணி வீடதுவே துலங்குவாயே - 39

மேற்கண்ட பால் 36 முதல் 39 வரையில் உள்ள நான்கு பாடலில் கூறப்படும் பொருள் காண்க.

1. விநாயகன் தியானம் ஓம் — கிலி — அங்

2. பிரமன் தியானம் அங் — கிலி — நங்

3. மாலின் தியானம் நங் — கிலி — மங்

4. உருத்திர தியானம் மங் — கிலி — சிங்

5. மாஈசன் தியானம் சிங் — கிலி — வங்

6. சதாசிவன் தியானம் வங் — கிலி — யங்

7. இரவியின் தியானம் அங் — கிலி — உங்

8. மதியின் தியானம் உங் — கிலி — அங்

9. சுடரின் தியானம் அங் — கிலி — மங்

10. ஒலியின் தியானம் மங் — கிலி — ஓம்

11. பரம ஒலியின் தியானம் ஓம் — கிலி — சிறீங் — றீங்

மேற்கண்ட மந்திரங்கள் தியானம் செய்து வர சோதி மணி வீட்டில் திகழலாம் என்று ஓதுகிறார்.

இது காறும் சில முக்கியமான தீட்சைகளும் தியானங்களும் கூறி வந்தோம் படிப்பவர்கள் சற்று அறிவை பயன்படுத்தி வாசியோகத்தில் இதனை பயன்படுத்தினால் கைமேல் பலன் உண்டாகும். இதுபோன்ற செய்திகள் சித்தர்கள் ஆசியால் மக்களுக்கு கிடைக்க அவர்களின் அருள் வேண்டி இந்த செய்திகள் மகிழ்வுடன் நிறைவுப் பெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

36. பூட்டிய வாசலும் அதன் திறவுக்கோலும்

வேதங்கள் பல வகை உண்டு. ஒன்று சுத்த வேதம் என்பர். மற்றொன்று அசுத்த வேதம் என்பர். சுத்த வேதத்திற்கு சைவ வேதம் என்பர். அசுத்த வேதத்திற்கு அசைவ வேதம் என்பர். இதில் தமிழ் வேதம் ஒன்று. மற்றொன்று வடவர் வேதம் என்பர். தமிழ் வேதத்தில் ஆகமங்கள் உண்டு. வடவர் வேதத்தில் ஆகமங்கள் கிடையாது. சுத்த சைவ வேதத்தில் இரு பிரிவுகள் உண்டு. ஒன்று சைவ சமயம் சார்ந்த தமிழ் வேதம். மற்றொன்று சித்தர்களின் சைவமெய்ஞ் ஞான வேதமாகும். சித்தர்களின் வேதத்தில் இருபிரிவுகள் உண்டு. கரும சித்தர்களால் உருவாக்கப்பட்ட வேதம் ஒன்று. மற்றொன்று ஞான சித்தர்களால் உருவாக்கப்பட்ட வேதம் ஒன்று.

தமிழ்மொழில வேத ஆகமங்கள் முத்தியும் சித்தியும் அளிக்க வல்லது. பரிசுழியும் எடுத்துக்காட்டும். வடவர் வேதங்கள் முத்தி தராது. பரிசுழியும் காட்டாது என்பது சித்தர் காகபுசண்டர் பாடிய காவியம் 1000—என்னும் நூலில் 484ஆம் பாடலில் கூறுகிறார். தமிழ் வேத ஆகமங்களில் தொழிலைச் சார்ந்து நிற்பது கரும சித்தர் வேத ஆகமங்கள் ஆகும்.

Koviloor Digital Library

இயற்கையை சார்ந்து நிற்பது ஞான சித்தர் வேத ஆகமங்களாகும்.

இந்துக்கள் என்று கூறப்படும் வடவர்களுக்கு வேதங்கள் உண்டு. அவை ரிக் — யஜுர் — சாம — அதர்வண வேதங்களாகும். இவர்களுக்கு ஆகமங்கள் அனுபூதிகள் கிடையாது. இவைகள் வடமொழியில் எழுதப்பட்டது. பிரமனால் எழுதப்பட்டதாக கூறும் வேதங்கள். வியாசன் என்ற நபரால் எழுதப்பட்ட வேதங்கள் உண்டு. இந்த நபரால் எழுதப்பட்ட இதிகாச — புராணங்கள் — மகாபாரத கதைகள் — உபநிடதங்கள் போன்றவையாகும். இவர்கள் பஞ்ச மலங்களில் உழன்றவர்கள் மாயையில் முழுகியவர்கள் இவர்களால் எழுதப்பட்ட அனைத்து செய்திகளும் அசைவ வேதத்தில் சார்ந்தவையாகும்.

வேதங்களில் முகமதியர்களுக்கு தனி வேதங்கள் கூறப்பட்டுள்ளது. கிருத்துவர்களுக்கு தனி வேதங்கள் கூறப்பட்டுள்ளது. ஜைனர்களுக்கு தனி வேதங்கள் கூறப்பட்டுள்ளது. புத்தர்களுக்கு தனி வேதங்கள் கூறப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் மேற்கண்ட இனத்தைச் சார்ந்தது. இவ்வேதங்களில் சாகாக் கல்வி பற்றிய செய்திகள் கிடையாது.

சித்தர் பெருமக்களுக்கு தனிப்பட்ட சிறப்பு வாய்ந்த வேத ஆகமங்கள் உண்டு. இதில் இருவகையாகக் கூறப்படுகிறது. ஒரு வேதம் கருமச் சித்தர்களால் உருவாக்கப்பட்டது. மற்றொன்று ஞான சித்தர்களால் உருவாக்கப்பட்டது. கரும சித்தர்களால் உருவாக்கப்பட்ட சித்த வேத ஆகமங்கள் தொழிலமுறை சார்ந்தது. ஞான சித்தர்களால் உருவாக்கப்பட்ட வேத ஆகமங்கள் இயற்கை முறையைச் சார்ந்தது. இரண்டிலும் கூறப்படும் செய்திகள் சற்று மாறுபட்டாலும் செய்திகளின் அடிப்படை ஒன்றாகும். பின்னதில் சில புதுமையான செய்திகள் உண்டு. புரட்சிகரமான செய்திகள் கையாண்டு அன்பு அருள் — கருணை — இரக்கம் — பத்தி இவைகள் பின்பற்றி முத்தியும் சித்தியும் பெறலாம்.

சித்தர்களின் வல்லபம் பேசும் பாம்பாட்டி சித்தர்

"அறுபத்து நாலு கலையாவும றிந்தோம்
அதற்கு மேலொர கலை யானதறிந்தோம்" - 33

பாம்பாட்டி சித்தர் பாடல் — *129*

என்று பாடுவார். சாகாக்கலைக்கு மரண தம்பனம் அல்லது சாவை தடுத்தல் என்பர். நீர்தம்பனம் — தீத்தம்பனம் — வளித்தம்பனம் — வெளிகமணம் — மற்றவர் உடலில் புகுதல் போன்ற அறுபத்து நான் கலைகளில் சேர்ந்தவர்கள் இறப்பு தம்பனம் சேர்க்கப்படவில்லை. இது சித்தர்களால் மிகவும் மறையகமாக மறைக்கப்பட்டது. மானிட தேகத்திற்கு "மெய்" என்ற ஒரு பெயர் உண்டு. இதனை உறுதிபடுத்த வேண்டுமென்றால் சாகாக்கல்வி அறிந்திருத்தல் வேண்டும். இதற்கு உயிர் வழங்கும் பெருநெறி என்று கூறுவர். நமது வள்ளல் இராமலிங்க அடிகளார் "மரணமில்லா பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்" (திருவருட்பா — 5576) என்று ஓதுகிறார்.

மானிட தேகத்தில் நாம் அறிந்த விதத்தில் ஒன்பது வாசல்கள் உண்டு. இவைகள் தன்னிச்சையாக செயல்படுவன. தேவையான போது திறந்து அழுக்குகளை வெளியேற்றும். ஒருவாசல் மட்டும் பொருள்கள் வாங்கிக் கொள்ளும். மானுடத்தில் ஒன்பது வாசல்கள் உண்டு என்பதை திருமூலர்,

"ஒன்பது வாசல் உடையதோர் பிண்டத்துள்" — 638 — திருமந்திரம் — 3000த்தில் கூறப்படுகிறது. மேலும் திருநாவுக்கரசர்,

ஒண்ணாளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும் போதுணர மாட்டேன் - என்று தேவாசம் 7215 — பாடலில் ஓதுகிறார்.

மானிட தேகத்தில் கண் இரண்டு — நாசி இரண்டு — காது இரண்டு — வாய் ஒன்று — சிறுநீர் கழியும் துவாரம் ஒன்று — மலம் கழியும் வாசல் ஒன்று ஆக ஒன்பது வாயில்கள் உண்டு. இதனை உலகியலில் உழலும் அனைவரும் அறிவார்கள். பத்தாவது வாசலைப் பற்றி

Koviloor Digital Library

அறிய வாய்ப்பில்லை. பத்தாவது வாசல் திருசிற்றம்பலம் பாத வாசலாகும். இதற்கு பரமபத வாசல் என்றும் கூறுவர். சொர்க்க வாசல் என்றும் கூறுவர்.

இந்த வாசலுக்கு சித்தர்கள் பல பெயர்களில் கூறி மக்களுக்கு மயக்கத்தை உண்டு பண்ணுவர். தடுமாற்றத்தையும் ஏற்படுத்துவர். திகைப்பை உண்டு பண்ணுவர். அவைகளில் சித்தர்களால் தெரிவிக்கப்படும் பெயர்கள் இங்கு அறிவிக்கப்படுகிறது. கீழ்வருமாறு காண்க.

1. அனுவாசல், 2. குருவின் வாசல், 3. கோபுர வாசல் 4. சித்தி வாசல், 5. அமுத வாசல், 6. அகவாசல், 7. உள்வாசல், 8. ஞான வாசல், 9. நல்ல வாசல், 10. எல்லை வாசல், 11. திரை வாசல், 12. செயவாசல், 13. தெய்வ வாசல், 14. முனைவாசல், 15. மதி வாசல், 16. முத்தி வாசல், 17. நெத்தி வாசல், 18. சமாதி வாசல், 19. கமல வாசல், 20. தடைவாசல், 21. அரூப வாசல், 22. சோதி வாசல், 23. உச்சி வாசல் 24. புருவ வாசல், 25. பத்தாம் வாசல், 26. சிறு வாசல், 27. அறிவாசல், 28. யோக வாசல், 29. மேரு வாசல், 30. அறுத்தடைத்த வாசல் என்றெல்லாம் சித்தர்களால் பரிமொழியின் கூறுவார்கள்.

மேற்குறிப்பிட்ட வாசலைப் பற்றிய பாடலை ஊன்றி கவனிக்கவும். (காகபுசண்டர் பெருநூல் — 1000)

“தெருவென்ப தெதுவென்றாற் “பத்தாம் வாசல்”
சிறுவாசற் புருவநடு அறிவின் வாசல்
குருவென்றா லவ்வாசற் திருவாம் வாசல்
கொடுங் கோபந் தானகற்றும் சமாதிவாசல்
கருவென்றால் நினைவிருக்கு முத்தி வாசல்
கணக்கறிந்து யேற்வீரோ ஞானவீடு
இரு வென்றால் வாராதே யிருந்து பார்ப்பீர்
யித்தனைக்கும் காரணமே நெத்தி வாசல் - 381

நெத்தியுட மத்தியிலே மூக்கு மேலே
நீன் புருவத் தடியின் கீழ் புருவமத்தி
தத்தியே வுன்மேடை யுள்ளோர் வாசல்
தான்திறவே ஊசிமுனை வாசல்தான்
சித்திதா னிருக்கு மந்த சிவமாம் வாசல்
திறைவாசல் செயவாசல் தெய்வவாசல்
கத்தியே பாராதே சும்மா பாரு
கதவை திறந்து விடு மறலிபாரே - 382

சேருமே யாவர்களும் வாழும் வாசல்
சிறுவாசல் பாழ்வாசல் செந்திவாசல் - 383

வாசலது வந்தாக்கால் சித்தரெல்லாம்
வாருவாரு மென்றழைத்து மகிமை சொல்வார் - 384

என்று ஆதிசித்தர் காகபுசண்டர் பத்தாம் வாசலின் போக்கை உணர்த்துகிறார். அந்த பத்தாம் வாசலுக்குத் தான் பூட்டும் திறவுக்கோலும் மறைக்கப்பட்டுள்ளது. இது உலகியலில் உழலும் மக்கள் அறிய வாய்ப்பு இல்லை. மேலும் இந்த பத்தாம் வாசலைப் பற்றி அகத்தியர் மிகவும் உயர்வாக பேசுகிறார். அப்பாடலைக் கவனிக்கவும்.

“தேக மதில் வாசியது அசையாதப்பா
சிவயோக பூரணமாய்த் தேறுந்தேறும்
யோகமென்ற அனுபோக மரூப வாசல்
பொங்கிநிறைந் தமுர்தமது ஊறும் வாசல்
ஆகமென்ற அமுர்தரசஞ் சொலிக்கும் வாசல்
அடங்காத போத மயமான வாசல்
மோகமென்ற மோகமதுக் கேதுவாய்நின்ற
முத்தி தரும் மணிவாசல் மோட்சமாமே - 130

அகத்தியர் பரிபூரணம் — 1200இல் அதன் பெருமை ஓதுகிறார்.

சித்தர்கள் பத்தாம் வாசலை அறுத்தடைத்த வாசல் என்று கூறுகிறார்கள். அதேபோல் சிவவாக்கியரும் அவ்வாசலுக்கு அறுத்தடைத்த வாசல் என்று ஓதுவதை இங்கு அறியலாம்.

வல்ல வாசல் ஒன்பதும் அறுத்தடைத்த வாசலும்
சொல்லும் வாசல் ஒரைந்தும் சொல்ல விம்மி நின்றது
நல்ல வாசலைத் திறந்து ஞான வாசலூடு போய்
எல்லைவாசல் கண்டபின் இனி பிறப்பதில்லை - 483

சிவவாக்கியர் பெருநூல் — 1000

தட்சணாமூர்த்தி சுத்த ஞானம் 13இல் 4ஆம் பாடலில் மேற்கண்ட பத்தாம் வாசல் எங்குள்ளது என்று உலகியல் மக்கள்

Koviloor Digital Library

அறுத்தடைத்த வாசல் அடைந்து அதனை கடந்து வன்மையுள்ள மயிர் பாலம் மீது ஏறி மனதுறுதியாக அன்பு கொண்டு உள்ளம் கனிந்துருகி நாளும் மகிழலாம். அதோடுயில்லாமல் தென்திருவிடத்தில் உள்ள திருச்சிற்றம்பலத்தைக் கண்டு தெரிவித்தால் அப்பெருமகனாருக்கு சமுத்தியும் சித்தியும் கிடைக்கும் என்பது திண்ணம் என்று கீழ்வரும் பாடலால் அறிக.

அன்புடைய தொரு வாச லாருங் காணார்
அறுத்தடைத்த வாசல் கடந்தப்பால் தாண்டி
வன்புடைய மயிர்பாலம் மீதிலோறி
மனது கனிந்துருகி நித்தம் மிகிழ்வினோடும்
தென் பாகத் திருச் சிற்றம்பலத்தைக் கண்டு
தெரிசிக்க அவருக்கு முத்தி சித்தியாமே - 3
சுப்பிரமணியர் ஞானம் — 8

காகபுசண்டர் என்னும் ஆதிகால சித்தர் தம் பெருநூலான காவியம் 1000த்தில் 314ஆம் பாடலில்

"போனதே திரும்புகிற வழக்கம் பாரு
போகாதே போனாக்கால் மூச்சுடைப்பு
ஆனதே யல்லாம் யோக மாமே
அறுத்தடைத்த வாசல் கண்டால் திறக்கலாகும் - 374

என்று ஓதுகிறார். இந்த அறுத்தடைத்த வாசல் எங்குள்ளது. எவ்வாறு கண்டுபிடிப்பது. கண்டுபிடித்தால் அதை எப்படி திறப்பது. திறந்தால் எப்படி வாசலுக்குள் நுழைவது என்பதை இனி ஆராய்ந்து அறிய வேண்டும். அதன் திறவுகோல் எங்குள்ளளது. திறவுகோல் எதுவாக இருக்கும் என்பதை இனி ஆராய வேண்டும். கண்டுபிடிக்க வாருங்கள் என்று அழைக்கப்படுகிறது. இனி இதனைப் பார்ப்போம்.

பூட்டிய வாசல் கதவின் திறவுகோல்:

சிவராச யோகம் நெறிமுறை படுத்தும்போது வாசியை உள்ளுக்கு வாங்கி, அதனை நிறுத்தி, விடுதலுக்கு யோகம் என்பர். அவ்விதத்தில் வாசியை மேல் மூலத்தில் எடுத்துச் சென்று நிறுத்தினால் அங்கு திருமுருகன் என்று போற்றப்படும் "வடிவேலன்" அருட்சோதிவடிவாய் ஒளிருவான். அப்பொழுது பூட்டிய வாசல் கதவின் திறவுகோல் வழங்குமாறு வேண்டுதல் வேண்டும். அவரின் பொற்பாதம் மிக பணிவுடன் வணங்கி அவரை புகழ்ந்து அருள வேண்டுமென்று கேட்டல் வேண்டும். ஐயன் சிவாய குருவே பூட்டுமுனை திறக்க திறவுகோல் அருளுமாறு வேண்டினால் தருவார் என்று வசிட்டர் தம் ஞான உதயம் 16இல் 10ஆம் பாடலில் ஓதுவதை மிக ஊன்றி கவனித்து அறிக.

"யோக மதில் ரேசக பூரகம் பண்ணி
யுண்மையுடன் கும்பத்தில் நின்று கொண்டு
ஏகமென்ற மனதுற மாய்ச் செபித்தாயானால்
என்மகனே "வடிவேலன்" பிரகாசிப்பான்
தாகமா யவர் பதமே பணிந்து போற்றித்
தன்மையுள்ள சிவாயகுரு சிவமே" என்று
வேகமுடன் பூட்டு முனை திறக்க வென்று
வேண்டினால் திறவுகோல் தருவார் தானே" - 10 என்று வசிட்டர் கூறுகிறார்..

"மேலும் அகத்தியர் மேற்கண்ட செய்தியை உறுதிப்படுத்துவம் அறியலாம். சிவராசயோகத்தில் வாசியை பூரகம் செய்து ரேசகம் செய்ய வேண்டும். அந்த வாசியை கும்பத்தில் நிறுத்தி திடமனத்துடன் நாம் மந்திரங்களை செபித்தால் மேல்மூலத்தில் முருகன் அருட்சோதி வடிவாயத் தோன்றுவார். அவரை சிவாய பூட்டுமுனைத் திறவுகோல் திறக்க வேண்டினால் அவர் தருவார் என்று கூறும்பாடலை நோக்குக.

"போட்டவுடன் ரேசக பூரகம் பண்ணிப்
புனிதமுடன் கும்பத்தில் நின்றுக் கொண்டு
காட்டமுடன் மனதுரைத்துச் செபித்தாயானால்
நலமான "முருகனுமே" பிரகாசிப்பான்
தேட்டமுடன் அவர் பதமே பணிந்து போற்று
"சிவாயகுரு தேசிகனே சிவமே ஐயா"
"சிவாயகுரு தேசிகனே சிவமே ஐயா"
பூட்டுமுனைத் திறவுகோல் திறக்கவென்று
புனிதமுடன் தாவெனவே தருவார் பாரே - 37

அகத்தியர் அமுத கலைஞானம் 1200இல் ஓதுகிறார்.

Koviloor Digital Library

பூட்டிய வாசல் கதவு எங்குள்ளது:

காகபுசண்டர் மாபெரும் சித்தர் ஆவார். அவர் அரிய பெரிய சிறந்த வேத ஆகம நூல்கள் இயற்றி உள்ளார். சாகாக்கல்வியின் கலைநுட்பங்கள் மிகத் தெளிவாக தம் நூல்களில் எளிய தமிழில் அனைவரும் படித்து அறிந்து புரிந்துக் கொள்ளும் நடையில் ஆக்கியுள்ளார். தம் நூலில் இவர் அறுபது சதிர்யுகங்கள் கண்டதாக பெருநூலான 1000த்தில் பதிவு செய்துள்ளார். சதிர்யுகாம் என்பது பதினெட்டு யுகங்கள் கொண்டது. சுமார் 100 கோடி ஆண்டுகளாகும். வியாசனால் எழுதப்பட்ட சதுர்யுகம் நான்காகும். இது சில இலட்ச ஆண்டுகளாகும். சித்தர்களின் சதிர்யுகக் கணக்கு வேறு. பஞ்ச மலத்தில் உழன்ற வியாசனின் சதுர்யுகக் காலம் வேறு. தற்பொழுது வியாசன் சொன்ன பொய்க் கட்டுக் கதைகளில் தற்பொழுதுள்ள உலகம் உழல்கிறது. இனி பத்தாம் வாசலைப் பற்றி சிந்திப்போம்.

பத்தாம் வாசல் நமது உடலில் மூடப்பட்டுள்ளது. உலகியல் மாய்க்கையில் உழலும் மானிடர்களுக்கு செயல்படாது. அதேபோல் சுழிமுனையும் செயல்படுவதில்லை மானிடன் உயிர் வாழ வேண்டி வலதுமூச்சும், இடதுமூச்சும் செயல்படுகிறது. மூன்றாவதாகக் கூறப்படும் சுழிமுனை மூச்சு செயல்படவேண்டுமென்றால் உயிரிரக்கம் — அன்பு — கருணை — நன்னடத்தை — நல்லொழுக்கம் — பசியாற்றல் — நற்கல்வி உரைத்தல் — நலம் நாடுதல் — நன்மையாற்றல் போன்ற நற்குணங்கள் அமைந்து தெய்வப்பற்று மிகுந்து — அமைதி பின்பற்றும் ஆன்மநேய அன்பராக இருக்க வேண்டும் என்றும், சிவம் என்று ஊமையை வேண்டி நிற்க வேண்டும். இவ்வாறு பல நற்குணங்கள் உள்ள ஆன்மாக்களுக்கு பத்தாம் வாசலைப் பற்றிய அறிவு உண்டாகும்.

சாதாரண மனிதன் உலகில் வாழ வலபால் மூச்சும் இடபால் மூச்சும் இருந்தால் போதும். ஆனால் இந்த மூச்சே சில சமயங்களில் திறவுக்கோலாக பயன்படுத்தி சுழிமுனை நாடி இயக்கலாம் என்பது சித்தர்களின் கருத்தாக உள்ளது. இதனை நாம் கண்டுபிடித்து விட்டால் ஒரு யோகியாக மாறிவிடலாம். சுழிமுனை நாடியை இயக்கி தூண்டிவிடலாம். தூண்டிவிட்ட வேகத்தில் பத்தாம் வாசல் கதவும் கண்டு அதனை மேற்படி நாடியைக் கொண்டு திறக்கலாம். திறக்க வேண்டிய பத்தாமிட வாசல் காணலாம்.

பூட்டப்பட்டுள்ள பத்தாமிட வாசலானது நமது உடலில் கழுத்துக்கு மேல் தலை உச்சிக்குள் உள்ளது. பெரும் வாசலாக வெளிக்குக் காணப்படும் வாய்த்தான் வாசலாகும். அந்த வாய்க்குள் பெரு நாக்குக்கு மேல் அண்ணாக்கு உள்ளது. மேல் அண்ணாக்குக்கு உண்ணா முனை நாக்கு என்று சித்தர்கள் கூறுகிறார்கள். உண்ணாக்குக்குள்ளே மேல்பகுதியின் அடியில் வாசியோகத்தால் “தமரிட்டு” (DRILLING) அவ்வாசல் திறந்து உச்சி வாசலை அடைய வேண்டும். அது மூக்கு மேற்தண்டு முனை மூக்குக்குள் வாசியை தீவிரப்படுத்தி ஏற்றினால் புருவ நடுமேல் உள்ள தமர்வாசல் பூட்டினால் அடைப்பட்டள்ளதை உடைத்து உள்ளே நுழைந்து சென்றவர்கள் சிறந்த அறிவுப் பெற்ற ஞானிகளான சித்தர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். இந்த வாசலைக் கடந்து உள்ளே சென்றவர்கள் அனேகவிதமான கண்கொள்ளா அற்புதக் காட்சிகள் கண்டு அதனை வென்றவர்கள் மிக உயர்ந்த சுத்த வீரராக இருப்பார்கள். அந்த வாசலை திறக்க விறகு வைக்காமலும் தீயை மூட்டாமலும் சூரிய சந்திர மையத்தில் பொருந்திய புருவ மத்தியை தீவிர நாட்டம் வைத்தால் கோபுரத்தின் வாசலின் பூட்டு நாசிமுனை வழியே புருமத்தியில் ஏற்றி திறந்துக் கொள்ளலாம் என்று மாபெரும் சித்தர் காகபுசண்டர் கீழ்வரும் அவரின் பாடலால் அறியலாம்.

“போக்குவீ ரென்று சொல்லி போக்குத் தானே
பொருள தனைச் சொல்லி வைத்த நிடங்கள்தோறும்
நாக்குமே லண்ணாக்கு உண்ணாக்குள்ளே

Koviloor Digital Library

நடுத் தமரைத் தான்திறந்தால் உச்சிவாசல்
மூக்கு மேற் தண்டினிலே முனைமூக்குக்குள்
மனைத் தெழுந்த வாசிவர பார்த்த பேர்கள்
தாக்குவார் புருவநடுமேலே பார்பார்
தமர்வாசல் அடைத்திருக்கும் பூட்டுத் தானே" - 32

பூட்டுடைத்துக் கண்டவர்கள் மெத்த வுண்டு
புத்தியுள் ளோரவர்களே சித்தர் சித்தர்
ஆட்டமிதிற் காண்பார்கள் அனேகங்காட்சி
அம்மம்மா வென்றார்கள் சுத்த வீரர்
காட்டம் விறகெய்தாமற் தீ யிடாமல்
கதிர் மதிக்கு மத்தியது புருவ மத்தி
நாட்ட மிடக் கோபுரத்தின் வாசற்பூட்டு
நாசிமுனை புருவமத்தி திறந்து கொள்ளே - 33

காகபுசண்டர் பெரு நூல் காவியம் 1000த்தில் மேற்கண்டவாறு ஓதுவதால் அருளாளர்கள் ஊன்றி கவனித்து இதில் நாட்டம் செலுத்தி பயனடையலாம்.

இறைவன் வாழும் இடம்:

உச்சி என்ற மேலில் ஓர் மேடை உண்டு. அதற்கு பீடம் என்பர். கபாலம் என்ற ஓட்டுக்கு உச்சிக்கண் அடைய அண்ணாக்கிலிருந்து பிரம ரந்திர வழியுண்டு. மேல்வாசல் கூடத்திலிருந்து அண்ணாக்கு அடிவரை கொடி போன்ற விழுது தொங்குகிறது. கபாலத்தின் கிழ்மாடத்திலிருந்து அண்ணாக்கு மேல்அடியில் கொடி வாசல் ஒன்று உண்டு.

தொங்கும் கொடி அண்ணாக்குக்கு பின்புறத்தின் வாசலில் கோழைகள் அவ்வாயில் வரும். கபாலத்திலிருந்து நீரெறங்கும். இவ்வாசல் வழியே நீரெறங்கினால் தான் வாசியென்ற உயிர் பெரிய மண்டையில் ஏறும். அக்கோழையே குளிகையாகும். இவ்வாறு தான் பொய்க் கண் யென்ற இடைகலையும், மெய்யென்ற கண் பிங்கலையினால் நெத்திகண் என்ற சுழிமுனையில் குளிகை சித்தி அனுபவம் உண்டாகும்.

அண்ணாக்குக்கு மேல் அடியில் ஓர் அனுவாசல் துவாரம் உச்சி வரை உண்டு. அந்த துவார வாயில் தான் உலக ஞானிகள் மோன வாசல் என்பர். அவ்விடத்தில் இறைவன் அருட்சோதி வடிவமாக வாழும் இருப்பிடமாகும். அதுவே முத்தி வீடாகும் என்பர். இதனை கீழ்வருமாறு காகபுசண்டர் பெருநூலான 1000த்தில் ஓதுவதை மிக ஊன்றி நோட்டமிடுக.

பீடமே மேல் வாசல் உச்சி வீடு
பிரம ரந்திர உச்சிக் கண் கபால ஒடு
கூடமே மேல்வாசல் கொடிய யண்ணாக்கு
கொடி யொன்று தொங்குதடா அண்ணாக்கேபார்
மாடமே யொன்றிருக்கு கபாலங் கீழே
மக்களே அண்ணாக்கு மேலே தானே
ஓடமே கப்பலுண்டு நீரேயேற
உச்சிக் கொடி யண்ணாக்கு வாசல் பின்னே - 776

வாசலே தொங்கு நாக்கு பின்புறத்தே
வாசலொன்று கோழையது வருகும் வாசல்
ஏசவே கபால நீ ரிறங்கும் வாசல்
இவ்வாசல் நீர்களெல்லா மிறங்கி தானால்
பேசலே வாசியந்த உயிருதானே
பெரிய மண்டையே கிடுமே குளிகையாகும்
பூசலே யாகிவிடுங் குளிகை சித்தி
பொய்க்கண்ணும் மெய்க்கண்ணும் நெத்திக் கண்ணே - 777

என்று காகபுசண்டர் மெய்யான ஞானம் உணர்த்துகிறார்.

பூட்டிய வாசல் கதவின் திறவுக்கோல் எது:

இது காரும் நாம் நமது உடலில் உள்ள வாசலைப் பற்றி ஆராய்ந்து அறிந்தும் இனி நமது உடலில் பூட்டிய வாசல் கதவின் திறவுக்கோல் எங்குள்ளது என்பதை விரிவாக ஆராய்ந்து அறியலாம். சித்தர்கள் கூறியதை மேற்கோள் காட்டி தெளிவாக எடுத்துரைப்போம். இனி பூட்டிய வாசல் கதவின் திறவுக்கோலைப் பற்றி நாம் சித்தர்கள் வழியே ஆராய்வோம்.

நமது உடலில் பூட்டப்பட்டுள்ள பொருள்யாது அறிய மனதில் கல் போன்ற உறுதிவேண்டும். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பர். மனம் பொன் போல் சுத்தமாக இருக்க வேண்டும். அப்படியானால் 96தத்துவங்கள் ஒழித்து

Koviloor Digital Library

சுத்தப்படுத்தினால் அந்த மனமே பூட்டை திறக்கும் திறவுக்கோலாகும் என்பதை அகத்தியர் பாடலால் அறியலாம்.

"பூட்டினதோ ரடையாளம் பூரணமேயாகும்
பூட்டதனைத் திறந்தது பொன் மனதினாலே"

என்று தெரிவிக்கிறார். மேலும் காகபுசண்டர் என்னும் ஆதிசித்தர் மானிட உடலில் உச்சியிலிருந்து வடியும் நீர் தாய்மைப் போன்றதாகும். அத்தலையிலிருந்து ஒழுகும் நீரெல்லாம் வனப்பும் இளைமையும் தரக்கூடிய வாலையாகும். சிவராச யோகத்தினால் வாசியை வாங்கல் விடுதல் நிறுத்தல் முறையில் வாசி உச்சிவரை சென்றடைந்த போது உச்சியின் கீழ் கோழைப்போன்ற பொருள் கண்டேன். அதனை கீழேயிரக்க வாசியைக் கொண்டு தாக்கி விரைவில் வாசல் கதவின் பூட்டை உடைத்தேன். அப்பொழுது அக்கதவுதான் கோழையாகும். அதனை வன்னிக் காட்டி எறித்து மேலே சென்றேன்.

முக்கால்கள் மீண்டும் திரும்புகிற வழக்கத்தை பார்க்கவும். அவ்விடத்தில் போகக்கூடாது. போனால் மூச்சு உடைப்பு உண்டாகும். இதுவெல்லாம் சிவராஜ யோகத்தால் வந்தது. பத்தாம் வாசலான சிவராஜ யோகத்தால் வந்தது. பத்தாம் வாசலான அறுத்து உடைத்த வாசல் கண்டால் பூட்டின கதவு திறக்கலாம். தோலுடம்பில் வாசி தமர்வாசல் உச்சிவழி செல்ல புருவ மத்திவாசற் பூட்டை திறக்கும் வழி இருந்தால் எங்களுக்கும் தெரிவியுங்கள் என்று சித்தர் கூறும்பாடலைக் காண்க.

சென்றேனே உச்சி நீர் தாயே யாகும்
சிரசிலுள்ள நீரெல்லாம் வாலையாகும்
சென்றேனே உச்சிமேற் கபால ஓட்டில்
சென்ற தினா லுச்சியின் கீழ் கோழை கண்டேன்
சென்றேனே அது யிறக்க முட்டி நானே
சீக்கிரத்திலே யுடைத்தேன் கதவை தானே
சென்றேனே அக்கதவின் தாளே கோழை
தீயிட்டு நானெரித்தேன் மேலே தீயே - 36

போனதே திரும்புகிற வழக்கம் பாரு
போகாதே போனாக்கால் மூச்சுடைப்பு
ஆனதே யல்லாம் யோக மாமே
அறுத்தடைத்த வாசல் கண்டாற் திறக்க லாகும்
ஊனிதே காயமதிற் தமராம் வாசல்
உச்சிவழி புருவமத்தி வாசற் பூட்டை
ஏனதே யப்பூட்டைத் திறக்கும் மார்க்கம்
எங்களுக்கு கண்டே இயம்புவீரே - 374

என்று ஓதுகிறார். மேலும் அசுவனி தேவர் சிவயோகும் 16இல் 4ஆம் பாடலில் மிக விரைவாக அமுதப்பால் உண்டு பதியில் நின்றால் சித்தர்களின் வேதத்தில் கூறும் வேதாந்த தமர்வாசல் பூட்டி நம் கண் முன்னே காட்சிக்கு தோன்றும். கால் என்று கூறப்படும் இடைப்பிங்கலை சுழிமுனையில் வாசியை உட்செலுத்தி உறுதியாக நின்றால் தமர்வாசலின் பூட்டு வாசியோக முறையில் திறந்துக் கொண்டால் பூரணத்தின் பெருமையறியலாம் என்று அசுவனி தேவர் வலியுறுத்தும் கருத்தே நமது அகத்தியரும் ஞான 15இல் 13ஆம் பாடலில் கீழ்வருமாறு,

வெளியான பரவெளியின் பூட்டைக் கண்டு
வேதாந்த திறவு கோல் சுழியால் வாங்கி
அழியாத வட்ட குரு மூல சோதி
அகண்ட மதிலாடியே பரத்திற் சேர்த்து - 13

என்று ஓதுகிறார். சுழிமுனை என்ற வன்னியால் பரவெளியான பூரணத்தின் வேதாந்த திறவுகோல் கொண்டு திறந்து குருவினுடைய சோதியின் அருளை நாம் காணலாகும் என்பதாகும்.

எட்டு இரண்டு திறவுக்கோல்

எட்ட என்பது அகரம் — அகரம் சிவமாகும் இரண்டு என்பது சக்தியாகும் சிவசக்தி தீட்சையால் திறவுகோல் கொண்டு பூட்டை திறக்கலாம். காலில் கூற வேண்டுமானால் அகரம் என்பது சந்திரக்கலை. இது பதினாறு கலையாகும் உகரம் என்பது சூரியக்கலை. இது பன்னிரண்டு கலையாகும். மேற்கண்ட சிவசக்தி தீட்சையாலும் அல்லது இடைகலை பிங்கலையாலும் திறவுகோலாயிருக்கும். அக்கோலினாற் திறந்து கொண்டல் சின்மயமான சோதிவடிவம் கண்டு மகிழலாம் என்று கலைகோட்டு சித்தர்

Koviloor Digital Library

தம் பிரம திட்சா ஞானம் 32இல் 17ஆம் பாடலில் கூறுவதை உணரலாம்.

"தாக்கப்பா எட்டு இரண்டு ஒன்றாய்க் கூட்டி
தன்மையுடன் தானோதச் சோதியாகும்
வாக்கப்பா எட்டு இரண்டு கூடியல்லோ
வளமான திறவு கோலாச்சு தப்பா
தேக்கப்பா அக்கோலாற் றிறந்து கொண்டால்
சின்மய மாந் சோதி தனைக் காணலாகும்" - 17

கலைகோட்டு சித்தர் ஞானம் - 32

தியானமே பூட்டின் திறவுகோல் என்பது:

மேலும் கருவூரார் என்னும் சித்தர் பெருமகனார் பூட்டுக் கால் அறிய வேண்டும். அதன் திறவுக்கோல் அறியவேண்டும். அறிந்தவர்கள் பூரணத்தின் உள்ளகத்தில் கலந்து புதுமை காண்பார். மேலும் முக்கோணம் என்னும் மூலமதில் தடைவாசல் உட்கதவு பூட்டப்பட்டுள்ளது. அதனை உகாரம் என்ற தியானத்தின் திறவுகோலாம். ஓங்காரமே தடைவாசல் திறக்கும் காலாய் காண்க என்பதாம் இதனை அவருடைய பாடல் மூலம் அறியலாம்.

"பூட்டுக்கால் திறவுக் கோல் அறிய வேணும்
பூரணத்தினுட் கலந்து புதுமை தானே - 7
கருவூரார் மெய்ச்சுருக்கம் — 51

"தானென்ற மூலமதில் முக்கோணத்துள்
தடைவாசலுட்கதவு பூட்டுமாகி
ஊனென்ற தியானமது திறவுக்கோலாய்
ஓமெனவே தடைவாசல் திறக்கும் காலாய் - 29
கருவூரார் சிவஞான போதம் — 43

சூரிய கலை என்ற பிங்கலை பூட்டுக்கு திறவுகோல்:

தன்வந்திரி என்னும் சித்தர் பன்னிரண்டு வன்னி முகத்தாலே தமர்வர்சலின் பூட்டை வாசி கொண்டு திறக்கலாம். பன்னிரண்டு கலையை பயன்படுத்தி அதன் ஓசையால் வாசியின் பூட்டை திறந்து கொள்ளலாம் என்று ஓதுகிறார்.

கண்ணான கண்ணதற்கு கால்தான் ரெண்டு
காலன சத்தமது பனிரெண்டாகும்
விண்ணான வாசியுட பூட்டைத் தானும்
விளங்கிய தோர் சத்த மதால் திறக்கலாகும்
அண்ணான சத்தமது யோதென்றாக்கால்
அப்பனே பனிரெண்டு கலையதாகும் - 32
தன்வந்திரி தண்டகம் — 50

சுழிமுனை பூட்டு அருள் கொண்டு திறத்தல்:

சுந்தரானந்தர் என்னும் சித்தர் சுழிமுனை பூட்டை அருள் என்னும் திறவுக்கோலால் திறக்கலாம் என்பதோடு நிற்காமல் சுருள்போல் இருக்கும் ஆயிரத்தெண்மலர் மேல்சோதி வடிவமான இறைவனைக் கண்டு மனம் சொக்கி இருக்கலாம் என்பதை,

"பொருள் வெளியா மருள்சேரும் போக்குஞ் சொல்வோம்
போத மதாற் சுழினை யென்ற பூட்டை வெட்டி
சுருளிபோ லாயிரத்தெண் மலரின் மேலே
சோதியுருக் கொண்டு மளஞ்சொக்கி நில்லு - 5
சுந்தரானந்தர் மெய்ஞ்ஞான சுருக்கம் — 16

மேலும் காகபுசண்டர் என்னும் ஞானம் 80இல் 71ஆம் பாடலில் கீழ்கண்டவாறு ஓதுவதை அறியலாம்.

அண்ணாக்கின் மேல் அடியிலிருந்து கொடி போன்ற அண்டத்தை பற்றி விழுதுபோல் நரம்பது பொருந்தி நிற்கும். நிலையளாக அக்கினி கலையால் மத்தியில் நிற்கும். நிலையாக அக்கினி கலையால் மத்தியில் அருளை நினைத்து தீவிரமாய் நின்றால் விண்ணுலகம் காண தமிழ் மொழி வழி சொல்லும் என்பதாம்

"ஆரடா அண்ணாக்கின் கொடியி னூடே
அண்டத்தைப் பத்தியடா விழுது போல
நேரடா நரம்பதுதான் பொருந்தி நிற்கும்
நிலையான வக்கினியின் மத்தி தனில்
வீரடா அது வழியே அருள்தான் பாய்ந்து
விண்ணுலகில் என்ற மிழைச் சொல்லுவானே - 71
காகபுசண்டர் ஞானம் — 80

உகாரம் என்ற பாதமே திறவு கோலாகும்:

பராசர முனிவர் செவியுரை ஞானம் — 22இல் 8ஆம் பாடலில், அருளே வடிவாய்த் திகழ்கின்ற ஓமரூபி, அகந்தை,

Koviloor Digital Library

அநாதை, நாதை ஆக இவை நான்கும் நல்ல சிவகுணம் பொருந்தி "சிவகலை" யென்று அறிய வேண்டும். பதினாறு கலை தீபத்தை (சோதியை) காண வேண்டுமென்றால் பன்னிரண்டு கலையான "உகாரம் — என்ற திறவு கோல்" மின்னல் போல் இருப்பதில் நின்று கொண்டு மூழ்க வேண்டும் என்பதை கீழ்வரும் பாடலால் அறிக.

நின்ற ருளைத் தருகும்ங் ஓம்ரூபியோடு
நேரனந்தை முதனாதை அனாதையான
குன்றாத சிறுனதைது யிவை நாலுந்தான்
குணமான சிவகலை யென்ற றிந்து கொண்டு
சென்று பதினாறு கலைத் தீபம் பார்க்கத்
திறவுகோல் உகாரந்தான் மின் போற் சொக்கே - 8

என்று ஓதுவதால் தெளிக. மேலும் அகத்தியர் தம் அந்தரங்க தீட்சா விதி 400இல் பதினாறு கலையுடன் திகழ்கின்ற அருள்வடிவமான தீபம் காண்பதற்கு திறவுகோலாக இருப்பது ஓங்கார பாத உறுப்பான உகாரந்தான் மின் போல் மின்னும். அது மூலநாடியான சுழிமுனை நாடியில் நிற்கும் என்று கூறும் பாடலைக் காண்க.

"ஆமப்பா சோடசத்தின் கலையுள்ளாகி
அருள்தீபம் நோக்குதற்கு திறவு கோல் தான்
ஓமப்பா உகாரந்தான் மின்போல் மின்ன
உறுமூல நாடியிலே முழங்கி நிற்கும்" - 385

மூலநாடியே திறவு கோலாம்:

நமது திருமூலர் மூலநாடி என்று கூறப்படும் சுழிமுனை நாடியைக் கொண்டு உச்சிவாசல் வழியை திறந்து சென்றால் மேலைவாசல் என்று கூறப்படும் பரம்பொருளைக் கண்டால் எமன் என்ற சொல்லுக்கு கனாவிலும இறப்பு இல்லை என்று கூறுகிறார் என்பதை

"மூல நாடி முகட்டல குச்சியில்
நாலு வாசல் நடுவுள் இருப்பீர்காள்
மேலைவாசல் வெளியுறக் கண்டபின்
காலன்வார்த்தை கனாவிலும் இல்லையே" - 622

என்றும், மேலும் மேல் அண்ணாவில் செல்ல இடை பிங்கலை என்னும் கால்கள் விரைவுபடுத்தி கதவை திறந்தால் எமன் அங்கு காணாது போவான். உலகம் அறிய நரைதிரை மூப்பு மாறி வனப்பு நந்தி மேல் ஆணையிட்டு கூறுவதாக ஓதுவதை கீழ்வரும் பாடலால் அறிக.

மேலையண் ணாவில் விரைந்திரு காலிடிற்
காலனும் இல்லை கதவுந் திறந்திடும்
ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவான் பராநந்தி ஆணையே - 805

என்று ஓதுகிறார்.

வள்ளலார் கண்ட பூட்டும் திறவுகோலும்:

நமது உடலில் இரு கண் நடுவில் புருவம் உள்ளது அதுவே ஒரு பூட்டாகும். அந்த புருவப் பூட்டை தகுந்த திறவுகோல் கொண்டு திறக்க வேண்டுமென்று கூறுகிறார். அதனை உபதேசப்பகுதியில்,

"நடுகண் புருவப் பூட்டை அருளென்னிற திறவுக் கோலைக் கொண்டு திறக்க வேண்டும். ஆதலால் அருள் என்பது "ஆன்ம இயற்கையாகிய பெருந்தயவு" நாம் தயா வடிவானால் மேற்படி அனுபவம் நேரும். (உபதேச பகுதி 38) வள்ளார் புருவப் பூட்டை திறப்பதற்கு அருட்பாவில் கீழ்வருமாறு ஓதுகிறார்.

"கையறவிலாது நடுக்கண் புருவப்பூட்டு
கண்டுகளி கொண்டு திறந்துண்டு நடுநாட்டு
ஐயாமிக உய்யும் வகை அப்பர் விளையாட்டு
ஆடுவதேன் றேமறைகள் பாடுவது பாட்டு - 5228

மேலும் இறைவன் புருவ மத்தியில் திகழ்கின்றான் என்பதை நமது வள்ளர் பெருமான் அருட்பாவை நோக்குக.

"கண் களிக்கப் புகை சிறிதும் காட்டாதே புருவக்
கலைநடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே" - 4108 என்று ஓதுவதாலும் தெளிக.

நமது உடலில் எழுபத்திரெண்டாயிரம் நாடிகள் உள்ளது என்பது நமது சித்தர்களின் நூல்களில் சொல்லப்பட்டுள்ளது. அந்த வகையில் பத்து நாடிக்கள் மிகவும் முக்கியமானது. அந்த பத்து நாடிகளில் மிக மிக முக்கியமானது இடைகலை நாடி, பிங்கலை நாடி, சுழிமுனை நாடியாகும். இடைகலை நாடிக்கும் பிங்கலை நாடிக்கும்

Koviloor Digital Library

நடுவிலிருப்பது சுழிமுனை நாடியாகும். இடைகலைநாடிக்கு சந்திர நாடி என்பர். பிங்கலை நாடிக்கு சூரிய நாடி என்பர். நடுநாடியாக இருக்கும் சுழிமுனை நாடிக்கு அக்கினி நாடி என்பர்.

இடைகலை நாடியும் பிங்கலை நாடியும் உயிர்வளியை (பிராணவாயு) போக்கு வரவு நடத்தும் தொழில் செய்கிறது. சுழிமுனை நாடி செயலற்று சும்மா இருக்கிறது. ஏனென்றால் அதன் வாசல் துவாரம் பூட்டால் அடைப்பட்டுள்ளது. இதற்கு ஓர் பூட்டும் திறவுகோலும் உண்டு என்று சித்தர்கள் கூறுகிறார்கள். சுழிமுனை என்கிற நாடி மூல முதல் தொடங்கி வீணா தண்டூடே ஊடுருவி செல்லும் பாதை வழி அடைப்பபட்டுள்ளது.

அதனை இயக்கினால் அது சிரசளவு உச்சிமுட்டி நிற்கும். இந்த சுழிமுனை நாடி மிக மிக நுட்பமானது இந்த நாடிக்குள் சித்திர நாடியும் வச்சிர நாடியும் உருள் போன்ற குழலுக்குள் குழல் சொருகினாற் போல் இருக்கும். இந்த சுழிமுனை நாடி எல்லா நாடிக்கும் தாங்குதலாக இருப்பதால் நடுநாடி முக்கியத்துவமாக இருக்கிறது. இதன் இருபக்கமும் கீழ்மூல முதல் மேல்மூலம் வரை இதன் வாசல் துவாரங்கள் திரைப்போன்று அடைப்பட்டுள்ளது. இந்த சுழிமுனை நாடித்தான் பூட்டியுள்ள துவார வாசல் கதவு திறப்பித்து அதன் பலனை வழங்கச் செய்யும் நெறியே நாடி பணிந்து அறிந்தால் வாசலை காணலாம். அடைப்பட்ட துவாரம் திறவுகோலால் திறந்து அரிய கருவூலம் கண்டெடுத்து சிவானுபவம் பெற வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இக்கட்டுரையை நிறைவு செய்கிறோம்.

திருச்சிற்றம்பலம்

37. அழியாமை நல்கும் ஆற்றொனா திருவமுது

உலகில் உண்டான உயிர்கள் அனைத்துக்கும் தேகம் உண்டு தேகம் கொடுக்கும் பொருள் மாயை என்னும் சக்தியாகும். மாயை என்னும் சக்தி இருளின் வடிவமானது. உயிர்களின் நல்வினைக்கும் தீவினைக்கும் ஏற்பமும் மலமுடன் பஞ்ச மலம் கலந்து உயிரினுள் ஒட்டி இருள் என்னும் மாயையால் இந்த உயிரை தேகம் என்னும் பருப்பொருளால் மறைக்கப்பட்டுள்ளது. இருள் என்னும் மாயையைத் தந்த இந்த தேகத்தை சிவம் என்னும் பொருளால் மாற்ற கடின தீவிர உழைப்பால் மட்டும் முடியும். அப்பொழுது தான் இந்த தேகத்தை சிவம் என்னும் பொருளால் மாற்ற கடின தீவிர உழைப்பால் மட்டும் முடியும். அப்பொழுது தான் இந்த தேகத்தில் குடிக்கொண்டுள்ள மலங்கள் அகன்று தத்துவங்கள் கெட்டு சுத்த தேகமாக விளங்கும். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும். என்ன அறிய வேண்டும். அதற்கு என்ன தேவை என்பதை நாம் முதலில் சிந்தனை செய்ய வேண்டும். இனி பார்ப்போம்.

அறிவை நீ யறிந்தாலே பிறவி போச்சி
அடுத்தாப் போற்பரமம பதம் நிலையுமாச்சு"

என்று கொங்கணர் மெய்ஞ்ஞானம் 13இல் ஓதுகிறார்.

மேற்கண்ட செய்தியில் மானிடனுக்கு அறிவை அறியும் திறம் வேண்டும். தனக்கு அறிவு இருந்தும் அதனை பகுத்தறிய வில்லை எனில் அவர் மானிடனாக இருந்தாலும் அறிவை பயன்படுத்தாதவர்களை மட்டைகள் என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.

மனிதன் தங்கள் வாழ்க்கையில் "சாகாக் கல்வி" பற்றி அறிய ஏன் முனைவதில்லை என்பது தான் கேள்வியாக உள்ளது. "சாகாத கல்வி" மானிடன் தமது வாழ்க்கையில்

Koviloor Digital Library

நாள்தோறும் ஒரு மணி நேரம் ஏன் ஒதுக்கக்கூடாது. வீணாக திரைப்படம் தொலைக்காட்சி, வேண்டாத புத்தகப் படிப்பு, விரும்பத்தகாத புத்தகங்கள் படிப்பது, வீண் அரட்டையடிப்பது, தேவையற்ற வீணாக அடுத்தவர் வழியில் குறுக்கிடுவது போன்ற அடாத செயலில் தலையிடுவதைத் தவிர்த்து சித்தர்களின் "சாகாக் கல்வி" விளக்கும் சித்தர் நூல்கள் வாங்கி படித்தால் நல்வழி தோன்றும் அல்லவா!

மானிடர்கள் நாள்தோறும் காலை எழுந்து கடன்களை முடித்து நல்வழிக் காட்டும்படி தீப வழிபாடு செய்ய வேண்டும். தீபத்தின் முன் அமர்ந்து அகவழிபாடு செய்தால் அதுவே நமக்கு ஓர் வழி காட்டியாக அமையும் என்பது திண்ணம். அத்தீப வழிபாடே மனிதனை "சாகாக்கல்வியை" கற்கும்படி தூண்டும். அவ்வழிபாடே மனிதன் "சாகாமல் இருக்க" துணையாக இருக்கும். சாகாத கல்வியை கற்க வேண்டுமானால் மனம் வேண்டும். இந்த மனத்தை கட்டுப்படுத்தினால் சிந்தனையும் கட்டுப்படும். ஆசைகள் குறைத்துக் கொள்ள வேண்டும். விருப்பங்கள் தவிர்க்க வேண்டும். இதனை அறிவுள்ள மானிடன் செய்வான். அறிவிருந்தும் அறிவை பயன்படுத்தாதவன் வெறும் மட்டைக்கு நிகரானவன் என்பதை திருமூலர்,

"சாகாத கல்வியைத் தாங்கற்க வேணும்
வேகாத சிந்தை படைத்திட வேணும்
கோ காமியத்தைக் குறைத்திட வேணும்
ஆகாத மட்டை கறிவதுண் டாமே" - 102

திருமூலர் மூப்புகுரு நூல் 200இல் ஓதுகிறார்.

மேலும் அவரே திருமந்திரம் 3000த்தில் 2068ஆம் பாடலில்

"இக்காயம் நீங்கி யினி யொரு காயத்திற்
புக்கும் பிறவாமற் போம்வழி நாடுமின்" - 2068

என்று கூறுகிறார். நமது திருவள்ளுவப் பெருந்தகையார் மருத்துவ சிந்தாமணி — 800இல் 704ம் பாடலில்

"பெண்ணு மாணும் பிறவிதன் வாழ்க்கைபோல்
பிறந்த பின்னிறவாதிரு மாண்பரே" - 704

என்று மானிடர் மீது மிகவும் இரக்கப்பட்டு கூறுகிறார். நாம் சாகாமல் இருக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும். மானிடன் சாகாமல் இருக்க வேண்டுமானால் ஊன் என்ற உடலின் உள்ளகத்தில் உள்ள மதிப்பால் உணர வேண்டும். அந்த மதிப்பால் ஆயிரெத்தெட்டிதழ் மலனின் கண் இருப்பதாக சித்தர்கள் உண்டதைக் கூறுகிறார்கள். அந்த மதிப்பாலை உண்டவர்கள் மரணமில்லை என்பதும் சித்தர்களின் வாக்காகும். இனி அதற்குரிய சித்தர்களின் பாடலைப் பார்ப்போம்.

ஆட்டியே அருப வெளி நீயு மாவாய்
"ஆயிரத்தெட்டிதழ் மலரும்" அறிவாய்க் காணும்
நாட்டியே "அமுதமுந்தன்" வடியுமைந்த
"நகரமென்ற" பேச்செல்லாம் நாசமாகும்" - 45

சுப்பிரமணியர் சிவம் ஞானம் 200இல் ஓதப்பட்டுள்ளது. மேலும் அப்பெருந்தகையார்,

"வானென்ற "மதிப்பாலைத்" திறந்து திறந்துக் கொண்டு
வாழ்ந்திருப்பார் எந்நாளும் மாயார் தானே - 6
மாயாமல் இருக்க வென்றால் மதிப்பால் வேணும்
மற்ற மற்ற முறைகளெல்லாம் மறுவுண்டாகும் - 7 என்றும் கூறுகிறார். மேலும் நமக்கு எச்சரிக்கிறார்.

திருவமுது பெறும் வழி என்ன:

நெடுங்காலமாக வாழ்ந்து வரும் மாபெருஞ்சித்தர் காகபுசண்டர் ஆவார். அவர் திருவமுது எவ்வாறு பெற இயலும் என்னும் செய்தியை தமது நூலில் திறந்த வெள்ளை மனதுடன் எழுதியுள்ளார். அதனை இனி நற்சிந்தனையுடன் தெரிவிப்போம். வாசியோக மார்க்கத்திலே படிகளை கடந்து ஞானம் பெறும் நிலையை எட்டுவதற்கு முக்கிய பெருந்தடையாக உள்ளது. "சிலேத்துமம்" என்ற "கபமே" யாகும். தடைக்கல்லாக உள்ள கபமான பொருள் நீக்க வேண்டுமென்றால் கண் — மூக்கு மத்தியை நாடி கண்டு

Koviloor Digital Library

தேறுதல் வேண்டும். மேல் மூலம் என்று சொல்லப்படும் பிராணன் வீடு அறிய வேண்டும்.

அதாவது உண்ணர்க்கு மேல் உள்ளது. அண்ணாக்கு இதைத்தான் சித்தர்கள் உண்ணாமுலை என்று குறிப்பிடுகிறார்கள். உண்ணாக்கிலிருந்து புருவ மத்திக்கு ஒரு சிறு பாதை (ஊசி முனைப்பாதை) உண்டு. இதைத்தான் "மயிர்ப்பாலம்" என்றும், மேருவுக்குச் செல்லும் பாதை என்றும் சித்தர்கள் கூறுகிறார்கள். இந்த உண்ணாக்கு மேலே மேலே உண்ணாக்குள் மெல்லிய "ஜவ்வால்" அடைப்பட்டுள்ளது. இது "கோழையால்" அடைப்பட்டு இருக்கும். குருபெருமான் கூறும்முறைப்படி சுழிமுனை நாடிக் கொண்டு அண்ணாக்கின் மேலே ஊத ஊத இவ்வடைப்பட்ட வழியானது மெல்ல மெல்ல விலகி வழி உண்டாகும். மனத்தின் உறுதியால் சுழிமுனைக் கொண்டு தமரிட (Drilling) உச்சி போகும் வாயில் திறக்கும். இப்படி வாசல் திறக்கின்ற போது மனதறிவின் நினைவால் உண்ணாக்குக்குள் வாசி ஊத மூக்கு மேற்தண்டில் முனை மூக்குக்குள் (புருவ மத்தி — லலாடத்தில்) சுழன்று உற்பத்தியாகின்ற வாசியின் அழுத்த நிலை அனுபவத்தால் உணர்ந்து அறியும்பவந்த பின் இவ்வழியாக வாசியை நினைவோடு மேல்நோக்கி ஊத சுழிமுனையில் மயங்காமல் (சொக்காமல்) அறிவு ஒளியை ஞான சோதி தரிசனமாக பார்க்கலாம். இதைக் கண்டவரே சொர்க்க வாசல் திறந்தவரார். இவரே பூட்டை உடைத்து (ரகசியவழி அடைப்பு) உடைத்து வெற்றிக் கண்டவராவார். கீழ்கண்ட சித்தரின் அற்புதப் பாடலை மந்திரமாக தெரிவிப்பதை மானிட இனம் கண்டு மகிழ்ச்சியடையுங்கள்.

"போக்குவீ ரென்று சொல்லிப் போக்கத் தானே
பொருளதனைச் சொல்லி வைத்தேனிடங்கள் தோறும்
நாக்குமே லண்ணாக்கு உண்ணாக்குள்ளே
நடுத்தமைரத் தானேதிறந்தா உச்சிவாசல்
மூக்கு மேற் தண்டினிலே முனை மூக்குக்குள்
முளைத் தெழுந்த வாசி வரப் பார்த்த பேர்கள்
தாக்குவார் புருவநடுமேலே பார்ப்பார்
தமர்வாச லடைத்திருக்கும் பூட்டுத்தானே" - 32

காகபுசண்ட பெருநூல் காவியம் — 1000

புருவ மத்தியில் ஒளி அனுபவம் (ஆன்மச் சுடர்) கிடைத்தபோதும் நாள்தோறும் நாம் முறைப்படி வாசிபயிற்சி செய்து வரவேண்டும். இந்த யோகப் படிப்பு கற்று வரும்போது தீவினைச் செயல்களில் ஈடுபடக் கூடாது. அப்பொழுது வாசி ஓட்டம் தடம் தவறி நிலைமாறி ஓடி உயிர்வளியை (பிராணனை) வீணாக நசிக்கச் செய்யும். உயிர்வளி இழப்பு ஏற்படும்போது மனதும் மிகவும் பாதிக்கப்படும். அத்தோடு இல்லாமல் உடல் நிலையும் கெடுத்து ஒளி நிலையையும் மங்கச்செய்து மனநிலையும் கெடுக்கும். மேற்கோளாக கோபம் உறுகின்ற போதும், காமம் ஏற்படும்போது, திருட்டுத்தனங்கள் செய்யும் போதும், தவறு செய்யும் போதும் இதயத்துடிப்பு வேகமாக படபடக்கும். குருதி இதயத்தில் சீராக ஓடாமல் தேகம் கொதிப்படையும். மூச்சு இழப்பு நேரும்.

"சாகாக் கல்விக்கு" அடிப்படையாக அமைவது நற்செயல், நற்குணம், அன்பு கருணை, உயிரிரக்கம், பசியாற்றல், பிறருக்கு உதவி செய்தல், நற்கல்வி வழங்கல், நற்சிந்தனை, நல்ல மனதோடு நாம் செய்தால் மூச்சு நிலை சீராக அமையும். இறையருளை நினைத்தல் — மனமுருகி வேண்டல் — உண்மையான நற்சிந்தனையுள்ள் அடியார்களிடம் பழகல் — தத்துவ விசாரம் — சித்தர்கள் — நற்சீலமுடைய சாதுக்கள் காணும்போதும் மூச்சு ஓட்டம் அமைதியாகவும் ஒரே சீராகவும் நடக்கும்.

சில நேரங்கள் வாசி ஓட்டம் குறையும்போது இறையருள் அனுபவம் — அருளின் நெகிழ்ச்சியால் அதிசயங்கள் ஆச்சரியங்கள் நடப்பதும் ஏற்படலாம். இவ்வாறு பல நற்காரியங்கள் செய்து பாவ காரியங்கள் விலக்கி தவத்தை ஒழுங்காகச் செய்தால் மூச்சு உதித்த இடத்திலே ஒடுங்கும். மன அமைதி — அடக்கம் — கூட வாய்க்கும் போது

Koviloor Digital Library

உச்சி குளிந்து "திருவமுது" என்று கூறப்படும் அமிர்தமானது கீழிறங்கும். நல்ல செயல்களைப் புரிந்து ஒழுக்கமாக வாழ்கின்ற போது உச்சியில் உள்ள கோழையானது (மன ஒருமையால் மன உருக்கத்தால் மன நெகிழ்ச்சியால்) ஞான அனலால் வேதியில் மாற்றத்தால் அமுதமாக்கப்பட்டு உள்நாக்கின் வழியே கீழிறங்கும் (நவ நஞ்சு மருந்துகள் நவ கற்பமாக செய்வது போல்) இந்த அமிர்தமே அமுரி என்றும், குடநீர் என்றும் — சுத்த சலம் என்றும் குமரியின் அமுரி என்றும் பரிபாசையாக சித்தர்களால் அறிமுகப்படுத்துகிறார்கள். இது நல்லொழுக்கமுள்ள அருளியல் வாழ்வு நிகழ்வில் இருப்பவர்களுக்கு சாதகமாக அமையும்.

மேற்கண்டவாறு வாசல் கதவு பூட்டாகிய மறையக (இரகசிய) வழியை தடுக்கும் தடுப்பு உடைத்துக் கண்டவர்கள் அதிகோடி சித்தர்களாவார். இந்த வாசியோகத்தை தவறாமல் முறையாக இறையருளினால் செய்கின்ற போது சுழிமுனையில் மயங்காமல் (சொக்காமல்) உந்தி கொண்டு கரையேற வேண்டும். அப்படி முனைந்து கரையேறிவர்கள் தான் சித்தர் கூட்டத்தில் ஒருவராவார். அவ்வாறு மெய்ஞ்ஞான நிலைமையை அறிவிற்கு அப்பாற்பட்ட பொருளை (வஸ்துவை) பெற்று உணர்ந்து தானே அதுவாகாமல் சுழிமுனை அனுபவத்தில் நிகழும் "சிறுஒளி" அனுபவத்திலே மனத்திருப்தியடைந்து, அதையே சிறந்த நிலையாகக் கருதி தூங்காத தூக்க நிலையாகக் கருதி (மனமடங்கிய நிலை) இங்கே உண்டாகும் சில காட்சி அனுபவங்களால் ஏமாந்தவர்கள் எத்தனையோ கோடி இவ்வாறு இதில் மயங்காமல் மேற்படிகளில் அனுபவம் அடைபவர்கள் தான் சுத்த வீரராவார். மேல்நிலை அனுபவத்தில் தானே அந்நிலை (ஆயிரம் கோடி சூரிய சுடர்ஒளி (பிரகாசம்)யை பெறும் போதுதான் எப்பொழுதும் பிரகாசித்து நிலைகுறையாமல் வளர்ந்து ஓங்கி "அருட்பெருஞ்சோதி" யாகும்.

இந்நிலையிலே தான் மேற்கொண்ட யோக பயிற்சியோ சாதனையோ முயற்சியோ இல்லாமல் மானிடனுக்கு ஞான தேகமானது கிடைத்து நிலைத்து சூரிய சந்திரகலைக்கு நடுவே சுழிமுனைக்கு மேலே கபாலத்தின் நடுவே மேற்கண்ட சோதி பிரகாசம் ஒளிவீசி அனைத்தும் தானாகி நிற்கும் (இதையே காட்டம் விறகெய்தாமல் எனக் குறிப்பிடுகிறார் நமது சித்தர் காகபுசண்டர்). ஆக புருவ மத்தியில் தெரியும் ஞான ஒளி நாட்டமாயிருந்து பயின்று வர இவ்வனுபவம் சித்திக்கும் (கண் களிக்க புகை சிறிதும் காட்டாதே — புருவக்கலை நடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே என்று வடலூர் வள்ளல் பெருமான் ஓதுகிறார்) கீழ்கண்ட பாடலை நோக்க,

பூட்டுடைத்துக் கண்டவர்கள் மெத்தவுண்டு
புத்தியுள்ளோ ரவர்களே சித்தர் சித்தர்
ஆட்டமிதிற் காண்பார்கள் அனேகங்காட்டு
அம்மம்மா வென்றார்கள் சுத்தவீரர்
காட்டம்விற கெய்தாமற் தீயிடாமல்
கதிர் மதிக்கு மத்தியது புருவமத்தி
நாட்டமிடக் கோபுரத்தின் வாசற் பூட்டு
நாசிமுனை புருவமத்தி திறந்து கொள்ளே – 33

காகபுசண்டர் பெருநூல் — 1000 என்று கூறுகிறார். மேலும் மானிடன் நாளும் சாதனை செய்ய வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

மானிடன் முறையாக தவத்தை செய்யாமல், அல்லது தான் தவஒழுக்க நெறிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் யோகதவம் செய்யும் போது உண்ணாக்கின் வழியாக வேதியில் மாற்றம் அடையாத கோழைத்தான் இறங்கும். இக்கோழையை விழுங்கி வயிற்றுக்குள் செல்லும்போது பலவித நோய்கள் வர இதுவே காரணமாய் அமைந்துவிடும். ஆக தவ ஒழுக்கங்களை கடைப்பிடிக்காத போது பித்த நீராக கோழை இறங்கி உறக்கத்தையும் உண்டு செய்து தவநிலைக்கு தடையை நிரந்தரமாக ஏற்படுத்தி விடும்.

எனவே சைவ நெறிமுறையாக கடைப்பிடித்து தவத்தை செய்து ஒழுக்க

Koviloor Digital Library

நன்னெறிகளை வழுவாமல் கடைப்பிடித்து அமிர்தத்தை கறந்து உண்ட உடல் பிணிகள் போக்கி காயத்தினை சித்தியாக்கி அறிவை விசாலமாக பெற்றுக் கொள்ள வேண்டும். நன்னெறி முறையிலிருந்து தவறக் கூடாது. ஒழுக்கங்களை சீராகக் கடைப்பிடிக்க வேண்டும். சத்துவகுணமாயிருந்து தவத்தினை நல்வழியில் எடுத்துச் செல்ல வேண்டும். இதனை கைவிடக் கூடாது என்பதை அறிவுறுத்தவே மற்றோர் வீட்டில் கால் வைக்க சொல்ல வில்லை என்று தம் பாடலில் கூறுகிறார்.

மேற்கண்ட அமுதத்திற்கு "கள்" என்றும் பெயர்கள் என்றால் மரத்திலிருந்து (தென்னை — பனை — ஈசம் — ஆலம் — அரசம் — பாலுள்ள மரங்கள்) இறக்கப்படும் கள்ளல்ல. பிற கள்கள் உண்டால் மயக்கம் உண்டு செய்யும். மரியாதை கெடும். கவுரவம் பாதிக்கும் சமூக உயர்வு மட்டமாகி விடும். இக்கள் போதையை உண்டு செய்து நடுவீதியில் நிற்கச் செய்யும் மருளையும் இருளையும் உண்டு செய்யும்.

அருளால் கிடைக்கப் பெறும் கள் என்னும் அமுதமே மதுவாகும். அக மயக்கத்தை நீக்கி விடும். அறியாமையை தகர்த்துவிடும். இறவாநிலையை உண்டு செய்யும். இதனை வள்ளல் பெருமான்.

"கள்ளுண்டார்.....
என்று மிறா நிலையிலிருந்து கள்.
உள்ளுண்ட போது மயக்குற்றிடும்
கள்ளலவே உள் மயக்கனையும்
ஒழித்திடும் கள் - என்று அனுபவ மாலையில் தாம் பெற்ற நல்லனுபவத்தை தெரிவிக்கிறார்.

இவ்வாறு முறையான தவம் மேற்கொண்டு தவத்தில் உட்காரும்முன், இறைவனின் அருள்நெறியும் — அன்பு நெறியும் மனமுருக நினைந்து நெகிழ்ந்து புகழ்ந்து பாடி பரவி, அதே நினைவோடு தமது குறைகளையும் தவறுகளையும் நீக்குமாறு வேண்டி மௌன தவத்தை நாடி அருளைக் கொண்டு அருள் பெற்று மானிடன் காணக்கறியதைக் கண்டு கொள்ள முடியும். இதையே வள்ளல் பெருமான் அகவலில்,

உளவளிலறிந்தா லொழிய மற்றக்கின்
அளவினிலளவா அருட் பெருஞ்சோதி என்று ஓதுகிறாா. காகபுசண்டரின் திருமநதிர வேதப்பாடலை இங்கு காண்க.

"திறந்து கொண்டு மேலேற நெற்றி மார்க்கம்
தீயவழி நடவாதே மூக்கின் மார்க்கம்
மறந்துவிட லாகாது தினமோர் காலம்
வாய்பிதற்ற லாகாது அடக்க மாகில்
கறந்துவிழும் பாலமுர்தம் மனதிற்றானே
தூங்கினவர் போலிருக்கு மேங்கி டாதே
கறந்து கொள்ளச் சொன்னாரே மற்றோர் வீட்டிற்
கால்வைக்க சொல்லவில்லை யுள்ளே தானே - 34

என்று காகபுசண்டர் திருமந்திர பெருநூல் 1000த்தில் ஓதுகிறார். மேலும் அமிர்தத்தின் பயனையும் கீழ் வரும் பாடலால் அறியலாம். அறிய முற்படாதவர்கள் மட்டி மாடு என்பர் என்று கூறுவதை அறியலாம்.

"உள்ளே தான் பாலமுர்தம் வடியுமென்பார்
உண்ட அன்னம் பசியடக்கும் வாராதாகும்
தெள்ளினே னிதுவிபர தெரிந்து கொள்ளு
தெளியாட்டால் யான் சொன்ன சூட்சம் பாரு
கள்ளே தான் வடியுமென்பார் உச்சி வாசல்
கட்டறுத்தா லேகோழை வடியுமல்லோ
பிள்ளை காளிது வறியார் மட்டியாகும்
பேசினார் யானறுத்து மேற்சென்றேனே - 35

என்று கூறுகிறார். இனி இந்த பாடலின் பொருளைக் காணலாம்.

மானிடன் யோகி நெறியின் தவத்தால் கபாலத்திலிருந்து பாலமிர்தம் வடியும்போது நோயை நீக்குவது மட்டுமல்லாமல் பசியை அடக்கும். மன அடக்கம், மன சாந்தம், மன நிறைவு, தன்னம்பிக்கை, பொறுமை, மெய்யறிவு இவற்றினை உண்டு செய்யும். மானிடம் இந்த விபரங்கள் அறிய வேண்டும். சன்மார்க்கம் என்பது இறையருளின் இயற்கை (சுத்த சத்) நெறியான மார்க்கமாகும். இயற்கை உண்மை நறையுடைய மார்க்கம் ஆகும்.

இறைவனின் சுத்த அருளின் இயல்பை அனுபவத்தில் ஏற்படுத்துவதாகும்.

Koviloor Digital Library

வேற்றுமைகளைக் களைந்து அருள் அன்பு அனுபவம் உண்டாவது என்பதாம். சந்திர சூரிய கலைகள் பரிபருவ மடைந்து தோன்றிய இடத்திலே முடங்கி சுழிமுனையை அருளின் துணைக் கொண்டு அனுபவத்தால் கலையை கடந்து அறிவு (சித்) நிலையை பெறுவதைக் குறிப்பதாகும். சத்திய சங்கம் — மெய்யறிவு ஞானநிலை அடைந்தவுடன் மனமும் சிந்தனையும் செயலும் ஆன்மா அறிவுப் பூர்வமாக இயற்கை அன்பு நிறைந்ததாய், அருளின் நிலையில் இயற்றுவதாயிருக்கும். இதுபோன்ற உயர்ந்து மெய்ஞ்ஞானயறிவு நிலையத்தையே சத்திய சங்கம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இந்நிலையுடையோர்க்கு அமுதம் எக்காலத்துக்கும் ஏதுவானதாக இருக்கும். இதுவே அறச்சாலை என்னும் தருமச்சாலையாகும். மேற்கண்ட நிலை பெற்றவர்கள் அன்போடும் அருளோடும் ஞானக் கருத்துக்களை உண்மை அனுபவங்களையும் உலகுக்கு எவ்வித பலன் எதிர்பாராமல் மானிட நலனுக்காக தரும சாலையைப் போல் ஞான உணவினை ஊட்டிய வண்ணம் இருப்பார்கள்.

மானிட மக்கள் மெய் தவநிலையிலே நின்று தவம் செய்தால் எமன் என்று கூறும்படியான கோழையானது முற்றிலும் நீங்கும். இவ்வாறு அறிந்து நீக்கியவர்களே எனது பிள்ளைகள். இதை தெரிந்து அறிந்து உணர்ந்து அனுபவத்தால் புரிந்துக் கொள்ளாதவர்களை மட்டிகள் என்று குறிப்பிடுவதால் தெளிக.

மேற்கண்ட கருத்தை உரோமமாமுனி என்னும் சித்தர் பெருமான் எளிமையாகக் கூறிய பாடலை படித்து இன்புறுங்கள்.

“காட்டுக்குள் அலையாதே வீடுதேடிக்
கண்மூக்கு மத்திக்குட் காணும் பாரு
மூட்டுவாய் வீட்டுக்குள் கொள்ளவேதான்
மூலவாய் வக்கிணயை மேலே மூட்டித்
தாட்டிகமா யனற்றீயை மூலவாய்வால்
தாக்குவாய் குருவாக நிற்குந் தானே - 6
குரு வாக நிற்குமா தாரந் தோறும்
குகைக் குள்ளே அடைப்பதற்கு வகையை கேளு
கரு வென்று சொல்வ தெல்லாம் “மூச்சேயல்லாற்”
காணாது கல்லா சம்பு வுருவைப் போலே
பொருதி மூலம் நோக்கி யூறும் போதும்
பொங்குமடா “அமுதத்திற் சூடு கொண்டு”
வருதி அமுதத்தை யுண்ணும் போது
வாங்குமடா நயங்கொண்டு சிரத்திற்பாரே - 7

உரோமமாமுனி கலைஞானம் — 10

என்ற சிறப்பியல் செய்தி தருகிறார். மானிடனே நீ காட்டுக்குள் அலையாதே. வீடு என்று கூறப்படும் இத்தேகத்தின் கண்ணுள்ள மூக்கு கண் மத்தி என்னும் புருவநடு கண்டுபார். மேல் மூலம் என்று கூறப்படும். இந்த தேகத்தின் கண் சுழிமுனை என்னும் வன்னியை மூலத்தில் மூட்டி அனல் என்ற தீயால் அந்த மூலத்தை தாக்க வேண்டும். அப்படி தாக்கினால் குரு என்று சொல்லப்படும் நந்தி ஒளி சுடர் விட்டு ஒளிரும்.

குகை என்று கூறப்படும் கபாலத்தில் மேல் மூலம் என்று கூறும் புருவ மத்தியை சுழிமுனையைக் கொண்டு வாசி என்னும் மூச்சு ஊத ஊத மேல்நோக்கு தீயானது ஏறும். அந்த தீயின் வெப்பத் தன்மையால் அமுதம் கரைந்து உருகி கீழ் நோக்கும். அதனை உண்டால் அழியாமை தரும் என்பதாம்.

திருவமுது பெறும் வழிகள்:

நூலான பிராணனல்லோ மூலதாரம்
நுடங்கினின்ற பிரணவமாம் யெழுத்தினூடே
காலான வன்னி கொண்டு சுழியிலூட்டு
கண் திறந்து “அமிர்த மது குமளிபாயும்” - 12

உரோம மாமுனி வழலை — 16

மேல்மூலதாரம் உயிர்வளி (பிராணன்) வாழுமிடமாகும். ஓங்காரம் என்னும் பிரணப் பொருள் முடங்கியுள்ளது. வன்னி என்ற தீயை வாசி கொண்டு சுழிமுனையின் உள்ளுக்குள் ஊத புருவ வாசல் கதவு திறந்து அமிர்தம் கீழ்நோக்கி பாய்ந்து வரும் என்று கூறுகின்றார். இது காறும் திருவமுது பெற வேண்டும என்ற செய்தியை அறிந்தோம். இனி அமுதத்திற்கு

Koviloor Digital Library

எந்தெந்த பெயரில் அழைக்கிறார்கள் என்பதை இங்கு பார்ப்போம்.

திருவமுதத்தின் திருப்பெயர்கள்

1. சுத்த கங்கை, 2.பாலமுதம், 3.தேனருவி, 4.சுத்த ஜலம், 5.வானமுதம், 6.உச்சியமுதம், 7.பானம், 8.தேன், 9.ஞானப்பால், 10.மகார நீர், 11.ஓமப்பால், 12.செம்மதிப்பால், 13.குமரி கற்பம், 14.விந்து பானம், 15.ஆகாய வஸ்து, 16.தேறல், 17.சிவ நீர், 18.சாவா மருந்து, 19.மது, 20.பாலமிர்தம், 21.மதிப்பால், 22.கமலப்பால், 23.அமுத புனல், 24.சிவானந்தத்தேறல், 25.போத அமுது, 27.வானீர், 28. ஊசிநீர், 29.கங்கை, 30.வாமப்பால், 31.கானற்பால், 32.முலையின் பால், 33.காமத்தோர் கற்பம், 34.சோம பானம், 35.உதக நீர், 36.அமுர்தம், 37.அகாரம், 38.உகாரம், 39.சிவம், 40.சக்தி, 41.மத விந்து, 42.சாரம், 43.செயநீர், 44.தயிர், 45.தண்ணீர், 46.பெண்ணமுரி, 47.சாகாமூலி, 48.அமுதரசம், 49.கள்ளமுதம், 50.ஆதி மருந்து, 51.செப்பூடு

திருவமுத வகைகளும் அதன் நிலைகளும்

மானிடன் நற்சிந்தையுடன் யோகநெறியில் பழகி வரும் போது சுழிமுனைத்திறப்பால் வன்னியின் சூட்டல் ஐந்து வகையான திருவமுதம் உண்டு என்று சித்தர்கள் தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளார்கள். அதைப் பற்றிய செய்தியை நாம் அறியலாம்.



மானிட தேகத்தில் யோகத்தின் முதிர்வால் ஒரு யோகி முதன் முதலில் "வெண்சாரை" என்ற அமுத நிலை பெற்று மகிழ்கின்றார்.

அடுத்து "கருஞ்சாரை என்ற அமுதநிலையை" காண்கின்றான். வெண்சாரை என்பது விந்து என்றும் கருஞ்சாரை என்பது நாதம் என்று நமது கடைப்பிள்ளை என்னும் சித்தர் அவர்கள் உணர்த்துகிறார். அவரின் அருமையான அற்புதப்பாடலைக் கண்டு மகிழுங்கள்.

''காணவே ''வாமப்பால் தண்ணீராகும்''
கருணையுள்ள ''காணற்பாலே நாதம் நாதம்''
பேணவே நாதமென்றால் அறிவாரில்லை
பெண் குழந்தை ''யமுரிடா குமரி கற்பம்'' - 10

ஆமப்பா மனதுறுதி யானால் நிட்டை
அறிவான பூரணமாம் ''விந்து விந்து''
ஓமப்பா ''விந்து'' வென்ற அமுதந் தன்னை
உத்தமமே ''வெண்சாரை'' தண்ணீராகுங்
கருணையுள்ள தண்ணீரும் வெண்ணீராகும்
தாமப்பா வெண்சாரை ஆதிகற்பம்
தன்ன ததிற் கண்டு கொண்டு தானாய் நில்லே - 45

நில்லென்ற ''கருஞ்சாரை'' சொல்லக் கேளு
நிசமான ''பெண்ணமுரி'' நினைவாய்ப் பாரு
செல்லென்ற சாரையடா ''அமுத கற்பம்''
சிந்தை மன தொன்றாகக் கொண்டு தேர்ந்தாற்
செல்லென்ற மந்திரங்க லெல்லாஞ் சித்தி
சுருதி யென்ற தேகமது முத்தியாச்சு - 46

என்று ஓதப்படுகிறது. இதிலிருந்து முதல் இரண்டு அமுத நிலைகள் அறிந்துக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்திய சித்தர் பெருமாளுக்கு நன்றிக் கடன் பட்டுள்ளோம்.

வாமப்பால் என்பது விந்து என்றும் அதற்கு தண்ணீரின் நிலையுடையது என்பதும் அதன்நிலை வெண்சாரை என்றும் அறிய வருகிறது. இதற்கு ஆதி கற்பம் என்ற பெயரும் உண்டு என்பதும் அறிய வருகிறது. மற்றொன்று வாலையின் அமுரியாகும். இதற்கு கருஞ்சாரை என்பர். கருஞ் சாரை நாதம் என்றும் கானற்பால் என்றும் சித்தர்கள் அறிமுகப்படுத்தியுள்ளார்கள். இதனை உண்டால் மந்திரங்கள் சித்தியாகும். இந்த தேகம் முத்தி நிலையாச்சு என்று கூறுகிறார். மேலும் மேற்கண்ட சித்தர் அவர்கள் மானிடன் வாலை நிகர் வயது அடைந்து வனப்புடன் இருப்பான். இதன் நுட்பத்தை அறிந்து மானிடன் பூரணம் என்னும் இடத்தை நோக்கி எந்நாளும்

Koviloor Digital Library

மனத்தை ஒருமுகப்படுத்தி காமப்பால் — கானற்பால் கொண்டால் உமக்கு கயிலாச தேகநிலை உயர்த்தும். அதன்பின் காலன் என்ற சொல் கனவிலும் வராது என்பதை கீழ்கண்ட பாடலின் பொருளை உணர்ந்து நினைக.

ஆமப்பா வாலைவய தாகுந் தேகம்
அந்தரங்க மானதொரு "அமிர்தந் தன்னால்"
தாமப்பா தன்நிலையை யறிந்து கொண்டு
சதா காலமும் பூரணத்தில் மனத்தை நாடி
காமப்பால் கானல்பால் ரெணங் கொண்டால்
கயிலாச தேகமடா காலனேது - 8

என்று என்பதையும் உணர்த்துவது மானிட இனத்தை உயர்நிலைக்கு கொண்டு செல்லவே அப்படி பாடியுள்ளார்.

நடுவனை அமுது அல்லது செஞ்சாரை:

தானென்ற கருஞ்சாரை யுண்மை சொன்னேன்
சதாநித்திய பூரணத்தின் தன்மையாலே
"தேனென்ற செஞ்சாரை" மகிமை கேளு
தேவியெனுஞ் செகசோதி பாதம் போற்றி
மானென்ற மங்கையடா மவுனப் பிள்ளை
மதனரதி யான "சிறு மங்கை நாதம்"
கானென்ற நாதமடா கமலநாதம்
கருணையுடன் பூரணமாய் நாதம் வாங்கே - 128

வாங்கியந்த நாதமதைத் தியானம் செய்து
மனதுபரி பூரணமாய் மகிழ்ந்து போற்றி
பாங்கு பெற சிங்றீங் கென்றே நீ யோதி
பத்தயுடன் பூரணமாய் மனதில் கொண்டு
ஆங்கதுகொண் "டமுர்தரசங்" கொண்டாயானால்
அசையாத கூத்துவனு மகன்று போவான்
நீங்கான பிரமையுமோ தீர்த்து போகும்
சிவசிவா கயிலாச தேசமாச்சி - 129

அகத்தியர் பரிபூரணம் — 1200

வாழ்வதற்கு இன்னமொரு வளமை கேளு
மார்க்க முடன் "நடுவான அமுதம்" கொண்டால்
கால் வலுக்கும் கண் துலங்கும் காற்றை போக்கும்
கருத்து மிகத்தான் வளரும் கருணை சேரும்
மேல் வலுக்கும் அதிகமதயாய்ப் பலமுண்டாகும்
மெய்யிலுள் நோய்களெல்லாம் விளகிப்போகும்
ஆள்வதற்கு குருவுதவி அதிகமுண்டாம்
அரகரா நடுவான அமுதங்கொள்ளே - 768

அகத்தியர் அமுதகலைஞானம் — 1200

நடுவனை என்னும் செஞ்சாரையின் திறம் மற்றும் மகிமை என்னவெனில் மகரம் என்னும் மங்கையான மவுனகுழந்தை மதனரதியான சிறுமங்கையின் நாதமாகும். அது கமலமலரிலிருந்து ஒழுகும் நாதமாகும். இந்த அமுதம் கரந்து உண்டால் எமன் மாண்டுபோவான். பிரம மயக்கம் அகலும். தேகம் கயிலாச உடலாக மாறும்.

நடுவனை அமுதத்தால் யோகிகளின் கால் வலிமை பெறும். கால் என்பது சுழினை வன்னியான பிராணனம் வலிமை கூடும் கண் துலங்கும். காற்றை போக்கும் கருத்துக்கள் மிகவும் மேன்மை பெரும். கருணை கூடும். மேல்மூலம் வலுக்கும். வெகு வலிமை உண்டாகும். தேகத்திலுள்ள பிணிகள் அனைத்தும் நீங்கும். ஆளுமை தொடர குருவின் உதவி கிடைக்கும். எனவே நடுவனை அமுதம் கொண்டு தேறுங்கள் என்று அகத்திய பெருமான் கூறுகிறார்.

<u>நான்காவது அமுதம் என்பது என்ன:</u>

நான்காம் நிலையுள்ள அமுதமானது தேன் போன்றும் சீனியின் சுவையும் பாலின் மணமும் கலந்து சற்று திடப்பொருளாக இருக்கும் என்றும், அதனை உண்டால் தேகம் அழியாது. தேகத்திலிருந்து ஒரு சட்டை கழன்று பொன்போல் விளங்கும். அத்தேகம் தீபம் போல் காணும் என்றும், அனைத்து உலகங்கள் ஒன்றாகவே தோன்றும் என்றும், அவ்வுயிர் அண்டத்தில் பாய்ந்து பிரமத்தில் அடங்கும் என்று ஓதுகிறார். அதனை சித்தரின் பாடலை ஓதி பயனடையுங்கள்.

"உங்கலாம் பிரமுந்தா னடங்கும்போது
உறுதியுள்ள அண்டத்தில் ஊடுருவிப் பாயும்
திங்கலாம் "அமுதமடா தேனுந் சீனி
தித்திப்பு பாலுடனே திடமாம்" மைந்த
தாங்கலாம் "தேகமது அழியா மாற்றான்
சட்டையுமே கழன்று மிகத் தங்கம்போலே
பொங்கலாம் மெய்ஞ்ஞான தீபம் போலே
பூரித்துப் பார்த்திடவே புவன மொன்றே - 31

Koviloor Digital Library

ஐந்தாவது நிலை பெற்ற அமுதம்:

அகத்தியர் எழுதிய பூரணம் 1000 என்னும் நூலில் ஆயிரத்தெட்டு மலருக்குள்ளே திருவமுதம் கெட்டி தயிர் போல் இருக்கும் என்று கூறுகிறார். இந்த அமுர்தத்தை உண்டால் உடலும் உயிரும் சித்தியாகும். பஞ்சகர்த்தாள் என்னும் தெய்வங்கள் காணலாம். சிதம்பரத்தின் எல்லையில் சேர்ந்து, பூரணம் என்னும் நிலையுடைய அமுதம் கொள்ள வேண்டும் என்று கூறும் பாடலை ஊன்றி கவனித்து படித்தறிந்து தெளிக.

''பார்க்கையிலே அழுத்தி முனை நன்றாய்ப் பார்த்தால்
பஞ்சக் கண் தேவதைகள் பதிவாய்த் தோனும்
ஏற்கையுடன் ''சகஸ்தரமான மலருக்குள்ளே''
இருக்குதடா ''மதியமுர்தம் தயிருபோலே''
சேர்க்கையுடன் ஆதாரமூலம் பார்த்து
சிதம்பரத்தி னெல்லையிலே சேர்ந்துக் கொண்டு
மார்க்கமுடன் பூரணமா ''மமுர்தங்'' கொண்டால்
மகத்தான உடலு யிருஞ் சித்தியாமே - என்று பூரணம் 1000த்தில் ஓதுகிறார்.

அமுர்தம் எங்கிருந்து நமக்கு கிடைக்கிறது.

அகத்தியர் அமுதகலை ஞானம் 1200இல் அமுதம் கிடைக்கும் இடத்தைக் குறித்து குறிப்பிட்டுள்ளதை கீழ்க்காணும் பாடலால் அறியலாம்.

''குருவான பதிஅறிந்து அறிந்து குருவைக் காரு
குருவறிந்து பூரணத்தைக் குணமாய்க் கொள்ளு
திருவிருந்து பூரணத்தைத் தினமும் கொண்டால்
சிவசிவ கயிலாச தேகமாகும்
மரு விருந்த ''ஆயிரத் தெண் மலருக்குள்ளே''
மகத்தான ''அமுதமது கசிந்து'' காணும்
கருவான ''அமுதமதைக் கொண்டால்'' மைந்தா
காயசித்தி யோகமுடன் வாதமாமே - 15

என்று கூறுவது நன்றாக அறிந்து பாருங்கள். மேலும் அமுதமானது 1008 மலரில் அமுதம் ஊறி தேங்கும். அதைப் பற்றி கூறுவது நாவின் கண் வாக்கு இல்லை. பாவங்கள் இல்லை. இதுகள் நமக்கு ஒத்து நின்றால் வாசியானது ஒளியாக மலரும் என்பதை கீழ்வரும் மற்றுமொரு பாடலை ஊன்றி நோக்குக.

''நேரவே ''ஆயிரத்தெண் மலருக்குள்ளே''
நிற்குதடா ''அமுதமங்கே'' நீ தான் கொள்ளு
கூற வென்றால் நாவேது பாவங்கேது
கூடினால் வாசி சென்று ஒளிபோல் காணும்''
என்று சித்தர் நூலில் காணப்படுகிறது.

நமது தேகத்தில் ஐந்துவித அமுதகற்பம்:

இந்த தோலுடம்பில் ஐந்து வித அமுதகற்பம் உண்டு என்பதையும் அதனை அறிந்து உண்டால் தேகம் அழியாது என்பதும் நமது சித்தர்கள் ஆதி காலத்திலிருந்தே அறிந்துள்ளனர். இவ்வித காயாதி கற்பம் உண்டால் மானிடனுக்கு மரணம் கனவிலும் கிடையாது என்பது திண்ணம். கீழ்வரும் பாடலைக் காண்க.

''நாட்டமுடன் ''நயன வொளி தீபம்'' பார்க்க
நாதாந்த ''பஞ்ச கெண கற்பம்'' சொன்னேன்
தேட்டமுடன் தானறிந்து மனது கூர்ந்து
திருவான பூரணத்தில் திறமாய் நின்று
கூட்ட மன்றி தானவனாய்த் தானே நின்று
குருவான ''அஞ்சு கற்பம்'' கொண்டு தேர்ந்தால்
வாட்டமில்லா மனதாக வாழ்வாயப்பா
வளமான கற்பமத உறுமைக் கேளே - 72
அகத்திய பூரணம் — 1000.

கோடி கோடியாய் உள்ள சித்தர்கள் அனைவரும் கானாமிர்தம் உண்டவர்களே ஆவார். இதில் சித்தர்கள் அமுதம் உண்டு மரணமில்லா பெருவாழ்வு பெற்ற அனுபவங்கள் பார்க்கலாம்.

''தானான பதவியது தானே தானாய்
''சாயுச்சியமான'' பூரணமுந் தானாச்சு
கோனான ''குருபதமுந்'' தானே தானாய்
குருவாகி நின்ற தொரு மாய்கை தானாய்
வானான ''அண்டபத வடிவந்'' தானாய்
''மந்திரமாய்'' நின்ற தொருமாய்கை தானாய்
தேனான ''அமுர்தரசபானந்'' தானாய்
தெளிந்ததுவுந் கழந்ததுவுந் நான்றானாச்சே
அகத்தியர் பூரண காவியம் — 1000

அண்டவடிவம் — வான்வடிவம்; மந்திரமாய் நின்ற மாய்கை — பிரணவ வடிவமாய் நின்ற தேகம், மாய்கை என்றால்

Koviloor Digital Library

மாயா சக்தியால் கொடுக்கப்படும் உடல். குருபதம் — பூரணத்தில் திருவடியான குருவடிவாய் நிற்பது. இந்த நிலையைப் பெற்றுத் தந்தது அமுதரச பானம் என்பதாம்.

சுப்பிரமணியர் ஞானம் — 500இல் கூறியவாறு,

“நீரப்பா தான் பெருகி பூரணமாய் நிற்கும்
நிலையாத பூரணத்தில் நிலைத்து மிக நின்றால்
நேரப்பா மனந்தேறி “அமுர்தங் கொள்ளு”
சிவயோக சிந்தையிலே பூரணமாய் நில்லே” - 104

“ஆங்கது கொண் “டமுர்தரசங்” கொண்டாயானால்
அசையாது கூத்தவனும் அகன்று போவான்
தீங்கான பிரமையுமோ தீர்ந்து போகும்
சிவ சிவா “கயிலாச தேகமாச்சே” - 129

பூரணம் — அண்டம். அண்டம் என்னும் மலரில் அமுதம் என்ற நீர் உண்டு. அந்த நீர் பெருகி வரும்போது அதனை பிடித்து உண்டால் பூரணத்தில் நிலைத்து நின்று சிவயோக நினைவில் பூரணவடிவில் இருப்பாயாக.

வான் அமுதம் உண்டால் கூற்றவன் என்னும் எமன் நீங்கி விடுவான். கெடுதல் தரும் பிரமையும் தீர்ந்து விடும். கயிலாச தேகம் என்னும் ஞான தேகம் உண்டாம்.

“பாரப்பா குமரி கற்ப மேதென்றாக்கால்
பார்தனிலே “செப்பூடு யேது” மில்லை.
ஆரப்பா விந்த வல்லேலல பானமாச்சு
ஆகாய வஸ்து வல்லோ பானமாச்சு - 307/500

என்று சுப்பிரமணியர் யோக ஞானத்தில் அறிவுரை அருள்கிறார். செப்பூடு என்று கூறப்படுவது குமரி கற்பமாகும். குமரி கற்பம் என்பது விந்துவாகும். அதுவே அமுத பானமாகும். அதற்கு “ஆகாய வஸ்து” என்று கூறும் பானமாகும் என்பதாம்.

சுப்பிரமணியர் சிவம் சுத்தஞானம் 16இல்

“வாரான பிரமத்திற் செல்லும்போது
வஸ்துடனே “மதுவுண்டு” பசியும் தீர்ந்தேன்”
- 4/8

சீரிட்டே யெனையெடுத்து முத்தமிட்டாள்
“தித்திப்பும் பாலமிர்தம்” செலுத்திவைத்தாள்
- 4/16

மேற்கூறப்படும் பாடல்களில், “பரம்பொருள் இருக்குமிடம் செல்லும் போது அமிர்தம் என்னும் பொருள் உண்டு பசியாறினேன். பரை என்னும் எனது தாய் எனக்கு முத்தமிட்டு இனிமையான பாலமிர்தம் ஊட்டினாள் என்று கூறுவதோடு நில்லாமல் தனது நரக வேதனையும் நாசமடையச் செய்தாள் என்று கூறும் பாடலைக் காண்க.

“ஆட்டியே அரூப வெளி நீயு மாவாய்
ஆயிரத் தெட்டிதழ் மலரும் அறிவாயக் காணும்
நாட்டியே “அமுதமுந்தான்” வடியுமைந்தா
நகரமென்ற பேச் செல்லாம் நாசமாகும் - 45

என்பதால் அறிக. ஆயிரத்தெட்டிதழ் மலரின் அமுதமுண்டவன் அரூபவடிவம் பெற்று நரகம் என்ற கேடு தரும் செயல்கள் அனைத்தும் நாசமடையும்.

திருமூலர் ஞானம் என்னும் நூலில் காமப்பால் உண்டு மேலும் ஆயிரம் எட்டும் இதழும் கொண்ட மலரில் உள்ள மது உண்டு (சோமப்பால்) என்று நாம் கூறினோம். அதன்படி உண்டவர்கள் சித்தன் என்று பேர் பெற்றார்கள். அதனை உண்டதால் பிறவி நீங்கி மறுபிறவி எடுக்கும் நிலைமாறி மெய்ஞ்ஞானம் பெற்று சித்தனாகவே இருந்தார்கள் என்பதை,

“ஆமப்பா காலாங்கி சகல பேர்க்கும்
ஆதியடா நமது பிள்ளை யான தாலே
“காமப்பா லூட்டி” கடுங் கனலேகி
கமலமென்ற ஆயிரத்தெண்ணுச்சி மீதற்
“சோமப்பா லுண்ப” தற்குச் சொன்னோம் சூட்சம்
சொல்லறிந்து சூட்ச நிலை உத்திக் கொண்டு
தன்னை யறிந்து சித்தனென்று இருந்தான் பாரே - 77

தீருமது செனனமறு பிறவில்லை
தீர்க்கமடா மெய்யறிந்த சித்தன் சித்தன் - 73
திருமூலர் ஞானம் — 84 நூலில் கூறுகிறார்.

இனி அமுதம் வெண்மையாகவும் செம்மையாகவும் அதை இரண்டு எடுத்து

Koviloor Digital Library

புளி போல் இறுகச் செய்து உண்டு வந்தால் சூரியனைக் கண்ட பனிபோல்பிறப்பு மாறிவிடும். இதுவே காயத்தில் உண்டாகும் கற்பமாகும்என்று திருவள்ளுவர் நாதாந்த கலை 300இல் அனுபவத்தை ஓதியதை இங்கு அவர் பாடல் தரப்படுகிறது.

''பெருகுகின்ற ''அமுதமது'' நாதமாகும்
பிரித்துநான் சொல் லுகிற விபரங்கேளு
மருகியே ''விந்து'' வென்றால் ''வெள்ளையாகும்''
மதிப்பான ''சிவப்பானால் நாதமாகும்''
பொருதிபெற இதையெடுத்துப் புளியே'' செய்து
புசித்து வரக் காயாதி கற்பமாச்சு
பருதி கண்ட பனியாகும் பிறப்பும் போச்சு
பாங்காக இன்ன மொன்று சொல்ல கேளே - 27 என்று அறிவுறுத்துகிறார்.

இராம தேவர் என்னும் சித்தர் மருத்துவம் நுட்பம் என்னும் நூலில் 35&வது பாடலில் தேன் போன்ற மதியமுதம் கொண்டால் தன் தேகம் ஞான தேகமாக மாறும் என்று கூறுகிறார். அதனைக் காண்க.

''தேனான மதிய முதங்'' கொண்டால் மைந்தா
சிவ சிவா கைலாசத் தேகமாமே'' - 35

மேலும் சதோக நாத யோக சித்தர் ஞான நுட்ப — 17இல் 3ஆம் பாடலில்,

காணவே சோதி தலத் ''தமுதவாசற்
கண்டு கொண்டு பாசபந்த மகலத் தள்ளி
தோணவே ''அமுதமது சிந்து நின்ற''
சுத்த தல மதிற் சென்று பானம் பண்ண
ஆணவே ''யுன்சடல மிறுகிப் போகும்''
அருளொளி பெற்றிலங்கிடுமே காயந்தானும்
வீணலவே வாதியென்ற பேருண்டாச்சு
விளங்கி நின்ற பூரணத்தின் மகிமை தானே - 3 என்று கூறுகிறார்.

சோதியாகக் காணப்படும் இடத்தை நாடிசென்று அமுதம் பொங்கு வாசற்கதவை திறந்து பார்க்க வேண்டுமென்றால் பாசமும் பந்தமும் முற்றிலும் விலக்கி, அமுதமானது உற்பத்தியாகின்ற சுத்த இடமான வானிடம் சென்று பொழிகின்ற அமுதத்தை உண்டு உண்டு வர வர உனது சடலம் கல் போல் இறுகிப் போகும். அந்த சடலம் அருளொளி பெற்று சோதிவடிவமாகும். அதனால் அவன்வாதி (வேதியியல் நிபுணன்) பேர் உண்டாகும். இது பூரணம் என்னும் அருட்பொருளால் கிடைத்த மகிமையாகும் என்பதாம்.

கருவூரார் என்னும் சித்தர் எழுதிய மெய்ச்சுருக்கம் 51இல் ஆலகால நஞ்சுவே அமுதமாக்கும். வேதியல் முறை அறிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அதுவே ஏழுநரகமாய் நிற்கும் என்பதை

''ஆல விட மதியமுதம் கற்பமாச்சு
அறியாட்டா லெழுநரக மிதுவே யாச்சு'' - என்று கூறுவது மானிட இனங்கள் உணர வேண்டும்.

அமுதம் உண்டால் என்ன பலன் பெறுவார்கள்:

சுந்தரானந்தர் என்னும் சித்தர் மிகவும் எளிதானவர். எளிமையாக கூறும் பண்புடையவர். இவருக்கு சட்டை முனியார் தந்தையாம் என்று கூறும் இவர் அமுதம உண்டதால் கிடைத்த அனுகூலம் கூறுகிறார்.

''பாரடா ''மகாரமென்ற நீருண்டோருக்குப்
பரிவான ''கோபமது'' கனாவி லில்லை
நேரடா ''பசியில்லை'' யாசை யில்லை''
நிச்சயமாய் ''திரோதாயின் மாயை'' இல்லை
ஊரடா ''சாதிவர்னாச் சிரமுமில்லை''
ஓகோகோ ''அறுபதுபேர் பட்டு வீழ்வார்''
வேரடா ''வோமப்பால்'' விடாமற் கொண்டால்
விதமான ''முப்பத்தி யாறும் போச்சு - 15

''போச்சடா பொறி கெட்டு அறிவுங் கெட்டு
புகழான மாயைக் கெட்டு ஆசைக் கெட்டு
மூச்சடா மனங் கெட்டு நினைவுங் கெட்டு
முன் பின்னா யோடு கின்ற வாசி கெட்டு
வாச்சடா பிராணாயங் கெட்டுத் தானும்
மைந்தனே உடல் வெளியாய் நிற்கும்
வீச்சடா அமுத முண்டார் பிலத்தினாலே
வெட்ட வெளியாச்சு திந்தவுடலந் தானே - 16 என்று ஓதப்படுகிறது.

மகாரம் என்ற அமுத நீர் உண்டதால் பிரிக்க இயலாத கோபம். கனவிலும் காணாது போகும். பசி உண்டாகாது. ஆசைகள் அறுந்து வீழும் திரோதாயி என்னும் மாயை விலகும். மத, சமயம்,

Koviloor Digital Library

சாதி என்ற பிரிவினை எண்ணம் அழிந்து விடும். அதனால் முன் அறுபது தத்துக் கேடுகள் பட்டுவிடும். ஓமப்பால் விடாமல் உண்டு வந்தால் மற்ற முப்பத்தா அசுரத் தத்துவங்கள் அறுந்துபோகும்.

பொறிகளின் நிலை சுத்தமாகி கெடும். சிற்றறிவு கெடும். புகழாக பெரிதும் பேசப்படும் மாயையும் விலகும். ஆசைகள் கெடும். மனமடங்கும். நினைவுகள் சுத்தமாகும். வாசியென்ற நிலை அகலும். பிராணாயம் முடியும். உடலும் (மாயா தேகம்) கெட்டு ஞான தேகமாகும். இந்த நிகழ்வுகள் அனைத்தும் அமுதம் உண்டதின் பலனின் விளைவால் இந்த தேகம் வெட்ட வெளியாக நிற்கும். ஞானமாகும் என்பதாம்.

பட்டினத்தார் பாடல் 25இல் எட்டாத பேரின்பம் கிடைக்கும் என்று கூறுகிறார்.

அட்டாங்க யோகமும் ஆதாரமாறும் அவத்தை ஐந்தும்
விட்டேறிப் போன் வெளிதனிலே வியப்பொன்று கண்டேன்
வட்டாகிச் "செம்மதிப் பாலூறல்" உண்டு மகிழ்ந்திருக்க
எட்டாத பேரின்பம் என்னை விழுங்கி இருக்கின்றதே"
பட்டினத்தார் பாடல் 25

செம்மதி பால் ஊறல் உண்டவனுக்கு எட்டாத இறையருள் இன்பம் கிட்டியதால் தான் அதில் சொக்கி விட்டதாக கூறுகிறார். காலாங்கிநாதர் உபதேச ஞானம் 34&இல் அமுதரச கற்பம் உண்டால் ஆவியானது ஒளிச்சுடர் விட்டு ஒளிரும் என்பதை

"வாழ்வதற்கு அமுதரச கற்பங் கொண்டால்
வாசியென்ற ஆவியது பிரகாசிக்கும்" – 23 என்று கூறுகிறார்.

கோரக்கர் சந்திரரேகை 200இல் 127ஆம் பாடலில் முலையின் பால் உண்டவர்களின் தேகம் உறுதியாக எக்காலமும் நிற்கும். அமுதத்தால் யோக சித்தி ஞான சித்தி உண்டாகும். காமப்பால் உண்டவர்கள் அருட்சித்தனாக கோடான கோடி காலம் சிரஞ்சீவியாக இருப்பார் என்பதை,

"முலையின் பால்" உண்டா லல்லோ நிலைக்கும் தேகம்
நிலவரமாய் யோக சித்தி ஞான சித்தி
தலை காமப்பா லுண்டோ ரருட் சித்தனாகி
வாழ்ந்திருப்பார் கோடான கோடி காலவம் – 127

என்று கோரக்கர் சித்தர் கூறுகிறார். இடைக்காட்டு சித்தர் தாம் உண்ட அமுதப்பாலும் அதனை கறந்த முறையும் எடுத்துக் கூறுவது அறிக.

"சாவா திருந்திடப் பால்கற – சிரம்
தன்னி லிருந் திடும் பால்கற
வேவா திருந்திடப் பால்கற – வெறு
வெட்ட வெளிக்குள்ளே பால்கற
தோயா திருந்திடும் பால்கற – முனைத்
தொல்லை வினையறப் பால்கற
வாயா லுமிழ்ந்திடும் பால்கற – வெறு
வயிறார வுண்டிப் பால்கற
நாறா திருந்திடும் பால்கற – நெடு
நாளு மிருந்திடப் பால்கற
மாறா தொழு கிடும் பால்கற – தலை
மண்டையில் வளரும் பால்கற
உலகம் வெறுத்திடும் பால்கற – மிக
ஒக்தாள மாகிய பால்கற
கலசத்தினுள் விழப் பால்கற – நிறை
கண்டத்தி னுள்விழப்பால் கற
ஏப்பம் விடாமலே பால்கற – வரும்
ஏமன் விலக்கவே பால்கற
தீப்பொறி யோய்ந்திடப் பால்கற – பர
சிவத்துடன் சாரவே பால்கற
அண்ணாவின் மேல்வரும் பால்கற – பேர்
அண்டத்தி லூறிடும் பால்கற
விண்ணாட்டி லில்லாத பால்கற – தொல்லை
வேதனை கெடவே பால்கற – எனப்பாடுவது அமுதம் உண்டதையும் அதனை அனுபவித்தையும் எடுத்துக் கூறுகிறார்.

மேலும் நமது ஔவை அம்மையார் சாகாமல் இருக்க அமுதம் உண்பதுப் பற்றியும் எமனையும் ஏமாற்றலாம் என்பதையும் கூறுவார்.

அண்ணாக்குத் தன்னை யடைத்தங் கமிர்துண்ணில்
விண்ணோர்க்கு வேந்தனுமாம்
ஈரெண் கலையினிரைத்தவமிர் துண்ணில்
பூரண மாகும் பொலிந்து

Koviloor Digital Library

ஓங்கார மான கலசத் தயிர் துண்ணில்
போங்கால மில்லை புரிந்து
ஆன சலசத் தமிர்தை யறிந் துண்ணில்
போனகம் வேண்டாமற் போம்

ஊறு மமிர்தத்தை யுண்டி யுறப் பார்க்கிற்
கூறும் பிறப்பறுக்கலாம்
ஞானவொளி விளக்கானல்ல வமிர் துண்ணில்
ஆன சிவயோகி யாம்

மேலே யமிர்தை விலங்காமற் றாண்ணிற்
காலனை வஞ்சிக்க லாம்
காலன லூக்கக் கலந்த வமிர்துண்ணில்
ஞான மதுவா நயந்து

எல்லையி னினமிர்த முண்டாங் கினிதிருக்கில்
தொல்லை முதலொளியே யாம்
நிலா மண்டபத்தி னிறைந்த வமிர்துண்ணில்
உலாவலா மந்திரத்தின் மேல்

ஔவைக்குறள், அமுத தாரணை — 170

மேலும் திருமூலர் அமுத நிலையை பலப்பெயரில் கூறுவதும் நாம் அறியலாம்.

"மலையார் சிரத்திடை வானீர் அருவி
நிலை யாரப் பாயும் நெடுநாடி யூடே" - 589
"விண்ணாறு வந்து வெளிகண் டிடவோடிப்
பண்ணாமல் நின்றது பார்க்கலு மாமே" - 500
ஊனிர் வழியாக வுண்ணாவை யேறிட்டுத்
தேனீர் பருகிச் சிவாயநமவென்று
நானீர் வரும்வழி கங்கை தருவிக்கும்
வானீர் வரும்வழி வாயந்தறிவீரே" - 809
"தெளி தரும் இந்தச் சிவநீர் பருகிடில்
ஒளிதரு மோராண்டில் ஊனமொன்றில்லை
வளியுறும் எட்டின் மனமும் ஒடுங்குங்
களிதருங் "காயங் கனகம" தாமே - 846

என்று திருமூலர் திருமந்திரத்தில் அமுதுண்ணும் அக அனுபவத்தை கூறுகிறார்.

மேலும் திருமந்திரம் 3000த்தில் மயிர்கால் தோறும் அமுதமானது தேங்கி நிற்கும் என்பதை,

பாலொடு தேனும் பழத்துள் இரதமும்
வாலிய பேரமுதாகும் மதுரமும்
போலுந் துரியம் பொடிபட வுள்புகச்
சீல "மயிர்க்கால் தொறுஞ் தேக்கிடும்" - 2831

ஓதும் "மயிர்க் கால் தொறும் அமுதூறிய"
பேதம் அபேதம் பிறழாத ஆனந்த
மாதி சொரூபங்கள் மூன்றகன் றப்பாலை
வேதம் ஓதுஞ் சொரூபிதன் மேன்மையே - 2856

மானிடனின் தேகத்தில் மயிர்கால் தோறும் அமுதம் தேங்கி நிலைத்துள்ள அனுபவத்தை திருமூலர் உணர்த்துகிறார்.

நமது வள்ளல் பெருமான் அமுதமானது உடல் முழுதும் ஊற்றெடுத்து ஓடி நிரம்பிய அக அனுபவம் கீழ்வரும் அருட்பெருஞ் சோதி அகவலில் தெளிவாக சீராக நேர்த்தியாக கூறுவது அறிக.

"தோலெலால் குழைந்திடச் சூழ்நரம் பனைத்தும்
மேலெலாம் கட்டவை விட்டு விட் டியங்கிட
என்பெலாம் நெக்கு நெக் கியலிடை நெகிழ்ந்திட
மென் புடைத் தசை எலாம் மெய்யுறத் தளர்ந்திட

இரத்தம் அனைத்தும் உள் இறுகிடச் சுக்கிலம்
உரத்திடை பந்தித் தொரு திர ளாயிட
"மடலெலாம் ஊற்றெடுத் தோடி நிரம்பிட
உடலெல்லாம் ஊற்றெடுத்தோடி நிரம்பிட

ஒண்ணுதல் வியர்த்திட ஒளிமுகம் மலர்ந்திடத்
தண்ணிய உயிர்ப்பினில் சாந்தம் ததும்பிட
உண்ணகை தோற்றிட உரோமம் பொடித்திடக்
கண்ணில் நீர்பெருகிக் கால்வழிந் தோட

வாய்துடித் தலறிட வளர்செவித் துணைகளில்
கூயிசைப் பொறியெலாம் கும்மெனக் கொட்டிட
மெய்யெலாம் குளிர்ந்திட மென்மார் பசைந்திட
கையெலாம் குளிர்ந்திட காலெலாம் கலவிட

மனங்கனிந் துருகிட மதிநிறைந் தொளிர்ந்திட
இனம்பெறு சித்தம் இயைந்து களித்திட
அகங்காரம் ஆங்காய் கதிகரிப் பமைந்திடச்
சகங்காண உள்ளம் தழைத்து மலர்ந்திட

அறிவுரு அனைத்தும் ஆனந்த மாயிடப்
பொறியுறும் ஆன்மதற் போதமும் போயிடத்
தத்துவம் அனைத்தும் தாமொருங் கொழிந்திடச்
சத்துவம் ஒன்றே தனித்து நின்றோங்கிட

உலகெலாம் விடயம் உளவெலாம் மறைந்திட

Koviloor Digital Library

அலகிலா அருளின் ஆசைமேற் பொங்கிட
என்னுளத் தெழுந் துயிர் எல்லாம் மலர்ந்திட
என்னுளத் தோங்கிய என்தனி அன்பே
(1449 - 76)

நமது கபாலத்தில் உள்ளகத்தில் ஆயிரத்தெட்டு இதழ்கள் கொண்ட தாமரை ஒன்று மலர்தாகவள்ள பெருமான் கூறுகிறார். தாமரையில் ஊற்றெடுத்து பொங்கி வரும் அமுதம் உடலெலாம் பரவி நிரம்பியது என்றும் அவ்வமுதம் மயிர்கால் தோறும் சென்று நிரம்பியதும் கூறுகிறார். அவர் அடைந்த பலனும் ஓதுகிறார்.

தோல் நெகிழ குழைந்தது. நரம்புகள் அனைத்தும் கட்டு அகன்றது. எலும்புகள் நெக்குருகி நெகிழ்ந்தன. தசைகள் அனைத்து தளர்வுற்றது. குருதி உடலுக்குள் இருக்கிறது. சுக்கிலம் பந்தித்து உரம்பெற்று மணியானது மூளைமடல் எல்லாம் பூத்தது அமுதம் பெருகி உடலெங்கும். ஒளி பொருந்திய நெற்றியானது வியர்த்தது. முக ஒளி பெருகி மலர்ந்து காணப்பட்டது. மூச்சு சாந்தி நிலைக்கு சென்றது. உள்நகை தோன்றியது.

உரோமம் சிலிர்த்து மெய்யில் ஆனந்த கண்ணீர் பெருகிக் காலவழிந்து ஒடியது. வாய்துடித்தது. அலறியது. காதுகளில் இனிமையான இசையின் ஓசை கேட்டு கும்மெனக் கொட்டியது. கைகள் குவிந்தன. கால்கள் சுழன்றது. மனம் கனிந்து நெகிழ்ந்து உருகியது. புத்தி நிறைந்து ஒளி வீசிற்று. சித்தம் இசைந்து களித்தது. அகங்காரத்தின் உயர்ச்சி முழுதும் அடங்கியது. உள்ளம் நெகிழ்ந்து தழைத்து மலர்ச்சியுற்றது. அறிவு ஆனந்தமாயிற்று. ஆன்மதற்போதம் போயிற்று. தத்துவங்களெல்லாம் ஒருங்கே ஒழிந்தது. சத்துவ குணம் ஒன்றே தனித்து நின்று ஓங்கியது.

உலக செய்திகள் எல்லாம் மறைந்தன. அருளின் மேல் ஆசை பொங்கிற்று. இவ்வளவு அனுபவ நிகழ்வுகள் ஒரே நேரத்தில் ஏற்படின் எவ்வாறு இருக்குமோ என்று நினைந்து பாருங்கள். இவ்வனைத்து அக அனுபவங்களை பெற்றவர் யாரோ அவரே "சாகாக்கலையில் சித்தி பெற்றவராவார். இவரும் அமுத்திற்கு சில திருப்பெயர்களில் அழைக்கிறார்.

1. மதி மண்டலத்தமுதம், 2. இந்தார் அருளமுதம், 3. சாகா அருளமுதம், 4. அருளோங்கும் தண்ணமுதம், 5. வானோர்க்கு அரிதெனவே மாமறைகள் சாற்றுகின்ற ஞானனோதய அமுதம்" 6. எல்லாம் வல்லசித்தென்று எல்லா மறைகளும் சொல்லும் நல்ஆர் அமுதம், 7. ஏழ்நிலைக்கு மேற்பால் இருக்கிறனதண்ணமுதம், 8. ஞான அமுதம், 9. திரையோதசத்தே திகழ்கின்ற தண்ணமுதம், 10. சோதி மலை மேல்வீட்டில் தூய திருவமுதம் என்று பலவிதமாக அமுதத்தின் நிலைகள் ஓதுகிறார்.

வள்ளல் பெருமான் ஐவகை அமுதமிடத்தின் பக்குவத்தை கூறுகிறார்.

1வது அமுதம் — நாக்கு நுனியில், பக்குவ ஞானத்தால், சிருஷ்டி வல்லபப் பிரஞ்ஞையால்

2வது அமுதம் புவனாமுதம் — நாக்கு மத்தியில் பக்குவ கிரியையால் — ஸ்திதி பிரஞ்ஞை உணர்ச்சியால்

3வது மண்டாலமுதம் நாக்கின் அடியில் — பக்குவ இச்சை சம்மார உணர்ச்சியின் தன்மையால்

4வது இரகசியாவமும் — உள்நாக்கு அடியில் பக்குவ திரேளபவம்

5வது மௌனாமுதம் — உள்நாக்குக்கு மேல் — பக்குவ அனுக்கிரக அது சுபாவத்தினது அனுபவம் — துரிய நிலை என்று யோகானுக்கிரக பஞ்ச அமுத தலங்கள் ஐந்து என்று கூறுகிறார்.

மேலும் அமுத வகைகள் ஐந்து உண்டு என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

சுத்த அமுதமிருக்கும் இடங்கள் ஐந்தாகும்.

1வது அமுதம் நாக்கின் அடியில் இனிப்புள்ள ஊற்று ஜலம் போல் இருக்கும்.

2வது அமுதம் — உள்நாக்குக்கு மேல் இளகின இனிப்புள்ள சக்கரை போல் இருக்கும்.

Koviloor Digital Library

3வது அமுதம் — மூக்கு முனையில் குழம்பிய சக்கரைப் பாகு போல் இருக்கும்.

4வது அமுதம் நெற்றி நடுவில் முதிர்ந்த சக்கரைப் பாகுபோல் இருக்கும்.

5வது அமுதம் — மகா இனிப்புள்ள மணிக்கட்டியாக இருக்கும. அதிக குளிர்ச்சியாகவும் இருக்கும்.

ஐந்தாவது மணிக்கட்டி அமுதத்தை உண்டவர்கள் என்றும் அழியாததேக சித்தியைப் பெற்றவர்கள். வள்ளல்பெருமான் திருவமுது உண்டு அழியாமை பெற்றதை உணர்த்தும் பாடலால் அறியலாம்.

''கடல் கடந்தேன் கரை அடைந்தேன் கண்டு
கொண்டேன் கோயில்
கதவு திறந்திடப் பெற்றேன் காட்சியெல்லாம் கண்டேன்
அடர்கடந்த ''திருவமுதமுண்டு'' அருள்ஒளியால்
அனைத்தும்
அறிந்து தெளிந்து அறிவுருவாய் ''அழியாமை''
அடைந்தேன்
உடல் குளிர்ந்தேன் உயிர் கிளர்ந்தேன் உள்ளமெல்லாம்
தழைத்தேன்
உள்ளபடி உள்ள பொருள் உள்ளனவாய் நிறைந்தேன்
இடர் தவிர்க்கும் சித்தியெலாம் என்வசம் ஓங்கினேன்
இத்தனையும் பொது நடஞ்செய் இறைவனருட்
செயலே - 64

வள்ளலாார் திருவருட்பா தனிபாடல்

கீழ்வரும் பாடல்கள் அமுதுண்டு அழியாமை திருவடிவம் பெற்ற நிகழ்ச்சியை கூறுகின்றார். பார்க்க.

கண்டேன் களித்தேன் கருணைத் ''திருவமுதம்''
உண்டேன் உயர்நிலை மேல் ஓங்குகின்றேன்
- கொண்டேன்
''அழியாத் திரு உருவம்'' அச்சோ எஞ்ஞான்றும்
அழியாச்சிற் றம்பலத்தே யான்
கண்டேன் களித்தேன் ''கருணைத் திருவமுதம்''
உண்டேன் ''அழியா உரம்பெற்றேன்'' - பண்டே
எனை உவந்து கொண்டான் எழில் ஞானமன்றம்
தனை உவந்து கொண்டால் தனை - 3900

''தெள்ளமு தருந்தி அழிவில்லா உடம்பும்
சித்தியும் பெற்றனன் என்றான் - 5658

மேற்கண்டவாறு மாபெரும் சித்தர்கள் திருவமுது உண்டு அறியாமை பெற்றது உணர்ந்து மானிடர்களும் சாகாக்கல்வி மூலம் கற்று பயிற்சி மேற்கொண்டு இல்லறத்தை விலகி சற்று நின்று நாளும் முயற்சி எடுத்தால் “மனிதனும் தெய்வமாகலாம்" என்ற கருத்தை வலியுறுத்தி இந்நிலையில் இதனை இறையருளால் நிறைவாகிறது.

திருச்சிற்றம்பலம்

38. அகக் கற்பம்

ஊனில் பொருந்திய உயிர்கள் அனைத்தும் சாகாமல் இருக்க வேண்டுமென்றால் புறக்கற்பம் என்றும் அகக் கற்பம் என்று கூறப்படும் கற்பங்கள் நாம் உண்டு உடலும் உயிரும் வலிமை பெற வேண்டும். இதற்கு காயாதி கற்பம் என்று சித்தர் பெருமக்கள் கூறுவார்கள்.

புறக்கற்பம் என்பது மூலிகைகள் செந்தூரங்கள் உண்டு தேகத்தை வலிமைப் பெறச் செய்தல். அகக்கற்பம் என்பது சிவயோக அனுபவத்தால் பெறப்படும் உள்ளகக் கற்பம் ஆகும். இந்த கற்பம் சாதித்தவர்கள் உடலும் உயிரும் அழியாது. கற்பத்தினால் சிதம்பரத்தில் குடிபுகலாம். கற்பம் உண்டால் மானிடன் சோதி வடிவம் பெற்று உய்யலாம். கற்பத்தால் காலையும் கட்டுண்டு கிடக்கச் செய்யலாம் என்பது சட்டைமுனியாரின் வாக்காகும்.

''கற்பத்தை யுண்டாற் காயம் அழியாது
கற்பத்தினாலே காணலாம் கயிலையை
கற்பத்தினாலே காணலாஞ் சோதியை
கற்பத்தினாலே காலையும் கட்டிடே'' சட்டைமுனி
குருநூல் — *29*

அகக் கற்பம் என்பது சுழினையின் துணைக் கொண்டு பத்தானம் வாசலின்

Koviloor Digital Library

கதவைத் திறந்து புருவத்திடையிலுள்ள கமல மலரிலிருந்துவரும் இனிப்பான அமுதம் உண்டு உய்தலாகும். அப்படி உண்டவன் எப்பொழுதும் சாகாமாட்டான் என்பது சித்தர் வாக்காகும். அதனை அறிவிக்கும் அகத்தியரின் அற்புதப் பாடலைக் காண்க.

"அருள் கிரண சோதியதா யுதிக்கு மேலே
ஆயிரெட்டிதழ் மேலே "அமுத கற்பம்"
திருவறிந்து உண்டவனே சிவயோகியாகும்
சிவ சிவா காலறிந்தோன் "சாகானென்றே" - 14
அகத்தியர் மெய்ஞ்ஞானம் சூட்சுமம் — 33

இந்த அகக்கற்பம் நாம் எவ்வாறு பெறுவது என்பது ஆராய்ந்தால் அறியலாம். இதனைப் பற்றி மிக எளிதான நடையில் காகபுசண்டர் பெருஞ்சித்தர் என்ன கூறுகிறார் என்பதை நாம் அறியலாம். அவருடையப் பாடலைக் காண்க.

"சொல்லுவேன் "கற்பமது இரண்டதாகும்"
"சுகசரீரந் தவறாது இருப்பதற்கு"
நல்லதொரு கற்பமொன்று வாலை பூசை
நலமான "ஞான கற்பம்" மென்ற தாகும்
எல்லவதற்குங் கிட்டாது இரண்டுந்தானும்
இயல்புடைய முனி ரிஷிக்குக் கிட்டும் கிட்டும்
வல்லவர்கள் கற்பமது கொள்ளுவார்கள்
மற்றவர்க ளொன்றுமே அறியார் பாரே - 926

மேற்கண்ட பாடலில் கற்பங்கள் இருவகையுண்டு. ஒன்று இந்த தேகம் அழியாமல் வாழ்வதற்கும், மற்றொன்று ஞான கற்பம் என்ற வாலை வழிபாடாகும். இந்த இரண்டும் எவருக்கும் கிடைப்பதில்லை. இது முனிவர்களும் ரிஷிகளுக்கும் வாய்க்கும். ஆண்மையாளர்களுக்கு மட்டும் இந்த வாய்ப்பு கிடைக்க கற்பம் உண்பார்கள். மற்றவர்கள் எதுவும் அறியார்கள்.

"பாரப்பா அகாரந்தான் முதலாங் கற்பம்
பரிவாக உகாரந் தானிரண்டாங் கற்பம்
நேரப்பா மகாரந்ததன் மூன்றாங் கற்பம்
நேசமா யிருந்து செய்வாய் சிகார கற்பம்
சீரப்பா இந்நான்கு கற்பந் தானும்
தீர்க்கமுட னுண்டவனே சித்தன் சித்தன்
வீரப்பா பன்னிரண்டு வருடஞ் செல்லும்
முக்கியமுள்ள கற்பமது முடியத் தானே - 927

முதல் கற்பம் அகார கற்பமாகும். இரண்டாவது உகார கற்பம். மூன்றாவது மகார கற்பம். நான்காவது சிகார கற்பமாகும். இந்த நான்கு கற்பங்கள் உண்டவனே சித்தன் என்ற பதவி பெறுகிறான். இந்த கற்பம் முடிக்க பன்னிரண்டு வருடமாகும் என்பதாகும்.

கற்ப மென்று அண்டத்தைச் சுற்ற வேண்டாம்
கனிவாக "உன்னிடத்தி லிருக்குதப்பா"
அற்பமல்ல அண்ட பிண்ட மது தானாகும்
அடைவாகப் பார்த்தாக்கால் தோனாதப்பா
உற்பனமாய் உன்னுக்குள் முடிந்திருக்கும்
உகார கற்பம் உன்னுக்கு ளிருக்கும் போது
விற்பன மாய்வேறு கற்பந் தேட வேண்டாம்
மேலான கற்பமது அகாரந்தானே

கற்பம் என்பது உலகத்தைச் சுற்றித் தேடியலையாதே. அந்த கனிந்த கற்பம் உனது உன் அகத்தில் இருக்கிறது. அந்த கற்பம் அற்பமாக எண்ணக் கூடாது. அந்த கற்பம் அண்டம் என்பர். பிண்டம் என்பர். அந்த அற்புத கற்பம் முதலாகவே முடித்து வைக்கப்பட்ட பொருளாகும். அது உகார கற்பமாகும். இந்த கற்பம் உனக்குள் இருக்கும் போது வேறு கற்பம் தேட வேண்டாம். அந்த உயர்ந்த கற்பமானது. அகாரந்தானாகும்.

"அகார மாங் கற்பமத தெரிய வென்றால்
அன்போடு சொல்லுகிறேன் நன்றாய் கேளு
நகார மென்று வாலையைப் பூசிக்கு வேணும்
நலமாக அறிந்துக் கொள்ளப் புத்தி வேணும்
உகார கற்பம் சக்தியைப் பூசிக்க வேணும்
உண்மையுள்ள மனோன் மணியை பூசைசெய்வாய்
மகார கற்பமடைவதற்கு யோகம் வேணும்
வாய்த்த பின்பு சிகார கற்ப முடியுந்தானே - 929

அகார கற்பம் அறிய வேண்டுமென்றால் கனிவாகச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு. நகாரம் என்னும் பெயருடைய சக்தியான வாலையை வழிபட வேண்டும். அதனை அறிய தெளிவான அறிவு வேண்டும்.

Koviloor Digital Library

உகார கற்பம் தெரிய வேண்டுமென்று கூறினால் சக்தி மனோன்மணியை வழிபட வேண்டும். மகார கற்பம் ஏற்பட வாய்ப்பு கிடைக்கும்.

முடியுவது யெப்படியென் றென்னைக் கேட்டாய்
முக்கியமுள்ள கற்பமதின் முறையைச் சொன்னேன்
அடிநடு முடி யென்று மூன்று பாகம்
அதிலே தான் நடுவாகும் கற்ப நேர்மை
துடியாக வேதிறந்து சொல்லக் கூடா
சொல்லினால் "தலை வெடிக்கு" மென்று சித்தர்
படியாகச் சாபமது கொடுத்தாலே
பரிவாகச் சித்தர்களுஞ் சொல்ல மாட்டார் - 930

கற்பம் கொள்ளும் அவசியத்தை உங்களுக்கு முறையை கூறினேன். அதிலே நடுவான கற்பம் பெற அதனை பிரிவு உண்டு. அதிலே நடுவான கற்பம் பெற அதனை வெளிப்படையக் கூறக் கூடாது என்று சித்தர்கள் கூறுகிறார்கள். அப்படி கூறினால் தலைவெடித்து போகும் என்பர். இதற்கு நாறுவேறு (சாபம்) கூறியுள்ளனர். எனவே சித்தர்கள் அதனை கூறுவதில்லை.

மாட்டார்கள் சொல்லதனா லறிந்து கொள்வாய்
மாராட்ட மாகவே தான் பெயர்வைத்தார்கள்
காட்டார்கள் நீயறிந்து கொள்வாயப்பா
கருத்தாகப் பார்த்தாக்கால் தோணுந் தோணும்
பாட்டாகப் பாடி விட்டார்" கருச்சொல்லாமல்"
பண்பான "கருவதுவுஞ் சொல்லக் கேளு"
நாட்டார்களிறியார்கள் "கம்பமாகும்"
நலமான "நந்தியிருப் பீடமாம் பரே" - 931

சொல்லப்படாதச் செய்தியை அறிந்துக் கொள்ளும். அதற்கு மாராட்டமான பெயர்களில் அழைத்தார்கள். காட்டப்படாததை முயன்று நீ அறிந்து கொள். அதனை ஊன்றி இறையருளால் கண்டால் தோணும். பாடலாக பாடினார்களொழிய அதன் கருவை கூறவில்லை. அதன் கருவைச் சொல்லுகிறேன். கேள் என்று கூறுகிறார். உனக்குள் "கம்கம்" என்ற நேர்கோடு உண்டு அது நந்தி அமர்ந்திருக்கும் பீடமாகும்.

நந்திகொலுக் கண்டவனே ஞானியாகும்
நடுவனையைப் பார்த்தவனே சித்தனாகும்



அந்தி சக்தி கொண்டவனே கற்ப தேகி
ஆத்தாளைப் பூசித்தோன் முனிதானாகும்
முந்திவந்த ததைவிடுத்து "நடுவே" நின்று
முக்காலும் வாயில்மந் திரஞ்செபித்து
சிந்தித்துக் காலையிலும் மாலைநேரம்
சிறப்புடனே கொண்டாக்கால் சித்தியாமே - 932

நந்தியின் கொலுமண்டபம் கண்டவனே ஞானியாக விளங்குவான். நடுவனையைப் பார்த்தவனே சித்தனாகும். அந்தி சந்தி கொண்டவனே கற்ப தேகி. தாயையை வழிபட்டவனே முனிவனாவான். முன்னால் வந்ததை விடுத்து நடுவே நின்ற முக்காலும் மந்திரங்கள் ஓதியும். காலையிலும் மாலையிலும் பூசித்தால் சித்தி பெறலாம் என்பதாம்.

சித்தியென்ன "அகாரகம்ப" மின்ன தென்று
தெரிந்து கொண்டால் வாலையவள் கிருபை செய்வாள்
முத்திபெற நந்திகொலுக் கண்டு கொண்டால்
முடிவான நடுவனையைக் காணவேணும்
மத்தியமா யிருக்குகின்ற "குண்டலியின்"
வலிமை கண்டு பிரமரந் திரமறிந்து
புத்தியுடன் நாதவிந்து வாங்கிக் கொண்டு
புகழாகக் கற்பமது கொள்வாய் நீயே - 933

அகாரம் என்று கூறப்படும் "கம்பம்" என்னும் கொடி மரம் மின்னுகின்றது என்று அறிந்து கொண்டால் தாய்

Koviloor Digital Library

வாலையின் அருள் நமக்கு கிட்டும். முத்தி பெற வேண்டுமென்று கருதினால் நந்தியின் கொலுமண்டபம் ஏறி நடுவனைக் காண வேண்டும். நடுவனவாக இருக்கும் "குண்டலியின்" வலிமை புரிந்து பிரமரந்திரம் அறிந்து நாத விந்தான கற்பம் பெற்று உண்டு புகழ் பெற வேண்டும்.

கற்பமது காலையிலும் மாலை நேரம்
கருதியே சாப்பிட்டுக் கொண்டு வந்து
விற்பனமாய் மாதம் பன்னிரண்டுஞ் செல்ல
விரும்பியே கற்பம் நீ கொண்டு வந்து
அற்புதமாய்க் கற்பமது கொண்டதாலே
அதிலவருங் குற்றங்கள் நீக்கி கொண்டு
கற்பனையில் லாவருடம் பன்னிரண்டு
தான் கொள்ளச் சித்தனா யாவான் பாரே - 934

கற்பம் காலை மாலை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த கற்பம் பன்னிரண்டு திங்கள் தொடர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டும். கற்பம் கொண்டதால் உடலிலுள்ள குற்றங்கள் நீங்கும். குற்றம் என்றால் மலம் என்று பொருள். இப்படி தொடர்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து கொண்டால் மாபெரும் சித்தனாகக் கொள்வான் என்பதாம்.

இன்னும் அதிகமான செய்திகள் தேவையானால் காகபுசண்டர் காவியம் 1000ஆம் நூல் பார்த்துத் தெளிக. அதில் பத்திய உணர்வுகள் — பத்தியம் கைவிட்டால் வரும் நோய் அனைத்து செய்திகள் கூறப்பட்டுள்ளது.

மானிடனுக்குள் இருக்கும் அமுத கற்பம் எங்குள்ளது என்றும், அது எங்கு இருந்து பெறப்படுகிறது என்றும் அறிவது சிறந்தது. நமது சித்தர்கள் அதனைப் பற்றி எவ்வாறெல்லாம் கூறுகிறார்கள் என்பதைப் பற்றியும் தெரிந்துக் கொள்வது "சாகாக்கலை" என்று கூறப்படும் சாகாத கல்வியின் பெரும் நோக்கமாகும். அதனால் தான் காகபுசண்டர் தம் நூலில்,

"சாகாமல் இருப்பதற்குக் கல்வியுண்டு
சாக்காடு கொள்வதற்கு விவரமுண்டு" - 238
காகபுசண்டர் பெருநூல் காவியம் — 1000.

மானிடன் தன்னைத் தான் அறிதல் வேண்டும். தன்னறிவுக் கொண்டு சாகாத கல்வி கற்றல் வேண்டும். கற்றபின் அதனை அனுபவத்திற் கொண்டு வந்து பரீட்சை செய்தல் வேண்டும். அந்த தேர்வில் அவன் தேர்வு பெற வேண்டும் என்பதை இராம ரிஷி கூறும் பாடலைக் கவனத்தில் கொள்வது மிக அவசியமாகும்.

"போடப்பா கசடற்றாற் சுத்த மாகும்
பூமிதனிற் பயிர் கருகுஞ் செயலைக் கண்டு
நாடப்பா "சாகாதகல்வி" வுன்னைத் தேற்று - என்று சிவயோக ஞானத்தில் உணர்த்துகிறார்.

பயிர் — மானிட உயிர். கசடு = தேகத்தின் களங்கங்கள் அதாவது மலங்கள் அகற்றி சுத்த தேகம் பெறுதல். அதில் நாட்டம் கொண்டு கற்பது தான் கல்வியாகும்.

மானிடர் தனக்குள் புதையுண்டு உள்ள கற்பம் என்ற அமுதம் பெற வேண்டுமானால் ஆயிரத்தெட்டு இதழ் கொண்ட அக மலரை மலரச் செய்தால் பெறலாம். அகமலரில் வழியும் கற்பம் உண்பவனின் தேகம் சோதி ஒளிவீசும். இருள்தேகம் மறையும் என்பதாம்.

இதனை அகத்தியர் கூற்றால் அறிக.

"துடக் கறத்து "அமுர்தகற்பம்" கொண்டால்
சோதி யென்ற தேகமடா சோதி தானே - 89
அகத்தியர் பூரணம் 1000/3ஆம் காண்டம்.

மேலும் ஆயிரட்டிதழில் வழியும் அமுத கற்பம் "கெட்டிதயிர் போல்" உள்ளதாம். அதனை உண்டால் மானிடன் சாகமாட்டான் என்றும் கூறப்படுகிறது.

"ஏற்கையுடன் "சகஸ்தரமா மலருக்குள்" ளே
இருக்குதடா "மதியமுர்நதம் தயிரு போலே" - 65
என்றும் அகத்தியர் மீண்டும் நினைவூட்டுகிறார்.

மானிடன் என்றும் மரணமில்லா வாழ்வு பெற வேண்டுமானால் தனக்குள்ளிருக்கும் அகக் கற்பம் அருந்த வேண்டும் அதனை அருந்தினால் மாயா தேகம் ஒளிதேகமாக பிரகாசிக்கும். அப்பொழுது அத்தேகத்திலுள்ள ஆவியும் ஒளிபெற்று

Koviloor Digital Library

சுடர்விட்டு எங்கும் ஒளிரும். அதனால் கால் வலுமைப்பெறும். மேல் தலை விமைப் பெறும். அதனால் கண்ணொளி துலங்கும். கபால மலரிலிருந்து அமுத கற்பம் கசிந்துருகி வரும் என்பதை சித்தர் காலாங்கி நாதர் உபதேச ஞானம் 34இல் ஓதியுள்ள பாடல் அறிக.

"வாழ்வதற்கு "அமுத ரச கற்பம்" கொண்டால்
வாசி யென்ற "ஆவியது பிரகாசிக்கும்"
கால்வலுக்கும் மேல் வலுக்குங் கண் துலங்கும்
கமல மலரமுத ரசங் கசிந்து காணும் - என்று

கூறுவது நினைவில் கொள்ளத்தக்கது.

இடைக்காட்டு சித்தர் ஞானம் 130&இல் வெட்ட வெளி என்னும் அண்டத்தில் மானிடன் சாகாமல் இருக்க வேண்டுமென்றால் சிரசு என்னும் கபாலத்தில் பால் கறந்து உண்ண வேண்டும் என்றும் கூறும் பாடலைக் காண்க.

"சாவா திருந்திடப் பால்கற - சிரம்
தன்னிலிருந்திடும் பால்கற
வேவா திருந்திடப்பால்பற - வெறும்
வெட்டவெளிக் குள்ளே பால்கற - 1

என்று இடைகாடு சித்தரின் பெருமை வாய்ந்த அற்புத வாக்கால் மானிடன் அறியவேண்டும். தெளிதல் வேண்டும். அதன்படி மானிடன் பெரும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் சுந்தரானந்தர் என்னும் அற்புத சித்தர் கற்பம் உண்ணும் பாக்கியம் யாருக்கும் கிட்டும் யாருக்கு கிட்டாது என்பதைக் கூறும் செய்தியை உணருங்கள்.

சிற்பரத்தாய் மூலமடா கண்டு கொள்ளு
செணத்திலே மேலமுதஞ் சிந்துங் காணே - 7

சிந்து மென்ற "கற்பமது" கசடற் கெய்தாது
சிவயோகி யானவர்க்குச் செணத்தி லெய்தும் - 8

என்று சுந்தரானந்தர் சிவயோகம் — 32இல் மேற்கூறியவாறு மானிடனுக்கு உரைக்கும் படி கூறியுள்ளார். கசடர் = 96 தத்தங்கள் என்ற அசுரர்களை வெற்றி காணாதவர்கள். அதாவது மலங்களை அகற்றி சுத்தப்படுத்தாத மானிடர்கள் அனைவருமாவார்.

கடுவெளிசித்தர் சிவராச யோகம் என்னும் நூலில் 15ஆம் பாடலில் ஆயிரத்தெட்டிதழிற்குள்ளே அமுதகற்பம் உண்டு என்றும், அந்த மதியமுதம் பணஎடைதான் ஒரு வேளை உள்ளே அருந்தினால் இந்த சடலம் அழியாது. உள்தேகம் வலுத்து நிற்கும் என்பதை

பார்க்கவது ஆயிரத்தெண் மலருக்குள்ளே
பாலகனே அமுத மதற் குள்ளே பாரே - 14

பாரே நீ மதியமுதந் தன்னை மைந்தா
"பணவிடைதா னொர போது" உள்ளே கொண்டால்
நேரேயிச் சடலமதற் கழிவோயில்லை
நிச்சயமா யுன்தேகம் வலுத்து போச்சு - 15

பரத்துவாச முனிவர் யோக சாதனம் 23இல் 11ஆம் பாடலில் வெண்சாரை கற்பம் உண்டு என்றும் அதனை உமக்கு தயவு மேலிட்டதால் கூறுகிறேன் என்று கூறுவது உண்மை அறிய உதவியாக இருக்கும்.

"தள்ளாதே வெண்சாரை கற்பந் தன்னைத்
தயவாகச் சொல்லுகிறேன் றனுக்கு - 11

என்பதால் அறிக.

இராமதேவர் மருத்துவம் ஞானம் 83இல் சோமப் பானம் கொண்டால் மானிடனுக்கு கைலாச தேகம் உண்டாகும் என்றும் அது தேன் போன்று இனிக்கக் கூடியது என்றும் கூறுகிறார்.

"தேனான மதியமுதங் கொண்டால் மைந்தா
சிவசிவா கைலாசத் தேகமாமே" என்று கூறுவது மானிடன் அறிந்து புரிந்து தெளிந்து மனயறிவுக் கொண்டு ஆய்ந்து அனுபவத்திற்கு கொண்டு வரவேண்டும்.

கடைப்பிள்ளை சிவயோக ஞானம் 100இல் 64ஆம் பாடலில் ஊனினால் செய்யப்பட்ட இந்த தேகத்திற்கு "காயாதி கற்பம்" உண்டு கரையேறியவன் வலிமைப் பெறுவான் என்பதை

"ஊனான "காயாதி கற்பம்" மெல்லாம்
உண்டு கரை யேறியவ னுறுதியா வான் - 64

என்று கூறுவதால் கற்பம் உண்டு

Koviloor Digital Library

என்பதை அறிய வேண்டும்.

பாம்பாட்டி சித்தர் பாடல் 129இல் 80ஆம் பாடலில் காலனை கற்பம் என்னும் வாளினால் வெற்றிப் பெறறோம் என்றும், பிறவினை என்னும் கடலை கடந்து தற்பரத்துள்ளே சென்று விட்டோம் என்று மகிழ்ந்து வாசி என்று கூறும் பாம்தே ஆடுவாயாக என்று கூறுகிறார்.

"கால னென்றுங் கொடிதான கடும் புகையைக்
"கற்ப மென்னும்" வாளினாற் கடிந்து விட்டோம்
சாலப் பிறப்பினைத் தாம் கடந்தோம்
தற்பரங் கண்டோஎமென் றாடாய் பாம்பே - 80

என்று ஓதுவதால் அக கற்பமான அமுதம் பருக வேண்டிய அவசியத்தின் அருமை உணரலாம்.

நமது வடலூர் வள்ளர் பெருமான் மரணமில்லா பெருவாழ்வில் இறையருள் தனக்கு "கற்பம்" வழங்கி அருளியதாக அருட்பாவில் ஓதுவதைக் காணலாம்.


"பொற்பங் கயத்தின் "புதுநறவும்"
"சுத்த சலமும்" புகல்கின்ற
வெற்பந் தரமா "மதிமதுவும்"
விளங்கும் பசுவின் "தீம்பாலும்"
நற்பஞ் சகமும் ஒன்றாகக்
கலந்து "மரணநவை தீர்க்கும்
கற்பங் கொடுத்தாய்" நின்தனக்குக்
கைம்மாறேது கொடுப்பேன் - 4786

அருட்பா இதுபோன்ற கற்பம் கிடைப்பது பக்குவமுடையோருக்குத் தான் கிடைக்கும். திருவருளின் இசைவின்றி கிடைப்பரிதாகும்.

இந்த கற்பம் திருவருளின் விருப்பத்தால் கிடைக்கப்பெற்று அதனை உண்டதால் தனது சித்தம் "சிவமயமாக்கியது" என்று ஓதும் அற்புதத் திருப்பாடலைக் காண்க.

தானந்தம் இல்லாத தன்மையைக் காட்டும்
"சாகாத கல்வி"யைத் தந்தெனக்குள்ளே
தேனந்தத் தெள்ள முதூற்றிப் பெருக்கித்
தித்தித்துச் "சித்தம் சிவமய மாக்கி" - 4657

அருட்பாவின் அற்புதச் செய்தியைத் தருகிறார். இங்கு கூறப்படும்



அனைத்துச் செய்திகளும் சித்தர்களின் அகச்சான்றுகளாகும்.

எனவே மானிடர்களே நீங்கள் சாகாத கல்வி பெற என்னாளும் இறைவனான சிவம் சக்தி முன் மண்டியிட்டு பணிந்து நினைந்து உள்ளம் கசிந்து மனமுருகி தாள் பணிந்து இறையருள் முன் நின்று வேண்டுதல் வேண்டும்.

எவன் ஒருவன் உலக ஆசைகள் விட்டு சாகாத கல்வியில் கவனம் செலுத்துகிறானோ அன்றே அவன் உணர ஆரம்பிப்பான். உணர்ந்து உணர்ந்து திருவருள் முன் வேண்டுகிறானோ இறைவன் அக்கல்வியைப் பெற வழிகாட்டி துணை புரிவான். எந்த நேரத்திலும் திருவிளக்கு முன் சிந்தனைச் செலுத்தி வழிபாடு செய்தால் காலத்தால் கனியச் செய்து நலம் பெற உதவிகள், அதனை அறியும் வாய்ப்புகள் பொருள் விளக்கங்கள் மனத்தில் உண்டாகும்படி நல்வழி காட்டி அருள்வான்.

ஆகவே மானிடனின் பிறவியின் வருகை சாவதற்கு அல்ல யென்ற உண்மையை உணர்த்துவான். எனவே மானிடன் நற்செயலில் ஈடுபட்டு உயிரிரக்கம் கொண்டு உயிர்களின்மேல் கருணைக் காட்டி அவர்களின் பசிப்பிணியை போக்கி உதவி செய்தால் சாகாத கல்வி தனக்குள் உருவாகி அதற்குரிய ஈடுபாடு ஏற்பட்டு இறுதிநிலையில் முத்தியும் சித்தியும் பெற்று என்றும் சோதிவடிவம் பெற்று திகழ்வார்கள் என்ற இனிப்பான நற்செய்தியை இத்துடன் நிறைவு செய்கிறோம்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

39. சித்தர்கள் கூறும் ஐவகை தேகங்கள்

சித்தர்கள் சிந்தை தெளிந்தவர்கள் உலகெல்லாம் சிவமென்று அறிந்தவர்கள் சித்தர்கள். நாயென்றும் சென்மத்தை கடந்து நிற்பவர்கள் சித்தர்கள். நரசென்மம் தவித்தவர்கள் சித்தர்கள். காண்பதற்கரிதான மூல சூட்சுமம் கண்டவர்கள் சிவசித்தர்கள். பந்தங் கடந்தவர்கள் சித்தர்கள். சாகாமல் இருப்பவர்கள் சித்தர்கள். சச்சிதானந்த குரு மகனாக திகழ்பவர்கள். நிறைவான சித்திகள் அனைத்தும் பெற்றவர்கள் சித்தர்கள்.

சித்தர்கள் மனித நிலை கடந்து தெய்வ நிலைப்பெற்றவர்கள். சித்தர்கள் அனைவரும் தங்களுடைய இயற்பெயரை இழந்தவர்கள். தாயை பூசித்தவர்கள் எவரோ அவர்கள் சித்தர்கள். பூரணத்தின் பூட்டை திறந்தவர்கள் சித்தர்கள். மறுபிறப்பு இல்லாதவர்கள் சித்தர்கள். ஆயிரெட்டு மலரிதழ் கண்டவர்கள் சித்தர்கள். கற்பூர தேகம் பெற்றவர்கள் சித்தர்கள். தீபச் சோதியை அகத்தில் கண்டவர்கள் சித்தர்கள். சாகாக்கல்வி கற்றவர்கள் சித்தர்கள்.

திரைகள் அனைத்தும் விலக்கி கடந்து நிற்பவர்கள் சித்தர்கள். மும்மலம் ஒழித்தவர்கள் சித்தர்கள். மும்மூலம் கண்டு கடந்தவர்கள் சித்தர்கள். மயிர்பாலம் நெருப்பாறு கடந்து அருளொளியில் நிற்பவர்கள் சித்தர்கள். எட்டு இரண்டு அறிந்தவர்கள். ஐந்தெழுத்தை உணர்ந்தவர்கள் சித்தர்கள். தும்பி அட்சரம் கற்றவர்கள் சித்தர்கள். படாட்சரம் பெருமை உணர்ந்தவர்கள் சித்தர்கள். ஊமையை உணர்ந்தவர்கள் சித்தர்கள். ஆமையின் அட்சரம் புரிந்தவர்கள். கால், தலை, புனல் பொருளறிந்தவர்கள் சிவசித்தர்கள் தலை கால் தீட்சை பெற்றவர்கள் சித்தர்கள். சிவஞானம் உணர்ந்தவர்கள் ஞான சித்தர்கள்.

சிவயோக அனுபவம் பெற்றவர்கள் சித்தர்கள். ஊறலற்ற தேகம் பெற்றவர்கள் சித்தர்கள். சிவசக்தி தீட்சை பெற்றவர்கள் சித்தர்கள். விட்டயெழுத்தும் விடாதயெழுத்தும் உணர்ந்தவர்கள் சித்தர்கள். சுத்த தேகம் பெற்றவர்கள் சித்தர்கள். புனித தேகம் அடைந்தவர்கள் சித்தர்கள். பிரணவ தேகம் பெற்றவர்கள். ஞானதேகம் அடைந்தவர்கள் சித்தர்கள். கயிலாத் தேகம் பெற்றவர்கள் நம்நாட்டு சித்தர்கள். வேதாந்த தேகம் பெற்றவர்கள் நம்நாட்டு சித்தர்கள். பூரண தேகம் பெற்றவர்கள் நம் சித்தர்கள். நாதாந்த தேகம் கண்டவர்கள் நம் சித்தர்கள். நிழலற்ற தேகம் பெற்றவர்கள் நம் நாட்டு சித்தர்கள். சொரூப சித்தி தேகம் பெற்றவர்கள் சித்தர்கள். சிதம்பரத்தில் குடி அமர்ந்தவர்கள் சித்தர்கள். தீபச் சோதி தேகம் பெற்றவர்கள் அருள் சித்தர்கள்.

கபால தீட்சை கற்றவர்கள் சித்தர்கள். நவகிரகம் கட்டி அனுகிரகம் பெற்றவர்கள். மந்திர தீட்சை பெற்றவர்கள் சித்தர்கள். ஆதார தீட்சை பெற்றவர்கள். சித்தர்கள் சக்தி சிவ பஞ்சாட்சரம் பொருள் உணர்ந்தவர்கள் சித்தர்கள். அமுத ரசம் உண்டவர்கள் சித்தர்கள். சுழிமுனை திரம் கற்றவர்கள் சித்தர்கள். கற்பதேக சித்தி பெற்றவர்கள் சித்தர்கள். பரி செய்யும் கலை அறிந்தவர்கள் சித்தர்கள். அட்ட கருமம் அறிந்தவர்கள் சித்தர்கள். அட்ட சித்து பெற்றவர்கள் சித்தர்கள்.

சோமப்பால் அருந்தியவர்கள் சித்தர்கள். சிவயோக சிந்தனை உடையவர்கள் சித்தர்கள். பரமவெளியில் தனி ஒளி கண்டவர்கள் சித்தர்கள். அகர பீடம் அறிந்தவர்கள் சித்தர்கள். கயிலாச மேருகிரியில் வாழ்பவர்கள் சித்தர்கள். ஓங்கார கம்ப உச்சியில் அமர்ந்தவர்கள் சித்தர்கள். சித்திநிலை பெற்றவர்களே சித்தர்கள்.

சித்தர்கள் மானுட தேகத்தை ஐந்துபிரிவாகக் காண்கிறார்கள். மானுடர்களின் செயல், தன்மை, இயல்பு,

Koviloor Digital Library

பண்பு, தத்தவங்கள், இரக்கம், கருணை, அன்பு, இன்பு, அருள், போன்ற குண நலன்கள், உயிரியல் நிலை யோக நிலை, அதனால் பெரும் தேக மாற்றங்கள் இன்னதென அறிந்துள்ளார்கள். அத்தேகங்கள் என்னவெனில், 1.இருள்தேகம், 2.மருள்தேகம், 3.சுத்ததேகம், 4.பிரணவ தேகம், 5.ஞான தேகம் என்று நெறிமுறை படுத்தியுள்ளார்கள். இனி அத்தேகங்களின் உண்மை நிலையை சித்தர்களின் மரபு வழியில் ஆய்ந்து அறிவோம். முதலில் இருள் தேகத்தைப் பற்றி அறிவோம்.

இருள் தேகம்:

இருள்தேகம் என்பது பருவுடன் என்றும் தூலதேகம் என்றும் கூறுவார்கள். இத்தேகம் மாயா வடிவம் கொண்டது. கவலைகள் நிறைந்தது. இத்தேகம். உயிர் பிரியும் தன்மையுடையது இத்தேகம். மதியென்ற வழலை (கோழை) மிகுந்து ரவியென்ற ஆயுள் கெட்டு மாண்டு போகும் தேகமிது. நேயம் கெட்டு அழையும் தேகத்தினர். மெய்யுணர்வு இன்னது என்று அறிய முடியாது நிலையுடையது. இத்தேகம் என்று பழம்பெரும் சித்தர் காலாங்கி நாதர் கூறுவது கீழ்வரும் பாடலால் அறியலாம்.

"காயமென்ற தேகமது மாயாரூபம்
கவலை குடி கொண்ட தொரு காமவீடு
மாயமென்ற ரவிதேய்ந்து மாளும் வீடு
மதிபெருகி ரவிதேய்ந்து மாளும் வீடு
நேயமென்ற நேமமது இல்லா வீடு
நேர்நிலைகள் அறியாமல் நின்ற வீடு என்று

27ஆம் பாடலில் தீட்சாவிதி 36இல் ஓதுகிறார். அவரே மேலும் இருள்தேகத்தில் தொல்லைகள் மிகுந்து ஆயுள் குறைந்து மாண்டு மடியும் தேகமாகும். அந்த தேகத்தில் வாழும் பச்சை மண் பாத்திரமாகும். பிணம் போல் நடமாடும் தேகமாகும். மதத்தின் மீது வைத்தள்ள அதிகப பற்றால் வீணான விவாதங்கள் ஏற்பட்டு நிலை தடுமாறி இறந்தவர்கள் மிகுதியாகும். கள்ளர்கள் என்ற தத்துவங்கள் மிகுந்து இருக்கும் இருள் தேகமாகும் என்ற கூடுதலான செய்திகள் கீழ்வரும் பாடல் மூலம் மேல் கூறியச் சித்தர் பெருமகனார் உணர்த்துகிறார் என்பதை அறிக.

"நில்லென்ற நிலையறியா வீடு
நிட்டூரமான தொரு நிலையாத தேகம்
சொல்லென்ற புழுகிருமி சேர்ந்த பாண்டம்
செத்த சவம் போலவே திரியும ஞ்சனம்
மல்லென்று மதம் பிடித்தவாய் வீண்யேசி
மார்க்க நிலை அறியாமல் மாண்டார்கோடி" என்று

52ஆம் பாடலில் பூஜாவிதி 85இல் ஓதுகிறார்.

அடுத்து உரோம மாமுனி சித்தர் என்பவர் இருள் தேக மனிதனின் உட்நிலை மிக அழகாக படம் பிடித்து காட்டுவது போல அருமையாக கீழ் கண்டவாறு விளக்குகிறார்.

பரு உடலான இருள் தேகத்தில் குதத்தில மலக்குற்றமும், நாவில் நாடிக் குற்றமும், கண்டத்தில் வழலை (கோழை) குற்றமும், மேல் மூலத்தில் திரைக் குற்றமும், மனத்தில் ஆணவ மலமும் பொருந்தி நானென்றும் அறியாமைக் குற்றமும் உள்ளதாக ஓதுவது கூர்ந்து அறியுங்கள்.

"பிசகாது அபானத்தில் மலமே குற்றம்
பேசுகின்ற வுதானத்தில் நாடி குற்றம்
விசையான கண்டத்திற்கு கபமே குற்றம்
மேல்மூல வளையிலே ஏறாக் குற்றம்
மசையான மனத்துக்குக் கியானக் குற்ற
மையைந்து போக்கி விட்டாலே ஞானம்"

என்று 10ஆம் பாடலில் சோடச ஞானம் 16இல் ஓதுகிறார்.

வள்ளல் இராமலிங்க அடிகளார் "இருள்தேக மானுடனுக்கு எட்டுவித குணங்கள் உள்ளது என்று கூறுகிறார். அவைகள் 1.சுதந்திரமற்றவன், 2.துயருடலன், 3.செயற்கை உணர்வுடையன், 4.சிறுமை உணர்வுடையவன், 5.கட்டுடையவன், 6.கோளன் 7. தொல்லையுடையவன், 8. மலப்பற்றுடையவன்.

வள்ளலார் உபதேச பகுதி — 99

இந்த இருள் தேகத்தினருக்கு மரணத்தை தவிர்க்கும் எண்ணம் வராமல் போய்விடும். இறப்பை நாடும்குணம் கொண்டவர்கள். இனி மருள்தேகத்தினரைப் பற்றி அறியமுற்படுவோம்.

Koviloor Digital Library

2. மருள் தேகம்:

மருள்தேகம் என்பது மாயா சம்பந்தமாய்த் தனக்கு வருவது என்னவென்று தெரியாமல் அகங்காரம் கொள்ளும் குணமுடையோர். மருள் தேகத்திற்கு சூட்சும தேகம் என்றும் கூறலாம். இந்த மருள் தேகத்தில் நான் என்னும் அகம்பாவம், மனம், புத்தி, சித்தம், அந்தகரணம், அகங்காரம், ஆணவம், மாயை, காமியம் போன்ற் மலங்களும் செயல்படுவது உண்மை யென்றும் கீழ்வரும் சித்தர்பாடலால் அறியலாம்.

"நானென்ற மனம் புத்தி சித்த மந்தக் கரணம்
நல் ஆங்காரமான மாயை காமியம்
ஊனென்று தட்டுவது சூட்சவுடலாச்சு
உற்றபனமாய் சொல்லுகிறேன் உண்மைகேளு" - 14

சச்சிதானந்தர் சுழிமுனை சுருக்கம் — 31

மேலும் மருள் தேகத்தில் தலை கனம் மிகுந்து மயக்கமுடன், மன அழுக்குடன் வாழ்வது என்பது அறியாமல் இருப்பது விலங்கு வாழ்க்கை என்பது ஏற்புடையது வல்ல என்பதை சித்தர் பாடலால் அறிக.

"மறைப்பதென்ன தலை யழுக்கைச் சீசீசீயென்று
மனந் தன்னில் மாயையாய் வாழ்வோ மென்று
துறை முறையாய்ப் போதத்திற் போதமென்று
சொல்லுவார் சூத்திர மனமுறையார் சுத்த மாடு"

என்று சுந்தரானந்தர் சூத்திர சுருக்கும் 80இல் ஓதுகிறார்.

மீண்டும் மாயை என்ற பொருளால் குணம் மாறி அறிவு நிலை குலைந்து போகும் நிலைமைத் தவிர்த்து அதிலிருந்து விடுபட சிவனை எந்நேரமும் நினைந்து நச்சு தன்மை மிகுந்து மாயா பாசத்திலிருந்து விலக வேண்டுமென்று கடுவெளிச் சித்தர் வேண்டுகோள் விடுவதை கீழ்வரும் பாடலில் அறிக.

"மாத்தினோங் குணம் பித்தாம் மாயைப்பா
மாயை கண்டு சமரசமாய் வெளியிலேகி
தேத்தினாஞ் செக மாயை விட்டு நாங்கள்
சிவன் செயலைக் கண்டிருந்து தேறினோம்
தேறினோம் விஷ மாயை விட்டு நீங்கி - 3

கடுவெளிச்சித்தர் பூரண ஞானம் — 67

மேலும் மருள் தேகத்தார் ஆணவமும், கோபமும் விலக்கத் தவறினால் துன்பம் வரும் என்றும் அதனால் அதனைத் தவிர்க்க வேண்டுமென்றும் சித்தர் ஒருவர் எச்சரிக்கின்றார்.

"தானென்ற வாணவத்தை போக்க மாட்டார்
தருந்துன்பங் கோபத்தைத் தள்ள மாட்டார்" - 41

உரோம மாமுனி சித்தர் அமுதகலை ஞானம் — 50

மேற்கண்ட மருள் தேகத்தார்கள் ஆணவ குணத்திலிருந்து விடுபட்டு நல்லபல நற்காரியங்கள் செய்ய வேண்டுமென்று கருவூரார் என்ற சித்தர் அறிவுரை அருள்வது நோக்குக.

"நானென்ற ஆணுவத்தை நீக்க வேண்டும்
நன்மை யென்ற காரியங்கள் செய்யவேணும் -

என்று 7ஆம் பாடலில் மெய்ஞ்ஞான சுருக்கம் 50இல் நல்லறிவு கூறுவது சிறப்புடையதாகும்.

"சித்தர்களால் ஆய்வு மூலம் பெறப்பட்ட உண்மைகள் நூல் வடிவமாக ஓலைச்சுவடிகளில் எழுதிக் கட்டி வைத்து வருவார்கள். அவருடைய நூல்கள் எல்லாம் சித்தர்களின் சபையில் சிவசக்தி முன்னிலையில் அரங்கேற்றம் செய்து ஒப்புதல் பெற்ற பின்னரே வெளியிடுவது வழக்கமாக கொண்டுள்ளார்கள்.

சித்தர்கள் ஆக்கிய நூல்கள் சித்தர் சபையில் அரங்கேற்றம் நடந்துவரும் நேரத்தில் கயிலாயப் பரம்பரை சித்தர் என்னும் சட்டை முனி சித்தர் அச்சபையில் வராத போது, அவரால் எழுதப்பட்ட தீட்சாவிதி 200ம், அதன் சுருக்கம் 50ம் படித்துவரும் நிலையில் திருமூலர் எழுந்து வந்து படித்துக்கொண்டிருக்கும் சித்தரிடம் சென்று அதனை பறித்து கிழித்தெறிந்தார். கிழித்தெறிந்த நூலை கொங்கணவன் என்னும் சித்தன் அதற்கு தீயிட்டு சாம்பலாக்கினான் என்பது பதினென் சித்தர் நூல்களில் இந்த இழிந்த செயலை பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த நேரத்தில் இவ்விருவருக்கும் மாயையின் தாக்கமும் ஆணவத்தின் பெருந்தாக்கமும் மேலோங்கி

Koviloor Digital Library

நின்று மருள்தேகமாக செயல்பட்டது மிக வியப்பான செய்தியாகும் என்பதை அறியலாம். இவ்விரு தேகத்தின் (மருள் + இருள்தேகத்தினர்) மரணம் எளிதில் தாக்கும் என்பதை உணர வேண்டும். இனி சுத்த தேகத்தைப் பற்றி அறிய முற்படுவோம்.

சுத்த தேகம்:

சுத்த தேகம் என்பது கருவிகரணாதிகள் இறந்து அறிவு அருள் வடிவாய்ப் பார்வைக்கு உடல் தோற்றுவது என்பதாம். சுத்த தேகமானது 96 தத்துவங்கள் என்ற அசுரர்களை வென்று புருவ நடுவில் உயிர்வளி தீபம் சோதியாகக் காண்பது. இந்த தேகத்திற்கு "புனித தேகம்" என்பர். சுத்த தேகத்திற்கு "அன்புருவம்" என்ற சிறப்பு வாய்ந்தத் திருப்பெயர் உண்டு என்று வள்ளல் பெருமான் தன்னுயிரைத் தெரிசனமாகக் காண்பது என்றும் கூறுவர் சித்தர்கள். இந்த "புனித தேகம்" பெற எதை எல்லாம் கடந்து எதை உணர்ந்து செய்ய வேண்டும் என்பதை இனி பார்ப்போம்.

மானுடன் சுத்த தேகம் அல்லது புனித தேகம் பெற வேண்டுமென்றால் கள்ளத்திரைகள் ஆறும் விலக்கி ஐம்புலன்களைத் தகர்த்தெரிந்து காது கண் வழி கடந்து கருணை என்ற குணத்தோடு இருக்க வேண்டும் என்பதை ஓதப்படுவதை உணர்க.

"கேளப்பா அயன் மாலின் திரை யறுத்து
கிருபை யுள்ள ருத்திரன் தன் திரை நீக்கி
ஆளப்பா மயேஸ்வரன் தன் திரையை தள்ளி
அதன் மேலே சதாசிவன் திரையை கட்டு
தூளப்பா ஐம்புலனைச் சுட்டுத் தள்ளி
சுக சீவ பிராண மயத் தோடிருந்து
காலப்பா செவி விழியும் கடந்தாப்பாலே
கருணையுடன் தானிப்பார் ஞானி தானே"

என்று 189ஆம் பாடலில் அகத்தியர் சௌமிய சாகரம் 1200இல் ஓதுகிறார்.

சுத்த தேகம் பெற வேண்டுமென்ற எண்ணங் கொண்டால் எட்டு இரண்டு என்கிற சிவசகதி வாலை தீட்சைகளைப் பெற்று அதன் மகிழ்ச்சியால் இருவிழி மூக்கு மேலிடமான புருவநடுவில் மனத்தை ஊன்றி மவுனத்தை பழக்கப்படுத்தினால் உடல் ஊறலற்று சுத்த தேகமாகும். அந்த தேகம் பெற நாதவிந்து ஒன்றாய்ச் சேர்ந்து மவுனமுண்டால் "தேவரூபம்" என்கிற சுத்த தேகமாகும். அந்த தேகம் பெறப்படும் என்பதாம். இதைப்பற்றி சித்தர் என்ன கூறுகிறார் என்பதை அறிக.

"ஏர்க்கை யுடன் நினைத்த வண்ணம் முடிக்கலாம்
எட்டிரண்டு ஒன்றான இன்பத்திலே
பார்க்க மணி கண்ணாலே நான்றாய்ப் பார்த்து
பக்தி கொண்டு தேக மதை சித்தி பண்ணு
சேர்க்கையுள்ள "தேகமடா தேவரூபம்"
சிவ விந்து நாதமொன்றாய்ச் சேர்ந்து சித்தே" என்று 9ஆம் பாடலில் கடைப்பிள்ளை சித்தர்தம் மந்திர ஞான விளக்கம் 45இல் ஓதுகிறார்.

அகத்தியர் சுத்த தேகத்திற்கு "புனித தேகம்" என்று ஓதுகிறார். அது எவ்வாறு என்பதையும் காணலாம். ஐவகை தீட்சை என்பதில் சிகார தீட்சை என்பது ஒன்று. இந்த சிகார தீட்சை சித்தி செய்தால் பேரண்டம் என்னும் பூரண நிலையில் சேர்க்கும். இவ்வித பூரண நிலை பெற வேண்டுமானால் நலன்கள் வழங்கும் சிவசக்தி வாலை என்னும் உயர்நிலை வழிபாடு நினைந்து நினைந்து மனம் உருகி வணங்கி வந்தால் காலத்தால் தேகமானது பூரண சித்திப்பெற்று "புனித தேகமாக" மாறும் என்பதை கீழ்வரும் சித்தர் பாடல் அறிவுரை கூறுவதை உள்ளுணர்வால் தெளிக.

"பேணவே சிகார மென்றால் ஆர்தான் காண்பார்
பேரண்ட பூரணமே ஆகும் ஆகும்
தோணவே பூரணத்தைக் கண்டுகொள்ளு
சுகமான சிவசக்தி வாலையோடு
பூணவே தான்நிறுத்தி செபித்தால் மைந்த
பூணவே தான் காயசித்தி "புனித மாமே" என்று அகத்தியர் அந்தரங்க தீட்சை விதி 400இல் ஓதுகிறார்.

சுத்த தேகத்திற்கு "கற்பூர தேகம்" என்ற ஒரு நிலை உண்டு. புருவ நடுவில் தோன்றும் தீப ஒளி பீடரிவழியே உச்சி சென்றடையும். இதற்கு அறிவின் மூலம் என்று சித்தர்கள் கூறுவர்.

Koviloor Digital Library

நமது அறிவைக் கொண்டு அறிவினுடைய மூல இரகசியத்தைப் பற்றி தெளிவான ஞானம் பெற்றால் தேகத்தின் குற்றம் முழுமையாக விலகி பரு உடலில்லாத இலகுவான கற்பூர தேகமாக திகழும் என்பதையும் அதனால் வெகு விரைவில் பரம்பொருளின் திருவடியும் நிலைத்து நிற்கும். அதனால் பிறவி தடுக்கப்படுகிறது என்பதை கொங்கணர் என்னும் சித்தர் கூறுவதைக் கூர்ந்து நோக்குக.

''அறிவையா யறிவினுட மூலங் கண்டால்
அசடில்லை கற்பூர தேக மாச்சு
அறிவை நீ யறிந்தால் பிறவிபோச்சு
அடுத்தாப் போற் பரம பதம் நிலையுமதாச்சு - 9

என்று கொங்கணா மெய்ஞ்ஞானம் — 13இல் ஓதுகிறார்.

சுத்த தேகத்திற்கு "பொன் வடிவ தேகம்" என்ற பெயரும் உண்டு. அந்த பொன்னொளி தேகம் பெற சுந்தரானந்தர் என்னும் சித்தர் சிவயோக ஞானம் 32இல் என்ன கூறுகிறார் என்பதை மனம் ஊன்றி பார்ப்போம்.

சிரசிலிருந்து வழியும் அமுத கற்பம் தீவினையாளருக்குக் கிட்டாது. சிவயோகியான நல்வினை தேகத்தினருக்குக் கிட்டும். பாசபந்தம் என்னும் தளையை யகற்றியவருக்கு விந்துவானது சிவராஜ யோகத்தால் பரிவாசி மேல் நோக்கும். மேல் செல்லும் விந்துவின் இயக்கத்தால் பராசக்தி தாயானவள் புருவமையத்தில் அழகாய்க் காட்சி தருவாள். மருள்தேகமானது ஒழிந்து "அருணன் போல் பொன் வடிவம்" பெற்று திகழும். கத்தி அல்லது வாள் கொண்டு வெட்டினாலும் அல்லது இடையில் பாய்ச்சினாலும் வாள் முன்பின்னாக ஆடும். தேகம் அழியாது. அருபவடிவமாகும் என்பதைக் கீழ்வரும் சித்தர் பாடலால் தெளிக.

''சிந்த மென்ற கற்பமது கசடற்கு கெய்தாது
சிவயோகி யானவர்க்கு செணத்திலெய்தும்
பந்தவென்ற விந்துவது மேலே யேறும்
பரா பரையும் புருவ மையம் பாங்கர்ய்த் தோன்றும்
அந்து வென்ற தேகமது அருணன் போலாகும்
ஆச்சரியங் கத்தி நடுவோடும் பாரு
வந்து உனக்கு உபதேசம் ஆயி சொல்வாள்
வாய்திறந்து சொல்லாதே மவுனம் உண்ணே'' -

என்றும் அகத்தியர் பரிவாசி தான் அறிந்து மூலத்தில் நின்றால் சதாசிவன் என்னும் நிலையடைந்து நின்றால் தோலுடலானது கற்பூர தேகமாகும் என்றும், மானுடனுக்கு சிவனுடைய அருள் கிடைக்கும் என்று ஓதுகிறார்.

தானென்ற மூலத்தில் வாசியாட்டம்
சதாசிவனார் பீடத்திற் புக்கிஞ் தன்னால்
ஊனென்ற சடம்போங் கற்பூரதேகம்
உன்றனக்கு வாய்த்தடா வீசன் வாழ்க்கை

என்று ஞானம் 8இல் ஓதுகிறார்.

மேலும் சுந்தரானந்தர் என்னும் சித்தர் சிவயோகஞானம் 32இல் 9ஆம் பாடலில் மவுனமென்ற சிவராஜ யோகத்தால் பரிவாசி பழகப் பழக புருவத்திலிருந்து வாசி மேல் நோக்கிச் செல்ல கெவுனம் பாயும். அதனால் தேகத்தின் விந்து கட்டும். அது மணியாகும் தேகத்திலுள்ள மயிர்க்கால் தோறும் ஒளிக்கதிர் வெளிப்பட்டு பரந்து விரிந்து ஒளிரும். தேகம் குறைதல் உயர்தல் இல்லை. பசிதாகும் இல்லை. இறப்பு இல்லை. தேகச்சட்டை பொன் வண்ணமாய் அருணன் போன்று திகழ்ந்து ஒளிரும். அந்த தேகத்தின் சாயல் அல்லது நிழல் தரையில் விழாது என்பதை,

''மவுன முண்ண் மவுன முண்ண மவுனமாகும்
மாசற்ற மவுன முன்னை வாசித் தூக்கும்
கெவுன வழி யோடுதற்குக் குளிகை கட்டும்
கேசர மெல்லாம் அடங்கா வொளிதான் வீசும்
தவனமில்லை பசியில்லை சாவுமில்லை
சட்டைக்குத் தேகமது அருணன் போலாம்
புவனமதில் மாற்றமுஞ் தான் தேகச்சாயை
பொய்யடா பூரணத்திற் பூட்டுவாயே'' - 9

சுந்தரானந்த சிவயோக ஞானம — 32

வள்ளல் இராமலிங்க அடிகளார் தாம் தூலதேகத்திலிருந்து இறையருளால் மூன்று வித தேகங்கள் பெற்றார் என்ற நிகழ்ச்சியை கீழ்வரும் அருட்பாவில் ஓதுகிறார். அதனை இங்கு அறிவு கூர்ந்து மிகவும் மனமூன்றி நோக்குக.

Koviloor Digital Library

"சுத்த வடிவம் "சுகவடிவாம் "ஓங்கார
நித்த வடிவம்" நிறைந்தோங்கும் சித்தெனும் ஓர்
"ஞான வடிவம்" இங்கே நான் பெற்றேன் எங்கெங்கும்
தான வினை யாட்டி யற்றத் தான்" - 5503

"சுத்தவடிவம் = ஒளிவடிவம் - பொன்வடிவம்"
"ஓங்கார வடிவம் - பிரணவ வடிவம் - மந்திர வடிவம்
ஞானவடிவம் - வான் வடிவம் - கயிலாச வடிவம்

மேலும் வள்ளல் சிதம்பர இராமலிங்க பெருமான் இறைவன் தனக்கு "பொன் வடிவம் — மந்திர வடிவம் — வான்வடிவம்" நல்கி சிரசில் மணிமுடி சூட்டினார். என்றும் கூறுகிறார். அச்செய்தியை வாசித்துணர்க.

"மன்னுகின்ற "பொன்வடிவம்" மந்திரமாம் வடிவம்"
"வான்வடிவம்" கொடுத்தெனக்கு மணிமுடியும் சூட்டி

என்று 4150ஆம் அருட்பாவில் அருளியுள்ளார்.

"பொன் வடிவம் - சுத்த தேகம் - அன்புருவம்
"மந்திரமாம் வடிவம் - பிரணவ தேகம் - அருளுருவம்"
வான் வடிவம் - ஞான தேகம் - இன்புருவம்"

என்பது வள்ளலார் பெருமானின் அருட்பாவின் மூலம் அகச்சான்றாக மிளிர்கின்றது.

சுத்த தேகம் அல்லது ஒளி உடம்பு:

இதற்று "சுவர்ண தேகம்" பொன்னுடம்பு" என்றும் கூறப்படுகிறது. தூல உடல் தான் ஒளி தேகமாகவம், பொன்வடிவமாகவும் திகழ்கிறது. என்பதை திருமூலர்

"தெளிதரும் இந்தச் "சிவநீர்" பருகில்
ஒளிதரும ஓர் ஆண்டில் ஊனமொன்றில்லை
வளி யுறும் எட்டின் மனமும் ஒடுங்கும்
களிதருங் காயங் "கனகம" தாமே" - 846

சிவராச யோகத்தால் பரிவாசி மேல்நோக்கி சென்று புருவச் சுழியில் நின்றால் "சிவநீர்" என்னும் அமுரியான அமுதம் வழியும் அதனை ஆண்டு முழுதும் உண்டால் உல்லாச தேகம்" ஒளிரும். அத்தகைய தேகம் பொன்போல் மிளிரும். அதற்கு சுத்த தேகம் என்பர். ஞானிகள் உடம்பில் "மயிர்க்கால் தோறும்" ஒளிவீசும் என்பதை திருமூலர்,

"இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி
அருகின்ற் மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனும் சோமனும் ஆரழல் விச
உருக்கிய ரோமம் ஒளி விடுந்தானே" - 93

"அருக்கன் - சூரியன் - ரவி
"சோமன் - சந்திரன் - மதி
"ஆரழல் - வன்னி - தீ"

மேல்மூலத்தில் சூரியன் — சந்திரன் — சுடரி ஆக இவைகள் மூன்றும் ஒன்றாய் இணைய அதன் ஒளி மயிர்க்கால்கள் வழியே உடல் முழுதும் ஒளிவீசும் என்றும் ஓதுகிறார்.

உரோம மாமுனி சித்தர் தூல தேகமே "ஒளியுடம்பா" மாறும் என்பதை,

"சொரூப முத்திக் கடையாளமே தென்றாக்கால்
சுடர் போலக் காணுமடா தூல தேகம்" என்று ஓதுகிறார்.

நமது வள்ளலார் அடிகள் ஒளியுடம்பான சுத்த தேகம் பெற்றதை சில அகச்சான்றுகள் மூலம் எடுத்துக் காட்டப்படுகிறது.

"எய்யேன் இனி வெம் மலக் கூட்டில் இருந்தென் உள்ளம்
நையேன் "சுத்தநல்லுடம் பெய்தினன்" நானிலத்தே"
என்று அருட்பா 4715இல் ஓதுகிறார். மேலும்

"பொன் இயல்வடிவம்" புரைபடா உளமும்
பூரண ஞானமும் பொருளும்
உன்னிய எல்லாம் வல்ல சித்தியும்பேர்
உவகையும் உதவினை எனக்கே" - என்று அருட்பா 3849இல் விளிக்கிறார். மேலும் தோலும்டம்பு தான் செழிப்புள்ள பொன் உடம்பாய்த் திகழ்ந்தது என்றும் ஓதுவதை உணர்க.

"விரைநது விரைநது படி கடந்தேன்
மேற்பால் அமுதம் வியந்துண்டேன்
கரைந்து கரைந்து மனம் உருகக்
கண்ணீர் பெருகக் கருத்தலர்ந்தே
வரைந்து ஞான மணம் பொங்க
மண் மன்றாசைக் கண்டு கொண்டேன்
திரைந்து நெகிழ்ந்த "தோலுடம்பு

Koviloor Digital Library

செழும் பொன் உடம்பாய்த் திகழ்ந்தேன்''

என்று அருட்பாவின் 5482இல் ஓதுகிறார். மேன்மேலும் அடிகளார்.

''எக்காலம் சாகாமல் ஓங்கும் ''ஒளிவடிவம்''

பெற்றேன் என்று அருட்பா 5482இல் ஓதியதை என்றும் அகச்சான்றாக பொன்போல் ஒளிர்ந்து திகழ்கின்றது.

சொர்ண தேகத்தின் விரிநிலை விளக்கம்:

காரிய ரூபம் — பரதேகம் — பரஉணர்ச்சி — பரஅறிவு — பரத்துவம் — பொன் வண்ணவம். 12 வயது பருவம் நரை திரை மூப்பு — மலசலம், வேர்வை, ஆகாரம், நித்திரை, தகாகம் சாயை முதலிய இல்லாமை. ரோம வளர்ச்சி தாழ்ச்சி இல்லை. அபரஞ்சி மாத்து. கர்ம சித்தி. கல்ப தேகி. அபரமார்க்கி.

வள்ளலார் உபதேச பகுதி — 93. அடுத்து பிரணவ தேகத்தைப் பற்றி அறிய முயல்வோம்.

பிரணவ தேகம் அல்லது மந்திர வடிவான தேகம்:

பிரணவ தேகம் என்பது மந்திரவடிவான தேகமாகும். இதற்கு "ஒலிவடிவான தேகம்" என்றும் கூறுவர். நாததேகமென்றும் அழைப்பர். இத்தேகத்திற்கு "அருளுருவம்" என்ற தனிச்சிறப்பு திருப்பெயரும் உண்டு. இதனை திருமூலர், "ந்தி அருளால் நாதனாம் பேர் பெற்றோம்" — என்று திருமந்திரத்தில் ஓதுகிறார். இத்தேகத்தின் இயல்பு என்னவென்றால் பார்வைக்கு உடல் தோற்றினும் கைப்பிடிக்கு புலப்படாது. நிழல் சாயை இல்லாதது.

சிவராச யோக வாழ்க்கையில் பரிவாசியானது யோகப் பயிற்சியின் முதிர்வால் இருகண் நாசிமேல் புருவ நடுவில் நின்ற அவ்வாசி தீட்சையின் ஏறுமுகத்தில் நடுநெற்றிக்கு எடுத்துச் செல்லும்போது கற்பூரதேகமாக விளங்கிய அத்தேகம் எரிகொண்டு தீபம் போல் சுடர் விட்ட உடல்முழுதும் பரவி காட்சி தரும். அப்பொழுது தீபத்தின் அசைவால் "ஒலி" உண்டாகும். ஓங்கார வளைவுகள் உண்டாகி அதன் வடிவமாக திகழும். அப்பொழுது அந்த தேகம் தன்னுடைய நிழல் சாயை இழக்கும். அதாவது பிரணதேகத்தின் சோதிவடிவத்தால் நிழல் தரையில் விழாது. அவ்வித தேகத்திற்கு "வேதாந்த வடிவம்" என்று ஓதப்படுகிறது. இதனை கீழ்வரும் சித்தர் பாடலால் அறியலாம்.

''காணப்பா கொண்டு நிலை பார்க்கும்போது
கற்பூரத் தீபம் போற் ''சடமே'' காணும்
விண்ணப்பா தன் சாய்க்கை யத்துப் போச்சு
வேதாந்த அந்தமென்ற தேக மாச்சு'' என்று அகத்தியர் சௌமிய சாகரம் 1200இல் ஓதுகிறாா.

மேலும் கடைப்பிள்ளைச் சித்தர் நமது ஞான சைதன்யம் 20 என்னும் நூலில் கற்பம் சாதித்த தேகமானது நாதவடிவம் பெற்று பூரணத்தில் மானுட ஆன்மா ஓங்கார வடிவமாகி நின்று திகழும் என்றும் கூறுகிறார். அப்பாடல் இங்குள்ளதை அறிக.

''திரமான தேகமடா நாத ரூபம்
திருவாசி பூரணமர் நின்ரூபம்'' - என்று சித்தரின் அனுபவத்தை அறிய முடிகிறது. திருவாசி — ஓங்காரம்.

வாசியோக நெறியாளர்கள் இத்தேகம் பெற எப்பொழுதும் தனிமையில் இருக்க வேண்டும. தாய்ப்பால் வழங்கும் பூரணத்தின் பாலமுதம் நாள்தோறும் பருக வேண்டும். இந்த எண் சாண்தேகம் வாலையின் அமுதம் உண்டு வர 5 வயது குழந்தையின் பருவம் உண்டாகும். சதையும் தோலுமான இந்த தேகம் "காற்றாய் மாறி" திகழும். இதனால் தேகத்திற்கு தீமையில்லை. உயிரை வாங்கும் எமன் வரமாட்டான் கீழ்வரும் சித்தர் பாடலால் தெளிக.

''தானானத் தானவனாய்த் தனித்து நின்று
தாயான பூரணிதன் பானம் கொண்டால்
சாணான தேகமடா எண் சாண் தேகம்
சமரசமய் நின்றிலகும் வாலையாச்சு
ஊனான தேகமது வாசியாகும்
ஒரு தீங்குமில்லையடா நமன்நாடானே'' - 30

Koviloor Digital Library

கடைப்பிள்ளை சித்தர் ஞானம் — 33

மேலும் ஒருவர் பத்தாண்டு காலம் பத்து வித தீட்சைகளை முடித்துவிட்டால் அவருடைய தேகம் அருபியாகும் என்றும், அவர்களின் வடிவம் "புகை போல் தோன்றும்" என்றும் அகத்தியர் கூறுவதை கவனிக்கத்தக்கது.

"போற்றி யிது பத்தாண்டு தீட்சை பத்தும்
புகழாக செய்தவனே அருபியா மே" - 369

ஆமப்பா புகை போலே ரூபமாகும் - 387

என்று அகத்தியர் அந்தரங்க தீட்சை — 400இல் தெளிவாகக் கூறுகிறார்.

கொங்கணர் தம் ஞான சைத்யனியம் என்னும் நூலில் ஒருவன் மவுன யோகத்தில் ஊன்றி நின்று பழகினால் அத்தேகம் உறுதியாக நிலைக்கும். எவ்வளவு காலமானாலும் தேகம் அழிவுறாமல் நிலைத்து நிற்கும். மவுன யோகத்திலிருந்து சூரியக்கலையில் வாசி நிலைத்தால் தேகம் முழுதும் தீப ஒளி பரந்துவிரிந்து ஒளி வீசும். கண்ணில் தேகம் தென்படும. அத்தேகத்தை பிடிக்க முயன்றால் கைக்கு அகப்படாது. கற்பூர தீபம் போல் தேகம் ஒளிவீசும. கண்ணால் பார்க்கும்போது கண்ணில் அத்தேகத்தின் நிழல் சாய்வது இல்லை. இத்தேகத்தில் தீபஒளி முழுதும் பரவி எங்கும் தங்கிய நிலையில் சச்சிதானந்த தேகமாக விளங்கும் என்று சித்தர் கூறுவதை தெளிக.

"பண்ணினாற் சடம் போகா தெத்தனை நாளாயும்
பாங்காக மவுனத்திதை விரித்து சொல்வேன்
ஒண்ணினால் மவுனத்திதை ரவியைப் பாரு
வுருக்கியப்பா வகண்டத்தில் ஒளியே காணும்
கண்ணினாற் சடம் காணும் பிடிக்க பொய்யாம்
கற்பூர தீபம் போல் நிற்கும் நிற்கும்
கண்ணினாற் சாய்கை யில்லையை கண்டமாவார்
சச்சி தானந்த மென் தேகமே" - 78

என்று கொங்கணர் ஞான மந்திரவிளக்க நூலில் ஓதுகிறார்.

சுந்தரானந்தர் என்னும் சித்தர் பிரணவ தேகத்தின் இயல்பு என்னவென்று விளக்குவதையும் அவசியம் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

சிவராசயோகத்தின் மூலம் பரிவாசி பூரகமும், பகம் செய்யும்போது காற்றின் அழுத்தத்தால் மேல்நோக்கி செல்லும் போது நெற்றியிடத்தின் பன்னிரெண்டாம் படியில் நிலைத்த போது வாசியோகம் சித்திபெறும். அப்பொழுது அந்த உடலுக்கு மரணம் இல்லை. அவ்வுடலுக்கு நிழலின் சாயல் இல்லை என்று கூறுகிறார். பிரணவ தேகத்தின் முன் தீபம் ஏற்றி வைத்தால் தேகத்தின் நிழல் எவ்விடத்திலும் விழாது. நீரின் முன் சென்று நின்று பார்த்தாலும் உருவத்தின் வடிவம நீரில் தெரியாது என்று கூறுகிறார்.

"அறைகுவேன் யெட்டதின் நாலும் சேர்ந்தால்
அப்பவல்லோ யோகமது சித்தியாச்சு
பறைகுவேன் சாவென்ற பேச்சும் போச்சு
பண்பர்கத் தான் நிழலின் சாயை யில்லை
மறைகுவேன் தீபமதின் சாயை யில்லை
மக்களே தண்ணீரின் சாயை யில்லை
தறைகுவேன் இவ்விதமாய்ச் சாதித்தோர்க்குச்
சட்டைக் கித் தேகமது அருணனாமே - 31

சுந்தரானந்தர் சிவயோக ஞானம் — 32

நமது திருமூலர் அவர்களும் வள்ளலார் அவர்களும் பிரணவ தேகம் பெற்றவர்கள் என்பதை அவர்கள் செய்த திருமந்திர நூலிலும், அருட்பாவிலும் இடம்பெற்று அகச் சான்றாக இருப்பதையும் அறிக.

திருமந்திரம் முவ்வாயிரத்தில் திருமூலர் தாம் பிரணவ தேகம் பெற்றதாக கூறும் திருமந்திரப் பாடலை நோக்குக.

"ஆமவ ரிற்சிவ னாரருள் பெற்றுளோர்
போமலந் தன்னாற் புகழ் விந்து நாதம் விட்
"யோமயமாகி" யொடுங்கலி னின் மலர்
தோமறு சுத்தா வத்தைத் தொழிலே" - 2194

திருமூலர் பெருமகனார் தனக்கு நந்தியின் அருளால் "நாதன்" என்ற திருப்பெயர் பெற்றதாகவும் கூறுகிறார்.

"நந்தி அருளாலே" "நாதனாம்" பேர் பெற்றோம்" — என்று 130ஆம் திருமந்திரப் பாடலில் தெரிவிக்கிறார்.

Koviloor Digital Library

மேலும் இவருடன் ஏழு அருளாளர்கள் நந்தியின் திருவருளால் "நாதன்" என்ற திருப்பெயர் பெற்றதாகவும் 129ஆம் திருமந்திரப் பாடலில் ஓதுகிறார்.

''நந்தி அருள் பெற்ற ''நாதரை'' நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்றிவர் என் னொ டெண் மருமாமே - என்று

ஓதுவதையும் உணர்க. நாதம் என்றால் பிரணவம் என்ற பொருள் உண்டு.

குமார தேவர் இயற்றிய சுத்த சாதகம் என்னும் நூலின் கண் "ஓமயத்திருவுரு" அதாவது பிரணவ வடிவத்தைப் பற்றி பல்வேறு பாடல்களில் பல்வேறு இடங்களில் கூறப்படுகிறது. "பிரணவ தேகம்" பெற்ற அருளாளர்கள் "பரமுத்தர்" என்றும் சுத்த சாதகத்தின் துணிபான முடிவாகும்.

நமது வள்ளலார் அடிகள் அவர்களும் பிரணவ தேகத்தை பெற்று நலமடைந்து அனுபவித்தவர் என்பதையும் இங்கு எடுத்துக் காட்டப்படுகிறது.

"இவ்வடி விம்மையே மந்திர ஒலி வடிவா" மாறே" என்று 3853ஆம் அருட்பாவில் தெரிவிக்கிறார். மேலும்

''மன்னுகின்ற பொன்வடிவம் ''மந்திரமாம் வடிவம்''
வான் வடிவம் கொடுத் தெனக்கு - என்று 4150ஆம் அருட்பாவிலும்,

''ஓமத்திலே நடு சாமத்திலே எனை
''ஓமத்தன்'' ஆக்கினிர் வாரீர்
சாமந்த நீக்கினிர் வாரீர் என்று 4452ஆம் அருட்பாவிலும், மற்றும் அருட்பெருஞ்சோதி அகவலிலும்,

''ஓமயத்திருவுரு'' உவப்புடன் அளித் தெனக்
காமயத் தடைதவிர் அருட்பெருஞ் சோதி'' போன்ற அகச் சான்றுகள் இடம் பெற்றுள்ளது

பிரணவ தேகத்தின் விரிநிலை விளக்கம்:

காரிய காரண ரூபம். பரதேகம். பரம்பர உணர்ச்சி. பரம்பர அறிவு. பரம்பரத் தத்துவம். 16 முதல் 108 வரையில் மாற்று. உரைபடாதது. 5 முதல் 8 வரை பருவம் தேகம் தோன்றும். பிடிபடாது. சர்வ சித்தி. பிராண கல்ப தேகி. பர அபர மார்க்கம். உபதேச பகுதி 93

இனி ஞான தேகம் பற்றி அறிய முற்படுவோம்.

ஞானதேகமானது கண்காட்சிக்கு தோற்றாமல் அறிவுக்கு மட்டும் புலப்படுவது. இந்த தேகத்திற்கு " வான் வடிவத் தேகம்" என்றும் கூறுவர். "கயிலாச தேகம" என்றும் செப்புவர். மேலும் "ஞான ரூப தேகம்" என்றும் ஓதப்படுகிறது. இன்னும் "ஞான உடல்" என்றும் சிறப்பிக்கப்படுகிறது. வள்ளல்பெருமான் அருள்மாலையில் இத்தேகத்திற்கு "இன்புருவ வடிவம்" என்று உயர்வாகச் சிறப்பித்துக் கூறுகிறார்.

ஆதியில் முதல்முதலில் அகத்தியர் முதல்பதினெண் சித்தர்கள் அருள்மிகுந்து அதனால் இன்பம் உண்டு அதன் வசமாய்த் தோய்ந்தனர். அருட்சோதி வடிவமாய் நின்று அதில் சொக்கினார்கள. தேகத்தின் தேவப்பகுதியான கபால உச்சி பகுதியில் சுழிமுனைச் சுடரைக் கண்டு "சொரூப சித்தி" அடைந்து பராபரையின் அருளையும் பெற்று "ஞானவடிவம்" பெற்றனர் என்பதை சுந்தரானந்தர் என்னும் சித்தர் கூறும் செய்தியை கீழ்வரும் பாடலால் அறிய வருக.

''ஆதியிலே கும்பமுனி பதிணென் பேரும்
அருட் பெருகி யானந்த மயமாய் நின்றனர்
சோதியிலே நின்று கொண்டு சொக்கினார்கள்
சொரூப மென்ற சுழிமுனையிற் சுடரை யுண்டு
வாதி யென்ன ஆத்தாளை வணங்கி போற்றி
வந்த வழி போன வழி ஞான ரூபமாய் - 2

கொங்கணர் என்ற சித்தர் பெருமான் தாம் இயற்றிய ஞான மந்திர விளக்கம் 111இல் "தோலுடம்பு ஞான உடம்பாக" நின்றது என்று கூறுவது கீழ்வரும் பாடலால் அறியலாம்.

''கோனென்ற கேசரியாற் பிடித்துப் பாரு
கொள்ளையிட்டாய் கொள்ளையிட்டாய்''
ஞான மெல்லாம்
''ஊனென்ற உடலே'' ஞான உடலாச்சு'' - 80ஆம் பாடலில் ஓதுகிறார்.

Koviloor Digital Library

மேலும் கடைப்பிள்ளை என்னும் சித்தர் வாக்கில் நின்று வெளிப்படும் செய்தியானது, உயிர்வளி சுழிமுனைச் சுடரில் கபால உச்சியில் கொண்டு சென்று ஒடுங்கினால் அவரது தேகம் கயிலாச தேகமாகும் என்றும் கூறுவது அறிக.

"காத்து நிலையறிந்து ஒடுங்கினாக்காற்
கயிலாச தேகமடா தன்னை பாரே" - என்று 26ஆம் பாடலில் ஓதுகிறார். மேலும் அப்பெருமகனார், வாக்கின்படி உயிர்வளியானது பன்னிரெண்டாம் படிநிலையில் சந்திக்கும்போது நிற்குணமாகத் திகழும் அதுவே உண்மையான மூல சூட்சமமாகும். அந்த நிற்குணத்தின் மாற்றமே "ஒளிதேகமாகும்". அத்தேகத்தில் கத்தி நடுவே பாச்சினாலும் கத்தி ஆடும். இந்தசெய்தியை அவர் கூறும் பாடல் மூலம் தெளிவாகும்.

"வேளப்பா நிற்குணம் துவாத சாந்தம்
மெய்யான நிற்குணமே மூல சூட்சம்
ஆளப்பா நிற்குணமே "ஒளிதான்தேகம்"
அப்பனே கத்தி நடு ஆடும் பாரே" - என்று 897அம் பாடல் உணர்த்துகிறது.

அகத்தியர் இந்த தோலுடம்பே தீபம் போல் சுடர் விட்டு ஒளிரும் என்பதையும், அத்தீபமே தேகத்தில் நடுவே வாள் எடுத்து நடுவே செலுத்தினால் முன் பின் செல்லும் என்றும் வெட்டறாது என்றும், கூறுவதோடல்லாமல் இந்த உடலுக்கு "சிவ வான் வடிவம்" என்ற செய்தியை தரும் இவர் "சொரூப சித்தி உடல்" என்று ஓதுவதையும் அறியலாம். அவருடைய அற்புதப் பாடலைப் பாருங்கள்.

"சித்தியாம் சிவ தீட்சை பத்தில் நின்று
செய்வதற்கு பிராணாயம் என்று சொல்வேன்
பத்தியாம் தீபம் போல்சடமே" காணும்
பாங்கான கத்தியுமே நடுவே யோடும்
அத்தியாம் கூட சிவனாக நிற்பார்
அப்பனே யிது வல்லோ சொரூப சித்தி" - 362ஆம் பாடலில் அந்தரங்க தீட்சை 400இல் ஓதுகிறார்.

போகர் உபதேச ஞானம் என்ற நூலில் தேகமானது "கற்பூர தீபம்" போல் ஒளிரும் என்றும், பூரணத்தில் குடி கொண்டுள்ள சக்தியானவள் அன்புடன் அழைப்பாள். பூரணம் கண்டவர்களுக்கு ஆண் பெண் பாலின வேறுபாடு நிலை மாறும். துன்பங்கள் இல்லை. ஆபத்துகள் இல்லை. கால யுகத்தால் ஒளிதேகம் அழியாது. ஒளி தேகம் எங்கும் அகண்டமாய் விரிந்து பரந்து அகன்று நீண்டு நிலைத்து நிற்கும் என்பதை அவருடைய பாடல் மூலம் அறியலாம்.

"கற்பூரத் தீபம்போ லொளியு மாகும்
கடிதான பூரணம்வா வென்றே கூவும்
பற்பூரம் பாலின்வா சனைதான் போகும்
பலவான துன்பமொடு ஆபத்தும் போம்
அற்பூரக் காலமது அழியாத தாகும்
அதிகமாய மில்லை யண்ட மந்தண்டத்தில்
உற்பூரத் தோய வெளிமுகத் தருக்கு
உறவாடல் மெத்த உண்டு உண்மையாமே" - 12
போகர் உபதேச ஞானம் — 150.

திருமூலர் தம் திருமந்திரம் 3000த்தில் திருமேனி என்று உடலை சிறப்பித்துக் கூறுகிறார். திரு என்ற ஒன்றைச் சொல்லுக்கு சிறப்பு, மேன்மை, மங்கலம், தெய்வத் தன்மை என்று கூறப்படுகிறது. மானுட தேகம் திருவருள் கூடிய போது திருமேனி என்று சிறப்பிக்கப்படுகிறது. திருமேனி என்பது சிறப்புடைய தேகத்திற்கு கூறப்படும் சொல்லாகும். சுத்த தேகமும் பிரணவ தேகம் சிறப்படைந்து காலத்தால் ஞான தேகமாகத் திகழ்கிறது என்பது திருமூலர் செப்பும் மொழியாகும்.

"திருமேனி தானே திருவருளாகும்
திருமேனி தானே திருஞானமாகும்" - 2677

"உள்ளத்து ளேநீதி யாய வொருவனை
உள்ளத்து ளேயுடல் ஆகாய மாகுமே" - 2759

"உடல் சிதா காயமாக" விளக்கும். இதற்கு "சொரூப சித்தி" என்று சித்தர்கள் கூறுகிறார்கள். சொரூபம் என்றால் இயற்கை உண்மை அறிவு இன்ப வடிவினனாக என்று திகழும் நிலையாகும்.

நமது வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகளார் தாம் "ஞான தேகம்" பெற்றதாகவும் அருட்பாவில் ஓதுகிறார். இந்த ஞான தேகத்திற்கு "அருளுடம்பு"

Koviloor Digital Library

என்ற மற்றுமொரு பெயர் உண்டு. இதற்கு "வான்வடிவம்" என்று அருட்பாவில் ஓதுகிறார்.

''வான் வடிவம்'' கொடுத்தெனக்கு மணிமுடியும் சூட்டி - என்றும்
''ஞான வடிவம்'' இங்கே நான் பெற்றேன்
தான விளை யர்டி யற்றத் தானே'' - என்றும் 4151 மற்றும் 5503.ஆம் பாடலில் தம் சிவானுபத்தை ஓதியுள்ளார்.

வள்ளலார் அவர்கள் முவ்வித தேகத்திற்கு முவ்வித சொற்வடிவம் கொடுத்து சிறப்பிக்கிறார். முவ்வித தேகம் வாதவூர் அடிகள் பெற்று சிவானுபவம் பெற்றவர் என்பதை கீழ்வரும் அருள்மாலை விளக்கம் என்னும் அருட்பாவில் தெரிவிக்கிறார்.

"அன்புருவம்" பெற்றபின் "அருளுருவம்" அடைந்த பின்னர்

"இன்புருவம்" ஆயினை நீ எழில்வாத வூர் இறையே — என்று 3259ஆம் அருட்பாவில் புகழ்ந்து மகிழ்கிறார்.

முவ்வித உயர்ந்த தேகங்களுக்கு சொல்வடிவங்கள் வெவ்வேறாக இருந்தாலும் பொருள் வடிவம் ஒன்றாகத் திகழ்வதையும் தெய்வீகத் தன்மை பெற்று விளங்குவதையும் மனம் மகிழ்கிறது.

ஞான தேகத்தின் விளக்க சுருக்கம்:

பர அறிவு — பராபரத் தத்துவம் — அளவு கடந்த மாற்று. சப்த மய தரிசனம். சர்வ மகா சக்தி. சர்வ சுதந்திரம். உருவம் தோற்றியும் தோற்றாமலும் இருக்கும். கலாதீதன்.

இதுகாறும் நம் தமிழ் சித்தர்கள் அருளால் நன்னெறியில் கூறிவந்த ஐவகை தேகங்களைப் பற்றி அறிந்தோம். இதில் முதல் இருவகை தேகத்தினர் மரணம் தழுவி மாள்வர். மற்ற முவ்வகை தேகத்தினரான சுத்ததேகம், பிரணவ தேகம், ஞான தேகத்தினருக்கு மறுபிறவி இல்லை.

சுத்த தேகத்தினர் தொடர்ந்து பெருமுயற்சி செய்து அமுத கற்பம் உண்டு பிரணவ தேகமாக மாற்றிக் கொள்ள வேண்டும். பின்னர் பிரணவ தேகம் அடைந்த அருளாளர்கள் தொடர்ந்து அமுத கற்பமுண்டு ஞானத்தேகம் பெற்று மரணமில்லா பெருவாழ்வில் என்றும் வாழ்வார்கள். முவ்வித தேகத்திற்கு "மறுபிறப்பு இல்லை" இனி சித்தர் மூலமே அறிவோம்.

மறுபிறப்பு இல்லை:

கருவூரார் மெய்ஞ்ஞானம் சுருக்கம் 5இல் சொரூப சித்தி பெற்ற தேகத்தினருக்கு மறுபிறவி இல்லை என்று ஓதுகிறார்.

''சொரூப மது கயிலாச தேகங் தேகம்
சூட்சுமிதை யறிய சிவயோகி யாவாய்
அரூபமடா காரணந்தான் தோன்றுமிந்நூல்
அன்னை யுன்னை யெடுத்து அமுர்தம் ஈவாளீந்தால்
சொரூபமடா மறுபிறவில்லை யில்லை - 9 என்பது உறுதியாகிறது.

வான்வொளியில் உயிர்வளி (ஆன்மா) பேரான்மா என்று கூறப்படும் சிவன் வடிவமாகும். சிவன் உருவான இத்தேகம் மேலும் "சோதி வடிவம்" சிதம்பரத்தில் குடியமர்வார்" என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளதால் இவர்களுக்கு பிறவி இல்லை என்பதையும் அறியலாம்.

''தேர்ந்து பார்வெளியான தெளிவிலேறிச்
சிவ சிவா சிவனுருவாய்த் தேகமாச்சு
தேகமாச் சென்றாக்காற் சோதிரூபம்
தில்லை யென்ற மேருவிலே திறமாய் நில்லு - என்று சுந்தரானந்தர் மெய்ஞ்ஞானச் சுருக்கம் - 16இல் ஓதுகிறார்.

காலாங்கி நாதர் தாம் எழுதிய உபதேச ஞானம் 34இல் 24ஆம் பாடலில் ஆவி என்று கூறப்படும் சதாசிவ இருப்பிடமான புருவமீது அடங்குங்காலத்தில் மேல் முயற்சி செய்யாது நின்றால் அவ்ஆவி மாண்டு மறுபிறவி எடுக்கும்.

புருவ மையத்தில் ஏறிவந்த ஆவி என்ற நன்னான் மாபரிவாசி மேல்நோக்கி வாலையில் நின்றால் அவ்வான்மாவுக்கு மறுபிறவி இல்லை. அதுபோல் மீண்டும் தன் முயற்சி எடுத்து மூலம் என்றும் சிகாரத்தில் அடங்கினால் விண்வெளியில்

Koviloor Digital Library

ஒளிவடிவாய் திகழும்.

ஆவியென்ற ஞான யான்மா ஞான பேரான்மாவுடன் ஆறுமுகமான ஒளிஅறிவில் அடங்கினால் விண்வெளியில் கரைந்து திகழும் என்று காலாங்கிநாதர் ஓதுவது மகிழ்ச்சியுடைய செய்தியாகும்.

"ஆவியென்ற பிராணனது புருவமீது
அடங்கினால் மறுபிறவியுண்டாம் பாரு
ஆவியென் பிராணனது முக்கோணத்தில்
அடங்கினால் மறுபிறவியில்லை யில்லை
ஆவியென்ற பிராணனது மூலத்துள்ளே
அடங்கினால் வெளியொளியா யமர்ந்து நிற்கும்
ஆவியென்ற பிராணனது அறுகோணத்தில்
அடங்கினால் வெளியோட வெளியாய் போமே" - 21

காலாங்கிநாதர் உபதேச ஞானம் — 34.

இக்கருத்தை திருமூலர் ஞானான்மா ஞான பேரன்மாவில் கலந்து நிற்கும் நிலையில் தீயால் ஏற்றப்பட்ட கற்பூரம் எவ்வாறு கரைந்து காணாமல் போகிறதோ அவ்வாறு மானுட ஆன்மா பரசிவத்தில் கலந்து கரைந்து காணாது திகழும் என்பதாம் இக்கூற்று திருமூலர் திருமந்திரத்தில், 2587ஆம் மந்திரத்தில்,

"எழுகின்ற தீயிற்கற் பூரத்தை யொக்கப்
பொழி கின்ற இவ்வுடற் போமப் பரத்தே" என்று ஓதுகிறார் என்பதை அறிக.

மானுட மக்கள் பெருமுயற்சி எடுத்து உரைத்தால் இவ்வித தேகங்கள் அடைந்து இறையருள் பெற்று அவ்வருளில் கலந்து கரைந்து நிற்பது என்பது திண்ணம். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. முயற்சி திருவினையாக்கும். மானுடம் வளம் பெற இறையருள் முன் நிற்க.

திருச்சிற்றம்பலம்

40. கற்பூரத் தேகம்

விண்ணில் சூரியன் மேல் திசையின் அடி தொட்டு தொழும் மாலை சமயத்தில் அரண்மனை நிலாமுற்றத்தில் பாண்டிய மன்னன் வருகை தந்தபொழுது அம்மன்னனின் பட்டத்து அரசி தன் கருங்கூந்தலை விரித்து அதன் சிக்கலை நீக்கிக் கொண்டு இருக்கும்போது, அதிலிருந்து நறுமணம் தரும் மெல்லிய மணம் மன்னனின் மூக்கிற்கு எட்டியபோது இதமான சுகம் அனுபவித்தான். அந்த கூந்தலிருநது மன்னம் அவனுடைய உள்ளம் மகிழ்வுற்றது.

அச்சமயத்தில் மன்னனின் அறிவில் பளிச்சென்று ஓர் எண்ணம் தோன்றியது. பெண்களுக்கு இயற்கையிலே கருங்கூந்தலுக்கு நறுமணம் உண்டா? இல்லையா? என்பதை அறிய தமிழ் சங்கப் புலவர்களை அழைத்து, தனக்கு ஏற்பட்டுள்ள ஐயப்பாட்டை நீக்குமாறு தமிழ்சங்க மன்றத்தில் கேட்டுக் கொண்டாள்.

தமிழ்ச் சங்க புலவர்கள் பட்டத்து அரசியின் குணங்களும் — நற்செயலையும் தன்னறிவிற்கு எட்டியவாறு அரசியை புகழ்ந்து பாடினார்கள். அப்பாடலை பாண்டிய மன்னனிடம் வழங்கினார்கள். அதில் மனநிறைவு உண்டாகவில்லை. அதனால் உள்ளம் உலைச்சல் ஏற்பட்டது. மனம் சலிப்புண்டானது. மன்னன் ஓர் முடிவுக்கு வந்தான்.

தமிழ்ச்சங்க மண்டபத்தின் அருகே ஓர் மரக்கம்பத்தை ஊன்றச் செய்து அதில் ஆயிரம் பொற்காசு ஓர் பையில் போட்டு மூட்டையாக கட்டி தொங்கவிடுமாறு ஆணையிட்டு "மன்னின் ஐயப்பாட்டை விலக்கும் ஓர் பாடலை பாடுபவர்களுக்கு ஆயிரம் பொற்காசு வழங்கப்படும் என்று பறைசாற்றும்படி உத்தரவிட்டு மக்கள் மையத்தில் அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டான்.

மதுரை மாநகரில் குடிக்கொண்டுள்ள

Koviloor Digital Library



திருகோவிலில் உள்ள சொக்கநாதப் பெருமானுக்கும், அங்கையற்கண்ணி அம்மைக்கும் பரம்பரையாக வழிபடும் ஏழை எளியவன், அவன் பெயர் தருமி. அந்த தருமி திருமணம் செய்துக் கொள்ள விருப்பம் கொண்டான். அக்காலத்தில் வரதட்சனை என்னும் கொடிய நோய் இல்லாத பொற்காலமாகும். மணமகன் தன் சொந்த செலவில் செய்து மணமகளை வெகுமதியாக கரம் பற்ற வேண்டும் என்பது விதியாக இருந்தது.

தருமி தாம் தொண்டு செய்து வரும் சொக்கநாத பெருமானையும் அங்கயற்கண்ணி அம்மையும் வேண்டி நின்றான். அச்சமயத்தில் அங்கு சொக்கநாத பெருமான் புலவர் வடிவில் தோன்றி ஓர் பாடலை கொடுத்து, இதனை எடுத்துச்சென்று பாண்டிய மன்னனிடம் காட்டி பரிசு பெறுமாறு கொடுத்து அனுப்பினான்.

தருமி என்ற ஏழை புலவன் அப்பாடலை எடுத்துச் சென்று மன்னிடம் கொடுத்து அதனைப் படித்துக் காட்டி பரிசும் பெற்ற போது. அங்கு வருகை தந்த தலைமைப் புலவர் நக்கிரன் தடுக்கவே, அதற்குரிய விடையைக் கூறியவிட்டு பரிசு தொகை எடுத்துச் செல்லுங்கள் என்று கூறி, நிறுத்தினான்.

தருமி மீண்டும் சொக்கநாத பெருமானை வேண்ட, அவரே புலவர் வடிவில் வந்து வாதிட்டு பெண்களின் கார் கூந்தலுக்கு மணம் உண்டு என்று கூறியபோது, அதுவே ஓர் போர்களமாக மாறி தலைமைப் புலவன் நக்கீரன் நாவேறு (சாபம்) பெற்று திகைத்து நின்றபோது, தனது தெய்வமான முருகனை வேண்டினான். அவர் முன் முருகன் தோன்றி ஓர் உன்னத வழியை உணர்த்தினான். அதனை சிரமேற்கொண்டு காளத்தி என்ற தெய்வீக தலம் அடைந்த போது தனது நாறு வேறு விலகி சுகம் பெற்றான். இதிலிருந்து தெய்வீக தன்மை பெற்ற பெண்களின் கூந்தல் மற்றமல்லாது அவர்கள் தேகம் நறுமணமாக திகழும் என்பதையும் உணரலாம். அதுபோல் ஒரு தனிமனிதன் அந்த நறுமணம் தரும் கற்பூர தேகம் பெற்று என்றும் திகழலாம் என்பதே அதன் உட்கருத்தாகும். அந்த கற்பூர தேகத்தைப் பற்றி ஆய்வு செய்வோம்.

கற்பூர தேகம் பெற வேண்டி வழிகள் என்ன:

"மனிதனாய் பிறந்தாக்கால் சாகாக்கலை
வாசிக்கும் சிவமோடு வாழ்க்கை சேர்வான்"
அகத்தியர் பூரண நுட்பம் — 216

கற்பூரம் என்பது என்ன? கற்பூரத்தின் இயல்பு என்ன? கற்பூரத்தின் குணம் என்ன? கற்பூரத்தின் வண்ணம் என்ன? கற்பூரத்தின் மணம் என்ன என்பதை ஆய்வு செய்தால் விடைக்கிடைத்துவிடும்.

கற்பூரம் ஓர் தாவரத்தில் இயற்கையாக கிடைக்கும் சத்து பொருள் ஆகும். இது தூய வெண்மை நிறமானது. இது மங்களம் நல்கும் பொருளாகும். பிறரைக் கவர்ந்து ஈர்க்கும் நறுமணம் வீசும் பொருள். தெய்வீகத் தன்மை தரும் சிறந்த பொருள். பற்ற வைத்தால் புகையாமல் மேல்நோக்கி எரியும் தன்மையுடையது. அதன் சாம்பலும் மணம் தரும். ஆவின் நெய்யில் கற்பூரம் தூள் செய்து கலந்து விளக்கேற்றினால் வறுமை கலந்து விலகும். திருமகள் வாசம் செய்வாள். புன்னகைக்கும், மகிழ்ச்சிக்கும்

Koviloor Digital Library

விளங்கும் நற்பொருளாகும். இதனை நாள் தோறும் படுக்கையிலிருந்து எழுந்து பார்த்தால் நல்ல நேயமும் நட்பும் தரும். மக்கள் நேயம் கூடும். ஆன்ம நேயம் வளரும். இரக்கம் கருணை — தயவு — நற்குணங்கள் உண்டாகும். மனதில் அமைதி ஏற்படுத்தும். சைவ குணம் வளரும். சிவம் சேரும். நோய்கள் விலகும்.

மருத்துவ மருந்தாகவும் பயன்படுத்தலாம் இத்துடன் ஓமயுப்பு — புதினாயுப்பு — தேன்மெழுகு சேர்த்து திடப்பொருளான மெழுகு செய்து வலிகளுக்கு தடவினால் விலகும். இயற்கை நறுமணம் தரும் பொருள். தற்பொழுது கிடைக்கும் கற்பூரம் ஏற்றினால் புகை வருகிறது. இதில் மெழுகுப் பொருள் சேர்த்து கலப்படம் செய்வதால் புகையாக வருகிறது. அதுபோன்ற பொருள்கள் வாங்காமல் உயர்ந்த புகை வராத நல்ல மணம் தரும் கற்பூரம் ஏற்றி வழிபட நல்ல செயல்கள் நன்மைகள் உண்டாகும்.

கற்பூரத்தின் மணத்தால் வீட்டின் கேடு தரும் ஆவிகள் — பேய்கள் — பிசாசுகள் விலகி நிற்கும். தூய்மையை தரும் கற்பூரம் வெண்துணியில் கட்டி ஆவின் நெய்யில் தோய்த்து தீபம் போல் எரிய வைத்தால் எல்லா வித நற்செயல்கள் குடியேறும். தீமைகள் தரும் செயல்கள் விலகும்.

மனிதனுக்கு மேன்மை தருவதும், பெருமை தருவது, சிறப்பு தருவதும், உயர்வைத் தருவதும், நற்பண்பைத் தருவதும், தூய்மை தருவதும், நற்குணம் தருவதும், தயவு தருவது, கருணை உண்டாக்குவதும், இரக்கம் கொடுப்பதும், தெய்வீக அருளை வழங்குவதும் இந்த பொருளால் பெறலாம். கற்பூரம் காற்றினால் கரைந்து விடும் தன்மை பெற்றதால், கற்பூரம் வைத்துள்ள கண்ணாடி குடுவையில் சிலமிளகு சேர்த்து வைத்தால் கற்பூரக் கட்டி கரையாது நிற்கும். கற்பூரம் + மஞ்சள் இடித்து மூட்டை கட்டி முகர்ந்தால் மூக்கடைப்பு நீங்கி சளிகள் கரைந்து வெளியேறும். கற்பூரம் + ஓமம் + புதினா + மஞ்சள் + மிளகு + சுக்கு + திப்பிலி எல்லாம் சேர்த்து இடித்து வைத்துக் கொண்டு ஆவின் நெய்யில் குழைத்து வலியுள்ள இடங்களில் நன்றாக தடவி தேய்த்து வென்னீர் ஒத்தடம் கொடுத்தால் வலிகள் மறையும். சுகம் உண்டாகும். அதனால் தான் கற்பூரம் ஓர் சிறந்த சிறப்பான உயர்வான பொருளாக இருக்கிறது. தெய்வீகநிலை அடைந்தவர்களின் தோலுடல் மறைந்து ஆன்மா பேரான்மாவில் இணைந்து நிற்கும்போது அந்த சூட்சும காரண உடலுக்கே கற்பூர தேகம் என்று சித்தர்கள் கூறுகிறார்கள். இனி அதனைப் பற்றி சிந்திப்போம்.

காரியமாய் சொல்லுகிறேன் நாதமது தானே
கலங்காத சாம்பவி முத்திரை தானப்பா
ஊரிய தோர் விந்துட னாதமு மக்கினியுமை
ஒன்றாகக் கூடினது கேசரி தானாமே - 5

சச்சிதானந்தர் சுழிமுனை
கலைஞானம் — *16*

மனிதனின் புருவநடுவை அம்பலம் என்று கூறுகிறார்கள். அதற்கு சந்திர மண்டலம் என்பார்கள். அவ்விடத்தில் சாம்பவியும் சம்புவும் வீற்றிருப்பார்கள். அங்கு சாம்பவியுடன் எட்டு சக்திகள் உடன் இருப்பார்கள். இந்த எட்டு சக்திகள் சம்புநாதனை மறைத்து நிற்பார்கள். அந்த சாம்பவியே நாதவடிவமாக காணப்படுவாள். அவளைக் கடந்து முத்திரையான விந்து + நாதம் + அக்கினியும் ஆக மூன்றும் இணைந்து இருக்குமிடம் தான் கேசரி என்னும் அருட்சக்தியாக விளங்குவாள். இந்த அருட் சக்தியை கடந்த நிலையிலுள்ள மூலத்தில் ஞான ஆன்மாவாக மனிதன் இருப்பான். அந்த ஞான ஆன்வான் நுட்ப உடலே கற்பூர தேகம் என்று சித்தர்கள் கூறுகிறார். அதன் விளக்கம் இனி தெளிவாக கூறுவோம்.

“தானென்ற மூலத்தில் வாசி யாட்டம்
சதா சிவனார் பீடத்திற் வுக்கித் தன்னால்
ஊனென்ற சடம்போங் கற்பூர தேகம்
உன்றனக்கு வாய்த்தடா வீசன் வாழ்க்கை - 4

மௌன சித்தர் சுத்த ஞானம் — *8*

மூலம் என்பது உருத்திரக் கிரந்தி ஒன்று இது அக்கினி மூலமாகும். மகேசக் கிரந்தி ஒன்று. இது வளிமூலமாகும்.

Koviloor Digital Library

அடுத்தது சதாசிவ கிரந்தி. இது மூலமாகும். இதற்கு மும்மூலம் என்பர். போக புனல் சாகாக்கால் — வேகாத்ததலை என்பார்கள். இவைகள் மூன்றும் மும்மூலம் என்றும் முச்சுடர் என்றும் கூறுவார்கள். அக்கினி — சூரியன் — சந்திரன் இணைந்து நிற்பது மும்மூலம் என்றும் கூறுவார்கள். இதனைப் பற்றி கடைப்பிள்ளை சித்தர் எழுதிய சுத்த ஞான நூலில்,

"பாரப்பா ரவிவீடு மூலாதாரம்
பதியான மதிவீடு புருவமத்தி
நேரப்பா முச்சுடருதான் சிகாரத் தந்தம்
நிசமான முச்சுடரு மிதுதான் பாரு
பேரப்பா முச்சுடரே மும்மூலமாகும் - 21

கடைப்பிள்ளை சுத்த ஞானம் — 50

மும்மூலமே ஒன்றாக கூடி சதாசிவன் என்ற பீடத்தில் புகுந்து குடியேறினால் மனிதனின் உடல் கற்பூரம் போன்ற தேகம் வெளிப்படும். அந்த தேகம் பெற்றவர்களுக்கு ஈசனுடன் சேரு வாழ்க்கை பெறுவான் என்பதே அதன் உட்கருத்தாகும்.

அகத்தியர் அமுத கலை ஞானம் என்ற நூலில், கயிலாச தேகம் பற்றிய செய்தி வழங்குகிறார். அந்த தேகம் பெற வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும் என்பதை அவரின் பாடல் காண்க.

"குருவான பதி அறிந்து குருவைக்காரு
குருவறிந்து பூரணத்தைக் குணமாக் கொள்ளு
திருவிருந்த பூரணத்தைத் தினமும் கொண்டால்
சிவ சிவா கைலாச தேகமாகும்
மரு விருந்த ஆயிரத் தென் மலருக்குள்ளே
மகத்தான அமுதமது கசிந்து காணும்
கருவான அமுதமதைக் கொண்டால் மைந்தா
காயசித்தி யோக முடன் வாதமாமே - 15

அகத்தியர் அமுத கலை ஞானம் — *1200.*

குருவினுடன் குடிலை அறிந்து அந்த குருவின் நிலை பெற்றவர் யார் என்பதை அறிய வேண்டும். குரு நிலை என்பது பூரண நிலை ஆகும். இதற்கு குருபூரணம் என்பர். குரு பூரணத்திலிருந்து பெறப்படும் நாளும் அமுதம் உண்டால் சிவ சிவ



கைலாய தேகம் ஆகும். இந்த அமுதமானது ஆயிரத்தெண் மலரின் இதழிலிருந்து கசியும். அதனை கொண்டால் காயம் சித்தியாகும். வேதியல் முறை தேகமாற்றத்தால் கற்பூர தேகமாகத் துலங்கும் என்பதேயாகும்.

மேலும் கொங்கணர் மெய்ஞ்ஞானம் என்னும் நூலில் அறிவினால் அறிவினுடை மூலமிடம் கண்டுபிடித்து குற்றங்கள் விலக்கினால் அவனுக்கு கற்பூர தேகம் உண்டாகும் மீண்டும் பிறவியும் சாவும் தடுக்கப்பட்டு இதனால் பரம பதம் நிலைத்து நிற்கும் என்பதேயாகும். இதனை கொங்கணரின் பாடலால் அறிந்து தெளிக.

"அறிவைய யறிவினுட மூங்கண்டால்
அசடில்லை கற்பூரதேக மாச்சு
அறிவை நீ அறிந்தால் பிறவி போச்சு
அடுத்தாப் போற் பரம பதம் நிலையாச்சு

அறிவு என்பது சாகாக் கல்வி ஞானம் பெற்றும், அந்த ஞானத்தைக் கொண்டு முயற்சித்தால் குரு பூரணத்தில் சேரும் போது கற்பூர தேகமாய் மாறி நிற்கும். அதுவே தீபமாக எரிந்து கொண்டுயிருப்பதற்கு

Koviloor Digital Library

கற்பூர தீபத்தேகம் என்பார்கள்.

மேலும் நமது தாயுமானவர் கற்பூரத் தேகத்தைப் பற்றியும் கூறிய அவரின் பாடலைக் காண்க.

"சித்த நிருவி கற்பம் சேர்ந்தார் உடல் தீபம்
வைத்த கற்பூரம் போல் வயங்கும் பராபரமே - 245

தாயுமானவர் திருவருள் வாக்கு.

நிருவிகற்ப நிலை பெற்றோர் உடல் தீபம் பெற்ற கற்பூரம் போல் விளங்கும் பராபரமே என்று ஓதுகிறார்.

மேலும் சச்சிதானந்த சிவம் தம் நூலில்,

இன்னம் பிறப்பதற்கிட மென்னில் இவ்வுடல்
இறவா திருப்ப மூலத்
தெழுமங்கி யிமிர்தொழுகு மதிமண்டலத்திலுற
என்னம்மை குண்டலிபாற்
பின்னம் பிறக்காது சேயென வளர்த்திட
பேயேனை நல்க வேண்டும்
பிறவாத நெறி யெனக் குண்டென்னின் இம்மையே
பேசு கற்பூர தீபம்
மின்னும் படிக்காண டாகார வன்னைபால்
வினை யேனை யொப்பவித்து
வீட்ட நெறி கூட்டிடுதல் மிகவு நன்றிவையன்றி
விவகார முண்டென்னிலோ
தன்னைந் தனிச்சிறியன் ஆற்றிலேன் போற்றினார்
சன்மார்க்க முத்தி முதலே
சர்வ பரி பூரண அகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே - சச்சிதானந்தர் சிவம் - 9

இனி பிறவி எடுப்பதற்கு இவ்வுடல் இறவாமல் இருக்க வேண்டுமானால் உச்சி மூலத்தில் திகழும் அங்கி என்ற சுடரி மதி மண்டலத்திலிருந்து ஒழுகும் அமிர்தம் என்னம்மை குண்டலினி தாயிடம் வேண்டியதை பெற சேய்என கருதி அடியேனை வழங்க வேண்டும். பிறவா நெறி எமக்கு உண்டென்றால் இப்பிறவியிலே அதை கற்பூர தீபம் போல் ஒளிர வேண்டும். மேலும் அறிய வேண்டி அகண்டகார அதன் பால் வினையேனை ஒப்புவித்து வீடுபேறு அடையும் பொருட்டு சேர்க்க உதவுவாயானால் விவகாரம் இருப்பதாக கருதி தன்னன் தனியாநிற்கும் என்னை அமைதியுரேன் என்று போற்றி சன்மார்க்க முத்தி பெற முதன்மையாக விளங்கும் சர்வ பரிபூரண அகண்ட தத்துவமான சச்சிதானந்தர் சிவமாக விளங்குவது சுத்த சிவமேயாகும்.

மேலும் திருமூலர் திருமந்திரத்தில், கூறும் பாடலில்,

"அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக் காணில்
எழுகின்ற தீயிற் கற்பூரத்தை யொக்க
பொழிகின்ற இவ்வுடற் போமப் பரத்தே - 2787
திருமூலர் திருமந்திரம் — 3000

பன்னிரண்டு காலபயிற்சியில் தன் வடிவத்தை தானே பார்ப்பதால் நம் வடிவிலிருந்து சாயாவடிவம் தோன்றும். அது நீர் குமிழியைப் போல் காணும். தீயினால் பற்ற வைத்த கற்பூரத்தை ஒக்க இந்த உடல் கரைந்து பரத்தே செல்லும் என்பதாம்.

கற்பூர தேகத்திற்கு ஞானதேகம் என்பர். வான் வடிவதேகம் என்பார். கைலாச தேகம் என்றும் கூறுவர். அருள்தேகமென்று கூறுவர். இவைகள் அனைத்தும் பெற வேண்டுமானால் சாகாதக்கல்வி கற்றால் மட்டும் அதனை அடைய முடியும்.

1. சாகாத கல்வியே கல்வி உண்மைச் செய்தியாம்


2. ஒன்றே சிவம் என அறியும் அறிவே அறிவு சத்தியம்

3. மலம் ஐந்தும் வென்றால் வல்லபமே வல்லபம் சிறப்புடையது.

4. வேகாக்கால் — சாகாத் தலை — போகா புனல் என்னும் இம்மூன்றையும் கண்டு கொண்டு எப்பொருளும் விளைய விளைவிக்கும் தொழிலே மெய்த்தொழில் என்பதை உணர்ந்து கற்றால் ஒளிதேகம் பெற்று உய்யலாம் என்ற நல்ல செய்தியை நிறைவு செய்யப்படுகிறது.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library



Koviloor Digital Library

41. கற்பூர மணம் வீசும் தேகம்

"சாகாத கல்வியைத் தாங்கற்க வேணும்
வேகாத சிந்தை படைத்திட வேணும்
கோகாமி யத்தைக் குறைத்திட வேணும்
ஆகாத மட்டைக் கறிவதுண் டாமே" - திருமூலர் குரு மூப்பு — 200

நமது தேகம் மாயையால் தரப்பட்டது. மாயை என்பது இருள். ஒளி என்பது உயிர். இந்த உயிரான ஒளி கருமையான இருளால் மறைக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த தேகம் இருந்தால் தான் உயிரின் தன்மை அறிய முடியும். இந்த உயிரினால் தான் இருளான தேகத்தை ஒளிதேகம் பெறமுடியும். தேகம் இல்லையானால் இறையருளை அறியமுடியாது. எனவே திருமூலர்,

"இருளது சக்தி ஒளியது எம் மண்ணல்" - என்று ஓதுகிறார். தரவி, தட்சணாமூர்த்தி என்பவர்

"தேவியுட குற்றத்தால் பிறந்த தேகஞ்
சீவனை யறிவ தெல்லாஞ் சக்தி தானே" - என்று உணர்த்துகிறார்.

அகத்தியர் தமது சௌமிய சாகரம் என்னும் நூலில்,

"பதிவான சிவமது தான் உயிருமாச்சி
நேர்மையுள்ள சக்தியது உடல் தானப்பா" - 649

என்று ஓதுகிறார். மேலும் அவரே இந்த உடலைப் பற்றி பூரணம் என்னும் நூலில்,

"கதித்தவுடல் சக்தியது பாசமாகும்
மானென்ற பசுதானு முயிரான சிவமாம்" - 42

என்று ஓதுகிறார். இந்த தேகம் அழுக்குள்ளது. அதனை சுத்தம் செய்ய வேண்டும். அதற்கு சட்டைமுனி சித்தர் தேகத்திலுள்ள அறுசுவையை நீக்கவேண்டுமென்று கூறுகிறார். அவரின் கூற்று காண்க.

"காச்சென்ற தேகமது சுத்தி செய்யக்
கழற்றி விடு அறு சுவையுஞ் சுந்தரன் போல்" - என்று ஓதுகிறார். அப்படி சுத்தி செய்யப்பட்ட தேகம் அழிவு வராது. அதனால் சுகாதீத பெறுவது மிகவும் அதிசயமாகும் என்பதை சித்தர் புலஸ்தியர் தமது கற்ப நூலில்,

"சுத்தியாந் தேகம் அழிவது மில்லையே
சுகாதீத வெகுமதி சயமாம்" - 7 என்று ஓதுகிறார். மேலும் சுந்தரானந்தர் குருநூல் என்னும் நூலில் இந்த தேகம் சித்தி பெற்றதாக இருக்க வேண்டும். இந்த உலகத்தில் ஒன்றுமில்லையென எண்ணம் வர வேண்டும் கூறும் செய்தி காண்க.

"சித்தி பெற்ற உடலமப்பா யிருக்க வேணும்
செக மொன்று மில்லை யென யெண்ண வேணும்" - என்று கூறுவாரானார். இந்த தேகத்தை சித்தர்கள் ஐந்து விதமாக பிரித்து கூறுகிறார்கள்.

ஒன்று இருள் தேகம். இரண்டு மருள் தேகம். மூன்று சுத்த தேகம். நான்கு மந்திர தேகம். ஐந்து ஞானதேகம் என்பர். இந்த ஐவித தேகங்கள் முதல் தேகத்தில் தொண்ணுத்தாறு சட்டைகள் இருப்பதாகவும், இரண்டாவது மருள்தேகத்தில் மாயையின் தொடர்பால் தனக்கு வருவது தெரியாமல் அகங்காரம் கொள்வதாகும். மூன்றாவது தேகமாக சுத்த தேகத்தில் கருவி கரணாதிக்ளிறந்து அறிவு அருள் வடிவாய்ப் பார்வைக்குத் தேகம் தோற்றுவது. நான்காவது தேகமான மந்திர தேகம் பார்வையது தெரிந்தும் கைப்பிடிக்கு புலப்படாததும், நிழல் சாயை இல்லாததுமாகும். ஐந்தாவது தேகம் கண்ணுக்கு தோற்றாமல் அறிவிற்கு மட்டும் புலப்படுவதுமாகும். மேற்கண்ட ஐந்து தேகத்தில் இறுதியாகக் கூறப்படும் தேகமே கற்பூரதேகமாகவும், கற்பூர மணம் வீசக்கூடிய தேகமாகவும், கற்பூர தீப தேகமாகவும் திகழ்கின்றது. இதனை பெறும் முறை சற்று சுருக்கமாக எழுதுவோம்.

நமது தேகத்தில் தொண்ணூற்றாறு தத்துவங்கள் உண்டு. அதற்கு சட்டைகள் என்றும் கூறுவர். இனி அதன் விபரம் அறியலாம்.

Koviloor Digital Library

அண்டமாகிய உலகமும் பிண்டமாகிய உடம்பும் தத்துவங்களால் ஆனவை. மொத்த தத்துவங்களின் தொகை தொண்ணூற்றாகும். இவை தத்துவம் (மெய்கள்) முப்பத்தாறும், தாத்துவிகம் அறுபதும் (மெய்களின் விரிவு) கூறுவர். மெய்யெனில் தத்துவம் என்றும், தத்துவம் எனில் சட்டைகள் என்றும், கருவி என்றும் கூறப்படும்.

1. உணர்த்து மெய்கள் அல்லது சிவதத்துவம் – 5

அ. அத்தன் = சிவம் (நாதம்)
ஆ. அன்னை = சத்தி (விந்து)
இ. அருளோன் = சதாக்கியம்
ஈ. ஆண்டான் = ஈசுரம்
உ. ஆசான் = சுத்த வித்தை என்றும்

2. உணர்வு மெய்கள் அல்லது வித்தியாதத்துவம் – 7

அ. காலம் = காலம்
ஆ. நியதி = ஊழ்
இ. கலை = உழைப்பு
ஈ. வித்தை = உணர்வு
உ. அராகம் = விழைவு
ஊ. புருடன் = ஆள்
எ. மாயை = மருள் என்றும்,

3. உடல் மெய்கள் அல்லது ஆன்மதத்துவம் – 24

1. மனாதி என்கிற உட்கலன் (அ) அந்த கரணம் – 4
அ. மனம் = மனம் (உயிர்)
ஆ. இறுப்பு = புத்தி
இ. எண்ணம் = சித்தம்
ஈ. எழுச்சி = அகங்காரம்

2. தன்மாத்திரைகள் (அ) புலன்கள்
அ. ஓசை = சப்தம் — ஒலி
ஆ. ஊறு = பரிசம் — உணர்வு
இ. ஒளி = ரூபம் — வடிவம்
ஈ. சுவை = ரசம் — உருசி
உ. நாற்றம் = கந்தம் — மணம்.

4. செய்தற் கருவிகள் (அ) கன்மேந்திரியங்கள் = 5
அ. வாய் — வாக்கு
ஆ. கால் — பாதம்
இ. கை — பாணி
ஈ. கருவாய் — உபத்தம் (குறி)
உ. அபானம் — பாயுரு — எருவாய்

5. அறிதற் கருவிகள் (அ) ஞானேந்திரியங்கள் – 5
அ. செவி = சுரோத்திரம் — காது
ஆ. கண் = சட்சு — நோக்கு
இ. மெய் = துவக்கு — உடல்
ஈ. நாக்கு = சிங்குனை — நா
உ. மூக்கு = ஆக்கிராணம் — நுகர்ச்சி

6. பூதங்கள் (அ) பருப்பொருள்கள் – 5
அ. மண் = பிருதிவி — நிலம்
ஆ. நீர் = அப்பு — தண்ணீர்
இ. தீ = தேய்வு — நெருப்பு
ஈ. வளி = வாயு — காற்று
உ. வான் = ஆகாயம் — வெளி

ஆக மொத்த தத்துவங்கள் — *36*

2. தாத்துவிகம் (அ) விரிநிலை மெய்கள் = 60.

1. நிலம் அதன் பணிகள்:
அ. மயிர்
ஆ. தோல்
இ. எலும்பு
ஈ. நரம்பு
உ. தசை

2. நீர் அதன் பணிகள்:
அ. நீர் = தண்ணீர்
ஆ. குருதி = உதிரம்
இ. மூளை = மூளை
ஈ. கொழுப்பு = மச்சை
உ. வெண்ணீர் = சுக்கிலம்

3. தீ அதன் பணிகள்:
அ. ஊண் = ஆகாரம்
ஆ. உறக்கம் = நித்திரை
இ. உட்கு = பயம்
ஈ. உடனுறைவு = மைதுனம்
உ. மடி = சோம்பல்

4. வளி அதன் பணிகள்:
அ. ஓடல் = ஓடல்
ஆ. இருத்தல் = இருத்தல்
இ. நடத்தல் = நடத்தல்
ஈ. கிடத்தல் = கிடத்தல்
உ. தத்தல் = நிற்றல்

5. வெளி அதன் பணிகள்:
அ. வெகுளி = லோபம்

Koviloor Digital Library

ஆ. இறவான்மை = மாச்சரியம்
இ. மயக்கம = மோகம்
ஈ. செருக்கு = மதம்
உ. பொறாமை = குரோதம்

6. செய்தற் கருவி அதன் பணிகள்: 5
அ. பேசல் = வாய்
ஆ. நடத்தல் = கால்
இ. உழைத்தல் = கை
ஈ. கழித்தல் = எருவாய்
உ. மகப்பெறுதல் = கருவாய்

7. அறிவ வளி அதன் பணிகள்:
அ. உயிர்க்காற்று = பிராணன்
அ. மலக்காற்று = அபானன்
இ. தொழிற் காற்று= வியானன்
ஈ ஒலிக்காற்று = உதானன்
உ. கிரவுக் காற்று = சமானன்

8. தொழில்வளி அதன் பணிகள்:
அ. தும்மற் காற்று = நாகன்
ஆ. விழிக் காற்று = கூர்மன்
இ. கொட்டாவிக் காற்று= கிருகரன்
ஈ. இமைக்காற்று = தேவதத்தன்.
உ. வீங்கற் காற்று = தனஞ்செயன்

9. நாடிகள் அதன் பணிகள்:
அ. இடபால் நரம்பு = இடைகலை
ஆ. வலபால் நரம்பு = பிங்கலை
இ. நடு நரம்பு = சுழினை
ஈ. இடக்கண் நரம்பு = காந்தாரி
உ. வலக்கண் நரம்பு = புருடன்
ஊ. வலச் செவி நரம்பு = அத்தி
எ. இடச்செவி நரம்பு = அலம்படை
ஏ. உன்நாக்கு நரம்பு = சிருவை
ஒ. கருவாய் நரம்பு = சங்கனி
ஓ. எருவாய் நரம்பு = குரு

10. ஓசை அதன் பணிகள்:
அ. நுண்ணோசை = சூக்குமை
ஆ. நினைவோசை = பைசந்தி
இ. மிடற்றோசை = வைகரி
ஈ. செவியோசை = மத்திமை

11. முப்பற்று அதன் பணிகள்:
அ. தார ஏடனை = பொருட் பற்று
ஆ. புத்திர ஏடனை = புதல்வர் பற்று
இ. அர்த்த ஏடனை = பொய்யுலக பற்று

12. முக்குணம் அதன் பணிகள்:
அ. அமைதி = சத்துவம்
ஆ. ஆட்சி = ராஜசம்
இ. அழுந்தல் = தாமசம்

ஆக தத்துவம் முப்பத்தாறு மற்றும் தாத்துவிகம் அறுபதும் மொத்தம் தத்துவங்கள் தொண்ணுத்தாறாகும்.

தத்துவங்களின் தோற்றம் ஒடுக்கம் — தொழில் முதலியவைகள் ஆராய்ந்து அறிவது தத்துவ விசாரணை, ஆராய்ந்து அறிந்து தன் வயப்படுத்தலுக்கு தத்துவ வெற்றி என்றும் அல்லது நிக்கிரகம் என்பர். எல்லா தத்துவங்களை வென்றால் அல்லது கழற்றி விட்டெறிந்து விட்டால் மரணமில்லா பெருவாழ்வு பெறலாம். தத்துவங்களுக்கு சட்டைகள் என்ற பெயரும் உண்டு. இதனை சட்டை முனி சித்தர்,

"சொல்லுவீர் நாதாந்தப் பொருளே நாதா
சொரூப சித்தி முத்தி பெற்ற கருணை மூர்த்தி
வல்லபமாய்த் தொண்ணூ றோடாறு சட்டை
வாங்கியதைக் கழற்றி விட்ட முனியே யென்னை
- 11

கைலாய சட்டைமுனி சித்தர்
ஞானவிளக்கம் — 32

"செழுங் கமல பதவியடா அவனைக் காணச்
செகத்தியொரு சித்தனவன் கோடிக் கொன்றே - 5

மரணமில்லா பெரு வாழ்விடின் பதவி பெற இந்த உலகிடையில் சித்தனாகத் திகழ கோடியில் ஒருவனாகத்தான் வர இயலும் என்பதாம்.

மேற்கண்ட 96 தத்துவ சட்டைகள் நீக்கிக் கொண்டு வெளிப்படுதலுக்கு செத்தவர் மீண்டும் எழுவார் என்று ஓதிச் சென்றவர் நமது வடலூர் வள்ளற்பெருமானாவார். இருள் தேகத்தினரம் மருள் தேகத்தினரும் அவர்களின் அவர்கள் சட்டைகள் ஒவ்வொன்றாக கழற்ற வேண்டும். அப்படி கழற்றி மீண்டு வந்தால் சுத்த தேகம் பெறுவார்கள். அடுத்து பிரணவ தேகம்

Koviloor Digital Library

பெற்று அதிலிருந்து மீண்டு எழுந்தால் ஞான தேகம் பெறுவார்கள். இந்த ஞான தேகத்திலிருந்து சித்தர்கள், கற்பூர தேகம் என்றும், கற்பூர மணம் வீசும் தேகம் என்றும், கற்பூர தீப தேகம் என்றும் ஓதுகிறார்கள்.

கடைப்பிள்ளை சித்தர் ஞான கக்கிசம் என்னும் நூலில் சுத்த தேகத்தின் நிலையை உணர்த்தும் பாடல் படித்து உணர்ந்து அறிக.

"ஓமப்பா மாயைதனை நீக்கி மைந்தா
ஒளிவான சூரியனை நம் பினாக்கால்
போமப்பா சகல வினை யொழிந்து நல்ல
பொற் கமலம் பேலவுமே தேகமாகும் - 46 என்று

மேற்கண்ட சித்தர் பெருமான் ஓதகிறார்.

நமது தேகத்ல் ஒளித்தரக்கூடிய சூரியனான பிங்கலை நாடியை நம்பினால் சகலவினைகளும் யொழிந்து விடும். அதனால் உயிர் மேன்மைப் பெற்று பொற்கமல வண்ணம் பெற்ற தேகமாக திகழும் என்று ஓதுகிறார். இதற்கு சுத்த தேகம் என்றும் கூறப்படும்.

அடுத்து அதே சித்தர் பெருமான் பிரணவ தேகத்தின் நிலையை உணர்த்தும் முறையைக் காண்க. சுத்த தேகத்திலிருந்து மீண்டு தேறி பெறுவதுதான் பிரணவதேகமாகும். இதற்கு ஓசை தேகம் என்றும் ஒலி தேகம் என்றும், ஓங்கார தேகம் என்றும் சித்தர்கள் கூறுகிறார்கள். அவரின் பாடல் காண்க.

"திரமான தேகமடா நாத ரூபம்
திருவாசி பூரணமாய் நின்ற ரூபம்
பரமான ரூபமதை யார்தான் காண்பார்
பாலகனே கோடியிலே யொருவன் றானாம் - 77

கடைப்பிள்ளை ஞானகக்கிசம் — 80

திருவாசி என்றால் பிரணவம் என்றும், ஓங்காரம் என்றும், மந்திரம் என்றும், நாதம் என்றும் கூறுவார்கள். இந்த தேகநிலை நாதவடிவமாக ஒளிர்ந்து திகழும். இந்த தேகம் அடைபவர் கோடியிலே ஒருவனால்தான் இயலும் என்று ஓதுகிறார்.

மேலும் அதே சித்தர் பெருமான் பிரணவத்தேகத்திலிருந்து மீண்டும் ஞான தேகம் பெற வேண்டும். அதற்கு ஒளி தேகம் என்றும், அறிவு மயமான தேகம் என்றும், அறிவு நிறையுடையத் தேகம் என்றும் கூறுவார்கள். அவர் கூறும் பாடல் காண்க.

"வேளப்பா நிற்குணமே துவாத சாந்தம்
மெய்யான நிற்குணமே மூல சூட்சம்
ஆளப்பா நிற்குணமே ஒளிதான் தேகம்
அப்பனே கத்தி நடு ஆடும் பாரே" - 80

கடைப்பிள்ளை கலை ஞானம் — 120.

மேலும் காகபுசண்டர் என்னும் சித்தர் பெருங்காவிய நூலில் ஞான தேகத்தில் அமிர்தம் சுறந்துவரும் அதனால் உடல் தோற்ற ஞானவொளி சோதியாக திகழும் என்றும் கூறுகிறார். அவரின் கூற்று இதில் கண்டுணர்ந்து தெளிக.

"சுறந்துபோம் ஞானாமிர்தம் உடலந் தன்னில்
தோன்றிடுமே ஞானவொளி சோதி தானே - 54

காகபுசண்டர் பெருநூல் காவியம் — 1000

இன்னும் நமது அகத்திய பெருமான் தமது பூரண காவியம் என்னும் நூலில் முவ்வித தேகத்தின் நிலையை உணர்த்தம் பாடல் காண்க. படித்துணர்க.

"தானான பதவியது தானே தானாய்
சாயுச்சியமான பூரணமுந் தானாச்சு
கோனான குருபதந் தானே தானாய்
குருவாகி நின்ற தொரு மாய்கை தானாய்
வானான அண்டபத வடிவங் தானாம்
மந்திரமாய் நின்றதொரு மாய்கை தானாய்
மந்திரமாய் நின்ற தொரு மாய்கைதானாய்
தேனான அமுர்தர பாணந் தானாய்
தெளிந்ததுவுந் கழந்த துவுந்தான் றானாச்சே

அகத்தியர் பூரண காவியம் — 1000.

நமது தேகத்தில் புருவ நடு என்கிற இடத்திற்கு குருபீடம் என்று ஓதப்படும். அந்த குரு பீடமடைந்த ஆன்மாவின் நிலையில் அமர்ந்த ஊறும். அந்த அமிர்தம் உண்ண உண்ண நமது தேகம் சுத்ததேகமாகவும், பிரணவ தேகமாயும், ஞானதேகமாயும் மாறி நிற்கும். இந்த தேகம் பெற அமிர்தம் ஐந்து விதம் உண்டு என்று சித்தர்கள் ஓதியுள்ளனர்.

Koviloor Digital Library

எனவே ஞான தேகமே கற்பூர தேகமாயும், அதிலிருந்து நறுமணம் வீசுவதாகவும், அந்த மணத்தினால் அந்த தேகம் தீபமாக திகழ்வதாகவும் சித்தர்கள் ஓதுகிறார்கள் என்பதை கீழ்வரும் சித்தர்களின் அகச்சான்றால் தெளிக. கீழ்வரும் சித்தர் பாடல்கள் ஊன்றி உணர்க.

கொங்கணர் மெய்ஞ்ஞானம் என்னும் நூலில்,

"அறிவையா யறிவினுட மூலங் கண்டால்
அசடில்லை கற்பூற தேக மாச்சு
அறிவை நீ அறிந்தால் பிறவி போச்சு
அடுத்தாப் போற் பரம பதம் நிலையுமாச்சு - 7

மேலும் மௌன சித்தர் ஞானம் என்னும் சிறுநூலில்,

"தானென்ற மூலத்தில் வாசி யாட்டம்
சதா சிவனார் பூடத்திற் புக்கித்தானால்
ஊனென்ற சடம் போங் கற்பூர தேகம்
உன்றனக்கு வாய்த்தடா வீசன் வாழ்க்கை - 4

என்று தெரிவிக்கப்படுகிறது. அகத்தியர் தமது கலை ஞானம் என்னும் நூலில் வாசியானது வலிமைப் பெற்று நிலைத்து நிற்கும். மேல் மூலம் என்னும் உச்சிபீடத்தில் காலவரையின்றி கலந்து உறுதியாக நிற்கும். அதனால் அந்த தேகத்தை குட்டினால் அந்த தேகம் குழைந்து காணப்படும். அந்த தேகம் ஞானகுரு நிலையைப் பெற்று கற்பூரண நறுமணம் வீசும். அந்த தேகத்தை வெட்டிப் பார்த்தால் அசையாது அல்லது சிதையாது ஒரு தன்மையுடன் வலிமைப் பெற்று உறுதியாக நிற்கும். அனைத்து பகையெல்லாம் ஒழிந்து மெய்யுடலாய் நிலைத்து நிற்கும். அவமிருந்துக்கள் எல்லாம் ஒழிந்து விடும். இது தயா வடிவமான பூரணத்தின் அருள் தன்மையாகும் என்பதை

"கட்டிப்போம் வாசியது கடக்காதப்பா
காலவரை மூல மதில் கலந்து ஆடும்
குட்டிப் பார் தேகமது குழைந்து காணும்
குருவான தேகமது கற்பூரம் வீசும்
வெட்டிப் பார் தேகமது அசையாதையா
வெகுகோடி பகைக்குமொரு மெய்யாய் நிற்கும்
தட்டாத அவமிருந்து தட்டி போகும்
தயவான பூரணத்தின் தன்மைதானே - 770

அகத்தியர் அமுத கலை ஞானம் — 1200.

இறுதியாக நமது வள்ளற் பெருமான் பெற்ற கற்பூர தேகம் அதிலிருந்து கற்பூர நறுமணம் வீசும் தன்மையும் பெற்று அதனால் அவரின் ஆன்மா பேரான்மாவில் கலந்து இயற்கை மணம் இறைவனே அவராகவும் அவரே இறைவனாகவும் ஆனதையும் அருளின் திருவடியில் இணைந்ததாகவும் கூறும் பெருமை பெற்ற அருட்பாவால் உணர்க.

"கற்பூரம் மணக் கின்ற தென்னுடம்பு முழுதும்
கணவர் திருமேனியில் கலந்த மணம் அதுதான்
இற்பூத மணம் போலே மறைவதன்று கண்டாய்
இயற்கை மணம் துரிய நிறை இறை வழிந்துளதே
பொற்பூவும் நறுமணமும் கண்டறியார் உலகர்
புண்ணியனார் திருவடியில் நண்ணயவாறதுவே
நற்பூதி அணிந்த திரு வடிவ முற்றும் தோழி
நான் கண்டேன் நான் புணர்ந்தேன் நான் அது
- (ஆனேனே - 2454)

வள்ளர் பெருமான் அருட்பா

மேற்கண்ட ஆய்வில் தெரிய வருவது என்னவென்றால் சாகாத கல்வியினால் தனிமனிதன் தன் அறிவைக் கொண்டு அதனை அறிந்து தனது சொந்த முயற்சியால் தான் பெற முடியும். பிறர்கள் கூறுவதாலும், அல்லது பிறரால் கற்றுத் தர முடியாததுமாக திகழ்வதுதான் சாகாக்கலை என்னும் சாகாத கல்வியாகும். அந்த சாகாத கல்வியைத் தானாகவே கற்றுத் தன்னறிவை பயன்படுத்தி அதனை அறிந்து உணர்ந்து தெளிந்து கடினமாக உழைத்தால் மேற்கூறிய தெய்வீக மணம் வீசும் இயற்கையான கற்பூர மணம் வீசும் உடல் பெற்று மரணமற்ற பெருவாழ்வு பெற்று இந்த ஊனான உடல் பொய்யாகாமல் மெய்யுடலாக திகழ்ந்து இயற்கை கற்பூர மணம் பெற்று எக்காலத்தும் திகழலாம் என்ற வளமான இனிய செய்தியானது நிறைவடைகிறது.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

42. யாருக்கு மறுபிறவி இல்லை

உலகியலில் உழலும் மக்கள் அனைவரும் மாள்கிறார்கள். அவர்கள் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து வளர்ந்து வாழ்ந்து வீணாக மீண்டும் மாண்டு விடுகிறார்கள். அப்படி இருக்க பல கோடிகளில் ஒருவர் மட்டும் மறுபிறவி எடுத்து உலகில் வந்து பிறவி எடுப்பதில்லை. இது எவ்வாறு சாத்தியமாகிறது. இதனை அகத்தியர்,

மனிதனாய பிறந்தாக்கால், சாகாக்கல்வி,
வாசிக்கும் சிவமோடு வாழ்க்கை சேர்வான்
செனித்தாஞ் சண்டாளப் பிற விலோர்கள்
செகத்திறந்து செனிப்பார்கள் செகத்திற்றானே - 56
அகத்தியர் பூரண சூத்திரம் — 216

மேலும் திருமூலர் தம் திருமந்திரத்தில்,
"இக்காயம் நீக்கி யினியொரு காயத்திற்
புக்குப் பிறவாமற் போம்வழி நாடுமின் - 2068
திருமூலர் திருமந்திரம் — 3000.

இப்பொழுதுள்ள தேகத்தில் வாழும் உயிர் நீங்காமல், இந்த தேகத்தை இறக்கச் செய்து மீண்டுமொருப் பிறவி எடுக்கும் வழியைத் தவிர்க்கும் புதிய வழியைத் தேடு என்று ஓதுகிறார்.

மேலும் கடைப்பிள்ளை ஞான கக்கிசம் என்னும் நூலில் தனது தேகத்தை ஞான வடிவம் முதல் பொன்வடிவம் தொடங்கி தேகத்தின் நிலைப்பாடு கூறுவதைக் காண்க.

திரமான தேகமடா நாத ரூபம்
திருவாசி பூரணமாய் நின்ற ரூபம்
பரமான ரூபமதை யார்தான் காண்பார்
பாலகன் கோடியிலே யொருவன் தானாம்
சரமான சரமறிந்து சரத்தில் நின்று
சந்திரனைச் சூரியனிற் சாரப்பன்னி
உரமான நடுமனையில் நின்று பார்த்தால்
உண்மை யென்ற வெளி பரம ரூபமாச்சே - 77

கடைப்பிள்ளை ஞான கக்கிசம் - 80

உறுதியான தேகமானது நாதவடிவமாக நிற்கும். அந்த வடிவம் ஓங்கார மந்திர வடிவமாகும். அதுவே பூரண நிலையுமாகும். பரமென்ற மேலைநிலையின் வடிவம் யார் காண்பார்கள். அந்த நிலை பெற வேண்டுமென்றால் கோடியில் ஒருவனாக இருக்கும். இந்த வடிவத்திற்கு துணையாக நிற்பது சரம் என்ற வாசிநிலையாகும். சரம் என்ற மூச்சு நிலையான சந்திரன் என்று கூறப்படும் இடைகலையான மூச்சானது சூரியகலை என்ற வலது மூச்சுடன் சேரச் செய்ய வேண்டும். அதனை திடமனத்துடன் நடுமனை என்று கூறப்படும் நடுநாடியான சுழினையுடன் இணைத்தும் பார்த்தால் உண்மையான பரமவடிவமான ஞானதேகம் பெற்று பரவடிவத்துடன் பராபத்தில் சேரலாம் என்பதாம்.

கடைப்பிள்ளை சித்தர் அவர்கள் கோடியில் ஒருவர் என்று கூறுகிறார். ஆனால் செயமுனி என்பவர் பல கோடிகள் ஒருவன் மேல் கூறப்பட்டுள்ள நிலைப் பெற முடியும் என்று கூறுகிறார். மேற்கண்ட சித்தரின் காலம் வேறு. செயமுனியின் காலம் வேறு. கால் இடைவெளியின் மாறுபாட்டால் மற்றும் மக்கள் பெருக்கத்தாலும் இவ்வேறுபாடு காணப்படுகிறது. அவர் கூறும் பாடல் காண்க.

"சேதியல்ல பலகோடிக் கொரு வனுண்டு
தெளிந்து மனம் விரியாமல் நிலை நிறுத்தி
போதியா திருந்து சுழிமுனையின் சூட்சம்
பேறறிவாற் கண்டறிந்தாற் சித்தி தானே - 1
செயமுனி திருமந்திரம் — 37

மறுபிறவி யற்றத் தன்மை:

மச்ச முனிசித்தர் சூட்சும ஞானம் என்னும் நூலில் கேசரி என்ற இடத்தைக் கண்டு வாழ்வார்கள். அதில் வாழ்பவர்கள் பிறவி இல்லை. இறப்பும் இல்லை. மாறும் தேக நிலை இல்லை. அந்த தேகம் சித்தி பெற்று திகழும் என்பதை,

எண்ணி யெண்ணி யகண்டத்துக் கேசரி

Koviloor Digital Library

எட்டிக் கொண்டு அதுக்குள்ளே வாழ்வார்
மண்ணில் வந்து பிறப்பா ரிறப்பு மில்லை
மருவுங் காயம் மகத்தியான சித்தியாம் - 8
மச்சமுனி சித்தர் சூட்சும் ஞானம் — 70

கொங்கணர் என்னும் சித்தர் பெருமான் மெய்ஞ்ஞானம் என்னும் சிறுநூலில் அறிவின் தன்மை அறிந்து அதனுடைய மூலக்கருவை அறிந்தால் அசடு என்ற களங்கங்கள் தொலைந்து இந்த தேகம் கற்பூர வடிவமாகும். அறிவான அதன்தன்மை அறிந்து நின்றால் பிறவி இல்லை. அதனால் அடுத்து வருவது பரமபதம் என்னும் திருவடிபேறாகும். அதனை கீழ்வரும் பாடலால் அறிக.

அறிவையா யறிவினுட மூலங்கண்டால்
அசடில்லை கற்பூர தேகமாச்சு
அறிவை நீ யறிந்தால் பிறவி போச்சு
அடுத்தாப் போற் பரம பதம் நிலையுமாச்சு
கொங்கணர் மெய்ஞ்ஞானம் — 13.

காலாங்ணி நாதர் என்னும் சித்தர் தமது நூலில் ஆவியான பிராணன் புருவநடுவில் அடங்கி நிற்கும்போது உயிர் இழந்தால் மீணடும் பிறப்பு உண்டாகும். தவிர, ஆவியான பிராணன் புருவ மத்தியின் மேல் நிலை என்று கூறப்படும் முக்கோணமென்னுமிடத்தில் ஒடுங்கி நின்றால் மறுபிறவி இல்லை என்பதை அவரின் பாடல் மூலம் அறிக.

“ஆவியென்ற பிராணனது புருவ மீது
அடங்கினால் மறுபிறவி யுண்டாம்
ஆவியென்ற பிராணனது முக்கோணத்தில்
அடங்கினால் மறுபிறவி யில்லை யில்லை
காலாங்கிநாதர் ஞானம் — 80.

சச்சிதானந்தர் சுழிமுனை சூத்திரம் என்னும் நூலில் சிவயோகத்தின் முதிர்வால் மிகுந்த தவம் செய்து யோக நிலை பெற்று பூரணம் என்ற திருவிடத்தை தரிசனம் காண்பவர்களுக்கு முத்தி முத்தி பெற்று இறவாமல் இருப்பார்கள் என்பதை,

“தருவான சிவயோகந் தன்னைப் பார்த்துத்
தவத்திலே மிகுந்த மகத்துடை யோராகித்
திருவான பூரணத்தைத் தெரிசித்தேதான்
சித்தி முத்தி பெற் றிவா திருக்கின்றாரே - 21
சச்சிதானந்தார் சுழிமுனை சூத்திரம் — 31

வாசல் என்று கூறப்படும் வெளியைக் கண்டவர்களுக்கு எமனின் வார்த்தையை கனவிலும் வருவதில்லை என்று ஓதும் மந்திரப் பாடல் காண்க.

“மேலைவாசல் வெளியுறக் கண்டபின்
காலன் வார்த்தை கனாவிலும் இல்லையே” - 602
திருமூலர் திருமந்திரம் — 3000

அகத்தியர் ஞான சைதன்யம் என்னும் நூலில் உண்மையான ஆழ்நிலை மௌனத்தில் இருக்கும்போது நெடுதுயர்ந்த மலையிலிட்ட தீபம், அசையாமல் இருக்கும் தீப விளக்கை கண்டவர்கள் திகைப்பு உண்டு செய்யும். இது ஓர் ஆச்சரியமாகும். இதனால் அழியும் இந்த உடல் என்றும் உறுதியாக நிலைத்து நிற்கும். அதனால் ஒன்றும் தப்பில்லை. அதுபோன்ற விளக்கை கண்டவர்கள் அதில் வாழ்வார்கள். துரிய நடுநிலையில் உறுதியாக நிலைத்து நிற்பவர்களுக்கு எமன் என்னும் கூற்றுவனை வெல்லும் ஆற்றல் ஏற்பட்டது என்பதை அவரின் பாடல் மூலம் அறியலாம்.

நிசமான தியானத்தி லிருக்கும்போது
நெடு உயர மலையிலிட்ட தீபம் போலாம்
அசமான மலையிலிட்ட விளக்கைக் கண்டால்
ஆச்சரிய மாச்சரிய மதுவே போதும்
பிசகான சடம் நிலைத்துப் போச்சுதப்பா
பிசகில்லை விளக்க தனைக் கண்டபோது
வாசமாச்சு துரிய நடுநிலை நிலைத்துப் போச்சு
வம்பான யெமனையும் வெல்லாச்சு - 25
அகத்தியர் ஞான சைதன்யம் — 50

மேலும் சுந்தரானந்தர் சிவயோக ஞானம் என்னும் சிறுநூலில், மவுன என்ற வாய்பேசா ஊமை நிலைக் கொண்டால் மாசில்லா வாசியானது அழுத்தத்தினால் சுழினையில் சென்று உயர்ந்து நிற்கும். அதில் கெவுன வழி ஓடினால் குளிகைக் கட்டம். கேசரி என்னும் நிலையில் மங்கா வொளி வீசும். துக்கமில்லை. பசியில்லை.

Koviloor Digital Library

மரணம் இல்லை. இந்த தேக சட்டைக்கு அருணன் உலகில் தேக மாற்றம் உண்டாகி தேக சாயல் என்னும் நிழல் விழாது. அதுவே பூரணமாகும் என்று,

''மவுனமுன்ன மவுனமுன்ன மவுனமாகும்
மாசற்ற மவுன முன்னை வாசித் தூக்கும்
கெவுன வழி யோடுதற்குக் குளிகைக் கட்டும்
கேசரமெல்லா மடங்கா வொளிதான் வீசும்
தவன மில்லை பசியில்லை சாவுமில்லை
சட்டைக்குத் தேகமது அருணன் போலாகும்
புவன மதில் மாற்றமுந்தான் தேகச் சாயை
பொய்யடா பூரணத்திற் பூட்டுவாயே - 32
சுந்தரானந்தர் சிவயோக ஞானம் — 32

கடைப்பிள்ளை மெய்ஞ்ஞானம் என்னும் நூலில் தோல் தசையால் வேயப்பட்ட தேகமானது இராசயோகத்தால் காற்றாய் மாறும். அதனால் ஒரு தீமையும் உண்டாகாது. அதனால் நமன் என்னும் எமன் தீண்ட மாட்டான் என்றும் கூறும் பாடல் காண்க.

ஊனான தேகமது வாசியாகும்
ஒரு தீங்கு மில்லையடா நமன் நாடானே - 33
கடைப்பிள்ளை ஞானம் — 80.

அகத்தியர் மெய்ஞ்ஞானம் சூத்திரம் என்னும் நூலில் அருளின் மேலிட்டால் வன்னி — சூரியன் — சந்திரன் ஆக இவைகள் கலந்து ஒன்றினால் அதற்கு பூரணம் என்று கூறுவர். அதன் உள்ளக பொருள் உணர்ந்தால் அவனே நல்வினையாளராகும். அவனே புகழத்தக்க சற்குருவும் ஆவார். அவரே ஆசான் என்று கூறுவர். தேகத்தில் அருளின் சுடரொளி சோதியாக உதிக்கும். அதனால் ஆயிரத்தெட்டிதழின் மேல் அமுதகற்பம் ஏற்படும். அதனை உண்டவனே சிவயோகியாகும். சிவ சிவா யென்று அதன் மூல நிலை அறிந்தவனே என்றும் சாவதில்லை என்பதை உணர்த்தம் பாடல் காண்க.

''கருணை தரும் அக்கினி - யாதித்தன் - சந்திரன்
கலந் தொன்றாய் நின்றது பூரணமேயாகும்
பொருள் நயமா யறிபவனே புண்ணிய வானாம்
புகழ் சொன்ன சற்குருவே ஆசானாகும்
அருள் கிரண சோதியதா யுதிக்கு மேலே
ஆயிரத் தெட்டிதழ் மேலே அமுத கற்பம்
திருவறிந்து உண்டவனே சிவயோகியாகும்
சிவ சிவா காலறிந்தோன் சாகானென்றே - 14
அகத்தியர் மெய்ஞ்ஞான சூத்திரம் — 32

மேலும் நொண்டிச் சித்தர் சிவயோகம் என்னும் நூலில் நமது தேகத்தின் கண் தீபம் காண்பது ஞானநிலையாகும். ஞானம் தரக்கூடிய அகாரம் என்ற சிவ தீட்சையும் உகாரம் என்ற சக்தியின் அருள் தீட்சையும் இளங்காலையிலும் மாலையிலும் ஓதினால் சொல்லப்படும் அந்தரங்கமாய் இருக்கும் நிலையே அதீதமாச்சு. அந்த தீபம் கண்ட மேருமலை சொரூப தேகமாகும். அந்த நிலையின் குறிப்பதனை நீங்கள் கண்டால் ஏக்கம் விலகி தாழ்நிலை விலகும். அந்த நிலை பொய்யில்லை. அதனால் சாவு என்ற இறப்பும், இறப்பின் விளைவால் உண்டாகும் பிறப்பும் ஒழிந்துவிடும். அதனை நீ சார்ந்த நில்லு. நினைவில் கொள்ள வேண்டியது. மூல என்ற முப்பாழ் என்னுமிடமாகும். அதனை அடைந்த ஒரு மனிதன் நான் யென்ற நிலை நீங்கி அவன் நானாகவும், நான் அவனாகவும் இருக்கும் நிலை பெறுவது நல்ல வீடுபேறாகும் என்பதை,

தீபமடா அறிவென்ற அகார மாச்சு
செப்புகின்ற அந்தரங்க வதீதமாச்சு
தீபமடா மேரு நடு சொரூப மாச்சுத்
திடமாய்க் குறிப்பதனைக் கண்டாயானால்
தாபமடா நீச்சில்லை நிலை பொய்யில்லை
சாவு பிறப்பற்றதடா சார்ந்து பாரு
ஞாபகமா மூல மடா முப்பாழாகும்
நானானே னீதுனக்கு நல்ல வீடே - 10
நொண்டி சித்தர் சிவயோகம் — 16

வடலூர் வள்ளல்பெருமான் அவர் தமது அருட்பாவில் பிறவிக்கடல் கடந்தேன் அதன் கரை அடைந்தேன் அங்கு கோவில் கண்டு கொண்டு அதன் கதவு திறந்திடப் பெற்றேன். அதனால் அற்புதக் காட்சி எல்லாம் வெட்டவெளியாக கண்டுக் கொண்டேன். துன்பம் நீங்கும் அமுதம்

Koviloor Digital Library

பெற்று உண்டேன். உண்டதினால் அருளொளியால் அங்குள்ள அனைத்து செய்திகளும் அறிந்து தெளிந்து அறிவுருவாகி (ஞான தேகம்) இறப்பு என்ற அழியாமை நிலைமை பெற்றேன் என்பதை, அருட்பாவில்

"கடல் கடந்தேன் கரை அடைந்தேன் கண்டு
கொண்டேன் கோவில் கதவு திறந்திடப்
பெற்றேன் காட்சி எலாம் கண்டேன்
அடர் கடந்த திருவமுது உண்டு அருள்ஒளி
யால் அனைத்தும் அறிந்து தெளிந்து
அறிவுருவாய் அழியாமை அடைந்தேன்

என்று அருட்பா ஓதுகிறது.
தனிப்பாடல் — 64.

இன்னும் சித்தர் கடைப்பிள்ளை ஞான மந்திரம் என்னும் நூலில் அகரம் என்ற சிவதீட்சா விதியுடன் உகாரம் என்ற சக்தி தீட்சா விதியும் மனதை உறுதியுடன் காலை மாலையில் தொடர்ந்து ஓதினால் கபம் (கோழை) என்று கூற்றுவனான எமன் மூலத்தில் பொருந்தி நின்றது மூல அனலால் உருகி விலகி விடும். அதனால் சுத்த தேகம் பெற்று ஓங்கார வடிவம் பெற்று அதனால் அமுதம் உண்டால் நாத நிலையின் தேகம் அடையும். அதனால் அனைத்து துருசுகள் அகன்று விடும். இதனால் அந்த ஆன்மாவுக்கு மறுபிறவி இல்லை என்பதை,

"ஆமப்பா ஆகாரமுடன் உகாரம் ரெண்டு
அறிந்து மனதுறுதி யினாற் கொண்டாயானாற்
போமப்பா கபமான கூற்றவன் தான்
பொருந்தி கின்ற மூல அனல் தன்னால் மைந்தா
ஓமப்பா ஓமுடிந்து அகன்று போகும்
உத்த மனனே மறுபிறவி இல்லை - 30
கடைப்பிள்ளை ஞான மந்திரம் — 80

தனி நபரின் தன்முயற்சியால் அறிவின் துணைக் கொண்ட சாகாத கல்வி கற்க முயற்சி எடுத்தால் ஒவ்வொருவரும் மரணம் தவிர்த்து பிறவியும் தடுக்கலாம். எனவே நமது காகபுசண்டர் என்னும் புனித சித்தர்,

"சாகாமல் இருக்க கல்வியுண்டு
சாவதற்கும் விபரம் உண்டு - என்று கூறுகிறார்.

மேலும் திருமூலர்,

"சாகாத கல்வியைத் தாங் கற்க வேண்டும்
வேகாத சிந்தை படைத்திட வேணும்
கோகாமி யத்தைக் குறைத்திட வேணும்
ஆகாத மட்டைக் கறிவதுண் டோமே - 102
திருமூலர் குருமுப்பு நூல் — 200.

மனிதன் சாவிலிருந்து மீண்டால் அவனே சாமி என்று அழைக்கப்படுகிறார். மற்றவர்கள் அல்லது காவியுடை அணிபவர்கள் சாமியல்ல என்று அறிந்து விலகி பிறவி தடுக்க சாகாக்கல்வி அறிக. முயற்சிக்க வெல்க.

திருச்சிற்றம்பலம்

43. ஞானம் (சாகாக் கலை)

குரு பூரணமே ஞானம். பரிபூரணமே ஞானம். சுத்த ஞானமே மறையகம். ஞான மறையகம். மறையகமாகவே சித்தர்கள் மறைத்து வைத்துள்ளனர். அதனை எப்படி வெளிப்படுத்த என்னவழியுள்ளது. ஞானம் வெளியாகும் முறை எது? எதைக் கொண்டு எப்படி செய்தால் அந்த ஞானம் பெறலாம்.

ஞானம் என்பது என்ன? ஞானத்தின் நிலை என்ன? ஞானம் எதைக் குறிக்கிறது? ஞானத்தின் மறையகமிட மெது? ஞானம் எதைத் தருகிறது? ஞானத்தின் உண்மை தெய்வமெது? ஞானம் பெறும் முறையாது? இதுபோன்ற வினாக்களுக்கு விடை கிடைத்தால் ஞானத்தின் உயர் நிலையும், மேனிலையும், அதன் பெருமை வெளிப்படும். இதற்கு அடிப்படையாக உள்ள கல்வி நிலை என்ன? அந்த ஞானக்கல்வி பெரும் முறையாது? ஞானத்தின் எல்லை முடிவு என்ன? ஞானத்தின் அடியும் முடியும் எது? இனி இதனை ஆராய்வோம்.

Koviloor Digital Library

திருமூலர் திருமந்திரம் என்னும் நூலில் ஞானத்தைப் பற்றி என்ன கூறுகிறார் என்பதைக் காண வேண்டும். அவருடைய மந்திரம் இதோ!

"ஞானத்தின் நன்னெறி நாதாந்த நன்னெறி
ஞானத்தின் நன்னெறி நானென் றறிவோர்தல்
ஞானத்தின் நால்யோக நன்னிலை யே நிற்றல் - 2821
ஞானத்தின் நன்மோன நாதாந்த வேதமே

திருமூலர் திருமந்திரம் மூவ்வாயிரம்

ஒருவன் ஞானம் பெறுவது என்பது நாதத்தின் முடிவான நல்ல நெறியாகும். ஞானம் என்னும் நன்னெறி நான் யார் என்று அறிந்து ஒத்து போதல். ஞானத்தின் நால்யோகம் அதன் வழி நிற்றல். ஞானம் என்பது மோனம் என்று கூறப்படும் மௌன நாதத்தின் முடிவான மறையகமாகும்.

ஞானம் என்பது நாதயிறுதியாகும். நான் யார் என்று அறிந்து அதனுடன் சார்ந்து நிற்றல் நால்யோகம் என்றால் சிவகலைநான்காகும். அதில் வெளிபாழ், வொளிபாழ், வெளிவொளிப் பாழ், நிற்குணப் பாழ் என்பதாம். இவை நான்கில் சிவயோகம் புரிந்து நன்னிலையில் நின்றால் ஞானம் என்பர். இந்த நாலுயோகம் மோனம் என்ற நாத முடிவே ஞானம் என்பர் என்று திருமூலர் ஓதுகிறார். மோனம் என்றால் மௌனம் என்பர்.

மச்சமுனி ஞான திட்சா விதியில் ஞானத்தைப் பற்றி கூடும் பாடல்கள் காண்க.

"ஞானந்தா னாவது "நாலாம் பதவவெளி"
ஞானந்தா னாவது "நந்தி யிருப்பிடம்"
ஞானந்தா னாவது நல்வாசி யோகத்தால்
ஞானந்தா னாவது நடுகத்தி யோடாதே - 27

மச்சமுனி ஞான திட்சா விதி — 100.

ஞானம் என்பது "நாலாம் பதவெளியாகும்" ஞானம் என்பது நந்தியின் குடியிருப்பாகும். ஞான நிலை பெற வேண்டுமென்றால் சிவயோகத்தால் தான் முடியும். ஞானம் பெற்ற உயிர் நடுவேகத்தில் பாய்ந்தால் ஓடாது என்பது, நாலாம் பத வெளி என்பது நிற்குணப் பாழ் என்ற இடத்தைக் குறிக்கும். சிவகலைகள் நான்காகும். அதில் இறுதியான கலையே நிற்குணப் பாழாகும். அந்தயிடம் "ஞானத்தின் பதவெளி" என்று ஓதப்படுகிறது.

சுப்பிரமணியர் சிவம் சுத்தஞானம் என்னும் நூலில் விண்வெளியில் தோன்றும் அகாரம் என்ற பொருளே "ஞானமாகும்" என்று கூறும் பாடல் கண்டு களியுங்கள்.

"சீரப்பா ஆகாயப் பெருமம சொல்வேன்
செப்பார்கள் ஜெகந்தனிலே சித்தரெல்லாம்
ஆரப்பா என்னைப் போற் சொல்லப் போறார்
ஆதியந்த மிரண்டு மொன்றா யறியச் சொல்வேன்
பேரப்பா கங்குல் பகல் திடமே யாச்சு
பேராக வந்துவே "அகாரமாச்சி"
சேரப்பா இது வல்லோ "ஞானமாச்சு"
செப்பாமற் சித்தரெல்லாமறைத்திட்டாரே - 1

சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் — *200.*

சீராக ஆராய்ந்து பார்த்து ஆகாயத்தின் பெருமையைக் கூறுவேன். ஆகாயம் என்ன என்பதை உலகில் சித்தர்கள் கூறமாட்டார்கள். ஆனால் என்னை போல் உண்மையை சொல்லப் போகிறார்கள் ஆதியான பொருளும் அந்தமாய் இருக்கும் பொருளும் ஆக இரண்டும் ஒன்றாக அறிவிப்பேன். இரவும் பகலும் உறுதியானது. அதன் பேர் "அகாராமகும்". மேற்கண்ட ஆதியந்த மென்ற நாதவிந்துவே "அகாரம்" என்ற பொருளே ஞானமாச்சு என்று ஓதப்படுகிறது.

மேலும் சுப்பிரமணியர் சிவம் "அகாரம் ஞானக்கண்ணாகும்". அதுவே வெளியுமாச்சு. ஓங்காரப் பொருள் வெளிச்சிகை மேலேறி ஞானம் என்ற சூழலில் வீடாகும. அது கரையற்ற கடுவெளியாகும் என்றும், அதுவே தெய்வநிலையுமாச்சி என்பதை பெரியோர்கள் மறைத்தனர் என்று கூறும்பாடல் காண்க.

"பாச் சென்ற ஞானக்கண் அகார வெளியாச்சு
பண்பான ஓங்கார வெளிச்சிகை மேலேறி

Koviloor Digital Library

காச்சென்ற ஞானமென்ற சுழலாம் வீட்டிற்
கரையற்ற தோன்று மில்லா வெளியும்பாரே - 32
பாரப்பா இதுவல்லோ தெய்வமாச்சு
பார்தனிலே பெரியோர்கள் மறைத்துச் சொன்னார் - 33.

சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் — 200

சட்டை முனிநாத சித்தர் சிவகலையின் நான்காவது கலையான நிற்குணமே ஞானத்தின் வீதியென்று கூறுகிறார். அவரின் பாடல் காண்க.

"ஓட்டினார் ஓட்டினார் "நிற்குணமயமே"
உத்தமனே அதுவல்லோ ஞானவீதி" - 1

சட்டைமுனி சித்தர் ஆதியந்த ஞானம் — 2 நூலில் ஞானம் அடையும் வழியும் கூறுகிறார். இனி அவரின் கருத்தைக் காண்போம்.

"பேச்சென்ற பிராணாயக் கருவைக் கண்டு
பெருமையுடன் முக்கோணத் திருந்துவேறு
வாச்சுதடா "மவுனமுந்தான் தீட்சை பத்தும்"
வாகாகச் சாதித்தால் "ஞானமாச்சி" - 9

"ஞானமென்றுஞ் சித்தென்று மிரண்டு வித்தை
நலமான சித்தியாக்க கடினமெத்த
"மோனமென்று" யட்சரத்தை யறிந்தாயானால்
மூன்றெழுத்து மைந்திலே கசிந்து வீழும்
பானமென்ற வமுதத்தை யுண்டாயானாற்
பதறாமல் "ஞானமது சித்தியாச்சு" - 10

பிரமமுனி சித்தர் பிரம ஞானம் — 36

முதலில் பிராணாயம் செய்முறை அறிதல் வேண்டும். அதன்பின் முக்கோணமாக இருக்கும் இடத்தை அறிந்து மவுனமுடன், தீட்சையான சிவசக்தி தீட்சை முடிந்தால் ஞானநிலை பெறலாம்.

ஞானம், சித்து என்ற இரண்டு வகையும் சித்தி செய்வது கடினமாகும். மோனமென்ற மவுன எழுத்தை அறிந்தால் மூன்று எழுத்தும் ஐந்தெழுத்தில் கசிந்து உருகும். பூரணத்தில் கசியும் அமுதம் உண்டால் ஞானம் சித்தியாகும் என்று கூறப்படுகிறது.

சமதக்கினி மாமுனிவர் வஸ்து தரிசனம் என்னும் சிறுநூலில் ஞானம் அடைவது எவ்வாறு கூறும் பாடல் காண்க.

"காட்டியே சொல்லிவிட்டேனி யறிந்து கொள்ளு
கருவான கருவூரிற் கால்தான் தோன்றும்
நீட்டியே காலதனை யின்ன தென்று
நேர்மை யுடனறிந்து கொண்டார் பூரணந்தான்
கூட்டியதோர் பூரணத்தைத் தெரிந்து கொண்டால்
குறியான சிவயோகம முடிவுமாச்சு
நாட்டியதோர் சிவயோகம் முடிந்த தானால்
நல்லதொரு ஞானமுந்தான் சித்தியாச்சி"

சமதக்கினி மாமுனிவர் வஸ்து தரிசனம் — 30

மாணவர்களே உங்களுக்கு எடுத்துக் காட்டியுள்ள கருவூரில் உள்ளே போக வழி தென்படும். கருவூர் செல்ல வழி உண்டானதால், அதன் நுட்பத்தை அறிந்து தெளிந்தால் பூரணமாகும். பூரணத்தின் முடிவை அறிந்து தெளிந்தால் சிவயோகம் முடிவு பெறும். சிவயோக முடிவுக்கு வந்தால் நல்லதொரு ஞானம் சித்தியாகும் என்று வோதுகிறார். கரு என்பது உற்பத்தியின் பிறப்பிடம். கருவின் உண்மை நிலையறிந்து தெளிந்தால் கால் தோன்றும், கால் என்னது வழி ஆறு, பாதை, காற்று, வாசி என்று கூறுவார்கள். கால் என்ற பாதையை கடந்த பூரணம் பெறலாம். பூரணம் என்பது சூரியன் — சந்திரன் — வன்னி ஆக இவை மூன்றும் கூடிய மூலமாகும். இந்த இடத்தை கருவூர் என்று சித்தர்கள் கூறுகிறார்கள். கருவூரில் புகுந்து கடந்தால் "மறுபிறப்பு" என்ற நிலை பெறுகிறார்கள். வள்ளல் பெருமான் இந்த வித நிலைக்கு செத்தவர்கள் மீண்டும் எழுந்து வருவார்கள் என்று கூறுகிறார்கள். அப்படியென்றால் இல்லற சமுசாரத்தில் புகுந்தவர்கள் செத்தவர்கள் என்றும் நல்லறமான சிவயோக வாழ்க்கையில் ஈடுபட்டு பூரணமென்றும் நிலை அடைந்தால் சிவயோக மூலமாக பூரணத்தைக் கண்டவர் செத்து பிழைத்து எழுந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது. சிவயோக முடிவுக்கு வந்தால் ஞானம் பெற்று சித்தியும் பெறலாம் என்று கூறப்படுகிறது.

Koviloor Digital Library

பூரணத்தின் நிலையான தெய்வம் பரைஞான கேசரியாகும். இதற்கு வாலை என்று பெயர். இவளை கடந்தால் சிவகலைகள் நான்கு உண்டு. அது வெளி பாழ், வொளிப்பாழ், வெளிவொளிப் பாழ், நிற்குணப் பாழ் என்பர். நிற்குணப் பாழ் துவாத சாந்தம் என்று குறிக்கப்படுகிறது. இந்த பன்னிரண்டாம் இடத்தை அடைந்தவர்களுக்கு எல்லாச் செய்திகளும் வெட்ட வெளியாகத் தோன்றும். அதுவே ஞானம் என்ற நிலை சித்தியாகும். சித்திகளில் கர்ம சித்தி, யோகசித்தி, ஞான சித்தி என்று வள்ளல் பெருமான் கூறுகிறார். ஞான சித்தி பெற்றவன் முத்தி பெறுகிறான். முத்தியின் முதிர்ந்த உயிரனுபவமான சிவானுபவமாகும். அதனை பெற்றவர்கள் சித்தர்கள் என்று கூறப்படுகிறார்கள்.


அகத்தியர் சௌமிய சாகாரம் என்னும் நூலில் பூரணமே வாம பீடமாகும். அதுவே சோதியாகும். அதுவே சோதி மேருவாகும். அதுவே தூண்டப்படாத நாதநிலையாகும். நாதநிலையே ஞான மேருவாகும். அதனை நீங்கள் கவனமாக பாதுகாக்க வேண்டும். நயனமேருவே ஞானநிலை வலிமையான புத்தி பலத்தாலும் அறிவாலும் பேணி அதனைப் பார் என்று ஓதுகிறார்.

''காணலாம் ''பூரணமே வாம பீடம்
கருணை வளர் ''சோதியடா அண்டமேரு
தோணலாந் ''சோதியென்ற சோதி மேரு
தூண்டாத ''நாதமடா ஞான மேரு
பேணலாம் ஞான மென்ற நயன மேரைப்
பிலத்த புத்தி அறிவாலே பேணிப் பார்த்த - 352

அகத்தியர் சௌமிய சாகரம் — 1200.

அகத்தியர் பரிபூரணம் என்னும் நூலில் ஞானம் எவ்வாறு அடையலாம் என்ற செய்தியை தம்பாடல் மூலம், கீழ்கண்டவாறு ஓதுகிற நெறியைக் காண்க.

''ஆமப்பா யோகமென்றால் சிவயோகந்தான்
அருள் பெருகும் ''ஞானமென்றால் மவுனஞானம்''
சாமப்பா ''மவுன மென்ற ஞானத் தேது''
சகலகலை யோகமென்ற வாசி யேறி
ஓமப்பா அந்தரங்கச் சுழினைப் பார்க்க



உறுதியுள்ள ரவிமதியை யென்னசொல் வேன்
சோமப்பால் பெருகிரவி சுழினையிற் சேர்ந்து
துலங்கியது தெளிந்ததும் யிருக்கும் பாரு - 579

''இருக்கிறதோர் மவுனத்தின் சமாதி கேளு
''யேகாந்த சற்குருவால் சொல்ல வேணும்''
முருகிய தோர் மாய்கை தனை யறுத்துத் தள்ளி
முத்தி தருஞ் ''சிவஞான யோகத் தேகி''
சுறுக்கியதோர் வாசியினால் சுழினை சென்று
சோதியென்ற ''சிவஞான தீபம்'' பார்த்து
திருக்கவே அமுர்தரசங் கொள்வதற்கு
சிவ சிவா சிவயோத் திருந்து பாரே'' - 580

அகத்தியர் பரிபூரணம் — 1200.

யோகம் என்று சொல்லப்படும் சிவயோகம் அருள் பெருகும். ஞானம் என்றால் மவுனத்தால் உண்டான பலனாகும். மவுன யோக சாதனை செய்தால் ஞானம் பெறலாம். அந்த ஞானம் பெறும் வழியாதனில் ஓங்கார வடியுள்ளே அந்தரங்க சுழினையைப் பார்த்து உறுதியாக சூரியனுடன் சந்திரனை இணைத்து நின்றால் பூரணநிலவில் அமுதம் பெருகி வர சூரியனை சுழினையில் இணைக்க வேண்டும். அப்பொழுது அறிவுக்கு தெளிவு துலங்கும். அதனை கவனமாக கண்காணிக்க.

அடுத்து வரும் பாடலில் மவுனத்தால் பெரும சமாதி நிலை கேட்டு அறிய ஏகாந்த சற்குருவால் ஞானக் கல்வி

Koviloor Digital Library

பெற வேண்டும். சிக்கலைத் தரக் கூடிய மாய்கை என்னும் மலங்கள் அறுத்து தள்ளி மேலேற வேண்டும். முத்தி வழங்கும் "சிவஞானத்தின்" நிலை உயர வேண்டிய வாசியென்ற சுழினையின் மூலம் சென்று சோதியாக விளங்கும் "சிவ ஞான தீபம்" கண்டு கசிந்து வரும் அமுதினை பருகுவதற்கு சிவ சிவ என்று கூறும் சிவயோகம் ஊன்றி பார் என்று வழிகாட்டப்படுகிறது.

அகத்தியர் பூசா விதியில் ஞானத்தின் நிலைமையும் ஞானத்தின் குணத்தையும் கீழ்வரும் பாடல் மூலம் எடுத்துக் காட்டுகிறார்.

"போத மென்ற நிறைந்து நின்ற பொருள் மெய்ஞ் ஞானம்
பூரணமாம் சமாதியின் தன் நடனவோசை
நாதமெல்லாம் நிறைந்து நின்ற நடன மூர்த்தி
நளின பராபரையோடு மாறியாடி
வேதமெல்லாம் நிறைந்து நின்ற வெளியா மண்டம்
வெட்ட வெளி பொட்டலது தீக்காடாச்சு - 85
அகத்தியர் பூசா விதி — 200

போதம் என்றால் ஞானம் என்று பொருள். ஞானம் நிறைவாக இருந்த நிலை மெய்ஞ்ஞானம் என்பர். பூரணம் என்று சொல்லப்படும் சிகாரத்தின் முடிவில் திருகூத்து நிகழ்வதால் நாதப்பொருள் எல்லாம் ஒடுக்கம் கண்டபோது நடனத்தின் ஓசை நளினநடையில் பராபரையுடன் மாறியாடி வேதப்பொருளாய் நின்ற அண்டமே வெட்டவெளி அதுவே பொட்டல் போல் காணப்படும் தீயின் காடாச்சி யென்று ஓதப்படுகிறது. தீயின் நிலையே ஞானமாகும். தீயிலிருந்து வெளிப்படும் வெளிச்சம் சோதியாக ஒளிர்கிறது என்பதாம்.

அகத்தியர் பூரணம் சூத்திரம் என்னும் நூலில் ஒருவன் எவ்வாறு சித்தனாகி ஞானியாகிறார் என்று எடுத்துக் காட்டுகிறார். பார்க்க.

"பூவென்ற ஆயிரத் தெண் மலர்ப் பூவைத்தான்
போத்தியே தீமுட்டப் "புரியட்டம் போம்" - 128
போவென்று புரியட்ட மெட்டினாலே
போகாம லடங்கினாற் "பிறவிபோச்சு"
"சாவென்ற சொல்லேது" லிபி தானேது
சாயுச்சிய மானதொரு ஞானவானே
பானமென்ற வமுர்தமது வுண்டாயானால்
அப்பனே பசிபோச்சு சித்தியாச்சு
நாமென்ற வானவ்மு மப்போ போச்சு
நலமான சிவசித்தின் ஞானியாமே - 129
அகத்தியர் பூரண சூத்திரம் — 216

பூ என்று கூறப்படுகின்ற அயிரத் தெட்டிதழ் கொண்ட மலர் போற்றி தீ மூட்டி ஏற்றினால் "புரியட்டம்" கடந்து போகும். புரியட்டம் எட்டினால் போய் பின் அடங்கினால் பிறப்பு நிகழாது. இறப்பு என்ற சொல்லில்லை. அயன் விதியெழுத்து மாறிவிடும். சாயுச்சியயம் பெற்றவனே ஞானவானாவான். பானம் என்ற அமுத ரசம் வுண்டு வந்தால் ஐயா பசியில்லை. சித்திகள் கைக்கூடும். பெயர்க் கூறுமளவு வானமுதம் உண்டதால் நாம் என்ற நிலையகன்று விடும். அப்பொழுது அதனால் நலங்கள் பலம் பெற்று சிவசித்தன் ஞானம் அடைந்து ஞானி என்று போற்றப்படுவான்.

புரியட்டம் என்பது ஈசன், மாஈசன், சதாசிவன், விந்து, நாதம், சத்தி, சிவம், வராட்டியான், பரை, வெளிப்பாழ், ஒளிபாழ், வொளிவெளிப்பாழ், நிற்குணப்பாழ், உன்மனை என்பர்.

ஒரு சிவயோகி சிவயோகத்தால் பரை என்ற நிலை அடைந்து அப்பொழுது மரணம் நிகழ்ந்தால் மீண்டும் பிறவி பெற்று சிவயோகியாவான். அந்த நிலை கடந்து வெளி பாழில் சென்று அதனையும் கடந்து வொளி பாழில் நுழைந்த பின் அதனையும் கடந்து வெளிவொளி பாழில் புகுந்து அதனையும் கடந்து நிற்குண பாழில் என்ற நிலை அடைவதே ஞானம் என்று சித்தர்கள் கூறுகிறார்கள். இந்த செய்திகள் மறையகமாகவே பாதுகாத்து கண்காணிக்கப்படுகிறது. அப்பொழுது அந்த ஞானி தனித்த சிவனாகவே திகழ்கிறான். அவனுடைய நிலை சோதி வடிவான நிலையாகும். யுகயுகமாக வாழ்ந்து வருவான். அப்படிப்பட்ட

Koviloor Digital Library

ஞானம் பெற்ற ஞானி காலம் கடந்து நிற்கும் கலாதீதனாக திகழ்வான். இப்படி பெறப்பட்ட ஞானமே பிரம ஞானம் என்று கூறப்படுகிறது. பிரம ஞானம் பெற்றதால் பிரம ஞானி என்று அழைக்கப்படுகிறான்.

ஞானத்தின் பெருமை:

அகத்தியர் எழுதிய தத்துவ நூலில் ஞானத்தின் பெருமையை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அவர் கூறும் தத்தவப் பாடல் காண்க.

''தானென்ற ஞானத்தின் பெருமை கேளு
தலைகீழாய் பஞ்சாக்கினி யிடையில் நின்று
கோனென்ற கோடி கற்பந் தவஞ் செய்த பலனும்
குறியசுவ மேத யாகம் நூறுகோடி
தேனென்று செய் பலமு மூவருக்குச்
செகந்தனிலே நூறுகற்பம் சித்தம் செய்தால்,
கோனென்ற ஞான நிட்டை செய்ததவ பலத்துக்
கொவ்வாது யென்ற யுரைக்குங் கேளே - 3

ஞானத்தின் பெருமையும் மேன்மையும் நீங்கள் அறிய வேண்டும். பஞ்சாக்கினியின் நடுவே தலைகீழாயிருந்து கோடி கற்ப காலம் தவமிருந்து செய்த பலனும், நூறு கோடி அசுவ மேத யாகம் செய்த பலனும், திரிமூர்த்தி என்று சொல்லப்படும் அயன், அரி, அரன் ஆக மூவருக்கும் நூறு கற்பம் சித்தம் செய்தாலும், உயர்நிலையுள்ள ஞான நாட்ட நிட்டையில் செய்த தவ வலிமைக்கு ஈடாகாது என்று மறைகளான வேதங்கள் கூறுகின்றன என்று அகத்தியர் கூறுகிறார்.

ஞானியின் மகத்துவம் பெருமை என்ன:

அகத்தியர் தாம் எழுதிய தத்துவம் என்னும் நூலில் ஞானிகள் உயர்ந்த மேன்மையும் அவர்களின் தெய்வத் தன்மையின் மகத்துவத்தையும் கூறும் அவரின் தத்துவப் பாடல் காண்க.

கேளப்பா ''கெருடன் முன்பு சர்ப்பந் தானும்''
கிட்டவுந்தா னில்லாத கெடியை'' போலும்
வாளப்பா ''யிருள் தானுஞ் சூரியன் முன்
வரிநிற்கா கோடிப் போம் வரிசை போலும்
கோளப்பா ''பஞ்சதுதான் வடவையனல் முன்பு
கூடியது நில்லதை ''குறியைப் போலும்
ஆளப்பா ''வெகுகோடி பாவஞ் செய்தோன்
அருள்ஞானி தனைக்காணில் அகன்று'' போமே
- 4

''போகாமற் படைத்தவன்றான் ஞானிபதம
பூசிப்பான் சிரசில் வைத்துப புவனங் கார்த்தோன்
தாகமாய் ஞானியவ னினைத்த தெல்லாம்
தலை யினாற் சுமந்து வந்து தருவான் பாரு
யேகமாய்ப் புவன மெல்லா மெரித்தோன் றானும்
யிவன், பின்னே திரிந்திடுவா னிவனைக் கார்க்கச்
சாகாத வானவர்க்கு மனிதருக்கும்
சரண் பணியக் கிடைக்குமோ செகத்திற் தானே
தானென்ற ஞானிக்கோர் பிடிதான் பிச்சை
தானளித் தோர் தங்களுக்கு பலத்தைக் கேளு
கோனென்ற அகாரமொரு நூறு கோடி
கோபுரந்தான் கோடி செய்து பலத்துக் கொக்கும்
ஊனென்ற நால்வேதமம் சாங்கமாக
ஓதியதோர் வேதியர்கள் கோடி பேர்க்கும்
தேனென்ற அன்னமிட்ட பலத்துக்கு மதிகம்
சித்தாந்தம் வேதாந்தம் செப்பும் பாரே - 6

செப்புமப்பா ஞானியவ னிருந்தயிட மெல்லாம்
செம்பொன் மணி கைலாச வைகுந்த மென்பார்
ஒப்பிலவன் செய்வதெல்லாம் உலகத்து ரட்சை
ஓங்கிய யவன் பாதம் பட்டவிட மெல்லாம்
தப்பில்லா யாகாதி செய்த விட மாகுந்
தானவனைக் கண்டாக்கால் சிவதெரிசனமாம்
அப்பாகே ளவன் வார்த்தை மந்திரமுமாகும்
அதைக் கேட்டால் வேதமென்பா ரறிவுள்ளோரே - 7

4வது பாடலில் கெருடன் முன் பாம்பும் எதிர்படாமல் தப்பிப்பதுபோலும், சூரியன் முன் இருள் மடிவது போலும, வடவையனல் முன் பஞ்சது கூடி நில்லாத போலும், வெகுகோடி தீவினைகள் செய்த ஒருவன் ஞானி முன் எதிர்ப்பட்டால் விலகும் என்பதாம்.

5வது பாடலில் உலகம் படைத்தவன் ஞானிபதம். சிரசின் மேல் வைத்து பூசனை செய்வன். உலகம் படைத்து காற்பவன். விரும்பி ஞானி நினைத்தால் தலைமேல் பொருள்கள் சுமந்து எடுத்து வந்து கொடுப்பான். யேகமாக நின்று புவனம் எரித்தோன் ஞானியின் பின்னே திரிந்து காப்பான். சாகாவரம் பெற்ற

Koviloor Digital Library

வானவர்களுக்கும் மனிதர்களுக்கும் சரணடைந்து வேண்டினாலும் வாய்ப்பு கிடைக்குமோ இந்த உலகில்,

6வது பாடலில் ஞானிக்கு ஒரு பிடி சோறு தான் ஈந்தால் அவர்களின் வலிமைத்தான் கேள். கோ என்ற அகரமொரு நூறு கோடி கொடுப்பதும், கோபுரம் போன்ற புண்ணியம் செய்வதற்கு ஈடாகும். ஊனினால் செய்த இந்த உடல் பெற்று நால் வேதம் ஓதும் வேதியர்கள் கோடி பேருக்குள் செய்த நன்மைகள் ஒரு ஞானிக்கு உணவு கொடுத்து பசியாற்றி நன்மைக்கு ஈடாகாது. இந்த செய்திகள் வேதாந்த சிந்தாந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது தெளிக.

ஞானியின் இருப்பிடமான இடங்களில் செம்பொன் மணிகள வேய்ந்த கைலாச வைகுந்தம் என்று கூறுவார்கள். ஞானி செய்யும் செயல்கள் அனைத்தும் உலகம் பாதுகாக்கும் நெறி ஒத்தது. ஞானியின் திருவடி பதிந்த இடமெல்லாம் தப்பாது புண்ணியம் செய்தயிடமாகும். ஞானியைக் கண்டால் சிவதரிசனம் காண்பதற்கு ஒப்பாகும். ஞானியின் வார்த்தையெல்லாம் மறைவாக்காகும். அதனை கேட்பவர்கள் அனைவரும் வேதம் என்று அறிவுள்ளோர் அறிவார்கள்.

ஞானிகள் எப்பொழுது பொய்க் கூறமாட்டார்கள்.

ஞானிகள் எப்பொழுதும் பொய்ப் பேசார்கள் அகத்தியர் தத்தவம் என்னும் நூலில் ஓதுகிறார். அவரின் பாடல்கள் காண்க.

"அறுபத்து நாலுசித்துப் பெற்றினு மேலும்
அகில மெல்லாந் தானானப் பெறினும் பின்னும்
உருபுவன முழுவதுந்தான் வணங்கியேற்றி
ஒளிர் பாதந் தலை மிசையே தாங்கிடினு முலகில்
மருமரம்பபை ஊர்வசி திலோர்த் தம்மை யிந்திராணி
மகளிரோடு கூடிடினும் பிறப்பிறப் பரினும்
இருஞானி பொய்யுரையார் மெய்யே சொல்வார்
யிது ஞானிக் குண்மை யென்பா ரிறைவன் தானே - 8

"இறைஞான தன்னைப் பூசித் செழுந்து பணிந்தேற்றி
இவன் சரணந் தன்சிரசி லணிந்து கொண்டு
அறையவன்றன் பாதத்தை நேத்திரத்தில் வைத்து
அவன்பாத தூளியின்னச் சரீமெல்லா மணிந்து
உறை கெந்த புட்பமொடு தீப தூபம்
உபசாரஞ் செய்து மவன் சேடமுன்ன
மறையிருளுங் கடுவிருளில் பருதிவருவதுபோல்
மலநீங்கி யவனெஞ்சில் சிவனுதைய மாகும் - 9

"ஆமப்பா புலிகரடி சிங்கமதம் பொங்கும்
யானையின் மேலேறி நடத்துவது லெகுவாம்
ஓமப்பா பெரியரவைப் படித்து வாட்டி
யோரிடத்தி லடைக்கலமா யெந்தாநாளும்
சோமப்பா லுண்டி ளமை யாயிருக்கலாம் பின்
சொர்ணமது செய்யலாஞ் செம்பைத்தானும்
ஆமப்பா குளிகையிட்டு அண்டமெல்லாம் பார்த்து
அறியலா மனமடங்க லறியச் சித்தே - 10.

அகத்தியர் தத்துவம் — 300.

ஞானம் அடைந்த ஞானிகள் எந்த காலத்திலும் பொய்ப் பேச மாட்டார்கள். அவர்கள் அறுபத்து நாலு சித்தர்கள் பெற்றாலும் சரி, அகல உலகம் தானாகவே ஆட்சி செய்தாலும், உருவாக்கப்பட்ட இந்த உலக முழுதும் தான் வணங்கி வாழ்த்தினாலும் திருவடி ஒளிப்பெற்று திகழினும், அதுவே தலை மீது தாங்கனாலும், அரம்பை, ஊர்வசி, திலோத்தமை, யிந்திராணி தேவ பெண்களிடம் கூடிடினும் பிறப்பிறப்பற்று இருக்கும் ஞானிகள் பொய்க் கூறமாட்டார்கள். உண்மையேக் கூறுவார்கள் இது ஞானியின் பண்பான குணமாகும். அவனே இறைவனாவான்.

இறைவனாகத் திகழ்கின்ற ஞானியை வாழ்த்தியும் தொழுதும் பூசைகள் செய்தும் இவரிடத்தில் சரணம் புகுந்து திருவடியில் வீழ்ந்து அவரின் திருப்பாதங்கள் தலை மீது படும்படு வணங்கியும் அந்த ஞானியின் பாதத்தில் பணிந்து விழுந்து தன் கண்காலால் படும்படியும், அந்த ஞானியைதன் உடலால் நீண்டு நெடுக வீழ்ந்து, அறைத்தெடுத்த நறுமணப் பொருள்களாலும், மலர் தூவியும், ஒளிவிளக்கு, புகையிட்டு தக்க உபசாரம் செய்து அந்த ஞானி உண்ட மீதமுள்ள உணவு உண்டாலும், மலத்தால் உயிர் மறைத்தலும், கடு இருளால் மனத்தை

Koviloor Digital Library

மறைக்கச் செய்தலும் சூரியன் முன் எதிர்பட்ட இருள் போலுள்ள மலம் நீங்கி மானுட இருதயத்தில் சிவனும் தோன்றச் செய்யும்.

ஞானிகளால் சிங்கம், புலி கரடி, மதயானை போன்ற மிருகங்கள் பணிய வைத்து அதன் மீது சவாரி செய்ய எளிதாக முடியும். ஓங்காரமான அரவத்தை பிடித்து அதனை ஆட்டிப் படைத்து ஓரிடத்தில் எந்நாளும் இருக்கச் செய்து, அதன்மூலம் ஆயிரத்தெட்டிதழ் மலரில் கசையும் சோமப்பாலமுர்தம் உண்டு என்றும் இளமையோடு யிருப்பார்கள். செம்பான கனிமங்கள் தங்கமாக்கலாம். மணிக்குளிகை வாயில் அடக்கி அண்டங்கள் எல்லாம் சுற்றிவரலாம். இதற்கு மனவடக்கம் அறிந்து இருக்க சித்திகள் கைக்கூடி வரும் என்பதாம்.

மேற்கண்ட செய்திகள் ஆராய்ந்து பார்த்ததில் ஞானம் என்பது என்ன வென்று அறிந்திருப்பீர்கள். ஞானத்தின் நிலை உணர்ந்திருப்பீர்கள். ஞானத்தின் நிலை படித்து தெளிவுப்பெற்றிருப்பீர்கள். ஞானத்தின் முடிவு நிலை புரிந்திருப்பீர்கள். ஞானம் பெறும் முறையும் அறிய வந்திருக்கும். ஞானத்திற்கு அடிப்படையாக உள்ள நெறிமுறைகள் என்னவென்று கண்டியிருப்பீர்கள். ஞானத்தின் பெருமை, அதன் மகத்துவம், அதன் உயர்நிலை படித்து அறிவு தெளிவு பெற்றிருப்பீர்கள். ஞானத்தின் இரகசியத்தையும் அதன் சிறப்பையும் அகவுணர்வு பெற்றிருப்பீர்கள். இவைகள் அனைத்தும் மானுடயுகத்தில் நிகழ்வதால் மறையகமாகவே சித்தர்கள் மறைத்தனர். மானிட உணர்வில் இறையருள், கருணை இரக்கம், தயவு மிக்கவர்களுக்கு மட்டும் அகவுணர்வால் அறியவரும். சிறப்புமிக்க குருவின் அருளாலும், செவியருளுரை கூறுவதாலும் அக்கல்வி பெற இயலும் என்பதை உணர வேண்டும். திருமூலர் திருவடிபேறு தலைப்பில் கூறும் ஞானம் காண்க.

"திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்கும்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்குஞ்
திருவடி ஞானமே திண் சித்தி முத்தியே" - 1599

திருச்சிற்றம்பலம்

44. முத்தியும் சித்தியும்

முத்தியை அடைவது சித்தியின் பொருட்டேயாகும் என்பது வள்ளல் இராமலிங்க அடிகளாரின் அனுபவ சுத்த வாக்காகும். இதனை அருட்பெருஞ் சோதி அகவலில்

"புடையறு சித்தியின் பொருட்டே முத்தியை
அடைவதென் றருளிய அருட்பெருஞ்சோதி" - 247 - 48

என்று ஓதுகிறார். மேலும் வள்ளல் பெருமான் முத்தியைப் பற்றியும் சித்தியைப் பற்றியும் தாம் பெற்ற சுத்த அனுபவ நிலை விளக்கும் போது, சமயம் சார்ந்தோர்கள் முத்தி தான் முடிவான பேறுநிலை என்று கூறுவார்கள். சமயாதீதகம் கடந்து நிற்கும் சன்மார்க்கியான வள்ளல் இராமலிங்க அடிகளார் சித்தி பெறும் நிலையே முடிவானது என்று ஓதுவார். முத்தி என்பது அடையவேண்டிய நிலைக்கு முன் உறும் ஒரு சாதனமாகும் என்றும், சித்தி என்பது அந்நிலை சேர்ந்து அனுபவிக்கும் அனுபவம் என்றும் கூறுவர். முத்தியும் சித்தியும் ஆக இவை இரண்டும் இன்ன தென்பதைப் வள்ளர் இராமலிங்க அடிகளார் தாம் அருளிய அருட்பெருஞ் சோதி அகவலில்,

"முத்திஎன் பதுநிலை முன் னுறு சாதனம்
அத்தக வென்றான் அருட்பெருஞ்சோதி
சித்தி என்பது நிலை சேர்ந்த அனுபவம்
அத்திறம் என்ற என்அருட் பெருஞ்சோதி - 249 - 52

என்று அருட்பாவில் ஓதகிறார். இனி

Koviloor Digital Library

நமது சித்தர்களின் அனுபவங்களை ஆராய்வோம்.

சுப்பிரமணியர் சிவம் சுத்த ஞானம் என்ற சிறுநூலில் அன்புமிகு வாசல் யாரும் கண்டிலர் அறுத்தடைத்த பத்தாம் வாசல் கடந்து போனால் வன்புடை மயிர் பாலம் மீது ஏறி மனது உருகு கனிந்து நாள்தோறும் மகிழ்வினோடு தென்பகுதியிலுள்ள திருச்சிற்றம்பலத்தை கண்டு தரிசனம் செய்தவருக்கே முத்தியும் சித்தியும் அடைவர் என்பது அவருடைய பாடலால் அறிக.

"அன்புடை தொரு வாசல் யாருங் காணார்
அறுத்தடைத்த வாசல் கடந்தப்பால் தாண்டி
வன்புடைய மயிர்பால மீதேறி
மனது கனிந்துருகி நித்தம் மகிழ்வினோடும்
தென்பாகத் திருச்சிற்றம் பலத்தைக் கண்டு
தெரிசிக்க அவருக்கு முத்தி சித்தியாமே - 3
சுப்பிரமணியர் சிவம் சுத்தஞானம் — 8

திருமூலர் திருமந்திரம் என்னும் நூலில்,

திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்கும்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந்
திருவடி ஞானமே திண் சித்தி முத்தி - 1572
திருமூலர் திருமந்திரம் — 3000.

திருவடி என்பது பரமபதம் என்பர். அந்த பரமபதம் அடைய அறிவை பயன்படுத்தி அறியும் தன்மையால் ஞானம் அடையலாம். அந்த அறிவின் ஞானம் என்னும் துணையால் இந்த தேகம் மலம் என்னும் பஞ்ச மலங்களின் சிறை பிடியிலிருந்து மீண்டு வர வைக்கும். அதனால் இந்த தேகம் கற்பூர தேகமாகும். அதனால் பிறவி தடுக்கப்படுகிறது. கற்பூர தேகமே சிவமாயத் திகழும். அத்தேகத்தோடு சிவலோகம் நுழையும் வாய்ப்பு ஏற்பட்டு திருவடி சேர்க்கும். அந்த ஞான தேகம் பெற்றால் முத்தியில் சேர்க்கும். அந்த முத்தியின் முதிர்வால் சித்தியும் உண்டாகும். மேற்கண்ட திருமந்திர பாடல் கூறுகிறது.

கொங்கணர் மெய்ஞ்ஞானம் என்னும் சிறுநூல் அறிவின் துணைக் கொண்டு அதன் மூலப்பொருள் கண்டறிய வேண்டும். மூலம் என்பது மதி — கதி — சுடரி என்பார்கள். அதுவே சந்திரன் — சூரியன் — வன்னி என்றும் கூறுவார்கள். இதற்கு மும்மூலம் என்பர். இந்த மூன்று மூலப்பொருள்கள் இணையுமிடமே மூலம் என்று ஓதுவார்கள். இந்த மூலப்பொருளால் நமது தேகத்தின் களங்கங்கள் நீக்கப்பட்டு விடுகிறது. அதனால் இந்த தேகம் புனிதமாக்கப்பட்டு கற்பூரதேகமாகத் திகழும். மூலத்தின் மூலஅறிவின் ஞானம் பெற்றவர்களுக்கு பிறவி தடுக்கப்பட்டு அதனால் திருவடி இணையும் நிலையை ஏற்பட்டு முத்தியும் சித்தியும் உண்டாகும் என்று கொங்கணர் என்னும் சித்தர் கீழ்கண்டவாறு வலியுறுத்துகிறார்.

"அறிவையா யறிவினுட மூலங் கண்டால்
அசடில்லை கற்பூர தேமாச்சு
அறிவை நீ யறிந்தால் பிறவி போச்சு
அடுத்தாப் போற் பரம பதம் நிலையுமதாச்சு - 6
கொங்கணர் மெய்ஞ்ஞானம் — 13

சுப்பிரமணியர் சிவம் தம் யோக ஞான நூலில் ஏகமாகத் திகழ்கின்ற ஓரெழுத்து அதன் பயனை எண்ணிப் பார்க்காமல், அதன் உட்பொருள் எடுத்துக் கூறுவதற்கு யாரும் இல்லை. வேதங்கள் ஆகமங்கள் இன்னும் பல நூல் கற்று அதனை எல்லாம் அறிந்தவர் போல் நடிப்பர். ஆனால் மவுனத்தின் பொருளைப் பற்றி அந்த நபரிடம் நீங்கள் வேகாக்கால் — சாகாத்தலை உடனே கேளுங்கள். அதன் பொருளை உறைப்பவனே குருவாவான். இந்த தேகத்தில் ஓரெழுத்தை முழுமையாக அறிந்தவனே ஞானி என்பர். ஞானி என்பவன் தில்லை திருச்சிற்றம்பலத்தில் திருகூத்து கண்டவனே முத்தியும் அதனால் சித்தியும் அடைவர் என்பதை கீழ்வரும் பாடலால் அறிக.

ஏகமெனும் ஓரெழுத்தின் பயனைப் பார்த்தே
எடுத்துரைத்தும் இவ்வுலகில் எவருமில்லை
ஆகமங்கள் நூல்கள் பலகற்றுக் கொண்டே
அறிந்த மென்பார் மவுனத்தை அவனையும் நீயும்
வேகாக்கால் சாகாத்தலை விரைந்து கேளாய்

Koviloor Digital Library

விடுத்ததனை உறைப்பவனே ஆசானாகும்
தேகமதில் ஓரெழுத்தை காண்போம் ஞானி
திருநடனம் காண முத்தி சித்தியாமே
சுப்பிரமணியர் சிவம் யோக ஞானம் — 500.

சச்சிதானந்தர் என்னும் சிவம் யோக ஞானம் — 500 என்னும் நூலில், சிவயோகம் பெற்றவர் தன்னைத் தானே அறிந்து தவத்தில் மிக மகத்துவம் பெற்ற யோகிகள் திருவாகத் திகழ்கின்ற பூரண் என்ற இத்தை தெரிசன கண்டவர்களுக்கு முத்தியும் சித்தியும் பெற்று மரணமில்லா பெருவாழ்வில் திகழ்கின்றார்கள் என்பதை கீழ்வரும் பாடலில் உணரலாம்.

தருவான சிவயோகம் தன்னைப் பார்த்துத்
தவத்திலே மிகுந்து மகத்துடை யோராகித்
திருவான பூரணத்ஸதைத் தெரிசித்தே தான்
சித்தி முத்தி பெற்றிவா திருக்கின்றாரே - 211
சச்சிதானந்தர் சுழிமுனை ஞானம் — 31

அகத்தியர் தாம் ஆக்கிய நூலான சுத்த ஞானம் என்னும் நூலில் தமிழ் நான்மறையின் முடிவில் நிற்கும் நாதாந்த பேரொளியைக் காணுதற்கு மூலதளம் தோன்றிய அதிலிருந்து முளைத்த அகாரம் மேலே முட்டி நின்ற மரக்கொடி கம்பத்தின் முடிவில் ஏறி நின்று நோக்கினால் காரணம் என்னும் நிலையும் பூரணம் என்ற நிலையும் இணைந்து தோன்றும். தூய்மையாகத் திகழ்கின்ற ஞான ஒளியானத் திருச்சிற்றம்பலத்தைக் கண்டவர் அதன் நிலை அறிந்து தெரிவித்தவருக்கு முத்தியும் பெற்று சித்தியும் பெறுவார்கள் என்பதை கீழ்காணும் பாடலில் காண்க.

''நாலான வேதத்தில் முடிவில் நிற்கும்
நாதாந்த பேரொளிளை காண வேண்டி
மூலதளம் முளைத் தெழுந்த வகார மேலே
முட்டிநின்ற கம்பத்தின் முடிவிலேறி
காலகால மறுப்பதற்கு மேலே நோக்கு
காரணமும் பூரணம் கலந்து தோனுஞ்
சீலமதாயத் திருச்சிற்றம்பலத்தை கண்டு
தெரிவித்தவருக்கு சித்திமுத்தி யாமே
அகத்தியர் சுத்தஞானம் — 9



கடைப்பிள்ளை என்னும் சித்தர் ஞானத்தண்டகம் என்னும் நூலில், பிராண நிலை புருவ மத்தியில் சேரும் போது மூச்சானது நிலைப்பெற்று முனையில் தீபம் போல் திகழும். அதுவே முத்திகண்ட இடமாகும். அந்த இடத்தின் நிலையின் அனுபவ உணர்வே சித்தி பெற்று திகழும் என்பதை,

ஆச்சப்பா பிராண நிலை புருவ மத்தி
அப்பனே திசையதுவே யாருமாகும்
மூச்சப்பா நின்றிலங்கும் முனையாம் தீபம்
கடைப்பிள்ளை ஞானத் தண்டகம் — 51

மேலும் திருமூலர் திருமந்திரம் என்னும் நூலில் ஓம் என்னும், ஓங்காரத்தினுக்குள்ளே ஒருமொழி சொல்லாகும். அந்த ஓங்காரத்தில் உருப்பொருளும் அருவமான பொருள்கள் தோன்றும். அந்த ஓங்காரத்துள்ளே பல்வேறு மாறுபாடுகள் வேற்றுமைகளும் நிகழும். அந்த ஓங்காரமே சிறந்த முத்தியும் அதனால் சித்தியும் பெறலாம் என்பதை,

ஓமெனும் ஓங்காரத்துள்ளே யொருமொழி
ஓமெனும் ஓங்காரத்துள்ளே வருஅரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தி - 2627
திருமூலர் திருமந்திரம் — 3000

போகர் என்னும் சித்தர் ஞான சாரம் என்னும் நூலில் முத்தி பெற வேண்டுமென்று நினைக்கும் உலக

Koviloor Digital Library

மாந்தர்கள் முத்தியில் நுழையுமிடம் சேருமிடம் காணார்கள். சக்தி யென்ற இடைகலை தான் மத்தியாம் (சந்திரக்கலை) அடுத்து பிங்கலை என்பது ஆதித்தன் தியாகும். இவ்விரண்டும் இணைந்து சுற்றி நிற்குமிடம் நடுவாக நிற்கின்ற கலையே தான் அக்கினித் தியாகும். இவைகளுக்கு மும்மூலமென்றும் முச்சுடர் என்றும் கூறுவார். இவைகளால் தான் மூன்று சேரவே முத்தி என்பர். இவை மூன்றும் சேர்ந்தயிடம் கேசரி என்றும் சித்தர்கள் ஓதுகிறார்கள். இத்தகைய நிலையை அறியாதவர்கள் பேயர்கள் என்று கூறி வேறு தெரியாது என்று ஓதும் பாடலைக் காண்க.

முத்தி பெற வேணற மென் பாருலகத் தோர்கள்
முத்தி புகுந் சேர்ந்த விடங் காணார் காணார்
சக்தி யென்ப இடைக்கலை தான் மதித் தீயாகும்
தருவான பிங்கலை தானாதித்தன் தீ
சுத்தியாய் நடுநின்ற அக்கினித் தீ
சுடர் மூன்று மொன்றா லானது தான்முத்தி
பத்தியுட னிருந்தோர்க்கு யிதுதான் தானே - 36
போக சித்தர் ஞான சாரம் — 100

நமது வடலூர் வள்ளல் இராமலிங்க அடிகளார் தமது அருட்பாவில் கீழ்வரும் பாடலில் முத்தியைப் பற்றி ஓதுகிறார்.

‘‘பகுதி தகுதி விகுதி என்னும் பாட்டில்
கல் இடையில் இரட்டித்து அளவீர்
அருட் சித்தால் அது கடையாம் கண்டீர்
திருச் சிற்றம்பலமவை சேர்ந்து - வள்ளலார்

இதில் கூறப்படும் பகுதி + தகுதி + விகுதி என்பதில் முதலில் வரும் எழுத்துக்கள் “பதவி” என்று வரும். அடுத்து வரும் “கு” என்பதுடன் இருமுறையாக கூட்டினால் (3கு + 3கு) ஆறு “கு” வரும். அந்த ஆறு “கு” என்பது “அறுகு” என்பதாகும். மூ + அண்டம். மூ என்பது ம்+ஊ = மூ என்பர் ம் (இம்) காரம் என்பது ஓங்காரம். இதற்கு ஊமை என்றும் கூறுவார்கள். வாய் பேசா எழுத்து என்றும் கூறுவார்கள். ஏகாட்சரம் என்றும், இந்த மகரம் தோற்றமும் ஒடுக்கமும் உடையது. அதுவே ஓங்காரம் என்றும், அந்த ஓங்காரம் அண்டத்திலிருந்து தோன்றி ஊன்றி விரிவடைந்து நிற்பதால் ஊமை என்பர். இந்த ஊமைக்கு மகாரம் என்றும் “மா” எழுத்தும் என்றும் கூறுவார் பேரண்டத்தையே மூதண்டம் என்பர். தண்டம் என்றால் த்+அ = த என்பர். ‘ண்’ என்றால் சிவம். சக்தி — உயிர் என்பர். தகரம் என்றால் நுட்பமான பெரிய அண்டம் என்பர். இதற்கு தகராகாசம் என்றும் ஓதுவார்கள். ட = ட்+அ என்பர். டகரத்தில் ஒலியுடன் (நாதமுடன்) ஓசையுடன் அகரம் வெளிப்படுவதால் ‘டம்‘ என்று கூறுவார்கள். பேரண்ட வெளியிலிருந்து முதலில் நாதம், விந்து + அகரம் +உகரம் + மகரம் வெளிப்பட்டு அந்த மகரத்திலிருந்து அ+இ+உ+எ+ஒ என்று தோன்றும். அதிலிருந்து சி+வ+ய+ந+ம என்ற பஞ்சாக்கரம் உண்டாகும். அந்த ஓங்காரம் ஆதி கற்பம் பெற முச்சுடரான மும்மூலம் என்ற முச்சுடரால் கடைந்தால் முத்தி தரும் அமுத கற்ப மருந்து அருட்சித்தத்தால் பெறலாம். அதனை உண்பதால் முத்தி பெறலாம். இதனை குறிப்பதே கடைசியில் வரும் மூன்று ‘தி’ கள் தான் என்பர். அந்த முத்தியால் சிவபதவி அடைதலே வீடு பேறு என்பர்.

காலாங்கி நாதர் என்னும் சித்தர் தம் நூலில் ஆன்மாவின் அகநிலைப்பற்றியும் அதுபெறும் முத்தி நிலையைப் பற்றியும் ஓதியுள்ளதை அறிய வேண்டும். அப்பொழுது தான் ஆவி முத்தி நிலை பெறுகிறது என்பதை உணரலாம். பாடல் காண்க.

ஆவியென்ற பிராணனது புருவ மீதே
அடங்கினால் மறுபிறவி யுண்டாம் பாரு
ஆவியென்ற பிராணனது முக்கோணத்தில்
அடங்கினால் மறுபிறவி யில்லை யில்லை
ஆவியென்ற பிராணனது முத்துள்ளே
அடங்கினால் வெளி வொளி யாயமர்ந்து நிற்க
ஆவியென்ற பிராணனது அறு கோணத்தில்
அடங்கினால் வெளியோடு வெளியாய்ப் போம்
காலாங்கி நாதர் கலைஞானம் — 80.

ஆவி என்னும் பிராணன் (ஆன்மா) புருவ மையத்தில் நின்ற நிலை உயிர் இழந்தால் மீண்டும் ஓர் பிறவி உண்டு.

Koviloor Digital Library

உயிர் என்ற ஆவியான முக்கோணம் என்னுமிடத்தில் நிலைத்திடில் அதற்கு மறுபிறவி கிடைக்காது. ஆவி என்னும் ஆன்மா மூலத்தில் நின்றால் வெளிவொளியாக நிற்கும். ஆவி என்ற உயிர் அறுகோணம் என்னும் கடுவெளியில் அடங்கினால் வெளியோடு வெளியில் போகும் என்பதாம்.

மேலும் தமது வடலூர் இராமலிங்க அடிகளார் முதலில் முத்தி பெற்றால். அம்முத்தியினால் ஞான சித்தி பெற்றார். அதனால் சித்தன் என்ற பதவி பெற்றார் என்பதை அவரின் அருட்பாவால் அறிக.

"முத்தியைப் பெற்றேன் அம் முத்தியினால் ஞான
சித்தியை உற்றேன் என்று உந்தீபற
சித்தனும் ஆனேன் என்று உந்தீ பற - 4904

என்பது அருட்பெரும் சோதியில் கலந்த நமது வள்ளல் பெருமான் கூறுகிறார்.

சித்தியை மூன்று வகையாக பிரித்துக் கூறுகிறார். அவை கரும சித்தி — யோக சித்தி — ஞான சித்தி என்று மூன்று வகையாய் வள்ளல் பெருமான் ஓதுகிறார்.

கர்ம சித்தி — யோக சித்தி — ஞான சித்தி எனச் சித்திகள் வகை மூன்றாக தொகுத்து கூறுகிறார்.

1. கர்ம சித்தியாவது: அணிமா — துரும்பை மேருவாக்குகிறது. மகிமா — மேருவைத் துரும்பாக்குகிறது. கரிமா — மேருவை ஒன்றுமில்லாமல் செய்கிறது. லகிமா — ஒன்றுமில்லாத இடத்தில் அனேகங்களாகச் செய்கிறது. ஈசத்துவம் — குளிகை வல்லபத்தால் எங்கும் செல்கிறது. பிராகாமியம் — பரகாயப் பிரவேசம். வசித்துவம் — எழுவகை தோற்றமாகிய தேவ மானுஷ்ய நரகமிருக பக்ஷி ஊர்வன விருஷம் முதலியவற்றை தன் வசப்படுத்துகிறது. தேகத்தை கல்ப சித்தி செய்து கொள்ளுதல். அபர மார்க்கி சதா சிவநந்த அனுபவம். சதா சிவ காலவரை. பிரேதத்தை உயிர்ப்பித்தல். சித்தி காலம் 3½ வருஷத்துக்குள்.

2. யோக சித்தி விபரம்: 64 சித்திகளையும் தன் சுதந்திரத்தால் நடத்துகிறது. சங்கல்பகுளிகை, பிராண கல்ப தேகி, பிரம காலம், பராபர மார்க்கி, சித்தி காலம் 12 வருஷ முதல் 108 வருஷத்திற்குள் புதைத்த தேகத்தை நாசமடையா முன் உயிர்பித்தல்.

3. ஞான சித்திகளின் விவரம்: அறுபத்து நாலாயிரம் சித்திகளையும் தன் சுதந்திரத்தில் நடத்துகிறது. 647 கோடியாகிய மகா சித்திகளையும் தன்னிஷ்டம் போல் நடத்துகிறது. காலம் கடந்தது. அடிநிலை முடிநிலை சுத்த கர்ம சுத்த யோகசுத்த ஞான சித்தி வல்லபங்களைத் தன் சுதந்திரத்தால் நடத்துகிறது. உபதேச பகுதி — 94. வள்ளல் பெருமான் அருளியது.

மூவகைச் சித்தியின் முடிவுகள் முழுதும்
ஆவகை எனக் கருள் அருட்பெருஞ் சோதி
கரும சித்திகளின் கலைபல கோடியும்
அரசுற எனக்கருள் அருட்பெருஞ் சோதி
யோகசித் தியிகள் வகை உறுபல கோடியும்
ஆகஎன் றெனக்கருள் அருட்பெருஞ் சோதி
ஞானசித் தியின் வகை நல்விரி வனைத்தும்
ஆனியின் றெனக்கருள் அருட்பெருஞ் சோதி

அருட்பா 239 — 46

இதிலிருந்து முத்தியின் அக அனுபவங்களால் ஞான சித்தி பெற்றார் நமது வள்ளள் பெருமான் என்பதை அறியலாம்.

மேற்கண்ட செய்திகளின் மூலம் சமய மதங்களில் கூறும் மூர்த்திகளால் முத்தி தர முடியாது என்றும் அறியலாம். புறசமய மதங்களிலும் சாதியிலும் மிகுந்த பற்றுவர்களுக்கும் முத்தி பெறுவது கடினமாகும். கோவில் குளங்கள் என்று அலைவதாலும் முத்திநிலை எட்ட முடியாது. வேத வியாசன் வேத இதிகாச புராணங்களை கரைத்து குடித்து வாதாடுபவர்களும் முத்திக்கு எட்டா தேன் கொம்பாகும். மத சின்னங்கள் வெட்ட வெளிச்சமாக காட்டி திரியும் பகட்டுவாதிகளும் முத்தி என்பது கனவிலும் காண்பதரிது. பின் எப்படி முத்திக்கு வழி என்றால் சீவகாருண்யன் — இரக்கம் — தயவு — பசியாற்றல் — கல்வி வழங்கல் — எல்லா உயிர்கள் தன்னை போன்றது என்று நினைக்கும்

Koviloor Digital Library

தன்மை — மெய் வழியில் நின்று வேத வியாசன் பொய்யுரை களவு கட்டுரைகள் விலக்கினால் மெய்ஞ்ஞான கல்வியான சாகாத கல்வியைத் தன்னறிவால் அறியும் திறமையால் மட்டும் பெற முடியும். வேறு எவ்வித வழிகளிலும் முத்தி பெற முடியாது என்பதை மக்கள் உணர்தல் வேண்டும்.

"நாடப்பா சாகாத கல்வி தன்னை
நலமாகக் கற்பதற்கு வுன்னை தேற்று - 7

என்று இராமரிஷி சிவயோக ஞானம் என்னும் நூலில் மக்களை நோக்கி விளிக்கிறார். அதே போல் திருவள்ளுவ நாயினார் தாம் எழுதிய சிந்தாமணி என்னும் நூலில்,

பெண்ணும் மாணும் பிறவிதன் வாழ்க்கை பேர்
பிறந்த பின் னிறவா திரு மாண்பரே - 704

என்று ஓதுகிறார். மேலும் நொண்டி சித்தர் ஞான சிவயோக என்னும் நூலில்,

ஊன்னென்ற உடம்பெடுத்தாற் சாகாத கல்வி
யுடையவனாயாக வென்றாலுன்னைப் பாரு - 7

என்றும் ஓதுவதால் மக்கள் இனம் மனதில் பதித்துக் கொண்டு முத்தி பெற்று அதனால் சித்தி ஞான வல்லபங்கள் பெற்று என்றும் மரணம் அற்ற பெருமைப் படக்கூடிய அற்புத வாழ்வில் வாழ வாழ்த்தி இந்த செய்தியை கனிந்த உள்ளத்துடன் நிறைவு செய்கிறேன்.

திருச்சிற்றம்பலம்

45. பூரணம்

பூரணம் என்றால் முழுமையாகும். நிறையுடையது. இவ்விடம் வன்னி — சூரியன் — சந்திரன் ஆக மும்மூலங்கள் சேர்ந்த இடமாகும். தாயம்மை வாலையின் அழகு பொருந்திய அற்புதம் நிறைந்த நாதாந்த வெளியாகும். பிறவாமல் பிறப்பறுக்கும் கருவூராகும் குடிலமென்ற களங்கள் போக்கும் அருமையான இடமாகும். இந்த தேகத்தை அழியாமல் காக்குமிடமாகும்.

பூரணம் முத்தி தருமிடமாகும். சித்திக்கு வழி நல்குமிடமாகும். இவ்விடம் குரு சக்தி வாலை வசிப்பிடமாகும். அம்மையே பூரணமானவள். அம்மையே ஞான நிறையுடைய திருவருள் சக்தியாவாள். தன்னை அறிந்து அவளை அறிதல் காட்சியாகும். அரூபவெளியான இடமாகும். இந்த தேகம் பூரணமாயத் தோன்றும்.

பூரணம் என்பது நமது உடலில் காணப்படும் உச்சி என்ற கபாலமாகும். இதுவே பரப்பிர்ம்மமான கயிலாசமாகும். அங்கு எப்பொழுது ஞானம் என்னும் அறிவுமயமான இடமாகும். அங்கு பொழியும் அமுதமானது உண்டு வந்தால் குருவின் அருள் மிகுந்து நமது சிவயோகம் நிலைக்கும்.

பூரணம் என்பது சோதி வடிவமானது. அங்கு ஞானம் என்னும் விளக்கு சுடர் விட்டு ஒளிரும். அது வானமாகும். அதுவே அண்டத்தின் சிகரமாகும். தாமரை மலர் வடிவமான ஆதியம்மையின் பீடமாகும். அப்பீடத்தின் மையத்தின் நடுவிலே தான் நாதம் என்ற பொருளே வேதத்தின் அந்தமாக விளங்கக் கூடியது.

பூரணத்தின் இடத்தை அடைந்தவர்களின் தேகம் நாத வடிவமாக திகழும். திருவாசி என்று கூறப்படும் ஓங்காரம் பூரணமாய் நிற்கும். இந்த வடிவத்தை யாராலும் காண இயலாது. அப்படி காண்பவன் கோடியில் ஒருவனாவான். சரம் என்ற வாசியானது அறிந்து அந்த வாசியில் சந்திரனை மனையான சுழிமுனையில் ஒட்டிப் பார்த்தால் வெளியான ஆகாசமே பரம்பொருளாக விளங்கும் என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.

பூரணத்தின் நிலையை சித்தர்கள்

Koviloor Digital Library

என்ன கூற வருகிறார்கள் என்பதை இனி அறியலாம்.

அகத்தியர் மெய்ஞ்ஞான நுட்பம் 30இல், 14ஆம் பாடலில் பூரணம் கருணை வடிவமானது. அது வன்னி — சூரியன் — சந்திரன் ஆக மூன்றும் சேர்ந்த இடமாகும். அது அவ்விடத்தின் நுட்பமான பொருளை உணர்ந்தவன் புண்ணியம் மிகுந்தவனாவான். அவ்விடம் சக்தி சற்குருவாய் இருப்பதால் அவளின் சிறப்புகளை எடுத்துரைப்பது மற்றும் போற்றுவது சிறந்த ஆசானாவான்.

அருளின் ஒளிச்சுடர் சோதி வடிவாய் மேலே தோன்றும். அங்குக் காணப்படும் ஆயிரெட்டிதழ் தாமரை மலரின் மேலே அமுத கற்பம் உண்டு. அந்த அமுதம் உண்டவன் சிவயோகி என்பர். சிவத்தின் கால் என்ற நிலையை அறிந்தவன் என்றும் அவனுக்கு மரணமில்லை என்பது அவருடைய அனுபவமாகும். அப்பாடலைக் காண்க.

கருணை தரும் அக்கினி - யாதித்தன் சந்திரன்
கலந் தொன்றாய் நின்றது பூரணமே யாகும்
பொருள் கயமா யறிபவனே புண்ணியா வானாம்
புகழ் சொன்ன சற்குருவே ஆசானாகும்
அருள் கிரண சோதியதா யுதிக்கு மேலே
ஆயிரத் தெட்டிதழ் மேலே அமுத கற்பம்
திருவறிந்து உண்டவனே சிவயோகியாகும்
சிவ சிவா காலறிந்தோன் சாகா னென்றே - 14

என்று அகத்தியர் ஓதுவதால் தெளிக. மேலும் அகத்தியர் தாம் இயற்றிய அந்தரங்க தீட்சா விதி 400இல் பூரணம் என்பது பிறக்காமல் பிறப்பிக்கும் பூரணத்தின் பெருமையாகும். பிராணாய சிவ யோகப் பெருமையை நிகழுமிடமாகும் என்பதை,

"பிறவாதே பிறப்பிக்கும் பூரணத்தினுள்ளே
பேரான பிராணாய பெருமை கேளே - 344

என்று கூறப்படுமிடமே பூரணம் என்பர். மேலும் அகத்தியர் பூரண சுக்குமம் 216இல் 140ஆம் பாடலில் மானுடன் காக்க வேண்டிய இருப்பிடம் பூரணமாகும். எப்பொழுது புருவமையத்திலிருந்து காக்க வேண்டும். மானிடன் தன்னுடைய



தொண்ணூற்றாறு தத்துவ வாசனைகள் ஒழித்துக் கட்டவேண்டும். உலகில் மனி—தனுக்குறியது ஒன்றுமில்லை என்று நினைக்க வேண்டும். ஆடம்பரம் இல்லாது இருக்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும். இப்படி இருப்பவனே சித்தர் என்ற வீரத்தன்மை பெறுவான். நாற்பது வயதுக்குள் அமுதக்கற்பம் உண்டால் கோடியாகவுள்ள பூரணத்தில் கோடியில் ஒருவனாக நுழைய முடியும். வயதான பின் செய்தால் நீண்டநாள் ஆகும் என்பதை,

கார்ப்பது தான் பூரணத்தைக் காக்க வேண்டும்
காரென்று புருவமையத் திருக்க வேண்டும்
தீர்ப்பது தான் வாசனையைத் தீர்க்க வேணும்
செகமெல்லா மொன்று மில்லை யெண்ணவேணும்
ஆர்ப்பனத்துக் கழிவில்லா திருக்க வேணும்
அப்பவல்லோ சித்தனென்ற ஆண்மையாச்சு
நாற்பதுக் குள் கற்பமுண்ண கோடியாச்சு
நரைத்தாக்கால் நாளதிகஞ் செல்லும் நன்றே
- 140

என்று ஓதுகிறார். மேலும் அகத்தியர் ஞானம் கீழ்வருமாறு ஓதுவதைக் காண்க.

Koviloor Digital Library

கூட்டியே யோகமுந்தான் பார்த்தீரானால்
குறையாத பேரொளியைக் குணமாயக் காண்பாய்
ஆட்டியே அருபவெளி நீயுமாவாய்
ஆயிரத் தெட்டிதழ் மலரும் அறிவாய்க் காணும்
நாட்டியே அமுதமுந்தான் வடியு மாச்சு
நரக மென்ற பேச் செல்லாம் நாசமாகும்
பூட்டிய பூரணம் போல் விளங்கும் தேகம்
புதுமை சரா சரங்க ளெல்லாம் போக்கலாமே

என்று கூறுகிறார். முக்கலையும் ஒன்றாகக் கூட்டி அகத்தில் பார்தோமேயானால், அந்த உடலின் உள்ளகத்தில் பேரொளியைக் கண்டு அறியலாம். இந்த உடல் யாருக்கும் தெரியாமல் அருவ வடிவமாகத் தோன்றும். ஆயிரத்தெட்டிதழ் மலரானது ஞான வடிவத்தில் தோன்றும். அதில் அமுதகற்பம் வடிந்து உடலில் பரவும். நரகம் என்ற செயல்கள் அனைத்தும் நசிந்து போகும். உடலான ஞான வடிவமாகி பூரணத்தில் விளங்கும். புதுமையான அசையும் அசையா புவனங்களில் உட்சென்று காணலாம் என்ற மேற்கண்ட பாடலில் ஓதுகிறார். மேலும் அகத்தியர் பூரண காவியம் 1000த்தில் கீழ்வரும் பாடலைப் படித்தறிந்து தெளிக.

தானான பதவியது தானே தானாய்
சாயுச்சியமான பூரணமுந் தானாச்சு
கோனான குருபதமுந் தானே தானாய்
குருவாகி நின்ற தொரு மாய்க்கை தானாய்
வானான அண்டபத வடிவந் தானாய்
மந்திரமாய் நின்றதொரு மாய்க்கை தானாய்
தேனான அமுர்த ரசபானந் தானாய்
தெளிந்த துவுங் கழந்துவுந் தான்றானாச்சே

என்கிறார்.

முத்தி தரும் பதவியானது பூரணமேயாகும். பூரணமே குருபதமாகும். குருவாகியிருந்தவள் வாலையே ஆவாள். அவளே மானிடனுக்கு அண்ட பதம் என்னும் ஞான வடிவம், மந்திர வடிவமும் தரும் ஆற்றல் படைத்தவள். அவளே அமுத ரசபானமும் ஊட்டுபவனும் அவளே ஆவாள் என்பதாம்.

அசுவனி தேவர் சிவயோக ஞானம் — 16இல் 4ஆம் 5ஆம் பாடலில் பூரணத்தின் நிலையும் அடையும் வழிமுறை எடுத்துரைக்கும் பாடலைக் காண்க.

"விரைவுடனப் பால்பொசித்துப் பதியில் நின்றால்
வேதாந்த தமர்வாசற் பூட்டு தோனும்
நிறை யுடனே கால் பிடித்து வாசி பூட்டி
நிச்சயமாய் நின்றதினாற் கால்தானோடி
குறை யில்லா தமர்சாசற் பூட்டில் மைந்தா
குறிப்பாக வாசி சென்று நின்று கொண்டு
கரையில்லா தமர்வாசற் றறிந்தால் மைந்த
காணலாம் பூரணத்தின் மகிமை தானே - 4

தானென்ற பரப்பிர்மக் கபாலந்தானும்
தன்மயமதான கயிலாசமாகும்
வானென்ற கயிலையென் மேருவேறி
மைந்தனே அறிவதனாலமுதங் கொள்ளத்
தேனென்ற பூரணத்தி னமுதங் கண்டால்
திரமாகச் சதா போதை புகழ்ந்து காணும்
கோனென்ற அப்போதை தன்னில் நின்ற
குருவருளாற் சிவயோகங் கண்டு தேறே - 5


அசுவனி தேவர் சிவயோக ஞானம் 16

மானிடதேகத்தில் மூக்கு நுனிமேல் புருவ மத்தியிலிருந்து ஏழுதிரைகள் இருப்பதாக சித்தர் நூல்களின் சொல்லப்பட்டுள்ளது. ஏழுதிரைகள் விலக்க வாசி என்னும் துருத்தியின் துணையுடன் சுழிமுனை காலுடன் ஏற்ற வேண்டும். திரைகள் அகன்றால் பூரணம் என்ற நிலை காணலாம். புருவ மத்தியிலிருந்து வட்டம் — மூலம் — முக்கோணம் — அறுகோணம் என்ற வடிவங்களும் தோன்றும். பூரணத்தின் வாசற் கதவின் திரை விலக்கினால் தாயின் அமுர்தப்பால் உண்ணலாம்.

மானிட தேகத்தில் பரப்பிர்மம் என்னும் இடமானது கபாலமாகும். அது தன்னொளிச் சுடர் விட்டு ஒளிரும் கலையாகும். கயிலை என்னும் மேருமலை ஏறிவந்தால் அங்கு அமுதம் உண்டு பருகலாம். இனிக்கும் அமுதம் கொண்டால் உறுதியான ஞான மிகுமிடமாகும். அதன் புகழ் காண வேண்டுமென்றால் எப்பொழுதும் ஞானத்தில் சிறக்க குருவருள் நினைந்து எப்பொழுதும் சிவயோக நிலையில் இருந்து வரவேண்டும் என்று அசுவனி தேவர் சிவயோக ஞான நூல் 16இல் தெரிவித்துள்ளார்.

Koviloor Digital Library

கடைப்பிள்ளை சித்தர் ஞான கக்கிசம் — 80இல் 76,77.ஆம் பாடலில் பூரணத்தின் நிலை, அருமை பெருமை இருப்பிடம், வடிவம், அங்கு செல்லும் திரம் கொண்ட மானிடன் நிலை ஆக இவைகளைக் கூறும் பாடல் காண்க.



"தானான பூரணமே சோதி சோதி
 தன்மயமாய் நின்ற திருஞான தீபம்
வானான ஆகாசம் அண்டத்துச்சி
 மகத்தான கமலமடா ஆதி பீடம்
கோனான பீடமதின் நடுவிலே தான்
 குவிந் தெழுந்த நாதமடா வேதத் தந்தம்
தேனான நாத மதி னந்தங் கண்டு
 திருவேறு வுருவேறுக் திரந் தானாமே - 76

திரமான தேகமடா நாத ரூபம்
 திருவாசி பூரணமாய் நின்ற ரூபம்
பரமான ரூபமதை யார் தான் காண்பார்
 பாலகனே கோடியிலே யொருவன் தானாம்
சரமான சரமறிந்து சரத்தில் நின்று
 சந்திரனைச் சூரியனிற் சாரப் பன்னி
உரமான நடுமனையில் நின்று பார்த்தால்
 உண்மை யென்ற வெளி பரம ரூபமாச்சி - 77

மேற்கண்ட பாடலின் பொருள் என்னவெனில் பூரணம் என்று கூறப்படும் இடமானது சோதி வடிவமாகும். மாபெரும் சோதி வடிவமாகும். சோதி வடிவாய் நிற்கும் அச்சோதியானது திருவருட் ஞானம் நிறையுடைய மாபெரும் தீபமாக விளங்குமிடமாகும். வானம் என்று கூறப்படும் ஆகாச பெருவெளி அண்டத்தின் சிகரமாகும். பெருமை வாய்ந்த தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் ஆதியான பீடமென்ற மேடையாகும். கோபுரம் போன்ற அந்த மேடையின் நடுவில் குவிந்து காணப்படும் நாதப் பொருளான திருவருள் வேதத்தின் அந்தமாக விளங்குகிறது. தேன் போன்ற சுவையுடை அமுத கற்பம் அதன் அந்தம் உண்டு திருவருள் வடிவமாய் நின்று அந்த திறமைகளை உணர்ந்து முன்னேற வேண்டும்.

அடுத்து வரும் பாடலில் மானிடன் இருள்தேகம் மருள்தேகம் ஒழித்து சுத்த தேகம் அடைந்த பின் மீண்டும் பிரணவ தேகம் பெற வேண்டும். இப்படியாக முன்னேறிய போது மானிடனின் ஊனுடல் நாதம் என்ற பிரணவ வடிவம் ஏற்படுகிறது. ஓங்கார வடிவம் பூரணமாக நின்று அதுவே நாத ரூபமாய் விளங்கும். பரவடிவம் பெரும் வழியினை யார் அறிவார்கள. குழந்தைகளே அதனை கோடியில் ஒருவன் தான் அறிவான். சரம் என்று கூறப்படும் வாசியினை அறிந்த அந்த வாசி நிலை சிவராஜ யோகத்தின் துணையால் சந்திர கலையை சூரியக்கலை இணைத்து உறுதியாக சுழினை என்னும் நடுவில் நின்று நோக்கினால் உண்மையான பரமான வெளிவடிவமான ஞான வடிவமாய் மானிடன் திகழ்வான் என்பதாம் என்று சித்தர் ஓதுகிறார். அதுவே பூரணம் என்ற பரிபூரணமாகும்.

பூரணம் என்ற இருப்பிடத்தைப் பற்றிய செய்திகள் சித்தர்களின் நூலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அதனை படித்து அறிந்துக் கொள்க. இந்த இடம் முடிவானதல்ல அதன் எல்லையும் அக அனுபவ உணர்வால் ஞான தேகம் பெற்றவர்களால் உணர முடியும். மற்றவர்கள் வேண்டுமானால் படிக்கலாம். அவ்வளவேயாகும். அகஅனுபவமில்லாத உணர்வுகள் அறிய இயலாது என்பதை உணர வேண்டும்.

இந்த மாபெரும் பூரண நிலை ஒவ்வொரு மானிடன் பெற இறைவனின் திருவருள் கூட வேண்டும் என்று வேண்டி இந்த அரிய செய்தியை அன்போடு இனிதோடு முடிவடைகிறது.

திருச்சிற்றம்பலம்

சுபம்

Koviloor Digital Library

நீண்ட ஆயுளுக்கு வள்ளலார் காட்டிய வழிகள்



வாழ்க்கை முறையை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு சில வழிமுறைகளை கூறியுள்ளார் வள்ளலார் என்று அழைக்கப்படும் ராமலிங்க அடிகளார். அவர் கூறும் வாழ்க்கை முறை இதுதான்...

1. சூரியன் உதிப்பதற்கு முன்பே எழுந்துவிட வேண்டும். சிறிது நேரம் அமர்ந்து, கடவுளை தியானம் செய்ய வேண்டும்.

2. இயற்கைக் கடன்களை கழித்த பின் செவிகள், கண்கள், நாசி, வாய், தொப்புள் ஆகியவற்றில் உள்ள அசுத்தங்களையும், கை, கால் போன்ற உறுப்புகளில் உள்ள அழுக்குகளையும் வெந்நீரால் தேய்த்து சுத்தமாகக் கழுவ வேண்டும். பின்னர், வேலங்குச்சி, ஆலம் விழுது கொண்டு பல் தேய்த்து, அதைத் தொடர்ந்து கரிசலாங்கண்ணி கீரைத்தூள் கொண்டு, உள்ளே சிறிது சாறு போகும்படி பல் தேய்த்து வாய் கொப்பளிக்க வேண்டும்.

3. அதன்பிறகு, கரிசலாங்கண்ணி இலை ஒரு பங்கு, தூதுவளை, முசுமுசுக்கை இலை சேர்ந்த கலவை கால் பங்கு, சீரகம் கால் பங்கு இவற்றை ஒன்றாகச் சேர்த்து பொடியாக தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும். அந்த பொடியில் ஒரு கிராம் எடுத்து, அதை ஒரு டம்ளர் தண்ணீரில் சேர்க்க வேண்டும். இன்னொரு டம்ளரில் பசும்பாலை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த இரண்டு டம்ளர் திரவத்தையும் ஒன்றாகக் கலந்து நன்கு கொதிக்க வைத்து, ஒரு டம்ளராக சுண்டிய பின், அதில் நாட்டுச் சர்க்கரை கலந்து சாப்பிட வேண்டும்.

4. காலை வெயில் உடலில் படாமல் இருக்க மேல்சட்டை அணிய வேண்டும்.

5. ஒன்றரை மணி நேரம் கழித்து, வெயிலில் மிதமான உடற்பயிற்சிகள் செய்ய வேண்டும். பின்னர், இளம் வெந்நீரில் குளிக்க வேண்டும். சிறிது நேரம் கடவுளை வணங்க வேண்டும்.

6. பசி எடுத்தவுடன் சாப்பிட வேண்டும். சாப்பிடும் போது அள்ளிப் போட்டுக் கொள்ளக் கூடாது. சாப்பிட்டபின் ஒரு டம்ளர் வெந்நீர் குடிக்க வேண்டும்.

7. கிழங்கு வகைகளை உண்ணக் கூடாது. ஆனால், கருணைக் கிழங்கை உண்ணலாம். பேயன் வாழைப்பழம், ரஸ்தாளி வாழைப்பழம் ஆகியவற்றை உட்கொள்ளலாம். பதார்த்தங்களில் புளி, மிளகாய் ஆகியவற்றை குறைவாகவும், மிளகு, சீரகம் ஆகியவற்றை அதிகமாகவும் சேர்க்க வேண்டும். கடுகு சேர்ப்பது அவசியமல்ல. உப்பை குறைவாக சேர்த்துக் கொள்வது உடல்நலத்துக்கு நல்லது. தாளிப்பதற்கு நல்லெண்ணெய் உபயோகிக்கலாம். அல்லது, பசு வெண்ணெயால் தாளிக்கலாம்.

Koviloor Digital Library

8. கத்தரிக்காய், வாழைக்காய், அவரைக்காய், முருங்கைக்காய், பீர்க்கங்காய், பூசணிக்காய், புடலங்காய், கொத்தவரைக்காய் ஆகியவற்றை கறி செய்வதற்கு உபயோகிக்கலாம். முருங்கை, கத்தரி, பேயன் வாழைக்காய் ஆகியவற்றை அடுத்தடுத்து கறி செய்யலாம். மற்றவற்றை எப்போதாவது செய்ய வேண்டும்.

9. சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, தயிர்சாதம் போன்ற சித்திரான்னங்களை அடிக்கடி சாப்பிடக் கூடாது. எப்போதாவது சாப்பிடலாம்.

10. புளித்த தயிர் சேர்த்துக் கொள்ளலாம்.

11. பருப்பு வகைகளில் துவரம் பருப்பை அடிக்கடி சேர்த்துக் கொள்ளலாம். மற்ற பருப்பு வகைகளை எப்போதாவது சேர்த்துக் கொள்ளலாம்.

12. விருந்து என்றாலும் சற்று குறைவாகவே உண்ண வேண்டும்.

13. வெந்நீரையே குடிக்க வேண்டும்.

14. மாலை வெயில் உடலில் படுமாறு சற்று நடக்க வேண்டும். காற்று அதிகமாக இருந்தால், திறந்த வெளியில் நடக்கக்கூடாது. வெயில், பனி, மழை ஆகியவை உடலில் படுமாறும் நடக்கக் கூடாது.

15. இரவின் தொடக்கத்தில் முகம், கை, கால் ஆகியவற்றை கழுவி சுத்தம் செய்து கொள்ள வேண்டும். பின், தியானம் செய்யலாம். மந்திரங்கள் சொல்லி கடவுளை வணங்கலாம். நல்ல புத்தகங்கள் படிக்கலாம். வீட்டு விவகாரங்கள் பற்றி பேசலாம்.

16. பிறகு இரவு உணவை உட்கொள்ள வேண்டும். பகலில் எந்த அளவுக்கு சாப்பிட்டீர்களோ, அதில் அரைப்பங்கு அளவே இரவு உண்ண வேண்டும்.

17. இரவில் கீரை, தயிர் மற்றும் உடலுக்கு குளிர்ச்சி தரும் உணவு வகைகளை உண்ணக் கூடாது. சூடான பதார்த்தங்களையே உண்ண வேண்டும்.

18. இரவு சாப்பாடு முடிந்து 2 மணி நேரத்துக்குப் பின் பசும்பாலைக் காய்ச்சிக் குடிக்க வேண்டும்.

19. பெண்களுடன் உடலுறவு கொள்ளும் நாட்களில், அதற்கு ஒரு மணி நேரம் முன்பிருந்து உடலுறவைப் பற்றி எண்ணாமல், அதன் பின் உறவு கொள்ள வேண்டும். ஒரே இரவில், ஒரு முறைக்கு மேல் உறவு வைத்துக் கொள்ளக் கூடாது.

20. உடலுறவு முடிந்தபிறகு உடலைத் தூய்மைப்படுத்திக் கொண்டு கடவுளை தியானம் செய்து, அதன்பின் உறங்க வேண்டும். 4 நாட்களுக்கு ஒரு முறை உடலுறவு வைத்துக் கொள்வது அதமம். 8 நாட்களுக்கு என்றால் மத்திமம். 15 நாட்களுக்கு ஒருமுறை என்றால் உத்தமம்.

21. படுக்கும் போது இடது கைப் பக்கமாகவே உறங்க வேண்டும்.

22. கொலை, கோபம், சோம்பல், பொய், பொறாமை, கடுஞ்சொல் போன்றவை கூடாது.

23. கத்திப் பேசுதல், வேகமாக நடந்து செல்லுதல், ஓடி நடத்தல், வழக்குப் போடுதல், சண்டையிடுதல் போன்றவை கூடாது.

24. பதற்றம் அதிகரித்தால் பிராணவாயு அதிகமாக செலவாகும். அதனால், பதற்றம் கூடாது.

25. நான்கு நாட்களுக்கு ஒருமுறை நல்லெண்ணெயை தலையில் தேய்த்துக் கொண்டு, வெந்நீரில் குளிக்க வேண்டும். அல்லது, வாரத்துக்கு ஒருமுறை காய்ச்சிய நல்லெண்ணெயை தலையில் தேய்த்துக் கொண்டு முழுக வேண்டும்.

26. புகை, கஞ்சா, கள், சாராயம், போன்ற போதை தரும் பொருட்கள் கூடாது.

27. மாதத்துக்கு ஒரு முறை அல்லது 6 வாரத்துக்கு ஒரு முறை பேதிக்கான மருந்தை உட்கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

Koviloor Digital Library



சித்தர்களின் சாகாக்கலை இரகசியங்கள் நூலின் ஆசிரியர் திரு. A.K.சந்தன ராஜா அவர்கள் 1936ஆம் ஆண்டு ஆம்பூரில் பிறந்தவர். தனது 7வது வயதிலேயே திருமுருகப்பெருமான் அருள் கிடைக்கப் பெற்று ஆட்கொள்ளப்பட்டவர். பின் திரு.த.பச்சையப்ப சுவாமிகளின் பிரதான சீடராய் குருமூலம் பல மந்திர, தந்திர யந்திர பயிற்சிகள், சூட்சும முறைகள், கற்றறிந்தார். திருமுருகன் அருளால் சித்தர் பெருமக்களின் நேரடித் தொடர்பு ஏற்பட்டு, பல ஆண்டுகள் நூல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு இறை தவத்தால் "சித்தர்களின் சாகாக்கலை இரகசியங்கள்" எனும் அற்புதத்தை படைத்துள்ளார்.

இவரது பரம்பரை தொழிலான சித்த மருத்துவத்தை ஆராய்ச்சி செய்து பல புதிய மருந்துகள் கண்டு பிடித்துள்ளார். தமிழக அரசின் சுகாதார துறையில் ஆய்வாளராய் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். வள்ளல் இராமலிங்க அடிகளாரின் ஆசிப் பெற்று மரணமில்லா பெரு வாழ்வு பெற பல மந்திர விஞ்ஞைகளை கட்டுரைகளை மாத இதழ்களில் உலகுக்கு வெளிப்படுத்தியவர். சித்தர்களின் மறைபொருள் உணர்ந்து யாரும் அறியாத அற்புத விஷயங்களை தந்துள்ளார்.

"திருவருள் சக்தி" மாத இதழ் 2006இல் தொடங்கப்பட்டது முதல் இதழில் இருந்தே இன்றுவரை பல கட்டுரைகளை தொகுத்து கொடுத்து வெளிவந்து வாசகர்களின் பாராட்டுகளை ஒருங்கே பெற்று உன்னத நிலையைப் பெற்றவர்.

– பதிப்பகத்தார்

AP 011